R. R. No. 64/70.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் ஆகஸ்டுமீ 8உ [ந. 107


## இந்தியாவில் பொதுஜன இயக்கம் ஆரம்பிக்கப் போவதாக காங்கிரஸ் பயமுறுத்தலுக்கு பிரிடிஷ் ஸர்க்காரின் பதில்.

(மிஸ்டர் L. S. அமெரி காமன்ஸ் சபையில், ஜுலை 30-ல் பேசியது).

"இந்தியாவில் எதிர்கால அரசியல் சம்பந்தமாக பிரிடிஷ் ஸர்க்காரின் சார்பாக ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் வெளியிட்ட திட்டத்தில் பிரிடிஷ் ஸர்க்காரின் நோக்கம் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

"இந்திய தேசீயவாழ்வில் முக்கியமாகவுள்ள கட்சிகளின் ஆதரவை அது பெருமல் போய்விட்டதால் அத்திட்டம் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது. இருந்தாலும் தங்களுடைய திட்டத்தில் குறிப்பிட்டுள்ள பரந்த உத்தேசத்தின்படி உறுதியாக நடக்க அவர்கள் இன்னும் தயாராயிருக்கிருர்கள்.

"காங்கிரஸின் தற்போதய கோரிக்கை இத்திட்டத்தைப் பூரணமாகப் புறக்கணிப்பதாக இருக்கிறது. இதற்கிணங்கினுல், இந்திய ஸர்க்காரின் விஸ்தாரமான சிக்கலான அமைப்பை அது அடியோடு குலைத்துவிடும். அதுவும் இந்த சமயத்தில் ருஷ்யா, சைனு, எகிப்து முதலிய யுத்த அரங்கங்களிலுள்ள நிலைமை நேசதேசங்களின் பூரண ஒத்துழைப்பையும், சக்தியையும் கோரும்போது, இது எத்தகைய பாதகத்தை விளைவிக்கும்.

### ஒரு எச்சரிக்கை.

"இதைவிட பெரிய அசோகம் வேறொன்றுமில்லை. வெகு முக்கியமான ஒரு யுத்த அரங்கத்தில் இத்தகைய விபரீத விளைவு ஏற்படுவதை நல்லெண்ணமுடைய யாவரும் ஆதரிக்கக்கூடாது.

"இந்தியா பூர்ண சுயேச்சையை அடைவதற்கு அதற்கு முழு வசதியைக் கொடுக்க தாங்கள் தீர்மானித்திருப்பதை பிரிடிஷ் ஸர்க்கார் இப்பொழுதும் ஊர்ஜிதம் செய்கிறது. ஆனல் நிலைமையை சமாளிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் இந்திய ஸர்க்கார் தங்களது கடமையில் பின் வாங்கமாட்டார்களென்று காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கொள்கையை ஆதரிக்கும் எல்லோருக்கும் பிரிடிஷ் ஸர்க்கார் எச்சரிக்கை செய்கிறது.

"ஸ்வதந்திரத்திற்கும், நாகரீகத்திற்கும் ஏற்பட்டுள்ள ஆபத்தை நீக்குவதற்கு நேசதேசங்கள் போராட உறுதிகொண்டிருக்கின்றன.

"இந்த நெருக்கடியிலும், எதிர்காலத்தில் யுத்தத்திற்குப் பிறகும் இந்தியா பெருத்த பாரத்தை வகிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இவ்வளவு விபரீத விளைவுகளையுடைய பொது இயக்கத்திற்கு இந்திய ஜனங்கள் ஆதரவு காட்டமாட்டார்களென்றே பிரிடிஷ் ஸர்க்கார் நம்புகின்றனர். இதற்கு மாருக மனித வர்க்கத்தின் பொது சத்துருக்கள் மீது நடத்தும் போராட்டத்திற்கு அவர்கள் தங்களது முழு ஆதரவைக் கொடுத்து, எல்லாவித தியாகத்தையும் செய்வார்களென்று பிரிடிஷ் ஸர்க்கார் நம்புகிறது."

# இந்திய நிலைமையைப்பற்றி ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வர்ணனை.

"பிரிடிஷ் ஸர்க்காரின் மனப்பான்மை சம்பந்தமாக சந்தேகமே இருக்க முடியாது. சென்ற வாரம் இந்தியா மந்திரி விடுத்த அறிக்கையில் அவர் அதைத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார். நான் இந்தியாவுக்குக் கொண்டுபோன நகல் தீர்மானத்தில் அடங்கியுள்ள பரந்த நோக்கத்தையே பிரிடிஷ் ஸர்க்கார் உறுதியாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இந்தியா பூரண சுயஆட்சி உள்ள நாடாக ஆவதற்கு முழு சந்தர்ப்பமும் கொடுக்க பிரிடிஷ் ஸர்க்கார் தீர்மானித்திருக்கிறது என்பதையும் அப்பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"எனவே யுத்தம் முடிந்தவுடன் இந்தியாவுக்கு பூரண சுயஆட்சி உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பது சந்தேகத்திற்கிடமேயில்லை. இந்தியாவின் அரசியலை ஒரு புதிய முறையில் திருத்தியமைக்க அப்பொழுது முடியும். இந்த சாதாரண விஷயங்களை இந்திய தேசீய வாதிகள் மறுப்பதில் பிரயோசனமில்லை. வாக்குறுதி கொடுத்தாகிவிட்டது. அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படும்.

69408

## அடிப்படையான மாறுதல்கள்.

"ஆகவே யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் பூர்ண அடிப்படையான அரசியல் மாறுதல்வேண்டுமென்று இந்திய ஜனங்கள் கோருவது நியாயமா? ஜப்பான் ஆதிக்கத்திலிருந்து கிழக்கு உலகத்தைக் காப்பாற்ற யுனைடெட் ஸ்டேட்ஸ், சைனா, பிரிடன் ஆகியவை மும்முரமாகவும், முழுபலத்துடனும் ஈடுபட்டிருக்கும் பெரிய யுத்தத்தின் மத்தியில் இது சாத்தியமா? அராஜகமும், கலவரமும் ஏற்பட்டாலும் பிரிடிஷ் ஸர்க்கார் இந்தியாவிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்றும், தங்களது வித்தியாசங்களைத் தாங்களே தீர்த்துக்கொள்ள இந்தியர்களை விட்டுவிட வேண்டுமென்றும், காந்திஜி கோருகிறார். இந்த அராஜகத்தாலும், குழப்பத்தாலும் என்னவாகும்?

"தற்போதைய அரசியல் அமைப்பை ஆதாரமாகக்கொண்ட எல்லா ஸர்க்கார்களும் உடனே நின்று போய்விடும். வைஸிராய் இருக்கமாட்டார். நிர்வாக சபை இருக்காது; சட்ட சபை இருக்காது. சட்ட அதிகாரத்துடன் ஸிவில் ஸர்விஸும் இருக்காது. மாகாண கவர்னர்கள் தங்கள் அலுவல்களை கவனிக்க மாட்டார்கள். அதுபோல் மாகாண ஸர்க்கார்களும் வேலை செய்யா. வரி வசூல் செய்ய அதிகாரிகளிருக்கமாட்டார்கள். ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் கொடுக்கப் பணமிருக்காது.

"போலீஸுக்கு அதிகாரமே இருக்காது. நீதி இலாகாக்கள் வேலை செய்ய மாட்டாது. நியாயமான சட்டதிட்டம் இருக்காது; சமாதானமும் நாட்டில் நிலவாது. கெட்ட எண்ணங்கொண்டவர்கள் நாட்டைக் கொள்ளையடிக்கலாம். ஒழுங்கீனம், கலகம், குற்றங்கள் இவை தலைவிரித்தாடும். இம்மாதிரி கலவரத்தில் தன்னால் முடிந்தால் தாற்காலிகமாக அரசாங்கம் ஒன்று ஏற்படுத்துவதாக காந்திஜி யோசனை கூறுகிறார். ஆனால் அப்பொழுது தேருதலில்லாமல் இருப்பதாலும், பிரதிநிதிகள் சட்டசபைக்கு வருவதற்கு சட்டமொன்றும் இல்லாமல் இருப்பதாலும் அத்தகைய அரசாங்கமானது அவரும், அவரோடு ஒத்துழைக்க விருப்பமுள்ள மற்ற இந்தியத் தலைவர்களும் சேர்ந்து ஏற்படுத்தியதாகும்.

"அதனால் அவருடன் சேராத கட்சி அவருக்கு விரோதமாகக் கிளம்பி அவர் ஏற்படுத்திய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஏற்பாடு செய்யும்.

## அராஜகத்தினால் என்ன ஏற்படும்.

தற்போது அராஜகம் ஏற்பட்டால் இந்தியா மட்டில் பாதிக்கப்படாது. அச்சு நாட்டு வல்லரசுகளுக்கு எதிராக நடக்கும் இந்த யுத்தம் முக்கியமாக பாதிக்கப்படும். சமீபகாலத்தில் இந்தியாவில் பிரிடன், அமெரிக்கா, சைனா இவைகளின்



பிரயத்தனமும் நீடித்திருக்க வேண்டிய அவசியமுள்ளது ... டிருக்கிறார். இந்தத் துருப்புகள் புதிதாக ஸ்தாபிக்கப்படும் இந்திய அரசாங்கத்துடன் ஏதாவது ஒப்பந்தம் செய்துகொண்டு இங்கிருக்கலாமென்றும் யோசனை சொல்லியிருக்கிறார். ஆனால் அத்தகைய இந்திய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்வதில் யாதொரு சிரமமும் ஏற்படாது. ஆனால் இவ்வித கலவரமான நிலைமையிலும், சட்டதிட்டமில்லாமல் இருக்கும் நிலைமையிலும், இந்திய அரசாங்கம் ஸ்தாபிக்கப்படக்கூடுமா என்பதும், புதிய திட்டத்தை ஸ்தாபிக்க பூரா சட்டங்களையும், அமுலுக்குக் கொண்டு வரமுடியுமா என்பதும், உள்நாட்டு கலகத்தைத் தவிர்க்கும் விதமாக எல்லா வகுப்பு இந்தியர்களையும் ஏகமனதான ஒப்பந்தத்துக்கு வரும்படி செய்யமுடியுமா என்பதும்தான் கஷ்டமான நிலைமையாக இருக்கிறது.

"இவ்வளவு பெரிய நாடான இந்தியாவில் பிரிடிஷாருக்குள்ள ஆதிக்கத்தை மாற்றிக்கொடுக்கப் பிரயத்தனப்படுவதில் இயற்கையாகக் கஷ்டங்கள் இருப்பதால் யுத்தம் நடக்கும் வரையில் அதிகாரத்தை முற்றிலும் மாற்றிவிடுவதும், புதிய அரசாங்கம் ஸ்தாபிப்பதும், அசாத்தியமான காரியமென்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

"எங்களுக்குள்ள முக்கியமான பொறுப்புகளை விட அச்சுநாட்டு வல்லரசுகளின் கெட்ட சூழ்ச்சிகளை பயனடையாமல் செய்வதற்கு மற்ற தேசத்தார்கள் பட்டிருக்கும் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் பார்க்க, நாம் அவர்களை இது சமயம் கைவிடக்கூடாது. அவர்களைக் கைவிடவும் முடியாது.

## உலகமே சாக்ஷி.

"யுத்தம் முடிந்தவுடன் இந்தியா சுய ஆட்சி அடைவதற்கு பூரண சந்தர்ப்பம் நாம் கொடுப்பதாக உறுதி கூறியதற்கு நேசதேசத்தார்களும், உலகத்தார்களும் சாக்ஷியாக இருக்கிறார்கள்.

"நேசநாடுகளுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சிரமமான திசையில் இந்தியாவில் பெரியதாக இருந்தாலும் சரி, முக்கியமானதாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியாரின் நோக்கத்திற்குத் தக்கபடி நடந்து கொள்ளும்படி பிரிடிஷாரை நிர்ப்பந்திக்க வேண்டுமென்பது இந்திய ஜனங்களுக்கு விருப்பம் இருப்பதாக நான் நம்பவில்லை. அநேகர்களுக்கு அநேகமாக அம்மாதிரி விருப்பமில்லையென்பது எனக்கு நிச்சந்தேகமாகத் தெரியும்.

"காங்கிரஸ் கட்சி சார்பிலிருந்து இந்தியாவில் நான் செய்த பிரயத்தனத்தைக் குறித்து கடினமாக விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 22,000 மைல் பிரயாணஞ்செய்து, இந்தியத் தலைவர்களுடன் பிரிடிஷ் அரசாங்கத்தார் கோரிய விருப்பதைப்பற்றி விவாதித்ததில் நமக்குள்ள வித்யாசங்களை சமரஸப்படுத்த உண்மையான சந்தர்ப்பம் ஏற்பட்டதென்பதற்கு நான் திருப்தி அடைகிறேன்.

"கடுமையான அறிக்கைகளாலும் பயமுறுத்தல்களாலும் இப்பிரச்னையைத் தீர்க்க முடியாது. அவைகள் ஆக்ரோஷத்தை உண்டாக்கி இரு கட்சியார்களும் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளும்படி தான் நேரிடும். இப்பொழுது யுத்த நிலைமையில் இருக்கக்கூடிய முழுகஷ்டங்களையும் தெரிந்துகொண்டு அவைகளுக்கெல்லாம் இடம் கொடுத்துவிட்டு காரியா காரணங்களுடன் யோசனைகளைச் சொன்னால் அவைகளை மதிப்புடனும் அனுதாபத்துடனும் கவனிக்கப்படும்.

"இந்தியாவுக்கு இப்பொழுது சுயஆட்சி கொடுக்காதபோனால் இந்திய மக்களுக்குள் ஏற்கனவே புலகந்து கொண்டிருந்த அதிருப்தி இன்னும் அதிகமாக ஏற்படும். அதனால் ஜப்பானியர்கள் இந்தியாவிற்கு வந்திறங்க நேர்ந்தால் இந்தியர்கள் அவர்களைச் சந்தோஷமாக வரவேற்பார்கள் என்று நமக்குத் தெரியும், என்று சமீபத்தில் வெளிவந்த ஹரிஜன் பத்திரிகையில் காந்திஜி எழுதியிருக்கிறார். இதற்கு நான் சொல்லக்கூடிய பதில் என்னவென்றால், காந்திஜியும், அவர் ...க்களும் இந்திய மக்களுக்கு யுத்தம் முடிந்தவுடன் ஸ்வதந்திரம் கிடைப்பது

நிச்சயமென்று உலகமறிய வாக்குறுதி செய்யப்பட்டிருப்பதையும், அப்படி இந்திய மக்களுக்கு ஸ்வதந்திரம் கிடைப்பது நேசநாட்டினர் இந்த யுத்தத்தில் வெற்றி கிடைப்பதைப் பொறுத்திருக்கிறதென்றும் விவரமாக எடுத்துச் சொன்னால், ஜப்பானியர்களை வரவேற்கக்கூடிய அபாயம் ஏற்பட சம்பாவிதமில்லை.

### காந்திஜியின் முந்திய அபிப்பிராயம்.

“காந்திஜியும், அவர் சகாக்களும் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கையிலும் பிரசாரத்திலும்தான் உண்மையான அபாயம் காணப்படுகிறது. இந்தியாவுக்கு நிச்சயமாகப் பூரண ஸ்வதந்திரம் கொடுக்கப்படும் என்ற வாக்குறுதியை மட்டும் பிரிடன் கொடுத்துவிட்டால், அது வருவதற்கான காலம் எவ்வளவு நீடித்திருந்தாலும் அதைப்பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை என்று சில வருஷங்களுக்கு முன் காந்திஜி சொன்னது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. உண்மையாகவே ஸ்வதந்திரமளிப்பதாக இப்பொழுது வாக்குறுதியும் கொடுத்தாய்விட்டது. அதற்கு காலவரை யுத்தம் முடியும் வரை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்வதந்திரமளிப்பதை அது காலம்வரை ஒத்திப்போடாமல் உடனேயே கொடுத்துவிட வேண்டுமென்ற அவ்வித கோரிக்கையை நேசநாடுகளுக்குத் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் விடுத்திருக்கிறது நியாயமா?

“யுத்த அபாயம் நீடித்திருக்கும் காலத்தில் ஸ்வதந்திரமடைவதற்கான நியாயமான வழிகளைப்பற்றி நான் இந்தியாவைவிட்டு வந்தது முதல் இதுவரை ஒன்றும் சொல்லப்படவில்லை. சாதாரணமாக இந்தியர்களின் பயமுறுத்தல், பலாத்காரம், அராஜகம், கலகம் முதலியவைகளுக்கு பிரிடிஷ் அரசாங்கமாவது, இந்திய அரசாங்கமாவது இணங்காது என்பது யாவருக்கும் தெரியும். உண்மையில் இந்திய மக்களின் பல முக்கிய பிரதிநிதிகள் நாம் அம்மாதிரி இணங்கிவிடக் கூடாதென்று வெளிப்படையாக எச்சரித்திருக்கிறார்கள்.

“நாம் மிரட்டல்கள் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், இந்தியர் அங்குள்ள சிறு கட்சியினர் அநேகர்களுக்கும், நேசதேசத்தார்களுக்கும் நமக்குள்ள கடமையை செலுத்தி யுத்தம் முடியும் வரை சட்ட திட்டமும், அமைதியும் இருக்கும்படி செய்யவேண்டியிருக்கிறது.

“அதற்குப் பிற்பட்டுத்தான் நாங்கள் ஏற்கனவே வாக்குறுதி கொடுத்தபிரகாரம் இந்தியா பூரண சுயஆட்சியுள்ள நாடாக ஆவதற்கு முழுசந்தர்ப்பமும் இந்திய மக்களுக்குக் கொடுக்கப்படும்.

“பிரிடிஷ் ஸர்க்காருடன் இந்திய ஜனங்களின் பிரதிநிதிகள் ஒரு சமரச உடன்படிக்கை செய்துகொள்ள முயற்சிப்பதில் இன்னும் இடமில்லாமல் போய் விடவில்லை. இந்தியா சுய ஆட்சி அடைவதற்கு இந்திய மக்கள் எவ்வளவு தீர்மானத்துடனிருக்கிறார்களோ அதே போல் பிரிடிஷ் மக்களும் இருந்து வருகிறார்கள் என்று நான் உறுதி கூறுவேன். இன்னும் கொஞ்ச காலம் வரை அதாவது ஸ்வதந்திரத்திற்காக நடக்கும் இந்த யுத்தம் முடியும் வரை பொறுமையுடன் காத்திருக்கும்படி நான் இந்தியப் பொதுமக்களை வேண்டிக்கொள்ளுகிறேன். நாங்கள் வீண் காலதாமதம் செய்யவேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் இந்த யுத்த காலத்தில் அரசியல் முறையை முற்றிலும் மாற்றியமைப்பது முடியாத காரியம்.

“இந்தக் கஷ்டமான பிரச்னைகளை அமைதியுடனும், மனப்பூர்வமாகவும், பரஸ்பர நம்பிக்கையுடனும் சமாளிக்கவேண்டுமென்பதை நான் எதிர் பார்க்கிறேன். ஏனென்றால் இருதிறப்பார்களும் நமது பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு மனதைச் செலுத்தினால் பலாத்காரம் தேவையில்லை என்று எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. வருங்காலத்தில் இந்தியாவிற்கு ஸ்வதந்திரமும், நியாயமும் ஏற்படப்போகிறது. இப்பொழுது பாஸிஸ்டு கட்சி தோல்வியடைவதற்கும், மிருகத்தனமாக பலாத்காரம் ஒழிவதற்கும் இந்தியாவும் விசேஷமான பங்கு எடுத்துக் கொள்ளும் என்று நம்பப்படுகிறது.”



பிரஸங்கம் CVII.

# ருஷ்ய யுத்தத்தின் விமர்சனம்.

அரும் கோடைகாலம் வந்தது. அதிலும் மே மாதம் மிகவும் கொடுமையாக இருந்தது. ஆனால் பவேரியாவின் மலைச்சிகரங்களில குளிர்ந்த காற்று வீசியது போல் காணப்பட்டது. பெர்செடஸ்கேடன் (Berchtesgaden) என்ற இடத்தில் இருக்கும் ஹிட்லர் ஆழ்ந்து ஆலோசித்து ருஷ்யாவைக் கைப்பற்றி அதனால் அதிக லாபமடையலாமென்று மனக்கோட்டை கட்டினான். ஒரு பெரிய பருந்து தூரத்தில் இருக்கும் கரடியின் மாமிசத்தை அடைய விரும்பியதற்குச் சமமாக இருந்தது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சிறிது காலம் சண்டை செய்து ருஷ்யாவை, விழுங்கிவிடலாமென்றே ஹிட்லர் எண்ணினான். இவனுடன் கூட இருப்பவர்களுக்கு அது அசாத்தியமான காரியமென்று தெரிந்தாலும் வாயைத் திறக்கவில்லை. ஆனால அவர்கள் பயந்தாங்குள்ளிகள் அல்ல. பெரிய சண்டைகளில் ஈடுபட்டவர்கள் தான். ருஷ்யா எளிதில் வசப்படுமா என்று தான் சந்தேகப் பட்டார்கள். ஹிட்லர் அவர்களை இணங்கும் படி செய்தான். போலந்து, பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, நார்வே, டென்மார்க்கு, பால்கன் முதலிய நாடுகளைப் பிடித்த கர்வத்துடன் அவர்களை மிரட்டினான்.

மற்ற தலைவர்கள் சற்று ஆலோசித்தனர். இதற்கு முந்திய சந்தர்ப்பங்களில் ஹிட்லரின் அரசியல் நைபுண்யம் பலித்திருப்பதையும் கவனித்தனர். ஒருக்கால் ருஷ்யா வெறும் ஆடம்பரத்துடன் தானிருக்குமோ, ஹிட்லர் நினைப்பது சரி தானோ என்றும் ஆயுத பலத்தைக் கொண்டும், மின்னல் படையெடுப்பினாலும் ருஷ்யாவை ஜயித்துவிடலாமென்றும் ஒரு முடிவிற்கு வந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் தான் ஹெஸ் பிரிடனுக்கு வந்தது.

### ஹிட்லர் முடிவு செய்தான்.

ருஷ்யாவை ஹிட்லர் தாக்கியதற்கு உள்ள காரணங்கள் யாவும் தந்திரமானவை. அந்தக் காலத்திலும் இங்கிலாந்துதான் முக்கிய விரோதி. 1940-ம் வருஷத்துக் காலத்திற்குள்ளாகவே பிரிடனை ஜெர்மனி தோற்கடித்திருக்க வேண்டும். [illegible]யுத்தத்தில் ஜெர்மன் லுப்ட்வாபி படையை பிரிடன் எதிர்த்து நின்றதோடு மட்டும் அல்லாது ஜெர்மனியைப் படையெடுப்பதற்கு லாயக்காகவே பலம் பெற்று வருகிறது. கிரீட் யுத்தம் பிரிடனின் திட்டங்களைப் பாதித்தது. இருந்தாலும், கிரீட் யுத்தம் நடக்கும் அந்தரானத்தில் இராக், ஸிரியா முதலிய இடங்களில் நேசநாடுகளின் நிலைமையை அபிவிருத்தி செய்துகொள்ள முடிந்தது. ஆங்கிலேய-அமெரிக்க ஒத்துழைப்பு அதிகரித்துக்கொண்டே வந்தது. அட்லாண்டிக்கிலும், செங்கடலிலும் அமெரிக்கர்களின் உதவி அதிகப்பட்டது. ஆதலால் தான் 1940 வருஷ கோடைகாலத்தில் பிரிடனின்மேல் படையெடுப்பைச் செய்ய ஹிட்லர் துணியவில்லை. அதற்குப்பதிலாக மே௴ 4-ம்தேதி பிரிடனுடன் புரியப்படும் யுத்தம் நீடித்திருக்குமென்று ஹிட்லர் சொன்னான். ஏனென்றால் பிரிடனைப் படையெடுப்பதென்றால் பின்புறமாகத் தன்னை ஒருவரும் தாக்காமல் செய்துகொள்ளவேண்டும். உடனே ருஷ்யாவைத் தாக்கி நிலைமையைச் சீர்படுத்திக் கொள்ளலாமென்று நினைத்தான்.

ருஷ்யச் ஸைனியங்களைத் தோற்கடித்தால் ஏராளமான சாமான்கள் வசப்படுவதோடு பிரிடன் படையெடுப்பை பயமில்லாமல் செய்ய முடியும். இவ்விதமாக உலகாக்கிரமணமே ஹிட்லரின் லக்ஷியமாக இருந்தது. மேலும் அவனது சைனியங்களைச் சண்டையில் ஈடுபடுத்தி யுத்த உணர்ச்சி குறையாமல் செய்ய வேண்டியும் வந்தது. ருஷ்யாவைத் தாக்கினால் அங்கிருந்து தனது சைனியங்களுக்கு ஸப்ளைகளைப் பெறலாமென்றும் நினைத்தான்.

ருஷ்யாவில் ஜயம் பெற்றால் பிரிடனின் பொருளாதார முற்றுகை தன்னை அதிகம் பாதிக்காமல் செய்து பெரியதொரு தரைப் படையைத் திரட்டி பிரிடனின் கடலாதிக்கத்தை வியர்த்தமாக்கி விடலாமென்றும் நினைப்புக் கொண்டிருந்தான்.

ஆகவே ருஷ்ய யுத்தத்தால் அரசியல் பிரச்னைகள் பல கிளம்பும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் என்ன செய்வதென்று தெரியாமல் குழப்பம் உண்டாகுமென்றும், ஆக்ரமித்த பிரான்ஸில் ருஷ்யாவிற்கு விரோதமான எண்ணம் பரவுமென்றும், ஜப்பானில் யுத்த உணர்ச்சி அதிகமாகுமென்றும், இப்படியெல்லாம் நேர்ந்தால் நேசநாடுகள் ஜெர்மனியை எதிர்ப்பதை நிறுத்திவிடுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

## ஆசைகள் ஏமாறின.

1941, ஜூன் 22உ ருஷ்யாவை ஹிட்லர் தாக்க ஆரம்பித்தான். பிறகுதான் இந்த யுத்தத்தின் கருத்து செம்மையாக விளங்கிற்று. அன்றுதான் முன்னேற்றம், அறிவு, நன்மை இவைகளைக் காக்கும் படைகளுக்கும், மாறுதல், அக்ஞானம் தீமை இவைகளுடன் போராடும் படைகளுக்கும் சண்டை ஆரம்பமாயிற்று. இந்தச் சண்டை இதற்குமுன் இருபது வருஷகாலமாக ரகசியமாக நடந்து, ஸ்பெயின் கலகத்தில் கொஞ்சம் வெளியே தோன்றி, ருஷ்ய யுத்தத்தின் போது கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. இதன் பயனாக ஹிட்லரின் திட்டங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் குலைய ஆரம்பித்தன.

வாஸ்தவத்தில் நேசநாடுகளுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படவில்லை. மிஸ்டர் சர்ச்சில் முன்வந்து தலைமை வகித்தார். "இது தனிப்பட்ட கட்சி சண்டையல்ல, அபிப்பிராய பேதத்தால் ஜனநாயகங்களின் யுத்த முயற்சி குறையுமென்று ஹிட்லர் நினைத்தால் அவன் ஏமாறவேண்டியதுதான். இதுவரையிருந்த மாறுபாடுகளும் அவைகளால் நேர்ந்த தீங்குகளும் இனி இருக்கா" என்றார். ருஷ்யர்கள், பிரிடிஷ் இதர நேச நாடுகள் யாவரும் தங்கள் தங்கள் நாடுகள் எதிரி வசப்படாமல் காப்பாற்றவே யுத்தம் செய்வதால் யாவருக்கும் ஹிட்லர் சம்பந்தப்பட்டவரை ஒருவிதமான மனப்பான்மைதான். அன்று முதல் ருஷ்யாவிற்கு ஆங்கிலோ-அமெரிக்க உதவி குவிகிறது. இதுவே ஹிட்லரைக் கலங்கச் செய்தது. இதோடு மட்டுமில்லாது ஆக்ரமிக்கப்பட்ட நாட்டிலுள்ளோரும் மத துரோகியான ஹிட்லர் பொதுவுடமைக் கட்சியை அழிக்கவே ருஷ்யாவைத் தாக்குவதாக சொன்னவார்த்தையில் நம்பிக்கை இழந்தனர். இரண்டாவதாக ருஷ்யச் சைனியம் இவ்வளவு பிரமாதமாக எதிர்த்து நிற்கும் வல்லமை பொருந்தியது என்றும், ஹிட்லர் எதிர்பார்க்கவில்லை. ருஷ்யச் சைனியம் இருபது வருஷகாலமாகத் தாயாரிக்கப்பட்டு வருகிறது. அதன் முஸ்தீப்பு முதல்தரமானது. நவீன முறைகளுடன் கூடியது. ருஷ்யப் போக்குவரவு வசதியினால் அடிக்கடி பலம் பெற்றும் வருகிறது. பால்டிக்கிலும், கருங்கடலிலும் ஜெர்மன் பயத்தை தடுக்கமுடியுமென்று ருஷ்யக் கடற்படை காண்பித்தது. விமானச் சண்டையில்தான் அதிகமான திகைப்பு ஜெர்மானியருக்கு நிகழ்ந்தது. லுப்ட்வாபி படையால் நிர்வகிக்கக்கூடவில்லை. திடீர் தாக்குதல்கள் பலிக்கவில்லை. ஜூலை 7உ ருஷ்யர்கள் ரிஸர்வ் படைகளையும் உபயோகிக்க வேண்டிவந்ததென்று ஜெர்மன் ஒலிபரப்பில் சொல்லப்பட்டு பதினைந்து நாள் கழித்து லெனின்கிராட் எதிரி வசமாகும்போலும் காணப்பட்டது. ஆனால் பிரசாரம் எல்லாம் பயன்படவில்லையென்று ஹிட்லர் உணர்ந்தான். படையெடுப்புச் செய்தி பரவியதும் ருஷ்யர்கள் யாவரும் ஒன்று கூடி தேசப்பாதுகாப்பில் அக்கரையுடன் ஈடுபட்டனர். தேசீய உணர்ச்சி முன்னிருந்ததைக் காட்டிலும் நாஸிப் படையெடுப்பு காலத்தில் பன்மடங்கு காணப்பட்டது. ருஷ்யாவில் துரோகிகளின் கூட்டம் இல்லாததால் ஹிட்லருக்குச் சாதகமே ஏற்படவில்லை. ருஷ்யா ஒரு தனிப்பட்டு ஒன்றுபட்டிருக்கும் தேசம். ருஷ்யர்கள் ஒற்றுமைபட்ட ஒரு தேசத்தினர். இதனால் ஹிட்லரை எதிர்க்க முடிகிறது.

## ஆரம்ப யுத்தம்.

எப்போதும் திடீர் தாக்குதலைச் செய்ததால்தான் ஆரம்ப காலங்களில் ஹிட்லருக்குக் கொஞ்சம் சாதகம் ஏற்படுகிறது. ஆனால் ருஷ்ய யுத்தத்தில் அவன் எதிர்பார்த்தபடி பாதி வெற்றிகூட கிடைக்கவில்லை.



ஆரம்ப காலத்தில் வெள்ளை ருஷ்ய முனையில் ஸ்மாலென்ஸ்க், மாஸ்கோ பிரதேசத்தில் யுத்தம் தொடங்கியது. ஆரம்பித்த மூன்றாம்நாளே வில்னாவை ஜெர்மானியர் அடைந்தனர். மின்ஸ்க் வரையிலும் ருஷ்யர்கள் பின்வாங்கினார்கள். ஒன்பது நாள் யுத்தம் நடந்ததும், டின்ஸ்கும் எதிரி வசமடைந்ததாகச் சொல்லப்பட்டது. பொரிஸோவையும், பொப்ருயிஸ்கில், பெரிஸினா நதியை அடைந்ததும் ஜெர்மானியர் பல்நாள் தடையுற்றனர். மூன்றாவது வாரத்தில் ஜெர்மானியரின் வேகம் குறைந்து முதல் கட்டமே தளர்ந்துவிட்டது. ஆரம்பத்தில்தான் தினம் 20 மைல் முன்னேறப்பட்டது. ருஷ்ய நஷ்டமும் அதிகம். லிதுவேனியா, லாட்வியா, வெள்ளை ருஷ்யாவின் மேற்கு பகுதி, யூக்ரேனின் மேற்கில் ஒருபாகம் இவை நஷ்டமானதாக ஸ்டாலினே ஒப்புக்கொண்டார்.

## தாக்குதல் நிறுத்தப்பட்டது.

தோல்வி வந்த காலங்களில் ருஷ்யர்கள் தங்களுடைய யுத்த திட்டங்களைச் சீர்படுத்திக் கொண்டே போய், பிரான்ஸில் நாஸிகள் வெற்றி அடைந்தமாதிரி அடையாமல் செய்தனர். ஜெர்மானியரின் திட்டம் ஆசையுள்ளதாயும் துணிச்சலுள்ளதாயும் இருந்தது. பின்லாந்து வழியாக லெனின்கிராட்டை நோக்கியும், எஸ்டோனியாவையும், மின்ஸ்க், ஸ்மாலென்ஸ்க் வழியாக மாஸ்கோவை நோக்கியும், யூக்ரேன் தலைநகரமான கீவை நோக்கியும் தாக்குதல் செய்யப்பட்டது.

அந்த சமயத்தில் ஸ்டாலின் தனது படைகளைத் தனித்தனியாகப் பிரித்து வொரோஷிலாவ், டிமொஷென்கோ, புடென்னி இவர்களின் கீழ் ஒப்படைத்தார். இதனால் 1940-ல் பிரெஞ்சுத் தலைவர்கள் செய்த பிழை தவிர்க்கப்பட்டது. சைனியங்கள் ஒரு இடத்தில் கட்டுண்டு கிடக்காமல் பலமுனைகளில் சண்டை செய்ய முடிந்தது.

பிரான்ஸில் நேசதேசத் சைனியங்களை இரு பாகமாகப் பிரித்ததால்தான் ஜெர்மானியர் வெற்றிபெற்றனர். ஆகவே ருஷ்யர்கள் தங்கள் படைகளை எதிரி சூழ்ந்துகொள்ளாமல் பார்த்துவந்தனர். யுத்தம் பூராவும் ருஷ்யச் சைனியங்களுக்கு ஒன்றுக்கொன்று சம்பந்தம் இருந்தது. நவீன முறைகளுக்குத் தக்கவாறு அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் எதிரி டாங்கிகளையும், தரைப்படையையும், பிரித்து, டாங்கிகளை டாங்கிகளால் எதிர்த்தனர். தரைப்படைக்கும் விமானப் படைக்கும் ஒத்துழைப்பு ஏற்பட்டிருந்தது. ஜெர்மன் படையிலுள்ள டாங்கி, மோட்டார் ஸைகிள்படை இவைகளின் உதவிக்கு வரும் பல பகுதிகள் அழிக்கப்பட்டன.

இவ்விதமாக ஹிட்லரின் திட்டங்களெல்லாம் முறிந்ததோடு கிரம்லினுக்குள் எதிர்பார்த்தபடி பிரவேசிக்கவும் முடியவில்லை. ஆகவே ஆச்சரியத்தை விளைவிக்கும்படி ஹிட்லர் அக்டோபர் 3உ பேசினார். அன்று அவன் பேசியது போட்ட திட்டங்கள் முறிந்தவனுடைய பேச்சுமாதிரியே இருந்தது. சரத்காலம் நெருங்கி வந்ததால் ருஷ்யச் சண்டையை ஒருவாறு முடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. "கிழக்கே நமது எதிரி முறியும்படியான பிரமாத சம்பவங்கள் நிகழும்" என்று ஜோஸியம் சொன்னான். மாரிகாலம் வருவதற்குள் அதை முடிக்கவும் நினைத்தான். லெனின்கிராட், மாஸ்கோவைப் பிடித்து கிழக்கு யூக்ரேனை வியாபித்து கிரிமியாவைப் பிடிக்கவே நினைத்தான்.

அந்தக் காலத்தில் செய்யப்பட்ட ஜெர்மன் தாக்குதல்களால் அவர்களுக்கு சில சாதகமேற்பட்டாலும் லக்ஷியம் கைகூடவில்லை. மாஸ்கோ—கலினின் ரஸ்தா கலூகா, வியாஸ்மா, ஓரெல், பிரயான்ஸ்க் முதலியன வசமாயின. தெற்கே ஏராளமான ருமேனியர்களை அழித்து ஒடெஸ்ஸாவைக் காலிசெய்தனர். மரியோபூல், மெலிடோபோல், பெர்டியான்ஸ்க் இவைகளைப்பிடித்து, அஸாவ் கடற்கரையையும் எதிரி அடைந்தான். பெரிகாப்தீபகற்பத்தை தாக்கி, கார்கவ், ஸ்டாலினோவைப் பிடித்து கிரிமியா வழியாயும் எதிரி சென்றான்.

நவம்பர் முடிவில் தெற்கில் நிலைமை மோசமாக இருந்தது. டானெட்ஸ் பிரதேசத்திலிருந்து தொழிற்சாலைகளை ருஷ்யர்கள் இழக்க நேர்ந்தது. கிரிமியாவின்

தலைநகரான ஸிப்பெரோபோலைக் காலிசெய்தனர். காகஸஸுக்குத் தடையாயிருந்த கெர்ச்சை இழந்தனர். ரோஸ்டவ் வரை எதிரி முன்னேறியதால் என்ணெய்த் தங்களுக்கு ஆபத்து அதிகரித்தது. ஸெபாஸ்டபூல் மாத்திரம் எதிர்த்து நின்றது.

இந்த நிலைமையில் மாஸ்கோ பக்கமாக ஹிட்லர் திரும்பினான். இங்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பினால்தான் நிலைமை கொஞ்சம் சாதகமாக இருக்கிறது. பாதி ஜெர்மன் டாங்கிப் படையும், 49 பகுதிகளும் மாஸ்கோ பக்கம் திருப்பப்பட்டும் நகரம் வசமாகவில்லை. மாஸ்கோவில் அதிக எதிரிப் படைகள் ஈடுபட்டிருந்ததால் தெற்குப் பக்கமாக டிமொஷென்கோ திரும்பி சைனியத்தைச் சீர்திருத்த முடிந்தது. டானெட்ஸ் நதியில் ரோஸ்டவ்விற்கு மேற்கே 10 மைல் தூரத்தில் தயார் செய்திருந்தான். மாஸ்கோ தாக்குதலும் பலிக்கவில்லை.

அக்டோபர் 3உ "கடைசி தாக்குதல்" என்று சொல்லி ஹிட்லர் தாக்குதலைச் செய்தான். மாரிகாலம் ஆரம்பித்தது. ருஷ்ய எதிர்ப்பும் குறையவில்லை. ஆகவே முற்றுகை யுத்தத்தை எதிரி செய்ய ஆரம்பித்தான். தனது சைனியத்திற்கு மாரிகாலத்தில் தங்க இடம் என்று சொல்லி அதற்கு லாயக்காக ஸ்தானங்களை அமைத்துக்கொண்டான். நேர்முகமாகப் பட்டணங்களைத் தாக்கவில்லை.

## போக்கு மாறியது.

மாரிகாலமான ஆறுமாத காலத்தில் ருஷ்யர்கள் எதிரிகளை எதிர்க்க முடிந்தது. இது எதிரிக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. "யுத்தம் இன்னும் நீடித்து நடக்குமென்று" ஹிட்லர் நவம்பர் 8உ சொன்னதே போதுமானது. "யுத்தம் எப்போது முடியுமென்ற பிரச்னையைக் காட்டிலும், எப்படி முடியுமென்பதுதான் பிரச்னை" என்று டாஸ்ரீச் பத்திரிகையில் டாக்டர் கோயபல்ஸ் எழுதினான். ஆனால் முந்திய மார்ச்சு மாதத்தில் கோயபல்ஸ் ஸ்பெயின் பத்திரிகை நிருபர்களிடம் "இவ்வருஷ முடிவுக்குள் இந்த யுத்தம் முடியுமென்று" சொன்னான். ஆனால் போட்ட திட்டங்கள் பலிக்காததால் புது வருஷ ஆரம்பத்தன்று ஹிட்லர், தனக்கு வெற்றி வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்தான். ஏனென்றால் மறைமுகமாகத் தனக்கு ஏதோ கெடுதல் ஏற்படுவதாக உணர்ந்தான். ஜெனரல் ஹாஸல்போன் என்ற ஜெர்மன் ஜெனரல் வசந்த காலத் தாக்குதல் நடக்கப் போவதாயும் அப்போது ருஷ்யர்களால் நிர்வகிக்க முடியாதென்றும் சொன்னான்.

ஜெர்மானியரின் நான்கு தவறுதல்களைப் பற்றி ஸ்டாலின் சொன்னார். அதாவது, ருஷ்யா ஆறு வாரங்களில் தோற்கடிக்கப்படுமென்றும், கிரேட் பிரிட்டனும் அமெரிக்காவும் ருஷ்யாவிற்கு விரோதமாக நிற்குமென்றும், ருஷ்ய ஆட்சி சரிவர இல்லையென்றும், செஞ்சேனை கலைந்து விடுமென்றும் எதிரிகள் நினைத்தது நான்கும் தவறுதல்கள்.

ஆகவே தற்சமயத்திலுள்ள ஜெர்மன் படைகள், 1916-ல் வெர்டூன் சண்டையில் தோற்றபிறகு இருந்த மாதிரியே இருக்கின்றன. முடிவான வெற்றி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ருஷ்யர்களும் ஜெர்மானியர்களைக் களைக்கச் செய்திருக்கின்றனர்.

## நேச நாடுகளின் உதவி.

ருஷ்யர்களுக்கு ஏராளமாக நஷ்டங்கள் நேரிட்டுவந்தாலும், அவர்கள ஏற்கனவேயுள்ள உற்பத்தியின் அளவு குறைந்து போகாதபடி முயற்சித்து வருகிறார்கள். இத்துடன் நேசதேசத்தார்களின் ஸப்ளைகளும் வந்து சேர்ந்திருக்கின்றன. ருஷ்யாவில் தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் சாமான்களுடன் இன்னும் உபரியான சாமான்கள் நேசதேசத்தார்கள் அனுப்பிவருகிறார்கள். ஸோவியத் ஐக்கியநாடு படையெடுக்கப்பட்ட அன்றே ருஷ்யர்களுக்கு உதவிசெய்வதாக மிஸ்டர் சர்ச்சில் வாக்குறுதி கொடுத்தார். அதுமுதற்கொண்டு ருஷ்யாவிற்கு யுத்த தளவாடங்களும், இன்னும் மற்ற உதவியும் நேசதேசத்தார்களிடமிருந்து வந்து கொண்டிருக்கின்றன.



அமெரிக்காவும், பிரிடனும் குத்தகைக்கடன் மசோதாபடி ருஷ்யாவிற்கு ஸப்ளைகளை அனுப்புவதற்கான வசதிகளை ஏற்படுத்தியிருக்கின்றன. அதன்படி இப்பொழுது ஸ்டாலினுக்கு டாங்கிகள், பீரங்கிகள், விமானங்கள் முதலியவைகளை அனுப்பிவருகின்றன. ருஷ்யாவிற்கு ஸப்ளைகள் அனுப்புவதற்கான மார்க்கங்கள் புதிதாகத் தயாரிக்கப்படுகின்றன. பர்ஸியா மூலமாகவும், இந்தியா மூலமாகவும் செல்லும் மார்க்கங்களை செம்மைபடுத்த இஞ்ஜினியர்கள் வேலைசெய்து வருகிறார்கள். ஆர்க்கேஞ்சல் வழியாகச் செல்லும் மார்க்கத்தில் ருஷ்யாவின் வடக்குக் கரையிலுள்ள துறைமுகங்களில் உள்ள பனிக்கட்டிகளை அப்புறப்படுத்த ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

சமீபத்தில் வாஷிங்டனில் M. மாலடோவ் குத்தகைக்கடன் ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளை ருஷ்யாவிற்கு அனுசரணையாகச் செய்து அதற்கு உதவி அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச்செய்துமுடித்தார். அவ்வொப்பந்தத்தின் 7-வது ஷரத்து குத்தகைக்கடன் நிபந்தனைகளை ஒழுங்காக விதித்திருக்கிறது. அதன் பிரகாரம் "வியாபாரத்திற்கு அதிகமான நெருக்கடி ஏற்படாமலும், தொழிலாளிகளை ஜாஸ்தி நியமிப்பதின் மூலம் சாமான் உற்பத்தியை அதிகப்படுத்தியும், சாமான்களின் உபயோகிப்பதை அதிகப்படுத்தியும்," ருஷ்யாவிற்கு உதவி செய்ய வேண்டும். இம்மாதிரியாக நேசதேசத்தார்கள் முதலில் வெற்றி பெறுவதற்காக ஒன்று சேர்த்திருக்கிறார்கள். அதோடு எல்லா ஜனங்களையும் ஈடுபடுத்தும் இந்த யுத்தத்தை மேல்நடத்தி உலகத்தில் சமாதானம் எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுமென்று உறுதி கூறியிருப்பதற்கு அனுகுணமாக நடந்து கொள்ளுகிறார்கள்.

## மாரிகாலப் படையெடுப்பு.

ருஷ்யரின் மிகத்தாழ்ந்த நிலைமை நவம்பர் 22-ம் தேதி தோன்றியது. அன்று தெறகே ரோஸ்டவ்வும், வடக்கே டிக்கானும் ஜெர்மன் கைவசமாயின. ஆனால் நிராசில் மாரிகாலம் என்ற தளகர்த்தர் தன் வல்லமை பூராவையும் வைத்து அழுத்தவே தங்களைப் பழித்தவர்கள் ஆச்சரிமடையவும், ஜெர்மானியர்களின் எண்ணங்கள் கவிழ்ந்துவிடவும் ருஷ்யர்கள் மறுபடியும் தங்களுடைய பிரகாசமான நிலைமையை அடைந்தார்கள். லிபியாவிலும், எதிர்ப்பு ஆரம்பித்தது. ஜெனரல் ஆச்சின்லக் பெங்காஸி வரை தொடர்ந்து முன்னேறியதால் ஜெர்மானியர்களுடைய விமான பலத்தின் பெரும் பாகத்தை மேற்குப் பாலைவனத்தில் திருப்பவேண்டியதாயிற்று. அதன்மேல் சொல்லிக் கொடுக்கப்பட்ட யுத்த தந்திரத்தாலும், ருஷ்ய ஸர்வாதிகாரத்தின் அமுலில் சரியான சமயத்தில் ஜெர்மானியர் தாக்கப்பட்டு, லெனின்கிராட், மாஸ்கோ, ரோஸ்டவ் முதலிய இடங்களைச் சுத்தி ஊன்றிக்கொள்ள விரோதிகளுககு அவகாசமில்லாமல் போய்விட்டது.

## மாஸ்கோவிற்கும், லெனின்கிராட்டுக்கும் உதவி.

ருஷ்யர்கள் எதிர்த்துப்போராட ஆரம்பித்ததை ஜெனரல் பிராஜிட்ஸ்க் அவர்களின் ஆலோசனையை ஹிட்லர் சென்ற ஸெப்டம்பர் மாதத்தில் புறக்கணித்ததைக் காணலாம். வசந்த காலம் வரையில் வடக்கிலும், மத்தியிலும் உறுதியாக நின்றுகொண்டு அவசியமானால் பாதுகாப்பு நிலயங்களுக்கு துருப்புகளின் பெரும் பாகத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு தெற்கே காகஸஸை நோக்கி முன்னேற வேண்டுமென்று அந்த தளகர்த்தர் யோசனை சொன்னார்.

ஹிட்லர் வேறுவகையாக எண்ணங்கொண்டு மாஸ்கோவை எதிர்ப்பதில் எண்ணங்கொண்டார். மாஸ்கோவை வட்டமிடுவதற்கு ஒரே ஒரு துருப்புத்தான் பாக்கி. ஜெர்மானியர்கள் ஓய்ந்து போனார்கள். அவர்கள் மேல் எதிர் பாராத சக்தியுடன் எதிர்ப்பு நேரிட்டது. அவர்களும் மாரிகால நிலைமைக்கு கொஞ்சங்கூடத் தயாராக இல்லாதவர்கள். ஆகவே ருஷ்யர்களில் ஒன்று சேர்ந்து செய்யும் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் ஜெர்மன் ஆப்புகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பிடுங்கிக்கொண்டன.

மாஸ்கோவிற்கு வடக்கிலும், தெற்கிலும், அபாயகரமாக இருந்த முன்னேற்றங்கள் இரண்டும் முதல்முதலில் ருஷ்யர்களால் துரத்தப்பட்டன. கிளின்.

கலினின், யேலட்ஸ், (Yeletz) ஸடாலினோகார்ஸ்க் முதலிய ஊர்கள் கைவசத்தைவிட்டுப் போனபோதிலும் தங்களுடைய அணிவகுப்பை நேர்படுத்திக்கொண்டோமென்று ஜெர்மானியர் பாசாங்கு செய்தாலும் உண்மை போல் தோன்றும். கலுகா, மொஜெயிஸ்க் இவ்விரண்டையும் ருஷ்யர்கள் திரும்பிக் கைப்பற்றிக்கொண்டதும் மாஸ்கோவிற்கிருந்த அபாயம் நீங்கியது. விரோதிகள் மேற்கே 85 மைல் தூரம் விலகினார்கள். மாஸ்கோவை, லெனின்கிராட்டிலிருந்து முற்றிலும் துண்டித்துவிடுவதற்கு இடங்கொடுக்காதபடி டிக்காலே மறுபடியும் கைப்பற்ற நேர்ந்தது. போராக்குறைக்கு அஸாவ கடலை நோக்கி பிரமாதமாக டிமொஷெங்கே முன்னேறி வந்ததும் காகஸஸுக்கு வாசற்படியாக இருந்த ரோஸ்டவ்விலிருந்து ஜெர்மானியர் துரத்தப்பட்டார்கள்.

இதற்குமேல் இரண்டாவதாக ருஷ்யர்கள் முன்னேறுவதற்குச் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால் ஜெர்மானியர் தங்கள் அணிவகுப்பை நேர்படுத்திக்கொண்டு, மாரிகாலத்தில் தங்கியிருந்து, வசந்த காலம் பிறந்ததும் சுலபத்தில் தங்களுக்கு லக்ஷியமான இடங்களை அவர்கள் தாக்காதபடி செய்து கொள்ள வேண்டியது. ஆகவே புதிய டாங்கிப் படைகளைக்கொண்டும், காலாட் படைகளைக்கொண்டும் படு குளிரிலும் போர் செய்வதற்கு ஆயத்தமாகச் செய்து கொண்டு தாக்கிவந்தார்கள். ஆழ்ந்த பனியுறைகளில் குதிரைப்படைகளை உபயோகித்தும், ஆகாய மார்க்கமாய் விமான எதிர்ப்பில் வல்லவர்களாக இருந்ததாலும், அவர்களைக் கண்டு ஜெர்மானியர் பயப்பட வேண்டியதாயிற்று.

## ருஷ்யர்களின் ஆப்பு.

ருஷ்யச் சேனை செய்யவேண்டிய மூன்றாவது காரியம், ஜெர்மன் அணிவகுப்பின் பல இடங்களிலும் பல்லுகள் பதிவதுபோல் முன்னேறி ஜெர்மன் அணிவகுப்பை உள்ளே தள்ளவேண்டும். இதை ஒத்து "சோம் (Cholm) வெலிக்கோலூக்கி இவை வழியாக லிமன ஏரியிலிருந்து தென்கிழக்காக ருஷ்யர்கள் ஆப்புபோல் உள்ளிறங்கி லெனின்கிராட்டுக்கும், விட்டிபிஸ்க் (Vitebsk) இருப்புப்பாதையைத் துண்டிக்க நேரிடும்போல ஆயிற்று. இன்னுமொரு பக்கம் வடமேற்கே கலுகாவிலிருந்து முன்னேறி ஸ்மாலென்ஸ்க்கில் வந்து கூடும்படியாக ஒரு பெரிய இடுக்கித்தாக்குதல் செய்தார்கள். இதைப்போலவே கார்கவ்விற்குத் தெற்கே நீப்பர் நதிபக்கம் தென்மேற்குப் பார்சமாக அஸாவ் கடற்கரை மார்க்கத்தில் ஜெர்மானியரை பொரியிலிட்டு, கிரிமியாவில் அவர்களுடைய நிலைமை அபாயத்தில் இறங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

இவை காரணமாக ருஷ்யர்களின் சஞ்சாரங்களில் ரிஷெவ், வியாஸ்மா, ஸ்டாராயா ரூஸா களில் பெருத்த ஜெர்மன் சைனியங்கள் சூழ்ந்து கொள்ளப்பட்டன. இவை லெனின்கிராட். யூக்ரேன் இருப்புப்பாதை தென்வடலாக பூதாகாரமாக வந்ததை எகோல என்ற இடத்தில் துண்டித்துவிட்டார்கள். இவை, துவைனா (Divina), கிலிதோவா, ஒலேனினோ ஆகிய இடங்களைப் பிடித்ததில் மாஸ்கோ-ரீகா முக்கியபாதையை பல இடங்களில் துண்டிக்கப்பட நேர்ந்தது.

ஆகவே மாரிகாலத்தில் ருஷ்யர்கள் செய்த யுத்த தந்திரத்தினால் ஜெர்மானியர் தங்கள் கைவசமிருந்த துருப்புகளை பயமுறுத்தப்பட்ட இடங்களுக்கு இங்குமங்கும் மாற்றிவர நேரிட்டதால், குறிப்பிட்ட எந்த இடத்திலும் துருப்புகளைச் சேகரித்து வசந்தகாலத்தில் பெரியதொரு முயற்சி செய்வதென்பதற்கு ஜெர்மானியர் தயாரிக்க முடியவில்லை.

செஞ்சேனை ஸ்தாபனத்தின் 24வது ஆண்டுவிழாவில் ஸ்டாலின் பேசியதிலிருந்து, ருஷ்யர்கள் மாரிகாலம் முழுவதும் இடைவிடாது சண்டை போட்டுக்கொண்டிருந்தபோதிலும், அவர்கள் சளைக்கவில்லை என்பதையும், ஜயிப்பதில் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தார்கள் என்பதையும் நாம் அறிகிறோம். மார்ச்சு மாதம் 15-ம் தேதி ஹிட்லர் பேசியதில் ஒரு ருஷ்யப் படையை அழித்தால் ஒன்றுக்குப் பத்தாய் ருஷ்யத் துருப்புகள் புதிதாகக் கிளம்புவதையும் "இன்றுதான் எதிரிகள் எவ்வளவு தூரம் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது" என்றும் குறிப்பிட்டான்.



ஹில்ஸிங்ஜன் 'ஸனௌனட் (Helinsingen Sanounat) என்ற பின்லாந்து பத்திரிகாசிரியர் மார்ச்சு மாதத்தில் ஜெர்மனியிலிருந்து திரும்பியவுடன் சொன்னதாவது, 'முடிவில் எதுவும் நன்மை ஏற்படுமென்று பொதுவாக நம்பப்படவில்லை. ருஷ்யாவின் ஐரோப்பிய பாகத்திலிருந்து செஞ்சேனைகளைத் துரத்திவிடலாம் என்பதுகூட மிகுந்த ஆஸ்தைப்படுவோர்களுக்கும் சிரமசாத்தியமான காரியமென்று நம்புவதாகத் தெரிகிறது.'

## ஜெர்மானியரின் புதுதாக்குதல்.

கெர்ச் தீபகற்பத்தில் மே௴-த்தில் ஜெர்மானியர் யுத்தம் ஆரம்பித்து சீக்கிரத்தில் உயிர் நிலையான ஜலசந்திகளை நெருங்கினார்கள். ஆனால் டிமொஷெங்கோ கார்கவ்வைச் சுற்றிலும் மும்முரமாக இருக்கிறார் என்பது அதேசமயத்தில் தெரியவந்தது. அதனால ஜெர்மன் முயற்சிக்கு வேறு தொனி ஏற்பட்டது. இஷியத்தை (Izyum)ச்சுற்றி ஜெர்மானியர் திரும்பத் தாக்கியதைப் பார்த்தால் டானெட்ஸிலிருந்து முன் யோசனையுடன அவர்களை எதிர்த்துப் போராடினதாகத் தெரியவில்லை. ஜெர்மன் காகஸஸ் படையின் இடது விலாவைத் காப்பதற்காக அந்த சமயத்தில் ஆலோசித்து செய்த காரியமாக இருக்கிறது. மின்னல் படையெடுப்பை டிமொஷெங்கோ முறிபடித்துவிட்டார். அதனால் ரோஸ்டவ் தாக்கப்படுவதிலிருந்தும் காப்பாற்றப்பட்டது.

முதலில் நினைக்காத திசைகளில் எதிரியை வரச்செய்து அவர்கள் தாக்கினால் சமாளித்து நிற்கக்கூடிய நிலைமையில் தங்கள் சைனியங்களை ருஷ்ய அதிகாரிகள் வைத்துக்கொண்டிருக்கும் வரையில் ருஷ்யர்கள் கையில் பலமிருக்குக்கும். காகஸஸ் பக்கம் தாக்குதல் ஏற்படாமல் ஒதுக்கிப்போட்டுக்கொண்டு வருவதற்கு இதுவே காரணமாகும்.

இப்போது நடந்துகொண்டிருக்கும் யுத்தப் போக்குகளின் முக்கியத்வத்தை இது சமயத்தில் சொல்வதும் ஆபத்தாகும். இன்னதுதான் நடக்குமென்று இப்போது எடுத்துச் சொல்வதும் பொருத்தமாக இராது. ஏனென்றால் யுத்த மாறுதல்களின் வேகம் இவ்விரண்டையும் பொய்ப்பித்துவிடும்.

## இங்கிலாந்து—ருஷ்ய ஒப்பந்தம்.

தங்களுடைய வல்லமை குறையாமலும், ஜயிக்க வேண்டுமென்ற பெருத்த நோக்கத்துடனும் ருஷ்யர்கள் தங்களுடைய இரண்டாவது வருஷ யுத்தத்தை ஆரம்பிக்கிறார்கள். 1942-ம் ௵ மே௴ 26௳ ருஷ்யர்களுக்கும், இங்கிலீஷ்காரர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் இந்த மனவுறுதியை வலுப்படுத்துகின்றது. அது இங்கிலாந்துக்கும், ருஷ்யாவுக்கும் ஏற்பட்ட நட்புக்கும், மன ஒற்றுமைக்கும் சிகரக்கல் போலுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் அறிகுறியில் முதலாவது ருஷ்ய வியாபார தூதுகோஷ்டி பிரிடனுக்கு வந்த விஷயம். பிரிடனில் இரண்டாவது போர்முனை ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தப்படுவது இரண்டாவது அறிகுறி. 1940-ம் வருஷத்தில் ருஷ்யாவை பிரிடன் காப்பாற்றியது. 1941-ம் வருஷத்தில் பிரிடனை ருஷ்யா காப்பாற்றியது. பரஸ்பரம் இரண்டு நாட்டு ஜனங்களுக்கும் ஏற்பட்ட மதிப்பையும், நம்பிக்கையையும் வெகுநாளாக அவை தோன்றியிருந்தாலும் அவற்றை வாசக ரூபமாக இந்த ஒப்பந்தத்தில் கண்டெழுதியிருந்தது.

ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஏற்படுவது சம்பந்தமாக பூரண ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், ருஷ்யாவின் யுத்த தந்திரங்கள் பிரிடன், அமெரிக்கா இவற்றின் தந்திரங்களுடன் ஒன்றுபட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். ஐரோப்பாவில் அச்சு நாடுகளுக்கு எதிரியாகச் சேர்ந்து நடவடிக்கை நடத்துவதென்றும், தனி முறையில் ஒப்பந்தமோ, சமாதானமோ செய்து கொள்ளப்படமாட்டாதென்பதும் அவ்வுடனபடிக்கையில் கண்டிருக்கிறது. யுத்தத்திற்குப் பிறகு உலகத்தில் புனருத்தாரணம் செய்யப்படும் காலத்தில் இந்த தேசங்கள் சேர்ந்து ஒத்துழைக்கும் என்பது பற்றியும் மேலே கண்ட உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது.

### முடிவு.

எதிர் காலத்தில் தங்கள் வெற்றி நிச்சயம் என்று ஜெர்மானியர் சொல்லி வந்ததெல்லாம் ருஷ்யா பொய்ப்படுத்திக் காட்டும். இந்த யுத்தத்தின் விளைவுகளைப் பூரணமாக அறிந்திருப்பதினால் ஏற்படக்கூடிய மனோதிடத்துடன் ருஷ்ய ஜனங்கள் யுத்தம் செய்து வருகிறார்கள். நாஸிகளின் ஆவேசம் என்னவென்று அவர்கள் அறிந்தவர்கள். சென்ற வருஷம் ஆபத்தான பல புயல்களுக்கு இடையே அவர்கள் சமாளித்து நின்றவர்கள். இன்னும் எவ்வளவு புயல்கள் வந்தாலும் நிலை பெயரமாட்டார்கள். அவர்களிடையே தேசிய வைராக்கியத்திற்கு தளர்வு ஏற்படுவதில்லை. அவர்கள் சளைப்பதுமில்லை. அவர்களுக்கு ஓய்ச்சல் ஏற்படாது. கொடிய அரக்கனின் பிடியிலிருந்து தம் தாய் நாட்டை தப்புவிக்க வேண்டும் என்ற மனவுறுதியே கொழுந்து விட்டெறிந்து கொண்டிருக்கிறது. அது ஜனங்கள் தங்களுக்காகத் தங்களைக் காப்பாற்ற வேண்டி செய்யும் யுத்தம். அவர்கள் ஒப்பு, உவமை இல்லாத தீர, வீரச்செயல்களைத் தினமே செய்து வருகிறார்கள். நாஸியினரின் கொடுமையில் ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்று மாலடோவின் இரு குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. இந்த நோய் எவ்வளவு தலைமுறையிலும் எட்டிப் பார்க்கக் கூடாதென்று செய்வதில் ஐக்கிய ஸோவியத் தலைவர்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள்.

ருஷ்யாவின் யுத்தம் நமது யுத்தம். ஜெர்மானியர் தாக்க ஆரம்பித்த ஆண்டு நிறைவில் நாங்கள் ஸோவியத் ருஷ்யாவின் தைரியமுள்ள பிரமுகர்களுக்கும், வீரமான செய்கையாளர்களுக்கும் எங்களுடைய வந்தனங்களை அனுப்புகிறோம். இந்த யுத்தம் நாம் மட்டும் செய்வதன்று; நமக்காக மட்டுமல்ல, என்று ஸ்டாலின் சொன்னார். பிரிடன். அமெரிக்கா, சைனா இவை இதை அறிந்தே இந்த யுத்தத்தை பாஸிஸ்டு ஏகாதிபத்தியத்தை தொலைப்பதில் குடிவழிகளின் யுத்தமாகச் செய்ய அணிவகுத்து நிற்கின்றனர்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 1—8—42-லிருந்து 7—8—42-வரை.

**ருஷ்யா.**—மலைப்பாங்கான நாட்டில் 23,000 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள பிராந்தத்தில் முக்கியமாக வடக்கே டான் நதிப்பிரதேசத்திலும், மத்தியில் ஸ்மிலியான்ஸ்காயா என்ற இடத்திலும் தெற்கே பெடேய்ஸ்க்குக்கப்பாலும் கடும்போர்கள் நடந்துவருகின்றன.

இப்பொழுது சுமார் இரண்டு வாரங்களாக டான்நதி வளைவில் கிளட்ஸ்காயாவிற்கும் கலாஷூக்கும் இடையேயுள்ள பிரதேசத்தில் கடும்போர் நடக்கிறது. ருஷ்யர்கள் நடத்தும் சண்டையை முன்னேற்றத் தற்காப்பு என்றும், ‘எதிரியை சுற்றிவளைத்துக்கொள்ளும் தற்காப்பு’ என்றும், சொல்லப்படுகிறது. அதிக உயரமில்லாத குன்றுகளின் தொடர்கள் ருஷ்யர்களுக்கு உதவியாக இருக்கின்றன. டாங்கிகள் செல்லமுடியாமல் அவைகள் இயற்கைத் தடையாக இருக்கின்றன.

ஸ்மிலியான்ஸ்காயா (Tsymlyanskaya)வில் டான்நதியைக் கடப்பதற்கு எதிரிகள் செய்யும் முயற்சி தடுக்கப்பட்டுவிட்டது.

டான்நதிக்குத் தெற்கேயுள்ள பிராந்தியத்தில் அபாயம் இன்னும் இருந்து வருகிறது. பெடோய்ஸ்க் (Bataisk)எதிரி வசமானதும், அஸாவ் பிரதேசத்தில் எதிரி சுற்றி வளைத்துக்கொண்டான். ரோஸ்டாவ்லிருந்து பாகுவரை செல்லும் இருப்புப்பாதையில் 45 மைல் தூரத்திலுள்ள குஷ்செவிஸ்கியா (Kuschchavskaya) என்ற இடத்தை நோக்கி எதிரி முன்னேறினான். வடக்கில் காகஸ்ஸிலிருந்து மாஸ்கோவிற்குச் செல்லும் இருப்புப்பாதையும், தெற்கில் க்ரோஸ் நோடாரிலிருந்து, நோவாரிஸிஸ்க் (Novorissisk)-குச் செல்லும் இருப்புப்பாதையும்



சந்திக்கும் இடமான ஸால்ஸ்க் (Salsk) என்னும் நகரத்தையும் நோக்கி எதிரி முன்னேறிச் சென்றிருக்கிறான். ஸால்ஸ்க்குக்கு தென்மேற்கே 50 மைல் தூரத்திலுள்ள பெலாயா கிளினா (Belaya Glina) என்ற இடத்திலும் யுத்தம் பரவியிருக்கிறது.

ஸ்டாலின்கிராட்டிற்கு தெற்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

அப்பிரதேசத்திற்கு பிரான்ஸ், பெல்ஜியம், எகிப்து. பின்லாந்து முதலிய இடங்களிலிருந்து அச்சு நாட்டுத் துருப்புகள் குவிக்கப்படுகின்றன. துருப்புகள், டாங்கிகள், விமானங்கள் முதலியவை ருஷ்யர்களுக்கு உதவியாக வால்கா பள்ளத்தாக்கில் ஏராளமாகக் கொண்டுவரப்படுகின்றன. அங்கு அமெரிக்க விமானிகள் ஏராளமான ஸப்ளைகளைப் செய்து வருகிறார்கள். உணவுப்பொருள்கள் அதிகமாகச் சேமிக்கப்படுகின்றன. மேலும் உணவுப்பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கச் செய்யப்பட்டிருக்கிறது.

எதிரிகள் சுற்றி வளைத்துக் கொள்ளப்படாமல் ருஷ்யர்கள் சாமர்த்தியமாக ஓரிடத்திற்குப் பின் வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது முன்வைத்த காலை பின் வைக்கக்கூடாதென்று ருஷ்யர்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

சென்ற வாரத்தில் மொத்தம் 60,000 ஜெர்மானியர் கொல்லப்பட்டனர். காயமடைந்தவர்கள் சுமார் 1,80,000 பேர்கள்.

வோரநேஷில் ருஷ்யர்கள் இன்னு பிடிவாதமாக எதிரிகளை எதிர்த்து நிற்கிறார்கள். இங்கு எதிரிகள் நகரத்திற்கு வெளியே கடத்தப்பட்டிருக்கிறார்கள். நதிக்கு வடக்கேயும், தெற்கேயும் எதிரிகள் துரத்தப்பட்டிருக்கிறார்கள்.

வடமேற்குப் போர்முனையில் இல்மென் (Ilmen) ஏரிக்கருகாமையில் யுத்தம் ஆரம்பித்திருக்கிறது. பாரென்ட்ஸ் கடலில் 15,000 டன் நிறையுள்ள விரோதி துருப்பேற்றிய கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.

**எகிப்து.**—இந்த வாரத்தில் விசேஷமான சம்பவம் ஒன்றும் நிகழவில்லை. அதற்கு அங்கு மண் புயல் ஏற்பட்டது ஒரு முக்கிய காரணம். இரு கக்ஷிகளும் பலப்படுத்திக் கொண்டுவருகிறார்கள். ஸிடிபரானிக்கும், டொப்ருக்குக்கும் இடையில் கடல் மார்க்கமாக வரும் எதிரிகளின் ஸப்ளைக் கப்பல்களை நேசதேச விமானங்கள் தாக்கின. கெய்ரோ பிரதேசத்தில் எதிரி விமானப் படையெடுப்பு ஏற்பட்டது. ஸூயஸ் கால்வாய் பிரதேசத்தில் அபாயச் சங்கு முழங்கிற்று. ஸிஸிலியிலுள்ள லிகடா, மெர்ஸா மாட்ரூ, டொப்ருக் இவைகளின் மேல் பிரிடிஷ் விமானப்படை குண்டுகளை வீசின.

**பர்மா.**—முக்கியமாக மாண்டலேயிலிருந்து மியிட்கினா வரை செல்லும் இருப்புப்பாதையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள், சாமான் வண்டிகள் முதலியவைகள் பிரிடிஷ் விமானப்படையின் இலக்காகின. கலேவா, ஸிங்காங் அக்கியாப் முதலிய பிரதேசங்களில் விமான எதிர்ப்புகள் ஏற்பட்டன. கடுமையாகப் பருவக்காற்று வீசிய போதிலும் மியிட்கினாவிலுள்ள விமான நிலயத்தை எதிரிகள் பழுது பார்க்க முடியாமல் செய்ய அமெரிக்க பாம்பர்கள் தாக்கின.

**சைனா.**—கியாங்ஸி மாகாணத்தில் முக்கியமாக க்வெய்க்கி (Kweiki), இங்டன் (Yingtan)லின்ச்வான் இந்நகரங்களின் மர்ம ஸ்தானங்களைச் சீனர்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். வென்ச் சௌவுக்கு வெளிப்புறத்தில் ஜப்பானியப் படைகளும் சீனப்படைகளும் சண்டையில் ஈடுபட்டிருக்கின்றன. வென்ச் சௌவுக்கு மேற்கே சிங்டன் என்னுமிடத்தில் இறங்கிய ஜப்பானியத் துருப்புகள் துரத்தியடிக்கப்பட்டன. அமெரிக்க விமானப்படையின் உதவியைக்கொண்டு சீனர்கள் பூசௌவிலுள்ள லின்ச்வான் என்ற இடத்தைத் தாக்கியும், க்வான் பங்கை நோக்கி முன்னேறிச் செல்லுகின்றனர். ஜப்பானிய ஆகாய விமானப்படையும், கப்பற்படையும் சேர்ந்து மின் (Min) நதி கடலில் சங்கமாகுமிடத்தில் சண்டை செய்தன.

சைனுவில் எதிரிகளின் தாக்குதல்கள் குறைவுபட்டு வருகிறதென்று சைனுவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. மஞ்சுகோவில் ஜப்பானியத் துருப்புகள் ஒன்றுசேர்ந்து ருஷ்யாவை எதிர்க்கலாமென்று தகவல் கிடைத்திருக்கிறது.

**பஸிபிக்.**—நியூ கினியாவில் கோகோடாவைக் கைப்பற்ற நடந்த யுத்தம் ஸாலமன் தீவில் தெற்குக் கடாசி பாகத்திலிருக்கும் கூடல் கனுர் (Gudal Canar) நாட்டிற்குள் ஜப்பானியர்கள் நுழைந்தது, ஆஸ்திரேலியா சமுத்திரக்கரை ஓரத்தில் ஜப்பானியர் மீண்டும் தாக்கினது, தெற்கு பஸிபிக் சமுத்திர கப்பற் படை தளங்களில் நேசதேச விமானங்களும், ஜப்பானிய விமானங்களும் நடத்திய வெடிகுண்டு தாக்குதல்கள், அலூஷியன் தீவுகளில் 10,000 ஜப்பானியர்கள் வந்து இறங்கினதும், ஆக இவைகள்தான் இந்த வாரத்தில் நடந்த முக்கிய சம்பவங்கள். நேசதேச விமானங்களும், கோனு, கே (Cay), குக்கும் (Kukum), கூடல் கனுரிலிருக்கும் ஹூரான் தீவுகள், கோயபாங், பண்டாஜி (Bandagee) இவைகளைத் தாக்கியது. ஜப்பானியர்கள் மோர்ஸ்பி, டார்வின், ஹூரான் தீவுகள், ஹெட்லான் (Headlan) துறைமுகம், டவுன்ஸ்வில்லி (Townsville), மோஸ்மான் (Mossman) இவைகளைத் தாக்கினுர்கள். கடாசியாகச் சொன்ன மூன்று நகரங்களும் ஆஸ்திரேலிய சமுத்திரக்கரையிலிருக்கின்றன.

**விமானத் தாக்குதல்கள்.**—பிரிடிஷ் விமானப்படை, ஹாம்பர்க்கை மறுபடியும் தாக்கியது. அதோடு, கலே, ஆஸ்டண்டு, ஸாரப்ரேக்கன் (Saarbrucken), ஸெண்ட் நாஸேர், ஸெண்ட் ஒமார், வெஸ்ட் பேலியாவிலுள்ள கைத்தொழில் பிராந்தம், அபிவில்லி, செர்பர்க், டஸ்ஸல்டார்ப், இவைகளையும் தாக்கின. சீதோஷ்ண நிலை அவர்களுக்கு அனுகூலமாக இருந்தது.

ஜெர்மன் விமானங்கள் பிரிடன் பேரில் வந்து மிட்லாந்து, கிழக்கு ஆங்கிலியா, தெற்கு சமுத்திரக்கரை ஓரங்களிலும் வெடிகுண்டுகள் போட்டன.

**பலவகைப்பட்டவை.**—1. உள்நாட்டு நெருக்கடியின் காரணமாக M. ஸொஹேலி (Soheily) பிரதம மந்திரிப் பதவியை ராஜீனுமா செய்தவுடன், இரான் பிரதம மந்திரிப் பதவியை M. ஸுல்தானே என்பவர் ஏற்றுக்கொண்டுவிட்டார்.

2. பிரான்ஸில் செவானிஸ் என்ற நகரத்தில் 20 பிரெஞ்சு பிணையாளிகளைச் சுடப்பட்ட கோர சம்பவத்தின் முழு விவரங்களும் இப்பொழுது வெளியாகிவிட்டன. நார்மண்டியில் ஜெர்மன் துருப்புகளை ஏற்றிவந்த ரயில் வண்டியைக் கவிழ்த்தது தான் அவர்கள் செய்த குற்றம். யூரி எட் லாயிரி (Eure et Loire) இலாகாவிலுள்ள ஒவ்வொரு நகரத்திலிருந்தும் பிணையாளிகள் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறுர்கள். அவர்கள் கொலைக்களத்திற்கு லாரிகளில் கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்களை அடக்கம் செய்யும் சவப்பெட்டிகளின்பேரிலேயே அவர்களை உட்காரும்படி நிர்ப்பந்தம் செய்யப்பட்டார்கள்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| **27—7—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இருப்புப் பாதைகள்—ஆக்கிரமித்த பிரான்ஸில் (France). | | | |
| | பெரிய தொழிற்சாலைப் பிரதேசங்கள்.—லிலி (Lille). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| **27—7—42.** (திங்கட்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | அச்சுநாட்டு போக்குவரத்து வண்டிகள், டாங்கிகள், பீரங்கி ஸ்தானங்கள்.—யுத்தப் பிரதேசத்தில்—டொப்ருக் (Tobruk) | பெருத்த சேசம். பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | மேற்கு நோக்கிச் செல்லும் படகுகள்.—எகிப்துக் கடற்கரைக்கருகாமையில். | 2 கப்பல்கள் தாக்குண்டன. | | |
| | மோட்டார் போக்குவரத்து.—மெர்ஸா, மாட்ரு (Mersa, Matruh)விலிருந்து ஸிடிபாராணி (Sidibarrani)வரை செல்லும் ரஸ்தாவில். | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—எல்டாபா (Eldaba) பிரதேசத்தில். | | | 2 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—கிழக்குப் போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | மாண்டலே—ரெங்கூன்—(Mandalay)—(Rangoon)— இருப்புப்பாதை.—தாஸி (Thazi)க்கருகாமையில். | | | |
| | ரயில்வே தொழிற்சாலைகள்.—மியிட்டிங் (Myittnge). | | | |
| | சாமான் வண்டிகள் நிற்குமிடங்கள்.—மாண்டலே (Mandalay). | | | |
| | படகுகள்.—மாண்டலே (Mandalay)க் கருகாமையிலுள்ள நதியில். | | | |
| | முக்கிய கப்பல் துறைப் பிரதேசத்தில்.—அக்கியாப் (Akyab). | | | |
| | **டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கொயபாங் (Koepang). | | | |
| **28—7—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | காலையில்.—லக்ஷியங்கள்—ரூர் (Ruhr), வடக்கு ஜெர்மனி (Germary). | | | 1 விமானம். |
| | இரவில்.—ஹாம்பர்க் (Hamburg). | மிகவும் பலத்த சேதம. | | |
| | விமான நிலயங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம், (Lowcountries). | | | |
| | ரயில்வே போக்குவரத்து—மற்ற லக்ஷியங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—பிரெஞ்சுக் கடற்கரைக்கருகாமையில். | | 35 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 28—7—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | அச்சு நாடுகளின் கடற்மார்க்கமாய் வரும் போக்குவரத்து.-டொப்ருக் (Tobruk) கிலிருந்து ஸிடிபாராணி (Sidibarrani) வரை. | அநேக படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. | | |
| | டொப்ருக் (Tobruk). | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானப் போர்கள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **கிரீட் (Crete)—(பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | கப்பல்கள்.—ஸுடா குடா (Suda bay) விலுள்ள துறைமுகத்தில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | கோனே (Gona). | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான நிலயம்.—கொயபாங் (Koepang). | | | |
| 29—7—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—ரயில்வே இஞ்ஜின்கள், படகுகள், ஜெர்மன் சைனியங்களை ஏற்றும் லாரிகள், கப்பல்கள்—கலே (Calais) யிலிருந்து ஆஸ்டண்டு (Ostend) வரை. | | 3 விமானங்கள். | |
| | இரவில்.-ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—ஸயார்ப்ரக்கன் (Saarbrucken). | | | 3 விமானங்கள். |
| | **லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | கப்பல்கள், துறைமுகம்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | மோட்டார் போக்குவரத்து.—டெர்னு (Derna)வுக்கும், பார்டியா (Bardia)வுக்கும் இடையே. | | | |
| | கப்பல்கள்.—பார்டியா (Bardia) துறைமுகம். | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள்.— போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma)-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | ரயில்வே ஸ்டேஷன்கள், சாமான் ஏற்றும் வண்டிகள்.—மாண்டலே மிட்கியினு (Mandalay—Myitkyina) பாதையில். | | | |
| | விரோதி தளம்—கலேவா (Kalewa). | | | |
| | ஸிங்காங் (Singaung). | | | |
| | லயக்ஷியங்கள்.—வட பர்மா (Burma). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 29—7—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான நாசகாரி.—கோனு (Gona)வுக் கருகாமையில். | | | |
| | விரோதி ஸ்தானங்கள், கட்டடங்கள்.—கோனு (Gona). | | | |
| | ஹார்ன் தீவு.—(Horn Island), | | | |
| | விமானப் போர்.—தீவின் பேரில். | | | |
| 30—7—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—விமான நிலயங்கள், மற்ற ராணுவ லக்ஷியங்கள்.-ஸெயின்ட் நாஸேர் (St. Nazaire) பிரதேசத்தில். | | | |
| | ஒரு எண்ணெய்க் கப்பல்.—பிராடினி (Brittany) கடற்கரைக்கருகாமையில். | மூழ்கடிக்கப் பட்டது. | | |
| | விமான நிலயம்.—ஸெயின்ட் ஓமர் (St. Omer) பிரதேசத்தில். | | | |
| | விமானச் சண்டை.— இங்கிலீஷ் கால்வாயில் (English Channel). | | 11 விமானங்கள். | 7 விமானங்கள். |
| | இரவில்.—விரோதி கப்பல்கள்.—பிரிஸியன் (Frisian) தீவிற்கருகாமையில். | 2 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | அடிக்கடி வேவு பார்த்தல்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில். தொழிற்சாலை ஹாலந்து (Holland). | | | |
| | ரயில்வே லக்ஷியங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | நஷ்டமில்லை. | |
| | **லிபியா (Libya)—(பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | கப்பல்கள், கப்பல்துறை கட்டடங்கள், வெகு தூரம் வரை வெளிச்சமடிப்பதற்கான விளக்குகள் வைக்குமிடங்கள். | | | |
| | டொப்ருக் (Tobruk). | | | |
| | விமானமிறங்குமிடம்.—எல்டாபா (El-daba) ஸிடி ஹானிஷ் (Sidi Haneish). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| | விரோதி முகாம்கள், போக்குவரத்து மோட்டார்கள்.—மெர்ஸா மாட்ரூ (Mersa Matruh) பூகா (Fuka) பிரதேசங்களில். | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்-போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | கோனு (Gona) பிரதேசத்தில். | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | கப்பல்கள், கப்பல்துறை பிரதேசம்.—குகம் (Kukum). | | | |
| | **நியூ பிரிடன் (New Britain) (அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்).** | | | |
| | ராபால் (Rabaul). | | | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **31—7—42.** (வெள்ளிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில் விமான எதிர்ப்புகள்.—ஸோம் (Somme) பிரதேசத்தில். | இன்னும் அநேக விமானங்கள் சேதமாயின. | | 11 விமானங்கள் சுடப்பட்டன |
| விமான நிலயம்.—அபிவில்லி (Abbeville). | அநேக விமானங்கள் சேதமாயின. | | |
| விமான எதிர்ப்புகள்.—செர்பர்க் (Cherbourg) தீபகற்பத்திலும், பிரிடானி (Brittany)யாவிலும். | | | |
| இரவில்.—எஃகு கவசங்கள், மராமத்து வேலைகள்.—டூஸெல்டார்ப் (Dusseldorf). | | 30 பாம்பர் விமானங்கள். | |
| விமான நிலயங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | 1 பைடர் விமானம். | |
| ரயில்வே கட்டங்கள்.—வட பிரான்ஸ் (France). | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கப்பல்கள், துறைமுகம்.—டொப்ருக் (Tobruk), மெர்ஸா மாட்ரூ (Mersa-Matruh). | | | |
| விரோதிக்குச் சொந்தமான கவசம் பூண்ட வண்டிகள்.—விரோதி வரிசைகளுக்கு அருகாமையில். | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானப்போர்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| **தூரக்கிழக்கு—பான்டா (Bunda)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி யுத்தக்கப்பல்.—அம்பாயினா (Amboina)வுக்குத் தெற்கே. | | | |
| **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதிக்குச் சொந்தமான கட்டடங்கள்.—கோனா (Gona). | | | |
| விமானப்போர்.—பூனா (Buna) பிரதேசத்தில். | | | 3 விமானங்கள். |
| **கே தீவு (Cay)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் துறைமுகம்.—தீவில். | | | |
| **ஸாலமன் (Solomon) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி கிட்டங்கிகள்.—குகம் (Kukum). | | | |
| **1—8—42.** (சனிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—ஹனோவர் (Hanover), வில்ஹெல்ம்ஷேவன் (Wilhelmshaven), பிரான்க்பர்ட் (Frankfurt). | | | |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **1—8—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| கப்பல் துறைகள், கப்பல்கட்டு மிடங்கள்.—பிளஷிங் (Flushing). | | | |
| ரயில்வே ஸ்டேஷன்.—மிர்வில்லி (Mirville) சாமான் வண்டிகள், தொழிற்சாலை, பண்டகசாலைகள். | | | |
| இருப்புப்பாதை.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| இரவில்.—சுரங்கவெடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில் | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| மோட்டார் படகுகள்.—ஸிடிபாரணி (Sidibarrani) யிலிருந்து மெர்ஸா மாட்ரூ (Mersa Matruh) வரை. | | | |
| ஒரு பெரிய வியாபாரக் கப்பல்.—டேர்னு (Derna). | முழ்கடிக்கப் பட்டது. | | |
| டொப்ருக் (Tobruk), ஸோலம் (Sollum), பார்டியா (Bardia), ஸிடிபாரணி (Sidibarrani), மெர்ஸா மாட்ரூ (Mersa Matruh). | | | |
| விமான நிலயம்.—எல்டாபா (Eldaba). | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானப்போர்கள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | 25ம்உ முதல் ஆகஸ்டு 1உ வரை நேரிட்ட நஷ்டங்கள். | 201 விமானங்கள். | 286 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமானதளம்.—சின்ட்வின் (Chindwin) நதிக்கரையில். | | | |
| **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி ஸ்தானங்கள், கோனா—பூனா (Gona—Buna) பிரதேசத்தில். | | 3 விமானங்கள். | 6 விமானங்கள். |
| விரோதி ஸ்தானங்கள்.—சாமான் வைக்கும் பெருந்தீக்குள் மிடங்கள்.—கொகோடா (Kokoda). மூட்டப்பட்டன. | | | |
| விமானநிலயம்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | 1 விமானம். |
| **—8—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—ரயில்வே லக்ஷியங்கள், படகுகள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | | |
| இரவில்.—சுரங்கவெடிகள் போடுவது-விரோதி சமுத்திரங்களில். | | | |
| வேவுபார்த்தல்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 2—8—42. (ஞாயிற்றுக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | ஏராளமான மோட்டார்கள், சுமார் 20 வண்டிகள் பூண்ட வண்டிகள்.—ராஸெல் க்வாடாரா (Rasel Quatara). | சேதமாயின. | | |
| | அச்சு நாடுகளின் தலைமை ஸ்தானம்.—தெற்குப் பகுதியில். | | | |
| | விரோதி ஸ்தானங்கள், டாங்கிகள்.—முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | டொப்ருக். (Tobruk). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப்போர்கள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கட்டடங்கள், விரோதி ஸ்தானங்கள்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua)-வுக் கருகாமையில். | | | |
| | கோக்கோடா. (Kokoda). | | | |
| 3—8—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—எண்ணெய் ஏற்றிச் செல்லும் படகுகள்—டச்சுக் கடற்கரைக்கருகாமையில். | | | |
| | கடற்கரையில் ஒரு பீரங்கி ஸ்தானம், சைனியங்களின முகாம்கள்.—டச்சுக் கடற்கரையில். | | | |
| | ஜர்மானி ரயில் வண்டிகள்—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஆக்கிரமித்த பிரதேசங்களில். | | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 28—7—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—தென்மேற்கு கடற்கரை—இங்கிலாந்து (England). | | 1 விமானம். | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள் கிழக்கு ஆங்கிலியா (East Anglia), மிட்லாண்ட்ஸ் (Midlands). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டவுன்ஸ்வில்லி (Townsville). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 29—7—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—மிட்லாந்து (Midlands) கிரேட் பிரிடனில் (Great Britain) ஒரு பாகம். | மிகவும் சொற்பச் சேதம். சிலர் கொல்லப் பட்டனர். | | |
| | ஒரு பட்டணம்.-வடமேற்கு இங்கிலாந்து (England). | | 8 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | **எகிப்து (Egypt)** (ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | கெய்ரோ (Cairo) பிரதேசம். | | | |
| | **தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | நஷ்டமில்லை. | | |
| | **ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டவுன்ஸ்வில்லி (Townsville). | | 1 விமானம். | |
| 30—7—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு பட்டணம்—மேற்கு மிட்லாந்து (Midlands). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)** (ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Port Moresby). | | | |
| | **ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் துறைமுகம் (Port Darwin). | | | |
| 31—7—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—மிட்லாந்தி (Midlands)ன் மேற்கு பாகத்தில். | | | |
| | இரவில்.—வடமேற்கு இங்கிலாந்தின் (England) சில பாகங்கள். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | **ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோஸ்மான் (Mossman) | சொற்பச் சேதம். | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | கெய்ரோ (Cairo) பிரதேசம். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| —8—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கடற்கரைப் பிரதேசம், கிழக்கு இங்கிலாந்து (England). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**–(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Port Moresby). | | | |
| | **ஹார்ன் தீவு (Horn Island)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| 2—8—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கடற்கரைப் பிரதேசங்கள்— இங்கிலாந்தி (England)ன் கிழக்குத் தெற்கு பாகங்கள். | சொற்பச் சேதம். | 1 விமானம். | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்— கிழக்கு ஆங்கிலியா (East Anglia), மிட்லாந்து (Midlands). | | 3 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **எகிப்து (Egypt)** (ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அலெக்ஸாண்ட்ரியா (Alexandria) பிரதேசத்தில். | | | |
| 3—8—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)** (ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தின் (England) கிழக்கு, வட கிழக்கு பாகங்கள்; மிட்லாந்து (Midlands). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் தென்கிழக்குக் கடற்கரை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

# யுத்தக் குறிப்புகள்.

**தேசீயத் தற்கொலை.**—இக்குறிப்புகள் எழுதப்படும் காலத்தில் சட்ட மறுப்பு இயக்கத்திற்கான ஏற்பாடு தயாராகி வரும். அப்படி ஆரம்பிக்கப்படுமேயானால் இந்தியாவில் குழப்பம் ஏற்படும். இது அச்சிடப்படும் காலத்தினுள் அவ்வியக்கம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று நிச்சயம் செய்யப்பட்டிருக்கும். ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ இந்த யுத்தத்தில் தனியாக நின்ற நாடு அவஸ்தைபடவேண்டியிருக்கிறதென்று அனுபவத்திலிருந்து தெரிகிறது. அதோடு இந்நாட்டிலேயே ஒரு தனிப்பட்ட கட்சியினர் யுத்த முயற்சியைக் கெடுக்க நினைப்பதென்பது சரியல்ல. யாவரும் ஈடுபடவேண்டிய இந்த சமயத்தில் தனியாகப் பிரிந்து தேசத்தில் குழப்பத்தை விரும்புவதும் சரியல்ல. பிரிடிஷ்காரர்கள் தோற்றால் இந்தியா அடைவதாக இருக்கும் ஸ்வதந்திரத்தையும் அடைய முடியாது.



**கிரிப்ஸ் திட்டம்** ஸ்வதந்திரத்தைக் கொடுப்பதாக உறுதி கூறிற்று. அதில் ஜனநாயகத் தன்மை காணப்பட்டிருந்தது. இதர குடியேற்ற நாடுகளுக்குள்ள கௌரவத்தை இந்தியாவிற்குக் கொடுத்ததோடு ஸர்வ தேசங்களின் ஸமதையையும் உண்டாக்கியது. அதன்படி இந்தியாவில் பிரதிநிதித்வம் வாய்ந்த சட்ட நிர்மாண சபைகளும், பொறுப்புள்ள மந்திரிகளும், தானாகவே எல்லா விஷயங்களையும் நிர்த்தாரணம் செய்யக்கூடிய தன்மையும், குடியேற்ற நாடு அந்தஸ்தும், ஸ்வதந்திரமும், பிரிடிஷ்காரர்களை வெளியேறும்படி சொல்லவும் மனதிற்குகந்த பலவிதமான லக்ஷியங்களைப் பெறலாம். மேலும் தற்போது நடு ஆற்றில் குதிரைகளை வண்டிக்கு மாற்றிக் கொள்வது போலிருந்தாலும் பிரகிருத நிலையில் வைஸிராய் சபையை இந்தியமயமாக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**அரசியல் அனுபவமின்மை.** இவ்விதம் தாராளமாக் கொடுக்கப்பட்ட அம்சங்கள் நிராகரிக்கப்பட்டன. இந்திய வீரர்கள் வீரத்தனமாகச் சண்டை செய்யும் இந்த சமயத்தில் ஒத்துழையாமை ஏற்பட்டிருப்பது மிகவும் திருப்தியில்லாத விஷயம். அரசியல் அனுபவமின்மையையும் தெரியப்படுத்துகிறது.

காங்கிரஸ் அரசியல் நோக்கம் யாவற்றையும் மறுப்பதில் ஈடுபட்டிருக்கிறது. ஒழுங்கான அரசியல் நோக்கம் இருப்பதாகக் காணப்படவில்லை.

வி வி வி வி வி வி வி

**‘இந்தியாவை விட்டகலுக.’** இவைகளோடு மட்டுமல்லாது பஹிரங்கக் கலகத்தைச் செய்யக்கூடிய ‘இந்தியாவை விட்டு அகலு’ என்ற இயக்கத்தை காங்கிரஸ் ஆம்பிக்க நினைத்திருக்கிறது, இதன்படி செய்வதானால் பிரகிருதமிருக்கும் அரசாங்கத்திற்கும் பிற்பட்டு ஏற்படப் போகும் அரசாங்கத்திற்கும் இடையிலுள்ள காலத்தில் குழப்பமான நிலைமை நிச்சயம் ஏற்படும். இவ்வித குழப்பத்தை காங்கிரஸ் வரவேற்பதாகவே தெரிகிறது. முன்பு இவ்வித குழப்பங்களேற்பட்டதால் உண்டான பயன்கள் நமக்குத் தெரியாதா? சரித்திரத்தையே இந்தியர்கள் மறந்தார்களா?

வி வி வி வி வி வி வி

**அஹிம்ஸை.** இன்னும் பயமுறுத்தப்படும் விஷயங்களைப் பார்த்தால் அராஜகம் பாதகமில்லை என்று தெரிகிறது. இந்த கற்பிதமான திட்டங்களிலும் ஒரு இந்தியா தோன்றும். எதிர்பார்க்கப்படுகிற அராஜகமும், குழப்பமும் இருந்த போதிலும் இந்தியா மறைந்துவிட்டது. தலை நிமிர்ந்து நிற்கும். அல்லது மறு மாதிரியாகவாவது இந்தியா காணப்படும். அதற்குச் சைனியம் என்பது கிடையாது. இந்தியா வாயிலில் வந்திருக்கும் பகைவருக்கு எதிராக அது சண்டையிடப்போவதில்லை. ஆனால் அஹிம்ஸைக் கொள்கையை அனுஷ்டித்து சமாதானத்தை நாடும்படியே கோரும்.

வி வி வி வி வி வி வி

**பொதுஜன இயக்கம்.** இப்பொழுது போட்டிருக்கும் திட்டமோ வெகு விசித்திரமானது. அந்த முறை எப்படி அமுல் நடத்தப்படப்போகிறதோ என்பது ஒருவருக்கும் தெரியாது. ஜனத்திரள் இயக்கம் அல்லது சட்ட பகிஷ்காரத்தின் மூலம் இந்த முறையை அமுல் நடத்தலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த சட்ட பகிஷ்காரமானது ஏற்கனவே இந்நாட்டுக்கு உகந்ததில்லையென்றும், தான் ஒரு பெருத்த தவறுதல் செய்துவிட்டதாகவும் இந்த இயக்கத்தை ஆரம்பித்தவரே கூறியிருக்கிறார். இதனால் அவர் வார்த்தைக்கு மதிப்பும் குறைந்துவிட்டது.

வி வி வி வி வி வி வி

**பிரிடனின் எச்சரிக்கை.** இந்தியாவில் தற்போதும், வருங்காலத்திலும் ஏற்படக்கூடிய விஷயங்களைப் பற்றியும் அவைகளில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றி அதிக ஜாக்கிரதையாக இங்கிலாந்து

கவனித்துக்கொண்டு வருகிறது. மேலும் அவசியமேற்பட்டால் இடையூர் விளைவிப்பவர்களைத் தண்டிப்பதாகவும் உசிதகாலத்தில் அது ஒரு எச்சரிக்கையை விடுத்திருக்கிறது. அதனால் அதன் கடமையைச் செய்துவிட்டதென்றே சொல்லலாம். மேற்சொல்லிய காங்கிரஸின் பிடிவாதமான கொள்கையினால் பிரிடனுக்கு கொஞ்சம் விருப்பமில்லாதாயினும் இந்தியாவுள்பட இவ்வுலகத்தையே அச்சு நாடுகளின் கொடுமைகளுக்கு உட்படாமல் காப்பாற்ற வேண்டுமென்ற பிரிடனின் அபிப்பிராயத்தை மாற்ற முடியாது. அதனால் இந்தியா இவ்வித கொடுமையைக் காட்டினால் அது யாவரும் இழக்கக்கூடிய நிலைமையில் வந்துவிடும்.

வி வி வி வி வி வி வி

**கொடிய துரோகம்.** இந்தியாவுக்கு அரசியல் விஷயங்களில் அதிக அனுபவம் கிடையாது. அதனால் அதில் வசிப்போர்களாகிய நாம் உலகத்தார்களின் ஏளனத்திற்குட்பட வேண்டிவரும். ஏனென்றால் இந்தியாவைப் பாதுகாப்பதற்காக பிரிடன் முயற்சித்து வருகையில் நாம் அதற்கு விரோதிகளாக நடக்க எத்தனிப்பது பெருத்த துரோகமன்றோ. பிரிடிஷ் ஆட்சியில் நாம் அடைந்த லாபத்தைக் கருதி பிரிடனுக்கு நன்றி பாராட்டாமல், இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அதற்கு விரோதமாக நடக்க எத்தனிப்பது உண்ட வீட்டிற்கு துரோகம் நினைத்தது போலாகும்.

வி வி வி வி வி வி வி

**விரோதிகளின் களிப்பு.** இம்மாதிரியான உள்நாட்டு குழப்பத்தில் இந்தியாவின் சிநேகிதர்களான பிரிடிஷார் வருத்தமடையும் பொழுது எதிரிகள் இக்கிளர்ச்சியைக் கண்டு சந்தோஷிக்கிறார்கள். இவ்விஷயத்தை தெளிவுபடுத்திச் சொல்வதென்றால் நாம் எடுத்த விஷயத்திலிருந்து ஒருக்கால் மாறினாலும் மாறக்கூடும்.

வி வி வி வி வி வி வி

**அச்சு நாடுகளின் பிரசாரம்.** சென்ற மாரிகாலத்தின் கடைசிப் பகுதியில் ஜப்பானியர்கள் வெற்றிக்குமேல் வெற்றியடைந்துவரும் பொழுதுதான் பெருத்த இடுக்கித் தாக்குதலின் மூலம் வராளமாகப் பிரதேசங்களைக் கைப்பற்றலாமென்றும், மூன்று கண்டங்களையே சுற்றி வளைத்துக்கொள்ளலாமென்றும் அச்சு நாட்டினர் மனக்கோட்டை கட்ட ஆரம்பித்தார்கள். அவர்களுடைய திட்டத்தில் இந்தியாவும் அடங்கியதுதான். அதைக் கைப்பற்றிக்கொண்டு அதன் வழியாக மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் பாஸ்ராவிலோ, அல்லது வேறு எந்த இடத்திலோ தங்கள் கூட்டாளிகளுடன் சேர்வதாகத் தீர்மானித்திருக்கலாம். பிரம்மாண்டமான இம்முயற்சியை வெற்றிகரமாகச் சாதிப்பதற்கு அச்சு நாடுகள் தங்கள் வசமுள்ள எல்லா ஆயுதங்களையும் உபயோகித்தன. முக்கியமாக அச்சு நாட்டுப் பிரசாரம் மிகக்கொடுமையான ஆயுதமென்றே சொல்லலாம். ஜப்பான் மதத்திலும், கல்வியிலும், இந்தியாவை தழுவி வருவதாகவும், அதனால் இவ்விரு தேசத்தினருக்கும் சகோதரத்வம் ஏற்பட்டிருப்பதாகவும், அதனால் ஜப்பான் இந்தியாவிடம் அதிக அனுதாபம் காட்டிவருதாகவும் பாசாங்கு செய்துவருகிறது. மேலும் 'இந்தியா இந்தியர்களுக்கு மட்டும்தான்' என்று சொல்லியும், அதற்கு ஸ்வதந்திரம் அளிப்பதாகவும் சொல்லிவந்தது. கிரிப்ஸின் தூது கோஷ்டி இந்தியாவிற்கு வந்ததும், இப்பிரசாரம் அதிகமாக வலுத்தது. கிரிப்ஸ் திட்டங்களை இந்தியர்கள் ஆதரிக்காததனால், அச்சு நாடுகள் பூராவும் சந்தோஷித்தன. கிரிப்ஸ் திட்டம் பலிக்காமல் செய்ததற்கு ஜெர்மனி ஆதியில் அடைந்த வெற்றிகள்தான் காரணம் என்று தற்புகழ்ச்சி செய்துகொண்டது. ஜப்பானியக் கப்பற்படை வங்காளக் குடாக்கடலில் தோன்றியபோதும், காகனடா, விசாகப்பட்டணம், கொழும்பு முதலிய இடங்களில் ஜப்பானிய விமானங்கள் வெடிகுண்டுகள் போட்டதினும்தான் இந்தியர்கள் கிரிப்ஸ் திட்டத்தை நிராகரித்தார்கள் என்று ஜப்பான் சொல்லிக்கொண்டுவருகிறது.

வி வி வி வி வி வி வி

**குரளி வித்தை.** இந்த மே மாதக்கடாசியில் அச்சு நாடுகள் இந்தியர்களை ஏமாற்ற ஒரு தந்திரம் செய்தார்கள். ஸுபாஷ் சந்திரபோஸ் உயிர் துறந்தார் என்றும், அவர் சவம்



அடக்கம் செய்யப்பட்டு விட்டது என்றும் பொய்வதந்தியைக் கட்டிவிட்டார்கள் பிற்பட்டு அவர் உயிருடனிருக்கிறார் என்ற செய்தியையும் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவின் ஸர்வாதிகாரி.** எகிப்தில் தளகர்த்தர் ரோமல் முன்னேறிச் சென்றதும், இந்தியாவைக் கைப்பற்றுவதற்கு அச்சு நாட்டினரின் பேராசைக்கு அளவே இல்லை. அப்பொழுது இந்தியாவைப்பற்றிய அச்சுநாட்டு ஒலிபரப்பு ஒரு புதிய மாறுதலை அடைந்தது. இந்தியாவை விட்டு வெளிச்சென்ற போஸ் இப்பொழுது உயிருடனிருப்பதாகவும் அவர்தான் இந்தியாவின் வரப்போகும் ஸர்வாதிகாரியென்று ஹிட்லரும் முஸோலினியும் உத்தியோக முறையில் வெளியிட்டிருக்கிறார்கள், என்றும் அச்சு நாட்டு ஒலிபரப்பில் சொல்லப்பட்டது. மே மாதம் 28உ அன்று ஜப்பானியர்கள் முதன்முதலில் வங்காளத்தைத் தாக்கப்போவதாகவும், அப்பொழுது இந்தியர்கள் அவர்களுக்குவேண்டிய உதவியைச் செய்யவேண்டுமென்று ஜெர்மனி பொய்யான சமாசாரத்தை ஒலிபரப்பியது. மேலும் அச்சுநாட்டுப் படையெடுப்புக் காலத்தில் பிரிடனுடன சேர்ந்துகொண்டு இந்தியர் அச்சு நாட்டினருக்கு எதிராக நடந்துகொண்டார்களானால் அவர்களின் கோபத்திற்கு நிச்சயமாக உள்ளாவார்கள் என்றும் "பிரிடனின் வேண்டுகோளை அடியோடு நிராகரித்துவிடு; பிரிடிஷார் இந்தியாவின் நன்மையைக் கோருகிறவர்களல்ல" என்றும் அவ்வொலிபரப்பில் கண்டிருந்தது.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியரின் குட்டு வெளிப்பட்டுவிட்டது.** இந்தியாவில் இப்பொழுது நடந்துவரும் 'ஒத்துழையாமை' என்ற இயக்கம் இங்கிலாந்து மட்டிலுமல்ல, அமெரிக்கா சைனா முதலிய நாடுகளின் பலத்தைக் குறைக்கச் செய்யும் என்று ஜூன்மீ 18-ம் தேதியில் ஜப்பான் ரேடியோவில் ஒலிபரப்பியது. இதிலிருந்து அதற்கு இந்தியாவைப் படையெடுக்கும் நோக்கம் இல்லையென்று நன்கு வெளிப்பட்டுவிட்டது. சைனாவை அடிமையாக்கிக் கொள்வதற்காகவே இந்தியாவின் பேரில் அனுதாபம் காட்டுவதாக ஜப்பான் பாசாங்கு செய்துவருகிறது. இந்தியாவைப் படையெடுத்தால் பிரிடனும், அமெரிக்காவும் ஒன்றுசேர்ந்து தன்னை எதிர்க்கும் என்ற பயம் அதற்கு இருக்கிறது. ஆகையால் அவ்வித முயற்சியை அது எடுத்துக்கொள்ளாது.

வி வி வி வி வி வி வி

**விரோதி முகாம்களில் கொக்கரிப்பு.** ஜூலை 14ல் காங்கிரஸ் மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அச்சுநாட்டினர் சந்தோஷத்துடன் வரவேற்றினார்கள். ஜூலை 16-ம் தேதியில் இவ்விதத் தீர்மானத்தைப் பாராட்டி ரோம் ரேடியோ ஒலிபரப்பியது. காங்கிரஸ் திட்டம் 'மிகவும் சிறந்தது' என்று ஸெய்கோன் ரேடியோவில் சொல்லப்பட்டது. சத்தியாகிரஹ இயக்கத்தை முழுஊக்கத்துடன் காங்கிரஸ் ஆரம்பிக்கவேண்டுமென்றும், அதற்கு அச்சுநாட்டு வல்லரசுகள் வேண்டிய அனுதாபமும், ஆதரவும் காட்டுவார்கள் என்றும் பெர்லின் ரேடியோ கொக்கரித்துப்பேசியது.

சைனாவுக்கும் இந்தியாவுக்கும் பிளவு ஏற்படும்படி செய்வதற்கு அச்சுநாடுகள் முயற்சிக்கின்றன. இந்த நெருக்கடியில் ஸ்வதந்திரத்திற்காகச் செய்துவரும் முயற்சியை நிறுத்திக்கொள்ளும்படி இந்தியர்களுக்கு சியாங் கை ஷேக் ஆலோசனை கூறியதற்காக அவரை நிந்தித்து ரோம் ரேடியோ ஜூலை 16-ல் ஒலிபரப்பிற்று.

முடிவாகச் சொல்லுமிடத்து காங்கிரஸ் தலைவர்கள் அச்சுநாட்டு வீரர்களாக மாறிவிட்டார்கள். இவர்கள் ஜப்பானுக்குத் தைரியம் கொடுப்பார்கள்போல் தெரிகிறது. ஏனென்றால் ஜப்பான் இப்பொழுது ருஷ்யர்களை ஸைபீரியாவில் தாக்குவதா, அல்லது இந்தியாவில் பிரிடிஷாரை எதிர்ப்பதா என்று சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கிறது.

**இந்தியா மனப்பூர்வமான நல்ல எண்ணத்துடன் இருக்கிறது.** அதிர்ஷ்டவசமாக விஷயங்கள் பார்வைக்கு தோன்றுவதுபோல் அவ்வளவு மோசமாக இல்லை. இந்தியா பிரிடிஷ் அரசாங்கத்திற் கடங்கியும், தேசாபிமானமுள்ள நாடாகவும் இருக்கிறது. அங்குள்ள அரசியல் வாதிகளின் விருப்பத்திற்கு இணங்கி இந்தியா நடக்கவில்லை. அவர்கள்போடும் கூக்குரல் அதிகமாகயிருக்கிறது. இதுவரை சரித்திரப் பூர்வமாக நடந்துவந்ததை யெல்லாம் இந்தியா ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறது. பிரிடன் இதுவரை என்ன நன்மை செய்துவந்திருக்கிறதென்றும், இனிமேல் என்ன செய்யப் போகும் என்றும் அதற்கு நன்றாய்த் தெரியும்.

தேசத்தார்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பொதுவாக எதிரிகளை எதிர்ப்பதற்காகத்தயாராகவேண்டுமென்பதை விரும்புகிறோம். உள்நாட்டில் இந்தவிதமாக புதிய அபாயம் ஏற்படாமலிருக்கும்படி நாம் வேண்டுகிறோம். நமக்குள்ள தேசாபிமானத்தினாலும் சகோதர வாத்ஸல்லியத்தினாலும் நாம் இதை விரும்புகிறோம். துஷ்டர்களாலும், முரடர்களாலும் பயமுறுத்தப்பட்ட உலகத்தில் புயல்காற்றில் அகப்பட்ட மரக்கலம்போல் இந்தியா திண்டாடுகிறது. மனிதர்களுக்குள் எப்படி சுக துக்கங்கள் ஏற்படுமோ அப்படியே தேசத்தார்களுக்கும் சுக துக்கங்கள் உண்டு. தகுந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டால் லாபம் கிடைக்கச் செய்யும்; கைதவறவிட்டால் அடிமைத்தனம் ஏற்பட்டுவிடும். இந்தியாவின் தற்காப்பு பிரிடனைப் பொருத்தே இருக்கிறது. இந்தியாவில் பெரும்பாகம் பிரிடனிடம் திட நம்பிக்கை வைத்திருக்கிறது. ஆனால் இந்தியா சரியான விதமாக நடந்துகொள்ளும் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. தேசிய யுத்த முன்னணியைக்கொண்டு எதிரிகளை எதிர்ப்பதே சரியான முடிவு. அரசியல் வாதக் கட்சிகள் எந்தவிதமாக தீர்மானித்தாலும் அது பயன்படாது. ஆனால் அது வும் சரியான தீர்மானத்திற்கு வருமென்றே நாம் நம்புகிறோம்.

வி வி வி வி வி வி வி

**எழுகடல்களிலும் யுத்தம்.** 1942-ம் வருஷத்தில் நேச நாடுகள் எதிர்த்துப் போராடும் என்று நாம் நிச்சயமாகச் சொல்லலாம். அந்த எதிர்ப்பு வருஷக்கடாசியில் ஏற்படலாம்.

சரித்திரப் பூர்வமாகப் பார்த்தால் 1917-ம் வருஷத்தில் யுத்தம் என்ன நிலைமையில் இருந்ததோ அம்மாதிரி நிலைமையில் இப்பொழுது நாம் இருந்து வருகிறோம். சம்பவங்களின் நிலைமை மாறுவதற்கு இன்னும் ஒரு வருஷமிருக்கிறது. இதுதான் மிகவும் முக்கியமான வருஷம். இது ஒரு சோதனை நேரம்.

ஆனால் லண்டன் போய்ச் சேர்ந்தோ அல்லது மாஸ்கோவிலிருந்தோ கிருஸ்துமஸ் பண்டிகை காலத்திற்கு முன்னதாக சமாதான நிபந்தனைகள் சொல்லக் கூடும் என்று ஹிட்லர் தற்புகழ்ச்சி செய்துகொண்டு வந்த நாட்களெல்லாம் கடந்து விட்டன. ஆனால் இப்பொழுது ஹிட்லருக்குக் கோபம் பொங்கிவருகிறது.

நடக்கும் விஷயங்களை நாம் சற்று உற்று கவனிப்போம். இதுதான் ஹிட்லரின் கடைசி முயற்சி. இது விவரமும் அவனுக்குத் தெரியும். ஆனால் பூரண வெற்றி அடைவதற்கு அவன் எந்தப் பக்கம்தான் தாக்குகிறது. எல்லா திசைகளிலும் அவனுக்கு எதிரிகள் இருப்பதால் அவன் எதிரிகளில் சுமார் 30 தேசத்தார்களையாவது முறியடித்துவிடவேண்டும். அப்படி செய்யமுடியாத வரையில் அவன் எண்ணம் நிறைவேறாது. ஒவ்வொரு சமயத்திலும் நேசதேசப்படையைப் பின் வாங்கச்செய்தால் அதிக பலத்துடன் நேசதேசப்படைகள் அவனைத் துரத்தியடிக்கிறது.

ஹிட்லர் பிரம்மாண்டமான திட்டம் போடலாம், அதிக உயரப்பறக்க நினைக்கலாம். காகஸஸ் மலைமேல் ஏறவும் எண்ணலாம், பிறகு ஸூயஸ் கால்வாயையும் தாண்ட முயற்சிக்கலாம். ஜப்பானின் உதவியைக்கொண்டு அவன் இன்னும் பெருத்த முயற்சிகளைச் செய்யலாம். ஆனால் ஹிட்லர் வெற்றி அடைவதற்குமுன் ருஷ்யாவையும், அமெரிக்காவையும் அழித்து பிரிடனை ஜயிக்கவேண்டும் என்பதுதான் முடியாது.



ஹிட்லர் அலெக்ஸாண்டராக இருக்கலாம். ஸீஸராக இருக்கலாம். ரோமனூப், ஹாப்ஸ்பர்க்ஸ் காலிப், மொகாலாயர்கள் இவர்கள் எல்லோரும் சேர்ந்தால் எப்படியோ அப்படியும் இருக்கலாம். ஆனால் இந்த துஷ்ட மிருகத்தைச்சுற்றி பிரிடன் கிளப்பியிருக்கும் ஸப்த சாகரங்களையும் அவன் தவிர்க்கவேண்டும்.

அதனால் யுத்தம் இனிமேலும், கடைசிவரையிலும் முக்கியமாகக் கடல் யுத்தமாகத்தானிருக்கும். தரையில் சைனியங்கள் ஒன்றுக்கொன்று கொன்று கொண்டாலும் கூட கடல் யுத்தத்தைப் பொருத்தே வெற்றியிருக்கிறது.

நேசதேசத்தார்களுக்கும் கடல் யுத்தமே பிரதானமானது, உதாரணமாக அமெரிக்காவிலிருந்து ருஷ்யாவுக்கு ஸப்ளைகள் இரண்டு கடல்களைத்தாண்டியும், சீனாவுக்கு மூன்று கடல்களைத் தாண்டியும் வரவேண்டியிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**சீனா கருத்து.** ஸப்ளைகள் ஏராளம் இருக்கின்றன, ஆனால் அவைகளைக்கொண்டு செல்வதற்கிருக்கும் கொஞ்சம் கப்பல்கள் இருக்கின்றன. தூரத்தில் போர்நடக்கும் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் நமக்கும் இன்னும் அதிக கப்பல்கள் தேவை. 1940-ம் வருஷத்தில் விமானங்கள் தேவையாக இருந்தன. 1941-ல் டாங்கிகள் தேவையாக இருந்தன. 1942-ல் கப்பல்கள் தேவையாயிருக்கின்றன,

வி வி வி வி வி வி வி

**கப்பல் ஏற்றுமதியில் சேதம்.** அமெரிக்க மாதப் பத்திரிகை 'பார்ச்சூன்' என்ற புஸ்தகத்தில் 1942-ம் ஸு மேமீ த்திய பதிவில் 1941-ம் ஸு முடிய ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றிச் சென்ற கப்பல் பொருள்கள் 2,50,00,000 டன்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அவற்றில் பெரும்பாகம் 62,50,000 முதல் 1,75,00,000 டன்கள் வரையில் ருஷ்யாவிற்கும், சீனாவுக்கும் ஸப்ளை செய்வதற்காக அனுப்பப்பட்டன. ஆனால் அப்பொழுது இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும், ஐஸ்லாந்துக்கும், அல்ஸ்டருக்கும் உதவிப் படைகள் அனுப்பவேண்டியிருந்தது. ஹாவாய் தீவுகளில் மறுபடியும் போர் முஸ்தீப்பு செய்யவேண்டியிருந்தது. அலாஸ்காவைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. அப்பொழுது இருந்ததற்கும் இப்பொழுதுள்ளதற்கும் வித்யாசமென்னவென்றால், 1941-ம் வருஷத்தில் நேசதேசத்தார்கள் கப்பல் போக்குவரத்து பெரும்பாகம் கொஞ்ச தூரத்திற்குத்தான் செல்ல வேண்டியதாக இருந்தது. ஒரு வருஷத்திற்கு 12 முறை செல்ல வேண்டியதாயிருந்தது. ஆனால் இப்பொழுதுள்ள மார்க்கங்களோ 10,000 மைல் முதல் 30,000 மைல் வரை வியாபித்திருக்கின்றன. வருஷத்தில் மூன்றுமுறைதான் போகலாம்.

வி வி வி வி வி வி வி

**ஐந்து சமாசாரங்கள்.** இந்த பீடிகையை வைத்துக்கொண்டு இதைப் படிப்பவர்கள் பார்வையிட்டால் சென்ற சில வாரங்களாகத் தோன்றிவரும் ஐந்துவித சமாசாரங்களின் முக்கியத்தை அறிந்துகொள்ளலாம். முதலாவது ஜூலை 16-ல் காமன்ஸ் சபையில் கப்பல் போக்குவரத்துப் பிரச்னையை விவாதிக்கப் கூட்டப்பட்ட ரகசிய கூட்டம்; இரண்டாவது கப்பல் மாலுமிகளுக்கும், ஸப்த சாகரங்களில் செல்லும் மாலுமிகளுக்கும் கப்பல் மூழ்கியதில் இறந்தவர்களுக்கும், பிரீதியாக ஜூலை 19உ ஞாயிற்றுக்கிழமையை தேசீய பிரார்த்தனை நாளாகக் கோரிய விஷயம்; மூன்றுவது, ஜூலைமீ 20உயில் யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படை இலகா ஒரு படைப் பகுதி மாத்திரம் வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் சென்ற மாரிகாலத்தில் 2,400 கப்பல்களுக்குத் துணையாகச் சென்றதில் 8 கப்பல்கள்தான் சேதமென்றும் பிரசுரித்தது. நாலாவது, 1941ஸு டிஸம்பர்மீ 17உ முதல் ஜூலைமீ 12உ ஆரம்பித்த வாரம் வரையில் ஸப்ளைக் கப்பல் சேதத்தில் அந்த வாரத்தில்தான் சேதம் உன்னத நிலைமையை அடைந்திருப்பதாக, வாஷிங்டனிலுள்ள ஸப்ளை கப்பல் இலாகா ஜூலை 21உயில் வெளியிட்ட எச்சரிக்கை. ஐந்தாவது, ஜூலைமீ 22உ வெளியிட்ட விஷயத்தில் ஜூலைமீ 19உ முதல் வட அட்லாண்டிக் சமுத்திர யுத்தம் நல்ல விதமான மாறுதலடைந்திருப்பதாக உத்ஸாக மூட்டக்கூடிய

செய்தி கண்டிக்கிறது. எல்லாவித தந்திரமும், சாமர்த்தியமும் இந்தப் பயத்தைக் குறைக்க உபயோகப்படுத்தப்படுகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இப்பொழுது ஸப்ளைக் கப்பலுக்கு நல்லவிதமாகத் துணைக்கப்பல் அனுப்பப்படுகின்றன. அவைகளுக்கு நல்ல ஆயுத முஸ்தீப்பும் அளிக்கப்படுகின்றன. கப்பல்கட்டுவது அதிக துரிதமாக நடந்துவருகிறது. 'யு' படகுகளின் தொந்தரவை புதிய முறைகள் கண்டுபிடித்து குறைக்கப்பட்டுவருகிறது. ஸப்ளை மார்க்கங்கள் திட்டப்படுத்தப்பட்டிருக்கிறது. அவசியமில்லாத சுமைகளெல்லாம் தவிர்க்கப்பட்டுவிடுகிறது. உள்நாட்டில் உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யப்படுகிறது. இது காரணத்தால் இறக்குமதியை நம்பி இல்லாமல் தன்னைத்தானே நம்பும்படி செய்யப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**பொருள்கள் ஏற்றிச் செல்லும் விமானங்கள்.** ஒரு வகுப்பார் ஹிட்லர் மூழ்கடிப்பதைக் காட்டிலும், சீக்கிரமாக கப்பலைக் கட்டுவதானது மூடத்தனம் என்று சொல்லுகிறார்கள். இதை முன்னிட்டே துருப்புகளையும் ஸப்ளைகளையும் வெகுதூரத்தில் உள்ள போர் நடக்கும் பிராந்தியங்களுக்கு ஏற்றிச் செல்ல பெரிய விமானப் படையை அமெரிக்கா கட்டிவருகிறது. பர்மா ரஸ்தா கை நழுவிப்போன பிறகு இத்தகைய பிரயத்தனத்துக்கு ஊக்கம் அளித்திருக்கிறது. இது பூர்த்தியடைந்தால் போக்கு வரத்து வெகு துரிதப்படும். பர்மா ரஸ்தாவைக் காட்டிலும் காடு மலைகளெல்லாம் வெகு துரிதமாகத் தாண்டிச் செல்லாம். சென்ற சில வாரங்களில் பிரிடிஷ் விமானப் படையும், நேசதேச விமானங்களும் அஸாம், பர்மா எல்லைப்புறத்திலகப்பட்டுக்கொண்டு தப்பி ஓடிவந்த ஜனங்களுக்கு 6,00,000 பவுண்டு நிறையுள்ள உணவுப் பொருளையும், மருந்து ஸப்ளையும் ஆகாயத்தில் இருந்து போடுவதற்கு சாத்தியமாக இருந்தன. அமெரிக்க நிபுணர் மிஸ்ட்டர் ஹென்றி கெய்ஸர் என்பவர் 70 டன் நிறையுள்ள 'மார்ஸ் பிளையிங் போட்' என்ற ஒரு பெரிய விமானத்தைக் கட்டும்படி சொல்லியிருக்கிறார். சமுத்திரத்தில் செல்லும் கப்பல்களைக் காட்டிலும் 20 மடங்கு துரிதமாக அது செல்லக்கூடும்

வி வி வி வி வி வி வி

**முஸோலினியின் துக்கம்.** இதாலிய அதிகார முறையில் பிரசுரிக்கப்படும் செய்தி இலாகா அறிக்கையில் ஜூன்மீ 29உ மர்ஸா மாட்ரூ எதிரி கைவசமான தினமன்றே முஸோலினி லிபியாவுக்குப் போய் பார்த்ததைக் குறிப்பிட்டிருக்கிறது. ரோமல் அவனுக்காக வழியைத் தயாரித்தவுடன் வெற்றியுடன் வெள்ளைக்குதிரைமேல் எறிக்கொண்டு கெய்ரோவில் பிரவேசிக்க வேண்டுமென்பது அவனுடைய விருப்பமென்று நம்பப்படுகிறது. ஆனால் ஆச்சின்லெக் இதையெல்லாம் தடுத்துவிட்டார். இந்த விருப்பம் பாழான உடன் அவன் மனதிற்குக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. தான்போன சந்தர்ப்பத்தை என்னவிதமாகப் பயன் படுத்திக்கொள்ளலாமென்று தெரியாமல் சுமார் ஒரு மாதம் பூராவும் லிபியாவில் இழிவான ஆஸ்பத்திரிகைகளைப் பார்வையிட்டு, ஆதென்ஸ் வழியாக திரும்பி ஊருக்குவந்து சேர்ந்தான். ஆதன்ஸ் நகரமோ பெரோவின் தலைநகரம்மாதிரி இல்லை. வறுமையால் பீடிக்கப்பட்டு கிரீஸின் தலைநகரமாயிருக்கிறது.

உண்மையில் எல் அலமீன் என்ற இடத்தில் ரோமலை முன்னேறவிடாமல் தடுத்தவுடன் அச்சு நாடுகளுக்குச் சௌகரியமில்லை. 'எகிப்து எகிப்துக்காரர்களுக்கு, மத்தியக் கிழக்குப்பிரதேசம் ஆராபியர்களுக்கு' என்று போட்ட கூக்குறல்கள் இப்பொழுது ஓய்ந்து விட்டன. அவைகள் காதுகளில் விழுகிறதில்லை. ஆனபோதிலும் ஓய்ந்துவரும் இந்தப் பிரசாரம் இப்பொழுது சிற்சில சமயங்களில் இதாலியின் வசம் ஸிரியா, பாலஸ்தீனம், எகிப்து சேர்ந்துவிட்டதாக இதாலிய கல்லூரியைச் சேர்ந்த நபர் ஒருவர் பிரசுரித்த அறிக்கையில் கண்டிருக்கிறது. ஆனால் மத்தியக் கிழக்கின் தன்மை மாறுதலன்னியில் இருந்துவருகிறது. 'ஆல் பலாக்' பத்திரிகையில் கண்டிருக்கிறபடி எகிப்து நம்பிக்கையுடனும் பீதியடையக் கூடிய குறிகள் ஒன்றுமில்லை என்றும் தெரிகிறது. இரானிலும், பயமான அறி



குறிகள் ஒன்றுமில்லை. அச்சு நாடுகள் வெற்றியடையுமென்று அது எதிர் பார்க்கவில்லை. எகிப்தைப்போல, இராக்கும் பிரிடனிடம் கொண்ட சிநேகத்திற்கு ஒத்தவாறு நடந்து வருகிறது. ஸிரியாவில் ஏற்கனவே அச்சு நாடுகளுடன் சேர்ந்து ஓடின தேசியப்பகுதிகளுக்கு இருந்த மயக்கமும் இப்பொழுது தெளிந்துவிட்டது. ஹிட்லர் நிஜமான தெய்வமில்லை என்று அவர்கள் கண்டுவிட்டார்கள். முஸோலினியை அவர்கள் உயிரில்லா ஆந்தையென்று சொல்லுகிறார்கள். துருக்கியிலும் அச்சு நாட்டின் பிரசாரம் தவறிவிட்டது. இப்பொழுது பிரிடிஷார் சார்பில் துருக்கியும் பயமடைந்திருக்கிறது. ஜூலை 15உல் பிரிடனிலுள்ள துருக்கி தூதர் M. ராப் ஆர்பே என்பவர் அதன் பெரிய சகாவான பிரிடனுடன் ஒத்துழைப்பதில் பிரிடனுக்கும் ஒன்றும் பொறுப்புக் கொடுக்காமல் சௌகரியம் செய்வதாகவே தீர்மானித்திருக்கிறது என்று கூறினார். அராபியர்கள் விஷயமாக அச்சு நாடுகள் கொண்டிருக்கும் அனுதாபத்தைக் குறித்து இராக்கிலுள்ள பிரக்யாதி பெற்ற முஸ்லீம் மத குரு இமாம் முகமத் ஆல் உஸேன், ஆல் கலிபா ஆல் கஹாஸா என்பவர் ஆல் ஹவாதீத் பத்திரிகையில ஜனங்களை நாஸிகள் அடிமையாக்குவது அநாகரீகம், மிருகத்தனம், பெரும்பாவம் என்று கூறியிருக்கிறார். மனிதனைத் தெய்வமாகக்கொண்டாடுவதையும் ஜாதி மேன்மையையும் ஒருவர் மற்றொருவரை அடிமையாக்கும் ஸ்வதந்திரம் இருப்பதாகச் சொல்வதையும் தழுவாமல் இருக்கும்படி தன் மதஸ்தர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஜாபா (Jaffa)விலுள்ள பாலஸ்தீன் தினசரிப்பத்திரிகையில் இஸ்லாம் மதத்திற்கு இதாலிதான் கொடிய விரோதி என்று கண்டிருக்கிறது. அராபியர்களிடமிருமும், முஸ்லீம்களிடமும், அனுதாபம் இருப்பதாக இதாலியர்கள் சொல்வதை ஆக்ஷேபித்து ஆல் ஹவாட்த் பத்திரிகையில், "அராபியர்களை கலைத்து அநேகர்களை அழித்து, மசூதிகளையும் இன்னும் தேவாராதனை ஸ்தலங்களையும் அசுத்தப்படுத்தியிருக்கும் பொழுது அராபியர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் மத ஸ்வதந்திரம் கொடுப்பதாக வீண் டம்பம் பேசுவதில் இதாலியர்களுக்கு அவமானம் ஏற்படவில்லையா என்று கண்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஸ்டாலின் கிராட்.** பக்கம் யுத்தம் நெருங்கிவருகிறது. இது பொருளாதார விஷயத்திலும், கௌரவத்திலும் ருஷ்யாவிற்கு மிகவும் முக்கியமான நகரம்.

இதற்கு முன் இந்நகரத்திற்கு ஸாரிட்ஸியூ (Tsaritsyn) என்ற பெயர் வழங்கிவந்தது. சென்ற 1918-ம் வருஷ யுத்தத்தில் இதைஸ்டாலின் எதிரி வசமாகாமல் காப்பாற்றினார். அது முதற்கொண்டு அதற்கு அவருடைய பெயர் வைக்கப்பட்டு ஸ்டாலின்கிராட் என்ற பெயருடன் வழங்கிவருகிறது. இந்நாடு விடுதலை அடைவதற்குப் பிரதானமாயிருந்தவர்கள் டிமொஷெங்கோ, புடனி, வோரோஷிலாவ், இம்மூவரும் தான். இவர்கள் இப்பொழுதும் பிரக்யாதி பெற்றுவருகிறார்கள். ஸ்டாலின் கிராட் இப்பொழுது யார் அதிகாரத்திலிருக்கிறதோ, அவர் வசம்தான் மாஸ்கோவும், மத்திய ருஷ்யாவும் இருந்துவருகிறது. டான் நதியுடன், வோல்கா (Volga) நதி சங்கமமாகுமிடத்தில் தான் இந்நகரம் இருக்கிறது. இதற்கும் டான் நதிக்கும் இடையே ஒரு கால்வாய் செல்லுகிறது. அதற்கு ருஷ்யாவின் தெற்கு பாகத்திலுள்ள இருப்புப்பாதை, நதிப்பாதைகள் இவைகளை உபயோகிப்பதற்கு முடியும். காஸ்பியன் கடல், அஸாவ் கடல் கருங்கடல் இவைகளிலிருந்து செல்லும் நதி மார்க்கங்களை அது உபயோகிக்க முடியும்.

இப்பொழுது ஹிட்லர் கிழக்கில் ஸ்டாலின்கிராட்டை நோக்கியும், தெற்கே காகஸஸை நோக்கியும் முன்னேறிச் செல்ல எத்தனிக்கிறான். ஸ்டாலின் கிராட்டை, அடைய ஹிட்லர் இரண்டு வழியாகவும் முயற்சிக்கிறான். டான் நதிக்கரையில் கிளெட்ஸ்கியாவிற்கும், கலாக் (Kalach)கிற்கும் இடையேயுள்ள 80 மைல் விஸ்தீர்ணமுள்ள பிரதேசம் வழியாகவும், அதற்கு கீழேயுள்ள ஸ்மிலியான்ஸ்காயா (Tsymlyanskaya) என்ற இடத்திலிருந்து முன்னேறப் பார்க்கிறான். ஸ்டாலின் கிராட்டிலிருந்து சுமார் 50 மைலுக்கப்பால் கலாக்கா இருக்கிறது. அங்கிருந்து தென்மேற்கே 95 மைல்களுக்கு அப்பால் ஸ்மிலான்ஸ்காயா இருக்கிறது.

இவ்விரண்டு இடங்களிலும் எதிரிகளை முன்னேறவிடாமல் ருஷ்யர்கள் போர் செய்கின்றனர். ஆனால் தெற்குப் பகுதியில் நிலைமை சற்று அபாயகரமாக இருக்கிறது. எதிரி டான் நதியை பல இடங்களில் கடந்துசென்று காக்கஸஸ் மலையை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறான். இங்கு அஸாவ் நகரை நாஸிகள் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். படேய்ஸ்க் (Bataisk) நகரம் பிடிபட்டுவிட்டது. ஸெபாஸ்டபூலும், கெர்ச்சும் எதிரி வசமானவுடன் • எஞ்சியிருக்கும் முக்கிய கருங்கடல் துறைமுகம், கப்பற்படை தளமுமான நோவோரோஸிக் பயமுறுத்தப் படுகிறது.

வாரநேஷில் ருஷ்யர்கள் வெற்றிகரமாகத் தாக்கி வருகிறார்கள். அந் நகரம் ருஷ்யர்கள் கையில் இன்னும் இருந்துவருகிறது. அதற்கு வடக்கேயும் தெற்கேயும் ஜெர்மானியர் அடித்துத் துரத்தப்படுகிறார்கள்.

இவ்யுத்தத்தில் ஜெர்மனியன் வசம் இப்பொழுது சொற்ப கைதிகள்தான் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனால் டிமொஷெங்கோவின் சைனியம் நாஸிகள் வசம் அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பிவிட்டதென்று ஊகித்துக்கொள்ளலாம். இந்த ஏமாற்றத்தை மறைப்பதற்காகக் கோயபல்ஸின் குறல் இப்பொழுது மாறிவிட்டது. இப்பொழுது ஜெர்மானியர்களின் எண்ணம் யூக்ரெனையும், காகஸஸை யும் ஸ்வாதினப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதைத்தவிர ருஷ்யச் சைனியங்களை அழிக்கவேண்டுமென்று ஜெர்மனிக்கு எண்ணமில்லை என்று சொல்லப்படுகிறது.

தந்திரமாகப் பின்வாங்குவதும், பின்னணி யுத்த நடவடிக்கைகளும் பண்டைய யுத்த தந்திரங்களாக இருக்கவேண்டுமென்றும், இப்பொழுது அனுஷ்டிக்கக் கூடாதென்றும், இப்பொழுது பொதுவான நிலைமையில் நிற்கவேண்டுமென்றும் ஸோவியத் அரசாங்க உத்தரவு பிறந்திருக்கிறது. முன் வைத்த காலை பின் வைக்கக்கூடாது என்பதுதான் இப்பொழுது ஸ்டாலின் யுத்த முறை. செம் படைக்கு "கொடுமையாக நடந்துகொள்ளுங்கள்" என்று உத்தரவு செய்யப் பட்டிருக்கிறது.

---

## சுருக்கமாகப் பிரசுரிக்கப்பட்ட தினசரிப் பத்திரிகைகள் நாஸி ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகளில் போடப்படுகின்றன.

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலமாய் வந்த செய்தி).

பிரிடனில் எவ்வளவோ லக்ஷக்கணக்கான தினசரிப் பத்திரிகைகள் மிகவும் குறுகிய அளவில் ஒரு டஜன் பாஷைகளில் பிரசுரிக்கப்பட்டு வெளியே அனுப்பப் படுகின்றன. ஆர். ஏ. எப். விமானங்கள் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வரும் பொழுது அப்பத்திரிகைகளை ஆங்காங்கு கொண்டுபோய் சேர்ப்பிக்கின்றன.

பாம்பர் விமானங்கள் வழக்கமாகக்கொண்டு செல்லும் பத்திரிகைகளில், பிரெஞ்சு பாஷையில் அச்சிடப்பட்ட 'லிகூரியர் டிலேயிர்' (LeCourrier de L'Air), பெல்ஜியர்களுக்காக பிரெஞ்சு பாஷையில் பிரசுரிக்கப்பட்ட 'லா லிப்ரே பெல்ஜிக்யூ' (LaLibre Belgique), டச்சு பாஷையில் வெளிவரும் (Vrij Nederland), 'விரிஜ் நெதர்லாந்து, ஜெர்மன் பாஷையில் வெளிவரும் 'லுப்ட் போஸ்ட்' (Luft Post) என்ற பத்திரிகைகளும் அடங்கியுள்ளவை.

அநேகமாக அப்பத்திரிகைகள் சிறிய அளவில் இருந்தாலும், அவைகளில் அநேக படங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. விஷயங்கள் தெளிவாகவும் சாதுர்யமாகவும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், வெகு அழகான தலைமை வியாசங்களும் அடங்கியிருக்கின்றன. ஒரு பத்திரிகையில் 10,000 வார்த்தைகள் அடங்கிய செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கும். அவை ஒவ்வொன்றும் சிறு குழாய் வடிவத்தில் நன்றாகச் சுருட்டப்பட்டு, பார்வைக்கு ஒரு ஸிகரெட் மாதிரி தோன்றும். சாதாரணமாக ஒவ்வொரு பத்திரிகையிலும் 4 பக்கங்கள் இருக்கும். ஒவ்வொன்றும் 8 அங்குல நீளமும், 5 அங்குல அகலமும் இருக்கும். அச்சடிக்கப் பட்ட ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று வரிசைகள் உண்டு.



இம்மாதிரி ஒவ்வொரு சிறு பத்திரிகைக்கும் தனித்தனி பத்திரிகை நிருபர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஆண், பெண், பத்திரிகை நிர்வாகிகளும், மிகவும் பிரக்யாதிபெற்ற அந்நிய நாட்டு நிருபர்களும் இருக்கிறார்கள். விஷயங்கள் அந்தந்தக் காலத்திற்குத் தகுந்தாற்போலும், சமயோசிதம் போலவும் பிரசுரிக்கப் படும். ஐரோப்பாவில் அவ்வப்போது ஏற்படும் நிலைமைகளுக்குத் தக்கவாறு அவைகள் வெளியிடப்படுகின்றன. எதிரி நாட்டில் வெடிகுண்டு வீச்சு ஏற்பட்டு, அங்கு அமைதி ஏற்படும்பொழுது ஒரு பத்திரிகையின் பல பதிப்புகளையும் சேர்த்து அவ்விமானத்தில் ஏற்றியனுப்பப்படும்.

அதிவேகமாக சுழன்று செல்லும் நவீன யந்திரங்கள் இப்பத்திரிகைகளை அச்சிட்டும், சுருட்டியும், 500 வார்த்தைகள் வீதம் அப்பக்கங்களிலுள்ள வார்த்தைகளை கணக்கிட்டும் விடுகின்றன. இவ்விதம் தயாரித்த பத்திரிகைகள் பிரிடனிலுள்ள எல்லா பாம்பர் நிலயங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அங்கிருந்து நாலு இஞ்ஜின் பூண்ட ஸ்டார்லிங், லங்காஸ்டர், ஹலிபாக்ஸ் போன்ற வெடி விமானங்களில் அவை ஏற்றப்பட்டு பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், ஜெர்மனி முதலிய எதிரி நாடுகளில் யந்திரங்கள் மூலம் கீழே தள்ளப்படுகின்றன.

இப்பத்திரிகை சுருட்டுகளைக் கண்டாலேயே கோயபல்ஸுக்கு ஒருவிதமான வெறுப்பு ஏற்படுகிறது. ஜெர்மனியில் ஆர். ஏ. எப். விமானங்கள் கீழே தள்ளிய 'லுப்ட் போஸ்ட்' வர்த்தமானப் பத்திரிகையை வீட்டுக்கு எடுத்துப்போகும் ஜெர்மானியர்களின் பெயர்களை அரசாங்கத்திற்குத் தெரிவிப்போர் ஒவ்வொருவருக்கும் 200 மார்க்குகள் அல்லது 10 பவுன் இனும் அளிக்கப்படும் என்று ஒரு வருஷத்திற்குமுன் அவன் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தான். இவ்விதம் உண்மை விஷயங்களை ஜனங்கள் தெரிந்து கொள்ளக்கூடாதென்று ஜெர்மனி முயற்சிக்கிறது.

---

## பிரான்ஸின் பேரில் பிரிடிஷ் விமானப்படைப் பகுதிகள்.

### விமான எதிர்ப்புகளின் நோக்கங்கள்.

பிரான்ஸில் பிரதி தினமும் ஆயிர விமானங்களுக்கு மேலேயே அடங்கிய பிரிடிஷ் விமானப்படை ஒன்று சென்று குண்டுகளை வீசிவிட்டு வருகின்றது. அதில் நல்ல பயிற்சி பெற்ற விமானிகளும் உயிர் துறக்கின்றனர். அதிக உயர்வான விமானங்களும் நாசமடைகின்றன. இம்மாதிரியாக ஒரு விமான எதிர்ப்பில் பிரக்யாதிபெற்ற விமானப்படைத் தலைவர் பாடி பினுகேன் (Paddy Finucane) என்பவரும் இறந்துவிட்டார். ஆதலால் பிரதிதினமும் ஏன் இவ்விதம் ஏராளமாக பிரிடிஷ் விமானங்கள் படையெடுப்பதினால் என்ன பயன் ஏற்படுமென்றும், விமானங்களும், விமானிகளும் நஷ்டமாவதற்குத் தகுந்தாற்போல் பலன் கிடைக்குமாவென்றும், சாதாரண மனிதனுக்கும் ஆச்சரியம் ஏற்படும். எந்த இடத்தில் தாக்குதல் நடக்கிறதோ அந்த இடத்தில் மட்டும் கெடுதல் உண்டாக்க நோக்கம் இருப்பதுபோல் கருதுவது பெருந்தவறு. ஆகாய யுத்த தந்திரத்தில் இது ஒரு அம்சம் என்று 'டைம்ஸ்' பத்திரிகையின் விமான இலாகா நிருபர் எழுதியிருக்கிறார். மேலும் விமான எதிர்ப்புகளின் முக்கியத்வத்தைப்பற்றி பின் வரும் விஷயங்களைத் துலக்கி விபரமாக எழுதியிருக்கிறார்.

### இரண்டு பிரதான நோக்கங்கள்.

விமான எதிர்ப்புக்கு இரண்டு முக்கிய நோக்கங்கள் உண்டு. மேற்கு பாகத்தில் பைடர் விமானங்களையும், தேர்ச்சிபெற்ற விமானிகளையும் ஜெர்மானியர் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டுமென்பது முதல் நோக்கம். எதிர்த்துச் சண்டையிடும் விமானப்படைக்கு என்னென்ன கெடுதிகள் அதாவது முதல்தர விமான ஓட்டிகள், முதல்தர விமானங்கள் சேதமடையும்படிக்கும், விமானங்கள் முறிந்து விழுவதிலும், ஓய்வு தேய்வினால் நஷ்டமடைவதிலும் இன்னும் பலவித மியர்த்தமான நஷ்டங்கள் ஏற்படுவதிலும் ஜெர்மானியருக்குச் சேதமுண்டாக்க வேண்டுமென்பது இரண்டாவது நோக்கம்.

ஜெர்மன் ஆக்கிரமித்த பிரதேசங்களில் யுத்தப்பொருள்களை நாசமாக்குவதும், விரோதிகளின் போக்குவரத்தைத் துண்டிப்பதும் ஆகிய இவ்வித சேதத்தை விளைவிப்பதினால் லுப்ட்வாபியையைச்சேர்ந்த பைடர் விமானப்பகுதியில் பாதி பாகத்தையாவது மேற்குப் பாகத்தில் கட்டாயம் ஸ்திரமாக வைக்கவேண்டி நேரிடும். அவ்விதம் அப்பகுதியில் ஏராளமாக பைடர் விமானங்களைக்கொண்டு ஜெர்மனி பாதுகாக்காமல் இருந்துவிட்டால், அப்பூராப்பகுதியிலும் கைத்தொழிலும், போக்குவரத்தும் முற்றிலும் இல்லாமல் தடைப்பட்டுவிடும்.

இவ்விஷயம் பிரிடிஷ் விமானப்படைக்கு தெரிந்திருப்பதுபோலவே லுப்ட்வாபி படைத் தலைவர் கொயரிங்கும் தெரிந்துகொண்டிருக்கிறான். அதனால்தான் நம் விமானங்களை அங்கு படையெடுக்கவிடாமல் செய்ய, கொயரிங்குக்குத் தன் இஷ்டத்திற்கு விரோதமாக இருந்தாலும் எவ்வளவோ நூற்றுக்கணக்கான உயர்வான பைடர் விமானங்களையும், நல்ல பயிற்சி பெற்ற விமானிகளையும், விமானங்களுக்கு உதவியாக ஆயிரக்கணக்கான தரை உத்தியோகஸ்தர்களையும், விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் அப்பகுதியில் வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

ஜெர்மன் பொதுமக்களும் பிரிடிஷ் விமானப்படையின் பகற்கால தாக்குதல்களின் நோக்கங்களை நன்குணர்ந்திருக்கின்றனர். அப்படையெடுப்பைத் தடுப்பதற்காகக் கூடிய மட்டும் பைடர் விமானங்களை சிக்கனமாக உபயோகிக்கின்றனர். ஜெர்மன் விமான ஓட்டிகள் கோழைத்தனத்தினால் சண்டை செய்ய சம்மதமில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அதற்கு உண்மைக் காரணம் அனாவசியமாக அபாயத்துக்குள்ளாகவேண்டாம் என்று அவர்கள் தலைவர் அடிக்கடி சொல்லிவருவதுதான். மேலும் அவர்கள் மட்டமான விமானங்களை உபயோகிக்கிறார்கள் என்று சொல்வதற்குமில்லை. மேற்குப் பாகத்தில் வைக்கப்பட்டிருக்கும் எதிரி விமானப்பகுதியில் FW-190s; M.E.-109-Fs. போன்ற அதிக உயர்வான பைடர் விமானங்கள் அடங்கியிருக்கின்றன.

### ஜெர்மானியர்களுக்கு நஷ்டம் ஏற்படுவதின் தன்மை மாறுதலடைந்திருக்கிறது.

இதற்குமுன் ஜெர்மானியர் பிரிடனை தாக்கி நடத்தின யுத்தத்தில் நம் ஹரிகேன் விமானங்களும், ஸ்பிட்பையர் விமானங்களும் படையெடுத்த ஜெர்மன் விமானங்களை அழித்தன. பிரிடிஷ் விமானப்படைத் தாக்குதலிலும், தற்காப்பிலும் நேரிடக்கூடிய நஷ்டவிகிதத்தை மாறுதலடையச் செய்திருக்கிறது. அதாவது பிரிடிஷ் விமானப்படை தாக்கும்பொழுது அதற்குண்டான நஷ்டத்தைக் காட்டிலும் ஜெர்மன் விமானங்களுக்கு அதிக நஷ்டம் உண்டாகும்படி செய்கிறது. அது விசேஷமாக அடையப்பட்ட பலன். யுத்தத்தில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானங்கள் போக அநேகமாகத் தரையில் விமானங்கள், விமான நிலயங்களில் தங்கியிருக்கும்பொழுதே பைடர் விமானங்களிலிருந்து வீசப்படும் எரிகுண்டுகளாலும், வெடிகுண்டுகளாலும் அழிந்து நாசமாக்கப்படுகின்றன.

விமானத் தாக்குதல்கள் ஏற்படும்பொழுது ஆர். ஏ. எப். விமானப்பகுதிகள், மின்சாரசக்தி சாலைகளையும், துருப்புகளையும், பண்டகசாலைகளையும், வெடிமருந்து ஸ்டோர்களையும், தொழிற்சாலைகளையும், வெடிகுண்டு போட்டோ, சுட்டோ அழித்துவிடுகின்றன. அநேக சந்தர்ப்பங்களில் கப்பலில் வரும் சாமான்களை மூழ்கடித்திருக்கின்றன; நஷ்டமுண்டாக்கியுமிருக்கின்றன.

ஜெர்மன் விமானப் படைக்கு ஒரே சமயத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட போர்முனைகளில் தாக்கும்படியான வேலை விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் முன்னணியில் போர் செய்யும் விமானங்களையும், விமான ஓட்டிகளையும் அதிகமாக உபயோகிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய கஷ்டம் நேரிடாதபடி தான் செய்வதாக ஒரு சமயம் ஹிட்லர் வாக்குறுதி செய்தான். இப்பொழுது பிரிடிஷ் விமானங்கள் செய்யும் நடவடிக்கைகளினால் ஜெர்மன் விமானப்படைக்கு நேரிடக்கூடிய நிர்ப்பந்தம் அதிகரித்து அவற்றின் பலம் அழிந்துபோகக்கூடிய நிலைமைக்குக் கொண்டுவர ஏதுவாயிருக்கும்.



### ருஷ்ய விமானப்படைக்கு உதவி.

நம்முடைய கடைசி நோக்கமானது ருஷ்ய விமானப்படை பலத்துக்கும், தரைப்படைப் பலத்துக்கும் ஏற்பட்டிருக்கும் பளுவைக் குறைக்கவேண்டுமென்பதே. அதை அடைவதற்கு நாம் நஷ்டப்படத்தான் வேண்டும். ருஷ்ய விமானப்படைக்கு பைடர் விமானங்கள் அதிகமாக இருக்கிறதென்றால், அந்த கௌரவம் பிரிடிஷ் விமானப்படையினால் உண்டாகியிருக்கிறதாகச் சொல்லலாம்.

விமான ஓட்டிகள் அவரவர்கள் வேலையைச்செய்ய ஆவலாயிருக்கிறார்கள். எதிரி விமானப்படை எதிர்ப்பைக் குறைத்துவிட்டால் நமது சைனியம் மீண்டும் ஐரோப்பாக் கண்டத்தில் போய் இறங்கி மேற்குப் பக்கத்தில் 1940-ம் ளூ ஜூன் மாதம் முதற்கொண்டு ஜெர்மன் ஆக்கிரமிப்புக்காரர்கள் கைப்பற்றியிருக்கும் பிரதேசத்திலிருந்து அவர்களை விரட்டி விடக்கூடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டாகியிருப்பதிலிருந்து அவர்கள் இன்னும் அதிகம் ஊக்கம் கொண்டிருக்கிறார்கள்.

---

## பிரான்ஸில் நிதி நிர்வாக நெருக்கடி. ஜெர்மனியுடன் ஒத்துழைப்பினால் வந்த முடிவு.

(மிஸ்ட்டர் தாமஸ் கேடட் பி. பி. ஸி. யில் ஒலிபரப்பியது.)

### நிதி நிர்வாக நெருக்கடி.

பிரான்ஸ் தோல்வியடைந்ததினால் அதற்கேற்பட்டிருக்கும் மற்ற கஷ்டங்களுடன் நிதி நிர்வாக நெருக்கடியும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதை ரூபிப்பதற்காக ஏராளமான கணக்கைக் காண்பித்து நான் உங்களுக்கு சிரமம் கொடுக்கப்போவதில்லை. உண்மையில் இப்பொழுது பிரான்ஸில் நிதியைக் கொள்ளையடித்து வருகிறமாதிரி வேறு எந்த நாட்டையும் கொள்ளையடிக்கவில்லையென்றும், இதனால் பிரான்ஸுக்கு அழிவு உண்டாகுமென்பதையும் ரூபிக்க சில விஷயங்களே போதுமானது.

### சாதாரணமான வர்த்தகமில்லை.

பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையிலிருந்து பிரான்ஸில் சாதாரணமான வர்த்தகம் நின்றுவிட்டது. ஏனென்றால் அந்நாடு இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. விளைபொருள்களும் இல்லை. 15,00,000 தேர்ச்சிபெற்ற தொழிலாளிகள் ஜெர்மன் கைதி முகாம்களில் இன்னுமிருந்து வருகிறார்கள்.

### ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் வைக்கப்பட்டிருக்கும் சைனியத்திற்கு உணவளிப்பது.

இதன் பயன் என்னவென்றால் தேச பொக்கிஷத்துக்குக் கொஞ்சத்தொகைதான் போய்ச்சேருகிறது. ஆனால் பொக்கிஷத்திலிருந்து செலவு செய்வதற்கு எடுக்கப்படும் தொகையோ ஏராளம். அங்கு ஜெர்மன் துருப்புகளின் எண்ணிக்கை இப்பொழுது குறைக்கப் பட்டிருந்தாலும்கூட ஆக்கிரமித்துவரும் ஜெர்மன் சைனியங்களுக்குப் பிரெஞ்சுக்காரர்கள் தினசரி 65 லக்ஷம் டாலர்கள் செலவுசெய்ய வேண்டியதாயிருக்கிறது.

### வேலையில்லாத் திண்டாட்டம்.

இவைகளுக்கெல்லாம் மேலாக எவ்வளவோ ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு வேலையில்லை. தேச நிதிக்கு அவர்கள் பங்கு கொடுப்பதற்குப் பதிலாக அரசாங்கத்திலிருந்து அவர்கள் உதவியை நாடுகிறார்கள்.

### காகித நாணயம்.

வரவுக்கு மிஞ்சின செலவு செய்கிற ஜனங்களைப்போலவே தேசத்தார்களும் அப்படி செலவுசெய்தால் அவர்கள்பாடு கஷ்டம்தான்.

தேசத்தார்களுக்குத் திண்டாட்டம் ஏற்படுவதற்கு முன்னாலேயே காலக் கிரமத்தில் ஈடுசெய்யலாமென்ற எண்ணத்துடனே அல்லது வரப்போகும் கெட்ட காலத்தை இன்னும் ஒதுக்கி வைக்கவோ காகித நாணயத்தை உபயோகிக் கிறார்கள். அதாவது காகித நாணய மாற்று என்றால் இருப்பில் பணமே இல்லாமலிருக்கும். அதற்கு ஈடுசெய்வதற்காக காகித நாணயத்தை உபயோகிப் பதுதான்.

பிரெஞ்சுக்காரர்கள் காகித நாணயம் போட்டுவருகிறார்கள். அதுவும் ஏராளமாக நடைபெற்று வருகிறது. இதனால் அவர்களுக்கு நேரிடக்கூடிய நஷ்டத்தை விலைவாசியை வரைப்படுத்துவதிலும், பொருள்களை உபயோகப் படுத்துவதில் சடுமையாக சிக்கனம் ஏற்படுத்துவதிலும் ஈடுசெய்யக்கூடுமா என்ற பிரச்னை உண்டாகிறது. சென்ற யுத்தத்திற்குப்பிறகு ஜெர்மனியில் ஏற்பட்டபடி காகித நாணயமாற்றினால் சங்கடம் ஏற்படாமல் பிரெஞ்சுக்காரர்கள் மேற்சொல்லிய முறையைக் கையாளுவதினால் தவிர்க்கக்கூடும். அப்பொழுது ஜெர்மனியில் ஒரு நாளைக்கு வேண்டிய சாமான்களை வாங்குவதற்கு கடைக்குப் போனால் ஜனங்கள் கோடிக்கணக்கான காகித நாணயங்களை பெட்டியில் அடைத்துக் கொண்டுபோக வேண்டியதாயிருந்தது.

### சிங்கமும், ஆட்டுக்குட்டியும்.

என்ன சம்பவித்தாலும், ஜெர்மானியர் வெகு கர்வமாகவே இருப்பார்கள். நாள் ஆக, ஆக, பணம் ஒரு லக்ஷியமல்ல. பணத்தினால் வாங்கக்கூடிய சாமான்கள் தான் முக்கியமானவை. பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து அவர்களுக்கு எவ்வளவு குறைவாகக் கொடுக்கலாமோ அவற்றைக் கொடுத்துவிட்டு பாக்கியை ஜெர்மனி எடுத்துக்கொண்டுவருகிறது.

இந்த விஷயம் யார் கண்ணுக்கும் படாமலிருக்காது. வெகு சீக்கிரத்தில் ஏமாற்றமடைந்த பிரெஞ்சு மக்கள்கூட ஜெர்மானியருடன் செய்யும் ஒத்துழைப் பானது சிங்கமும், ஆட்டுக்குட்டியும் நேசமாகவாழ எத்தனிப்பதுபோல் இருக்கு மென்பதை உணர்ந்து கொள்வார்கள். சிங்கமும், ஆட்டுக்குட்டியும் ஒன்று சேர்ந்து வாழ்வதென்றால் சிங்கம் ஆட்டுக்குட்டியைத் தின்றுவிடும்.

---

## பிரெஞ்சு-ஆபிரிக்காவுக்கு பயமுறுத்தல்.

(ஆண்ட்ரூ லெபரந்தி என்பவர் எழுதியது.)

பிப்ரவரியின் ஆரம்பத்தில் மத்தியதரைக்கடலில் அச்சுநாட்டினர் புதிய விஷமச்செய்கை செய்யப்போவதான அறிகுறிகள் தோன்றின. இதாலிய ராணுவத் தலைவர்களைச் சந்திப்பதற்காக கோயரிங் இதாலிக்குச் சென்றிருந்தான். 1940-ம் ஆண்டு வசந்தகாலத்தில் பிரிடன்பேரில் நடந்த யுத்தத்தில் ஜெர்மன் விமானப் படையை நடத்தி தோல்வியுற்ற தளகர்த்தர் கெஸர்லிங் என்பவனும் அவனுடன் சென்றிருந்தான்.

மால்டாவின் மீது குண்டுவீச்சு வரவர வலுத்துக்கொண்டிருந்தது. அதே சமயத்தில் ஆபிரிக்காவில் இருக்கும் ரோமலுக்கு புதிய படைகள் அனுப்பவேண்டி யிருந்தது. மத்தியதரைக்கடலின் மறுகோடியில் ஆபிரிக்காவிலுள்ள டாங்கியர் என்னுமிடத்தில் வெடிகுண்டு வீச்சினால் ஏற்படும் சேதம் ஹிட்லரின் கொள்கைக்கு ஆதாரமாயிருப்பதை ஞாபகம் மூட்டுகிறது. அந்தக் கொள்கையாவது அடிமை யாக்கப்படும் நாடுகளுக்கு நிர்ப்பந்தத்தை உண்டாக்கி, முடிவில் எல்லாவற்றையும் சுற்றிவளைத்து அடிமையாக்கிக்கொள்ளவேண்டும் என்பதுதான்.

அப்பொழுது பிரெஞ்சுக்காரர்களுக்குக் கவலைப்படவேண்டிய காலம் நெருங்கி வருவதாயிருந்தது. மத்தியதரைக்கடலில் யுத்தம் மும்மரமாக நடக்கும்பொழுது அவர்களுக்கு கவலை இரண்டு மடங்கு ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனென்றால், யுத்தத்தைப் பொதுவாகப் பார்த்தால் யுத்தம் வியாபிக்காத தனிப்பட்ட நாடு என்று எதுவும் இருக்கமுடியாது. வெகுசீக்கிரத்திலோ அல்லது கொஞ்சநாள் கிரமித்தோ வட ஆபிரிக்காவுக்கு பெருத்த ஆபத்து நேரிட்டுவிடும். அது பல மில்லாத நாடாக இருப்பதினால் பிடிபட்டோ, அல்லது பல ரகசிய சூழ்ச்சிகளினால்



ஜெர்மனிக்குட்பட்டோவிடும், என்ற பயம் இருந்துவருகிறது. பிரெஞ்சு ஆபிரிக்காவை கைப்பற்ற ஜெர்மனி நோக்கம் கொண்டிருப்பதற்கு ஏராளமாக ருஜு இருக்கிறது. சில வாரங்களுக்கு முன்தான் குடியேற்ற நாடுகளைப்பற்றிய விஷயங்களை வெளியிடும் பத்திரிகையில், பிரெஞ்சு, விஷி ஸர்க்கார் அதன் குடியேற்ற நாடுகளின் பொறுப்புப் பூராவையும் வகிக்க முடியாத நிலைமையில் இருப்பதாகக் கண்டிருந்தது. இவ்விதமாக விஷயங்களை வெளியிடுவது ஜெர் மனிக்கு சகஜம்தான். சென்ற அநேக வருஷங்களாகவே பிரெஞ்சு சாம்ராஜ்யத் தில் பிரஜாவிருத்தி அதிகமில்லாமல் ஒரேமாதிரி யிருப்பதால் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் சாம்ராஜ்யத்தை ஆளுவதற்குத் திறமையற்றவர்களாக இருக்கிறார்கள் என்று ஜெர்மானியர் சொல்லிவந்திருக்கிறார்கள். இந்த சமயத்தில் பிரெஞ்சுக் காரர்களும் ஜெர்மானியரும் ஒத்துழைப்பதுபோல் பிரஸ்தாபமும் இருந்து வருகிறது. பழக்கமாக பிரெஞ்சு அரசியல் நடவடிக்கையில் ஜெர்மானியர் தலை யிடுவதற்குமுன் ஆயாசப்பட்டு மறுதளிப்பதாகவும், வற்புறுத்தலினால் ஜெர் மானியர் தலையிடவேண்டியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனபோதிலும் இந்த சந்தர்ப்பத்தில் ஜெர்மானியர் ஆதிக்கத்தில் உட்பட்டிருக்கும் பாரிஸ் பத்திரிகைகளும் விஷி ஸர்க்கார் அதிகாரிகளைக் கண்டனம் செய்கின்றன.

### எதிர்காலத்தை இப்பொழுதே தீர்மானிக்கலாம்.

வருங்காலத்தில் ஏற்படும் விஷயத்தை இப்பொழுதே தீர்மானித்துவிடலாம். சமாதானம் அமைக்க தூதகோஷ்டி என்று சொல்லிக்கொண்டு டுனிஸில் டெஸ்டர் தலைமையின்கீழ் நடக்கும் இயக்கத்திற்கு ஜெர்மானியர் பண உதவி செய்து வருகிறார்கள். மொரோகோவில் தேசிய இயக்கங்களை ஒழுங்குப்படுத்தியும், அராபியர்களுக்கு வேண்டிய ஆதரவும் அளித்துவருகிறார்கள். யுத்தத்திற்குமுன் பாரிஸ் நகருக்கு வந்திருந்த தூதகோஷ்டியில் ஹர் ஆயர் (Herr Auer) என்பவன் பிரக்யாதி பெற்ற தூதராக இருந்தான். இப்பொழுது அவன் காஸபிளான்காவில் பிரதம தலைவனாக இருக்கிறான். அதனால் இந்த சமயத்தில் வட ஆபிரிக்காவில் ஏற்பட்டிருக்கும் உள்நாட்டு இயக்கங்களினால் ஜெர்மானியரைத் தவிர வேறு யார் தான் லாபமடையக்கூடும் அந்த நாடுகளிலுள்ள கலவரத்தினால் பிரெஞ்சு கவர்னர் களுக்கும், தளகர்த்தர்களுக்கும் ஏற்கனவே குறைந்துபோன ஆக்கிரமிப்பைத் தடுக்கும் சக்தி இன்னும் குன்றிவிடுகிறது. அதனால் ஜெர்மானியரும், இதாலியரும் அங்குள்ள விஷயங்களில் தலையிடுவதற்கு புதிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. சமீபகாலத்தில்தான் மொரோகோவில் சமாதானம் ஏற்பட்டது. அதிலுள்ள ஜனங்களோ முரட்டு சுபாவமுள்ளவர்கள். அங்கு ஸப்ளைகள் கொண்டு போவதற்கு அதிகக் கஷ்டமாயிருப்பதினால், கலகங்கள் வரவர அதிகரிக்கின்றன. மேலும் அந்நாட்டுமக்களின் கிளர்ச்சி ஏற்பட்டால் பலவந்தத்திற்கு ஒரு உபாய மாக இருக்கும். ஸ்பெயின் தேசத்தில் நடக்கும் பிரசாரங்களும், பத்திரிகைகள் இவ்விஷயங்களை வெளியிடுவதும் மற்றொரு உபாயம். அதனால் விஷி ஸர்க்காரிடம் ஜெர்மனி சில சாதகங்களை அடைய முயற்சிக்கும்போதெல்லாம் ஸ்பெயின் தேசமும் உடனே பேட்டிக்கு வந்துவிடுகிறது.

பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் சூழ்ச்சிகள் செய்வதும், அங்குள்ள அதிகாரி களுக்கும், விஷி மந்திரிகளுக்கும் அடிக்கடி போக்குவரவு வைத்துக்கொள்ளும்படி செய்வதும் அச்சுநாடுகளின் பொதுவான முக்கிய நோக்கங்கள். இச்சூழ்ச்சியின் பயனாகவே அங்குள்ள ஜெர்மன் தளகர்த்தர் ரோமலுக்கு லிபியா யுத்தப் பொருள்களை ஸப்ளை செய்துவருகிறது. மறுபடியும் வேண்டுமென்றோ, அல்லது பிரெஞ்சு மக்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகவோ விஷி ஸர்க்கார் எதிரி களுக்கு உதவி செய்வார்களானால், அதற்கு பதிலுக்குப்பதில் நாம் செய்துதான் ஆகவேண்டும். இவ்விதம் செய்வதில் ஜாக்கிரதையாகவும், எதிரி வலையில் சிக்காமலும் நடந்துகொள்ளவேண்டும். விஷி அரசாங்கம் நேசநாடுகளுடன் ஏகோபாவமாய் இருந்துகொண்டு எதிரிகளுக்கு எவ்வளவுக்கெவ்வளவு உதவு கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஜெர்மனியின் வலையில் சிக்கிக்கொண்டு, அதற்கு நேரிடும் கஷ்டத்திற்காக வருத்தமடைய நேரிடும். அதனால் நேசதேசத்தார் களுக்குள்ள அக்கரையை முன்னிட்டு வட ஆபிரிக்காவில் ஜெர்மனியை ஆக்கிர மிக்க விடக்கூடாது. வட ஆபிரிக்கா நேசதேசத்தார்கள் சார்பில் இருக்கவேண்டு மானால் இதை ஒரு முக்கியமான நிபந்தனையாக வைத்துக்கொள்ளவேண்டும்.

### நாஜி சூழ்ச்சி.

வட ஆபிரிக்காவில் துருப்புகளும், யுத்த தளவாடங்களும் மிகக்குறைவென்று ஜெர்மானியர் நன்கு உணர்ந்திருக்கின்றனர். இதுவரை பிரிடிஷ் கப்பற்படையின் ஆதிக்கத்தினாலும், நைல் தீரத்திலுள்ள சைனியம் லிபியாவில் படையெடுக்குமோ என்று உள்ளூர பயமிருந்ததினாலும் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தில் அமைதி நிலவி வந்தது. இப்பொழுது இந்த யுத்தத்தில் விஷி அரசாங்கத்தை அச்சுநாடுகளுடன் சேரும்படி செய்து அதனால் அது நேசநாடுகளின் விரோதத்தை சம்பாதிக்கும்படி ஜெர்மனி செய்துவிட்டது. விஷி அரசாங்கத்திற்கும், மற்ற நேசநாடுகளுக்குமுள்ள சிநேகம் முறிந்துபோவதான சந்தர்ப்பமும் அநேகமாக வந்துவிட்டது. மற்ற இடங்களைப்போலவே மத்தியதரைக்கடலிலும் ஜெர்மனியும், நேசநாடுகளும் ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு வெற்றியடையப் பார்க்கின்றனர். தங்களுக்குக் கிடைத்த உதவியை வைத்துக்கொண்டு முடிந்தவரை சண்டைகளைச் செய்து ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலுமுள்ள முக்கிய தளங்களை ஸ்வாதீனப் படுத்த ஜெர்மானியர் முயலுவார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஜெர்மனிக்கு விரோதமான நாடுகளுக்குள் ஒரு மனஸ்தாபத்தை உண்டுபண்ணிக்கொண்டால் எதிரிக்குத்தான் சாதகமாகும். தீரதபோனல்தான் எதிரிக்குச் சாதகமானதும், ராணுவ தந்திரத்தை அனுசரித்தும், சில காரியங்களைச் செய்யலாம். அனாவசியமாக எதிரிக்கு உதவுவது ஆபத்தாய் முடியும். அவர்களின் உணர்ச்சி எப்படியிருந்தாலும், பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை ஜெர்மானியர் கைப்பற்றாமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஸ்வதந்திர பிரான்ஸ் தயாராக இருக்கிறது. ஆனால் தற்சமயத்திலுள்ள பிரச்னை அது அல்ல. வட ஆபிரிக்காவில் புதிதாக, தாற்காலிகமாக அடைந்துள்ள சாதகங்களைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கையில் ஜெர்மானியர் பலாத்காரமாகவோ, கெஞ்சிக் கேட்டோ, தங்களுடைய நிலைமையை நிலைநாட்டிக்கொள்ள முயலுகிறார்கள். இதுதான் பிரச்னை. ஆகவே பிரான்ஸ், நேசநாடுகள், இவைகளின் நன்மையை முன்னிட்டு ஜெர்மானியரின் திட்டம் முறியடிக்கப்படவேண்டும். தங்கள்பேரில் பலாத்காரம் செய்யப்படும் முன்னேயே கிடைத்துள்ள சந்தற்பத்திற்கேற்றவாறு நேச நாடுகள் தாங்களாகவே சண்டையைத்துவக்கவேண்டும்.

---

## ஏ. ஆர். பி. குறிப்புகள்.

இந்தியா கவர்ன்மெண்டின் ஸிவில் பாதுகாப்பு இலாகாவால் பிரசுரிக்கப் பட்ட ஏ. ஆர். பி. கைப்புஸ்தகம் நம்பர் 6, முதல் பாகத்தில் விமானப் படையெடுப்பு காலங்களில் திறந்த வெளிகளில் இருக்கவேண்டி வந்தால் உடனே தரையில் மார்புப் பக்கமாகப்படுத்துக் கொள்ளவேண்டியதின் அவசியத்தைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படிப் படுத்துக் கொள்ளும்போது முழங்கையை பூமியில் ஊன்றிக்கொண்டு சரீரத்தின் முன் பாகத்தின் பளுவை அதில் தாங்கிக்கொள்ளவேண்டும்.

முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயமென்னவென்றால், ஒரு குண்டு விழுந்து வெடிக்குமேயாகில் அதிலிருந்து கிளம்பும் இரும்புத்துண்டுகள், சிறு ஆயுதங்கள், மணல் முதலியவை மேல் நோக்கி நாலா பக்கங்களிலும் சிதறி ஓடும். ஆகவே பறந்து வெடிக்கும் குண்டு கீழ்நோக்கி, அதிக சப்தத்துடன் வரும் பொழுது, வேறு பாதுகாப்பு ஸ்தலங்கள் கிடைக்காவிடில், குறுகலான இடத்தை அடைவது நலம். தெருப்பாலமாயிருந்தாலும் பாதகமில்லை. சம தரையில் இருந்தால் நின்று கொண்டிருக்காமல் கீழே உடனே படுத்துக்கொள்ளுவது தான் சிலாக்கியம்.

### பத்திரமான நிலை.

அப்படி படுத்துக்கொள்ளும்போது முகத்லைத கீழ்நோக்கி வைத்துக்கொண்டு, சரீர பளுவை முழங்கைகளில் செலுத்து. தலையில் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு, இரண்டு கைகளையும் கழுத்தின் மேல்புறம் சேர்த்துக்கொண்டு, மார்பை பூமி மட்டத்தைக்காட்டிலும் சற்று உயர்த்திக்கொள்ளுவதுதான் சரியான நிலை. இப்படியிருந்தால் அக்கம் பக்கத்தில் பூமி மேல் குண்டு விழுவதால் ஏற்படும் அதிர்ச்சி பாதிக்காது. கைக்குட்டை போன்ற மிருதுவான வஸ்துவைப் பற்களிடையே அடக்கிக்கொண்டால் நாக்கு, மூவாக்கட்டை கெடுதலையடையாமலிருக்கும்.



ஒரு குண்டு விழுந்து வெடித்தாலே அந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள கட்டடம் சேதமாகக் காரணமாகும். மொத்தத்தில் மனிதர்களுக்கு நேரக்கூடிய ஆபத்து அவ்வளவு கடுமையாக இருக்காது. சுவாஸாசயத்திலோ வேறு அவயவங்களிலோ சிறிதளவுக்குக் காயம் ஏற்படலாம். ஆனால் குண்டு வெடிக்கும் இடத்திற்கு வெகு சமீபத்து இருந்தால் தான் அதிகமான தீங்கு விளையும்.

ஆகவே சாதாரணமாக மூக்கு, வாய், முதலியவைகளிலிருந்து காற்றை வெளியே இழுத்து உட்புறம் அதிகத் தீங்கு ஏற்படுமென்ற அபிப்பிராயங்களெல்லாம் பிசகானவை.

காதின் உட்சவ்வு பொத்துப்போக ஹேது ஏற்படலாம். அவ்விதம் ஏற்படாமலிருக்க பஞ்சு நூலை வாஸலைனில் (Vaseline) தோய்த்தோ, அல்லது சாதாவாகவோ காதினுள் லேசாகச் சொருகிக்கொள்ளலாம். இப்படிச் செய்து கொண்டால் பெரும் சப்தம் நேரிட்டால் காது கெடுதியடையாமலிருக்கும்.

### வீட்டிற்கருகில் பாதுகாப்பு.

ஒரு சுவர் அல்லது கமான் வழி இவைகளுக்கு அருகில் இருந்தால் குண்டிலிருந்து வரும் இரும்புத் துண்டுகள், இடியும் தளவாடம் முதலியவைகளிலிருந்து தப்பலாம். அதே விதமாக விமான எதிர்ப்பு பீரங்கிகள் வெடிக்கும் போதும் தப்பிக்கலாம். ஆனால் வீட்டினுள் இருந்தாலும், வெளியே சென்றிருந்தாலும், முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விஷயமென்னவென்றால் சுவர்களில் நேரே சாய்ந்தால், அதிர்ச்சி ஏற்பட்டால் சரீரத்தினுள் காயமேற்படும். ஆகவே ஒரு கட்டடத்தின் பேரிலோ, ஒரு குழியில் ஓரமாகவோ சாயக்கூடாது. மெத்தை, அல்லது பல மடிப்புள்ள செட்டைகளே நன்மையானவை.

சரியான தலைப்பாகை முதலியன இல்லாத காலத்தில் எப்படியாவது தலை முதலிய உயிர் நிலைகளைக் காக்கவேண்டும். உதாரணமாக ஒரு கெட்டிப்போர்வை, ஒரு செட்டை, அல்லது விரிக்கப்பட்ட புஸ்தகம் இவைகளை உபயோகித்துக் கொள்ளலாம்.

### ஜன்னல் கதவுகளைத் திறந்து வைக்கவும்.

வீட்டினுள் இருக்கும்போது, சுவர்களின் வெளிப்புறமாக இருப்பதைக் காட்டிலும் உட்புறமாக இருப்பது நலம். வாசல்படி, ஜன்னல் இவைகளுக்கு நேராய் இருக்கக்கூடாது. இரண்டு சுவர்கள் சேருமிடத்திலுள்ள மூலைகள் போன்ற இடம் மிக நல்லது. ஆனால் கண்ணாடி ஜன்னல் கதவுகளுக்குச் சரியானபடி பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கவேண்டும். அதைப்பற்றி விவரமாக அதிகாரிகளைக்கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்.

இவ்விதமாக பத்திரம் செய்துகொண்டு அங்கேயே இருக்கவேண்டும். ஒரு குண்டு விழுந்ததும் அதனால் என்ன நேருகிறதென்று பார்க்க ஆவலாகப் புறப் படக்கூடாது. அப்படிப் போனால் மற்றொரு குண்டினால் அபாயம் ஏற்படும். இதைத் தெரிந்துகொள்ளாமல் பலர் இறந்திருக்கின்றனர்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

**பிரஸங்கம் 107—(4-வது பிரிவு).**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ... 8, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை 6.30. |
| | 9, ஞாயிற்றுக்கிழமை. | கீரனூர் | ... | ,, 6.00 |
| | | நாஞ்சூர் | .... | ,, 6.30 |
| | 10, திங்கட்கிழமை ... | காரையூர் | ... | ,, 6.00 |
| | | இடையாத்தூர் | ... | ,, 6.30 |

| 1942— | | | | | மணி: |
|---|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ... 11, செவ்வாய்க்கிழமை | அண்டக்குளம் | ... | மாலை | 6.00 |
| | | கிள்ளனூர் | ... | ,, | 6.30 |
| | 12, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | | ,, | 10.15 |
| | | நார்த்தாமலை | ... | மாலை | 6.00 |
| | | உப்பிலியக்குடி | ... | ,, | 6.30 |
| | 14, வெள்ளிக்கிழமை... | கொன்னையூர் | ... | ,, | 6.00 |
| | | மேலவேகுபட்டி | ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 108—(5-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 15, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 16, ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் | ... | ,, | 6.00 |
| | | வம்பன் | ... | ,, | 6.30 |
| | 17, திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | தொலையானூர் | ... | ,, | 6.30 |
| | 18, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | குளவாய்ப்பட்டி | ... | மாலை | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 6.30 |
| | 19, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் (பிராஞ்சு ஸ்கூல்) | | ,, | 10.15 |
| | | வெள்ளனூர் | ... | மாலை | 6.00 |
| | | செம்பாட்டூர் | ... | ,, | 6.30 |
| | 20, வியாழக்கிழமை ... | பள்ளிவாசல் | ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |
| | 21, வெள்ளிக்கிழமை... | புலியூர் | ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி | ... | ,, | 6.30 |

---

**புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டு பத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 8— 8—42 | ... | வெட்டம்விடுதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 9— 8—42 | ... | விராச்சிலை. |
| திங்கட்கிழமை | ... | 10— 8—42 | ... | கொன்னையூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 11— 8—42 | ... | பெரம்பூர். |
| புதன்கிழமை | ... | 12— 8—42 | ... | கீழாநிலை புதுப்பட்டி. |
| வெள்ளிக்கிழமை | ... | 14— 8—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 15— 8—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 16— 8—42 | ... | தீத்தான்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 17— 8—42 | ... | முள்ளங்குரிச்சி. |
| செவ்வாய்க்கிழமை | ... | 18— 8—42 | ... | ராமச்சந்திரபுரம். |
| புதன்கிழமை | ... | 19— 8—42 | ... | கரம்பக்குடி. |
| வியாழக்கிழமை | ... | 20— 8—42 | ... | ஆலங்குடி. |
| வெள்ளிக்கிழமை | ... | 21— 8—42 | ... | புதுக்கோட்டை. |

---

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—10-8-42.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ ஆகஸ்டு ௴ 15௳ [ந. 108


பிரஸங்கம் CVIII.

## ஆபத்து தவிர்க்கப்பட்டது.

## காங்கிரஸ் சவாலுக்கு ஸர்க்கார் விடை.

### சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### தேச சூழ்ச்சியைத் தடுக்க சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(I)

## சபையுடன்கூடிய கவர்னர் ஜெனரலின் தீர்மானம்.

(ஆகஸ்டு 8.)

" அகில இந்தியக் காங்கிரஸ் காரியக்கமிட்டியால் ஆகஸ்டு ௴ 5௳ நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஊர்ஜிதம் செய்துவிட்டது. அத்தீர்மானத்தில் இந்தியாவில் பிரிடிஷ் அதிகாரம் உடனே மறையவேண்டுமென்றும், விசேஷமான அளவில் அஹிம்சா முறையில் பொதுஜன இயக்கம் ஆரம்பிக்க அனுமதிப்பதாயும் காணப்பட்டிருக்கிறது. சிறிதுகாலமாக காங்கிரஸ் அபாயகரமான முஸ்தீப்புகளுடன் போக்குவரத்துகளைத் தடைசெய்வது, பொதுஜன சாதகங்களைக் கெடுப்பது, வேலை நிறுத்தம் செய்வது, கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு அரசாங்கத்தாரிடம் உள்ள விசுவாசத்தைக் குறைப்பது, ரெக்ரூட்மெண்டு உள்பட யுத்த முயற்சிகளைத் தடுப்பது முதலிய வேலைகளைச் செய்துவருவது சபையோடு கூடிய கவர்னர் ஜெனராலுக்குத் தெரியவந்திருக்கிறது.

**பலிக்காத ஆசைகள்.**

காங்கிரஸ் கட்சிக்கு நல்லுணர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையுடன் இந்திய ஸர்க்கார் பொறுமையாகக் காத்திருந்தனர். ஆனால் அந்த ஆசை பலிக்கவில்லை.

தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமைபோன்ற சவாலான நிலைமைகளுக்கு ஒரே ஒரு பதில்தான் உண்டு. அதாவது இந்திய மக்களுக்கும், நேசதேசங்

களுக்கும் கொடுத்துள்ள அக்கறைகளின்படி, நடந்துகொள்ளாமல் இந்திய ஸர்க்கார் காங்கிரஸ் தீர்மானத்தை அங்கீகரித்தால், இந்தியாவில் குழப்பமும், அராஜகமும் ஏற்படும். மனிதவர்க்கத்தின் ஸ்வதந்திரத்திற்காகப் புரியப்படும் இந்த யுத்த சம்பந்தமான முயற்சியும் தடைபடும்.

காங்கிரஸ் தலைவர்களின் கோரிக்கைக்கு அவசியமே கிடையாது. காங்கிரஸின் கோரிக்கை அசாத்தியமானதென்பதில்லாவிட்டாலும், கஷ்டமானதாகும் என்று இந்திய ஸர்க்கார் கருதுகின்றனர். "இதில் அபாயங்கள் இருக்கலாம்" என்று காங்கிரஸ் கமிட்டியே ஒப்புக்கொள்ளுகிறது. அவர்கள் சொல்லுவது ரொம்ப சரியான விஷயம். காங்கிரஸ் தீர்மானத்தை ஒப்புக்கொண்டால், இந்தியாவில் அச்சு நாடுகளின் தாக்குதலுக்கு இடம் கொடுக்கும் மாதிரிதான். உள்நாட்டிலும் பிரிடிஷ் அதிகாரத்தை வாபஸ் வாங்கிவிட்டால் கலகமேற்படும். அமைதி, ஒழுங்கு, இவை குலைந்து வகுப்புச் சச்சரவுகள் ஏற்பட்டுப் பொருளாதார வாழ்வு சீர்கேடு அடையும். மேலும் இந்தியா பூராவுக்கும் தானே பிரதிநிதி என்பதாகக் காங்கிரஸ் கொண்டாடும் உரிமையை இந்திய ஸர்க்கார் ஏற்கவில்லை.

ஆனால் இந்திய ஸர்க்காரின் பொறுப்புப்படி இந்தியர்களின் எல்லாவித அபிப்பிராயங்களையும், அக்கறைகளையும் கவனிக்கவேண்டிவருகிறது.

### மற்ற அபிப்பிராயங்கள்.

மேலும் பல நாட்களாக காங்கிரஸ் கொள்கையை எதிர்த்துச் செய்யப்படும் பிரசாரங்களையும், பெருந்தன்மையுள்ள பல தலைவர்களின் அபிப்பிராயங்களையும் காணும்போது காங்கிரஸ் தற்போது ஆரம்பித்திருக்கும் இயக்கம் கொஞ்சமும் ஆதாரமற்றதென்றும், அதை அங்கீகரித்தால் ஜனங்களுக்கிடையே காணப்படும் பெரும் அம்சங்களை விடவேண்டிவருமென்றும் அரசாங்கத்தார் அறிந்துள்ளார்கள். இவ்விதம் காங்கிரஸுக்கு விரோதமாயுள்ள யாவரும் யுத்த முயற்சியில் அதிகம் ஈடுபட்டு, அச்சு நாடுகளை எதிர்ப்பதில் அக்கறைகொண்டிருக்கின்றனர். காங்கிரஸ் கொள்கையை அங்கீகரித்தால் யுத்த முயற்சி கெட்டுவிடும்.

இந்தியாவின் எதிர்காலத்துக்கு இது ஒன்றுதான் வழியென்று காங்கிரஸ் தலைவர்கள் உரிமைகொண்டாடவும் முடியாது. இந்தியாவின் அபிப்பிராயத்தை பிரதிபலிக்கவல்ல சபை காங்கிரஸ் கட்சி அன்று. தங்கள் கட்சிக்கு அதிகாரம் பெறுவதற்காக ஸர்வாதிகாரக் கொள்கையை அனுஷ்டிப்பதின் மூலம், இந்தியா பரிபூர்ண தேசியத்வத்தை அடைவதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகளைக் காங்கிரஸ் தலைவர்கள் தொடர்ந்து தடை செய்திருக்கின்றனர். உருவான முயற்சிகளனைத்தையும் காங்கிரஸ் எதிர்க்காமலிருந்தால் இப்போதுகூட இந்தியா சுய ஆட்சி அடைந்து அனுபவித்துக்கொண்டிருக்கலாம்.

### பிரிடிஷ் முறை.

இந்தியாவின் எதிர்காலத்தைப்பற்றி பிரிடிஷார் கொண்டுள்ள கொள்கை தெளிவானது. அதாவது யுத்தம் முடிந்ததும், தனக்கு எது மிகவும் பொருத்தமானதென்று தோன்றுகிறதோ அந்த முறையிலுள்ள ஒரு ஸர்க்காரை பூரா ஸ்வதந்திரத்துடன் அமைத்துக்கொள்ளலாம். அதுவரையில் இந்திய அரசாங்கத்துடனும், நேசநாடுகளுடனும் ஒத்துழைக்கவேண்டும்.

அவ்வித சுயஆட்சியை அடைவதற்கான உறுதியை பிரிடிஷ் கவர்ன்மெண்டும் கொடுத்திருக்கிறது. இந்தவிதம் பிரிடிஷ் அரசாங்கமும், இந்திய மக்களும் ஒப்புக்கொண்ட பிறகு, சுய ஆட்சிக்கான பூர்ண சந்தர்ப்பம் கொடுக்கப்படும். ஆகவே வெற்றி கிட்டியதும், இந்தியர்களாலேயே இந்திய அரசாங்கம் இணைக்கப்படும். பிரிடிஷ் பார்லிமெண்டும், பிரிடிஷ் மக்களும் கொடுத்த உத்தரவாதங்களை இந்தியர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றனர் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். வரும்காலம் தீர்மானிக்கப்படாததால் இந்திய மக்கள் எதிரிகளை எதிர்க்க மனங்கொள்ளவில்லையென்று காங்கிரஸ் தலைவர்கள் சொல்லுவதை உண்மையென்று இந்திய அரசாங்கத்தார் நினைக்கவில்லை.



### காங்கிரஸ் கொள்கை.

பிரிடிஷார் நல்லுணர்ச்சியோடு வெளியேறிவிட்டால் தாத்காலிகமான சீரான அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி, அதன் பிறகு நேசநாடுகளுடன் சேர்ந்து ஆக்கிரமணநாடுகளை எதிர்த்து, சைனாவுக்கு உதவ ஹேதுவாகுமென்று காங்கிரஸ் தலைவர் கொண்டாடும் உரிமை நியாயமானதல்ல. இந்திய ஸர்க்கார் மறைந்த ஒன்றிரண்டு தினங்களுக்குள் ஒரு க்ஷணத்தில் வலுவுள்ள ஸர்க்கார் ஏற்படுமென்று சொல்லும் யோசனையையும் ஏற்கமுடியாது. இந்நாட்டில் தீவிரமான அபிப்பிராய பேதங்களிருக்கின்றன என்று அனுபவத்திலிருந்து தெரிகிறது. பொறுப்புள்ளவர்களுக்கு இதில் சௌஜன்யம் ஏற்படச்செய்வது நோக்கமாக இருக்கவேண்டும். இதை நீக்கவேண்டுமென்பதும் தற்போதைய இந்திய ஸர்க்காரின் ஆசையாக இருக்கிறது. இவ்வித பிரச்னைகளைக் கவனிக்காமல்போனால் உண்மையைக் கவனிக்காததாகும். பிரிடிஷ் ஸர்க்கார் வெளியேறி, வலுவான தாத்காலிக ஸர்க்கார் ஏற்படுவதற்கு இடையிலுள்ள அவகாசத்தில் எதிரிகளுக்கு ஓர் சந்தர்ப்பம் ஏற்படும். ஜனங்களிடையே ஆக்ஷேபனை கூறுகிறவர்களும் பலர் கிளம்புவார்கள். காங்கிரஸ் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் அது நேசநாடுகளையும், ருஷ்யாவையும், சைனாவையும், இந்திய வீரர்களையும் காட்டிக்கொடுத்ததாகும். காங்கிரஸைப் பின்பற்றாதவர்களையும் காட்டிக் கொடுத்ததாகும். ஆனால் இது பிரிடிஷ் இந்தியாவிலும், இந்திய ஸமஸ்தானங்களிலும் உண்டாகி யுத்தத்தில் அதிக சேவையைச் செய்திருக்கிறது.

### தற்போதைய அரசாங்கம்.

இன்று இந்தியாவிலே வலுவுள்ளதாகவும், முன்னிருந்ததைவிட அதிகப் பிரதிநிதிகளுள்ளதுமான ஸர்க்கார் இருக்கிறது. இப்போதுள்ள ஸர்க்காரில் உத்தியோகப்பற்றற்றவர்கள் இருக்கின்றனர். இந்த நெருக்கடியான சமயத்தில் இத்தகைய ச்வால் விடுக்கப்பட்டிருப்பதற்காகச் ஸர்க்கார் மிகவும் வருந்துகின்றனர். ஆனால், தயை தாக்ஷிண்யமின்றி, இந்தியாவைப் பாதுகாத்து யுத்தம் செய்வதில் இந்தியாவின் சக்தியை பராமரித்து இந்தியாவின் நலன்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஸர்க்காருக்கிருக்கிறது. இப்போது காங்கிரஸ் கட்சி விடுத்திருக்கும் சவாலை முன்விட்டு இந்திய ஸர்க்கார் தனது கடமையை உறுதியுடன் செலுத்தும். யுத்த முயற்சிக்கு எதிரான தடைகளையும், இதர அபாயங்களையும் தண்டிக்கும்படியான நிலைமை ஏற்படுமுன்பாகவே ஸர்க்கார் அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பார். ஸர்க்காருடைய கடமை தெளிவு. நிலைமையைச் சமாளிக்க ஸர்க்காருடன் சகல ஜனங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று ஸர்க்கார் வற்புறுத்துகின்றனர்.

## (II)

## மிஸ்டர் எல். எஸ். அமெரியின் ஒலிபரப்பு,

### (ஆகஸ்டு 9.)

"இந்தியாவில் உடனே பிரிடிஷ் ஆட்சி மறையவேண்டும்" என்றும், இக்கோரிக்கைக்கு இணங்கத் தயாராக இல்லாவிட்டால் இந்தியாவிலுள்ள தற்கால கவர்ன்மெண்டிற்கு விரோதமாகப் பெரியதொரு பொதுஜனப் போராட்டத்தை ஆரம்பிக்க, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்திருப்பதைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள்.

### கிரிப்ஸ் தூது.

இதனால் இந்தியாவின் உள்நாட்டு சமாதானத்திற்கு மட்டுமல்லாது நேச தேசத்தினர் மேற்கொண்டுள்ள முயற்சிக்கே அபாயம் விளையும்போலிருக்கிறது. இந்த பயமுறுத்தலின் காரணத்தையும், நோக்கத்தையும், அறிந்துகொள்ள

4-மாதங்களுக்கு முன்பு நிகழ்ந்தவற்றை கவனிக்கவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்போது ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸின் தூது பலிக்காமல் போனதாகச் சொல்லப்படுகிறது. இந்த வருணனை தவறுதலானது.

பிரிடிஷ் ஸர்க்காரின் பிரேரணைகளை ஜனநாயக மனோபாவமுள்ளவர்கள் எங்கும் உற்சாகமாக வரவேற்றார்கள். இப்பிரேரணைகள் தென்னாப்பிரிக்கா, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா இவை அனுபவித்து வருவதுபோன்ற வெளியாரது கட்டுப்பாடு எதுவுமற்ற பூரண ஸ்வதந்திரத்தையும் சுயேச்சையையும் இந்த யுத்தத்திற்குப் பிறகு பெற இந்தியருக்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பதாகக் கூறியது. இந்தியர்கள் தாங்களாகவே தயார் செய்துகொள்ளும் அரசியல் ஏற்பாட்டின்படி பிரிடனுக்குச் சரிசமமான ஸ்வதந்திரத்தையும், சுயேச்சையையும் பெற இந்தியாவுக்கு யுத்தம் முடிந்தபிறகு சந்தர்ப்பமளிப்பதாகத் தெரிவித்தது.

இதற்கிடையில் இந்தியத் தலைவர்கள் தங்களுள் கலந்துபேசி, இந்தியாவைத் தற்போதுள்ள அரசியலமைப்புக்குட்பட்டு ஆண்டு, அதன் யுத்த முயற்சிகளை நிறைவேற்றிவைப்பதற்கான பொறுப்புள்ள பதவிகளை ஏற்க முன்வரும்படி அழைக்கப்பட்டனர்.

கிரிப்ஸ் ராஜிப்பேச்சு முறிந்ததற்குக் காரணம் காங்கிரஸ் தலைவர்களது பிடிவாதமனோபாவமே அவர்கள் கொடுத்தால் எல்லாவற்றையும் கொடுங்கள், இல்லாவிட்டால் ஒன்றுமே வேண்டாம் என்ற மனோபாவத்துடனிருந்தார்கள். அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டை எவருக்கும் பொறுப்பில்லாத ஒரு இந்திய ராஜீயவாதி கோஷ்டியிடம் ஒப்புவித்துவிட வேண்டுமெனக் கோரினர்.

இவ்வாறு செய்வது ஜனநாயக முறைக்கு மாறாக இருக்கும். இது இந்தியாவிலுள்ள 9½ கோடி முஸ்லீம்களாலும்சரி, வேறு பல பகுதியினராலும்சரி, ஏற்கக்கூடியதாக இராது.

## யுத்த முயற்சிக்கு ஆபத்து.

பிரிடிஷ் பிரேரணைகளை நிராகரித்தது இந்தியாவில் பொதுமக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை உண்டுபண்ணியது. காங்கிரஸ் காட்டும் வழியில் ஜனங்களுக்கிருந்த நம்பிக்கை வெகுவாகப் போய்விட்டது.

பொதுமக்களின் ஆத்திரத்தைக் கிளப்பவும், தாமும் தமது சகாக்களும் இழந்த கௌரவம் தங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்படி செய்யவும், பிரிடிஷ் அடக்குமுறையை எதிர்த்து நிற்கும் இந்தியாவின் ஸ்வதந்திர வீரர்கள் தாங்கள்தான் என்று நினைத்து தங்களிடமே ஜனங்கள் அனைவரும் கவனஞ் செலுத்தும்படி செய்வதற்காகவும் ஸர்க்காருடன் பகிரங்கமாகப் போராட்டத்தைத் துவக்கத் தீர்மானங் கொண்டிருந்தார். இந்தக் கடைசி முயற்சியின் உண்மையான அர்த்தம் இதுதான்.

காங்கிரஸ் தலைவர்கள் மிக்க புத்திசாலிகள். அராஜகமின்றி தற்கால கவர்ன்மெண்டை ஒழிக்க முடியாதென்பது அவர்களுக்குத் தெரியும். சட்ட ரீதியான முறையில் கவர்ன்மெண்டை சிருஷ்டிக்க முடியுமென்பதில் அவர்கள் நம்பிக்கைக் கொண்டிருந்தால் அவர்கள் அந்த கவர்ன்மெண்டை யாரிடம் ஒப்படைக்கப்படுமென்பதை முன்னதாகவே இந்தியாவுக்குத் தெரிவிக்கவேண்டும். இதுதான் அவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய வழி என்பது வெளிப்படை.

காங்கிரஸ் கோரிக்கை உண்மையில் கவலையளிக்க வல்லதில்லை, அதனைப் பெரிதாகப் பொருட்படுத்த முடியாது. ஆனால் காங்கிரஸ் எடுக்கத் தீர்மானித்திருக்கும் நடவடிக்கையே உண்மையில் கவலை அளிக்கத்தக்கதாகும். இதற்காகச் சிறிதுகாலமாக அவர்கள் முஸ்தீப்பு செய்து வந்திருக்கிறார்கள்.



இதற்காகக் கைத்தொழிற்சாலைகளிலும், வியாபார ஸ்தலங்களிலும், நிர்வாக ஸ்தாபனங்களிலும், நியாயஸ்தலங்களிலும் பள்ளிக்கூடங்களிலும், வேலை நிறுத்தங்கள் உண்டாகுமாறு தூண்டுதல், போக்குவரத்துகளையும் பொதுஜன ஸர்வீஸுகளையும் தடைப்படுத்தல், தந்தி டெலிபோன் கம்பிகளை அறுத்தல், துருப்புகளையும் துருப்புகளுக்கு ஆள் சேர்க்குமிடங்களையும் மறியல் செய்தல் போன்ற செயல்களையும் செய்ய முஸ்தீப்பு செய்யப்பட்டிருந்தது. இவையெல்லாம் அஹிம்சா முறையில் நடைபெறுமாறு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் முன் அனுபவங்களிலிருந்து ஆத்திரமுற்ற கூட்டத்தின் அஹிம்சா வேலைகளால், எப்படி சுலபமாக பயங்கரச் செயல்களும், கலவரங்களும் ரத்தஞ் சிந்துதலும், நிகழக்கூடுமென்பது எங்களுக்குத் தெரிந்திருக்கிறது.

காங்கிரஸ் நடத்த உத்தேசித்துள்ள இயக்கம் வெற்றிபெற்றால் தளவாட உற்பத்தியும், விமானக்கூடங்களை அமைக்கும் வேலையும் நின்று இந்தியாவின் யுத்த முயற்சி அடியோடு ஸ்தம்பித்துப்போய்விடும். ராணுவம் செயல் புரிய முடியாதபடி போய்விடும். இவ்வாறு செய்வது சீனாவுக்கும் ருஷ்யாவுக்கும் துரோகஞ் செய்ததாகும். இதனால் இந்தியாவே ஜப்பானியரால் அடிமை நாடாக்கப்படக்கூடும். காங்கிரஸ் தலைவர்கள் தங்களது கட்சியின் ஆதிக்கத்தைப் பெறுவதற்கான பொறுப்பற்ற விருப்பத்தில் கண்மூடித்தனமாக இத்தகைய நிலைமைகள் ஏற்படும்படி செய்யத் தயாராக இருக்கின்றனர்.

இந்த அறைகூவுதலும் ஆபத்து மேற்பட்டிருக்கையில் இந்திய ஸர்க்கார் காங்கிரஸ் இயக்கம் வலுப்பெற ஆரம்பிக்கு முன்பு துரிதமாகவும் உறுதியாகவுமுள்ள நடவடிக்கையை எடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். இக்கடமையைத்தான் அவர்கள் செய்திருக்கிறார்கள். தடை நடவடிக்கை எடுக்க எவ்வளவோ ஏராளமாக ஆதாரமிருக்கிறது. ஆனால் இந்திய ஸர்க்கார் பெரிதும் தடை நடவடிக்கையே எடுத்து வருகிறார்கள்.

ஸர்க்கார் செய்த காரியம் என்னவென்றால் மிஸ்டர் காந்தியையும், அவரது சகாக்களையும் தனித்து இருக்கும்படி செய்துவிட்டார்கள். இந்தியா எங்கும் இவர்கள் கொந்தளிப்பை உண்டாக்க முடியுமென்று நம்பினார்கள். பெரிய நாச வேலைக்காரர்களிடமிருந்து வெடிமருந்து போன்றுள்ள பொதுமக்களுக்குள்ள தொடர்பு என்ற திரியைக் கத்தரிக்கப்பட்டது. இந்தியா கவர்ன்மெண்டார் உடனே உறுதியான நடவடிக்கை எடுத்துக்கொண்டதால் அவர்கள் இந்தியாவையும் நேசதேசக் கட்சியையும் பெரிய பெரிய விபத்தினின்று காத்திருக்கிறார்கள். இன்னும் சிறிது தொல்லையிருக்கலாம். ஆனால் இதற்குள் நம்பிக்கையுடன் பேச முடியாது. ஆனால் இத்தொல்லையானது இந்திய ஸர்க்கார் போலீஸையும் கோர்ட்டுகளையும் கொண்டு சமாளிக்க முடியாததாக இராதென்று நான் நம்புகிறேன்.

இந்தியா கவர்ன்மெண்டிலுள்ள 15 நிர்வாக சபை மெம்பர்களில், 11 பேர் இந்தியர்கள். இந்தப் பிரச்னையில் இவர்களை இந்தியாவிலுள்ள நிதான புத்தியும் பொறுப்பும் வாய்ந்த ஸ்திரீ புருஷர்களில் மிகப் பெரும்பான்மையோர் ஆதரிக்கிறார்கள்.

உலக வெற்றி ஏற்படும்போது இந்திய ராஜ தந்திரிகளுக்கு இந்தியாவில் சமாதானத்துடனும், ஒற்றுமையுடனும் வாழவும், பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திலும் உலகிலுமுள்ள ஸ்வதந்திர நாடுகளுள் தங்களுக்குரிய அந்தஸ்தைப் பெறவும், கூடிய அரசியலை இந்தியாவுக்குத் தயாரிக்கச் சந்தர்ப்பமிருக்கும்.

# தேசிய யுத்த முன்னணி.

## வேண்டுகோளும் எச்சரிக்கையும்.

I

### வியாபாரிகள் கவனிக்கவேண்டியது.

உங்களில் சிலர் சுயநலம் கருதி, பிரகிருதமேற்பட்டிருக்கும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அதிக லாபமடைய நினைப்பதால் பொதுஜனங்களுக்கு ஏற்படும் சிரமம் அதிகமாய் விட்டது. சாமான்களைக் கட்டிப்போட்டு, அல்லது விலைவாசிகளை உயர்த்தி அதிக துன்பத்தை விளைவிக்கிறார்கள். இவர்கள் கொடிய முறைகளால் அதிக லாபம் சம்பாதிக்க முயலுவதால் தேசத்தின் உள் நாட்டு நிலை தளர்ந்து போகிறது.

நாம் கடைகளிலும், சந்தைகளிலும், ஸ்திரீ, புருஷர்கள் அதிக விலை கொடுத்து உணவுப் பண்டங்களை வாங்கமாட்டாமல் திகைத்துப் போய் நிற்பதை தினசரி பார்க்கிறோம். இருந்தாலும், வேறு கதியில்லாது வியாபாரியின் கல்மனதை ஒரு அத்தியாயம் வைதுவிட்டு சாமான்களை வாங்கிச் செல்லுகிறார்கள். இந்த இழிவான, நிலைமை மேலும் கெட்டுப்போகுமுன் எச்சரிக்கை செய்யவேண்டியது அவசியம்.

ஒரு பெரும் யுத்தத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். கொள்ளையடிக்கும் நாடுகள் கொடிய ஆயுதங்களோடு நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. நாம் எவ்வளவுக்கெவ்வளவு அவர்களை எதிர்த்து நிற்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது வீடு வாசல்கள் பத்திரமாக இருக்கும். அதற்காக ஆயுதங்களைத் தயார் செய்யவேண்டும். நமது சிப்பாய்களுக்கு உணவு அளிக்கப்படவேண்டும். இவர்களுக்கு உணவு தேவை. மற்றவர்களான நமக்கும் உணவு தேவை. ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் பேராசை கொண்ட சில வியாபாரிகள் சாமான்களைக் கட்டிப்போட்டு யாவரையும் பட்டினி போடுவதா, அல்லது தேசசேவைக்கு வாய்த்த இந்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு முன் வருவதா, என்பதை சற்று யோசிப்பார்களானால் அதிக லாபம் சம்பாதிப்பது என்பது தேச துரோகம் என்று விளங்கும். இவர்கள், தங்கள் ஸ்வதந்திரத்தையே விற்பனை செய்கிறவர்களாக ஆவார்கள். காசுக்கு ஆசைப்பட்டு தேசத்தையும், தேச மக்களையும், விற்பதாக ஆகும். தீர ஆலோசித்து, தவறுதலாக நடந்துகொள்ளும் வியாபாரிகளுக்கு இதன் விபரீதத்தை எடுத்துரையுங்கள்.

மேலும் அரசாங்கத்தாருக்கு இதெல்லாம் தெரியும். விலைவாசிகளை முதற்படியாக திட்டம் செய்திருக்கிறார்கள். அதிக விலை கேட்கும், வியாபாரிகளை ரிபோர்ட்டு செய்யும்படி பொதுஜனங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மேல் நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளலாம்.

II

### பொதுஜனங்களுக்கும் ஒரு வார்த்தை.

விற்பதும், வாங்குவதும் ஒரே நடவடிக்கைதான். உங்கள் உரிமைகளின்படி நீங்கள் நடந்துகொண்டால் வியாபாரி உங்களை எதிர்க்க முடியாது. நீங்கள் வாங்காவிட்டால், கடைக்காரன் விற்பனை செய்ய முடியாது. உள்ள விலைக்கு மேல் வியாபாரி விலை கேட்டால் 'நீங்கள் அதை கொடுக்க மறுக்கலாம். சாமானைக் கொடுக்க மறுத்தானாகில் போலிஸ்காரரிடமோ, மாஜிஸ்திரேட்டாரிடமோ, ரெவினியூ இலாகா அதிகாரிகளிடமோ, ரிபோர்ட்டு செய்யலாம். இந்த சந்தர்ப்பத்தில் மௌனம் சாதிப்பது குற்றமாகும். நடக்கிறபடி நடக்கட்டுமென்றும் இருக்கக்கூடாது.



வாங்குகிறவர்கள் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். இதிலிருந்து சீக்கிரத்தில் மாறுதலேற்படும். இதிலிருந்து வியாபாரிகள் தங்களுடைய நிலைமையை அறிந்து ஜன சமூகத்துக்கு சேவை செய்வார்கள். தாங்கள் நினைத்தபடி விற்பது நின்றுவிடும்.

# வார யுத்தச் செய்திகள்.

### 8—8—42-லிருந்து 14—8—42-வரை.

**ருஷ்யா.**—டான் நதியைக் கடந்து ருஷ்யச் சைனியங்களை ரோஸ்டவ்விற்கும் காகஸஸுக்கும் இடையில் கருங்கடலை நோக்கி அமுக்கிவிடலாமென்று ஜெர்மானியர் முன்னேறினர். தென்கிழக்கை நோக்கியும் மானிச் நதி வழியாக (Manich) நோவாரோஸிஸ்க் இருப்புப்பாதை வரையிலும் முன்னேறினார்கள். ப்ரலடார்ஸ்கி என்ற இடத்தில் பரவிக்கொண்டு கருங்கடல் பக்கமாயும், எண்ணெய் கிணறுகள் பக்கமாயும் சென்று அஸாவ்கடல் கரையிலுள்ள யேஸ்க் (Yeisk) என்ற இடம் வரை பரவிக்கொண்டு குஷெவ்ஸ்க், அரமாவிர், மெய்காப் முதலிய இடங்கள் வரை வியாபித்துள்ளனர். ருஷ்யர்களும் யேவா நதிக்கரையில் குஷெவ்ஸ்கிலும் ஸால்ஸ்க், பைலாயா கிளு, டிகோரெஸ்ட்ஸ்ச், கிராபோட்கின், அரமாவிர் என்ற இடங்களில் கடும் போர்களைச் செய்திருக்கின்றனர். கோடனிகோவா, செர்கெஸ்க், கிராஸ்னடார், மெய்காப் என்ற இடங்களில் இன்னும் சண்டைகள் நடக்கின்றன. வான் பாக்கின் சைனியங்களுக்கு இன்னும் ஆபத்து அதிகமாகத்தானிருக்கிறது. அஸாவ் கடலுக்கும், காகஸஸுக்கும் இடையில் ஏராள உலோகங்களும், விவசாய சாமான்களும் கிடைக்கின்றன. இங்குதான் மெய்காப், அரமாவிர், கிராஸ்மடார் எண்ணெய் கிணறுகளும் நோவாரோஸிஸ்க் கப்பல் தளமும் இருக்கின்றன. காகஸஸ் அடிவாரத்திற்கு ஜெர்மானியர் வந்திருக்கின்றனர். அரமாவீருக்கு 75 மைல் தூரத்தில் செர்காஸ்கில் ஜெர்மானியர் சண்டை செய்கின்றனர்.

டான் வளைவில், டிமோஷென்கோ ஸ்டாலின்கிராட்டிற்கு அருகில் கிளடாகாயாவிலிருந்து கலாக் வரையில் 60 மைல் முனையில் எதிர்த்து நிற்கிறார். இதனால் நகருக்கு நேரான ஆபத்து ஏற்படாமல் செய்யப்பட்டிருக்கிறது. இயற்கைப் பாதுகாப்பாக சிறு மலைகள் அமைந்திருக்கின்றன. மீண்டும் தெற்கே ஸிம்லியான்ஸ்காயாவில் புகுந்து வான் பாக் கோடிலினிகோவோ என்ற இடத்தை நோக்கி முன்னேறுகிறான். ஸ்டாலின்கிராட்டுக்கு இனி ஆபத்து ஏற்படலாம். இங்கே ருஷ்யர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்கின்றன.

வாரனேஷில் ருஷ்யர்கள் முன்னேற்றத்துடன் இருக்கின்றனர்.

மற்ற முனைகளிலும் 'எதிரிக்கு அவகாசத்தைக் கொடுக்காமல் லெனின்கிராட் முதல் டான் பள்ளத்தாக்கு வரையிலும்' சண்டை நடக்கிறது. வால்காவ் முனையிலும், லெனின்கிராட் வாயிலிலும், பிரயான்ஸ்கிலும், மாஸ்கோ முனையிலும் சிறிய சண்டைகள் நடக்கின்றன.

ஸோவியத் சண்டைக் கப்பல்கள் மூன்று எதிரி போக்குவரத்துக் கப்பல்களை கருங்கடலிலும், பாரென்ட் கடலிலும் மூழ்கடித்தன..

ருஷ்யக் கருங்கடல் கப்பற்படை ஜெர்மனிக்கு வசமான துறைமுகத்தைத் தாக்கியது. யுத்த சாமான்களடங்கிய ஜெர்மன் கப்பல்களையும் தாக்கியது.

**எகிப்து.**—'முஸ்தீப்பு செய்துகொண்டும், சுரங்க வெடிகளைப் பாவிக்கொண்டும், பீரங்கிகள், விமான எதிர்ப்பு பீரங்கிகளை உபயோகித்துக்கொண்டும்' ரோமல் இருந்துவருகிறான். இருதிறப்பாளர்களும் முஸ்தீப்பு செய்துவருகின்றனர். சிறிய விமானத் தாக்குதல்களும் ஏற்பட்டன. மத்தியதரைக்கடலில் சென்ற வாரத்தில் 10,000 டன் இடையுள்ள அச்சுநாட்டுப் போக்குவரத்துக் கப்பலை அமெரிக்க விமானங்கள் தாக்கி, பெங்காஸியையும், எல்டாபாவையும் தாக்கின.

**சைனு.**—லின்ச்வானையும், ஹூவானையும் சீனர்கள் தாக்கினார்கள். பூ (Fu) நதிக்கரையில் இயர்ஹில் என்ற இடத்திலும், வடமேற்கிலும் தாக்குதல் ஏற்பட்டது. ஸின் நதிக்கரையில் ஹ்வாங் சிஙபுவையும், யாங்சியாபுவையும், ஸூங்யாங், குவாங்புங் இவைகளைத் தாக்கி, சிங்ஸீன்புங்கைப் பிடித்தனர். இது லின்ச்வானுக்கு 35 மைல் தூரத்திலிருக்கிறது.

அமெரிக்க விமானங்கள் ஹாங்கவ், காண்டன், ஹீபாங் முதலியவைகளைத் தாக்கின. ஹீபாங்கில் 4,000 டன் எதிரி ஸ்டீமர் தாக்கப்பட்டது.

**பர்மா.**—வடமேற்கு பர்மாவில் மியிட்டா பள்ளத்தாக்கில் சில லக்ஷியங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கியது. கலீவாவிற்கு அருகில் கட்டடங்களையும் லாரிகளையும் தாக்கின.

**பஸிபிக்.**—லோகி, பூகா, போகன்வில்லி, ஜாடல்கனுர், முதலியவைகளுடன் டெனின்பார், கி, அரு தீவுகளையும் ஜப்பானியர் பிடித்துள்ளனர். ஸாலமன் தீவுகளில் லோகியை அமெரிக்கப்படை தாக்கியது. ஒரு அமெரிக்க க்ரூயிஸர், தாக்கப்பட்டது. மற்றும் இரண்டு க்ரூயிஸர்களும், இரண்டு நாசகாரிகளும், ஒரு போக்குவரத்துக் கப்பலும் தாக்கப்பட்டது. அட்மிரல் கிங் என்பவர் லோகியிலிருந்து ஜப்பானியரைப் பரவாமல் செய்வது நோக்கம் என்றார். இதுவே நேசநாடுகள் பஸிபிக்கில் செய்த முதல் சண்டையாகும். ஸாலமன் தாக்குதல் மீண்டும் நடைபெறுகிறது.

ஸாலமூவா, காஸ்மாடா, ரபால் முதலியவைகளைத் தென்மேற்கு பஸிபிக் விமானப்படை தாக்கியது.

இதே சமயத்தில் அலூஷியன் தீவில் கிஸ்காவை அமெரிக்க விமானங்கள் தாக்கின.

**பிரிடிஷ் விமானப்படை.**—ரூரில், ஆஸ்னுப்ரக்கையும் முதலியவைகளை தொழிற்சாலை லக்ஷியமான மெயின்ஸையும், ரைன் பிரதேசத்தில் ரயில் போக்குவரத்தையும், லெஸ்படான் காப்ளன் கப்பற்தளம், லாஹாவர் முதலியவைகளைத் தாக்கியது. இங்கிலாந்திலும் விமானத்தாக்குதல் ஏற்பட்டு கிழக்கு ஆங்கிலியாவில் பைத்தியக்காரர்களுக்கு வைத்தியம் செய்யும் ஆஸ்பத்திரி தாக்கப்பட்டது.

**பலவகைப் பட்டவை.**—1. (க்ரோஷியா) ஜாக்ரப்பில் 700 பேர் ரகசியப் போலீஸைத் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கொளுத்தவும் பட்டனர்.

2. ரகசிய சூழ்ச்சிக்காக நீயூ யார்க்கில் 6 நாஸிகள் மின்சாரத்தால் கொல்லப்பட்டனர்.

3. மே மாதத்தினுள் மதராஸில் 1,746 பேர்கள் யுத்த சாமான்களைச் செய்ய தொழிலாளிகள் முன்வந்திருக்கின்றனர். மற்ற மாகாணங்களைக் காட்டிலும் இது அதிகம்.

4. அமெரிக்க யுத்தச் செலவு ஒரு ஸெகிண்டிற்கு 1,776 டாலர் ஆகிறது.

5. ஏப்ரல்மீ 20உ ஜெட்டாவில் பிரிடனுக்கும் ஸாடி அரேபிய அரசாங்கத்திற்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. பிரிடன் கோவீட் ஷெயிக்கின் சார்பாக இருந்தது. பரஸ்பரம் சிநேகம் ஏற்படுத்தப்பட்டது.

6. யூ படகு நடமாட்டத்தின் பயனாக விமானமேற்றும் பிரிடிஷ் கப்பல் ஈகிள் மத்தியதரைக்கடலில் மூழ்கியது. இது 22,600 டன் நிறையுள்ளது. அங்கிருந்த யூ படகும் மூழ்கடிக்கப்பட்டது.

7. இந்தியாவில் நெருப்பு அணைக்கும் கோஷ்டிகளைத் தயார் செய்ய 59 பிரிடிஷ்காரர்கள் இந்தியாவிற்கு வந்திருக்கின்றனர்.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—8—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமானப்போர்—பிஸ்கே குடா (Bay of Biscay). | | | 1 விமானம். |
| | இரவில்.—விமான எதிர்ப்புகள்—டச்சு (Dutch) கடற்கரையோரத்தில். | | | |
| | சுரங்கவெடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவுபார்த்தல்—யுத்தப்பிரதேசம் முழுவதிலும். | | | |
| | விரோதி டாங்கிகள், கவசம்பூண்ட வண்டிகள்—விரோதி சைனியங்களுக்குப் பின்புறத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | கம்பியில்லாத் தந்தி ஸ்தாபனம், முக்கிய கப்பல்துறை—ஆக்கியாப் (Akyab). | தந்தி ஸ்தாபனம் நாசமாக்கப்பட்டது. | நஷ்டமில்லை. | |
| | **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியத் தலைமை ஸ்தாபனங்கள்—லின்ச்வான் (Linchwan). | | | |
| | நதிப் போர்முனை—பூ (Fu) நதி முழுவதிலும். | | | |
| | இரண்டு ஜப்பானியக் கப்பல்கள்-பூ(Fu) நதியில். | | | |
| **4—8—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—ரூர் (Ruhr) பிரதேசத்தில். | | | |
| | இருப்புப்பாதைகள், மற்ற லக்ஷியங்கள்-ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | 2 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி வண்டிகளின் கூட்டம்—எல்அலமீன் (El Alamein) போர் முனையில் மத்தியபாகத்தில். | | | |
| | விமான எதிர்ப்புகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விரோதிக் கப்பல்கள்—பார்டியா (Bardia)வுக் கருகாமையில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**4—8—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச்சண்டைகள்—போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.)

வேவுபார்த்தல்—தென்மேற்கு பஸிபிக் (Pacific)கிலுள்ள விரோதிப் பிரதேசம்.

**5—8—42.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

துறைமுகப் பிரதேசம், இரண்டு கப்பல்கள்—டொப்ரூக்(Tobruk).
மேர்ஸா மாட்ரு (Mersa Matruh).
விரோதி டாங்கிகள், மற்ற மோட்டார்கள்—யுத்தப் பிரதேசத்தில்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச்சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—யுத்தப் பிரதேசம் முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**6—8—42.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

கவசம்பூண்ட வண்டிகள் வேவுபார்த்தல்—எல்அலமீன் (El Alamein) போர் முனையில் தெற்குப் பகுதியில்.
விமானப்போர்—யுத்தப் பிரதேசத்தில். — 1 விமானம்.
கப்பல்கள், துறைமுகம்—டொப்ரூக் (Tobruk).
விரோதி ஸ்தாபனங்கள், ஸப்ளை போக்குவரத்து—விரோதி சைனியங்களுக்குப் பின்னால்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள்—போர்முனை முழுவதிலும்.

**சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விமான நிலயம்—டின்ஹோ(Tienho), கான்டனு (Canton)க் கருகாமையில் — 10 விமானங்கள்.



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**7—8—42.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

விரோதிக்குச் சொந்தமான படகுகள்—ஸிடி பரானி (Sidi Barrani)யிலிருந்து மெர்ஸா மாட்ரூ (Mersa Matruh).
விரோதிக் கப்பல்கள்—ஸிடிபரானி (Sidi Barrani)க்கு அருகாமையில். — 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. மற்றவை சேதமாயின.
விமானச் சண்டைகள்—போர்முனை எங்கும். — 1 விமானம்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—பூரா போர்முனை எங்கும்.

**சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விமான நிலயம்—கான்டனு(Canton)க் கருகாமையில்.
ஜப்பானியர்கள் தங்குவதற்கான கட்டடங்கள், கப்பல் துறைகள், ஏற்றுமதி இறக்குமதி செய்யுமிடங்கள்—கான்டன் (Canton) பிரதேசத்தில்.

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்)

விமான நிலயங்கள், விமானம் பறக்குமிடங்கள்.—லே (Lae).
விமான நிலயம்.—ஸலாமுவா (Salamaua).
விரோதிக் கட்டடங்கள், இன்னும் மற்ற லக்ஷியங்கள்.—பூனு (Buna), கொக்கோடா (Kokoda).

**தூரக்கிழக்கு—நியூ பிரிடன்(New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

வானக்கனு (Vanakanu), விமான நிலயம்.—ராபால் (Rabaul). — 1 விமானம். — 7 விமானங்கள்.

**ஸாலமன் (Solomon) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

டுளகி (Tulagi) பிரதேசத்தில்.

**அலூஷியன் தீவுகள் (Aleutians)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

கிஸ்கா (Kiska).

**8—8—42.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 8—8—42. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு விரோதி கப்பல்கள்.—ஸிடிபராணி (Sidi Barrani). | | | |
| | டோப்ருக் (Tobruk) இவைகளுக்கருகாமையில். | | | |
| | விரோதிக்குச் சொந்தமான வண்டிகள், மற்ற லக்ஷியங்கள்.—எல் அலமீன் (El Alamein) பகுதியில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை எங்கும். | ஜுலை 1 முதல் ஜுலை 8 வரை முடிவான வாரத்திற்கு. | 205 விமானங்கள். | 400 விமானங்கள். |
| | **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லின்ச்வான் (Linchwan). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | |
| | விரோதி கட்டடங்கள்.—கொக்கோடா (Kokoda). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | ஒரு விமான நிலயம்.—காஸ்மாடா (Gasmata). | | | |
| | விமான நிலயம்.—ராபால் (Rabaul). | | | |
| | **வடமேற்கு பஸிபிக் (N. W. Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | வேவு பார்த்தல்.—விரோதிப் பிரதேசங்களில். | | | |
| | **தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டுளகி (Tulagi) பிரதேசம். | | | |
| | கிஸ்கா (Kiska). | | | |
| 9—8—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—எஃகு தொழிற்சாலைகள், ரயில்வே தொழிற்சாலைகள், தாமரம், அலுமினியம், சோதக சாலைகள்.—ஆஸ்னப்ருக் (Osnabruck). | | | |
| | பல லக்ஷியங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | கப்பல் துறைகள்.—லெஹாவர் (Lehavre). | | 1 விமானம். | |
| | விமான தளங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—8—42. (ஞாயிற்றுக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கிழக்கு நோக்கிச் செல்லும் கப்பல்கள்.—பார்டியா (Bardia)வுக்கருகாமையில். | 1 கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. | | |
| | துறைமுகமும், கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமானமிறங்கும் இரண்டு இடங்கள், சிதறுண்ட விமானங்கள்.—எல்டாபா (Eldaba). | | | |
| | விரோதிகளின் கவசம்பூண்ட மோட்டார்கள், டாங்கிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப் போர்கள், தரையிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டுளகி (Tulagi) பிரதேசம். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஸலாமுவா (Salamaua). | | | |
| | **நியூ பிரிடன் (New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராபால் (Rabaul). | | | |
| | **இந்தோ-சைனு (Indo-China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | கப்பல்கள், கப்பல்துறை வசதிகள்.—ஹேய்பாங் (Haiphong). | | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 4—8—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள் இங்கிலாந்தில் (England). | சொற்பச் சேதம். சிலர் கொல்லப் பட்டனர். | 6 விமானங்கள். | |
| | (பூரா விபரமும் தெரியவில்லை.) | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **5—8—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| **6—8—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| **7—8—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிற்பகல்.—மூன்று இடங்கள்-இங்கிலாந்தின் (England) தென்மேற்கு ஸ்தானம். | சொற்பச் சேதம். | | |
| | சாயரக்ஷை.—ஒரு இடம்—ஸ்காத்லாந்தி (Scotland)ன் வடக்குக் கடற்கரை. | | | |
| | இரவில்.—கிழக்கு, தென்கிழக்குக் கடற்கரை ஜில்லாக்கள். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | குப்ரா—(Kufra) (லிபியா பாலைவனத்தில் செழிப்பான நிலம்). | | | |
| **8—8—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிற்பகல்.—அங்குமிங்கும் சில இடங்கள்—ஹோம் கவுண்டீஸ் (Home Counties), தென்கிழக்கு இங்கிலாந்து (England). | | | |
| | சாயரக்ஷை ஹோம் கவுண்டீஸ் (Home Counties). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| **9—8—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இரண்டு இடங்கள்—இங்கிலாந்தின் தெற்குக் கடற்கரை. | | | |
| | சாயந்திரம்.—வடக்கு, கிழக்கு இங்கிலாந்து (England). | | 1 விமானம். | |
| | இரவில்.—வடகிழக்குக் கடற்கரைப் பட்டணம். | | | |
| | ஒரு இடம்—வடமேற்கு இங்கிலாந்து (England). | | 3 விமானங்கள். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **9—8—42.** (ஞாயிற்றுக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **பாலஸ்தீனம் (Palestine)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஹெய்பா (Haifa) (விமான அபாய அறிவிப்புகள் மட்டில்). | | | |
| **10—8—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)** (ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையிலும் வடமேற்கு இங்கிலாந்தி (England)லும். | சிலர் கொல்லப் பட்டனர்; சொற்பச் சேதம். | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**காங்கிரஸும் யுத்தமும்.** எதிர்பார்த்தபடி காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நாடு முழுவதும் கலகங்களேற்பட்டிருக்கின்றன. ஸர்க்கார் உடனே தீவிர நடவடிக்கையை எடுத்துக்கொள்ளாவிட்டால் இன்னும் அதிகமாகவே பரவியிருக்கும்.

தேசீய யுத்த முன்னணியில் சேர்ந்துள்ளோர் இவ்விஷயங்களை நன்குணர்ந்து ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்வது கடமையாகும்.

தேசீய யுத்த முன்னணியைப்பற்றி பலர் பலவிதமாக வியாக்யானம் செய்கின்றனர். சிலர் இதை ஒரு அரசியல் ஸ்தாபனமென்றும், காங்கிரஸுக்கு விரோதமானதென்றும், மற்றும் சிலர் இந்த ஸ்தாபனம் கிடையாதென்றும், இதில் தேசீயமாவது, யுத்தமாவது, முன்னணியாவது ஒன்றுமே கிடையாதென்கிறார்கள். இந்த அபிப்பிராயம் வெறும் பேச்சு சாமர்த்தியத்தைத் தெரிவிக்கிறதே தவிர அதில் வேறு ரசமில்லை. உண்மையைக் காணும்போது தேசீய யுத்த முன்னணியென்பது அரசியல் ஸ்தாபனமேயில்லை. அரசியலுக்கும், இதற்கும் சம்பந்தமே இல்லை. தேவையேற்பட்டு அதிலும் தலையிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் பின்வாங்காது.

வி வி வி வி வி வி வி

**ரகசிய சூழ்ச்சி.** தேசம் பூராவும் கிளம்பிய சூழ்ச்சியை அரசாங்கத்தார் அடக்கியிருக்கிறார்கள். மிஸ்டர் L. S. அமெரி ஞாயிற்றுக்கிழமை ஒலிபரப்பும்போது, தொழிற்சாலை, வியாபாரம் அரசாங்கம், சட்ட கோர்ட்டுகள், பள்ளிக்கூடம், கலாசாலைகள், முதலியவைகளைத்

தடுப்பது போக்குவரத்து முதலியவைகளைத் தடுப்பது, தந்தி, டெலிபோன் கம்பிகளை அறுப்பது, துருப்புக்களைக் கலைப்பது முதலியவைகளில் ஈடுபடுவதும் அதில் ஒரு அலுவலாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் முழு யுத்த முயற்சியையும் கெடுத்து, யுத்த சாமான்கள், விமான தளங்கள் முதலியவைகளைச் செய்யவிடாது தடுப்பதும் ஒரு லக்ஷியம்தான். இதனால் ருஷ்யாவையும், சீனாவையும் காட்டிக்கொடுத்த மாதிரி ஆகிறது. ஜப்பானியரிடம் இந்தியாவைக் காட்டிக் கொடுத்த மாதிரி ஆகும்.

சனிக்கிழமை சபையோடுகூடிய கவர்னர் ஜெனரலும் மேற்படி காங்கிரஸ் தீர்மானத்தால் ஏற்படக்கூடிய ஆபத்தைப்பற்றி எடுத்துச்சொல்லி 'போக்குவரத்துகளைத் தடுப்பது, வேலைநிறுத்தம் செய்வது, அரசாங்கத்தில் வேலைக்காரர்களின் விசுவாஸத்தைக் குறைப்பது, பாதுகாப்பு முறைகளைத் தடுப்பது, சைனியத்தில் சேரவிடாமல் தடுப்பது, கலகம் செய்து அமைதியைக் கெடுத்து பொருளாதார வாழ்க்கையைக் கெடுப்பது முறைகளாகக் காணப்பட்டிருந்தன.

இவ்வளவும் கொஞ்சமும் எதிர்பார்க்காமல் வந்தமுடிவாகும். உண்மை சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. பம்பாயில் நடந்த விஷயங்களைப்பற்றிய தகவல் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

தாதரில் டிலக் பாலத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் பெருத்த கலகம் ஏற்பட்டது. நேற்றுகாலை பி. பி. அண்டு ஸி. ஐ. ரயில்வே ஸ்டேஷன் வாசலில் ஒரு பெரிய கூட்டம் கூடி ரயில் போக்குவரத்தைத் தடுப்பதற்கு முயற்சித்ததில் போலீஸார் அவர்களை உதைத்து வெளியே விரட்டினார்கள். தெருக்களில் நெடுக அடைப்புகள் போடப்பட்டன. இருந்தாலும், போலீஸார் மேல் கல்லெறி இருந்தது. தெருக்களிலிருந்த ஜனக்கூட்டத்தை கலைப்பதற்குமுன் இரண்டு தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்தாக வேண்டியிருந்தது. அதில் 23 பேர்களுக்கு காயம்.

அன்று பிற்பகலிலும், சாயந்திரத்திலும் நிலைமை மிகவும் மோசமாகவே இருந்தது. தாதரிலிருந்த கூட்டம் மாட்டுங்கா பக்கம் செல்ல ஆரம்பித்தது. போகும் வழியில் அவர்கள் தெருக்களிலுள்ள விளக்குகளை உடைத்துக்கொண்டு சென்றார்கள். இன்னும் ஸ்டேஷனுக்குள் வரும் ரயில் வண்டிகள்பேரிலும், அங்கிருந்து வெளியூர்களுக்குச் செல்லும் ரயில் வண்டிகள் பேரிலும் கல்லெறிப் பிரயோகம் நடந்தது. தந்திக் கம்பிகளையும் அறுத்தெரிந்தார்கள். மாட்டுங்காவிலுள்ள தபால் ஆபீஸில் ஏராளமாக கல்கள் வந்து விழுந்தன. தெருவிலிருந்த தபால் பெட்டி ஒன்று பலாத்காரமாகத் திறக்கப்பட்டு அங்குள்ள கடிதங்கள் தெருவில் சிதற அடிக்கப்பட்டன. ஏராளமாக மோட்டார் பஸ்கள் சேதமாக்கப்பட்டன. அவைகளிலுள்ள டிரைவர்கள் மோட்டார்களை விட்டு வெளியேறும் படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பிரைவேட் மோட்டார்கள் ஆங்காங்கு நிறுத்தப்பட்டன. போலீஸாரை ஏற்றிச்செல்லும் இரண்டு வண்டிகள் தீக்கிரையாகின.

தாதரிலுள்ள ரயில்வே ஸ்டேஷனைத் தீமூட்ட பிரயத்தனமிருந்தது. அம்முயற்சியை போலீஸார் தடுத்துவிட்டார்கள். ஆனால் ஸ்டேஷனுக்கு வெளிப்பக்கத்தில் இரண்டு பக்கங்களிலும் தீக்கள் மூட்டப்பட்டன. தொழிலாளிகள் வீட்டிற்குச் செல்லுகையில் பாதையில் அவர்கள் கலகக்காரர்களால் நிறுத்தப்பட்டார்கள். அவர்களுடைய குல்லாய்கள், கழுத்துக்குட்டைகள்யாவும் தீயில் போடப்பட்டன.

எல்லாக் கடைகளும் மூடப்பட்டன. முனிஸிபல் லாரி ஒன்று தீக்கிரையாயிற்று.

அதனால் கலகத்தை அடக்க போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியதாயிற்று. அதன் பயனாக சுமார் 60 பேர்களுக்கு காயமேற்பட்டு, ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்நியநாட்டு சாராயக்கடை பலாத்காரமாக உடைக்கப்பட்டு, சூறையிடப்பட்டது. தாத்காலிகமாக ரயில்வே



போக்குவரத்தில் தடையிடப்பட்டது. ரயில் வண்டிகளில் வந்த பள்ளிக்கூடத்துப்பையன்கள் அபாயச் சங்கிலியை இழுத்து விட்டார்கள். சௌபாத்தியில் பையன்கள் கூட்டம் கூடுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அதற்குள் ராணுவ அதிகாரிகள் அந்த இடத்தில் தகுந்த பந்தோபஸ்துடன் கூட்டம் கூடாமல் தடை செய்து விட்டார்கள்.

சாலையில் அநேக நெசவுத் தொழிற்சாலைகள் மும்மரமாக வேலைசெய்தன. ஆனால் அன்று பிற்பகலில் ஏராளமான தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆதலால் அநேக இடங்களில் ஆலைகள் மூடவேண்டியதாயிற்று. அதே மாதிரி ரயில்வே ஒர்க்ஷாப்புகளில் வேலைசெய்யும் தொழிலாளிகள் பிற்பகலில் வேலைக்கு வரவேயில்லை. போலீஸாரும், கவசம்பூண்ட பிரிடிஷ் துருப்புகளும் துப்பாக்கிகளுடன் தெருக்களில் பாராக்கொடுத்து வருகிறார்கள்.

காங்கிரஸ் தீர்மானம் தேசத்திற்கும் தேசீய யுத்த முன்னணியின் வேலைக்கும் செய்யப்பட்ட சவால் ஆகும்.

அந்த சவாலை ஏற்றுக்கொண்டு யாவரும் யுத்தத்தில் ஈடுபடவேண்டும். தேசாபிமானத்துடன் ஒத்துழைக்கவேண்டும். பொறுமை வேண்டும். பொது சத்துருவை எதிர்க்கவேண்டும்.

யுத்த முயற்சியைக் கெடுப்போரை அரசாங்கத்தார் கிள்ளியெறிந்து விடுவார்கள். மேன்மை தங்கிய பம்பாய் கவர்னர், பம்பாய் வாசிகளுக்கு பின்கண்ட எச்சரிக்கையை விடுவித்திருக்கிறார். தீவைப்பது, தாக்குவது, கொள்ளையிடுவது, சாமான்களை அழிப்பது, கல்லெறி, ரகசிய சூட்சி முதலியவை அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாழ்க்கை நீடித்திருக்க விடமாட்டேன். அமைதியை எப்படியாவது நிலைநாட்டுவேன். போலீஸ்காரர்களுக்கும், துருப்புகளுக்கும் உடனே எல்லாவித நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள உத்தரவு கொடுக்கப்பட்டிருககிறது என்றார்.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யா.** ஒரோஷிலாவைப் பிடித்தது ருஷ்ய நிலைமையில் ஒரு கட்டத்தைக் குறிக்கிறது. தன்படைகளை எதிரிகள் சூழ்ந்துகொள்ளாமலிருப்பதற்காக டிமோஷென்கோ தனது படைகளை டானெட்ஸ் வளைவிலிருந்து டான் வளைவிற்கு பின்வாங்கியிருக்கிறார். இந்த நிலையில் ஜெர்மன் துருப்புகள் டானுக்கு மேற்கே நாடு பூராவும் உலாவி வருகின்றன. டிமோஷென்கோ ஸ்டாலின்கிராட்டில் நின்றிருக்கிறார். அந்த இடத்தில் தாக்குதலை எதிர்பார்க்கிறார். வான் பாக் தெற்கு நோக்கி முன்னேறுகிறான்.

இதை ஜெர்மன் தலைமை அதிகாரிகள் பெரிய தந்திரமாகக் கருதுகின்றனர். ஆனால் வாரனேஷியிலிருந்து பெரும் தாக்குதலை எதிர்பார்த்தே ஜெர்மானியர் இவ்விதம் பயந்து கொண்டிருக்கின்றனர். டிமோஷென்கோ தெற்கிலுள்ள பிரதேசத்தை விட்டதும் ஸ்டாலின்கிராட்டை பலப்படுத்தவேயிருக்கலாம். மேலும் கூபான் பிரதேசத்தில் ஜெர்மன் டாங்கிகளைத் தடுக்கமுடியாது. ஆஸ்டிரகான், ஸரடவ், முதலியவைகளைப் பிடித்துக்கொள்ளலாம் என்ற எண்ணமும் இருக்கலாம். மெய்காப், கிரஸோனி, நோவோரோஸிஸ்க் முதலியவை போனாலும் இந்த யோசனையால் பாகு எண்ணெய்க் கிணறுகளைக் கைவசத்தில் வைத்துக் கொள்ளமுடியும்.

ஜெனரல் காஸ்போவின் படைகள் கூபான் பிரதேசத்தில் காகஸஸ்ஸை நோக்கிப் போகின்றன.

இதற்குள்ளாக ஸ்டாலின்கிராட்டை நோக்கி ஸிம்லியான்ஸ்காயாவிலிருநது ஜெர்மன் படைகள் போய்க்கொண்டிருக்கின்றன.

நிலைமை மோசமாக இருந்தாலும், அதிகக் கவலைக்கு இடமில்லை. காகஸஸ் என்பது இயற்கையான பாதுகாப்புள்ளது. இன்னும் ருஷ்ய ரிஸர்வ் படைகள் அழைக்கப்படவில்லை. டான்வளைவில் டிமோஷென்கோ எதிர்த்தே நிற்கிறார்.

வாரனேஷில் ருஷ்யர்கள் எதிர்த்து நிற்கின்றனர். வடக்கே ஸ்டாலின்கிராட்டில் எதிரி தற்காப்புப் போர் செய்துவருகிறான்.

ருஷ்யர்களுக்கு முன்பைவிட அதிகமாகவே தற்சமயம் உதவ நேசதேசங்கள் தயாராக இருக்கின்றன. லிபியப் போர் முனையையும் கவனிக்காது நல்ல டாங்கிகளைப் பிரிடன் தயார்செய்து அனுப்புவதாக அமெரிக்கப் பத்திரிகைகள் கூறுகின்றன.

வி வி வி வி வி வி வி

**எகிப்து.** சண்டையில் அமைதி நிலை காணப்படுகிறது. இருந்தாலும், அதை நம்புவதற்கில்லை. இருதிறப்பாளர்களும் புது தாக்குதலுக்குத் தயார்செய்கின்றனர். இதற்கிடையில் நேசதேச விமானப்படையும் கப்பற்படையும் ரோமலின் போக்குவரவுகளைக் கெடுத்துவருகின்றன.

பஸிபிக்கில் நேசதேசத் தாக்குதல் அலூஷியனிலும், ஸாலமனிலும் ஏற்பட்டன. இவைகளுக்கு ஏற்கனவேயே வெற்றிகிடைத்திருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**இரண்டாம் போர்முனை.** உண்மையை கவனிக்கும்பொழுது யுத்தம் நடக்கும் இடம் ஒரு முனையிலல்ல, ஒரு தேசத்திலல்ல, ஒரு கடலிலல்ல. ஆனால் பல முனைகளில் மூன்று கண்டங்களில், ஏழு கடல்களில் நடக்கிறது. ஆனால் 2-ம் போர்முனை யென்று கூறப்படுவதின் கருத்து நேசநாடுகள் ஐரோப்பாவின் மேற்கே இறங்கி ருஷ்யாவில் ஜெர்மன பளுவைக் குறைக்கச் செய்யவேண்டுமென்பதுதான்.

இந்த அபிப்பிராயம் புதிதானதல்ல. ருஷ்யா இதை ஏற்கனவேயே தேவையென்று குறிப்பிட்டிருக்கிறது. வாஷிங்கடனுக்கு மிஸ்டர் சர்ச்சில் சென்றபொழுது, பிரிடிஷ் அமெரிக்க அரசாங்கங்கள் இதை அங்கீகரித்திருக்கின்றன. இருந்தாலும், இதில் காணப்படும் அம்சம் என்னவெனில் பொதுஜனங்கள் இதில் அக்கறை செலுத்திவருகின்றனர். காமன்ஸ் சபையில்கூட இதைப்பற்றி சர்ச்சை செய்ய ரகசியக் கூட்டம் விரும்பப்பட்டது.

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் அக்கோரிக்கையை மறுத்துவிட்டார். ஏனென்றால் இவ்விஷயம் மிகவும் ரகசியமும், நுட்பமுமானது. ஆகஸ்டுமீ 8-ம் தேதி வெளிவந்த அமெரிக்க யுத்த அரசியல் அறிக்கை இதை ஆமோதிக்கிறது. 'இருமருங்கும் போரை நடத்தவேண்டுமென்று பொது ஜனங்கள் அபிப்பிராயம் கொள்வது பிரயோசனப்படாது.' ஜூலைமீ 29-ம் தேதி நியூஸீலாந்து கவர்னர் ஜெனரல் ஸர் ஸிரில் நியூஆல் வெல்லிங்டனில் சொன்னதாவது:—'இரண்டாம் போர்முனை ஏற்படக்கூடிய நாளை யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்துவந்தனர். ஆனால் அதற்கான சந்தர்ப்பத்தை நிர்ணயிப்பது நீங்களும், நானுமல்ல. ருஷ்யர்கள் விரும்பியது உதவி. அதற்காக ஐரோப்பாவில் நாம் வெறும் படையெடுப்பைச் செய்தால் மட்டில் போதாது. நமக்கு வெற்றியைத் தரக்கூடியதாக இருக்கவேண்டும்.'

ஜூலைமீ 29-ம் தேதி போலந்து பிரதம மந்திரியும், தளகர்த்தருமான ஸிகரோஸ்கி சொன்னதாவது:—'நேசதேசங்களின் தலைவர்கள் இரண்டாம் போர்முனையை மறந்துவிடவில்லை. நான் அதைப்பற்றி பேசியிருக்கிறேன். இரண்டாம் போர்முனை அவசியமென்பது அவர்களுக்கும் தெரிந்ததுதான். வெற்றியளிக்கக்கூடிய சந்தர்ப்பத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். உண்மையான விவரங்களைக் கொண்டுதான் இதைத் தீர்மானிக்கமுடியும்.' அதே தேதியில் வெளிவந்த டைம்ஸ் பத்திரிகை கூறியதாவது:—'பொதுக் கூட்டங்களைக்கொண்டு யுத்த தந்திரத்தை தீர்மானிக்க முடியாது. மேலும் ஆங்கிலேய-அமெரிக்க ஒத்துழைப்பையும் பிரிடன் கவனிக்கவேண்டும்'.

கடைசியாகச் சொல்லப்பட்ட அபிப்பிராயம் முக்கியமானவை. டெய்லி டெலிகிராப் பத்திரிகை வெற்றிக்கான நிபந்தனைகளை எடுத்துரைக்கிறது.

1. விமான ஆதிக்கம் வேண்டும்,



2. கிழக்குப் போர்முனையிலிருந்து மேற்குப் போர்முனைக்கு எதிரிகளின் படை பலத்தை திருப்புவதற்கு வல்லமையுள்ள நேசதேச சைனியத்திற்கு ஸப்ளைக்குப் போதுமான கப்பல்கள் வேண்டும்.
3. அதே சமயத்தில் எகிப்து போன்ற மற்ற போர்முனைகளிலுள்ள சைனியத்திற்கும் ஸப்ளைகள் அனுப்பவேண்டும்.
4. அமெரிக்காவிலிருந்து தொடர்ந்து ஸப்ளைகள் வந்துகொண்டிருக்க வேண்டும்.
5. எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களைக் கெடுக்கவேண்டும். அதாவது, நேசநாட்டுத் தாக்குதல் ஏற்படும் முனைகளில் எதிரி எளிதில் வர முடியாது அவனது ரஸ்தாக்கள் இருப்புப் பாதைகள் முதலியவைகளைக் கெடுக்கவேண்டும்.

பிரகிருத நிலைமையில் பிரிடிஷ் விமானப் படை ருஷ்யப் போர்முனையிலிருந்து 27 சதவிகிதம் ஜெர்மன் துருப்புகளை மேற்கே இழுத்திருக்கிறது. மேலும் ஆக்கிரமித்த நாடுகளில் பழிவாங்கும் ஜனங்களை அடக்குவதற்காக ஆங்காங்கு ஜெர்மன் சைனியங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவின் மேற்குக் கடற்கரையோரமாக பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், நார்வே முதலிய இடங்களில் ஜெர்மன் விமானங்கள், டாங்கிகள் பீரங்கிகள், எண்ணெய் முதலிய ஸப்ளைகள் முதலியவைகளைக் கொண்டுவந்து வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

இதுவே போதுமானது. 2-ம் போர்முனை ஏற்படவில்லையே என்ற கவலை வேண்டாம். இந்த சந்தர்ப்பத்தில் மிஸ்டர் பெவின் சொன்ன மொழிகளை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். 'இரண்டாம் போர்முனையைப் பற்றி என்னிடம் பேசாதே. அதற்காக அதிகம் உழை. கொஞ்சம் பேசு.'

மேலும் சர்ச்சில், ரூஸ்வெல்டு, அவருடன் கூடியிருப்பவர்கள் இவர்கள் இரண்டாம் போர்முனையைப்பற்றி மறந்துவிடவில்லை. சில நாட்களுக்குமுன் இரண்டாம் போர்முனைத் தலைமைக்கு ஜெனரல் மார்ஷல் என்பவரின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது. அவர் ராணுவ விஷயங்களை நன்கு அறிந்தவர். 'அமெரிக்க துருப்புகள் பிரான்ஸில் இறங்குமென்றும்' அவர் சொல்லியிருக்கிறார். மாஸ்கோவில் ஸர் ஆர்ச்பால் கிளார்க்—கெர் (மாஸ்கோவில் பிரிடிஷ் பிரதிநிதி), அட்மிரல் ஸ்டான்லி (ருஷ்யாவில் அமெரிக்கப் பிரதிநிதி), மேஜர் ஜெனரல் பார்ப்ஸ்பிராட்லி (அமெரிக்க விமானப்படை) மிஸ்டர் லாரென்ஸ் ஸ்டீன்ஹார்ட் (துருக்கியில் அமெரிக்கப் பிரதிநிதி), கரீ (Garreau) (ஸ்வதந்திர பிரெஞ்சு மந்திரி), ஜெனரல் ஸ்டீபன்ஸன் (நார்வே சைனியம்) இவ்வளவு பேர் கூடியிருப்பதைப் பார்த்து இரண்டாம் போர்முனை ஏற்பட்டுவிடுமோ என்று அச்சுநாடுகள் பயமுறுகின்றன. இதற்காக மேற்கித்திய பாதுகாப்புகளைச் சரிபார்க்கிறார்கள். ஜெர்மன் கப்பல் தலைவரான அட்மிரல் ரீடர் என்பவன் சென்ற வாரத்தில அட்லான்டிக் ஓரமாகவும், இங்கிலீஷ் கால்வாய் ஓரமாயும், பாதுகாப்பை மேல்பார்வையிட்டார். ஜெனரல் பாக்கன் ஹோர்ஸ்ட் ஆகஸ்டுமீ 8உ நார்வே பலப்படுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார். கடைசியாக மேஜர் ஜெனரல் மார்க் வெயின் கிளார்க், அமெரிக்கத் தரைப்படைத் தலைவர் 9-ம் தேதி சொன்னதாவது:—'இரண்டாம் போர்முனைக்காகவே பிரிடிஷ் துருப்புகள் பிரிடனில் இறங்கியிருக்கின்றன.'

வி வி வி வி வி வி வி

**வேவலின் பத்து விதிகள்.** இவ்வறிக்கையில் மற்றொரு பாகத்தில் வேவலின் பத்து விதிகளென்றும், மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர் ஆகஸ்டுமீ 5உயில் செய்த ஒலிபரப்பையும் அச்சிட்டிருக்கிறோம். அதில் சைனியங்களுக்கு செய்யக்கூடிய உதவியைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு வியாசங்களிலும் இந்தியாவிற்கு வந்துள்ள அமெரிக்க சாம்ராஜ்யத் துருப்புகளைப்பற்றிய விஷயம் வற்புறுத்தப்பட்டு அவைகளுக்கும் இந்தியர்களுக்கும் சிநேக மனப்பான்மை ஏற்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜெனரல் வேவல் சொல்லுவதாவது:—"கிரேட் பிரிடனுக்கும் இந்தியாவிற்கும் ராணுவம், அரசியல் இவைகளால் ஏற்பட்ட ஒற்றுமையை

சாச்வதமாகச் செய்யவேண்டும். இதற்காக பிரிடனை நம்பிக்கையுடனும் பிரியத்துடனும் கவனிக்கவேண்டும்.'' 'போர்வீரர்களைப் பார்த்து வேவல் சொல்லுவதாவது:—'இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய நாடுகளுக்கு முன்னால் நீங்கள் நாட்டைக் காப்பாற்ற விருக்கிறீர்கள். உங்களது ஆடை, நடத்தை முதலியவைகளால் உங்களுடைய நாட்டின் கௌரவத்தை நீங்கள் காண்பித்துக் கொள்ளவேண்டும்.'

'நாட்டின் பத்திரம் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதுவே உயர்ந்த கௌரவமாகும். கொஞ்சம் பிரதேசத்தையும் நீங்கள் விட்டுக் கொடுக்காதீர்கள்.

'தேசத்தின் ஸ்திரீகள் உங்களுடைய பாதுகாப்பில் இருக்கிறார்கள். இவர்களை உங்களுடைய தாய், சகோதரிகள், மனைவிகள், பெண்களைப்போல் பாவியுங்கள்.'

வி வி வி வி வி வி வி

**அமெரிக்காவின் அபிப்பிராயம்.** சமீபத்தில் ஒரு ஒலிபரப்பில் இந்தியாவிலுள்ள அமெரிக்க விமானப் படையின் தலைவரான மேஜர் ஜெனரல் பிரிடன் ஒலிபரப்பும்போது பின்வருமாறு சொன்னார்:— இந்தியாவிலுள்ள அமெரிக்கப் படைகள் இந்தியர்களின் நல்லெண்ணத்தைப் பெற்று இந்தியர்களுடன் சௌஜன்யமாகவே இருந்துவர விரும்புகின்றன. இவ்வித லக்ஷியத்தைப் பெறுவதற்காக அமெரிக்கத் துருப்புகளுக்கு இந்தியப் பழக்க வழக்கங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்க விமானப் படையின் பொது இலாகா ஆபீஸரான கர்னல் மூர் என்பவர் ஒலிபரப்பும்போது இந்தியர்களுக்கு அமெரிக்கப் பழக்க வழக்கங்களை எடுத்துரைத்தார். அப்படி வர்ணிக்கும்போது அவர் சொன்னதாவது:—

'நாம் அதிகப் பயிற்சி பெறவில்லை. இருந்தாலும், உங்களுடைய பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொண்டால் நாங்கள் வேற்றுட்களாக இருக்க மாட்டோம். நாங்கள் இந்தியாவிற்கு வந்த விருந்தாளிகள். நீங்கள் எங்களுக்குச் செய்யும் மரியாதைக்குத் தக்கவாறு நடந்துகொள்ள விரும்புகிறோம். இந்தியாவிற்கு வெகுதூரத்திலிருந்து வந்த இவர்களுடன் நன்றாகப் பழகிக்கொள்ளுவது நலமாக இருக்கும்.'

வி வி வி வி வி வி வி

**இந்தியர்களின் உபசரணை.** இந்தியர்கள் மரியாதையாக நடந்துகொள்ளுவார்கள் என்பது சர்வ பிரசித்தம். தங்கள் நாட்டின் பாதுகாப்பிற்காக வந்திருக்கும் அயலார்களின் விஷயத்தில் மிகவும் மரியாதையாக நடந்துகொள்ளுவார்கள். இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்கர்கள் விஷயத்திலும் பிரிடிஷ்காரர் விஷயத்திலும் நடந்துகொள்ளவேண்டியதைப் பற்றி மாட்சி தங்கிய மதராஸ் கவர்னர் எடுத்துரைத்திருக்கிறார்.

'வந்தவர்கள் தங்களை விருந்தாளிகளாக நினைக்கும்படி நடந்துகொள்ள வேண்டும். கடைசியாக தங்கள் தேசத்திற்குத் திரும்பும்போது மதராஸ் வாசிகளின் உபசரணையை ஞாபகத்தில் எடுத்துச் செல்லவேண்டும். சைனியங்களுக்குக் கேவலம் சாமான்களைக் கொடுத்துதவுவது மட்டில் போதாது. எண்ணமும் நல்லதாக இருக்கவேண்டும். இந்நாட்டு மக்களின் நல்லெண்ணம் இருப்பதை அவர்கள் உணரவேண்டும். சிப்பாய்களும், மாலுமிகளும், விமானிகளும் அதிகப் பாடுபட்டு தங்களது செயல்களைக் காண்பிப்பார்கள்.

'இவர்கள் இந்நாட்டின் பாதுகாப்புக்காகவே வந்திருக்கின்றனர். அவர்கள் நமக்கும் விரோதிகளுக்கும் இடையிலிருக்கின்றனர்.

'ஆகவே நமக்காக உயிரைக்கொடுக்கத் தயாராக இருக்கிறவர்களுக்கு எல்லா சௌகரியங்களையும் செய்யவேண்டும்'.



**மாட்சி தங்கிய கவர்னரின் வேண்டுகோள்.** மதராஸ் இம்மாதிரி சௌகரியங்களை ஏற்கனவேயே செய்து வந்தாலும் இன்னும் அதிகம் செய்யப்படவேண்டும். அதாவது துணி, பிரதம சிகிச்சை, ஆம்புலன்ஸ், ஆஸ்பத்திரி தேவை, ஸினிமா முதலிய விளையாட்டு முதலியவை, பாட்டு, கிராமபோன், ரேடியோ, புஸ்தகங்கள் முதலியவை இதற்காக யாவரும் பணம் வசூல் செய்து துருப்புகளுக்குக் கொடுக்க முன்வரலாம். இதையும் தேசிய யுத்த ஸேவையில் சேர்த்துக்கொள்ளலாம்.

வி வி வி வி வி வி வி

**உள்நாட்டிலுள்ள சைனியங்களுக்கு உதவி.** மற்ற விஷயங்களைப்போல் இதிலும் பிரிடன் முன் நிற்கிறது. பிரிடனில் உள்ள அமெரிக்கத் துருப்புகளுக்கு செய்யும் உபசரணை மிக அதிகம். தங்கள் உரிமைகளை அடக்கிக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கச் சைனியச் செலவிற்காக பார்லிமெண்டில் ஒரு பில் பாஸ் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் யுத்தத்தை முன்னிட்டு பிரிடன் தயாராக இருக்கும் விஷயம் நன்றாகத் தெரிகிறது. மேலும் பிரிடனில் அமெரிக்கர்கள் செய்யும் குற்றங்களுக்கு விசாரணை அமெரிக்க ராணுவக் கோர்ட்டில்தான் நடைபெறும். இதே விதமாக ஆஸ்திரேலியாவிலும் நியூஸீலாந்திலும் செய்யப்படுகிறது. தன் நாட்டிற்குள் அந்த நாட்டு சட்டங்களுக்குத்தான் உட்படவேண்டுமென்ற நிபந்தனை தற்போது மீறப்பட்டுள்ளது. இது ஒரு விசேஷம்.

வி வி வி வி வி வி வி

**ஐரோப்பாவில் முஸ்லீம்கள் வதைக்கப்படுகின்றனர்.** பால்கன் நாடுகளில் மசூதிகளையும் இஸ்லாம் மத சம்பந்தமான பள்ளிக்கூடங்களையும் மூடிவிடும்படி ஹிட்லர் உத்தரவிட்டிருக்கிறான் என்று மாஸ்கோவிலிருந்து சமீபத்தில் வெளிவந்த ராய்ட்டர் செய்தி கூறுகிறது. ஆல்பேனியாவில் மொத்த ஜனத்தொகையில் 70 சத விகிதம் முஸ்லீம்கள், யூகோஸ்லாவியாவில் சுமார் 12 விகிதம் முஸ்லீம்கள். பல்கேரியாவிலும், கிரீஸிலும் 30 லக்ஷம் முஸ்லீம்கள் இருக்கிறார்கள். ஹங்கேரியிலும், போலந்திலும் முஸ்லீம் ஜனத்தொகை மிகவும் கொஞ்சம். இவர்களைத் தொந்தரவு செய்து, ஹிம்சித்ததுதான் ஹிட்லர் சமீபத்தில் நடத்திய கொடுமை.

வி வி வி வி வி வி வி

**முதல் பொய்.** உள்நாட்டு நெருக்கடியின் காரணமாக M. ஸொகிலி (Soheily) இரான் பிரதம மந்திரிப் பதவியை ராஜீனாமா செய்துவிட்டார் என்று சென்ற வாரமே நாம் வெளியிட்டிருக்கிறோம். இவ்விஷயத்தை அச்சுநாட்டினர் ரொம்பவும் மிகைப்படுத்துகின்றன. M. ஸொகிலி நேசதேசத்தார்களிடம் அனுதாபம் காட்டுபவர். அச்சு நாட்டினரைச் சேர்ந்த ஐந்தாம்படைக்காரர்களுக்கு இடம் கொடுக்காமல் வெற்றிகரமாக விரட்டி வந்தார். அங்கிருந்த ஜப்பானிய ஸ்தானாதிபதியை நாட்டை விட்டகல ஏற்பாடு செய்தார். அவருடைய அரசியல் நிர்வாகம் யாவரும் புகழக் கூடியதாக இருந்தது. அங்கு ஜனங்களுக்குக் கல்வி முறையையும், சுகாதார முறையையும் அபிவிருத்தியடையச் செய்தார். அந்நாட்டிற்கு உணவு ஸப்ளைகள் ஒழுங்காக வருவதற்கும் ஏற்பாடுகள் செய்தார். உள்நாட்டின் சிரமநிலை காரணமாக ராஜீனாமா செய்தார்.

இரானில் ஸோவியத் துருப்புகள் ஏராளமான ஜனங்களை 'கூட்டங்கூட்டமாக' கொலை செய்ததற்காகத்தான் M. ஸொகிலி ராஜினாமா செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று உலகத்தார்கள் நம்பும்படி அச்சு நாட்டினர் பொய் வதந்தியைக் கிளப்ப முயற்சிக்கின்றனர். இவ்விதம் அச்சு நாட்டினர் சொல்லி வருவது பொய்யென்று டெஹ்ரானில் ஸர்க்கார் பூர்வமாக வெளிவந்த 'எட்டலா அட்' என்ற பத்திரிகை கூறுகிறது. 'நமது ஸோவியத் சிநேகிதர்கள் நம் தேசத்தில் நடக்கும் உள்நாட்டு விஷயங்களில் கொஞ்சமும் தலையிடுவது கிடையாது என்றும் இரானுக்கும் ஸோவியத் ஐக்கிய ருஷ்யாவுக்கும் ஏற்கனவேயுள்ள சம்பந்தத்தை

அபிவிருத்திசெய்து, இரு தேசத்தினரும் நேசப் பான்மையுடன் இருக்கும்படி செய்வதற்கு நாம் நம்மால் முடிந்த முயற்சிகளை எடுத்துக்கொள்வோம்' என்ற விஷயம் கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் அப்பத்திரிகையில் வெளிவந்தது.

மூயவியா (Mu'awia) இரண்டாவது பொய்.—ஜெடா (Jeddah)வுக் கருகாமையில் பிரிடன் விமான நிலயம் ஒன்று கட்டிக்கொண்டிருப்பதாகவும், அமெரிக்காவிலிருந்து வந்த கம்பியில்லாத் தந்தி நிபுணர்கள் ஜெடாவுக்கு வந்துவிட்டு மூயவியா (Mu'awia) என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தந்தி ஆபீஸைப் பார்வையிட்டதாகவும் சொல்லப்பட்டது. இந்த இரண்டு சம்பவங்களையும் ரோம் ரேடியோ குறிக்கும்போது ஸாடி அரேபியாவில் பிரிடனும், அமெரிக்காவும் ஆதிக்கமடைவதைப்பற்றி குழப்பம் வற்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது.

ஆனால் ஸாடி அரேபியா அரசாங்கத்தாராலேயே உண்மை வெளியிடப்பட்டது. 'அச்சுநாட்டு ஒலிபரப்புகளில் கொஞ்சமும் ஆதாரமில்லை. மூயவியாவில் அமெரிக்க இஞ்ஜினியர்கள் ஆதிக்கம் கொள்ளவில்லை. மூயவியா என்ற கிராமமே அருகில் இல்லை. அயல்நாட்டினர் தலையிடும் வியவகாரத்தைப்பற்றி ஸாடி அரேபியா அரசாங்கத்திற்கு ஒரு தகவலும் இல்லை' என்று அறிக்கை கூறுகிறது.

---

# துருப்புகளுக்கு சௌகரியங்கள் அளிப்பதற்கான நிதி.

## மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர் ஸர் ஆர்தர் ஹோப்பின் வேண்டுகோள்.

**(அகில இந்தியா ரேடியோ—மதராஸிலிருந்து ஒலிபரப்பு, ஆக்ஸ்டு 5).**

நம்மையும், நமது குடும்பத்தார்களையும், நமது வீடு வாசல்களையும், ஸ்வதந்திரங்களையும் இப்பொழுது நாஸிகள், ஜப்பானியர்கள் முதலிய ஆக்கிரமிப்புக்காரர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக வந்திருக்கும் கப்பற்படை, தரைப்படை, ஆகாய விமானப்படை இவைகளுக்கு வசதிகளைச் செய்துகொடுக்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிதிக்கு உதவவேண்டும் என்று இன்று இரவு பேச விரும்புகிறேன். இந்த சென்னை மாகாணத்திலுள்ள ஆண், பெண்களுக்கு இந்தத் துருப்புகள் என்ன உதவி செய்கிறார்கள் என்பதை நாம் நிதானித்துப் பார்ப்போம். மேற்கே எகிப்து பாலைவனமுதல், கிழக்கே காடு அடர்ந்த அஸாம் மலைப்பிரதேசம் வரையிலும், விசாலமான இந்த ராஜதானி பூராவிலும், இந்து மகா சமுத்திரத்தின் ஜலப்பரப்பிலும், மதராஸிலிருந்து சென்ற துருப்புப் பகுதிகளும் வட இந்தியாவிலிருந்தும், மற்ற சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகளிலிருந்தும் வந்திருக்கும் சைனியங்களுடன் டக்கத்திலிருந்து சண்டை செய்து வருகிறார்கள். நாகரீகத்தை அழியாமல் பாதுகாக்கவும், மனிதர்களுக்குள்ள பொதுவான ஸ்வதந்திரம் அழியாமலிருக்கும்படி செய்வதற்கும் நடத்தப்படும் இந்தப் போரில், இவர்களும் மகத்தான சேவை செய்து வருகிறார்கள். சமீப காலத்தில் வெளிவந்த பத்திரிகைகளில் எகிப்தில் மதராஸ் பீரங்கிப்படை எவ்வளவு வெற்றிகரமாக எதிரே தாக்கிவரும் ஜெர்மன் மின்னல் படைகளை எதிர்த்து நின்றனவென்பதும், துப்பாக்கி சூடுபடக்கூடிய அவ்வளவு சமீபத்தில் வந்த டாங்கிகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சுட்டு அழித்த விவரத்தையும் படித்திருப்பீர்கள். அப்பேற்பட்ட தைரியமுள்ள வீரர்களின் வாழ்க்கை சௌகரியமாக இருக்கும்படி செய்யவேண்டியது நமது கடமை. அயல் நாட்டிலிருக்கும் மதராஸ் படைப் பகுதிகளின் சௌகரியத்தைக் கவனிப்பது மட்டுமன்று இங்கு வந்திருக்கும் இதர துருப்புகளுக்கும் வசதி யளிக்கவேண்டும். இம் மாகாணத்தில் முன்னைவிட அதிகப் படைகளிருக்கின்றனவென்பது ரகசியமில்லை. இவர்களில் பலர் வெளிநாடுகளிலிருந்தும், வட இந்தியாவிலிருந்தும் தங்கள் இல்லங்களை விட்டு நம்மை காக்க இங்கு வந்திருக்கிறார்கள். நம்மைப் பாதுகாக்கவும் இந்நாட்டில் கால் வைக்க எதிர்பார்க்கும் ஆக்கிரமிப்புக்காரர்களுடன் கடுமையாகச் சண்டை செய்ய வந்திருக்கிறார்கள். இதற்குக் கைமாறாக அவர்கள் நமது விருந்தாளிகள் என்று எண்ணும்படியாக நாம் நடந்துகொள்ள



வேண்டும். அவர்கள் முடிவாகத் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிச் செல்லும் பொழுது சென்னை மாகாண வாசிகளின் அதிதி உபசாரத்தைப்பற்றி அதிக சந்துஷ்டியுடன் சொல்லும்படியாகச் செய்யவேண்டியது நமது கடமை. இந்தத் துருப்புகள் அவர்களுக்குக் கொடுக்கப்படும் பொருள்களை அனுபவிப்பதினால் மட்டும் திருப்தியடைந்துவிடமாட்டார்கள். அந்தப் பரிசுகளுடன் எந்த நாட்டிலிருந்து சண்டைக்கு வந்திருக்கிறார்களோ அந்நாட்டு ஜனங்களின் உணர்ச்சியையும், எந்த நாட்டைப் பாதுகாக்க சண்டை செய்ய வந்திருக்கிறார்களோ அந்நாட்டு ஜனங்களின் உணர்ச்சியையும் ஆதாரமாகக்கொண்டு சண்டையிடுகிறார்கள். அத் துருப்புகள் இவ்விதம் அபாயங்களையும், அசௌகரியங்களையும் அனுபவிப்பதற்கு, பரிசுகள் அளிப்பது அவர்களுக்கு நன்றி பாராட்டுவதாக இருக்கும்.

### மதராஸ் செய்திருக்கிறது என்ன?

மதராஸில் என்ன செய்திருக்கிறது என்பதைக் குறித்தும், இந்த நிதிக்கு நீங்கள் செலுத்தும் பணத்தைக்கொண்டு என்ன செய்யப்படுகின்றனவென்பதையும் உங்களுக்குச் சொல்லுகிறேன். துருப்புகளுக்கு உணவும், மற்ற சௌகரியங்களும் செய்துகொடுத்து உதவும் அநேக ஸ்தாபனங்களுக்கு கிராண்டுகள் கொடுக்கப்படுகின்றன. ரெட்ஷீல்டு, டால்பட்ஹவுஸ், ஸ்டான்லி கிளப், மதராஸிலும திருச்சிறைப்பள்ளியிலுமுள்ள ஒய். எம். ஸி. ஏ. சங்கங்கள் இந்த கிராண்டுகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் மதராஸைச் சுற்றிலுமுள்ள கிராமங்களுக்கு இந்தியத் துருப்புகள் சென்றிருக்கின்றன. அவர்கள் கடைகளுக்குப்போய் சாமான்கள் வாங்க வசதிகள் இல்லை. அவர்களுக்குத் தேவையான ஸப்ளைகளைப் பெறுவதற்கும் வசதியில்லை. இதற்காக மோட்டார் மூலம் சாமான்கள், தின்பண்டங்கள் கொண்டுசெல்லும் சென்னை ஸ்திரீகள் ஸ்தாபனத்திற்கும் கிராண்டு அளிக்கப்படுகிறது.

மதராஸிலிருக்கும் துருப்புகளுக்காக வேலைபார்க்கும் ஜாயின்ட் யுத்த தர்ம டிப்போவுக்கும் கிராண்டுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மனிதர்களுக்கு முக்கியமான தேவை படிப்பதற்குப் புஸ்தகங்கள்தான். ஒரு பெரிய வாசகசாலை இந்த டிப்போவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலிருந்து 50-ம் 100-மாக புஸ்தகங்களை இந்தப்படை பகுதிகள் வாங்கிக்கொள்ளுகிறார்கள். இந்த ஏற்பாடானது திருப்திகரமாயிருக்கிறது. இந்த டிப்போவில் கிராமபோன் பிளேட்டுகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. படைப்பகுதிகளுக்கு தங்கள் வசமிருக்கும் பிளேட்டுகளைக்கேட்டு அலுத்துப்போனால் அவைகளுக்குப் பதிலாக புது பிளேட்டுகள் வாங்கிப்போகலாம். அதிக வேலையில்லாமல் நெடுநேரம் தங்கள் கடமையைச் செய்துவரும் படைப்பகுதிகளுக்கு ரேடியோக்களும், கிராமபோன்களும் கேட்க வசதியளிக்கப்படுகிறது.

நியாயமாகக் கேட்கப்படும் எந்த சாமானையும் கொடுக்கக்கூடிய நிலைமையிலிருப்பதாக இந்த டிப்போ பெருமை பாராட்டிக்கொள்ளுகிறது. எல்லாவித சாமான்களும் அபேக்ஷிக்கப்படுகின்றன. கிரிக்கட், டெனிஸ் விளையாடுவதற்குத் தேவையான சாமான்களும், சங்கீதம், பாட்டு கேட்பதற்கும் வசதியுமிருக்கிறது. ஒருக்கால் தூக்கிச்செல்லக்கூடிய மல்யுத்த மேடை கடனாகக் கொடுக்கும்படி கேட்கப்படும். இம்மாதிரி எல்லாவித தேவைக்கும் தக்கவாறு இந்த டிப்போவில் வசதிகள் கொடுக்கப்படுகின்றன. வீட்டிற்கு வெளியேயும், உள்ளேயும் ஆடக்கூடிய விளையாட்டுக்கு வேண்டிய சாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. உஷ்ணமான சீதோஷ்ணநிலை இருக்குமிடங்களில் மாத்துஉடை இல்லாத ஜனங்களுக்கு கால் சட்டை, கைசட்டை, சல்லடங்கள் கொடுக்கப்படுகின்றன. அநேக படைப்பகுதிகளுக்குப் பிரதம சிகிச்சைக்கு வேண்டிய சாமான்கள் ஸப்ளை செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியத் துருப்புகளுக்கு வேண்டியவைகளை ஊர், ஊராக கொண்டு செல்வதற்கு சேமிக்கப்படுகின்றன.

மதராஸிலும் சுற்றிலுமுள்ள துருப்புகளுக்குத்தான் இந்த சௌகரியங்கள் என்பதில்லை. இந்த ராஜதானி பூராவிலும் வேலைபார்க்கும் இந்தியத் துருப்புகளுக்கு மின்சார சக்தி உதவியில்லாமல் பாட்ரிகளைக்கொண்டு பாடச்செய்யக்கூடியதும், அதிக தூரம் தெளிவாக ஒலிபரப்பக்கூடிய சாதனங்களும் சேர்க்கப்பட்டதுமான நாலு ரேடியோக்களும், 18 கிராமபோன் பெட்டிகளும், விளை

யாட்டுக்கருவிகளும் இந்த டிப்போவிலிருக்கின்றன. இந்தியாவில் மற்ற பாகங்களில் வெளிநாடுகளிலுமிருக்கிற மதராஸ் படைப்பகுதிகளுக்கு பரிசுகள் ஏராளமாக அனுப்பப்படுகின்றன. புஸ்தகங்களும், பத்திரிகைகளும், தமிழிலும், தெலுங்கிலும், மலையாளத்திலும் பெட்டி பெட்டிகளாக அனுப்பப்படுகின்றன. மேலும் வீட்டிற்குள்ளேயும், வெளியேயும், விளையாடக்கூடிய கருவிகளும், சங்கீத வாத்தியங்களும் அவர்கள் போய் தங்கியிருக்கும் நாட்டில் கிடைக்காத உணவுப் பொருள்களும் பெட்டி பெட்டிகளாக அனுப்பப்படுகின்றன. அவர்கள் அவைகளை மிகவும் விரும்புகிறார்கள்.

மேலும் ராணுவ ஆஸ்பத்திரிக்கு, யுத்தகாலத்தில் காயம்பட்டவர்களை ஏற்றிச்செல்லும் வண்டிகளுக்கும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. நோயாளிகளுக்கு வேண்டிய சௌகரியங்களும் செய்துகொடுக்கப்படுகிறது.

### அதிக தயாளமான கொடை.

சென்ற வருஷம் சமுத்திரத்திற்கு அப்பாலுள்ள துருப்புகளுக்கு கிருஸ்துமஸ் பரிசுகள் கொடுப்பதற்கு வேண்டுகோள் விடுத்தபொழுது அதிக தயாளமாகப் பணம் கொடுத்து உதவப்பட்டது. இப்பொழுது யுத்தமோ நம்மிடம் நெருங்கி விட்டது. நம்மைப் பாதுகாக்கும் துருப்புகள் நமது வீட்டு வாசலிலேயே இருக்கிறார்கள். ஆகையால் அப்பொழுது கொடுத்ததைக் காட்டிலும் இப்பொழுது அதிகம் கொடுத்து உதவவேண்டும். சென்ற வருஷம் அக்டோபர், நவம்பர் மாதங்களில் எதை விசேஷப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டு கொடுத்தோமோ அதை வழக்கமாய் கொடுக்கவேண்டியதாய் விட்டது. துருப்புகளுக்கு பரிசில்லாமல் செய்துவிடவும் கூடாது. நாம் அவர்களுக்கு இனமளிப்பதையும் மறுத்துவிடவும் முடியாது. ஆனால் அவர்களுக்கு இனம் அளிக்கப் பணம் தேவை. சென்ற வருஷத்தில் கிருஸ்துமஸ் பரிசுகள் கொடுத்தபொழுது உள்ள செலவைக்காட்டிலும் இப்பொழுது அதிகமாய் விட்டது. அதனால் நாம் இப்பொழுது செய்துவரும் உதவியுடன் இந்த வருஷத்தில் கிருஸ்துமஸ் டயத்தில் இன்னும் அதிகமாகவே பரிசுகள் வழங்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

சென்ற 2 வருஷத்திற்கு மேற்பட்ட காலமாக இந்த வேலையைச் செய்வதற்கு உதவிபுரிந்த இந்தியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும், முக்கியமாக ஸ்திரீகளுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன். யுத்தம் நமக்கு வெற்றிகரமாக முடியும் வரையில் இதே ஆர்வத்துடன் அவர்கள் வேலைசெய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

சண்டையில் ஈடுபட்டிருக்கும் படைகளில் இம்மாகாணத்திலிருந்து சென்றவர்களுக்கு நாம் செய்யக்கூடிய சௌகரியங்களில் இவை சில. உங்களுடைய ஆதரவினால் அவர்களுக்கு இவற்றைத் தொடர்ந்து செய்யவும், இன்னும் அநேக சௌகரியங்கள் செய்யவும் கூடும். அவர்கள் நம்மை பாதுகாக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். நாஸி ஆக்கிரமிப்பினாலும், ஜப்பானிய ஆக்கிரமிப்பினாலும் ஏற்படக்கூடிய அபாயங்களுக்கு இடையே அவர்களிருக்கிறார்கள். அவர்கள் உங்களுடைய ராஜீய ஸ்வதந்திரங்களைப் பாதுகாக்கிறார்கள் என்பது மட்டும் அல்ல. உங்கள் ஸ்வதந்திரத்தையும், சுயேச்சையாக வாழ்க்கை நடத்தும் உரிமையையும், மதத்தையும், உங்கள் குழந்தைகளுக்கு கல்வியளிப்பதையும், நீதி ஸ்தலங்களில்போய் நியாயம் பெறுவதையும், அடிமைகளைப்போல் இல்லாமல் ஸ்வதந்திர மனிதர்களாக வாழ்வதையும், இன்னும் நாஸி வெற்றி பெற்றால் அழிந்துபோகக்கூடிய மற்ற சாதனைகளையும் இழந்துவிடச் செய்யாமல் அவர்கள் உங்களைப் பாதுகாக்கிறார்கள். உங்களுக்காகவும், உங்கள் குழந்தைகளுக்காகவும் உயிரைத் தியாகம் செய்யத் தயாராயிருப்பவர்கள் உண்மையில் உங்கள் வெகுமானத்திற்குப் பாத்திரமல்லவா? 'துருப்புகளுக்கு சௌகரியங்கள் அளிப்பதற்காக உள்ள நிதிக்கு' தொகை செலுத்துவோர்கள் யுத்தக் காரியக்கமிட்டிகளிலுள்ள பொக்கிஷத்தார்களுக்கும் ஜில்லா அல்லது தாலூகா கஜானாக்களுக்கும், இம்பீரியல் பாங்கு கிளை ஸ்தாபனங்களுக்கும், இந்தக் காரியத்திற்காகவென்று கண்டு தொகை அனுப்பலாம். மதராஸ் உதார குணத்திற்கு எப்பொழுதும் பேர் போனது. ஆகவே இந்த வேண்டுகோளுக்கு நீங்கள் சரியானபடி செவி சாய்ப்பீர்களென்று நம்புகிறேன். மீண்டும் நமக்கு முடிவில் வெற்றி கிடைப்பதற்கு இம்மாதிரி பொருள் கொடுக்க உதவவீர்கள் என்றும் நான் நம்பகிறேன்



# பிரிடிஷ் இந்தியக் கப்பற்படையின் அபிவிருத்தி.

## இடிகுண்டுகளைப் பிரயோகிக்க கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடம்.

பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை இலாகா வரவர அபிவிருத்தியடைந்து வருகிறது. அதன் மேற்பார்வையின் கீழ் விரோதிப் போர்க் கப்பல்களை உடைப்பதற்காக இடிகுண்டுகளைப் பிரயோகிப்பதற்குக் கற்றுக்கொடுக்க பயிற்சிசாலை ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை இலாகாவின் இந்த கிளை ஸ்தாபனத்தில் இடிகுண்டுகளைப் பிரயோகிப்பதற்கு சொல்லிக்கொடுப்பது மட்டுமல்ல. அதில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கும், மாலுமிகளுக்கும் (1) ஆழ வெடிகளைக் கையாளுவதற்கும், (2) கடல்களின் சுரங்கவெடிகள் போடுவதற்கும், அவைகளை வாரி எடுப்பதற்கும், (3) இன்னும் கப்பல்களில் வைக்கப்பட்டிருக்கும் மின்சார உற்பத்திக்கான யந்திரங்களைக் கையாளுவதற்கும், அவைகளைப் பழுது பார்ப்பதற்கும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. மேற்சொல்லிய மூன்று பெரிய பயிற்சிகளையும் இதற்குமுன் வெவ்வேறு பள்ளிக்கூடங்களில் கொடுக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது மேற்சொல்லிய கிளை ஸ்தாபனத்தில் இவ்விஷயங்கள் போதிக்கப்பட்டு நல்ல பயிற்சி பெற்ற நிபுணர்கள் ஏராளமாகத் தயாரிக்கப்படுகிறார்கள்.

மின்சார உற்பத்திக்கான யந்திரங்களில் நன்றாய்ப் பயிற்சி பெற்ற நிபுணர்கள் தான் கப்பல் உத்தியோகஸ்தர்களில் மிகவும் முக்கியமான மெம்பர்கள்.

1914-ம் வருஷத்திற்கு முன் யுத்தக் கப்பல்களில் விளக்கு வசதிக்காக மட்டில் மின்சாரம் உபயோகிக்கப்பட்டது. ஆனால் இக்காலத்தில் மின்சார சக்தியினால் எவ்வளவோ காரியங்கள் செய்து முடிக்கப்படுகின்றன.

நவீன யுத்தக் கப்பல் அதிக வேகமாகச் செல்வதற்கும், யுத்தத்தில் நல்ல சேவை செய்வதற்கும், அதிலுள்ள யந்திரம் சரியான விதத்தில் வேலை செய்வதைப் பொருத்திருக்கிறது. அதனால் யந்திரப் பயிற்சி பெற்ற நிபுணர்கள் அதிகம் தேவை.

### மற்றொரு அபிவிருத்தி.

இப்பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு சமாதான காலத்தில் அரசாங்கத்தில் உயர்ந்த சம்பளத்தில் உத்தியோகம் கொடுக்கப்படும். அவர்களில் மிகவும் தேர்ந்தவர்களைத் தேவையான காலங்களில் கப்பற்படைக்குத் தலைமை உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்படுவார்கள்.

பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை இலாகாவில் மற்றொரு அபிவிருத்தி ஏற்பட்டு இருக்கிறது. பிரிடிஷ் கப்பற்படை இலாகாவின் ஆதரவின்கீழ் இந்தியாவில் நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்த்துத் தாக்குவதற்கு பயிற்சியளிக்கப்படும் பள்ளிக்கூடம் ஒன்று புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இப்பள்ளிக்கூடத்தின் தலைமை அதிகாரி பிரிடிஷ் கப்பற்படையிலிருந்து பொறுக்கி எடுக்கப்படுவார். மற்ற அதிகாரிகள் பிரிடிஷ் கப்பற்படை, பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை, இன்னும் மற்ற நேசநாடுகளின் கப்பற்படைகளிலிருந்து பொறுக்கப்படுவார்கள். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் பிரிடிஷ் பயிற்சிசாலை நீங்கலாக இந்தப் பயிற்சிசாலை தான் மிகப் பெரிதாக இருக்கும். பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை இலாகாவில் இவ்வித பயிற்சி அளிக்கும் பள்ளிக்கூடம் இருந்து வருகிறது. அது திறமையாகத்தான் வேலை செய்துவருகிறது. ஆனால் அது இப்பொழுதுள்ள தேவைக்குத் தகுந்தபடி அதிகம் பேர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடிய விதமாக அவ்வளவு பெரியதாக இல்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பயிற்சிசாலை அதற்கு பர்த்தியாக இருக்கும்.

பிரிடிஷ் இந்தியக் கப்பற்படையில் பீரங்கியைப் பிரயோகிப்பதற்கு பயிற்சி அளிக்கப்படும் பள்ளிக்கூடம் முன்பைவிட பன்மடங்கு அபிவிருத்தியடைந்து வருகிறது. வெகு சமீபத்தில்தான் அது பெரிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இன்னும் இடவசதியை முன்னிட்டு அடுத்த வருஷத்தில் வேறொரு பட்டணத்தில் புதிய, பெரிய கட்டடத்திற்கு மாற்றப்படும். அநேக யுத்தக் கப்பல்களிலுள்ள பீரங்கிகளை நவீன யுத்த தந்திரங்களுடன் பிரயோகிக்க மாலுமிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

யுத்தம் ஆரம்பித்ததுமுதல் பீரங்கிச் சண்டை பயிற்சி அளிக்கும் பள்ளிக்கூடத்தில், தயாரானவர்களின் சங்கியை முன்பைவிட பதினைந்து மடங்கு அதிகமாக இருக்கிறது.

---

## ‘எகிப்து’.

*(லெப்டினன்டு ஜெனரல் டொக்ளஸ் ப்ரௌவ்ரிக் எழுதியது.)*

எகிப்தில் யுத்த நிலைமை நம் சார்பில் தாத்காலிகமான அனுகூலம் இருந்து வருகிறது. ரோமலின் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டோ, தடைபட்டோ விட்டன. அங்குள்ள பிரிடிஷ் எட்டாவது படை கடற்கரை ஓரத்தில் முன்னேறி, அங்கு போடப்பட்டிருக்கும் இருப்புப்பாதை வழியாகச் சென்றிருக்கிறது.

தளகர்த்தர் ஆச்சின்லெக் ரொம்பவும் நிதானமாகவும், பொறுமையுடனும் இருந்தார். இவ்வித குணத்தினால்தான் இதற்குமுன் மால்பரோ பிரக்யாதி அடைந்தார். தன் சைனியத்தை அதிகமாகப் பலப்படுத்திக்கொள்ள அவர் பின் வாங்கவேண்டி நேர்ந்தது. பிற்பட்டு அங்கிருந்து எதிரியைத் திரும்பித் தாக்குவதற்குச் சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. அநேகமாக எல்லா விஷயங்களும் பிரிடிஷ் ஸ்தானங்களுக்கு எதிராக உள்ள எல் அலமீன் என்ற இடத்தில் கிடைக்கும் வெற்றியைப் பொருத்திருக்கிறது. பிற்பட்டு ஆச்சின்லெக் வலது பக்கத்திலுள்ள எதிரிகளை பலமாக எதிர்த்து அங்கு வெற்றியடைந்தார். இப்படி பிரிடிஷார் படைப்பலம் தினசரி அதிகரித்து வருகிறது. இருந்தாலும், ரோமலுக்கும் எதிரிகள் ஸப்ளைகள் ஏராளமாக அனுப்பி வருகிறார்கள்.

ஆச்சின்லெக்குக்கு ஆகாயப் படைப்பலம் அதிகம். அங்கு தரைப்படை சைனியங்களுக்குப் பிரிடிஷ் விமானப்படையும், தென் ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா இவ்விடங்களிலிருந்து வந்த விமானிகளும் இடைவிடாது பறந்து சென்று, உதவி செய்கிறார்கள். இதைக் காட்டிலும் ஒரு முக்கியமான காரியத்தையும் சாதித்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இவ்விதம் யுத்த நிலைமைக்கு வருவதற்கு முந்தி பிரிடிஷ் விமானப்படை அங்குள்ள எதிரி விமான பலத்தை முறியடித்தது. இவ்விதம் விமான ஆதிக்கம் பெற்றதினால்தான் பிரிடிஷ் விமானப்படை நெருங்கிவந்து தரைப் படைகளுக்கு உதவியளிக்க சாத்தியமாயிருந்தது.

ஆகையால், அங்கு எதிரிகளுக்கு ஆகாயப்படைப் பலம் கிடையாது. விமான ஆதிக்கமும் அவர்களிடமிருந்து பிடுங்கியாய்விட்டது. அபிஸீனியாவில் எதிரிகளின் சைனியங்களுக்குப் பின் பக்கத்திலுள்ள கிராமங்களில் இதாலியர்கள் விஷப்புகையை உபயோகிப்பதினால் அங்குதான் எதிரி விமான பலம் அதிகமாக இருக்கிறது. இதைத் தவிர வேறெங்கும் அவர்கள் ஆதிக்கமடைந்திருப்பதாகத் தெரியவில்லை.

யுத்தத்தில் ஒரு விஷயமும் ஒரே நிலையாக இருப்பதில்லை. வட ஆபிரிக்காவின் கடற்கரையிலிருந்து 200 மைல்களுக்கப்பாலுள்ள கிரீட்டில் ஏராளமாக விமானங்கள் திரட்டியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கு துருப்புகளும் ஏராளமாக இறக்கப்பட்டிருக்கின்றன. காகஸஸை நோக்கிச் செல்லும் ரஸ்தாவில் வான்போக் வெகுதூரம் முன்னேறிவிட்டால் ஸைப்ரஸையாவது, ஸிரியாவையாவது தாக்குவதற்கு துருப்புகளையும், விமானங்களையும் உபயோகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கலாம். அல்லது துருக்கி நடுநிலைமையாக இருப்பதை ஒழிக்கவேண்டுமென்று ஹிட்லருக்குத் தோன்றினால், அதற்குவேண்டி அவைகளை



இருப்புப் படைகளாகவும் வைத்துக்கொள்ளலாம். அங்கு ரோமலுடைய தேவை அத்தியாவசியமாகிவிட்டால், அவை அவனுக்கும் உபயோகப்படும். இதைத்தவிர அவனுக்கு சமீபத்தில் புதிதாகத் துருப்புகள் விமானங்களில் ஏற்றி அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் சிலதினங்களுக்கு முன் துருப்பேற்றிச் செல்லும் விமானங்களுடன் துணை விமானங்களும் சென்றன. அவைகளை நமது ‘பியோ பைடர்’ விமானங்கள் தாக்கி, அவைகளில் 12 விமானங்களைச் சுட்டு வீழ்த்தியோ, அல்லது பலமாகச் சேதமாக்கியோ விட்டன.

---

## ருஷ்ய மனித பலம் அதிகமாகக் குறைவுபடவில்லை.

---

நியூஸ் கிரானிகள் பத்திரிகையின் ராணுவ நிருபர் ருஷ்ய-ஜெர்மன் நிலைமையைப் பற்றி தீர்மானிப்பதற்கு அவரவர்கள் வசமுள்ள இருப்புகளை கவனித்துப் பார்த்தால் நிலைமை தெரியவரும் என்று அறிவிக்கிறார். இந்தப் படையெடுப்பு பூராவிலும் ரயில் போக்குவரத்து ஆக்கிரமிப்புக்காரர்களுக்கு அனுகூலமாக இருந்திருக்கிறது. ஜெர்மானியருக்கு பலஹீனமான இடங்களில் பெருத்த சைனியங்களை சரியான சந்தர்ப்பங்களில் வெகு சுலபமாக திரட்டக்கூடிய சாமர்த்தியம் இருந்தது.

சமீப காலத்தில் வெளிவந்த விவாதங்களில் 5-கோடி மக்கள் அடங்கிய யூக்ரேன் பிரதேசம் எதிரி வசமானதிலிருந்து ருஷ்யர்களின் பலம் குறைந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ராணுவ விஷயமாக யோசிக்குமிடத்தில் அவ்விதம் ராணுவ பலம் குறையவில்லை. ராணுவத்தில் சேர லாயக்கான வாலிபர்களெல்லாம் சைனியங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

அப்படிச் சேர்ந்தவர்களின் தொகையை சாதாரணமாக மதிப்பிட்டுச் சொன்னால் மொத்த ஜனத்தொகையில் 10 சதவிகிதம்தான் ராணுவத்தில் சேர லாயக்கானவர்கள். அதனால் யூக்ரேனிலிருந்து மொத்த ஜனத்தொகையில் 50-லக்ஷம் சிப்பாய்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அங்குள்ள துருப்புகள் பூராவும் ஏற்கனவே ருஷ்யச் சைனியத்தில் சேர்க்கப்பட்டுவிட்டார்களானதால், அவர்களின் பிரதேசம் தற்காலம் எதிரிவசமாய் விட்டதினால் மட்டில் ருஷ்யச் சைனியத்தின் பலம் குறைந்துவிடவில்லை. வருஷாந்திரம் புதிய வீரர்கள் பொறுக்குவதில் அவர்களுக்கு நஷ்டம் நேரலாம். அதுவும் மொத்த ஜனத்தொகையில் 200-பேருக்கு ஒருவர் வீதம்தான் ஆகும். அதனால் 1943-ம் ஐக்கிய ஸோவியத் சைனியப் பகுதியில் நேர்ந்த துருப்புகளின் நஷ்டம் உயர்ந்த பக்ஷம் 2,50,000 வாலிபர்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

பிரதேசம் நஷ்டமடைவதில் அதில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்கள் நஷ்டமாகும். ஸோவியத் ருஷ்யாவில் சராசரி வருஷத்தில் விளையக்கூடிய கோதுமையில் 30 சதவிகிதம்தான் ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களிலிருந்து கிடைக்கிறது. ஆக்கிரமித்த பிரதேசத்தில் இப்பொழுதுள்ள ஜனத்தொகை 4,00,00,000-க்கு மேல் இருக்கமாட்டாது. ஏனென்றால் ருஷ்யப் படையில் சேர்த்துக்கொண்ட வீரர்கள் தவிர மற்றும் 5,00,000 பேர்கள் விவசாய நிலங்களிலிருந்தும், கைத்தொழில் பிராந்தியங்களிலிருந்தும், கிழக்கேயுள்ள தேசத்தில் புதிய வேலைக்காக ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டார்கள்.

ஐக்கிய ஸோவியத் நாடுகளிலிருந்த 18,00,00,000 ஜனத்தொகையில் 4,00,00,000 பேர்கள்தான் குறைந்திருக்கும். இந்த எண்ணிக்கையையும் தானிய விளைவையும் ஒப்பிட்டால் நாட்டிற்கு 8 சதவிகிதம்தான் தானிய விளைவில் நஷ்டம் ஏற்படும்.

மார்ஷல் டிமோஷென்கோ இன்னும் தன்னுடைய இருப்புப் படைகளை உபயோகப்படுத்திக்கொள்ளவில்லை. ஜெர்மானியர் டான் நதி பிரதேசத்தில் தென்பாகத்தைத் தாண்டும் வரையில் அவைகளை உபயோகிக்கமாட்டார். டான் நதி எதிரிகளுக்குப் பின்பக்கமாக இருக்கும் பொழுதுதான் எதிரியைத் தாக்கி நதிக்குள் தள்ளுவதற்கு சரியான சந்தர்ப்பமாக இருக்கும்

# வேவலின் பத்து விதிகள்.

இந்தியப் படைக்காகப் பிரசுரிக்கப்படும் '**விக்டரி**' என்ற வாரப்பத்திரிகையில் நடப்பு அனுபந்தத்தில் இந்தியாவில் சேவைபுரியும் துருப்புகளுக்கு **தளகர்த்தர் வேவல்** விடுத்த செய்தி:—

இந்த யுத்தத்தில் முதன்முதலாக 1939-ம் வருஷத்தில் சமுத்திரத்தைத் தாண்டி, ஐரோப்பாவுக்குச் சென்ற துருப்புகளுக்குத் தலைவராக இருந்த ஒரு பிரிட்டிஷ் அதிகாரி தன் துருப்புகளின் நன்நடத்தைக்காக பத்து விதிகளைச் சொல்லியிருக்கிறார். நம் நாடுகளைவிட்டு எதிரிகள் எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கு சென்று அவர்களுடன் சண்டை செய்யவேண்டிய கடமையைச் செய்ய வந்திருக்கும் நமக்கும் அந்த விதிகள் பொதுவாக அன்வயிக்கும். ஆகையால் மேற்சொல்லிய கருத்தை அடிப்படையாகக்கொண்டு நான் தயாரித்திருக்கும் பத்து விதிகளை அனுசரிக்கும்படி இந்தியாவிலிருக்கும் சைனியங்களில் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### வேவலின் பத்து விதிகள்.

1. இந்தியா, பர்மா, சிலோன் இந்த தேசங்களிலிருக்கும் ஜனங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் அவரவர்களின் தேசங்களின் பிரதிநிதியாக எண்ணுகிறார்கள் என்பதை ஞாபகம் வைத்துக்கொள். உன்னுடைய உடையணியும் மாதிரி, ஒழுக்கம், சீலம், தன்மை இவைகளிலிருந்தே இந்நாட்டிலுள்ளவர்கள் உன் தேசம் எப்படிப்பட்டதென்பதைத் தீர்மானிப்பார்கள்.

2. இப்பொழுது நீ தங்கியிருக்கும் இடம் தாற்காலிகமாக இருக்கவேண்டிய இடம் என்று நினைத்துக்கொள். ஆனால் அத்தேசத்திலிருக்கிற ஒவ்வொரு ஸ்திரி புருஷருக்கும் அதிலிருக்கும் ஒவ்வொரு பொருளும் விலை மதிப்புள்ளது. ஆகையால் "இந்த யுத்தமானது நம் நாட்டில் நடந்து இந்த தேசத்திலிருக்கும் துருப்புகள் நம் நாட்டின் பாதுகாப்புக்காக வந்திருந்தால் அவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ" அம்மாதிரியாகவே நீ நடந்து கொள்ளவேண்டும்.

3. இந்நாட்டில் முதன்முதலாக நீ இப்பொழுது தான் வந்திருப்பதால் அந்நாட்டு ஜனங்களைப்பற்றி அவசரமான தீர்மானத்திற்கு வந்துவிடாதே. அவர்களுடைய பழக்க வழக்கங்கள் வேறு. உன்னுடைய பழக்க வழக்கங்கள் வேறு. அவைகள் கீழ்வகைப்பட்டவைகள் என்று எண்ணாதே. சென்ற உலக யுத்தத்தையும், அதில் இந்தியப்பட்டாளம் எடுத்துக் கொண்ட பங்கையும் மறந்துவிடாதே. அவர்கள் குறைவான சாதனங்களைக்கொண்டு மகத்தான காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். இதாலியர்களுக்கு எதிராக ஸிடி பாரானியில் சண்டை செய்து ஆரம்பத்தில் கிடைத்த வெற்றியில் நேசதேசத் துருப்புகளுடன் இந்தியப் பட்டாளமும் ஏற்கனவே தோளோடு தோள் சேர்ந்து நின்று சண்டை செய்திருக்கிறது. எரிட்ரியாவிலிருந்து இதாலியர்களை ஒழித்ததிலும், அபிஸீனியாவில் எதிரியை ஜயித்ததிலும், இந்தியர்கள் பெரும்பான்மையான பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸிரியாவிலும், இராக்கிலும், இரானிலும் அவர்களின் மேலான திறமையைக் காட்டியிருக்கிறார்கள். தூரக்கிழக்கில் ஆரம்பத்தில் ஏற்பட்ட கஷ்டத்தையும் இந்தியர்கள் அனுபவித்திருக்கிறார்கள். ஹாங்காங்கிலும், சிங்கப்பூரிலும் உன் சகோதரர்களுடன், அநேக ஆயிரக்கணக்கான இந்தியர்களும் இப்பொழுது யுத்தக் கைதிகளாக இருக்கிறார்கள். பிரிட்டிஷாருடனும், பர்மியருடனும் சேர்ந்து கொண்டு பர்மாவில் எதிரிக்குக் கலவரம் உண்டாகும்படியாகவும், காலதாமதம் ஏற்படும்படியாகவும் செய்த யுத்தத்தில் கீர்த்தியுடன் இந்தியரும் சண்டை செய்திருக்கிறார்கள்.



4. உன்நாட்டில் உனக்கு சகஜமாகத் தோன்றக்கூடிய அநேக மனோபாவங்கள் உனக்குத் தெரியாமலே இந்தியரைத் திடுக்கிடும்படியும், வருத்தம் அடையும்படியும் செய்யக்கூடுமென்பதை நினைவுபடுத்திக்கொள். இங்கிலீஷார் ஒருவர் மற்றொருவரைச் சந்திக்கும்பொழுது நடந்துகொள்ளும் மாதிரி ஒரு வகை. ஆனால் மற்ற தேசத்தினர் நடந்துகொள்ளும் மாதிரி வேறுவகை. இத்தகைய வித்தியாசங்களுக்குப் பழக்கவழக்கங்கள்தான் காரணம். உன் தேசத்தாருக்குக் காட்டக்கூடிய மரியாதையைக் காட்டிலும் இங்குள்ள சிநேகிதருக்கு இன்னும் அதிகமான மரியாதையைக்காட்டு.

5. நீர் இருக்கும் நாட்டிலுள்ள ஸ்திரீகளெல்லாம் உன் பாதுகாப்பில் இருக்கிறார்கள். அவர்களை உன் தாயார், சகோதரி போலவும், அல்லது நீ இல்லாத சமயத்தில் உன் சம்ஸாரம், பெண் இவர்களை எப்படி நடத்துவதற்கு நீ விரும்புவாயோ அப்படி அவர்களிடத்தில் நடந்துகொள்.

6. உன் வேலையில் நல்லவனாக நட. உன் ஆயுதங்களை உபயோகிக்கப் பழக்கிக்கொள். உனது படையையும், பீரங்கியையும் அல்லது உமது பகுதியையும் ஒரு பிரசித்திபெற்ற வகுப்பாகச்செய்ய முயற்சிசெய். உடை அணிவதிலும், ஒழுக்கமாக இருப்பதிலும் அதிக கவனத்தைச் செலுத்து. சண்டைப்படையின் மதிப்பு அதன் பழக்கவழக்கங்களைப் பொருத்திருக்கிறது.

7. நீயிருக்கும் நாட்டின் பாதுகாப்பை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறது. அது பெரிய கௌரவம். அந்த இடத்தில் ஒரு அங்குலத்தையும் விட்டுக் கொடுத்துவிடாதே.

8. பொய் வதந்தியை பரவச் செய்யாமலும், கேட்காமலும் இருக்கும்படி உன்னைக் கட்டுப்பாடு செய்துகொள். 'எதிரியின் பிரசாரம், கலவரத்தையும், பீதியையும் உண்டாக்க வழி தேடுகிறது. ஆகையால் உனக்கு எது தெரியுமோ, எதைச் சொல்லக்கூடுமோ அதை மட்டும் சொல்லு. "நான் நேரில் பார்க்கவில்லை. ஆனால் அம்மாதிரி கேட்டிருக்கிறேன்" என்று சொல்லுகிறவர்களெல்லாம் எதிரிக்குத் தெரியாமலே உதவி செய்வார்கள். அதனால் அமெரிக்கைக்கு ஒரு உதாரணமாக நடந்துகொள். நாம் அமைதியான ஜாதியாரைச் சேர்ந்தவர்களென்று நமக்கு பேர் இருக்கிறது. அது நேர்த்தியான கியாதிதான். அதற்குப் பொருத்தமாக நடந்துகொள்.

9. நீ தங்கியிருக்கும் தேசத்தின் பாஷையைக் கற்றுக்கொள். அந்த தேசத்தார்களுக்கு இங்கிலீஷ் பாஷையைப் போதி. நம்முடைய பொதுவான வேலையும் யுத்தத்தில் ஜயம் பெறுவது மாத்திரமல்ல. சமாதானத்தை நிலை நிறுத்தவேண்டும். இப்படி ஒன்று சேர்ந்திருந்தால்தான் சமாதான காலத்திலும் ஒற்றுமை உண்டாகும். ஒருவருக்கொருவரை நன்றாக அறிந்து கொண்டால்தான் நாம் ஒன்று சேர்ந்திருக்கலாம். வருங்காலத்தில் கூட்டுறவினால்தான் பலமுண்டாகும். அதனால் நாம் எல்லோரும் சேர்ந்து பொதுவான வேலைகளைச் செய்யவும், பொதுவாகப் பாடம் கற்றுக்கொள்ளவும் வேண்டும்.

10. நம் நாடுகளின் ஒற்றுமை, ராஜீய விஷயத்திலும், ராணுவ விஷயத்திலும் சரித்திரப் பூர்வமாக ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது மனுஷ்ய பாவத்திலும் அந்த ஒற்றுமை ஏற்படவேண்டும். இந்நாடுகளில் ஒன்றுக்கொன்று இன்றியமையாதது என்று ஏற்படும்பொழுது ஒரு நாடு மற்றொரு நாட்டை விரும்பவேண்டும். உனது தேசத்தாரை நம்புவதற்கும், பக்ஷம் வைப்பதற்கும் உகந்த சிநேகிதர்கள் என்று நீ போயிருக்கும் இடத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் மதிப்புவைக்கும்படி செய்ய உன்னால்தான் முடியும்.

# தேசிய யுத்த முன்னணி.

## தக்காளிப்பழங்களை (Tomatos) அதிகம் உற்பத்தி செய்யவும்.

சமதரைகளில் ஜூலை௴ முதல் நவம்பர்௴ வரையிலும், மலைகளில் மார்ச்சு௴ முதல் ஜூன்௴ வரையிலும் பயிர்செய்யலாம். முதலில் விதைகளைப் பாவி, முளை மூன்று நான்கு அங்குல உயரம் வந்ததும் பிடுங்கித் தனித்தனியாக, இரண்டு அடி விட்டு வரிசை வரிசையாக நடவும். வரிசைகளுக்கு இடையில் மூன்று அடி இடம் கிடக்க வேண்டும். ஒவ்வொரு கன்றையும் ஆறு அடி உயரமுள்ள கம்புகளில் சேர்த்துக் கட்டவேண்டும். கிளைகளின் நுனிகளைக்கிள்ளவேண்டும். பழம் பெரிதாக ஆக திரவமான உரத்தையே போடவேண்டும். பழம் பெருக்க வேண்டுமானால் சில காய்களை இடையிலேயே கிள்ளிவிடவும். நோயுள்ள முளைகளை உடனே பிடுங்கி எறியவும். வாரம் ஒரு முறை பொடாஷியம் பெர்மின்கனேட் கலந்த தண்ணீரைத்தெளித்தால் பூச்சி வராது.

---



# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

### பிரஸங்கம் 108—(5-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ...15, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை | 6.45 |
| | 16, ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் ... | ,, | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| | 17, திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | தொலையானூர் ... | ,, | 6.30 |
| | 18, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | குளவாய்ப்பட்டி ... | மாலை | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| | 19, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் (பிராஞ்சு ஸ்கூல்) | ,, | 10.15 |
| | | வெள்ளனூர் ... | மாலை | 6.00 |
| | | செம்பாட்டூர் ... | ,, | 6.30 |
| | 20, வியாழக்கிழமை ... | பள்ளிவாசல் ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| | 21, வெள்ளிக்கிழமை... | புலியூர் ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 109—(1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 22, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 23, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| 24, திங்கட்கிழமை ... | திருமயம் ... | ,, | 6.00 |
| | மேலூர் ... | ,, | 6.30 |
| 27, வியாழக்கிழமை ... | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| 28, வெள்ளிக்கிழமை... | அரிமளம் ... | ,, | 6.00 |
| | கீமாரிகைக்கோட்டை. ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டு பத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 15— 8—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 16— 8—42 | ... | தீத்தான்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 17— 8—42 | ... | முள்ளங்குரிச்சி. |
| செவ்வாய்க்கிழமை | ... | 18— 8—42 | ... | ராமச்சந்திரபுரம். |
| புதன்கிழமை | ... | 19— 8—42 | ... | கரம்பக்குடி. |
| வியாழக்கிழமை | ... | 20— 8—42 | ... | ஆலங்குடி. |
| வெள்ளிக்கிழமை | ... | 21— 8—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 22— 8—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 23— 8—42 | ... | வம்பல். |
| திங்கட்கிழமை | ... | 24— 8—42 | ... | கொன்னையூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 25— 8—42 | ... | பொம்பூர். |
| புதன்கிழமை | ... | 26— 8—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 27— 8—42 | ... | குளிபிறை. |
| வெள்ளிக்கிழமை | ... | 28— 8—42 | ... | பாப்பாபட்டி. |

**விளம்பரம்.**

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்ததும்

**நகர நெருப்பணைக்கும் படை**

என்று பெயர் விளங்கிய ஒரு யுத்தப்படம்

**புதுக்கோட்டை ராஜா டாக்கீஸில்**

ஆகஸ்டுமீ 28௳ முதல் 31௳ முடிய நான்கு நாட்கள் காண்பிக்கப்படும்.

**புதுக்கோட்டை தேசீய யுத்த முன்னணி நிலயம்**

இந்தப்படத்தை ஜனங்களுக்கு சிபார்சு செய்கிறது.

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—17-8-42.

## புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ ஆகஸ்டு ௴ 22௳ [ந. 109

பிரஸங்கம் CIX.

## முன்னும் பின்னும்.

*(லண்டன் டைம்ஸ்).*

இக்காலத்திய அரசியல் வாழ்க்கையின் அடிப்படையான பிரச்னை என்னவென்றால் ஒருவிதமாக அரசியல் திட்டத்தை அமைத்துக்கொண்டு, அதிலிருந்து கிடைக்கும் அரும்பெரும் நன்மைகளைக்கொண்டு மனிதவர்க்கத்திற்கு எவ்வாறு உதவவேண்டுமென்பதுதான். அதாவது மனித வர்க்கம் முழுமையையும் ஒன்று சேர்த்துக்கொண்டு அதன் மூலம் நிரந்தரமான சமாதானத்தை எவ்வாறு அமைத்துக்கொள்ள முடியும் என்பதுதான். அதிகமாக தேசீய நோக்கங்களைக் கொண்டால் மனித வர்க்கத்திற்கு தீங்கு ஏற்படும். இதைச் சரிவர கவனிக்காததால் விளைந்துள்ள தீங்குகளுக்கு பயங்கரமான திருஷ்டாந்தங்களை உலகம் கண்டுவருகிறது. உதாரணமாக எல்லா தர்ம வழிகளுக்கும் தேசத்தினர் தான் காரணம் என்றும், அவர்களை அடக்குவதுதான் தேசாபிமானியின் கடமையென்றும் சொல்லுவது மிகக்கொடுமையான அபிப்பிராயமாகும். இது கேவலம் ஆத்ம பூஜையை விரும்பும் நோக்கமே. இவ்வித கொள்கையால்தான் உலகத்திற்கே தீங்கு விளைந்திருக்கிறது. இதுவே ஹிட்லரின் கொள்கை. அதை எதிர்த்துத்தான் நாம் போர் புரிகிறோம். இவ்வித கர்வ சிந்தனைகளும், சுயநலம் பாராட்டும் கொள்கையும் ஒழிந்த பிறகு, உலகில் தேசாபிமானத்திற்குத் தகுந்தவிதமான ஸ்தாபனங்கள் பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்தினால் ஏற்படுத்தப்படும். இதற்கு அனுசரணையாகவே மற்ற நாடுகளின் விஸ்வாசமும் பிணைக்கப்படும்.

இந்த நூற்றாண்டிலேயே இந்தப் பிரச்னை கண்டுகொள்ளப்பட்டு அதற்குத் தகுந்த உபாயமும் காணப்பட்டுவருகிறது. இத்துறையில் ஸர்வதேசச் சங்கமென்பது முதலில் செய்யப்பட்ட பிரயத்தனமாகும். அதைப்போல் ருஷ்யாவில் வசிக்கும் பலவித ஜாதியினரை ஒன்று சேர்ப்பதற்கான திட்டம் ருஷ்யாவில் காணப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் இதற்கு ஒரு திருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு ஸர்வதேச பிடரேஷன் ஒன்றை அமைப்பதற்கு ஆவல்கொண்ட நிபுணர்கள் பிரயத்தனப்பட்டுவருகின்றனர். ஐரோப்பாவிலுள்ள சில நாடுகள் இவ்வித திட்டத்தை பரஸ்பரம் ஸ்தாபிக்க முயலுகின்றன. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையே இதற்கு அனுகுணமான அம்சமென்றே கருதலாம். சாம்ராஜ்யம் என்ற வார்த்தை 2,000 வருஷங்களுக்கு முன்பு ரோமர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பிற்பட்டு அதற்குப் பலவிதமான அர்த்தங்களும் கொடுக்கப்பட்டது. ஆனால் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு தனிப்பட்ட அம்சம் காணப்படுகிறது. முன் காலத்திய சாம்ராஜ்யங்களில் தேசங்களின் எல்லைகளை அதிகப்படுத்துவது தான் நோக்கம். ஆனால் பரஸ்பரம் மனிதர்களுக்கும் ஜன சமூகங்களுக்கும்

உள்ள சம்பந்தம் ஸிவில் ஆட்சி மூலம் நடத்தப்பட்டது. ஆனால் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் லக்ஷியமோவெனில் ஜனங்களுக்கு ஸ்வதந்திரத்தைக் கொடுத்து அதன்படி ஒரு ஒற்றுமையை ஸ்தாபிப்பதுதான். அதுவே பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் முக்கிய தன்மையாகும்.

மேலும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் ஜனங்களின் சமூகத்தை ஒழுங்குபடுத்தி அமைப்பதால் சட்டத்தை ஆதாரமாகக்கொண்டு ஜன சமூகம் பலாத்காரத்தை எதிர்க்க முடிகிறது. அதோடு அயல் நாட்டு பலாத்காரம் ஏற்படுமேயாகில் சாம்ராஜ்யத்திலுள்ள பல நாடுகள் ஒன்றுக்கொன்று உதவிக்கொண்டு அதையும் எதிர்க்க முடிகிறது. ஜெர்மன் கொள்கைக்கும், சாம்ராஜ்யக் கொள்கைக்கும் எதிரிடையாக இருப்பதால் முன் சொல்லிய விஷயங்களை பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் சாதிக்க முடிகிறது. ஜெர்மன் மக்களுக்கு 'வசிக்க அதிக இடம் தேவை' என்பதுதான் ஜெர்மானியரின் கொள்கை. 8,50,00,000 ஜெர்மானியர் 6,00,000 சதுர கிலோமீடர் பிரதேசத்தில் வசிக்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறதாம். ஆனால் 4,60,00,000 இங்கிலீஷ் மக்கள் பூமியின் ஐந்தில் ஒரு பங்கை ஆளுகின்றனர். இதற்குக் காரணமென்னவென்றால் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் வசிக்கும் கோடிக்கணக்கான பேருக்கு ஸ்வதந்திரத்துடன் கூடிய பல வசதிகள் இருக்கின்றன. இங்கே சமூகம், பரஸ்பர நன்மைக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. தாய் நாட்டின் நன்மையைப்போல் இதர நாடுகளும் கருதப்படுகின்றன. பிரிடன் இவ்விஷயங்களையும், இவைபோன்றவைகளையும் நடத்திக் காண்பித்திருக்கிறது. சாம்ராஜ்யத்தின் இதர நாடுகளும் அவைகளை உதாரணமாகக்கொண்டு பூர்ண தேசீயத் தன்மையை அடைந்திருக்கின்றன. ஜெர்மானியர்களோ இடவசதி என்ற பெயருடன் இதர நாடுகளை ஆக்கிரமிக்கின்றனர். பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலோவெனில் பிரகிருதமுள்ள சுயஆட்சி பொருந்திய குடியேற்ற நாடுகள் பிரிடனுடன் நட்பைக்கொள்ளுவதோடு, தங்களுக்குள்ள சுயேச்சையினால் எதிரியை எதிர்க்கவும் முற்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஆஸ்திரேலியாவையும், நியூஸீலாந்தையும் பார்க்கலாம். இந்தியாவிற்கும் அவ்வித ஸ்வதந்திரம் அளிக்கப்படுவதான உறுதிமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒருவித பந்தகமுமில்லாத ஸ்வதந்திர நாடாகும். இந்தியத் தலைவர்களின் வசத்தில் இதர குடியேற்ற நாடுகளின் பொறுப்புகளும், ஸ்வதந்திர உரிமைகளும் வந்துவிடும்.

ஆனால் சாம்ராஜ்யத்தில் அடங்கியிருப்பதால் பரஸ்பரம் ஒரு நன்மையை அடைவதுபோல், இந்த நன்மையை வேறுவிதமாக அடையமுடியாது. அதாவது தனித்து நிற்க முடியாது. ஏனென்றால் தனித்துநின்று அதன் மூலம் ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கமுயன்ற கொள்கைகளெல்லாம் பலிக்கவில்லை. சாம்ராஜ்யத்தின் சரியான கொள்கையின்படி யாவும் ஒன்றுபட்டு நின்று அதனால் சாதகம் பெறமுடியும். சரியானபடி முன்னேற்றமடைய வேண்டுமானால் சாம்ராஜ்யத்திலுள்ள நாடுகளுக்குள், பொதுவான முயற்சி இருக்கவேண்டும். ஸ்வதந்திரத்தினால் நன்மையை அடைய விரும்பும் இதரர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். எல்லா நாடுகளின் நன்மையை உத்தேசித்து விளைபொருள்களைச் சேகரிக்கவேண்டும். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் வரும் காலத்தை கவனிக்கும்கால் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சில விஷயங்களில் ஒன்றுபட்டுத்தான் இருக்கும். லக்ஷியங்களும் ஒன்றாகவே காணப்படுகின்றன. ஆகவே கட்டுப்பாடுகளை நிவர்த்தித்துக்கொண்டு தேசீய லக்ஷியங்களை ஒன்றுபடுத்திக்கொண்டால் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகள் சரியாக நடந்துகொண்டதாக ஆகும்.

ஏனென்றால் சாம்ராஜ்யச் சட்டமென்பது முன்னேற்றம், மாறுதல் இவைகளைச் சாதிக்கக்கூடியது. முதன்முதலில் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் ஆத்மீக சக்தி 18-வது நூற்றாண்டில் நடந்த கலகங்களிலிருந்து எஞ்சியதென்பது எல்லா இங்கிலீஷ்காரர்களுக்கும், அமெரிக்கர்களுக்கும் தெரிந்ததுதான. தற்போது நடக்கும் யுத்தமானது, யாவருக்கும் பொதுப்படையான ஸ்வதந்திரம், சுயஆட்சி, பொதுவான சட்டதிட்டம் முதலியவைகளைக் காக்கவே புரியப்படுகிறது. இதுவும் அவர்களுக்குத் தெரியும். ஆகவே தற்சமயத்தில் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் அரசியல் ஒற்றுமை என்ற கருவி நீடித்திருக்கக்கூடியதாகவும், நம்பிக்கையுடனும் அமைக்கப்பட்டிருக்கிறது. பொதுவான அதிகாரத்திற்கு உட்பட்டிருப்பது என்பது தீவிரமாகக் காணப்படுகிறது. வருங்காலத்தில் உலகத்தை அமைப்பதற்கு உதவ அதிசம் உருதி கூறப்படுகிறது. இதுதான் முன்னேற்றத்தைப் பற்றிய அம்சங்கள். மாறுதல் என்பது வருங்காலத்தில் குடியேற்ற நாடுகளை அமைப்பதில் காணப்படும். அதாவது யுத்தத்தில் எஞ்சிய நாடுகளையும், ஜப்பானின் கீழ் அகப்பட்டுக்கொண்டிருக்கும் நாடுகளுக்கும் அவ்வித மாறுதல் ஏற்படும். முக்கியமாக இந்த நாடுகளில் அரசியல், பொருளாதாரம் முதலியவைகளில் பூர்ண ஸ்வதந்திரம் பெறுவதற்காக பிரிடிஷ் சாம்ராஜ்யம் தகுந்தவிதமாக உதவிசெய்யும். 20-வது நூற்றாண்டில் காணப்படும் பிரச்னைகளில் இதுவே முதலில் தீர்மானிக்கப்படும். அதாவது அரசியலில் அதிக முன்னேற்றமடைந்த நாடு சிறிய நாடுகளை ஆக்கிரமிக்காமல் செய்யப்படும். இதனால் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் கட்டுப்பாடுகள் மீறப்பட்டு, இதர குடியேற்ற நாடுகளின் அனுபவம் பயன்படுத்தப்படும். யுத்தத்திற்குப் பிறகு இவ்விஷயமே சர்வதேசங்களின் கவனத்தையும் இழுக்கும். இதே நிலைமைதான் 1919-ல் காணப்பட்டது. அந்த சமயத்தில் (Mandates) என்ற முறைப்படி டிரஸ்டி என்ற ஹோதாவில் பிரிடன் குடியேற்ற நாடுகளை ஆட்சிபுரிந்துவந்தது. இவ்வபிப்பிராயத்தை ஒரு பெரிய இங்கிலீஷ் நிபுணர் விருத்தி செய்தார். அதன்படி ஜனங்களுக்கும் ஒரு பங்கு ஏற்பட்டது. இதைப்போன்ற இதர முன்னேற்றங்களும் கொடுக்கப்பட்டு பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் யாவருக்கும் பொதுவான உரிமைகள் வழங்கப்பட்டன. இருந்தாலும் இந்த யுத்தத்தால் பிரிடிஷ் குடியேற்ற நாட்டுத் திட்டத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அத்திட்டத்தில் ஏற்கனவே இருந்த குறைகளெல்லாம் வெளிவந்தன. இதற்குமுன் விபத்துகள் ஏற்பட்டகாலத்தில் பரிசிரமப்பட்டு திட்டங்களை அமைத்த மாதிரி தற்போதும் அதே ஊக்கத்துடன் அனுபவத்தை ஒட்டி திட்டங்களை அமைத்துக்கொள்ளவேண்டும்.



சாம்ராஜ்ய தின விழா மற்றொன்று கடந்துவிட்டது. மற்றும் ஒரு வருஷம் எதிர்பாராத நஷ்டங்கள் விளைந்திருக்கின்றன. ஆகவே இதுவரை நடந்ததையும் இனி நடக்கவிருப்பவைகளையும் ஆராய்ச்சி செய்வது கௌரவத்திற்கும், நமது தீர்மானத்திற்கும் தகுந்ததாகும். நமது சாம்ராஜ்யத்தில் காணப்படும் பல முக்கிய அம்சங்கள் அனுபவத்தின் பேரிலும், பயிற்சியின் பேரிலும்தான் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைக்கொண்டு வருங்கால திட்டத்தை அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. அந்த மனப்பான்மை சற்றும் குறையாமல் இன்னும் இருந்துவருகிறது. இதைக்கொண்டே வருங்காலத்திய உலகை அமைக்க சாதகமாக இருக்கும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

## 14—8—42-லிருந்து 21—8—42-வரை.

**ருஷ்யா.**—டான் வளைவு, தெற்கு கூபான் (Kuban) காகஸஸ் ஆகிய இவ்விடங்களிலேதான் முக்கியமாகப் போர் நடந்து வருகிறது.

ஆரம்பத்தில் சிறிது தோல்வியடைந்து ஜெர்மானியர் மீண்டும் எத்தனப்பட்டு கெல்ஸ்க்காயாவுக்கருகில் ருஷ்யச் சைனியத்தைப் பிளந்து ஸ்டாலின்கிராடுக்கு 40 மைல் தூரத்தில் நதியின் மேற்குக் கரையை அடைந்திருக்கின்றனர்.

ஸ்டாலின்கிராட்டை நோக்கி செய்யப்படும் ஜெர்மனியின் பின்ஸர் தாக்குதலின் மறு போர்முனையான கோடெல்நிகோவோ (Kotelnikovo) வில் எதிரியின் முன்னேற்றம் தடைப்பட்டுவிட்டது.

சென்ற வாரத்தில் சொன்ன பிரகாரம் கோடெல்நிகோவோ (Kotelnikovo) வில் புதிய தாக்குதல் ஏற்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தாக்குதலால் ஸ்டாலின்கிராட்டைப் பிடித்து ஆஸ்ட்ரகானைப்போய்ச் சேருவதுதான் நோக்கம்.

காகஸஸில் கருங்கடல் ஓரமாக கூபானை ஜெர்மானியர் கடந்து மெய்காப்பையையும், கிராஸ்னடாரையும் எதிரிகள் பிடித்துள்ளனர். மினரால்நிவோடியையும்

அடைந்துள்ளனர். இது ரோஸ்னியிலிருந்து 150 மைல் தூரத்திலிருக்கிறது. மினரால்நிவோடி என்பது கருங்கடலுக்கும், காஸ்பியன் கடலுக்கும் மத்தியிலிருக்கிறது. இதற்கருகில் தான் காகஸஸின் உயர்ந்த சிகரமான எல்பர்ஸ் இருக்கிறது. வான்பாக் இதைக் கடந்து கருங்கடல் பக்கமாக போவது அசாத்தியமான காரியம்.

மற்ற பாகங்களில், அதாவது ரிஜெவ, லெனின்கிராட், பிரியான்ஸ்க், வாரனேஷ் இவைகளில் ருஷ்யத் தாக்குதல்கள் ஏற்பட்டு எதிரி தடையுற்றிருக்கிறான்.

பின்லாந்து குடாவில் எதிரியின் ஒரு நீர்மூழ்கியும், பாரண்டு கடலில் 28,000 டன் நிறையுள்ள 3 போக்குவரத்துக் கப்பல்களும், கருங்கடலில் 27,000 டன் நிறையுள்ள 5 போக்குவரத்துக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

ஸெமனோவோ, ஜுபியிவோ, ஜார்க்கி முதலிய ருஷ்ய கிராமங்களை ஜெர்மானியர் அடியோடு அழித்துவிட்டனர்.

**எகிப்து.**-நிலைமைகளை ஸ்வாதீனப்படுத்துவதற்கான சண்டைகள் நிகழ்கின்றன. பிரிடிஷ் விமானப்படை ரோட்ஸ் தீவில் கலடோவையும், டொப்ரூக், ஸோலூம், இவைகளிலுள்ள கப்பல்களையும் தாக்கியது. கிரீஸில், நவாரினோ துறைமுகத்தை அமெரிக்கச் சைனிய விமானப்படை தாக்கியது. ஐந்து சிறு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இன்னும் சில ஆபிரிக்கக் கடற்கரையோரமாக சேதமாக்கப்பட்டன.

ஜெனரல் ஆச்சின்லெக்கின் ஸ்தானத்திற்கு, ஜெனரல் அலெக்ஸாண்டர் மத்தியக்கிழக்கு தளகர்த்தராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரிடிஷ் 8-வது படையின் தலைவரான ஜெனரல் ரிட்சியின் ஸ்தானத்தை மான்ட்கமரி என்பவர் வகிக்கிறார்.

**விமானத் தாக்குதல்கள்** மேற்கு ஐரோப்பாவில் இடைவிடாமல் நடைபெறுகின்றன. பிரிடிஷ் விமானப்படை அமெரிக்கச் சைனிய விமானப் படையுடன் கலந்துகொண்டு இத்தாக்குதல்களைச் செய்கிறது. இவ்வாரத்தில் ரைன்லாந்தில் நிலக்கரி தொழிற்சாலை லக்ஷியமான ஏஷன் தாக்கப்பட்டது.

ரயில்வே தாக்குதலில் பிரிடிஷ் விமானப்படை அதிகம் ஈடுபட்டிருந்தது. ஏப்ரல் 30-ம் தேதி முதல் எதிரிநாட்டில் ரயில் வண்டிகளைத் தாக்கும் ஸ்பிட்பையர், ஹரிகேன் விமானப் பகுதிகள் ஆக்கிரமித்த பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் முதலியவைகளை இடைவிடாமல் தாக்கி ரயில்வே எஞ்ஜின் முதலியவைகளை அழித்தன. மலைப்பாதைகளிலிருந்து ரயில் வண்டிகள் வெளிவரும் சமயத்தைப் பார்த்து தாக்குதல் செய்யப்படுகிறது. ஓர் இரவில் பைடர் பகுதி ஒன்று நார்டு ரயில்வேயில் 23 ரயில் வண்டிகளைச் சேதப்படுத்தியிருக்கின்றது.

**டியப் (Dieppe).**—19-ம் தேதியில் டியப்பில் பிரிடிஷ் படைகள் இறங்கி அதன் பிறகும் 9 மணி அவகாசம் பகல் காலத்தில் பெரும் தாக்குதலைச் செய்தன.

**சைனு.**—கிழக்குக் கியாங்ஸி மாகாணத்தில் ஹாங்ஜாவோவிலுள்ள ஜப்பானியப்படை ஹெங்பெங்கை நோக்கி முன்னேறியது. அந்த இடத்தில் தான் சீனர்கள் செகிங்—கியாங்ஸி இருப்புப் பாதையைத் துண்டித்தனர்.

கிழக்குச் செகியாங் மகாணத்தில் ஸுங்யாங்கிலுள்ள ஜப்பானியப் படை ஸுசாங்கை நோக்கி முன்னேறியது. அங்கே கடும்போர் நிகழ்கிறது.

துங்ஸியாங்கிலிருந்து லின்ச்வானை நோக்கியும் ஒரு ஜப்பானியப் படை முன்னேறியது. ஹுவானுக்கு அருகில் சண்டை நடக்கிறது. வடகிழக்கு ஹுனான் மகாணத்தில் யூசௌவை அமெரிக்க விமானங்கள் தாக்கின. இந்தோ சைனாவில் ஹெய்பாங், ஹானாய் இவ்விரண்டையும் சீனர்கள் தாக்கினார்கள்.

**பஸிபிக்.**—1. ஸாலமன்: அமெரிக்கக் கப்பல்கள் 5,000 சதுரமைலுள்ள மூன்று தீவுகளை வியாபித்து அவைகளை ஸ்வாதீனப்படுத்திவருகின்றன. அதில் டுலாகி என்பது ஒன்று. இன்னும் சில தீவுகள் பூரா வசப்படுத்தப்பட்டன. ஒரு ஜப்பானிய விமான தளமும் ஆக்கிரமிக்கப்பட்டது. இங்கு நடக்கும் சண்டை



ஆகருமங்கும் பலதீவுகளைப்பற்றியதாக இருக்கும். சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி நேசதேசங்களுக்குச் சாதகமாக இருக்கிறது.

**2. நியூ கினி.**—கோகோடாவுக்குக் கொண்டுவரப்பட்ட ஜப்பானிய உதவிகளும், ஜப்பானியத் துணைக்கப்பற் கூட்டமும் தாக்கப்பட்டது.

3. **அலூஷியன்.**—கடந்த சனிக்கிழமை கிஸ்காவை அமெரிக்கப் படை தாக்கி ஒரு நாசகாரி தீமூண்டது. ஒரு சாமான் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. மற்றும் இரண்டு கப்பல்கள் சேதமாயின.

**மத்தியதரைக்கடல்.**—மால்டாவிற்கு ஒரு துணைக்கப்பற் கூட்டம் பத்திரமாக சென்றதே இவ்வாரத்திய முக்கிய சம்பவம். எதிரி 'யூ' படகுகளும், பாய்ந்து தாக்கும் விமானங்களும் தாக்கின. ஆனால் டிரேனியன் கடலிலிருந்த இதாலிய க்ரூயிஸர்கள் கலந்து கொள்ளவில்லை. ஒரு எதிரிப்படகு மூழ்கடிக்கப்பட்டது. மற்றொன்று சேதமாயிற்று. பிரிடனுக்கு ஈகிள் என்ற விமானமேற்றும் கப்பலும், மான்சேஸ்டர் என்ற க்ரூயிஸரும் சேதம்.

**பலவகைப்பட்டவை.**—1. ஆகஸ்டு 14-ம் தேதி உற்பத்தி இலாக மந்திரி காப்டன் ஆலிவர் லிட்டில்டன் என்பவர் பின்வருமாறு சொன்னார்:—'நேச தேசங்களின் கடலாதிக்கம் கெட்டுவிடவில்லை. கப்பல் நஷ்டமும், ஜுலையில் குறைந்திருக்கிறது. யூ படகுகளையும் கடந்த இரண்டு மூன்று வாரங்களாக அழித்துவரப்படுகிறது.

2. அமெரிக்காவிற்கும், பிரெஞ்சு வட ஆபிரிக்காவிற்கும் தற்சயம் சாமான்களின் பரிவர்த்தனை செய்யப்பட்டது. லவால் அதிகாரத்திற்கு வந்தது முதல் இது நிறுத்தப்பட்டிருந்தது.

3. 300 பிரெஞ்சுக்காரர்கள் மார்டின்கூவிலிருந்து தப்பி டிகால் கட்சியுடன் சேர்ந்திருக்கிறார்கள்.

4. 70,000 யூதர்கள் மின்ஸ்கில் கொல்லப்பட்டார்கள். இதைப்பற்றி பிரதிநிதி சபையின் தலைவரான மிஸ்டர் ஸால் ப்ளூம் என்பவர் சொல்லுவதாவது:—'மனிதனின் புத்தியால் எதிர் பார்க்கமுடியாத கொலையாகும். மனிதர்கள் என்று சொல்லிக்கொண்டு, இவ்விதக் காட்டுமிராண்டித்தனத்தில் ஈடுபடுவது புத்திக்கு எட்டாததாக இருக்கிறது.'

5. போர்ச்சுகீஸ் அரசாங்கம் அஸாரஸ்ஸையும், மடீராவையும் ராணுவ ஆதிக்கத்தில் வைத்துள்ளனர்.

6. சர்ச்சில் 'மாஸ்கோவில் ஸ்டாலினைக் கண்டு பேசினார். அந்த சமயத்தில் 20 பிரதிநிதிகள் வந்திருந்தனர். வேவல், ஒரோஷிலாவ், அவெரல் ஹாரிமன் முதலியோர் முக்கியமானவர்கள். புதன்கிழமை முதல், சனிக்கிழமை வரை பேச்சு வார்த்தை நடந்தது. ராணுவ தந்திரத்தைப் பற்றிய பிரச்னைகளும், இரண்டாம் போர்முனையைப் பற்றியும், கண்டங்களைப் பற்றிய தந்திரங்களும், சர்ச்சை செய்யப்பட்டன.

பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பிரிடனும், ருஷ்யாவும் 'எவ்வித சிரமங்களிலிருந்தாலும், ஹிட்லர் அடியோடு அழியும்வரை ஒன்றுபட்டு நின்று யுத்தத்தை நடத்துவதெனத் தீர்மானித்தன.'

மாஸ்கோவிற்கு போகுமுன் மிஸ்டர் சர்ச்சில் குடியேற்ற நாட்டு மந்திரிகளுடன் கலந்து பேசினார். கெய்ரோவில் ஜெனரல் ஸ்மட்ஸ், ஜெனரல் டி-கால், ஸர். சிகந்தர் ஹயத்கான், எகிப்து பிரதம மந்திரி முதலியோரையும் கண்டு பேசினார்.

7. பிரஸீல் கப்பல்களை அச்சுநாட்டு நீர்மூழ்கிகள் மூழ்கடித்தன. இதற்குப் பிரதியாக அச்சுநாட்டுக் கப்பல்களைக் கைப்பற்றுவதாக ஜனாதிபதி வார்கஸ் பயமுறுத்தியிருக்கிறார்.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **10—8—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டொப்ருக் (Tobruk) போக்குவரத்து வண்டிகள், முகாம்கள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | எதிரிக் கப்பல்கள்—வட ஆபிரிக்க கடற்கரைக்கருகாமையில். | ஒரு சிறு கப்பல். | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்தப் பிரதேசம் எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | கட்டடங்கள், மோட்டார் லாரிகள்—கலேவா Kalewa)க் கருகாமையில். | | | |
| | 20 மேன்கூரை போட்ட படகுகள்—மியிட்டா (Myittha) நதியில். | | | |
| | **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஹான்கௌ (Hankow). | | | |
| | **டிமோர் (Timor)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்—டிமோருக் கருகாமையில். | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. | | |
| | **கிரீஸ் (Greece)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இதாலிய க்ரூயிஸர்கள்—நவாரிநோ (Navarino) துறைமுகத்தில். | 3 க்ரூயிஸர்கள் தாக்குண்டன. | | |
| **11—8—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | 1 விமானம். | |
| | இரவில்.—மெய்ன்ஸ் (Mainz) தொழிற்சாலைப் பிரதேசம், ரயில்வே, நதி போக்குவரத்து ஸ்தலம், ரைன்லாந்து (Rhineland). | முக்கிய பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | லக்ஷியங்கள்.—காப்ளென்ஸ் (Coblenz). | | | |
| | கப்பல் துறைகள்—லெஹாவர் (Lehavre). | | 16 பாம்பர் விமானங்கள். | |
| | விமான தளங்கள்—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஸிடிபாராணி (Sidi Barrani). | | | |
| | விமானமிறங்குமிடங்கள்—டாபா (Daba) பிரதேசத்தில். | | | |
| | விரோதி டாங்கிகள், கவசம்பூண்ட வண்டிகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **11—8—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—யுத்தப் பிரதேசமுழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | நதியில் செல்லும் கப்பல்—டோங்கூ (Toungou)வுக் கருகாமையில். | | | |
| | கட்டடங்கள்—வேயர் (Wayr) நதியும், மியிட்டா (Myittha) நதியும் சேருமிடத்தில். | | நஷ்டமில்லை. | |
| | **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | யோசௌ (Yochow). | | | |
| | விமான தளம்.—நான்சாங் (Nanchang). | | | 2 விமானங்கள். |
| | **நியூ பிரிடன் (New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்.—ராபால் (Rabaul). | | | |
| | வேவுபார்த்தல்.—விரோதி ஆக்கிரமித்த இடங்களில். | | | |
| **12-8-42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தொழிற்சாலைப் பிரதேசம்.—மெய்ன்ஸ் (Mainz), ரைன்லாந்து (Rhineland). | | | |
| | விமான தளங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries) சுரங்க வெடிகள் போடுவது. | | 5 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகத்திலுள்ள கட்டடங்கள், கப்பல்கள், கட்டடங்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | நேசதேச விமானத் தாக்குதல்களைப்பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **13-8-42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—சுரங்கவெடிபோடுதல்—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டாங்கிகள், மோட்டார் வண்டிகளின் கூட்டம்-எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில். | | | |
| | படகுகள்.—ஸிடிபாராணி (Sidi Barrani)க்கருகாமையில். | | | |
| | வேவுபார்த்தல்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **13—8—42.** (வியாழக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச்சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர் முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | விரோதி யுத்தக் கப்பல்கள், போக்குவரத்து.—நியூ கினி (New Guinea) பிரதேசத்தில். | | நஷ்டமில்லை. | 4 விமானம். |
| | வேவுபார்த்தல்.—வடமேற்குப் பகுதியில். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பற் கூட்டம்.—ராபாலு (Rabaul)க்கருகாமையில். | | | |
| **14—8—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—சுரங்கவெடி போடுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரக் கரையோரம். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கடற்கரை ஓரமாகச் சென்று கொண்டிருக்கும் விரோதிக்குச் சொந்தமான படகுகள். | 5 படகுகள் மூழ்கடிக்கப் பட்டன. | | |
| | விரோதி முகாம்கள், போக்குவரத்து, பீரங்கி ஸ்தானங்கள், விமானமிறங்குமிடங்கள்.—எல்டாபா (El Daba), பூகா (Fuka) பிரதேசங்கள். | | | |
| | **ரோட்ஸ் (Rhodes)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நிலயங்கள்.—ரோட்ஸ் (Rhodes). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக் கப்பல்கள், போக்குவரத்து—நியூ கினி (New Guinea) பிரதேசத்தில். | | | |
| | **தென்மேற்கு பஸிபிக்-(S. W. Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசங்களில். | | | |
| **15—8—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்-ராணுவ லக்ஷியங்கள், தொழிற் சாலைகள்.—மேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | சுரங்க வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **15—8—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—மெர்ஸாமாட்ரூ (Mersa Matruh)க் கருகாமையில். | 3 கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன. | | |
| | [illegible]ாப்ருக் (Tobruk). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | ஆகஸ்டு 8, முதல் 15 வரையுள்ள வாரத்தில். | 249 விமானங்கள். | 369 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி தளங்கள்.—டிமோர் Timor). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | வேவு பார்த்தல்.-லே (Lae), ஸலாமூவா (Salamaua). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன்(New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | யுத்தக் கப்பல்கள் காவல் புரியப்பட்ட விரோதிக் கப்பல்கள்.—நியூ பிரிடனு (New Britain)க் கருகாமையில். | | | |
| **16—8—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்—ரயில்வே போக்குவரத்து.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France) சாமான் ரயில் வண்டிகள்.—ஊஸ்ட்ரெஹாம் (Ouistreham). | | நஷ்டமில்லை. | |
| | இரவில்.-சுரங்கவெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிப் படகுகள்.—ஆபிரிக்கக் (Africa) கடற்கரைக்கருகாமையில். | | | |
| | விரோதி டாங்கிகள், கவசம்பூண்ட வண்டிகள், இன்னும் மற்ற வண்டிகள்.—எல் அலமீன் (El Alamein). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டிமோர் (Timor) தென்கிழக்குக் கடற்கரையிலுள்ள ஒரு பட்டணம். | | | |
| | **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகங்கள், விமான நிலயங்கள்.—இரண்டு பிரதேசங்களில். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **11—8—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—தெற்கு இங்கிலாந்(England)ல் ஒரு பட்டணமும், தென்கிழக்குக் கடற்கரையில் மற்றொரு பட்டணமும். | | | |
| | இரவில்.—தென்கிழக்கு இங்கிலாந்தி(England)ல் ஒரு இடம். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| **12—8—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.-வடகிழக்கு, தென்மேற்குக் கடற்கரைகள்—இங்கிலாந்து (England). | | | |
| | இரவில்.—தென்மேற்கு ஸ்காத்லாந்தி (Scotland)ல் இரண்டு இடங்கள். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| **13—8—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ருஷ்ய சைனியத்திற்குப் பின்புறத்திலுள்ள ருஷ்யப் பட்டணங்கள். | | | |
| **14—8—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia) விலுள்ள இடங்கள், தேம்ஸ் நதியின் முகத்வாரம். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **15—8—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)** (ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—தென்கிழக்குக் கடற்கரையில் ஒரு பட்டணம். | | | |
| | இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia)வில் ஒரு பட்டணம். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | | 3 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—8—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), வடகிழக்கு இங்கிலாந்து (England)லுள்ள கடற்கரைப் பிரதேசங்கள். | மிகவும் சொற்பச் சேதம். | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டை—ஸிடிபராணி (Sidi Barrani). | துருப்பு ஏற்றிச் சென்ற 2 விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன. | | |
| **17—8—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | இரவில்.—மிட்லாந்து (Midlands). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

---

## யுத்தக் குறிப்புகள்.

**கலகங்கள் நிறைந்த வாரம்.** விஷமம் கிளர்ச்சி யுற்றிருக்கிறது. அரசியல் வாதம் கலகத்தைத்தலைதூக்க விட்டிருக்கிறது. இதுவரை நமது அனுபவத்தில் தேசத்தில் இம்மாதிரியான கலவரம் நிகழ்ந்ததேயில்லை. காவாலிகளும், கலகக்காரர்களும் உத்ஸாகமாகத் திறிகின்றனர். தேசாபிமானம் என்ற பெயரை வைத்துக்கொண்டு பூதகன முறையைக் கையாண்டு வருகின்றனர். பூதகன முறை என்பது எதிரி வசமாகாமல் இருப்பதற்காக ராணுவத்தினர் சில முக்கிய ஸ்தலங்களை அழிப்பதற்கு வழங்கப்படும் பெயர். ஆனால் தற்சமயத்தில் வேணுமென்றும், அக்கரையில்லாமலும் சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன. கொள்ளை ஏற்பட்டிருக்கிறது. ஸர்க்கார் கட்டடங்களும், ஆபீஸ்களும் எரிக்கப்படுகின்றன. டெலிபோன், தந்தி போக்குவரவு தடுக்கப்படுகின்றன. பொது ரஸ்தாக்கள் தடைப்பட்டிருக்கின்றன. சுருங்கச்சொல்லில் சூழ்ச்சிகளும், கலகக்கார ஆட்சியும் ஏற்பட்டுள்ளன.

இவையாவுக்கும் ஒரு விடை தான். அதாவது இவ்வித குழப்பம் அடியோடு அடக்கப்படவேண்டும். அது பொதுஜனங்களும் அரசாங்கத்தினருக்கும் ஏற்பட்ட கடமையாகும். தங்கள் சரீரம், வீடு, நாடு முதலியவைகளைக் காக்க விரும்பும் யாவரும் இதை அடக்க உதவி, ஒத்துழைக்கவேண்டும்.

இதுவரை அரசாங்கத்தினர் கலகத்தைத் தடுக்கும் முயற்சிகளையே எடுத்து வந்துள்ளனர். தண்டனை முறைகளைக் கையாளவில்லை. இதற்குத் தகுந்த ஆயுதங்கள் இல்லை என்று நினைத்துவிடக்கூடாது. தற்சமயத்தில் தேசத்தில் யுத்த முயற்சிதான் முதலில் கவனிக்கப்படவேண்டியது. அதைக்கெடுக்கும் ஏற்பாடுகள் யாவும் அடக்கப்படும்.

இனிமேல் இவ்வித சம்பவங்கள் நிகழாது என்று வைத்துக்கொள்ளுவோம்.

இந்தியாவிற்குக் கவலை ஏற்பட்டால் அதில் அச்சுநாட்டினர் மகிழ்ச்சி கொள்ளுகின்றனர். இந்நாட்டில் ஏற்பட்டுள்ள கலவரத்தைப்பற்றி நமது சத்துருக்கள் உத்ஸாகமடைந்து ஏதோ தங்களுக்கு வெற்றி கிடைத்த மாதிரியே எண்ணுகின்றனர். எதிரிகள் நமக்கு சமீபத்தில் இருக்கும்போது, கொள்ளை, தீ வைப்பது முதலியவைகளில் ஈடுபடுவது! குற்றங்களைச் செய்யும் பைத்தியம் ஏற்படலாமா, என்ன புத்தியில்லாத தன்மை என்று பாருங்கள்!

வி வி வி வி வி வி வி

**ருஷ்ய நிலைமை.** சுமார் மூன்று வாரங்களுக்கு முன்பு உற்பத்தி இலாகா மந்திரி ஆலிவர் லிட்டில்டன் என்பவர் அடுத்துவரும் 80 நாட்கள் மிக நெருக்கடியாக இருக்குமென்று ஒரு எச்சரிக்கை செய்தார். அதையொட்டி 14உ வெளிவந்த டைம்ஸ் பத்திரிகையிலும், மாரி காலத்திற்குள்ளாகவே ஒரு உச்ச நிலை ஏற்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சமீபத்திய நோக்கம் கொஞ்சம் கவலைக்கிடமானாலும் முடிவான வெற்றியில் சிறிதும் நம்பிக்கை குறையவில்லை. ருஷ்யாவில் தெற்கில் ஜெர்மானியர் முன்னேறியதுதான கொஞ்சம் கவலைக்குக் காரணம். மெய்காப், கிராஸ்னடார் இரண்டும் எதிரி வசமாயின. டான் நதியின் மேற்குக் கரையில் எதிரி இருக்கிறன். கெய்ரோவிற்கு சர்ச்சிலின் விஜயம்செய்து, மாஸ்கோவில்ஸ்டாலினுடன் வெற்றிகரமாகக்கூடிப் பேசியதும், வேவலின் சமூகமும், ஆச்சின்லக்கின் மாற்றலும், டியப் பிரதேசத்தில் செய்யப்பட்ட தாக்குதலும், புதிதாக ஸிரியா, பாரஸீகம், காஸ்பியன் பிரதேசத்தில் யுத்தம் ஏற்படுமென்ற வதந்திகளும் நேசதேச யுத்த தந்திரத்தில் ஒரு மாறுதலைத் தெரியப்படுத்துகின்றன. இதிலிருந்து நேசதேசங்களுக்கு மேலும் வெற்றிகரமான நாட்கள் திரும்புமென்ற தோற்றம் ஏற்படுகிறது.

ஜெர்மனியின் தலைவனாக இருந்த பிஸ்மார்க் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறன். அவன் ஒரு ராணுவ தந்திரம் அறிந்தவன். அப்புஸ்தகத்தில் 'ஜெர்மனி தனது மக்களின் அக்கரைகளை உத்தேசித்து ருஷ்யாவிற்கு சிறிது இடைஞ்சலைச் செய்யலாம். ருஷ்யாவுடன் நேருக்கு நேர் சண்டை செய்யக்கூடாது. ஏனென்றால் ருஷ்யாவின் அகண்ட பாகங்களில் ஜெர்மன் சைனியங்களின் வெற்றிகள் குலைந்துவிடும். அதனால் ஜெர்மன் மக்களுக்கு நன்மை ஏற்படாது' என்று காணப்பட்டிருக்கிறது.

இது ஒரு சரித்திர உண்மையாகும். ஹிட்லர் இதை நன்றாகப் படிப்பது நலம். 1915-ல் கிழக்கில் சென்ற ஜெர்மன் சைனியங்கள் ருஷ்யரை விரட்டியது உண்மையானாலும் ஜெர்மானியருக்கு ஒரு சாதகமும் ஏற்படவில்லை. 1918-ல் ருஷ்யர்கள் வால்காவிற்கு பின்வாங்கியதும் ஜெர்மன் சைனியம் தான் குலைந்தது. ஆகவே முன்னேற்றத்திற்குப்பிறகு தோல்விதான் ஜெர்மானியருக்குக் கிடைத்தது.

மேலும் தற்சமயத்தில் ருஷ்யாவைப் பிடிக்கும் சிந்தனை ஹிட்லருக்குப் போய்விட்டது. ருஷ்யாவை இனி அழிக்கமுடியாது என்றும், அறிந்து கொண்டான். எதிரி சைனியங்களுக்குப் போகும் ஸப்ளைகளைக் கெடுக்கவே முயலுகிறன். இதுவரை ருஷ்யாவின் கோதுமையையும், எண்ணெய் ஸப்ளைகளையும் பிடித்திருந்தாலும், வேறு வழிகளின் மூலமாக நேசநாடுகளுடன் ருஷ்யா போக்குவரவைக் ஸ்வவசப்படுத்தி வைத்துக்கொள்ளும். அவைகளின் மூலமாக ருஷ்யா அதிக உணவு, ஆயுத ஸப்ளைகளைப்பெறும்.

வி வி வி வி வி வி வி

**விமான யுத்தம்—திட்டமும் முதன்மையும்.** வட மேற்கு ஐரோப்பாவில் பிரிடிஷ் விமானப் படையெடுப்புகளைப் பற்றிய செய்திகளை கவனிக்கிறவர்களுக்கு தாக்குதலுக்கு லக்ஷியங்கள் இங்குமங்கும் பொறுக்கப்படுவதைப்பற்றி ஆச்சரியம் ஏற்படலாம். உண்மையாதெனில் விமான அதிகாரிகள், கடல், தரைப்படைகளின் தலைவர்களுடன் கலந்துகொண்டு குறிப்பான சில இலக்குகளைப் பொறுக்கி அவைகளைத் தாக்குவதென நிர்ணயித்திருக்கிறர்கள்.

1940-ம் வருஷத்தில் (கோடையிலும், சரத் காலத்திலும்) பிரிடன் மேல் படையெடுப்பு நேராமல் தடுக்கவேண்டியிருந்தது. அவ்வித படையெடுப்புக்கு தளங்களாக உபயோகிக்கக்கூடிய ஆன்ட்வெர்ப், ஆஸ்டெண்டு, பிளஷிங், ஜீப்ரக், டன்கர்க், கலே, பொலாயின், ராட்டர்டாம், யும்மிடன், லாஹாவர், செர்பர்க், பிரெஸ்ட் இவைகள் முக்கிய லக்ஷியங்களாகயிருந்தன. இந்த இடங்களைத் தாக்கியதால் எதிரி இங்கிலாந்தின் படையெடுப்புக்காகச் சேமித்து வைத்திருந்த சிறு படகுகளும், போக்குவரத்துக் கப்பல்களும் மூனறில் ஒரு பங்கு அழிக்கப்பட்டன. யுத்த தளவாடங்களும், ஸ்டோர்களும் மூன்றில் இரண்டு பங்கு அழிக்கப்பட்டன. ஆகவே படையெடுப்பு யோசனை கைவிடப்பட்டது.



1941ல் வட ஜெர்மனியின் கடற்கரையோரமாயுள்ள ப்ரெமன், வில்ஹெல்ம் ஷேவன், கீல், வெஜிஸாக் (Vegesack) ஹாம்பர்க், ப்ரெமர்ஹேவன், எம்டன், ராஸ்டாக், ஸ்டெடின் இந்தத் துறைமுகங்களிலிருந்து பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, முதலிய இடங்களிலுள்ள ஜெர்மன் தளங்களுக்கு ஸப்ளைகள் அனுப்பப்பட்டு வந்தன. இந்த இடங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கியதால் லெனின் கிராட் காப்பாற்றப்பட்டு வருகிறது.

1942-ல் 'யூ'போட் கட்டப்படும் இடங்களும், பதுங்கு மிடங்களும் தாக்கப்பட்டு வருகின்றன. ஸெண்ட் நாஸேர், பிரெஸ்ட், செர்பெர்க், லாஹாவர் இவை யூ படகு தளங்கள். பிளென்ஸ்பர்க், வெஜிஸாக், ஹெய்ன்பர்க், எம்டன், ப்ரெமன், வில்ஹெல்ம்ஷேவன் இவை 'யூ' படகு கட்டுமிடங்கள். ஆக்ஸ்பெர்க், மான்ஹீம் இவை இரண்டிலும் 'யூ' படகுக்கு உதவும் டீஸல் எஞ்ஜின்கள் கட்டப்படுகின்றன. மேற்சொல்லிய லக்ஷியங்களில் 40 சதவிகிதம் கப்பற் இலாகா அதிகாரிகளின் நோக்கப்படி கெடுக்கப்பட்டன. இவை யாவற்றையும் தாக்கியதால் 'யூ' படகு தாக்குதல்கள் குறைந்து சேதமும் குறைந்துவருகின்றது.

வி வி வி வி வி வி வி

**சாமான்களின் உற்பத்தி.** ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சமீபத்தில் சொன்னதாவது, 'சாமான்களின் உற்பத்தி வெகு அதிகமாக முன்னேற்றமடைந்திருக்கிறது. எதிரியைத் தோற்கடிப்பதற்குத் தேவையான சாமான்கள் தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.' அமெரிக்க யுத்த இலாகா அறிவிப்பதாவது :—'அமெரிக்கா யுத்தத்தில் இப்பொழுதுதான் ஈடுபட்டிருக்கிறது. ஜனாதிபதியின் கீழுள்ள அட்மிரல் லீஹி என்பவர் சொன்னதாவது :—'நான் செய்துள்ள சண்டைகளில் பிரகிருதமுள்ள யுத்தம் கடுமையாகவும், சிரமமாயும், ஈவு இறக்கம் இல்லாததாயுமிருக்கும்.'

அமெரிக்கக் கப்பல்கள் ஜூலை மாதத்தில் 7,90,000 டன் நிறையில் 71 வியாபாரக் கப்பல்களும், அதற்கு முந்திய மூன்று மாதகாலத்தில் 20,00,000 டன் நிறையில் 195 கப்பல்களும் கட்டப்பட்டன. ஆனால் டாங்கிகள், விமானங்கள், பீரங்கிகள் இவைகளின் உற்பத்தி திட்டத்திற்குக் குறைந்தது. இதற்குக் காரணம் என்னவென்றால் மூலப்பொருள்கள் குறைந்ததும், அதிகப் பயிற்சியில்லாத தொழிலாளர் சேர்ந்ததும்தான். மிஸ்டர் டோனல்ட் நெல்ஸன் என்பவர் பொது ஜனங்களின் உபயோகத்திற்கு மூலப்பொருள்களைக் குறைத்து முதல் பிரச்னையைத் தீர்த்தார். இனிமேல் அமெரிக்கர்கள் தங்களுக்கு அத்தியாவசியமான சாமான்களை விரும்பமாட்டார்கள். சரியான தொழிலாளிகளைப் பெறுவதற்காக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் யுத்த சாமான்களை அதிகம் உற்பத்தி செய்வதற்குப் பரிசளிப்பதாகச் சொல்லிய பிறகு பலர் முன்வந்திருக்கின்றனர். ஆகவே அப்பிரச்னையும் தீர்க்கப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**வரவு செலவு பிரச்னை.** அமெரிக்க பொக்கிஷ மந்திரியான ஹென்ரி மார்கான் என்பவர் 24,000 லக்ஷம் டாலர்கள் வரிகளை உயர்த்தி 87,000 லக்ஷம் டாலர் மொத்தச் செலவிற்கு ஈடுசெய்யவேண்டுமென்று கூறியபோது சொன்னார்: 'உள்நாட்டில் பொதுஜனங்கள் செலவைக் குறைப்பதற்குத் தகுந்தபடி யுத்தத்தில் ஜயிப்பதற்கான தீர்மானம் நிர்ணயிக்கப்படும். இதுபோன்ற யுத்த வரிச் சட்டங்கள் யுத்தத்தைப் போலவே அவ்வளவு முக்கியமானது.

**ஜப்பான் அகப்பட்டுக்கொண்டது.** ஜப்பானுடைய தொழிற்சாலைகள் அமெரிக்காவினால் உண்டுபண்ணப்பட்டவைகள்தான். லைப் என்ற பத்திரிகை கூறும் விதமாக ஜப்பான் தொழிற்சாலை முன்னேற்றத்துக்கு அமெரிக்காவைப் பின்பற்றியது. அமெரிக்க சாமன்கள், யந்திரங்கள் முதலியவைகளின் உதவியால் ஜப்பானியத் தொழிற்சாலைகள் உதவிபெற்று வந்தன. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இரும்பு, எண்ணெய், தாமிரம், கலப்பு இரும்பு, யந்திர சாமான், அலுமினியம், ஈயம், ரசம், மக்னீசம், தீப்பாஷாணம், (Phosphorus) க்ரோம், நிக்கல், முதலிய சாமான்கள் அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்குக் கிடைக்காது. புதிதாக ஆக்கிரமித்துக்கொண்ட நாடுகளிலிருந்து சில சாமான்களை, அதாவது கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து எண்ணெய், பாக்ஸைட்; பிலிப்பைன்ஸிலிருந்து க்ரோம், இரும்பு; மலேயாவிலிருந்து ரப்பர், டின் இவைகளைப்பெற்றாலும், இவைகளை உபயோகிக்கத் தொழிற்சாலைகளும், இஞ்ஜினியர்களும் கிடையாது.

வி வி வி வி வி வி வி

**போக்குவரத்துப் பிரச்னை.** அமெரிக்கா, அலாஸ்கா ரயில்வேயைப் பற்றி ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த இருப்புப்பாதையைப் போடுவதற்கு அதிக முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த மார்ச்சு மாதத்திலேயே அதிக வேலைகள் துவக்கப்பட்டன. பிரிடிஷ் கொலம்பியாவிலுள்ள போர்ட் ஸெண்ட்ஜானிலிருந்து மலைகளின் வழியாக அலாஸ்கா போய்ச்சேரும் அமெரிக்க உதவி சாமான்களை பேரிங் ஜலசந்தி வழியாக வடகிழக்கு ருஷ்யாவிற்குக் கொண்டுபோய்விடலாம். அதன் மூலமாக ஜப்பானில் குறுக்கு எதிர்ப்பு செய்வதற்கும் இம்மார்க்கம் உதவும். இதர அமெரிக்க நாடுகளிலும் இம்மாதிரி ரஸ்தாக்கள் போடப்பட்டு 'யூ' படகு தாக்குதல்களுக்கு உள்ளாகாமல் சாமான்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. காடிமாலா, ஸால்வடார், ஹோண்டுராஸ், நிகராகுவா, கோஸ்டாரீகா, பனாமா முதலிய 6 நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் திட்டத்தில் சேர்ந்துகொண்டிருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**பஸிபிக் கடல் மார்க்கங்கள்.** தூரக்கிழக்கில் அலூஷியன், ஸாலமன் தீவுகளில் நடக்கும் சண்டைகளைப்பற்றி அதிகத் தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால் இங்கு நடந்த சண்டைகள் யாவும் போக்குவரத்தை ஸ்வாதீனப்படுத்தவே செய்யப்பட்டன. அலூஷியன் தீவுகள் அமெரிக்காவிலிருந்து ஆசியாவுக்கு பேரிங் ஜலசந்தி வழியாகப் போகும் மார்க்கத்திலிருக்கிறது. ஸாலமன் தீவுகள், அமெரிக்காவிற்கும், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, நியூ யூபரீடிஸ், நியூ கலிடோனியா, ஸமோவா முதலியவைகளுக்கும் இடையில் இருக்கிறது.

வடக்கே . கிஸ்கா தீவுகளும், தெற்கே போகன்வில்லியிலும் ஜப்பானியர் இறங்கியதால் இத்தீவுகள்யாவையும் ஸ்வாதீனப்படுத்தி விமான தளங்களையும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மேலும், இத்தீவுகளையும், இதர உள்நாட்டுத் தீவுகளையும், கப்பல், விமான தளங்களால் பிணைத்தும் இருக்கின்றனர். இதனால் ஒரு கோடியிலிருந்து, மற்றொரு கோடிக்கு அவர்களால் எளிதில் செல்ல முடிகிறது.

இவ்வித நிலைகளிலிருந்து எதிரிகளை விரட்டும் காரியத்தில் நேசதேசங்கள் ஈடுபட்டிருக்கின்றன. அந்தப் பிரதேசத்தில் அமெரிக்கப் படைகள் முன்னேறியதிலிருந்தே அமெரிக்கப்படை விருத்தியடைந்திருக்கிற அம்சம் தெரியவருகிறது. இந்தப் பிரதேசத்தில் நடக்கும் சண்டைகள் தரையிலும், சமுத்திரத்திலும் நடக்கின்றன. ஆகாயத்திலும், சேர்ந்து மூன்று இடங்களிலும் நடக்கிறதென்றே சொல்லலாம். அமெரிக்கக் கப்பல்கள் அதிகம் ஈடுபட்டிருக்கின்றன.

தெற்குப் பஸிபிக்கில் ஸாலமன் தீவுகளிலிருந்து எதிரியை விரட்ட தீவிர முயற்சி நடந்துவருகிறது. ஸாலமன் தீவுகளின் நடுவிலுள்ள டுலாகியிலும், காடல்கனார். மலேடா இவைகளுக்கு இடையிலுமுள்ள ஜலசந்தியிலும் பிரதேசங்



களில் நேசதேசத் தாக்குதல் நடந்துவருகிறது. டுலாகிக்கருகாமையிலுள்ள சிறிய தீவுகள் ஆக்கிரமிக்கப்பட்டன. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் பலப்படுத்தவும்பட்டன. இதற்கருகேயுள்ள நியூ கினி, நியூ பிரிடன் தீவுகளிலுள்ள திரி நிலயங்களும் தாக்கித் தகர்க்கப்பட்டன.

இரண்டு பக்கங்களிலும் நஷ்டங்கள் அதிகமாய் இருந்தாலும் சமீபத்தில் நடந்த தாக்குதல் மிகவும் முக்கியமானது. மீண்டும் இவைகள் வெற்றிகரமாக முடிந்தால் பஸிபிக்கில் ஜப்பானிய ஆக்கிரமணத்தை ஒழித்து இந்த நாடுகளை திரும்பப்பெற்றுவிடலாம். இந்தியாவிற்கும் பஸிபிக் போக்குவரத்து முக்கியமானது. பஸிபிக்கில் வடக்கிலும், தெற்கிலும், எதிரியை விரட்டினால் இந்து மஹா சமுத்திரத்திலிருந்தும் ஜப்பானிய பயம் குறையும். சமீபத்தில் டோக்கியோ சொல்லியவிதம் எதிரிக்குக் கப்பல்கள் குறைந்திருப்பதால் உள்நாட்டுக் கடல்களில் காபந்து செய்துகொள்ளவேண்டியிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**சைனா சண்டைகள்.** சில நாட்களாக தென்கிழக்கு சைனாவிலுள்ள கியாங்ஸிக் மாகாணத்தில் சியாங்கை-ஷேக் முன்னேற்றப்போர் செய்துவருகிறார். முக்கியமாக 'பூ' (Fu) நதியும், கான் நதியும் சேருமிடத்திலுள்ள லின்சுவானில் பலப்படுத்திவருகிறார். அந்த இரண்டு நதிகளின் வழியாக வரும் ஜப்பானியப் போக்குவரத்துகள் தடுக்கப்படுகின்றன. லின்சுவான் என்பது இம்மாகாணத்தின் தலைநகரான நான்சாங்கிற்குத் தென்கிழக்கே 70 மைல் தூரத்திலிருக்கிறது. நான்கிங், ஷாங்கே, முதலியவைகளுக்குச் செல்லும் இருப்புப்பாதை மார்க்கத்திலும், அது இருக்கிறது. ஆகவே அந்த இருப்புப்பாதையை கைவசப்படுத்தவே அங்கு சண்டை நடக்கிறது. ஜப்பானியர்களுக்கு சாமான்களை அனுப்ப அம்மார்க்கம் அத்யாவசியமாக இருக்கிறது. அதனால்தான் அவைகள் தாக்கப்படுகின்றன.

சிகியாங், பூகின், கியாங்ஸி மாகாணங்களில் ஜப்பானியர் முன்னேறியிருந்தாலும் அந்த மூன்று மாகாணங்களும் சேருமிடத்தைச் சீனர்கள் வசப்படுத்தி ஜப்பானியரை உட்புகவிடாமல் தடுத்திருக்கின்றனர். வென்ச்சௌவைச் சுற்றியுள்ள ஜப்பானியர் அதிகம் தாக்கப்படுவதால் ஜப்பானியரால் அதிகம் உதவி பெறவும் முடியவில்லை. கழட்டிக் கொள்ளவும் முடியவில்லை.

இந்தச் சண்டைகளில் அமெரிக்க விமானப்படை சீனர்களுக்கு அதிகம் உதவி செய்கிறது. கொஞ்ச நாளைக்குமுன் சைனா ஸப்ளைகள் பெருமல் செய்யப்பட்டது என்று டோகியோ கூறிற்று. தற்சமயத்தில் அமெரிக்க விமானங்கள் இந்தியா மூலமாகவோ, வேறு இடத்திலிருந்தோ வந்திருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறது.

மேலும் சைனாவின் உதவிக்காக சைனா உதவிநிதியை அதிகப்படுத்த மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தி 1,000 பவுன் கொடுத்திருக்கிறார். பிரிடிஷ் மக்களும் இதர உத்தியோகஸ்தர்களும் இந்நிதிக்குக் கொடுக்க முன்வருவார்கள். ஐயோவா ஸமஸ்தானத்திலிருந்து காயமடைந்த சீனச் சிப்பாய்களின் உதவிக்காக 20,000 பவுன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது சியாங்கை ஷேக்கின் மனைவிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 'இது ஒரு வெகுமானமல்ல. பிரதிபலனை எதிர்பாராத ஒரு' கடமையாகும்' என்ற மொழிகளுடன் இந்த நிதி அனுப்பப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**வாபன் (Waffen--S. S.)** என்று ஹிம்லரின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள போலீஸ் படைக்குப் பெயர். இதில் ஜெர்மன் யுவர்கள் சேர்ந்துள்ளனர். உள்நாட்டையும், ஆக்கிரமித்த நாடுகளையும் பயமுறுத்துவதற்காக ஏற்பட்டது. சென்ற வருஷ மத்தியில் ஆரம்பிக்கப்பட்டு போலந்து, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ், பால்கள் நாடுகள், ருஷ்யா முதலிய இடங்களில் இருந்துவருகிறது. பிரான்ஸில் நேசதேசத் தாக்குதல் ஏற்பட்டதும் கலகங்கள் ஏற்படுமோவென்று பயந்து அதை அடக்குவதற்காக பாரிஸுக்கு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. டிப்ருயின் என்பவர் அதிக கலகம் ஏற்பட்டால்.

தகுந்த முறைகள் கையாளப்படும் என்று ஆகஸ்டு 5-ம் தேதி சொன்னார். லவாலும் தனது ட்ரிகோடரி படையுடன் வாபன் போலீஸ் படையைச் சேர்த்து பலப்படுத்தியிருக்கிறார்.

லிபியாவிலும், ருஷ்யாவிலும், கைப்பற்றப்பட்ட சில தஸ்தவேஜுகளிலிருந்து இது ஒரு தனி ஜெர்மன் சைனியமென்றே தெரியவருகிறது. ஜெர்மன் ரகசியப் போலீஸில் இது ஒரு பகுதி. நாஸிகளைக் காப்பதற்காக 1933-ல் இது ராணுவ மயமாக்கப்பட்டது. ரகசியப் போலீஸின் மற்றொரு பாகம் ஹிட்லரின் பிரத்யேக பாதுகாப்பிற்காக ஏற்பட்டிருக்கிறது. வாபன் பகுதி பொதுஜன சேவையிலும், ஏ. ஆர். பி. வேலையிலும் ஈடுபட்டிருக்கிறது. இதைத் தவிர அரசியல் வீரர்கள் நிறம்பிய ஒரு பகுதியுமிருக்கிறது. ரோமல் இதைச் சார்ந்தவர். (S. S. Totenkopf vertaende) (Death's head units) என்ற ஒரு கொலையாளிக் கூட்டமும் இருக்கிறது. இதில் ஜெர்மன் ரகசியப் போலீஸும், ஆக்கிரமித்த நாட்டு சைனியங்களும் அடங்கியது. (Sicherheitsdienst) என்ற பகுதியில் அதிகமான பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ரகசியச் சூழ்ச்சியில் ஈடுபட்டவர்களை இப்பகுதி கவனித்துக் கொள்ளும்.

இவ்வித கொடிய முறைகளால் ஹிட்லர் வெற்றியடையப்பார்க்கிறான். உண்மையில் எல்லா ஐரோப்பாவும் அவனுக்கு எதிரே கிளம்பியிருக்கிறது. ஜூலை 30-ம் தேதி போலந்திற்கும், ருஷ்யாவிற்கும் ஏற்பட்ட ஒற்றுமையின் முதல் ஆண்டு விழாகொண்டாடப்பட்டது. ஆகஸ்டு 5-ம் தேதி யூகோஸ்லாவியா ஒப்பந்தத்தின் வருஷக்கொண்டாட்டதினம் நிகழ்ந்தது. அதே தினத்தில பிரிடனுக்கும் செக்கோஸ்லாவியாவுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் மியூனிச் ஒப்பந்தம் ரத்தாகிவிட்டது. இவைகளிலிருந்து ஜெர்மனிக்கு எதிராக ஐரோப்பா ஒன்று சேர்ந்திருக்கின்ற விஷயம் தெரிகிறது.

வி வி வி வி வி வி வி

**தெற்கு நோக்கிய முன்னேற்றம்.** சமீபத்தில் டோக்கியோவில் ஜப்பானியர்களுக்கு ஒரு வேண்டுகோள் செய்யப்பட்டது. "தெற்குக் கடல்கள் உங்களை வரவேற்கின்றன. நீங்கள்தான் இப்பிரதேசங்களை முன்னுக்குக்கொண்டுவந்து ஜப்பானிய முன்னணியை ஸ்தாபிக்க வேண்டும்." என்று சொல்லப்பட்டது இவ்விதமாக ஏற்படுத்த முயலும் முன்னணியானது ராணுவ உதவியைக்கொண்டு பலநாடுகளைக் கொள்ளையிடுவதற்காகத்தான். உதாரணமாக பிலிப்பைன் தீவில் ஜப்பானிய ராணுவத்தின் மேன்பார்வையில் 1,20,000 ஏக்கரா சணல் பயிரிடப்படுகிறது. ஸயாமில் தொழிற்சாலைகளை ஜப்பானிய ராணுவம் கைப்பற்றியது. பர்மாவில் ஸர்வாதிகாரம் ஒரு ஜப்பானிய ராணுவத் தலைவனிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுமத்திராவைப் பொதுக்ஷேம பிராந்தியமாகச் செய்வதற்காக லக்ஷம் ஜப்பானியக் குடும்பங்கள் ராணுவ பந்தோபஸ்துடன் அனுப்பப்பட்டிருக்கின்றன. இவ்விதமாகத்தான் போர்னியோ, மலேயா ஜப்பானிய மயமாக்கப்பட்டிருக்கின்றன.

ஜூலை 7-ம் தேதி டோஜோ பின்வருமாறு சொன்னான் :—'ஆக்கிரமித்த நாடுகளின் எந்த பாகத்திற்கும் ஜப்பானியர்களை அனுப்புவதற்கு நமக்கு ஸ்வதந்திரம் இருக்கிறது'.

வி வி வி வி வி வி வி

**மேற்கு நோக்கிய முன்னேற்றம்.** ஜப்பானுக்கு மேற்கிலுள்ள நாடுகளைப் பற்றிய பிரசாரத்தில் ஜப்பான் ஈடுபட்டிருக்கிறது. ஜப்பானிலுள்ள வாலிப உத்தியோகஸ்தர்களின் ஒரு தலைவனான ஹிட்டாகிஸி ஸிஷேர் என்பவன் இப்பிரசாரத்தில் அதிகம் ஈடுபட்டிருக்கிறான். சமீபத்தில் அவன் சொன்னதாவது, 'கடுமையான மதம், அரசியல், பொருளாதாரம் இந்த திட்டங்களைப் பின்பற்றி முஸ்லீம் நாடுகளை அடைந்தால்தான் ஜப்பான் கிழக்கு ஆசியாவில் ஆதிக்கமடைய முடியும்'.

ஆதிக்கம் என்ற வார்த்தையை இந்தியாவும் கிழக்கு நாடுகளும் கவனிக்கட்டும். ஜப்பான் ஆதிக்கம் அடைவதென்றால் இதர நாடுகளை அடிமையாக்குவது தான்.



**வட சைனாவில் மனித பலத்தை சேகரிக்க முயற்சி.** வடக்கு சைனாவிலுள்ள சீனச் சைனியமும், சீன மக்களும் ஒன்றுசேர்ந்து எதிரிக்கு ஒருவரும் வசமாகாமலிருப்பதற்காகப் பிரயத்தனப்பட்டுவருகின்றனர். கடந்த ஐந்து வருஷங்களாக 50,00,000 சீனவேலைக்காரர்களைப் பிடித்து ஜப்பானுக்கும், வடகிழக்கு மாகாணங்களுக்கும் அனுப்பி, மனித பலத்தை அதிகப்படுத்தியிருக்கின்றனர். தொழிலாளிகளைச் சேகரிப்பதற்காக ஜப்பானியர் கொடுமை முறைகளைக் கையாளுவதால் அவர்கள் வசமாகாமலிருப்பதற்காகச் சீனர்கள் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

ஹிஸின்மின் தொழிற் சங்கம் 20 லக்ஷம் பேரை இவ்வருஷத்தில் சேர்ப்பதற்காக முயற்சி எடுத்துவருகிறது. இவர்களில் 15,00,000 மஞ்சூரியாவுக்கும், 1,50,000 மங்கோலியாவுக்கும், லக்ஷம் பேர் ஜப்பானுக்கும் அனுப்பப்படுவார்களாம். எஞ்சியுள்ளோர் வடக்கு சைனாவிலேயே தொழிலைச் செய்யவேண்டும். பிப்ரவரி மாதத்தில் தென்கிழக்கு ஷான்ஸி மாகாணத்தில் 10,000 பேரை ஜப்பானியர் கைதி செய்தனர். பிறகு வண்டிகளில் அடைத்து விவரம் தெரியாத இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஷாங்டனிலுள்ளோருக்கு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 10 பேரை அனுப்பவேண்டுமென்றும் உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. ஷான்ஸியிலுள்ளோர் இவ்வருஷத்திற்குள் 1,20,000 வேலைக்காரர்களைச் சேகரிக்க பாடுபட்டு வருகின்றனர். மார்ச்சு மாதத்தில் 1,58 000 சீன வேலைக்காரர்கள் மஞ்சூரியாவுக்கு அனுப்பப்பட்டதாக ஜப்பானியத் தொழிற்சங்கம் அறிவித்தது. கடந்த வடக்கு சைனாவில் கூலியாட்களைப் பிடிப்பதற்கு ஜப்பான் பலமுறைகளைக் கையாளுகிறது. ஒன்று கைதி செய்வது. சந்தேகப்பட்டவர்கள் யாவரும் கைதி செய்யப்படுவார்கள். பொதுக்கூட்டங்களில் ஜப்பானியத் துருப்புகள் சூழ்ந்து கொண்டு, வாலிபர்களைப் பிடித்து மஞ்சூரியாவுக்கு அனுப்புகின்றனர். ஒபே, ஷான்டன், ஷான்ஸி மாகாணங்களில் கிராமம் கிராமமாகக் கொளுத்தி அங்குள்ளவர்களைப் பிடித்து எதிரித் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகின்றனர். இந்நிலைமையை சமாளிப்பதற்காக சீன அதிகாரிகள் சொந்த இடங்களை விட்டுப் போக முடியாதவர்களை ஒன்று சேர்த்துக்கொண்டு மற்றவர்களைப் பத்திரமான இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகின்றனர். சென்ற இடங்களில் சீனத் தோட்டங்களிலும், சிறு தொழிற்சாலைகளிலும் வேலையில் அமர்த்தப்படுகின்றனர். ஆகவே ஜப்பானியரின் முயற்சி பலிக்கவில்லை.

---

## சார்லஸ் டி கால்.

### போர்வீரன், வித்வான், தேசாபிமானி.

காலம் என்பது நகர்ந்துகொண்டேபோகிறது. பத்திரிகைகளுக்கு அதிக பிராதான்யம் ஏற்பட்டுவரும் இந்நாட்களில், தற்சமயத்தில் பிரசித்தி பெறாதவர்களை மறக்கவே சந்தர்ப்பம் ஏற்படுகிறது. உதாரணமாக செக்கர்கள் இருக்கிறார்கள், இவர்கள் எதிரிகளை எதிர்த்து நிற்க முயன்றார்கள். ஆனால் அவ்விதம் செய்ய முடியாதபடி செய்யப்பட்டனர். போலந்துக்காரர்களும் அப்படித்தான் சிதறடிக்கப்பட்டனர். இருந்தாலும், உலகின் பல பாகங்களில் ஒன்று சேர்ந்து உத்ஸாகமாக, தேசீய கீதங்களைப் பாடிக்கொண்டிருக்கின்றனர். ஒரு போலந்து மக்கள் உயிருடன் இருக்கும்வரை போலந்து மடியாத நாடு என்று அந்த கீதங்களில் கூறப்படுகிறது. அடுத்தபடியாக கிரேக்கர்கள் இதாலியருடன் கடும் சண்டை செய்தார்கள். கிரேக்க சைனியம் தற்சமயத்தில் லிபியப் போர் முனையில் சண்டை செய்கிறது. யூகோஸ்லாவியர்களும் மலைகளடர்ந்த பிரதேசத்தில் கொரில்லாச் சண்டைகளைச் செய்து ஜெர்மானியரை எதிர்க்கின்றனர். இவ்விதமாகவே, டச்சுக்காரர்கள், பெல்ஜியர்கள், நார்வேக்காரர்கள் யாவரும் முடிவுவரை எதிர்த்துச் சண்டை செய்தனர். இவர்களைப்போல்தான் பிரெஞ்சுக்காரர்களுமிருக்கின்றனர்.

பிரெஞ்சுக்காரர்களுக்கு டி கால் தலைமை வகிக்கிறார். பிரெஞ்சுக்காரர்களைப்பற்றி சோம்பேறிகள்தான் பலவிதமாகக் குறைகூறுகின்றனர், அவர்களுக்குச் சரியான முஸ்தீப்பு இல்லாததும், மேஜினோ அரணை அதிகம் நம்பிக் கொண்டிருந்ததாலும் தான் அவர்கள் எதிரி வசப்படவேண்டிவந்தது. இந்த

மேஜினோ அரண் வடக்கே அதிக தூரம் கட்டப்படவுமில்லை. இந்த சந்தர்ப்பத்தில் டிகால் யந்திரப் படையின் உபயோகத்தைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதினான். இதை ஜெர்மானியர்தான் அதிகம் கவனித்தது. மேலும் பிரெஞ்சு அரசாங்கத்தில் சில கட்சி ஆட்சிகளுக்கு உட்பட்டு, சமூகச் சீர்திருத்தம், [illegible] தடுப்பது, நாட்டை தேசிய மாக்குவது, முதலிய விவகாரங்களில் ஈடுபட்டிருந்தனர். வெளி நாட்டு விவகாரங்களை அதிகம் கவனிக்கவில்லை. வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை மீறி ஜெர்மானியர் ரைனியத்தைப் பலப்படுத்தினர். இவ்வளவும் உண்மைதான். ஆனால் டிகால் எவ்விதமான ஆயுதங்கள் தேவை என்று சொல்லிவந்தாரோ அந்த ஆயுதங்களைத்தான் எதிரிகள் உபயோகித்தனர். டாங்கிகளும், பாய்ச்சல் விமானங்களும், ஈடுபட்டு பிரான்ஸை அடக்கிவிட்டன.

தற்சமயம் பிரெஞ்சுக்காரர்களுக்கு தலைமை வகிக்கும் டிகால் படைத்தலைவன். ஸெயின்டுலிர் என்பவர் வர்ணிக்கும் இலக்கைத் [illegible]. அவர் அரசியல் வாதியல்ல. தீவிரமான சிந்தனைப் படைத்தவர். சாவகாசம் கிடைத்தபோது வர்ஜில், பாஸ்கல், பிரான்ஸிஸ் மொரியாக் போன்ற கவிகளின் நூல்களை வாசிப்பார். சர்ச்சிலுக்கும், பிரெஞ்சு அரசாங்கத்தாருக்கும் சமரசம் பேசினார். பிரான்ஸ் எதிரி வசமாகும் கடைசி தருணத்தில் ஒரு [illegible] பெட்டி, [illegible] முதலியவைகளுடன், ஒருவரும் கூடயில்லாமல் விக்டோரியா ஸ்டேஷனுக்கு அருகில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார்.

அங்கிருந்துதான் எல்லாவற்றையும் திருத்திசெய்தார். பின் பிரெஞ்சு படைகளிலும், ஸ்பெயின் மூலமாயும், சில பிரெஞ்சு [illegible] தப்பி வந்து இவருடன் சேர்ந்துகொண்டனர். இன்றும் அவருக்கு அதிக ஆசைகள் கிடையாது. தனது வேலை முடிந்ததும் ஓய்வு எடுத்துக்கொள்ளுவார். ஒருவருடனும் அதிகம் பேசமாட்டார். இருந்தாலும், அவருக்கு அந்தரங்கமான உணர்ச்சி அதிகம். பிரான்ஸின் பேரில் பிரியம் அதிகம். காட்டுமிராண்டிகளை வெறுத்தார். பிறரிடம் வசப்படாத தன்மையும் சொன்னவார்த்தையின்படி நடக்கும் தன்மையும் பொருந்தியவர். பயப்படாதவர். குற்றம் குறையில்லாதவர். ராணுவ யுக்தி பற்றி பல புஸ்தகங்களையும், குறிப்புகளையும், எழுதியுள்ளார். அவைகளைப் பார்த்தால் தற்போது நடக்கும் யுத்தம் நிச்சயம் நேருமென்று முன்பே எதிர்பார்த்திருக்கிறார்.

---

## ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவில் ரகசியப் போலீஸாரின் அட்டூழியங்கள்.

---

### பீதியும், வெறுப்பும் எங்கும் குடிகொண்டிருக்கிறது.

(வில்லியம் பேலின் என்பவர் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது.)

ஒரு தேசத்தில் ஜனங்களின் உயிருக்கு எப்பொழுதும் ஆபத்து நேரிடுமென்ற பயமும், பீதியும் எங்குகண்டாலும் வியாபித்திருந்தால் அங்கு வசிப்பது மிகவும் துர்லபம். அவ்வித வாழ்க்கையைப்பற்றி இங்கு நான் கொஞ்சம் சொல்லுகிறேன். அந்நாட்டில் ஜனங்கள் தங்கள் நிழலைக் கண்டே பயப்படுகிறார்கள். எதாகாலமும் பயம் ஏற்பட்டிருப்பதினால் அவர்களின் ஊக்கமும் குறைந்துவிடுகிறது. எதிர் காலத்தில் சுபிக்ஷமாகவும், நன்றாகவும் வாழ்க்கையை நடத்தலாம் என்ற நம்பிக்கையே இல்லாமல் போய்விடுகிறது.

நான் பிரேக் (Prague) என்னுமிடத்தில் இருந்தபொழுது பிற்பகலில்கூட ஜனங்கள் வீடுகளின் ஜன்னல்களையோ, அல்லது ஜன்னல் திரைகளையோ மூடிக் கொண்டார்கள். என்னுடன் அநேக வருஷங்களாகப் பழகிவந்த என் சிநேகிதர்களும் என்னுடன் பேசவோ, என்னை சந்திக்கவோ பயப்பட்டார்கள். குடும்பத்தார்களில் காணமல்போன மனிதர்களைப்பற்றி நான் விசாரிப்பதற்கும் துணியவில்லை. ஏனென்றால் குடும்பத்திலுள்ள மெம்பர்களே ஒருவருக்கொருவர் ரகசியப் போலீஸாரின் கொடுமைகளுக்குப் பயந்து உண்மை விஷயங்களைச் சொல்லிக்கொள்வதில்லை. ஏதேனும் கொஞ்சப் பேர்களுடன் நான் பேசுவதாய்



இருந்தால் அவர்களிடம் வெளியிடுவதற்கான தகவல் ஒன்றும் இருக்காது. அதனால் பொதுவாக ஜனங்கள் எதைப்பற்றியும் சிந்திப்பதுகூட பயமாக இருந்தது. பயத்துடன் வெறுப்பும் பெரிய இடையூறாக இருந்தது.

போலந்து வாசிகள் அதிகம் இருக்கும் ஒரு நகரத்தில் பிணக்குவியலின் நாற்றமே மிகுந்திருக்கிறது. ஆனால் உண்மையில் அங்குள்ளவர்கள் நடைப் பிணமாகவே இருந்தார்கள். ஏனென்றால் ஜனங்கள் ஒருவருக்கொருவர் சந்திக்கும் பொழுது கண்களினால் மட்டில் சமிக்ஞை செய்வார்களே ஒழிய, வாய்பேச்சுக் கிடையாது. ஒரு வார்த்தை ஏதாவது பேசினால் நாஸி போலீஸார் உடனே விசாரணையைத் தொடங்கிவிடுவார்கள். தெருக்களிலும், காபிக் காப்பிக்கிளப்புகளிலும் எப்பொழுதும் பயம் நிறைந்திருந்தது. நான் அங்கு தங்கியிருந்த இரண்டு நாட்களிலும் ஒரு போலந்து வாசியுடன்கூட நான் பேசமுடியவில்லை.

### பிரதிபலன்.

வியன்னாவில் உணவிற்காகக் காத்திருக்கும் ஏராளமான ஸ்திரீகளில் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்வதுகூடாது. வியாபாரிகள் தங்கள் ஆபீஸ்களில் வைக்கப்பட்டிருக்கும் தூரசிரவண யந்திரங்களை (Telephones) டீ கோப்பைகளால் மூடிவிடுவார்கள். ஏனென்றால் ஜெர்மன் ரகசியப் போலீஸார் அவர்களுடைய ஆபீஸ் சமாசாரத்தைக் கேட்டுவிடுவார்கள் என்ற பயமிருந்தது. ஆம்ஸ்டர்டாமிலும் இவ்வித நிலைமைதான் இருந்தது.

“பொதுவாக ஐரோப்பா பூராவிலும், வெறுப்பும், பயமும்தான் நிரம்பியிருக்கிறது” என்று டச்சு சாஸ்திரி ஒருவர் என்னிடம் சொன்னார். அவர் சொன்னது உண்மைதான். அங்கு அவ்விதம்தான் இருந்துவருகிறது.

இப்பொழுது ரகசியப் போலீஸ் தலைவர் ஹீட்ரிச்சும், இன்னும் ‘நாஸி புதிய திட்டத்தைச்’ சேர்ந்த மற்ற தலைவர்களும் கொல்லப்பட்டவுடன் அங்கு கொடுமையும், அட்டூழியமும் அதிகமாக நடைபெற்று வருகிறது. ஐரோப்பாவில் உயிர்வாழ்வதற்கே லாயக்கில்லாமல் நாஸிகள் செய்துவிட்டனர். போலந்துக்காரர்கள், செக்கர்கள், ஜெர்மானியரிலும் சிலர் ஐரோப்பாவில் நிம்மதியாக வசிக்கக்கூடிய இடம் புதைகுழிகள்தான் என்று சொல்லுகிறார்கள். மேலும் இறந்த போலந்துக்காரரும், செக்கரும்தான் அதிர்ஷ்டசாலிகள் என்று சொல்லி வருகிறார்கள். ஒரு ஜெர்மானியனைக் கொன்றவனே இரட்டிப்பு மடங்கு அதிர்ஷ்டம் செய்தவன். இந்த கௌரவத்தை அடைவதற்காகவே ஹீட்ரீச், ஹிம்லர், ஹிட்லர் போன்றவர்களைக் கொல்வதற்குத் தயாராகின்றனர்.

---

## ஜெர்மனி தற்காப்பு செய்துகொள்ளப் பிரயத்தனம்.

---

‘மான்செஸ்டர் கார்டியன்’ பத்திரிகையில் செகோஸ்லேவோகியா ஜனாதிபதி.

டாக்டர் எட்வேர்ட் பெனிஷ் எழுதியது.

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள்மூலம்).

1939-ம் வருஷ முதல் நாளதுவரை யுத்தப்போக்கு ஒரு விதத்தில் 1914 முதல் 1918 வரை நடந்த யுத்தம்போலவே இருந்துவருகிறது. கொஞ்ச காலம் வரைதான் எந்தக்கட்சி இறுதியில் வெற்றிபெறும் என்ற சந்தேகம் இருந்து வந்தது. பிற்பட்டு நாம் இறுதியில் ஜயிப்போமா என்ற பிரச்னைக்கு இடமே இல்லாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆனால் அவ்வெற்றி எப்பொழுது கிடைக்கும் என்ற பிரச்னைதான் இருந்து வருகிறது.

நேசநாடுகளில் பல முக்கிய அரசியல் நிபுணர்களும், ராணுவ அதிகாரிகளும் அடுத்துவரும் ஆறு மாதங்களில் யுத்தம் முடிந்துவிடாதபோனாலும் எந்தக் கட்சிக்கு வெற்றிகிடைக்குமென்று தெளிவாய்ச் சொல்லிவிடலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். நானும் அவ்விதமே நினைக்கிறேன்.

1941-ம் வருஷம் வசந்த காலத்தில் யாதொரு நிபந்தனையுமில்லாமல் வெற்றியை பலாத்காரமாக அடையவோ, அல்லது தனக்கு அனுகூலமான சமாதானத்தையோ அடைவதற்கு ருஷ்யாவைத் தாக்கவேண்டிய அத்யாவசியம் ஹிட்லருக்கு நேரிட்டிருந்தது. இல்லாவிடில் ஒரு வருஷம் சென்றால் ஒரே சமயத்தில் மேற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் அவனை நசுக்கும்படியான தாக்குதல்கள் ஏற்பட்டு, அவைகளில் அகப்பட்டுக்கொண்டு தவிப்பான். அது போலவே இப்பொழுதும் நேசதேசத்தார்கள் மேற்குப் புறத்தில் இரண்டாவது போர்முனை ஏற்படுத்தப்போவதை எதிர்பார்த்தே, கிழக்குப் பிரதேசத்தில் திண்ணமான முடிவைப் பெறக்கூடிய தாக்குதல் நடத்தவேண்டிய அவசியம் அவனுக்கு நேரிட்டிருக்கிறது.

### ஹிட்லரின் பிரச்னை.

ஹிட்லர் ருஷ்யப்போர் முனையில் வெற்றியடைந்து சரியான சமயத்தில் எதிரிகளை சமாதானம் செய்துகொள்ளும்படி நிர்ப்பந்திக்க எண்ணுகிறான். அல்லது காகஸஸ் பிரதேசத்திலுள்ள எண்ணெய் தளங்களைக் கைப்பற்றிக்கொண்டு யுத்தத்தை நீடித்து நடத்த எண்ணுகிறான். அதனால் அவன் வெற்றியடைவதில் இருந்து நேசதேசத்தார் சமாதானம் செய்துகொள்ள விரும்புவார்கள் என்றும் எண்ணிவருகிறான். இவ்விரண்டு நோக்கங்கள் பிரகாரம் அவன் சாதிக்கமுடியாமல் இருந்தால் கூடிய சீக்கிரத்தில் நேசதேசத்தார் இரு போர்முனைகளிலும் யுத்தம் ஆரம்பிக்கப்போவதாக மிரட்டுவார்கள் என்பது நிச்சயம். அவ்விதம் நெருக்கடி ஏற்பட்டவுடன் ஹிட்லர் முற்றிலும் சோர்வடைந்து அழிந்துவிடுவான் என்பது திண்ணம். இதுதான் ஜெர்மனியின் கடைசி முயற்சி. இம்முயற்சியில் அச்சு நாட்டினர் வெற்றியடையாவிட்டால் அவர்களின் பலம் வெகு சீக்கிரத்தில் குறைவுபட்டுப்போய் அழிந்துபோக நேரிடும்.

இவ்விதம் ஜெர்மனியின் முன்னேறித்தாக்குதல் குறைவுபட்டுப்போனவுடன், இனிமேல் தற்காப்பு செய்வதற்கான போர் நடத்தும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. அதுவும் இப்பொழுது இரண்டு போர்முனைகளில் யுத்தம் ஏற்படுவதானால் ஜெர்மனியின் பலம் மிகவும் குறைந்துவிடும். இவ்விதமாக இரண்டு போர்முனைகள் ஏற்பட்ட பிறகு இன்னும் கொஞ்ச காலத்திற்குள் ஜெர்மனி 1918-ல் எவ்விதம் தோல்வியடைந்ததோ இப்பொழுது அவ்விதம் தோல்வியடைய நேரிடும் என்பது நிச்சயம்.

### மேல்கண்ட விமர்சனம் உறுதிப்படுகிறது.

ஜெர்மனியிலிருந்து வரக்கூடிய பிரஸ்தாபங்களைப் பார்த்தால் மேற்கண்ட விமர்சனம் உண்மையென்று உறுதிப்படுகிறது. 1941-ம் ஹூ டிஸம்பர் மாத ஆரம்பத்தில் ருஷ்ய யுத்தத்தில் ஜெர்மனி தோற்றுப்போய்விடும் என்று யாவருக்கும் நிதர்சனமாய் தெரிந்தவுடன், கிழக்குப் போர்முனையில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதைப்பற்றி ஹிட்லருக்கும் அவனுக்குக் கீழேயுள்ள ராணுவத் தலைவர்களுக்கும் பெருத்த தகராற் ஏற்பட்டது. ராணுவ சம்பந்தமாக யுத்தப் போக்கை கவனிக்கையில் ருஷ்ய யுத்தத்தில் ஜெர்மனி தோற்றுப்போய்விட்டதாகத் தெரிகிறது. இவ்யுத்தம் ஜெர்மனிக்கு விரோதமாக முடிந்தால் அதற்கு என்னென்ன கெடுதல்கள் சம்பவிக்கும் என்று ஹிட்லரும், கோயரிங்கும் ஒப்புக்கொண்டு அவர்கள் சமீபத்தில் செய்த சொற்பொழிவில் வெளியிட்டிருக்கிறார்கள். மேலும் இவ்யுத்தத்தில் ஜயிப்பது முடியாத காரியமென்று ஜெர்மன் தளகர்த்தர்கள் மட்டுமல்ல, அநேகமாக முக்கிய பிரபல நாஸித்தலைவர்களும் நன்குணர்ந்திருக்கின்றனர்.

### 1918-ம் வருஷத்தில் ஏற்பட்டமாதிரி.

இவ்விதம் ஜெர்மனியின் உள்நாட்டு விஷயங்களைப்பற்றிய அபிப்பிராயத்தை நமக்குக் கிடைக்கும் எல்லா அறிக்கைகளிலும் காணலாம். அதிலிருந்து அடியில் கண்ட முடிவுகள் எனக்குத் தோன்றுகிறது.

1918-ம் வருஷம் வசந்த காலத்தில் ஜெர்மனி எந்த நிலைமையில் இருந்ததோ அதே நிலைமையில் அது இப்பொழுதும் இருந்துவருகிறது. ஜெர்மன் அரசியல்



தலைவர்களும், ராணுவத் தலைவர்களும் வசந்தகாலத் தாக்குதலை ஆரம்பித்தாலும் சரி, ஆரம்பிக்காவிட்டாலும் சரி, இன்னும் கூடிய சீக்கிரத்தில் நேசநாடுகளுடன் முன்னேறித்தாக்கும் முறையை விட்டுவிட்டு தற்காப்பு முறையில் யுத்தம் தொடங்குவதற்குத் தயார் செய்துவருகிறார்கள். ஒருக்கால் அம்முயற்சி கிழக்கு பாகத்தில் இப்பொழுது நடத்திவரும் கடைசி யுத்தப் பிரயத்தனத்திற்குப் பிற்பட்டும் இருக்கலாம். 1918-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ஜெர்மன் சைனியத்திற்கும், யந்திரசாதனப்படைக்கும் ஏற்பட்ட அழிவைப்போல இப்பொழுதும் ஏற்படாமலிருக்கும்படி ஜெர்மனி உள்நாட்டிலும், ஆக்கிரமித்த பிரதேசங்களிலும் பெருத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளுகிறது. நான் இவ்விதம் சொல்வதிலிருந்து 1942-ம் ஹூத்திற்குள் யுத்தம் முடிவடைந்துவிடும் என்று சொல்வதிற்கில்லை. ஆனால் ஜெர்மனி பூராவும் அடியோடு அழிவதற்கு அடுத்த 1943-ம் ஹூத்திலும் அநேக மாதங்கள் வரை யுத்தம் நீடித்து நடைபெறலாம்.

---

## சைனாவிற்காக அமெரிக்கர்கள் சண்டையிடுகின்றனர். "போரில் புலிகள்" என்று பெயர் வாங்கியவர்களின் செயல்கள்.

(C. H. லோ என்பவர் கல்கத்தாவிலிருந்து ஒலிபரப்பியது).

தற்சமயத்தில் ஸ்வதந்திர சைனாவிற்குச் சென்றுபார்த்தால் குன்மிங், சுங்கிங் முதலிய நகரங்களின் தெருக்களில் யுத்த உடைகளைத் தரித்துக்கொண்டு செல்லும் சிலரைக் காணலாம். அவர்களைச் சீனர்கள் மீகூஜான், அழகிய நாட்டுமக்கள் என்று அழைக்கின்றனர். அவர்கள் பிரியமாகவும், கௌரவமாகவும் நடத்தப்படுகிறார்கள். சரீரதிடமும், முகமலர்ச்சியும், அதிகமான சாமர்த்தியமும் வாய்ந்திருக்கிறார்கள். இவர்கள்தான் A. V. G. படையினர் அவர்களைப்பற்றி அதிகம் விசாரித்தால் சென்ற வருஷத்திற்குள் அவர்கள் செய்துவந்த அறிய செயல்களைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

இரண்டு வாரங்களுக்குமுன் ஜப்பானிய ஒலிபரப்புகளில் அழகிய நாட்டு மக்கள் சைனாவை விட்டுப் போய்விட்டதால் சைனாவைப் பிடிப்பது சுலபமாகிவிட்டதாகச் சொல்லப்பட்டது. இவ்விதம் ஜப்பான் நினைத்திருந்ததற்குப் பதிலாக அமெரிக்க வாலண்டியர்ப் படை, அமெரிக்க விமானப் படையுடன் சேர்ந்துகொண்டது. சைனாவை விட்டுப் போகவுமில்லை. ஜூலை மீ 4உ பிரிகேடியர் ஜெனரல் C. L. செனால்டு என்பவர் சுங்கிங்கிலிருந்து அமெரிக்கா திரும்புவதானால் ஜப்பானியரைத் தோற்கடித்த பிறகே செல்லுவோம் என்றார்.

அமெரிக்க வாலண்டியர் படையென்பது 1941-ம் ஹூ ஆகஸ்டில் சயாங்கைஷேக்கினால் ஆரம்பிக்கப்பட்டது. பர்மாவில் சிறிதுகாலம் பயிற்சி பெற்று 1941-ன் கடைசியில் அது சைனாவில் யுத்தத்தில் ஈடுபட்டது.

A. V. G. படைப்பகுதியில் 350 பேருக்குமேல் இருந்ததில்லை. ஆனால் விமான மாலுமியானாலும், தரைப்படையைச் சேர்ந்தவனானாலும் அதிகப் பயிற்சி பெற்றவனாக இருப்பான். ஏனென்றால் பல மாதங்களாக நடந்த சண்டை அனுபவத்தால் "போர்ப்புலிகள்" என்று கியாதி பெற்றிருக்கிறார்கள்.

1940-ம் ஹூ டிஸம்பர் மீ 20உ முதல் அமெரிக்க விமானப்படை விமானச் சண்டையில் 284 ஜப்பானிய விமானங்களைச் சுட்டு அழித்திருக்கின்றனர். அதிக விமானங்களை உபயோகித்த ஜப்பானியருக்கு இவ்வளவு விமானங்கள் நஷ்டப்படுத்தியது ஒரு பெரிய விஷயம்.

டிஸம்பர் மீ 23உ ரெங்கூனை ஜப்பானிய விமானப்படை தாக்கியபோது A. V. G. யின் மூன்றாம்படை 12 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது. கிருஸ்துமஸ் விழாவின்போது ரெங்கூன் கடுமையாகத் தாக்கப்படுமென்று ஸெய்கோன் ரேடியோவிலிருந்து சொல்லப்பட்டபோது A. V. G. மாலுமிகள் மிக உஷாராகயிருந்து தாக்குதல் ஏற்பட்டபோது 23 ஜப்பானிய விமானங்களைத் துரத்தி அழித்தனர். மார்டபன் குடாவிற்கு அருகில் ஏராளமான ஜப்பானிய பாம்பர்களையும் சுட்டுத்தள்ளினர்.

இந்தத் தடையாலேயே பகல் காலத்தில் ரெங்கூன் பேரில் தைரியமாக ஜப்பானியரால் தாக்குதல்செய்ய முடியவில்லை. டிஸம்பர், ஜனவரி மாதங்களில் பிரிடிஷ் விமானப்படையுடன் சேர்ந்துகொண்டு தாய்லாந்து, இந்தோ-சைனு முதலிய இடங்களிலுள்ள ஜப்பானிய விமான நிலயங்களையும் தாக்கின.

மாத வாரியாக அப்படையின் தீரச்செயல்களைக் குறிப்பிடுவது உசிதமாகும்.

ஜனவரியில் 77 ஜப்பானிய விமானங்கள் அழிக்கப்பட்ட விவரம் ஊர்ஜிதமாயிற்று. பிப்ரவரியில் 58 எதிரி விமானங்கள் தரையிலேயே அழிக்கப்பட்டது. மார்ச்சு மாதத்தில் 34 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டது. ஏப்ரலில் 34-ம், மே யில் 26-ம் அழிக்கப்பட்டன.

A. V. G.-யில் சேர்ந்துள்ள யாவரும் எதிர்பார்த்ததற்கு மேலாகவே ஈடுபட்டிருக்கின்றனர். ஏழு A. V. G. விமானங்கள் தலைக்கு 10 எதிரி விமானங்கள் வீதம் அழித்திருக்கிறார்கள். R. H. நீல் என்பவர் 16 விமானங்களை வீழ்த்தியிருக்கிறார். (D. L. ஹில், W. N. ரீட், W. D. மெக்காரி) மூவர்கள் தலைக்கு 11 விமானங்களை அழித்திருக்கின்றனர்.

இவ்விதம் இங்கு ஈடுபட்ட A. V. G. படையைச் சார்ந்தோரை பிரிடிஷ் அரசாங்கம் விசேஷ கௌரவத்திற்கு உள்ளாக்கியிருக்கின்றனர். மற்ற 33 பேருக்கு சீன அரசாங்கம் தனிமரியாதையை வழங்கியிருக்கிறது.

சில விமானப்படை தலைவர்களுக்கும் சீன அரசாங்கம் கௌரவப் பரிசுகளை வழங்கியிருக்கிறது. E. பாக்ஸ் என்பவரைப்பற்றி பிரிடிஷ் அரசாங்கத்தாருக்கு சிபார்சு செய்திருக்கிறது.

A. V. G. படை விமான யுத்தத்தோடு மட்டும் நிறுத்திக்கொள்ளவில்லை. எதிரியின் விமான தளங்களையும், அரண்களையும் தாக்கி ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. உதாரணமாக மார்ச்சு 24-ல் 10 A. V. G. விமானங்கள் தாய்லாந்தில் சிங்மாயைத் தாக்கி 15 பெரும் தீக்கள் மூட்டப்பட்டன. விமான தளமும் எரிந்தது.

மே மாதத்தில் ஜப்பானியர் சீன அணிகளைப் பிளந்து செல்லும்போது லாஷியோவிலிருந்து ஸால்வீனைக் கடக்கப் பார்த்தார்கள். மேலும் மேற்கு யூனுவில் பெபோஷானையும் திரும்பப் பிடிக்கப் பார்த்தார்கள். அந்தக் காலத்தில் A. V. G. சரியான சமயத்தில் முன்னேறி ஜப்பானியரைத் தடுத்துவிட்டது.

அடிக்கடி குண்டுவீச்சுக்குள்ளானால் ஜப்பானிய யந்திரப்படை சிதறிவிடுகிறது. உடனே சீனர்களுக்கு சிறிது ஆசுவாஸமேற்பட்டு ஸால்வீன் நதியில் எதிர்த்து நிற்க முடிந்தது. மே 4 முதல்—22-க்குள் தினம் இரண்டு மூன்று தடவை எதிரி நிலயங்களைத் தாக்க A. V. G. படை சென்றது.

ஆகவே A. V. G. அதிகமாகவே யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. பர்மா, இந்தோ-சைனு, தாய்லாந்து, சைனு முதலிய இடங்களில் சண்டைசெய்திருக்கிறது. அதிகமான பாகத்தைக் காக்க வேண்டியிருந்தும், ஜப்பானியரின் விமான ஆதிக்கத்தின் நடுவிலும், A. V. G. படை சக்திக்கு அதிகமாகவே ஈடுபட்டிருந்தது.

---

## யந்திர சாதனங்கள் இல்லாத சைனியம்.

### பர்மாவில் ஜப்பானியரின் வெற்றிகரமான முறைகள்.

('லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்கு டெல்ஹி நிருபர் எழுதியது.)

யந்திர சாதனப்படைகளைக்கொண்டு இப்பொழுது யுத்தம் நடந்து வருவதில் ஜப்பானியர்கள் யந்திரமே இல்லாமல் சண்டை நடத்தியிருப்பதைப் பார்க்க, அவர்கள் ஒரு 'ரகசியக் கருவியைத், தயாரித்து இருப்பதாகச் சொல்லலாம்.



ஜப்பானியர்கள் செய்த தரைச்சண்டையில் இப்படிச் சொல்வது மிகவும் உண்மைதான். ஆனால் எதிரிகள் விமானங்களை சாமர்த்தியமாக உபயோகித்திருக்கிறார்கள். ஹிட்லர் வசமுள்ள யந்திர சாதனப்படைகள் ஐரோப்பாவில் ஆக்கிரமித்துச் சென்றதற்குக் காரணம் யந்திர பலத்தைப் பொருத்ததேயாகும். மேலும், பெர்லின் தலைமை முகாமிலிருந்து முன்னேறிச் செல்லும் டாங்கிப் படைகளை ஆதிக்கம் செலுத்தக்கூடிய பெருத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் டோக்கியோவிலிருந்து படைகளை அனுப்பும்பொழுது அவர்களுக்கு அதிக முஸ்தீப்பம் அளிக்கப்படவில்லை. அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய விதத்திற்கு ஒருவித ஏற்பாடும் செய்யவில்லை. நாடுகளைத் தாண்டி நடத்தும் யுத்தத்தில் என்ன திட்டம் செய்யவேண்டும் என்பதைப்பற்றி யோசிப்பதுமில்லை. ஆனால் அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய விதம் அப்படைகளின் தலைமை அதிகாரிகளுக்கும், வீரர்களுக்கும் என்ன யோசனை தோன்றுகிறதோ அதைப் பொருத்திருந்தது.

ஒழுங்காகத் தயாரிக்கப்பட்டும், விசேஷப் பயிற்சி பெற்ற தரைப்படை மிகவும் குறைவான முஸ்தீப்புடன் கொஞ்சம் மோட்டார் சாதனத்தைக் கொண்டோ அல்லது மோட்டார் சாதனமேயில்லாமலோ அதிகப் பயன்களைப் பெறலாமென்று ஜப்பானியர்கள் ரூபித்திருக்கிறார்கள். மலேயாவிலும், பர்மாவிலும் இன்னும் இதர இடங்களிலும் ஜப்பானிய வீரர்கள் நன்றாகப் பாதுகாக்கப்பட்ட இடங்களைத்தாண்டி நுழைந்து சென்றிருக்கிறார்கள். ஏனென்றால் நமது படைகள் யந்திர சாதனத்தை நம்பியிருப்பதால் ரஸ்தாக்கள் உள்ள இடங்களில்தான் அவைகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடுமென்பதை அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏறிச் செல்வதற்கு மோட்டார்கள் தேவையானால் ஆங்காங்கு அவர்கள் கைப்பற்றக்கூடியவை எல்லாம் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு சிப்பாயின் முரட்டுத்தனமானது சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி அவன் நடந்து கொள்வதற்கு அனுகுணமாக இருந்தது. அவன் எந்த நாட்டைக் கடந்து செல்லுகிறானோ அந்த நாட்டிலுள்ள பொருள்களைக்கொண்டே ஜீவித்திருக்கிறான். அவனுக்கு வேண்டிய உணவுப்பொருள் சர்வ சாதாரணமானதால் உணவு ஸப்ளை விஷயமாக பெருத்த ஏற்பாடுகள் ஒன்றும் ஜப்பானியப் போர்வீரர்கள் செய்யவேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது.

---

## எகிப்தில் யுத்த தந்திரத்தில் நூதனமுறை.

### சென்ற யுத்தத்தில் பள்ளம்வெட்டி, பதுங்கியிருந்து சண்டை செய்யும் முறை மீண்டும் இப்பொழுது அனுஷ்டிக்கப் படுகிறது.

(லெப்டினண்டு ஜெனரல் ஸர் டோக்ளஸ் பிரௌன்ரிக் என்பவர் எழுதியது).

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம் வந்த செய்தி).

மீண்டும் பிரிடிஷாரும், ருஷ்யர்களும் சேர்ந்து நடத்தும் போர்முனையில் நாம் அதிகம் கவனம் செலுத்தவேண்டும். அங்குதான் அனுகூலமான பயன்களை எதிர் பார்க்கலாம். எகிப்தில், இந்தப் போர்முனையின் தெற்குப் பகுதியில் சென்ற யுத்தத்தில் நடத்திய மாதிரி நூதனமாகப் பள்ளத்தில் மறைந்துகொண்டு போர் புரியும் முறையை இப்பொழுது கையாளப்பட்டுவருகிறது சென்ற யுத்தத்தில் இம்முறையைக் கையாளுவதற்கு என்ன காரணங்களிருந்ததோ, அதே காரணங்கள்தான் இப்பொழுதும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் யுத்தத்தின் தன்மையானது மிகவும் குறுகிய அளவில் நடக்கிறது. சென்ற யுத்தத்தில் 1914-ம்வருஷத்தில் யுத்தம் நிலவரமில்லாமல் ஒருபக்கத்திலிருந்து மறுபக்கம்வரை தொடர்ந்து நடந்துவந்தது. அப்படி நடந்த போர் முனையின் நீளம் 400-மைல். போர்முனையின் ஒரு பக்கத்தில் ஸ்விட்ஸர்லாந்தும், மறு பக்கத்தில் கடலுமாக

வியாபித்திருந்தது. அகல வாட்டத்தில் பெல்ஜியத்திலிருந்து மார்னேவரை போர்முனை அங்கு மிங்கும் அல்லாடிக்கொண்டிருந்தது. முன்போலவே இப்பொழுது எகிப்தில் நடக்கும் யுத்தத்திலும் இதுவரை 18 மாதகாலம் நடந்த தீவிரமான போரில் லிபியா பாலைவனத்தைச் சுற்றிலும் போர்முனை அங்கு மிங்கும் அல்லாடிக்கொண்டிருந்தது.

இப்பொழுது எகிப்தில் இருதிறப்பார்களின் போர்முனையில் ஒரு கோடி சமுத்திரமும், மற்றொரு கோடி குவாடாரா பள்ளத்தாக்குமாக இருக்கிறது. இவ்விரண்டுக்கும் இடையேயுள்ள பிரதேசத்தில்தான் போர் நடக்கிறது. 1914-ம் வருஷ யுத்தத்தில் குதிரைப்படையிருந்தது. அதற்குப்பதிலாக சமீபத்தில் நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்ட டாங்கிகள், கவசம்பூண்ட வண்டிகள் இவைகள் இப்பொழுது உபயோகப்படுத்தப்படுகின்றன. இதற்குமுன் குதிரைப் படையை முன்னேறவிடாமல்ச் செய்ய சென்ற யுத்தத்தில் யந்திர பீரங்கிகள் உபயோகப்பட்டன. நவீன யுத்தத்தில் டாங்கிகள் முன்னேறி வருவதைத் தடுப்பதற்கு விமான எதிர்ப்பு பீரங்கிகளும், பருந்து பாய்ச்சல் விமானங்களும் உபயோகப்படுகின்றன. இவ்விதமாக சென்ற யுத்தத்தில் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது நவீன முறை கையாளப்பட்டு, எதிரிகளின் முன்னேற்றம் தடுக்கப்படுகிறது. இரண்டு படைகளின் பக்கவெட்டுகளில் பலம் சரியானபடி அமைந்திருந்து, பயமில்லாமல் இருக்கும்பொழுது சந்தர்ப்பம் பார்த்து எதிரி பலத்தைக் குறைப்பதற்குத் தகுந்தபடி வெவ்வேறு முறைகளை அனுசரிக்க வேண்டிய அவசியமிருக்கிறது.

எகிப்தில் நடக்கும் போர் ஒரே நிலையாக இருந்துவருவதை அழிப்பதற்கு ஒவ்வொரு சட்சியும் போர் நடத்த ஆயத்தமாக இருக்கிறது. ரோமல் முஸோலினிக்கு நல்லவெற்றி யளிப்பதாக நினைத்திருந்தது தவறிவிட்டது. வட ஆபிரிக்காவில் முஸோலினி விஜயம் செய்ததற்குக் காரணம் அலெக்ஸாண்டிரியா துறைமுகம் கைப்பற்றப்பட்டதாக இதாலியில் அரசியல் வட்டாரங்களில் வதந்தி கிளம்பியதுதான். ஹிட்லரும் அவ்வாரே எண்ணினான் என்று சொல்லுவதும் ஆச்சரியமில்லை. பெரிய சைனியத்தையும், விமானப்படையையும் மேற்கு எகிப்தில் நாம் விரும்புவதற்கு மேலாகவே வைத்துக்கொள்ளும்படி ரோமல் நிர்ப்பந்திக்கிறான் என்பது உண்மைதான. இதைக் காட்டிலும் முக்கியமான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தடுப்பதற்கு உபயோகப்படுத்தக்கூடிய படைப் பகுதி வேறு எவ்விதமாக உபயோகப்படுத்தக்கூடும் என்பதை அவன் நன்கு உணர்ந்திருக்கிறான்.

ஹிட்லர் ஸூயஸ் கால்வாயைக் கைப்பற்ற முக்கிய நோக்கம் கொண்டிருப்பதால், அதை அடையும்வரை ரோமலுக்கு வேண்டிய துருப்புகளையும், ஸப்ளைகளையும் அனுப்பிவருவான். இப்பொழுது ருஷ்யாவில் டான் நதியைக் கடந்து முன்னேறிச் செல்லும் வான்போக்குக்கு ஜெர்மானியர் உதவி செய்து வருவதைப் போலவே, அங்கும் ரோமலின் கை சளைக்கா வண்ணம் உதவிகள் அனுப்பப்படும்.

தளகர்த்தர் ஆச்சின்லெக் இவ்விஷயங்களை நன்கு உணர்ந்திருக்கிறார். அதனால்தான் அவர் வேண்டுமென்று எதிரி அணிவகுப்பில் பிளவு உண்டாக்க வேண்டிய நம்பிக்கையுடன் தாக்கி வருகிறார். அப்படி உண்டாகும் பிளவினால் தானும் உட்புகுந்து விடலாமென்றும் எதிர்பார்க்கிறார்.

ருஷ்யாவில் நிலைமை ஜெர்மானியருக்கு அனுகூலமாகக் காணப்படுகிறது. அடுத்தபடியாக டிமோஷன்கோ தன்னுடைய இருப்புப் படைகளையும், தன்னுடைய முழுபலத்தையும் வெளிக்காட்டுவது ஒரு முக்கியமான விஷயம். டான் நதிக்கும், டானெட்ஸ் அடிவாரத்துக்கும் இடையேயுள்ள பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் அவனிருக்கும்பொழுது விரோதிப்படை அவரைச் சுற்றி வளைத்துக் கொள்ளவிடாமல் தவிர்த்து விட்டார். நிலைமை அபாயகரமாகத் தோன்றினாலும் வெகு சாமர்த்தியமாக அவர் பின் வாங்கியதை அவர் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது இப்பொழுது அவரது பெரிய காரியமாக இருக்கிறது.



ருஷ்யப் போர்முனையில் ஜெர்மானியர் வலுவாகச் சண்டைசெய்ய முடியாமல் தடுப்பதற்கு, பிரிடிஷ் விமானப்படை ஜெர்மன் தொழிற்சாலைகளைத் தாக்கி வருகிறது. மேலும் ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஏற்படுத்தப் போவதாக பிரிடிஷார் பயமுறுத்தி வருவதிலிருந்தே ஹிட்லருக்கு பிரான்ஸ், பெல்ஜியம், நார்வே முதலிய இடங்களில் சைனியங்களையும், ஏராளமாக விமானங்களையும் பாதுகாப்பதற்காக வைத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இரண்டாவது போர்முனையைப்பற்றி உண்மையில் பயமில்லாத போனால் ஹிட்லர் அங்கு வைத்துக்கொள்வதாக எண்ணியிருக்கும் துருப்புகளையும், விமானங்களையும் பல்வேறு இடங்களுக்கு தேவைக்குத் தக்கவாறு அனுப்பி இருப்பான்.

---

# அராபியர்களின் பாக்கியமும், பயமும்.

---

## ஸிரியாவை ஆக்கிரமித்துக் கொண்டதிலிருந்து உண்டான பயன்கள்.

(லண்டன் டைம்ஸ் பத்திரிகை, ஏப்ரல் 15, 1942).

### அதிர்ஷ்டசாலிகளாகவும், சௌக்கியமாகவும் இருக்கின்றனர்.

தற்போது ஸிரியா, லெபானன் முதலிய இடங்கள் வழியாகச் செல்வது யுத்தப் பிரதேசமில்லாத இடத்தில் சமாதான காலத்தில் செல்வதுபோல் அவ்வளவு பத்திரமாயிருக்கும். அவை யுத்தப் பிரதேசங்களாக இருந்தாலும், போர் நடக்குமிடத்திலிருந்து அதிக தூரத்திலிருக்கின்றன. அதனால் யுத்தத்தைப் பற்றி ஒருவரும் லக்ஷியம் செய்வதில்லை. வியாபார முறையில் பணம் சம்பாதித்து வருகிறார்கள். அங்குள்ள எல்லோருக்கும் வேலையிருந்து வருகிறது. பிரிடிஷ்காரர்கள் அன்றாடம் அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், மற்ற சாமான்களையும் கொடுத்து வருகிறார்கள். இதனால் அவர்களுக்கு சமாதான காலத்தில் கிடைத்துவந்தது போல் எல்லாம் கிடைக்கிறது என்று சொல்வதற்கில்லை. ஆனால் யுத்த காலத்தை அனுசரித்து கவனித்தால் அவர்களின் நிலைமை ரொம்பவும் திருப்திகரமாயிருக்கிறது. மேலும் ஜெர்மனி ஆக்கிரமிதத் நாடுகளிலுள்ள நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இவ்விரு தேசங்களும் சுபீக்ஷமாக இருக்கின்றனவென்றே சொல்லலாம்.

### பயமும், நம்பிக்கையும்.

மேற்சொல்லியபடி தற்போதுள்ள நிலைமை சதா காலமும் மாறாமல் இருக்குமோ, என்பதுதான் முக்கிய கவலை. மத்தியக் கிழக்கைத் தாண்டி ஜப்பானியர்களுடன் சேர, ஜெர்மானியர் அநேகமாக முயற்சிக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஜெர்மனியின் வசந்தகாலத் தாக்குதலும், பலவிடங்களில் ஏற்படும் என்ற வதந்தி இருந்துவருகிறது. ஜப்பான் யுத்தத்தில் இறங்கியது முதல், அராபியர்களுக்காக ஜெர்மனி இதுவரை செய்துவந்த பிரசாரம் இன்னும் வலுத்திருக்கிறது. எப்படியிருந்தாலும் அங்கு நடந்துவரும் முக்கியமான விஷயத்தை இந்தப் பிரசாரம் மறைத்துவிட முடியாது. அது என்னவென்றால் ருஷ்யாவில், ஜெர்மானியர் ஹிம்சிக்கப்பட்டு நசுக்கப்படுகிறார்கள். இவ்விஷயம் பல முக்கிய பிரச்னைகளைத் தீர்க்க முக்கியமானவை. லெபானிலுள்ளவர்கள் நேசநாடுகளின் வெற்றி ஒருக்கால் ஏற்படலாம் என்று எண்ணியிருந்தார்கள். இப்பொழுது பெரும்பாலும் வெற்றி அவர்களுடையதுதான் என்று நம்பிவருகிறார்கள். அதேபோலவே ஸிரியாவிலுள்ள முஸ்லீம்களுக்கு ஜெர்மனிக்கு வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை வரவரக் குறைந்து கொண்டு வருகிறது. மேலும், ருஷ்யாவில் ஜெர்மனி அடைந்துவரும் தோல்விகளினால் சமீப காலத்திற்குள் மத்தியக் கிழக்கில் பெரிய போர் ஒன்று தொடங்குவதற்கு முடியாத காரியம். ஆனால் லிபியாவில்

ஜெர்மனி தாற்காலிகமாக முன்னேறிச் செல்வதும், தொடர்ந்தாற்போல் ஜப்பான் வெற்றி அடைந்துவருவதும் நமக்கு கலக்கத்தை உண்டாக்கலாம். பொதுவாகச் சொல்லுமிடத்து ஒரு சில மாதங்களுக்கு முன் மத்தியக் கிழக்கில் நேசநாடுகளின் நிலைமை இருந்ததைவிட, இப்பொழுது ரொம்ப சாதமாக இருந்துவருகிறது. பொதுப்படையாக ஜனங்கள் சிநேகமாகவும், ஒத்துழைப்புடனும், ஸிரியன், லெபானனிய அரசாங்கங்களிடமும், ஆக்கிரமித்த நேசதேச அதிகாரிகளிடமும் நடந்துவருவதிலிருந்து, அவர்கள் நேசதேசத்தார்களின் சார்பிலிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. ஸிரியாவிலுள்ள முஸ்லீம்கள் நேசதேசத்தார்களுக்கு விரோதமாகவோ, அச்சு நாடுகளுக்கு சாதகமாகவோ, அல்லது மாறுபாடாகவோ இருப்பதாகச் சொல்வது பிசகு.

## இதாலியர்களுடன் விரோதம்.

அங்கு பிரிடிஷ்காரர்களுக்கு விரோதமாகவும், ஜெர்மானியர்களுக்கு அனுகூலமாகவும் சில அராபியர்கள் இருக்கிறார்கள். ஆனால் பொதுவாக அவர்கள் சுயநலத்தைப் கருதிவருகிறார்கள். அவர்கள் நடந்துகொள்ளும் தன்மையும், யுத்தத்தில் தோல்வியடையக்கூடியவர்களிடம் அதிக சிநேகமாகயிருந்தால் அதனால் ஏற்படக்கூடிய பயன்களை முன்னிட்டு உண்டாகும் பயத்தைப் பொருத்தே இருக்கிறது. வெளிப்படையாக அவர்கள் இதாலியர்களிடம்தான் விரோதம் பாராட்டிவருகிறார்கள்.

பெர்லினில் ராஷிட் ஆலியும், இன்னும் மற்றவர்களும் ஹோட்டலில் இருந்துவந்ததற்கு இதாலியர்கள் தான் செலவு செய்தார்களென்று இந்நாட்டிற்கு இப்பொழுதுதான் செய்திகிடைத்திருக்கிறது. ஸிரியா தேசீய வட்டாரங்களில் இதை மிகவும் இழிவாகக் கருதப்படுகிறது.

## ஸ்வதந்திரம் அடையும் மார்க்கம்.

அதிகாரப் பற்றில்லாத ராஜீய வட்டாரங்களில்தான் அநேக குணதோஷ விமர்சகர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வெளிப்படையாகச் சொல்லுவது என்னவென்றால், புதிதாக நியமிக்கப்பட்ட ஸமஸ்தானங்களின் அதிகாரங்கள் மிகவும் குறைவாக இருக்கிறது என்கிறார்கள். அரசாங்கத்தின் நிலைமை சந்தேகாஸ்பதமாக இருப்பதாகவும், அதிகாரிகளும் அபிப்பிராயத்தை ஒத்து நடக்கக்கூடியவர்கள் அல்லவென்றும் சொல்லப்படுகிறது. லெபானன் சம்பந்தப்பட்ட மட்டிலாவது, ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்கள் அந்நாட்டு தேச சரித்திரத்தில் கண்டிராத அவ்வளவு யோக்கியமான அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

வேறு சில காரணங்களுக்காக ஸிரியர்களும், லெபானியர்களும் ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுத்துவரும் ராஜீய உரிமைகளை விசேஷமாக தெரியக்கொடுத்துவருகிறார்கள். இதுவரை யுத்த காலத்தில் ராணுவ ஆக்கிரமிப்பைச் சாதகமாகக்கொண்டு புதிய ஸமஸ்தானங்களுடன் காலவரையில்லாத சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமென்று ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்களுக்கு எண்ணம் இருப்பதாக சந்தேகம் கொண்டிருந்தார்கள். இந்த சந்தேகங்களுக்கு ஆதாரமில்லையென்று அவர்களுக்குத் தோன்றிவிட்டது. ஒரு பிரிடிஷ் ராஜீய ஸ்தானாதிபதியை நியமித்ததைக் குறித்து ஸிரியர்களும், லெபானியர்களும் திருப்தியடைந்திருக்கிறார்கள். இதிலிருந்து ஸிரியாவுக்கும் லெபானனுக்கும் ஸ்வதந்திரம் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையில் பிரிடிஷார் மனப்பூர்வமாகக் கலந்துகொள்ளுகிறார்கள் என்பதற்கு அடையாளமாகக் கருதப்படுகிறது. ஆகையினால் லெவான்டில் பிரெஞ்சு ஆதிக்கம் இருக்கும்படி ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்கள் செய்து வருவதை ஸிரியர்களும், லெபானியர்களும் ஆதரிக்கிறார்கள். சந்தர்ப்பம் நேரிடும்பொழுது அந்த நாடுகளுக்குப் பூரண ஸ்வதந்திரம் கிடைப்பதை பிரெஞ்சு ஆதிக்கம் தடுக்காது என்றும் அவர்களுக்குத் தோன்றுகிறது.



## சுபிக்ஷமான நாடுகள்.

மத்தியக்கிழக்குப் பிரதேசத்தில் ராஜீய விஷயங்கள் இரண்டாம் பக்ஷமான வியவகாரங்கள். அரசாங்கத்தாரும், ஆக்கிரமித்திருக்கும் அதிகாரிகளும் ஸப்ளை பிரச்னையைப் பற்றியே முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். சென்ற கோடைகாலத்தில் பிரிடிஷாரும், ஸ்வதந்திர பிரெஞ்சுச் சைனியமும், அந்நாடுகளில் நுழைந்தபொழுது ஸிரியாவும், லெபானனும் பொருளாதார நெருக்கடியில் இருந்தது. ஆனால் பிரிடிஷ்காரர்கள் தங்கள் உயிருக்கே மன்றாடிக் கொண்டிருக்கும்பொழுது ஆயிரக்கணக்கான டன்கள் நிறையுள்ள கோதுமையை ஸிரியாவுக்கும் லெபானனுக்கும் கப்பல் மூலமாக அனுப்பி பஞ்சமேற்படாமல் தவிர்த்தும், அங்கு உணவு நிலைமை மேன்மையாகச் செய்தும் உதவியளித்ததில் ஸிரியர்களுக்கும், லெபானியர்களுக்கும் பெருத்த நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

## சாதக பாதகங்கள்.

பிசகுகள் சில நேர்ந்தன. மார்க்கெட்டில் தானியங்கள் ஏராளமாகக் கொண்டுவந்து குவித்து, விலையை இறக்கினால் தானியங்களை வெளியே விடாமல் கட்டிவைத்திருக்கிறவர்கள் அவற்றை விற்றுவிடும்படி நேரிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. யுத்தகாலத்தில் பணமுள்ள ஸிரியர்களும் லெபானியர்களும் தானியத்தை வாங்கி கட்டிவைத்துக்கொண்டார்கள். மார்க்கெட்டில் எவ்வளவு தானியமிருந்தாலும் அவற்றையெல்லாம் விலைக்கு வாங்கப்பட்டது. விலை குறையவில்லை. ஏழை ஜனங்களுக்கு உணவு கிடைக்காமல் கஷ்டப்பட்டார்கள். இதனால் உணவுப் பொருள்களை பாகித்துக் கொடுக்கும் முறையை மாற்றி அதிகாரிகள் திட்டம் செய்தார்கள். இப்பொழுது அந்நாட்டின் நிலைமை எப்படியிருக்கிறதென்றால், அந்நாட்டில் இன்னும் தானியமிருக்கிறது. அதிகப்படியாக பங்கிட்டுக் கொடுக்கும் அதிகாரம் பொதுமக்களிடம் இருக்கிறது. அதிகாரிகளிடமில்லை. ஆனால் நாம் எதிர் பார்ப்பதைக்காட்டிலும் உணவு பொருள்களின் விலை அதிகமாகத்தான் இருக்கிறது.

மற்றொரு புறத்தில் பார்க்க வேலைக்குக் கூலி உயர்ந்துவருகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை பிரிடிஷ், ஸ்வதந்திர பிரெஞ்சு படைகள் ஒழித்துவிட்டார்கள். நாட்டில் ஒரு புறத்திலிருந்து மறுபுறம்வரை ரோடுகள், இருப்புப் பாதைகள், விமான நிலயங்கள், கோட்டைகள் இவைகள் கட்டுவதில் ஸிரியர்களுக்கும், லெபானியர்களுக்கும் நல்ல சமயத்தில் வேலை கிடைத்திருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அங்கு வேலைக்கு வருகிறவர்களைக் காட்டிலும் வேலைக்கு வேண்டியவர்கள் அதிகம் தேவையாக இருக்கும்.

உள்நாட்டில் விளைவுப்பொருள்கள் அதிகமாக இருந்தபோதிலும், இந்நாடுகளில் சுபிக்ஷமும், விளைவுபொருள்களும் அதிகமாக இருக்கவேண்டுமென்றால் மத்தியக் கிழக்கு ஸப்ளை இடங்களிடமிருந்து கப்பல்களில் ஏராளமாக உணவுப் பொருள்களையும் விளைவு பொருள்களையும், அனுப்புவதைப்பொறுத்து இருக்கிறது. முந்தியைக் காட்டிலும் வருங்காலத்தில் இப்பொழுது நிலைமை அதிக சுலபம். மத்தியக் கிழக்கு ஸப்ளை நிலைமையானது கேவலமாக வருவதற்கு நெடுங்காலம் பிடிக்கும். அதற்குள் யுத்த நெருக்கடி இந்நாடுகளுக்குத் தோன்றாது.

---

# அலாஸ்கா மார்க்கம்.

# கனடாவில் ஏராளமாக அமெரிக்க இஞ்ஜினியர்கள் வேலை செய்கிறார்கள்.

**(லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு கனடா நிருபர் மே 27, 1942 எழுதியது).**

பஸிபிக் மஹா சமுத்திரத்தில் யுத்தம் ஆரம்பித்தவுடன் யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து அலாஸ்காவிற்கு ராணுவப் போக்குவரத்துக்காக ஒரு பெரிய ரஸ்தா

போடவேண்டுமென்ற அவசியம் மீண்டும் ஏற்பட்டது. அலாஸ்காவிலுள்ள உத்தியோகஸ்தர்கள் "பர்மா ரஸ்தா" வைப்போல உடனேயே ஒரு பெரிய ரஸ்தா ஏற்படுத்தவேண்டுமென்று அவசரப்பட்டார்கள். அதன் மூலம் மேற்குக் கரையிலுள்ள பெரிய ஆயுத சாலைகளுக்கும், அலாஸ்காவிலுள்ள ராணுவம், கப்பற்படைத் தளங்களுக்கும் போக்குவரத்துக்கு சாதகமாகயிருக்கும் என்பதுதான் அவர்கள் நோக்கம். அப்பிரதேசத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அதிகமாக விமர்சனம் செய்யப்பட்டது. பிலிப்பைன்ஸ் தீவுகளை விடு மற்ற அமெரிக்காவுக்குச் சொந்தமான எந்தப் பிராந்தியத்தைக் காட்டிலும் அதுதான் ஜப்பானுக்கு அருகாமையிலிருக்கிறது. அலாஸ்காவிலுள்ள தளங்களை ஜப்பானிய பாம்பர் விமானங்கள் தாக்கக்கூடும். ஸைபீரியா வழியாக யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து ஸோவியத் ஐக்கிய ருஷ்யாவுக்கு விமானப் போக்குவரத்துக்கு அனுகூலமாக நடுவில் அலாஸ்காவில் வந்திறங்கிப்போவது அவசியமாக இருக்கிறது. இந்த மார்க்கம் ஸான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து ஸைபீரியா வழியாக வ்ளாடிவாஸ்டக் துறைமுகத்திற்குச் செல்லும் மார்க்கத்தைக் காட்டிலும், சுருக்கமாக இருக்கிறது.

அமெரிக்க அரசாங்கமும், கனடா அரசாங்கமும், சாஸ்வதமான பொது தற்காப்பு இலாகா ஏற்படுத்தியிருப்பதை அங்கீகரித்திருக்கின்றன. அந்த இலாகா ஒரு பெரிய ரஸ்தாவைப் போடுவதற்கு திட்டம் போட்டிருக்கிறது. அந்த ஏற்பாட்டின்படி வெகுகாலமாக யோசனையிலிருக்கும் ரஸ்தா போடுவதை உடனே ஆரம்பிக்கவேண்டுமென்று கனடிய மந்திரிசபையில் மார்ச்சு மாத ஆரம்பத்தில் மெக் கென்ஸி கிங் என்பவர் பிரேரேபித்தார். இந்த ரஸ்தா 1,500 மைல் நீளமுள்ளது. அதைப்போடுவதற்கு 2,50,00,000 டாலர்கள் முதல் 3 கோடி டாலர் வரை செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தச் செலவில் பாதியை கனடா அரசாங்கம் பொருத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருந்ததை அவ்வரசாங்கம் இதுவரை ஆக்ஷேபித்து வந்தது. ஆனால் இப்பொழுது அந்த ஆக்ஷேபனைக்கு இடமில்லை. ஏனென்றால் கனடா பகுதியில் செல்லும் அந்த ரஸ்தாவில் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு சில உரிமைகள் இருக்கும்படி கனடா அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமானால் யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்கமே இந்த ரஸ்தாவைப் போடுவதற்கு நேரிடும் செலவு பூராவையும் பொறுத்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

## தெற்கு அடிவாரம்.

இந்த மார்க்கத்தைப் பற்றி ஜார்ஜ் பிளாக் என்பவர் அதிக பலமாக ஆக்ஷேபித்தார். அவர் இதற்குமுன் கனடாவில் காமன்ஸ் சபைத் தலைவராக இருந்தவர். ஒட்டாவாவில் யூகான் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அநேக வருஷங்கள் வரை கனடா அரசாங்க சபையில் மெம்பராக இருந்ததின் காரணமாக, கனடாவின் வடமேற்கு மூலையிலுள்ள நாடுகளைப் பற்றி எல்லோரைக் காட்டிலும் அதிகம் தெரிந்துகொண்டிருக்கிறார். இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட பாதையானது அதிக தூரம் சதுப்பு நிலங்களின் வழியாகச் செல்லவேண்டியிருப்பதால் அப்பிரதேசங்களில் ரஸ்தா போடுவது அதிக கஷ்டமாகவும், பணச் செலவு பிடிக்குமென்றும் அவர் மார்ச்சு மாதம் 7-ம் தேதி காமன்ஸ் சபையில் சொன்னார். ஆனால் ரஸ்தா ஏற்படுத்துவதைப் பற்றி தீர்மானமான முடிவு ஏற்பட்டுவிட்டபடியால், கால தாமதம் ஒன்றும் செய்யாமல் அமெரிக்கச் சைனியத்திலுள்ள இஞ்ஜினியர்கள் ரஸ்தா போடுவதின் ஆரம்ப வேலைக்கு எத்தனிப்பார்கள். அமெரிக்கச் சைனியத்தில் பேர்போன இஞ்ஜினியரான கர்னல் வில்லியம் M. ஹோக் என்பவரின் மேற்பார்வையின்கீழ் அந்த ரஸ்தாபோடப்படும். அவர் மிஸோரி (Missowri) யிலிருந்து வந்தவர். அவர் இன்னும் ராணுவத்தில் சேர்ந்த மற்ற இஞ்ஜினியர்களுடன் ஏற்கனவே டாஸன் கிரீக் என்னுமிடத்திற்கு வந்துவிட்டார். அங்கு அவர்கள் ரஸ்தாவின் தென் அடிவாரத்தை ஸ்தாபிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஏராளமான வேலையாட்களையும், அதற்குவேண்டிய மூஸ்தீப்புகளையும் நெல்ஸன் கோட்டைக்குள் கொண்டுபோவதென்பது அவர்களுடைய முதல்



நோக்கம். இந்த இடத்தை நோக்கி கூட்டங்கள் பிரயாணமாகிவிட்டன. யூக்கான் ரயில்வேயிலுள்ள ஒயிட்ஹார்ஸ் என்ற இடத்தில் மற்றொரு தளம் இதே சமயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்திற்கு கடல்மார்க்கமாகவும், ரயில் மார்க்கமாகவும் ஸப்ளைகள் கொண்டுசெல்லப்படுகின்றன. அங்கிருந்து நில அளவுக்காரர்களும், ரஸ்தாபோடுகிறவர்களும் வடக்கேயும் தெற்கேயும் வேலை செய்வார்கள்.

இந்த ரஸ்தாவிற்கு வழி ஏற்படுத்திவிட்டால் தரைப்படை இஞ்ஜினியர்கள் செல்வதற்காக மட்டில் ரஸ்தா கட்டிவிடுவார்கள். இந்த வேலை பூர்த்தியானவுடன் யுனைடெட் ஸ்டேட்ஸின் பொது ரஸ்தா ஸ்தாபனத்தின் வசம் இந்த வேலை ஒப்படைக்கப்படும். பிறகு அந்த ஸ்தாபனமானது சாலையை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு 24 அடி அகலமுள்ள முதல்தரமான ரஸ்தாவாகக் கட்ட ஆரம்பிக்கும். இம்மாதிரி 1,500 மைல் நீளமுள்ள ரஸ்தாவைப் போட்டு முடிப்பதற்கு 18 மாதங்கள் முதல் 24 மாதங்கள்வரை பிடிக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்தல சன்னிவேசத்திலுள்ள கஷ்டங்களினாலும், இஞ்ஜினியர்களுக்கு ஏற்படும் சிரமங்களினாலும் அதிகக்காலம் பிடித்தாலும், பிடிக்கலாம்.

## டெட்ராயிட்லிருந்து மஞ்சுகோ வரை.

இந்த புதிய ரஸ்தாவைக் கட்டி முடித்தவுடன் அலாஸ்காவிற்குத் துரிதமான தரை ஸப்ளை போக்குவரத்து ஏற்பட்டுவிடும். இக்காலத்திற்குள் ஜப்பானைத் தோல்வியடையும்படி செய்யாமல்போனால், ஜப்பானுக்கு எதிராக நடத்தும் பெரிய தாக்குதல்களுக்கு அலாஸ்காவை ஒரு தளமாக உபயோகிக்கவேண்டிவரும். அப்பொழுது இந்தப் பிராந்தத்துக்கு நேரான தரைமார்க்கத்தினால் ஏற்படக்கூடிய சாதகம் நன்கு தெரியக்கூடும். ஆனாலும், இந்த ரஸ்தாவில் இன்னும் பலவிதமான ஆஸ்தயைக் கொடுக்கக்கூடிய சாதகங்களும் ஏற்படும். அலாஸ்காவிற்கும், ஆசியாவிற்கும் நடுவிலுள்ள பேரிங் ஜலசந்தியின் குறுகிய பாகம் 56 மைல் அகலமுள்ளதாக இருக்கிறது. ஐக்கிய அரசாங்கத்தார்கள் பஸிபிக் சமுத்திரத்தில் கடலாதிக்கத்தைத் திரும்பப் பெற்றார்களானால் ஆசியாவிற்கு அந்த ஜலசந்திக்குக் குறுக்கே படகுகள் மூலமாகக்கொண்டு போவதற்கு திட்டம் ஏற்படுத்தப்படும்.

டிரான்ஸ் ஸைபீரியா இருப்புப்பாதையிலிருக்கும் இர்கூட்ஸ்க் என்ற இடத்தையும், எட்மன்டனையும், (Edmondon) பிணைக்கும்படி மார்க்கம் ஏற்பட சம்பாவிதம் இருப்பதைக்கண்டு, 'நியூ ரிபப்ளிக்' பத்திரிகையில் மிஸ்டர் பென்டன் மாக்கே என்பவர் எழுதியிருக்கிறார். அவர் கணக்கிடுவதைப் பார்த்தால் யுனைடெட் ஸ்டேட்ஸின் நடுமத்தியில் டெட்ராயிட் முதலிய இடங்களிலிருக்கும் யுத்த தளவாடம் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கும், மஞ்சுகோ எல்லைப் புறத்திலுள்ள போர்முனைக்கும் இடையே 8,000 மைல்தான் இருப்பதாகத் தெரியவரும். இர்கூட்ஸ்க் என்ற இடத்திலிருந்து சைனாவிற்கு அனுப்பவேண்டிய ஸப்ளைகளை டர்க்ஸிப் ரயில்வேயிலிருக்கும் ஆல்மா ஆடா என்ற இடத்திற்கு ஏற்றியனுப்பிவிடலாம். பிறகு அங்கிருந்து சுங்கிங்கிற்கு டிரக்குகளில் சாமான்களை ஏற்றி அனுப்பலாம். இந்தப் பாதையானது மங்கோலியாவைச் சுற்றி வந்தாலும் கேப் டவுன், பர்ஸியா, ஆல்மாஆடா இந்த இடங்கள் வழியாக மத்தியச் சைனாவிற்கு வரும் மார்க்கத்தைக் காட்டிலும் கிட்டத்தட்ட 5,000 மைல் குறைவாக இருக்கும். இப்பொழுது பர்மா ரஸ்தா மூடப்பட்டுவிட்டதினால் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலிருந்தும், யுனைடெட் ஸ்டேடஸிலிருந்தும் இந்த ஒருவழி மூலமார்கத்தான் சீனத்துருப்புகளுக்கு ஸப்ளைகள் போய்ச் சேரக்கூடும்.

# அவரோ லங்காஸ்டர்.

## உலகத்தில் மிகப் பெரிதும், அதிக வேகமாகச் செல்லக் கூடியதுமான பிரிடனின் புதிய பாம்பர் விமானம்.

உலகத்தில் மிகப்பெரிதும், அதிவேகமாகச் செல்லும் 'அவரோ லங்காஸ்டர்' என்ற பாம்பர் விமானம் பிரிடிஷ் விமானப்படையில் புதிதாகச் சேர்க்கப் பட்டிருக்கிறது. அதற்கு 4 இஞ்ஜின்கள் உண்டு. அது எட்டு டன் நிறையுள்ள வெடிகுண்டுகளைத் தூக்கிச்செல்லும் சக்தி வாய்ந்தது.

நாலு இஞ்ஜின்கள் கொண்ட பிரிடிஷ் பாம்பர் விமானங்களில் மேற்சொல்லிய 8 டன் நிறையுள்ள குண்டுகளை த தூக்கும் சக்தி வாய்ந்த விமானங்களில் இரண்டு ரகம் உண்டு. ஒன்று 'ஷார்ட் ஸ்டர்லிங்' என்ற விமானம், மற்றொன்று மேற் சொல்லிய 'அவரோ லங்காஸ்டர்'. அவை இரண்டும் மணிக்கு 300 மைல் வீதம் செல்லக்கூடும்.

அநேக மாதங்கள்வரை 'லங்காஸ்டர்' விமானம் ஆகாயச் சண்டைகளில் ஈடுபட்டிருந்தது. பிற்பட்டு அது விரோதிப் பிராந்தியத்தில் 1,000 மைல் தூரம் வரை பறந்துசென்று ஆக்ஸ்பர்க்கில் பகலில் பிரபலமான தாக்குதல் செய்த விவரத்தைக் குறித்து முதன்முதலில் உத்தியோகமுறையில் வெளியிடப்பட்டது.

பகற்காலத் தாக்குதலில் சென்ற மாதத்தில்தான் நெடுந்தூரம் சென்று அநேக விமானப் பகுதிகள் தாக்கின. அவைகள் பறந்த தூரம் 1,750 மைல் இருக்கும். அவ்வளவு தூரத்திலுள்ள டான்ஸிக் 'யூ' படகு துறைகள் அவை களுக்கு இலக்காயிருந்தன.

அது 30 டன் எடையுள்ளது. அதன் பரப்பு அகலம் 102 அடி, நீளம் 70 அடி, உயரம் 20 அடி. அதில் ரோல்ஸ்ராய்ஸ் கம்பெனியில் தயாரித்த இஞ்ஜின்கள் நாலு உண்டு. அதில் 10 பீரங்கிகள் பொருதப்பட்டிருக்கின்றன. அதுபோரிடுவோர்களுக்கு அதிக தொந்தரவைக் கொடுக்கக்கூடியதாக இருக் கும் இஷ்டப்படி செல்ல உபயோகப்படுத்துவதற்கும், வேகத்திற்கும் பிரிடிஷ் விமானப்படையில் இது பிரக்யாதியடைந்துவிட்டது.

---

# யாவரும் அறியவேண்டிய விஷயங்கள்.

### கிட்டிஹாக் அமெரிக்கா விமானம்.

ஜப்பானிய விமானங்களைத் திட்டமாக வீழ்த்துவதில் அமெரிக்க கிட்டிஹாக் (Kittyhawk) விமானங்கள் பிரசித்தமானவை. இவை இரண்டு வருஷகாலமாக லிபியா, சைனா, பர்மா முதலிய இடங்களில் ஈடுபட்டிருந்தன.

இவை லாங்ஹாக் விமான இனத்தைச் சேர்ந்தவை. முதலில் அமெரிக்காவில் கர்டிஸ் கம்பெனியாரால் உற்பத்திசெய்யப்பட்டன. பல வருஷங்களுக்கு முன்பு இரண்டு இஞ்ஜின்களுள்ள கர்டிஸ்ஹாக் என்ற பெயருடன் செய்யப்பட்டன.

அதிலிருந்து நீண்ட சிறகுகள்கொண்ட ஒரு இஞ்ஜினுடன் மோஹாக் என்ற விமான வகை செய்யப்பட்டது. அல்லிஸன் இஞ்ஜின் தயாரானவுடன் கர்டிஸ் கம்பெனியில் P. 40 பிரசித்தியுடன் டாமஹாக் விமானம் தயாரிக்கப்பட்டது. 1940-ல் இவ்விமானங்கள்தான் அதிகம்.

### "வார்ஹாக்".

டாமஹாக் விமானத்திலும் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. வேகம், மறுகிச்செல்லுவது, தாக்கும் சக்தி இவைகளை அமைத்து கிட்டிஹாக் விமானங் கள்செய்யப்பட்டன. இவைகள் அமெரிக்க வாலண்டியர் படையின் உபயோகத்தில்



இருந்தன. பல யுத்த முனைகளில் ஈடுபட்டு ஆஸ்திரேலியத் தற்காப்பிலும் இவை ஈடுபட்டிருக்கின்றன.

ஹாக் இனத்தில் சமீபத்தில் வார்ஹாக் என்ற ரகமும் ஏற்பாடாகி வந்திருக் கிறது. இவைகளே சமீபத்தில் தயாரிக்கப்படுகின்றன. பரீக்ஷை செய்ததில் உலகத்திலுள்ள பைடர் விமானங்களில் இவைகள்தான் அதிக வேகமும், ஆயுத பலமும் பெற்றிருக்கின்றன.

### அமெரிக்க முஸ்டாங் விமானங்கள்.

"முஸ்டாங் விமானத்தைத் தயாரித்து அமெரிக்கர்கள் நமக்குப் போதுமான உதவி செய்திருக்கின்றனர்". என்று பிரிடிஷ் விமான மாலுமி ஒருவர் சைனியங் களை நிறுத்தியிருக்கும் இடத்தில் சொன்னார். அந்த இடத்திலிருந்து இந்த விமானங்கள் சண்டையில் ஈடுபடச் செல்லுகின்றன.

முஸ்டாங் விமானங்கள் பூரா உலோகத்தால் செய்யப்பட்டவை. வேகமும் அதிகம். மணிக்கு 400 மைல் செல்லும். ஆயுத பலமும் அதிகம். சீக்கிரத்தில் மறுகி, உயரத்தில் கிளம்பிவிடுமாதலால் கீழேயிருந்து அவைகளைப் பீரங்கிகள் எளிதில் சுடமுடியாது. தங்களைத் தாங்களாகவே காத்துக்கொள்ளும்.

இதுவரை இவ்விமானங்கள் கீழாகப் பறக்கும் பைடர் விமானங்களுடன் சேர்ந்துகொண்டு ஜெர்மனியிலும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸிலும் முக்கிய லக்ஷியங்களைத் தாக்குவதில் உபயோகப்பட்டு வந்தன. பரீக்ஷார்த்தமாகவே இவ்விதம் செய்யப்பட்டது. ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஏற்பட் டதும் அவை பிரிடிஷ் முதலியவர்களுடைய தரைப் படைகளுடன் ஒன்று சேர்ந்து வேகமாகப்பாய்ந்து எதிரிகளைத்தாக்கும்.

**பறக்கும் புலிகளென்று** இருபது வயதுள்ள அமெரிக்கர்களைச் சொல்லுவது வழக் கம். அநேகமாக இவர்கள் கலியாணமாகாதவர்கள். முன்பு இவர்கள் அமெரிக்கச் சைனியம், கப்பற்படை முதலியவைகளில் சேர்ந்திருந்தனர். தற்சமயத்தில் சீன விமானப்படையில் சேர்ந்து கர்டிஸ் P. 40 பைடர் விமானங்களை உபயோகிக் கின்றனர். இவ்விமானங்கள் குத்தகைக் கடன் திட்டப்படி அமெரிக்காவிலிருந்து சைனாவிற்கு வந்திருக்கின்றன.

### ஏ. வி. ஜி. (A. V. G.) விமானங்கள்.

தற்சமயத்தில் தலைவராக இருக்கும் பிரிகேடியர் ஜெனரல் கிலேர் L. செம் னால்டு என்பவர் தான் அமெரிக்க வாலண்டியர் படையைத் தயாரித்தது. இவர் சைனாவில் விமானப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக இருந்து, 1941-ல் அமெரிக்காவிற்குத் திரும்பிவந்து, சைனாவிற்குச் சென்று விமானிகளைத் தயார் செய்தார். அப்படித் தயாரான பையன்கள் யூனான் மாகாணத்திற்கு வந் தனர். இது 200 மாலுமிகளும், பீரங்கி ஆட்களும், ரேடியோ உபயோகிக்கிறவர் களும் யந்திர வேலைக்காரர்களும் சேர்ந்திருந்தார்கள்.

**1,10,00,000 பேர்கொண்ட** வேலைக்கார ஸ்திரீகளும், புருஷர்களும் தற் சமயத்தில் அமெரிக்காவில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்கள் பூராவாக விமானம், கப்பல்கள், பீரங்கிகள், டாங்கிகள் செய்வதிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். சமீபத் தில் இத்தொகை 2,20,00,000, ஆக அதிகரிக்கும்.

**அமெரிக்கா** கிரேட் பிரிடனுக்கு 1941 ஏப்ரல் முடிவிலிருந்து 1942 பிப்ரவரி முடிவுவரையிலும் 1,80,00,00,000 டன் உணவை அனுப்பியிருக்கிறது.

**சைனியத்திற்கு ஆள் சேகரிப்பது** இந்தியாவில் மே மாதத்தில் மிக அதிகம். இந்தியச் சைனியத்திற்கு 70,000 பேர்கள் சேர்க்கப்பட்டனர். இதற்குமுன் டிஸம்பர் மாதத்தில்தான் ஜப்பான் சண்டையில் ஈடுபட்டதும், 60,000 பேர்கள் சேர்ந்தனர். சராசரி 50,000 பேர்கள் மற்ற மாதங்களிலும் சேர்ந்திருக் கின்றனர். சென்ற யுத்தத்தில் 40,000 பேர்தான் சேர்ந்தார்கள்.

**10,000 கைத்தொழிலாளர்கள்** இந்திய அரசாங்கத்தின் பயிற்சி திட்டப்படி பயிற்சி பெற்றிருக்கின்றனர். 337 ஸ்தலங்களில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஜூன் வரை 35,000 பேர்கள் பயிற்சி பெற இடமிருந்தது. இவ்வருஷம் 25,000 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கின்றனர். 46,000 பேருக்கு வசதிகொடுத்து ஒரு வருஷத்தில் 50 முதல் 60 ஆயிரம் வரை பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

**மொத்தம் ஜப்பானியர் காயம்பட்டது** சைனாவில் ஐந்து வருஷ காலமாக 25 லக்ஷம். இதில் 40 சதவிகிதம் இறந்தனர். 60 சதவிகிதம் காயமடைந்தனர். கைதியானது 29,924 பேர்கள். 1,981 பீரங்கிகளும், 8,576 யந்திர பீரங்கிகளும், 11,92,420 துப்பாக்கிகளும், 8,841 டாங்கிகளும், மோட்டார் வண்டிகளும் பிடுங்கப்பட்டன. 2,504 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

---

## விமானத் தாக்குதலின்போது கண்ணாடி சில்லுகள் தெரிக்காமல் இருப்பதற்கு எவ்விதம் பாதுகாப்பு செய்துகொள்ளலாம்.

"வெடிகுண்டு விழுவதினால் கண்ணாடிகள் தெரித்து அபாயம் விளைவிப்பதைத் தடுப்பதற்கு கட்டங்களில் வைக்கப்பட்டிருக்கும் கண்ணாடிகளை எடுத்துவிடுவது தான் எளிதான முறை. அப்படிச் செய்வதில் அவ்வித அபாயம் நேரிடாது. இந்தியாவில் பதிப்பிட்டிருக்கும் விமான எதிர்ப்பு பாதுகாப்பு 6-வது பாட புஸ்தகத்தில் முதலாவது பாகத்தில் 'பதுங்கிக்கொள்ளும் அறை' யென்ற தலையங்கத்தின்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கண்ணாடியின் பேரில் ஏதாவது ஒட்டிக்கொண்டிருந்தால் அதுகாரணத்தினால் கண்ணாடி உடைவதில் கம்மி, ஜாஸ்தி ஏற்படுமென்று சொல்வதற்கில்லை. இதுவரை பரீக்ஷித்துப் பார்த்தபடி கண்ணாடியை ஒட்டி தகடுபோடும் முறையானது கண்ணாடி உடையாமல் செய்வதற்கு அனுகூலமாயிருக்கும் என்று சொல்லமுடியவில்லை. கண்ணாடியில் காகிதம் ஒட்டுவதினால் அதை உடையாமல் செய்துவிடலாமென்றும், சொல்வதற்கில்லை. உடைந்த கண்ணாடிகள் வேகமாகச் சிதறுவதினால் அபாயம் நேரிடாமல் தடுப்பதற்கும், குறைப்பதற்கும்தான் இம்முறை கையாளப்படுகிறது.

எந்த விதமான கண்ணாடி உடையுமென்றும், எந்த ரகம் உடையாதென்றும் எதிர்பார்த்துச் சொல்லுவது முடியாத காரியம். அதேபோல் வெடிகுண்டால் உடைபட்ட கண்ணாடி உள்புறமாக சிதறுமா அல்லது வெளிப்புறத்தில் சிதறி அடிக்குமா என்பதையும் ஜோஸியம் சொல்லமுடியாது. கட்டடத்தில் வெளிப்புறச்சுவர்களில் வைக்கப்பட்டிருக்கும் கண்ணாடிகளினால் எவ்வளவு ஆபத்து நேரிடுமோ அதேபோல் கட்டடத்தின் உட்புறத்தில் இருக்கும் அறைகள், கதவுகள் ஸ்கிரீன்கள் இவைகளில் இருக்கும் கண்ணாடிகள், விளக்குகள், படங்கள் வகையராக்களினால் அபாயம் நேரிடக்கூடும். அதனால் கண்ணாடியினால் யாதொரு பிரயோஜனமும் அடையவேண்டிய அவசியம் இல்லாதபோனால், அதை அப்புறப்படுத்துவதே அத்யாவசியம். அவசிய மேற்பட்டால் உடையாத வஸ்துவினால் செய்யப்பட்ட தகடுகளை கண்ணாடிகளுக்குப் பதிலாக அமைக்கலாம். அவைகளில் வெளிச்சம் செல்லக்கூடியதாயிருந்தாலும் சரி, அல்லது செல்லக்கூடாததாயிருந்தாலும் சரி, பரவாயில்லை.

பதுங்கிக்கொள்ளும் அறையிலிருக்கும் எல்லாக் கண்ணாடிகளையும் கவனிக்க வேண்டியது. ஜன்னலில் கம்பியடைப்பு இருந்தபோதிலும் வெடிகுண்டுகளால் கண்ணாடி உடைய நேரிடும். அந்த அடைப்புக்கு மேலேயாவது அல்லது சுற்றுப்பக்கத்திலாவது விரிவு கண்டால் அது எவ்வளவு சிறியதாக இருந்த போதிலும், ஜன்னலிலுள்ள கண்ணாடிகள் கம்பியடைப்புக்குக் கீழே எவ்வளவு தூரத்திலிருந்தாலும் உடைந்துவிடும். வேண்டிய எச்சரிக்கைகள் எடுத்துக் கொள்ளாமல் போனால் கண்ணாடிகள் வேகமாக அறைக்குள் சிதறிவிழும்.



அடைப்பு யெடுப்பதாக இருந்தால், சில கண்ணாடிகளையோ, அல்லது ஜன்னல்களையோ எடுக்கும்படி நேரிடும். ஆனால் எல்லா கண்ணாடிகளையும் எடுத்துவிட வேண்டியதுதான் மிகவும் சிலாக்கியமான முறையாகக் கருதப்படுகிறது. அடைப்புக்கு மேலேயுள்ள பாகங்களை லேசான தட்டிகளாலோ அல்லது அழுத்தமான கித்தான்களினாலோ மறைக்கவேண்டியது அவசியம். அதனால் வெளியேயுள்ள சீதோஷ்ண நிலை அதிமாக உள்ளே பாதிக்காது.

---

## தேசீய யுத்த முன்னணி.

---

"நமக்குத்தான் ஆயுத உதவியில்லையே, நம்மால் என்ன செய்யக்கூடும்." 'அரசாங்கத்தார் நமக்கு ஆயுதங்களைக் கொடுத்தால் நாம் யாவரும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு முன் வருவோம்' என்று சமீபத்தில் சிலர் சொல்லியதை நான் கேட்டிருக்கிறேன். சரிதான், அதற்கு நான் எனது விடையத் தருகிறேன். 1940-ம்௵ ஜூன் மாதத்தில் பிரிடிஷ் மக்கள் தயாராக இருந்தனரா? 1941-ம் ௵ ஜூனில் ருஷ்ய மக்கள் ஆயுத பலம் கொண்டிருந்தனரா? சைனாவின் நீண்டகால யுத்தத்தில் பொதுமக்கள் யாவரும் ஆயுதம் ஏந்தியா நின்றார்கள்? இல்லை என்பதுதான் இவை யாவுக்கும் பதில். எந்த தேசத்திலும், இந்த நவீன யுத்த காலத்தில் பொதுமக்கள் ஆயுதம் ஏந்தி நின்றதில்லை.

"ஆனால் இக்காலத்திய சண்டைகளில் வெற்றியடைவதற்கு அடிப்படையாக பொதுமக்களின் உணர்ச்சிதான் முக்கியமானது. அதுதான் யாவருக்கும் இருக்க வேண்டிய அக்கரையாகும். தேசீய யுத்த முன்னணியை ஒன்று சேர்த்து அமைப்பதற்கு உங்களுடைய ஒத்தாசையையும் அதற்காகத்தான் விரும்புகிறேன். இந்த இயக்கத்திற்கு எவ்விதமான பெயர் இருந்தாலும் பாதகமில்லை. அதன் கருத்து என்னவென்பது நம்மள் யாவருக்கும் தெரிந்ததுதான். இதில் ஜாதி, மதம், அரசியல் வேற்றுமை, முதலியவைகளைக் கவனியாது ஒற்றுமையான தீர்மானத்தைப் பெற்று ஒன்றுபட்டு நின்று, நம்மால் அடையப்படவேண்டிய லக்ஷியங்களைக் காக்கவேண்டும்".—[மேன்மை தங்கிய வைஸிராய் டெல்ஹி அகில இந்திய ரேடியோவிலிருந்து மேமீ 7உ ஒலிபரப்பியது].

### II

"தேசீய யுத்த முன்னணி என்பது பிரத்தியேகமான முயற்சியைக் குறிக்காது, பொதுவானதே. இதன் நோக்கம் பொய் வதந்திகளும் யுத்த முயற்சிக்கு விரோத பிரசாரம் ஏற்படுவதையும் பரிசீலனை செய்து அடக்குவதுதான். பொதுமக்களிடம் சென்று சாதாரணமான தினசரி வாழ்க்கையை நடத்திவந்து வீண் கலவரம் அடையாமலிருக்கும்படி எடுத்துச் சொல்லவேண்டும். தனது வேலைகளைச் சரிவர கவனித்து வந்தாலே நம்பிக்கை பெற்று எதிரியைத் தோற்கடிக்க ஹேதுவாகும் என்றும் எடுத்துச் சொல்லவேண்டும்."—[ஸர் மாரிஸ் ஹாலெட், ஸம்பல் (ஐக்கிய மாகாணம்)].

### III

"பிரிடிஷ் மக்கள் கொஞ்சமும் குறைகூறாமல் ஏராளமான தியாகங்களைச் செய்திருக்கின்றனர். ருஷ்யர்களுக்கு சர்க்கரையையும், சாராயத்தையும் அமெரிக்கர்களுக்கும், தானியத்தை எகிப்தினருக்கும், ரெயில்வே இஞ்ஜின்களை பர்ஸியர்களுக்கும், கிராதிக்கம்பிகளை டாங்கிகள் செய்யுமிடத்திற்கும் அனுப்பி அதிகமான தியாகத்தைச் செய்திருக்கின்றனர்."—[லார்டு பீவர்புருக், நியூயார்க், ஏப்ரல் 24].

# தேசிய யுத்த முன்னணி.

## ஜப்பானிய வார்த்தைகளை நம்பாதீர்கள்!

## அவர்கள் வார்த்தைகளை நம்பினால் அவர்கள் துப்பாக்கி முனைகளுக்கே நாம் இரையாவோம்.

தேனொழுகும் வார்த்தைகளைச் சொல்லும் உங்கள் விரோதியான ஜப்பானியனிடம் ஜாக்கிரதையாக இருங்கள்! எதிரிகள் அதிக பலசாலிகள் என்று உங்களை நம்பும்படி செய்ய எத்தனிப்பார்கள். அதனால் அவர்களை நம்பி ஏமாறாதீர்கள். இந்தியாவுக்கு வரும்பொழுது இந்தியர்கள் அவர்களை எதிர்த்துக் கொல்லாமலிருக்க வழி தேடுகிறார்கள். அதனால் அவர்கள் நம் சிநேகிதர்கள் என்று பிரஸ்தாபித்து வருகிறார்கள். அவர்கள் பொய் வதந்திகளைக் கிளப்பி நமக்கு பீதியை விளைவிப்பார்கள். நமது மனதில் குழப்பத்தை விளைவித்து நம்மை பலஹீனப்படுத்த முயற்சிக்கிறார்கள். யுத்த தந்திரத்தில் இது ஒரு நூதன முறை. இந்தியாவைப் படையெடுக்கும் பொழுது இந்தியர்களால் எதிர்த்துக் கொல்லப்படாமல் தப்பப் பார்க்கிறார்கள். அவர்கள் நம் சிநேகிதர்கள் என்று சொல்லிக்கொண்டு நமது வீட்டிற்குள் புகுந்து வசிக்கப் பார்க்கிறார்கள்.

நமது படை வீரர்கள் போடக்கூடிய சண்டையாலும், வெடிகுண்டுகளாலும், பீரங்கி எதிர்ப்பினாலும் அந்தப் படைவீரர்களுக்குப் பின்னால் நின்றுகொண்டு நீங்கள் உறுதியாக அவர்களுக்கு உதவி செய்து வந்தீர்களானால் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்காரர்கள் இறந்துவிடுவார்கள் என்பது நிச்சயம். 38 கோடி மக்கள் அடங்கிய இந்த பெரிய தேசத்தில் நீங்கள் எல்லோரும் இத்தகைய தீர்மானம் செய்துகொண்டீர்களானால் அவர்களால் அசைக்க முடியாது.

### சைனா ஏமாறவில்லை.

ஜப்பானியப் பொய்ப் பிரசாரங்களைக் கேட்டு சீனர்கள் ஏமாற்றமடையவில்லை. ஐந்து வருஷ காலமாக மிகவும் தீரமான சீன ஜாதியார் ஜப்பானியர்களை வெகு திறமையுடன் எதிர்த்து நிற்கின்றனர். இன்னும் கொஞ்சம்கூட விட்டுக்கொடுக்காமல் போரை நடத்தி வருகிறார்கள். நாஸிகளின் இனிய சொற்களுக்கு ருஷ்யர்கள் இணங்கவில்லை. நாஸிகள் ருஷ்யர்களுக்கு சிநேகமாக இருப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்ட பிற்பட்டும் அவர்களைத் தாக்கினார்கள். அதனால் சைனாவும், ருஷ்யாவும் நடந்து கொண்டவிதத்திலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அதனால் ஜப்பானிய வார்த்தைகளைக் கொஞ்சமும் நம்பாதீர்கள்.

### தேசிய யுத்த முன்னணி.

## வெண்டைக்காயை அதிகம் உற்பத்தி செய்யுங்கள்.

சமவெளிகளில் வெண்டை விரையை மார்ச்சு மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரையிலும், குன்றுகளில் ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலும், விதையுங்கள். சாதாரண நிலத்திலும் வெண்டையைப் பயிர் செய்யலாம். ஆனால் உரம் போடப்பட்ட நிலங்களில் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு சாத்தியமாய் இருக்கும். வெண்டை வித்துக்களை அடிக்கு ஒன்றாக வரிசை வரிசையாக ஊன்றவேண்டும். ஒரு வரிசைக்கும், மறு வரிசைக்கும் இடையே இரண்டு அடி இடம் இருக்கவேண்டும். 15 வாரங்களில் பலன் பெறும். இளம் பிஞ்சுகளாக இருக்கும் பொழுதே அவைகளைப் பறிக்கவும்.



# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

### பிரஸங்கம் 109—(1-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ...22, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 23, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| | 24, திங்கட்கிழமை ... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | மேலூர் ... | ,, | 6.30 |
| | 27, வியாழக்கிழமை ... | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 28, வெள்ளிக்கிழமை... | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கிழாநிலைக்கோட்டை. ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 110—(2-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| | 29, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 30, ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் ... | ,, | 5.30 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.00 |
| | | பாம்பூர் ... | ,, | 6.30 |
| | 31, திங்கட்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் .... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | நச்சாந்துபட்டி ... | மாலை | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| ஸெப்டம்பர் ... | 1, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | கல்லூர் ... | மாலை | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| | 3, வியாழக்கிழமை ... | பனையபட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | | முனிஸிபல் ஆபீஸ் ... | ,, | 6.45 |
| | 4, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பர்ண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டு பத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 22—8—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 23—8—42 | ... | எம்பல். |
| திங்கட்கிழமை | ... | 24—8—42 | ... | கொன்னையூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 25—8—42 | ... | பெரம்பூர். |
| புதன்கிழமை | ... | 26—8—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 27—8—42 | ... | குளிபிறை. |
| வெள்ளிக்கிழமை | ... | 28—8—42 | ... | பாப்பாபட்டி. |
| சனிக்கிழமை | ... | 29—8—42 | ... | வெட்டம்விடுதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 30—8—42 | ... | கொடும்பாளூர். |
| திங்கட்கிழமை | ... | 31—8—42 | ... | கீரனூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 1—9—42 | ... | குமியாமலை. |
| புதன்கிழமை | ... | 2—9—42 | ... | கீழாநிலை புதுப்பட்டி. |
| வெள்ளிக்கிழமை | ... | 4—9—42 | ... | புதுக்கோட்டை. |


**விளம்பரம்.**

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்ததும்

**நகர நெருப்பணைக்கும் படை**

என்று பெயர் விளங்கிய ஒரு யுத்தப்படம்

**புதுக்கோட்டை ராஜா டாக்கீஸில்**

ஆகஸ்டுமீ 28உ முதல் 31உ முடிய நான்கு நாட்கள் காண்பிக்கப்படும்.

**புதுக்கோட்டை தேசிய யுத்த முன்னணி நிலயம்**

இந்தப்படத்தை ஜனங்களுக்கு சிபார்சு செய்கிறது.


Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—23-8-42.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஆகஸ்டுமீ 29உ [ந. 110


## இந்தியாவைப்பற்றி ஸர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ்.

### *அப்படி வெளியேறினால் இந்தியாவிற்கு ஆபத்து அதிகரித்து நேசதேசங்களின் ஒற்றுமையில் பிளவை உண்டாக்கும்.*

இன்று பிரிடிஷார் இந்தியாவிலிருந்து வெளியேறுவதென்றால் இந்தியா எத்தகைய அரசியல் முறையும், கவர்ன்மெண்டும் இல்லாமல் தனியே விடப்படும். அராஜக முறையை விரும்புவோர் வேண்டுவது அவ்வளவு தான். அந்நிலையில் ஜப்பானுக்கும் இந்தியா மீது பாய தாங்காத ஆசையும் ஏற்படும்."

*பிரிடிஷார் வெளியேறினால் இந்தியாவிலுள்ள ஐரோப்பிய, அமெரிக்க, சீனத் துருப்புகளுக்கும், பொதுமக்களுக்கும் ஆபத்து ஏற்படும். மேலும் நேச தேசங்களின் ஒற்றுமையில் பிளவை ஏற்படுத்தும்.*

*இந்தியமக்கள் சுய ஆட்சி வேண்டுமெனக் கோருவதில் எனக்கு அனுதாபம் இருக்கிறது. ஆனால் ஜப்பானியரையோ, வேறு அச்சு நாட்டினரையோ உள்ளே அனுமதிப்பதின் மூலம் அந்த விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாது. நேசநாடுகள் யுத்தத்தில் வெற்றி பெற்றாக வேண்டும். இந்தத் தத்துவத்தை இந்தியர்களில் பெரும்பான்மையோர் உணர்ந்திருப்பதாகவே நான் நினைக்கிறேன்.*

*நேசநாடுகள் ஸ்வதந்திரத்திற்காகப் போராடும் இந்த சமயத்தில், அனுபவ சாத்தியமில்லாத கோரிக்கையை வெளியிட்டு, அதை ஏற்காவிடின் சட்ட மறுப்பு இயக்கத்தைத் துவக்குவதென்ற ஏற்பாட்டைக் காங்கிரஸ் அங்கீகரிக்குமாறு மிஸ்டர் காந்தி செய்தது மிகவும் வருந்தத் தக்க விஷயம். ஏனென்றால் இந்த ஏற்பாடு எதிரிக்குத்தான் ஆறுதலையும் உத்ஸாகத்தையும் அளிக்கும்.*

### *துவேஷ புத்தியில்லை.*

*இந்த யுத்தம் முடிந்ததும் இந்தியர்களாகவே ஒரு அரசாங்கத்தை ஸ்தாபித்துக்கொள்ள வசதி அளிக்கப்படும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. ஆனால் அதற்கு முன் இருக்குமிடைக்காலத்தில்—அதாவது இந்த யுத்தம் முடியும் வரை—புதிய அரசியல் ஏற்படும்வரை தற்போதைய முறைதான் நீடித்திருக்கவேண்டும்.*

*இந்திய ஸர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கையை பிரிடிஷ் அரசாங்கம் பூர்ணமாக ஆதரித்தாலும், துவேஷத்தையோ, மாச்சரியத்தையோ உண்டு பண்ண விரும்பவில்லை.*

*இந்தியாவின் பாதுகாப்பை முன்னிட்டும், இந்திய தளங்களிலிருந்து ஜப்பானியரைத் தாக்க வேண்டியும், பிரிடிஷ் அரசாங்கம் வைஸிராய்க்கும், அவரது நிர்வாக சபைக்கும் ஆதரவளிக்கிறது. அப்படிச்செய்தால்தான் நாட்டில் சட்டமும், சமாதானமும் முதலில் வழங்கும். அதன் பிறகு நேசநாடுகள் தாக்குதல்களைத் துவக்க முடியும். எந்த கட்சியையும் பின்பற்றாத இந்தியர்கள் சுமார் பாதி ஜனத்தொகையிருக்கும். இவர்கள் யுத்தம் நடக்கும்போது பிரிடிஷார் வெளியேற வேண்டுமென எண்ணவில்லை.*

## தேசீய யுத்த முன்னணி.

(மேன்மை தங்கிய பெங்கால் கவர்னர் ஸர் ஜான் ஆர்தர் ஹெர்பெர்ட் டாக்காவிலிருந்து எழுதியது).

நமது ஒற்றுமையைக் கெடுப்போரை மீண்டும் மீண்டும் தாக்குவோம். பயங்குள்ளிகளை அகற்றுவோம். மனம் தளர்ந்தோருக்கு தைரியம் கூறுவோம். பொய் வதந்தி கூறுவோரைக் கண்டுபிடிப்போம். ஆரம்பத்திலேயே வதந்தியை அடக்குவோம். அலக்ஷியமாக இருப்போரை விரட்டுவோம். சோம்பேறிகளைப் பரிஹஸிப்போம்.

சுலபமாக எதையும் சாதிக்க முடியாது. வெற்றி சுலபமாகக்கிட்டாது. இனி தோல்வி பெறவோ, தவறுதல் செய்யவோ, தளர்ச்சி பெறவோ முடியாது. யுத்தத்தைப்பற்றிய பாதகமான தகவலோ, சிரமமோ, நமக்கு அசிரத்தையை உண்டுபண்ணாது.

நமது மக்களின் உணர்ச்சி தான் சரியான கருவியாகும். வெறும் சைனியத்தை மட்டில் எதிர்ப்பதாக எதிரி நினைக்காமல், ஸ்திரீ புருஷர்கள் யாவரும் ஒத்துழைக்கும் பொதுமக்களையும் எதிர்த்து நிற்பதாக எதிரி உணரவேண்டும். வெற்றி கிட்டும் வரை பொதுமக்கள் பின்வாங்கமாட்டார்கள்.

---

பிரஸங்கம் CX.

# பிரஸீல்.

## அச்சுநாடுகளின்பேரில் பிரஸீல் யுத்தத்தைத் தொடுத்திருக்கிறது.

சமீபத்தில் ஐந்து பிரஸீலிய வியாபாரக் கப்பல்களை ஹடமாக அச்சுநாட்டு யூ படகுகள் தாக்கியதால் பிரஸீல் அச்சுநாடுகளை எதிர்ப்பதென்ற முடிவிற்கு வந்தது. ஜெர்மனி, இதாலி பேரில்தான் யுத்தத்தைத் தொடுத்திருக்கிறது. ஜப்பான்பேரில் இல்லை. பிரஸீலின் இவ்வித முடிவு நேசதேசங்களின் பிரகிருத நிலைக்கும், தர்மம், யுத்த தந்திரம், பொருளாதாரம் முதலியவைகளுக்கு அதிக சாதகமானது.

சரியான சமயத்தில் பிரஸீல் நேசதேசங்களுடன் சேர்ந்திருக்கிறது. "இதிலிருந்தே ருஷ்யாவில் அடையப்படுவதாகச் சொல்லும் நாஸி வெற்றிகள் தாத்காலிகமானவைதான். முடிவான வெற்றி நேசநாடுகளுக்குத்தான். தர்மம், ஸ்வதந்திரம் முதலிய காரணங்களுக்காகச் சண்டையிடும் நேசதேசங்களுடன் நான் சேர்ந்திருக்கிறேன்" என்று பிரஸீல் சொல்லுவதாகவே காணப்படுகிறது.

லண்டனிலிருந்து பிரஸீலியப் பிரதிநிதி 24உ ஒலிபரப்பிய விதமாக 'பிரஸீலின் புராதன வழக்கம் சமாதானம்தான். நடுநிலைமை வகித்தால் மாத்திரம் சமாதானத்தைப் பெறமுடியாதென்றே இதாலி, ஜெர்மனிபேரில் சண்டையைத் தொடுத்திருக்கிறோம். உலகில் நியாயம், ஒழுங்கு நிலவுவதற்காகவே பிரஸீல் சண்டையில் ஈடுபட்டிருக்கிறது.'

பிரஸீலில் விமான தளங்களும், துறைமுகங்களும் அமெரிக்காவிலிருந்து ஆபிரிக்கா முதலிய நாடுகளுக்கு நேசதேசத் துணைக்கப்பல் கூட்டங்களையும் விமானங்களையும் எடுத்துச்செல்ல சாதகமாக இருக்கின்றன.

பிரஸீலில் உணவுப் பண்டங்களும், பாக்ஸைட், தேக்கு, ரப்பர், காப்பி முதலியவை ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

பிரஸீல் இயற்கையாகவே ஒரு அழகிய நாடு. லத்தீன் அமெரிக்காவின் தன்மைகளைப்பற்றி ஜான் கந்தர் என்பவர் எழுதியுள்ள புஸ்தகத்திலிருந்து சில விவரங்கள் எடுக்கப்பட்டு இங்கே அச்சிடப்பட்டிருக்கின்றன. அவை பிரஸீல், அதன் மக்கள், அதன் ஸர்வாதிகாரி, அதன் முக்கியத்துவம் முதலியவைகளைத் தெரிவிக்கின்றன.



### பிரதேச அமைப்பு.

உலகத்தின் நான்காவதாகப் பெரிய நாடான பிரஸீல் தென் அமெரிக்காவின் விஸ்தீர்ணத்தில் பாதி பாகத்தைக் கவருகிறது. ஈகுவிடார், ஷில்லி என்ற இரு நாடுகளைத் தவிர தென் அமெரிக்காவின் இதர நாடுகளின் எல்லைப்புறங்களுக்கும் பிரஸீலின் எல்லைப்புறத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது. பிரஸீலுக்கு, வேறு ஜனநாயகங்களுக்கு இல்லாத, பலவிதப்பட்டதும் மாறுபாடுள்ளதுமான அக்கரைகள் இருக்கின்றன. விளைபொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. பலவித இயற்கை அமைப்புகளைப் பெற்றது. இதனால் அதை ஒரு தனிப்பட்ட நாடென்றே சொல்லலாம்.

### மனிதனா, இயற்கையா.

பனமா, அண்டீன் நாடுகளுக்கு ஏற்பட்டிருப்பதுபோல் பிரஸீலில் அடிப்படையான சண்டை மனிதனுக்கும் இயற்கைக்கும்தான். பிரஸீலில் நிகழ்ந்த இந்த சண்டையையும், பாலிஸ்டாஸ் கட்சிக்கும், வார்காஸுக்கும்; அரன்ஹாவிற்கும், கோஸ்மான்டீரோவுக்கும்; தொழிற்சாலை சொந்தக்காரர்களுக்கும், காப்பி தோட்டக்காரர்களுக்கும் ஏற்பட்ட சண்டையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் பின் சொல்லபட்டவை சண்டைகளாகவே ஆகமாட்டா. பிரஸீலில் கடற்கரையோரமாக அமெஸான் நதி பாயும் பள்ளத்தாக்கில் 3,900 மைல் நீளத்திற்கு டென்மார்க்கின் விஸ்தீர்ணத்தில் ஒரு தீவும் இருக்கிறது. அகில அமெரிக்க நாடுகளுக்குள் ஏற்பட்டுள்ள விமான மார்க்கம், சாமர்த்தியம் வாய்ந்த இன்ஜினியர்களால் பரியிராஸ் (Barreiras) என்ற சதுப்பு நிலத்தில் ஒரு விமான தளம் கட்டப்பட்டு இருக்கிறது. பிரஸீல் பிதுக்கத்தின் வழியாக ரியோவிலிருந்து பீலம் வரை 9 மணி அவகாசத்திற்குள் விமான மூலம் செல்லலாம். அப்படிச் செல்லும் விமானம் சாதாரண நிலைமையில் பாரியிராஸுக்கு அருகில் இறங்க நேர்ந்தால் அந்த இடத்திற்கு உதவியளிக்கும் கோஷ்டி செல்லுவதற்கு 8 வாரங்கள் பிடிக்கும். ஆனால் அது ஒரு காடு அடர்ந்த பிரதேசம் அல்ல.. அமெஸான் காடுகள்தான் மிக நெருக்கமானவை. அங்கே விமானம் சேதப்பட்டு இறங்கினால் கண்டுபிடிக்கவே முடியாது. பாரியிராஸ் என்பது மான்டானா, உயோமிங்கைப்போல் ஒரு உயர்ந்த பிரதேசம். குட்டையான பசுமைச் செடிகளும், மலைக் கணவாய்களும் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான மைல்களுக்கு ஒரேவிதமாகத்தானிருக்கிறது. வீடுகளோ, டெலிபோன் வசதியோ, ரஸ்தாக்களோ, சாகுபடி நிலங்களோ, மனித சஞ்சாரமோ கிடையாது.

பிரஸீலில் இவ்வித இயற்கையை மனிதன் எதிர்த்துப் போராடியதே பெரும் சம்பவமாகும். பிரஸீலில் கருப்பு ஜாதி, வெள்ளை ஜாதிகளுக்கும்; கடற்கரை ஓரமாகக் குடியேறிய ஐரோப்பிய நாகரீகத்திற்கும், உள்நாட்டில் அமெஸான் நதி ஓரமாயுள்ளவர்களின் நாகரீகத்திற்கும், புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கும், புராதனமாக இருந்துவந்த விளைபொருள்களை ஏற்றுமதி செய்துவந்த வியாபாரிகளுக்கும், பணக்காரன், ஏழை இவர்களுக்கும் இருந்துவந்த சண்டைகளும் அதிகம்தான். இம்மாதிரியாக பிரஸீலில் சமூகம், பொருளாதாரம், தேசியம் முதலிய பிரச்னைகள் மிக சிரமசாத்தியமானவைகளாகவே காணப்பட்டன.

### பிரஸீல் மக்கள்.

பிரஸீல் வாசிகள் யாவரும் சதா உத்ஸாகத்துடன் இருக்கிறவர்கள். பார்ப்பதற்கு அழகு வாய்ந்தவர்கள்.

பிரஸீலில் தெருக்கூட்டிகூட கிருஸ்துமஸ் விழாவின்போது வாழ்த்துக் கடிதத்தை அனுப்புவான். வேலை அதிகமாக இருந்தால் தபால்காரன் கடிதங்களை கடலில் போட்டாலும் போடுவான். நியாய ஸ்தலங்களில் வாதங்களைத் தீர்த்துக் கொள்ள சாதாரணமாக 20 வருஷங்கள் பிடிக்கும். விவாகமான பிறகு ரத்து செய்யக்கூடாது. விவாகமானாலும் ஆகாமல்போனாலும் அதைப்பற்றி அதிகம் கவலையே எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. குடியல்காரனை 'மழையில் நனைந்திருக்கிறான்' என்று பரிகாசமாகச் சொல்வதும் வழக்கம். ஹோட்டல்களில் தங்க விரும்புவதாக டெலிபோனில் சொல்லியனுப்பினால் 'உன்னை இதற்குமுன் தெரியாதே' என்று பதில் கிடைக்கும். இவை பிரஸீலியரின் தன்மைகள்.

பிரசார இலாகா, ரேடியோவில் தினம் சாயங்காலத்தில் ஒரு மணி நேரம் பிரசாரத்தை நடத்துகிறது. அதை ஒருவரும் கேட்பதில்லை, இருந்தாலும் அந்த சமயத்தில் யாவரும் மௌனமாக இருக்கின்றனர். ஹோட்டல்களுக்கு முன்னால் பொதுஜனக் கூட்டங்களிலும், சண்டைகளிலும் ஈடுபடுவது கெட்ட பழக்கமாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் ஹோட்டல்காரர்களுக்கு அதனால் அவஸ்தை ஏற்படும். கொஞ்ச தூரம் தள்ளியிருந்தால் பாதகமில்லை. விசேஷக் கூட்டங்களுக்கு யாவரும் அசிரத்தையாக தாமதமாகவே வருவார்கள். நேரம் கழித்து வருவதற்கு யாவரும் தப்புக் காரணங்களைச் சொல்லுவார்கள். பிரஸீலிய மக்கள் பெருந்தன்மை, அனுபவம் பெற்றிருந்தாலும் கொஞ்சம் நேர்மை குறைவானவர்கள். மோட்டார் முதலியவைகளால் தீங்கு ஏற்பட்டால் பிரமாதப்படுத்தி விடுவார்கள். எதையும் துரிதமாகச் செய்துவிட விரும்பமாட்டார்கள். அவர்கள் சமயத்திற்கேற்றவாறு ஒரு முடிவிற்கு வருவார்கள். நல்ல உணவு, நல்ல குடி, நல்ல பேச்சு முதலியவைகளை விரும்புவார்கள். ஒரு சிறிப்பினால் அவர்களை ஸ்வாதீனப்படுத்தலாம். எல்லா வாலிபர்களும் அரசாங்க உத்தியோகத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். பாட்டுகள் கட்டுவது, பத்திரிகை பிரசுரிப்பது, சித்திர வேலை முதலியவைகளில் ஈடுபடுவார்கள்.

## கெடுலியோ வார்காஸ்: பிரஸீலின் ஸர்வாதிகாரி.

பிரஸீலின் பலவித அமைப்பு, செழுமை முதலியவைகளுக்கு அனுகுணமாக சதா சிரித்த முகத்துடன், புத்தி கூர்மையுடன், சிறிய உருவமமைந்த கெடுலியோ வார்காஸ் தலைமை வகிக்கிறான். பிரஸீலின் மேன்மை, பலவித இயற்கை குணம் முதலியவைகளைப்போலவே வார்காஸும் ஒரு உயர்ந்த மனிதன். நாட்டின் ஒவ்வொரு பாகத்தையும் நேரில் பார்வையிட்டு அதன் குணாகுணங்களை அறிந்து கொண்டவர், பிரஸீலின் பீடபூமி, கடற்கரை, காடு, இதர உலோக நிதி முதலியவைகள் யாவும் வார்காஸின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

பிரஸீல் அமெரிக்க ஐக்கிய நாடுகளைக்காட்டிலும் பெரிது. இருந்தாலும், வார்காஸ் ஒருவனாகவே 32,75,510 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள பிரதேசத்தையும் அதில் வசிக்கும் 4,32,46,931 மனிதர்களையும் அடக்கி ஆண்டுவருகிறார். ஹிட்லர், ஜெர்மனியில் இருப்பதுபோலவும், சர்ச்சில், கிரேட் பிரிட்டனுக்கு இருப்பது போலவும், வார்காஸ் பிரஸீலுக்கு முக்கியமானவன்.

தன்னை ஸர்வாதிகாரி என்று சொல்லுவதை விரும்பவில்லை. 1883, ஏப்ரல் 10ல் ரியோ கிராண்டி டோ ஸூல் என்ற ஸமஸ்தானத்தில் ஸவோ போர்ஜா என்ற இடத்தில் பிறந்தவர். இந்த இடம் ஒரு சமவெளி. பசும்புல்தரை அதிகம். கெடுலியோ பால்யத்தில் அந்த இடத்தில் குதிரைகளைப் பிடித்து சவாரி செய்வதிலேயே ஈடுபட்டிருந்தான். அந்த இடத்தில் இவன் பெற்ற அனுபவங்கள் இவனுடைய குணத்திலும், மனோவியாபாரத்திலும், சிநேகிதர்கள் விஷயத்திலும், அரசியல் நோக்கங்களிலும் பல மாறுதல்களைச் செய்தன. பால்யத்தில் கயிறைக் கையிலேந்தி குதிரைகளை அடக்கியமாதிரி ஸாமோபாயத்தினால் பிரஸீலை அடக்கி வருகிறான்.

வார்காஸ் அதிகாரத்திற்கு வந்ததற்கு அவனுக்குள்ள யோக்யதை யென்னவென்றால் அவனுடைய சமயத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளும் தன்மைதான். தனது லக்ஷியத்தை எப்பாடுபட்டும் சாதித்துவிடுவான். அவைகளுக்கு அனுகுணமாக நல்ல அதிர்ஷ்டமும் வாய்ந்தவன்.

மேலும் யாவரையும் அணைத்துக்கொண்டுபோகும் தன்மைபொருந்தியவர். இதேமாதிரிதான் கூபாவிலுள்ள பாடிஸ்டாவும். வேறு நாடுகளிலுள்ள தலைவர்களுக்கு இம்மாதிரியான குணமே கிடையாது. இவனை கெகி (Gege) என்று அந்நாட்டுமக்கள் விளையாட்டுப்பெயருடன் அழைப்பார்கள். (Xuxu) க்ஸூக்ஸூ என்றும் அழைப்பார்கள். இவன் அதிக ஸௌஜன்யமாக நடந்துகொள்ளுவதால், இவனிடத்தில் துவேஷமே ஏற்படுவதில்லை. ஒருவருடனும் வெகண்டையாக நடப்பதில்லை. காரியங்களைச் சற்று தாமதிப்பானே தவிர முடியாது என்று உரைப்பதில்லை. இதனாலேயே இவனுக்குச் சத்துருக்கள் கிடையாது. இதுபோல் மற்ற நாட்டிலுள்ள ஸர்வாதிகாரிகளின் நிலைமை இல்லை.



ஒருதடவை பிரஸீலில் புதிய நாணயங்களைத்தயார் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. நாணயத்தின ஒருபக்கத்தில் கெடுலியோவின் உருவமும், மற்றொரு பக்கம் ஸமஸ்தான அதிகாரிகளின் படமும் போடுவதென முடிவு செய்யப்பட்டது. ஆனால் விக்டர் ஹூகோவின் உருவத்தைப்போடலாமென்று வாகாஸ் அறிவித்து சிரித்த முகமுள்ளவனின் முகம் ஒருபக்கமும், கவலையுற்று இருப்பவனின் உருவம் மறறொரு பக்கமும், இருககலாம் என்றான். ஹூகோ, துக்ககரமான மனிதன் என்ற புஸ்தகத்தை (Les Miserables) எழுதியிருக்கிறார்.

அதிக சிரமத்தை எடுத்துக்கொள்ள விரும்பாதவனாலும் சந்தர்ப்பம் வாய்த்த போது அதிக பராமுகமாகவே காரியங்களைச் சாதித்துக்கொள்ளுவான். ஆரம்பகாலங்களில் தனது நிலைமையைச் சாதித்துக்கொள்ளுவதற்காக சில சிநேகிதர்களையும் அசட்டை செய்தான். தனக்கு எது தேவையென்று அவனுக்கு நன்றாகத் தெரியும். அதை எப்பாடுபட்டும் சாதிப்பான். பயமே கிடையாது. ஒருதடவை ஒரு மோட்டார் மோதியதால் ஒரு சிநேகிதர் இறந்தார், மற்றொருவருக்குக் காயம் ஏற்பட்டது. வார்காஸும் அந்த சந்தர்ப்பத்தில் இருந்தார். டாக்டர் வந்து வார்காஸுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்கும்போது மிகவும் அமைதியாகவே காணப்பட்டார்.

கடைசியாக வார்காஸ் பிரஸீலிய மக்களின் அம்சம் பூர்ணமாகப் பொருந்தியவர். பிரஸீலிய மக்களின் குணாகுணங்களைப்பற்றி நனகு அறிந்துகொண்டவர். சுருங்கச்சொல்லில் வார்காஸின் நடத்தையில் பிரஸீன் தேசீய குணம் அதிகமாகவே காணப்பட்டது.

## அமெரிக்கப் பாதுகாப்பு.

அடுத்தபடியாக பிரஸீலைப்பற்றிச் சொல்லுவோம். தென்அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு பிரஸீல் ஒரு முக்கிய பிரதேசம். ஒவ்வொரு நுட்பமான அம்சத்திலும் பிரஸீலுக்கு ஒரு சம்பந்தம் இருக்கிறது

ஆபிரிக்காவிலுள்ள டாகாரிலிருந்து (பிரஸீல்) நெடாலுக்கு 1,600 மைல் தூரம் இருக்கிறது. ஒரு பாம்பர் விமானம் ஆறு, ஏழு மணி நேரத்தில் பறந்து செல்லும். ஆனால் நியூ யார்க்கிலிருந்து (பிரஸீல்) நெடாலுக்கு 3,600 மைலும், ரியோடி ஜெனிரோவிற்கு 4,770 மைல் தூரமும் இருக்கிறது. ஆகவே பிரஸீலுக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளைவிட ஐரோப்பா தான் சமீபத்து இருக்கிறது. விஷி பிரான்ஸ் தானாக டாகாரை ஜெர்மனிக்குக் கொடுத்துவிட்டாலும், அல்லது ஜெர்மனி பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டாலும், அல்லது அட்லாண்டிக் யுத்தத்தை ஜெர்மனி ஜயித்து தென் அட்லாண்டிக்கில் ஆதிக்கம் பெற்றாலும், பிரஸீலுக்கு ஆபத்து அதிகரிக்கும். அல்லது பிரிடிஷ் கப்பற்படை பலத்தை இழந்தாலும் அமெரிக்காவிற்கு எதிரிகள் சுலபமாக வரமுடியும். ஜெர்மானியர் ஒரு கால்வாயைக் கடப்பதுபோல் அட்லாண்டிக்கைக் கடந்து விடலாம்.

ஆகவே அமெரிக்காவிற்கும், ஆபிரிக்காவிற்கும், உள்ள சம்பந்தத்தைப் பலப்படுத்த வேண்டுமானால் டாகாரைப் பலப்படுத்துவதுபோல நெடாலையும் பலப்படுத்தவேண்டும். நெடாலை அமெரிக்கர்கள் சுவாதீனப்படுத்தி தற்காப்பு செய்தால் டாகாருக்கு உள்ள முக்கியத்வம் குறையலாம்.

ஆனால் நெடாலுக்கு 95 மைல் தூரத்திலுள்ள ரெஸீபி (Recife) என்ற இடம் நெடாலைவிட ஆழமான கப்பல்துறையும், அதிகக் கப்பல் நிற்க இடவசதியும், போக்குவரவும், இதர யந்திர வசதிகளும் பொருந்தியிருக்கிறது. பீலம் என்ற இடத்தையும் ஒரு முக்கிய தளமாக வைத்துக்கொள்ளலாம். சமீபத்தில் தயாரிக்கப்பட்ட அகில அமெரிக்க விமான மார்க்கங்கள் மேலும் விமான தளங்களை அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றன.

(1941) சரத் காலத்தில் அமெரிக்கா ஐக்கிய நாடுகளும், பிரஸீலும் சகஜமாக ஒத்துழைத்து பிரஸீலில் விமான வசதிகளை ஏற்படுத்தி வருகின்றன. 1941 ஜூனில், வாஷிங்டனிலுள்ள பிரஸீலின் உதவி ராணுவ அதிகாரி அறிவித்தபடி 2,00,00,000 பவுன் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் கடன் கொடுத்ததாகத் தெரிகிறது.

அப்படி அமைக்கப்பட்ட விமான தளங்கள் பிரஸீல் அரசாங்கத்தின் மேற்பார்வையில் இருந்தாலும், 'அவசர சமயங்களில் ஐக்கிய நாடுகளும் உபயோகித்துக் கொள்ளும்' (நியூ யார்க் டைம்ஸ், 1941 ஜூன் 17). ஜெனரல் ஜார்ஜ் G. மார்ஷல், அமெரிக்க ஜன சபையின் ராணுவக் கமிட்டியின் முன்பாக ஜூலையில் அறிவித்தபடி, பிரஸீல் அரசாங்க முறைகள் மூன்று மாதத்திற்கு நிறுத்தப்பட்டு பிரஸீலில் விமான வசதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அகில அமெரிக்க விமான மார்க்கங்கள் ஏற்படுத்தப்பட்ட இடங்களில் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சுலபமாகத் தனது படைகளை நடத்திச் சென்று உபயோகித்துக்கொள்ளலாம். பிரஸீலின் விமான தளங்களிலிருந்து ஆபிரிக்காவிற்கு ஐக்கிய நாட்டு விமானங்கள் சென்றதும், பிறகு பிரிடிஷ்காரர்கள் அவைகளை எடுத்துச் சென்ற விவரம் சிறிது காலம் கிரமித்துதான் கிடைத்தது. கனடாவிற்கும், பிரிடிஷ் தீவுகளுக்கும் கப்பல் போக்குவரத்து ஏற்பட்டிருப்பது போல் தென் அட்லாண்டிக்கிலும் இருக்கிறது. (இவ்விவரத்தை 1941 ஆகஸ்டில் வின்ஸ்டன் சர்ச்சிலைக் கண்டு பேசிய பிறகு ஜனாதிபதி ரூஸ்வெல்டு அறிவித்தார்).

1941, ஜூலையில். அகில அமெரிக்க விமானப் போக்குவரத்தின் பிரஸீல் அதிகாரியான பனேர்டோ பிரஸீல் என்பவனை வார்காஸ் நியமித்து அமெஸான் பிரதேசத்தில எட்டு விமான தளங்களைத் தயார் செய்யும்படி உத்தரவிட்டார். இப்பிரதேசததில் ஜெர்மனியின் கோண்டார் விமான மார்க்கமும் இருந்துவந்ததால் அதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்ட விவரம் தெரியவந்தது.

### பிரஸீல் சைனியம்.

லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குள் பிரஸீலிலுள்ள சைனியம்தான் பெரியது. அதில் 1,10,000 ஆபீஸர்களும் துருப்புகளும் இருக்கின்றனர். ரிஸர்வ் படையில் 2,50,000 பேர்கள் இருக்கின்றனர். யாவரும் நன்குகப் பயிற்சி பெற்றவர்கள். சைனியம் நன்குக ஒற்றுமையுடனும் தைரியத்துடனும் இருக்கிறது. ஆனால் போக்குவரத்து சாதனங்களும் நவீன யந்திரப் படைகளும் அவ்வளவு கிடையாது.

### விமானப்படை.

பிரஸீலிய விமானப்படை சுமார் 200 விமானங்களைக் கொண்டிருக்கிறது. பல வருஷங்கள் வரை பிரெஞ்சுகாரர்களாலேயே பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. முக்கியமாக ஜெனரல் காமலினின் கீழ்தான் இருந்துவந்தது. ஆனால் அமெரிக்க ராணுவ சங்கத்தினர் கடற்கரை பீரங்கிப் படையையும், விமான எதிர்ப்பு பாதுகாப்பையும் ஏற்றுக்கொண்டதால் 1934 முதல் பிரெஞ்சுகாரர்களுக்கு அப்பொறுப்பு நீங்கியது.

### கடற்படை.

1925 முதல் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கப்பற்படை பிரஸீலின் அருகில் இருந்துவந்தது. பிரஸீலுக்குச் சொந்தமான கப்பற்படை எப்போதும் அகில அமெரிக்கப் பாதுகாப்பிற்குச் சாதகமாக இருந்துவந்தது. பிரஸீலியக் கடற்படைக்கு அட்மிரல் பியூ ரே கார்டு என்பவரைத் தகப்பன் என்றே சொல்லலாம். இவர் ரியோவில் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கப்பல் இலாகா பிரதிநிதியாக பல வருஷங்களாக இருந்துவந்தவர்.

### பிரஸீலில் ஜெர்மானியர்.

பிரஸீலில் தெற்கு பாகத்தில் ரியோகிராண்டி டோஸல், ஸாண்டா காதரினு, பரனு என்ற மூன்று இடங்களிலும் ஜெர்மானியர் அதிகம் குடியேறியிருக்கின்றனர். இந்த மூன்று பிரதேசங்கள் ஷில்லியில் வால்டியா, அர்ஜென்டைனுவில் மிஸியோனஸ் என்ற இடங்களைப்போலவும் டார்ட்மண்டு, கீல் முதலிய நகரங்களைப்போலவும் ஒரே ஜெர்மன் மயமாகக் காணப்படும். வியாபாரம், இதர பேச்சு முதலிய யாவும் ஜெர்மன் பாஷைதான். ஜெர்மன் பிறப்புள்ள 8,30,000 ஜெர்மனியர் பிரஸீலில் வசித்துவருகிறார்கள். இதைத் தவிர ஜெர்மன் சந்ததிகளைச் சேர்ந்த 13,70,000 ஜெர்மானியர் இருக்கிறார்கள். அதாவது 22,00,000 பேர் [illegible]



### இதாலியக் குடியேற்றநாடு.

இதாலியர்கள் வசிக்கும் பிரதேசம்தான் மிகப்பெரியது. அதில் 30,00,000 இதாலியர்கள் வசிக்கின்றனர். ஆனால் அவர்கள் அரசியல் விஷயத்தில் மிக அமைதியானவர்கள். பிரஸீலிலுள்ள ஸாவோபாலோ என்ற நகரமும் ரோின் நகரமும் ஒரு மாதிரிதான்.

### ஜப்பானியக் குடியேற்றநாடு.

பிரஸீலிள்ள ஜப்பானியரின் எண்ணிக்கை 2,00,000. 1934 முதல் வருஷத்திற்கு 3,000 பேருக்கு மேல் குடியேறக்கூடாதென்று குடியேற்றச் சட்டப்படி நிர்தாரணம் செய்யப்பட்டது. (இச்சட்டம் முக்கியமாக ஜப்பானியரைத் தடுக்கவே ஏற்பட்டது. ஆனால் இதர ஜாதியினரையும் 1880 முதல் 1930 வரை குடியேறியவர்களின் எண்ணிக்கையில் இரண்டு சதவிகிதத்திற்குமேல் குடியேறக்கூடாது என்று தடைசெய்தது. இருந்தாலும் இதிலிருந்து பல சிருங்கலைகள் ஏற்பட்டன. உதாரணமாக ஒவ்வொரு வருஷமும் கனடாவிலிருந்து 0·6 சதவிகிதமும், 3,000 ஜப்பானியர்களும் குடியேறிக்கொண்டுதான் இருந்தார்கள்). இப்படிக் குடியேறிய ஜப்பானியரின் சௌகரியங்களைக் குறைக்க பிரஸீலில் ரகசியமாக நடத்தப்பட்ட ஜப்பானியப் பள்ளிக்கூடங்களை பிரஸீலில் அரசாங்கத்தினர் மூடிவிட்டார்கள்.

### ஐந்தாம்படை.

பிரஸீலில் ஐந்தாம்படை முக்கியமாக ஜர்மானியர் வசிக்கும் ஜில்லாக்களில் இருந்துவந்தது. இதற்கு ஜீவாதாரமாக ஜெர்மன் ஸ்தானீகர்கள் இருந்தனர். இதன் ஜீவநாடியாக L. A. T. I, என்ற விமானப் போக்குவரத்தும் கோண்டார் (Condor) விமான மார்க்கமும் தான். இருந்தாலும், இந்த ஜெர்மன் ஜில்லாக்களில் நாஸிக் கொள்கை பரவாமல் வார்காஸ் அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை எடுத்துவந்தது. ஜெர்மன் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன 1,200 ஜெர்மன் பளளிக்கூடஙகள் மூடப்பட்டன. எல்லா ராஜீய நடவடிக்கைகளும் அடக்கப்பட்டன. கூடிய வரையில் பிரசாரத்தையும் தடை செய்துவந்தது. பகிரங்கமான ஒத்திகைகளும், சமூகக் கூட்டங்களும் தடுக்கப்பட்டன. ஜெர்மன் பிரதேசம் எக்கண்டமும் பிரஸீல் ராணுவ முகாம்கள் உண்டாக்கப்பட்டன. ஜெர்மானியரின் நடவடிக்கைகளை எதிர்த்து வேறெந்த நாட்டிலும் இவ்வளவு கடுமையான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. 'உள் நாட்டிலுள்ள ஜெர்மானியார் ஏதாவது சச்சரவுகளைச் செய்தால் அவர்களைக் கொன்று விடுவேன்' என்றும் வார்காஸ் சொல்லியுள்ளார்.

இருந்தாலும் பிரஸீலின் முக்கியத்துவத்தையறிந்து நாஸிகள் தங்கள் வேலைகளைச் சிரமப்பட்டு நடத்திவந்தனர். அங்கிருந்த ஜெர்மன் ஸ்தானீக ஸ்தாபனத்தில் 120 பேர்கள் வேலைக்கு அமர்ந்திருக்கின்றனர். பிரசாரத்திற்கு மாத்திரம் 40 முதல் 50 ஆயிரம் பவுனைச் செலவு செய்கின்றனர். ஜெர்மனியின் அயல் நாட்டு சமாசார இலாகா பிரஸீலில் 28 பத்திரிகைகளை 15 இடங்களுக்கு அனுப்பி வருகிறது. பிரஸீல் அரசாங்க பத்திரிகையான (A. Noite) என்ற பத்திரிகை அயல் நாட்டு சமாசாரங்களுக்காக ஜெர்மன் பத்திரிகைகளை அனுசரிக்க வேண்டியிருக்கிறது. ரியோடிஜெனிரோவில் உள்ள 24 பத்திரிகைகளில் மூன்று பத்திரிகைகள் ஜெர்மானியரால் நடத்தப்படுகிறது. இதில் மீயோடியா (Meio Dia) என்ற பத்திரிகைதான் அதிக வம்பு விஷயங்களைப் பிரசுரிப்பது.

### ஜெர்மானியரின் பண்டமாற்றல்.

பிரஸீலில் ஜெர்மானியர், இந்த யுத்தம் ஆரம்பமாகும்வரை, பண்ட மாற்றல் வியாபாரத்தினால் பல விஷயங்களைச் சாதித்திருக்கின்றனர். ஜெர்மனி பிரஸீலிய விளைபொருள்களை வாங்கி அதற்குப் பிரதியாக ஜெர்மன் நாணயங்களைக் கொடுத்து வருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் அந்தப் பணத்திற்குப் பதிலாக ஜெர்மன் சாமான்களைத் தான் பிரஸீல் வாங்கிக்கொள்ளவேண்டும். 1933-ல் பிரஸீல் இறக்குமதி சாமான்களில் 12·1 சத விகிதம் ஜெர்மனியிலிருந்துதான் செய்யப்பட்டது. 1938-ம் வருஷத்தில் இவ்வெண்ணிக்கை 25 சத விகிதத்திற்கு அதிகரித்துவிட்டது. அதேவிதமாக 1933-ல் பிரஸீல் 8·1 சதவிகிதம் ஜெர்மனிக்கு

சாமான்களை ஏற்றுமதி செய்தது. 1938-ல் இது 19·1 சதவிகிதத்திற்கு அதிகரித்து விட்டது. இவ்வித ஏற்பாட்டைக் குறித்து பிரஸீலியர்களுக்குத் திருப்தி கிடையாது. தங்களுக்கு பிரயோஜனமில்லாத சாமான்களை ஜெர்மனியிலிருந்து பெற வேண்டியிருந்தது. இதைப்பற்றி ஒரு கதை இருக்கிறது. ஒரு சமயத்தில் போட்டோ காமிராவிற்கு உபயோகமான கண்ணாடிகளையும் விலையுயர்ந்த காமிராக்களையும், ஆஸ்பரின் வில்லைகளையும் ஜெர்மனி அனுப்பியது. இவைகளால் பிரஸீலுக்கு பிரயோஜனமேயில்லை.

### ஜெர்மன் வியாபாரம்.

இந்த யுத்தம் ஆரம்பித்த பிறகு ஜெர்மன் வியாபாரம் அதிகமாகக் குறைந்து விட்டது. அதனால் பொருளாதார முற்றுகை தாங்கமாட்டாமல் திருட்டுத் தனமாக ஜெர்மன் கப்பல்கள் பிரஸீலியத் துறைமுகங்களுக்கு வந்து சேருகின்றன. எப்படியாவது பிரஸீலுடன் வியாபார சம்பந்தம் வைத்துக்கொள்ளவே ஜெர்மனி விரும்புகிறது. 1941-ம் வருஷம் மார்ச்சு 28உ (5,607 டன் நிறையுள்ள டிரஸ்டன் என்ற ஜெர்மன் கப்பல் ஸான்டாஸ் என்ற இடத்திலிருந்து நழுவிச் சென்றது. ஏப்ரல் 9உ (4,416 டன் நிறையுள்ள) ஹெர்மிஸ் என்ற ஜெர்மன் கப்பல் பிரிடிஷ்காரர்கள் வசப்படாமல் சாமான்களுடன் ரியோவிற்கு வந்து சேர்ந்தது. இதில் கோண்டாருக்கு ஒரு புதிய விமானமும் அனுப்பப்பட்டிருந்தது. ஏப்ரல் 28உ லெச் என்ற கப்பல் பிரஸீலியக் கடற்கரை ஓரமாக 2 மாதங்கள் தங்கியிருந்து 3,876 டன் மைகாவை ஏற்றிக்கொண்டு ரியோவிற்குச் சென்றுவிட்டது. ஜுலையின் ஆரம்பத்தில் மூன்று இதாலியக் கப்பல்களும், 3 ஜெர்மன் கப்பல்களும் இம்மாதிரியே சென்றன.

### L. A. T. I.

கப்பல்களைக் காட்டிலும் விமானங்களில் தான் திருட்டுத்தனம் ஜாஸ்தி. டாகாரிலிருந்து பிரஸீலிலுள்ள நெடாலுக்குப்போகும் L. A. T. I. விமானப் போக்குவரத்தினால்தான் அமெரிக்காவிற்கும் அச்சு நாடுகளுக்கும் முக்கிய சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. தபால், பிரயாணிகள் முதலியவைகளைப்போல் பிரசாரத்திற்கான சாமான்களும், தங்கம், பிளாடினம், வைரம் முதலியவைகளும் ஏற்றிச்செல்லப்படுகிறது. L. A. T. I. மூலமாக பிரஸீல், இதர தென் அமெரிக்க நாடுகள், ஐக்கிய நாடுகள் இங்குள்ள ஏஜெண்டுகளுக்கும் நாஸித்தலைவர்களுக்கும் சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. தஸ்தாவேஜுகளும் பணமும் அனுப்பப்படுகின்றன. இவை யாவும் டிரினிடாட் என்ற இடத்திலுள்ள பிரிடிஷாரின் வசப்படாமல் செய்யப்படுகின்றன. பனமா பிரதேசத்தில் போக்குவரத்துகளை ஐக்கிய நாடுகள் நேராடி கவனித்துவருகின்றன.

### கோண்டார் மார்க்கம்.

கோண்டார் விமான மார்க்கம் பெயருக்குத்தான் பிரஸீலில் இருக்கிறது. உண்மையில் ஜெர்மனிக்கு உட்பட்டதுதான். இது மிகப்பெரிய விமான மார்க்கம். இம்மார்க்கம் பிரஸீலின் ஓரமாயும் உள்நாட்டிலும் செல்லுகிறது. கேந்திரஸ்தானங்கள் யாவுக்கும் இவ்விமான மார்க்கம் செல்லுகிறது. ஆனால் வரவா இதற்கு சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 22—8—42-லிருந்து 28—8—42-வரை.

**ருஷ்யா.**—டான் வளைவில் கிளட்ஸ்காயாவிற்கும் கொடில்நிகோவோவிற்கும் இடையேயுள்ள கலாச் (Kalach) என்ற இடத்தில் ஜெர்மானியர் நதியைக் கடந்து விட்டார்கள். இலிவாஜா க்ட்ஜாலின்ஸ் முனையில் பாலங்களையும் கட்டிவிட்டனர். ஸ்டாலின்கிராட்டிற்கு ஆபத்து நெருங்கி இருக்கிறது. ஏற்கனவேயே வடகிழக்கு, தென்மேற்குப் பகுதிகளில் ஏற்பட்ட தாக்குதலோடு எதிரியின் அருகாமையிலும் சண்டை நடக்கிறது. ஸ்டாலின்கிராட்டிற்கு 30 மைல் தூரத்தில் சண்டை நடக்கிறது.



தெற்கில் ஜெர்மானியர் கிரிம்ஸ்காயாவைப் பிடித்ததாகச் சொல்லிக்கொள்ளுகின்றனர். இது நோவோரோஸிஸ்கிற்கும் குர்ஷான்ஸ்காயாவிற்கும் அருகில் 30 மைல் தூரத்தில் இருக்கிறது. பியாடிகோன்ஸ்க் எதிரி வசமாகிவிட்டது. அதிலிருந்து பிரோக்லாட்னுயான்—ரோஸ்டவ்—பாகு இருப்புப்பாதையை நோக்கிச் செல்லுகின்றனர்.

எதிரி மீண்டும் புதிய தாக்குதல் ஆரம்பித்திருக்கிறான். சிறிது முன்னேறியிருந்தாலும் வாரனேஷுக்கு வடக்கில் எதிரிசெய்த புதிய தாக்குதலில் மாறுதல் எதுவும் இல்லை. வாரனேஷில் ருஷ்யர்கள் எதிரிகளை மீண்டும் தடுத்து வருகின்றனர். இருந்தாலும் எதிரியின் முன்னேற்றத்தைத் தடுப்பது சிரமமாக இருக்கிறது. லெனின்கிராட்டிற்குத் தெற்கில் இல்மன் ஏரிக்கருகாமையில் எதிரி விரட்டப்பட்டான்.

போஸன், டான்ஜிக், கோனிக்ஸ்பர்க், டில்ஸிட், வார்ஸா முதலியவைகளை ருஷ்ய பாம்பர்கள் தாக்கின. இரண்டு வாரங்களுக்கு முன் ரிஷெவ் வியாஸ்மா பிரதேசத்தில் செய்யப்பட்ட ருஷ்யத் தாக்குதல் நீடித்திருக்கிறது.

5,000, 7,000 டன் எடையுள்ள இரண்டு கப்பல்கள் கருங்கடலிலும், பின்லாந்து குடாவிலும் முறையே மூழ்கடிக்கப்பட்டன.

பிரவ்தா பத்திரிகையில் எழுதும்போது, "கோடைகாலம் முடியப்போகிறது. தங்களுடைய லக்ஷியங்களை ஜெர்மானியர் சாதித்த பாடில்லை. அதற்காக அவசர அவசரமாகக் காரியங்களை நடத்திவருகின்றனர். உலகிலுள்ள நாடுகள் ஜெர்மனிக்கு எதிராக ஒன்று சேருகின்றன. இரண்டாவது மாரிகாலம் வரை தாக்காட்ட ருஷ்யர்களும் பாடுபடுகின்றனர். ஹிட்லரின் படை ஓயும்வரை சண்டையை விடப்போவதில்லை. அந்த லக்ஷியம் இவ்வருஷத்தினுள் முடிவடையாத போனால் அடுத்த வருஷம் கைகூடும்." ரெட் ஸ்டார் பத்திரிகை கூறுவதாவது, "ருஷ்யர்களுக்கும், செஞ்சேனையிலுள்ளோருக்கும் ஏற்பட்டுள்ள கவலைக்கிடமான நிலைமையினால் நமது யுத்த நோக்கம் கெட்டுவிடக்கூடாது. வெற்றியில் நம்பிக்கையும் குறையக்கூடாது."

**எகிப்து.**—எல் அலமீன் பகுதியில் பீரங்கித்தாக்குதல் ஏற்பட்டது. எல் அலமீன் கஸ்டலுல் கிரீட், மாரீட்ஸா, மெர்ஸாமெட்ரூ முதலியவைகளை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் துணைக்கப்பல் கூட்டத்தை எதிரி விமானங்கள் பலதடவை தாக்கின. கிரீஸிலும், ஏஜியன் பிரதேசத்திலும் எதிரி நிலயங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கியது. இருபக்கங்களிலும விமான நடவடிக்கை ஏற்பட்டிருப்பதால் எகிப்தில் புதிய சண்டை ஏற்படலாம். ரோமலுக்கு உதவிப்படைகள் வந்திருக்கின்றன. சீதோஷ்ண நிலையும் சண்டைக்கு லாயக்காக மாறிவருகிறது. அலெக்ஸாண்டிரியாவைப் பிடிக்க எதிரி ஆசைப்படுகிறான். பிரிடிஷ் எட்டாவது படைக்கு அருகிலும் எதிரி வந்திருக்கிறானகையால் இனி அவனை விட்டுவிடக்கூடாது. மேலும், சைனியத்தலைமை மாற்றப்பட்டிருப்பதால் மத்தியக்கிழக்குத் தொந்தரவை நேசநாடுகள் முடித்துவிடலாமென்று தோன்றுகிறது.

**விமானப் படையெடுப்புகள்.**—ஏற்கனவே அறிவித்தபடி டியப் தாக்குதலுக்குப் பிறகு ஏமீன்ஸில் ஒரு படையெடுப்பு நேர்ந்தது. வடகடலில் அமெரிக்கப் போர் விமானப்படையின் பறக்கும்கோட்டை விமானங்கள் 20 முதல் 25 ஜெர்மன் பாக்வுல்ப்களால் தாக்கப்பட்டன. அதில் ஆறு எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன. லே டிரயட், ரூவன் முதலியவைகளை அமெரிக்க விமானங்கள் தாக்கின. மெயின், பிராங்க் பர்டு, வீஸ்பேடன் முதலியவைகளை பிரிடிஷ் விமானப்படை தாக்கியது.

ஸ்வான்ஸியில் 22உ விமான மந்திரி ஸர் ஆர்ச்பால்டு ஸிங்கிளேர் பேசும்போது கோலோன், எஸ்ஸன் முதலியவைகளைத் தாக்கியதால் ஜெர்மன் மக்களுக்கு ஏற்படும் துன்பங்களைப்பற்றி சந்தோஷப்பட வேண்டாம். "அவர்களாகவேதான் இதை விலைக்கு வாங்கிக்கொண்டார்கள். ஹிட்லருக்கும் அவனது நாஸிக்கொள்கைக்கும் உதவினார்கள். அப்பேற்பட்டவர்களைப் பார்த்து, நாம் பின்கண்ட விதமாகக் கூறுவோம். "வார்ஸா, ராட்டர்டாம், பெல்கிரேட்,

கவன்டிரி, லண்டன், ஸ்வான்ஸி முதலியவைகளுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைப் பார்த்து ஹிட்லருக்கு வந்தனமளியுங்கள்!''

ஸர் ஸிங்களேர் மீண்டும் சொன்னதாவது ஆயிரக்கணக்கான விமானங்களைக் கொண்டு தாக்குதலை இனி அடிக்கடி செய்ய அமெரிக்கர்கள் உதவுவார்கள்.

ஜெர்மன் யுத்தத் தொழிற்சாலைகளும், போக்குவரத்துக்களும் இனி சின்னா பின்னமாக்கப்படும். யுத்தத்தை ஜெயிக்க ஜெர்மன் மக்களின ஆவல் குறைந்துவிட்டது. இதற்காக பாம்பர்படை தயார் செய்துவருகிறது. சமயம் வந்ததும், நேசதேசப்படைகள் வெற்றிகரமாக பெர்லினுக்குள் செல்லும் அப்போதுதான் இந்த யுத்தம் முடியும்!

**சைனா.**—இவ்வாரத்தில் நேசதேசங்களுக்கு வெற்றி அதிம் கிடைத்தது. வென்சவ், க்வேகி, ஷாங்ஜாபோ, குவாஙபெங, யிஙடன், யூஷான், ஷௌகி, யுகியாங், லின்ச்வான், முதலியவைகளை ஒன்றின்பின் ஒன்றாக சீனர்கள் பிடித்தனர். லின்ச்வானைத்தான் தளமாகக்கொண்டு ஜப்பானியர் மேற்குநோக்கி முன்னேற ஒருமாத காலமாக சண்டையிட்டு வந்தனர். வென்சௌவிலிருந்து சீனர்கள் ஜப்பானியரைத் துரத்திவருவதாக சுஙகிங அறிக்கை கூறுகிறது. கியாஙஸி மாகாணத்தில் சீனர்கள் நான்சங்கிற்கு 25 மைல் தூரத்தில் இருக்கின்றனர். ஏராளமான எண்ணிக்கையிருந்தாலும் ஜப்பானியரால் செகியாங்—கியாஙஸி இருப்புப்பாதையைக் கைப்பற்ற முடியவில்லை. அதனால் பழைய தளங்களுக்குப் பின்வாங்குகின்றனர்.

**ஸாலமன் தீவுகள்.**—இந்தத் தீவுகளில் நேசதேசங்கள் இறங்கியபிறகு அமெரிக்கக் கப்பல்கள் ஜப்பானியரை விரட்டுவதிலும், புதிய தளங்களைக் கட்டுவதிலும், ஆக்கிரமித்த நாடுகளை பலப்படுத்தி பாதுகாப்பு செய்வதிலும் ஈடுபட்டிருக்கின்றன.

சமீபத்தில் கிடைத்த செய்தியிலிருந்து டுலாகியைத் திரும்பப்பிடிக்க ஜப்பானியர் பிரயத்தனப்படுகிறார்கள். திரும்பப் பிடித்த தீவுகளில் முக்கியமானவை தாக்கப்படுகின்றன. ஸாலமன் தீவுகளுக்கு அருகில் ஒரு பெரிய கடற்போரும் விமானச்சண்டையும் நடக்கிறது. இதில் ஏற்கனவேயே 6 ஜப்பானியச் சண்டைக் கப்பல்களும், 21 விமானங்களும் சேதமாக்கப்பட்டன. அமெரிக்க விமானகள் எதிரி போக்குவரத்திலும், ஒரு க்ரூயிஸரையும் தாக்கின. ஒரு ஜப்பானிய விமான மேற்றும் கப்பலும், மற்றொரு சண்டைக்கப்பலும், பல க்ரூயிஸர்களும் தாக்கப்பட்டன.

நேசதேசப் பைடர் விமானங்கள் நியூகினிக்கு அருகில் ஜப்பானியத் துணைக்கப்பல் கூட்டத்தையும் நியூ பிரிடனுக்கு அருகில் கடல் விமான தளங்களையும் தாக்கின.

**அலூஷியன்.**—தினம் அமெரிக்க ஸப்ளைகள் தரை, கடல், விமானம் மூலம் வந்து சேருவதால் நிலைமை அபிவிருத்தியடைந்து வருகிறது.

**பலவகைப்பட்டவை.**—1. பிரஸீலுடன் ஒத்துழைக்க இன்னும் சில தென் அமெரிக்க நாடுகள் சம்மதித்திருக்கின்றன. அர்ஜென்டைனா, பராகுவே, பொலீவியா யாவும் இவ்விதம் சொல்லியிருக்கின்றன. போர்ச்சுகீஸ் அரசாங்கம் ஒற்றுமையுடன் இருப்பதாகத்தெரிவித்திருக்கிறது.

" 2. பிரெஞ்சு ஜனசபை, பிரதிநிதி சபை, அவைகளின் தலைவர்கள் பதவி யாவும் ரத்து செய்யப்பட்டதாக விஷி குறிப்பு கூறுகிறது.

3. சமீபத்தில் ரீஷ்டாக் முன்பாக ஹிட்லர் தன்னை ஜெர்மனியின் சர்வாதிகாரியாக அறிவித்தான். எல்லா நியாயாதிகாரத்தையும் டாக்டர் தீராக்கினிடம் ஒப்படைத்து நாஸி முறையின்படி நீதி வழங்கவேண்டுமென்றும், சந்தர்ப்பம் ஏற்பட்டால் பிரகிருதமுள்ள சட்ட திட்டங்களை மீறலாம் என்றும் சொல்லியிருக்கிறான்.

தோல்வி ஏற்பட்டால் உள்நாட்டில் குழப்பம் ஏற்படுமென்று பயந்து ஹிட்லர் இந்த மாதிரியான ஏற்பாடுகளைச் செய்து வருகிறான். ஏற்கனவேயே வாபன் S. S. போலீஸ் படையை ஏற்படுத்தியுள்ளான். இரண்டாம் போர்முனை ஏற்பட்டால் உள்நாட்டுக் குழப்பம் ஏற்படுமென்று பயப்படுகிறான்.



இப்புதிய நியாயவாதி ஒரு உண்மை நாஸி. 1933-ல் அரசியல் குற்றங்களை விசாரித்ததில் நல்ல அபகீர்த்தி உண்டு. ஏனென்றால் கூட்டமாகக் கொலை செய்யவேண்டுமென்று உத்தரவுகளைப் போட்டான்.

4. இராக் பிரதம மந்திரியான ஜெனரல் நூடி-எஸ்ஸெட், ஜெர்மானியர் இராக்கினுள் வந்தால் நாம் எதிர்த்து சண்டை செய்யவேண்டுமெனச் சொல்லியுள்ளான்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிஷ்ஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 17—8—42. (திங்கட்கிழமை). | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விமான எதிர்ப்புகள்—வட கடலில் (North Sea). | | | |
| | சுரங்க வெடிகள் போடுவது.-விரோதி சமுத்திரங்களில். | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி டாங்கிகள், கவசம்பூண்ட வண்டிகள், இன்னும் மற்ற வண்டிகள்.—எல் அலமீன் (El Alamein) போர்முனையில். | | | |
| | வேவு பார்த்தல்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.-கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |
| | சைனா (China)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஸ்தானங்கள், மற்ற லக்ஷ்யங்கள்.—ஷாங்ஜெயோ (Shang Jao) வுக்குத் தென்மேற்கே. | | | |
| | தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம். விமானங்களை அணிவகுத்து மிடங்கள். வடகிழக்குப் போர்முனை. | | | |
| | வேவு பார்த்தல்.—வட கிழக்குப் பகுதியில். | | | |
| 18—8—42. (செவ்வாய்க்கிழமை). | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால). | | 3 பைடர் விமானங்கள். | 2 பைடர் விமானங்கள். 1 விமானம். |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (Northen France). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.— லெஹாவர் (Lehavre) பிரதேசத்திலிருந்து டியப் (Dieppe), அபிவில்ஸ் (Abbeville), ஆஸ்டண்டு (Ostend) வரை. | | | |
| | இரவில்.-நீர்மூழ்கிகள், கப்பல்கள் கட்டுமிடங்கள்.—பிளேம்ஸ்பர்க் (Flems-burg). | | | |
| | லக்ஷ்யங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany) | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 18—8—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—விரோதி வரிசைகளுக்குப் பின்னால். | | | |
| | விமானமிறங்குமிடம்.—எல் டாபா (El Daba). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | | | |
| | **தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கவசம்பூண்ட சைனியங்கள் வேவு பார்த்தல்.—வடகிழக்குப் போர்முனையில் (N. E. Sector). | | | |
| 19-8-42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்—டியப் (Dieppe) கடற்கரையில் செல்லும் துருப்புகள், போக்குவரத்துகள், பிரிடிஷ் துருப்புகளுடன் சேர்ந்து போகார நடத்துவதில் குடைபோல் ஆதரவளித்தல். | | 98 விமானங்கள். | 91 விமானங்கள் நாசமாயின; 100 விமானங்கள் பழுதுபட்டுப் போயின. |
| | விரோதி பைடர் விமான தளம்.—அபிவில்லி (Abbeville). | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதிக்குச் சொந்தமான கடற்கரைப் பிராந்தியங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானப்போர்.—லிபியா (Libya)வில். | இன்னும் 8 விமானிகள் சேதமாயின. | | 4 விமானங்கள். |
| | விரோதிப் போக்குவரத்து, மற்ற லக்ஷியங்கள்.—மெர்ஸா மாட்ரு (Mersa Matruh), டொப்ருக் (Tobruk). | | | |
| | விரோதிப் படகுகள்.—ஆபிரிக்கக் (African) கடற்கரை எங்கும். | | | |
| | **ருஷ்யா Russia**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | ரோந்து.—யுத்தப் பிரதேச முழுவதிலும். | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய யுத்தக் கப்பல்கள்.—ஸாலமன் (Solomon) பிரதேசத்தில். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஆக்கிரமித்த பட்டணம்.—டிமோரில் (Timor). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 20-8-42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்—அமீன்ஸ் (Amiens). | | | |
| | விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசங்களில். | | | |
| | இரவில்.—விரோதி துணைக்கப்பல் கூட்டம்—டச்சு (Dutch)க் கடற்கரைக் கருகாமையில். | 3 கப்பல்கள். | நஷ்டமில்லை. | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டாங்கிகள், கவசம்பூண்ட வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | வேவு பார்த்தல்.—யுததரங்கத்திற்குப் பின்னால். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பெட்ரோல் வெடிமருந்துக் கிடங்குகள்.—மெயோபைஸ் (Maobisse). | | | |
| | **தென்மேற்கு பஸிபிக்-(S. W. Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்—வடகிழக்குப் போர்முனை. | | | |
| | **கிழக்கு ஜெர்மனி (Germany)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டான்ஸிக் (Danzig). | | | |
| | **கோனிக்ஸ்பர்க் (Koenigsburg)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டில்ஸிட் (Tilsit). | | | |
| 21—8—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | டொப்ருக் (Tobruk). | | | |
| | மெர்ஸா மாட்ரு (Mersa Matruh). | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | காஸ்டெலு பெடியாடா (Kastellu Pediada). | | | |
| | **ஸைப்ரஸ் (Cyprus)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவுபார்த்தல்—ஸைப்ரஸ் (Cyprus) | | 1 விமானம். | |
| | **கிழக்குப் பிரஷ்யா (East Prussia)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஸிலீஷியா (Silesia)வின் மேல்பாகம். | | | |
| | **போலந்து (Poland)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வார்ஸா (Warsaw). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—யுத்தப் பிரதேசமெங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு விமான நிலயம்—ரபால (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | சைனியங்களைப் பிரிக்குமிடம்—லே (Lae). | | | |
| | **தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்—வடமேற்குப்பகுதியில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 22—8—42. (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—பீரங்கி ஸ்தானங்கள் தொழிற்சாலைகள் விமான தளங்கள், ஜெர்மன் துருப்புகள்—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). | ரொம்ப பலத்த சேதம். | | |
| | பலமான பீரங்கி ஸ்தானங்கள்—டயப் (Dieppe) பிரதேசத்தில். | | 4 விமானங்கள். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான மிறங்குமிடம்—டெர்ண (Derna). | | | |
| | விரோதிக்கு ஸப்ளை போக்குவரத்து, மற்ற லக்ஷியங்கள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | துறைமுகத்தைச் சேர்ந்த கட்டடங்கள்—டொப்ருக் (Tobruk). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—கிழக்கு போர்முனை முழுவதிலும். | ஆகஸ்டு 15 முதல் 22-ம் தேதியோடு முடிந்த வாரம். | 194 விமானங்கள். | 347 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி கட்டடங்கள்—பூகா (Buka) பாலதயிலிருக்கும் கப்பல்துறை பிரதேசம். | | | |
| 23—8—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பற்படை தளம்—எமடன் (Emden). | | | |
| | இரவில்.—கண்ணிவெடிகள் போடுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரக் கரையோரங்களில். | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்—டொப்ருக் (Tobruk). | | | |
| | அச்சுநாட்டுக்குச் சொந்தமான டாங்கிகள், வண்டிகள் கூடாரங்கள்—எகிப்து யுத்தரங்கத்தில். | | | |
| | மெர்ஸா மாட்ரு (Mersa Matruh). | | | |
| | விரோதிப் படகுகள்—ஆபிரிக்கக் (Africa) கடற்கரைக்கருகாமையில் | | | |
| | ரோட்ஸ் (Rhodes)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—மாரிட்ஸா (Maritza). | | | |
| | ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப்போர்கள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு (Far East)-சைனு (China)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | லின்ச்வான் (Linchwan). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 23—8—42. (ஞாயிற்றுக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானப்போர்கள்—நியூ கினி (New-Guinea), பிரதேசத்தில். | | 1 விமானம். | 4 விமானங்கள் |
| 24—8—42. (திங்கட்கிழமை.) | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிகளின் கப்பல் கட்டுமிடங்கள்—லெட்ரெயிட் (Letrait), ரூயன் (Rouen). | | | |
| | விமான எதிர்ப்புகள்—பிரெஞ்சுக் கடற்கரையில். | | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம் |
|---|---|---|---|---|
| 18—8—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்—இங்கிலாந்து (England). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| 19—8—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain) (ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான படகுகள்.—ஆபிரிக்க (Africa)க் கடற்கரை எங்கும். | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ருஷ்ய ஸ்தானங்கள்.—ஸ்டாலின்கிராட் (Stalingrad) பிரதேசத்தில். | | | |
| 20—8—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையில் அநேக இடங்கள். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ருஷ்ய ஸ்தானங்கள்.—வோரனேஷ் (Voronej) பிரதேசத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 21—8—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அன்று பகலிலும் இரவிலும் விமான நடமாட்டமே கிடையாது. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 5 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| 22—8—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஒரு இடம் இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையில். | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்— கிழக்கு ஆங்கிலியா (East Anglia), கிழக்கு மிட்லாந்து (Midlands). | | 2 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | துடியிருப்பு பிரதேசங்கள்.—ருஷ்ய சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| 23—8—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்— தென்கிழக்கு, தென்மேற்கு இங்கிலாந்து (England). | | 3 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ஆஸ்திரேலியா (Australia)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் துறைமுகம் (Darwin). | மிகவும் சொற்பச் சேதம். | 4 பாம்பர், 9 பைடர் விமானங்கள். | நஷ்டமில்லை. |
| 24—8—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—நியூ பிரிடன் (New Britain)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமானச்சண்டை.—ராபால் (Rabaul). | | | |
| | ஆஸ்திரேலியா (Australia)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் துறைமுகம் (Port Darwin). | | | |

# யுத்தக் குறிப்புகள்.

**காலஞ்சென்ற கெண்ட் கோமகன்.** இவ்வாரம் ஒரு துக்க வாரம். மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தியின் கடைசித் தம்பியான கெண்ட் கோமகனின் மரணத்தைக் கவலையுடன் அறிவிக்கிறோம். இம்மாதம் 25உ ஸன்டர்லண்டு பறக்கும் படகில் ஐஸ்லாந்திற்குச் சென்றபோது விமானம் உடைந்து இவரும் மற்றவர்களும் கொல்லப்பட்டனர்.



அந்த சம்பவத்தின் பூரா விவரங்கள் கிடைக்கவில்லையாயினும், எதிரியின் ய்கையால் நேரவில்லை என்று மாத்திரம் சொல்லப்படுகிறது.

சக்ரவர்த்தி குடும்பத்தில் விமானத்திலிருந்து ஆபத்து ஏற்பட்டது இதுவே முதல் சம்பவம். 100 வருஷ காலமாக யுத்த சேவையில் ஈடுபட்டு இறந்ததும் முதல் தடவையாக கெண்ட் கோமகன் தான். சக்ரவர்த்தி குடும்பத்தில் இவருக்கே விமான அனுபவம் இருந்து அட்லாண்டிக்கைக் கடக்கும் எண்ணமும் இருந்திருக்கிறது. பிரிடிஷ் விமானப் படையில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆபீஸில் ஒரு உத்தியோகஸ்தராகவும் இருந்தார்.

டெயிலி மிர்ரர் பத்திரிகையின் மொழிகளில் 'இந்த யுத்தம் பல குடும்பங்களுக்குக் கவலையைச் செய்திருக்கிறது. ஏழை மக்களின் வீடுகள் விமானத் தாக்குதலுக்கு உள்ளாயின. பக்கிங்ஹாம் அரண்மனையும், அதே ஆபத்திற்கு உள்ளாயிற்று. குழந்தை, கணவன் முதலியோரை இழந்த தாய்களும், மனைவிமார்களும், சக்ரவர்த்தியின் குடும்பத்திற்கேற்பட்ட துக்கத்தை அனுபவிப்பார்கள். ஏனென்றால் ராஜ குடும்பத்திற்கும் பொதுமக்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது.

ஆனால் அத்துடன், பிரிடிஷ் சாம்ராஜ்யம், உலகம், இந்தியா உள்பட நேச நாடுகள் அவ்வித துக்கத்தில் கலந்து கொள்ளும் என்று நாம் சொல்லுவோம்.

வி வி வி வி வி வி வி

**மிஸ்டர் சர்ச்சில்.** பிரசுரிதம் காணப்படும் இந்த யுத்த நிலைமையில் மாஸ்கோவிற்கும், மத்தியக் கிழக்குக்கும் மிஸ்டர் சர்ச்சில் விஜயம் செய்தது ஒரு முக்கிய சம்பவம். சென்ற வாரத்திலேயே மாஸ்கோவிற்குச் சென்று க்ரம்லின் அரண்மனையில் ஸ்டாலினைக் கண்டு பேசியதைப்பற்றி சவிஸ்தாரமாகச் சொல்லப்பட்டது.

மாஸ்கோவிலிருந்து திரும்பிவரும்பொழுது இராக்கையும், பர்ஸியாவையும் பார்த்து வந்ததாகத் தெரிகிறது. மேலும் எகிப்துக்குச் சென்று 8-வது படையின் ஆபீஸர்களுடன் கண்டு பேசினார். மிஸ்டர் புல்பின்ச் பாதுகாப்பிலிருந்த எல் அலமீன் முனையைப் பார்வையிட்டார். கெய்ரோவில் பெரோக் மன்னரையும், ஆச்சின் லக்கையும், ஸ்மட்ஸையும், பஞ்சாப் பிரதம மந்திரியையும் கண்டு பேசினார். பிரயாணத்தில் பிரதம மந்திரி 15,000 மைல் தூரம் விமானத்திலேயே சென்றார்.

இவர் வந்த விமானத்தின் பிரதம மாலுமியான காப்டன் W. J. வான் டெர்க்ளுட் என்பவர் சொன்னதாவது :—'இந்த 14,000 அல்லது 15,000 மைல் பிரயாணத்தில் சர்ச்சில் எங்களுடன் விமானத்தில் வந்தார். இந்தப் பிரயாணத்தில் 3-ல் 2 பங்கு அவகாசத்தில் விமானத்தின் முன் அறையிலேயே இருந்தார். விமான சம்பந்தமான விஷயங்களில் அதிக அக்கரையைக் காண்பித்தார்.'

லண்டன் ஸ்டேஷனுக்கு வந்து இறங்கியதும் ஏராளமான கூட்டம் மிஸ்டர் சர்ச்சிலைச் சூழ்ந்து கொண்டது. 'நீர் களைப்படைந்திருக்கிறீரா' என்று ஒரு மாது வினவினள். அதைக்கேட்டு ஆச்சரியத்துடன் மிஸ்டர் சர்ச்சில் அவள் பக்கமாகத் திரும்பி 'களைப்பா! நான் ஏன் களைப்படைய வேண்டும்?' என்று பதிலுரைத்தார்.

மிஸ்டர் ஸ்டாலின் சர்ச்சிலை இங்கிலாந்தின் பழைய "சண்டைக் குதிரை" என்று அழைத்தார். சண்டைக் குதிரை என்று சொல்லுவது மாத்திரம் வாஸ்தவம்தான். இன்னும் பழைமையை அடைந்துவிடவில்லை, முறுக்காகவே காணப்பட்டார்.

எகிப்து பத்திரிகையான அல் இத்தினீன் மிஸ்டர் சர்ச்சிலின் சுற்றுப் பிரயாணத்தைப்பற்றி பல விஷயங்களைத் தெரிவித்திருக்கிறது. கெய்ரோவில் பெரோக் மன்னரைச் சந்தித்தபொழுது சர்ச்சிலுக்கு பெரோக் மன்னர் நீண்டதொரு சுருட்டை அளித்தாராம். சர்ச்சில் அதை உடனே வாங்கி, பற்ற வைத்து, பேச்சுவார்த்தை நடந்த $1\frac{1}{2}$-மணி அவகாசம் உபயோகித்தாராம்.

சர்ச்சில் இச்சுற்றுப் பிரயாணத்தை செய்து முடித்ததிலிருந்து சில உண்மை விஷயங்கள் வெளியாகின்றன. சர்ச்சில் திரும்புப் பிரயாணத்தில் ஒவ்வொரு இரவிலும் ருஷ்யர்கள் உபயோகிக்கும் குல்லாயைப் போட்டுக்கொள்ளுகிறார். நீண்ட அங்கியையும், ரத்தன கம்பளத்தால் செய்த ஜோடுகளையும் போட்டுக்கொள்ளுகிறார். அவைகளில் P. M. என்ற எழுத்துகள் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அவர் உபயோகிக்கும் (Skull Cap) குல்லாய் சைன தேசத்துப் பிரபு போட்டுக்கொள்ளும் குல்லாய் மாதிரி இருக்கிறது. கெய்ரோவில் அவர் அணிந்திருந்த ஸாம்பிரேரோ என்ற அமெரிக்க தேச தலைப்பாகை ஸ்மட்ஸ் இனமாக அளித்தது.

ஆபிரிக்கப் பாலைவனத்திலுள்ள துருப்புகள் மிஸ்டர் சர்ச்சிலை அன்புடன் வரவேற்றன. ஒரு சமயத்தில் அவர் ஊருக்குத் திரும்புகையில் ஏராளமாக ஜனங்கள் சூழ்ந்துகொண்டு அவரை உத்ஸாகப்படுத்தினார்கள். அவர்களைத் தாண்டி அவர் ஏறிச்செல்லும் விமானத்தை அடைய முடியவில்லை. அவர் வாயிலிருந்த சுருட்டை எடுத்து ஜனக்கூட்டத்தின் மேல் எறிந்தார். ஜனங்கள் அச்சுருட்டை ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்ள அதை எடுக்க ஓடினார்கள். ஒருவரோடொருவர் போட்டிபோட்டு எடுக்கும்பொழுது அது சக்குத்தூளாய் போய்விட்டது. அதே சமயத்தில் வழி தடங்கலில்லாமல் ஏற்பட்டுவிட்டது. அதன்பேரில் மிஸ்டர் சர்ச்சில் வெகு சுலபமாக தன்னுடைய விமானத்தை அடைந்தார்.

அவரது பிரயாணத்தின் ஆரம்பமுதல் பத்திரிகைகளுக்கு விவரங்கள் தெரிந்தபோதிலும் இவருடைய சுற்றுப் பிரயாணம் மிகவும் ரகசியமாகவே பாவிக்கப்பட்டது. இதிலிருந்து பத்திரிகைகளிடத்தில் அரசாங்கத்தாருக்குள்ள நம்பிக்கை வெளியாகிறது.

இவ்வித சுற்றுப் பிரயாணத்தை மிஸ்டர் சர்ச்சில் ஏன் செய்யவேண்டுமென்பதைப்பற்றி பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் ஒன்று மட்டில் நிச்சயம். இவருடைய பிரயாணத்தினால் யுத்தத்தின் போக்கில் திடீர் மாறுதல்கள் ஒன்றும் ஏற்படாது. இரண்டாம் போர்முனை என்ற சிருக்கலையான பிரச்னையைச் செப்பிடுவித்தைக்காரன் போல் சாதித்திருக்கவும் முடியாது. ஆனால் பிரிடன், அமெரிக்கா போன்ற நேசநாடுகள் மற்றும் 6 யுத்த அரங்கங்களில் ஈடுபட்டிருப்பதும், அப்படியிருந்தும் ருஷ்யாவுக்கு வேண்டிய உதவியை அனுப்புவதும், ஒரே சமயத்தில் எதிரியை மற்ற இடங்களிலும் ஈடுபடும்படி செய்யவும் இது முதலான விஷயங்களை ஸ்டாலினுக்கு அறிவிக்க இப்பிரயத்தனம் முக்கியமானது. கடிதப் போக்குவரத்தைக் காட்டிலும் நேரே கண்டுபேசுவதுதான் இம்மாதிரி நிலைமைகளில் நன்மையை அளிக்கும்.

மேலும் ரோமல் எகிப்தை நோக்கி முன்னேறியதாலும், வான்பாக்காகஸை நோக்கி முன்னேறியதாலும் மத்தியக் கிழக்கில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை நேரில் பார்த்து வரவும் மிஸ்டர் சர்ச்சில் சென்றார். எந்த நிமிஷத்திலும் ஸிரியா, பர்ஸியா, இராக், இங்கே யுத்தம் ஏற்படலாம். ஆகவே வேவல், ஆச்சின்லக், ஸ்மட்ஸ் போன்றவர்களைக்கண்டு பேசுவதற்கு இதுவே தருந்த சமயம்.

வி வி வி வி வி வி வி

**யுத்த நிலைமை.** டான் நதியை ஜெர்மானியர் கடந்ததால் ஸ்டாலின்கிராடிற்கு அபாயம் அதிகரித்திருக்கிறது. காகஸஸ் பக்கத்தில் கிராஸ்னி எண்ணெய் தளகங்களையும், கருங்கடல் துறைமுகங்களான நெவோரோஸிஸ்க், டபஸி, இரண்டையும் நோக்கி எதிரி தாக்குதல் செய்து வருகிறான். காஸ்பியன் பக்கத்தில் மினரல்நியாவ்வாடியைப் பிடித்துக் கொண்டதால் பியடிகோர்ஸ்க் வரை முன்னேறியிருக்கிறான்.

ருஷ்ய நிலைமையால் சொஞ்சம் சஞ்சலம் ஏற்பட்டிருந்தாலும் ஜெர்மன் சைனியங்கள் வெகுதூரம் கடக்க வேண்டியிருப்பதாலும், இரண்டு மாதகாலமாக விடாமல் போர் செய்து வருவதாலும், களைப்படைந்திருக்கின்றன. ஆகவே முன்னேற்றம் குறைந்திருக்கிறது. இனி இது துரிதமாக முடியாது. இந்த அந்தராளத்தில் ருஷ்யர்கள் தங்களுடைய சைனியங்களைச் சீர்திருத்திக்கொள்ளவும், புறப்



பித்துக்கொள்ளவும் முடிந்தது. இதில் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால் ருஷ்யச் சைனியத்தை அடியோடு அழிக்கலாமென்று நினைத்த ஹிட்லர் அது சாத்தியமில்லாததால் ருஷ்யச் சைனியத்தை வடக்கிலும் தெற்கிலும் பிறிக்கப்பார்க்கிறான். வாரனேஷைத்தனியே ஒதுக்குவதற்காக ஓரலில் செய்யப்பட்ட ஜெர்மன் தாக்குதல் பலிக்கவில்லை. மேலும், மாஸ்கோவிற்கு அருகில் ருஷ்யர்கள் குறுக்கு எதிர்ப்புகளையும் செய்து வருகின்றனர்.

இவ்வாரத்தில் தென்மேற்கு பஸிபிக், சைன இந்த இரண்டு இடங்களிலிருந்தும் கிடைத்த செய்திகள் திருப்திகரமானவை. ஸாலமன் தீவுக்கூட்டத்தைக் கைப்பற்றிய பிறகு டுலாகி, காடல்கனார், பிளாரிடா என்ற மூன்று தீவுகளிலிருந்தும் ஜப்பானியர் துரத்தப்பட்டனர். அவைகளைத் திரும்பப் பிடிக்கச் செய்யப்பட்ட ஜப்பானியரின் பிரயத்தனம் பலிக்கவில்லை. இங்கு நடந்த கப்பல் சண்டைகளும் நமக்குச் சாதகமாகக் காணப்படுகின்றன. ஆகவே ஜப்பானியரின் முன்னேற்றம் குறைந்து கேசநாட்டு முன்னேற்றப் போர் துவக்கப்பட்டது என்று நிச்சயமாகிறது.

கிழக்கு சீன மாகாணங்களான செகியாங், கியாங்ஸி இவைகளில் குவேய்கியையும், லின்சுவானையும் சீனர்கள் பிடித்து இருப்புப்பாதைகளை எதிரி வசத்திலிருந்து விடுவித்தனர்.

மேற்கு ஐரோப்பாவில் தினப்படி செய்யப்படும் தாக்குதல்களைத் தவிர டியப் தாக்குதல் மிகவும் முக்கியமானது. அதைப்பற்றி நாம் பிரஸ்தாபிப்போம்.

வி வி வி வி வி வி வி

**டியப்** தாக்குதலில் பல அம்சங்கள் தனிப்பட்டதாகவே காணப்பட்டன. ஆனால் பிரென்

வில், லெண்ட் நாஸேர், பொலோன் என்ற இடங்களில் செய்யப்பட்ட தாக்குதல்களைக்காட்டிலும் டியப் தாக்குதல் மாறுபட்டது. ஏனென்றால் இது பரிக்ஷார்த்தமாகவும், வேவு பார்ப்பதற்கும் செய்யப்பட்டதாகும். இதில் நான்கு தேசங்கள் ஈடுபட்டன. கப்பல்களுக்குப் பைடர் விமானங்கள் துணையாகச் சென்று தாக்குதல் காலத்தில் தற்காப்பு செய்துவந்தன. கப்பல்கள் பயங்கரமான கடலைத் தாண்டி நன்குகப் பாதுகாக்கப்பட்ட டியப் பிரதேசத்தில் தனிப்பட்ட 6 பிரதேசங்களில் பெரிய ராணுவப்படையை இறக்கின. சண்டை பட்டப்பகலில் நிகழ்ந்தது. பெரும் எதிர்ப்புக்கிடையில் இந்த கோஷ்டி எதிரிப் பிரதேசத்தில் 9 மணி சாவகாசம் தங்கியிருந்து இரண்டு பீரங்கி நிலயங்களையும், ரேடியோ கண்டுபிடிக்கும் ஸ்டேஷன்களையும் அழித்து ஏராள சேதத்தை விளைவித்து பலரைக் கைது செய்துகொண்டு சேதமில்லாமல் திரும்பிவந்துவிட்டது.

பிரிடிஷ் விமானப்படை இவ்விதக் கோஷ்டிக்குப் பாதுகாப்பளிப்பது என்ற நோக்கத்துடன் சென்றபோதிலும், பெரிய விமானப்போர் நிகழ்ந்து பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், டென்மார்க், ஸெக்கோஸ்லாவியா முதலிய இடங்களிலுள்ள விமானங்களை எதிரி அழித்துக்கொள்ள வேண்டிவந்தது. ஸர் A. ஸிங்க்ளேர் சொல்லும்விதமாக 24 மணி அவகாசத்தில் 3,000 விமானங்கள் பயங்கரமாக ஈடுபட்டன. முடிவில் 100 நேசதேச விமானங்களும், 200 எதிரி விமானங்களும் அழிந்தன. இதனால் எதிரியின் பலம் 20 சதவிகிதம் குறைந்தது. இவ்வித படையெடுப்பினால் எதிரியின் பாதுகாப்புப் படைகள் துலைக்கப்பட்டதோடுமட்டுமல்லாமல் யூப்ட்வாபி படையும் அழைக்கப்பட்டு, சேதமாக்கப்பட்டது. இதற்கு முன் ஜெர்மன் பிரதேசத்தில் செய்யப்பட்ட தாக்குதல்களினால் யூப்ட்வாபி படை யுத்தத்தில் ஈடுபடாமல் விமான நிலயங்களில் ஒளிந்திடக்கவேண்டியிருந்தது. டியப் தாக்குதலால் வெளிக்கிளம்பவேண்டி வந்தது.

பி. பி. ஸி. யில் இதைப்பற்றி பிரெஞ்சு மக்களுக்குச் சொல்லும்போது டியப் தாக்குதல் ஒரு தாத்காலிகமான தன்மை வாய்ந்ததென்றும், இது பால பல தாக்குதல்கள் சேர்ந்து எதிரியின் பலம் நிர்த்தாரணம் செய்யப்படுமென்றும் மாஸ்கோவில் ஸ்டாலின் சர்ச்சில் சந்திப்புக்கும் இதற்கும் சம்பந்தமில்லையென்றும் சொல்லப்பட்டது. டியப்பில் ஒரு படையெடுப்பின் பலன் கிடைத்து

விட்டது. ஜெர்மன் ஒற்றுமை தளர்ந்திருக்கிறது. ஐரோப்பாவில் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் நேசநாடுகளின் எத்தனங்களில் நம்பிக்கை அதிகமாக இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**பிரஸீல்.** கடற்கரைக்கருகாமையில் பிரஸீல் கப்பல்களை அச்சுநாடுகள் தாக்கியதால் ஜெர்மனி பேரிலும், இதாலிபேரிலும் பிரஸீல் சண்டை துவக்கியிருக்கிறது. ஜப்பான் இதில் சேர்க்கப்படாமல்போனாலும் அச்சுநாட்டு மூவரசு ஒப்பந்தப்படி பிரஸீல் பேரில் ஜப்பான் ஒருக்கால் சண்டையைத் துவக்கலாம்.

இதாலத்தீன் அமெரிக்க நாடுகளும் ஒத்துழைக்க சம்மதித்திருக்கின்றன. உருகுவே பிரஸீலுடன் பூர்ண ஒற்றுமையுடனிருக்கிறது. ஷில்லி விசுவாஸத்துடனும் பூர்ணமாயும், நிலைமைக்கேற்றவாறும் ஒத்துழைக்கும். பிரஸீலைத் தாக்கியது எல்லா அமெரிக்க குடியரசு நாடுகளையும் தாக்கிய மாதிரி பெரு அபிப்பிராயப்பட்டு இருக்கிறது. அமெரிக்க பரஸ்பர பாதுகாப்பு போர்டில் ஒரு ஏகோக ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பிரிடன், அமெரிக்க–ஐக்கிய நாடுகள் போன்ற நேசநாடுகளின் ஒத்துழைப்பும், சிநேகமும் உறுதியாக ஏற்படும்.

பிரிடிஷ் அரசாங்கமும் ஸ்வதந்திரத்தைப் பாதுகாக்கும் கட்சியுடன் பிரஸீல் சேர்ந்ததைக் குறித்து பூர்ண திருப்தியைத் தெரிவித்து வெற்றி கிடைக்கும் நாள் நெருங்கிவிட்டதாக அறிவித்தது.

நேசநாடுகளின் கட்சியில் பிரஸீல் சேர்ந்ததை கனடா பிரதம மந்திரி வரவேற்று ஒரு செய்தியை அனுப்பியிருக்கிறார். ‘பிரஸீலின் நடவடிக்கை இதர வடக்கு, மத்திய அமெரிக்க நாடுகளுக்கு ஒரு உத்ஸாகத்தை அளிக்கும். இந்நாடுகள் ஸ்வதந்திரம், கிருஸ்தவ நாகரீகம் இவைகளுக்கேற்பட்டுள்ள ஆபத்தைப் போக்கடிக்க ஏற்கனவே ஆயுதமேந்தியிருக்கின்றன.’

ஜனாதிபதி ரூஸ்வெல்ட், ஜனாதிபதி வார்காஸுக்கனுப்பிய செய்தியில் ‘ஸ்வதந்திரச் சைனியங்களுக்குச் சக்தியும், தைரியமும், சாமான்களும் அதிகரித்திருக்கின்றன. சகோதரர்களைப்போல் நமது சிப்பாய்களும், மாலுமிகளும் ஒன்றுபட்டு சிநேகம், நம்பிக்கை, ஒத்துழைப்பு முதலியவைகளை ஸ்தாபிப்பார்கள். ஆக்கிரமணத்தை அடக்கி ஸ்வதந்திரமும், கொடுமை பலத்தை அடக்கி கிருஸ்தவ மதமும் நிச்சயம் வெற்றிபெறுமென்று உமது அரசாங்கத்தின் நடவடிக்கையினால் தெரியவருகிறது.’

இவ்வறிக்கையின் மற்றொரு பாகத்தில் பிரஸீல் அதன் அமைப்பு, அதன் மக்கள், அதன் முக்கியத்துவம் முதலியவைகளைப்பற்றிய விவரங்களை நமது வாசகர்கள் காணலாம்.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்காவில் யுத்த சாமான்களின் உற்பத்தி.** அமெரிக்காவில் யுத்த சாமான்களின் உற்பத்தி அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்று சில சமயங்களில் குறைகூறப்படலாம். அதனால் நாம் ஏமாற்றம் அடையாத போதிலும், நமக்கு மனக்கலக்கமாவது ஏற்படலாம். உண்மையில் இன்னும் கடுமையாக உற்பத்தி செய்வதைத் தூண்டுவதற்கே அமெரிக்கர்கள் இம்மாதிரி செய்வார்கள். சமீபத்தில் அமெரிக்க உற்பத்தி இலாகா தலைவரான மிஸ்டர் டோனால்டு நெல்ஸன் சொன்னதாவது:– ‘இனிமேல் கடுமையாக இருக்கப்போகிறேன். இது முதற்கொண்டே நான் இட்ட கட்டளையை மீறி நடப்போரைச் சிரைச்சேதம் செய்துவிடுவேன்’. உண்மையில் தொழிலாளிகளின் வேலை நிறுத்தங்களும், சாமான்களின் தட்டும் இருந்தபோதே ஜூலை மாதத்தின் உற்பத்தி முன்னிருந்ததைவிட அதிகரித்திருக்கிறது. ஆனால் பத்திரிகைகள் தான் உற்பத்திக் குறைவு அதிகம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறின. ஜூலை மாதத்தில் மட்டில் விமானங்கள் 11 சதவிகிதமும்; பீரங்கிகள் 26 சதவிகிதமும், யுத்தக்கப்பல்கள் 22 சதவிகிதமும், வியாபாரக் கப்பல்கள் 6 சதவிகிதமும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டன.



சாமான்களின் குறைவைப்பற்றி டோனால்டு நெல்ஸன் (ஆகஸ்டு 22) போர்டில் கூறும்போது:—‘இப்பிரச்னை லகுவாக்கப்படும். ஏனென்றால் அடிப்படையான சாமான்களின் உற்பத்தி அதிகமாக்கப்படும். எஃகு, ரப்பர், அலுமினியம், மங்கனீஸியம், தாமிரம் போன்ற வஸ்துக்களின் உற்பத்தில் விஸ்தாரமான திட்டங்கள் போடப்பட்டுள்ளன. சாமான்கள் அதிகம் வருவதாலும், ராணுவத் தேவைகளை மட்டில் கவனிப்பதாலும் இக்குறைவு ஈடுபடுத்தப்படும்’.

வேலை நிறுத்தத்தைப்பற்றி ஜனாதிபதி ரூஸ்வெல்ட் (ஆகஸ்டு 22)ல் பத்திரிகைக் கூட்டத்தின் முன் அறிவித்தபோது இப்பிரச்னை அவ்வளவு கடுமை இல்லை என்றார்.

வி வி வி வி வி வி வி

**லவாலின் சிரமம்.** லவால் அரசாங்கத்தில்தான் ‘எப்பொழுதும் அதிகாரம் வகிக்கவும், அவனுடைய போட்டிக்காரனை டோரியாட்டை அதிகாரம் வகிக்கவிடாமல்செய்யவும் முயற்சிக்கிறான். இதனால் லவாலைத் தனக்கு அதிகம் உதவி செய்யவேண்டி, தனக்குத் தேவையான பொருள்களை லவால் ஸப்ளை செய்யத் தவறிவிட்டால், அவனுக்கு விரோதியான டோரியாட் (Doriot)டை அதிகாரம் வகிக்கும்படி செய்துவிடுவதாயும், லவாலுடன் போட்டி செய்கிறவன் தான் தன்னுடைய பூரணமனதுடன் ஒத்துழைப்பவன் என்றும் ஹிட்லர் பயமுறுத்தியிருக்கிறான்.

ஜாகியூஸ் டோரியாட் ஆரம்பத்தில் பொதுவுடமைக் கட்சியைச் சார்ந்தவன். முதன் முதலாக மூன்றுவது பிரெஞ்சு மந்திரி சபையில் மெம்பராக இருந்தான். பிரான்ஸை ஜெர்மனி கைப்பற்றியவுடன் பாஸிஸ்டு கட்சியில் சேர்ந்து விட்டான். அவனை நாஸிகள் தங்கள் கட்சியில் சேர்ந்து ஒத்துழைப்பதற்கு அவனுக்கு 8,00,00,000 பிராங்குகள் லஞ்சம் கொடுத்ததாகவும், ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸிலும், வட ஆபிரிக்காவிலும் நாஸிகளின் ஆட்சியைப் பற்றி பிரசாரம் செய்யும்படிக்கும், ருஷ்யாவில் யுத்தம் செய்வதற்கு பிரெஞ்சுக்காரர்களை ஜெர்மனியின் பக்கத்தில் சேர்க்கும் படிக்கும் அவன் தூண்டப்பட்டதாக ஏப்ரல் மாதம் 18-ம் தேதி வாஷிங்டனிலிருந்து வெளியிட்ட அறிக்கைகளில் கண்டிருந்தது.

டோரியட்டின் கட்சி பிரான்ஸில் செல்வாக்குக்கொள்ள நினைக்கிறது. பாஸிஸ்ட் கட்சியையும், ஜெர்மானியரையும் எதிர்த்துப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தது. ஹிட்லரிடமிருந்து பயந்துகொண்டு பிடேன் இதை அனுமதித்திருக்கிறான். பிரெஞ்சு மக்களுக்கு இக்கட்சியின் நடவடிக்கைகள் பிடிக்கவில்லை. இரிடு பாயின் என்ற பத்திரிகை ஆசிரியரான ஆல்பர்டு கிளமண்டைக் கொன்றதிலிருந்தே இதை அறிந்து கொள்ளலாம். தங்களுடைய பந்தோபஸ்துக்காக ஆயுதம் தாங்கிச் செல்லவேண்டுமென்ற இக்கட்சியின் கோரிக்கையை லவால் நிராகரித்துவிட்டார்.

வார்மஸ் எட்ஸி என்ற மற்றொரு கட்சியையும் கண்டு லவால் பயப்படுகிறான். இக்கட்சி பிரான்ஸை ஒரு விவசாய நாடாகச் செய்யமுயலுகிறது. வாயரீன்ஸ் கொடிகளையும் காய்கறிகளையும், பழங்களையும் பயிர்செய்து ஜெர்மன் அதிகாரிகளுக்கு அனுப்ப விரும்புகிறது. புதிய ரஸ்தாக்களையும், ரயில் மார்க்கங்களையும் போட்டு ஜெர்மனியின் புதிய ஐரோப்பாவை அமைக்க முயலுகிறது. இதற்கு பாஷின் என்பவன் பிரசாரம் நடத்துகிறான். ஏப்ரல் மாதத்தில் பிரெஞ்சு மந்திரி சபையைச் சீர்திருத்திய போது லவால் இவனை விட்டுவிட்டான்.

கூவார்ட் என்ற கட்சியையும் லவால் கவனிக்கவேண்டியிருக்கிறது. இக்கட்சி ருஷ்யப் பொதுவுடமைக் கட்சியையும், நாஸிக்குச் சாதகமான கட்சியையும் அடக்க முயலுகிறது. 1940ஆம் டிஸம்பரில் லவாலையும் கைதிசெய்தது. இம்மாதிரி பிரெஞ்சு மன்னர் ஆட்சியில் அனுதாபம் பெற்ற கட்சியும், பிடேனின் யுவக்கட்சியும், பிடேனின் தொழில் சாஸனமும், தேசியப் பரட்சியும் லவாலுக்கு பாதகமானவை. பிடேன் பலவழிகளில் பிரசித்திபெற்றவனாகையால் பிடேனுக்குச் சாதகமானவர்கள் யாவரையும் அடக்க லவால் புதிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

**இந்தியாவில் உணவு நிலை.** மத்திய உணவு உபதேசச் சங்கத்தைத் திறந்து வைக்கும் போது ஸர்ஜோகேந்திர ஸிங் (வைஸிராய் நிர்வாக சபை அங்கத்தினர்) அறிவித்த விஷயங்கள் திருப்தியை அளிக்கின்றன. அவர் இந்தியாவின் உணவு நிலை திருப்திகரமாக இருக்கிறதென்று சொன்னார். பக்குவப்படுத்தப்படாத பஞ்சுக்கு அரசாங்கத்தினர் அதிக இறக்குமதி வரியை விதித்து நான்கு மாகாணங்களில் அப்பணத்தைக்கொண்டு உணவுப் பயிர்களை உண்டுபண்ணுவதெனத் தீர்மானித்திருக்கின்றனர். பஞ்சு, சணல் நிலங்களாக இருந்த 50 லக்ஷம் ஏக்கராக்களில் உணவுப்பயிர்கள் உற்பத்தி செய்யப்படும். இவ் வருஷம் 22,00,000 டன் அரிசித்தட்டு ஏற்படுமென்றும் அதை ஈடுசெய்ய, உணவுப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்யும் இயக்கத்தின் பயனாக 8,50,000 டன் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிகிறது. அடுத்த வருஷத்தில் புது நெல் பிப்ரவரி மாதத்தில்தான் கிடைக்கும். 90 லக்ஷம் டன் அரிசி அப்போது ஈடு செய்யப்படும் 'ஆகவே அரிசியின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை யென்று' சொன்னார்.

மேலும் அவர் சொன்னதாவது:—சில இடங்களில் வியாபாரம் தடைபடுவதாலோ, போக்குவரத்து சாதனங்கள் குறைவதாலோ அல்லது பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகம் கவனிக்கப்படுவதாலோ எந்த இடத்திலும் இத்தட்டு ஏற்படலாம்!

போக்குவரத்து பிரச்னையை இந்த போர்டு விசேஷமாகக் கவனிக்கும். அதிகமான மாட்டுவண்டிகளையும், நதிப்படகுகளையும் உபயோகிக்க ஏற்பாடு செய்யப்படும்.

---

## நான்காம்படை.

(ஸ்டீபன் கிங்-ஹால் எழுதியது).

இக்காலத்திய சண்டைகளை ஜயிக்கவேண்டுமானால் கடல், தரை, விமானம் முதலிய மூன்று பகுதிகளையும் ஒன்றாக அமைத்துக்கொள்ளவேண்டியதின் அவசியம் யாவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் இம்மூன்று இலாகா அதிகாரிகள் மட்டில் ஒன்று சேர்ந்து நமது படைகளைக்கொண்டு எதிரியைத் தாக்கமுடியுமா என்ற பிரச்னை சந்தேகத்திற்கிடமானது ஏனென்றால் இம்மூன்று அதிகாரிகளும் சேர்ந்து யுத்தத்தில் சைனியங்களைப்பற்றிய தந்திரங்களைத்தான் தீர்மானிக்க முடியும். இவர்கள் அவ்வப்போது ஏற்படும் சண்டை நிலைமைகளுக்கு ஏற்றபடி சைனியங்களின் உபயோகத்தை எடுத்துரைக்கலாம். யுத்த தந்திரமென்பது கேவலம் சண்டைகளை மாத்திரம் பற்றியதல்ல. எதிரிகளின் மனதையும் தளரச் செய்யக்கூடியதாகவும் இருக்கவேண்டும் ஆகவே இம்மூன்று பகுதித் தலைவர்களுடன் நான்காவது தோழனாக பிரசார வேலையில் ஈடுபட்ட தலைவர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இவர்கள் யுத்தரங்கத்தில் ஈடுபட்டு சண்டையைச் செய்கிறவர்களல்ல. மற்ற மூவர்களுக்குத்தான் அந்த உரிமையும் சௌகரியங்களும் உண்டு ஆனால் இதர மூவர்களடங்கிய மந்திரி சபையின் பிரதான்யம் குறைந்து இனி பிரசார இலாகா அரசாங்கத்தினருக்குத்தான் ஸர்வ அதிகாரமும் ஏற்படும்.

இந்த அம்சத்தில் சைனியத்தில் சாதாரண கார்போரல் ஸ்தானத்தை வகித்த ஹிட்லர் ஆழ்ந்த தீர்க்கதிருஷ்டியைக் காண்பித்திருக்கிறான். பிரான்ஸின் வீழ்ச்சி எதிரி படையெடுப்பால் மட்டில ஏற்பட்டதல்ல. ஆனால் கடுமையானபடி மானஸிகமான முற்றுகையைச்செய்து ஜனங்களின் மனதைத் தளரவைத்து அதன் பிறகு யந்திரப்படைகள் உட்புகுந்ததால்தான் சுலபமாக விழுந்துவிட்டது. இவ்விஷயம் சரித்திரத்தில் குறிப்பிடப்படும். இவ்வித மனத்தளர்ச்சி பிரசார மூலம் நடத்தப்படுகிறது. இதில் ஜெர்மனியில் கோய்பெல்ஸ் ஈடுபட்டிருக்கிறான். இப்பிரசாரம் சத்துருக்களின் மனதில் புகுந்து சண்டை செய்யும் ஊக்கத்தைக் குறைத்துவிடுகிறது. சண்டை துவக்கப்படுமுன்னும், சண்டை நடந்துகொண்டிருக்கும்போதும், பிற்பட்டும் இதனால் சில மாறுதல்கள் ஏற்பட்டுவிடும.



இவ்வித பிரசார யுத்தமானது இரண்டு வகைப்படும். யுத்தம் நடக்கும போது தற்காலத்திற்குறிய தந்திரத்தைக் கையாளுவதும் வருங்காலத்திற்குறிய படி பிரசாரம் செய்வதும். இதில் அபிஸீனிய யுத்தம் நடந்தபோது "முன்னணி" அல்லது சைனியங்களின் அமைப்பைப்பற்றி அதிக விஷயங்கள் பிரசுரிக்கப்படவில்லை. அதன் அனுபவத்தைப் பார்த்தால் சைனியங்களைக்கொண்டு எதிரியைத் தாக்குவதற்குமுன் தனது நோக்கங்களையும் எதிரிக்குத் தெரியப்படுத்த வேண்டியது அவசியமெனக் கண்டுகொள்ளப்பட்டது. உதாரணமாக பர்மா யுத்தத்தில் ஜப்பானியர்கள் கேவலம் சைனிய தந்தரத்தை மட்டில் உபயோகிக்கவில்லை. மேலும் இந்த விஷயமாக சீனர்கள் நடந்துகொள்ளும் விதத்தையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். நம்பிக்கையுள்ள இடத்திலிருந்து கிடைத்த தகவலைப் பார்த்தால் சீனர்கள் சிலரைப் பொறுக்கியெடுத்து பொதுவுடமைக் கொள்கையைக் கற்றுக்கொடுத்து ஜப்பானியச் சைனியத்தினுள் புகுத்துவிடுகின்றனர். இதுவரை பிரிடிஷாரால் ஆயிரக்கணக்கில் கைதி செய்யப்பட்டுள்ள இதாலியர்களுக்குள் இதாலிய பாஸிஸ்டு கட்சியை வெறுக்கிறவர்களுமிருக்கிறார்கள். இவர்களை பிரிடிஷ் அரசாங்கம் சரியானபடி உபயோகித்துக் கொள்ளவில்லை. மேலும் எதிரி சைனியத்தை விட்டு வரும்படி ருஷ்யர்கள் செய்யும் பிரசார முறையை பிரிடிஷ் யுத்த இலாகாக்காரர்கள் பின்பற்றவில்லையென்றும் தெரிகிறது.

### பிரசார யுத்தம்.

வெகுநாள் கழித்துப் பலிக்கக்கூடிய தந்திரத்தினால்தான் பிரசார யுத்தம் பயனடைந்து வெற்றியை அளிக்கும். ஆனால் யுத்தத்தை நடத்துவோருக்கு கேவலம் சண்டையில் சைனியங்களை ஒன்றுக்கொன்று மோதவிடுவதைக் காட்டிலும் உயர்ந்த அம்சம் மற்றொன்று இருக்கிறதென்று தெரியவேண்டும். இவ்வித பிரசாரத்தில் நமது தலைவர்கள் ஈடுபடாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்களிருக்கின்றன. ஒன்று என்னவென்றால் எதிரிகளைக் கொல்லுவதால் தான் நன்மையேற்படுமென்ற அபிப்பிராயம் தலைவர்களின் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. உதாரணமாக எல்லா ஜெர்மானியரும் இறந்துபோவதுதான் மேல் என்று நினைக்கப்படுகிறது. இது பிசகான அபிப்பிராயமாகும். இதற்குப் பதிலாக "ஜெர்மானியர் உயிருடன் இருந்து தங்களுடைய அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டு மடியாமல் இருக்கவேண்டுமென்று நினைக்கும்படி செய்ய வேண்டும்".

இரண்டாவது காரணமென்னவென்றால் பிரசாரத்தை நடத்துவதற்கு தகுந்த அபிப்பிராயங்கள் இருக்கவேண்டும். உதாரணமாக சமாதானத்தைப்பற்றிய அபிப்பிராயங்களை வெளியிட்டால் தேசீய ஒற்றுமை குலையும்போல் இருந்தால் அந்த ஆபத்தை ஒத்துக்கொள்ளவேண்டியதுதான். ஏனென்றால் தேசீய ஒற்றுமையை மாத்திரம் ஆதாரமாகக்கொண்டு நாம் வெற்றியை அடைந்துவிட முடியாது. யுத்தத்தில் வெற்றி பெற்றால்தான் நாம் எஞ்சியிருக்கமுடியுமென்று எடுத்துச்சொன்னால் தேசீய ஒற்றுமையை ஸ்தாபித்துவிடலாம். ஆனால் நாம் இவ்வுலகில் எஞ்சியிருக்க வேண்டுமென்ற ஐஹிகமான நோக்கத்தைக் காட்டிலும் பரத்தைச் சாதிக்கக்கூடிய நோக்கத்தையும் நாம் கைக்கொள்ளவேண்டும். இதாலி, ஜெர்மனி இந்த நாடுகளில் உள்ள தலைவர்களுக்கு எதிராக உள்நாட்டுக் கலகங்கள் ஏற்படவேண்டுமென்று நாம் விரும்புவோமாகில் இதாலிக்கு யுத்தம் முடிந்ததும் நாம் எவ்வித நன்மையைச்செய்ய முடியுமென்பதை நாம் முன்னாடியே சிந்தித்து எடுத்துரைக்க வேண்டும்.

### மானஸிக மாறுதலும், யுத்தமும்.

இவ்வித சுருக்கமான வியாசத்தில் இப்பெரும் விஷயத்தைப்பற்றி பூர்ணமாக எழுதுவது சாத்தியமில்லை. இதுவரையில் இருந்த 'கிரேட் பிரிடனில் உள்நாட்டு நிலைமையைப்பற்றி கவனிப்போமாகில் தொழிலாளிகளுக்குப் பணம் கொடுத்து வேலை வாங்குவதைவிட அவர்களின் மனதில் ஒரு மாறுதலைச் செய்து அவர்களாக முன்வந்து யுத்த சாமான்களின் உற்பத்தியில் ஈடுபடுவது எவ்வளவு சாதகமான அம்சம் என்று பாருங்கள்.

ஆகவே நாம் இரண்டு விஷயங்களை உடனே செய்யவேண்டும். முதலில் இத்துறையில் நேசதேசங்களின் முயற்சிகளை ஒன்றுபடுத்த ஒரு கமிட்டியை

ஏற்படுத்தவேண்டும். இரண்டாவதாக இவ்வித இலாகாவிற்கு ஒரு தலைமை அதிகாரியையும் நியமிக்கவேண்டும்.

இந்த யுத்தத்தில் நமது காரணங்கள் தர்மமானவை. நமது சத்துருக்கள் அவர்களுடைய காரணங்களைப்பற்றி இவ்விதம் எடுத்துக்கூறமுடியாது. நேசதேசங்கள்தான் அதைப்பற்றி கௌரவமாக நினைக்கமுடியும். நமது தர்ம மார்க்கத்தைப் பற்றி எடுத்துக்கூறி சத்துருக்களால் அற்பக் காரணங்களுக்காக வசப்படுத்தியுள்ள நாட்டிலுள்ளோரின் மனதில் ஒரு மாறுதலை ஏற்படுத்தலாம். இவ்வித யுத்தத்தில் மதச் சண்டைகளில் தீவிரமாக ஈடுபடுவதற்கான உணர்ச்சியை உண்டாக்கவேண்டும். இவை இரண்டும்தான் (Political warfare), இந்த யுத்தத்தில் முக்கியமானவை. இத்துடன் ராணுவ ஏற்பாடுகளும் சேர்ந்தால் யுத்தத்தை பூர்ணமாக நடத்தியதாகும்.

# ஜப்பானின் லக்ஷியம்.

## முழுபலத்துடன் சீனாவையும், ஸைபீரியாவையும் தாக்குமா?

('டெய்லி மெயில்' பத்திரிகையில் மேஜர் ஜெனரல் ஸர் டிக்பி ஷட்டில்ஒர்த் என்பரால் லண்டனிலிருந்து விசேஷ தந்தி மூலம்.)

ஜப்பானுடைய லக்ஷியம் என்ன? தற்கால யுத்த நிலைமையில் ஏற்பட்ட சம்பவங்களினாலாவது, அல்லது அவசியத்தை முன்னிட்டாவது ஜப்பான் இந்த விதமாக நடந்துகொள்ளவேண்டியிருந்தது என்று கருதக்கூடாது. வெகு காலத்திற்கு முன்னதாகவே அது தயாரித்திருந்த திட்டங்கள் ரகசியமான இடங்களில் வைக்கப்பட்டிருந்தது.

தந்திரமான சில காரணங்களை முன்னிட்டும், அதற்குத் தேவையாக இருந்த உணவுப் பொருள்களையும் அடையவேண்டி ஜப்பான் தெற்கு நோக்கித் தாக்கியது. ஆனால் அது ஆதியில் போட்டிருந்த திட்டப்படி சைனாவை ஆக்கிரமித்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணியிருந்ததை ஜப்பான் ஒருபொழுதும் புறக்கணித்துவிடவில்லை. ஏனென்றால் ஜப்பான் ஆசியாவில் ஏற்படுத்தக் கோரியிருக்கும் புதிய உலக அமைப்புக்கு சீனா ஜப்பான் வசமாகவேண்டியது அவசியம். மேலும் ஜப்பானின் தற்காப்புக்கும், பிற்பட்டு ருஷ்யாவைத் தாக்குவதற்கும் சைனாவை ஜப்பான் ஆக்கிரமித்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

### காற்று இல்லாதபோதும் தூற்றிக்கொள்ளுகின்றனர்.

இப்பொழுது ஜப்பான் சுங்கிங்கை நோக்கிச் செல்லும் எல்லாப் பாதைகளையும் தன் கைவசப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தியாவுக்கும், சைனாவிற்கும் நூதனமாக இப்பொழுது போட்டுவரும் புதிய பாதைகளில் நாலு மாதங்களுக்கு சீதோஷ்ண நிலையினால் ரோடு வேலை செய்யமுடியாமல் காலதாமதம் ஆகும். அது வரையிலும் ஆகாய மார்க்கமாகத்தான் சைனாவுக்கு நம்மால் ஸப்ளை செய்யக்கூடும். ஆனால் ஆகாய மார்க்கமாகக்கொண்டு செல்லக்கூடும் ஸப்ளைகள் சைனாவிற்கு முற்றிலும் போதாது. இந்த சீதோஷ்ண நிலைமையை சாதகமாகக்கொண்டு ஜப்பான் கடல் மார்க்கமாக தன் யுத்த ஸப்ளைகளைக் கொண்டு பர்மாவில் சேகரித்து வைத்துவிடக்கூடும். ஆகையால் பர்மாவில் தங்கள் நிலைமையை பலப்படுத்திக்கொண்டிருக்கும் பொழுதே ஜப்பானியர் சியாங்-கை-ஷேக்கின் படைகளின் பேரில் தாக்கி, சீனர்கள் துண்டிக்கப்பட்டிருக்கும் காலத்திலேயே அழித்துவிடப் பிரயத்தனப்படலாம்.

இந்த திட்டத்தில் அவர்கள் வெற்றியடைந்தால் அவர்களுக்கு இன்னும் அநேக சாதகங்கள் ஏற்படலாம். சைனாவிற்கும் அதன் நேசதேசத்தார்களுக்கும் எல்லா விமானதளங்களையும் உபயோகப்படுத்த முடியாமல் தடுக்கப்படும். சுங்கிங்கை அவர்கள் கைப்பற்றிக்கொண்டால் பர்மா போர்முனைக்கு சென்குத்தான தரைப்பாதை அவர்களுக்கு ஏற்பட்டுவிடும். ஐந்து வருஷங்களாக சைனா வீரத்தன்மையுடன் எதிர்த்துவருவதனால் ஜப்பானியருக்கு ஏற்பட்டிருக்கும் அவமானமும் மறைந்துவிடலாம்.



### ஒரே சமயத்தில் ஸைபீரியாவையும் தாக்குமா?

சைனாவைத் தாக்கும்பொழுதே 30 வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாக விஸ்தாரமாகப் போடப்பட்டிருக்கும் திட்டங்களை அனுசரித்து கிழக்கு ஸைபீரியாவின் பேரில் படையெடுக்க ஜப்பான் தயாரித்துக்கொண்டிருக்கிறது. சீனக் கடல் ஆதிக்கத்திலிருந்து அமெரிக்கர்களையும், டச்சுக்காரர்களையும், நம்மையும் துரத்தியடிப்பதற்கு எப்படி திட்டம்போட்டிருந்ததோ, அப்படியே ஜப்பான் ஆதிக்கமபெற்ற கடலிலிருந்து ருஷ்யர்களையும துரத்தியடிக்க திட்டம் போட்டிருக்கிறது. 1912-ம் வரு வாக்கில் ஜப்பான் நம்முடன் நேசமாக இருந்த பொழுது ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் மற்றொரு யுத்தம் கட்டாயம் நேரிடுமென்று ஜப்பான் பொது ஸ்தாபன அதிகாரிகள் எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ருஷ்யர்களின் பலம் எத்தன்மையுள்ளதென்பதையும், அவர்களைத் தாக்குவதில் என்ன கஷ்டங்கள் ஜப்பானுக்கு நேரிடுமென்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆனால் மூன்று பிரிவுகளில் அந்தத் தாக்குதலை நடத்தக்கூடுமானால் கிழக்கு ஸைபீரியாவை ஆக்கிரமித்துவிடலாமென்று சொல்லி வந்தார்கள்.

முதல் பிரிவானது மஞ்சூரியாவை ஆக்கிரமித்துக்கொண்டு சைனியத்தை ஏற்றிச் செல்வதற்காக நெடுகிலும் இருப்புப் பாதைகளையும், ரஸ்தாக்களையும் ஏற்படுத்துவது. இரண்டாவது பிரிவானது மங்கோலியாவின் உட்புறத்தில் ஆக்கிரமித்துக்கொண்டு ரஸ்தாக்களையும், பாதைகளையும் நூதனமாகப் போடுவதும், ஏற்கனவேயுள்ளவைகளை அபிவிருத்தியடையச் செய்வது. இந்த இரண்டு காரியமும் பூர்த்தியடைந்துவிட்டது. 30 வருஷ காலமாக அவர்கள் போட்டிருந்த திட்டப்படி அவர்கள் கொண்டிருந்த கனவு நிஜமாகும்போல் இருக்கிறது. ருஷ்யாவை ஜப்பான் ஆதிக்கத்திலிருக்கும் கடலிலிருந்து துரத்தியடித்து பெய்க்கால (Baikal) ஏரிக்கு மேற்கே ருஷ்யர்கள் செல்லவேண்டுமென்று எண்ணுகிறார்கள். இது பேராசையான திட்டமதான். ஆனாலும் யுனைடெட் ஸ்டேட்ஸையும், டச்சு சாம்ராஜ்யத்தையும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையும் ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் சேர்த்துத் தாக்குவதற்கு ஜப்பான் போட்டிருந்த திட்டத்தைக் காட்டிலும் இது குறைவானதுதான்.

### ஜப்பானின் சூழ்ச்சி.

கிழக்கு ஸைபீரியாவில் ஜப்பானியர் முன்னேறினால், அவர்கள் விசாலமான போர்முனையிலிருந்து தாக்குவார்கள். அவர்களின் பிரதானமான பலன் மேற்கேயிருக்கும். அதிலிருந்து ஒரு பட்டப்பகுதி இன்னும் அதிக தூரம் மேற்கே போய், வெளிப்புறம் மங்கோலியாவின் தலைநகரான யூர்கா (Urga)வைக் கைப்பற்றிக்கொண்டு, வடக்கேயிருந்து தாக்கிவரும். ஸைபீரியா இருப்புப்பாதை கைப்பற்றப்பட்டால் வ்ளாடிவாஸ்டாக் கோட்டை துண்டிக்கப்படும்.

இத்தகைய அபாயத்தை சமாளிக்க ருஷ்யர்கள் தயாராகயிருக்கிறார்கள். அவர்கள் மூன்று வகுப்புகளாகப் பிரிந்து ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஸைபீரியாவிலுள்ள அவர்கள் சைனியங்கள் தன்னைத்தானே சமாளித்துக் கொள்ளக்கூடியவையாக இருக்கின்றன. போதுமான விமான பலம், முஸ்தீப்பும் அவைகளுக்கிருக்கின்றன ஜெர்மன் தாக்குதலினால் ருஷ்ய இருப்புப்படைகள் பூராவும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதனால் ஜப்பானுக்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்படலாம். ஜெர்மன் தன்னுடைய முழுப்பிரயத்தனத்தையும் ஈடுசெய்யும் சமயத்தில் ஜப்பானும் தாக்க ஏற்பாடு செய்யலாம். ஆனால் ஜப்பான் சீதோஷ்ண நிலைமையைக் கவனிக்கவேண்டும்.

### சீதோஷ்ண நிலைமை.

ஜப்பானைச் சுற்றியிருக்கும் கடல் உறையும் காலத்தைப் பொருத்து ஸைபீரிய யுத்தத்தில் ஜப்பானுக்கு ஏற்படும் லாபநஷ்டங்கள் இருக்கின்றன. இதை உத்தேசித்து முன்னாடியே வ்ளாடிவாஸ்டாக்கைக் கைப்பற்றவும், மாரிக்காலம் வருவதற்குமுன், ருஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் தளங்களையும் கைப்பற்றுவதற்காக ஜப்பான் [illegible] செய்யும்.

# வடசைனுவில் சீனத் துருப்புகள் மிகவும் பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள்,

(வாஷிங்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம்).

"வட சைனுவில் சீனத் துருப்புகள் சுமார் நாலு வருஷங்களுக்கு முன்பே கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் இன்னும் அங்கு பிராதான்யம் வகிக்கிறார்கள்" என்று சமீபத்தில் வெளிவந்த 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் ஸெல்டன் மினிபீ (Menefee) எழுதியிருக்கிறார். வாஷிங்டனுக்கு ஜப்பானிலிருந்து வரும் செய்தி இதை ஊர்ஜிதப்படுத்துகிறது.

ஜப்பானியர் சொல்லிவரும் சீன சம்பவ தினத்தின் முந்திய நாளில் வடக்குச் சைனுவில் சீனத்துருப்புகள் ஜப்பானியச் சைனியம் நாட்டை ஒழுங்குபடுத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுது தடுத்துவந்தன. அவ்விதம் அங்கிருந்த துருப்புகளின் எண்ணிக்கை 2,50,000 முதல் 5,00,000 வரையிலிருக்கும்.

வட சைனுவில் எங்கும் கிராமங்களிலும், நகரங்களிலும் சீனத் துருப்புகள் வியாபித்துக்கொண்டு ஜப்பானியருக்கு எதிராக இடையூறுகள் செய்துவருகிறார்கள், என்று ஜப்பானிலிருந்து வரும் செய்தி விவரமாகத் தெரிவிக்கிறது. சுங்கிங்கில் ஜப்பானியருக்கு விரோதமாக நடக்கும் பிரசாரம் சீனர்களுக்கு ஊக்கத்தை விளைவிக்கிறது.

அதனால் எல்லாச் சீனத் துருப்புகளையும் கைதி செய்யப்படுமென்று ஜப்பானியர் சொல்லி அவர்களை பயமுறுத்தி வருகிறார்கள. மேலும் ஜப்பானியப் போலீஸார் சீன நகரங்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளுகிறார்கள். நம்பிக்கையுள்ள சீனர்கள் மட்டில் சிறையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். எப்படியிருந்தாலும், ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்கும் இடையே சுரங்க வழிஏற்படுத்தி அதன் மூலம் சீனத் துருப்புகள் தப்பித்துக்கொள்ள முடியும். இம்மாதிரி கிராமங்களிலுள்ள ஜனங்கள் பூராவும் சுரங்க வழியாக அநேகமாக எல்லா சமயங்களிலும் வெளியேறுகிறார்கள்.

ஆனால் அடிக்கடி அப்படி தப்பிப் போகும் சீனர்கள், ஆண், பெண், குழந்தைகள் உள்பட ஒரு நகரத்தில் கைதி செய்யப்படுகிறார்கள். பிற்பட்டு விடுதலையடைந்த சீனர்கள் சுரங்க வழிகளை அடைப்பதற்கும், காவல் புரிவதற்கும், தப்பிப் போன சீனத் துருப்புகள் மீண்டும் வராமலிருக்கும்படி கிராமத்தைச் சுற்றி அகிழ்கள் வெட்டுவதற்கும் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஒரு சமயம் சீனர்கள் காவல் புரிவதில் திரும்பி வரும் சீனத் துருப்புகளைக் காட்டிக்கொடுக்காமல் இருப்பதைத் தடுப்பதற்கு அவர்கள் தூரதேசங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்குள்ள ஜப்பானியருக்கு விரோதமாக நடத்தும் சீனத் துருப்புகளுக்கு அங்கு அனுப்பப்படும் சீனக் காவலாளிகள் பழக்கமிருக்காது.

வட சைனுவிலிருக்கும் சீன கிராமங்களை "சமாதானம் நிறைந்த பிரதேசங்கள் என்றும், சமாதானமும், பலாத்காரமும் நிறைந்த பிரதேசங்கள் என்றும், பலாத்காரத்தின் பேரில் சமாதானமேற்படும் இடங்கள் என்றும் ஜப்பானியர் பிரித்திருக்கிறார்கள். அங்கு ஜப்பானியர் தங்கள் ஆட்சியை ராணுவ உதவியைக் கொண்டு ஸ்தாபித்திருக்கிறார்கள், என்று ஜப்பானிலிருந்து வந்த அறிக்கை கூறுகிறது.

சீன சைனியப் படைக்கு அடிக்கடி அவக்கேடான தாக்குதல்கள் நேரிடுகிறதென்றும், அவர்களுக்கு வெடிமருந்தும், யுத்த சாதனமும் குறைந்துவருகிறதென்றும் டொமெயிலிருந்து வெளிவரும் அறிக்கை கூறுகிறது.

ஆனால் வட சைனுவில் ஜப்பானியத் துருப்புகளுக்குப் பக்கத்திலிருந்து கொண்டே அநேக சீனப்படைகள் இன்னும் யுத்தம் செய்து வருவதைப்பார்க்க அறிக்கையில் சொல்வது சரியல்லவென்று யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள நமக்குத் தோன்றுவதாக மினி பீ கூறுகிறார்.



# சைனு தோற்றுவிடக்கூடாது.

(H.J. டிம்பர்லே என்பவர் எழுதியது.)

"தூரக்கிழக்கு நெருக்கடி" என்ற பிரக்கியாதி பெற்ற புஸ்தகத்தை எழுதிய அமெரிக்க மாஜி அரசாங்க காரியதரிசி மிஸ்டர் ஹென்றி L. ஸ்டிம்ஸன் அதில் சொல்லுவதாவது:—"ஜப்பான்ஒரு மனித ஆயுளுக்குள்ளாகவே ராணுவ ஆட்சிக்குட்பட்டிருந்த நாடாக இருந்து, இப்பொழுது கைத்தொழில் நிறைந்த நவீன அரசாங்கமாக அபிவிருத்தியடைந்துவிட்டது. அது அமெரிக்க அரசாங்கத்துடன் சிநேகமாக இருந்தது. மிக்கபலம் பொருந்தியதாகவும், அமெரிக்காவுக்குப் பக்கத்திலுள்ள உணர்ச்சி பெற்ற நாடாகவும் இருந்தது. தீர்க்க ஆலோசனையுள்ள புராதன ராஜ நீதி நிபுணர்களின் சகாயத்தினால் மேல்நாட்டு நாகரீகத்தின் முக்கிய குணுதிசயங்களை வெகுசீக்கிரத்தில் அனுபவத்துக்குக் கொண்டு வந்துவிட்டது. அதன் புத்திசாலித்தனம் வாய்ந்த ஜனங்களும், நல்ல உழைப்புள்ள ஜனங்களும் சேர்ந்து விசேஷ கலைகளிலும் உற்பத்திப்பொருள்களிலும், வியாபாரத்திலும், வெகுவாய் முன்னேறியிருக்கிறார்கள். இந்தக் கைத்தொழில் அபிவிருத்தியினால் அவர்களின் ராஜீயக் கொள்கைகளிலும், மற்ற வாழ்க்கையின் தன்மைகளிலும் விசாலமான நோக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஜப்பான் அரசாங்க ஸ்தாபனத்தில் பொதுஜன சபைகளும் உண்டு அதன் ஜனங்களுக்குள்ள உரிமைகள் வரவர அதிகமாகிக்கொண்டு வருகின்றன."

## பொய்யான வெளித் தோற்றம்.

ஜப்பான் அபிவிருத்தியடைந்து வருவதைப்பற்றி அமெரிக்க அரசாங்கம் மட்டில் எண்ணவில்லை. மேல் நாட்டிலுள்ள எல்லா தேசத்தார்களும், அரசாங்கங்களும் அவ்வாறே நினைத்தன. சீனர்களில் அநேகர் கூட இத்தகைய அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள். ஆனால் விஷயங்களை மேன்போக்காகப் பார்த்து அதனால் வந்தமுடிவுதான் இது. தூரக்கிழக்கு ராஜீய விஷயங்களைப்பற்றி பொதுப்படையான அபிப்பிராயம் இந்தத் தவறை முன்னிட்டு உண்டாகியிருக்கிறது. மேலே எடுத்து எழுதிய விஷயங்களடங்கிய பக்கத்திற்குப் பிறகுள்ள பக்கங்களில் மிஸ்டர் ஸ்டிம்ஸன் கூறுவதாவது. "ராணுவ ஆட்சியில் ஏற்பட்ட நன்மை தீமைகள் முற்றிலும், மாறிவிடவில்லை கைத்தொழில் அபிவிருத்தியினால் பொருளாதாரத்திலும் வாழ்க்கையின் பழக்க வழக்கங்களிலும் ஒரு பாகம் தான் மாறுதலடைந்திருக்கிறது. அதோடு மேல் நாட்டாரின் ஜனநாயகக் கொள்கைகளும் சேர்ந்திருக்கிறது. இந்த அரசாக்ஷியில் இந்த இரண்டு கொள்கைகளும் ஒன்றுக்கொன்று சரியாக ஒத்துக்கொள்ளவில்லை. இவ்விரண்டும் பிராதான்யமடைய முயற்சிக்கின்றன.

## ராணுவத்தின் அரசாக்ஷி.

மிஸ்டர் ஸ்டிம்ஸன் சொல்லுகிற நவீன கைத்தொழில் அபிவிருத்தியடைந்த அரசாங்கமென்பதாகவே ஜப்பானின் ராணுவத்தின் அரசாக்ஷியாகவே உண்மையிலிருக்கிறது. ஜப்பான் பொதுமக்கள் விவசாயிகளானாலும் சரி, தொழிற்சாலைகளில் வேலை செய்கிறவர்களானாலும் சரி, அரசாங்கம் நடத்துவதைக் குறித்து இப்பொழுதும் ஒன்றும் சொல்லமுடியாது. ஜப்பானிய தேசசரித்திரத்திலேயே ஜனங்களுக்கு உரிமை என்பது கிடையாது. அதுபோல் தான் இப்பொழுதும் இருந்துவருகிறது. ஜப்பானின் ராணுவங்கள் நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்திவரும் பெருங்குடும்பத்தார்களுடன் சேர்ந்து கொண்டு ஜப்பானை ஆண்டுவருகின்றன.

ஜனங்களுக்கு ஜனநாயக உரிமைகளோ, ஸ்வதந்திரங்களோ கிடையாது. ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு அதிகாரம் கிடையாது. பேச்சுரிமையோ, பிரசுர உரிமையோ இல்லை. சக்ரவர்த்திக்குப் பூரண அதிகாரம் கொடுக்கும் அரசாங்கத்தை மாற்றுவதற்கு நினைத்தாலும்கூட அது குற்றமாகும். இப்பொழுது நடக்கும் யுத்தத்திற்கு எதிராகப் பேச எத்தனிக்கிறவர்கள் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். யுத்தத்திற்கு எதிரான பேச்சு பரப்பியதற்காக 1937-ம் வருஷம் டிஸம்பர் மாத முதல் 1938 பிப்ரவரி மாதம் வரை நூற்றுக்கணக்கான மிதவாதக் கட்சியைச் சேர்ந்த உபாத்தியாயர்கள், எழுத்தாளர்கள், பத்திராதிபர்கள், போதகாசிரியர்கள், தொழிலாளிக் கட்சியைச் சேர்ந்த ஜனப்பிரதிநிதி சபை அங்கத்தினர்கள், இவர்கள் செய்யப்பட்டது இதற்கு அத்தாக்ஷியாகும்.

## அதுவரை.

சமூக வாழ்வில் ஏற்பட்ட அதிருப்திகளை நிவர்த்திக்க ஜப்பான் அரசாங்க வர்க்கத்தினர் ஆக்கிரமிப்பு யுத்தங்களை ஆரம்பித்து நடத்தும் முறையை புராதன மாகக் கையாண்டு வந்திருக்கிறார்கள். சுலபமாக நாடுகளைக் கைப்பற்றுவதில் சுபீக்ஷம் உண்டாகலாம் என்று ஜனங்கள் ஏமாறும் வரை நில ஸ்வான்தார்களான ராணுவ வர்க்கத்தினர் புதிய மாறுதல்கள் ஏற்படாமல் தடுக்கவும், ராஜீய அதிகாரத்தையும், பொருளாதாரத்தையும் தற்போது இருக்கும் ஸ்திதியிலேயே வைப்பது சுலபம். இத்தகைய ஆக்கிரமிப்புக்குப் பெரிய வியாபார முதலாளிகள் ஆதரவு அளிக்கும் வரையில் அதிகார வர்க்கத்தினர்களுக்குள் ஒற்றுமை நிலவும்.

மேற்சொல்லிய இரண்டு கட்சிகளுக்குள் பிளவு வரவேண்டுமானால் ஆக்கிரமிப்புக் கொள்கையினால் பெருத்த நஷ்டமும், ஆபத்தும் தான் ஏற்படுமென்று அவர்கள் உணரவேண்டும். அப்படி ஏற்படுவதற்கு பிரிட்டனும், அமெரிக்காவும், முக்கியமாகச் செய்யவேண்டியது பொருளாதார முற்றுகைதான். அப்படிச் செய்தால் அக்கட்சிகளுக்குள் நிச்சயமாகப் பிளவு ஏற்பட்டு ஜப்பானிய மக்கள் ஸ்வதந்திரமடையவும், யுத்தத்தை நிறுத்தவும் அனுகூலமாகிவிடும்.

## ஜப்பானிய பொதுமக்களின் நிலைமை.

இந்த யுத்தத்தில் ஜப்பானிய பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய லாபம் ஒன்றுமேயில்லை. நஷ்டம் தான் அதிகம். அவர்கள் இறந்தும், காயமடைந்தும் வருகிறார்கள். அவர்கள் குடும்பங்களோ, விலைவாசி அதிகரிப்பதினாலும், அதிக மணி நேரம் வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தினாலும், வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் வரவரக் குறைந்து வருவதினாலும், திண்டாட்டம் அதிகரிக்கிறது. காயமடைந்த வீரர்கள் தனியாக தன்னுடைய பந்துக்களைப் பார்த்துப் பேசமுடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். சீனர்கள் எதிர்ப்பு பலமாக இருப்பதாகவும், யுத்தம் நீண்டகாலம் நடக்குமென்பதாகவும், ஜப்பானியப் பொது மக்கள் தெரிந்து கொள்ளாதபடி செய்திகள் கடுமையாகக் கண்டனம் செய்யப்படுகின்றன. உண்மை தெரியவந்தால் பொதுமக்களின் உணர்ச்சி தளர்ந்துவிடும் என்ற பயம் அரசாங்கத்துக்கும் இருக்கிறது.

## பெரிய வர்த்தகங்கள் லாபத்தை விரும்புகின்றன.

ஜப்பான் அயல்நாடுகளிலிருந்து யுத்தப் பொருள்கள் வாங்காமல் ராணுவக் கட்சியினர் முழுமனதுடன் சிக்கனம் செய்தாலும் கூட சண்டை செய்வது கடினம். நாம் அம்மாதிரி யுத்தப் பொருள்கள் வாங்கமுடியாமல் ஜப்பானுக்குக் கஷ்டம் விளைவித்தாலும் அல்லது ஜப்பான் சாமான்களை வாங்காமல் பகிஷ்காரம் செய்து லாபத்தைக் குறையச் செய்தாலும், பிரிட்டனையும் அமெரிக்காவையும் நம்பியிருக்கும் பெரிய வர்த்தகர்களும், வர்த்தகர்களுக்குப் பண உதவி செய்கிறவர்களும் இந்த யுத்தத்தை நிறுத்த விரும்புவார்கள். ஜப்பானிலிருக்கும் பெரிய வர்த்தகர்கள் அதிக சக்தி வாய்ந்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு லாபம் கிடைக்கும்படி தோன்றும் வரையிலும், வர்த்தகத்திற்கு அபாயம் வாமலிருக்கும் வரையிலும் இந்த யுத்தத்தை அந்தப் பெரிய வர்த்தகர்கள் ஆதரிக்கிறார்கள்.

சைனாவில் என்ன நடந்தது என்பதையும், இன்னும் என்ன நடக்கின்றது என்பதையும் நாம் கவனிக்கவேண்டியது அவசியம். கூட்டுறவினால் தான் க்ஷேமம் என்று கருதுகிறவர்களுக்கும் தன் நாட்டை மட்டில் பாதுகாத்துக்கொண்டால் போதுமென்ற கொள்கையை அனுசரிக்கிறவர்களுக்கும், இந்தப் பிரச்னை முக்கியமானது. சைனாவில் தற்சமயம் நடப்பதும், முக்கியமாக நான்கிங்கிலும் மற்ற இடங்களிலும் இதற்குமுன் சொல்லப்பட்டபடி பெருமை வாய்ந்த ஆண், பெண்கள் அடைந்த அனுபவங்களை நாம் நினைத்துக்கொண்டு தேசத்தார்கள் பரஸ்பரம் நீதியுடன் நடந்து கொள்ளவேண்டுமென்பதற்கு வழிதேடவேண்டும்.

## உலகம் எதிர்பார்ப்பது.

வரப்போக இருக்கும் அநேக பரம்பரைகளுக்கு மனித வர்க்கத்தார் நல்லது எது, கெட்டது எது, என்று தீர்மானிக்கக் கூடிய பாத்தியதையைப் புறக்கணிக்கத் தயாராக இல்லாத வரை சைனாவை ஜப்பானுக்குக் கீழ் படியும்படி விட்டுவிடக்



கூடாது. சைனா இப்பொழுது அடைந்து அனுபவித்துவரும் சொல்லவொண்ணாத கொடுமைகள் மீண்டும் சம்பவிக்கும்படி விட்டுவிட மனித வர்க்கத்தார் விரும்பாத வரைக்கும் சைனாவைத் தோற்றுப்போகும்படி விட்டுவிடக்கூடாது.

சமாதானத்தை விரும்பும் நேசதேசத்தார்களை ஆக்கிரமிப்பிலிருந்து பாது காப்பதற்கு எல்லா தேசத்தார்களும் ஒன்றுசேர்ந்து ஒரு நிரந்தரமான கூட்டுறவை ஏற்படுத்தி அதை நிலை நிறுத்தாத வரை நம்மில் யாருக்கும் அமைதி ஏற்படுமென்ற நம்பிக்கையே இருக்காது. ஹென்ட்ரீக் வில்லியம் வான்லூன் என்பவர் எழுதியிருக்கும் புஸ்தகங்களில் ஒன்றில் "நாம் எல்லோரும் ஒரு அண்ட கோளத்தில் சேர்ந்து செல்லும் சஞ்சாரிகள். ஒவ்வொருவருக்கும் இருக்கும் சந்தோஷமும், துக்கமும், நம் எல்லோருடைய சந்தோஷமும் துக்கமும், ஆகும்", என்று சொல்லியிருக்கிறார். இந்தத் தத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளும்வரை யுத்தத்தின் நிழல்கூட நம்மைவிட்டு அகலாது.

---

# பிரிடிஷ் பைடர் விமானத் தாக்குதல்கள்.

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம்வந்த செய்தி).

சமீபத்தில் ஒருமாத காலத்திற்குள் ஆக்கிரமித்த பிரான்ஸில் பிரிடிஷ் விமானங்கள் பகற்காலத்தில் 7.700 தடவை பறந்து சென்று தாக்கிவந்தன. படையெடுப்புக்குச் சென்ற விமானங்களில் பெரும்பான்மையாக பைடர் விமானங்கள் ஈடுபட்டிருந்தன. அதாவது தினசரி 250 பைடர் விமானங்கள் தாக்குதல்கள் செய்துவந்தனவென்று விமான இலாகா செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

இந்த வருஷத்தில் முதல் ஐந்து மாதங்களில் விரோதி ஆக்கிரமித்த பிரதேசங்களின்பேரில் நமது பைடர் விமானப் பகுதிகள் நடத்திய பகற்காலத் தாக்குதல்களில், எதிரியின் 15 பைடர் விமானப் பகுதிகள் அடியோடு அழிந்து போயின. இந்த எண்ணிக்கையில் இராக்காலத்தில் நம் பைடர் விமானப் பகுதிகள் சுட்டுவீழ்த்தின எதிரி விமானங்களின் எண்ணிக்கையும், கடற்கரையோரமாகச் செல்லும் கப்பல்களின் பாதுகாப்பில் நாசமாக்கப்பட்ட எதிரி விமானங்களின் எண்ணிக்கையும் சேரவில்லை.

இவ்விதம் மேற்குப் போர்முனையில் எதிரி பைடர் விமானங்கள் நஷ்டமாவதில் அவைகளுக்குப் பதிலாக ஜெர்மன் விமானத் தொழிற்சாலைகள் விமானங்களை உற்பத்தி செய்து அனுப்பிவைக்கவேண்டியிருக்கிறது. இதனால் ருஷ்யப் படைகளின்பேரிலும், மத்தியக் கிழக்கில் நமது படைகளின்பேரிலும் உபயோகிக்கத்தக்க எதிரி விமானங்கள் அவர்களுக்குப் பயனில்லாமல் போகின்றன. அதனால் மேற்குப் போர்முனைக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு ஜெர்மன் விமானத்தினால் ருஷ்யாவுக்கும், மத்தியக் கிழக்குக்கும் அந்த விமானம் அனுப்பமுடியாமல் போய்விடும்.

இம்மாதிரி தினசரி பைடர் விமானப் பகுதிகள் மேற்கு பாகத்தில தாக்கி. விரோதி விமானங்களுக்கு ஏராளமாக நஷ்டத்தை விளைவிப்பதிலிருந்து இரண்டாவது போர்முனை ஆரம்பித்திருக்கிறதென்று சொல்லலாம். எதிர்த்துவரும் நமது பைடர் விமானங்களையும், கடற்கரைப் பாதுகாப்பு விமானங்களையும் தடுப்பதற்கு ஜெர்மன் பைடர் விமானப் பகுதிகளில் ஒரு பாதியையாவது அங்கு வைத்தாகவேண்டும்.

நமது பைடர் விமானப் பகுதிகள் தாக்கிவருவதில், அவைகளைச் சேர்ந்த விமானங்களுக்கு நஷ்டமில்லாமல் இல்லை. ஆனால் பிரிட்டன்பேரில் லுப்ட்வாபி விமானப்படை நடத்திய யுத்தத்தில், அதற்கு நேர்ந்த விமான நஷ்டம் ஒப்பிட்டுப்பார்க்க முடியாதபடி அவ்வளவு அதிகமாக இருந்தது. நமது பைடர் பகுதி விமானப்படை அதற்கு நேரிடும் நஷ்டத்தைக் காட்டிலும், விரோதி பைடர் விமானங்களை அதிகம் சுட்டு அழித்துவருகின்றன. இங்கிலீஷ் கால்வாய்க்கு மறுபக்கத்தில் எதிரிதரப்பில் பிரவேசித்து, எதிரி ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டுக்கு

நுழைந்து சண்டை செய்யும் நமது விமானப்படை அடையும் வெற்றிகள் சாதாரணமானவை என்று சொல்லமுடியாது. ஏனென்றால், விமான எஞ்ஜினில் ஒரு குண்டுவிழுந்தால் அந்த விமான ஓட்டி வெளியே வரும்படி நேர்ந்தும், அவனுடைய விமானமும் நஷ்டமடைய நேரிடும்.

### ஏன் மற்ற போர்முனைகளில் இம்மாதிரி தாக்குதல்கள் நேரவில்லை?

இம்மாதிரி பைடர் விமானப் பகுதிகளைக்கொண்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நாட்டில் தாக்கிவரும் விமானப்படையை, தூரத்திலுள்ள போர்முனைகளில் பிரயோசனப்படும்படி உபயோகிக்கலாமென்றும், அங்கு இந்த விமானப் படையுமிருந்தால் அருவெறுப்பு உண்டாகும்படியான தோல்விகள் நேரிடாமல் தடுக்கலாமென்றும் சொல்லப்படும். உண்மையில் இம்மாதிரி பைடர் விமானத் தாக்குதல்களை நிறுத்திவிட்டாலும், வெகு மாதங்களுக்கு முன் முதலாகவே இம்மாதிரி தாக்குதல் செய்யாமலிருந்தாலும், சமுத்திரங்களுக்கு அப்பால் சண்டை செய்து வரும் நமது விமானப்படைப் பலத்திற்கு உபரியாக ஒரு படைப் பகுதியும் சேர்ந்திருக்க முடியாது. ஏனென்றால், வெகுதூரத்திலுள்ள போர்முனைகளுக்கு உதவி விமானப்படை அனுப்பமுடியாமல் இருந்தற்கு விமானங்களோ, விமான ஓட்டிகளோ குறைவாக இருந்தன என்ற காரணமில்லை. போக்குவரத்து கஷ்டமாக இருந்ததினால் தூரத்திலுள்ள போர்முனைகளுக்கு விமானப் பகுதிகள் அனுப்ப முடியவில்லை.

இப்பொழுதுள்ள நிலைமை எப்படியெனில், இந்த தேசத்தில் இரண்டு முக்கிய காரணங்களுக்கு எவ்வளவு முக்கிய பைடர் விமானங்கள் அவசியமோ அதற்கு மேல் பைடர்கள் இங்கில்லை. ஆகாய விமானத் தாக்குதலிலிருந்து இந்நாட்டைப் பாதுகாக்கவும், இந்நாட்டின்மேல் படையெடுக்காமல் தடுக்கவேண்டியிருந்தால், அதைத் தடுக்கவேண்டியதும்தான் மேலே சொல்லப்பட்ட இரண்டு காரணங்கள். நமது பைடர் விமானப்படை எதிரி ஆகாய விமானமூலம் தாக்குவதையோ அல்லது நமது நாட்டில் பைடர் படையெடுப்பதையோ எதிர்பார்த்துக்கொண்டு விமான நிலயங்களில் வெறுமனே உட்கார்ந்துகொண்டிருக்கச் செய்வதைக்காட்டிலும், இப்பொழுது பைடர் விமானப் பகுதிகள் செய்துவருகிறமாதிரி எதிரியைப்போய்த் தாக்கி சேதம் விளைவித்து வரும்படி இந்தப் படையை உபயோகிப்பது மேலான காரியம்.

### தாக்குதல் செய்ய உணர்ச்சி.

மேலும் இந்த விமானப்படைப் பகுதியின் தாக்குதலானது பிரிட்டிஷ் மக்களின் தாக்குதல் உணர்ச்சிக்கு ஒத்ததாகவே இருக்கிறது. பைடர் விமானிகளில் உணர்ச்சியையும் அதிகரிக்கச் செய்து, அவர்களுக்கு உத்ஸாகத்தை மூட்டுகிறது. இப்பொழுது இருக்கும் உணர்ச்சிபோல் அந்த விமானிகளுக்கு எப்பொழுதும் இருந்ததில்லை. இந்த விமானிகள் இப்பொழுது அவர்களே ஆரம்பித்து நடத்துகிறார்கள். தரைப்படைக்கும் இத்தகைய தாக்குதல் உணர்ச்சி உண்டாகியிருக்கிறது. ஆகையினால், ஐரோப்பா கண்டத்தின்மீது படையெடுக்கும் காலம் வரும்பொழுது எதிரியின் விமானம் அவற்றைத் தாக்காமல் பைடர் விமானப் படைப்பகுதி அந்தத் தரைப்படைக்குக் குடைபோல் ஆதரவளிக்கக் கூடியதை எதிர்பார்க்கலாம். இப்பொழுது பைடர்கள் நடத்தும் தாக்குதல்கள் வருங்காலத்தில், யுத்தம் நடக்கவேண்டிய முறைகளுக்கு ஒத்திகைகள் மாதிரி இருக்கின்றன. ஏனென்றால், இங்கிலீஷ் கால்வாயின் மறு பக்கத்தில் நமது பைடர் விமானங்கள், விமானப்படை பலத்தில் ஆதிக்கம் பெறுவது நாம் ஐரோப்பா கண்டத்தைப் படையெடுக்கப் போட்டிருக்கும் திட்டத்திற்கு முற்றிலும் அவசியம்.

இம்மாதிரியாக பைடர் விமானப்பகுதி தினசரி செய்யும் தாக்குதல்களினால் மற்ற போர்முனைகள் ஒவ்வொன்றிலும் எதிரியின் பிரயத்தனம் பாதகமடைந்திருக்கிறது. அத்துடன் ஏற்கனவே தற்காப்பு நிலைமையில் இருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் எதிரியின்பேரில் ஆகாயச் சண்டையில் இரண்டாவது போர்முனை ஏற்பட்டிருக்கிறது.



## மத்தியக்கிழக்கு சம்பந்தமான பிரச்னையைப்பற்றி ஹிட்லரின் அபிப்பிராயம்.

(" பார்ச்சூன் " சஞ்சிகையிலிருந்து எடுத்தெழுதியது.)

சமீபக்கிழக்கையும், தூரக்கிழக்கையும் பற்றி ஹிட்லர் பின்வருமாறு அபிப்பிராயப்படலாம். கிரிமியாவில் உட்புகவும், மேற்சொல்லிய பிரதேசங்களில் வசந்தகாலத்தில் தாக்குதல் செய்யவும் திட்டங்கள் போட்டிருக்கிறதாகத் தோன்றுகிறது. "இந்த வசந்த காலத்திலும், கோடையிலும் ஜெனரல் ஆச்சின்லெக்கின் அதிகாரத்தின் கீழிருக்கும் படை தாக்கும்படியான திட்டமும் சேராமல் இருக்கமுடியாது" என்று காப்டன் ஸிரில்-பால்ஸ் என்ற ராணுவ நிருபர் சமீபத்தில் எழுதினார். அவர்கள் போட்ட எல்லா திட்டங்களையும் ஒரே சமயத்தில் முயற்சிப்பான் என்று சொல்வதற்குப்போதிய சந்தர்ப்பம் இருக்கிறது.

ருஷ்ய யுத்தத்தில் ருஷ்யர்கள் வெற்றிகள் அடைந்து வருவதிலிருந்தும், அதனால் ஹிட்லருக்குப் பெருத்த நஷ்டம் நேரிட்டதிலிருந்தும், வடக்கு ருஷ்யப் போர்முனையில் முன்னேறுவதை நிறுத்திக்கொண்டு, கிரிமியா வழியாகத் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்திக்கொண்டு காகஸஸ் எண்ணெய்த் தளங்களைக் கைப்பற்றுவதை முக்கிய லக்ஷியமாக ஹிட்லர் கருதுவதாக சில ராணுவ அதிகாரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அதே சமயத்தில் அவன ஸிரியா மூலமாகவோ, துருக்கி மூலமாகவோ, அல்லது இவ்விரண்டு தேசங்கள் வழியாகவோ மத்தியக்கிழக்கில் வைக்கப்பட்டிருக்கும் நம் சைனியங்களைத் தாக்குவதற்கு அவன் பிரயத்தனப்படலாம். அதே சமயத்தில் லிபியாவிலிருக்கும் ஆபிரிக்காவில் தளகர்த்தா ரோமலின் தலைமையின் கீழுள்ள படைப்பகுதிகள் ஸூயஸ் கால்வாயைப் பிடித்துக்கொண்டு அலெக்ஸாண்டிரியா துறைமுகத்திலிருக்கும் பிரிடிஷ் கப்பற்படையைத் துரத்தவும் முயற்சி செய்யலாம். ஹிட்லர் சேமித்து வைத்திருந்த எண்ணெய் எல்லாம் ருஷ்யப்படையெடுப்பில் செலவாகிவிட்டது. இப்பொழுது ஹிட்லருக்கு எண்ணெய் அத்தியாவசியமாய் இருக்கிறது. இதைப் பிரதானமாகக் கொண்டே அவன் தாக்கிவருகிறான். சமீபத்தில் நடந்த அநேக தாக்குதல்களைப் பார்த்தால் இதன் அத்யாவசியம் தெரிகிறது. ரோமல் ஹிட்லருடன் நெடுநேரம் பல தடவைகளில் சம்பாஷணை நடத்தியிருக்கிறான். அவனுக்கு ஸப்ளைகள் ஏராளமாக அனுப்புவதற்கு எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் பிரிடிஷ் விமானப்படையாலும், கப்பற்படையாலும் பாழாக்கப்பட்டு, பெருத்த சேதம் விளைந்துவிட்டது. ஜெர்மன் லுப்ட்வாபி படையை மத்தியதரைச்சடல் போர்முனைக்கு ஏராளமாக ருஷ்யப் போர்முனையிலிருந்து மாற்றியனுப்பியிருப்பதாக மாஸ்கோவிலிருந்து அறிவிக்கப்படுகிறது மத்தியதரைக்கடல் துறைமுகங்களில் விமானங்களும், சாமான்களும், துருப்புகளும் ஏற்றும் விமானங்களும் அவைகளை ஏற்றியனுப்புவதற்காகத் திரட்டப்பட்டிருக்கின்றன. மால்டாவை அழித்துவிட மூர்க்கத்தனமாகப் பிரயத்தனம் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் இந்தப் பிரயத்தனம் வீணாகிவிட்டது இதில் லுப்ட்வாபிக்கு பெருத்த சேதம் ஏற்பட்டுவிட்டது. இவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்துப் பார்த்தால் ஜெர்மனியின் தற்போதைய நிலைமை எப்படியிருக்கிறதென்று தெரியவரும். இதே காரணத்திற்காக பல்கேரிய அரசன் போரிஸ் ருஷ்யாவின் பேரில் போர் தொடர்ந்திருக்கிறான். துருக்கி அச்சுநாட்டுப் படைகளுக்கு வழிவிட மறுத்தால் பல்கேரியர்கள் துருக்கியுடன் சண்டை செய்யும்படி உபயோகப்படுத்தப்படுவார்கள். சமீபத்தில் பிரெஸிடெண்டு இநோனு அச்சுநாடுகள் துருக்கியைத் தாக்கினாலும், துருக்கி எதிர்த்துச்சண்டை செய்யுமென்று சொல்லியிருக்கிறான். நேசதேசத்தாரிடமிருந்து யுத்தக் கப்பல்கள், டாங்கிகள், வெடிமருந்துகள் முதலிய யுத்தப்பொருள்களைத் துருக்கி பெற்றுக்கொண்டிருக்கிறது. எதிரி துருக்கி மூலமாக வந்து மலைக்கணவாய்களைக் கைப்பற்றிக்கொண்டால் முதன் முதலாக இராக்கிலுள்ள எண்ணெய் தளத்தின் மத்திய இடமும், ரஸ்தாவும், இருப்புப்பாதையின் பிரதான இடமும் சேரும் முக்கியமான இடமான மோஸூல் என்ற இடத்தைத் தாக்குவான். பிறகு இரானிலுள்ள எண்ணெயைக் கைபற்றுவதற்காக பர்ஸியன் குடாக்கடலை நோக்கித்தாக்குவான். மூன்றாவதாக-காகஸஸ் எண்ணெய் தளத்திலிருக்கும் பாடூம், பாகு என்ற இடங்களுக்கு [illegible] வழியாகச்செல்வான். இதற்கெல்லாம் தளகர்த்தர் [illegible]

ருஷ்யர்களும் தயாராக இருக்கிறார்கள். ஸிரியாவிலிருந்து இரான் வரையிலும் தற்காப்புகோட்டை கட்டியிருக்கிறது. காஸ்வினியிலிருந்து ரயில்பாதையை பர்ஸியாக் குடாக்கடலிலிருந்து காகஸஸுக்கு நேரே செல்வதற்குத் தக்கபடி வளர்த்துப் போடப்பட்டிருக்கிறது. தளகர்த்தர் ஆச்சின்லெக்குக்கு விமானப் படைப்பலம் அதிகமாக இருக்கிறது. பக்கத்திலிருக்கும் கடல்களில் பிரிடிஷ் கடற்படையும், ருஷ்யக்கடற்படையும் ஆதிக்கம் பெற்றிருக்கின்றன. இங்குதான் ஹிட்லரின் மர்மஸ்தானம் இருக்கிறது.

## நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டியவை.

சில நாடுகளில் **ரேடியோ** ஜனங்களை ஏமாற்றுவதற்கான கொடிய லக்ஷியங்களுக்காக உபயோகிக்கப்படுகிற விஷயம் வருந்தத்தக்கது தான். உண்மையில் ரேடியோ என்பது மனித வர்க்கத்தின் சந்தோஷத்திற்கும், படிப்புக்கும் ஏற்பட்டது. இந்த யுத்தம் ஆரம்பமான பிறகும், அதற்குமுன் யுத்தத்திற்குத் தயார் செய்து கொண்டிருக்கும் போதும் ஜெர்மனி பொய் பிரசாரத்திற்காக இதை உபயோகித்து வந்திருக்கிறது. தங்கள நாட்டு மக்களை ஏமாற்றியதோடு பிற நாட்டிலும் தொந்தரவுகளை விளைவித்து, எதிர்ப்பு சக்தியைக் குறைத்து சுலபமாக அந்த நாடுகளை ஜெர்மனி வசப்படுத்திக்கொள்ளும் விதமாக நடந்துகொண்டது. நிச்சயமாக இந்த யுத்தத்தில் புதிய ஆயுதங்களான டாங்கிகள், பீரங்கிகள், இதர யந்திரங்கள் முதலியவைகளை உற்பத்தி செய்த மாதிரி ஜெர்மன் பொய் பிரசாரமான ஆயுதத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. இந்த வழியை ஜப்பான் பின்பற்றி வருகிறது. அந்தந்த பாஷைகளில்—இங்கிலீஷ், உருது—பொய்யான சமாசாரங்களை, பொய் நாணயங்களை உண்டுபண்ணுவது போல், உற்பத்தி செய்கின்றன. (மேன்மை தாங்கிய **ஜார்ஜ் கன்னிங்ஹாம்**, வடமேற்கு மாகாண கவர்னர், ஜூலை 16வ பெஷாவரிலிருந்து ஒலிபரப்பியது).

"**நமது எல்லைப்புறங்களில்** நாம் நின்றுகொண்டு எதிரியைவிரட்டியடிப்பது மாத்திரத்தினால் இந்த யுத்தத்தை ஜயித்து விடமுடியாது. எதிரியின் விமானம் நீர்மூழ்கி முதலிய தாக்குதல்களைத் தடுத்து எதிரியின் உள்நாட்டிலுள்ள மூலஸ்தானங்களையும் நாம் தாக்கவேண்டும்" (மிஸ்டர் **கார்டல் ஹல்** வாஷிங்டனிலிருந்து ஒலிபரப்பியது, ஜூலை 23).

உண்மையும், புள்ளி விவரங்களும்.

**துருக்கியில் பத்திரிகை நிருபருக்கு** பிரசித்தி ஏற்பட்டு, பத்திரிகை ஆசிரியராகவும் இருந்தால் மெட்ஜலிஸ்ஸில் ஒரு அங்கத்தினர் பதவியை அடைகிறான். பிறகு அயல் நாட்டு வியவகார சம்பந்தமான கமிட்டிகளில் ஒரு ஸ்தானத்தை வகிக்கிறான். அங்காராவில் பத்திரிகை ஆசிரியரான B. பலிச்ரிப்சி அடேயும், அரசாங்க பத்திரிகையான உலுஸி (Ulus)ன் அயல்நாட்டு விஷயங்களுக்கு ஆசிரியரான B. ஷுக்ரு எஸ் மெடும் அவ்வித கமிட்டி மெம்பர்கள் ஆனார்கள். இவர்கள் எழுதும் விஷயங்கள் அரசாங்க உண்மைகளைப் பற்றியதாகத் தானிருக்கும்.

**இவ்வருஷமுடிவில்** அமெரிக்காவில் 1,40,00,000 ஸ்திரீ, புருஷர்கள் யுத்தத் தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருப்பார்கள். பொதுமக்களுக்குத் தேவையான உணவு முதலியவைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருப்போர் இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அவர்களின் கணக்கும் தனியாக இருக்கிறது. இத்தகவலை மனிதசக்தி கமிஷனின் முன்பு **பிரிகேடியர் ஜெனரல் பிராங்க் மெக்ஷெர்ரி** கொடுக்கிறார்.

**ருஷ்ய ஸார் காலத்தில்** ஸாரிட்ஸின் என்ற பெயருடன் இருந்த ஸ்டாலின்கிராட் ஒரு ஆபாசமான நகரமாக இருந்தது. மர வீடுகளும், சுத்தப்படுத்தப்படாத வீதிகளும், வால்கா படகுக்காரர்களுக்கு ஸப்ளை செய்யும் கள்ளுக்கடைகளும், தேக்குமரங்களை அறுக்கும் ரம்பப்பட்டறைகளும், இருந்தன. பிறகு தான் சீர்திருத்தம் ஏற்பட்டு ஒரு பெரிய தொழிற்சாலை நகரமாக இருக்கிறது. 4,00,000 ஜனங்கள் அங்கே வசிக்கின்றனர்.

குத்தகைக் கடன் மசோதாப்படி ஜூன் மாதத்தில் 70,80,00,000 டாலர் பொருமானத்திற்கு அயல் நாடுகளுக்கு சாமான்கள் அனுப்பப்பட்டன. ஜூன் மாதத்தில்தான் அதிகமாகத் தயார் செய்யப்பட்டது. மே மாதத்தில் 66,20,00,000



டாலர் பொருமானம் தான். மொத்தத்தில் 5,20,50,00,000 டாலர் பொருமான சாமான்கள் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

**ஜெனரல் மெக் ஆர்தர்** எப்போதும் முன்னணி வீரனாகவேயிருந்திருக்கிறார். முதலாவதான உலக யுத்தத்தில் இரண்டு தடவை காயம்பட்டு, ஏழு தடவை தன்னுடைய சாமர்த்தியத்தைக் காண்பித்துள்ளார். தற்சமயத்தில் அமெரிக்காவின் உயர்ந்த ராணுவ கௌரவத்தை அறிவிக்கும் பதக்கத்தைப் பெற்றிருக்கிறார்.

**இந்திய மன்னர்கள்** யுத்த முயற்சிக்காக, பொருள், மனிதர்கள், இதர சாமான்கள் முதலியவைகளைக் குவிக்கின்றனர். 1942 ஏப்ரல் வரை கொடுக்கப்பட்டது 3,10,30,000 ரூபாய்கள், மீண்டும் கொடுப்பதாகச் சொல்லியிருப்பது 36,64,000 ரூபாய்கள்.

**பல இனத்தினர் அடங்கி**, தையல் வேலைக்காரர்கள், மொச்சிகள், கயிறு திரிப்போர், ஸுப்ரவைஸர்கள், வேலைக்காரர்கள் 5,00,000 பேர் இந்தியாவில் கூடாரங்களைத் தயார் செய்வதில் ஈடுபட்டிருக்கின்றனர்.

**அமெரிக்க யுத்த இலாகா** அறிவிப்பின்படி வேலைக்காரர்களின் நாலில் ஒரு பங்கு ஸ்திரீகள். அவர்கள் மேல்பார்வை வேலையிலும், யந்திரசாலைகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

## புதிய பயிற்சி—புதிய உணர்ச்சி.

அஸ்ஸாமிலுள்ள இந்தியச் சைனிய வியாக்யானக்காரர் எழுதியபடி, இந்தியாவின் கிழக்கு வாசலில் இந்தியத் துருப்புகள் காவல் புரிகின்றன.

வடமேற்கு எல்லைப்புறத்திலுள்ள கைபர் கணவாயைப்போல் மார்க்கங்கள் சிரமமானதாக இல்லையானாலும், வேறு விதமான இயற்கைப் பாதுகாப்புகள் இருக்கின்றன. மேலும், பிரம்மபுத்ரா, சிந்து போன்ற நதிகளும் இருக்கின்றன.

அனுபவத்திலிருந்து நிரந்தரமான பாதுகாப்புகளை மாத்திரம் நாம் நம்பி இருந்துவிட, இங்குமங்கும் சஞ்சரிக்கக்கூடிய படைகள் எல்லா இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. இவைகளின் நிலைகள் அடிக்கடி மாறிக்கொண்டே போவதால் இங்குள்ள படைகளுக்கு அதிகக் கடுமையான பயிற்சி கொடுக்கப்படுகிறது. எந்த இடத்தைக் காக்கவேண்டுமோ அதே இடத்தில் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. இதனால் புதிய பலமும், உணர்ச்சியும், சைனியத்திற்கு ஏற்படுகிறது.

இந்த வருஷத்தில் ராணுவ சதுக்கத்தில் பயிற்சி கொடுக்கும் முறை கைவிடப்பட்டது. அந்தந்த அரங்கங்களிலேயே பயிற்சி கொடுக்கப்படுவதால் ஆபீஸர்களுக்கும் துருப்புகளுக்கும் உணர்ச்சி அதிகரிக்கிறது.

மேலும், மோட்டார் போக்குவரவை மாத்திரம் நாம் நம்பியிருக்கவுமில்லை. இந்த முறை பர்மாவில் கையாண்டபோது ரஸ்தாக்கள் அடைபட்டுவிட்டன. கோவேரிகழுதைகள்தான உபயோகிக்கப்படுகின்றன. இதற்கு வடமேற்கு மாகாணத்தில் பயிற்சி பெற்ற சைனியங்கள் உபயோகிக்கப்படுகின்றன. அங்கிருந்து கிழக்கு பாகத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

### தேசீய யுத்த முன்னணி.

**காலிபிளவர் கீரையை (Cauliflower) அதிகம் உற்பத்தி செய்யுங்கள்.**

ஆகஸ்டு முதல் டிஸம்பர் மாதம் வரை சமவெளிகளில் விதையுங்கள். மார்ச்சுமுதல் ஆகஸ்டு மாதம் வரையில் குன்றுகளில் விதையுங்கள். நாற்றங்கால் தயாரித்து அதில் விதையுங்கள், நாலு இலைகள் விட்டவுடன் இதற்காகத் தயாரிக்கப்பட்ட நிலங்களில் 4 அல்லது 5 அங்குலங்களுக்கு இடையே நட்டு விடுங்கள். 8 இலைகள் விட்டவுடன் அவற்றை மறுபடி பிடுங்கி 2 அடி அகலம் வரிசைகளுக்கு நடுவில் இடம் வரிசையாக ஒன்றுக்கொன்று 18 அங்குலங்களுக்கு இடையிடையே நட்டுவிடுங்கள். பூ தலைக்காட்ட ஆரம்பித்ததும் அது பழுப்பு வர்ணமடையாமலும், கசப்பாகப் போய் விடாமலும் இருக்க இலைகளைப்போட்டு மூடிவிடுங்கள். உரம் நிறைந்த களி மண் நிலம் மேலானது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— பிரஸங்கம் 110—(2-வது பிரிவு).

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ...29, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 30, ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் ... | ,, | 5.30 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.00 |
| | | பரம்பூர் ... | ,, | 6.30 |
| | 31, திஙகட்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | நச்சாந்துபட்டி ... | மாலை | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| ஸெப்டம்பர் ... | 1, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | நல்லூர் ... | மாலை | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| | 3, வியாழக்கிழமை ... | பனையபட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 4, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

பிரஸங்கம் 111—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| | 5, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6 30 |
| | 6, ஞாயிற்றுக்கிழமை | பிச்சத்தான்பட்டி ... | ,, | 6.00 |
| | | ஆலஙகுடி ... | ,, | 6.00 |
| | | வடகாடு ... | ,, | 6 30 |
| | | முனிஸிபல் ஆபீஸ் ... | ,, | 6 45 |
| | 7, திங்கட்கிழமை ... | அன்னவாசல ... | ,, | 6.00 |
| | | கீழக்குரிச்சி ... | ,, | 6.30 |
| | 8, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | ராமச்சந்திரபுரம் ... | மாலை | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| | 9, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | உடையாளிப்பட்டி ... | மாலை | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| | 10, வியாழக்கிழமை ... | மழையூர் ... | ,, | 6 00 |
| | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 11, வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

---

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிக்கைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 29— 8—42 | ... | வெட்டன்விடுதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 30— 8—42 | ... | கொடும்பாளூர். |
| திங்கட்கிழமை | ... | 31— 8—42 | ... | கீரனூர் |
| செவ்வாய்க்கிழமை | ... | 1— 9—42 | ... | குடுமியாமலை. |
| புதன்கிழமை | ... | 2— 9—42 | ... | கீழாநிலை புதுப்பட்டி. |
| வெள்ளிக்கிழமை | ... | 4— 9—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 5— 9—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 6— 9—42 | ... | ஏம்பல் |
| திங்கட்கிழமை | ... | 7— 9—42 | ... | கொன்னையூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 8— 9—42 | ... | ராமச்சந்திரபுரம். |
| புதன்கிழமை | ... | 9— 9—42 | ... | கரம்பக்குடி. |
| வியாழக்கிழமை | ... | 10— 9—42 | ... | ஆலங்குடி. |
| வெள்ளிக்கிழமை | ... | 11— 9—42 | ... | புதுக்கோட்டை. |

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மீ 5உ [ந. 111

## யுத்தத்தின் மூன்ருவது வருஷமுடிவு.

சரியாக மூன்று வருஷங்களுக்கு முன்பு, அதாவது 1939 ஸெப்டம்பர் 3-ம் தேதி, இதற்குமுன் கண்டறியாத கொடுமையை உலகத்திலிருந்து நீக்க ஜெர்மனி பேரில் பிரிடன் யுத்தத்தைத்தொடங்கியது. அதுமுதல் இந்த யுத்த காரணமாக இம்மூன்று வருஷகாலத்தில் பலர் இறந்திருக்கின்றனர், பலர் சோர்வுற்று இருக்கின்றனர், பலர் அதிகக் கஷ்டத்தை அனுபவித்திருக்கின்றனர். ஜெர்மானியர், காட்டுமிருண்டிகள் விளைவிக்கும் தீங்குகளைக்காட்டிலும், அதிகமான கொடுமைகளை ஐரோப்பா பூராவும் பரவச்செய்து மற்ற நாடுகளிலும் தலைகாட்டச் செய்து வருகின்றனர்.

இவையாவுக்கும் ஹிட்லரின் அளவுகடந்தகொடிய ஆசையே காரணம். தன்னை நெபோலியன், ஸீஸர், கடவுள், என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கிருன். இவன் புதுதிட்டமென்று கூறிக்கொண்டு கொடிய, கபடமுறைகளால் யந்திரப்படைகளுக்கு உலகத்தை வசப்படுத்த அளவிலா ஆசைகொண்டிருக்கிருன்.

இதற்காக அமைதியாயிருந்த காலத்தில் யுத்தத்தைத் தொடங்கினுன்.

ஷேக்ஸ்பியர் கவியால் எழுதப்பட்ட மாக்பெத் என்ற நாடகத்திலுள்ள ஒரு சந்தர்ப்பம் பிரகிருத நிலைக்கு ஏற்றதாக இருக்கிறது. அதில் மாக்பெத் என்பவனின் முன்பாக சில பிசாசுகள்தோன்றி "கிளாமஸ் பிரபு, காடர்பிரபு, அரசன் முதலியோர் வசமடையலாம். ஆனால் வெற்றியுள்ளவனுகவோ அமைதியுள்ளவனுகவோ நீ இருக்கமுடியாது" என்று சொல்லின. அதேவிதமாக ஹிட்லர் வசத்தில் பிரான்ஸ், பெல்ஜியம், நார்வே, ஹாலந்து, யூகோஸ்லாவியா, கிரீஸ், முதலியவை இருக்கலாம். ஆனால் முடிவான வெற்றியையோ சமாதானத்தையோ அவனடைய முடியாது. இதுவரையடைந்த ஜயங்களைக்கொண்டு முடிவான வெற்றி அவனுக்குக் கிடைக்காது. குற்றமற்ற நாடுகளை அழித்ததால் ஏற்பட்ட குற்றத்திலிருந்தும் அவன் தப்பிக்க முடியாது. மாக்பெத் நாடகத்தில் டன்கன் என்பவன் கொலை செய்யப்பட்டமாதிரி பழைய ஐரோப்பாவை ஹிட்லர் அழித்திருக்கலாம். ஆனால் பிரிடனின் உதவியால் புதிய ஐரோப்பா தோன்றும். அட்லாண்டிக் சாஸனம்போன்ற புதிய ஸ்வதந்திரங்கள் தோன்றி மனிதவர்க்கத்தைக் காப்பாற்றும்.

இதுதான் யுத்த சம்பவங்களின் விவரம். 1940-ல் தனியாக இருந்த பிரிடனுக்கு தற்சமயத்தில் 28-நாடுகள் கூடநிற்கின்றன. அச்சுநாடுகளில் சேர்ந்த மூவரில், ஒருவனுக்கு ஆபிரிக்க சாம்ராஜ்யம் போயிற்று. மற்ருெருவன் பஸிபிக்கில் அடைபட்டிருக்கிருன்.

யுத்த தளவாடசாலை நிறைந்த அமெரிக்காவும், சைனிய பலம் பெற்ற ருஷ்யாவும், மனிதபலம் பெற்ற சைனுவும், பிரிடனுக்குதவியாக இருக்கின்றன.

எல்லா மத்தியக்கிழக்கு, தூரக்கிழக்கு இவைகளிலுள்ள நாடுகளும், முஸ்லீம் நாடுகளும், வட தென் அமெரிக்காக்களும்கூட சேர்ந்திருக்கின்றன.

அடிமையாகிய எல்லா ஐரோப்பாவும் ஓர் விதத்தில் பிரிட்டனுக்குச் சாதகமாக இருக்கிறதென்றே சொல்லலாம். ஏனென்றால் குவிஸ்லிங், லவால் போன்றவர்களின் முன்னிலையிலேயே ஐரோப்பா முழுமையும் ரகசிய சூழ்ச்சியில் ஈடுபட்டு விடுவிப்பு நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

எதிரி கையாண்ட முறைகளைக்கொண்டே அவன் தாக்கப்பட்டு வருகிறான், வார்ஸா, ராட்டர்டாம் போன்ற அழகிய நகரங்களை அழிப்பதற்கு பாம்பர், பைடர் விமானங்களை அவன் உபயோகித்ததுபோல, அதேவிதமான பிரிடிஷ் விமானங்களால் கோலோன், ஹாம்பர்க், முதலிய நகரங்களிலுள்ள தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டுவருகின்றன.

ஏற்கனவேயே ஜெர்மனியில் உணவுத்தட்டு உண்டு. தற்சமயத்தில் ஐரோப்பா பூராவுக்கும் உணவு ஸப்ளை செய்யவேண்டிய சிரமமும் ஏற்பட்டிருக்கிறது. யூக்ரேனிலிருந்து தானியங்களை அடையலாமென்று ஹிட்லர் நினைத்தான். ஆனால் அது பூராவும் பூ தகனமுறைக்குட்படுத்தப்பட்டது.

ருஷ்ய எண்ணெயைக் கவருவதற்காகக் கிளம்பிய ஜெர்மன் விமானங்கள் அவ்வளவுதூரம் செல்ல முடியாமல் கீழே விழுகின்றன.

ராக்ஷஸனுக்குப் பிரோக்ஷஸன் என்றவிதமாக ருஷ்யச் சைனியம் ஹிட்லரை எதிர்த்துவருகிறது. ருஷ்யா ஒரு நாளும் தோற்கடிக்கப்படமாட்டாது. ருஷ்யச் சைனியங்கள் குறையாத முஸ்தீப்பைப்பெற்று ஜெர்மன் சைனியத்தின் முன்னும் பின்னும், பக்கங்களிலும் தாக்கிவருகின்றன. அரேபியாவிலுள்ள போனிக்ஸ் என்ற பரவையைப்போல் மீண்டும், மீண்டும் ருஷ்யச் சைனியம் புத்துயிர் பெற்று கிளம்பிக் கொண்டேயிருக்கிறது.

பிரகிருதத்தில் ஹிட்லர் முடிவானச் சண்டையைச் செய்துவருகிறான். இதே அவனுடைய கடைசி முயற்சியாக இருக்கலாம். எல்லா சக்தியையும் ஈடுபடுத்திவிட்டான். ரிஸர்வ் படைகளை உபயோகித்துவிட்டான். ஜெனரல்களுடன் சண்டை, ஜனங்களின் ஆவேஷம், சிநேகிதர்களின் மனவருத்தம் இவைகளையும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறான். ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவிலிருந்து தொழிலாளிகளைச் சேகரித்து ஜெர்மன் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தியிருக்கிறான். அவர்கள் முணுமுணுத்துக்கொண்டு காஸா என்ற இடத்தில் ஸாம்ஸன் என்ற குருடன் யந்திரசாலையை அழித்தமாதிரி இவர்கள் ஜெர்மன் கைத்தொழிற்சாலைகளை அழித்துவருகின்றனர்.

ஐரோப்பாவை நரகமாகச் செய்து, கோயரிங், கோயபெல்ஸ் இவர்களின் உதவியால் ராஜ்ய பரிபாலனம் செய்ய ஹிட்லர் நினைக்கிறான். ஆனால் தனது கொடிய செய்கைகளின் பயனை அனுபவிக்கவேண்டிய நாள் நெருங்கிவிட்டது. அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியா முதலிய கண்டங்கள் அவனுக்கு எதிராக ஒன்று சேர்ந்திருக்கின்றன. ஆகவே சீக்கிரத்தில் ஹிட்லர் சாம்ராஜ்யம் அழியவேண்டியதுதான்.

தரை, கடல், விமானம், முதலியவைகளில் இரவும், பகலுமாக வெற்றியை முன்னிட்டு ஈடுபடும் நேசதேச வீரர்களுக்கு எல்லா கௌரவமும் உண்டு. அதே விதமாக தொழிற்சாலைகளிலும், தோட்டங்களிலும், ஈடுபடும் ஸ்திரீ, புருஷர்களுக்கும் அவ்வித கௌரவம் உண்டு. இம்மூன்று வருஷகாலத்தில் சாதிக்க முடியாத விஷயங்கள் நேசதேசங்களால் சாதிக்கப்பட்டிருக்கின்றன. எப்போதும் சமாதானத்திலேயே, நோக்கமுள்ள பிரிடன் பெரிய தரைப்படையையும், விமானப் படையையும் சேகரித்திருக்கிறது. பிரிடனின் பெரிய கப்பற்படை இரவும், பகலும் கடல்களில் காவல்புரிகிறது. பிரிடன் தற்காப்புப்போரிலிருந்து முன்னேற்றப்போருக்கு மாற்றிக்கொண்டுவிட்டது. நேசநாடுகள் ஒன்று சேர்ந்துவிட்டன. எதிரியை எதிர்த்து அடிக்க சரியான சமயமும் நெருங்கிவிட்டது.

ஸ்வதந்திரத்திற்காகப் புரியப்படும் இந்த யுத்தத்தில் பிரிடிஷ் சாம்ராஜ்யம் புகழக்கூடிய உதவியைச் செய்துவருகிறது. இந்தியாவிற்கும் கௌரவஸ்தானம் கிடைத்திருக்கிறது. இந்திய வீரர்கள் சண்டையில் ஈடுபட்டிருக்கின்றனர். யுத்த தளவாடசாலைகளும், விமான தளங்களும் நிரம்பியுள்ள இந்தியா கிழக்கில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை பலமாக எதிர்த்துவருகிறது. சிரமமான காலம் கழிந்துவிட்டது, வெற்றியடைவதற்கான சந்தர்ப்பம் சமீபித்துவிட்டது.



# கடியாரத்தில் ஒரு மணியைத் தள்ளிவைத்து யுத்தத்தை ஜயிக்கவும்.

இந்திய ஸ்டாண்டர்டு டயம் தற்சமயம் கிரீன்விச் டயத்திலிருந்து 6½ மணி முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது: ஏற்கனவே 5½ மணி வித்தியாசம் இருந்தது. இந்தியா எங்கும் கடியாரங்களை ஆகஸ்டு 31—ஸெப்டம்பர் 1௳ நடுஇரவில் ஒரு மணியை முன்னால் தள்ளிவைத்து இப்புதிய ஸ்டாண்டர்டு டயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது முக்கியமாக ராணுவத்திற்குச் சாதகமான ஏற்பாடாகும். இப்புதிய ஏற்பாட்டினால் அதிக மாறுதலேற்படக்கூடிய மாகாணங்கள் தீர்க்க ரேகை 82½°க்குக் கிழக்கில் இருக்கின்றன. பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காகவும், பகல் காலத்தில் போதுமான அவகாசம் பெறுவதற்காகவும், யுத்த நிலைமைகளுக்கேற்றவாறு வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் இப்புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதனால் சிலதாத்காலிகமான அசௌகரியங்கள் நேரலாம். நமது தினசரி வழக்கங்களில் சில மாறுதலைச் செய்து கொள்ளவேண்டும். தினசரி வேலைகள் ஒரு மணி நேரம் முன்னதாகவே துவக்கப்படவேண்டும். ஆனால் மாலையில் ஒரு மணி முன்னதாகவே முடிந்தும் விடும். தாமதித்து விழித்துக் கொள்ளுகிறவர்கள், தங்கள் படுக்கை அறையில் சூரிய வெளிச்சம் பரவும் வரை தூங்காமல் முன்னாடியே எழுந்திருக்கவேண்டியிருக்கும். சீக்கிரம் சமையல்செய்யவேண்டியிருப்பதைப்பற்றி பெண்கள் முணுமுணுக்கலாம். வெந்ததும், வேகாததுமான உணவைத் தின்று அவசர அவசரமாக உடுப்புகளை மாட்டிக் கொண்டு ஆபீஸ்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் போகவேண்டியிருப்பதைப்பற்றி யாவருக்கும் சிரமமேற்படலாம். ஒரு மணி முன்னாடி சென்றாலும், சீக்கிரமாகவே வீட்டிற்குத் திரும்பி வந்துவிடலாம். மாலையில் அதிகமான அவகாசமிருப்பதால் விளையாட்டு முதலியவைகளில் கழிக்கலாம். எண்ணெய்ச் செலவு இல்லாமலேயே சாவகாசமாக போஜனம் அருந்தலாம். சீக்கிரமாகவே படுத்துறங்கலாம். இப்படிச் செய்வதினால் ஆங்கிலப் பழமொழி கூறியபடி திடசரீரம், பொருள், அறிவு முதலியவை உண்டாகும்.

உங்களுக்கு சிரமமாகயிருந்தாலும், இல்லாவிட்டாலும், அது யுத்தத்தை முன்னிட்டு அவசியமாகயிருக்கிறது. வெற்றியை முன்னிட்டு இந்தச் சிறிய தியாகத்தைச் செய்யுங்கள்.

---

பிரஸங்கம் CXI.

# ஸாலமன் தீவுகள்.

அங்கு முன்பு வசித்துவந்த ஒருவர் எழுதியது.

(‘டைம்ஸ் ஆப் இந்தியா’.)

ஸாலமன் தீவுகளில் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் வந்திறங்கிய சந்தோஷச் செய்தி கிடைத்ததும், ஸாலமன் தீவுகள் எங்கு, இருக்கின்றனவென்றும், முக்கியமாக சண்டை நடக்குமிடமான டூலாகி (Tulagi) என்ற தீவு எந்த பாகத்திலிருக்கிறதென்றும் பலர் தேசப்படங்களைப் பார்க்கத் தொடங்கினார்கள். க்வீன்ஸ்லாந்துக்கு வடகிழக்கே ஸாலமன் தீவுகளின் கூட்டமிருக்கிறதென்று சாதாரணமாக தேசப்படத்தைக்கொண்டு கண்டுபிடித்துவிடலாம். ஆனால் டூலாகி எந்த இடத்திலிருக்கிறதென்று கண்டுபிடிப்பது முடியாது. பெரிய அளவில் தயாரிக்கப்படும் தேசப்படங்களிலும், மாலுமிகளுக்காகத் தயாரிக்கப்படும் படங்களிலும்தான் அப்பிரதேசம் குறிப்பிடப்பட்டிருக்கும்.

## டூலாகி (Tulagi).

கூடால்கனலுக்கும், மலேயிடா (Malaita)வுக்கும் இடையேயுள்ள ஜீலா (Gela) என்ற பெரிய தீவிற்கருகாமையில் டூலாகி என்னும் சிறு தீவு இருக்கிறது. அதன் சுற்றளவு சுமார் நாலுமைல்கள் இருக்கும். கூடால்கனலிலிருந்து டூலாகி 18-மைல் தூரத்திலிருக்கிறது. டூலாகியிலிருந்து மலேயிடாவுக்கு சுமார்

இரண்டு பங்கு தூரமிருக்கும். ஸாலமன் தீவுகளில் குடியேறுவதற்கு லாயக்கான இடம் லோகிதான். அங்குதான் துரைத்தனம் நடைபெறுகிறது. ஒரு ஆஸ்பத்திரி, ஜெயில், போலீஸார் வாஸஸ்தலங்கள், இன்னும் பல கவர்ன்மெண்டு ஆபீஸ்கள் அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அங்கு வியாபார ஸ்தலமொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது முற்றிலும் சீனர்கள் வசம்தான் இருந்து வருகிறது. சாதாரண காலத்தில் அங்கு உள்நாட்டு ஜனத்தொகை சுமார் 600 இருக்கும். அதில் சுமார் 30 பேர்களாவது ஐரோப்பியர்களாக இருப்பார்கள். அவர்களும் முக்கியமாக ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாகவே இருப்பார்கள். இன்னும் சில நூற்றுக்கணக்கான சீனர்களும் இருக்கிறார்கள்.

லோகியிலிருந்து சுமார் ஒரு மைலுக்குள்ளாகவே மகாம்போ (Makambo) என்ற சிறு தீவு இருக்கிறது. அங்கு ஸிட்னி வர்த்தகசாலை ஒன்று இருக்கிறது. கொப்பரைக் காய்கள் சேமித்து வைக்குமிடங்களும், ஏற்றுமதி, இறக்குமதி செய்யுமிடமும் இருக்கின்றது. அத்துறையில் 3,000-டன் நிறையுள்ள ஸிட்னியின் பெரிய கப்பல்கள் வந்திறங்குவதற்கு வசதியேற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்குள்ள தீவுகணங்களைச்சுற்றி மகாம்போவுக்கு ஆறு வாரங்களுக்கு ஒருதடவை 3,000-டன் இடையுள்ள ஸிட்னி ஸ்டீமர் வருகிறது. சில மைல்களுக்கப்பால் கவுது (Gavutu) என்ற தீவு இருக்கிறது. அத்தீவை சமீபத்தில் ஆர்.ஏ.எப். விமானப்படை தாக்கியதாக தகவல் கிடைத்திருக்கிறது. தென்னந்தோப்பு பயிற்சி செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கும் லீவர் பிரதர்ஸ் கம்பெனிக்கு அத்தீவுதான் தலைமை ஸ்தானமாக விளங்கிற்று. அக்கம்பெனிக்கு அங்கு ஏராளமாக கொப்பரைக் காய்களை சேமிக்க பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. மேலும் அங்கு யந்திரங்களைப் பழுது பார்க்கும் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அத்தீவு கணங்களில் வெவ்வேறு தீவுகளுக்குச் செல்ல கப்பல் மார்க்கம்தான் தகுதியானவை. அதனால் போக்குவரத்துக்கு லாயக்கான கப்பல்களில் அமைக்கப்பட்டிருக்கும் பல யந்திரங்கள் மேற்சொல்லிய தொழிற்சாலையில் பழுது பார்க்கப்படுகின்றன. (Gavutu)வுக்கும், லோகிக்கும் இடையே எல்லா வகைக்கப்பல்களும் தங்குவதற்கு பாதுகாப்புள்ள இடம் இருக்கிறது. அது வெகு ஆழமானது. ஜப்பானிய ஆக்கிரமிப்புக்காரர்கள் முற்றிலும் அந்தக் கப்பல்களைக் கொள்ளையடித்த பிறகு அக்கப்பல்களை அங்கு தங்கச் செய்கிறார்கள்.

## விமானதளங்கள்.

இதற்கு வெகுதலைக்கப்பால் கூடால்கனார் என்ற பெரியதீவு இருக்கிறது. சுமார் 350 வருஷங்களுக்குமுன் ஸாலமன்தீவுகளைக் கண்டுபிடித்த ஸ்பெயின்தேசத்தினரான அட்மிரல் மென்டோஸா (Mendoza) என்பவர் கூடால்கனார் என்று பெயரை இத்தீவிற்குக் கொடுத்தார். அத்தீவு நெடுகிலும் காடடர்ந்த உயர்மான மலைத்தொடர் இருக்கிறது. இந்தத் தீவுக்கூட்டங்களில் சேர்ந்த பெரிய தீவுகளெல்லாவற்றிலும் மத்தியில் மலைத்தொடர்கள் இருக்கின்றன. மற்ற தீவுகளில் சமுத்திரக்கரை வரையிலும் புகுந்து செல்லக்கூடாதபடி காடு அடர்ந்து இருக்கிறது. ஆனால் லோகிக்கு எதிரே கூடால்கனார் பக்கம் சமுத்திர மட்டத்திற்குச்சற்று உயரமாக ஒரு சமவெளி சமுத்திரக்கரை ஓரத்திலிருந்து ஆரம்பித்து உள்நாட்டில் அநேக மைல்கள்வரை பரவியிருக்கிறது. அங்கு ஏராளமாக உயரமான புல் வளர்ந்திருக்கிறது. அங்கு விமான தளங்கள் ஏற்படுத்துவதற்கு சாதகமாக இருக்கிறது. கூடால்கனாரில் இந்த சமவெளியில்தான் ஜப்பானியர் விமான தளங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது விவரிக்கப்பட்ட ஜில்லாவில் லீவர் பிரதர்ஸ்க்குச் சொந்தமானதும், நேசதேச விமானப்படைகளால் தாக்கப்பட்டதாக அறிக்கையில் வெளிவந்ததுமான குகும் (Kukum) என்ற தோட்டம் இருக்கிறது.

ஜப்பானியர் ஸாலமன் தீவுகளின் முக்கியத்வத்தைப்பற்றி நன்குணர்ந்திருக்கின்றனர். அந்தத் தீவுகளில் வசிக்கும் எவருக்கும் அத்தீவுகணங்களின் மத்திய பாகத்தைப்பற்றி தெரிந்திருக்கும். யுத்தம் ஆரம்பிக்க வெகு வருஷங்களுக்கு முன்பே ஜப்பானிய சிறு கப்பல்கள் ஸாலமன் தீவுகளுக்கு அடிக்கடி போய் விட்டு வரும். இந்தக் கப்பல்களில் நவீன டீஸல் எஞ்ஜின்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒவ்வொன்றிலும் நன்றாகப்பயிற்சி பெற்ற 15 ஜப்பானிய



மாலுமிகள் இருப்பார்கள். அவர்கள் வாலிபர்கள். கடலில் மூழ்கி முத்துச்சிப்பி எடுப்பதில் தேர்ந்தவர்கள். மூன்றுமைல் விஸ்தீர்ணத்திற்குள் அனுமதிச்சீட்டில்லாமல் முத்துக்குளிக்கக் கூடாதென்று பரஸ்பர தேசீய சட்டத்திற்கு முற்றிலும் விரோதமாக அவர்கள் நடந்து வந்தவர்கள். ஐரோப்பியத் தோட்டக்காரர்கள் கொப்பரையின் விலை குறைவாக இருக்கும்பொழுது அந்தவூர் சுதேசிகளை வேலைக்கு மாற்றிக் கொள்வதுண்டு. ஐரோப்பியத்தோட்டக்காரர்களும் அந்த தோட்டங்களுக்குப் பக்கத்தில் வசிக்கும் சுதேசிகளும் சீன வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதற்காகத் தோட்டங்களுக்கும், கிராமங்களுக்கும், எதிரேயுள்ள கடலுக்கடியிலுள்ள திட்டுகளில் முத்துக்குளிக்கிறதில்லை.

ஆனால் ஜப்பானியர் மட்டில் அம்மாதிரியல்ல. ஒரு இடம்விடாமலும் அவர்கள் முத்துகளைத் தேடுவார்கள். அவர்கள் படகுகள் வெகுவேகமாகச் செல்லக்கூடும். அரசாங்கத்தாரின் கப்பல்கள் வந்தால் தப்பலாம் என்ற தைரியத்தினால் அவர்கள் பயமில்லாமல் திருடிகிறார்கள். இவர்கள் நடவடிக்கைகளில் முத்துச்சிப்பி எடுப்பது ஒருவகைப்பட்டது. ஸாலமன் தீவுகள், நியூ கினி, நியூ ஹெபிரிடாஸ் எங்கும் அடிக்கடி ஜப்பானியர் படகுகளில் சென்று வருவதின் பயனாக, அத்தீவுகளைப்பற்றி விஸ்தாரமாக நுண்ணிய விஷயங்களையும் கற்றுக்கொண்டுவிட்டனர். யாவருக்கும் தெரிந்திருக்காத நங்கூரம் போடும் இடங்களும், பல தீவுகளுக்குச் செல்லும் கஷ்டமான பாதைகளையும் தெரிந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் இத்தீவுகளில் ஆக்கிரமித்திருக்கும்பொழுது இவ்விஷயங்கள் தெரிந்திருப்பது அவர்களுக்கு அதிகப்பயனைக் கொடுக்கக் கூடியது.

## கொஞ்சம் கொஞ்சமாகப் பற்றுதல்.

லோகியை அமெரிக்கா தாக்கின விவரங்களைப் பற்றியும், இந்த நடவடிக்கைகளில் அமெரிக்கர்களின் தீரச் செயல்களைப் பற்றியும் பிரக்யாதியாகச் சொல்லப்படுகிறது. ஜப்பானியர்கள் இந்தத் தீவுகளில் மேலும் தெற்கே பிரவேசிக்காமல் தடைசெய்வதற்கு மட்டும் இத்தகைய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. தேசப்படத்தைப் பார்த்தால் இத்தீவுகளில் மத்திய பாகத்தில் அமெரிக்கர்கள் ஸ்தாபித்துக்கொள்ளும் பக்ஷத்தில் கொஞ்சம், கொஞ்சமாகத் தாவி அவர்கள் முன்னேறலாம் என்பது தெரியவரும். அம்மாதிரி அத்தீவு கணங்களின் மத்தியபாகத்தில் அமெரிக்கர்கள் பலமாக ஸ்தாபித்துக்கொண்டுவிட்டார்களானால் அங்கிருந்து லோகிக்கு வடமேற்கேயிருக்கும் இஸபெல், சாய்ஸியூல் (Choiseul), போகன்வில்லி (Bougainville) முதலிய தீவுகளை அவர்கள் கைப்பற்றிக்கொள்ளக்கூடும். அமெரிக்கர்கள் அம்மாதிரி செய்துவிட்டார்களானால், நியூ கினியில் ஜப்பானியத் துருப்புகளின் தலைமை முகாமான ராபால் பயமுறுத்தப்படும். மோர்ஸ்பி துறைமுகத்தைத் தாக்குவதற்காக நியூ கினியின் வடகரையிலுள்ள ஸலாமுவா, பூனா முதலிய இடங்களை ஜப்பானியத் துருப்புகள் கைப்பற்றிக்கொண்டு இருக்கின்றன. இப்பொழுது அமெரிக்கர்கள் மேற்சொல்லிய தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டால் அவர்கள் ஜப்பானியப் படைகளுக்கு இருபக்கங்களிலும் வந்துவிடுவார்கள். ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டிருக்கும் பயமும் வெகுவாகக்குறையும்.

மேலும் இந்தத் தீவுகளை அமெரிக்கர்கள் ஆக்கிரமிப்பதினால் ஒவ்வொரு தீவிலும், ஒவ்வொரு அடியும் மீண்டும் கைப்பற்றவேண்டுமென்பதில்லை, லோகிக்கும், ராபாலுக்கும், நடுவில் பெரியதாயுள்ள கிஸோ (Gizo), பைஸி (Faisi), கீடா (Kieta) என்ற இந்த மூன்று துறைமுகங்களையும் அமெரிக்கர்கள் கைப்பற்றிக்கொண்டால், ஜப்பானியப் படைகள் அருகிலுள்ள காடடர்ந்த தீவுகளுக்குள் பின்வாங்கும்படி நிர்ப்பந்தம் ஏற்படும். அங்கு அவர்கள் சென்றால் அவர்களுக்கு வரும் ஸப்ளைகள் துண்டிக்கப்படும். அந்நாட்டு ஜனங்கள் அவர்களுக்கு விரோதப் பான்மையுடன் இருந்துகொண்டு தொந்தரவு கொடுப்பார்கள். ஆகையால் ஜப்பானியப் படைகள் எதிர்த்து சமாளிக்கக்கூடியகாலம் மிகவும் குறைவாக இருக்கும். 50 வருஷங்களுக்குமுன் தலை வெட்டுவதையும், ஒவ்வொரு ஜாதியாருக்குள் சண்டைபோடுவதையும் தினசரி வாழ்க்கையில் சாதாரண சம்பவங்களாகக்கருதி வந்த அந்த மனிதர்களுக்கு நிர்பயமாகவும், வெற்றிகரமாகவும்

தலையை வெட்டலாமென்ற தைரியம் வந்தால் ஜப்பானியர்களைச் சும்மா விடுவார்கள் என்று நினைக்க முடியாது.

"பொது க்ஷேமம்".

ஜப்பானியரின் பிரசாரம் மற்ற எந்த யுத்தப் பிரதேசத்திலும் வெற்றிகரமாக இருக்கிறது. ஆனால் இத்தீவிலுள்ளோர் சமுத்திரத்தில் மூழ்கி முத்து சிப்பி எடுக்கும் வல்லமை வாய்ந்த ஜப்பானியரின் கொள்கையைப்பற்றி பூராவும் தெரிந்து கொண்டிருப்பதினால் அவர்களின் பிரசாரம் இவர்களிடம் பலிக்கவில்லை. யுத்தத்திற்குமுன் ஜப்பானின் பொது க்ஷேமத்தைத் தெரிந்துகொண்டவர்களுக்கு தூரக்கிழக்கில் தற்போதய ஜப்பானிய பொது க்ஷேமதிட்டத்தில் அதிக அவா ஏற்படாது. இத்துடன் இன்னொரு விஷயத்தையும் சேர்த்துப் பார்க்கவேண்டும். அதாவது இந்தத் தீவுகூட்டங்களிலிருக்கும் சீனர்கள் ஒருவர்கூட பாக்கியில்லாமல் சுங்கிங் அரசாங்கத்தில் மிகுந்த ஆர்வமுள்ளவர்கள். 'சீன யுத்தம்' ஆரம்ப முதல் அவர்கள் ஏராளமாக பொருளுதவி செய்து வந்திருக்கிறார்கள்.

ஆகையால் அமெரிக்கத் தாக்குதலில் கிடைத்த வெற்றியைக் குறித்து வெகு நம்பிக்கையுடன் வருங்காலத்தில் என்ன நடக்குமென்று யோசித்துச் சொல்லக் கூடும். அதிலுள்ள ஜனங்கள் நம்முடன் சிநேக பாவத்திருப்பதினால் தென்மேற்கு பஸிபிக் சமுத்திரத்திலுள்ள தீவுகளை ஆக்கிரமிப்புக்காரர்களிடமிருந்து திரும்பக் கைப்பற்றுவதோடு நிற்காமல் அநேக தாக்குதல் நடவடிக்கைகளை வரிசைக் கிரமமாக ஆரம்பித்து ஜப்பானை நோக்கி யுத்தம் அணுகும்படி செய்யலாம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 29—8—42-லிருந்து 4—9—42-வரை.

**ருஷ்யா.**—ஸ்டாலின்கிராட்டிற்கு வட மேற்கிலும், தென்மேற்கிலும், ஒரு முக்கோண வடிவத்தில் கடும் யுத்தம் நடைபெறுகிறது. அந்த முக்கோணப் பிரதேசத்திற்கு ஸ்டாலின்கிராட், கிளட்ஸ்காயா, கடலினிகோவோ மூன்று இடங்கள். ராட்டர்டாமில் முன்பு செய்யப்பட்ட மாதிரி ஸ்டாலின்கிராடில் தற்போது படையெடுப்பு நடைபெறுகிறதாம். வால்கா பக்கத்தைத் திறந்துவிட நகரின் அருகில் பெரிய யுத்தம் ஆரம்பித்திருக்கிறது.

மேற்கு காகஸஸில் கருங்கடல் பக்கத்தில் நோவோரோஸிஸ்க், டப்ஸி முதலியவைகளைப் பிளந்து செல்ல ஜெர்மன் முயற்சி மீண்டும் நடக்கிறது. ஆனால் கடல் மூலமாகவும், தரை மார்க்கமாயும் படைகளை இறக்குவதற்கு எதிரி செய்த முயற்சி பலிக்கவில்லை.

கிழக்குப் பக்கத்தில் பெராக் நதியை பிராக்லாட்னியா என்ற இடத்தில் கடந்து கிராஸ்னியை நோக்கிச் செல்லவும் முயற்சித்திருக்கிறான்.

வான் பாக்கின் படைகள் காகஸஸைக் கடந்து எல்பர்ஸ் சிகரத்தைக் கடந்ததாகத் தெரிகிறது.

ரிஷெவ்வில் எதிரியின் பலத்தினால் ருஷ்ய முன்னேற்றம் தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது.

லெனின்கிராட்டில் ருஷ்ய முன்னேற்றத் தாக்குதலும், லகோடாவில் ருஷ்யத் தாக்குதலும், கலூகாவில் குறுக்கு எதிர்ப்பும் ஏற்பட்டிருக்கிறது.

பாரன்ட்ஸ் கடலில் 3 எதிரி போக்குவரத்துக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

ஆகவே லெனின்கிராட் முதல் காகஸஸ் வரை பல சண்டைகள் நிகழ்கின்றன. வடக்கே ருஷ்யர்கள் முன்னேற்றத்துடன் கூடியிருக்கின்றனர். மத்தியிலும் ஆரம்பத் தாக்குதலைச் செய்கின்றனர். டான் வளைவில் ஸ்டாலின்கிராட் முற்றுகையிடப்பட்டிருக்கிறது. ஜெர்மன் முன்னேற்றம் தெற்கில் நோவோரோஸ்க்கில் தாமதமாயிருந்தாலும், கிராஸ்னியில் வெகு அருகாமையிலும்,



டிப்லிஸ்ஸை (Tiflis) நெருங்கிக்கொண்டும் இருக்கிறது. வடக்கே அடையப்படும் ருஷ்ய வெற்றிகளும் தற்காப்பானவையே. இதிலிருந்து ருஷ்யர்களுக்குள்ள பலம் தெரிகிறது.

**எகிப்து.**—திங்கட்கிழமை மறுபடி ரோமல் சண்டையைத் துவக்கியிருக்கிறான். வழக்கப்படி நேசதேசச் சைனியத்தின் இடது பக்கத்தை எல்ஹிமெய்மட்டிற்கு அருகில் தாக்கினான். இது எல் அல்மீனுக்கு 25 மைல் தெற்கில் இருக்கிறது. சண்டை முக்கியமாக டாங்கிப் போராகவேதானிருந்தது. நேசதேச சுரங்கப் பிரதேசத்தில் ரோமல் சுமார் 8 மைல் தூரத்தைக் கடந்ததாகத் தெரிகிறது. அதில் இதாலியர் திருப்பியடிக்கப்பட்டனர்.

இதாலிய கம்யூனிகேயின்படி கிரீட்டிற்கு அருகில் கரிகோடா தீவில் நேசதேசப்படை இறங்க முயன்றது. ஸிஸிலியின் விமான தளங்களும், காரின்த் கால்வாய், கிரீட் இங்கிருந்த எதிரிக் கப்பல்களும் தாக்கப்பட்டன. டொப்ருக், எல்பாடா, முதலியவை தாக்கப்பட்டன.

**தெற்கு பஸிபிக்.**—சென்ற வாரத்தில் ஸாலமன் தீவுக்கூட்டங்களில், ஆறு தீவுகளை நேசதேசப் படை பிடித்ததாக அறிவித்தோம். அதில் டுலாகி துறைமுகமும், கூடால்கனாரிலுள்ள விமான தளமும் அடங்கியது. அமெரிக்கக் கப்பல் கூட்டத்தை கலைக்க வந்த ஜப்பானியக் கப்பற்படையில் பெரிய கப்பல்களும், விமானமேற்றும் கப்பல்களும், போக்குவரத்துக் கப்பல்களும் திருப்பியடிக்கப்பட்டன. மறுபடி வந்தாலும் தற்போது ஸாலமனிலிருந்து எதிரி பின்வாங்கியிருக்கிறான். நியூ ஸீலாந்து பிரதம மந்திரியின் மொழியின்படி செய்தி திருப்திகரமாயும், நேசதேசங்கள் அடைந்த லாபங்கள் வாஸ்தவமாயும் இருக்கின்றன.

நியூ கினியில் மில்னிகுடாவில் இறங்க எதிரி செய்த முயற்சியும் பலிக்கவில்லை. நேசதேச பலம் தெரியாமல் இறங்கியதால் எதிரி கழட்டிச் செல்லவேண்டி வந்தது.

மோர்ஸ்பி மார்க்கத்திலுள்ள ஓவன் ஸ்டான்லி மலையைத் தாண்டி நேசதேச வரிசைகளின் வழியாக எதிரி சென்று கோகோடா என்னுமிடத்தில் சண்டையைச் செய்கிறான்.

**சைனா.**—சீனர்கள் பல இடங்களைப் பிடித்திருக்கின்றனர். ஸின்ஹுஸென், டுங்லியாங், சுடிஸியானீ யுவாங்டங், ஸுசாங், லிகிடன், சோங், லிங்ஸ்சான்சன், ஸூன்யாங், லீன்டங், லுங்யு அகொங், புகி முதலியன.

இந்த வெற்றிகளிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன. ஒன்று மார்ஷல் சயாங் கை ஷேக்கின் படைகள் போதுமான பலம் பெற்றிருக்க வேண்டும். அல்லது வேறு இடத்தில் பலப்படுத்த ஜப்பான் சைனாவிலிருந்து படைகளைப் பின்வாங்க வேண்டும். மேலும் பஸிபிக்கிலும், சைனாவிலும் ஒரே சமயத்தில் ஜப்பானால் சண்டை செய்ய முடியவில்லையென்று தெரிகிறது. டோக்கியோவைத் தாக்க உதவிய விமான தளங்கள் மறுபடி நேசதேசங்கள் வசமாகிவிட்டன.

**பர்மா.**—அஸ்ஸாம் பர்மிய எல்லைப்புறத்தில் நாகா கொரில்லாப் படைகள் ஜப்பானியரைத்தாக்கின. பிரிடிஷ் விமானப்படை மாக்வி என்ற விமான தளத்தையும், அக்யாப்பில் உள்ள நதிப்படையும் தாக்கியது.

**விமானப் படையெடுப்புகள்.**—அபிவில்லி, ராட்டர்டாம், நூரம்பர்க், ஸார்பாக்கன் காஸல் முதலியவை தாக்கப்பட்டன. பெர்லின், டான்ஜிக், கோனிக்ஸ்பர்க் ஸ்டார்கிராட், பூரோடென்வால்டி, ஸ்டால்ப், ஸெனேடிமூல், டிரப்போ முதலியவைகளை ருஷ்ய விமானங்கள் தாக்கின. ஸெயிண்டு ஓமார், இட்ராடாட் முதலியவைகளை ஆங்கிலேய—அமெரிக்க விமானங்கள் தாக்கின.

**பல்வகைப்பட்டவை.**—1.—மெக்ஸிகோவில் 4,00,000 பேருள்ள அயல் நாட்டுப் படை ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நேசநாடுகளின் உதவிக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

2. 'யுத்தத்தில் ஈடுபட்ட நாடாக' உருகுவே அறிவித்திருக்கிறது.

3\. தேசீய ஸிவில் பாதுகாப்புப் படையை ஜனாதிபதி வார்காஸ் அமைத்திருக்கிறார்.

4\. பிரஸில், உருகுவே கடற்கரைப் பாதுகாப்பில் வட அமெரிக்கப் படைகளும் ஒத்துழைக்கும்.

5\. ஜப்பானின் அயல்நாட்டு மந்திரியான மிஸ்ட்டர் ஷிகெனோரி டோகோ ராஜீநாமா செய்துவிட்டான்.

6\. ஸ்வதந்திரப் பிரெஞ்சுப்படை, மத்தியக்கிழக்கு, ஆபிரிக்கா, பஸிபிக் முதலியவைகளில் 60,000 பேர் அடங்கியிருக்கிறது. மாலுமிகள் நாசகாரிகளிலும் சிறிய படகுகளிலும், நீர்மூழ்கிகளிலும், ஈடுபட்டிருக்கின்றனர். 2,800 விமானிகள் இங்கிலீஷ் கால்வாய், லிபியா, எகிப்து முதலிய இடங்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

7\. அபிஸீனியா தனி ராஜ்யமாகிவிட்டது. பிரிடிஷாரின் பந்தோபஸ்துக்காக வைக்கப்பட்டுள்ள ஒரு சிறு சைனியத்தைத் தவிர இதர பிரிடிஷ் படைகளெல்லாம் அடிஸ் அபாபாவிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **24—8—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்—ராணுவ லக்ஷியங்கள்—ரைன்லாந்தின் (Rhineland) மேல் பாகம், முக்கியமாக பிரான்க்பர்ட்டும் (Frankfurt), விஸ்பேடன் (Wies Baden). | | 16 விமானங்கள். | |
| | ரயில்வே தொழிற்சாலைகள்—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | அநேக யந்திரங்கள் சேதமாயின. | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி போக்குவரத்து வண்டிகள்—எல் அலமீன் (El Alamein) போர்முனையில் தென்பகுதி. | | | |
| | **ஐயோனியன் கடல் (Ionian Sea)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு எண்ணெய் கப்பல், இன்னும் மற்ற கப்பல்கள்—ஐயோனியன் கடல் (Ionian Sea). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச்சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—கிழக்குப் போர்முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)-சைனு (China)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | ஜப்பானியர் கைப்பற்றிய விமான தளங்கள்—சிகியாங் (Chekiang). | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய ஸ்தானங்கள்—டிமோர் (Timor). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **24—8—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தரையிலுள்ள விமானங்கள்—பூனு (Buna). | | | 13 விமானங்கள். |
| | துணைபுரியப்பட்ட ஜப்பானியச் சிறு கப்பற் கூட்டம்—நியூ கினி (New Guinea)க்குத் தென்கிழக்கே. | | 1 விமானம். | |
| | **தூரக்கிழக்கு–நியூ பிரிடன் (New Britain)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதியின் கடல் விமான தளங்கள்—நியூ பிரிடன் (New Britain), ராபால் (Rabaul). | | 1 விமானம். | |
| **25—8—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால). | | | |
| | இரவில்.—பிராங்பர்ட் (Frankfurt), விஸ் பேடன் (Wies Baden) (ரைன்லாந்திலுள்ள பட்டணங்கள்). | | | |
| | ஜெர்மன் ஸப்ளைக் கப்பல்கள்—டெர்ஷிலிங் (Terschelling) தீவுக்கு வடக்கே. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கிழக்குமுகமாகச் செல்லும் விரோதிப் போக்குவரத்து—விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | வண்டிகள்—ஸோலூமிலிருந்து மெர்ஸா மாட்ரூ (Sollum-Mersa Matruh) வரை செல்லும் ரஸ்தாவில். | | | |
| | டாங்கிகள், வண்டிகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விமானமிறங்கும் மூன்று இடங்கள்—எல்டாபா (Eldaba)விற்கருகாமையில். | | | |
| | ஒரு முகாம், வண்டிகள்—பூகா (Fuka)வுக்கருகாமையில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானுக்குச் சொந்தமான துணைக் கப்பற்கூட்டம்—மில்னே (Milne) விரிகுடாவில். | ஒரு யுத்தக் கப்பல் மூழ்கியது. ஒரு நாசகாரி சேதமாயிற்று. | | |
| | விமான நிலயங்கள்—பூனு (Buna). | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானுக்குச் சொந்தமான கட்டடங்கள்—டில்லி (Dilli): | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **26—8—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள், ஒரு எண்ணெய்க்கப்பல்—லாபலிஸ் (Lapallice). | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | அச்சு நாடுகளின் ஸப்ளை வண்டிகள்—மெர்ஸா மாட்ரு (Mersa Matruh). | | | |
| | டாங்கி, மோட்டார் கூட்டங்கள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப்போர்கள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **ஜெர்மனி (Germany)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | ராணுவ லக்ஷ்யங்கள், தொழிற்சாலைகள்.—பெர்லின் (Berlin), டான்ஸிக் (Danzig), கோனிக்ஸ்பர்க் (Koenigsburg), ஸ்டார்கிராட் (Stargrad), பூயர்ஸ்டன்வால்டே (Fuerstenwalde), ஸடோயிப் (Stoip), ஸ்நீடேமூகல் (Scneide-Muhl), ட்ரெப்டௌ (Treptow), ஸ்டெடின் (Stettin), டில்ஸிட் (Tilsit). | | | |
| | **தூரக்கிழக்கு–பர்மா (Burma)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், விமானம் பறப்பதற்கு உதவுமிடங்கள்.–லாஷியோ (Lashio). | | | 4 விமானங்கள். |
| | **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானஙகளால்). | | | |
| | விரோதியின் படகுகள், ஸப்ளைகள், எண்ணெய்க் கிடங்குகள்.—மில்னே (Milne) விரிகுடாக் கடற்கரையில். | | | |
| **27-8-42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானஙகளால்). | | | |
| | பகலில்.—3 ஜெர்மன் கப்பல்கள்—ஒரு கப்பல் தாக்கப்பட்டது. டியப் (Dieppe) துறைமுகத்திற் கருகாமையில். | | நஷ்டம் இல்லை. | |
| | ஜெர்மன் விமானதளம்.—அபிவில்லி (Abbeville). | | | |
| | கப்பல் கட்டுமிடங்கள்.—ராட்டர்டாம் (Rotterdam). | | | |
| | இரவில்.—ஹென்ஷல் (Henschel) தொழிற் சாலைகள் கேஸல் (Kassel). | பலத்த சேதம். | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—கிடினியா (Gdynia) துறைமுகம். | | | 1 விமானம். |
| | ரயில்வே கட்டடங்கள், இதர லக்ஷியங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel). | 2 கப்பல்கள் தீப்பிடித்தன. | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **27—8—42.** (வியாழக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி போக்குவரத்து வண்டிகளின் கூட்டம்.–எல் அலமீன் (El-Alamein) போர்முனையின் தெற்குப்பகுதியில். | | | |
| | விரோதிப் படகுகள்.—ஆபிரிக்கக் (African) கடற்கரைக்கருகாமையில். | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | அச்சு நாட்டுக்குச் சொந்தமான ஒரு பெரிய எண்ணெய்க் கப்பல்.–கிரீட்டு (Crete)க்கருகாமையில், கிழக்கு மத்தியதரைக்கடலில் (Mediterranean). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனையில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—பூனு (Buna), லே (Lae). | | | |
| **28—8—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமானம் செய்யும் தொழிற்சாலைகள்.—மியேலெட் (Meaulte). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸெயின்ட்ஓமர் (St. Omer), எட்ரிடாட் (Etretat). | | 1 விமானம். | 1 விமானம். |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—நியூரெம்பர்க் (Nuremburg), ஸாயர்ப்ருக்கன் (Saarbrucken). | | | |
| | விமான எதிர்ப்பு.—வடபிரான்ஸ் (France). | | 30 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | மோட்டார் போக்குவரத்து.—பார்டியா (Bardia)வுக்கு மேற்கேயுள்ள ரஸ்தாவில். | | | |
| | விமானமிறங்குமிடம்.—எல் டாபா (Eldaba). | | | |
| | ஸ்டோர்கள், தொழிற்சாலைகள்.—எல் டாபா (Eldaba) பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | விமான நிலயம்.—மாக்வி (Magwe). | | | |
| | **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லிஷுய் (Lishui). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**28—8—42.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

**தூரக்கிழக்கு–நியூ பிரிடன் (New Britain)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
ஒரு விமான நிலயம்.–ராபால் (Rabaul).

**தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
ஒரு விமான தளம்.—பூனு (Buna).

**ஸாலமன் தீவுகள் (Solomon)** —(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
விரோதிக்குச் சொந்தமான விமான நிலயம்—புகா (Buka).

**தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
விரோதி சாமான் கப்பல்.—ஆம்பானு (Ambon)க்கருகாமையில்.

**29—8—42.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).
பகலில்.—கப்பல் துறைகள்–ஆஸ்டெண்டு (Ostend).
மின்சார உற்பத்திசாலை.—லில்லெனஸ் (Lille-lens) பிரதேசத்தில்.
ஜெர்மனிக்குச் சொந்தமான விமான நிலயம்.-விவல்கெம் (Wevel Ghem). — நஷ்டமில்லை.
இரவில்.—சுரங்கவெடிகள் போடுவது விரோதி சமுத்திரங்களின் கடற்கரை ஓரங்களில்.

**ஜெர்மனி (Germany)**—(ருஷ்ய விமானங்களால்).
ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.–பெர்லின் (Berlin), கோனிக்ஸ்பர்க் (Koenigsburg) டான்ஸிக் (Danzig), ஸ்டெடின் (Stettin) இன்னும் மற்ற இடங்கள்.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).
டாங்கிகள், மோட்டார் போக்குவரத்து, முகாம்கள்.—யுத்தப் பிரதேசத்தில்.
மோட்டார் போக்குவரத்து, முகாம்கள்.–புகா-ஸிடிரஹ்மான் (Fuka-Sidi-rahman) ரஸ்தா எங்கும்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).
விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
விமான நிலயம்.—மியிட்கியினு (Myitkyina).

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**–அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
விரோதிக்குச் சொந்தமான க்ரூயிஸர், போக்குவரத்துக் கப்பல்கள்.—நியூ கினி (New Guinea)க் கருகாமையில்.



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**30—8—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).
பகலில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.
இரவில்.–சுரங்க வேடிகள் போடுவது.–விரோதி சமுத்திரங்களில்.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).
துறைமுகம், கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk).
விரோதிக் கப்பல்கள்.—ஸிரெனைகாவின் (Cyrenaica) கடற்கரைக்கருகாமையில். — 3 கப்பல்கள் தாக்குண்டன.
விமானமிறங்குமிடங்கள்.—எல்டாபா (Eldaba).
விரோதிப் போக்குவரத்து வண்டிகள்.—மெர்ஸாமாட்ரூ (Mersa Matruh)க் கருகாமையில்.
விரோதி டாங்கிகள், கவசம் பூண்ட வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில்.
விமானச் சண்டைகள்—யுத்தப் பிரதேசத்தில். — 2 விமானங்கள்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).
விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேச முழுவதிலும்.

**தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
நதியில் செல்லும் படகுகள்.—ஆக்கியாப்பு (Akyab)க் கருகாமையில்.

**சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
நான்சங் (Nanchang).

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).
விமான நிலயங்கள் பிரதேசம், கட்டடங்கள்—லே (Lae).
தரைப்படைக்கு உதவும் விமானங்கள்—கொகோடா (Kokoda).
விரோதி முகாம்—பூனு (Buna).

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**25—8—42.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).
இரவில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையில் அங்குமிங்கும் சில இடங்கள்.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).
மால்டா (Malta).

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **25—8—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | துளாகி (Tulagi). | | | |
| **26—8—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஒரு இடம் இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையில். | | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்—ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் துறைமுகம் (Port Darwin). | | | |
| **27—8—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்- இங்கிலாந்தின் (England) வடக்கு. | சொற்பச் சேதம். | 1 விமானம். | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | நைல் டெல்டா (Nile Delta) | | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸ்டாலின் கிராட் (Stalingrad). | | | |
| **28—8—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தென்மேற்குக்கரை. | | 1 விமானம். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | புரூம் (Broome). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| **29—8—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | கெய்ரோ (Cairo) பிரதேசம். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **30—8—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால் | | | |
| | விமான எதிர்ப்புகள்—மால்டா (Malta). | | | |
| | **ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் துறைமுகம் (Port Darwin). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **31—8—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டத்தைப்பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ருஷ்ய நகரங்கள்—சைனிய வரிசைகளுக்குப் பின்புறத்தில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—மில்னே (Milne) விரிகுடாவுக் கருகாமையில். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

**உணவுப் பிரச்னை.** எதிர்பார்க்கும் விதமாக யுத்த காலத்தில் உணவுப் பிரச்னைதான் அதிக சிரமமாக இருந்துவருகிறது. இப்பிரச்னை சிப்பாய்களுக்கும், பொதுமக்களுக்கும் ஒரு மாதிரியானது தான். சென்ற வாரத்தில் தற்செயலாக இரண்டு யாதாஸ்துகள் ஒரே சமயத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று பிரிடிஷ் உணவு மந்திரியாலும், மற்றொன்று டெல்ஹியிலுள்ள உணவு உபதேசச் சங்கத்தினாலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் யாதாஸ்தின்படி 'கடுமை முறைகளைப் பின்பற்றியதால், இத்துறையில் அதிக வெற்றி ஏற்பட்டிருக்கிறதாகவும்,' இந்திய யாதாஸ்தின் படி இந்தியாவில் இப்பிரச்னை மெதுவாயும், முடிவாயும் கவனிக்கப்பட்டு வருகிறதென்றும் தெரியவருகிறது.

தேசிய உணவுப் பிரச்னை என்பது சாமான்களின் உற்பத்தி முதல், பிரிவினை வரை பல சிறுங்கலைகளைக் கொண்டது, மறுபடி நிலங்களுக்குச் சென்று, சாகுபடி செய்யும் நிர்ப்பந்தம் ஏற்படும். ரோடு, ரயில், கடல் முதலிய போக்குவரத்துப் பிரச்னையும் அதற்கு சாதனங்களான, வண்டிகள், படகுகள், கப்பல்கள் இவைகளின் தேவையும் இருக்கும். இவைகளுக்கு இடையே மத்தியஸ்தம் பேச, தரகுகாரர்களும், மொத்த வியாபாரிகளும், சில்லரை வியாபாரிகளும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் லாபம், இவ்விதமான பிரச்னைகள் தானே எழும். இவ்வளவும் ஏற்படுத்தினால் அவைகளை விலை கொடுத்துவாங்க பொதுஜனங்களின் சக்தியும் பிரியமும் கவனிக்கப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேல் இதோடு இதர பண்டங்களையும் சமமாக உற்பத்தி செய்தால் தான் சரீர போஷணத்திற்கு லாயக்கான உணவு கிடைக்கும்.

சாதாரண காலங்களில் பிரிடனுக்குத் தேவையானதில் பாதி உணவு வெளிநாட்டிலிருந்து வந்துகொண்டிருந்தது. தற்சமயத்தில் முழுமையையும் பிரிடனிலேயே உற்பத்தி செய்து அதற்கு உபயோகமாயிருந்த கப்பல்களை யுத்த சாமான்களின் போக்குவரத்திற்கு உபயோகிக்கிறது. 'வெற்றியை முன்னிட்டு அதிகம் உற்பத்தி செய்யுங்கள்' என்ற இயக்கத்தினால் அரண்மனை உத்தியானங்களெல்லாம் தோட்டங்களாக உபயோகப்படுத்தப்பட்டு உணவு உற்பத்தி அதிகமாக்கப்பட்டிருக்கிறது. மேலும் தினசரி உணவுச் சீட்டுகள் கொடுக்கப்படுவதாலும் விலைகள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாலும், ஜனங்களின் உல்லாஸத் தேவைகள் குறைக்கப்பட்டு யாவருக்கும் ஒரே மாதிரியாக உணவு பிரிக்கப்படுகிறது. இதர பொருள்களின் விலைகள் நிர்த்தாரணம் செய்து எல்லாம் பண்டங்களும் கிடைக்கும் படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதோடு, கர்ப்பிணி ஸ்திரீகள், அதிக உழைக்கும் தொழிலாளிகள், குழந்தைகள், நோயாளிகள் இவர்களுக்கு பிரத்யேகமான உணவு கொடுப்பதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது

ஐரோப்பாவிலுள்ள பிரச்னை அதே விதமாகக் காணப்பட்டாலும் ஒரே மாதிரியானதல்ல. பிரிட்டனைப்போல் இந்தியாவில் உணவுத்தட்டு கிடையாது. போதுமான அளவு இங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. தினசரிச் சீட்டுக் கொடுக்கும் முறை இந்தியாவில் கையாளப்பட்டால் அதிக சிக்கல்கள் உண்டாகும். இம் முறையை அதிகமான தேவை ஏற்பட்டாலொழிய அரசாங்கத்தார் ஏற்படுத்தமாட்டார்கள். சரியானப் பிரிவினைப் பிரச்னைதான் இந்தியாவில் கடுமையாகக் காணப்படுகிறது. அதிக லாபமடிப்பதும், கட்டிப் போட்டு வைப்பதும் இருப்பதால் தான் இப்பிரச்னை காணப்படுகிறது.

தினசரிச் சீட்டுக் கொடுக்கும் முறை இல்லாத போதிலும் சரியானபடி மேற்பார்ப்பதாலும், சட்ட திட்டங்களை ஏற்படுத்தியும் அரசாங்கத்தார் நிலைமையை அடக்கி வருகின்றனர். புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளைப் பார்த்து, அரசாங்கத்தார் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக அதிகமான நிலங்களைச் சாகுபடி செய்கிறவனுக்கு வரி, விரை, எரு முதலியவைகளில் சில சலுகைகள் காட்டப்படுகின்றன. உணவுப்பண்டங்களையும், இதர வியஞ்சன சாமான்களையும் மறைத்துக் கட்டிப்போடுகிறவர்களுக்கு தண்டனை விதிக்க ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விவரங்களை வியாபாரிகள் அறிந்து, எச்சரிக்கை கொள்ளவேண்டும். இதோடு மட்டுமல்லாது, விற்க மறுத்தாலும் அதிக விலை கேட்டாலும் அவர்களுக்கும் இச்சட்டம் அன்வயிக்கும். சந்தேக மேற்பட்டால் அரசாங்கத்தார் அப்பேற்பட்ட பண்டங்களைப் பறிமொதல் செய்து பகிரங்கமாக ஏலம்போடுவார்கள்.

தினசரிச் சீட்டுக் கொடுக்கும் முறைக்கு சமமாகவே இந்திய மாகாண கவர்ன்மெண்டுகளும், ஸமஸ்தான அரசாங்கங்களும் நிலைமையைக் கட்டுப்படுத்தி வருகின்றனர். இதே போதுமா, அல்லது இன்னும் தீவிர நடவடிக்கையை அரசாங்கத்தார் எடுத்துக்கொள்ள வேண்டுமா என்பது இந்தியாவில் ஏராளமாக உள்ள வியாபாரிகள், பொதுஜனங்கள் இவர்களின் நோக்கத்தைப் பொருத்திருக்கிறது. சரியான சமயத்தில் எச்சரிக்கை பெற்று அதன் படி நடந்து கொள்ளுவது தான் கெட்டிக்காரத்தனம். தேசாபிமானத்திற்கும், தேசத்தின் க்ஷேமத்திற்கும் உகந்ததாகும்.

இவ்விஷயத்தில் சொந்த அறிவை உபயோகிக்கவேண்டும். அல்லது ஒவ்வொரு கிராமத்திலும், முச்சந்தியிலும், சந்தைகளிலும் தேசிய யுத்த முன்னணியில் ஈடுபட்டிருப்போர் எடுத்துக் கூறுவதைக் கேட்டு அதன்படி நடந்து கொள்ளவேண்டும். ஒன்றுமே தெரியாதவனைப் போல் நடந்து கொள்ளுவது தவறாகும்.

ஏழைமக்களுக்கும் ஒரு வார்த்தை. ஏழை மக்கள் மனது வைத்தால் உணவை மீதப்படுத்தி அதனால் சரீர பலம் பெறுவதற்கு ஒரு வழி யிருக்கிறது. அதாவது கைக்குத்தரிசியை உபயோகிக்கலாம். அடிக்கடி, கம்பு, தினை போன்ற தானியங்களையும் உபயோகிக்கலாம். தானகப் பயிர் செய்த காய்கறிகளை அதிகம் உபயோகிக்கலாம். இது அதிகச் செலவு பிடிக்காது. அல்லது கோழி, ஆடு முதலியவைகளை வளர்த்தாலும், சிறிய பால்பண்ணை முதலியவைகளை வைத்துக் கொண்டிருந்தாலும், அதனால் எவ்வளவோ நலம் பெறலாம். கடையில் சாமான்களை வாங்கும்போது உசிதமான விலையைக்கொடுங்கள். வியாபாரியின் நோக்கத்திற்கு இணங்க மறுக்க வேண்டும். அதிகலாபம் வைத்து விற்பவனிடமிருந்தும், சாமான்களைக் கட்டிப்போட்டு வைத்துக்கொண்டிருப்பவனிடமிருந்தும் உங்களுக்குத் தேவையான உணவுப்பண்டங்களை உசித விலைக்குப் பெற அரசாங்கத்தார் உங்களுக்கு உதவியளிப்பார்கள்.

வி வி வி வி வி வி வி

**யுத்த நிலைமை.**

இவ்வாரத்தில் யுத்த சம்பவங்கள் சாதகமாயும், பாதகமாயும் இருக்கின்றன. தூரக்கிழக்கில் நேசநாடுகளுக்கு சாதகமாகவே இருந்துவருகிறது. நான்செங்—நான்சாங், ஷிஸூயி—வென்சவ் இவைகளுக்கிடையே ஆறு வார காலமாக சீனர்கள் சண்டைசெய்து ஒவ்வொரு இடத்திலிருந்தும் ஜப்பானியரைத் துரத்திவிட்டனர்.



டோகியோவைப் படையெடுப்பதற்கு லாயக்கான விமான தளங்களையும் பிடித்துக் கொண்டனர். செகியாங்—கியாங்ஸி இருப்புப்பாதையும் ஜப்பானியர் கைவிட வேண்டிவந்தது.

தென்மேற்குப் பஸிபிக்கில் ஸாலமன் கூட்டத்தில் அமெரிக்கர்கள் ஆறு தீவுகளைக் கைப்பற்றியிருக்கின்றனர். மில்னிகுடாவில் செய்யப்பட்ட ஆரம்ப முன்னேற்றங்கள் முறிந்தன. ஆனால் சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி மோர்ஸிபிக்கு அருகில் ஜப்பானிய ஆக்கிரமணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சமயத்தில் அமெரிக்காவில் பொறுப்பு வாய்ந்தவர்களின் எச்சரிக்கையை சுங்கிங் செய்தி கூறுவதை கவனிப்பது நலம். ஸாலமன் யுத்தம் முடிவான வெற்றியை நிர்த்தாரணம் செய்யாது. ஜப்பானியர் தங்களுடைய சைனியங்களை அப்புறப்படுத்துவதாலேயே சீனர்கள் வெற்றியடைந்து வருகின்றனர். ஆகவே இங்கே சமீபத்தில் கிடைத்த வெற்றிகளைக்கொண்டு இந்தியாமேல் படையெடுப்பு நேராதென்று நிச்சயம் கூறமுடியாது.

ருஷ்யாவிலிருந்து கிடைத்த செய்திகள் மிகவும் கவலைக்கிடமானதாக இருக்கின்றன. ருஷ்யச் சைனியங்கள் ஸ்டாலின்கிராட்டிற்கு முன்னால் கொஞ்சம் கொஞ்சமாக எதிரிக்கு இடம் கொடுக்கின்றன. மத்திய, வடக்குப் பாகங்களில் எதிரி தடைபட்டாலும் கிராஸ்னி, நோவோரோஸிஸ்க் முதலிய இடங்களை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறான்.

சமாதானமாக ருஷ்ய எண்ணெயையும், உணவுப்பொருள்களையும் அடைய முடியாததால் ருஷ்ய யுத்தத்தை ஜெர்மானியர் துவக்கினார்கள். மாஸ்கோவிற்கும், லெனின்கிராட்டிற்கும் முன்னால் ருஷ்ய மாரிகாலத்தில் எதிரி தடையுற்றான். ஆனால் அந்த சமயத்தில் ஜப்பானும் சண்டையைத் தொடுத்துவிட்டதால் ஹிட்லருக்குக் கொஞ்சம் அவகாசம் கிடைத்தது. அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டதும் ஹிட்லரின் ஆசைகள் சிதறின. அமெரிக்காவும், பிரிட்டனும் ஒன்று சேர்ந்து முஸ்தீப்பு பெறுவதற்குள் ருஷ்யாவைப் பிடித்துவிட வேண்டுமென்று ஹிட்லர் நினைத்துவருகிறான். இதனால்தான் எப்படியாவது ருஷ்யாவிற்கு உதவி அனுப்ப நேசதேச யுத்த தந்திரம் இருந்துவருகிறது. இதற்காக வேறு போர் முனையை ஏற்படுத்தியோ, நேராடி உதவியனுப்பியோ, வேறுவித முயற்சியினாலேயோ ருஷ்யச் சைனியங்களை பலப்படுத்தவேண்டும்.

இதற்கிடையில் எகிப்தில் ரோமல் சண்டையைத் துவக்கியிருக்கிறான். இன்னும் கொஞ்ச நாள் க்ரமித்தே இதன் தன்மையைக் கூறமுடியும்.

வி வி வி வி வி வி வி

**இரண்டாம் போர்முனையைப் பற்றிய பயம்.**

பிரிட்டனும், நேச நாடுகளும் இரண்டாம் போர் முனையை ஏற்படுத்தும். அது அடுத்த வாரமோ, அடுத்த மாதமோ, அடுத்த வருஷமோ ஏற்படலாம். எப்போ, எங்கு என்று மிகவும் தைரியசாலிகளே கூற முடியும். ஆனால் மேற்கு ஐரோப்பாவில் படையெடுப்பைத் தடுப்பதற்கு ஜெர்மனி மும்மரமாகச் செய்துவரும் தயாரிப்புகளைப் பார்த்தால், ஜெர்மனி பயமடைந்திருக்கிறதென்று நன்றாகத் தெரிகிறது. டியப் தாக்குதலுக்குப் பிறகு இங்கிலீஷ் கால்வாய்ப் பக்கமாக உள்ள பிரெஞ்சுக் கடற்கரையில் சதா படையெடுப்பு எச்சரிக்கைக் கொடுக்கப்பட்டுவருகிறது. இங்குமங்கும் எடுத்துச் செல்லக்கூடிய புதிய பீரங்கிப்படை வைக்கப்பட்டிருக்கிறது, பெல்ஜியத்தை ஆக்கிரமிக்கவந்த ஜெர்மன் படைகளுக்கு ஜெர்மனி புதிய உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதன்படி பெல்ஜியத்திலிருந்து பின் வாங்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், எல்லா இடங்களை அழிப்பதற்கும், சந்தேகப்பட்டவர்களை விசாரணையில்லாமலேயே தூக்கிடுவதற்கும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் பின்வாங்கும் படை முன்னால்வைத்து கொரில்லாப் படைகளையும், குடை விமானிகளையும் தடுப்பதற்கும் சைனியத் தலைவர்களுக்கு அதிகாரம் உண்டு. இரண்டாம் போர்முனையைப்பற்றி ஜெர்மனிக்கு உட்பட்ட பத்திரிகைகளிலும், ரேடியோக்களிலும் எடுத்துச் சொல்லி, ஜெர்மனியின் உள்நாட்டு நிலையையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தயார்செய்துகொண்டு, அடிமை நாடுகளைப் பயமுறுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆனால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் ஒருவித சஞ்சலமும்

காணப்படவில்லை. அதற்குப் பதிலாக விடுவிப்பு நாளையே ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**பிரிடிஷ் விமானப்படை.** ஆகஸ்டு 1ல் விமான இலாகா பிரசுரித்திருக்கும் கணக்குகளிலிருந்து ஜெர்மனி பேரில் பிரிடிஷ் விமானப்படை செய்த தாக்குதல்களின் விவரம் தெரியவருகிறது. ஜூன்—ஜூலை மாதங்களில் 1940-ல் 3,500 டன் குண்டுகளும், 1941-ல் 8,500 டன்னும், 1942-ல் 13,000 டன்னும் போடப்பட்டது. ஜூலை 12 ஆகஸ்டு 11 வரையிலுள்ள 30 இரவுகளில் 13 இரவுகளில் பிரிடிஷ் விமானப்படை படையெடுப்பு செய்து, 100 முதல் 600 விமானங்களை உபயோகித்து 450—700 டன் குண்டுகளைப் போட்டிருக்கிறது. சராசரி 450 டன் ஆகிறது. ஜெர்மனி ஒரு தடவையில் பிரிடன் பேரில் அதிகமாக 250 டன் குண்டுகளைத் தான் போட்டது.

ஜெர்மன் தாக்குதல்கள் காண்டர்பரி, நார்விச், பாத் போன்ற நகரங்களின் பேரில் நடந்தன. ஆனால் பிரிடிஷ் விமானப்படை ராணுவ முக்கியத்துவமில்லாத நகரங்களைத் தாக்கவேயில்லை. ஜூன் 18ல் காமன்ஸ் சபையில், ஜெர்மன் நகரங்களையும், கிராமங்களையும் நாம் பிரதியாகத் தாக்கவேண்டுமென்று சிபார்சு செய்தபோது மிஸ்டர் அட்லி அதை காதில் வாங்கிக்கொள்ளாமல் 'அப்படிப்பட்ட தாக்குதலுக்கு ஜெர்மனியில் உள்ள கிராமங்கள் போதாதே' என்று பதில் உரைத்தார்.

பிரிடிஷாரின் திட்டமென்பது ராணுவ அம்சத்தில் மிகவும் சரியாகவும், தயவு உள்ளதாகவும் இருப்பதால் பயனடைந்துவருகிறது. விமானத் தாக்குதலின் புகைப்படங்களைப் பார்த்தபோது ஜெர்மன் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் மிக அதிகம் என்று தெரிகிறது.

தற்போது அமெரிக்க விமானப்படையும் ஈடுபட்டுவருவதால் 2,000 விமானங்களும், 4,00,000 உத்தியோகஸ்தர்களும் தங்குவதற்கு பிரிடனில் 150 விமான தளங்கள் கட்டப்பட்டிருக்கின்றன ஆகவே ஆங்கிலேய-அமெரிக்க ஒத்துழைப்பினால் ஜெர்மன் யுத்த முயற்சி நிச்சயம் பூரா அழிக்கப்படும்.

வி வி வி வி வி வி வி.

**பைத்தியக்காரன் கண்ட கனவு.** பிரஸீல் அச்சு நாடுகளுக்கு எதிராகச் சண்டை தொடுத்ததிலிருந்து உலகாக்கிரமணம் என்ற ஹிட்லரின் பெரும் கனவு பொய்யாயிற்று. டாக்டர் ராஷ்நிங் சொல்லுவது நிஜமானால், பிரஸீலைப் பிடித்துக்கொண்டு தென் அமெரிக்காவில் ஜெர்மன் ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கவே ஹிட்லர் ஆசைகொண்டிருந்தான். பிரஸீலின் கடற்கரையையும், ஏற்கனவேயே அங்கு வசித்துவரும் ஜெர்மானியரைத் தனது லக்ஷியத்தை சாதிக்க உபயோகித்துக்கொள்ளவும் நினைத்தான். ஆனால் பிரஸீல் விபரீதமாக நடந்துகொண்டுவிட்டது.

ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலியவைகளைப்போல் பிரஸீல் ராணுவத்தில் அவ்வளவு முன்னேற்றமில்லாமலிருந்தாலும், இதர தென் அமெரிக்க நாடுகளைக்காட்டிலும் அதிக நல்ல நிலையிலிருக்கிறது. பிரஸீல் சைனியத்தில் 2,21,000 பேர் திட்டமாயும், 1,00,000 பேர் வேறு படையைச் சேர்ந்தவர்களும், போலீஸ் படையில் 40,000 பேர்களும் இருக்கின்றனர். 21-வயதுக்கு மேற்பட்ட எல்லாப் புருஷர்களுக்கும் கட்டாய ராணுவப் பயிற்சி உண்டு. பிரஸீலுக்கு 2 சண்டைக் கப்பல்களும், 2 சிறிய க்ருயிஸர்களுக்கும், 8 நாசகாரிகளும் 4 நீர்மூழ்கிகளும், 52,864 டன் இடையில் இதர கப்பல்களும் உண்டு. பிரஸீல் விமானப்படையில் 12 பகுதிகள் இருக்கின்றன. அகில அமெரிக்க விமான இலாகாவால் பிரஸீலின் கடற்கரை ஓரமாக 12 நல்ல விமான தளங்களை கட்டப்பட்டிருக்கின்றன.

உலகத்தில் மொத்த ரப்பர் உற்பத்தி செய்யப்படும் 23,00,000 சதுர மைல் விஸ்தீர்ணத்தில் பிரஸீலில் 14,00 000 சதுர மைல் இருக்கிறது. மலேயாவிலிருந்து ரப்பர் கிடைக்காததால், இந்த ரப்பரைக்கொண்டு ஜனாதிபதி வார்காஸ் உலகத்தின் பல பாகங்களுடன் வியாபாரம் நடத்திவருகிறார். பிரஸீலின்



இரும்பு மண்ணை அமெரிக்க ஐக்கிய நாடுகள் உபயோகித்துவருவதால், ரியோடி ஜெனிரோவிற்குக்கு அருகில் உள்ள மினஸ்ஜிராஸிலிருந்து ஜெர்மன் ஏஜெண்டு வியாபாரிகள் துரத்தப்பட்டனர். இந்த இடத்திலிருந்து வருஷத்திற்கு 1,50,000 லக்ஷம் டன் இரும்பை ஜெர்மனி பெற்றுவந்தது. இந்தப் பிரதேசத்திற்குத்தான் செக்கோஸ்லாவாகியாவிலிருந்து ஸ்கொடா தொழிற்சாலையை மாற்றலாமென்று க்ருப்ஸ் அபிப்பிராயப்பட்டான்.

அரசியலிலும் தென் அமெரிக்க நாடுகளுக்குள் பிரஸீல் தலைமை வகிக்கிறது. யுத்தத்தில் பிரஸீல் சேர்ந்ததால் இனி சில்லி, அர்ஜெண்டைன் போன்றவைகளும் அதேவிதமாக நடந்துகொள்ளும்.

வி வி வி வி வி வி வி

**இரான்-இராக் சைனியத் தலைமைப் பதவி.** இப்பதவி தனிப்படையாக ஜெனரல் ஸர் K. மெயிட்லாண்டுவில்ஸனிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது ஒரு சாதகமான அம்சம். இதனால் நேசதேச யுத்த தந்திரம் லேசுவாக்கப்பட்டிருக்கிறது. முதலில் இந்நாடுகள் இந்தியச் சைனியத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பாக்தாத் என்பது புது டெல்லியிலிருந்து 2,400 மைல். இதற்குப் போக்குவரத்தும் மிகவும் சிரமமாயும், யுத்த தந்திரம் தனிப்பட்டதாயும் காணப்பட்டது. பிறகு இவ்வருஷம் ஜனவரி மாதத்தில் மத்தியக்கிழக்குத் தலைமையின்கீழ் வைக்கப்பட்டிருந்தது. அதுவும் பிரயோஜனப்படவில்லை. ஏனென்றால் டெஹ்ரானுக்கும், கெய்ரோவிற்கும் 2,000 மைல் தூரம். ஆகவே தற்சமயத்தில் இந்தியா, இரான்-இராக், எகிப்து மூன்றிற்கும் தனிப்பட்ட தலைமை ஏற்பட்டிருப்பதால் ஆங்காங்கு பூர்ணமான கவனம் செலுத்த முடிகிறது. பிரகிருதம் நியமிக்கப்பட்டுள்ள 'ஜம்போ' வில்ஸன் மிகவும் நிபுணர். இவர் 1940-ல் 400 மைல் தூரம் கடந்து பெங்காஸியைத் தாக்கியவர்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனி பேரில் ருஷ்யத் தாக்குதல்.** சென்ற வாரத்தில் ருஷ்ய விமானங்கள் ஜெர்மனி பேரில் படையெடுத்தது ஒரு விசேஷ சம்பவம். சென்ற ஆகஸ்டு மாதத்தில் 4 தடவை ஜெர்மனி பேரிலும், ருமேனியா பேரிலும், இம்மாதிரியான தாக்குதல் நேர்ந்தது. பெர்லின் பேரிலும், படையெடுப்புச் செய்யப்பட்டது. ஆனால் ருஷ்யத் தற்காப்பை முன்னிட்டு இது பின்னடி விடப்பட்டது. தற்சமயத்தில் மறுபடி பேரலந்து, கிழக்கு பிரஷ்யா, வார்ஸா முதலியவைகளைத் தாக்கியதிலிருந்து ருஷ்ய நிலைமையில் இந்த அம்சம் அபிவிருத்தியடைந்திருக்கிறதாகவே, சொல்லலாம். ருஷ்யத் தொழிற்சாலைகளில் புதிதாக நெடுந்தூரம் செல்லக்கூடிய விமானங்களை உற்பத்தி செய்வதாலும், நேசதேசங்களின் ஸப்ளைகள் வருவதாலும் இவ்விதத் தாக்குதல்களைச் செய்ய சாத்தியமாக இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**அச்சு நாடுகளும் இந்தியாவும்.** எதிர்பார்த்தபடியே காங்கிரஸ்ஸின் 'பிரிடிஷ்காரர்கள் வெளியேறவேண்டுமென்ற' தீர்மானத்தையும் அதற்குப்பிறகு இந்தியாவில் நடப்பதையும் அச்சுநாடுகள் மிகைப் படுத்துகின்றன. இந்த சம்பவங்களைக் கொண்டு அந்நாடுகள் பொய்யான பிரசாரத்தை நடத்துகின்றன. அதற்கு உதாரணமாக, மாகாதேவதேசாய் ஜெயிலில் விஷம் கொடுக்கப்பட்டு இறந்தாராம். லார்டு லின்லித்கோ மாறுதல் ஆகப்போகிறாராம். மிஸ்டர் ஸி, ராஜகோபாலாச்சாரியாரும் பிரிடிஷாரை வெளியேறவேண்டுமென்கிறாராம். இந்த எல்லாசெய்திகளிலும் காணப்படும் பிசகுகள் வியக்தமானவை.

இவ்வித பொய் வதந்திகளின் உற்பத்தி ஸ்தானம் தற்போது கண்டுபிடிக்கப்பட்டது. டோகியோவிற்கு இந்தியச் செய்திகள் நடுநிலை நாடுகளான லிஸ்பன் ஸ்டாக்ஹோம், இங்கிருந்தும், ஹிமாலய ரேடியோவிலிருந்தும் சிங்கி பத்திரிகைக்குக் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் பெர்லினிலிருந்துதான் எல்லாம் ஆரம்பமாகிறது. ஸோபயா (பல்கேரியா) விலிருந்து பூசமகி—மகிதி

(ஷாங்கேய்)க்கு 1942 ஜூன்மீ 27உ கிடைத்த ஜப்பானியச் செய்தியிலிருந்து இவ்விவரம் தெரிகிறது.

'ஷாங்கேயில் ஜெர்மன் நியூஸ் ஏஜன்ஸி மூலமாக இந்தியச் செய்திகள் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ந அவைகளைப் பூராவாக உங்களுடைய பத்திரிகைகளில் போடத் தவறுதீர்கள். ஷாங்கேயில் ஜெர்மன் செய்தி ஏஜன்டான கிளிம்ப் என்பவனுக்கு இதைப்பற்றிய தகவல் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவனுடன் கலந்துகொள்ளுங்கள்,—இனேமோடோ லியகாப்.'

வி வி வி வி வி வி வி

**பைபல் (Bipul),** ஸயாமிய துரோகியான மார்ஷல் பைபல் ஸாங்கிராம் தன்னைக் கடவுளுக்குச் சமமாக நினைத்துவருகிறான். மே மாதத்திய ஒலிபரப்பு ஒன்றில் 'உங்களுடைய தலைவனிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். பைபலைப்பற்றி சதா சொல்லிக்கொண்டிருங்கள்' என்று ஸயாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. ஸாயமியரின் வாழ்க்கையை பைபல் மாற்றிவருகிறான். பொய்யான இயக்கம் ஒன்றை ஆரம்பித்து வாழ்க்கையையே கட்டுப்படுத்தி வருகிறான். இது நாஸிகளின் முறையை அனுசரிப்பதாகும். ஆனால் ஜப்பானியர் வியாபாரத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டதால்'இவனே மிகவும் கவலையுடன், 'லேவாதேவி விஷயங்களை உடனே சீர்படுத்துவது சிரமம். எல்லா நீடிகளுக்கும் இவ்விஷயத்தில் சிரமம் ஏற்படுவது ஸகஜம்தான். தாய்லாந்து சாமான்களையே யாவரும் வாங்குங்கள்' என்கிறான். இது தண்ணீரில் முழுகப்போகிறவன் வைக்கோலை உதவிக்குப் பிடித்த மாதிரியாகும். ஸயாமியர் இவன்பேரில் பிரியம் கொள்ளமாட்டார்கள்.

## "யுனைடெட் ஸ்டேட்ஸின் கப்பற்படை எங்கிருக்கிறது?"

### ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் பதில்.

பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்கியது நமது கடற்படையின் சரித்திரத்திலேயே ஒரு துக்ககரமான நாள். நமது கப்பல்கள் திருட்டுத்தனமாய் தாக்கப்பட்டு அதிக சேதமாக்கப்பட்டுவிட்டதால் அக்கப்பல்கள் யுத்தத்தில் சேரமுடியவில்லை. அதோடு 3,000 வீரர்களுக்கு மேலேயே கொல்லப்பட்டோ, காயமடைந்தோ விட்டார்கள்.

ஆகையால் நமக்குப் பல மாதங்கள்வரை கடல் யுத்தத்தில் வெற்றியில்லாமலிருந்தது. அச்சந்தர்ப்பங்களில் நமது கப்பற்படைக்கு "யுனைடெட் ஸ்டேட்ஸின் கப்பற்படை எங்கிருக்கிறது?" என்று எதிரிகள் நம்மை குத்தலாகக் கேள்வி கேட்டார்கள். இப்பொழுது அவர்கள் விடுத்த கேள்விக்குப் பதிலைத் தெரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

அட்லாண்டிக் சமுத்திரம், பவளக் கடல், மிட்வேக்கு அருகாமை முதலிய இடங்களில் நடந்த போரில் எதிரிகள் நமது கப்பற்படை பலத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஸாலமன் தீவுகளில் எதிரிகளிடமிருந்து நாம் கைப்பற்றிய இடங்களை மீண்டும் அவர்கள் கைப்பற்ற இப்பொழுது பிரயத்தனங்கள் செய்துவருவதிலுள்ள கஷ்டத்தை அவர்கள் உணர்ந்துவருகிறார்கள்.

### எதிரிகளின் கேள்விக்குப் பதில்.

யுனைடெட் ஸ்டேட்ஸின் கப்பற்படை எங்கிருக்கிறது? அது எப்பொழுதும் வழக்கமாக இருக்குமிடத்திலா இப்பொழுதும் இருக்கிறது என்று எதிரிகள் கேட்கிறார்கள். இப்பொழுது நமது கப்பற்படை மும்முரமாக சண்டையில் ஈடுபட்டிருக்கிறது. "எதிரி கப்பல்களைத் தாக்கவேண்டும்; அவைகள் எங்கு தோன்றினாலும், எந்த சமயத்தில் தோன்றினாலும் நமது கப்பற்படை பார்க்கும்பொழுது தாக்கவேண்டும்," என்ற கட்டளையை நமது கப்பற்படை தீவிரமாக நடத்திவருகிறது.

இப்பொழுது, தூரப்பிரதேசங்களில் நடக்கும் கடல் யுத்தங்கள் அதிகக் கடுமையாக இருக்கின்றன. இதுவரை இம்மாதிரியான கடல் சண்டைகள் ஏற்பட்டதேயில்லை.



தென்மேற்குப் பஸிபிக்கில், நமது கப்பற்படையைச் சேர்ந்த கப்பல்கள், விமானங்கள், தரைப்படைக்கு உதவியாயிருக்கும் வெகுதூரம் சென்று தாக்கக்கூடிய பாம்பர் விமானங்கள் எல்லாம் வெகு தூரத்திற்கப்பால் அங்குமிங்கும் சிதறியிருக்கும் நமது தளங்களிலிருந்து எதிரியை ஒரே சமயத்தில் வெகு கடுமையாகத் தாக்கிவருகின்றன.

## நேசநாடுகளுக்கு வெற்றி.

### (தளகர்த்தர் ஸிகோர்ஸ்கியின் வரும் காலத்தைப்பற்றிய அபிப்பிராயம்.)

"யுனைடெட் ஸ்டேட்ஸ் இந்த யுத்தத்தில் இறங்கியதே யுத்தத்தின் இறுதியில் ஏற்படும் முடிவைத் தீர்மானித்துவிட்டது.

"சிலர் அபிப்பிராயப்படுகிறபடி இந்த யுத்தம் 1942-ம் வருஷத்தோடு முடிவடைந்துவிடாது. இப்பொழுது வரப்போகும் நான்காவது மாரிகாலம் முழுவதிலும் யுத்தம் நீடித்து நடக்கும்.

"இப்பொழுது நடந்துவரும் ருஷ்ய யுத்தத்திலும், 1943-ம் வருஷம் ஆரம்ப காலத்திலும் எதிரி வரவர சோர்வடைந்துவிடுவான். ஆத்மீக சக்தியிலும், மனித பலத்திலும், விரோதியின் பலம் மிகவும் குன்றிவிடும். இறுதியில் நமக்கு வெற்றி கிடைப்பதற்கு அது ஒரு பெரிய சாதகமாகும். மேலும் அதற்குள் ஜெர்மனிக்கு எதிராகவுள்ள அரசாங்கங்களும் ஒன்றுசேர்ந்து வெற்றிகரமாகத் தாக்கக்கூடிய படை பலத்தை அதிகமாகத் திரட்டிவிடும்.

"ஜெர்மனிக்கு நேர்ந்த நஷ்டத்தைப் பற்றிப் பேசுகையில், "ஹிட்லர் ஏராளமான வாலிப வீரர்களைப் பலி கொடுத்துத்தான் சில வெற்றிகள் அடைந்திருக்கிறான். யுத்தம் ஆரம்பித்தது முதற்கொண்டு யுத்தத்தில் 15 லக்ஷம் ஜெர்மன் வீரர்கள் உயிர் துறந்திருக்கிறார்கள்".

## ஏன் கப்பற்படை நடவடிக்கையின் செய்தி குறைவாக வெளியாகிறது.

### (கப்பற்படையின் பாதுகாப்பிற்கு ரகசியம் அவசியம்).

பொதுவாகத் தரைப்படை, விமானப்படை இவைகள் நடத்தும் நடவடிக்கைகளைப்பற்றி சம்பவங்கள் ஏற்பட்ட வெகு சீக்கிரத்திற்குள் செய்திகள் விஸ்தாரமாகப் பிரசுரிக்கப்படுகின்றன. ஆனால் கப்பற்படை நடத்தும் வேலையைப்பற்றி அதிகமாகச் சொல்லப்படுவதில்லை என்று உலகச் செய்திகளைப் பரவச்செய்யும் பத்திரிகாசிரியர்களும், பொதுமக்களும் புகார் செய்கின்றன.

எதிரியுடன் நமது கப்பற்படை வெகு சாமர்த்தியமாக சண்டை செய்து அதிக வெற்றிகரமாக வந்த போதிலும், அதிகார பூர்வமாக வரும் அறிக்கைகளில் மிகவும் குறைவாகக்காட்டி மறைத்தாற்போல் நடந்த சம்பவம் சொல்லப்படுகிறது.

மேலும் பத்திரிகை நிருபர்கள் யாராவது இருந்தால் அவர் எழுதும் செய்திகளைப் பிரசுரிக்க அனுமதி கொடுப்பதற்குமுன் வெகு காலதாமதம் ஏற்படுவதாகப் புகார் இருக்கிறது. அப்படி பிரசுரிக்க அனுமதிக்கப்படும் செய்தியும், அதிகப் பொதுப்படையான வகையில் விஸ்தரிக்கும்படி செய்யப்படுகிறது. தரைப்படை, விமானப்படை நடவடிக்கைகளில் எந்த சம்பவம் மிக்க அவாக் கொடுக்கக்கூடியதென்று கருதி விவரமாக எழுத அனுமதிக்கப்படுமோ அவற்றைக் கூட மறைக்கும்படி கப்பற்படை செய்தி கண்டனம் செய்பவர் நிர்ப்பந்தித்துவிடுவார்.

### இது கண்டனம் செய்பவரின் குணதோஷத்தைப் பொருத்ததல்ல.

புகார் சொல்பவர்களின் நோக்கப்படி தரைச் சண்டை, விமானச் சண்டைகளைக் காட்டிலும், கப்பற்படைச் சண்டைகளில் பிரசுரிக்கக் கூடியவை மிகவும் குறைவு என்று சொல்வது உண்மை. ஆனால் கப்பற்படைச் சண்டை செய்தியை குணதோஷ விமர்சகர் கண்டனம் செய்தனுப்புவதினால் செய்திகள் குறைவாகப் பிரசுரிக்கப்படுகின்றன என்று சொல்வதற்கல்ல. கப்பற்படையைப் பாதுகாப்பதை [illegible] வெகு ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

தரைப்படை சண்டைகளும், கப்பற்படை சண்டைகளும் முக்கியமாகத் தனித்தனி சம்பவங்களாக இருக்கின்றன. அவைகளுக்கு ஆரம்பமும், முடிவும் உண்டு. அந்தச் சண்டை முடிந்தவுடன் அந்த நடவடிக்கை பூர்த்தியாகிவிடுகிறது. அவைகளைப் பொருத்த விமர்சனங்கள் படிப்பதற்கு ரசிக்கும் கொடுக்கும்படியாகவும், அந்தப்படை பலத்தில் சேர்ந்தவர்களின் வீரச்செயல்களைப்பற்றி பொதுமக்கள் தெரிந்துகொள்ள அவா உண்டாகிறது.

இந்தச் சண்டைகள் நடந்த விதத்தைப் பற்றியும்,- அவற்றின் போக்கைக் குறித்தும், பல விவரங்களை விவரமாகப் பிரசுரிப்பதினால், வருங்காலத்தில் மற்ற இடங்களில், மற்ற சந்தர்ப்பங்களில் நேரிடும் சண்டைகளில் கிடைக்கக் கூடிய வெற்றிக்கு பாதக மேற்படமாட்டாது.

ஆனால் கப்பற்படை நடவடிக்கைகளோ தொடர்ச்சியானவை. எதிரிகளுடன் பல இடங்களில் ஏற்படும் சண்டைகள், தொடர்ச்சியான நடவடிக்கையில் பொதுவான சம்பவங்கள். கப்பற்படை யுத்தம் எப்பொழுதும் நடந்து கொண்டிருக்கிறது. கப்பல் போக்குவரத்துக்குத் தடை ஏற்படாமல் இருக்கவும், கடல் மார்க்கமாக ஸப்ளைகள் கொண்டு செல்வதற்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியதே கப்பற்படைச் சண்டையின் முக்கிய நோக்கம்.

---

## லுப்ட்வாபிக்கு நேர்ந்த நஷ்டங்கள்.

(அப்ஸர்வர் பத்திரிகை, ஏப்ரல் 26).

பல அம்சங்களில் எதிரியின் பலத்தைக் குறைவாக மதித்து, பெரிய தவறுதலை நாம் செய்தபோதிலும், ஆகாய விமானப்படை பலத்தைக் குறித்து மாறான அபிப்பிராயம் நாம் கொண்டிருக்கிறோம் என்ற நம்பிக்கை அதிகரித்துவருகிறது. உண்மையில் ஜெர்மன் விமான பலம் குறைந்துதான்வருகிறது.

சென்ற யுத்தத்தில் நாஸிகள் கடுமையாக ஈடுபட்டவுடன் பிரிடன்பேரில் விமானத்தாக்குதல் அதிகமாக ஏற்படவில்லை. ஏனென்றால் ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படைக்கு ஒரே சமயத்தில் இரண்டு பெரிய தாக்குதல்களை நடத்த சக்தி கிடையாது. இதற்குக் காரணம் அப்பகுதியில் நன்றாகப் பயிற்சிபெற்ற மாலுமிகளும், விமான ஓட்டிகளும் மிகவும் குறைவாக இருக்கிறார்கள் என்பதுதான். முதல் தரமான விமானங்களில் குறைவு ஏற்பட்டிருப்பதினால் மட்டில் அதன் பலம் குறைவுபடாது.

இப்பொழுது ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் விமான நஷ்டத்தைப்பற்றி பார்ப்போம். பிரிடிஷ் பீரங்கிகள் குறைந்த பக்ஷம் 10,000 ஜெர்மன் விமானங்களைச் சுட்டழித்தனவென்று ஹாலிபாக்ஸ் பிரபு சமீபத்தில் டாலாஸிலும், டெக்ஸாஸிலும் பெருமைப்படுத்திப்பேசினார். மேற்சொல்லிய நஷ்ட எண்ணிக்கை குறைவாகத்தான் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதிகார பூர்வமாய்வந்த விமான நஷ்டத்தைமட்டில் இதில் காணப்பட்டிருக்கிறது. எவ்வளவோ ஆயிரக்கணக்காக சேதமாக்கப்பட்டோ, அழிக்கப்பட்டோ நஷ்டமான விமானங்களின் எண்ணிக்கையை நமது விமான ஓட்டிகளும், பீரங்கிக்காரர்களும் கணக்கில் சேர்க்கவில்லை. ஏனென்றால் அவ்விமானங்கள் இறுதியில் என்னவாயினவென்று நேராடி ஒருவரும் பார்க்கவில்லை.

### ஒரு ருஷ்யரின் மதிப்பு.

யுத்த ஆரம்பத்தில் லுப்ட்வாபி விமானப்படையிலிருந்த உத்தியோகஸ்தர்கள் யாவரையும் ருஷ்யர்கள் அழித்துவிட்டார்கள் என்று சென்றவாரத்தில் விமானப்பகுதித் தலைவர் மேஜர் ஜெனரல் கிரன்டால் வெளியிட்டிருக்கிறார். கிழக்குப் போர்முனையில் சுமார் 14,000 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனவென்றும், சுமார் 38,000 விமான ஓட்டிகளும், மற்ற சிப்பந்திகளும் இறந்துவிட்டார்களென்றும் அவர் மதிப்பிட்டிருக்கிறார்.

போலந்து, நார்வே, பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், கிரீஸ், யூகோஸ்லாவியா முதலியவூர்களில் ஜெர்மனிக்கு நேர்ந்த விமான நஷ்டத்தை 2,000 என மதிப்பிடப்பட்டது, மிகவும் நம்பக்கூடியதாக இருக்கிறது. இதையும் சேர்த்தால்



சண்டையில் அழிந்த விமானங்கள் 26,000 ஆகும். இந்தக்கணக்கில் ஒடிந்து ஊருக்குத் திரும்பிவரமுடியாத விமானங்களின் எண்ணிக்கையும், பயிற்சிபெறும்பொழுது தற்செயலாய் ஒடிந்துபோனவைகளின் எண்ணிக்கையும், சண்டையில் தற்செயலாய் அழிந்துபோனவைகளின் எண்ணிக்கையும், தரையிலிருந்தபொழுது அழிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கையும் சேரவில்லை. இந்த யுத்தம் ஆரம்பமுதற்கொண்டு ஜெர்மனிக்கு ஏற்பட்டவிமான நஷ்டத்தை எவ்வளவு குறைவாக மதிப்பிட்டாலும் 35,000 விமானங்கள் இருக்கும்.

யுத்த ஆரம்பத்தில் லுப்ட்வாபியில் சுமார் 10,000 நன்றாய்ப் பயிற்சிபெற்ற விமானிகள் இருந்தார்கள். யுத்தம் தொடங்கியதுமுதல் 16-மாதங்களில் போரில் இறந்தவர்கள் நீங்கலாக 13,000 முதல் 15,000 வரை விமானிகள் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இப்பொழுது ஜெர்மனியில் விமானங்களுக்குப் பயிற்சியளிக்க 74 பள்ளிக்கூடங்கள் இருப்பதாகவும், ஒவ்வொன்றிலும் 150 மாணவர்கள் இருப்பதாகவும், அவர்களுக்கு 3-மாத முதல் 6-மாதம்வரைதான் பயிற்சி கொடுக்கப்படுகிறதென்றும் ஜெர்மன் கைதிகளே சொல்லுகிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

### தற்செயலாய் ஏற்படும் அபாயங்களின் விகிதம்.

மேற்சொல்லிய விவரம் சரியாக இருந்தால் எல்லா பயிற்சி சாலைகளிலிருந்து 3 மாத பயிற்சிக்குப்பிறகு 44,000 விமானிகள் தயாராவார்கள். 6 மாதங்கள் வரை பயிற்சி ஏற்பட்டிருந்தால் 2 ,000 விமானிகள் தயாராவார்கள். வருஷம் பூராவும விமானிகளுக்குப் பயிற்சியளிப்பது மிகவும் கஷ்டம். அதனால் ஒரு வருஷத்தில் ஜெர்மனியில் 20,000 விமானிகளுக்குமேல் தயாராவது சந்தேகம்தான். யுத்தத்திற்கு அனுப்புவதற்குமுன் அவர்களுக்கு 3 மாதம்வரை பயிற்சி கொடுத்து அனுப்பினால் தற்செயலாய் ஏற்படக்கூடிய அபாயங்களின் விகிதம் இடுக்கிடக்கூடியதாக இருக்கும்.

ஆனால் யுத்தம் ஆரம்பித்தது முதற்கொண்டு 8,612 பிரிடிஷ் விமானங்கள் சேதமாக்கப்பட்டனவென்று பெர்லின் ரேடியோ பெருமைபபடுத்திக்கூறியது. கோயபெல்ஸ் உண்மையாகச்சொல்வதே மிகவும் அரிது. அவன் சொல்வது உண்மையாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் 'நம நாட்டில் தயாரிக்கப்படும் விமான ஓட்டிகளும், விமானப்படை வீரர்களும் மிகவும் அதிகமென்று விமானச் சண்டைகளில் பலத்த நஷ்டம் நேர்ந்தாலும் அந்த நஷ்டத்திற்கு ஈடாக்கப்படுமென்றும், பயிற்சிபெற்ற விமானிகள் அதிகமாகவும், தற்சமயம் விமானங்கள் குறைவாகவும் இருக்கிறதென்றும்,' விமான இலாகா மந்திரி சமீபத்தில் கூறியிருக்கிறார்.

### சாம்ராஜ்ய திட்டம்.

இப்பொழுது விமானப்படையில் சேர்ந்திருக்கிறவர்கள் கனடாவில் உள்ள சாம்ராஜ்ய ஆகாயவிமான பயிற்சி சாலையில் குறிப்பிட்ட மாதங்களுக்குள் தயாரிக்கவேண்டிய விமானிகளைக் காட்டிலும் இன்னும் அதிகமாகவே தயாரித்திருக்கிறது. பயிற்சியளிப்பதற்கு கனடாவைத் தேர்ந்தெடுத்திருப்பதில் விளக்கணைப்பினால் அபாயங்கள் ஏற்படாமலும், எதிரி நடவடிக்கையினால் தடை நேரிடாமலும் வருஷம் பூராவும் விமானத்தில் செல்வதற்கு சாத்தியமாகயிருப்பதால் கனடாவிலுள்ள பல சாதகங்களில் இது ஒரு முக்கியசாதகம்.

ஆகாய விமானச்சண்டையில் இந்த சாம்ராஜ்ய திட்டமே முடிவில் வெற்றி கிடைக்கும்படி செய்யலாம். எதிரியைக் காட்டிலும் நமக்கு ஏராளமாக பலத்தைக் கொடுக்கவும்கூடும். பிரிடிஷ் சாம்ராஜ்யப்படைகளும், யுனைடெட் ஸ்டேட்ஸ் படைகளும் ஒன்று சேர்ந்து ஜெர்மனி, ஜப்பான், இதாலி இந்நாடுகள் விமானச் சண்டையில் பீதியடையச்செய்வதை ஒழித்து அந்நாடுகளின் விமானங்களை ஆகாயத்தில் வரவிடாமல் விரட்டியடிக்கும்படி செய்யக்கூடும்.

---

## ஐரோப்பாவில் பசிப்பிணி.

இந்த வருஷ ஆரம்பத்தில் ஐரோப்பாவில் உணவு நிலைமையைக் குறித்தும், அச்சு நாடுகள் ஏற்படுத்தியிருக்கும் உணவு திட்டத்தைக் குறித்தும் உள்ள விஷயங்களை பொதுமக்கள் அறியும் பொருட்டு பரஸ்பர தேசிய செய்தி சங்கம்

இப்பொழுது அறிக்கை விடுத்திருக்கிறது. அதைப்பார்த்தாலே சகிக்க வோட்டாமலிருக்கிறது. ஆனால் செய்திகளைத் திரட்டியதிலிருந்து நிலைமை முன்பை விட இன்னும் அதிகமாக மோசமாகிவிட்டது. அப்படி மோசமாகத்தான் ஆக வேண்டும். அதற்கு இன்னும் முடிவு ஏற்படவில்லை. சில நாடுகளில் மற்றவைகளைக் காட்டிலும் அழிவு துரிதமாகவும், கடினமாகவும் ஏற்படுகின்றன. ஆனால் இந்த ஹிட்லர் நடத்தும் யுத்தத்தினால் ஏற்பட்ட தீங்கிலிருந்து ஒரு நாடாவது தப்பவில்லை. உண்மையில் ஐரோப்பா பூராவும் பசியின் கொடுமையால் வாதனைப் படுகிறது. உதாரணமாக ஒரு இடத்தில் நாய் மாமிசம் பவுண்டு 8 ஷில்லிங்கு வீதமும், பூனை மாமிசம் பவுண்டு 20 ஷில்லிங்கு வீதமும், விலை உயர்ந்து விட்டது. இவ்விரண்டு பொருள்களும் 'விசேஷ உணவு' பொருள்களாகக் கருதப் படுகின்றன. ஐரோப்பாவில் பீடித்திருக்கும் கஷ்டங்களில் பசிப்பிணி ஒன்று. கிரீஸ் தேசத்தை அச்சு நாட்டில் ஒரு பகுதியான இதாலியை அடியோடு தோல்வியடையச் செய்த பிறகு, அச்சுநாடுகளின் படைகள் ஒன்று சேர்ந்து அநியாயமாகத் தாக்கி பாழாக்கிவிட்டன. இப்பொழுது பஞ்சத்தினால் வாலிபர்களும், கிழவர்களும், அதிகமாக மாண்டு வருகிறார்கள். பிரிடிஷ் அரசாங்கமும் இன்னும் மற்ற அரசாங்கங்களும், பசிப்பிணியால் வருந்தும் ஜனங்களுக்குச் சொற்ப உதவியளித்து வருகின்றன. எதிரிகளினால் தடையில்லாமல் போனால் இன்னும் அதிகமான உதவி அனுப்பக்கூடும். ஆனால் கிரீஸைப் போல ஜெர்மனியினாலும், இதாலியினாலும், பாழாக்கப்பட்ட மற்ற நாடுகளுக்கு கிரீஸுக்கு உதவியளித்தது போல் உதவிசெய்ய முடியாது. இம்மட்டில் கிரீஸ் ஒரு விசேஷமான நாடுதான்.

ஆனால் ஐரோப்பாவை இம்மாதிரி நிலைமைக்குக் கொண்டுவந்திருப்பதைப் பற்றி நாஸிக் கொள்கை உடையோர்கள் நியாயம் போல் பேச எத்தனித்தால், அது தான் கேட்க சகிக்க முடியாமலிருக்கிறது. இத்தகைய ஜனங்களிடமிருந்து கொள்ளையடித்தும், முறைப்படியாக அவர்களுக்கு வறுமை உண்டாக்கியும், நாஸிக் கட்சியினர் தங்களுடைய ராஜீயக் கட்சியையும், ஜாதிப் பெருமையையும் பூர்த்தி செய்து கொள்ளுகிறார்கள். போலந்து தேசத்தார்களை இவர்கள் நடத்தியதைப் பார்க்க கோரமான சங்கதி தெரிகிறது. ஜெர்மன் தொழிலாளிகள் கட்சிக்குத் தலைவனான லே (Ley) என்பவன் பின்வருமாறு கூறியிருக்கிறான். அது அவனுடைய மிருகத்தனமான நெறிமுறைகளில் ஒன்று அல்ல. அது நாஸிகளின் ராஜீய தந்திரங்களில் முக்கியமான கொள்கையுடையது. "கீழ்ப்பட்டஜாதியாருக்கு இடவசதி, உடை, உணவு, கல்வியறிவு, இவை மேலான ஜாதியாரைக் காட்டிலும் குறைவாக இருந்தால் போதும்; போலந்து தேசத்தாரும், யூதரும் வசிக்குமாதிரி ஜெர்மானியர் வசிக்க முடியாது." ஐரோப்பா கண்டத்தில் ஆக்கிரமித்த நாடுகள் பூராவும் காட்டுமிராண்டித்தனம் பல தினுசுகளாக 'ஹெர்ரன் வாக்' நீதி சாஸ்திரத்தில் கண்ட கொள்கைப்படி காட்டப்பட்டு வருகிறது. போலந்துக் காரர்களைப்போல் எல்லோரையும் மனிதனுக்குக் கீழ்ப்பட்டவர்களாக வகுக்கப்படவில்லை. ஆனால் எல்லோரும் ஜெர்மானியரைக் காட்டிலும் கீழ்ப்பட்டவர்களாகவே வகுக்கப்பட்டிருக்கிறார்கள். மேன்மையான ஜெர்மானியன் ஒவ்வொருவனுக்கும் அதிகமான உணவு தேவையாயிருப்பதால் உணவின் சொந்தக்காரர்களுக்கு முந்தி குறைவாகவும், இப்பொழுது இன்னும் குறைவாகவும் இருக்கிறது. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் உணவு திட்டம் எப்பொழுதும் படையெடுப்பவர்களுக்குச் சாதகமாவேயிருக்கிறது. இந்தக் கொள்கையும் இன்னும் ஜெர்மன் யுத்தக் கைத்தொழில் தேவைக்காக லட்சங்களையும் தொழிலையும் மாற்றியமைப்பதினால் ஐரோப்பாவில் பசிப்பிணி வரவர அதிகரித்துக் கொண்டேவருகிறது. அதன் கொடுமையும் வரவர அதிகரிக்கிறது. 'புதிய திட்டத்தினால்' உலகத்தாருக்கு இப்பொழுதே இத்தகைய அவமானம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில் ஜெர்மன் தொழிலாளிகளுக்கு கோயரிங் செய்த பிரகடனம் சாதாரணமாகச் சொல்லுகிறதுபோல இருந்தாலும், பல வழிகளில் அந்தப் பிரகடனத்தினால் ஜெர்மன் தொழிலாளிகள் இன்னும் அதிகமாக வேலை செய்ய ஆரம்பித்தார்கள். கோயரிங் பேச்சில் இரண்டாவது போர்முனையைப் பற்றி சொல்லப்பட்டது. ஆனால் சண்டை நடக்கும் வேறொரு போர்முனையைப்



பற்றி அவன் குறிப்பிடவில்லை. ஆனால் உள்நாட்டுப் பொதுமக்களின் தன்மை சந்தோஷகரமாகவாவது, திருப்திகரமாகவாவது இல்லை. ஆனால் ஹிட்லரின் கட்டளைக்கிணங்கி ருஷ்யாவில் மாரிகாலத்தில் ஜெர்மன் வீரர்கள் பொறுமையுடன் அனுபவித்த கஷ்டங்களுடன் உள்நாட்டில் பொதுமக்களின் கஷ்டங்கள் ஒப்பிட முடியாது. இவ்யுத்தம் ஜெர்மனிக்கே திண்டாட்டமாக வந்து விட்டதென்று உள்நாட்டு ஜனங்களுக்கு கோயரிங் சொன்னான். அவர்களின் நன்மைக்காகவும், தேசத்தின் நன்மைக்காகவும் கொடுமை உபயோகிக்கப்பட்டதாகச் சொன்னான். இவ்வித சோதனை நேரத்திலும், கஷ்டங்களிலும் ஹிட்லர் ஜனங்களிடம் உதார குணத்தையும், பக்ஷத்தையும் காட்டியிருக்கிறார் என்று கோயரிங் உறுதி கூறினான். யுத்தத்தில் முதல் மாரிகாலத்தில் அதிக கஷ்டமாக இருந்தது; ஆனால் பொறுக்கக் கூடியதாக இருந்தது. போலந்து படையெடுப்பில் வெற்றி வெகு சுலபமாகவும் அதிசயிக்கத் தகுந்த வகையாகவும் இருந்தது. கடுமையாக உணவு திட்டம் போடப்பட்டதால் அங்கு கையிருப்பிலிருந்த உணவுப் பொருள்களை நியாயமாக எல்லோருக்கும் பரவச் செய்ய முடிந்தது. அதிகம் கிடைக்காத போனாலும், போதுமானதாக இருந்தது. யுத்தத்தில் இரண்டாவது மாரி காலத்தில் நிலைமை அதிகம் மோசமாகி விடவில்லை. வரவர மேன்மையாக இருந்து வந்தது. டென்மார்க், நார்வே, பெல்ஜியம், நெதர்லாந்து பள்ளத்தாக்குப் பிரதேசங்கள், பிரான்ஸ் இவைகளெல்லாம் சொற்ப உயிர்ச் சேதத்துடன் வெற்றிகரமாக அடிமையாக்கப்பட்டன. உணவுப் பொருள்கள் சேகரிக்கப்பட்ட நாடுகளெல்லாம் அந்த ஜாதியினரின் வழக்கப்படி பூராவும் கொள்ளையடிக்கப்பட்டன. இதைக் கொண்டு ஜெர்மானியரின் உணவு திட்டம் பன்மடங்கு அதிகரித்தது. மற்ற நாட்டு ஜனங்களின் உணவுப் பொருள்களையும், சாமான்களையும், கொண்டு ஜெர்மானியரின் வீடுகள் அலங்காரம் செய்யப்பட்டன. உண்மையில் இந்த வருஷத்தில் ஜெர்மானியர் அதிகக் கொள்ளையடித்தனர்.

யுத்தத்தின் 3-வது மாரிகாலத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலிருந்த மூலப் பொருள்கள் யாவும் குறைந்து வந்தன. இது மிகவும் கடுமையான மாரி காலம் என்று ஜெர்மானியர் ஒப்புக் கொள்வதிலிருந்தே தெரியவருகிறது. ருஷ்யப் படையெடுப்பில் செம்படையை அழிப்பதற்கும், யூக்ரேனில் ததும்பி வழியும் களஞ்சியங்களைக் கைப்பற்றுவதற்கும் முக்கிய நோக்கங் கொண்டு பிரயத்தனப்பட்டதில் ஒருவித பயனும் ஏற்படவில்லை. இந்தப் படையெடுப்பினால் பெருத்த செலவும், தொடர்ந்தாற்போல் யுத்தமும் ஏற்பட்டுவிட்டது. குறுகிய அவகாசத்திற்குள் திடீரென்று யுத்தம் நடத்தி விடலாமென்று போட்ட திட்டம் மாறிப்போய், தரைப்படைக்கு அதிக வீரர்கள் தேவையாகவும், யுத்த தளவாடங்கள் தயாரிப்பதற்கு அதிக தொழிலாளிகள் தேவையாகவும், ஆகிவிட்டது. இதனால் விவசாயத்திற்குக் கேடு வந்துவிட்டது. இதற்காக விவசாய இலாகா மந்திரி, டாரே (DARRE) வேலையிலிருந்து நீக்கப்பட்டான். இந்த விவரங்களை அதிகமாக ஊன்றிப்பார்த்தால் அநேக விஷயங்கள் தெரியவரும். ஐரோப்பாவிலுள்ள பொதுமக்கள் கஷ்ட திசையை அனுபவிக்கிறார்கள். நாஸி எஜமானர்கள் கடுமையான விதிகளை ஏற்படுத்துகிறார்கள். இதிலிருந்து இந்தக் கொள்ளைக்காரர்களுக்கும் வெகு சீக்கிரத்தில் கேடு சம்பவிக்குமென்று தோன்றுகிறது. எப்பொழுது வருமென்று யூகித்துச் சொல்வது முடியாத காரியம். இந்த சமயத்தில் ஐரோப்பாவில் பொதுமக்களுக்கு நேர்ந்திருக்கும் கஷ்டமும், துக்கமும், சொல்வதற்கியலாது. இப்பொழுது மனிதப் பிரயத்தனத்தால் அதை நிவர்த்தித்துவிட முடியாமலிருக்கிறது. இறுதியில் வெற்றி கிடைத்தவுடன் கொள்ளையடிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கும், பசிப்பிணியால் வருந்தும் மக்களுக்கும் உதவியளிப்பது நம்மையும், அமெரிக்கர்களையும் பொறுத்திருக்கிறது. மேலும் அமெரிக்கர்களும், நாமும் சேர்ந்து அளிக்கும் உதவி அவர்களுடைய தேவைக்குத் தகுந்தபடி இருக்கவேண்டும்.

---

## இதாலியின் நிலைமை.

(டைம்ஸ் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

ஜெர்மனியில் சமீபத்தில் நடந்ததிற்கு மாறாக நீண்ட காலத்திற்கு பொருள்கள் தேவையாக இருக்குமென்று உணவு திட்டத்தை சுருக்கும்படியாக இப்

பொழுது முஸோலினி பிரயத்தனப்பட்டிருக்கிறான், எல்லாம் சரியாக இருப்பது போல் அவன் ஜனங்களுக்குச் சொல்வதானது தொனியிலும், விஷயத்திலும் ஜெர்மனியை ஒத்திருக்கிறது. சென்ற வாரத்தில் உணவு திட்டத்தை சுருக்க வேண்டிய அவசியமிருப்பதைக் குறித்து முஸோலினி பேசியதைக் கேட்ட இதாலியர்கள், ஹிட்லருக்கு தோல்வி ஏற்படுமென்ற கலவரத்தில் முஸோலினியும் அகப்பட்டுத்தவிப்பதை கண்டுகொள்ளாமல் இருந்திருக்க முடியாது. வெகு வருஷங்களாக ஜெர்மனி ஜயம் பெற்றுவிடும் என்ற எண்ணமே முஸோலினியை இந்நிலைமைக்குக் கொண்டுவர ஆதாரவாக இருந்தது. அத்தகைய எண்ணம் இல்லாமலிருந்தால் இந்த யுத்தத்தின் விளைவைப்பற்றி இதாலி வேறுவிதமாகவே நினைத்திருக்கும்.

சென்ற வருஷத்தில் ருஷ்யாவிலும், லிபியாவிலும் ஜெர்மானியர் அனுப்பிய சைனியங்களுக்குப் பக்க பலமாக இதாலி கொஞ்சம் துருப்புகள் அனுப்ப வேண்டிய பொறுப்புமட்டில்தான் இருந்தது. கப்பற்படை ஒன்று இருக்கிறது. ஆனால் எப்போதாவது அது சண்டையில் ஈடுபடும். ஆனால் கடுமையாக வறுமை ஏற்பட்டதினாலும், அதிகாரிகளிடத்திலும், வியாபாரிகளிடத்திலும் வேலைத்திறமையில்லாததினாலும், லஞ்சம் வாங்கும் பழக்க மிகுந்ததினாலும், இதுவரை நேராக ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடாமலிருந்த சௌகரியங்களை இவைகள் குறைத்துவிட்டன. முந்தின வருஷம் மாரி காலத்தில் இதாலியக் குடும்பத்தினருக்கு சாதாரணமாக விறகு முதலியவை எவ்வளவு கிடைத்ததோ அதில் நாலிலொரு பாகம் இவ்வருஷம் மாரி காலத்தில் அவர்களுக்குக் கிடைக்கிறதே அவர்களின் அதிர்ஷ்டம்தான். அவசியத்தினாலாவது அல்லது நெறிமுறை தவறக் கூடாதென்றாவது, சட்டப்படி கிடைக்கக்கூடிய திட்டங்களைக்கொண்டே ஜீவித்து வரவேண்டுமென்று எண்ணினவர்கள் மார்ச்சு மாதம் பாதிவரை தினசரி 7 அவுன்ஸ் ரொட்டியைக் கொண்டே ஜீவித்து வந்தார்கள். அதற்குப் பிறகு 5 அவுன்ஸாகக் குறைக்கப்பட்டுவிட்டது. அதாவது இரண்டு சிறிய சுருள்கள்தான் அவர்களுக்குக் கிடைக்கும். இதைப்போல் இரட்டிப்பு மடங்கு ரொட்டி ஒவ்வொரு ஜெர்மானியனுக்கும் கொடுக்கப்படுகிறது. அதையே ஜெர்மன் பொதுமக்கள் மிகவும் குறைவாக எண்ணுகிறார்கள். இத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இதாலியர்களுடைய நிலைமை இன்னும் மோசமென்று விளங்கும். அரசாங்கத்திற்கு ஒப்படைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருந்த இதாலியக் குடியானவர்களில் அநேகம் பேர்கள் தங்கள் குடும்பத்திற்குப் போதுமானவைகளை மறைத்து வைத்துக்கொண்டு பாக்கியை மட்டும் கொடுத்துவந்தார்கள். சில பிராந்தங்களில் தானியம் வசூலிப்பவர்கள் வெகு கண்டிப்பாயும், தீவிரமாகவும் வசூலித்து வந்தார்கள். நகரங்களில் திருட்டுத்தனமாகத் தானியங்களை வாங்குவதற்கு அநேகமாக ஜனங்களால் முடியவில்லை. இந்த மிகவும் குறைவான திட்டத்திலிருந்து அநேகர் மிகவும் வெற்றிகரமாக ஏமாற்றி வந்ததால் அம்மாதிரி செய்யத் துணியாதவர்கள் பாடு மிகவும் கேவலமாகி விட்டது. மேலும் சென்ற வருஷத்தில் இதாலியப் படைவீரர்கள் ஒரு சண்டையும் செய்யாமலிருந்தபோதிலும் யுத்தக் கைதிகளாகவும், ஜெர்மனியில் தொழிலாளிகளாகவும் அச்சு நாட்டுப் போர்முனையில் போர்வீரர்களாகவும் சேர்ந்து, மொத்தம் 15 லக்ஷம் இதாலிய புருஷர்கள் தங்கள் வீடுகளை விட்டும் போய் விட்டதனால், இதாலியின் நிலைமை சகிக்க முடியாமல் போய்விட்டது. அவர்கள் இருந்து வேலை செய்யவேண்டிய நிலங்களையும், பழத்தோட்டங்களையும் அவர்கள் விட்டுப்போய் விட்டதினால் இதாலிக்கு யாதொரு பயனுமேற்படவில்லை.

இதாலியின் புராதன நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காகவும், இதாலியின் பொறுப்புகளை அதிகரிக்கச் செய்வதற்காகவும் இந்த யுத்தம் நடந்துவருவதாக, முஸோலினியின் எழுத்தாளர்களும், சொல்வன்மை பொருந்தியவர்களும்கூட விஸ்தரித்து எழுத முடியவில்லை. இந்த யுத்தங்களுக்கு நடுவில் மால்டாவை அடிக்கடி தாக்கவேண்டுமென்று வெகு நாளாகத் திட்டம் போட்டிருந்ததாக இதாலியர்கள் பிரசாரம் செய்து வந்திருக்க, ஜெர்மானியர்களே மால்டாவைத் தாக்கும்படி விட்டுவிட்டார்கள். ஆனால் இப்பொழுது வீரம் நிறைந்த அந்தத் தீவின்பேரில் ஆகாயத்தில் இதாலிய விமானங்கள் அடிக்கடி தோன்றுகின்றன. இதிலிருந்தும், மற்ற சம்பவங்களிலிருந்தும் ஐரோப்பா கண்டத்தில் நடக்கப்போகும் பெரிய



க்குதலுக்கும், சமுத்திரங்களிலும், மற்ற தீவுகளிலும் நடக்கப்போகும் நட டிக்கைகளுக்கும், லுப்ட்வாபியினால் ஒரே சமயத்தில் சமாளிக்க முடியாது ன்று தெரிகிறது. ஆனால் இதாலிய விமானங்கள் புதுமாதிரியாகவும், நவீன முறையில் தயாரிக்கப்பட்டதாகவும் அதிக எண்ணிக்கை கொண்டதாகவும் இந்த த்தங்களில் தோன்றவில்லை, அவை யுத்தத்தில் போரிடும் மாதிரியிலிருந்து வைகள் மட்டமானவை என்று வெளியாகிறது. ஜெர்மனியால் தனக்கு தேவைப்பட்ட உலோகங்களையும், எண்ணெய், மற்ற சாமான்களையும் எடுத்துக் காண்டு பாக்கியாக விட்டவைகளை மட்டும், இதாலி, பிரான்ஸ் இன்னும் மற்ற றைந்த கைத்தொழிலுள்ள நாடுகளும் பங்கிட்டுக்கொள்ள வேண்டியதாக ருக்கிறது இந்தப் பொருள்களை நம்பி இருக்கவேண்டியிருப்பதால் தாலியின் யுத்தப்பொருள் தயாரிப்பும் திறமையற்றதாக இருக்கிறது. இதாலி த்தத்தில் பிரவேசித்தபோது இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது அதிக த்தப்பொருள்களை இதாலி தயாரித்துவருவதாக இதாலியப் பிரதிநிதிகள் பேசி ருக்கிறார்கள். இது உண்மையாக இருக்குமானால் அபிஸீனியா யுத்தம், ஸ்பெயின் தசத்து உள்நாட்டுச் சண்டைகள் இவைகளுக்குப்பிறகு, 1939-ம் வருஷத்தில் றக்குமதி செய்யப்பட்ட பொருள்களை நீண்ட கால திட்டங்களுக்கு உபயோகப் டுத்த முடியாமல் இருந்த நிலைமையை, இப்பொழுது கொஞ்சம் அபிவிருத்தி டையச்செய்துவிடலாம். 1940-ம் வருஷத்தில் லண்டனை வெடிகுண்டுகளால் க்குவதற்கு உதவியாக முஸோலினி அனுப்பித்த விமானங்கள் அழிக்கப் டாமல் ஒன்றுகூட தப்பவில்லை. அவை கடலிலோ, நம் தேசத்திலோ அழிக்கப் ட்டுவிட்டன. இதிலிருந்து விமானங்கள் அதிக மட்டமானவை என்று தரிகிறது. யுத்த ஆரம்பத்தில் இதாலியக் கைத்தொழிலின் ஸ்திதி எப்படி ன்பது இதிலிருந்து வெளியாகிறது.

சென்ற லிபியா படையெடுப்பில சில பிரசித்தியாதிபெற்ற இதாலிய ாங்கிகள் அனுப்பப்பட்டன, அநேக துறைகளில் உற்பத்தியில் இதாலி ன்வாங்குவதாகச் சொல்லப்பட்ட சாக்ஷியத்திற்கு மாறாக இந்த இதாலிய ாங்கிகள் கொஞ்சம் கைதூக்கிவிட்டன. ஆனால் இதாலியில் திறமையுள்ள வேலைக்காரர்களை ஜெர்மனிக்கு ஏற்றியனுப்புவதைப் பார்த்தால் மைலான், டூரின் நகரங்களில் தயாரிக்கப்படும் சாமான்கள் ஜெர்மனியில் தயாரிக்கப்படும் ாமான்களுக்குக் கீழ்த்தரமாகவே கருதப்படுகிறது. கைத்தொழிலிலும், ாணுவத்திலும் வடக்கே மேலோங்கி நிற்கும் அச்சுநாட்டினரான ஜெர்மனிக்கு தவியாக இருந்து இதாலி வேலைசெய்து வருகிறது. ஆனால் இதாலியர்கள் பெருமைக்கு இத்தகைய தோற்றம் திருப்தி உண்டாகமாட்டாது. பொதுத் தோற்றத்தில் இதாலியர்கள் விரும்புகிறபடி இதாலிக்கு லாபம் கிடைக்கிறதாக ஜனங்களுக்குக் காட்டவேண்டியிருக்கிறது. ஆகையினால் மால்டாவைத் தாக்கு வதில் இதாலியர்கள்தான் முக்கிய பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்று சொல்வது பிரசாரத்திற்காகத்தான் என்று தோன்றுகிறது. மத்தியதரைக் கடலில் சிறிய கப்பற்சண்டை சம்பவங்கள் பலநாட்களாகவும், வாரங்களாகவும், இதாலிய ரேடியோக்களிலும், பத்திரிகைகளிலும் மிகைப்படுத்திச் சொல்லப்பட்டு வந்தது. முஸோலினியின் சாம்ராஜ்யத்தில் கார்ஸிகா டூனிஸ், மால்டா, ஜிப்ரால்ட்டர், ஸூயெஸ் இவற்றைச்சேர்க்க வேண்டுமென்று ஆரம்பித்த இந்த யுத்தத்தில் இம்மாதிரி விஷயங்களை மிகைப்படுத்திச்சொல்லி ஜனங்களுக்குத் தைரியத்தை உண்டாக்கவேண்டுமென்ற நோக்கம் இதாலிக்கு இருக்கிறது.

பிரான்ஸில் லவால் மீண்டும் அதிகாரத்துக்கு வந்ததும், பிரான்ஸில் அதிகம் கைப்பற்றவேண்டுமென்று இதாலி கொண்டிருந்த எண்ணம் நிறைவேறமுடியவில்லை. விஷி அரசாங்கத்தில் இதாலிக்கு ஏற்பட்ட மனோவேதனையை மறைத்து வைக்கமுடியவில்லை, இதாலியப் பத்திரிகையில் புரியாமலும், பயமுறுத்தக்கூடிய வியாசங்களும் எழுதப்பட்டு வந்தன. பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக தெருக்களில் கூட்டங்கள்கூடி கண்டனம் செய்யப்பட்டன. லவாலுடன் ஜெர்மனி செய்து வரும் நடவடிக்கை இதாலிக்குப் பிடிக்கவில்லையென்று ஹிட்லருக்குத் தெரிவிக்க வேண்டி இம்மாதிரி செய்யப்பட்டன.

இதாலியர்கள், பிரான்ஸுக்கும், ஜெர்மனிக்குமுள்ள சிநேகத்தை விரும்பமாட்டார்களோ என்று கருதியே, ரீச்ஸ்டாக்கில் ஹிட்லர் பேசுகையில் பிரான்

லைப்பற்றி சொல்லாமல் விட்டுவிட்டான். முஸோலினிக்கு விருப்பமில்லாதது அவனுக்கு ஒருவிதத்தில் சேடனாகவும், மற்றொரு விதத்தில் எஜமானனாகவும் இருக்கும் ஹிட்லருக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் இருவர்களும் ஒரு துறையில் இறங்கிவிட்டார்கள். இரண்டுபேரும் சேர்ந்து செய்யும் நடவடிக்கையில் உண்டாகக்கூடிய பலாபலன்களை அனுபவிக்க முடியாமல் ஜெர்மனியாவது இதாலியாவது ஒன்றைவிட்டு மற்றொன்று தப்பமுடியாது பரபரப்பாகவும், அகாரணமாகவும் நடக்கும் ராஜீய விஷயங்களிலிருந்து இதாலி கொண்டிருக்கிற எண்ணம் பாழடைந்திருக்கிறதென்று வெளிப்படையாகத் தெரிகிறது. தேசத்தார்கள் எல்லாருடைய மனதிற்குள்ளும் பிரமிக்கத் தக்க ஏமாற்றம் ஏற்பட்டு இருக்கிறதென்று தெரிகிறது.

## அச்சுநாடுகளை அமெரிக்க நாடுகள் ஏமாற்றுகின்றன.

டைம்ஸ் பத்திரிகையின் தலையங்கத்தில் குறிப்பிடும்போது அச்சுநாடுகளை அமெரிக்கா அதிகம் ஏமாற்றுவதாகச் சொல்லப்பட்டது. வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா இவைகள் ஜெர்மனியின் லக்ஷியங்களை அழிப்பதற்காகத் தங்களுடைய பெரிய சைனியங்களை பலப்படுத்துவது நமது நேசதேச கட்சிக்கு மிகுந்த உதவியாகும்.

சண்டைகளுக்கு இடையில் அமெரிக்காவைப்பற்றி ஜெர்மனியும் அதன் தோழ நாடுகளும் கவனத்தை செலுத்தாமல் இல்லை. ஏனென்றால் சென்ற யுத்தத்தில் அமெரிக்காவின் உதவி நேசநாடுகளுக்கு ஏற்பட்டதால் ஜெர்மனிக்கு உண்டான நஷ்டத்தை ஹிட்லரும், முஸோலினியும் மறக்கவில்லை. இனி அமெரிக்கா நமக்கு சிநேகமாக இராதென்று அறிந்து ஹிட்லர் அமெரிக்காவில் சிறுகலகங்களையும், யுத்தத்தில் ஈடுபடாமலிருப்பதற்கான ஏற்பாடுகளையும் தூண்டிவந்தான்.

அதையொட்டி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சில வருஷங்களுக்கு முன் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும் போல் இருந்தது. ஆனால் ஹிட்லராலும் அவனது சகாக்களாலும் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் கடந்த 10 வருஷகாலமாக அமெரிக்கர்களின் அபிப்பிராயம் கெட்டிப்பட்டுக் கொண்டேவந்தது. அமெரிக்காவிலுள்ள ஜெர்மானியரின் உதவியால் தனது லக்ஷியங்களைச் சாதித்துவிட ஹிட்லர் நினைத்து அமெரிக்காவிற்கு விரோதமாகப் பிரசாரம் நடத்தினான். யுத்தம் ஆரம்பித்த இரண்டு வருஷகாலமாக நடந்த பிரசாரத்தினால் ராஜ துரோகம்போன்ற தன்மையையும் உண்டாக்கினார்கள். ஆனால் சமாதான காலத்திலும், யுத்த சந்தர்ப்பத்திலும் அமெரிக்க அரசாங்கம் இவ்வித நடவடிக்கைகளைப் பலமாக அடக்கிவிட்டனர்.

மேலும் லத்தின் அமெரிக்காவில் நாஸிகளுக்கு அதிக ஏமாற்றம் நேரிட்டது. நாஸிக்கொள்கை ஜெர்மனியில் ஏற்பட்டதும் ஏராளமான பேர்களை பிரஸீலுக்கு கொண்டுவருவதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பிரஸீலின் ஜனாதிபதி வார்காஸ் முன்வந்து தென் அமெரிக்க ஜனநாயகங்களின் ஒற்றுமையையும் ஸ்வதந்திரத்தையும் ஸ்தாபித்ததால் ஜெர்மானியரின் திட்டம் பலிக்கவில்லை.

இதாலியுடன் ஜெர்மனி நட்புக்கொண்டாடியதின் பயனாக, அமெரிக்காவின் பல ஜனநாயகங்களிலுள்ள இதாலியர்கள் ஜெர்மானியருக்குக்கொஞ்சம் சாதகமாக இருந்தனர். இதுவும் எதிர்பார்த்த அளவிற்கு ஏற்படவில்லை. ஏனென்றால் இதாலியர் தங்களது தேசீயத் தன்மையை ஸ்தாபித்துக்கொள்ள முயலுவதால் ஜெர்மானியரின் லக்ஷியத்திற்கு விபரீதமாயும் முடிந்தது. இதற்கு உதாரணமாக மான்டிவிடியோவில் ஸ்வதந்திர இதாலிய ஆர்ப்பாட்டத்தைக் காணலாம்.

## பஸிபிக்கில் யுத்த முழக்கம்.

(டைம்ஸ் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

அகண்ட பஸிபிக் பிரதேசத்தில் யுத்தத்தைப்பற்றிய பிரஸ்தாபம் இருந்து வருகிறது. ஜெர்மானியர் நடத்தும் யுத்தத்தைப் பார்த்தால், கொஞ்சநாள்



சண்டையில்லாமல் ஓய்வுடனிருந்தால் மறுபடி சண்டை யேற்படுமென்பது நிச்சயம் தெரிகிறது. காலமென்பது உயர்ந்த ரத்னமாகும். ஆகையால் அதை வீண் படுத்தக்கூடாது.

பர்மாவில் பருவக்காற்றுகள் அடிக்க ஆரம்பித்ததும் ஜப்பானிய நடமாட்டம் வேறுபக்கமாகத் திரும்பியிருக்கிறது. அவர்களின் யுத்த தந்திரமும் நிரந்தரமாகக் காணப்படவில்லை.

தொடர்ந்து வெற்றி கிடைத்த சமயத்தில் ஜப்பானியக் கப்பற்படை இந்து மகா சமுத்திரத்தில் புகுந்து, பாதுகாப்பில்லாத அந்தமானைக் கவர்ந்து, இலங்கை வரையிலும் வந்தது. தாங்கள் துரிதமாக வெற்றியடைந்து வந்ததால் பிரிடிஷாருக்கு உதவிப்படைகள் வந்து சேரமுடியாதென்றே ஜப்பானியர் நினைத்திருக்கலாம். இரண்டு க்ரூயிஸர்களும், விமானமேற்றும் பழைய கப்பலொன்றும் பிரிடிஷாருக்கு நாசமானதென்பது உண்மைதான். ஆனால் அங்கிருந்து புறங்காட்டி ஜப்பானியர் ஓடியதைப் பார்த்தால் ஸிலோன் பாதுகாப்பு ஏற்கனவேயே செய்யப்பட்டிருந்த விவரம் தெரிகிறது. மேலும் பருவக்காற்று அடிக்கும் காலமும் நெருங்கியதால் ஜப்பானியர் இந்து மகா சமுத்திரத்திலிருந்து கழட்டிச்சென்றனர்.

### பவளக்கடல் யுத்தத்தில் தோல்வி.

இதற்கிடையில் பர்மா ரஸ்தாவில் முன்னேறமுடியாதபடி சீனர்கள் தடுத்தனர். வடக்கு ஆஸ்திரேலியாவில் இறங்க முடியாதபடி மோர்ஸ்பி துறைமுகத்திலுள்ள நேசதேச விமான பலம் தடுத்தது. இவைகளைக் காட்டிலும் மார்ச்சு 10௳ பவளக் கடலில் அடைந்த தோல்வி ஜப்பானியரை அதிகம் பாதித்தது.

அதிகமான கர்வத்துடன் ஜப்பானியர், யுத்தக் கப்பல்கள், துருப்புக் கப்பல்கள், இதர உதவிக்கப்பல்களுடன் ஒரு கப்பற்படையை அனுப்பினார்கள். ஆனால் போதுமான விமானபலம் கிடையாது. பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ் போன்ற கப்பல்களைத் தாக்கியமாதிரியே மற்ற இடங்களில் வெற்றியடையலாம் என்று நினைத்துக்கொண்டு இக்கப்பற்படையை ஜப்பானியர் அனுப்பினர். ஆனால் அதிகம் அவஸ்தைப்பட்டனர். அமெரிக்கக் கப்பல், விமானப்படை எதிரியின் 10 கப்பல்களை மூழ்கடித்து மற்றும் 5 கப்பல்களைச் சேதமாக்கியது.

அதற்கு ஒரு மாதம் கிரமித்து ஜப்பானியர் மீண்டும் ஒரு தோல்வியடைந்தனர். ஜெர்மானியரிடமிருந்து கற்ற மாதிரியே ஜப்பானியரும் எதிரி நாட்டிலேயே சண்டையைச்செய்தனர். ஆனால் ஏப்ரல் 18௳ ஜப்பானில் அமெரிக்க குண்டு விழுந்ததும் ஜப்பானியருக்கு மனம் தளர்ந்தது. தன்னாட்டுப் பாதுகாப்பில் நம்பிக்கையும் குறைந்தது.

ஜெர்மனியில் படையெடுப்பு பயமில்லை என்று கோயரிங் செய்துவந்த பிரசாரத்தைப் பொய்யாக்கி ஜெர்மனி பேரில் பிரிடிஷ் விமானங்கள் குண்டு போட்டபோது ஜெர்மானியருக்கு ஏற்பட்ட பயத்தைக்காட்டிலும் அதிகமாகவே அவ்வமயம் ஜப்பானியருக்கு ஏற்பட்டது.

### புதிய படையெடுப்பு.

ஆகவே ஜப்பான் தனது யுத்த தந்திரத்தை மாற்றிக்கொள்ளவேண்டியதாயிற்று. அவர்களுடைய புதிய லக்ஷியங்களைக் கண்டுபிடிப்பதும் சுலபமல்ல, ஏனென்றால் அவர்கள் வெகு விஸ்தாரமான இடத்தில் நடமாட்டத்தைச் செய்து வருகின்றனர்.

முதலில் மே மாதத்தில் சைனாவில் சண்டை தொடுத்து சில இடங்களைப் பிடித்துக்கொண்டனர். அதே சமயத்தில அயல்நாட்டு படையெடுப்புக்குத் தயார்செய்து ஜூன் மாதத்தில் அலூஷியனிலும், மிட்வேயிலும் தாக்குதலைச் செய்தனர். பவளத்தீவில் அடைந்த தோல்வியைக் காட்டிலும் அதிகமான நஷ்டத்தை மிட்வே தீவில் அடைந்தனர். இந்தத் தோல்வியை ஈடுசெய்யவே அலூஷியனில் 10,000 பேர்களை இறக்கினர். இதே சமயத்தில் மஞ்சூரியாவில் 35 பகுதிகளடங்கிய சைனியத்தைச் சேகரித்ததாயும் சொல்லப்படுகிறது.

ஜப்பானியரின் தந்திரத்தை ஊடுருவிப்பார்க்குமுன், அதன் யுத்த லக்ஷியங்களைக் குறிப்பிடுவோம். முக்கிய லக்ஷியம் பஸிபிக்கில் ஆதிக்கம்

அடைவது. உலகத்தையே கவரும் லக்ஷியம் இருப்பதாகவும், சொல்லப்படுகிறது. என்ன ஆனாலும் தூரக்கிழக்கில் ஆதிக்கம் அடைவது என்பதை வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால் அதற்கு முன் சீனர்களின் எதிர்ப்பைக் குறைக்கவேண்டும். ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா, பர்மா, இந்தியா முதலியவைகளிலிருந்து பிரிடிஷாரைத் துரத்தி டச்சுக் கிழக்கு நாடுகளைக் கைப்பற்றவேண்டும். ஆஸ்திரேலியாவை ஆக்கிரமித்துக்கொண்டு, பிலிப்பைன்ஸைப் படையெடுத்து, பஸிபிக்கில் அமெரிக்காவிற்குச் சொந்தமான தீவுகளை ஸ்வாதீனப்படுத்தி, பிரிடனையும், அமெரிக்காவையும் புது திட்டத்திற்கு உட்படும்படி செய்ய வேண்டும். ருஷ்யாவில் ஜெர்மனி வெற்றிபெற முடியாவிட்டால் ருஷ்யாவின் ஸைபீரியச் சைனியத்தையும் ஜப்பான் முறியடிக்கவேண்டும்.

### பயத்தைச் செய்யும் பிரிவினை.

இது பிறர் மனதிற்கு எட்டாத லக்ஷியமாகும். ஒரு வருஷத்திற்குமுன் இதைப் பற்றி சர்ச்சை செய்திருந்தால் யாவரும் பரிஹஸித்திருப்பார்கள். மூன்று மாத காலத்திற்குள் ஜப்பான் அடைந்துள்ள வெற்றிகளை அடைய முடியுமென்று ஒருவரும் எண்ணியிருக்கமாட்டார்கள். ஹிட்லருக்குள்ள பிரச்னைகளைக்காட்டிலும் அதிகமாகவே ஜப்பானுக்கு இருக்கிறது. ஏனென்றால் ஹிட்லர் ஒரு சமயத்தில் ஒன்றைத்தான் கவனிக்கிறான். எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் முடிக்க ஜப்பான் நினைக்கிறது. ஜப்பானுக்குள்ள பலம் அதற்கு அவ்வளவு சாதகமாக இல்லை. ஜப்பானுக்கு 90 படைப்பகுதிகள்தானென்று சீனர்கள் சொல்லுகின்றனர். இதில் 30 பகுதிகள் சைனாவிலும், 35 மஞ்சூரியாவிலும் ஈடுபட்டிருக்கின்றன. மலேயா, பர்மாவில் 10-ம், ஹாங்காங்கில் 2-ம், பிலிப்பைன்ஸ் தீவில் 5-ம், டச்சுத் தீவுகளில் 5-ம், அனுஷினில் 1-ம், போக மீதி 2 பகுதிகள் தானிருக்கும்.

இது ஒரு பெரிய ரிஸர்வ் படையாகாது. ஆனால் சைனியத்தை இவ்விதம் பல இடங்களில் பிரித்திருப்பது பயங்கரமானது ஆகும். இந்தக் கணக்கு ஊகித்துச் சொல்லப்பட்டதுதான். சைனாவிலும், மஞ்சூரியாவிலும், அவ்வளவு படைகள் இல்லாமலிருக்கலாம். மலேயா, டச்சுத் தீவுகள் இங்கே கொஞ்சம் குறைவாகவும் இருக்கலாம். அல்லது சீனர் கொடுத்த விவரத்தைக் காட்டிலும் ஜப்பானியர் படை பெரியதாகவே இருக்கலாம்.

என்ன ஆனாலும் இவ்விதம் பல இடங்களில் பிரிக்கப்பட்டிருப்பதென்பது உண்மை. சைனாவிலுள்ள எதிரிப் படைகள் போதுமான அளவு இல்லை. ஏனெனில் அங்கே தோல்வி ஜப்பானுக்குக் கிடைத்திருக்கிறது.

### ருஷ்யாவைத் தாக்க ஏற்பாடுகள்.

மறுபடி ஆஸ்திரேலியத் தாக்குதல் துவங்கப்படும்போல் காண்பிக்க மோர்ஸிபி துறைமுகம் தாக்கப்படுவதாகச் சமீபத்தில் கிடைத்த செய்திகள் அறிவிக்கின்றன. ஜப்பானிய திட்டங்கள் எவ்வாறு இருப்பினும், பல இடத்தில் பிரிந்திருக்கும். எதிரியைத் தாக்கும் பிரச்னை நேசநாடுகளுக்கு இருக்கிறது. ஜப்பானிய ஏற்பாடுகளைக் காட்டிலும் அதிகமாக நாம் செய்திருந்தால் ஜப்பானியரால் சமாளிக்க முடியாது. அவ்வித நிலையை அடைவதற்குக் காலதாமதம் கூடாது. சைனா தனியே பிரிக்கப்பட்டிருப்பதால் அதற்கு சிரமமும் அதிகரிக்கும். சைனாவிற்கு உதவியளிக்கும்படிக்கு நாம் முன்னேற்றப்போரை நடத்தவேண்டும். சைனாவிற்குப் போகும் மார்க்கங்களை ஏற்படுத்தி ஸப்ளைகளையும், கவசமணிந்த படைகளையும் அனுப்பினால் அங்கிருந்து டோகியோவைத் தாக்கி ஜப்பானுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். இவ்விஷயம் வியக்தமானது.

இவ்விதம் நாம் செய்யாவிடில் ருஷ்யாவிற்கும் ஆபத்து அதிகரித்து ஜப்பானும் மஞ்சூரியாவில் தாக்குதல் ஏற்படாதென்று நினைத்தால் எல்லா ஜப்பானியப் படைகளும் சைனாவில் புகுரும். அதை சயாங் கைஷேக் சமாளிக்க சிரமப்படுவான்.

ஆனால் சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி ஜப்பான் மஞ்சூரியாவில் தனது படைகளைச் சேகரித்து ஒரு தாக்குதலுக்குத் தயாரிப்பதாகத் தெரிகிறது. ருஷ்ய ஸைபீரியச் சைனித்தின் பலம் குறைந்து, வேறு உதவியும் ருஷ்யர்களுக்கு கிடைக்காவிடில் ருஷ்யாவை ஜப்பான் தாக்கி வ்ளாடிவாஸ்டக்கிலிருந்து ஏற்படக்கூடிய விமானத் தாக்குதல் பயத்தை நிவர்த்திசெய்துகொண்டு பிறகே சைனாவைப் பூர்ணமாகத் தாக்க ஏற்பாடு செய்யும்.



# ஜப்பானும், ருஷ்யாவும்.

('டெய்லி ஹெரால்டு' பத்திரிகையில் மேஜர் E. W. ஷெப்பேர்ட் என்பவர் எழுதியது.)

ருஷ்யாவை ஜப்பான் படையெடுக்குமென்று சில வாரங்களுக்கு முன் எதிர்பார்க்கப்பட்டது. வடகிழக்கு ஆசியாவில் இப்பொழுது சீதோஷ்ண நிலை ரொம்ப அனுகூலமாகயிருக்கிறது. இந்த சமயத்தில் பிரிடனும், அமெரிக்காவும் தூரக்கிழக்கில் செய்ய எத்தனிப்பதைவிட ஜப்பானியருக்கு அங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள சாத்தியமாயிருக்கும். உண்மையில் அவர்கள் எடுத்துக் கொள்ளும் ஓய்வு வெகு நாட்களுக்கு நீடித்திருக்க முடியாது. இந்த அவகாசத்திற்குள் ஜப்பான் சைனாவைக் கைப்பற்றவோ அல்லது ஆஸ்திரேலியாவைப் படையெடுக்கவோ முயற்சிக்கும். இவ்விரண்டு முக்கிய நோக்கங்கள்தான் ஜப்பானைத் தூண்டி வருகிறது. ஆனால் அவைகள் அதன் சக்திக்குத் தகுந்தவையல்லவென்று ஜப்பானே தீர்மானித்துக்கொள்ளலாம்.

இப்பொழுது சென்ற சில வாரங்களாக வடக்கே மங்கோலியாவின் மத்தியிலும் ருஷ்ய எல்லைப்புறத்திலுள்ள மஞ்சுகோவிலும் ஜப்பானியத் துருப்புகள் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமித்து வருகின்றன. இதே சமயத்தில் ருஷ்யா ஐரோப்பா யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதினால் தூரக்கிழக்கில் ஜப்பானியத் தாக்குதலை எதிர்த்து நிற்க சைனியங்களை அனுப்ப முடியவில்லை. மேற்சொல்லிய காரணங்களினால் ருஷ்யாவுக்குச் சொந்தமான தூரக்கிழக்குப் பிராந்தியங்களை ஜப்பானியர் உடனே தாக்குவார்கள்போல் தோன்றுகிறது. இதற்கு வெகு நாட்களுக்கு முன்பே ஜப்பானிய எதிர்ப்பு எதிர்பார்க்கப்பட்டதுதான்.

ஜப்பான் முக்கியமாக என்ன நோக்கம் கொண்டிருக்கலாம். வ்ளாடிவாஸ்டாக் ஒரு பெரிய பலமான கோட்டை. அது கப்பற்படை தளமாகவும், விமான தளமாகவும் விளங்குகிறது. இம்முக்கிய துறைமுகத்தை முடிந்தால் கைப்பற்றவோ அல்லது அதன் பலத்தைக் குறைக்கவே எத்தனிப்பதுதான் ஜப்பானியரின் முக்கிய லக்ஷியங்களில் ஒன்றாக இருக்கலாம். இத்துறைமுகத்திலிருந்து ஜப்பானை அழித்துவிடக்கூடுமென்று நெபோலியன் கூறிவந்தான். ஜப்பானில் பலமான வெடிகுண்டு விமானத்தாக்குதல் ஏற்படுமென்ற பயம் ஜப்பானியருக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த பயத்தைக்கொண்டே ஜப்பானியர் யுத்த நடவடிக்கையை நடத்தி வருகிறார்கள். இது காரணத்தினால் அவர்கள் இனி புதிதாகத் தாக்கப்போவதில் வ்ளாடிவாஸ்டாக்கைத் தாக்கலாம்.

ஜப்பானியர் வ்ளாடிவாஸ்டாக் துறைமுகத்திற்கு வடக்கேயுள்ள புதிய பெரிய தொழிற்சாலைப் பிராந்தியத்தை ஆக்கிரமிக்க எத்தனிப்பார்கள். அத்துடன் தொழிற்சாலையை வேலை செய்யவிடாமல் தடுத்துவிட முயற்சிப்பார்கள். அத்தாக்குதல்களில் கோம்ஸோமால்ஸ்க் (Komsomolsk) என்ற நகரம்தான் முக்கியமாகத் தாக்கப்படும். ருஷ்யாவுக்குச் சொந்தமான தூரக்கிழக்கில் போர் புரியும் ருஷ்யச் சேனைக்குவேண்டிய யுத்தப் பொருள்கள் இங்குதான் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. அதனால் மேற்கு பக்கத்திலிருந்து அநேக மாதங்கள் வரை ஸப்ளை வராமலிருந்தாலும் தூரக்கிழக்கிலுள்ள சைனியம் சமாளிக்க முடியும்.

ஆனால் மேற்கேயிருந்து உதவி வருமென்று ஜப்பானியர் எதிர் பார்க்கக்கூடும். அவ்வுதவி கிடைக்காமலிருக்கும்படி அவர்கள் தடுத்தாகவேண்டும். இவ்விதம் தடுப்பதற்கு பிரிமோர்ஸ்க்குக்கு மேற்கேயுள்ள ஸைபீரியாவுடன் பிணைக்கும் இருப்புப்பாதையைத் துண்டித்து ஒன்று சேராமல் வைத்திருந்தால் அவர்களின் எண்ணம் பூர்த்தியாகலாம். பெரும்பாலாக ஜப்பானியரின் நோக்கங்கள் என்னவென்று வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

ஜப்பானின் வெகுதூரமான போர்முனையில் பாக்கி பாகங்களில் ஜப்பானியர் தற்காப்பு முறையிலேயே இருக்கக்கூடும். ஆனால் ஆமோர் நதிக்கரையோரமாகவும், மங்கோலியாவின் உள்பக்கம் எல்லைப்புறத்திலும் சிறிய தாக்குதல்கள் செய்வதற்கும் திட்டம் போட்டிருக்கலாம். ஸெபாஸ்டபூலைத்தாக்கும்

பொழுது ஜெர்மானியர்களுக்கு நேர்ந்ததைக் கண்கூடாக பார்த்த ஜப்பானியர் பலமான தற்காப்பு வாய்ந்த விளாடிவாஸ்டாக்கை நேர்முகமாகத் தாக்க விரும்பமாட்டார்கள். கொரியா எல்லைபுறத்திலிருக்கும் ராஷிட் என்ற இடத்திலிருந்தும், அதற்கு வடக்கே கால்கா ஏரியை நோக்கியும் சேர்ந்தாற்போல் ஜப்பானியர் தாக்கலாம். காண்கா ஏரியானது விளாடிவாஸ்டாக் அல்லது காவோரோவாஸ்க் என்ற இடங்களுக்குத் தெற்கே 100 மைல் தூரத்தில் இருக்கிறது. அப்படித் தாக்குவதினால் விளாடிவாஸ்டாக்கையும், வடக்கேயுள்ள பிரதேசத்தையும பிணைக்கும் இருப்புப்பாதையைத் துண்டிக்க வேண்டுமென்று நோக்கம் இருக்கலாம். ஆனால் காவோரோவாஸ்க் பிராந்தியம் பலமாகப் பாதுகாக்கப்படும என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் அதுதான் முக்கியமான இடம்.

ருஷ்யாவின் யுத்த தந்திரம் என்னவென்று பார்ப்போம். முக்கியமாக அவர்களின் நீண்ட போர்முனையில் பிளவு ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் ருஷ்யர்களுக்கு இருந்துவருகிறது. அவ்விதம் பிளவு ஏற்பட்டால் போர்முனையின் கிழக்குப்பகுதி துண்டிக்கும்படி நேரிடும். மேலும் அங்கு மேற்கேயிருந்து உதவி வருவதற்குள் அது அழிந்து போனாலும் போகும்.

தேசப்படத்தைப் பார்த்தால் மஞ்சுகோவில் மத்திய பாகத்திலிருக்கும் ஹார்பின் என்ற இடத்தை நோக்கி மஞ்சூலி என்ற இடத்திலிருந்து இருப்புப்பாதை ஓரமாக ருஷ்யர்கள் எதிர்த்து முன்னேறிச் செல்லலாமென்று தோணுகிறது. அது வெற்றிகரமாக முடிந்தால் பிணகோ வெஸ்ட்-சென்ஸிக் என்ற இடத்தைத் தாக்கிவரும் ஜப்பானியப் படைகளில் முதல் பகுதியின் விலாப்பக்கத்திலும், பின்புறத்திலும் ருஷ்யர்கள் தாக்கக்கூடும். முடிவில் மஞ்சுகோவிலுள் ஜப்பானியப் படைகள் எல்லாவற்றையும் அழித்து விடக்கூடும். ஆனால் மஞ்சூலி (Manchuili) யிலிருந்து ஹார்பின் சுமார் 500 மைல்களுக்கப்பாலிருக்கிறது. ஹெய்லர் என்ற இடத்திற்கப்பால் கிங்கான் மலைத்தொடர் இம்மாதிரி முன்னேறிச் செல்வதை தடை செய்யும். இருந்த போதிலும் ருஷ்யர்களின் திரும்பத் தாக்குதல் இதுவாகத்தான் இருக்கலாம்.

ருஷ்யாவிற்கும் ஜப்பானுக்கும் யுத்தம் ஆரம்பித்தவுடன் ஸைபீரியாவைத் தாண்டிச் செல்லும் இருப்புப்பாதை துண்டிக்கப்படும். அப்படி ஏற்பட்டால் அந்த இருப்புப்பாதை ஓரமாக நெடுகிலும், ஜிப்தா (Gipta) பிராந்தியத்திலிருந்து கிழக்கே ருஷ்யர்கள் ஒரே சமயத்தில் முன்னேறி அந்த இருப்புப்பாதையை சரிபடுத்த ஏற்பாடு செய்வார்கள். இந்த நடவடிக்கையானது கூபக்கால் பிராந்தத்தில் வைத்திருக்கும் மூன்றுவது செங்கொடிப் படையினால் எடுத்துக்கொள்ளப்படும். பிளாகோ வெஸ்ட் சென்ஸக் என்ற இடத்திலும், காவோரோவாஸ்க் என்ற இடத்திலும் இருக்கும் இரண்டாவது செம்படையும், பிரிமோரஸ்க் ராஜதானியில் இருக்கும் முதலாவது செம்படையும் ஜப்பானியரின் ஆரம்பத் தாக்குதல் காலத்தில் தற்காப்பு முறையிலிருக்கும்.

இருபக்கங்களிலும் இருக்கும் படைப்பலம் நிச்சயமாக எவ்வளவு இருக்கிறதென்று சொல்லுவது கடினம். மஞ்சுகோவிலிருக்கும் ஜப்பானியப்படைகள் உயர்ந்த மதிப்புக்கு 50 பகுதிகள், அதாவது 10 லக்ஷம் பேர்கள் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் 25 பகுதி முதல் 30 பகுதிகள்வரை இருக்கலாம். ருஷ்யப்படை பலத்தின் மதிப்பிடுவதில் அதிக வித்தியாசமிருக்கிறது. குறைந்த மதிப்பு 10 லக்ஷம் பேர் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் அந்தப்போர்முனையில் ஜப்பானியரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கும். அவர்கள் கை மேலாக இல்லை.

ஆனால் அவர்களுக்கு ஆரம்ப சூரத்தனமும் வெகுநீண்ட போர்முனையில் தாக்கக்கூடிய சக்தியுமிருக்கிறது. ஜப்பானியர் முந்திய தாக்குதல்களில் செய்ததைத் திரும்பச்செய்து துரிதமான வெற்றிகள் அடையலாமென்று எண்ணிக்கொண்டிருப்பார்கள்.



## தேசீய யுத்த முன்னணி.

**வெள்ளைப்பூண்டு அதிகமாக உற்பத்தி செய்யப்படவேண்டும்.**

சமவெளிப்பிராந்தங்களில் ஆகஸ்டு முதல் ஸெப்டம்பர் வரையிலும், குன்றுகளில் பிப்ரவரி முதல் ஏப்ரல் வரையிலும் பயிர் செய்யுங்கள். நல்ல உறமுள்ள நிலமும், அடிக்கடி ஈரமும் அவசியம் 4 அங்குல உயரம் வளர்ந்தவுடன் பிடுங்கி 8 அங்குல ஆழமும், 9 அங்குலம் அகலமுள்ள பாத்திகளில் 6 அங்குலத்திற்கு இடையே நாற்றை நடவேண்டும். பயிர் பெரிதாக வளரும்போது தண்டுகளைச் சுற்றி மண்ணை அணைக்கவேண்டும். மேலேயுள்ள இலைகளை அடிக்கடி கிள்ளிவிடுங்கள். சமுத்திரமட்டத்திற்கு 2,000 அடி உயரத்திற்குச் குறைவான இடங்களில் இது பயிர் ஆவதில்லை.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

| 1942— | | பிரஸங்கம் 111—(3-வது பிரிவு). | | மணி. |
|---|---|---|---|---|
| ஸெப்டம்பர் ... | 5, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6 30 |
| | 6, ஞாயிற்றுக்கிழமை | பிச்சத்தான்பட்டி ... | ,, | 6.00 |
| | | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | வடகாடு ... | ,, | 6.30 |
| | | முனிஸிபல் ஆபீஸ் ... | ,, | 6.45 |
| | 7, திங்கட்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குரிச்சி ... | ,, | 6.30 |
| | 8, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | ராமச்சந்திரபுரம் ... | மாலை | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| | 9, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | உடையாளிப்பட்டி ... | மாலை | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| | 10, வியாழக்கிழமை ... | மழையூர் ... | ,, | 6 00 |
| | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 11, வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

பிரஸங்கம் 112—(4-வது பிரிவு).

1942—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| 12, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலே | 6.30 |
| 13, ஞாயிற்றுக்கிழமை. | கீரப்பழனி | ... | „ | 7.00 |
| | ஆலூர் | ... | „ | 7.30 |
| 15, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | | காலே | 10.15 |
| | காரையூர் | ... | மாலே | 7.00 |
| | இடையாத்தூர் | ... | „ | 7.30 |
| 16, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | | காலே | 10.00 |
| | ராணி பெண்பாடசாலே... | | „ | 10.15 |
| | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | | „ | 10 15 |
| | வடவாளம் | ... | மாலே | 7.00 |
| | செம்மட்டிவிடுதி | ... | „ | 7.30 |
| 17, வியாழக்கிழமை ... | ரேனூர் | ... | „ | 7.00 |
| | காஞ்சூர் | ... | „ | 7.30 |
| 18, வெள்ளிக்கிழமை... | நார்த்தாமலே | ... | „ | 7.00 |
| | உப்பிலியக்குடி | ... | „ | 7.30 |

---

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 5— 9—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 6— 9—42 | ... | எம்பல். |
| திங்கட்கிழமை | ... | 7— 9—42 | ... | கொன்னையூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 8— 9—42 | ... | ராமச்சந்திரபுரம். |
| புதன்கிழமை | ... | 9— 9—42 | ... | கரம்பக்குடி. |
| வியாழக்கிழமை | ... | 10— 9—42 | ... | ஆலங்குடி. |
| வெள்ளிக்கிழமை | ... | 11— 9—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 12— 9—42 | ... | வெட்டன்விடுதி |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 13— 9—42 | ... | விராச்சிலே. |
| திங்கட்கிழமை | ... | 14— 9—42 | ... | விராலிமலே. |
| செவ்வாய்க்கிழமை | ... | 15— 9—42 | ... | கோனூபட்டு. |
| புதன்கிழமை | ... | 16— 9—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 17— 9—42 | ... | குழிபிரை. |
| வெள்ளிக்கிழமை | ... | 18— 9—42 | ... | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—7-9-42.

69408

புதுக்கோட்டை ஸமஸ்...

தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஞு ஸெப்டம்பர் மீ 12வ [ந. 112

பிரஸங்கம் CXII.

# இந்தியாவின் நிலைமை என்ன?

## அரசியல் வாதிகள் இந்தியாவைக் காப்பாற்ற முடியாது; போர்வீரர்கள்தான் காப்பாற்ற முடியும்.

(ஜெனரல் ஸர் A. வேவலின் உணர்ச்சி ததும்பும் செய்தி.)

ஐரோப்பா, உலகம், ஜனநாயகம், ஸ்வதந்திரம், சத்தியம், மரியாதை முதலியவைகளுக்கு ஜெர்மனி செய்துள்ள சவாலே நாம் மூன்று வருஷங்களுக்கு முன்பு ஏற்றுக்கொண்டோம். யுத்தத்தைத் தவிர்ப்பதற்காக முடிந்தவரை நாம் விட்டுக்கொடுத்துப் பார்த்தோம். ஆனால் நமது கௌரவத்தையும், பத்திரத்தையும் கவனிக்கும்போது சமாதானமாக இருக்கமுடியாமல் போய்விட்டது. அதாவது எதிரியை சாந்தப்படுத்தி, திருப்திசெய்ய நாம் முயன்றபோது புலியை சாந்தப்படுத்துவது போலவும், முதலேயைத் திருப்திசெய்வது போலவுமாயிற்று. ஏனென்றால் இவைகளின் அடங்காப் பசியைப் போக்கடிக்க மனிதர்களே தேவையாகயிருக்கும்.

நாம் யுத்தத்திற்குத் தயாராக இல்லே என்பதைப் பற்றியாவது, யுத்தத்தில் ஈடுபட்டால் ஏற்படக் கூடிய பயத்தைப் பற்றியாவது, உயிர், பணம், சுகம் முதலியவைகளுக்குத் தீங்கு ஏற்படுமென்றுவது நமக்குத் தெரியாமலில்லே. ஸ்வதந்திரத்திற்காகப் போரிடும்பொழுது சுகத்தைக் கவனிக்கவில்லே. நியாயத்தைக் காப்பாற்ற நமது சொத்துக்களைக் கொடுத்தோம. சத்தியம், தைரியம் முதலியவைகளே உலகில் பரவ நமக்குச் சொந்தமான யாவற்றையும் கொடுத்தோம். இவ்விதம் செய்து நமக்கு அகௌரவம் ஏற்படாமல் செய்துகொண்டோம். ஜெர்மன் ஆக்கிரமணத்தையும், கொடுங்கோலேயும் எதிர்ப்பதற்கு மூன்று வருஷங்களுக்கு முன்பு சண்டையில் கொஞ்சமும் தயங்காமல் ஈடுபடும்போது, சுயநலமோ, புகழோ, இவைகளே கவனியாது ஈடுபட்டோம். இதை நாம் மறக்கக்கூடாது. நமக்கு அதிக சிரமங்கள் ஏற்பட்டன. பிரகிருதத்தில ஒரு மனத்தளர்ச்சி ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தில் இருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் நமக்கு இதைவிட கடுமையான நிலேமை ஏற்பட்டு அதிலிருந்து நாம் முன்பு தப்பி வந்திருக்கிறோம் என்பதைக்கூட நாம் மறந்துவிடக்கூடாது.

### நம்பிக்கையும், தைரியமும்.

கெய்ரோவிலும், மாஸ்கோவிலும் நடந்த முக்கிய மகாநாடுகளில் கலந்துகொண்டுவிட்டு சமீபத்தில்தான் திரும்பி வந்தேன். அம்மகாநாடுகளில் யாருக்

கும மனச்சோர்வு ஏற்படவில்லையென்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன். நம்பிக்கையும், தைரியமுமே அங்கு குடிகொண்டிருந்தன. மத்தியக்கிழக்கில் ஐக்கிய நாடுகளின் துருப்புகள் ஒன்றுசேர்ந்து போரிடுகின்றன. சென்ற ஜூன் மாதத்தில் அவர்களுக்குச் சிற்சில தோல்விகள் நேர்ந்தபோதிலும் அவர்களின் ஆர்வமும், கட்டுப்பாடும் சிறிதும் குறையவில்லை. அவர்களின் முன்னேறித் தாக்கும் சக்தி அதிகரித்து வருகிறது.

மாஸ்கோவில் இரண்டு பெரிய தலைவர்கள் சர்ச்சிலும் ஸ்டாலினும் ஒன்று கூடி ஆலோசனை செய்தது இதுதான் முதல் தடவை. அவர்கள் இவ்விரு நாடுகளுக்கும் சிநேகப்பான்மையை ஸ்தாபித்தார்கள். அவர்களும், அவர்கள் தேசத்தினரும் ஒத்துழைத்து ஒரே உறுதியுடன் எதிரிகளைத் தாக்குவதென்று தீர்மானித்திருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு ருஷ்ய தேசத்தினரைப் பற்றி 30 வருஷகாலமாகத் தெரியும். ருஷ்யப் போர்வீரனின் தீரம் மிகவும் மெச்சத்தகுந்தது என்று நன்குணர்ந்திருக்கிறேன். அவர்களின் பலமும், ஊக்கமும் எப்பொழுதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. அவர்கள் ஒருநாளும் எதிரிக்கு இணங்க மாட்டார்கள்.

சென்ற யுத்தத்தில் இதேகாலத்தில், அதாவது யுத்தம் ஆரம்பித்து மூன்று வருஷங்களுக்குப் பிறகு 1917-ம் வருஷம் இருந்த நிலைமையைப்பற்றி இங்கு குறிப்பிடுவது கொஞ்சம் ஆறுதலைத்தரும். அப்பொழுது நமக்குப் பெரிய நேசதேசமாயிருந்த ருஷ்யா, அங்கு ஏற்பட்ட புரட்சிக்குப் பிறகு முறிந்து போய் விட்டது. நிவில்லீஸ் என்ற இடத்தில் அடைந்த பலமான தோல்வியின் காரணமாக பிரெஞ்சுத் துருப்புகள் கலகம் செய்து பிரிந்துபோயின. அந்த சமயத்தில்தான் பிரான்ஸ் சற்று பலமடைந்து வர ஆரம்பித்தது. நேசநாடுகளுக்கு அதிகமாகத் தொந்தரவு கொடுக்காதபடி பிரிடன் பாஸ்சண்டேல் (Passchendaele) என்ற இடத்தில் எதிரிகளுடன் போரிட்டது. இருந்தாலும், பலனொன்றையும் அடையவில்லை. அதற்குப்பிற்பட்டுத்தான் நமது நேசநாடாக இருந்த இதாலி கபோரிட்டோவில் யுத்தம்நடத்தி, பெருத்த தோல்வியடைந்தது. அதற்கும் பிரிடன் உதவி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. எதிரிகளின் நீர்மூழ்கிகளின் தொந்தரவு ஜாஸ்தியாக இருந்தது. அதனால், நேச நாடுகளின் கப்பல்கள் இப்பொழுது மூழ்கடிக்கப்படுவதைக் காட்டிலும் அதிகமாகவே மூழ்கடிக்கப்பட்டன. அந்த வருஷம் ஏப்ரல் மாதத்தில் அமெரிக்காவும் யுத்தம் தொடங்கிற்று. ஆனால் அதன் சைனியங்கள் பல மாதங்கள் கிரமித்துத்தான் யுத்தத்தில் ஈடுபட்டன. அந்த யுத்தம் முடிந்தும் அதன் யுத்த தளவாட திட்டம், தற்போது அடைந்திருக்கும் திட்ட அளவிற்குக்கூட பூர்த்தியடையவில்லை.

## அபிவிருத்தியான நிலைமை.

ஆகவே 1918-ம் வருஷ ஆரம்பத்தில் நமது நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவே இருந்தது. ஏனென்றால் ஜெர்மன் துருப்புகள் ருஷ்யப் போர்முனையை விட்டு மேற்குப் போர்முனையில் பெருந்தாக்குதலைச்செய்ய ஐரோப்பாவைக் கடந்து வந்தனர். ஆனால் 1918-ம் வருஷம் முடிவதற்குள் நமது எதிரிகள் எல்லா இடங்களிலும் சமாதானத்தை விரும்பினார்கள்.

இன்று ருஷ்யர்கள் யுத்தத்தின் முன்னணியில் நிற்கிறார்கள். பின்வாங்கும் நோக்கம் அவர்களுக்கில்லை. வெற்றிகரமாகவும், சக்தியுடனும் எதிரிகளைத் தாக்கி வருகின்றனர். இதாலியர்களுக்கு நாம் முன்பு செய்தமாதிரி ஜெர்மானியர் உதவி செய்யவேண்டியிருக்கிறது. தற்சமயத்தில் அமெரிக்கா ஏராளமான யுத்த தளவாடங்களின் உற்பத்தியோடுமட்டும் நிற்காமல் தனது துருப்புகளையும் எல்லா யுத்தரங்கங்களுக்கும் அனுப்பிவருகிறது.

மொத்தத்தில் எல்லாவற்றையும் பார்க்கும்பொழுது நாம் சென்ற யுத்தத்திலிருந்ததைவிட, தற்சமயத்தில், நான்காவது வருஷ யுத்தத்தைத் தைரியமாகவே ஆரம்பிக்கிறோம்.



## நமது சாதனங்கள்.

யுத்த காலத்தில் நமது தோல்விகளை அதிகமாகப் பிரஸ்தாபித்து எதிரியின் பலத்தையும், வெற்றியையும் மிகைப்படுத்துவோர் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆனால் நமக்குள்ள சாதகங்களையும், எதிரிக்குள்ள சிரமங்களையும் கவனிப்பது நலம். நமக்குள்ள சாதகங்களும், நமக்குத் தைரியத்தைக் கொடுக்கக்கூடியவைகளாகவே இருக்கின்றன. மனித சக்தி ஏராளமாக நிறைந்துள்ள பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம், அமெரிக்க குடியரசு நாடுகள், ருஷ்யா, சைனா இவைகள் நம் பக்கத்திலிருக்கின்றன. இதைத் தவிர போலந்து, கிரீஸ், செக்கோஸ்லாவகியா, பெல்ஜியம், ஹாலந்து, நார்வே, பிரான்ஸ், தென் அமெரிக்க நாடுகள் இவைகளின் உதவியும் சேர்ந்திருக்கிறது. சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சியாங்கை ஷேக் போன்ற குறையாத தைரியம் பொருந்தி, ஜனங்களின் உணர்ச்சியை வெளிபடுத்தும் பெரிய தலைவர்களும் நமது பக்கத்திலிருக்கிறார்கள். கப்பல்கள், விமானங்கள், டாங்கிகள்போன்ற யுத்த சாமான்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுவதிலிருந்தே வெற்றியைப்பற்றிய நம்பிக்கை ஊர்ஜிதமாகிறது. அதோடு பெரும் லக்ஷியங்களும் நம்மை யுத்தம் செய்யத் தூண்டுகின்றன.

## நமது எதிரிகளின் நிலமை.

நமது எதிரிகளின் நிலைமையை கவனிப்போம். நாம் எதிர்பார்த்தபடி ஜெர்மனி பெரும் முயற்சியைச் செய்து அதற்கு சில வெற்றிகளையும் அடைந்திருக்கிறது. ஆனால் தவறுதல் செய்ய ஆரம்பித்துவிட்டது. இதுவரை அடைந்த எல்லா வெற்றிகளாலும் ஜெர்மனிக்கு நிம்மதி கிடைக்காது, அதன் பொய் வாக்குறுதிகளுக்கும், மிரட்டல்களுக்கும் ஒரு நாடாவது படியவில்லை. ருமேனியாவும், ஹங்கேரியும்தான் அடிபட்ட நாய்களைப்போல் ஜெர்மனியைப் பின்பற்றுகின்றன. இருந்தாலும், பரஸ்பரம் வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆசியாவின் எல்லைவரையில் சண்டை பரவியதால் ஜெர்மனிக்குப் போக்குவரத்து பிரச்னைகளும் ஏற்பட்டு வருகின்றன.

ஐரோப்பாவில் ஜெர்மனிபேரில் வெறுப்பு அதிகரித்துவருகிறது. மனிதர்களும், சாமான்களும் குறைந்துவருகின்றன. ஆனால் நேசநாடுகளுக்கு எல்லா உதவியும் சேமிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குற்றமுமறியாத கைதிகளை மிருகத்தனமாகக் கொலை செய்வதிலிருந்தே ஜெர்மன் சைனியத்தை யாவரும் வெறுப்பார்கள் என்று தெரிகிறது. அவர்களின் தலைவனான ஹிட்லர் அதிகத் துணிச்சல் உள்ளவனென்று சொல்லப்படுகிறது. ஆனால் அவனுக்கு அதிர்ஷ்டம் குறைந்துபோய் விட்டது.

ஜெர்மன் மக்களுக்கு அதிகக் கவலை உண்டுபண்ணும் நிலைமை ஏற்பட்டுவருகிறது. உண்க உணவு கிடைப்பதில்லை. மனோவேதனையும் ஏற்பட்டிருக்கிறது. இப்படியாக அவர்கள் அழியவேண்டியதுதான்.

இதாலியர்களைப் பொருத்தமட்டில் அவர்களின் யுத்தம் தோற்றுப்போய் விட்டதென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் இறுதியில் யாருக்கு வெற்றி என்பது மட்டில் அவருக்குத் தெரியாது.

## ஜப்பானின் கனவுகள்.

ஜப்பானுக்கும் அதன் வெற்றியடைந்த காலமெல்லாம் சீக்கிரத்திலேயே மாறி வருகிறது. அதன் கப்பற்படையும், விமானப்படையும் குலைந்துவருகின்றன. இதர ஆசியா பாகத்தைக் கைப்பற்றி மேன்மையடையலாம் என்ற கனவுகளும் அதிகரித்துவருகின்றன.

இருந்தாலும், நிச்சயமான தோல்வி எதிரிகளுக்கு இன்னும் கிடைக்கவில்லை. அதற்காக குறையாத கவனத்தையும், மனோவாக்கு காயங்களால் யுத்த முயற்சியை முன்னிட்டு நாம் தியாகத்தையும் அங்கீகரிக்கவேண்டும்.

இவ்வுலக யுத்தத்தில் இந்தியா இருக்கும் நிலைமையைப்பற்றி கவனிப்போம். 150 வருஷங்களுக்கு முந்தியிருந்ததைவிட அதிக நெருக்கமாகவே இந்தியாவிற்கு

பயம் அணுகிவருகிறது. ஆனால் அதன் சைனியங்களும், விமான பலமும், முன்னைவிட அதிகமாகப் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. யுத்த தளவாட உற்பத்தி ஆச்சரியகரமாக அபிவிருத்தியடைந்திருக்கிறது. அதன் சிப்பாய்களின் புகழ் இதற்குமுன் இவ்வளவு ஜாஸ்தியாகவும் இருந்ததில்லை.

இன்று ஆயிரக்கணக்கான இந்திய ஆபீஸர்களும், லக்ஷக்கணக்கான சிப்பாய்களும் இந்தியச் சைனியத்தைப் பலப்படுத்த சைனியத்தில் சேர்ந்திருக்கின்றனர். இச்சைனியம் தரைப்போரில் அதிகம் ஈடுபட்டிருக்கிறது. இந்தியக் கப்பற்படை விமானப்படை இவைகளின் எண்ணிக்கை, முஸ்தீப்பு, சாமர்த்தியம், புகழ விருத்தியடைந்துவருகின்றன.

## இந்திய சமூகம்:

ஸிடிபாராணியில் இதாலியப் படையைப் பிளந்து எதிர்த்தடித்ததும், கிரன், அம்பா அலாகி முதலிய இடங்களை முற்றுகையிட்டதும், டமோஸ்கஸைப் பிடித்ததும், மலேயாவிலும், பர்மாவிலும் எதிரியைப் பின்புறம் தாக்கியதும்; ரோமலை தைரியமாக எதிர்த்து நின்றதும், இந்தியாவை எதிரிகளிடமிருந்து காப்பாற்றி வருவதும், தோழர்களைப்போல் பக்கத்தில் நின்று சண்டைபோடுவதும், எல்லாம் நமது இந்தியத் துருப்புகள்தான். ஜாதி, மதம் வித்தியாசம் பாராட்டாமல் ராஜபுத்திரர்கள், மகாராஷ்டிரர்கள், மதராஸிகள், பஞ்சாபிகள், பட்டாணிகள், ஜாட்கள், கார்வாலிகள் இவர்கள் யாவரும் இந்தியாவின் வடக்கு, மத்தியம், தெற்கு பாகங்களிலிருந்து முன்வந்தவர்கள். இவர்களும் வலிமை வாய்ந்த கூர்க்கர்களும், பிரிடிஷ் துருப்புகளுடனும், நேசத் துருப்புகளுடனும் சேர்ந்து நின்று போராடுகின்றனர். இவர்களே இந்திய சமூகத்தினருக்கு உண்மை பிரதிநிதியாவார்கள்.

உலகத்தின் கவனம் இந்தியாவை நோக்கியிருக்கிறது. இதுவே இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பெரிய சோதனை காலம். அரிய சந்தர்ப்பமும் ஆகும். உள்நாட்டுப் பிரச்னைகளிலும், சண்டைகளிலும் ஈடுபட்ட அரசியல் வாதிகள், கட்டுப்பாடு இல்லாத மாணவர்கள், பொறுப்பற்ற விஷமிகள், அறிவில்லாத காலாடிகள் முதலியோர் இந்தியாவைக் காப்பாற்றிக்கொண்டிருக்கவில்லை. காப்பாற்றப் போவதுமில்லை. ஆனால் கட்டுப்பாடு உள்ள இந்தியப் போர்வீரர்களின் சக்தியும், தைரியமும்தான் அதைக் காப்பாற்றிவருகிறது. அவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமே ஒழிய அவர்களைக் காட்டிக் கொடுக்கக்கூடாது.

ஆகவே தைரியம்பெற்ற போர்வீரர்களிடம் உங்களது நம்பிக்கையை வையுங்கள். அவர்களுடைய பிரதிநிதியாக இருந்துகொண்டு எனது மகிழ்ச்சியையும், கௌரவத்தையும், நம்பிக்கையும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அவர்களுடைய தீரத்தால் நீங்கள் நிச்சயம் வெற்றியடைவீர்கள்.

---

## ஹிட்லருடன் சமரசமில்லை.

(அமெரிக்கப் படைகளின் முன்பாக மிஸ்டர் ஈடன் பேசியது.)

"ஹிட்லருடன் எவ்விதத்திலும் சமரசம் செய்துகொள்ள முடியாது. பிறருக்கு துரோகம் விளைவிப்பதை அவன் சரியாகப் பயின்றிருக்கிறான்.

"குற்றச்செய்கையில் ஹிட்லர் தனது முன்னோர் அனைவரையும் ஆக்கிரமித்துவிட்டான். இவ்விஷயத்தில் தாங்கள் இதுவரை கையாண்ட முறைகளைவிட இன்னும் அதிகமாகவே ஹிட்லர் மிஞ்சிவிட்டதுகண்டு, அவன் முன்னோர்களின் சவங்கள் பொறுமையால் புரளுமென்று எண்ணுகிறேன்.

"புதிய உலகில் க்ஷேமம் ஓங்கவேண்டுமென்று பிரிடிஷ் அமெரிக்க ஏஜெண்டுகள் வற்புறுத்துவராயின் அவர்கள் ஜெர்மனியை ஏன் தாக்கவேண்டுமென்று சமீபத்தில் பேசுகையில் ஹிட்லர் கேட்டான். இது சரியான கேள்விதான்!



"இப்படிக் கேட்கும் ஹிட்லர்தான் ஆஸ்திரியாவோடு சிநேகப்பான்மையுடன் இருப்பதாக உறுதிமொழிகூறி சிலமாதங்களுக்குப் பிறகு டாங்கிகளையும், பீரங்கிகளையும் திரட்டிக்கொண்டு அதன் எல்லைப்புறத்தைக் கடந்து உட்புகுந்தான். அதேவிதமாக செக்கோஸ்லோவகியாவில் தலையிடுவதில்லை என்று மியூனிச்சில் அறிவித்துவிட்டு பிற்பட்டு அந்த தேசத்தைப் படையெடுத்தான். அதைப் போலவே போலந்துடன் 10 வருஷ அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தி பாதி காலவரை முடிவதற்குள்ளாகவே ஒப்பந்தத்தை மீறி நடந்துகொண்டான். இம்மாதிரி அக்கிரமங்களைச்செய்த ஹிட்லர் தன்செய்கைகளை மறந்துவிட்டு இங்ஙனம் கேள்வியையும் கேட்பது மிகவும் பொருத்தம்தான்.

"அவ்வித துரோகியுடன் நமக்கு ஒரு போதும் சமரசம் ஏற்படாது. நீங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் விதமாகவே நாங்களும் எங்களுடைய சாம்ராஜ்யத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். நம்மிருவருடைய வருங்காலத்தை நம்மிருவரும் சேர்ந்தே தீர்மானிக்கவேண்டும். உலகத்தின் வருங்கால க்ஷேமத்தை முன்னிட்டே அமெரிக்கச் சைனியம் இங்கு வந்திருக்கிறது."

---

# வார யுத்தச் செய்திகள்.

## 5—9—42-லிருந்து 12—9—42-வரை.

**ருஷ்யா.**—ஸ்டாலின்கிராட்டிலுள்ள யுத்த நிலைமை பின்கண்ட விதமாக இருக்கிறது. தென்மேற்கில் ஜெர்மானியர் கொடலினிகோவோ இருப்புப் பாதை வரை முன்னேறி கிராஸ்னடாருக்கும், ஸ்டாலின்கிராட்டிற்கும் இடையில் வால்காவிற்கு அருகில் சென்றிருக்கின்றனர். ஸ்டாலின்கிராட்டிற்கு மேற்கே கலாச்சிலிருந்து வால்கா-டான் கால்வாயின் இருபக்கங்களிலும் மற்றொரு சைனியம் முன்னேறுகிறது. வடமேற்கிலுள்ள பான்ஸர் படை வால்கா வரையிலும் பரவியிருக்கிறது. அங்கே டிமோஷென்கோ எதிரிகளை வெற்றிகரமாகத் தடுத்துவருகிறார். ஸ்டாலின்கிராட் முனையில் யுத்தம் கடுமையாகி வருகிறது. ஒவ்வொரு வீடும் ஒரு அரணாகச் செய்யப்பட்டிருக்கிறது. அங்கிருந்த தொழிற்சாலைகளெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டன. யுத்தத்தின் வேகமும் தன்மையும் அதிகரித்துவருகின்றன.

அனபாவைப் பிடித்த பிறகு கிரான்னோமியிடோவ்ஸ்காயாவையும் பிடித்து, கருங்கடல் கரை வழியாகவும் கிராஸ்னடார் இருப்புப்பாதை வழியாகவும், நோவோரோஸிஸ்கை அடைந்திருக்கின்றனர். அங்கே சண்டை நடந்து வருகிறது.

மாஸ்டக் பிரதேசத்தில் டெராக்கைக் கடந்த ஜெர்மன் துருப்புகள் தடையுற்றன.

டைம்ஸ் பத்திரிகையின் ஸ்டாக்ஹோம் நிருபர் சொல்லும் விதமாக ருஷ்யர்கள் எதிரியைத் தடுக்கவும், குறுக்கு எதிர்ப்புகளைச் செய்யவும், வல்லமையுள்ளவர்களாக இருப்பதுதான் மனதிற்கு நிம்மதியைத் தருகிறது.

**எகிப்து.**—பிரிடிஷ் 8-வது படையினால் துரத்தப்பட்டு ரோமல் புறப்பட்ட இடத்திற்கே வந்துவிட்டான். எதிரிமேல் நேசதேசத் தாக்குதல் நீடித்திருக்கிறது. சண்டையும் மேற்கு நோக்கியேதான் நடைபெறுகிறது. வெண்டல் வில்கியின் மொழிகளில் 'ஒரு முக்கியமான சண்டை நடைபெற்றது. அதனால் எகிப்திற்கிருந்த பயமும் நீக்கப்பட்டது. ஜெர்மானியர் தடுக்கப்பட்டிருக்கின்றனரே தவிர பூரா இன்னும் அழிக்கப்படவில்லை. 140 வருஷங்களுக்கு முன் நெபோலியனைத் தடுக்கும்போது இருந்த மாதிரியேதான் தற்போதும் இருக்கிறது, செவ்வாய்க்கிழமை காமன்ஸ் சபை முன்பாக மிஸ்டர் சர்ச்சில் பின்கண்டவிதமாக அறிவித்தார்.

"நமது நீர்மூழ்கிகளும், பிரிடிஷ், அமெரிக்க விமானங்களும் பல எதிரி ஸப்ளைக் கப்பல்களை மூழ்கடித்ததால் ரோமலுக்கு பல சிரமங்கள் ஏற்பட்டன. இத் தாக்குதல்கள் மால்டா, எகிப்து இங்கிருந்தும் அதிகமாயின. இத்தொந்தரவுக்கு இடையில் கடந்த திங்கட்கிழமை நமது சைனியத்தின் தென் பக்கத்தில் தாக்கினான். அதில் பூரா ஜெர்மன் படைகளும், 90-வது பகுதியும், 2 பான்ஸர் படைகளும், 20-வது இதாலிய மோட்டார்ப் படைகளும் ஈடுபட்டன, இவைகளைக் கொண்டு முன்னேற ரோமலுக்குப் போதுமான வசதி இருந்தது. ஆனால் ரோமல் நேசதேசப் படையை ஒருபுறம் விட்டுவிட்டு முன்னேறமாட்டானென்று நமது சைனியத் தலைவர்களுக்குத் தெரியும். அவனும் அப்படிச் செய்யாமலிருந்தது சரிதான்.

ஏனென்றால் 'எல் கஸாலாவில் கையாண்ட தந்திரத்தை ரோமல் இங்கும் எடுத்துக்கொண்டான். அப்போது பிரிடிஷ் கவசம்பூண்ட படைகளும், பீரங்கிப் படைகளும் இதற்குமுன் எதிர்பார்க்காத முறையில் ஈடுபட்டன. ஜெர்மன் படைகள் உடனேயே நிறுத்தப்பட்டன. டாங்கிகள் போக்குவரத்துசாதனங்கள் முதலியவைகளை இழந்து எதிரி பின்வாங்கினான்.'

**சைனு.**—சின்யுங், ஆங்காங், புயி, லூபவோ, குன்டீன், யுங்காங், கோயாங் பிரதேசத்தில் 25 ஜப்பானிய தளங்கள் முதலியவைகளை, சீனர்கள் பிடித்தனர். கின்ஹாவாவிற்காகச் சண்டை நீடிக்கிறது.

**பர்மா.**—அக்யாப், இரண்டு தடவை தாக்கப்பட்டது. டாங்கப் பிரதேசமும் ஒரு தடவை படையெடுப்புச் செய்யப்பட்டது.

**பஸிபிக்.**—ஜப்பானியர் பலதடவை முன்னேறித்தாக்கி, கொக்கோடா பிர தேசத்தில் கொஞ்சம்தூரம் வரை முன்னேறி நேசதேசப் படைகள் பக்கம் நெருங்கி வந்திருக்கிறார்கள். மோர்ஸ்பி துறைமுகத்தை விரோதியின் பாம்பர் விமானங்கள் தாக்கியதில் சொற்பச் சேதம் ஏற்பட்டதே தவிர ஒருவரும் கொல்லப்படவில்லை.

ஸாலமன் தீவுக் கூட்டத்தில் தென்பாகத்தில் பல தீவுகளில் புதிதாக இறங்குவதற்கு ஜப்பானியர்கள் மேலும் மேலும் பிரயத்தனம் செய்கிறார்கள். அவ்விதம் வந்திறங்கும் கப்பல்களை அமெரிக்க விமானங்கள் கூடல்கனார் விமான தளத்திலிருந்து தாக்குகின்றன. இருந்தாலும், சில ஜப்பானியர் அத்தீவுகளில் வந்திறங்கி, உள்நாட்டிலிருக்கும் அவர்கள் தேசத்தினருடன் திருட்டுத்தனமாகச் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் அமெரிக்க நீர்மூழ்கிகள் அவர்களைச் சுற்றிலும் சூழ்ந்துகொண்டிருக்கின்றன.

மில்னி விரிகுடாவில் எதிரிகள் விரட்டியடிக்கப்பட்டனர். ஸாண்டா இஸபெல் தீவு, கீடா, பெய்ஸி, பூகா, லே முதலிய இடங்களை நேசதேச விமானங்கள் தாக்கியதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

**விமானத்தாக்குதல்கள்.**—ஸார்புருக்கன் (Saarbrucken), கார்ல்ஸ் ரூஹ் ப்ரெமன், யேஸ்பார்க் முதலிய இடங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கியது.

லெஹாவர், ரூவன் (Rouen), மியால்டா (Meaulta), ஸெயின்ட் ஓமர் பொலாயின், ராட்டர்டாம், உட்ரெக்ட் (Utrecht), முதலிய இடங்களை அமெரிக்க சைனியத்தைச் சேர்ந்த விமானப்படைத் தாக்கிறது.

போலந்து, முக்கியமாக வார்ஸா, கிழக்கு பிரஷ்யா முதலிய இடங்களை ருஷ்ய விமானப்படை தாக்கிற்று.

**பலவகைப்பட்டவை.**(1) யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு பிரிடன் எந்த நிபந்தனை களின்பேரில் உதவிசெய்யுமென்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதாவது ஐக்கிய நாட்டிலும், மற்ற குடியேற்ற நாடுகளிலும் அமெரிக்கச் சைனியத்துக்குத் தேவை யான ஸப்ளைகளையும், மற்றபடி எல்லாவித உதவிகளையும் இனாமாகவே கொடுப்பதற்கு பிரிடன் ஒப்புக்கொண்டிருக்கிறது. இத்துடன் ராணுவத்தை அபிவிருத்தி செய்வதற்கும் உதவியாக இருந்தது.



(2) ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் ஏராளமாக எதிரி 'யு' படகுகள் அழிக்கப்பட்டன. அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையிலும், கரீபியின் கடலிலு முள்ள நிலைமை அதிகமாக அபிவிருத்தியடைந்திருக்கிறது.

(3) மத்தியதரைக்கடலின் கிழக்கில் 7 எதிரி வியாபாரக் கப்பல்கள் பிரிடிஷ் நீர்மூழ்கிகளால் தாக்கப்பட்டன. மற்ற கப்பல்கள் சேதமாயின. இவை களைத் தவிர பிரிடிஷ் விமானப்படையும், கடல் விமானப்படையும் வேறுசில கப்பல்களையும் மூழ்கடித்திருக்கின்றன.

(4) ஜுலை மாதத்தில 10 நாட்கள் ஆங்கிலேய-அமெரிக்க மகாநாடுகள் நடைபெற்ற தகவல்கள் தற்போது வெளிப்படுத்தப்பட்டது. அப்போது யுத்த நிலைமை பூரா சர்ச்சை செய்யப்பட்டது. மிஸ்டர் சர்ச்சிலின் மொழிகளில் 'உலகில் எல்லா பாகங்களில் நடக்கும் யுத்தத்தைப்பற்றி பல முடிவுகள் நிறை வேறின.'

(5) ஆக்கிரமித்த பிரான்ஸில் உள்ள நகரங்களை அமெரிக்க விமானங்கள் தாக்கியதை விஷி அரசாங்கம் ஆக்ஷேபித்ததை அமெரிக்கா நிராகரித்துவிட்டது. (சமயம் கிடைத்த போதெல்லாம் ஜெர்மனிக்கு உதவியாக இருக்கும் பிரெஞ்சுத் தொழிற்சாலைகள் தாக்கப்படும்) என்று லவாலுக்கு அறிவித்தது.

(6) ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் விசேஷ பிரதிநிதியாக மிஸ்டர் வெண்டல் வில்கி கெய்ரோவிற்குச் சென்றுவிட்டு தற்பொழுது அங்காராவில் இருக்கிறார்.

(7) ஸ்பெயின் அயல்நாட்டு மந்திரியான ஸீனர் ஸெரானோ ஸுனர் ராஜீனாமா செய்தார். ஜெனரல் ஜார்டானா அந்த ஸ்தானத்திற்கு வந்திருக்கிறார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| 31—8—42. (திங்கட்கிழமை). | | | | |

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**லிபியா (Libya).**

விரோதி மோட்டார் போக்குவரத்து, அநேக மோட்டாங்கிகள்—யுத்தப் பிரதேசத்தில். டார் வண்டிகள் சேதமாயின.

அச்சுநாட்டு விமானங்களிறங்குமிடங்கள்-சைனியங்களுக்குப் பின்னால்.

உதவி விமானங்கள்-யுத்தரங்கத்திலுள்ள 8-வது சைனியத்திற்கு.

துறைமுகம், கப்பல்துறை—டொப்ருக் (Tobruk).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—கிழக்குப் போர்முனை எங்கும்.

**தூரக்கிழக்கு (Far East).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—9—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—ஸார் ப்ருக்கன் (Saar Brucken). | | | |
| | சுரங்க வெடிகள் போடுவது—விரோதி சமுத்திரக்கரைகளில். | | | |
| | வார்ஸா (Warsaw). | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி போக்குவரத்து—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விமான எதிர்ப்புகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விமான மிறங்குமிடங்கள்—எதிரி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | விரோதியின் துணைக்கப்பல் கூட்டம்—மத்தியதரைக்கடலில் (Mediterranean). | ஒரு கப்பல் தாக்குண்டது. | | |
| | கப்பல்கள்—காண்டியா (Candia) துறைமுகம். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 2—9—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்—கார்ல்ஸ்ருஹி (Karlsruhe), ரைன்லாந்தின் (Rhineland) மேல் பாகத்தில். | | | |
| | சுரங்கவெடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | பைடர் விமானப்படைகளின் எதிர்ப்பு—யுத்தப் பிரதேசத்தில். | | | 6 பாம்பர்களும், 9 பைடர் விமானங்களும். |
| | விரோதிக் கப்பல்கள்—ஆபிரிக்கக் (African) கடற்கரையெங்கும். | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—டாபா (Daba). | | | |
| | பலத்த விமான உதவி—யுத்தரங்கத்திலிருக்கும் 8-வது சைனியத்திற்கு. | | | |
| | அநேக மோட்டார்களின் போக்குவரத்து, டாங்கிகள்—விரோதிகளுக்குப் பின்புறமாக. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 2—9—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | விமான நிலயம்—லே (Lae)யிலுள்ள கட்டடங்கள். | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—போக்குவரத்து மார்க்கங்கள்—கொக்கோடா (Kokoda). | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | விமான நிலயம், விமானம் பறப்பதற்கான இடங்கள்—பூகா (Buka). | | | |
| | விரோதிக் கப்பல்கள்—ஸான்டா இஸபல் (Santa Isabel) தீவிற்கு அருகாமையில். | | | |
| 3—9—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—ஜெர்மனி (Germany)யின் வடமேற்குக் கடற்கரை. | | | |
| | புடாபெஸ்ட் (Budapest). | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான டாங்கிகள், வண்டிகள்—யுத்தப் பிரதேசத்தில். | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | துறைமுகம், கப்பல்கள்—டொப்ருக் (Tobruk). | | | |
| | பைடர் விமானப் படையின் எதிர்ப்புகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | 3 கப்பல்கள். |
| | விரோதிக் கப்பல்கள்—டொப்ருக் (Tobruk)குக்கு வடக்கே. | 2 கப்பல்களும், 1 நாசகாரியும் மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | கிழக்கு நோக்கிச் செல்லும் வண்டிகள் ஸோலும் (Sollum)லிருந்து ஸிடி பாரணி (Sidi Barrani) வரை செல்லும் ரஸ்தாவில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | விரோதிக் கட்டடங்கள்—விமானமிறங்குமிடம்—கீடா (Kieta)வில். | | | |
| | இரண்டு விரோதிக் கடல் விமானங்கள்—பெய்ஸி (Faisi) துறைமுகத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 3—9—42. (வியாழக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | ஸலாமுவா (Salamaua). | | | |
| | விரோதிப் போக்குவரத்து மார்க்கங்கள்—கொக்கோடா (Kokoda). | | | |
| | **சைனு (China).** | | | |
| | ஸப்ளைகள் கொண்டுசெல்லும் 25 ஜப்பானியப் படகுகள்—போயங் (Poyong) ஏரியில். | அநேக படகுகள் கொளுத்தப்பட்டன. | | |
| | ஜப்பானிய நீராவிக் கப்பல்கள்—ஸின்கிட்ஸி—ஹான்கௌ (Singtze—Hankow) கால்வாய். | 7 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. | | |
| | ஜப்பானியத் துருப்புகள் ஏற்றிச் செல்லும் ரயில் வண்டி—கியூகியாங்-நான்சாங் (Kiukiang—Nanchang) இருப்புப் பாதை. | | | |
| | ஜப்பானியத் தலைமை ஸ்தானங்கள்.—வின்சாங் (Winchang). | | | |
| | விமானச் சண்டை.—ஹெங்கியாங் (Hengyang)குக்குத் தெற்குபாகத்தில். | | | |
| | விமானச் சண்டை.—லிங்லிங் (Ling-ling). | | | 2 விமானங்கள். |
| 4—9—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.-ப்ரெமென் (Bremen). | பெருந்தீக்கள் கிளம்பின. | 11 விமானங்கள். | |
| | விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | சுரங்கவெடி போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | புடாபெஸ்ட் (Budapest)—(ருஷ்யவிமானங்களால்) | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதிப் போக்குவரத்து.—விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | **கிரீட் (Crete).** | | | |
| | கப்பல் வசதிகள்—மின்சார உற்பத்தி சாலை.—காண்டியா (Candia) குடா. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்—தரையிலுள்ள விமானங்கள்.-ருஷ்யப் போர்முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| —9—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—கப்பல்துறைகள்-லெஹாவர். | | | |
| | ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—ரோவன் (Roven). | | | 6 விமானங்கள். |
| | விரோதி விமானதளம்.—அபிவில்லி (Abbeville). | | | 2 பெரிய அமெரிக்க விமானங்கள், 3 பைடர் விமானங்கள். |
| | விமானங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை.—மீயல்டி (Meaulte). | | | |
| | விமான நிலயம்.—ஸெயிண்ட் ஓமர் (St. Omer). | | | |
| | எதிரிகளின் கவனத்தைத் திருப்ப நடத்தும் விமானத் தாக்குதல்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள்—பொலாயின் (Boulogne). | | | நஷ்டமில்லை. |
| | **லிபியா (Libya).** | | | |
| | துறைமுகம் கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான வண்டிகள் டாங்கிக் கூட்டம்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விமான மிறங்குமிடங்கள்.—விரோதி சைனியங்களின் பின்புறம். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma).** | | | |
| | துறைமுகம்.—ஆக்கியாப் (Akyab). | | | |
| | முக்கிய ரஸ்தா.-டாங்காப் (Tangup)புக் கருகாமையில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | விமான நிலயம்.—அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசம்—பூனா (Buna). | | | |
| | தரையிலுள்ள விமானங்கள், எண்ணெய்க் கிடங்குகள், குடிசைகள், மோட்டார்கள், படகுகள்.—பூனா (Buna) பிரதேசம், | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—கோக்கோடா (Kokoda) பிரதேசம். | | | |
| | பாக்கியிருக்கும் எதிரி கொரில்லாப் படைகளை அழிப்பது.—மில்னே (Milney) குடாப் பிரதேசத்தில். | | | |
| | **சைனு (China).** | | | |
| | கின்ஹுவா (Kinhwa). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 6—9—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற் சாலைகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்-டுயிஸ்பர்க் (Duisburg), ரூர் (Ruhr) பிரதேசத்தில் வேறொரு இடம். | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | விமான எதிர்ப்புகள்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கு அருகாமையிலும், இங்கிலீஷ் கால்வாயிலும் (English Channel). | | | 2 விமானங்கள். |
| | **லிபியா (Libya).** | | | |
| | விமான எதிர்ப்புகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விரோதி மோட்டார்கள், டாங்கிகளின் கூட்டம்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விமானமிறங்கும் இடங்கள்.—விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma).** | | | |
| | சைனிய வாஸஸ்தலங்கள், ரேடியோ ஸ்தாபனம்.—ஆக்கியாப் (Akyab). | | நஷ்டம் இல்லை. | |
| | **தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific).** | | | |
| | வேவு பார்த்தல்.—வடமேற்குப் பகுதியில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | மில்னே (Milney) குடாக்கடல் பிரதேசத்திலிருக்கும் ஜப்பானியத் துருப்புகளில் எஞ்சியிருப்பவர்களை அழிப்பது. | | | |
| —9—42. (திங்கட்கிழமை.) | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ஷீடாம் கப்பல் கட்டுமிடங்கள் (Shiedam ship yards), ராட்டர்டாம் (Rotterdam). | | | |
| | ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—யுட்ரெக்ட் (Utrecht). | | | |
| | எதிரிகளின் கவனத்தை மாற்றுவதற்கு நடத்தும் தாக்குதல்கள்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—9—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—ஒரு இடம்—இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்குக் கடற்கரையில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **எகிப்து (Egypt).** | | | |
| | கெய்ரோ (Cairo) பிரதேசம். | | 5 பேர் கொல்லப் பட்டனர். 24 பேர் காயமடைந்தனர். | |
| 2-9-42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—தெற்கே ஒரு இடம்—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையில் ஒரு இடம். | | | 2 விமானங்கள். |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்கு வடகிழக்கு பாகங்களில் அங்குமிங்கும் சில இடங்கள். | சொற்பச் சேதம். | 2 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad), நோவோரோஸிஸ்க் (Novorossisk). | | | |
| 3-9-42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **பாலஸ்தீனம் (Palestine).** | | | |
| | ஹெய்பா (Hifa). | சொற்பச் சேதம். | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| 4—9—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையில் ஒரு இடமும், தென்மேற்குக் கடற்கரையில் மற்றொரு இடத்திலும். | | | |
| | இரவில்.—விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| 5—9—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—லண்டன் (London) பிரதேசத்தில். | (விமானத் தாக்குதல் எச்சரிக்கை மட்டில்). | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

—9—42. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

**எகிப்து (Egypt).**

அலெக்ஸாண்டிரியா (Alexandria) பிரதேசத்தில்.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad), நோவோரோஸிஸ்க் (Novorossisk).

**6—9—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இரவில்.—வடகிழக்கு இங்கிலாந்தில் (England) சில இடங்கள்.

கிழக்கு ஆங்கிலியா (East Anglia).

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

**சைனு (China).**

பட்டணங்கள்—புகியேன் (Fokien), டாங்கிங் (Tanghing).

**7—9—42.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

இரவில்.—கடற்கரை பிரதேசங்களில்- (விமானத் தாக்கு
இங்கிலாந்தி (England)ன் தென் தல் எச்சரிக்கை
கிழக்குப் பாகம் லண்டன் (London) மட்டில்).

**மத்தியதரைக்கடல் (Mediterranean)).**

வேவு பார்த்தல்—மால்டா (Malta).

**ருஷ்யா (Russia).**

நோவோரோஸிஸ்க் (Novorossisk).

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**பிரார்த்தனை.** ஸெப்டம்பர் 6வ உலக ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு கடவுளை நோக்கி தங்களுக்கு இந்த யுத்தத்தில் சமாளிக்க சக்தி வேண்டுமென்று பிரார்த்தித்தது. இதில் பல தேசத்தினரும, பல ஜாதியினரும், பல கொள்கையுள்ளவர்களும் சேர்ந்துகொண்டனர். ஸ்வதந்திரத்திற்கும், உரிமைக்கும் வெற்றி கிடைக்க கடவுள் அருள் புரிவதற்கு 30 நாட்டு மக்கள் வந்தனத்தைச் செலுத்தினர்.

எல்லாவித நரகவேதனைகளைச் செய்துவரும் கொடிய அஸுரனை எதிர்த்து மூன்று வருஷ காலமாக இப்போர் புரியப்பட்டுவருகிறது. அவ்வித அரக்கன் பல குடும்பங்களுக்குக் கவலையை விளைவித்திருக்கிறுன். பல நகரங்களை பாழாக்கிறுன். இனி அப்படி சேராமலிருப்பதற்காகவே கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.



இந்தியாவில் பண்டைகாலத்தில் ஹிட்லரை ஒரு ராக்ஷஸனென்றும் உலகத்திலிருந்து அவனை அகற்றி பூ பாரத்தைக் குறைப்பதற்காக அவதரிக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பார்கள்.

இன்று நாம் வெற்றி பெறுவதற்கான பலம் வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

யந்திர பலத்தினுல் காரியங்களைச் சாதிக்கக்கூடிய இன்நாளில்கூட ஆத்ம சக்தியாலும் காரியங்களைச் சாதிக்கமுடியும். இது பொய்யானுல் பிரிடன் யுத்தத்திற்குத் தயாராயில்லாத காலத்தில் ஹிட்லர் செய்த முயற்சிகளுக்கு அவனுக்கு வெற்றி கிடைத்திருக்கவேண்டும். பிரிடனின் ஆத்ம சக்தி குறையாததாலேயே இரண்டு வருஷங்களுக்குமுன் செய்யப்பட்ட படையெடுப்புகளில் பிரிடன் எஞ்சியது. அவதாரத்தினுல் ஏற்படக்கூடிய சாதகமும் ஏற்பட்டது.

தற்சமயத்தில் பிரிடனும், பிரிடிஷ் சாம்ராஜ்யமும் நிச்சயம் அதிக பலம் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணமாக இருக்கும் கடவுளுக்குத்தான் வந்தனத்தைச் செலுத்தவேண்டும். ஆயுதங்களைத் தயாரித்துவிட்டது. படைகளைத் திரட்டியது. பல நாடுகள் ஒன்று சேர்ந்திருக்கின்றன.

நமது பிரார்த்தனைகளும் பயனடைந்து வருகின்றன. நமது உரிமையே சக்தியைக் கொடுத்திருக்கிறது. நமக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் போய் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பயம் நீங்கி தைரியம் ஏறபட்டிருக்கிறது. வருங்காலத்தில் குறையாத நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஒரு ஆங்கில கவிகூறுவதாவது, 'புறங்காட்டாமல் தைரியமாக முன்னேறியவனுக்கு ஒருவித பயமும் கிடையாது. பாபம் தலைதூக்குமென்ற சந்தேகம் கிடையாது. அவ்வித நிச்சயம் உள்ளவன் கிடைத்த தோல்விகளால் கலங்காமல மீண்டும் வெற்றியடைவதற்கு போரிடுவான்.'

வி வி வி வி வி வி வி

**யுத்த நிலைமை.** ஆபிரிக்கப் பாலைவனத்தில் ரோமல் முயற்சி பலிக்காததைத் தவிர இவ்வாரத்தில் வேறு விசேஷ சம்பவங்களொதுமில்லை.

ஸ்டாலின்கிராட்டிற்கு மணிக்கு மணி ஆபத்து அதிகரித்திருக்கிறது. தென் மேற்கிலிருந்து, நகரினுள் எதிரி புகுந்திருக்கிறுன். கிளட்ஸ்காயா முனையில் ருஷ்ய குழுக்கு எதிர்ப்பு விருத்தியடையவில்லை.

கருங்கடலில் அனபா எதிரி வசமாயிற்று. நோவோரோஸிஸ்க்கில் கடற்கரை மூலமாயும், கிராஸ்னுடார் ரயில் மூலமாயும் இரண்டு தாக்குதல் நேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

டெரக் நதியை மாஸ்டாக் என்னுமிடத்தில் கடந்து கிராஸ்னியை நோக்கிச் செய்யப்படும் ஜெர்மன் தாக்குதல் தடையுற்றிருக்கிறது.

எல் அலமீன் முனையில் ஹிமய்மட்டிலிருந்து செய்யப்பட்ட தாக்குதல் பலிக்கவில்லை. புறப்பட்ட இடத்திற்குப்போய்விட்டான்.

ஸாலமன் தீவில் எதிரி இறங்க முயன்றது பலிக்கவில்லை.

மில்னிகுடாவில் ஜப்பானியப்படை இறங்க முயன்றது பலிக்கவில்லை.

கொகோடா பிரதேசத்தில் சிறிது எதிரி நடமாட்டம் ஏற்பட்டிருக்கிறது.

சைனுவின் கிழக்கு மாகாணங்களில் சீனர்கள் சமாளித்து வருகின்றனர். கின்ஹுவா முற்றுகையிடப்பட்டது டோக்கியோவைத் தாக்க உதவும் விமான தளங்கள் ஒவ்வொன்ருகக் கைப்பற்றப்படுகின்றன.

**தென்மேற்கு பஸிபிக் யுத்தம்.** ஸாலமன் தீவுக்கூட்டங்களில் 6 தீவுகளை அமெரிக்கப்படைகள் வியாபிக்கும்வரை நடந்த சண்டைகளின் பூரா விவரங்கள் கிடைத்திருக்கின்றன. அமெரிக்கர்கள் எச்சரிக்கையுடன் தாமதித்து உண்மை விவரங்களைக் கொடுப்பார்கள். பல தீவுகளில் சண்டை நடந்ததால் விவரங்களைச் சேகரிப்பதில் தாமதம் ஏற்படும். மேலும் எதிரி குறுக்கு எதிர்ப்புகளைச் செய்யாமலிருக்கிறானென்றும் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஜப்பானியக் குறுக்கு எதிர்ப்பு திருப்பியடிக்கப்பட்ட பிறகே, அமெரிக்காவிலிருந்து அரசாங்க முறையில் செய்தி பிரசுரிக்கப்பட்டது.

முன்பு நடந்த பவளக்கடல் சண்டையில் போதுமான விமான உதவியில்லாததால் தங்களுடைய கப்பற்படை தோற்றுப்போனது என்று ஜப்பானியர் அறிந்து கொண்டார்கள். அதற்குப் பிறகு ஸாலமன் கூட்டத்திலுள்ள கூடல்கனார் என்ற இடத்தில் படைகளை இறக்கி விமான தளங்களைக் கட்டிக்கொண்டார்கள். இதை நீடிக்க விட்டிருந்தால் இங்கு நிலைத்து நியூஹிப்ரடைஸுக்குத் தாவ ஏற்பாடு செய்து, பவளக்கடலைச் சூழ்ந்துகொண்டு குவின்ஸ்லாந்தையும் படையெடுத்திருப்பார்கள்.

இதைத் தடுக்கவே அமெரிக்கர் ஸாலமன் படையெடுப்பை ஏற்பாடு செய்தது. ஆகஸ்டு 6-7 இரவுகளில் கார்மலி என்பவர் சண்டையைத் தொடுத்தார். இதை எதிரி எதிர்பார்க்கவில்லை. அமெரிக்கப்படை, லோகியிலும், கூடல்கனாரிலும் இறங்கிற்று. லோகி துறைமுகத்தில் ஒரு ஜப்பானியக் கப்பலும், 18 கடல் விமானங்களும் மூழ்கடிக்கப்பட்டன. தீவுகள் ஆக்கிரமிக்கப்பட்டு எதிரி சூழப்பட்டான். ஆகஸ்டு 23-ம் தேதி ஜப்பானியக் கடற்படை, வடக்கு, வடகிழக்கு இங்கிருந்து வந்தது. கூடல்கனார் விமான தளங்களிலிருந்து அமெரிக்க விமானங்கள் கிளம்பி எதிரியை ஓடும்படி செய்தன. இருந்தாலும் பயம் நீங்கிற்று என்று சொல்லுவதற்கில்லை. நியூகினி பக்கமாக எதிரி சென்றதால் ஸாலமனை நோக்கி அவன் கவனம் தற்சமயம் செலுத்தப்படவில்லை என்று தெரிகிறது.

ஸாலமன் தீவுகளை அமெரிக்கர் வியாபித்தவுடனேயே ஜப்பானியர் குறுக்கெதிர்ப்பு செய்ததையும், அங்கு செல்லும் போக்குவரத்துக் கப்பல்களுக்குத் துணையாக சண்டைக் கப்பல்களை அனுப்புவதையும் பார்த்தால் ஸாலமனைப்பற்றி ஜப்பானியர் அதிக அக்கரை எடுத்துக்கொள்ளுகிறார் என்று தெரிகிறது. ஆனால் மிட்வே தீவுகளில் செய்ததுபோல இங்கும் அமெரிக்க விமானங்கள் எதிரி கப்பற்படையை விரட்டி அடித்ததைப் பார்த்தால் நேசதேசப்படை அதிகமாக பலம் அடைந்திருக்கிறதென்றும் தெரிகிறது.

இது சம்பந்தமாக இங்கிலீஷில் வரும் ஜப்பானியச் செய்திகள் நேசதேசங்களுக்கு அதிக நஷ்டத்தை உண்டாக்கியதாகக் கூறுகிறது. இரவில் நடந்த சண்டையைப்பற்றி உடனே கணக்கு விவரங்களை எவ்வாறு ஜப்பானியரால் கொடுக்க முடிகிறதென்று தெரியவில்லை. ராணுவ ரகசியத்தை முன்னிட்டு சரியான கணக்கை அமெரிக்கா பிரசுரிக்கவில்லை. ஆனால் உண்மையைச் சொல்ல வேண்டுமென்பதுதான் ஜப்பானுடைய நோக்கமில்லையே! இரண்டு பக்கங்களிலும் நஷ்டம் நேர்ந்தது என்பது உண்மை. ஆனால் தீவுகள் அமெரிக்கா வசத்திலிருக்கின்றன. இதுவே இதன் முடிவு.

மிட்வே சண்டையில் அமெரிக்க விமானங்கள் நன்கு ஸ்வாதீனமாயிருந்த விமான தளங்களிலிருந்துகொண்டு சண்டையைச் செய்ய முடிந்தது. கூடல்கனாரில் வியாபித்து கொஞ்ச நாட்கள் ஆகியும் அமெரிக்க விமானங்கள் இரண்டு விமானப்போர்களில் 33 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. தங்களுக்கு நான்கே விமானங்கள் நஷ்டம்

மில்னி விரிகுடாவில் செய்யப்பட்ட ஜப்பானியத் தாக்குதலும் நிறைவேறவில்லை. பூனா (Buna), ஸாலாமூவா, கொக்கோடா என்ற இடங்களிலிருந்து மோர்ஸ்பியை அணுகமுடியாமல் மில்னிகுடாவைத் தாக்கினார்கள். ஆனால் நேசதேச எதிர்ப்பினாலும், ஓவன் ஸ்டான்லி மலைத்தொடராலும், எதிரி தடையுற்றான். கடற்கரையோரமாக முன்னேற முயன்றதும் பலிக்கவில்லை.



**ஜெர்மனியின் உள்நாட்டு நிலை.** நாஸிப் படைகள் ஜெர்மனியின் எல்லைக்கு வெகுதூரமுள்ள காகஸஸை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. படைகள் தளர்ந்துபோயிருக்கின்றன. ஆனால் ஜெர்மனியின் உள்நாட்டு நிலையும் தளர்ந்துபோயிருக்கிறது. ஆகஸ்டு 17-ம் தேதி கோயபல்ஸ் சொல்லும்பொழுது போரரங்கத்தைவிட ஜெர்மனியின் உள்நாட்டில் ஜெர்மன் ஒற்றுமை தளர்ந்துபோயிருகிறதாக ஒப்புக்கொண்டான். அதற்கு நான்கு தினங்கள் கிரமித்து பகிரங்கமாகவே உள்நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் கவலை நிறம்பியிருக்கிறதைப்பற்றி வருத்தப்பட்டான். "ஏனென்றால் சில குடும்பங்களில் 3, 4 இன்னும் அதற்கு மேலாகவே பிள்ளைகளை இழந்து, சந்ததி அப்படியே அழியும்போல் காணப்படுகிறது. ஜெர்மனியில் அதிகமாகச் சுற்றுப்பிரயாணஞ் செய்த ஒரு ஸ்வீடன் தேசத்து வியாபாரி திரும்பிவந்து, தற்போது ஜெர்மனியின் உணவு நிலை 1918-ல் ஜெர்மனி குலைவதற்கு முன்னிருந்த மாதிரியே இருப்பதாகத் தெரிவித்தார். டெர் டியூட்ஸ்சி லாண்ட்விர்ட் (Der Deutsche Landwirt) என்ற ஜெர்மன் மாதாந்திரப் பத்திரிகை, ஜெர்மனியில் உணவுத்தட்டு ஏற்பட்டிருப்பதை அங்கீகரித்து வருங்காலத்தில் யுத்த சாமான்களும் குறையுமென்று எச்சரிக்கை செய்திருக்கிறது. கோயபல்ஸும் பிரகிருத யுத்தம், மூலப்பொருள்கள் ரப்பர், எண்ணெய, இரும்பு முதலியவைகளை அடைவதற்காகப் புரியப்படுகிறது என்று சொல்லி, 'இந்தத் தடவை நாம் வெற்றி பெறாவிடில் இனி ஒரு போதும் முடியாதென்று நம்மள் யாவருக்கும் தெரியும்,' என்றும் சொல்லியிருக்கிறான். இதற்குமுன் அவர்களுக்கிருந்த வெற்றியைப்பற்றிய நிச்சயம் தற்போது இல்லை. மாஸ்கோவிலிருந்து சமாதானத்தை வழங்குவதாகச் சொன்ன பேச்செல்லாம் போய்விட்டது. ஜெர்மானியரின் மனதில் கவலை குடிகொண்டிருக்கிறது. எப்படியாவது தப்பினால்போதும் என்று நினைத்து வருகிறது.

கோயரிங்கின் நாலு வருஷதிட்டத்தைப்பற்றிய சில தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியைப் பற்றிய உண்மை விவரங்களை அறிய விரும்புவோருக்கு அது உபயோகமாகும்.

"ஜெர்மனியின் படைகள் முற்றிலும் சோர்வடைந்திருக்கின்றன. ஸ்திரீகள், அயல் நாட்டு மக்கள் யாவரையும் ஜெர்மன் தொழிற்சாலைகளில் அமர்த்தியாய் விட்டது. யுத்தத் தொழிற்சாலைகளுக்கு இன்னும் 10 லக்ஷம் பேரும், விவசாயத்திற்கு 3 லக்ஷமும், நிலக்கரி, இரும்பு சுரங்கங்களுக்கு 60,000 பேரும் தேவை. பொதுமக்களின் தேவைக்கு மூலப்பொருள்களை எவ்வளவு குறைக்கலாமோ அவ்வளவு குறைத்தாய் விட்டது. தற்போது நிலக்கரி தேவைக்குத் தகுந்தபடி உற்பத்தி செய்யப்படும் இதற்காக ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலை வாங்கப்பட்டது. இனிமேல் இது முறுக்குடன் வேலை நடைபெறாது. பொதுமக்களின் தேவையில் 40 சத விகிதம்கூட செருப்பு, பூட்ஸ் உற்பத்தி செய்யப்படவில்லை. போக்குவரத்து கலைந்து கிடக்கிறது. 15,000 ரயில்வே வண்டிகள் தேவையாக இருக்கின்றன. மாரிகாலத்திற்காக வைக்கப்பட்டிருந்த உணவு இப்போதே குறைந்து வருகிறது. ஆகவே ருஷ்யர்கள் ஜெர்மானியரை எதிர்த்து அடிக்கும்போதும், நேசதேசங்கள் ஜெர்மன் தொழிற்சாலைகளைத் தாக்கும்போதும் இந்நிலைமை மீண்டும் அதிகரிக்கும.

மேலும் பிரிடிஷ் விமானப்படை, அமெரிக்க விமானப்படை, ருஷ்ய விமானப்படை இம்மூன்றும் மாரிகால இரவு நேரங்களில் ஜெர்மனியை விடாமல் தாக்கும். படையெடுப்பு எச்சரிக்கை சங்குகள் முழங்கிக்கொண்டே இருக்கவேண்டியதுதான். ஸ்டாக்ஹோம் ரிபோர்ட்டின்படி பெர்லினில் விமானப் பாதுகாப்புகள் பலப்படுத்தப்படுகின்றன. உண்மை எதிரிக்குத்தெரியாமலிருப்பதற்காக போலி தொழிற்சாலைகளையும், ஏரிகளையும், விமானங்களையும் புதிதாகக்கட்டி வருகிறது.

லண்டனிலுள்ள ருஷ்ய ஸ்தானீகனான மிஸ்ட்டர் மெயிஸ்கி 6-ம் தேதி பின்வருமாறு பேசினார். 'ஆயிரக்கணக்கான விமானங்களைக்கொண்டு நீங்கள் ஜெர்மனியைத் தாக்கியதில் எங்கள் தேசம் வரவேற்றியது. மீண்டும் உங்களுடைய விமானப்படையெடுப்பு பலப்படும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறது. ஜெர்

மணியை இரவும், பகலும் எல்லாப் பக்கங்களிலும் தாக்குங்கள். சீக்கிரத்தில் பிரிடிஷ் விமானிகளும், ருஷ்ய விமானிகளும், ஒன்று சேர்ந்தே ஜெர்மனியைத் தாக்கும் காலம் வரும். அப்போது எதிரி பலமாகத்தாக்கப்படுவான். அப்போதுவெற்றி நமக்கு நிச்சயமாகக்கிடைக்கும்.'

வி வி வி வி வி வி வி

**புது நாஸிச்சட்டம்.** டாக்டர் ஆடோ ஜார்ஜ் தீரக் என்பவனை நியாய இலாகா மந்திரியாக ஜெர்மனியில் நியமிக்கப்பட்டதைப்பற்றி ஏற்கனவேயே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். சட்ட புஸ்தகங்களைத் திருத்தி யமைப்பதில் நாஸிக் கொள்கையின்படிக்கும், ஹிட்லரின் விருப்பப்படிக்கும் நடந்துகொள்ள இவருக்கு ஸர்வாதிகாரமும் கொடுக்கப் பட்டிருக்கிறது. நாஸி சட்டமென்பது என்ன? ஜெர்மன் மக்களுக்கும் நாஸிகளுக்கும் உள்ள அக்கரைகளைப் பூர்த்தி செய்து கொள்வதுதான். ஜெர்மன் மக்கள் என்றால் நாஸிகளைத்தான் குறிக்கும். ஆகவே இப்புதிய சட்டம் நாஸி அரசாக்ஷியை ஸ்தாபிப்பதற்காகச் செய்யப்பட்டது. நாஸிச் சட்டம் என்பது நிச்சயமாகவே கொடுமையாக இருக்கும். வால்கிஷர் பியோபாஷ்டர் (Volkischer Beobachter) என்ற பத்திரிகை கூறுவதாவது :—'முற்காலத்திய ஜெர்மன் நியாய முறைப்படி சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பவர்களை அடக்குவதற்காகக் கடுமையான சட்டம் ஏற்பட்டிருக்கிறது.'

சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பவர்களென்றால் ஹிட்லரின் ஆக்ஷியை நிராகரிக்கும் கட்சியினர். இவர்களை அடக்குவதற்காக வாபன் S. S. போன்ற ரகசியப் போலீஸ் படை, புதிய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் ஜெர்மனியின் கொடுமையையும், கொடுங்கோலையும் தெரியப்படுத்துகின்றன.

வி வி வி வி வி வி வி

**ஸ்வதந்திர இதாலிய இயக்கம்.** மூன்று விதமாக ஏற்பட்டிருக்கிறது. முதலாவதாக, கெரிபால்டி படையிலிருந்த ராண்டல் பிகியார்டி அமெரிக்காவில் ஒரு படையைத் திரட்டி இதாலியை எதிர்க்க ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது.

இரண்டாவதாக அமெரிக்காவில் சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட சில பத்திரிகைகளிலிருந்து இதாலியில் பாஸிஸ்டு கட்சிக்கு விரோதமாக மெடியாடிஸ் (Matteottiis) என்ற இயக்கம் இருந்துவருகிறதாகத் தெரிகிறது. இதில் எல்லா அரசியல் வாதிகளும் சேர்ந்திருக்கின்றனர்.

மூன்றாவதாக, கமூனிஸ்ட் கட்சியுடன், கலகக்காரக் கட்சியும் சேர்ந்து அரசாங்கத்தை எதிர்த்துவருகின்றன. இதில் லம்பார்டி, ஸிஸிலி என்ற இடத்திலுள்ளோர் சேர்ந்திருக்கின்றனர்.

முன்சொல்லப்பட்ட கட்சிகளுக்கு ஒவ்வொருவருக்கும் லக்ஷியத்தில் பேதம் காணப்பட்டாலும், முஸோலினியையும், அவனது கட்சியையும் ஒழிப்பதில் ஒரே விதமான நோக்கம் கொண்டிருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**மத்தியக்கிழக்கு.** 1. **இராக்**—ஜெர்மானியரின் பிரசாரத்தால் இராக்கையோ, துருக்கியையோ வசப்படுத்த முடியவில்லை. காகஸஸில் செய்யப்படும் முன்னேற்றத்தை ஆதாரமாகக் கொண்டு இந்த இருநாடுகளின் பேரிலும் எதிரிகளால் பொய்யான பிரசாரம் நடத்தப்படுகிறது. ஆகஸ்டு 21ௗ அஸாத் ஹிண்ட் ரேடியோவில் இங்கிலீஷில் செய்தி சொல்லும் போது இந்த நாடுகளில் பிரிடிஷாருக்கு விரோதமான மனப்பான்மை அதிகமாக இருப்பதாகவும், ரகசியக் கலகங்கள் இருப்பதாகவும், சொல்லப் படுகிறது. இதாலி இன்னும் ஒருபடி அதிகமாகப்போய் இராக்கில் பஹிரங்கக் கலகம் ஏற்பட்டிருப்பதாயும் சொல்லிற்று. உண்மை யாதெனில் அதேதினத்தில் இராக் பிரதம மந்திரி நூரி சொன்னபோது 'ஜெர்மானியர் காகஸஸ் வழியாக



இராக் பக்கம் வந்தால் இராக் நேசதேசங்களுடன் சேர்ந்து எதிரிகளை எதிர்க்கும்' என்றார். நேசநாடுகள் எகிப்தில் பலம் பெற்று இராக்கின் பொருளாதார நிலைமையை லெகுவாக்கியதற்கு வந்தனத்தையும் செலுத்தினார்.

2. **துருக்கி.**—ஜூலை 29ௗ ஏனிஸபா பத்திரிகையில் யால்சின் ஜெர்மானியரின் ஏமாற்றங்களைப் பஹிரங்கப்படுத்தினான். அது இங்கே அச்சிடப்பட்டிருக்கிறது.

"இப்பொழுது ஜெர்மனி செய்துவரும் பிரசாரத்தைப்பற்றி சற்று ஆராய்ந்து பார்ப்போம். அந்நிய நாடுகளுக்காக பெர்லினிலிருந்து ஜெர்மன் பாஷையில் ஒலிபரப்பப்படும் செய்திகளிலிருந்து தற்போதைய நிலைமையைப்பற்றி அடியில் கண்ட விவரங்கள் வெளியாகின்றன.

(1) கடுமையான மாரிகால போராட்டத்திற்குப் பிறகு ஜெர்மானியரும், மற்ற அச்சுநாட்டினரும் புத்துயிர் பெற்றிருக்கிறார்கள். நவீன ஆயுதங்களுடன், பலமான முஸ்தீப்புடனும் அச்சுநாடுகள் போரிட்டு வருவதால் அநேக வெற்றிகளையடைந்துவருகின்றன.

(2) ஜெர்மன் விமானப்படை நல்ல பலமான ஆயுதங்களைக்கொண்டு போரிட்டுவருவதில் பிரமிக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றுவருகிறது.

(3) மூவரசு நாடுகளின் நீர்மூழ்கி கப்பல்கள் எல்லாக்கடல்களின் ஆதிக்கத்தையும் பெற்றிருக்கின்றன. முக்கியமாக ஸ்கேஜிராக் (Skagerrak), காடிகாட் (Kattegat), ஜிப்ரால்டர், ஸூயஸ், ஏடன் முதலிய இடங்கள் அச்சுநாடுகள் வசம் இருக்கின்றன.

(4) அச்சுநாட்டினரின் தீறம் முன்பைவிட பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. "இம்மாதிரியாக மேற்சொல்லிய காரணங்களைச்சொல்லி, எப்படியிருந்தாலும் அச்சுநாடுகளுக்கு வெற்றி நிச்சயமாகக் கிடைத்துவிடுமென்று ஜெர்மனியிலிருந்து பிரசாரம் செய்யப்படுகிறது. இதை ஜெர்மன் மக்கள் நம்பவேண்டுமென்பது ஜெர்மனியின் நோக்கம். எப்படியிருந்தபோதிலும் அது இவ்விதமாகத்தான் செய்துவருகிறது. நாம் சம்பந்தப்பட்ட மட்டில் அவ்விஷயங்களெல்லாம் உண்மையென்றே ஒப்புக்கொள்ளுவோம். ஆனால் இவைகளால் ஒன்றும் பிரயோஜனமில்லை. எதிரியைத் தோற்கடித்து சமாதானத்திற்கு வரும்படி செய்தால்தான் வெற்றியடைந்ததாக முடியும். ஆனால் நேசநாடுகள் இன்னும் அதிகமான செய்கைகளைச் செய்திருக்கின்றன. ஆடம்பரமாக ஒன்றையும் அதிகமாகச் சொல்லுவதில்லை. ஏனென்றால் அவைகள் ஆக்கிரமண நாடுகள் இல்லை.

"நேசநாடுகள் முதலில் தங்களுடைய நிலைமையைச் சமாளித்துக்கொண்டு அதன்பிறகு ஸ்வதந்திரத்திற்காகப் போராடுகின்றன. தங்களால் முடிந்தவரை எதிர்த்துநின்று வரவர தங்களுடைய பலத்தையும் விருத்தி செய்துகொண்டு தாக்குகின்றனர். ஜெர்மன் சைனியங்கள் அதிக பலமுள்ளதாக இருக்கலாம். ஆனால் அவைகளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. இங்கிலாந்தைப் பட்டினிபோடவும் முடியவில்லை. பிரிடனில் யுத்த சாமான்களின் உற்பத்தி குறையவில்லை. பிரிடனும் அதன் நேசநாடுகளும் எதிர்த்து நிற்கும்வரை ஜெர்மனி அடையும் தடபுடல் வெற்றிகளால் எதிரிக்கு பிரயோஜனமில்லை."

3. **இரான்.**—ஆகஸ்டு௴ 20ௗ இரான் ஷா பேசும்போது 'பிரிடனில் தோட்டி முதல் தொண்டமான் வரை படையெடுப்புக் காலங்களில் தைரியமாக நின்ற மாதிரி' இங்குள்ளவர்களும் நடந்துகொள்ள வேண்டும் என்றார். ஆகஸ்டு௴ 25ௗ புதிய பிரதம மந்திரியான ஸுல்தானு ஜனங்கள் ஒன்றுபட்டு நிற்கவேண்டுமென்றும், பரஸ்பர கலகங்களை விடவேண்டுமென்றும், உள்நாட்டு நிலைமையை அமைதியாக வைத்துக்கொள்வதாயும் சொன்னான்.

சமீபத்தில் வெளியிட்ட ஒரு செய்தியில் மத்தியக்கிழக்குச் சுற்றுப் பிரயாணத்தில் பாக்தாத் நகருக்கு வரமுடியாததைப் பற்றி வருந்தி, இராக் பாதுகாப்பு திருப்தியளிப்பதாகவும் இது நேசநாடுகளுக்குச் சாதகம் என்றும் இராக், பர்ஸிய சைனியத் தலைமை பிரிக்கப்பட்டது ஒரு விசேஷம் என்றும், மிஸ்டர்

டர் சர்ச்சில், ஜெனரல் நூரிக்குச் செய்தியனுப்பினர். இதற்குப்பதிலாக நூரி 'பிரிடனுக்கும் நேசநாடுகளுக்கும் இராக் உதவிவருவது எல்லா அராபியர்களுக்கு உதவியமாதிரி என்றும், நேசநாடுகளின் வெற்றி அராபியர்களின் வெற்றியென்றும், அந்த வெற்றியினுல்தான் அராபிய நாடுகள் ஒற்றுமை பெறலாமென்றும்' சொன்னர்.

4. **எகிப்து.**—மிஸ்ட்டர் சர்ச்சில் கெய்ரோவிற்கு விஜயம் செய்ததால் இந்த இருநாடுகளுக்கு ஏற்கனவேயுள்ள சிநேகம் மீண்டும் பலமடைந்தது. தைரியமும ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகைக்காரர்களின் கூட்டத்தில் 'நான் ஒரு விஷயத்தைத் தெளிவாக்க விரும்புகிறேன். இங்கிலாந்தைப்போல் நினைத்து எகிப்திற்காகவும் நைல் நதி பிரதேசத்திற்காகவும் சண்டையிட தீர்மானித்திருக்கிறோம்' என்று சர்ச்சில் சொன்னர்.

வி வி வி வி வி வி வி

**அநேகமாக யுத்தத்தில் ஈடுபட்ட மாதிரி.** பிரஸீல் யுத்தத்தில் ஈடுபட்ட மாதிரி உருகுவே தன்னை அநேகமாக யுத்தத்தில் ஈடுபட்ட மாதிரி இருப்பதாகத் தெரிவித்திருக்கிறது. இவ்விதம் செல்வது, அமெரிக்கர்களுக்குச் சகஜம். பிரகிருத நிலையில் உருகுவே நேராடிச் சண்டையைச் செய்யாதபோதிலும் எல்லாவித உதவியையும் கொடுத்து பிரஸீலுடன் ஒத்துழைத்து தேசத்தையும், ஜனங்களையும் காப்பாற்றிக்கொள்ளும்.

நிரந்தரமாக அச்சு நாடுகளுக்கு விரோதமான மனப்பான்மையைக்கொண்டிருந்ததற்கு உருகுவே இவ்விதம் செய்தது சரியான காரியமாகும். 1941 ஜூனில் உருகுவே பின்வருமாறு சொல்லிற்று. அமெரிக்காவுக்கு வெளியிலுள்ள ஒரு நாட்டுடன் போரில் ஈடுபட்டிருக்கும் ஒரு அமெரிக்க நாட்டை ஆக்கிரமண நாடாகக் கருதக்கூடாதென்று சொல்லிற்று. இந்த திட்டப்படி டிஸம்பர் 8-ம் தேதி அமெரிக்க ஐக்கிய நாட்டை ஜப்பான் தாக்கியபோது உருகுவே நடந்துகொண்டது. இதே காரணத்திற்காகத்தான் 1942, ஜனவரியில் 2உ அச்சு நாடுகளுடன் அரசியல் சம்பந்தத்தை ரத்துசெய்துகொண்டு பிப்ரவரியில் பிரிடனுடன் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொண்டது.

சென்ற யுத்தத்தில் உருகுவே தன்னுடைய துறைமுகங்களை அமெரிக்கக் கப்பல்களின் உதவிக்குக் கொடுத்தது. தற்போதும் அப்படிச் செய்யும்.

பிரஸீல் சண்டையில் சேர்ந்ததால் 'யூ' படகு சண்டை இனி அதிகமாக்கப்படும் என்று டோக்கியோ பயமுறுத்துகிறது. ஆனல் நியூ யார்க்கிலுள்ள கப்பல் அதிகாரிகள் எல்லாக் கப்பல் மார்க்கங்களிலும் 100-க்கு 5 டாலர் வீதம் சாமான்களின் கட்டணத்தைக் குறைத்ததிலிருந்து 'யூ' படகு தொந்தரவு நீங்கி வருகிறதென்று தெரிகிறது. ஜூலை மாதத்திய கப்பல் நஷ்டமும் மிகக்குறைவு, பிரஸீல் சண்டையில் சேர்ந்ததாலும், உருகுவே துறைமுகங்களை நேசநாடுகளுக்கு விட்டுக்கொடுத்திருப்பதாலும், அமெரிக்காவும், ஆபிரிக்காவிற்கும் இடையேயுள்ள அட்லாண்டிக் மார்க்கத்தில் அபிவிருத்தி ஏற்பட்டுவருகிறது.

வி வி வி வி வி வி வி

**பிரிடன்.** பிரிடிஷ்காரர்கள் யுத்தத்தில் வெற்றிபெற எவ்வளவு தூரம் தங்களால் தியாகம் செய்யக்கூடுமென்பதை யுத்த சாமான்களின் போக்குவரத்து சம்பந்தமான மந்திரி வெளியிட்ட கம்யூனிகேயிலிருந்து தெரியவருகிறது. அவசர ராணுவப் போக்குவரத்தை முன்னிட்டும், எண்ணெய், ரப்பர் முதலியவைகளை மிச்சம் பிடிக்கவும், முன்பைவிட அதிகமாக ரயில், ரோடு பிரயாணம் குறைக்கப்படும். இதனுல் ஏற்கனவேயுள்ள 1,000 ரயில்களோடு உபரியாக 250 ரயில்கள் யுத்த சாமான்களை ஏற்றிச்செல்லும். ஒவ்வொரு கிராமம், நகரம் முதலியவைகளிலேயே ஜனங்களுக்குத் தேவையான பொதுவான ஏற்பாடுகள் நடைபெறும். ஸினிமா,



டிராமா முதலியவைகளெல்லாம் அந்தந்த இடங்களிலேயே நடக்கும். இவைகளுக்காகவும், கடை சாமான்களை வாங்குவதற்காகவும் மற்ற கிராமங்களுக்கோ, நகரங்களுக்கோ செல்லவேண்டியதில்லை. ரயில் போக்குவரத்தை லெகுவாக்க கால்வாய் போக்குவரத்து விருத்திசெய்யப்பட்டுள்ளது. லஸ்தாக்களிலும் பழைய மோட்டார்களில் உபரியாக 20, 30 பேர்களை ஏற்றிச்செல்லும் வசதி செய்யப்பட்டு இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**கனடாவின் யுத்த முயற்சி,** சமீபத்தில் இங்கிலாந்திற்கு பெரிய கனடியப் படை வந்துசேர்ந்திருக்கிறது. இதிலிருந்து கனடாவின் யுத்த முயற்சியைத் தெரிந்துகொள்ளலாம். ஏராளமான உணவுப்பண்டங்களை அனுப்புவதோடு ஏற்கனவே 5 லக்ஷம் சிப்பாய்களையும் அனுப்பியிருக்கிறது. இவர்கள் இங்கிலாந்து, மேற்கு இந்தியத் தீவுகள், ஜிப்ரால்டர் முதலியவைகளில் ஈடுபட்டிருக்கின்றன. 350 கப்பல்கள் கொண்ட கனடா கப்பற்படை அட்லாண்டிக்கில் காவல் புரிகிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் விமானப் பயிற்சிசாலைகள் கனடாவில்தானிருக்கின்றன. அப்பேற்பட்ட 130 பள்ளிக்கூடங்களிலிருந்து ஏராளமான விமானிகள் பயிற்சிபெற்று வெளியேறியிருக்கின்றனர். இதுவரை விவசாய நாடாக இருந்தும் சமீபத்தில் முக்கிய தொழிற்சாலை நாடாக மாறியிருக்கிறது. அங்கே யுத்தக் கப்பல்கள், சாமான் படகுகள், பீரங்கிகள், டாங்கிகள், விமானங்கள் செய்யப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**ஸ்பெயின்.** ஸ்பெயின் மந்திரி ஸீனர் ஸெரானோ ஸுனெர் ராஜீனமா செய்துவிட்டார். ஜெனரல் ஜார்டானு என்பவர் அவருக்குப் பதிலாக பதவியேற்றிருக்கிறார். பலாங்கிஸ்டு கட்சியினர் இதற்குமுன் யுத்த மந்திரியாயிருந்த ஜெனரல் வரலா என்பவனைக் கொல்ல முயற்சித்திததாலேயே இப்புதிய மாறுபாடு ஏற்பட்டிருக்கிறது. இப்புதிய மந்திரி சபையில் டிரடிஷனல் கட்சியினர் பிரவேசித்துவிட்டனர். ஆகவே இனி ஜெனரல் பிராங்கோ நடுநிலைமையைத்தான் வகிப்பான்.

சமீபத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட், உள்நாட்டுக் கலவரத்தில் இடிந்துபோன ஞாபகச் சின்னங்களைப் பழுதுபார்க்க ஸ்பெயினுக்குப் போதுமான உதவி கொடுப்பதாகச் சொன்னர். ஆனல் பிரகிருத யுத்தத்தில் ஸ்பெயின் நடுநிலைமை வகிக்க வேண்டும். ஸலாமான்கா, ஸெவிலி, மாட்ரிட், பார்ஸிலோனு, வாலென்ஷியா, இலவயாவும். உள்நாட்டுச் சண்டையில் பாழாயின. கர்னிகா என்ற நகரம் பூராவாக அழிந்தது. டால்டோ இடத்தில் எல்லாவித கலைச்சித்திரங்களும் அழிக்கப்பட்டன. இவைகளைச் சீர்திருத்தவே அமெரிக்க உதவி கொடுக்கப்படும்.

வி வி வி வி வி வி வி

**கிழக்கு ஆசியா மந்திரி.** இங்கே புதிதாகப் பிடித்துள்ள நாடுகளில் ஆட்சிபுரிய ஜப்பான் கிழக்கு ஆசியா மந்திரி சபை என்று ஒன்று ஏற்படுத்தியிருக்கிறது. ஏதோ புதிதாக ஒரு சாம்ராஜ்யம் கிடைத்து அதை ஆட்சிபுரிந்து வருவதாக வெளி ஆடம்பரம் செய்யவே இம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறது. பர்மா, மலேயா, முதலிய ஆக்கிரமித்த நாடுகளை மஞ்சகோ, நான்கிங் முதலியவைகளைக்காட்டிலும் இளப்பமாக நடத்தவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாகும். மஞ்சுகோ முதலிய இடங்களிலாவது பேருக்கு ஒரு அரசாங்கத்தை வைத்துக்கொண்டு அதன் மூலமாகத் தனது காரியங்களை நடத்திவருகிறது. பர்மா முதலிய இடங்களில் அது கிடையாது. அதற்குப் பதிலாக நேராடி இப்புதிய மந்திரி சபையின் மூலமாக டோகியோவில் இருந்து ஆட்சி நடத்தவிருக்கிறது.

இதைத் தவிர வேறு வழிகளாலும் ஜப்பான் தனது பலாத்காரத்தை செலுத்திவருகிறது. பர்மாவில் தாகின் என்பவர்கள் முன்பு பிரிடிஷ் அரசாங்கத்தாருக்குத் துரோகமாக நடந்துகொண்டார்கள். இவர்களையும் ஜப்பான் கொன்று

வருகிறது. ஏனென்றால் ஒரு தடவை துரோகமாக நடந்துகொண்டவன் மறுபடியும் நடந்துகொள்ளுவான் என்று ஜப்பான் சொல்லுகிறது. இது அவர்களுக்குச் சரியான தண்டனையாகும்.

பர்மாவிலிருந்து தப்பிவருவோர் ஜப்பானியரின் கொடுமைகளைப்பற்றி பல கதைகளைச் சொல்லுகின்றனர். ஸ்திரீகள் ஈவிரக்கமில்லாமல் நடத்தப்படுகிறார்கள். யாவரும் தொழிற்சாலைகளில் கட்டாயத் தொழில் புரியவேண்டுமாம்.

ஹாங்காங்கில் பிடிபட்ட இந்தியச் சிப்பாய்கள் பாராத் தொழில் புரிய வேண்டுமாம். இது ஸர்வ தேசச் சட்டத்திற்கு விரோதமாகும்.

---

## வெற்றியை முன்னிட்டு பிரிடன் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறது.

---

சமாதான காலத்தில் இங்கிலாந்தைப் போய்ப்பார்ப்பவருக்கு எங்கும் அநேக மைல்கள் விஸ்தீர்ணத்தில் பசுமையான புல்தரைப் பிரதேசங்கள் நிறைந்திருப்பது தெரியவரும். ஸௌத்தாம்டனிலிருந்தோ, பிளிமௌத்திலிருந்தோ அல்லது லிவர்பூலிலிருந்தோ லண்டனுக்குச் செல்லும் இருப்புப்பாதையில் இருபுறங்களிலும், பசுமையான புல்நிறைந்த சமவெளிகள் இருக்கின்றன. வசந்த காலத்தில் ரோஜா முதலிய புஷ்பங்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும் புல்லுக்கு இடையே தோன்றும்.

இப்பொழுதுள்ள காக்ஷியோ வேறுவிதம். பசுமையான புல்தரைப் பிரதேசங்களில் எல்லாம் இப்பொழுது செழிப்புவாய்ந்த பழுப்பு நிறமுள்ள நிலம் போல் காணப்படுகிறது. எவ்வளவோ லக்ஷக்கணக்கான ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள புல் நிறைந்த சமவெளிப் பிரதேசங்கள் இப்பொழுது உழுது சாகுபடிக்கு லாயக்காகச் செய்யப்பட்டிருக்கின்றன. இருப்புப் பாதைக்கு இருபுறங்களிலும் அணைவாக இருக்கும் கரைகளெல்லாம், அநேக மைல் விஸ்தீர்ணத்திற்கு தோட்டங்களாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

பொருளாதார முற்றுகையினால் உணவுப் பொருள்கள் பிரிடனுக்கு வராமல் ஹிட்லர் செய்த நடவடிக்கையை நிவர்த்திக்க, பிரிடனிலுள்ள பசும் புல் தரைகளெல்லாம் விவசாயம் செய்வதற்குத் தகுதியாகப் பண்படுத்தப்பட்டு போரின் முன்னணியாகப் பாவிக்கப்படுகிறது. அவன் பிரிடன் பேரில் வெடிகுண்டுகள் போட்டு, அழிப்பதற்குப் பார்த்தான். அநேக தடவைகள் படையெடுத்து, பிரிடிஷ், கடற்கரையில் இறங்கலாமென்றும் பார்த்தான். ஆனால் யுத்தம் ஆரம்பித்த நாள் முதல் தாக்குதலில் அவன் கொஞ்சம்கூட ஓய்வே எடுத்துக்கொள்ளவில்லை. அதாவது ஏராளமான பொருள்களைச் சுமந்துகொண்டு பிரிடனை நோக்கி வரும் கப்பல் கூட்டங்களை வேட்டையாடுவதற்காக ஹிட்லரின் சுற்றித்திரியும் பாம்பர் விமானங்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் பிரிடனைச் சுற்றிலுமுள்ள கடல் மார்க்கங்களை இடைவிடாமல் தேடிப்பார்க்கின்றன.

பிரிடிஷ் தீவுகளில், மனிதர்களும், ஸ்திரீகளும், குழைந்தைகளும் சேர்ந்து 4 கோடி பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களில் பெரும்பான்மை அன்னிய நாடுகளிலிருந்து வரவேண்டியிருக்கிறது.

### ஆச்சரியகரமான பயன்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பிரிடனை அடைய வேண்டுமென்று புறப்பட்டு வரும் கப்பல்களில் பெரும்பான்மை துறைமுகங்களையடைந்து, அவை ஏற்றிவரும் பொருள்களைப் பத்திரமாக இறக்குகின்றன. யுத்த அரங்கங்களை நூதனமாக விஸ்தரிக்கச் செய்வதாயிருந்தால் அதற்குத் தக்கவாறு கப்பல் போக்குவரத்தும் அதிகமாகத் தேவையாயிருக்கும். பிரிடனிலேயே அதிகம் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்துகொண்டு



அங்குள்ள தேவைக்குத் தகுந்தாற்போல் ஸப்ளைகள் இருந்து வந்தால், சாமான்கள் ஏற்றிவரும் கப்பல்களைக்கொண்டு துருப்புகள், யுத்தப் பொருள்கள் முதலியவைகளை யுத்தம் நடக்கும் பல அரங்கங்களுக்கு ஏற்றி அனுப்பக்கூடும்.

அதனால்' தான் வெற்றிபெற வேண்டியதற்காக பிரிடன் விவசாயத்தை அதிகம் அபிவிருத்தி செய்துவருகிறது. இப்பொழுது நிலங்களை வெட்டிக் கொத்தி, உழுது பண்படுத்தி வருவதைப்போல், இதற்குமுன் பிரிடன் எப்பொழுதுமே இம்மாதிரி விவசாயத்தில் ஈடுபட்டதில்லை. ஏற்கனவேயே குடியானவர்களும், தோட்டக்காரர்களும் அடைந்திருக்கும் பயன் வியக்கத் தக்கதாக இருக்கிறது. இந்த வருஷத்தில் அவர்கள் கணக்கிட முடியாமல் பயனடைவதற்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

இதற்குமுன் எந்த வருஷத்திலும் தயாரித்த உணவுப் பொருள்களைக் காட்டிலும், அதிகமாகவே சென்ற வருஷத்தில் மட்டில் பிரிடிஷ் குடியானவர்களும், தோட்டக்காரர்களும் உற்பத்தி செய்திருக்கிறார்கள். விவசாய இலாகா மந்திரி மிஸ்டர் ராபர்ட் ஹட்ஸன் இவ்வருஷத்தில் இன்னும் அதிகமாகவே உற்பத்தி செய்வதற்கு உதவியாக திட்டங்கள் போட்டிருக்கிறார்.

சக்கரை தயாரிப்பதற்கான கிழங்குகளை உற்பத்தி செய்வதற்காக இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஒதுக்கிவைக்கப்படும். யுத்தத்திற்குமுன் உருளைக்கிழங்கு எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டதோ அதைப்போல இரண்டு பங்கு இப்பொழுது விளைவிக்கக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் அங்கு ஏராளமாக ஆடுகளும், இறைச்சிக்காக மாடுகளும் அதிகமாக வளர்க்கப்படும். லக்ஷக்கணக்கான காலன் பால் ஸப்ளையும் அதிகரிக்கும்படி செய்யப்படும்.

### ஸ்திரீகளின் விவசாயப்படை.

யுத்தம் ஆரம்பித்தது முதற்கொண்டு, விவசாயத்திற்கு லாயக்காகத் தயாரிக்கப்பட்ட நிலங்களுடன், இப்பொழுது போடப்பட்டிருக்கும் விவசாய திட்டப்படி 60 லக்ஷம் ஏக்கர் நிலங்கள் சேர்க்கப்பட்டுவிடும். ஏற்கனவே பருப்பு தினுஸுகளும், வைக்கோலும் 50 சத விகிதம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆயிரக்கணக்கான விவசாயிகள் யுத்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக ஏராளமாக நல்ல பலமுள்ள யௌவன ஸ்திரீகள் தன்னிச்சையாகவே விவசாயத்தில் ஈடுபட முன்வந்திருக்கிறார்கள். இவர்கள் தான் 'பிரிடனின் ஸ்திரீகளின் விவசாயப்படை.' அப்படையில் சுமார் 21,000 பேர்கள் இருக்கிறார்கள். நாளுக்குநாள் அப்படையின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சென்ற யுத்தத்திலிருந்த எண்ணிக்கையைக் காட்டிலும் இப்பொழுது 5,000 பேர்கள் அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

இத்துடன் ஆபிரிக்காவில் நடந்த சண்டைகளில் பிடிபட்ட இதாலியக் கைதிகளும் விவசாயத்திற்கு அதிக உதவி செய்துவருகிறார்கள். இவர்களில் 5,000 பேர்கள் பிரிடனில் விவசாய இலாகாவில் வேலையிலிருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் இன்னும் அதிக பேர்கள் இம்மாதிரியான வேலையில் அமர்த்தப்படுவார்கள்.

தேச பூராவிலுமிருக்கும் நகரங்கள், பட்டணங்கள், கிராமங்கள் இவைகளிலுள்ள கோடிக்கணக்கான தோட்டக்காரர்களைப்பற்றி இங்கே சொல்லவேண்டியிருக்கிறது.

இங்கிலாந்தில் அநேகமாய் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தோட்டமுண்டு. சமாதான காலத்தில் சாதாரணமாக நடுவில் புல் நிறைந்த தரையை வைத்து சுற்றிலும் அழகிய புஷ்பச் செடிகளை வைப்பார்கள். அது நேர்த்தியாகக் காணப்படும். அம்மாதிரி புல்தரை பிரதேசங்களில் பாதி இப்பொழுது போய்விட்டது.

புஷ்பச்செடிகளும் அநேகமாய் போய்விட்டது. பல வர்ணமுள்ள புஷ்பச் செடிகள் பயிர் செய்யப்பட்டிருந்த இடங்களில் இப்பொழுது முட்டைக்கோஸ், காலிபிளவர் (Cauli flowers), உருளைக்கிழங்கு, பட்டாணி முதலியவைகள் பயிர் செய்யப்படுகின்றன.

### ஒதுக்கிவைக்கப்பட்ட நிலங்கள்.

தங்கள் வீடுகளிலிருக்கும் தோட்டங்களில் விவசாயம் செய்வதை விஞ பிரிட்டனிலுள்ள வியாபாரிகள், நகரத்தில் வசிக்கும் குமாஸ்தாக்கள், கடை வேலைக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும், சிநேகிதர்களுக்கும் ஆகாரத்திற்காக வேண்டிய காய்கறிகளை ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தலங்களில் உற்பத்தி செய்கிறார்கள்.

இம்மாதிரி ஒதுக்கப்பட்ட ஸ்தலமானது ஒரு மனிதன் ஓய்வு நேரத்தில் வெட்டிக்கொத்தி, பயிர் செய்து, ஒருவனாகவே சமாளிக்கக்கூடிய அவ்வளவு பெரிதாக இருக்கிறது. உத்தேசமாக ஒவ்வொரு இடமும் 30 அடி அகலமும், 90 அடி நீளமுள்ளதாகவும் இருக்கிறது. அம்மாதிரி இடங்களை நன்றாகப் பயிர் செய்தால் இரண்டு அல்லது 3 பேர் அடங்கிய ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் வருஷம் பூராவும் தேவையான உருளைக்கிழங்கும் பச்சைக் காய்கறிகளும் உற்பத்தி செய்யப் போதுமானவையாக இருக்கும்.

### சின்னஞ்சிறு தோட்டக்காரர்கள்.

யுத்தத்திற்கு முன் பிரிட்டனில் சுமாராக 10,00,000 ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட இடங்களிருந்தன. இப்பொழுது 6,00,000 புதிதாக ஒதுக்கப்பட்ட இடங்கள் விவசாயம் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் மூலைமுடுக்குகளும், தோட்டங்களில் உபரியாகக் கிடந்த இடங்களும் வெட்டி பயிர் செய்திருப்பதில், காய்கறிகள் விளையும் இத்தகைய நிலங்கள் முந்தியிருந்ததைக் காட்டிலும் கிட்டதட்ட இரண்டு மடங்காகி விட்டன.

சென்ற வருஷத்தில் இம்மாதிரி தோட்ட சாகுபடி செய்கிறவர்கள் அவர்கள் ஓய்வு நேரத்தில் உற்பத்தி செய்த காய்கறிகள் சுமாராக 3,00,00,000 பவுன் விலையுள்ளதாகக் கணக்கிடப்பட்டது. இதை ஒரு விளையாட்டாக இம்மனிதர்கள் எடுத்துக்கொண்டு உற்பத்தி செய்து வருவதைப் பார்த்தால் இதனாலடைந்த பயன் அபரிமிதமானது என்று தெரிகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் பகற் காலத்தில் செய்ய வேலையுண்டு. அவர்களின் தோட்டவேலை அநேகமாக வார முடிவு ரஜா நாட்களில்தான் செய்யப்பட்டுவருகிறது.

---

# ருஷ்ய யுத்த அரங்கம்.

## காகஸஸின் வாயிலில்.

(R. J. டி. டச்சி எழுதியது).

டான் பள்ளத்தாக்கைக் கடந்து ஜெர்மன் சைனியங்கள் தெற்கே திரும்பியதும், அவர்களுக்குப் பின்புறம் கிழக்கு யூக்ரேனின் செழிமை சமவெளிகள் இருந்தன. முன்னால் வட காகஸஸின், புல் தரையுள்ள சமவெளிகள் காணப்பட்டன. கிழக்கிலும், தெற்கிலும் கோடைவெய்யிலில் இங்குமங்கும் சில பசுமை மரங்களும், செடிகளும் தான் காணப்பட்டன. புல்லும் உலர்ந்து வெய்யிலால் எரிக்கப்பட்டிருந்தது. தென்கிழக்கில் சிறிது தூரத்திற்கு அப்பால் உப்பு மண் பாங்கான பாலைவனமே இருக்கின்றது. அதில் சிறிய ஏரிகளும், வாய்க்கால்களும் தூரதூரத்தில் காணப்படும். அவைகளில் தண்ணீரும் கிடையாது. இருந்தாலும் மனிதனின் உபயோகத்திற்கு லாயக்கில்லை. சாகுபடிக்கு லாயக்கில்லாத இடத்தில் பாலைவனப்புல் முளைத்திருக்கிறது. இதற்கும் தெற்கே கூபான் காஸக் ஜாதியினரின் குடிசைகள் காணப்படும். அவைகளும் எரிக்கப்பட்டு அதன் அடை



யாளமே படையெடுப்போரின் கண் முன்னால் தோன்றும். அவ்வித காஸக் ஜாதியார் மீண்டும் தெற்கு நோக்கிச் சென்றுவிட்டதால் அந்த இடத்தில் எரிந்த கொள்ளிக்கட்டைகளை விட வேறொன்றும் எதிரிகளுக்குக் கிடைக்காது. ஏனென்றால் காஸக் ஜாதியினர் தங்கள் வீடுகளை விட்டுச் சென்றபோது எடுத்துச் செல்லக் கூடியவைகளை எடுத்துக்கொண்டு மீதியை தீக்கிரையாக்கி அழித்துவிட்டனர்.

### கூபான் நதி.

வடக்கிலுள்ள சமவெளியில் குறுக்கே உயரமான கரைகளுக்கு இடையே கூபான் நதி பாய்கிறது. வடக்கு காகஸஸ் மலைத்தொடரின் மேல் ஏறுவதற்கு முன் நாஸிகளுக்கு இந்நதி இயற்கைத் தடையாக இருந்தது. அடுத்தபடி காகஸஸ் மலை சில காலத்திற்கு ஜெர்மானியருக்குத் தடையாக இருக்கும்.

ஆனால் சரியானபடி முஸ்தீப்புப் பெற்று படையெடுக்கிறவனுக்கு சகதி நிலம், நதிகள், மலைகள் முதலியவை கடக்கமுடியாத தடைகளாகா. ஆனால் சரித்திர அனுபவத்தைப் பார்த்தால் தைரியமாக சண்டை செய்யக் கூடியவர்கள் இவ்வித இயற்கைத் தடைகளைக்கொண்டு படையெடுப்போனை வெற்றிகரமாகத் தடுத்து வரலாமென்று தெரிகிறது. அப்படிச் செய்தால் எதிரியின் பிரகிருத தந்திரங்களும், காலங்கிரமித்து பலிக்கக்கூடிய தந்திரங்களும் பயனடையாமல் போகும்.

முன்பு இந்த காகஸஸை ஜயிப்பதற்கு ருஷ்யர்களுக்கு 70 வருஷ காலம் பிடித்ததென்பது பிரசித்தமானது. அந்த சமயத்தில் ருஷ்யர்களை எதிர்த்து ஏராளமான காகஸஸ் வாசிகளின் சைனியம் மலையின் உச்சியிலும், குறுகிய கணவாய்களிலும் பல வருஷங்கள் சண்டை செய்தது. இதேமாதிரியான பிரதேச அமைப்புள்ள பால்கனில் ஜெனரல் மிகய்லாவிட்சின் கீழ் யூகோஸ்லாவியச் சைனியம் நாஸிகளையும், இதாலியர்களையும் இன்னும் எதிர்த்து நிற்கிறது. ஸ்விட்ஸர்லாந்து, மான்டினீக்ரோ போன்ற காடுகளடர்ந்த மலைப்பாங்கான பிரதேசங்களில் உள்ள திடசித்தம் வாய்ந்த மனிதர்கள் தங்களுடைய ஸ்வதந்திரத்தையும் சுயேச்சையையும் பல நூற்றாண்டுகளாகக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள்.

### மார்க்கங்கள் குறைவு.

ஆகவே நன்றாகப் பலப்படுத்தப்பட்ட நாஸிச் சைனியத்திற்கு காகஸஸைப் பிடிக்கும் பிரச்னை மிக்க கடுமையாகக் காணப்படுகிறது. நாஸி டாங்கிகளும், பெரிய பீரங்கிப்படையும், விமானங்களும், குடை விமானப்படையும் இங்கே செல்லாது. செங்குத்தான சிகரங்களில் சில ரஸ்தாக்களே இருக்கின்றன. ஆழமான பெரிய நதிகளின் குறுக்கே பாலங்கள் கிடையாது. அங்குள்ள ஒரு இருப்புப்பாதைக்கும் ஆபத்து அதிகம். ஏனென்றால் பாலங்களையும் மலைக்கணவாய்களையும் கடந்து செல்லவேண்டியிருக்கிறது.

எதிரி உபயோகிக்கக்கூடிய நிலைமையில் ருஷ்யர்கள் விட்டுவைக்க மாட்டார்கள். சரித்திரத்தின் ஆரம்பகாலம் முதல் பலமும், யுத்த சக்தியும் பொருந்திய காகஸஸ் வாசிகள் துப்பாக்கி, கத்தி முதலியவைகளை ஏந்தி சண்டை செய்வார்கள். முதல்தரமான கொரில்லாச் சண்டையைச் செய்து ஜெர்மன் சைனியத்தைத் தடைசெய்து அழிப்பார்கள்.

ஆகவே வடக்கு காகஸஸில் நாஸிகளுக்கு அதிக சிரமமும் கவலையும் ஏற்படும். சாகுபடியில்லாத தேவதாரு விருக்ஷங்கள் அடர்ந்த மலைப்பிரதேசத்திலிருந்து எதிரி திரும்ப வேண்டியதுதான். இந்த இடத்தில் ஐரோப்பாவிலேயே உயர்ந்த மலைச்சிகரமான எல்பிரஸ் (Elbruz) 18,572 அடி உயரம் இருக்கிறது. தெற்கில் காகஸஸ் பிரதேசம் மிக உஷ்ணமுள்ளது. அங்கே நெல், பருத்தி பழங்கள் முதலியவை பயிராகின்றன. இந்தியாவிலுள்ள காஷ்மீரத்திற்கும் ஒப்பானது. பனை, உஷ்ணப் பிரதேசத்தில் காய்கறிகளும் கிடைக்கின்றன. மாரி காலத்திலும் தெற்கே உஷ்ணமாகவே இருக்கும்.

இவ்வளவு இருந்தாலும் ஜெர்மன் சைனியத்தின் முடிவான லக்ஷியம் காஸ்பியன் கடல் பக்கமாயுள்ள பாகுவிலும், கருங்கடல் பக்கமாயுள்ள பாடுமிலும்,

உள்ள எண்ணெய்க் கிணறுகள் தான். பூதகன முறையில் பழக்கமுள்ள ருஷ்யர்கள் ஜெர்மானியர் வசமாகும் போலிருந்தால் காகஸஸிலுள்ள எல்லா எண்ணெய்க் கிணறுகளையும், எண்ணெய் சுத்திகரிக்கும் சாதனங்களையும் அழிந்துவிடுவார்கள்.

### எண்ணெய்க் கப்பல்கள்.

ஜெர்மனிக்கோ அல்லது ஜெர்மனிக்கு வசப்பட்ட பால்கன் நாடுகளுக்கோ கருங்கடலில் செல்லக்கூடிய எண்ணெய் டாங்கிக் கப்பல்கள் கிடையாது. ருமேனியாவிற்கும், ஜெர்மனிக்கும் நதியில் செல்லக்கூடிய சிறு எண்ணெய்க் கப்பல்கள் கடலில் செல்ல முடியாது.

காகஸஸிலிருந்து ஜெர்மனிக்கு தரை மார்க்கத்தை, தற்போதுள்ள சிரமமான போக்குவரத்து சிரம நிலையில் உபயோகித்துக்கொள்ளவும் முடியாது. பாகுவிலுள்ள எண்ணெயை காஸ்பியன் கடல் வழியாகத்தான் எடுத்துச் செல்லமுடியும். ஆனால் ஜெர்மானியர் எதிர்பார்ப்பதற்கு முன்னுடியே அங்குள்ள எண்ணெய்க் கப்பல்களை ருஷ்யர்கள் அழித்துவிடுவார்கள்.

இந்தியாவின் வடமேற்கு மகாணம், காஷ்மீரம், முதலியவைகளுக்கும் காகஸஸ் பிரதேசத்திற்கும் பலவிதத்தில் ஒற்றுமையிருக்கிறது. இங்குள்ள மாதிரியே போக்குவரத்துத் தடைகள் இருப்பதால் காகஸஸில் ஜெர்மானியருக்கு அதிக சிரமம் ஏற்படும். காகஸஸ் ரஸ்தாக்கள் வட இந்தியாவிலுள்ள ரஸ்தாக்களைக் காட்டிலும் மோசமானவை. த்ஸார் காலத்தில் போடப்பட்ட ஒரு ரஸ்தாவும் சீர்திருத்தப்படவில்லை. மேலும், மேலும் கீழுமாக இந்த ரஸ்தா செல்லுவதால் பெரிய பாறைகளின் பேரிலேயே செல்லவேண்டியிருக்கிறது. பெரும் பாறையின் பேரிலும், குறுகிய கணவாய் வழியாகவும் செல்லுகிறது. பெரும் நதிகளின் குறுக்கே பலஹீனமான பாலங்கள் கட்டப்பட்டிருப்பதால் அவைகளின் வழியாக பெரிய பான்ஸர் பகுதிகளைக் கடத்திச் செல்லமுடியாது.

### கொரில்லா.

எதிரியின் முக்கியப்படை பெரிய ரஸ்தாக்களின் வழியே செல்லமுடியுமாதலால் ருஷ்ய கொரில்லாப் படை குறுகிய பாதைகளிலிருந்து எதிரியைத் தாக்கும்.

நாஸிகளின் பிரசாரத்தினுல் காகஸஸ் முஸ்லீம் ஜாதியும் ருஷ்ய ஜாதியும் தனியே பிரிந்துவிட்டன. ஆனுல் ஜெர்மானியரின் பேரில் காகஸஸ் ருஷ்ய ஜாதியினருக்கு ஏற்பட்டுள்ள உள்ளடங்கிய வெறுப்பைக் குறைக்க முடியாது.

காஸ்பியனுக்கு அருகே நாஸிகள் நெருங்கினுல் எரிக்கப்பட்ட சமவெளிகளில் ஒட்டகம், ஆடு முதலியவைதான் இருக்கும். இவைகளைக்கொண்டு கிர்கிஸ், கால்முக், கூபான் முதலிய ஜாதியினர் வசிக்கின்றனர்.

மாரிகாலம் வருவதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் தானிருக்கின்றன. காகஸஸிலும் மற்ற பிரதேசங்களிலும் உள்ள ருஷ்யச் சைனியத்தில், யுத்த உணர்ச்சி சற்றும் குறையவில்லை. மலை பிரதேசப் பாதுகாப்புள்ள இடத்தைத் தாக்குவதற்கு ஜெர்மானியர் இஷ்டப்படுவதில்லை. பிரான்ஸைத் தாக்கியபோது ஹாலந்து, பெல்ஜியம் வழியாகச் செல்ல ஜெர்மானியர் விரும்பினுர்களே தவிர ஸ்விட்ஸர்லாந்து வழியாகச் செல்ல விரும்பவில்லை.

காகஸஸ் ஜாதியைச் சேர்ந்த ஸ்டாலின் தைரியம் வாய்ந்த தலைவர். இவனைப் போலவே மற்றவர்களும் இருப்பதால் நாஸிகளுக்கு மிகவும் பாதகம்தான்.

---

## மாலடோவ்.

**(‘ அப்ஸர்வர் ’ பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)**

1919-ம் வருஷத்தில் வால்கா பிரதேசத்தில் வயாசெஸ்லாவ் மிகைலாவிச் மாலடோவ் முதன்முதலில் ருஷ்ய அரசாங்கத்தை சீர்திருத்தி அமைத்தார்.



அவருக்கு அச்சமயத்தில் 30 வயதிருக்கும். கருத்த தலைமயிரும் வெளுத்த முகமும் கவலையான தோற்றமும் பெற்றிருந்தார். அக்காலத்தில் ருஷ்யக் குடியானவர்கள், வியாபாரிகள், கொரிலாப் படையினர், நகரவாசிகள் யாவரும் அவரிடத்தில் அன்புடன் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறினுர்கள். மாலடோவ் அவைகளிலுள்ள குணுகுணங்களைச் சர்ச்சை செய்து புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தினுர். கோல்ட்சாக், டெனிகின் இவைகளின் படைகளாலும் இரண்டு வருஷக் கலகத்தினுலும் பாழான வால்கா என்னுமிடத்திலேயே ராஜ்யத்தை ஏற்படுத்தினுர். பொருளாதார திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவ்வித வேலையில் லெனின் என்பவரின் உபதேசப்படி மாலடோவும் க்ருப்ஸ்காயாவும் முக்கிய அலுவல்களைக் கவனித்துவந்தனர். ‘ரெட் ஸ்டார்’ என்ற பத்திரிகை ஆரம்பமாயிற்று. க்ருப்ஸ்காயா பிரசாரவேலையில் ஈடுபட்டாள். மாலடோவ் அரசியல் அமைப்பிலும் பொருளாதார சீர்திருத்தத்திலும் ஈடுபட்டான். இவ்வித நிலைமையிலிருந்து மாலடோவ் எப்பேற்பட்டவன் என்று நாமே தெரிந்துகொள்ளலாம்.

மாலடோவ் ருஷ்யத்ஸார் காலத்தில் அரசியலில் நன்கு அனுபவம் பெற்றிருந்தார். ருஷ்யப் புரட்சிக்குப் பிறகு அரசாங்கத்தில் முக்கிய அதிகாரத்தையும் வகித்து வந்திருக்கிறுர். ருஷ்யப் பொதுவுடமைக் கட்சியின் மத்திய கமிட்டியின் காரியதரிசியாக 1921 முதல் 1930 வரையில் வேலைபார்த்தார். 1930-ல் ருஷ்யப் பொதுஜன சங்கத்தின் தலைவனுக 11 வருஷகாலமிருந்து வந்தார். 1941-ல் தான் ஸ்டாலின் அப்பதவியை ஏற்றுக்கொண்டது. இப்பதவி பிரிடிஷ் பிரதம மந்திரியின் பதவிக்கு சமமானது. தற்சமயத்தில் மாலடோவ் அயல்நாட்டு மந்திரியாக இருந்து வருகிறுர். இவ்வித அனுபவங்களால் நிரந்தரமான பொறுப்பை ஏற்றுக்கொள்ள அவரால் முடிகிறது. வால்கா மகாணத்தைச் சீர்திருத்தி அமைத்ததோடு நில்லாமல் யூரல் பிரதேசத்தில் ருஷ்யத் தொழிற்சாலைகளை விருத்தி பண்ணுவதற்காக 1934 லிலேயே பிரயத்தனம் எடுத்துக்கொண்டார். இந்த யூரல் பிரதேசத்தில் குறைந்த அவகாசத்தில் அதிகமான தொழிற்சாலைகளை உண்டாக்குவதற்குத் தகுந்த அரசியல், பொருளாதாரம், சமூகம் முதலியவைகளில் அனுபவம் இருக்க வேண்டும். இவ்வித வேலைக்கு மாலடோவ்தான் திறமையுள்ளவராகக் காணப்பட்டார்.

புதிய ருஷ்ய அரசாங்க திட்டங்கள் பயனடைந்துவரும் காலத்தில் மாலடோவைப்பற்றி பலவித தப்பு அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டன. அவர் ஸ்வயம் ஒரு துரும்புக்குச் சமானமென்றும் ஸ்வயமாகக் காரியங்களைச் செய்யவோ, நினைக்கவோ சக்தியற்றவரென்றும், ஸ்டாலின் இஷ்டப்படி நடக்கிறவர் என்றும் பலவிதமாகச் சொல்லப்பட்டது. பெரிய குழப்பத்திலிருந்து அமைதியான நிலைமையை ஏற்படுத்திய அவரைப்பற்றி சரியாக உணர்ந்துகொள்ளாததினுல்தான் அவ்விதம் கூறப்பட்டது. ருஷ்யப் புரட்சி காலத்தில் இருந்த அவருடைய வாழ்க்கையை நாம் மறக்கவும்கூடாது. அவர் 16 வயது ஆவதற்கு முன்னுலேயே புரட்சி சிந்தனை பெற்றிருந்தார். 20 வயது ஆவதற்குள்ளாகவே தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார். அந்த சமயத்தில் வாலோகுடா (Vologda) என்ற இடத்திலிருந்த போலீஸ் அதிகாரிகள் மிகவும் சாமர்த்தியமாக அவரைப்பற்றி எழுதியிருந்தனர். “கைதியான மாலடோவ் சமஉரிமை வாதத்தில் மிகவும் கெட்டிக்காரன் என்றும், அவ்வித ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்குத் தகுதியுள்ளவனென்றும்” சொல்லப்பட்டிருந்தது. இவ்வுண்மையை லெனினும், ஸ்டாலினும் பிறகு கண்டுபிடித்தார்கள். வால்கா, யூரல் பிரதேசங்களிலுள்ளோருக்கும் இந்த சாமர்த்தியம் தெரியும். இவனுடைய சத்துருக்களும் இவனுடைய சாமர்த்தியத்தைக் கண்டு மெச்சுவார்கள். அடுத்தபடியாக இவனை அதிகார ஆசை படைத்தவனென்றும் சிலர் சொல்லுகிறுர்கள். உண்மையில் ஆடம்பரம் பிடித்தவர் அல்ல. மேடைமேல் ஏறிப்பேசும் திறமை வாய்ந்தவரல்ல. அவ்வித அலுவல்களைப் பிறரிடம் ஒப்படைத்துவிடுவார். ருஷ்ய அரசாங்கத்தை நடத்துவதிலேயே பூர்ணமாக ஈடுபட்டார். 1912 முதல் 1915 வரையில் ‘பிரவ்தா’ பத்திரிகையில் தலையங்கம் எழுதுகிறவராகச் சேர்ந்து, 1916-ல் இரண்டாவது தேசப்பிரஷ்ட காலம் முடிந்ததும், மறுபடியும் அவ்வேலையில் சேர்ந்துகொண்டார். ஆகவே கேவலம் அதிகார ஆசையை மட்டில் பெற்றிருந்தால் அந்தப் பத்திரிகையின் பதிப்பாசிரியராக மீண்டும் மீண்டும் வந்திருக்க முடியாது.

எப்பொழுதும் மந்தமாயும், உற்சாகமில்லாமலும் இருப்பவரென்று அடுத்த படியாகச் சொல்லப்படுகிறது. இது சுத்த தவறான அபிப்பிராயம். அதிகமாகப் பேசிக்கொண்டே இருக்கமாட்டார். அவருடைய முகம் அமைதியாகவும், வெளுப்பாயும் காணப்படும். பரிசுத்தமான ஆடை அணிவார். திக்கிப் பேசுவதைப் போக்கடித்து வெகு ஜாக்ரதையாகப் பேசுவார். அவருடன்கூட நெருங்கிப் பழகிய சிலருக்கே அவருடைய ஹாஸ்ய ரஸம் தெரியும். அவருக்கு பிடில் வாசிக்கத் தெரியும். ஸ்கிரியாபின் என்ற பிடில் வித்வான் அவருடைய நெருங்கிய சொந்தக்காரர். இதைத் தவிர மீன் பிடிப்பது, டெனிஸ் பந்தாடுவது, கிராம வாழ்க்கை, எல்லாவற்றையும் காட்டிலும் மேலானது தன்னுடன் கூடியிருப்பவர்களுடன் சிநேகமாகயிருப்பது, இவ்வளவும் பொருந்தியவர் ஸ்டாலினுடன் பிரசித்தமான நட்புக்கொண்டவர். ஆர்டெக் என்ற இடத்தில் இவர் கோடைகாலத்திற்குச் தங்கச் செல்லும்போது மாஸ்கோவிலிருந்து ஒவ்வொரு வருஷமும் இவரை சந்திப்பதற்கு குழந்தைகள் ஏராளமாக வருகிறார்கள். இவரை 'மாமா' என்று பிரியமாக அழைத்துக்கொண்டு ஏராளமாகத் தொழிலாளிகள் இவருடைய சமஉரிமைக் கொள்கைகளைப்பற்றி கேட்க வருவார்கள். ஆகவே இவர் அரசாங்க நிர்வாகத்தில் கெட்டிக்காரர் என்று சொல்லலாமே தவிர அதிகார ஆசைபடைத்தவர் என்று சொல்லக்கூடாது. இம்மாதிரி கடைசியாகச் சொல்லப்பட்ட குணங்களைச் சொன்னால்தான் அவரைப்பற்றி நன்கு தெரிந்துகொண்டதாகும்.

---

## நார்வேயில் கலவரம்.

(நியூ ஸ்டேட்ஸ்மன் அண்டு நேஷன் பத்திரிகையிலிருந்து).

நாஸி அரசாக்ஷி ஜனங்களை பீதியடையக்கூடிய நிலைமையில் வைக்கிறது. அதற்கு நார்வேயில் இருக்கும் நிலைமை உதாரணமாக இருக்கிறது. நார்வே தேசத் துரோகி, க்விஸ்லிங் அவனுடைய எதிர் கட்சியுடன் சண்டைசெய்து வருகிறான். அவன் ஏற்படுத்திய தேசீய சங்கம் பயனற்றதாக இருப்பதால் அந்தச்சண்டை மிகவும் கொடியதாக இருக்கிறது. அந்நாட்டில் அவனால் ஏற்படுத்தப்படும் விளையாட்டு ஸ்தாபனங்கள் தேகப்பயிற்சியை விரும்பும் மனிதர்களால்கூட பகிஷ்கரிக்கப்பட்டு வருகிறது. நார்வேயில் அவன் பிரஸிடெண்டாக வந்தவுடன் முதன்முதலாக பிப்ரவரி மாதத்தில் போட்ட உத்தரவு என்னவென்றால், 10 முதல் 18 வயதுள்ள எல்லா சிறுவர்களும் அந்த தேசீய வாலிப சங்கத்தில் சேர்ந்து உழைக்கவேண்டும் என்பதுதான். இந்த நடவடிக்கைக்கு எதிராக குருமார்கள் எச்சரிக்கை செய்ததினால் ஆஸ்லோவிலிருக்கும் லூதர் வகுப்பைச் சேர்ந்த குருமார் பர்கிரேவ் என்பவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். ஸ்வதந்திர மாதாகோவிலில் உள்ளவர்களும், கல்லூரி போதகாசிரியர்களும் ஆதரவளித்ததில் எல்லா குருமார்களும் ராஜீனாமாச் செய்தார்கள். 10,800 உபாத்தியாயர்களில் 9,000 பேர் ராஜீனாமாச் செய்துவிட்டார்கள். ஆஸ்லோவில் மாத்திரம் பொய்பிரசாரம் செய்தார்களென்று 280 பேர் கைதி செய்யப்பட்டார்கள். மார்ச்சு மாதம் முடிவதற்குள் நாடு பூராவிலும் 2,000 பேர்கள் கைதி செய்யப்பட்டார்கள். மார்ச்சு மாதம் 22-ம் தேதி ஒவ்வொரு மாதாக்கோவிலிலும் பிரசங்க மேடையிலிருந்து குருமார்கள் உத்தியோகத்திலிருப்பதற்கு நிபந்தனையாக வாலிபர்களின் படிப்பு விஷயத்தில் அவர்கள் கொண்டிருந்த அபிப்ராயத்திற்கு மதிப்பு கொடுக்கவேண்டும் என்பதை அறிவித்தார்கள். ஒரு பக்ஷம் கிரமித்து ஒவ்வொரு கிராமத்திய குருமாரும் அரசாங்கத்திற்கும் தங்களுக்குமுள்ள பாந்தவ்யத்தை முறித்துக்கொண்டு ராஜீனாமாக் கடிதங்களைப் படித்துக்காட்டினார்கள். ஆனால் அவர்கள் குழந்தைகளுக்குப் பெயரிடுவதோ, கலியாணம் செய்துவைப்பதோ, ஈமச்சடங்குகள் செய்துவைப்பதோ, முதலியவைகளைத் தொடர்ந்து நடத்துவதாக ஒப்புக்கொண்டிருந்தார்கள். அதற்கு இந்த க்விஸ்லிங் அவைகளைத் தடுத்தும், 1,100 குருமார்களை வேலையிலிருந்து விலக்கிவிடுவதாகவும் பயமுறுத்தினான். குருமார் ர்க்கிரேவையும், மற்ற தலைவர்களையும் கைதிகள் முகாமுக்கு அனுப்பி விட்டான் ஆஸ்லோ கல்லூரி, ரெக்டார் ஸீப் என்பவருடன் குருமாரும் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆகையினால் நார்வேயில் மதப்பற்றும்,



படிப்பும் முற்றிலும் இல்லாமல் போகும்படி நேரிட்டது. உண்மையில் ஜெர்மானியர்களின் தூண்டுதலின்பேரில் இப்பொழுது கொஞ்சம் பின்வாங்கி சமரசம் செய்துகொள்வதற்குப் பிரயத்தனப்படுகிறான். ஆனால் உபாத்தியார்களுக்கு பாதுகாப்புமில்லாமலிருப்பதால் அவர்கள் கொடுமையாக நடத்தப்படுகிறார்கள். கரையோரமாக வரும் ஒரு பழைய ஸ்டீமரில் 500 உபாத்தியார்களை ஏற்றி வடக்கே அயல் நாட்டிற்கு அனுப்பியிருப்பதாக இந்த வாரத்தில் செய்தி கிடைத்திருக்கிறது. டிரான்டுஹீம் கவர்னர் ஒரு தேசத்துரோகி. அவர்கள் புறப்படும்பொழுது அவன் கூட ஆக்ஷேபித்தான். இரவில் படுத்துக்கொள்வதற்கு இடவசதியில்லையென்றும், சமயலுக்கும் போதுமான இடமில்லையென்றும், தண்ணீர், சுகாதாரமில்லையென்றும் சொன்னான். பலவித நோய்களும், பைத்தியமும் அந்த உபாத்தியார்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இம்மாதிரி கவர்னர் ஆக்ஷேபித்ததற்கும் டிரான்டுஹீம் குருமார்கள் விடுத்த வேண்டுகோளுக்கும் உபாத்தியாயர்கள்தான் உத்தரவாதிகள் என்றும், குருமார்கள் அவர்களை ஒழுங்காக நடக்கும்படி அவர்களுக்குச் சொல்லும்படிக்கும் க்விஸ்லிங் உத்தரவிட்டிருக்கிறான். நார்வேயிலுள்ள குருமார்களும், உபாத்தியாயர்களும் தைரியமாகவும், ஐக்கிய பத்தியத்துடனும் நடந்து கொண்டது விரோதமாயிருக்கிறது. அவர்கள் ஜீவாதாரமான போர்முனையில் சண்டைசெய்வதாக அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். நாஸி வாலிபர்களின் பழக்க வழக்கங்கள் நார்வேக் குழந்தைகளுக்கு ஏற்படாமல் அவர்களால் தடுக்கக் கூடுமானால் அந்நாட்டின் தற்போதிய தலைவர்களுக்கு எதிராகவே இவ்வாலிபர்கள் நடக்கும்படி செய்யக் கூடும். இப்பொழுது அந்த சண்டை மும்மறமாக நடக்கிறது.

---

## யுத்த நிலைமையைப் பற்றிய அபிப்பிராயங்கள்.

**ஸர் ஆர்ச்பால்டு ஸிங்க்ளேர், பிரிடிஷ் விமான இலாகா மந்திரி.**

"ஐக்கிய நாடுகளின் விமானப்படை பலம் விருத்தியடைந்து வருகிறது. அந்தப்படையில் நேசதேச விமானப்படை பிராதான்னியம் பெற்றிருக்கிறது."

**மிஸ்டர் C. R. ஆட்லி, உதவி பிரதமந்திரி, அயல்நாட்டுக் காரியதரிசி.**

"நேசக்கட்சியின் பலம் வாரா வாரம், நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கவசம் தரித்த துருப்புகளும், யுத்த தளவாடங்களும் ஏராளமாக அதிகரித்திருக்கின்றன. அந்நாடுகளின் யுத்த முயற்சி உச்சநிலையை இன்னுமடையவில்லை.

"நம்முடைய எதிரிகள் வெகுகாலத்திற்கு முன்பே யுத்த முயற்சியில் உச்சநிலையை அடைந்துவிட்டனர். இப்பொழுது அவர்கள் பெருத்த நஷ்டமடைந்து வருகிறார்கள். ஆனால் இன்னும் நமக்குப் பலவித கஷ்டங்கள் நேரிடலாம். ஆனால் இறுதியில் நமக்கு வெற்றி நிச்சயம்."

**மிஸ்டர் ஆர்தர் கிரீன்வுட், தொழிற்கட்சித் தலைவர்.**

"போரின் நான்காவது வருஷத்தில் திட்டமான முடிவு ஏற்படுமென நான் எண்ணுகிறேன். இப்பொழுதே நேசக்கட்சியினர் வரவர அபிவிருத்தியடையும் பலத்துடன் முன்னேறித்தாக்க ஆரம்பித்திருக்கின்றனர்."

**லார்டு ஸெல்போர்ன், பொருளாதார மந்திரி.**

"பொருளாதார முற்றுகையினால் ஜெர்மனிக்கு உள்நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரதிகூலங்களை இப்பால் அது மறைத்துவைக்க முடியாது. இந்த முற்றுகையை நாம் நிலைத்து நிற்கும்படி செய்யும்வரையில் ஜெர்மன் அரசாங்கத்திற்கு நேரிட்டிருக்கும் பொருளாதாரக் கஷ்டங்கள் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். பொருளாதார முற்றுகையால்மட்டும் போரில் வெற்றியடைய முடியாது. ஆனால் 1918-ம் வருஷத்தில் ஏற்பட்டமாதிரி ஜெர்மன் எதிர்ப்பைக் குலைப்பதற்கான பல முக்கிய அம்சங்களில் அதுவும் ஒன்று. அதனால் எதிரியின் ராணுவம் தோல்வியடையும் நாளும் நெருங்கிவிட்டதென்று சொல்லலாம்."

**லார்ட் வூல்டன் (Lord Woolton), உணவு ஸப்ளை மந்திரி.**

"போரின் நான்காவது வருஷ மாரிகாலத்திலும், கிரேட் பிரிடன் எதிரிகளை எதிர்த்து நிற்க மிக்க திறமையுடனிருக்கிறது. நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை மட்டில் நம்முடைய கப்பல்கள் கொண்டுவரக்கூடும். முந்தியைக் காட்டிலும் இப்பொழுது நாம் நல்ல நிலைமையிலிருக்கிறோம். மிகவும் தைரியமாகவும், நல்ல ஆரோக்கியத்துடனும் இருந்துவருகிறோம்."

**மிஸ்ட்டர் அமேரி, இந்தியா மந்திரி.**

"நாம் தாமதித்தே ஆபத்தை உணர்ந்தோம். முஸ்தீப்பு செய்துகொள்வதிலும் பின் வாங்கியிருந்தோம். ஆனால் இழந்த அவகாசத்தை இப்போது ஈடு செய்துவிட்டோம். இழந்த சந்தர்ப்பத்தை ஈடுசெய்யவேண்டும்."

**மிஸ்ட்டர் எர்னஸ்ட் பிரௌன், சுகாதார இலாகா மந்திரி.**

"யுத்தத்தின் நான்காவது வருஷ ஆரம்பத்தில் பிரிடிஷார் நல்ல பலத்துடனும், ஊக்கத்துடனும் போர் செய்யத் தயாராக இருக்கிறார்கள்".

**ஸர் வால்டர் ஸிட்ரின், வர்த்தகச் சங்கத்தின் பொது காரியதரிசி.**

"பிரிடனில் 14 வயதுக்கு மேற்பட்டவர்களின் ஜனத்தொகையில் மூன்றில் இரண்டுபாகம் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 60 லக்ஷம் ஸ்திரீகளுக்கு மேலேயே யுத்தத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

"அமெரிக்காவில் யுத்தப் பொருள்களின் உற்பத்தி அபரிமிதமாக அபிவிருத்தியடைந்திருக்கிறது. உலகத்திலுள்ள யுத்தப் பொருள்கள் தயாரிக்கும் எந்தத் தொழிற்சாலையிலுமுள்ள தொழிலாளிகள் தயாரிப்பதையும், பிரிடிஷ் தொழிற்சாலையிலுள்ள வேலைக்காரர்கள் தயாரிப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பிரிடிஷ் தொழிலாளி செய்வது அதிகமென்றே தோன்றும்."

**'டைம்ஸ் பத்திரிகை'.**

"நாம் இப்பொழுது தற்காப்பு நிலைமையிலிருந்து எதிரியை எதிர்த்து நிற்கும் கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இந்த சந்தர்ப்பத்தில் அவசரமாகவும், ஆலோசித்தும் காரியங்கள் செய்யவேண்டிய அவசியம் நேரிட்டிருக்கிறது. உயிர் வாழ்வதற்காக நடத்திய போராட்டம் முடிந்துகொண்டிருக்கிறது. வெற்றிக்கான போர் விரைவில் ஆரம்பமாகும். வெகுகாலமாக தற்காப்பிலிருந்த நம்மை ஜயிக்க முடியாமல் நாம் செய்துவந்த தந்திரத்தை மாற்றி இப்பொழுது ஜயம் பெறுவதற்குத் தகுந்தவாறு சூழ்ச்சி தேடவேண்டும்.

"ஒரே விதமான திட்டம்போட்டு எல்லாப் போர்முனைகளிலும், இப்பொழுதும் இனிமேலும் போர்செய்யும் மூன்றுவித படைகளும், ஒன்று சேர்ந்து சென்று தாக்கவேண்டும். இதைக்காட்டிலும் ஒவ்வொரு நேசதேசத்தாரின் திட்டத்தையும் சேர்ந்தாற்போல் பார்த்து, ஒன்று சேரும்படி செய்யவேண்டும். அதோடு நேசதேசத்தார்களின் பொருளாதாரங்களை ஒன்று சேர்ப்பது போல் எல்லா தலைவர்களின் உதவியையும் ஒன்று சேரும்படி செய்யவேண்டும்."

**'டெய்லி மெயில்.'**

"யுத்தம் கொடியதாகத்தான் இருக்கும். இன்னும் நீண்டகாலம் நடந்தாலும் நடக்கும். எதிரியின் தாக்குதலை மட்டும் குலைத்துவருவது போராது. அவன் கைப்பற்றியிருக்கும் பிராந்தியங்களிலிருந்து அவனை அப்புறப்படுத்த வேண்டும். யுத்தத்தை அவன் நாட்டில் நடக்கும்படி செய்யவேண்டும். இந்த சமயத்தில் நேசதேசப்படைகள் பெர்லின், ரோம், டோகியோ இவைகளைப் பலமாக ஆக்கிரமித்துக் கொள்ளவேண்டும்."

**'நியூஸ் கிரானிகிள்'.**

"இந்த நான்காவது வருஷ யுத்த ஆரம்பத்தில் வீண்பெருமை பாராட்டிக் கொள்ளும் நிலைமையிலாவது, மூட நம்பிக்கையுடனாவது நாம் இந்த யுத்தத்தை எதிர்க்கவில்லை. நேசதேசத்தார்களின் நிலைமையைத் தகர்க்க முடியாமல் செய்ய



இரண்டு விஷயங்கள் தேவை. இந்தப் பொதுக் காரியத்திற்காக எல்லோரும் ஒன்றுசேர்ந்து மொத்தப் பிரயத்தனம் செய்யவேண்டியது. பொருள் உற்பத்தியையும் சூழ்ச்சியையும் ஒன்று சேர்க்கவேண்டியது".

**'டெய்லி டெலிகிராப்'**

"பிரிடிஷ் சாம்ராஜ்யம், ருஷ்யா, யுனைடெட் ஸ்டேட்ஸ் இம்மூன்று தேசங்களும், உலகத்தில் கடலிலும், தரையிலும் பெரும்பான்மையான பாகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இவை மூன்றும் ஐக்கிய பத்தியத்துடன் நிலைத்து நின்றால், அச்சுநாடுகளின் கேவலமான பிரயத்தனங்களெல்லாம் சேர்த்துக் கொண்டு இவைகளைத் தாக்கினாலும் அச்சுநாட்டுப் பலம் சிதறித்தான் போகும். மனிதபலம், யந்திரபலம், விளைவுபொருள்கள் இவைகளிலெல்லாம் நேசதேசத்தார்களுக்குச் சாதகமிருக்கிறது. யுத்தம் நீடித்தால் இந்த பலமும் அதிகரித்து வரும்".

---

## (1) பிரிடனின் கமாண்டோப் (Commandos) படை.

சமீபத்தில் வெளிவந்த "டைம்" பத்திரிகையில் பிரிடனின் ரகசியப்படை வீரர்களைப்பற்றி சில முக்கிய குறிப்புகள் காணப்பட்டிருக்கின்றன. பொதுவாக அவர்களுடைய அலுவல்களைப்பற்றி நமக்குத் தெரியாது. அவர்களுக்கு வேண்டிய உணவை அவர்களே வாங்கிக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அவர்களே சமைத்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு வேண்டிய இடவசதியையும் அவர்களே தேடிக்கொள்ளவேண்டும்.

காடுகளிலும், மலைகளிலும் ஓடித்திரிவதற்கும், மல் யுத்தம் செய்வதற்கும், முக்கியமாகக் கொலை செய்வதற்கும், அப்படி கொலையையும் ரகசியமாகச் செய்வதற்கும் அவர்களுக்குக் கடுமையான பயிற்சி கொடுக்கப்படுகிறது. இருபக்கத்திலும் கூர்மையான கத்தி தான் அவர்களது முக்கியமான ஆயுதம். மற்றபடி கத்திகள், கம்புகள், பித்தளையால் தயாரிக்கப்பட்ட முள்ளடர்ந்த வளையங்கள் ஆகிய ஆயுதங்களையும் அவர்கள் உபயோகிக்கின்றனர்.

விமானத் தாக்குதல் காலங்களில் அவர்கள் முகத்தையும், ஜோடுகளையும் கருப்படித்துக் கொள்ளுகிறார்கள். கருப்பு உடையையும் தரித்துக் கொள்ளுகிறார்கள். அப்படிச் செய்வதில் இருவித பயன் ஏற்படுகிறது. எதிரியை ஏமாற்றுவதற்கும், எதிரி மனதில் ஒருவித உணர்ச்சியை உண்டாக்குவதற்கும் இம்மாதிரி செய்யப்படுகிறது. மிஸ்ட்டர் சர்ச்சில் இந்தப் பெயரை அவர்களுக்கு வைத்தார். அவர்களே அவர்கள் செய்யும் வேலைக்குத் தக்கவாறு "கொலை செய்துவிட்டு ஓடிவிடுபவர்கள்" என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

---

## (2) டாங்கி.

"டாங்கி" என்ற யந்திரவண்டிக்கு எவ்விதம் அப்பெயர் கொடுக்கப்பட்டது என்பது பற்றி மேயா பால் C. ராப்ராக் என்பவர் தான் எழுதிய "பலமான யந்திரங்கள்" (Mechanized Might) என்று பெயருள்ள புஸ்தகத்தில் விவரித்திருக்கிறார்.

"முதலாவது உலக யுத்தத்தில் பிரிடிஷார் ரொம்ப ரகசியமாக முதன் முதலில் டாங்கிகளைத் தயாரித்தார்கள். அதைத் தயாரித்த தொழிலாளிகளும் கூட எதற்காக அது தயாரிக்கப்படுகிறதென்று தெரியாது. எகிப்தில் தண்ணீர் தொட்டிகளை ஏற்றிக்கொண்டு போவதற்குச் சாதகமாக அந்த யந்திரங்கள் தயாரிக்கப்பட்டதென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. அந்த யந்திர உற்பத்தி சம்பந்தமாக எல்லா பாகங்களிலும், "தண்ணீர் கொண்டு செல்லும் வண்டி," (Water carrier) என்று போடப்பட்டிருந்தது. தொழிற்சாலை வேலையாட்களும் சுருக்கத்திற்காக "டாங்கி" (தண்ணீர் தொட்டி) என்று வழக்கமாகச் சொல்லிவந்தார்கள். அப்பெயர் பொருத்தமாக இருந்தது. இப்பொழுது அநேகமாக எல்லா நாடுகளிலும் அப்பெயர் வழங்கிவருகிறது.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரசங்க நிகழ்ச்சிமுறை

1942— பிரஸங்கம் **112**—(4-வது பிரிவு).

| | | | | மணி |
|---|---|---|---|---|
| 12, | சனிக்கிழமை ... | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | மாலை | 7.00 |
| 13, | ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி ... | ,, | 7.00 |
| | | ஆலூர் ... | ,, | 7.30 |
| 15, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | காரையூர் ... | மாலை | 7.00 |
| | | இடையாத்தூர் ... | ,, | 7.30 |
| 16, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10 15 |
| | | வடவாளம் ... | மாலை | 7.00 |
| | | செம்மட்டிவிடுதி ... | ,, | 7.30 |
| 17, | வியாழக்கிழமை ... | கீரனூர் ... | ,, | 7.00 |
| | | நாஞ்சூர் ... | ,, | 7.30 |
| 18, | வெள்ளிக்கிழமை... | நார்த்தாமலை ... | ,, | 7.00 |
| | | உப்பிலியக்குடி ... | ,, | 7.30 |

பிரஸங்கம் **113**—(5-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 19, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 20, | ஞாயிற்றுக்கிழமை | திருவரங்குளம் ... | ,, | 7.00 |
| | | வம்பன் ... | ,, | 7.30 |
| 21, | திங்கட்கிழமை ... | பிச்சத்தான்பட்டி ... | ,, | 7.00 |
| | | தொலையானூர் ... | ,, | 7.00 |
| | | மலைக்குடிப்பட்டி ... | ,, | 7.30 |
| 22, | செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | வெள்ளனூர் ... | மாலை | 7.00 |
| | | செம்பாட்டூர் ... | ,, | 7.30 |
| 23, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | குளவாய்ப்பட்டி ... | மாலை | 7.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 7.30 |
| 24, | வியாழக்கிழமை ... | பள்ளிவாசல் ... | ,, | 7.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 7.30 |
| 25, | வெள்ளிக்கிழமை... | புலியூர் ... | ,, | 7.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 7.30 |

**புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 12— 9—42 | ... | வெட்டம்விடுதி |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 13— 9—42 | ... | விராச்சிலை. |
| திங்கட்கிழமை | ... | 14— 9—42 | ... | விராலிமலை. |
| செவ்வாய்க்கிழமை | ... | 15— 9—42 | ... | கோனாபட்டு. |
| புதன்கிழமை | ... | 16— 9—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 17— 9—42 | ... | குழிபிறை. |
| வெள்ளிக்கிழமை | ... | 18— 9—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 19— 9—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 20— 9—42 | ... | மருதன்கோன்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 21— 9—42 | ... | அரிமளம். |
| செவ்வாய்க்கிழமை | ... | 22— 9—42 | ... | குடுமியாமலை. |
| வியாழக்கிழமை | ... | 24— 9—42 | ... | கிழாநிலை. |
| வெள்ளிக்கிழமை | ... | 25— 9—42 | ... | பாப்பாபட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—14-9-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம்௵ ஸெப்டம்பர்௴ 19உ [ந. 113

**பிரஸங்கம் CXIII.**

## இந்தியாவின் நிலைமை.

### மிஸ்டர் சர்ச்சிலின் விமர்சனம்.

### கிரிப்ஸ் திட்டமே பிரிடனின் முடிவான கொள்கையைத் தெரிவிக்கிறது.

(லண்டன், ஸெப்டம்பர் 10.)

"இந்திய சம்பவங்களின் போக்கில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில் இந்திய நிலைமை நம்பிக்கை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. பிரிடிஷ் அரசாங்கத்தார் வெளியிட்ட அறிக்கையின் பறந்த கொள்கைகளே ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் தூதிற்கு ஆதாரமாகயிருந்தன. இந்த அறிக்கை பிரிடிஷ் அரசரும், பார்லிமெண்டும் இந்தியாவில் கையாளும் முறையை திட்டமாக நிர்ணயித்துவிட்டது. இவைதான் இந்தியாவைப் பற்றி பிரிடிஷ் அரசாங்கத்தின் முடிவான கொள்கைகள். இந்தக் கொள்கைகள் பூர்ணமாக அப்படியே இருக்கின்றன. அதில் எவரும் எதையும் சேர்க்கமுடியாது; அதிலிருந்து எதையும் எவரும் எடுத்துவிட முடியாது.

"இந்திய காங்கிரஸ் கட்சி ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸின் உதவியை நிராகரித்துவிட்டது. இத்துடன் விஷயங்கள் முடிவடைந்துவிடவில்லை. இந்தியக் காங்கிரஸ் கட்சி இந்தியாவின் பிரதிநிதி ஸ்தாபனமில்லை. அது இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான மக்களது பிரதிநிதியுமல்ல. ஹிந்துக்கள் பூராவுக்கும்கூட அது பொது ஸ்தாபனமல்ல. அது கட்சி யந்திரத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட ராஜீய ஸ்தாபனமாகும். அது சில தொழிற்சாலைக்காரர்கள், பணக்காரர்கள் இவர்களின் ஆதரவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது.

#### ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டிய விஷயங்கள்.

பிரிடிஷ் இந்தியாவில் இந்தக் கட்சியைத் தவிர இதற்கு முற்றிலும் விரோதமாகவுள்ள 9 கோடி முஸ்லிம்கள் இருக்கின்றனர். இவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட உரிமை பெற்றிருக்கிறார்கள். இவர்களை விர தங்களது சாயலினால்கூட ஹிந்துக்களைப் புனிதமற்றவர்களாக ஆக்குவதாகக் கருதப்படும் 5 கோடி தீண்டத் தகாதவர்களென்று ஒதுக்கப்பட்ட வகுப்பினரும், இந்திய ஸமஸ்தான பிரஜைகளான 9½ கோடி மக்களும் இருக்கிறார்கள். நாம் இந்திய ஸமஸ்தானாதிபதிகளுடன் உடன்படிக்கை மூலம் பிணைக்கப்பட்டிருக்கிறோம். ஆகை

யால் இந்தியாவின் மொத்த ஜனத்தொகையான 39 கோடிமக்களில் 23½ கோடி பேர் மேற்சொல்லிய மூன்று பெரிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். தற்போது காங்கிரஸ் கட்சி கையாளும் முறையைப் பற்றி வருந்துகின்றவர்கள் பிரிடிஷ் இந்தியாவிலுள்ள, ஹிந்து, சீக்கிய, கிருஸ்தவ சமூகங்களில் அநேகர் இருக்கின்றனர். அவர்களின் எண்ணிக்கை இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

### புரட்சி இயக்கம்.

" இங்கும் சரி, அன்னிய நாடுகளிலும் சரி, இந்த முக்கியமான விஷயங்களை அலக்ஷியம் செய்யக்கூடாது. ஏனெனில் இந்த மூலாதாரங்களை உணராவிட்டால், இந்தியப் பிரச்னையையோ, அல்லது இந்தியாவுக்கும், பிரிடனுக்குமுள்ள சம்பந்தங்களையோ உணர்ந்துகொள்ள முடியாது.

" இவ்வளவு காலமாக மிஸ்டர் காந்தி போதித்துவந்த அஹிம்சைக் கொள்கையை காங்கிரஸ் கட்சி பல அம்சங்களில் கைவிட்டுவிட்டது. அது ரயில், தந்தி இவற்றின் மூலம் நடக்கும் போக்குவரத்துகளைத் தடைசெய்யவும், குழப்பத்தை உண்டாக்கவும், அங்குமிங்குமாக இந்தியப் போலீஸாரைத் தாக்கவும் ஆகிய புரட்சி இயக்கத்தை காங்கிரஸ் கட்சி பஹிரங்கமாகக் கையாண்டு வருகிறது. அடிக்கடி மிக்க அருவெறுப்பை உண்டாக்கும் அக்கிரமங்கள் நிகழ்கின்றன. அஸ்ஸாமின் எல்லைப்புறங்களிலும் வங்காளக்குடாக் கடலின் கிழக்குப்புறத்திலும் படையெடுக்கத் தயாராயிருக்கும் ஜப்பானியரிடமிருந்து இந்தியாவைப் பாதுகாப்பதைத் தடுப்பதே அக்கட்சியின் பொது உத்தேசமாகும்.

"காங்கிரஸ் கட்சியின் இந்த வேலைக்கு ஜப்பானிய ரகசிய ஏஜென்டுகள் விரிவான முறையில் ஆதரவு அளித்திருக்கக்கூடும். அதே சமயத்தில் மர்ம ஸ்தானங்களில் விசேஷ கவனஞ்செலுத்தியிருக்கவும்கூடும். உதாரணமாக அஸ்ஸாம் எல்லைப்புறத்தில் வங்காளத்தைப் பாதுகாத்துவரும் இந்தியப் படைகளின் போக்குவரத்து சாதனங்களை இவர்கள் முக்கியமாகத் தாக்கியிருக்கிறார்கள்.

" இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் வைஸிராயும், நிர்வாக சபையின் ஏகமனதுடன்கூடிய ஆதரவுபெற்ற இந்திய கவர்ன்மெண்டாரும், சட்ட விரோதமாயும், குற்றமுள்ளதாயுமுள்ள வழிகளில் இறங்கியிருக்கும் காங்கிரஸின் மத்திய ஸ்தாபனத்தையும், அதன் மாகாண ஸ்தாபனங்களையும் சட்ட விரோதமான ஸ்தாபனங்களென்று அறிவித்திருக்கிறார்கள். அதனால் அவற்றை நசுக்குவதும் அவசியமென்று கருதியிருக்கிறார்கள். வைஸிராயின் நிர்வாக சபையின் பெரும்பான்மையான மெம்பர்கள் இந்தியர்கள். இவர்கள் தேசாபிமானமும், விவேகமும் வாய்ந்தவர்கள்.

" மிஸ்டர் காந்தியும், மற்றுமுள்ள முக்கியமான தலைவர்களையும் எவ்வளவு அதிக சௌகரியங்களுடன் பந்தோபஸ்தில் வைக்கமுடியுமோ அவ்வளவு சௌகரியங்களுடன் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கின்றனர். அமளி அடங்கும்வரை இவர்கள் தீங்கெதுவும் செய்ய இயலாதபடி பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருப்பார்கள்.

### போர்க்குணம் வாய்ந்த ஜாதியாரின் மனப்பான்மை.

பிரிடிஷ் படைகளை விட, இந்தியாவின் பாதுகாப்புக்குப் பெரும்பாலும் போர்க்குணம் வாய்ந்த ஜாதியாரையே பொறுத்திருக்கிறது. நல்ல காலமாக அவர்களிடம் காங்கிரஸ் கட்சிக்கு எவ்வித செல்வாக்குமில்லாமல் இருக்கிறது. இந்த வீரத்தன்மை வாய்ந்த ஜாதியாரில் பலர், ஹிந்து காங்கிரஸ் கட்சியிலிருந்து ஒன்றுபடுத்தப்பட முடியாத மதப்பிளவுகளால் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் காங்கிரஸ் கட்சியால் ஆளப்படுவதற்கு ஒருபோதும் சம்மதிக்கமாட்டார்கள். மேலும் இவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக இவர்கள் காங்கிரஸ் கட்சிக்குள்ளாகும்படி ஒருபோதும் செய்யப்படவும்மாட்டார்கள்.

" இந்தியாவில் கட்டாய யுத்த சேவை கிடையாது. இந்த உலக யுத்தத்தில் ஐக்கிய நாடுகளின் சார்பாக சண்டைசெய்ய 10 லக்ஷம் இந்தியர்கள் சுவேச்சா பூர்வமாக யுத்தசேவை செய்ய முன்வந்திருக்கிறார்கள். பல யுத்த அரங்கங்களிலும் இந்தியப்படைகள் தீரச்செயல்களைச் செய்து புகழ்பெற்றிருக்கிறார்கள்.



சென்ற 2 மாதங்களாக காங்கிரஸ் இந்தியா கவர்ன்மெண்டாருடன் போராடி வருகின்றது. இந்த இரண்டுமாத காலங்களில் இந்திய சக்ரவர்த்தியிடம் விசுவாஸம்கொண்டு ராணுவத்தில் சேருவதற்காக 1,40,000 புதிய தொண்டர்கள் முன்வந்திருக்கிறார்கள். இதற்குமுன் தங்கள் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கு இவ்வளவு அதிகமான பேர் முன்வந்ததில்லை.

### இந்திய உத்தியோகஸ்தர்களுக்குப் பாராட்டு.

" இதுவரை நடந்த விஷயங்களிலிருந்து இந்திய ராணுவத்திலுள்ளவர்களைத் தனது பக்கம் இழுத்துக்கொள்ளவோ, அல்லது ஏராளமான இந்திய உத்தியோகஸ்தர்களை அவர்களது கடமைகளிலிருந்து வழுவும்படி செய்யவோ, ஏராளமான இந்திய பாமர ஜனங்களுக்குள் உத்வேகமுண்டாக்கும்படி செய்யவோ, காங்கிரஸ் சக்தியற்றதாகயிருப்பது வெளியாகிவிட்டது. இந்தியாவை ஒரு கண்டமென்றே சொல்லலாம்; இது விஸ்தீர்ணத்தில் ஏறக்குறைய ஐரோப்பாவுக்கு சமமானது. ஜனத்தொகையில் ஐரோப்பாவைவிட அதிகமானது. ஆனால் ஐரோப்பாவில் இருப்பதைவிட இங்கு மதப்பிரிவுகளும், ஜாதிப் பிரிவுகளும் ரொம்ப அதிகம்.

" இந்தியாவில் 39 கோடி மக்கள் வாழ்கின்றனர். இந்திய கவர்ன்மெண்டின் நிர்வாகத்தை எல்லாம் இந்தியரே நடத்திவருகிறார்கள். இந்திய சிவில் ஸர்வீஸில் 600-க்கும் குறைவான பிரிடிஷாரே வேலையில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். மற்றபடி எல்லா ஸர்க்கார் ஊழிய வர்க்கங்களும் வேலைசெய்து வருகின்றன. முக்கியமாக ஐந்து மாகாணங்களில் சட்டசபைக்கு ஜவாப்தாரியாகவுள்ள மாகாண மந்திரிகள் தங்கள் பதவிகளிலிருந்து வேலை பார்க்கிறார்கள். இவற்றில் 2 மாகாணங்கள் மிகப்பெரியவை. இவற்றில் 11 கோடி மக்கள் வாழ்கின்றனர். நகரங்கள், கிராமங்கள் இம்மாதிரியான பலவிடங்களில் பொதுமக்கள் ஸிவில் அதிகாரிகளை ஆதரித்துவந்திருக்கிறார்கள்.

" போக்குவரத்து சாதனங்களை அழிப்பதற்கான காங்கிரஸ் திட்டங்கள் பூராவும் முறியடிக்கப்பட்டும், இப்பால் கொள்ளையடித்தல், தீவைத்தல்போன்ற குற்றச்செயல்கள் அடக்கப்பட்டும் வருகின்றன. இவற்றைத் தண்டிக்கையில் மிகவும் குறைவான உயிர்ச் சேதமே ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஏராளமான ஜனத்தொகையடங்கிய விஸ்தாரமான இந்தியாவில் கொலையுண்டவர்களின் எண்ணிக்கை 500-க்கும் குறைவாக இருக்கும். அங்குமிங்குமாக ஸிவில் அதிகாரிகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு சில பிரிடிஷ் பட்டாளங்களை அனுப்பவேண்டிய அவசியம் நேரிட்டிருந்தது.

" பெரும்பான்மையான இடங்களில் கலகக்காரர்களை இந்தியப் போலீஸாரே வெற்றிகரமாக அடக்கிவிட்டார்கள். தீரம்வாய்ந்த இந்தியப் போலீஸாருடையவும், போற்றத்தகுந்த முறையில் நடந்துகொண்ட இந்திய உத்தியோகஸ்தர்களுடையவும், ராஜவிசுவாஸத்தையும், உறுதியையும் நான் போற்றிப் புகழ்வதில் சபையும் என்னை ஆதரிக்குமென்று நான் நம்புகிறேன்.

### பிரதம மந்திரியின் முடிவுரை.

" காங்கிரஸ் கட்சியின் பலாத்காரச் செயலினால் இதுவரை வெளிவந்த உண்மைகளைச் சுருக்கிச் சொல்வது வெகு எளிது. காங்கிரஸ் இந்திய மக்களின் பொதுப்பிரதிநிதி சபையல்ல. அடுத்தபடியாக இந்தியாவின் அமைதியான வாழ்க்கையைக் குழப்பத்திற்குள்ளாக்கக்கூடிய சக்தி அதனிடமில்லை. இந்திய சமூகங்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும், ஜப்பானியரிடமிருந்து இந்தியாவைப் பாதுகாப்பதற்கும் வேண்டிய உதவிகளை வைஸிராயுக்கும், அவரது நிர்வாக சபைக்கும் அளிப்பது ஸர்க்காரின் உத்தேசமாகும். மேற்கண்ட அலுவல்களைச் செய்ய பிரிடிஷ், இந்திய ராணுவங்களைச் சுயேச்சையாக விட்டுவிடுவதற்கு உறுதியானதாயும், ஆனால் மிதமானதாயுமுள்ள நடவடிக்கைகள் கையாளப்பட்டு வருகின்றன.

" இதனால் இந்தியாவின் தற்போதைய நிலைமை அனாவசியமாக பீதிக்கோ அல்லது மனச்சோர்வுக்கோ இடமளிக்கவில்லையென்று சபைக்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்".

# தேசிய யுத்த முன்னணி.

## மேன்மை தங்கிய வைஸிராய் விடுத்த அறிக்கை.

இந்த நெருக்கடியான உலக யுத்தத்தின் நடுவே இந்தியாவானது ஆகாயத்திலிருந்தும், பலங்கொண்ட ஈவிரக்கமில்லாத விரோதிகளாலும், மறைமுகமான ஆபத்துகளாலும் சூழப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்திய அரசாங்கம் உறுதியாகவும், எல்லோராலும் அன்பு பாராட்டப்பட்டதாகவும் இருக்கிறது. அதன் தலைமை அதிகாரியும், அதிலுள்ள ஒவ்வொருவரையும், ஏகமனதுடன் பிரயத்தனம் எடுத்துக்கொண்டு வேலைபார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறார்.

அதிகாரிகளே! அவரவர்களின் வேலையை ஒழுங்காகச் செய்யுங்கள். பொது ஜனங்களே! அவரவர்களின் தொழில்களைச் சரியாகச் செய்யுங்கள்.

அதிகாரிகளுக்குள் ஒற்றுமை வேண்டும், பொது ஜனங்களிடம் முணுமுணுப்பு இருக்கக்கூடாது.

எல்லோரும் ஒன்று சேருங்கள்! அரசாங்கத்தைச் செவ்வையாய் நடத்த வேண்டிய ஏற்பாட்டைச் செய்யுங்கள்! எதிரிகளை எதிர்க்க நல்ல முஸ்தீப்புடன் இருங்கள்! எதிரியை எதிர்த்துத் துரத்துங்கள்! ஜயக்கொடியை நாட்டுங்கள்.!

# தேசிய யுத்த முன்னணி.

## புதுக்கோட்டையில் உணவுப்பொருள்களை அதிகம் உற்பத்திசெய்யும் இயக்கம்.

### கவர்ன்மெண்டு கம்யூனிகே.

இச்சமஸ்தானத்தில் சாகுபடி நிலங்களின் விஸ்தீர்ணத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் புதுக்கோட்டை கவர்ன்மெண்டார் அவர்கள் 1942-ம் வருஷத்திய XVIII ரெகுலேஷனை அமுல்படுத்தியிருக்கிறார்கள். இந்த ரெகுலேஷனின் நிபந்தனைகளின்படி பட்டா நில ஸ்வான்தார் தனது நிலத்தை சரியான முகாந்திரமில்லாமல் தரிசு போட்டால், அந்நிலத்தின் வருஷ கிஸ்தியைப் போல் நான்கு மடங்குக்குச் சமமான தொகை அபராதம் விதிக்கப்படுவார். தேசிய யுத்த முன்னணி நிலய மெம்பர்களுக்கு இவ்வித ரெகுலேஷனைப் பற்றி யாவருக்கும் தெரிவிக்கவேண்டிய பொறுப்பு உண்டாகியிருக்கிறது. சாகுபடி செய்யப்படாத நிலங்களைக் கவனித்து ரிபோர்ட்டு செய்வது இவர்களின் கடமைகளில் ஒன்றாகும்.



மேற்படி ரெகுலேஷனுக்கு வியாக்கியானமாக கீழ்கண்ட கம்யூனிகேயையும் அரசாங்கத்தார் பிரசுரித்திருக்கின்றனர்.

“ஸமஸ்தானத்தில் அதிக உணவுப்பொருள்கள் பயிர்செய்யும் நோக்கத்துடன் “1942-ம் வருஷம் XVIII-வது ரெகுலேஷனான புதுக்கோட்டை சாகுபடி செய்யப்படாத நிலங்களுக்கு (தண்டத்தீர்வை விதித்தல்) ரெகுலேஷன்” ஒன்றை ஈ-தர்பார் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தகுந்த காரணமில்லாமல் தங்கள் நிலங்களை சாகுபடி செய்யாத அல்லது தகுந்தபடி செய்யாமல் சாகுபடி செய்வதுபோல் பாவனை செய்யும் நில ஸ்வான்தார்களுக்கு அபராதம் விதிக்கும் அதிகாரம் இதனால் ஈ-தர்பார் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலர் இந்த ரெகுலேஷனின் நோக்கத்தையும், செலாவணியையும் மாறாக நினைத்துக் கொண்டிருப்பதாகத் தோற்றுவதால் அதை விளக்கலாமென்று ஈ-தர்பார் அவர்கள் எத்தனித்திருக்கிறார்கள்.

2. நில ஸ்வான்தார் பிசகு செய்திருக்கிறார் என்று வியக்தமாய் தெரிந்தால் தான் தண்டத்தீர்வை விதிக்கப்படுமென்ற தெளிவாகத் தெரியவேண்டிய விஷயம். தண்ணீர்த் தட்டினால் அல்லது இதைப்போன்ற வேறு காரணங்களினால் நிலம் சாகுபடி செய்யப்படாமல் இருக்குமானால், நில ஸ்வான்தாருக்கு தண்டத்தீர்வை விதிக்கப்படமாட்டாது; மேலும் அந்த நிலைமையில் வஜாக் கொடுப்பது நியாயமாக இருக்குமானால், ஸெட்டில்மெண்டு ஷரத்துக்களை ஒத்து வழக்கம்போல் வஜா கொடுக்கப்படும்.

3. நில ஸ்வான்தார்களுக்கும் குடியானவர்களுக்கும் தகராறு ஏற்படுவதனால் நிலம் சாகுபடியாகாவிட்டால், அந்தத் தகராறுகளைத் தீர்த்துவைப்பதில் ரெவினியூ ஆபீஸர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளுவார்கள். அந்த முயற்சிகள் காலாகாலத்தில் பலன் பெறாவிட்டால் (சாகுபடி செய்வதற்குரிய காலம் கடந்துபோகும்வரை நடவடிக்கையை பாக்கியில் வைக்கப்படமாட்டாது) அந்த நிலத்தின் குடியானவர்களையோ அல்லது இதர கூலிக்காரர்களையோ சாகுபடி செய்யச் செய்வதில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் முயற்சி செய்வார்கள். இது கைகூடுமானால், நிலம் உடனே ஸர்க்கார் வசப்படுத்தப்பட்டு சாகுபடி செய்பவர்களிடம் ஒப்படைக்கப்படும். இருந்தபோதிலும், நில ஸ்வான்தார் தண்டத்தீர்வை செலுத்தக் கடமைப்பட்டவராவார்; ஆனால் மகசூலில், அந்தத் தண்டத்தீர்வைக்கு ஈடு செய்ததுபோக பாக்கியில் அவருக்கு தகுதியான ஒரு பாகம் பெற உரிமையுண்டு.

4. அயன் நிலங்களுக்குப்போலவே, இனாம் நிலங்களுக்கும் இந்த ரெகுலேஷன் அன்வயிக்கும்.

5. ரெவினியூ டிபார்ட்மெண்டு அதிகாரிகள், அதிகமாகத் தரிசுபோடப்பட்டிருக்கும் ஆயக்கட்டுகளையுடைய குளங்களின் ஜாபிதாவைத் தயாரித்து, பிசகு செய்பவர்கள் மேல் ஒழுங்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள். வேண்டுமென்று சாகுபடி செய்யாமல் போடப்பட்டிருக்கும் நிலங்களைத் தேடிப்பார்த்துக் கண்டுபிடித்து ரெவினியூ ஆபீஸர்களுக்குத் தெரிவிப்பதின்மூலம் ரெகுலேஷனை அமுலுக்குக் கொண்டுவருவதில் ‘தேசிய யுத்த முன்னணி’யின் அங்கத்தினர்கள் ரெவினியூ டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு ஒத்தாசை செய்ய முன் வருவார்கள்.

6. தட்டு இல்லாமலும், விலைவாசி அதிகரிக்காமலும் ஸமஸ்தானத்து மக்கள் எல்லாருக்கும் நன்மையுண்டாகும் பொருட்டு எவ்வளவு நிலம் சாகுபடி செய்ய இயலுமோ அவ்வளவு நிலம் சாகுபடி செய்யப்படுவதற்காகத்தான் இந்த ரெகுலேஷன் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஜனசமூகத்தின் போஷகர்களாக நில ஸ்வான்தார்கள் கருதப்படவேண்டும்; அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட பொறுப்பை, அசிரத்தையினாலோ, சோம்பலினாலோ அல்லது வேறு எந்தக் காரணங்களினாலோ நிறைவேறாதபடி செய்யாமல் அல்லாது, நிறைவேற்றவேண்டுமென்பதற்காகவே இந்த ரெகுலேஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது

7. இறுதியாக, ஸமஸ்தானத்திலுள்ள நில ஸ்வான்தார்கள் எல்லாரும் தங்கள் நிலங்களை சரிவர காலாகாலத்தில் சாகுபடி செய்து, கூடுமான அளவுக்கு உணவுப்பயிர் உண்டுபண்ணுவார்களென்றும், அவர்கள் அந்தப்படி செய்வதற்கு அவர்களைக் கட்டாயப்படுத்த இந்த ரெகுலேஷனின் ஷரத்துக்களை உபயோகப்படுத்தவேண்டியிருக்காதென்றும் ஸ்ரீ-தர்பார் அவர்கள் எதிர்பார்ப்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். இந்த ரெகுலேஷனை எவ்வளவு தூரம் உபயோகப்படுத்தாமல் இருக்கக்கூடுமோ அவ்வளவு தூரம் உபயோகப்படுத்தாமல் இருக்க வேண்டுமென்று ஸ்ரீ-தர்பார் அவர்களின் எண்ணம் என்பதை திவான் பேஷ்கார் அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறது”.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 12—9—42-லிருந்து 18—9—42-வரை.

**ருஷ்யா.**—காகஸஸின் கருங்கடல் பக்கமாயுள்ள நோவோரோஸிஸ்க் இவ்வாரத்தில் எதிரி வசமாயிற்று. அங்கிருந்து டுவாப்ஸி என்ற மற்றொரு துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறான்.

மாஸ்டக் பிரதேசத்தில் ஜெர்மானியர் அதிக முன்னேற்றத்தைச் செய்யவில்லை. இங்கே பனி ஆரம்பமாகியிருக்கிறது. ருஷ்யர்களின் எதிர்ப்புக் கடுமையாக இருக்கிறது.

ஸின்யாவினோ பிரதேசத்தில் லடோகா ஏரிக்குத் தெற்கில் நாஸிகளுக்குத் தோல்வி ஏற்பட்டிருக்கிறது.

வாரனேஷைப் பிடிக்கச் செய்த ஜெர்மன் முயற்சி திருப்பியடிக்கப்பட்டது.

ரிஷெவ்வை ருஷ்யர்கள் பலமாகத் தாக்குகின்றனர்.

பாரன்ட்ஸ் கடலோரமாக ருஷ்ய விமானங்கள் வந்து இறங்கின.

சென்ற யுத்தத்தில் வெர்டேனில் நடந்த சண்டைக்குச் சமமாக ஸ்டாலின்கிராட் சண்டை நடைபெற்று வருகிறது. வால்காவைப் பின்பக்கமாக வைத்துக்கொண்டு ருஷ்யர்கள் நகரை முடிந்த வரைக் காத்துவருகின்றனர். இந்நகர் வால்கா கரையோரமாக 25 மைல் நீளம் இருக்கிறது. இதை முற்றுகை இட முடியாது. ஒவ்வொரு கெஜமானாலும் பிடிக்க வேண்டுமென்று வான்பாக் கட்டளையிட்டிருக்கிறான். மேற்கு, தென்மேற்கு, வடமேற்கு பாகங்களில் நாஸித் தாக்குதல் மிகக் கடுமையாக இருக்கிறது. வால்கா நதி வழியாக நகருக்கு வரும் ஸப்ளைகளும், துருப்புகளும் கடுமையாக நாஸிகளால் தாக்கப்படுகின்றன. அதே விதமாக ருஷ்ய விமானிகளும் கலாச்சிலிருந்து டானைக்கடந்து வரும் ஜெர்மன் ஸப்ளைகளைத் தாக்குகின்றனர்.

அங்கு நடக்கும் சண்டையைப் பற்றி விஷி ரேடியோ பின் கண்டவிதமாக அறிவிக்கிறது.—‘ஸ்டாலின்கிராட்டில் ருஷ்ய எதிர்ப்புக் குறையவில்லை. நகரை அணுக அணுகத்தான் எதிரிக்கு சிரமம் ஜாஸ்தி. ஜனங்கள் வசிக்கும் இடம், தொழிற்சாலைப் பிரதேசம், இங்கேதான் சண்டை நடைபெறுகிறது. வால்காவிற்குப் போகும் மார்க்கம் மலைப்பாங்கானது. குறுகிய பள்ளத்தாக்குகள் உள்ளது. அங்கிருந்து ருஷ்யப்படைகள் கிளம்பி எதிரியைத் தாக்குகின்றன. ருஷ்யர்களுக்கு அந்நதி வழியாக ஏராள உதவி வந்துகொண்டிருக்கிறது. அவைகள் சேதமானால் உடனே புதிப்பிக்கப்படுகிறது. ருஷ்ய பீரங்கிப்படை பலத்துடனே தானிருக்கிறது. மறைந்தும் தாக்குகிறது. வால்காவிற்குக் கிழக்கில் இருந்த ருஷ்யப்படைகளும் உதவுகின்றன.

**மடகாஸ்கர்.**—இந்தியாவிற்கும் மத்தியக்கிழக்கிற்கும் செல்லும் ஸப்ளைகளைக் காபந்து செய்வதற்காக டீகோஸுவாரஸ் என்ற இடத்தை பிரிடன் சென்ற மே



மாதத்தில் ஆக்கிரமித்துக்கொண்டது. இதனால் அச்சநாட்டு விஷமம் நின்றுவிடுமென்று நினைக்கப்பட்டது. அதற்கு மாறாக சம்பவங்கள் நடந்து வந்ததால் ராணுவ ஏற்பாடுகள் மறுபடி துடங்கப்படவேண்டியதாயிற்று. ஸெப்டம்பர் 11ல் மஜுங்கா, அம்பான்ஜா, மொராண்டாவா துறைமுகங்களில் கப்பற்படைத் தாக்குதல் செய்யப்பட்டது. டீகோஸுவாரஸ்ஸிலிருந்து புறப்பட்ட தரைப்படை பியூச்வரை வந்து மெக்வடானா என்ற இடத்தைப் பிடித்துக்கொண்டது. தென் ஆபிரிக்கப்படை நோஸிவி, வோஹிமார் என்ற இடங்களைப் பிடித்துக்கொண்டது. அங்கிருக்கும் படைகளுக்கு சண்டை செய்யும் நோக்கமில்லை.

**பஸிபிக்.**—1 நியூ கினி அதிகமான படைகளை இறக்கும் நோக்கத்துடன் எதிரி, மயோலா, இபோகி, என்ற நேசதேச நிலைகளைத் தாக்கி ஓவன்ஸ்டான்லி மலைத் தொடரில் முட்டிக்கொள்ளுகிறான். குறுக்கே மோர்ஸ்பியிலிருந்து 44 மைல் தூரத்தில் இருக்கிறான். பூனா (Buna) கிலோ என்ற இடங்களை நேசநாடுகள் படையெடுத்தனர்.

2. **ஸாலமன்.**—கூடல்கனால்—லோகி பிரதேசங்களைத் திரும்பப்பிடிக்க ஜப்பானியர் பெரிய சண்டையைச் செய்கிறார்கள். ஸெப்டம்பர் 12ல் ஜப்பானியக் கப்பற்படை கூடல்கனாலில் தாக்குதல் செய்தன. அமெரிக்கக் கப்பல் பீரங்கிகளும் திரும்பித்தாக்கின. எதிரிக்கப்பல் ஒன்று சேதமாயிற்று. அதுமுதல் அமெரிக்க நிலைகள் கடலிலிருந்தும் விமானத்திலிருந்தும் தாக்கப்படுகின்றன. சிறிய பகுதிகளாக எதிரி இறங்கினாலும் அமெரிக்கர் தாக்கிவருகின்றனர். விமானத் தாக்குதலும் அதிகமாகவே இருந்துவருகிறது. இதில் எதிரிக்கு 22 பாம்பர்கள் சேதமாயிருக்கும்.

3. **அலூஷியன்.**—கிஸ்காவில் ஜப்பானியக் கப்பல்களையும், துருப்புகளையும் அமெரிக்கப் பைடர் விமானங்கள் தாக்கின. ஒரு ஜப்பானியப் பறக்கும் படகும், ஒரு பைடரும் சேதமாயின.

**எகிப்து.**—ஓய்வு நிலைமை நீடித்திருக்கிறது. இடையிடையே காவல் புரிதலும், பீரங்கிப் படைத்தாக்குதலும் இருந்து வந்தன. ‘ஸெப்டம்பர் மாதம் 13—14ல் இரவில் பிரிடிஷ் கப்பற்படையும், தரைப்படையும், விமானப்படையும் டொப்ருக்கில் கடலிலிருந்து தாக்குதல் செய்தன. அங்கிருந்த அரசியல் ஸ்தாபனங்களும், கப்பல்களும் ஸ்டோர்களும் தாக்கப்பட்டன.

ஸொலும், பெங்காஸி, மெர்ஸாமெட்ரூ, டாபா, ஸுடா குடா (கிரீட்) முதலியனவும் தாக்கப்பட்டன.

**பிரிடிஷ் விமானப்படை** ப்ரெமன், வில்ஹெல்ம்ஷேவன், அபிவில்லி, செர்பர்க் முதலியவைகளையும் ருஷ்ய விமானப்படை கோனிக்ஸ்பர்க், புகாரஸ்டு, ப்ளூயிஸ்டி முதலியவைகளையும் தாக்கின. ப்ளூயிஸ்டி என்பது ருமேனியாவிலுள்ள எண்ணெய்த் தளம்.

**சைனா.**—குபங், வுயி இரண்டையும் திரும்பப்பிடித்து கின்ஹ்வாவை நோக்கி நெருங்கியிருக்கின்றனர். வான்சியின் வடகிழக்கில் செய்யப்பட்ட ஜப்பானியத் தாக்குதல் திரும்பியடிக்கப்பட்டது.

**பர்மா.**—மண்டலேக்கு எதிரிலுள்ள நதிப்படகுகளும், மியிட்கியினாவிலுள்ள விமான தளங்களும், யெனாங்யாங்கிலுள்ள ஸ்டோர்களும், தொழிற்சாலைகளும் தாக்கப்பட்டன.

**பலவகைப்பட்டவை.**—1 உதவி பிரதம மந்திரியும், குடியேற்ற நாட்டு மந்திரியுமான மிஸ்டர் C. R. அட்லி நியூபவுன்ட்லாந்திற்கு வந்திருக்கிறார். அங்கிருந்து ஒட்டாவாவிற்குச் செல்லுவார்.

2. வார்ஸாவில் கூட்டமாகக் கொலைசெய்வது ஆரம்பிக்கப்பட்டு 7,000 பேர்கள் அயல்நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டனராம். அங்கே கொலை செய்யப்படுவார்கள். மே மாதம் வரையில் கொலை செய்யப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை

7,00,000. யூதர்கள் கூட்டமாகச் சேர்க்கப்பட்டு யந்திர பீரங்கிகளாலும் விஷ வாயுவினாலும் கொல்லப்படுகின்றனர். ஒரு நாளைக்கு 1,000 பேர்தான் கொலை செய்யமுடியுமாதலால் இன்னும் ஆயிரக்கணக்கான பேர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். செல்ம்னோவில் 50 நாட்களில் 40,000 பேர் விஷ வாயுவால் கொலையுண்டனர். இந்தக் கொடுமையைப்பற்றி பிரிடிஷ் உள்நாட்டு மந்திரி ஹெர்பர்டு மாரிஸன் சொல்லுவதாவது:—'இவ்வருஷ முடிவுக்குள் ஜெர்மனி சமாதானம் செய்து கொள்ளுமென்று சொல்லப்படுகிறது. ஜெர்மன் தலைவர்களெல்லாம் பூரா கொல்லப்பட்டால் ஒழியநேசநாடுகள் ஹிட்லரின் சமாதானத்தை அங்கீகரிக்கா!'

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **7—9—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | 1 விமானம். | 6 விமானங்கள். |
| | விமானச் சண்டைகள்.—டெல்டா பிரதேசத்தில். | | | 3 விமானங்கள். |
| | விரோதிக்குச் சொந்தமான டாங்கிகள், இன்னும் இதர வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—மத்தியதரைக் கடலின் (Mediterranean) கிழக்கு பாகத்தில். | ஒரு எண்ணெய்க் கப்பலும், ஒரு வியாபாரக் கப்பலும் தாக்குண்டன. | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | நார்மன்பி தீவு (Normanby Island). | | | |
| | இரண்டு விரோதி யுத்தக் கப்பல்கள்.—தீவிற்கருகாமையில். | ஒரு காசகாரி சேதமாயிற்று. | | |
| | **டோபிரியாண்டு (Tobriand) தீவு.** | | | |
| | விரோதி யுத்தக் கப்பல்கள்.—தீவிற் கருகாமையில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—கொக்கோடா (Kokoda) பிரதேசம். | | | |
| | கடலோரத்திலிருக்கும் படகுகள்.—புனு (Buna). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **8—9—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—ரைன்லாந்து (Rhineland). | | | |
| | நதியின் முக்கியமான துறைமுகம், முக்கியமான ரயில்வே ஜங்கிஷன்.—பிராங்பர்ட் (Frankfurt). | | | |
| | விரோதி விமான நிலயங்களிலும், ரயில்வே கட்டடங்களிலும் விமான எதிர்ப்புகள்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | 12 விமானங்கள். | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | டோப்ருக் (Tobruk). | | | |
| | அச்சு நாடுகளின் டாங்கிகள், மற்ற மோட்டார் வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.— போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma).** | | | |
| | துறைமுகம்.—ஆக்கியாப் (Akyab). | | | |
| | **தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | கிஸோ (Gizo) தீவு ... | | | 1 விமானம். |
| **9—9—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பேர்லின் (Berlin). | | | |
| | புடாபெஸ்ட் (Budapest). | | | |
| | விரோதித் துணைக்கப்பல் கூட்டம்.—டச்சுக்கடற் (Dutch)கரைக்கருகாமையில். | ஒரு கப்பல் தாக்குண்டது. | | |
| | கோனிக்ஸ்பர்க் (Koneigsburg). | | | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | லாரிகள்.—ஸிடிபரானி-மெர்ஸாமாட்ரு (Sidibarrani–Mersa Matruh) ரஸ்தாவில். | | | |
| | கடற்கரையோரத்திலுள்ள சிறிய கப்பல்கள்.—ஸிடிபரானி (Sidibarrani)க்கு அருகாமையில். | கப்பல்கள் தாக்குண்டன. | | |
| | விமானச் சண்டைகள்.—லிபியா (Libya) | | | 1 விமானம். |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | விமானச் சண்டைகள்.—ஸிஸிலி (Sicily). | | | 2 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—9—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | வேவு பார்த்தல்.—லே (Lae), ஸாலமூவா (Salamaua). | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—கொக்கோடா (Kokoda) போர் முனையில். | | | |
| 10—9—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—டூஸல்டார்ப் (Dussel Dorf). | மிகவும் பலத்த சேதம். | | |
| | மற்ற பட்டணங்கள்.—மேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | 31 விமானங்கள். | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | விரோதிக் கப்பல்கள்.— ஆபிரிக்கக் (Africa) கடற்கரைக்கருகாமையில். | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.— விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma).** | | | |
| | விரோதி ஸப்ளைக் கப்பல் அதன் துணைக் கப்பல்.—ஆக்கியாப் (Akyab) துறைமுகம். | இரண்டு கப்பல்களும் தாக்குண்டன. | 4 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—கொக்கோடா (Kokoda) பிரதேசம். | | | |
| 11—9—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது.—விரோதிக்குச் சொந்தமான கடற்கரையோரங்களில். | | | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில. | அநேக விமானங்கள் சேதமாயின. | | 2 விமானங்கள். |
| | துறைமுகம், கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | பழுது பார்க்குமிடங்கள், இருப்புப்பாதை மாறுமிடங்கள்.—மெர்ஸா மாட்ரு (Mersa Matruh). | | | |
| | **கிரீட் (Crete).** | | | |
| | கப்பல்கள்.—ஸூடா (Suda) விரிகுடா. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச்சண்டைகள்.—போர்முனை முழுவதிலும். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| 11—9—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—நியூகினி (New Guinea).** | | | |
| | விமானக் கூடம்.—பூனு (Buna). | மிகவும் பலத்த சேதம். | 1 விமானம். | |
| | விரோதி ஸ்தானங்கள்.—கொக்கோடா (Kokoda) பிரதேசம். | | | |
| | **நியூ ஐயர்லாந்து (New Ireland).** | | | |
| | விரோதி சுரங்க வெடிபோடுங் கப்பல்.—கேவியங் (Kavieng)குக்கருகாமையில். | | | |
| | **தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific.)** | | | |
| | வேவு பார்த்தல்.—வடமேற்குப் பகுதியில். | | | |
| 12—9—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது.—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில். | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| | **எகிப்து (Egypt).** | | | |
| | விமானமிறங்கும் இடங்கள்.—மெர்ஸா மாட்ரு (Mersa Matruh)வுக்குக் கிழக்கே. | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| | டொப்ருக் (Tobruk.) | | | |
| | விரோதி டாங்கிகள், பீரங்கிகள், வெடி மருந்து கிடங்குகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | இன்னும் அநேகம் சேதமாயின. | | 1 விமானம். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச்சண்டைகள், விமானக் கூடங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—கொக்கோடா (Kokoda) பிரதேசத்தில். | | | |
| | விமானக்கூடம்.—பூனு (Buna). | | | |
| | **சைனு (China).** | | | |
| | குபாங்க் (Kufang). | | | |
| 13—9—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—ப்ரேமன் (Bremen). | | | |
| | மற்ற லக்ஷியங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | வேவு பார்த்தல்.— வடபிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | | |
| | கோனிக்ஸ்பர்க் (Koneigsburg), ஜெர்மனி (Germany). | | | |
| | புச்சாரெஸ்ட் (Bucharest), மற்ற பட்டணங்கள். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**13—9—42.** (ஞாயிற்றுக்கிழமை).—தொடர்ச்சி.

**ருமேனியா (Rumania).**

எண்ணெய் தளங்கள்.—ப்ளோஸ்டி (Plœsti).

**லிபியா (Libya).**

துறைமுகம், கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk).

விமானக் கூடங்கள்.—டாபா (Daba) பிரதேசம்.

விரோதி டாங்கிகள், மற்ற கவசம் பூண்ட வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில்.

விமானச் சண்டைகள்.-யுத்தப்பிரதேச முழுவதிலும்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர் முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு (Far East).**

வேவு பார்த்தல் (Reconnaissance) தென்மேற்கு, வடமேற்குப் பகுதிகளில்.

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**8—9—42.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. — 12 விமானங்கள்.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

நோவோரோஸிஸ்க் (Novorossisk).

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea).**

மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். — 2 விமானங்கள்.

**9—9—42.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

பகலில்.—தேம்ஸ் கழிமுகம் (Thames Estuary).

இரவில்.—மிகவும் குறைவான விமான நடமாட்டம்.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**10—9—42.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமான நடமாட்டமே இல்லை.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

**தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்.**

கூடல் காஞர் (Gudal Canar).

**11—9—42.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்—தெற்கு, தென் கிழக்கு இங்கிலாந்து (England). — சொற்பச் சேதம்.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

படகுகள், சாமான் ஏற்றும் கப்பல்கள்—வால்கா (Volga) நதியில்.

**தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்.**

கூடல் காஞர் (Gudal Canar).

**12—9—42.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமான நடமாட்டமேயில்லை.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

**தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்.**

கூடல் காஞர் (Gudal Canar).

**13—9—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமான நடமாட்டமேயில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

அங்குமிங்கும் விமானத்தாக்குதல்கள்.—மால்டா (Malta).

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

நதியிலுள்ள படகுகள்.—வால்கா (Volga) நதியில்.

**14—9—42.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

பகற்காலத்திலும், இரவிலும் விமான நடமாட்டமேயில்லை.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

ரக்ஷணப் பாதுகாப்புகள்.—ஸ்டாலின்கிராட் (Stalingrad)க்குச் சுற்றிலும்.

**தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்.**

கூடல் காஞர் (Gudal Canar).

# யுத்தக் குறிப்புகள்.

**அரசியலும் யுத்தமும்.** 'உள்நாட்டுப் பிரச்னைகளிலும், சண்டைகளிலும் ஈடுபட்ட அரசியல் வாதிகள் இந்தியாவைக் காக்கமுடியாது; பயிற்சியில்லாத பள்ளி மாணவர்களும், அக்கரையில்லாத விஷமிகளும், காவாலிகளும் காக்கமுடியாது' என்று யுத்தத்தின் மூன்றுவது வருஷ முடிவில் ஜெனரல் வேவல் ஒலிபரப்பினர். இவ்விதம் காவாலிகளுடன் அரசியல் வாதிகளையும், பள்ளி மாணவர்களையும் சேர்த்துச் சொல்லுவது கௌரவமில்லையானாலும், ஆபத்து நெருங்கிய இத்தருணத்தில் இந்தியா தான் எப்படி இந்த யுத்தத்திலிருந்து மிஞ்சுவது என்று யோசித்துக்கொண்டிருக்கும். இத்தருணத்தில் இந்திய ஸர்க்காரை எவ்விதம் அமைப்பதென்று சாவகாசமாகச் சர்ச்சை செய்து நாட்டைக் கொள்ளையிடுவதில் ஈடுபடுவதும், பள்ளி மாணவர்கள் தேசத்தின் வருங்காலத்தைப்பற்றி தீர்மானிக்க தெருவில் திரிவதும் வருந்தத்தக்க விஷயமாகும். வேவல் பேசிய தினத்தன்றே ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் உலகின் வாலிபர்கள் சேவைபுரிய வேண்டுமென்று அறிவித்தார். ஆனால் வரம்பு மீறிய வாலிபர்களுக்கு எடுத்துச் சொல்லவில்லை. ஆனால் ஏற்கனவே சைனியத்தில் சேர்ந்து சண்டைசெய்து வருகிறவர்களைப் பார்த்துத்தான் ரூஸ்வெல்ட் சொன்னது. அப்பேற்பட்டவர்களின்பேரில்தான் தேசத்தின் பாதுகாப்பு பளுவு ஏற்படும்.

சாதாரண காலங்களில் கலகக்காரர்களின் ஏற்பாடுகள் எப்பேற்பட்ட அரசாங்கத்தினாலும் அடக்கப்படும். யுத்த சந்தர்ப்பத்தில் நிச்சயம் முளையிலேயே கிள்ளியெறியப்படும். இருந்தாலும் அதிகச் சேதத்தை விளைவித்திருக்கிறது. போலீஸ்காரர்களைக் கொளுத்துவது, மாஜிஸ்திரேட்டுகளைக் கொலைசெய்வது கனடா விமானிபோன்ற ஒன்றுமறியாதவர்களைக் கல்லெறிந்து கொல்லுவது போன்ற பயங்கரமான சம்பவங்கள் எக்கண்டமும் நிகழ்ந்திருக்கின்றன. போலீஸ்காரர்களைக் கொல்லுவதாலும், கல்லெறிவதாலும் சுயராஜ்யத்தை அடைய முடியுமா? ரயில்வே போக்குவரத்திற்குத் தடைசெய்வதால் உணவு சாமான்கள் சரிவர அனுப்ப முடியாமல் சில இடங்களில் லக்ஷக்கணக்கான பேர்கள் பட்டினி கிடக்கின்றனர்.

காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் கொடுத்த அறிக்கையில் காங்கிரஸ் கட்சிதான் இவ்வித விஷமச் செய்கைகளுக்கு பொறுப்பாளி என்று காண்பித்திருக்கிறார். இந்தியப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு குந்தகம் விளைந்திருக்கிறது. 'ஜப்பானிய ஐந்தாம் படையின் தூண்டுதலால் இக்கலகங்கள் ஏற்பட்டிருக்கிறதாக' பிரதம மந்திரி அறிவித்தார்.

பிரதம மந்திரி அறிக்கையை மீண்டும் விவரித்து மிஸ்டர் அமெரி ஒரு அறிக்கையை விவரித்தார். அதைப்பற்றி விரிவான சர்ச்சையும் செய்யப்பட்டது. அதில் மதராஸ் மாகாண காங்கிரஸ் கமிட்டியால், சில திட்டங்கள் போடப்பட்டு அதை நெடுக பரவவிட்டிருப்பதாக மதராஸ் கவர்ன்மெண்டிற்குத் தகவல் கிடைத்திருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. அதில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ராஜீனமாச் செய்வது, தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்வது, கடைகளை மறியல் செய்வது, ரயில் வண்டிகளை நிறுத்துவது, டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வது, தந்தி, டெலிபோன் கம்பிகளை அறுப்பது முதலியவை காணப்பட்டிருக்கிறதாம். இவையாவும் ரகசிய ஏற்பாடுகளாலும், தூக்காக சில இடங்களில் மாத்திரம் செய்யவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்ததாம். ரயில்வண்டிகள் போக்குவரவு, ரயில்வே ஸ்டேஷன், தினசரி உணவு சேமிக்கப்பட்டிருக்கும் இடம், விமானக்கூடம், பாலங்கள், ரஸ்தாக்கள், ரயில்வே ஸிக்னல் கண்டிரோல் கருவிகள் முதலியவைகள் முக்கியமாக அழிக்கப்படவேண்டுமென்றும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. கிழக்கிந்தியாவை இதர இந்தியாவிலிருந்து பிரித்தும், தொழிற்சாலைக்கு நிலக்கரி முதலியவை போகாமலும் செய்ய திட்டம் காணப்பட்டிருக்கிறது. இதுவரை 3,00 ரயில்வே ஸ்டேஷன்கள் தாக்கப்பட்டன. பீஹாரில் 65 போலீஸ் ஸ்டேஷன்கள் சேதமாக்கப்பட்டு 40 அழிக்கப்பட்டன.



நிலைமை அபிவிருத்தியடைந்து வருகிறது என்று பிரதம மந்திரி சொன்னது தான் கொஞ்சம் நிம்மதியை யளிக்கிறது. 'போக்குவரத்திற்கு செய்த தடைகள் நீங்கி கொள்ளை முதலியன அடக்கப்பட்டு தண்டிக்கப்பட்டு வருகின்றன!

இந்தக் கலவரங்களால் இந்தியச் சிப்பாய்கள் பாதிக்கப்படவில்லையென்றும் பிரதம மந்திரி தெரிவித்திருக்கிறார். இந்த இரண்டு மாத காலத்தில் 1,40,000 பேர்கள் இந்தியச் சைனியத்தில் சேர்ந்திருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**மெடகாஸ்கர்.** விஷியின் கபடச் செய்கையினால் மெடகாஸ்கரில் ராணுவ ஏற்பாடுகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டியதாயிற்று, இது இந்தியாவிற்கும், மத்தியக்கிழக்கிற்கும், போகும் மார்க்கத்தில் இருக்கிறது. சென்ற வருஷம் டீகோஸுயரஸ் என்ற இடத்தை நேசநாடுகள் பிடித்து அச்சுநாட்டு விஷமத்தைத் தடுத்தன. அதோடு போதுமென்று அப்போதைக்கு நினைக்கப்பட்டது. ஆனால் பிற்பட்டு நடந்த சம்பவங்கள் வேறு விதமாக இருக்கின்றன. ஜப்பானிய விமானங்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஜப்பானிய நீர்மூழ்கிகளும் தளங்களைப் பிடித்திருக்கின்றன. டீகோஸுரயஸ்ஸில் ஜப்பானிய நீர்மூழ்கிகளிலிருந்து இறங்கிய இரண்டு ஜப்பானிய உத்தியோகஸ்தர்கள் கைதி செய்யப்பட்டனர். ஜெர்மன் ரகசிய ஏஜென்டுகளும் வந்திருக்கின்றனர். அவர்களுக்கு அங்குள்ள பிரெஞ்சு அரசாங்கம் விஷியின் உத்தரவுப்படி இடம் கொடுத்திருக்கிறது. டர்பான் பேரிலும், விவரம் தெரியாத விமானங்களும் பறந்தன. இங்கிருந்து செல்லும் நீர்மூழ்கிகள் இந்து மஹா சமுத்திரத்தில் நேசதேசக் கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றன.

ஸாமோபாயம் பலிக்காததால் இந்நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. மொஸாம்பிக் கால்வாயில் பக்கமாயுள்ள துறைமுகங்கள் வசப்படுத்தப்படுகின்றன. மெஜுங்கா என்பதில் விமான தளங்கள் அதிகம். இது போர்ச்சுகீஸ் மொஸாம்பிக்கிக் எதிர் பக்கமாக இருக்கிறது. மொராண்டாவா டர்பானிலிருந்து 1,000 மைல் தூரத்தில் இருக்கிறது. அம்பாஜி கமொரோ தீவுகளுக்கு அருகில் இருக்கிறது. இந்த இடங்களில் தான் முக்கிய சண்டைகள் நடந்திருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**மத்தியக்கிழக்கு.** 1940-ம் ௵ கோடைகாலத்தில் தான் அடைந்த ஆரம்ப வெற்றிகளைக்கொண்டு ஜெர்மனி மத்தியக் கிழக்கில் சில சூழ்ச்சிகளைச் செய்தது. அதாவது லிபியா, அபிஸீனியா இங்கிருந்து இதாலி எகிப்தைத் தாக்கும்போது ஜெர்மனி துருக்கி வழியாக பாலஸ்தீனம், இராக்கை நோக்கிச் செல்லவேண்டுமென திட்டம் போடப்பட்டிருந்தது.

இதற்காக 1941 ரஷீத் அலி தூண்டிவிடப்பட்டான். ஸிரியாவில் எதிர்த்து நிற்க விஷிக்குச் சொல்லப்பட்டது. இரானில் பிரிட்ஸ்க்ரோபர் என்பவரின் கீழ் ஐந்தாம் படை ஆரம்பமாயிற்று. ஆனால் இதாலியப் படையெடுப்பும், ஜெர்மன் சூழ்ச்சிகளும் பயன்படவில்லை. அபிஸீனியா மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது. இராக் கலகக்காரன் துரத்தப்பட்டான். துருக்கியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஸிரியா திரும்பப் பிடிக்கப்பட்டது. 2,000 ஜெர்மானியர் இரானிலிருந்து துரத்தப்பட்டனர். எகிப்திற்கு எல்லா உதவியும் கொடுப்பதாக உறுதி கூறப்பட்டது. ஸாடி அரேபியாவிலிருந்து இதாலியச் சங்கம் துரத்தப்பட்டது. இவ்விதமாக மத்தியக்கிழக்கில் சச்சரவுகள் அடக்கப்பட்டன. நேசதேசங்களுடன் கட்புடனும் இருக்கிறது.

சமீபத்தில் வெண்டல் வில்கி அறிவித்தபடி சமீபத்தில் செய்யப்பட்ட ரோமல் முன்னேற்றம் வேவுபார்க்கும் தன்மையோடு மட்டில் இல்லை. அலெக்ஸாண்டிரியா வரை முன்னேறவே நினைக்கிறான். வெறும் வேவுபார்ப்பதாக மட்டில் இருந்தால் எல்லாயந்திரப்படைகளையும் ஈடுபடுத்தியிருக்கமாட்டான்.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் தனது பிரதிநிதியாக வெண்டல் வில்கி மத்தியக் கிழக்கில் சுற்றுபிரயாணம் செய்ததிலிருந்து மத்தியக்கிழக்குப் பாதுகாப்பில்

**ஜப்பானின் தெளிவு நிலைமை.** கரிகி ஷிம்பன் என்ற பத்திரிகையில் சமீபத்தில் பின்வருமாறு காணப்பட்டிருந்தது. ‘ஆசியாவின் இதர பாகங்களில் ஜப்பான் அடைந்த வெற்றிகளால் சைனாவையும் ஜயிக்க முடியாது! ஜப்பான் சைனா பூராவையும் ஜயிக்க முடியாதென்பதை உணர்ந்து வருகிறது. முக்கிய ரஸ்தாக்களையும், இருப்புப் பாதைகளையும், நதி மார்க்கங்களையும் கைப்பற்றி முக்கியத்துவம்வாய்ந்த இடங்களைக்கைப்பற்றவே ஜப்பான் முன்பட்டு வருகிறது. ஸெகியாங்-கியாங்ஸி இருப்புப் பாதையைக் கைப் பற்ற ஜப்பான் சண்டையிட்டதிலிருந்து இது விளங்குகிறது. அதேவிதமாக முடிந்தவரை நெல்வயல்களைக் கைப்பற்றவும் நினைக்கிறது. இதற்காகத்தான் ஹூபேயைத் தாக்கிற்று. டோகியோ பேரில் குண்டுவீச்சு ஏற்பட்டது முதல் ஸெகியாங் விமான தளங்களைக் கைப்பற்றவும் நினைக்கிறது.

இவ்வித லக்ஷியங்களுடன் பர்மா படையெடுப்பை முடித்துக்கொண்டு மே மாதத்தில் சைனா பக்கமாக ஜப்பான் திரும்பிற்று. கியாங்ஸி, செகியாங், பூகீன் பேரில் விமானப் படையெடுப்பு செய்து ஹெனசவ்வில் 30,000 பேரை இறக்கியது. சீக்கிரத்தில் வெற்றி கிடைத்துவிடுமென்றும் நினைத்தது. நான்சாங், பூசல், கின்ஹவா, லான்சி, சுங்ஸீன் முதலியவை ஒன்றபின் ஒன்றாக வசமாயின.

ஆனால் பிடித்த இடங்களை வைத்துக்கொள்ள முடியவில்லை. சீன கொரில்லாப் படைகள் எதிரிகளை விரட்டியடித்து திரும்ப அந்த இடங்களைப் பிடித்தன. பூசவ்வை நோக்கி செய்யப்பட்ட ஜப்பானியத்தாக்குதலும் பலிக்காது போயிற்று. சுஹஷீனையும் சீனர்கள் பிடித்தனர். எதிரிக்குத் தங்கி சண்டைசெய்ய இடம் கிடைக்கவில்லை.

இந்தச் சண்டைகளில் அமெரிக்க விமானப்படை அதிகமாகக் கலந்துகொண்டது. அமெரிக்க சாமான்களின் உதவியாலும், பிரிடனின் பொருள் உதவியாலும், நேசதேச முயற்சியாலும் பர்மாவைத் திரும்பிப் பிடித்து, பர்மா ரஸ்தா திரும்பத் திறக்கப்படுமென்று சைனா நம்பி அதனால் ஊக்கமாகவே சண்டையைச் செய்து வருகிறது.

வி வி வி வி வி வி வி

**லக்ஸம்பர்கின் உணர்ச்சி.** பெல்ஜியத்திற்கும் ஜெர்மனிக்கும் இடையிலுள்ள இப்பிரதேசம் ஜெர்மனியை எதிர்த்துச் சவால் கூறியிருக்கிறது. ஐரோப்பாவில் இதுவே மிகச்சிறியநாடு. சென்ற யுத்தத்திலும் ஜெர்மானியர் இதையே கவர்ந்தனர். ஆனால் பிறகு ஸ்வதந்திரம் பெற்றது. தற்சமயத்தில் ஹிட்லர் அதை அடியோடு அழிக்கும் எண்ணத்துடன் அங்குள்ளவர்களை ஜெர்மன் சைனியத்தில் சேரும்படி உத்தரவிட்டிருக்கிறான். இதை எதிர்த்து பொதுவான வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. அமைப்பில் சிறிதாயினும் இரும்பு உற்பத்தி செய்யும் நாடுகளில் பிரசித்திபெற்றது.

வி வி வி வி வி வி வி

**நீர்மூழ்கி யுத்தம்.** யூ படகுத் தாக்குதல் குறைந்து வருவதாக நாஸிகளே ஒப்புக்கொள்ளுகின்றனர். பெர்லின் லோகல் அன்ஜீகர் என்ற பத்திரிகை யூ படகுகளுக்கும் இதர கப்பல்களுக்கும் சண்டை கடுமையாக இருக்கிறதாகக் கூறுகிறது. நேசதேசக் கப்பல் நஷ்டங்களைப் பற்றி அச்சுநாடுகள் கூறுவதிலிருந்தே இது தெரியும். மே மாதத்தில் 9,24,000 டன்கள், ஜூனில் 8,86,000, ஜூலையில் 8,15,000 டன்கள், ஆகஸ்டில் 8,08,000 டன்கள். இக்கணக்கு மிக அதிகப்படுத்தி சொல்லப்பட்டிருந்தாலும் வரவரக் குறைந்து வருகிற விவரம் தெரிகிறது.

ஜூலையில் 7,90,000 டன் நிறையுள்ள 71 கப்பல்கள் அமெரிக்கத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டன. தினம் 10,000 டன் இரண்டு கப்பலாகிறது. இதைக் கொண்டே ஆகஸ்டு நஷ்டத்தை ஈடுசெய்து விடலாம்.

இதை வைத்துக்கொண்டுதான் A. V. அலெக்ஸாண்டர் ‘ஜூலை, ஆகஸ்டு மாதங்கள் அதிக திருப்திகரமாக இருக்கிறது. ‘யூ’ படகுகளின் தாக்குதலைச் சமாளிக்க புதிய ஏற்பாடு தயாராகி வருகின்றன’ என்றார்.



**யுத்த வரவு செலவு.** யுத்த காலத்தில் பொருளாதார நிலைமை என்பது ராணுவத்தைப் போலவே முக்கியமானதுதான். இத்துறையில் பிரிடிஷார் வரவு செலவை அதிகமாக கட்டுப்படுத்தி சில சாதனங்களைப் பெற்றிருக்கின்றனர். 9உ ஸர் கிங்ஸ்லி வுட், பொக்கிஷ மந்திரி பேசும்போது இம்மூன்று வருஷகாலத்தில் யுத்தத்தினால் 1,00,000 லக்ஷம் பவுன் செலவாகி இருப்பதாகவும், தினசரிச் செலவு 80 லக்ஷம் பவுனிலிருந்து 120 லக்ஷத்திற்கு அதிகரித்திருப்பதாகவும் சொன்னார். இந்த அதிகம் யுத்த சாமான்களின் உற்பத்தியில் அதிகத்தினால் ஏற்பட்டிருக்கிறது. இப்பணத்தில் மூன்றில் இரண்டு பங்கு வரி விகிதங்களாலும் மிச்சம் பிடித்ததாலும் கிடைத்தது. மொத்தத்தில் 40 சதவிகிதம் வரி விகிதத்தினாலும், மிச்சம் பிடித்ததால் 4,20,000 லக்ஷமும் கிடைத்தது. மீண்டும் அதிகமாக ஒவ்வொருவரும் சொந்தச் செலவுகளைக் குறைக்கவேண்டுமென்று அவர் குறிப்பிட்டு, ‘இதுவரை இந்த யுத்தத்தை சரியான முறையில் நடத்தி வந்திருக்கிறோம். வருங்காலத்திலும் இதே விதமாகச் சிக்கனமாக நடந்து கொண்டால் தைரியமாகவே இருக்கலாம்’ என்றார்.

அமெரிக்காவில் பொருளாதாரம் சமாதான முறையிலிருந்து யுத்த கால நிலைமைக்கு மாற்றப்பட்டது. அமெரிக்கர்கள் எப்போதும் ஆடம்பரமான வாழ்க்கையில் ஈடுபட்டதால் தற்சமயத்தில் திடீரென்று அந்த சுகங்களை விடவேண்டியிருக்கிறது. பொருள் நிலைமையை சரிவர நடத்திக்கொள்ள சில சௌகரியங்களையும் விடவேண்டியிருக்கிறது. ஜனாதிபதி ரூஸ்வெல்டு ஏழு அம்சங்களுடன் ஒரு திட்டத்தைக் குறித்திருக்கிறார். அதில் லாபம், சம்பளம், விலைவாசி முதலியவைகளைப் கட்டுப்படுத்தியிருக்கிறார்.

வி வி வி வி வி வி வி

**பரஸ்பரம் குத்தகைக் கடன்.** இது குத்தகைக் கடன் திட்டப்படி அமெரிக்காதான் கொடுத்துக் கொண்டிருப்பதாயும், பிரிடன் திரும்ப ஒரு உதவியும் செய்யவில்லையென்றும் நினைப்போர் 1942ஞு ஆகஸ்டு மாதத்தில் வெளிவந்த ‘அட்லாண்டிக் மாதாந்திரம்’ என்ற பத்திரிகையில் பிரசுரமான இவ் விஷயத்தை கவனிப்பது நலம். ‘அமெரிக்காவிற்குக் கொடுக்கப்பட்ட கப்பல உதவி மிக அதிகம். யூ படகுகளை அழிக்க பிரிடிஷ் கார்வெட் கப்பல்களும், டிராலர் கப்பல்களும் மும்முரமாக இருக்கின்றன. இதற்காகவே பாம்பர்களும் அனுப்பப்பட்டன. அதேவிதமாக அவர்களும் நாசகாரிகளையும் கொடுத்திருக்கின்றனர். பிரிடனிலிருந்து பஸிபிக் பக்கமாக பலூன்களும் வந்திருக்கின்றன. இஞ்ஜினியர்களும் பலர் வந்திருக்கின்றனர். முக்கியமாக ரேடியோ கண்டுபிடிக்கும் கருவி அமெரிக்கா கொடுக்கப்பட்டது. ‘வெற்றிக்கு முன் உள்ள நிலை’ என்ற புஸ்தகத்தில் ஜேம்ஸ் R. பெஸ்டன் என்பவர் எழுதுவதாவது:—‘பிரான்ஸ் விழுந்த சமயத்தில் பிரிடனின் உதவிக்காக பீரங்கிகள் அனுப்பியதையும், பேர்ல் துறைமுகம் சம்பவத்திற்கு பிற்பட்டு பனாமா பாது காப்பிற்காக விமான எதிர்ப்புப் பீரங்கிகளையனுப்பியதையும் அமெரிக்காவிலுள்ளோரில் யாருக்குத்தெரியும்!

வி வி வி வி வி வி வி

**அச்சுநாட்டு பிரசாரம்.** ரகசியமான ரேடியோ நிலயங்களிலிருந்து வெளியிடும் பொய் பிரசாரத்தில் அச்சுநாட்டு கூட்டாளிகள் போட்டிபோட்டுக் கொள்ளுகின்றன. அவர்களுக்குக் கிடைத்த தகவல்களெல்லாம் வேறு நாடுகளிலிருந்து கிடைத்ததாகச் சொல்லப்படுகிறதே தவிர உண்மையில் எல்லாவற்றையும் அவர்களாகத்தான் கட்டி விடுகின்றனர். ‘ஸ்வதந்திர பிரிடிஷ் நிலயங்களென்று சிலவற்றைக் கூறிக்கொண்டு ஜெர்மனி பிரிடனைப்பற்றி நிந்தனையான செய்திகளைப் பரப்புகிறது. இந்தியர்களுக்கு ‘அஸாத் ஹிண்ட்’ நிலயமும் இருக்கிறது. இதாலியர் ‘ஸ்வதந்திர அராபிய நிலயமும்’, ‘ஸ்வதந்திர இந்தியா (ஹிமாலயா) நிலயமும், ஜப்பானியர் ஸைகோன், பாங்காக் நிலயங்களைத் தவிர இதர ரகசிய நிலயங்களையும் உபயோகிக்கின்றன.

இந்தியாவைப்பற்றி பேசும்போது இந்திய அரசாங்கத்தையும், பொதுமக்களையும் தனியே பிரிக்கவும், பாதுகாப்பு முறைகளைக் கொடுக்கவும் பிரசாரம் நடக்கப்

படுகிறது. ஹிம்ஸா முறையில் இறங்குவதற்காகத் தூண்டிவிடப்படுகிறது. இவ்விதமான பிரசாரத்தின் லக்ஷியங்களைத் தெரிந்துகொள்ளுவதுதான் சிலாக்கியம்.

இந்த அச்சுநாட்டு நிலயங்கள் இந்தியாவிற்கு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. டெல்ஹி, லண்டன் முதலிய இடங்களிலிருந்து கிடைக்கும் செய்திகளைத் தவிர வேறு விதமாக இவர்களுக்கு நடக்கும் சம்பவங்களைப்பற்றிய தகவல்கள் கிடைக்காது. இருந்தாலும் அச்சுநாட்டினர் கிடைக்கும் தகவல்களில் இங்குமங்கும் சில மாறுதல்களைச் செய்து பொய்யாக்கி, ஏதோ அச்சுநாட்டினருக்குத்தான் இம்மாதிரிப்பட்ட தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் சொல்லிக்கொண்டு வெளிப்படுத்துகின்றனர். நேசநாடுகள் கொடுக்கும் தகவல்களைக் காட்டிலும் அதிகமாகக் கொடுக்கப்படுவதெல்லாம் அச்சுநாட்டினரின் கல்பனைதான். இவ்வித பிரசாரத்தை நடத்த ஜெர்மனியும் ஜப்பானும் திட்டமான ஏற்பாடுகளைப் போட்டுக்கொண்டிருக்கின்றன. ஜூலை மீ 28உ இதைப் பற்றி பேசும்போது டோகியோ ரேடியோ நான்கிங்கில் பிரசாரப் பயிற்சி மத்தியச் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறிற்று. ஆகஸ்டு மீ 2உ பெர்லினும் 'இவ்விதபேச்சுக்கள் இந்தியர்களாலேயே செய்யப்படுகின்றன' என்றும் கூறிற்று.

வி வி வி வி வி வி வி

**தாபஜ்வரம்.** உண்மையில் ஸயாமின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது. ஒரு சமயத்தில் தனது ஸ்வதந்திரத்தைப்பற்றி பெருமையாகவும், அதை எப்பாடுபட்டாகிலும் காக்க முடியுமென்றும் சொல்லிக்கொண்டது. ஆனால் ஜப்பான் படையெடுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் எதிர்க்கு படிந்தது. ஸ்வதந்திரத்தின் பெயரால் எதிரியைக் கொஞ்ச நாழிகூட எதிர்க்கவில்லை. தற்சமயத்தில் ஜப்பானின் பொதுக்ஷேமப் பிராந்தியத்தில் அடங்கிவிட்டது. ஸயாமின் பருத்தியெல்லாம் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. உணவுக் கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஏராளமாக அரிசி கிடைத்தாலும் சொந்த உபயோகத்திற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. சமீபத்தில் பாங்காக் ரேடியோவில் "இதேவிதமாக நிலைமை மீண்டும் இருந்தால் நமது சாமான்கள் குறைந்துவிடும். பட்டினி கிடந்து இறக்கவேண்டியதுதான். விஷயங்களை விளையாட்டாக விடக்கூடாது. தாய்லாந்திற்கு தாபஜ்வரம் (103°) கண்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகமானால் ஜன்னி பிறந்துவிட வேண்டியதுதான்." என்று சொல்லப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**பஹிரங்கமான பொய்.** ஹிந்துஸ்தானியில் பெர்லினிலிருந்து வரும் செய்தி ஒன்றில் மெக்காவிற்கு யாத்திரை செய்ய முஸ்லீம்களுக்கு போக்குவரத்து வசதியை இந்தியா கவர்ன்மெண்டார் அளிக்க மறுத்ததாகவும் சொல்லப்பட்டது. ஆனால் இது பொய்யான தகவல் என்று பின்கண்ட கவர்ன்மெண்டு அறிக்கையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். "இராக்கிற்கோ, இராக்கின் வழியாகவோ செல்ல யாத்ரீகர்களுக்கு ஒரு தடையும் இல்லை. ஆனால் சென்ற வருஷம் ஹஸாஸ்ஸுக்கு இராக்கின் வழியாக செல்லும் ரஸ்தா அதிக சிரமமாயிருந்ததால் இவ்வருஷம் வேறு ரஸ்தாவை உபயோகித்துக் கொள்ளலாம்".

வி வி வி வி வி வி வி

**இந்திய குடை விமானப் படையும், விமானிகளும்.** இந்தியாவில் குடை விமானப்படைத் தொழிற்சாலைகள் ஏற்பட்டு விமானிகளும் தயாரிக்கப்படுகின்றனர். பிரிடிஷ் குடை விமானப் படையைத் தயாரித்த லெஸ்லி இர்வின் என்பவர் இந்தியாவிற்கு வந்து இந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளார். உபயோகத்திற்கு முந்தி ஒவ்வொரு குடை விமானமும் பரிசீலனை செய்யப்படுகிறது. பிரிடிஷ் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவதைப் போலவே இந்தியக் குடை விமானங்களும் இருக்கின்றன.

அதே சமயத்தில் விமானிகளுக்கும் பயிர்ச்சியளிக்கப்படுகிறது.



# ஸைப்பிரஸின் தற்காப்பு ஸ்தானங்கள்.

## அச்சுநாடுகளின் வெற்றிக்குத் தடையாக இருக்கும் கோட்டை.

("லண்டன் டைம்ஸ்" பத்திரிகை.)

நார்போக் (Norfolk), ஸபோக் (Suffolk) இவ்விரண்டு பிரதேசங்களும் கொண்டது ஸைப்ரஸ் பிரதேசத்தின் விஸ்தீர்ணம். அச்சுநாடுகள் ஆசியாவைப் படையெடுக்க விடாமல் தடுப்பதற்கு ஏதுகரமாக ஸைப்ரஸ், முன்னேற்றமடைந்த பிரிடிஷ் எல்லைப்புற ஸ்தானமாக இருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் யுத்தம் ஏற்பட்டால், ஸைப்ரஸ் எதிரியைத் தாக்க முன்னணியில் நிற்கும்.

துருக்கியர்கள் தாங்கள் நடுநிலைமையை நிலைத்திருக்கச் செய்யலாமென்று உறுதிகொண்டிருக்கிறார்கள் என்று நம்பிக்கையான செய்திகளிலிருந்து தெரிகிறது. அப்படியானால் மத்தியக் கிழக்கில் பிரிடிஷ் ஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டுமென்று ஜெர்மானியருக்கு எண்ணமிருந்தால் அவர்கள் துருக்கியை ஒதுக்கிவிட்டு நேராக ஸிரியாவுக்குச் செல்ல வேண்டி நேரிடும். அப்பொழுது ஸைப்ரஸுக்கு முதலில் செல்ல வேண்டும். இதற்கு ஆகாய மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் கிரீட்டில் நடந்தது போல் படையெடுப்புச் செய்யவேண்டியது அவசியம். ஆனால் அது கடுமையான பிரச்னையென்று ஸைப்ரஸ் பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாம். கிரீட் படையெடுப்பும்பொழுது ஜெர்மானியர் துருப்பு ஏற்றிக் கப்பல்களுக்கும், பாம்பர்களுக்கும் பைடர் விமானப் பாதுகாப்புடன் அனுப்ப முடிந்தது. எதிரிக்கு பைடர் விமானப்படை இல்லாமலிருந்தது. அத்தகைய சாதகம் இப்பொழுது தற்காப்பு செய்யும் ஸைப்ரஸுக்கு ஏற்படும்.

### உதவிப்படை சமீபத்திலிருக்கிறது.

அச்சுநாடுகளுக்குச் சொந்தமான ஆகாய விமான நிலயங்களில் அருகாமையிலிருக்கும் காஸ்டலோரிஸோ என்ற நிலயத்திற்கு 250 மைலுக்கப்பாலும், ரோட்ஸிலிருந்து 300 மைல் தூரத்திலும் ஸைப்ரஸ் இருக்கிறது. இத்தீவை நோக்கி ஜெர்மன் விமானப்படை வந்தால் ஸைப்ரஸ் விமான நிலயங்களிலிருந்து தாக்கும் பிரிடிஷ் பைடர் விமானங்கள் அவற்றை எதிர்க்கும். உதவிப்படையோ 150 மைல்களுக்கப்பால் ஸிரியாவிலிருக்கிறது. கிரீட்டில் அதிக சேதம் விளைவித்த ஜெர்மன் பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் சொற்ப வெடிகுண்டுகளைத் தூக்கிக்கொண்டு தான் ஸைப்ரஸை அடையமுடியும். அப்படி அவர்கள் வந்தாலும் கிரீட்டில் லக்ஷியங்களைத் தேடிப்பார்த்து வெடிகுண்டுகளை வீசியது போலில்லாமல் முந்தியே தீர்மானிக்கப்பட்ட லக்ஷியத்தை நோக்கி வந்தவுடனே வெடிகுண்டை வீசிவிட்டு திரும்பவேண்டியதாக இருக்கும்.

இரண்டாவதாக ஒரு வருஷத்திற்கு முன் கிரீட்டைத் தாக்கின சமயம் அதைப் போலில்லாமல் ஸைப்ரஸ் தாக்குதலை எதிர்க்க இப்பொழுது பன்மடங்கு தயாராக இருக்கிறது. கிரீட் சம்பவத்திலிருந்து கிடைத்த அவகாசத்தினாலும், டொப்ருக் தாக்குதலில் கிடைத்த அனுபவத்தினாலும், அதைக்காட்டிலும் சிறிய இடத்தை ஒரே சமயத்தில் ஆகாய மார்க்கமாவும், தரை மார்க்கமாகவும் தாக்கினாலும் கூட அதைப் பாதுகாக்க அங்குள்ள கோட்டைப் படைகள் நன்கு பயிற்சி பெற்றிருக்கின்றன. இந்தத் தீவைப் பார்ப்பவர்களுக்கு தற்காப்பு வேலைகள் என்ன செய்யப்பட்டிருக்கிறதென்று முதலெடுப்பில் தெரியாது. முதன் முதலாகத் தோன்றக்கூடியது என்னவென்றால், வெட்ட வெளியான ஸ்தலத்தில் எதிரி விமானம் இறங்காமல் தடுப்பதற்கு சில தடைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது தான் கண்ணுக்குப் புலப்படும். இந்தத் தடைகள் எங்குமிருக்கின்றன. ஆனால் முள்கம்பி, பீரங்கி ஸ்தானங்கள் இருப்பதைக் கூர்மையாகக் கவனித்தால் தான் தெரியும். ஆனால் அவையெல்லாம் செவ்வையாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இத்தகைய பாதுகாப்பு இருப்பது தெரியாமல், பாதுகாக்கப்பட்டிருக்கும் இடத்திற்குள் 'ஏமாந்து செல்லக்கூடிய விதமாக வெளித்தோற்றம் இருக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் தீவைப் பாதுகாத்து வரும் துருப்புகள் ஒரு பகுதி கிரேட் பிரிடனிலிருந்தும், மற்றொரு பகுதி இந்தியாவிலிருந்தும், ஸைப்ரஸ் தீவிலுள்ள மற்ற பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

ஸைப்ரஸ் கிராம வாழ்க்கையின் சுகம் எப்படி என்பதைக் காட்டக்கூடிய விதமாக நடந்து வந்த தென்னாட்டுப்படைப் பகுதி ஒன்றை நான் பார்த்தேன். அவர்களைப் பார்க்கையில் ஒருவேலையுமில்லாமல் அங்கு இருக்கிறார்களாவென்று எனக்கு ஆச்சர்யமுண்டாயிற்று.

### கிராம வாஸிகள் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்.

சுற்றுப்பக்கத்தில் இருப்பவைகள் துருப்புகளுக்குச் சந்தோஷம் உண்டாக்கி வருகின்றன. வசந்தகாலத்தில் ஸைப்ரஸ் சொர்க்கம் போலக் காணப்படும். நிலங்களில் காட்டுப் புஷ்பங்கள் நிறைந்து ரம்மியமாக இருக்கும். அதன் பள்ளத்தாக்குகளில் பச்சைப் பசுமையாகப் பயிர் பாய்விரித்தாற் போலிருக்கும். அதன் ஜனத்தொகையில் 5-ல் 1 பாகம் முஸ்லிம்கள். இந்தியாவில் வந்திருக்கும் முஸ்லிம் படைப் பகுதிகள் அந்த மதக்காரர்களுடன் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்ற வருஷத்தில் ஸைப்ரஸில் பெருத்த வேலை நடந்திருக்கிறது. தற்காப்பு ஸாதனங்கள் தேனடைபோல் பூமிக்குள் கட்டப்பட்டிருக்கின்றன. விமானங்கள் இறங்குவதற்கு அநேக புதிய இடவசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. போக்குவரத்தில் ஏராளமாக அபிவிருத்தி உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான கிராம வாஸிகளுக்கு இதனால் வேலை கிடைத்திருக்கிறது. சுரங்க வேலைகள் மூட்டப்பட்டதினாலும், வியாபார மந்தத்தினாலும் உண்டான சிரமம் இதனால் நிவர்த்தியாயிற்று. மால்டாவின் வீரத்தையும், திடத்தையும், உதாரணமாக வைத்துக்கொண்டு ஸைப்ரஸும், யுத்தம் அந்தப்பக்கம் வந்தால் அதற்குத் தயாராக, உறுதியான நம்பிக்கையுடனும், வெற்றிகிடைக்குமென்ற தீர்மானத்துடனும் சம்வங்களை எதிர்பார்த்திருக்கிறது.

---

# யுத்த காலத்தில் பிரிடன் நடந்துகொள்ளுவது.

---

(பில்லிஸ் பென்டிலி எழுதியது).

(மதராஸ் வார்ரவியூவிலிருந்து எடுக்கப்பட்டது).

இதுவரை யுத்தமென்பது கூலிக்குச் சைனியங்களைப் பிடித்துப் போராங்கத்தில் மாத்திரம் நடைபெற்றதுபோக எல்லாப் பொதுமக்களுக்கும் பொறுப்புள்ளதாக ஆகிவிட்டது. நான் பிரிடிஷ் தீவிலேயே வசித்து வருபவர்களில் ஒருவனாகயிருந்துகொண்டு பிரகிருத யுத்தத்தில் முன்னணிக்கோட்டையாக இருந்து வரும் பிரிடனின் மூன்று வருஷ யுத்தத்தைப்பற்றி எனது அனுபவத்தைச் சொல்லுகிறேன்.

யுத்தத்தில் ஈடுபடுவதுதான் நமது கடமையென்று அறிந்து 1939-ம் ஸு செப்டம்பரில் நாம் யுத்தத்தில் இறங்கினோம். யுத்தத்தில் ஈடுபடும் முன் நம்மை நேராடி எதிரிகள் தாக்கவில்லையானாலும், அப்படி ஈடுபடாமலிருந்திருந்தால் ஹிட்லரின் கபட திட்டங்களுக்கு உட்பட்டிருக்கவேண்டியிருக்கும். ஆனால் அவனுடைய திட்டங்களுக்கு உட்படாமலிருப்பதின் பொருட்டு யுத்தத்தில் இறங்கினோம்.

ஹிட்லர் நம்மைத் தாக்காமலிருக்கும்போதே முதலில் பிரிடிஷ் சாம்ராஜ்யம், யுத்தத்திலீடுபட்டு அது முதல் சண்டை நடத்தி வருகிறது.

அட்லாண்டிக், பஸிபிக், மத்தியதரைக்கடல், வடகடல், ஆர்க்டிக் கடல் பர்ஸியன், அராபிய குடாக்கள், இந்து மகாசமுத்திரம் இங்கெல்லாம் பிரிடிஷ் கப்பற்படை சண்டைகளைச் செய்து வருகிறது, 4,50,00,000 பிரிடிஷ் மக்களுக்கு உணவுகளும், மால்டாவிற்கு ஆகாரம், யுத்த சாமான்களும், ஆபிரிக்காவைச் சுற்றி



மத்தியக்கிழக்கிற்குத் துருப்புகளும், கனடா, அமெரிக்கா இங்கிருந்து பிரிடனுக்குத் துருப்புகளும், பயங்கரமானதும், பனி உரைந்ததுமான கடல் மார்க்கங்களின் வழியாக ருஷ்யாவிற்கு, ஆயுதம், விமானங்கள், டாங்கிகள், துப்பாக்கிகள், ரயில்வே இன்ஜின்கள், ரயில் வண்டிகள், துணிகள், பூட்ஸ்கள் முதலியவைகளும் அனுப்பப்படுகின்றன. இவ்வளவும் பிரிடிஷ் கப்பல்களால்தான் எடுத்துச் செல்லப்படுகின்றன.

தற்சமயத்தில் 600 பிரிடிஷ் கப்பற்படைக் கப்பல்கள் கடல்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. 62,50,000 டன் அச்சுநாட்டுக் கப்பல்கள் 1941-ம் ஸு ஜூன் மாதத்திற்குள் மூழ்கடிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டுமிருக்கின்றன. துணைக்கப்பல் கூட்டங்களில் வியாபாரக் கப்பல்களும், செல்லுகின்றன. அச்சுநாட்டு நீர்மூழ்கிகள், சுரங்க வெடிகள், விமானங்கள் இவைகளுக்கிடையில் வியாபாரக் கப்பல்கள் செல்லுவதென்பது சாதாரணமான காரியமல்ல. இருந்தாலும் சென்றுகொண்டுதானிருக்கின்றன.

### பன்னிரண்டாம் போர்முனை.

தரைப்படையையும், பிரிடன் தயாரித்துக்கொண்டுதானிருக்கின்றது. இரண்டாம் போர்முனையை ஏற்படுத்த வேண்டுமென்பதில் நானும் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டுதானிருக்கிறேன். ஆனால் அதை பன்னிரண்டாவது போர்முனை என்று சொல்லுவது பொருத்தமாகும். பிரிடிஷ் சைனியத்தை விருத்தி பண்ணுவதற்காக சாம்ராஜ்யத்தின் பலபாகங்களிலிருந்து கிடைத்த உதவி மிக அசாத்தியமானது.

அதே விதமாக பிரிடிஷ் விமானப்படையும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. நமது விமானங்களும் ஏராளமாகக் கட்டப்படுகின்றன. எதிரி பிரிடனைத் தாக்குவதற்கு அனுப்பிய விமானங்களைக் காட்டிலும் அதிகமாகவே எதிரி நாட்டில் படையெடுப்புச் செய்வதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. எதிரி நாட்டில் 1,000 விமானங்களைக்கொண்டு தாக்கியதும், ஹாம்பர்கில் 35 நிமிஷத்திற்குள் 1,75,000 தீக்கள் மூட்டுவதற்கு லாயக்கான குண்டுகளை வீசியதும் நமது விமானபலத்தைக் காண்பிக்கின்றன. 1942-ம் ஸு ஜூலை முடிவோடு 7,892 தாக்குதல்கள் செய்யப்பட்டுள்ளன.

1942-ம் ஸு ஜூனில் பிரிடன் மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிகமாகவே யுத்த சாமான்களை உற்பத்தி செய்தது. பெரிய பீரங்கிக்குண்டுகள் வருஷத்திற்கு 2,50,00,000 (rounds) வீதமும், சிறிய குண்டுகள் 2,00,00,00,000 (rounds) வீதமும் உற்பத்தி செய்யப்பட்டன. நமது தொழிற்சாலைகள் இரண்டு மணிக்கு ஒரு விமானம் வீதம் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1940-ம் ஸு செப்டம்பரில் ஜெர்மன் லுப்ட்வாபியைத் தோற்கடித்ததற்கு பிரிடிஷ் விமானிகளின் சாமர்த்தியத்தைப்போல் நமது விமானங்களின் சக்தியும் காரணமாக இருந்தன. கப்பல்கள், விமானங்கள், டாங்கிகள், சுரங்கவெடிகள், குண்டுகள் முதலியவைகள் குறைந்த தொழிலாளிகளை ஈடுபடுத்தி, வெகு அதிகமாக உண்டுபண்ணப்பட்டன. பொதுமக்கள் யாவரும் சைனியத்தில் சேர்ந்து கொண்டனர்.

### சிரம நிலைமை.

இவ்விதமாக மூன்று வருஷங்களில் நாளுக்கு நாள் அபிவிருத்தி காணப்பட்டது. ஆனால் இவ்விதம் கழிப்பதென்பது சுலபமான காரியமல்ல. அதிக நேரம் வேலை செய்யவேண்டும், அதிகமான ஆசைகளைக் கொள்ள முடியாது. முதலில் வேலையின் மாதிரி மட்டுப்படாது. இதோடு அதிகமான வரி விகிதங்களுக்கும் பொதுஜனங்கள் உட்படுத்தப்பட்டனர். அதுவும் ஒருவேடிக்கையான விஷயமல்ல. வருஷத்திற்கு 500 பவுன் வருமானமுள்ள ஒருவன் வருமானவரி 156 பவுன் கட்டிவிடுகிறான். 1,000 பவுன் வருமானமுள்ளவன் 381 பவுன் வரிகளாகச் செலுத்துகிறான். அதோடு மட்டுமில்லை, தேயிலை, பீர், சிகரெட், முதலியவைகளின் பேரிலும், இதர சுகவாழ்க்கைக்குரிய சாமான்களின் பேரிலும், வரிகள் போடப்பட்டிருக்கின்றது. சாதாரணமாக ஒரு ஸ்திரீ

அணியும் தலைப்பாகைக்கு வியாபார வரி அதன் விலையின் மூன்றிலிரண்டுபங்கு கொடுக்கப்படவேண்டும். ஆகவே பிரிடனில் வரி விகிதங்கள் மிகஅதிகம்.

உணவுச் சீட்டுப்பெற்று அதன்படி ஆகாரம் பெறுவதென்பதும் விளையாட்டான விஷயமல்ல. இந்த ஏற்பாடு பிரிடனில் நன்ருக வேலைசெய்கிறது. ஸ்திரீகளுக்கு இது ஒரு தொந்தரவுதான். இவைகளோடு யுத்தசேவை விளக்கணைப்பு, விமானப்படையெடுப்பு, நெருப்பணைக்கும் கோஷ்டியில் சேருவது, தேசப் பாதுகாப்பு, தினம் அதிகநேரம் வேலை, ரஜா நாட்களில்லாமை, உணவு, உடுப்பு முதலியவைகளுக்குக் கட்டுப்பாடு வியாபாரத்தில் கவனம், பெட்ரோல் கட்டுப்பாடு, வரிவிகிதம், யுத்த நிதிக்குக் கொடுப்பது, மிச்சம் பிடிப்பது இவ்வளவும் எதிரி 21 மைல் தூரத்திலிருந்துகொண்டிருக்கும்போது செய்யப்படுவதென்ருல் விளையாட்டே ஆகாது.

### மற்ருெரு போர்முனை தேவை.

இவ்வளவு சிரமங்களிருந்தும் நாம் ஓய்வடையவில்லை. நமது தீர்மானம் தளரவில்லை. "11 இடங்களில் சண்டை நடப்பதே போதும், இனிமேல் போர்முனைகளைக் குறைக்க வேண்டுமென்று" ஒருவர்கூடச் சொல்லவில்லை.

அதற்கு மாருக சாமான்களின் உற்பத்தி அதிகரிப்பதால் மற்ருெரு போர்முனை தேவையென்று சொல்லப்படுகிறது. பொதுக்கூட்டம் கூட்டப்படுகிறது. அங்கும் மோட்டார்களிலும், ரயில்வண்டிகளிலும் இரண்டாம் போர்முனையைப் பற்றி அதிகம் சர்ச்சை செய்யப்படும். அதாவது எவ்வளவு சீக்கிரம் ஐரோப்பாவில் படையெடுப்பு நேருமென்பதுதான் பிரச்னை. ஒவ்வொரு பிரிடிஷ் மக்களும், தான் அதிகம் உழைக்கத் தயாராக இருப்பதாயும், சண்டை மீண்டும் செய்ய வேண்டுமென்றும் சொல்லுகிருன்.

இவ்வளவையும் சாத்தியமாகச் செய்கிறவர்கள் யார்? தனியாக ஒரு வருஷ காலம் போர் முன்னணியில் இருந்து சமாளித்து வந்தது யார்? கப்பற்படை, நிலப்படை விமானப்படை முதலியவைகளில் உலகெங்கும் ஈடுபட்டிருப்பது யார்? பலவிதமான பாதுகாப்பு படைகளிலுள்ளோரைப் பின்னிருந்து உத்ஸாகப்படுத்துவது யார்? எதிரியின் படையெடுப்பைத் தவிர்ப்பதற்கு லக்ஷக் கணக்காக மூன்வந்திருப்பதும் யார்? எதிரி குண்டுகள் விழுந்து தீக்கள் மூண்டதும் ஆபத்திலுள்ளோரை மீட்டி, நெருப்பை அணைத்து, மறுபடி தங்களுடைய அலுவல்களை கவனிப்பது யார்? கப்பல்கள், விமானங்கள் டாங்கிகள், சுரங்க வெடிகள், குண்டுகள், பீரங்கிகளைத் தயாரிப்பதும், உபரியாக 60,00,000 ஏக்கரா நிலங்களை சாகுபடி செய்வதும் யார்?

எல்லாம் பிரிடிஷ் பொதுமக்களே செய்கின்றனர். வயது முதிர்ந்தவர்கள், இளைஞர்கள், ஸ்திரீகள், புருஷர்கள் யாவரும் ஈடுபட்டிருக்கின்றனர், மூன்றில் இரண்டு பங்கு புருஷர்களும், 14 முதல் 65 வயதுக்குள் உள்ள ஸ்திரீகளும், சதாகாலமும் ஈடுபட்டிருக்கின்றனர், மற்றவர்கள் குழந்தைகளை கவனித்து வருவதால் ஓய்வு காலங்களில் தொழிற்சாலை வேலைகளை கவனிக்கின்றனர். யுத்தத்திற்காக மிச்சம் பிடிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு சிறுவர்கள் செல்லுகின்றனர். ஸ்திரீகள் குடை விமானங்களைத் தயாரிப்பது, விமான எதிர்ப்பு பீரங்கிகளை உபயோகிப்பது, கனமான சாமான்களைத் தூக்க உதவும் யந்திரங்களை உபயோகிப்பது, கப்பல்களில ஆணிகளைசடைவது, விமான இறக்கைகளைச் சேர்ப்பது, பலவித கருவிகளைப் பரீக்ஷை பார்ப்பது முதலியவைகளில் ஸ்திரீகள் ஈடுபட்டிருக்கின்றனர். போர்ட்டர்கள், கண்டக்டர்கள், குமாஸ்தாக்கள், சைனிய சமையல்வேலை, ரேடியோ இருக்கும் இடத்தைக்கண்டு பிடிப்பது, மின்சார சம்பந்தமான பத்தவைப்பு வேலை முதலியவைகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

தினசரி இம்மாதிரியான வேலைகள் முடிந்ததும் நெருப்பு அணைக்கும் கோஷ்டி, பொதுஜனப் பாதுகாப்பு கோஷ்டி, சமையல், ரத்தம் எடுத்து சைனியங்களுக்கு அனுப்புவது, முதலியவைகளில் ஈடுபடுகிருர்கள். இவர்கள் யாவரும் சாதாரண பொதுஜனங்கள்தான்.



## யாருடன் நாம் போரிடுகிருேம்?

(அப்ஸர்வர் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

நாஸிக் கொள்கையுடன் நாம் போரிடுகிருேமா அல்லது ஜெர்மனியுடன் சண்டை செய்கிருேமா? இந்தக் கேள்விக்கு ஒருவரும் நேரான பதில் சொல்லக் கூடவில்லை. யுத்தம் ரொம்பக் கடுமையாகவும், மூன்று வருஷகாலமாக நடந்து வருகிறது. இதற்குப்பிறகும் கூட இவ்யுத்தத்தை நாம் எதற்காக, யாருடன் நடத்தி வருகிருேம் என்று அரசியல் வாதிகளில் இருவகுப்பினர் வெகு மும்மரமாக வாதித்து வருகிருர்கள்.

ஹிட்லரின் ஆதிக்கம்தான் நமக்கு விரோதமாக இருக்கிறதென்றும், ஜெர்மன் மக்களிடம் நமக்கு விரோதம் கிடையாதென்றும் இம்மாதிரி யுத்தம் ஆரம்பத்திலிருந்தே ஒரு வகுப்பினர் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு வருகிருர்கள். இப்பொழுது அது உண்மையில்லையென்று தோன்றுகிறது. நாஸிகளுக்கும், ஜெர்மன் ஜனநாயகக் கொள்கை உள்ளவர்களுக்கும் ஜெர்மனியில் உள்ளூராக நடந்துவரும் சண்டையில் நாம் தலையிடுவதற்காக இந்த யுத்தம் செய்கிருேம் என்ற அபிப்பிராயம் மேலோங்கிவருவது உண்மையே. ஆனால் ஜெர்மனியில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டதென்று சொல்வதற்கேயில்லை. அப்படி ஒன்று இருந்ததாக வைத்துக்கொண்டாலும் அது 1933-ம் வருஷத்துடனேயே முடிவுற்றது. இதற்குப் பிற்பட்டு 10 வருஷம் கிரமித்து நாம் தலையிட்டதாகச் சொல்லுவது காலப்பிற்பாடே. 1930-ம் வருஷமுதல் 1940-ம் வருஷத்திற்குள் ஆரம்பகாலத்தில் ஜெர்மன் மக்கள் தங்கள் இஷ்டத்திற்கு மாருக சண்டையில் இழுத்துவிடப்பட்டவர்கள் போல் அவ்வளவு அதிருப்தியுடன் போர்புரியவில்லை. அவர்களில் நாஸிகளும் சரி, மற்றவர்களும் சரி, ஒரே மனோபாவத்துடன் வெகு தீரமாகச் சண்டை புரிந்தனர். இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் தான் முதன் முதலாக ஜனங்களுக்குள் அதிருப்திக்கும், அரசாங்கத்திற்கு எதிராக நடக்கும் உணர்ச்சிக்கும் அறிகுறிகள் தோன்றுகின்றன. இதற்குக் காரணம் ஜெர்மானியாரை யுத்தத்தில் ஈடுபடுத்தியது அல்ல. ஆனால் இந்த யுத்தத்தில் அவர்களுக்குத் தோல்வி நேரிடும் நிலைமைக்குக்கொண்டுவரப்பட்டிருக்கிருர்கள் என்ற உணர்ச்சியினுல்தான் அவ்வாறு நடந்துகொள்ளுகிருர்கள். நாஸி ஆட்சியைத் தொலைப்பதற்கு அநேக ஜெர்மானியர் தயாராக இருக்கின்றனர். இந்த நாஸிக் கொள்கைக்கு எதிராக இருக்கும் ஜெர்மானியர் பெரும்பான்மையோர் கூட ஹிட்லரைப் புறக்கணித்துவிட்டு தோல்வியடைவதைக் காட்டிலும், ஹிட்லரின் கீழ் ஜயம் பெறுவதையே மேலாகக் கருதுவார்கள். நாம் விரும்பினுலும், விரும்பாவிட்டாலும் சில லக்ஷக்கணக்கான நாஸிகளுடன் மட்டும் போர்புரிவதாக எண்ணிவிடக்கூடாது. 800 லக்ஷம் பேர்கொண்ட ஜெர்மன் தேசத்தார் பூராவுடனும் நாம் சண்டை செய்வதாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

### ஜெர்மானியருடன் போர்.

இந்த இரண்டு கொள்கைகளின் வித்தியாசம் இதுதான். நாஸிக்கு எதிராக நமக்கிருக்கும் கொள்கை எப்படியென்று வியக்தமாகத் தெரிகிறது. போரிடுவதற்குக் காரணம் தெரிந்துகொண்டிருக்கும் ஜெர்மனிக்கு விரோதமாக நாம் ஏன் எதிர்த்துப் போராட வேண்டும். நாஸிகளுடன் எதிர்த்துப் போராடுவதற்கும், அவர்களை நாம் என்னசெய்ய நினைத்திருக்கிருேமென்றும் நமக்கு நன்ருய்த் தெரியும். ஆனால் ஜெர்மனியின் பேரில் நமக்கு வெறுப்பு கிடையாது. நாஸிகளை வேரோடு அழிப்பதற்கு நாம் விரும்புகிருேம். இவ்விதம் நம்மால் செய்யக்கூடும். மிருகத்தனமானதும், புராதனமானதுமான நாஸிக் கொள்கைக்கு மாருக பொதுமக்களின் பிரச்னையைத் தீர்க்க வழி தெரிந்தவுடன் நாம் இதை அடைவோம். நாம் ஜெர்மன் மக்களை அடியோடு அழிப்பதற்கு எண்ணவில்லை. அவ்விதம் செய்யவும் முடியாது. அதுவும் சிலாக்கியமானதல்ல. வெற்றிக்குப் பிறகு நாம் ஜெர்மனியுடன் சாஸ்வதமாகவும், உண்மையான சமாதானமொன்றை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் 'வான்ஸிடாரிஸ்ட்' (Vansittarfist) வகுப்பினரின் கொள்கை மாறுபட்டிருக்கிறது. 'வான்ஸிடாரிஸ்ட் வகுப்பினர் உண்மையில் வான்ஸிடார் பிரபுவின் கொள்கைளைப் பின்பற்றியிருக்கின்றனராவென்று

சொல்லுவது துர்லபம். நாஸிகளுடன் மட்டுமில்லாமல் ஜெர்மானியருடனும் நாம் எதிர்த்துப் போராடிவருகிறோம் என்று அந்த வகுப்பினர் சொல்லிவருவது சரிதான். ஆனால் ஜெர்மானியர் யாவரும் நாஸிகள்தான் என்றும், அவர்களுடன் அதற்காகச் சண்டை செய்கிறோம் என்றும், சொல்லுவதுதான் பிசகு. இம்மாதிரி ஜெர்மானியாரைப் பொதுவாக நாஸிகளென்று கூறிவிடமுடியாது. ஜெர்மானியரின் அநேகம் பேர் நாஸிகளல்லவென்று ஹிட்லர் சமீபத்தில் பேசியதிலிருந்தே வெளியாகிறது. இருந்தபோதிலும் அவர்களுக்கு, அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடனும், நம்முடனும் அவர்கள் ஒரேமாதிரியாகத்தான் சண்டைசெய்து வருகிறார்கள்.

### ஐரோப்பா அபாயகரமான நிலைமையில் இருக்கிறது.

இந்த வகுப்பினர் யுத்தத்தின் மாறுபாடான இரண்டு தன்மைகளையும் குழப்பிப் பார்க்கிறார்கள். மற்றொரு வகுப்பினரோ ஒரு தன்மையை அடியோடு விட்டுவிட்டுப் பார்க்கிறார்கள். சமூகம், மதம் சம்பந்தமாகப் பார்க்குமிடத்தில், இவ்யுத்தம் முக்கியமாக நாஸிகளை எதிர்த்து நடக்கும் போர்தான். இவ்யுத்தம் மனிதனின் கௌரவம், உரிமை, கடவுள் வழிபாட்டில் ஸ்வதந்திரம் முதலியவைகளைக் காப்பாற்ற நடைபெறுவதாயிருந்தால் ஜெர்மானியரின் பெரும்பாகம் நம் கட்சியில் சேர்ந்துகொள்வார்கள். ஆனால் அரசாங்க அபிவிருத்தி சம்பந்தமாகவும் யுத்தம் நடத்தப்படுகிறது. அப்பொழுது ஜெர்மானியரோ, நாஸிகளோ ஐரோப்பாவை ஆக்கிரமிக்கக்கூடாதென்ற ஒரு முக்கிய நோக்கம்தான் இருக்கிறது. அதனால்தான் ஒவ்வொரு ஜெர்மானியனையும் கடைசிவரையில் ஒழிப்பதற்குப் போராடிவருகிறோம். ஜெர்மானியர் ஐரோப்பாவை ஆக்கிரமிக்க எத்தனிப்பதினால் மட்டில் அவர்களைக் கொலைசெய்ய வேண்டுமென்றாவது, அல்லது அவமானமடைந்த இழிகுலத்தைச் சேர்ந்தவர்களென்றாவது கூறுவது முடியாது. அதனால் யுத்தம் முடிந்தபிறகு நம்மிடம் 30 வருஷகாலம் கல்வி அனுபவம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. இதற்குமுன் பிரெஞ்சுக்காரர்கள், ஸ்வீடன் தேசத்தினர், ஸ்பெயின் தேசத்தினர் இவர்கள் ஐரோப்பாவைத் தங்கள் வசமாக்கிக்கொள்ள பேராசையடைந்த பொழுதும், நாம் அவர்களுக்கு மறுபடி கல்வி போதிக்கவில்லை. ஜெர்மானியர் ஐரோப்பாவில் தலைமைவகிக்க பலதடவை முயன்றனர். அவர்களை முன்னேற விடாமல் தடுத்து, அவர்களின் சரியான இடத்திற்கே பின்பற்றிப் போகும்படி நிர்ப்பந்தப்படுத்தவேண்டும்.

### உண்மையான கருத்து.

இதுதான் நாம் ஜெர்மானியர் பேரில் கொண்டிருக்கும் உண்மையான விரோதம். நாம் ஜெர்மனிக்குச் செய்துவரும் பிரசாரத்தில் இந்தக் கருத்தை மறைப்பதில் பிரயோசனமில்லை. ஜெர்மானியருடன் நமக்கு விரோதமில்லையென்று பேசிவருவது சரியான பிரசாரமல்ல. நாம் அவர்களிடம் விரோதம் கொண்டிருக்கிறோம் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நாஸிகளை மட்டில் அழித்து ஜெர்மனியில் ஜனநாயக ஆட்சியை மறுபடியும் அமுலுக்குக் கொண்டுவந்தால் ஜெர்மனியிலுள்ள எல்லாப் பிரச்னையும் தீர்ந்துவிடுமென்று பேசுவது உபயோகமற்றது. இப்படியில்லை என்று அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். உண்மையான கருத்தை மறைப்பதில் பயனில்லை. ஜெர்மானியர் இப்பொழுது நாஸிக்கொடுங்கோல் ஆட்சியின் கீழ் நிலைத்திருப்பதா? அல்லது அவர்கள் பேரில் வெடிகுண்டு போட்டு, தோற்கடித்து அவர்களுக்கே ஸ்வதந்திரமும், ஜனநாயகமும், அடையும்படி செய்வதா என்பது பிரச்னை அல்ல. ஆனால் ஐரோப்பா ஜெர்மன் மயமாவதா, அல்லது ஜெர்மனி ஐரோப்பாவில் அடங்கிய நாடாக இருப்பதாக என்பதுதான் முடிவான கருத்து. இதை ஜெர்மானியரிடம் வெளிப்படையாகச் சொல்லுவதில் நாம் தயங்கக்கூடாது. அவர்களுக்கு அது தற்புகழ்ச்சியாகத் தோன்றாது. ஆனால் நாம் ஜெர்மனிக்குச் செய்துவரும் பிரசாரத்தில் இது நம்முடைய அலுவல் அல்ல. 1919-ம் வருஷத்தில் ஜனநாயக ஆட்சிக்காக பொறிகள் வைக்கும்படி மேலெழுந்த வாரியாகச் செய்ததைக் காட்டிலும் இப்பொழுது உள்நாட்டுக் குழப்பத்திற்குத் தூண்டிவருகிறோம். இத்துடன் அவர்களின் மூர்க்கிய பழக்க வழக்கங்களையும், தூஷணைசெய்து வருகிறோம். சென்ற 70 வருஷகாலமாக ஐரோப்பாவில் கொடுங்கோலாட்சி புரிவதற்கு எத்தனித்துவரும் ஜெர்மனியைக் காட்டிலும், கௌரவமாகவும் சிநேகபாவத்துடனும் இருக்கும்படி ஜெர்மனியின் திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று ஐரோப்பா எதிர்பார்க்கிறது.



# சாமான்கள் ஏற்றிவரும் விமானங்கள்.

## 'யூ' படகுகளினால் ஏற்படும் அபாயங்களைத் தவிர்ப்பது.

**(விமான இலாகா நிருபர் ஒருவர் எழுதியது).**

அப்ஸர்வர் பத்திரிகையில் எழுதும் எழுத்தாளர்களில் பலர் வியாபாரக் கப்பல்கள் அதிகம் நஷ்டமாவதைக் குறித்து நமது கவனத்தைச் செலுத்தும்படி எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இந்நாட்டிற்கு நேர்ந்திருக்கும் முக்கியமான அபாயங்களில் ஒன்றான வியாபாரக் கப்பல்களின் நஷ்டத்தைக் குறைப்பதற்கு வழிதேடாமல் இருந்தால் அது மூடத்தனமாகும். நமது தரைப்படை, கப்பற்படை, விமானப்படை எவ்வளவோ திறமையாக நடந்துகொண்டபோதிலும், நமக்கு ஏற்படும் கப்பற்சேதம் போதுமான உணவு ஸப்ளைகளைக் கொண்டுவந்து இறக்குமதி செய்யமுடியாமல் அவ்வளவு கடுமையாய் போய்விடும். அம்மாதிரி பொருளாதார முற்றுகையால் குறுகிய காலத்திற்குள் நாம் தோற்றுவிட்டதாக ஒப்புக்கொள்ளும்படி நேரிடும்.

ஜெர்மன் 'யூ' படகுகள் இப்பொழுது வெகுதூரம் வரையில் அதிக விஸ்தாரமாக வியாபித்திருக்கின்றன. அவைகளின் அழிக்கும் தொழிலுக்கு உதவியாக அவைகளுக்கு நேத்திரங்கள்போல் ஏராளமாக வெகு தூரத்திலிருந்து வெடிகுண்டுகள்போட சக்திவாய்ந்த போக் வுல்ப் (Focke-wulf), கோண்டார் (Condor), கூறியர் (Kurier) என்று சொல்லப்பட்ட விமானங்களும் இருக்கின்றன. அவை இரண்டும் சேர்ந்து இந்நாட்டில் ஆண், பெண், குழந்தை முதல் யாவரும் எதிரிக்குப் பெருத்த வெற்றி என்று கருதக்கூடியவிதமாக அவைகள் போர்நடத்தி வருகின்றன.

ஏராளமான நீர்மூழ்கிகளை நாம் மூழ்கடித்தபோதிலும், அநேகம் போக் வுல்ப் (Focke-wulf) விமானங்களைச் சுட்டு வீழ்த்தியபோதிலும், மேலும் தற்காப்பு முறைகளை அபிவிருத்தியடையச்செய்து நமக்கு நேரிடும் நஷ்டங்களைச் சிறிதளவு குறையும்படி செய்தபோதிலும், எதிரி நமது கப்பல்களை இனி மூழ்கடிக்க இயலாதென்று திட்டமாகச் சொல்வதற்கு முடியாது. இத்தகைய நடவடிக்கையினால் உணவு ஸப்ளைகள் நம் நாட்டிற்கு வருவதற்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதுமட்டுமல்ல. இந்நாட்டிற்கு வேண்டிய உதவிப் படைகள், பண்டங்கள், முஸ்தீப்புகள் இவைகளைக் கொண்டுவருவதற்கும், வெகு தூரத்திற்கப்பாலிருக்கும் யுத்தப் பிரதேசங்களுக்கு அம்மாதிரி உதவிப்படை முஸ்தீப்பு வகையராவை ஏற்றி அனுப்புவதற்கும் அபாயம் நேரிட்டிருக்கிறது.

### மற்றொரு உபாயம்.

இதற்கு ஏதாவது வேறொரு உபாயம் தேடவேண்டும். ஆகாய விமானப் போக்குவரத்தினால் ஏராளமாகப் பொருள்களைத் தூக்கிச்செல்லும் விமான கூட்டங்களைக் கொண்டுதான் இப்பிரச்னையைத் தீர்க்கவேண்டும். அவைகள் நெடுந்தூரம் செல்லக்கூடியவைகளாகத் தயாரிக்கவேண்டும். ஓரிடத்திலும் நிற்காமல் அட்லாண்டிக் சமுத்திரத்தைத் தாண்டிச்செல்லக்கூடிய சக்தியிருக்க வேண்டும். ஆரம்ப இடத்திலிருந்து வழியில் எங்கும் நிற்காமல் ஒரேடியாய்ப் பறந்து மத்தியக்கிழக்குப் பிரதேசத்தை அடையக்கூடியதாக இருக்கவேண்டும். இந்த விமானங்களுக்குள் தகுந்த உணவுப்பொருள்களும், டாங்கிகள், விமானங்கள் வகையராவுக்கு வேண்டிய தனித்தனி பாகங்களும், மேலும் பைடர் விமானத்திற்குத் தேவையான பூரா கருவிகளையும் எடுத்துச்செல்லக்கூடியவையாக இருக்க வேண்டும். இம்மாதிரி ஏற்கனவே இதாலியர்கள் கொண்டுசெல்லுகிறார்கள். நாம் மாத்திரம் இம்மாதிரி செய்யமுடியாதென்பதற்குக் காரணமேயில்லை.

இம்மாதிரி விமானம் இப்பொழுது தயாரிக்கப்பட்டுவிட்டால் கப்பல் இடவசதியில்லாமல் நமக்கு ஏற்பட்டிருக்கும் நிர்ப்பந்தம் விலகுவது மாத்திரமல்ல, யுத்தத்திற்குப் பிறகுள்ள கடினமான பிரச்னையும் தீருவதற்கு இது உபயோகமாக

இருக்கும். வியாபாரத்தில் விமான பலம் பிரிடனுக்கும் வேண்டுமானால், வெளியூர்களுக்கும், பிரிடனுக்கும், ஆகாய விமானப் போக்குவரத்து மார்க்கங்களைத் திரும்ப ஸ்தாபிப்பதில் காலதாமதம் செய்யக்கூடாது. இப்பொழுது சாமான்கள் ஏற்றி போக்குவரத்துக்கு உபயோகப்படும் விமானங்களை எளிதிலும், சுலபமாகவும் பிரயாணிகள், சாமான்கள், தபால் ஏற்றிச்செல்லக்கூடியதாக மாற்றிவிடலாம்.

நம்முடைய ஏற்றுமதி வியாபாரத்தின் முக்கியத்வத்தை நாம் மறந்துவிடக் கூடாது. வெளியூர்களில் நமது சாமான்களை விற்று நாம் ஜீவித்து வருகிறோம். கப்பல் இடவசதி குறைவினால் நம்மால் ஏற்றுமதி செய்ய முடியாமல் போனால் அதிகாரம் வகிப்பதில் நமது நாடு இரண்டாந்தர நாடாகப் போகவேண்டிவரும். ஜனங்களும் வாழ்க்கையின் கீழ்த்தரமான நிலைமையில் நடத்தக்கூடிய அருவெறுப்பான பழக்கத்திற்கு உட்படநேரிடும்.

## கொடி ஓங்கிப் பறக்கும்.

விமானப் போக்குவரத்தினால் நமது சாமான்களை அந்நிய நாடுகளுக்குக் கொண்டு செல்லலாம். அதனால் பிரிடிஷ் கொடி வெகுதூரத்திலுள்ள நாடுகளிலும் பறக்கவிடமுடியும். யுத்தத்திற்குமுன் வியாபாரம் செய்த மாதிரி இப்பொழுதும் வியாபாரம் செய்ய நமக்குத் திறமையிருப்பதை அந்நிய நாடுகள் நம்பும்படி செய்யலாம். கப்பல்களுக்குப் பதிலாக விமானங்களை உபயோகித்தால் சாமான்களை துரிதமாகக் குறிப்பிட்ட அவகாசத்திற்குள்ளும், நல்ல நிலைமையிலும் ஏற்றிக்கொண்டு கொடுக்கமுடியும். கப்பல் மார்க்கமாய் அனுப்புவதென்றால் குறிப்பிட்ட இடம் போய்ச்சேருவதற்குள் கப்பல்களில் சாமான்களை அடைத்தும், பிறகு கப்பல்களிலிருந்து ரயிலில் ஏற்றியும், ஒரு ரயிலிலிருந்து மற்றொரு ரயிலுக்கு மாற்றியும், சாமான்களைச் சொற்ப சேதத்துடன்தான் கொண்டு சேர்ப்பிக்க முடியும். இவ்வித சேதம் விமானப் போக்குவரத்தினால் இருக்காது.

யுத்தத் தேவையை முன்னிட்டும், நடுநிலை நாடுகளாக இருந்தால், அச்சு நாட்டு ஆக்கிரமிப்பு ஏற்படாமல் இருப்பதற்கும், பாதுகாப்பு முறையில், உலகம் பூராவும் ஏராளமான விமான நிலயங்கள் சங்கிலித்தொடர் போல் ஏற்பட்டுவிட்டன. சமாதானம் வந்தவுடன் பெருத்த விமானப் போக்குவரத்துக்கு வசதியான விமான நிலயங்கள் இல்லாமல் ஒரு நாடுகூட இருக்காது.

எதிர் காலத்தில் நேரிடக்கூடியதை எதிர்பார்த்து நடந்துகொள்ளவேண்டியது நல்லதாயிருந்த போதிலும், அந்நிய நாட்டிலிருந்து உணவு ஸப்ளைகளும், பொருள்களும் நிச்சயமாக நமக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டிய பிரச்னை இப்பொழுது முக்கியமாக இருக்கிறது. விமானப் போக்குவரத்துக்கு லாயக்காக பெரிய விமானங்களை உற்பத்தி செய்வதுதான் மிகவும் அவசியமான காரியம். அதற்காகத் திட்டம் போட்டுக் கட்டுவதில் யுத்தம் முடிந்தவுடன் வியாபாரத்திற்காக எந்தவிதத்தில் அவைகளை உபயோகப்படுத்தலாம் என்பதையும் கவனித்து அதிகாரிகள் திட்டம் போடவேண்டும்.

## டாக்டர் எவாட்.

டாக்டர் எவாட் கொஞ்சம் பருமன் உள்ள தேகமும் சதுர வடிவமுள்ள தலையும் உள்ளவர். பூர்ணமான ஆத்ம நம்பிக்கை படைத்தவர். ஆஸ்திரேலிய நீதிபதிகளுடன் சதா நீதி விஷயங்களைப்பற்றி சர்ச்சை செய்து கொண்டிருப்பார். வால்ஷ், ஜான்ஸன் என்ற இரு வியாபாரச் சங்கத் தலைவர்களை தேசப்பிரஷ்டம் செய்ததை இவர் எதிர்த்தார். பால்யத்தில் வக்கீல் தொழில் புரிந்தார். தனது பேச்சுத் திறமையால் அவ்விருவர்களையும் தேசப்பிரஷ்டம் செய்வது சட்டவிருத்தமான காரியம் என்று நிரூபித்தார். இது 17 வருஷத்திற்கு முன்னிருந்த கதை. தற்சமயத்தில் ஆஸ்திரேலியாவில் கவர்ன்மெண்டு நியாய வாதியாக



(Attorney General) ஆகவும் அயல்நாட்டு மந்திரியாகவும் இருக்கிறார். முன்பு ஆஸ்திரேலிய பிரதம மந்திரியாயிருந்த மிஸ்டர் புரூஸ் தற்சமயத்தில் லண்டனில் ஆஸ்திரேலிய ஹை கமிஷனராக இருக்கிறார். ஸர் ஏர்ல்பேஜ் பிரிடிஷ் யுத்தகால மந்திரி சபையில் ஆஸ்திரேலிய மந்திரியாக இருக்கிறார். இவ்விருவர்களும்தான் வால்ஷையும், ஜான்ஸனையும் தேசப்பிரஷ்டம் செய்ய உத்தரவிட்டது.

லார்டு ஹால்டேன் என்பவர் தனது சொந்தச் சரித்திரத்தில் கெய்ஸரைப் பற்றியும், லார்டு மோல்டன் என்பவரைப்பற்றியும் ஒரு கதை எழுதியிருக்கிறார். ஒருசமயம் அவ்விருவர்களும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது லார்டு ஹால்டேனை கெய்ஸர் பின்வருமாறு கேட்டார்:—“லார்டு மோல்டன் எப்பேற்பட்டவர்” நீ அவரை நீதிபதி என்கிறாயே அவருக்கு எல்லாம் தெரிகிறதே” இக்கேள்வி எவாட்டைப் பற்றியும் கேட்கலாம். ஏனெனில் ஆஸ்திரேலிய ஹை கோர்ட்டில் 10 வருஷகாலம் ஜட்ஜ் வேலைபார்த்து மற்றவர்களைக் காட்டிலும் பொதுப் பிரச்னைகளை அதிகம் தெரிந்துகொண்டிருக்கிறார். பள்ளிக்கூடத்தில் ஒருசமயத்தில் 3 முதல்தரமான பட்டங்களைப் பெற்றார். சட்டநிபுணன் என்ற பட்டமும் சாதாரணமானதல்ல. இப்பட்டம் பிரிடிஷ் அரசியலைப்பற்றி ஒரு வியாசம் எழுதியதற்காக அவருக்கு அளிக்கப்பட்டது. தனக்கு 36-வது வயதில், ஜட்ஜ் பதவியை வகித்தார்.

இந்த யுத்தத்தின் ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தனது பதவியை ராஜீனாமாச்செய்து தொழிற்கட்சிக்காக ஆஸ்திரேலிய ஜனசபையில் ஒரு ஸ்தானத்தைப் பெற்றார். இவருடைய தூண்டுதலினாலும், முயற்சியாலும் அப்போதிருந்த ஆஸ்திரேலிய ஸர்க்கார் தோற்றுப்போனவுடன், தொழிற்கட்சியடங்கிய மந்திரி சபையில் புகுந்தார். விசேஷப் பிரதிநிதியாக வாஷிங்டனுக்கும், அங்கிருந்து லண்டனுக்கும் சென்றிருக்கிறார். வக்கீல், ஜட்ஜ், மந்திரி, தந்திரி ஒவ்வொன்றிலும் கியாதி பெற்றார். அவருக்குத் தற்சமயத்தில் 48 வயதுதான் ஆகிறது.

இவ்வித சாமர்த்தியங்களிருந்தாலும் அவர் ஒரு சாதாரணமான மனிதன்தான். நிலக்கரி உற்பத்தி செய்யப்படும் ஓர் நகரத்தில் பிறந்தவர். பார்வைக்கும், மற்ற விதத்திலும் கொஞ்சம் கிராம்யமாகக் காணப்படுவார். ஆனால் மிஸ்டர் வினன்ட் என்பவரைப் போல் அதிக ஆடம்பரமும் கட்டுப்பாடும் இல்லாதவர். சமரசம் செய்வதில் உண்மையான தீர்மானமும், சாமர்த்தியமும், வாய்ந்தவர். இத்துடன் கூர்மையான புத்தியுள்ளவர். ஆஸ்திரேலிய ஸர்க்காரால் நடத்தப்படும் பொது ஜனங்களுக்கென்று ஏற்பட்ட பள்ளிக்கூடத்தில் படித்தவர். அதிகப் பேச்சுத்திறமை வாய்ந்தவரல்ல. ஆனால் அவருடைய பேச்சுக்களெல்லாம் ஸாரம் நிறைந்து, அலங்காரம் அதிகமில்லாமல் விஷயத்தை நேராடிக்குறித்துக் காண்பிக்கும். கஷ்டமடைந்தவரைப்பற்றி எடுத்துப் பேசுவார். ஆஸ்திரேலியத் தொழிலாளிகளுடன் அதிகம் கலந்துகொண்டிருக்கிறார். பயனடையக்கூடிய பல விஷயங்களைப்பற்றி சண்டைபோட்டு ஸாதித்திருக்கிறார்.

வக்கீலாக இருந்து அரசியல் வாதியாக மாறிய விஷயத்தில் இவரை ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸுடன் ஒப்பிட்டுப்பார்க்கலாம். கிரிப்ஸுக்கு சாதுர்யம், வசீகரம், யாவருடன் சிநேகமாகயிருப்பது இக்குணங்கள் உண்டு. ஆனால் கிரிப்ஸைக் காட்டிலும் இவருக்கு இயற்கையான அரசியல் உணர்ச்சியிருக்கிறது. கிரிப்ஸ் ஒருபோதும் தொழிலாளிகளுடன் கலந்து கொண்டதேயில்லை. ஆனால் இளமைப் பருவ அனுபவம், படிப்பு, சிநேகிதர்கள் முதலியவைகளால் தொழிலாளிகளின் சம்பந்தம் எவாட்டுக்கு உண்டு. கிரிப்ஸைப் போலவே எவாட்டும் சமஉரிமை வாதி. அமெரிக்காவில் ஜஸ்டிஸ் பெலிக்ஸ், பிராங்க் பூர்டர் போலவும், இங்கிலாந்தில் புரொபஸர் ஹெரால்டு லஸ்கியைப் போலவும் தொழிலாளிகளின் சிநேகிதர் ஆவார். ஆனால் எவாட்டுக்குக் கட்சியின் பின்பலம் அதிகம். ஆஸ்திரேலிய தொழில் இயக்கத்தின் அரசியல், தொழில் வாதிகளின் பக்கபலம் பெற்றிருப்பதால் ஜனங்களுக்குச் சொந்தமான வருங்கால உலகத்தில் எவாட்டுக்கு நிச்சயமாக மேன்மை ஏற்படும். இவ்வித நம்பிக்கையும் அவருக்கு இருக்கிறது.

## ஜப்பானிய ஆட்சியினால் ஷாங்கேய் நகரம் வாடுகிறது.

"முன்பு ஒரு காலத்தில் உலகத்தில் முக்கிய நகரமாக விளங்கின ஷாங்கேய் ஆறுமாதகாலமாக அனுபவித்துவரும் ஜப்பானின் பொது க்ஷேமம், பொது வாசஸ்தலப்பிரதேசம் என்று சொல்லப்படும் முறைகளின் பயனாக, குக்கிராமத்தின் தோற்றத்தைப் பெற்று வருகிறது" என்று கிரிஸ்தியன் ஸயன்ஸ் மானிடர் பத்திரிகையின் நிருபரான பிரடரிக் ஆபர் லோரன்கோ மார்க்விஸ் என்ற இடத்திலிருந்து எழுதுகிறார். மேலும் அவர் எழுதுவதாவது:—

"தற்சமயத்தில் ஷாங்கேய் சீர்கெட்டு, வாசயோக்கியமில்லாமல் போய் விட்டது. அங்கு மோட்டார்கள் முன்போல சஞ்சரிக்கவில்லை. சில வைத்தியர்கள், அச்சுநாட்டு பிரதிநிதிகள், மற்றும் ஜப்பானியருடன் ஒத்துழைக்கும் சிலர் இவர்களுக்குச் சொந்தமானவைகளைத் தவிர எல்லா மோட்டார்களையும் ஜப்பானியர் உடனே ஸ்வாதீனப்படுத்திக் கொண்டனர்.

"சில முக்கியமான ரஸ்தாக்களில் முள்கம்பி வேலைகளால் காபந்து செய்யப்பட்டிருக்கிறது. ஏனென்றால் சீனர்கள் எதிர்ப்பு செய்வார்களென்று ஜப்பானியர் பயப்படுகின்றனர். இதே பயம்கொண்டு சீனர்களைத் தெருக்களில் காவல்காரர்களாகவும் நியமித்துவருகின்றனர். எல்லாச் சீனர்களும் வாரம் ஒரு முறை தெருவில் ரோந்து சுற்றும் வேலையில் கட்டாயமாக ஈடுபடவேண்டும்.

"இவ்வளவு முயற்சிகளும், பாதுகாப்புகளும் செய்யப்பட்டிருந்தும், ரகசிய சூழ்ச்சி, குண்டுவீச்சு முதலியவை அடிக்கடி நடந்துகொண்டுதானிருக்கின்றன. அதற்காக முள்கம்பி வேலிகள் அவ்வித சம்பவங்கள் நடக்கும் இடங்களிலெல்லாம் விஸ்தாரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த இடங்களில் ஜனங்கள் பல தினங்களுக்கு வெளிசஞ்சாரத்திற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

"ஷாங்கேயில் அரிசித்தட்டினால் திரள்திரளாக ஜனங்கள் பகல் பூரா தெருக்களிலேயே நின்றுகொண்டிருக்க வேண்டியிருந்தது. ஷாங்கேயில் பொம்மைத் தலைவனாக இருக்கும் வாங்சிங் வெயின் படத்தை ஒரு சினிமாக் கொட்டகையில் உள்ளோர் பரிஹஸித்தனராம். உடனே வெளிச்சங்கள் போடப்பட்டன. ஒரு ஜப்பானிய அதிகாரி ஜனங்களை அதட்டினான். அதற்கு ஒருவன் அரிசி விலையுயர்ந்ததால்தான் ஜனங்கள் இவ்விதம் நடந்துகொண்டனர் என்றான். உடனே யாவரும் கொட்டகையைவிட்டு வெளியே போய் விடவேண்டுமென்று ஜப்பானிய உத்தியோகஸ்தன் உத்தரவிட்டான்.

---

## நீங்கள் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள்.

### "மஜ்லிஸ்" (*The Majlis*) ஜனப் பிரதிநிதி சபை.

துருக்கியிலும், ஈரானிலும் ஜனப் பிரதிநிதி சபைக்கு 'மஜ்லிஸ்' (Majlis) என்று சொல்லப்படுகிறது. அந்தந்த தேசத்து ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் தான் ஜனப் பிரதிநிதி சபை அங்கத்தினர்கள்.

துருக்கியர்களும், ஈரான் தேசத்தார்களும் 'மஜ்லிஸ்' (Majlis) என்ற வார்த்தையை வெவ்வேறு விதமாக உச்சரிக்கிறார்கள். அட்டாடுர்க் என்பவரின் ஆதரவின் பேரில் துருக்கி அராபி எழுத்துக்களுக்குப் பதிலாக ரோமன் எழுத்துக்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தபொழுது, ரோமன் உச்சரிப்பையும் அனுஷ்டித்தார்கள். இந்த உச்சரிப்பு முறையை அனுசரித்தே "மஜ்லிஸ்" (Majlis) பதத்தைத் துருக்கியர்கள் 'மெக்லிஸ்' (Meclis) என்று உச்சரிக்கிறார்கள்.

ஈரானிய உச்சரிப்புப்படி அவ்வார்த்தையை இங்கிலீஷ் பாஷையில் எழுதுவதாய் இருந்தால் 'மெஜ்லிஸ்' (Mejlis) என்று எழுதவேண்டும். இந்தியாவில் உருது பாஷையில் இந்த வார்த்தை வெகு சகஜம். அதை 'மஜ்லிஸ்' (Majlis) என்று உச்சரிக்கிறார்கள். மெக்லிஸ் (Meclis), மெஜ்லிஸ் (Majlis), அல்லது "மஜ்லிஸ்" (Majlis), என்று வெவ்வேறு விதமாக உச்சரிக்கப்பட்டாலும் அவைகளுக்கு எல்லாம் ஜனக்கூட்டம் என்றுதான் பொருள்படும்.



## புதுக்கோட்டை ஸமஸ்தான
## தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரசங்க நிகழ்ச்சிமுறை.

---

| | | | | |
|---|---|---|---|---|
| 1942— | | பிரஸங்கம் 113—(5-வது பிரிவு). | | மணி. |
| ஸெப்டம்பர் | ...19, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 20, ஞாயிற்றுக்கிழமை | திருவரங்குளம் ... | ,, | 7.00 |
| | | வம்பன் ... | ,, | 7.30 |
| | 21, திங்கட்கிழமை ... | பிச்சத்தான்பட்டி ... | ,, | 7.00 |
| | | தொலையானூர் ... | ,, | 7.00 |
| | | மலைக்குடிப்பட்டி ... | ,, | 7.30 |
| | 22, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | வெள்ளனூர் ... | மாலை | 7.00 |
| | | செம்பாட்டூர் ... | ,, | 7.30 |
| | 23, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | குளவாய்ப்பட்டி ... | மாலை | 7.00 |
| | | கிழையூர் (தெற்கு) ... | ,, | 7.30 |
| | 24, வியாழக்கிழமை ... | பள்ளிவாசல் ... | ,, | 7.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 7.30 |
| | 25, வெள்ளிக்கிழமை... | புலியூர் ... | ,, | 7.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 7.30 |
| | | பிரஸங்கம் 114—(1-வது பிரிவு). | | |
| | 26, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.45 |
| | 27, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி ... | ,, | 7.00 |
| | | வெங்கடக்குளம் ... | ,, | 7.30 |
| | 28, திங்கட்கிழமை ... | திருமயம் ... | ,, | 7.00 |
| | | மேலூர் ... | ,, | 7.30 |
| | 29, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பெருங்களூர் ... | மாலை | 7.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 7.30 |
| | 30, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | அரிமளம் ... | மாலை | 7.00 |
| | | கீழாநிலைக்கோட்டை. ... | ,, | 7.30 |
| அக்டோபர் | 1, வியாழக்கிழமை ... | மலம்பட்டி ... | ,, | 7.00 |
| | | பாரம்பூர் ... | ,, | 7.30 |
| | 2, வெள்ளிக்கிழமை... | பொ. புதுப்பட்டி ... | ,, | 7.00 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 7.30 |

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 19— 9—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 20— 9—42 | ... | மருதன்கோன்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 21— 9—42 | ... | அரிமளம். |
| செவ்வாய்க்கிழமை | ... | 22— 9—42 | ... | குடுமியாமலை. |
| வியாழக்கிழமை | ... | 24— 9—42 | ... | கீழாநிலை. |
| வெள்ளிக்கிழமை | ... | 25— 9—42 | ... | பாப்பாபட்டி. |
| சனிக்கிழமை | ... | 26— 9—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 27— 9—42 | ... | தீத்தான்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 28— 9—42 | ... | முள்ளங்குறிச்சி. |
| செவ்வாய்க்கிழமை | ... | 29— 9—42 | ... | பரம்பூர். |
| புதன்கிழமை | ... | 30— 9—42 | ... | கீழாநிலை புதுப்பட்டி. |
| வியாழக்கிழமை | ... | 1—10—42 | ... | குழிபிறை. |
| வெள்ளிக்கிழமை | ... | 2—10—42 | ... | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—21-9-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் ஸெப்டம்பர் 26உ [ந. 114

பிரஸங்கம் CXIV.

## யுத்தத்தில் மூன்றுவது வருஷத்தில் பிரிடனின் ஸ்திதி.

**சமாதானத்தில் விருப்பம்.** யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் பிரிடன் சமாதானத்தை விரும்பி, ஜெர்மனியுடன் சிநேகமாகவேயிருந்து, அதனால் யுத்தத்தையும், அதன் கொடுமைகளையும் தவிர்க்கப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டது.

மியூனிச் பேச்சு வார்த்தைக்குப் பிறகு மிஸ்ட்டர் சேம்பர்லேன் சொன்னதாவது:—"முந்தி நடந்ததை நினைத்துப் பார்த்தால் நான் அங்கு சென்றதினால்தான் தயாராக இருந்த படையெடுப்புத் தடைபட்டது என்பதில் சந்தேகமில்லை".

உலகில் சமாதானத்தை வழங்கவும், பிறர்களுக்கு பிரிடன் செய்திருந்த பிரதிஞைகளைப் பூர்த்தி செய்யவும்தான் பிரிடன் ஜெர்மனியின்பேரில் போர் தொடுத்தபோது யுத்தத்திற்குத் தயாராயிருந்த ஜெர்மனியை வெற்றிகரமாகத் தாக்குவதற்கு பிரிடன் அதிகப் பிரயத்தனம் செய்யவேண்டியிருந்தது.

**சர்ச்சிலின் பேச்சு.** 1940-ம் வருஷம் மே மாதத்தில் மிஸ்ட்டர் சர்ச்சில் சொன்னதாவது:—

"தற்போதுள்ள நெருக்கடியை மறைத்துச் சொல்லுவது மிகவும் மூடத்தனமாகும். இந்த சந்தர்ப்பத்தைக்கண்டு அதைரியப்பட்டு, நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. எதிரிகளின் முஸ்தீப்புப் பெற்ற யந்திரப்படைகளின் பிரயோகத்தினால் நன்றாய் பயிற்சிபெற்ற 30 அல்லது 40 லக்ஷம் கவசம்தரித்த வீரர்கள் சில வாரங்களிலோ அல்லது சில மாதங்களிலோ தோற்கடிக்கப்படுவார்கள் என்று எண்ணுவது அதைவிட மூட்டாள்தனம்தான்".

டங்கர்க் சம்பவத்திற்குப் பிறகு, ஜூன் மாதம் 4-ம் தேதியில் மிஸ்ட்டர் சர்ச்சில் பின்வருமாறு சொன்னதாவது:—

"பிரிடிஷாரின் மனித நஷ்டங்கள் அதாவது கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள், காணமல்போனவர்கள் உள்பட 30,000 பேர்கள் இருக்கலாம். 1918-ம் வருஷம் மார்ச்சு மாதம் 21உயில் நடந்த யுத்தத்தின் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட நஷ்டத்தில் இந்த நஷ்டம் மூன்றில் ஒரு பங்கு இருக்கலாம். யுத்தப் பொருள்கள் அபரிமிதமாகச் சேதமாயின. சாமான்களிலும் கிட்டத்தட்ட 1,000 பீரங்கிகளும், கவசம்பூண்ட வண்டிகள், ஸப்ளைப் போக்குவரத்து சாதனங்களும் வடக்கேயுள்ள நமது சைனியத்திற்கு நஷ்டமாயின. அதனால் பிரிடிஷ் ராணுவ பலம் அபிவிருத்தியடைய இன்னும் தாமதம் ஏற்பட்டது. ஆகவே பிரிடிஷ் தொழிற்சாலையில் முதன் முதலாக உற்பத்தி செய்யப்பட்டு சைனியத்திற்கு உதவப்பட்ட யுத்த தளவாடங்கள் அடியோடு அழிந்துபோயின".

## எஞ்சியிருக்கச் செய்யப்பட்ட போராட்டம்.

**பிரிடன்பேரில் யுத்தம்.** இந்த யுத்தம் 1940-ம் வருஷம் ஆகஸ்டுமீ 8உயில் ஆரம்பமாயிற்று. தேம்ஸ் நதி சமுத்திரத்தோடு சங்கமமாகுமிடத்திலும், சமுத்திரக்கரைக்கருகாமையிலும் செல்லும் துணைக்கப்பல்கள் தாக்குண்டன. தெற்கு, தென்கிழக்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்கள், விமானக் கூடங்கள் மிகவும் கடுமையாக வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. படையெடுப்புக்கென்று ஆகஸ்டு 15-ம் தேதி குறிப்பிடப்பட்டிருந்தது. அன்று போர்ட்ஸ்மௌத்தை ஒரே அடியில் தாக்குவதற்கு எதிரி பாம்பர், பைடர் விமானங்கள் உள்பட மொத்தம் 400 விமானங்களைக்கொண்டு தாக்கினான். பிரிடிஷ் விமானப்படை அவைகளை எதிர்த்து 180 விமானங்களை முறித்து கீழே தள்ளிற்று. அடுத்தபடியாக இரண்டு நாட்களில் தினசரி 600 விமானங்கள் வீதம் யுத்தத்தில் ஈடுபட்டன. அவைகளில் 245 விமானங்கள் தரைச் சண்டையிலும் கடற்சண்டையிலுமாக சுட்டு வீழ்த்தப்பட்டன. லண்டனைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களுக்கும், கிராய்டனுக்கும் தப்பி ஓடின; விமானங்கள் மீண்டும் அவைகளின் தளத்திற்குத் திரும்பி வரவேயில்லை. இந்த விதமாக பிரிடன் அந்த முதல் படையெடுப்பில் வெற்றியடைந்தது. இந்தக் கடுமையான விமானப்போருக்கு இடையிலே பிரிடிஷ் விமானப்படை, ஹாலந்து, பிரான்ஸ், ஜெர்மனி இவைகளிலுள்ள விமானக்கூடங்கள், கப்பற்படை தளங்கள், தொழிற்சாலைகள் முதலியவைகளை இடைவிடாது வெடிகுண்டுகளைப் போட்டுத் தாக்கிவந்தது.

மிகவும் நெருக்கடியான அந்த சந்தர்ப்பத்தில், சர்ச்சில் சொல்லியிருக்கிறபடி 'ஐரோப்பா பூராவிலும் உள்ள நாடுகளின் உரிமைகளைக் காப்பாற்றக்கூடிய தேசமாக இங்கிலாந்து காணப்பட்டது'.

**லண்டன்பேரில் நடந்த யுத்தம்.** ஸெப்டம்பர்மீ 5-ம் தேதியில் லண்டன்பேரில் யுத்தம் ஆரம்பமாயிற்று. இதை யுத்தத்தின் பீடிகை என்று ஜெர்மனி சொல்லிவந்தது. ஹிட்லர் இதைப்பற்றி "இனி யுத்தம் எப்படி முடிந்தாலும் இங்கிலாந்து அடியோடு போய்விடுமென்றும்" பெருமையடித்துக்கொண்டான். இங்கிலாந்தில் படையெடுப்பு அதிசீக்கிரத்தில் ஏற்பட்டுவிடுமென்ற பயமிருந்துவந்தது. ஸெப்டம்பர் மாதம் 11-ம் தேதியன்று மிஸ்டர் சர்ச்சில் பேசுகையில் "அடுத்த வாரம் தேச சரித்திரத்தில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்க வாரமாக இருக்கும்" என்றும் குறிப்பிட்டார். ஆனால் எதிர்பார்த்த படையெடுப்பு நேரவில்லை. லண்டனில் மட்டில் அக்டோபர் 5-ம் தேதிவரை அபாய அறிவிப்புகள் இருந்துவந்தன. அங்கு 38 பெரிய பகற்காலத் தாக்குதல்கள் நேரிட்டன.

பல வாரங்கள்வரை முக்கியத்வம் வாய்ந்த இடங்கள் நாசமாக்கப்படுவதும், அடிக்கடி மனிதர்கள் கொல்லப்படுவதுமாக இருந்தன. இடைவிடாமல் ஏற்பட்ட கஷ்டத்தை லண்டன் வாசிகள் மிகவும் பொறுமையுடனும், தீரத்துடனும் சமாளித்துவந்தார்கள். சதாகாலமும் வெடிகுண்டுகளும், எரி குண்டுகளும் விழுந்தவண்ணமாகவேயிருந்தது. அந்த அமளியிலும் ஜனங்கள் தங்கள் சாதாரண வேலைகளைக் கவனித்துவந்தார்கள். அபாயங்கள் நிறைந்த சோதனை நேரத்தில் கடாசிவரையில் எதிர்த்துச் சண்டை செய்யவும், பல கஷ்டங்களையும் சமாளித்துக் கொண்டு யுத்தத்தில் வெற்றிபெறவும், போதிய நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளித்துவந்தவர் நமது பிரதம மந்திரியேயாகும்.

பிரிடிஷ் விமானப்படை மிகவும் சாமர்த்தியமாகவும், மிகவும் திறமையுடனும் சண்டை செய்தது. லண்டன்பேரில் நடந்த சண்டையின் முதல் நாள், அதாவது ஸெப்டம்பர்மீ 7-ல் 103-விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன; 299-விமானிகள் கொல்லப்பட்டார்கள். 7-ம் தேதியில் 208-விமானிகளும், 52-விமானங்களும் நஷ்டம்; 11-ம் தேதியில் 89-விமானங்களும், 183-விமானிகளும் நஷ்டம். ரொம்ப அதிகமான நஷ்டம் ஸெப்டம்பர்மீ 15-ல் ஏற்பட்டது. அன்று லண்டனில் 500 எதிரி விமானங்கள்வந்து சூழ்ந்துகொண்டன. எதிரிக்கு 185 விமானங்களும், 516- விமான ஓட்டிகளும் நஷ்டம். அச்சமயத்தில் கவசம் தரித்த படைகள் உள்பட மொத்தத்தில் பிரிடனில் 250-பேர்களுக்குமேல் கொல்லப்படவில்லை.



இவ்வளவிருந்தும் எதிர்பார்த்த படையெடுப்பு நேரவேயில்லை. ஜெர்மனி லண்டன்பேரில் நடத்திய விமானப்போரில் ஜெர்மனிக்கு 883-விமானங்களும், 2,500 விமானிகளும் நஷ்டம்.

**லாப நஷ்டம்.** பிரிடன் செய்த கடுமை யுத்தத்தில் ஹிட்லர் நடத்திய பகற்கால விமானத்தாக்குதலில் பிரிடனில் 1,700 பேர்கள் கொல்லப்பட்டார்கள். 3,360-பேர்களுக்குக் காயமேற்பட்டது. இராக் காலத் தாக்குதல்களில் 12,581-பேர்கள் கொல்லப்பட்டும், 16,965-பேர்கள் காயமடைந்தனர். துணைக் கப்பல்கள், துறைமுகங்கள், விமானக் கூடங்கள், தொழிற்சாலைகள், பண்டகசாலைகள் இவைகளுக்கு நேர்ந்த சேதம் மிகவும் அதிகம். போக்குவரத்துப் பாதைகள் துண்டித்துவிடப்பட்டன. ஆனால் உற்பத்திக்கு அதிக இடையூறு ஏற்படும் விதமாகப் போக்குவரத்து தடைப்படவில்லை. இவ்விதமான எதிரித் தாக்குதல்களைத் தடுத்து தற்காப்பு செய்துகொண்டதோடு, அவர்களை எதிர்த்துச் சண்டை செய்யவும் பிரிடிஷ் விமானப்படை தன் பலத்தை அதிகப்படுத்திக்கொண்டது. மொத்தத்தில் ஹிட்லருக்கு 2,375-விமானங்கள் அழிந்துபோனதோடு இன்னும் அநேக விமானங்கள் பழுதாகி மறுபடி யுத்தத்தில் ஈடுபட முடியாமல் செய்யப்பட்டன.

## மத்தியக் கிழக்குப் போர்முனை.

1940-ம் வருஷம், டிஸம்பர் மாதத்தில் தளகர்த்தர் வேவல் யுத்தத்திற்காக போதுமான தயாரிப்பு செய்துகொள்ளவில்லை. அதற்குள் டொப்ருக்கைத் தாக்குவதற்கு உத்தரவிட்டார். அப்பொழுது இதாலியத் துருப்புகள் ஏராளமாகவும், பன்மடங்கு பிரிடிஷ் துருப்புகளைவிட அதிகமாக இருந்தபோதிலும், அவர்கள் ஒரு ஸ்தானத்திலிருந்து மற்றொரு ஸ்தானமாகத் தள்ளப்பட்டார்கள். 1941-ம் வருஷம், பிப்ரவரி மாதம், 8-ம் தேதியில் பெங்காஸி கைப்பற்றப்பட்டது. 10-இதாலியப் பகுதிகள் முறியடிக்கப்பட்டன. வேவல் மிகவும் தந்திரமாக அடைந்த வெற்றியைக் குறித்து பிரிடனிலுள்ளோருக்கு அளவிடமுடியாத நம்பிக்கை ஏற்பட்டது. அதைப்போல் 4-கோடி 50-லக்ஷம் இதாலியத் துருப்புக்களை எதிர்த்துப் போராட 70-லக்ஷம் கிரேக்கர்களுக்கும் தைரியம் தோன்றியது.

கிழக்கு ஆபிரிக்காவில் இதாலிய சாம்ராஜ்யம் 7-லக்ஷம் சதுரமைல் விஸ்தீர்ணமுள்ளது. அதைப் பாதுகாப்பதற்கு 36-தளகர்த்தர்களும் 4-லக்ஷம் துருப்புகளடங்கிய சைனியமும், அதற்கு உதவியாக 1,000-பீரங்கிகளும், எவ்வளவோ நூற்றுக்கணக்கான டாங்கிகளும் அங்கு வைக்கப்பட்டிருந்தன. 1941-ம் வருஷத்தில், கோடையின் மத்தியகாலத்திற்குள் அங்குள்ள சைனியத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் நீங்கலாக மற்ற பூரா சைனியமும் பிரிடிஷ் படைகளால் அழிக்கப்பட்டுவிட்டன. இதன் பயனாக, தேசத்தை இழந்த ஹெய்லி ஸிலாஸி (Haile Selassie) ஐந்து வருஷத்திற்குள்ளாகவே மீண்டும் ராஜ்யத்தை அடையும்படி செய்யப்பட்டார்.

வேவல் பெங்காஸியைத் தாண்டியும் வெகு சுலபமாக முன்னேறலாம். ஆனால் கிரீஸில் நிலைமை மோசமாயிருந்ததினால் வேவலின் உதவி அவசியமாக இருந்தது. அவர்களுக்கு உதவியாக நாலு படைப்பகுதிகள் அனுப்பப்பட்டன. கிரேக்கர்களுக்கு எதிராக விரோதிகள் அநேகம் பேர்கள் இருந்ததால், பிரிடிஷ் துருப்புகள் மிகவும் சிரமத்துடன் பின்வாங்கும்படி நேர்ந்தது. அங்கிருந்த 57,757 பேர்களுக்கு, 44,865-பேர்கள் பத்திரமாக வெளிக்கடத்தப்பட்டார்கள்.

அதே சமயத்தில் நாஸிகள் இராக்கில் கலகத்தை உண்டுபண்ணினார்கள். ஆனால் கிரீட்டில் யுத்தம் நடந்து வந்ததால் விரோதி பெருவாரியான உதவிப் படைகளை இராக்கிற்கு அனுப்பமுடியவில்லை. கிரீட் எதிரி வசமாயிற்று. ஆனால் இராக் பாதுகாக்கப்பட்டது. ஆகவே இப்பொழுது காகஸஸுக்காக நடத்தப்படும் போரில் அது முக்கியமான கோட்டையாக விளங்குகிறது.

1941-ம்வருஷம் ஜூன்மீத்தில் நேசதேசத் துருப்புகள் ஸிரியாவில் வியாபித்துக்கொண்டது.

வட ஆபிரிக்காவிலிருந்த இதாலியர்களின் சார்பாக ஹிட்லர் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்பொழுது மத்தியக்கிழக்கில் இருந்த பிரிடிஷ் படைப்பகுதிகளை கிரேக்கர்களுக்கு உதவியாக அனுப்பியதில் ஸிரேனேகாவின் பாதுகாப்பு மிகவும் பலஹீனப்பட்டுப்போய்விட்டது. டொப்ருக்கிலிருந்த ராணுவத்தைத் தவிர, ஸிரெனேகாவில் காலாட்படைப் பகுதியொன்றும், மோட்டார் படைப்பகுதி ஒன்றும்தான் இருந்தது. அடுத்துவந்த ஏழு மாதங்களில் எகிப்திற்காகப் போர் நடந்தபொழுது, டொப்ருக் பட்டாளம் மகத்தான திறமையைக்காட்டிற்று.

1941-ம் ௵ நவம்பர் ௴த்தில் ஜெனரல் ஆச்சின்லெக் (மத்தியக் கிழக்குப் படைகளின் தலைவர்) வட ஆபிரிக்காவிலுள்ள ஜெர்மன் துருப்புகளைப் போருக்கு இழுத்தார். 36 நாட்களில் பெங்காஸியை நோக்கி அவர் 400-மைல் முன்னேறிச் சென்றார். ஜெனரல் ரோமலின் துருப்புகளில் மூன்றில் இரண்டு பாகத்தை அழித்துவிட்டார். 386 எதிரி டாங்கிகள் அழிக்கப்பட்டுவிட்டன. 22,000 ஜெர்மானியரும், 39,000 இதாலியர்களும் பிடிபட்டோ, கொல்லப்பட்டோ விட்டார்கள். பிரிடிஷாருக்கு 18,000 துருப்புகள் நஷ்டம்.

இவ்விதம் தோல்வி ஏற்பட்ட கொஞ்ச காலத்திற்கெல்லாம் தளகர்த்தர் ரோமல் திரும்ப அதிக பலத்தையடைந்துவிட்டான். 1942-ம் ௵ மே ௴த்தில் அவன் நம்மை எதிர்த்துத் தாக்க ஆரம்பித்தான். அவன் அலெக்ஸாண்டிரியாவை நோக்கி முன்னேறிச் சென்று அதற்கு 270-மைல் தூரத்தில் நின்றுவிட்டான். அங்கேயே சென்ற இரண்டு மாதங்களாகத் தங்கிவிட்டான். இந்த அவகாசத்தில் பிரிடிஷ் விமானப்படை அவனுக்கு வரும் ஸப்ளைகளையும், துருப்புகள் தங்கியிருக்கும் முகாம்களையும் இடைவிடாமல் வெடிகுண்டுகளை வீசித் தகர்த்து வந்தது.

## அட்லாண்டிக் யுத்தம்.

1940-ம் ௵ பிப்ரவரி ௴ 24உயில் ஹிட்லர் பின்வருமாறு கூறினன்:— "நீர்மூழ்கிக் கப்பல்களின் சண்டை இப்பொழுது ஆரம்பிக்கும்". உண்மையில் பிப்ரவரி மாதம் முடிவதற்குள் ஆகாயத்திலும், கடலிலும் யுத்தம் இரண்டு பங்கு வேகத்துடன் தொடங்கிற்று. சராசரி ஒரு வாரத்தில் ஏற்படும் கப்பல் நஷ்டம் ஒரு லக்ஷம் டன்களுக்கு மேலேயே இருக்கும். "ஏராளமான சாமான் கப்பல்களின் பலி" என்று தற்புகழ்ச்சியாக ஜெர்மனி பிரசாரம் செய்தது. மிஸ்டர் சர்ச்சிலின் அபிப்பிராயப்படி அட்லாண்டிக் யுத்தம்தான் இந்த யுத்தத்தில் முதல்தரமான சண்டை. உண்மையில் பிரிடன்பேரில் நடத்திய சண்டையைவிட இது நூதனமாகவும், எங்கும் வியாபிக்கக்கூடிய விதமாகவும் இருந்தது.

ஆனால் பிரிடிஷ் கடற்படை அதன் வேலையைச் செய்துவந்ததோடு நிற்காமல் அதன் ஆதிக்கத்தையும், நினைத்தயிடத்திற்குச் செல்லும் சக்தியையும் ஸ்தாபித்துக்கொண்டது. சென்ற மார்ச்சு மாதத்தில் லொபோடென் தீவுகளின்பேரில் படையெடுத்தபொழுதும், மடாபன் முனையில் நடந்த கடற்சண்டையிலும் அதன் வல்லமை வெளியாயிற்று. ஐயோனியன் கடலில் மடாபன் முனையில் நவம்பர் 27, 28-ல் சண்டை நடந்தபொழுது இதாலிக்கு சுமார் 6-கப்பல்களும், 10,000 டன் எடையுள்ள க்ரூயிஸர்களும் நஷ்டம். 35,000 டன் எடையுள்ள 'லிட்டோரியோ' வகுப்பைச் சேர்ந்த ஒரு யுத்தக் கப்பலுக்கு பலத்த சேதமேற்பட்டது. அப்போது அது மூழ்கியும் இருக்கலாம். முஸோலினி முன்யோசனையன்னியில் நேராகவே சைனியங்களை நடத்திச் சென்று, ஆல்பேனியாவைத் தாக்கி 50,000 பேர்களை பலி கொடுத்தபோதுதான் மேற்சொல்லிய சம்பவம் நேர்ந்தது.

## சாமான்களின் உற்பத்தி.

**கைத்தொழில் மாறுதலடையும் விதம்.** 1938-ல் பிரிடிஷ் அரசாங்கம் அங்கு விளையக்கூடிய மூலப்பொருள்களில் 5-ல் 1-பாகத்தைமட்டில் உபயோகித்தது. 1941-ம் வருஷத்தில் இந்த எண்ணிக்கை இன்னும் ½-மடங்கு அதிகமாயிற்று. கைத்தொழிலின் மாறுதல் மூன்றுவிதத்தில் ஏற்பட்டது. முதலாவதாக தொழில்



அரசாங்கத்தாரின் நேர்பார்வையில் வைக்கப்பட்டது. அடுத்தபடியாக முக்கியமான தேவைகள்மட்டில் கவனிக்கப்பட்டது. மூன்றுவதாக வரியை உயர்த்துவதிலும், உணவு முதலிய பொருள்களுக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட்டது.

**தொழிலாளிகளைச் சேகரித்தல்.** அவசியமில்லாத வேலைகள் நிறுத்தப்பட்டன. உதவிவேலை செய்வதற்கு ஸ்திரீகள் சேர்க்கப்பட்டார்கள். பொது மக்கள் உபயோகத்திற்கான சாமான்கள் சிக்கனமாக உற்பத்திசெய்யப்படுகின்றன. முக்கியமான பெரிய வேலைகளைத் தயார் செய்வதில் நேரிடும் செலவை மிகவும் சிக்கனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆக யுத்தத்தை ஜயிப்பதற்காக நாட்டிலுள்ள புருஷர்கள் எல்லாம் திரட்டப்பட்டனர்.

14 வயது முதல் 65 வயதுவரை யுத்த சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் 6 கோடிப்பேர்கள். அவர்கள் மொத்த ஜனத் தொகையில் 66 சதவிகிதம். அவர்கள் பூராவாக ராணுவத்திலும், பொதுஜனப் பாதுகாப்பிலும், யுத்தப் பொருள் தயாரிப்பதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். 18½ வயது முதல் 51 வயதுவரையுள்ள திடசாலிகள் யாவரும் சைனியத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தற்காப்பு வேலைக்காக 15,00,000 பேர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். நெருப்பணைக்கும் கோஷ்டியில் 45,00,000 ஜனங்களும், உள்நாட்டுப் பாதுகாப்புப் படையில் 20,00,000 ஜனங்களும் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

70 லக்ஷம் ஸ்திரீகள் யுத்த சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். 55 லக்ஷம் பேர்கள் தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். இன்னும் கோடிக்கணக்கான ஜனங்கள் ஒழிந்த நேரங்களில் யுத்த சேவைபுரிகிறார்கள்.

14 முதல் 17 வயதுள்ள பையன்களில் 10-க்கு 7 பேர்கள் வீதம் யுத்தத்திற்காக வேலை செய்கிறார்கள்.

65 லக்ஷம் முக்கியமான தொழிற்சாலைகளிலுள்ள வேலையாட்கள் தங்கள் இஷ்டப்படி வேலையைவிட்டுப் போகவோ அல்லது வேலையைவிட்டு நீக்கப்படவோ கவர்ன்மெண்டாரின் அனுமதியில்லாமல் முடியாது.

**தொழிற்சாலைகளை பல இடங்களில் ஸ்தாபித்தல்.** பிரிடனின் உற்பத்தி சக்தியைக் குலைக்கவும், அதை ஒழுங்குஹீனமாகச் செய்யவும்தான் எதிரிகள் 1940-ம் வருஷப் பிற்பகுதியில் பிரிடன்பேரில் தோன்றியவாறு வெடிகுண்டுகளைப் போட்டார்கள். இவ்வித இடையூறுகள் நேரிடாமல் தடுப்பதற்காக தொழிற்சாலைகள் பரவலாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. "பிரிஸ்டலிலிருந்த ஒரு பெரிய வர்த்தகசாலையை 43 கிளை ஸ்தாபனங்களாக நாட்டில் பரவச்செய்யப்பட்டிருக்கிறது. அம்மாதிரி 20, 30 அல்லது 40 கிளை ஸ்தாபனங்களாகப் பரவச் செய்யப்பட்டதற்கும் பல உதாரணங்கள் சொல்லக்கூடும். போக்குவரத்து கஷ்டங்களைத் தவிர்க்கவும், தொழிலாளிகள் இடம் மாறுதலால் ஏற்படும் பலக்குறைவை தவிர்க்கவும், தொழிலாளிகளையும், பொருள்களையும் வெகு சாமர்த்தியமாக பல இடங்களில் பங்கிடு செய்யப்பட்டிருக்கிறது. இதனுல் எதிரியின் தாக்குதலுக்கு உட்படாமல் தொழிற்சாலைகள் பல இடங்களில் மறைவாக வைக்கப்பட்டன.

**விமானங்கள் தயாரித்தல்.** "ஆகஸ்டு முதல் நவம்பர் வரையுள்ள நாலு மாதங்களில் லண்டனில் உற்பத்தி செய்யப்படும் விமானங்கள் சென்ற வருஷத்திலிருந்ததைக் காட்டிலும் இரண்டுமடங்கு அதிகமாகயிருந்தது" என்று 1940-ம் ௵ டிஸம்பர் ௴த்தில் லார்டு பீவர்புருக் சொன்னார். லண்டன்பேரில் கடுமையான போர் நடந்தபோதே இந்த உற்பத்தி நடைபெற்றது. அதற்குப் பிற்பட்ட மாதங்களில், பிரிடனின் யுத்த தளவாடங்களின் உற்பத்தி அதிக உச்சஸ்தானத்தையடைந்துவிட்டது. உள்நாட்டு தளங்களிலிருந்து செல்லும் பிரிடிஷ் விமானப்படைப் பகுதியின் 87 சதவிகிதமும், அன்னிய நாட்டுத் தளங்களிலிருந்து செல்லும் ஆர். ஏ. எப். பகுதியின் 75 சதவிகிதமும் பிரிடனில் செய்யப்பட்டவை. 1942-ம் வருஷம் மே ௴ 30உயில் கொலோனில் நடந்த பெருத்த விமானத் தாக்குதலில் ஈடுபட்டிருந்த எல்லா

பாம்பர் விமானங்களும் பிரிடனில் செய்யப்பட்டவை. 1941-ல் அந்நிய நாடுகளில் நடக்கும் போர்முனைக்கு பிரிடன் 9,781 விமானங்களை அனுப்பியது. பிரிடனுக்கு வந்திறங்கிய விமானங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் நாலு மடங்குக்கு மேலேயே இருக்கும்.

**டாங்கிகள் உற்பத்தி.** 1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் பிரிடன் தயாரித்த டாங்கிகளைக்காட்டிலும் இரண்டு பங்கு டாங்கிகளை இப்பொழுது உற்பத்தி செய்கிறது. அந்த எண்ணிக்கை 1941-ம் வருஷம் பிப்ரவரி மாதத்திலிருந்த எண்ணிக்கையைவிட மூன்று பங்கும், 1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் தயாரான விமான எண்ணிக்கையைவிட 5 பங்கும் அதிகமாகவுமிருந்தது. விரோதி பாம்பர் விமானங்கள் தாக்காமலிருப்பதற்கு டாங்கி பாகங்கள் சுமார் 6,000 சிறு தொழிற்சாலைகளில் செய்து முடிக்கப்பட்டு, அவை யாவும் பூமிக்குக் கீழேயுள்ள தொழிற்சாலைகளில் ஒன்று சேர்க்கப்படுகின்றன.

**கப்பல்களின் உற்பத்தி.** பிரிடனின் பாதுகாப்புக்கு கப்பல் பலம்தான் அத்தியாவசியமானது. 1941-ல் பிரிடன் 12,50,000 டன் எடையுள்ள கப்பல்களைச் செய்துமுடித்தன. யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் கடைசி மூன்று மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்ட கப்பல்களின் நிறையைக் காட்டிலும், நாலு பங்கு அதிகமான எடையுள்ள கப்பல்கள் 1941-ம் வருஷம் கடைசி மூன்று மாதங்களில் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன. வியாபாரக் கப்பல்களின் நிறையும் அதேமாதிரி இரண்டு பங்கு அதிகமாக தயாராகி இருக்கின்றன. பழைய இரும்பைச் சேகரிக்கும் திட்டத்தினால் 800 நாசகாரிகள் தயாரித்துவிடலாம்.

**பீரங்கிகள் தயாரிப்பு.** பிரிடனில் இப்பொழுது வருஷத்திற்கு 40,000 பீரங்கிகள் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. 2,50,00,000 தடவைகள் பீரங்கிப் பிரயோகிப்பதற்கு வேண்டிய வெடிமருந்தும் தயாரிக்கப்படுகிறது. மேலும் லக்ஷக்கணக்காக சிறிய பீரங்கிகளும், அவைகள் 2,00,00,00,000 தடவைகள் உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய வெடிமருந்தும் அது தயாரித்திருக்கிறது.

இம்மாதிரி யுத்தப்பொருள்கள் அபரிமிதமாகத் தயாரிக்கப்பட்டுவருதில் மிஸ்டர் லிடில்டன் 1942-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பின்வருமாறு சொன்னார்:— "மொத்தத்தில் சென்ற 12 மாதங்களில் சாமான்களின் உற்பத்தியை 100 மடங்குக்கு அதிகமாகவே அதிகரித்திருக்கிறோம்".

**உணவுப் பொருள்களின் உற்பத்தி.** பிரிடனில் நிலங்களை சாகுபடி செய்வதற்கு ஆட்களும், தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்குத் தொழிலாளிகளும் பிரிடனில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 60,00,000 ஏக்கர்கள் உபரியாக இப்பொழுது விவசாயத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. யுத்தத்திற்கு முன்பு எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டதோ அதைவிட இரட்டிப்பு மடங்கு இப்பொழுது உற்பத்தி செய்யப்படுகிறது. ஐரோப்பா கண்டத்தில் பிரிடன்தான் யந்திர சாதனங்களைக் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்ட முதல்தரமான நாடு.

**கடுமையான உணவுத் திட்டம்.** கப்பல்களில் இடவசதிக் குறைவினால் உணவுப் பொருள்களை மிகவும் கடுமையானத் திட்டம் போட்டுக்கொண்டு நிரந்துகொள்ளுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அத்திட்டத்தின்படி ஒருவரும் ஒரு வாரத்திற்கு வெண்ணெய் 2 அவுன்ஸுக்கு அதிகமாகவும், தேயிலை 2 அவுன்ஸுக்கு அதிகமாகவும் வாங்கக்கூடாது. பழ தினுசுகளில் அநேகவகை கிடைக்காமல் போய்விட்டது. இருந்தாலும், தொழிலாளிகளுக்குமட்டில் இறைச்சி ஸ்பெஷல் திட்டப்படி கொடுக்கப்படுகிறது.

**உடையில் சிக்கனம் செய்வது.** உடைகள் வாங்குவதுகூட திட்டப்படிதான் வாங்கவேண்டும்; இவ்வித ஏற்பாட்டின்படி வருஷத்திற்கு 3,00,000 டன் நிறையுள்ள துணிமணிகள் கப்பல்களில் ஏற்று



மதி செய்வது நின்றுவிட்டது. அதன் பயனாக 7,50,000 தொழிலாளிகள் யுத்த சேவை செய்யவோ, யுத்தப்பொருள்கள் தயாரிக்கவோ ஈடுபட்டுவிடுவார்கள்.

### பொதுமக்களின் தியாகம்.

தங்கள் பொருள்களைத் தியாகம் செய்வதற்கு கவர்ன்மெண்டார் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டதற்கு, ஜனங்கள் பூரா மனதுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 470 லக்ஷம்பேர்களிடமிருந்து ஏற்கனவேயே 4,00,00,00,000 பவுன்களுக்குமேலேயே வசூலாகியிருக்கிறது. அதாவது சராசரி தலைக்கு 79 பவுன் வீதம் கணக்காகிறது. சில்லரையாக மீதப்படுத்தப்பட்ட தொகை மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பாகம் ஆகிறது.

1919-ம் வருஷத்தில் வாரச் சம்பளம் பெற்றுவரும் 10 லக்ஷம் வேலைக்காரர்களில் சுமார் 20 லக்ஷம் பவுன்கள் வருமானவரி கட்டியிருக்கிறார்கள். 1941-ம் வருஷத்தில் வேலைக்காரர்களின் எண்ணிக்கை 5½ மடங்கு அதிகமாகிவிட்டது; அதாவது 55,00,000 பேர்கள் இருக்கிறார்கள். வசூலிக்கப்பட்ட தொகை 50 மடங்கு அதிகமாய்விட்டது.

உபரியாக கிடைக்கும் லாபத்தில் 100-க்கு 100-வீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. வருஷத்திற்கு 20,000 பவுனுக்கு மேலேயுள்ள வருமானத்திற்கு 50 சதவிகிதம் வருமான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. உபரி வரியும் சேர்ந்து 97½ சத விகிதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. 750-பவுன் வருமானமுள்ள கல்யாணமான ஒருவன் 33 சத விகிதம் வரி செலுத்துகிறான்; 6,250 பவுன் வருமானமிருக்கும்பொழுது அவன் 60 சத விகிதம் வரி செலுத்தவேண்டிவரும்.

1938—39-ல் தற்காப்புக்காக ஒரு பவுன் செலவு செய்தது என்றால், இப்பொழுது 1942-ல் பிரிடன் 16 பவுன்கள் வீதம் செலவு செய்துவருகிறது. 1942 ஜூன் மாதத்தில் ஒரு நாளைக்கு கவர்ன்மெண்டாரின் செலவு திட்டம் 1,50,00,000 பவுன்கள்.

### சாமான்களின் பிரிவினை பிரச்னை.

1940-ம் வருஷத்தில் பிரிடனுக்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பிரச்னை இருந்தது. 1941-ல் உற்பத்தி பிரச்னை அதிகமாகயிருந்தது. இப்பொழுது உற்பத்திப் பொருள்களை பல இடங்களுக்கும் ஏற்றி யனுப்பும் பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. 1941-ம் வருஷத்தில் கடைசி 6 மாதங்களில் நேசதேசக் கப்பல்களின் நஷ்டம் சராசரி மாதம் ஒன்றுக்கு 1,80,000 டன்கள். 1941-ம் வருஷத்தில் எதிரி 'யு' படகுகளின் தொந்தரவினால் ஏராளமாகக் கப்பல் நஷ்டம் நேரிட்டது. அந்தக் காலத்தில் ஏற்பட்ட நஷ்ட அளவுதான் இப்பொழுதும் ஏற்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், 1941-ம் வருஷக் கடைசியில் பிரிடிஷ் கப்பல்களும், அமெரிக்கக் கப்பல்களும் சேர்ந்து 250 லக்ஷம் டன் இருந்தது. 1942, ஜூன் மாத முடிவில் அச்சு நாடுகளுக்கு தங்களிடமிருந்த சொற்பக் கப்பல்களில் 70 முதல் 80 லக்ஷம் டன் எடையுள்ள கப்பல்கள் நஷ்டமாயின. கனடாவில் கட்டியனுப்பப்படும் கப்பல்கள், யுனைடெட் ஸ்டேட்ஸில் தயாரிக்கும் கப்பல்கள் இவைகளுடன் பிரிடனில் தயாரிக்கப்படும் கப்பல்களையும் சேர்த்துப் பார்த்தால் ஏராளமான கப்பல்கள் தேரும். இத்துடன் ஜெர்மன் 'யு' படகுகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளின் பேரில் அடிக்கடி வெடிகுண்டு போட்டு அழித்து வருவதால், 1943-ம் வருஷம் முடிவதற்குள்ளாக பிரிடன், நேசதேசங்கள் இவைகளின் மொத்தக் கப்பல்கள் முன்னைவிட 40 சத விகிதம் அதிகமாக ஆகிவிடும் என்று யுனைடெட் ஸ்டேட்ஸில் பிரசுரிக்கப்படும் "பார்ச்சூன்" (Fortune) சஞ்சிகையில் கணக்கிட்டு காண்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த உபரியான கப்பல்களைக் கொண்டு பிரிடன் மற்ற பிரச்னைகளைச் சாமர்த்தியமாக சமாளித்துக்கொண்டதைப் போல் இப்பங்கீடு பிரச்னையையும் வெற்றிகரமாகத் தீர்த்துவிடும். இவ்விதமாக எதிரிகள் பேரில் வெற்றி யடைந்துவிடலாம் என்று பிரிடன் திடமனது கொண்டிருப்பது மற்ற 28 நேசநாடுகளும் வெற்றி பெறுவதற்கு ஒரு ஆதாரமாகயிருக்கிறது.

**எகிப்து.**—எட்டு நாட்களில் டொப்ருக்கில் 7 தடவை பிரிடிஷ் தாக்குதல்கள் செய்யப்பட்டன. பெங்காஸி, மெர்ஸாமாட்ரூ, பூகா, எல்டாபா முதலிய இடங்களில் பிரிடிஷ் விமானப்படை தாக்குதல் செய்தது. எல் அலமீனுக்கு 500 மைல் தூரத்திலிருந்த கியாலோவில் இருந்த இதாலியப் படை பிரிடிஷ் மோட்டார் படையால் தாக்கப்பட்டது.

ருஷ்யாவிலிருந்து வெளியேறப்பட்ட போலிஷ் படை மத்தியக் கிழக்கில் உள்ள நேசதேசப் படையுடன் சேர்ந்துகொண்டது.

**விமானத் தாக்குதல்.**—ஸெப்டம்பர் 2உ கார்லஸ் ரூஹியில் 8,000 பவுண்டு குண்டுகளை பிரிடிஷ் விமானப்படை போட்டது. டஸ்ஸல்டார்பில் 10உ தாக்குதல் செய்யப்பட்டது. ஸெப்டம்பர் 19உ பிரிடிஷ் விமானங்கள் நாஸிகளின் உற்பத்தி ஸ்தலமான மியூனிச்சில் தாக்கப்பட்டது. எதிரிக் கடல்களில் சுரங்க வெடிகள் பாவப்பட்டன.

**பர்மா.**—பாமோ (Bhamo) அமெரிக்க விமானப்படை யந்திர பீரங்கிகளால் தாக்கப்பட்டு கதா (Katha), டிங்கி, வாயிவிங் என்ற இடங்களிலுள்ள எண்ணெய் தளங்களும், விமான தளங்களும் தாக்கப்பட்டன.

**வெண்டல் வில்கி.**—குபிஷெவ்விலிருந்து ஸெப்டம்பர் 20உ மாஸ்கோ வந்து சேர்ந்தார். ஸ்டாலினுக்கு ரூஸ்வெல்ட்டின் தனது செய்தியையும் கொண்டு வந்தார்.—“ஸ்டாலின்கிராட்டில் ருஷ்யப்படைகள் இருப்பதுபோல் அதை பிரிடிஷ், அமெரிக்கப் போர்முனை என்றும் சொல்லலாம். ஏனென்றால் யுத்தத்தில் உலகம் பூராதான் ஈடுபட்டிருக்கிறதே” என்றும் தனது சொந்த அபிப்பிராயத்தை வெண்டல் வில்கி அறிவித்தார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **14—9—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமானக்கூடம்.—ஸிடிஹனிஷ் (Sidi-Heniesh). | | | |
| | விமானச்சண்டை.—டொப்ருக் (Tobruk)குக் கருகாமையில். | இன்னும் 5 விமானங்கள் சேதமாயின. | | 2 விமானங்கள். |
| | **கிரீட் (Crete).** | | | |
| | கப்பல்துறை வசதிகள், கப்பல்கள்.—ஸுடா (Suda bay) விரிகுடாவில். | ஒரு கப்பல் தீப்பற்றியது; மற்றொன்று தாக்குண்டது. | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| **14—9—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமானக் கூடங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | ஜெர்மானியருக்குச் செல்லும் போக்குவரத்து.—ஸ்டாலின்கிராட் (Stalingrad) பிரதேசத்தில் சைனிய வரிசைகளுக்குப் பின்னால். | | | |
| | ஜெர்மானியர் கட்டிய பாலங்கள்.—டெரெக் (Terek) நதியில். | | | |
| | **தூரக்கிழக்கு—அலூஷியன் தீவுகள் (Aleutians).** | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்.—கிஸ்கா (Kiska) தீவிலுள்ள இருப்புகள். | | | |
| | **டெனிம்பர் தீவுகள் (Tenimber Islands).** | | | |
| | இரண்டு விரோதி சாமான் கப்பல்கள்.—ஸாம்லக்கி (Saumlaki). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—ஓவன் ஸ்டேன்லி (Owen Stanley) பிரதேசத்தில். | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான க்ருயிஸர்.—லோகிக்குக் கிழக்கே. | சேதமாயின. | | |
| **15—9—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள், செர்பர்க் (Cherbourg). | | | |
| | சுரங்க வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரக்கரையோரங்களில். | | | |
| | **லிபியா (Libya)—எகிப்து (Egypt).** | | | |
| | கட்டடங்கள், சிறு கப்பல் துறைகள்.—டொப்ருக் (Tobruk) துறைமுகத்தில். | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | அநேக விமானங்கள் சேதமாயின. | | 2 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **பர்மா (Burma).** | | | |
| | விமான நிலயம்.—மியிட்கியினா (Myitkyina). | | | 1 விமானம். |
| | நதியில் செல்லும் கப்பல்.—மாண்டலே (Mandalay)க் கருகாமையில். | படகுகள் தீப்பற்றியது. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 15—9—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—ஒவன் ஸ்டேன்லி (Owen Stanley) பிரதேசத்தில். | | | |
| | விமானக்கூடம்.—பூனு (Buna). | | | |
| | விமானம் பறந்து செல்லுமிடங்கள்.—பூகா (Buka). | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விமானக்கூடம், தரையிலுள்ள விமானங்கள்.—ராபால் (Rabaul). | | | |
| 16—9—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | பிரேஞ்சுக் கடற்கரையில் விமான எதிர்ப்பு.—பெர்க் (Berk)கிலிருந்து லெட்ரிபோர்ட் (Letreport) வரையிலும். | | | |
| | பைடர் விமான தளம்.—அபிவில்லி (Abbeville). | | 1 விமானம். | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr) பிரதேசத்தின் மத்திய பாகத்திலும் விஸ்பேடனி (Wisbaden)லும். | | | |
| | விரோதி ஸப்ளைக் கப்பல்கள்.—நார்வீஜியன் கடற்கரைக்கருகாமையில். | 2 கப்பல்கள் தாக்குண்டன. | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | விமானச் சண்டைகள்.—பிஸ்கே விரிகுடா (Bay of Biscay). | | | 1 விமானம். |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | கப்பல்கள் துறைமுகத்திலுள்ள வசதிகள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | விரோதி விமானமிறங்குமிடங்கள்.—பூகா (Fuka)வுக் கிடையே, மெர்ஸா மாட்ரு (Mersa Matruh). | | | |
| | லக்ஷியங்கள்.—எல்டாபா (El Daba) பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமானக் கூடங்களிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—ஒவன் ஸ்டேன்லி (Owen Stanley) பிரதேசத்தில். | | | |
| | **அலூஷியன் தீவுகள் (Aleutians).** | | | |
| | வேவு பார்த்தல்.—கிஸ்கா (Kiska). | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | கிஸோ (Gizo) தீவு. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 17—9—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ரோந்து—பிஸ்கே விரிகுடாவில் (Bay of Biscay). | | 1 விமானம். | 3 விமானங்கள். |
| | இரவில்.—கப்பல் துறைகள்—போர்டோ (Bordeaux). | | | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | கப்பல்கள், கப்பல் துறை பிரதேசங்கள்—டொப்ருக் (Tobruk). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்—ஹால்பாயா (Halfaya) கணவாயில். | | | |
| | லக்ஷியங்கள்—எல்டாபா (El Daba) பிரதேசம். | | | |
| | விமான எதிர்ப்புகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | விரோதி வியாபாரக் கப்பல்கள்—டொப்ருக் (Tobruk) க்கு வடக்கே. | அநேக கப்பல்கள் தாக்குண்டன. | | |
| | 2,000 டன் நிறையுள்ள வியாபாரக் கப்பல்—மத்தியதரைக்கடலி (Mediterranean) ன் மத்திய பாகம். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்—விமான நிலயத்திலுள்ள விமானங்கள்—யுத்தப் பிரதேச முழுவதிலும். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதியின் கட்டடங்கள்—ரபால் (Rabaul). | பெருந் தீக்கள் கிளம்பின. | | |
| | விமான நிலயம்.—காஸ்மாடா (Gasmata). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான ஸப்ளை மார்க்கங்கள், ஏற்றுமதி இறக்குமதி கட்டடங்கள்—பூனு (Buna). | | | |
| | விரோதி ஸ்தானம்—ஒவன் ஸ்டான்லி (Owen Stanley) பிரதேசம். | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | கிஸோ தீவு (Gizo Island). | | | |
| 18—9—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | விரோதிக் கப்பல்கள்—டச்சுக் கடற்கரைக்கருகாமையில். | | | |
| | ரயில்வே லக்ஷியங்கள்—வட பிரான்ஸ் (France). | | 5 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 18—9—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | விமானப் போர்-யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | விரோதி டாங்கிகள், கவசம் பூண்ட வண்டிகள்—யுத்தப் பிரதேசத்தின் பின்புறம். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்—ருஷ்யப் போர் முனை முழுவதிலும். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதியின் ஸ்தாபனங்கள்—ராபால் (Rabaul). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | படகுகள், சாமான் கிடங்குகள்—பூனு (Buna). | பலத்த சேதம். 15 படகுகள் நாசமாயின. | | |
| | ஸப்ளை தளங்கள், கட்டடங்கள்—லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | | |
| | விரோதி ஸ்தானம்—ஓவன் ஸ்டான்லி (Owen Stanley) பிரதேசம். | | | |
| 19—9—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—முனிச் (Munich). | | | |
| | தொழிற்சாலைகள்-ஸார் (Saar) பள்ளத்தாக்கில், | | | |
| | ரயில்வே எஞ்ஜின்கள், சாமான் வண்டிகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஆக்கிரமித்த பிரதேசம். | | | |
| | விரோதிக் கப்பல்கள்—டச்சுக் கடற் கரைக்கருகாமையில்; | | 10 பாம்பர் விமானங்கள். | |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | விமானச் சண்டைகள்-ஸிஸிலி (Sicily). | | | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt).** | | | |
| | துறைமுகம் வசதிகள், மற்ற லக்ஷியங்கள்—டொப்ருக் (Tobruk). | | | |
| | அச்சு நாட்டினரின் முகாம்கள்—எல் அலமீனிலிருந்து எல்டாபா வரை (El-Alamein and El Daba). | | | |
| | ஒரு பெரிய கப்பல்-மெர்ஸா மாட்ருவுக் (Mersa Matruh) கருகாமையில். | | | |
| | ரஸ்தா—டொப்ருக் (Tobruk) கிலிருந்து பார்டியா (Bardia) வரை. | | | |
| | விமானமிறங்குமிடம்-எல்லைப்புறத்திற்கு மேற்கே. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும். | செப்டம்பர் 12 முதல் 19 வரையுள்ள வாரத்தில். | 205 விமானங்கள். | 310 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 19—9—42. (சனிக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விமான எதிர்ப்பு பீரங்கி, ஸப்ளைப் போக்குவரத்துக்கான கட்டடங்கள்—லே (Lae). | | | |
| | விமானக்கூடம்—பூகா (Buka). | | | |
| | ஸப்ளைப் பொருள்கள் சேகரித்து வைத்திருக்கும் கிடங்கு—பூனு (Buna). | | | |
| | விரோதி ஸ்தானங்கள்—கொக்கோடா (Kokoda) பிரதேசத்தில். | | | |
| | **விடியாஸ் (Vitiaz) ஜலசந்தி.** | | | |
| | ஒரு சாமான் கப்பல்—ஜலசந்தியில். | | | |
| | **கூட்டெனப் (Goodenough) விரிகுடா.** | | | |
| | விரோதிப் படகு—விரிகுடாவில். | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| 20—9—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—கப்பல்—டச்சுக் கடற் கரைக்கருகாமையில். | | | |
| | சுரங்க வெடிகள் போடுவது-விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya), எகிப்து (Egypt)** | | | |
| | டொப்ருக் (Tobruk). | | | |
| | விமானமிறங்குமிடங்கள்—எல்டாபா (El Daba). | தீக்கள் கிளம்பின. | | |
| | லக்ஷியங்கள்—ஸொலூம் (Sollum) பிரதேசம். | | | |
| | மெர்ஸா மாட்ரு (Mersa Matruh). | | | |
| | எல்டாபா—(El Daba)வுக்கு மேற்கேயுள்ள ரஸ்தா. | | | |
| | விமானங்களின் ரோந்து.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | குடிசைகள், பாலங்கள், ஸப்ளைப் பொருள்களின் கிடங்குகள்.—கொக்கோடா (Kokoda). | பெரிய கிடங் தீப்பற்றியது. | | |
| | சமுத்திரக்கரையோரமுள்ள லக்ஷியங்கள், விமான எதிர்ப்பு பீரங்கி ஸ்தானங்கள், கட்டடங்கள்.—லே (Lae). | | | |
| | விரோதி ஸப்ளைக் கட்டடங்கள்.—பூனு (Buna). | | | |
| | ரோந்து.—ஓவன் ஸ்டேன்லி (Owen Stanely) பிரதேசம். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**15—9—42.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமான நடமாட்டமே இல்லை.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).
ருஷ்யப் போக்குவரத்துகள்.—ஸ்டாலின் கிராடு (Stalingrad)க்குக் கிழக்கே.

**தூரக்கிழக்கு (Far East)**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**16—9—42.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

பகலில்.—இரண்டு இடங்கள்.—இங்கிலாந்தின் (England) தென்கிழக்குக் கடற்கரை.
இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia)வின் பாகங்கள்.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

மால்டா (Malta). — 1 விமானம்.

**17—9—42.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இரவில்.—ஒரு இடம்.—தென் கிழக்கு இங்கிலாந்து (England). — 1 விமானம்.

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

மால்டா (Malta). — 1 விமானம்.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

**18—9—42.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).
ருஷ்யர்களின் போக்குவரத்துகள்.—வால்காவுக் (Volga)குக் கிழக்கே.

**நியூ கினி (New Guinea).**

மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். சேதமில்லை.

**9—9—42.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இடங்கள்.—இங்கிலாந்தி (England)ன் வட கிழக்குக் கடற்கரை. — 2 விமானங்கள்.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

**தூரக்கிழக்கு (Far East).**

தகவல் கிடைக்கவில்லை.



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**20—9—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

**ஸாலமன் (Solomon) தீவுகள்.**

கூடல் கானர் (Gudal Canar).

**21—9—42.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

வேவு பார்த்தல்.—மால்டா (Malta).

**ருஷ்யா (Russia).**

ஸ்டாலின்கிராட் (Stalingrad).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நடமாட்டமேயில்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ஹத்துமீறி நடப்பதால் விளைந்த பயன்.** இந்தியக் கலவரங்களைப்பற்றி மத்திய சட்டசபையில் நடந்த விவாதமும், அதைப் பற்றிகேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு ஸர்க்கார் அளித்த விடையும், பம்பாயில் காங்கிரஸ் நிறைவேற்றிய இந்திய ஸர்க்கார் உடனே வாபஸ் ஆகவேண்டுமென்ற தீர்மானத்தினால் விளைந்த நாச அமளியின் பயங்கரத் தன்மையைத் தெரியப்படுத்துகின்றன. இக்கலவரங்களால் இந்தியாவிற்கு ஏற்பட்ட சிரமம், சேதம், அவமானம் மிக அதிகமாக இருக்கின்றன. 550 தபாலாபீஸ்கள் தாக்கப்பட்டதில் 53 கொளுத்தப்பட்டன. 200 மிக அதிக சேதத்திற்குள்ளாயின. ஒரு லக்ஷ ரூபாய்க்கு தபால் ஸ்டாம்புகள் கொள்ளையிடப்பட்டது. 250 ரயில் ஸ்டேஷன்கள் தாக்கப்பட்டு, 24 இடங்களில் ரயில்கள் கவிழ்க்கப்பட்டு மொத்தம் ஏற்பட்ட நஷ்டம் ஒருகோடி ரூபாயாகும். போலீஸார் சுட்டதால் 340 பேர் கொல்லப்பட்டனர், 850 பேர் காயமடைந்தனர். ராணுவத்தினர் சுட்டதால் 318 பேர் கொல்லப்பட்டு, 153 பேர் காயமடைந்தனர். சிறிதும், பெரிதும் மொத்தத்தில் 70 போலீஸ் ஸ்டேஷன்கள் தாக்கப்பட்டதில் 45 நாசமாயின. கச்சேரிகள், கஜானுக்கள் உள்பட 85 ஸர்க்கார் கட்டடங்கள் தாக்கப்பட்டதில் பல சேதத்திற்குள்ளாயின. முனிஸிபாலிடி, பொதுஜன சொத்து இவைகளுக்கு நேர்ந்த நஷ்டம் மிக அதிகம். ஆகவே இந்தக் கலவரங்களால் விளைந்த சேதம் மிக அதிகம். இந்த விஷமத்தை ஒருவரும் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது. பொதுவாக இந்தியர்களுக்கும் அவர்களின் வீடு, சொத்து முதலியவைகளுக்கும்தான் சேதமேற்பட்டது. அவைகளை ஈடுபடுத்தவோ பழுது பார்க்கவோ சொந்தமாகத் தான் செலவு செய்து கொள்ள வேண்டும்.

எதிரி நமது வாயில் வந்திருக்கும்போது அவனைத் தாக்க இருக்கும் துருப்புகளைக்கொண்டு உள்நாட்டுக் கலகத்தை அடக்கவேண்டியிருக்கும் விஷயத்தை நினைத்தால், உள்நாட்டு மந்திரி ஸர் ரெஜினால்டு மாக்ஸ்வெல் சொல்லும் விதமாக, மிகவும் அதிகமான வருத்தத்தைத் தரும்.

ஸர் ரெஜினல்டு மொழிகளின்படி 'இந்தியத் துருப்புகளின் கீர்த்தி எக்கண்டமும் அதிகமாகி, வெற்றியும், இந்தியர்களின் லக்ஷியங்களும் அதிகம் கைகூடி வரவர, ஒரு அரசியல் கட்சி, தனது லக்ஷியங்களுக்காக, எதிரிக்கு ஏற்படும் சௌகரியங்களை கவனியாது, கலகச் செய்கைகளில் ஈடுபட்டிருக்கும் விஷயம்' எல்லாவற்றைக் காட்டிலும் அதிக வருத்தத்தை உண்டாக்கும்.

வி வி வி வி வி வி வி

**மாரிகால எச்சரிப்பு.** டெஹ்ரானுக்கு 60 மைல் வடகிழக்கில் பெர்ஸியாவில் உள்ள காகஸஸின் எல்பர்ஸ் பகுதியில் டிமவென்டு (Demavend) சிகரம் இருக்கிறது. இந்தச் சிகரத்தில் வழக்கத்திற்கு 6 வாரம் முன்னாடியே பனி விழுவதிலிருந்து நேசதேசங்களுக்கு வெற்றி கிடைக்கும் அறிகுறி இருப்பதாக பாரஸீகர்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கைக்குள்ள ஆதாரம் எப்படியிருந்தாலும் இந்தப் பிரதேசத்திலும் மாஸ்டக்கிலும் பனி முன்னாடியே ஏற்பட்டதிலிருந்து மாரிகாலம் சீக்கிரமாயும் கடுமையாயும் இருக்குமென்று தெரிகிறது. தற்சமயத்தில் மலைச்சிகரங்களிலேயேதான் பனி இருக்கிறது. ஆனால் பள்ளத்தாக்குகளிலும் ஆரம்பித்தால் சென்ற மாரிகாலத்தில் அகப்பட்டுக்கொண்ட மாதிரி ஜெர்மானியர் இப்போதும் மாட்டிக்கொள்ளுவார்கள். முன்னேறவோ, பின்வாங்கவோ முடியாதுபோகும். எதிரில் 800 மைல் நீளம், 30 மைல் அகலமுள்ள காகஸஸ் தொடரின், புதரும், பனியும், சகதியும் காணப்படும். பின்புறம், யூக்ரேனின் சேற்றுப்பாங்கான இடம் இருக்கும்.

வி வி வி வி வி வி வி

**மடகாஸ்கர்.** லவாலையும் அவனது வழக்கத்தையும் அறிந்துகொண்டவர்களுக்கு மடகாஸ்கர் கவர்னரான அன்னட் முன்பு சமாதானத்தை விரும்பி, தற்சமயத்தில் சண்டையைத் தொடங்குவது ஆச்சரியமாக இருக்காது. கடந்த ஜூன் மாதத்தில் டீகோஸுரட்டை பிரிடிஷார் பூரா வியாபித்துக் கொண்டதும் அத்தீவில் அச்சுநாட்டினர் உட்புகுராமல் செய்ய ஆங்கிலேய-விஷி சமாதான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் இவனது துரோக எண்ணத்தினால் ஜப்பானிய விமானங்களுக்கும் நீர்மூழ்கிகளுக்கும் வசதியளிக்கப்பட்டது. மேலும் ஜெர்மன் ஏஜென்டுகளும் வர ஆரம்பித்தனர். மடகாஸ்கரையும் இந்தோ-சைனாவைப்போல் செய்வதே லவாலின் நோக்கம். இதற்காக அச்சுநாட்டினருடன் உறவு கொண்டாடி வருகிறான். தற்சமயத்தில் அன்னட்டின் யுத்த நடவடிக்கையால் பிரிடிஷாருக்கு ஒருவித கெடுதியும் விளையாது. இன்னும் சில பாலங்களை உடைத்து விடலாமே தவிர மும்மரமாக அவனால் எதிர்த்து நிற்க முடியாது. சண்டைக்கு லாயக்கான பேர்கள் அவன் வசத்தில் இல்லை. சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி அன்டனானரிவோவில் பிரிடிஷ் துருப்புகள் புகுந்துவிட்டன. இது தான் அத்தீவின் தலைநகர்.

வி வி வி வி வி வி வி

**நியூ கினி.** கொக்கோடாவில் நேசதேசப் படையை ஒதுக்கிக்கொண்டு ஓவன் ஸ்டான்லி மலைத் தொடர் வரை ஜப்பானியர் சென்றும் தனது லக்ஷியத்தையடையவில்லை. இதுவரையில் பிரதேசம் அவர்களுடைய யுத்த முறைக்கு உதவியதாக இருந்தாலும் எதிரிலுள்ள இடம் பாதகமானது. 12 மைல் இடத்தைத் தாண்ட அவர்களுக்கு 6 வாரம் பிடித்தது. இனி 50 மைல் தூரமிருக்கும் மோர்ஸ்பியை அடைவது சுலபமான காரியமில்லை. மெக் ஆர்தர் எதிரியைத் தடுக்க தகுந்த விதமாக பாதுகாப்பு செய்து வைத்திருந்தார். மில்னி குடாவிலிருந்து எதிரி கழட்டிச் சென்றதிலிருந்து இவ்விவரங்களை நன்றாகத் தெரிந்துகொள்ளலாம்.

வி வி வி வி வி வி வி

**ஸாலமன் தீவுகள்.** விமான தளங்களை அமைக்க கூடல்கனால் அதிகவசதியான இடம். தற்சமயத்தில் விமான உதவியில்லாததால் கப்பல்களை உபயோகித்துக்கொள்ள முடியாததால் அமெரிக்கர் வசத்தில் இருக்கும் ஆறு தீவுகளையும் திரும்பப் பிடிக்க



ஜப்பான் பிரயத்தனப்படலாம். அமெரிக்கர் வியாபித்துக்கொண்ட தீவுகளை முதலில் கொஞ்ச நாள் ஜப்பானியர் விமான மூலம் தாக்காமலிருந்தனர். ஆகஸ்டு முடிவில் ஒரு தடவை பெரிய முயற்சி எடுத்துக்கொண்டனர். சென்ற வாரத்திலும் ஒரு தடவை படையெடுத்தனர். ஆனால் உடனே திருப்பியடிக்கப்பட்டார்கள். அமெரிக்க சட்ட இலாகாத் தலைவரான பிளாண்டி 'பஸிபிக்கில் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்தியிருக்கிறோம். அதை சிரமப்பட்டு நிலைநாட்டிக்கொள்ளவேண்டும்' என்றார். இந்த இடத்தில் அடைந்த அமெரிக்க வெற்றிகள் ஒரு பெரும் வகையான முன்னேற்றப் போராகாது. முக்கியமாக ஆஸ்திரேலியாவின் தற்காப்புப் போர்தான். இருந்தாலும் தென் மேற்கு பஸிபிக்கில் ஜப்பானியரின் பாதுகாப்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

கூடல் கனாலுக்கு 200 மைல் தூரத்திலுள்ள கஜிஜோ, ரிகடா என்ற தீவுகளிலிருந்து எதிரி தாக்குதலைச் செய்கிறான். அமெரிக்க பாம்பர்களும், டார்பிடோ விமானங்களும் ஜப்பானிய விமானங்களையும் சண்டைக் கப்பல்களையும் தாக்கி வருகின்றன. டுலாகிக்கு வடகிழக்கில் இரண்டு ஜப்பானிச் சண்டைக் கப்பல்கள் தாக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ஸெப்டம்பர் 15, 16, 17, தேதிகளில் ரிகடா குடா தாக்கப்பட்டது. 16, 17 தேதிகளில் ஜிஜோ தீவிலுள்ள எதிரிக் கப்பல்கள் தாக்கப்பட்டன. ஸாலமன் தீவிலுள்ள அமெரிக்கப் படைக்கு ஸப்ளை போய் சேர்ந்துகொண்டேயிருக்கிறது. இதிலிருந்து அமெரிக்கர்களின் நிலைமை பலப்பட்டிருக்கிற விஷயம் தெரிகிறது.

வி வி வி வி வி வி வி

**யூரோப்பா.** பிரமாதமாக ஆடம்பரப்பட்ட ஐரோப்பிய வாலிபர் இயக்கத்தின் கூட்டம் வியன்னாவில் நடைபெறுகிறது. அச்சுநாட்டு பிரசாரத்தின்படி அவ்வமயம் ஹிட்லரும் முஸோலினியும் சந்தித்த விஷயம் தெரியவில்லை. இதற்குள்ளாக கோயபெல்ஸ் அந்த இயக்கத்திற்கு எருதின் பேரில் ஒரு பெண் சவாரி செய்கிற மாதிரி ஒரு பதக்கத்தைப் பரிசளித்திருக்கிறான். அந்த அடையாளம் அந்த இயக்கத்தின் ஆத்ம சக்தியையும் அரசியல் தன்மையையும் தெரியப்படுத்துகிறதாம். ஆனால் இந்த இரண்டு அம்சங்களும் எங்கே இருக்கின்றன என்பதுதான் தெரியவில்லை. ஒருக்கால் அதில் காணப்படும் எருது தேசங்களின் எல்லையாகிற வேலிகளைத் தாண்டி, எல்லா அரசியல் தர்மங்களையும், ஸர்வதேசச் சட்டங்களையும் காலால் துகைத்துக்கொண்டிருக்கும் நாஸி மிருகத்தைக் குறிக்கலாம். 'யூரோப்பா என்பது புராணத்தில் சொல்லப்பட்ட' போனிக்ஸின் புதல்வியாக இருக்கலாம். இவளை நாஸி மிருகம் தூக்கிச்சென்றாலும், போனிக்ஸ் பறவை மறுபடி உயிர் பெறுவது போல் ஐரோப்பாவும் பழைய ஸ்திதியை அடையும். ருஷ்யச் சமவெளிகளில் வாலிபர்களை ஹிட்லர் பலி கொடுக்கும்போது, வாலிபர்களின் நன்மைக்காக ஒரு இயக்கத்தை ஆரம்பிப்பது அஸுரச் செய்கையாகும். ஐரோப்பா வயிற்றுக்கில்லாமல் அவஸ்தைப்படும் இந்நாளில் இந்த இயக்கம் சாதகத்தையளிக்காது. அல்லது வருங்காலத்தில் விரும்பியிருக்கும் க்ஷேமத்தையாவது தராது. நேசநாடுகள் வெற்றிபெற்று தங்களை விடுவிக்கும் நாளையே ஐரோப்பிய நாடுகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. அதுவரையில் ரகசியக் கலகங்களில் ஈடுபட்டிருக்கின்றன. இவைகளையடக்கச் செய்யப்படும் நாஸி முயற்சிகளும் பயனடையவில்லை.

ஐரோப்பாவில் தற்சமயம் நடந்து கொண்டிருக்கிற கூட்டமாகச் செய்யப்படும் கொலைக்கு ஒரு உதாரணம் கிடைத்திருக்கிறது.

விஷி, ஸெப்டம்பர் 18உ பாரிஸில் ஜெர்மன படைத் தலைவனாயிருக்கும் ஜெனரல் ஸ்டல்ப்னாகல் அறிவிக்கிறான். ஜெர்மன் துருப்புகளின் பேரில் செய்யப்பட்ட தாக்குதலுக்கு உடந்தையாக இருந்ததற்காக 116 'கம்யூனிஸ்டு கலகக்காரர்கள்' சுடப்பட்டனர். ஏராளமான பேர்கள் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டனர். எல்லாவித நாடகக் கொட்டகைகள் மூடப்பட்டன. ஜெர்மானியர் அல்லாதார் மாலை 3-மணி முதல் நடுநிசி வரையில் ஞாயிற்றுக்கிழமைகளில் தெருக்களில் நடமாடக்கூடாது.

**அமெரிக்க சமாசாரங்கள்.** 1. ஒத்துழைப்பு.—பி. பி. ஸி.யில் வால்டர் லிப்மான் என்பவர் சொன்னவிதமாக அமெரிக்காவிற்கும் பிரிடனுக்கும் உள்ள சம்பந்தம் அதிக நெருக்கமாக இருக்கிறது. வித்யாசமில்லாத ஒற்றுமை ஏற்பட்டிருப்பதால் எது சொந்த விஷயமென்றும் அல்லது அயல் நாட்டு விஷயமென்றும் காணமுடியாது.

2. யுத்த சாமான் உற்பத்தி.—யுத்த சாமான் உற்பத்தி இலாகா சேர்மன் டோனல்டு நெல்ஸன செப்டம்பர் 17உ சொன்னபோது 'அமெரிக்கச் சாமான்களின் உற்பத்தி திட்டம் பூர்த்தியடைந்துவிட்டது' என்றார். ஆனால் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டு சமீபத்தில் சொல்லும்போது உற்பத்தி சக்தியில் 50 சத விகிதம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகச் சொன்னார். மிஸ்ட்டர் நெல்ஸன், உற்பத்தி இலாகாவின் மேற்பார்வையில் செய்யப்பட்ட சாமான்கள் பூர்த்தியடைந்ததாயும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் உற்பத்தி திட்டம்பூரா முடிவடைந்து விடுமென்று தான் எடுத்துக் கூறியதாக விவரித்தார்.

3. சைனிய பலம்.—அமெரிக்கச் சைனியத்தின் ஸர்வீஸ் டைரக்டரான மேஜர் ஜெனரல் ஹெர்ஷி செப்டம்பர்மீ 20உ அறிவித்தபோது அமெரிக்கச் சைனியம் 40,00,000 பேர் கொண்டிருப்பதாயும் இவ்வருஷ முடிவில் 4,50,00,00 பேர் பூர்த்தியாகி விடுமென்றும், 1943 முடிவில் ஒரு கோடியாகிவிடுமென்றும் சொன்னார்.

4. விமான பலம்.—மற்ற நாடுகளைக் காட்டிலும் அமெரிக்காவில் அதிகமான விமான ரகங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவை எல்லாவித போர்முனைகளுக்கும் லாயக்காக அமைந்திருக்கின்றன. ஒரு அங்கத்தினருக்கு விடையளிக்கையில் கர்னல் நாக்ஸ் அலாஸ்காவில் உள்ள 'கப்பற்படையின் விமானக் கணக்கை தெரிந்துகொள்ள வேண்டுமானால் நடக்கும் சண்டையிலிருந்து நீங்களே தெரிந்து கொள்ளலாம்' என்றார்.

மொத்தம் 45,00,00 பவுனுக்கு 3 பெரிய சாமான் விமானங்களை மாதிரிக்கு மிஸ்ட்டர் ஹென்ரி கெய்ஸர் கட்டுகிறார்.

வி வி வி வி வி வி வி

**கலபகோஸ் தீவுகள் (Galapagos).** ஸூயஸ் கால்வாயைப்போல் பனாமா கால்வாயும் முக்கியமானதுதான். இக்கால்வாயைப் பாதுகாப்பது அமெரிக்கக் கண்டத்தின் பாதுகாப்பிற்கு முக்கியமானது. அதைப் பாதுகாப்பதில் மெக்ஸிகோ, கூபா, ஹோன்டுராஸ், பனாமா, மேற்கிந்தியத் தீவுகள், பிரஸீல், அமெரிக்க ஐக்கிய நாடுகள் யாவும் ஈடுபட்டிருக்கின்றன. மார்டின்கூவையும், கூடலோப்பையும் நேசநாடுகள் ஆக்கிரமித்துக் கொண்டதால் அட்லாண்டிக் பக்கத்திலும் பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், பஸிபிக் பக்கத்தில் குறைவாக இருக்கிறது. அதற்காக ஸலீனாக்ருஸையும், மனி பென்னியையும் அமெரிக்கா வியாபித்துக்கொண்டு தளங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் கலபகோஸ் கூட்டத்தையும் வியாபித்துக்கொண்டதால் பஸிபிக் பாதுகாப்பு பூர்த்தியடைந்திருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**பிரிடிஷ் கப்பற்படை** எப்போதைப் போல பலமுள்ளதாகவே இருக்கிறது. முன்னைவிட அதிக பலம் பெற்றிருக்கிறதென்றும் சொல்லலாம். செப்டம்பர் 20-ம்உ ஷெப்பீல்டில் கப்பல் மந்திரி A. V. அலெக்ஸாண்டர் பேசும் போது யுத்தக் கப்பல்களும், விமானம் தாங்கிகளும், க்ரூயிஸர்களும் கடந்த 27 மாத காலத்தில் புதுப்பிக்கப்பட்டனவென்றும் நாசகாரிகள் பூரா கட்டப்பட்டதென்றும், சொன்னார். 5-வது கிங் ஜார்ஜ் கப்பல் இனத்தைச் சேர்ந்த அன்ஸன் (Apson), ஹோவா (Howe) என்ற இரண்டு புதிய கப்பல்கள் கட்டப்பட்ட தகவலும் கிடைத்திருக்கிறது. ஒவ்வொன்றும் 35,000 டன்கள். விமானத் தாக்குதல் நேராமல் இருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளில் உள்ள 14 அங்குல பீரங்கிகள் அதிக தூரம் சுடக்கூடியவை. 15 அங்குல பீரங்கிகளைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்தவை. 29,00,000 பவுன் பொருமானமுள்ளவை. லயன், டிமாரி என்ற 40,000 டன் கப்பல்களும் பூர்த்தியடைந்து வருகின்றன.



**இந்தியக் கப்பற்படை.** ராணுவ ரகசியங்களை உத்தேசித்து இந்தியக் கப்பற்படையின் அபிவிருத்தியானது ஒரு ரகசியமான விஷயமானாலும், அது சமீப காலமாக அதிகமாக விருத்தியடைந்திருக்கிற விஷயம் தெரிய வருகிறது. ஒரு மாதத்திற்கு ஒரு கப்பல் வீதம் அதிகரிக்கிறது. புதிய பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. புதிய பீரங்கிப் பயிற்சி வகுப்புகளும், டார்பிடோ பள்ளிக்கூடமும் துவக்கப்பட்டன. இந்தியக் கப்பல் தளங்களும் விருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. கப்பற்படைக்கு ஆயிரக் கணக்கில் ஆட்கள் சேர்ந்திருக்கின்றனர். கப்பல் தொழிலாளர் சங்கம் திருப்திகரமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் சம்பளமும் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தியக் கப்பற்படை உத்தியோகஸ்தர்களும் பிரிடிஷ் கப்பற்படை உத்தியோகஸ்தர்களைப்போல் ஒரே மாதிரியான கௌரவத்துடன் அமைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தியக் கப்பற்படையின் உத்தியோகஸ்தரான அட்மிரல் ஸர் ஹெர்பர்டு பிட்ஸ் ஹெர்பர்டு, தேசிஸ் கப்பல் இலாகாவைப் பார்வையிட்டு பம்பாயில் செப்டம்பர்மீ 19உ பத்திரிகைக்காரர்களிடம் அறிவித்ததாவது :—'இவ்வாரத்தில் பம்பாயில் நடந்த முன்னேற்றத்தைப்பற்றி தெரியப்படுத்த விரும்புகிறேன். பயிற்சிபெற்ற எல்லா வேலைக்காரர்களும் அதிக உணர்ச்சியைக் காண்பிக்கின்றனர். எப்பேற்பட்டவனுக்கும் அங்கு நிகழ்ந்த முன்னேற்றம் திருப்தியை அளிக்கும்.

"H. M. S. 'டெல் ஹௌஸி' கப்பலில் அநேக ஆயிரக்கணக்கான மாலுமிகளுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

"அந்தக் கப்பலில் சந்தோஷமாகவேலையில் ஈடுபட்டிருக்கும் மாலுமிகளைப் பார்த்தால் தேனடைக்குள் தேனீக்கள் மொய்ப்பதுபோல் காணப்படும். மாலுமிகளின் தொழிலில் ஒவ்வொரு பகுதிக்கும் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. பயிற்சி கற்றுக்கொடுப்பதற்குப் பாடங்கள் பலவகைகளாகவும், உற்சாகம் அளிக்கக்கூடியவைகளாகவும் திட்டப்படுத்தப்பட்டிருக்கிறது.

"அதில் சமிக்ஞை செய்ய கற்றுக்கொடுக்கப்படும் வகுப்பைப்பற்றி சொல்ல வேண்டியது அவசியம். இதில் ஆயிரக்கணக்கான சைகை செய்வோர்களும், உத்தியோகஸ்தர்களும், பிரிடிஷ் இந்தியக் கப்பற்படையிலும், பிரிடிஷ் கப்பற்படையிலும் சேர்ப்பதற்கு பயிற்சியளிக்கப்படுகிறார்கள். முற்றிலும் நவீன முறையில் அதாவது கொடி காட்டுவது, தந்தி முறைப்படியும், ரேடியோ முறைப்படியும் சமிக்ஞை செய்யக் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

"பீரங்கிப் பயிற்சிப் பள்ளிக்கூடம் நூதன முறையில் மேலான சாதகம் கொடுக்கும்படியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் உத்தியோகஸ்தர்களும், படை வீரர்களும் பீரங்கிப்படைப் போரில் நவீன தந்திரங்களெல்லாம் கற்றுக் கொள்ளுகிறார்கள். நவீன முறையில் கட்டப்பட்ட கப்பலையும் அதிலுள்ள ஆயுத பலத்தையும் கையாளத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

## வெகுநேர்த்தியான பிரயத்தனங்கள்.

"பிரிடிஷ் இந்தியக் கப்பற்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிக் கப்பலை வேட்டையாடத் தகுந்த நவீன கப்பல் ஒன்றில் கடலில் செல்லக்கூடிய அதிர்ஷ்டம் எனக்கு நேர்ந்தது. அது நேர்த்தியான சிறு கப்பல். எதிரி நீர்மூழ்கிகளை சந்தித்தால் அவைகளை அடியோடு அழிக்கக்கூடிய தன்மையுள்ளது.

"வியாபாரக் கப்பற்படை எப்படி தற்காப்பு ஆயுதங்களை உபயோகப்படுத்த வேண்டுமோ அதை உத்தியோகஸ்தர்களுக்கும் மாலுமிகளுக்கும் கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடத்தை நான் போய் பார்த்தபொழுது மற்ற எல்லாப் பள்ளிக்கூடங்களைக்காட்டிலும் அது எனக்கு அதிக உற்சாகம் கொடுத்தது. இதில் சென்ற 12 மாதங்களில் 16,000-க்குக் குறையாத உத்தியோகஸ்தர்களும் மாலுமிகளும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். பிரிடிஷ் இந்தியக் கப்பற்படையின் கப்பல்கள் தங்குமிடத்தை நான் பார்த்தபொழுது அங்குள்ள நிலைமை திருப்திகரமாக இருந்தது. பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை, பிரிடிஷ் கப்பற்படை, நேசதேசக் கப்பற்

படை இவைகளைச் சேர்ந்த கப்பல்கள் பழுதுபார்க்கப்பட்டு வந்தன. 8,000 தொழிலாளிகள் தங்களால் முடிந்த வரையிலும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் யுத்தப் பிரயத்தனத்தில் இந்த முக்கியமான பகுதியில் அவர்கள் செய்யும் அருமையான பிரயத்தனங்கள் எனக்கு அதிக பெருமையை உண்டாக்கின.

“பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை விஸ்தாரமடைந்து வருவதும் வெகு திறமையுடன் முன்னேறிவருவதும் கேட்பவர்களுக்குத் திருப்தியளிக்கக்கூடியது. அதிலுள்ள உத்தியோகஸ்தர்களும், மாலுமிகளும் அதிக ஆவலாகவும், ஊக்கமாகவும் இருக்கிறார்கள். எத்தகைய பெரிய பிரயத்தனங்களைச் செய்யும்படி அவர்களைக் கேட்கும் பக்ஷத்திலும்கூட அவர்கள் தவறமாட்டார்கள்.

## அயல் நாட்டுத் தபால்கள்.

“புதிதாகச் சேருபவர்களில் 2,000 பேர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு ஒரு புதிய டெப்போ இருக்கிறது. இமைப்பொழுதில் மந்திர சக்தியினால் உண்டாக்கியது போல் கப்பற்படைக்கு இந்திய வாலிபர்கள் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறார்கள்.

“அயல் நாட்டிலிருக்கும் இந்தியப் போர்வீரர்களுக்கும் தபால்கள் கொண்டுபோய்ச் சேர்க்கும் நடவடிக்கை எப்படியிருக்கிறதென்று சொன்னால் இந்தியாவிலுள்ள எல்லோருக்கும் உற்சாகம் அளிக்குமென்று எனக்குத் தெரியும். தபால்கள் வந்து சேருவது நமது துருப்புகளின் உணர்ச்சி விசேஷப் பயனைக் கொடுக்கிறது. அவர்களுக்கு ஏற்படும் ஆறுதலுக்கும், திருப்திக்கும் இது முக்கியமானது. கப்பற்படை இலாகாவும், ஒவ்வொரு மாதத்திற்கும் அயல் நாட்டிலிருக்கும் நமது துருப்புகளுக்கும் 16,00,000 தபால்கள் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு திறமையிருப்பதைக் குறித்து சந்தோஷமடைகிறது.

“நமது திட்டத்தில் விஸ்தாரமாக எடுத்துச் சொல்லக்கூடாதென்பதற்குக் காரணங்கள் யாவருக்கும் தெரிந்தது. ஆனால் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்ததில் இந்த வாரம் எனக்கு மிகவும் திருப்திகரமாக இருந்தது. ஒவ்வொரு இடத்திலுமிருந்த பிரிடிஷ் இந்தியக் கப்பற்படையிலுள்ளவர்கள் காட்டி வந்த ஆர்வம் எனக்கு மிகவும் திருப்தியை அளித்தது.

“ஆயிர வருஷங்களுக்கு முன் இந்தியா, ‘கடலாதிக்கம் பெற்ற தேசமாக இருந்தது. ஆகையினால் நாங்களும், நீங்களும் சேர்ந்து 1,000 வருஷங்களுக்கு முன் இருந்த மாதிரி இப்பொழுதும் புகழ் பெற்றிருக்கும்படி செய்யவேண்டியது அவசியம்.

பிரிடிஷ் இந்தியக் கப்பற்படையில் யார் வேண்டுமானாலும் சேரலாம் என்பதை கப்பற்படை தளகர்த்தர் வற்புறுத்தினார். அதற்கு ஜாதி, மதம், நிறம், வித்யாசம் பார்க்கப்படமாட்டாது. கப்பற்படை விதிகளுக்கு ஒத்திருந்தால் சேர்த்துக்கொள்ளப்படும். அதிக நிபுணர்கள் தேர்ந்தெடுப்பதில் கஷ்டம் இருந்தது. இன்னும் அதிக நிபுணர்கள் இந்தியாவில் தயாரிக்கும் வரை இந்தக் கஷ்டம் இருக்கத்தான் இருக்கும். இருந்தபோதிலும் இந்திய ஸர்க்காரின் நிபுணர்களுக்கும் பயிற்சியளிக்கும் ஏற்பாட்டின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்வதாக அறிவித்தார். அவர்களுக்கு கப்பல் இலாகா முறைப்படி பயிற்சியளிப்பதாகச் சொன்னார். இம்மாதிரி செய்தால் கப்பற்படையில் நிபுணர்கள் குறைவாக இருக்கும் பிரச்னை தீர்க்கப்படும் என்று எண்ணினார்.

இந்நாட்களில் ஒவ்வொரு தேசமும் நிலைத்திருக்க வேண்டுமானால் அதன கப்பற்படை பலத்தையும், அது வளரக்கூடிய தன்மையையும் பொறுத்திருப்பதால் பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை அபிவிருத்தியடைவதற்கும், சாதகங்கள் அடைவதற்கும், இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் அதிக அக்கரை கொள்ளுவார்கள் என்று தளகர்த்தர் நம்பினார்.



**வியாபாரக் கப்பல்களில் இந்தியர்.** ஸெப்டம்பர் 15உ இந்திய ஹை கமிஷனர் ஸர் அஸிஸுல் ஹேக் ஒலிபரப்பும்போது பஸிபிக்கிலும், இந்து மகா சமுத்திரத்திலும் எல்லாவித கப்பல்களிலும் ஈடுபட்ட இந்தியர்களின் கணக்கு 40,000. எல்லாவித சீதோஷ்ண நிலைமைக்கும் இவர்கள் பழக்கமடைந்திருக்கின்றனர். இதில் 10 பேர் தீரச் செயல்களுக்காக சாம்ராஜ்யப் பதக்கங்களைப் பெற்றிருக்கின்றனர்.

இவர்களின் சௌக்கியத்தைக் கவனிக்க லண்டன், கிளாஸ்கோ, லிவர்பூல் முதலிய இடங்களில் உத்தியோகஸ்தர்களும் துறைமுக க்ஷேம கமிட்டிகளும் இருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**யுத்த மூலப்பொருள்கள் கமிட்டி** ஒன்று வைஸிராயின் ராஜாங்க சபை அங்கத்தினர்கள் அடங்கி, கிராடி கோஷ்டியின் சிபார்ஸின் படி அமைக்கப்பட்டிருக்கிறது. பிரிடனிலுள்ள யுத்த காலமந்திரி சபைக்குச் சமமாகும் யுத்த சம்பந்தமான தந்திரங்கள் இதில் சர்ச்சை செய்யப்படும். இதன் தீர்மானங்களின்படி இந்தியத் தொழிற்சாலைகள் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன. 1939-ல் இந்திய யுத்த சாமான்களின் ஆர்டர்கள் 83 கோடியாக இருந்தது. 365 கோடிக்கு உயர்ந்திருக்கிறது. புதிதாக இரண்டு தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. எஃகு உற்பத்தி திட்டமும், கப்பல் பழுதுபார்ப்பதும் கப்பல்கட்டும் தளங்களும், விமானங்களைப் பழுதுபார்ப்பதும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்காக அமெரிக்க இஞ்ஜினியர்கள் வந்திருக்கின்றனர். வைஸிராயின் நேர்பார்வையில் இருப்பதால் சீக்கிரத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன்.

வி வி வி வி வி வி வி

**சங்கடப்பட்டுக்கொண்டிருக்கும் நேயர்கள்.** ‘கிரிஸ்டியன் ஸயன்ஸ் மானிட்டர்’ பத்திரிகைக்கு ஷாங்கேய் நிருபராகயிருந்த பிரடரிக் ஹாப்பர் எழுதுவதாவது :—

“ஜெர்மனிக்கும், ஜப்பானுக்கும் ஏற்பட்ட சம்பந்தம் சந்தர்ப்பத்தினால்தான் ஏற்பட்டது; அதற்குமேல் அதிகமில்லை.” இந்தப் பிரகடனத்தை மேலும் விஸ்தரித்துச் சொல்வதாவது ஜெர்மனி ஜப்பானை வெறுக்கிறதா? அல்லது அதைக்காட்டிலும் ஜெர்மனி பேரில் ஜப்பான் அவநம்பிக்கை கொண்டிருக்கிறதா என்ற பிரச்னை இருக்கிறது. ஷாங்கேயிலுள்ள அமெரிக்க, பிரிடிஷ் வர்த்தக சாலைகளை முறியடிக்கச் செய்ததினால் ஜெர்மானியருக்குக் கொஞ்சம் சாதகமும்கூட கிடைக்கவில்லை. ஜப்பானியத் தரைப்படையினாலாவது, கப்பற்படையினாலாவது கிடைக்கக்கூடிய லாபங்களை எல்லாம் ஜப்பான் வல்லரசு மட்டுமேயடையவேண்டுமென்று டோக்கியோ தீர்மானித்திருக்கிறது. ஜப்பான் ஆக்கிரமித்த பிராந்தியங்களில் இருக்கும் ஜெர்மானியர் (armbands) கைப்பட்டை கட்டிக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அவர்களுடைய மோட்டார் வண்டிகளுக்குப் பெட்ரோல் அவர்களால் வாங்கமுடியவில்லை. ஜெர்மானியரை ஜப்பானியர் தள்ளிவரும் மாதிரியைப் பார்த்தால் ஜெர்மனியும் ஜப்பானுக்கு எதிரியான நாடாக சேர்த்திருக்கிறதோவென்று ஆச்சரியப்படக்கூடியதாக இருக்கிறது. இம்மாதிரி இரு பக்கங்களிலும் விரோதம் காட்டுவதற்குள்ள காரணம் மிகவும் சாதாரணமானது. ஜப்பானியர் தாங்களடைந்த வெற்றிகளை ஒருவருக்கும் கொடுத்துவிட நோக்கமேயில்லை. முக்கியமாக எதுகிடைத்தாலும் திருப்தியாகாத ஜெர்மனிக்கு லாபத்தைக் கொடுக்க ஜப்பானியர்களுக்கு இஷ்டமில்லை. இரண்டாவதாகவும் கீழ்ப்பட்டவர்களாகவும் ஜெர்மனியால் கருதப்படும் ஜப்பானியர் ஆசியாவிலுள்ள ஏராளமான பொருள்களை அடைந்துவிடும்படி விட்டுவிட ஜெர்மனிக்கு விருப்பமில்லை. ஜெர்மனி ஜயம் பெற்றால் தெற்கு ஆசியாவிலுள்ள எண்ணெய், ரப்பர், ஈயம் ஜெர்மனி விரும்பும் இடங்களைத் தவிர வேறு இடங்களுக்கு அனுப்பினால் ஜெர்மனி ஒரு பொழுதும் திருப்தியடையாது என்று ஜப்பான் நிச்சயமாக உணருகிறது. சீனாவில் அமெரிக்க, பிரிடிஷ் வியாபார ஸ்தலங்கள் அழியும்படி ஜப்பானியர்

செய்துவிட்டு உடனேயே அந்தப் பிராந்தியங்களிலுள்ள ஜெர்மன் வர்த்தகத்தையும் தொலைத்துவிடுவார்கள் என்று ஜெர்மானியரும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**அச்சுநாட்டுப் பொய் பிரசாரம்.** சமீப காலமாக அச்சுநாட்டுப் பிரசாரத்தில் நேசநாட்டு சேதங்கள் அதிகப்படுத்தியே சொல்லப்படுகிறது. ஜப்பானியரின் கணக்குப்படி அமெரிக்கா தனது யுத்தக் கப்பல்களில் மூன்றில் ஒரு பங்கும், விமானமேற்றும் கப்பல்களில் முக்கால் பங்கும், க்ரூயிஸர்களில் பாதியும் இழந்ததாம். ஆனால் ஜப்பானியக் கப்பற்படை 'குறையாமலும், பலம் பெற்றும்' இருக்கிறதாம். இது கட்டுக்கதை என்பதை நாம் எடுத்துச்சொல்லத் தேவையில்லை. நேசநாட்டு நஷ்டங்களை அதிகப்படுத்திச் சொல்லுவதிலேயே ஜப்பான் ஈடுபட்டிருக்கிறது. அமெரிக்கச் சண்டைக் கப்பல்கள், விமானமேற்றும் கப்பல்கள் இவைகளின் நஷ்டம் 2½ மடங்கும் க்ரூயிஸர் நஷ்டம் 18 மடங்கும் அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அமெரிக்க கப்பல் நஷ்டம் 1,50,000 டன்கள்தான். ஜப்பானுக்கு 2,50,000 டன்கள் என்பதை மறந்துவிட்டது. இதோடு அமெரிக்காவிற்கு 2 பெரிய கப்பல்களும், 2 விமான மேற்றும் கப்பல்களும் 2-ம் தான் நஷ்டம். ஜப்பானுக்கு 6 விமான மேற்றும் கப்பல்கள், 6-ஐ இழந்தது.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மன் பொய்.** இதற்கிடையில் ஜெர்மனியும் பொய் பிரசாரத்தை நடத்திக் கொண்டுதானிருக்கிறது. ஜெர்மனியை பிரிடிஷ் விமானங்கள் தாக்குவதைக் காட்டிலும் அதிகமாகவே பிரிடனை ஜெர்மன் லுப்டவாபி விமானங்களும் தாக்கி வருகின்றனவாம். இப்படிச் சொல்லி பிரிடிஷ் தாக்குதலால் குறைந்து வரும் தைரியத்தை ஜெர்மன் சைனியங்களுக்கு தைரியத்தை நிலைநாட்டுவதே நோக்கம். மேலும் ருஷ்யாவில் ஜெர்மனி ஈடுபட்டிருந்தாலும் பிரிடிஷ் விமானப் படையையும் எதிர்க்கும் சக்தி இருக்கிறதாகக் காண்பிப்பதும் எதிரியின் நோக்கம்தான். ஆனால் ஆகஸ்டு மாதத்தில் பிரிடிஷ் விமானப்படை 17 தினங்களில் பகல் காலத்திலும், 14 இரவுகளிலும், ஜெர்மன் ஐரோப்பாவில் தாக்குதல் செய்திருக்கின்றன. லுப்ட்வாபியோ 13 பகல்களிலும், 17 இரவுகளிலும்தான் பிரிடன்பேரில் தாக்கின. மேலும் பிரிடிஷ் விமானப்படை ஒரு பகுதியிலிருந்து 500 விமானங்கள் வரை ஈடுபட்டிருக்கின்றன. லுப்ட்வாபி படை ஒரு விமானம் முதல் 30 வரை தான் வந்தன.

வி வி வி வி வி வி வி

**'கின்ஹ்வா' பொய்.** அச்சுநாட்டுப் பொய்களில் கின்ஹவாவைப் பற்றி ஜப்பான் சொல்லிவரும் பொய் மிக அபாண்டமானது. 'சைனாவில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குத் தள்ளப்பட்டு செகியாங், கியாங்ஸி மாகாணங்களை ஜப்பான் இழந்தும் கின்ஹவா சண்டை வெறும் கதை என்று தைரியமாகக் கூறுகிறது. அதோடு இல்லாமல் செகியாங்-கியாங்ஸி இருப்புப் பாதையிலிருந்து கழட்டிச் சென்றது ஒரு ராணுவத் தந்திரமென்றும் அது பின்வாங்குவதாக ஆகாதென்றும் சொல்லுகிறது. உண்மையில் 1,70,000 ஜப்பானியர்கள் 250 மைல் தூரத்தைக் கடந்து பின்வாங்கியிருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானிய விளையாட்டு சாமான்கள்.** ஜப்பான் விளையாட்டு சாமான்களைச் செய்தே பணம் சம்பாதித்திருக்கிறது. முன்பு டாக்டர் ஷாட் பியானோ முதலிய கருவிகளைக் கொடுத்து அமெரிக்காவிலிருந்து பருத்தியை அடையப் பார்த்த மாதிரி ஜப்பான் இந்த விளையாட்டு சாமான்களை இந்தோ-சைனாவிற்குக் கொடுத்து அதற்குப் பதிலாக அரிசியைப் பெற நினைக்கிறது. நீர்மூழ்கிகளில் எடுத்துச் செல்லக்கூடிய சிறிய விமானங்களை ஜப்பான் தயாரிக்கிறதாம். ஆனால் பிரிடன் பெரிய கப்பல்களையும், பெரிய விமானங்களையும் தயாரிக்கிறது. ஜப்பான் இச்சிறிய விமானங்களைக் கொண்டு சிறிய படையெடுப்புகளைச் செய்து பயத்தை உண்டாக்கவும், வேவு பார்க்கவும் நினைக்கிறது. கள்ள சிந்தனையுள்ள ஜப்பானிய ஜாதியினர் உட்காரத்தான் அவைகளில் வசதியிருக்கும்.



# நமது நம்பிக்கை முன்பைவிட அதிகமாகக் கொழுந்து விட்டெரிந்து பிரகாசிக்கும்.

(ஹாலிபாக்ஸ் பிரபு வாஷிங்டனிலிருந்து செப்டம்பர் 20-ல் ஒலிபரப்பிய செய்தி).

"சமீபத்தில் நான் லண்டனிலிருந்தேன். அங்கு ஒன்று, இரண்டு முக்கிய விஷயங்கள் என் மனதில் பட்டது. அதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். பிரிடிஷாரின் மனப்பான்மை மாறுதலடைந்திருக்கிறது.

"எதிராளி அடியைத் தாங்கச் சக்தியுண்டு என்று மட்டும் அவர்கள் எண்ணவில்லை. ஹிட்லர் மீண்டும் படையெடுத்தால் இராக்கால பைடர் விமானங்களும், விமானஞ் சுடும் பீரங்கிகளும் எதிரிக்கு ஏராளமாகச் சேதத்தை விளைவிக்கக் கூடும். அடியைத் தாங்கும் சக்தியைக் கொண்டு தோல்வியைத் தவிர்க்கலாமேயன்றி, அடியைத் திருப்பிக் கொடுக்கும் சக்தி இருந்தால்தான் வெற்றி பெறலாம் என்பதை பிரிடிஷார் உணர்ந்திருக்கின்றனர்.

"பிரிடிஷார் முதல் முதல் ஜப்பானியரை எதிர்த்து அவர்களுக்குத் தோல்வியை விளைவித்ததும், ஜெர்மானியருடன் ருஷ்யர்கள் வெகு தீவிரமாக எதிர்த்து நின்று ஒரு கஜம் விட்டுக் கொடுப்பதற்குள் எதிரிக்கு ஏராள சேதத்தை விளைவித்து வருவதையும் பார்க்க இப்பொழுது பிரிடிஷ் ஜனங்கள் திருப்தியடைந்து வருகிறார்கள்.

"ஒவ்வொருவரும் போருக்குத் தயாராக இருக்கிறார்கள். டியப்பில் நடந்த விமானத் தாக்குதல் மாதிரி பல நடவடிக்கைகளை நடத்துவதற்கு அதிக பலம் வாய்ந்தவர்களாகக் காண்கிறார்கள். ஜெர்மனியின் பேரில் பிரிடிஷ் விமானப் படை ஏராளமாகக் குண்டுகளை வீசி சேதத்தை விளைவித்திருக்கும் செய்தியைக் கேட்டு அதிக ஊக்கம் கொண்டிருக்கிறார்கள். இங்கிலீஷ் கால்வாயிலும், மத்திய தரைக்கடலிலும் வெகு தீரமாக நேசதேசப் படைகள் நடத்திய போர்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

"எதிரிகளை நாம் மீண்டும், மீண்டும் முன்னேறித் தாக்குவதாலோ, ஸப்ளை பிரச்னைகளைத் தீர்ப்பதாலோ மட்டும் நமக்கு வெற்றி கிடைத்துவிடாது.

"நாஸிகளிடம் உள்ள மகத்தான ஆயுத பலத்தை விட அவர்களுடைய மனதிலுள்ள வெறி இன்னும் முக்கியமானது.

"எட்டு வருஷ காலமாக ஜெர்மனி இம்மாதிரி போராட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை மனதில் எண்ணிவந்தது.

அவர்களுடைய ஆயுத பலத்தை அதாவது டாங்கிகள், பீரங்கிகள், விமானங்கள்—மிஞ்சுவதுடன் அவர்களுடைய நம்பிக்கையைப் போல் நமது நம்பிக்கை கொழுந்துவிட்டெரிந்து பிரகாசிக்குமாறு செய்யவேண்டும்.

## எது சாரமுள்ளதோ அது மட்டும் நிலைத்திருக்கிறது.

"ஒவ்வொரு நாளும் ஏராளமான அமெரிக்கத் துருப்புகள், மாலுமிகள், விமானிகள் லண்டனுக்குப் போய் பார்த்துவிட்டு திரும்பி வருகிறார்கள். அநேக லக்ஷியங்களைப் பார்ப்பதற்கு வருவதுடன், முக்கியமாக ஸெயின்ட் பால சர்ச்சைப் பார்க்கவேண்டுமென்றே வருகிறார்கள்.

"இரண்டு வருஷங்களுக்கு முன் லண்டனில் ஸெயின்ட் பால் சர்ச்சைச் சுற்றி பலவிதமான கட்டடங்கள் அடர்ந்திருந்தன. அவைகளையெல்லாம் எதிரி குண்டு வீச்சால் மண்ணோடு மண்ணாகிவிட்டது. இன்று அந்தச் சர்ச்சு மட்டும் மிகக் கம்பீரமான தரிசனம் அளித்து வருகிறது. நகரத்திலேயே அதிக உயரமாகவுள்ள இந்தக் கட்டடத்தின் உச்சியிலுள்ள தங்கச் சிலுவை ஆகாயத்தை அளாவியிருக்கிறது. உண்மையில் இதில் ஒரு விசேஷ அர்த்தம் பொருந்தி இருக்கிறது.

"அதைச் சுற்றிலுமுள்ள கட்டடங்களெல்லாம் பாழாயின. உபயோகமில்லாதவையெல்லாம் அழிந்து போயிற்று. ஆனால் எது சாரமுள்ளதோ அது மட்டும் நிலைத்திருக்கிறது.

"நாம் அதிக விலைமதிப்பு கொடுத்திருந்த பொருள்கள் யாவும் மறைந்து போயின. உண்மையில் நமக்கு எது அத்தியாவசியமோ அது நிலைத்திருக்கிறது.

"அடிமைப்பட்ட மக்களை விடுவிக்க நாம் யுத்தம் செய்கிறோம். இந்த யுத்தம் கிருஸ்துவ தருமத்தை நிலைநாட்டுவதற்காக நடத்தப்பட்டு வருகிறது.

"கிருஸ்துவ தருமம் மேலும் நிலைத்திருப்பதா என்பதே நமது முக்கியமான பிரச்னை. அத்தர்மம் அழியக்கூடிய அபாயத்திலிருந்து வருவதால், அதை பாதுகாப்பதற்கு அவசியமேற்பட்டிருக்கிறது என்று இப்பொழுது உணருகிறோம். இதிலிருந்து நாஸிகளின் வாழ்க்கை எத்தன்மையுள்ளது என்பது நன்கு விளங்குகிறது.

### கிருஸ்துவ மார்க்கம்.

"கிருஸ்துவ மதத்தைக் கொண்டு வாழ்க்கையிலுள்ள கடுமையான பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது என்று நாஸிகள் சொல்லுவார்கள். ஆனால் இந்த கேள்விக்குச் சரியான பதில் இருக்கிறதென்று நமக்குத் தெரியும்.

"கிருஸ்துவ மார்க்கத்தைக் கொண்டு வறுமை, பயம், வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவைகளை இல்லாமல் தடுத்துவிடக்கூடும். நமக்குள்ள உரிமைக்கு ஆதாரமென்னவென்றும், அதன் கௌரவத்தை தெரிந்து கொள்ளுவது மட்டில் போராது என்றும் பிரிடிஷ் மக்களில் அநேகர் உணர்ந்திருக்கின்றனர்.

"அதைக் காப்பாற்றுவதற்கு நம்மையே தியாகம் செய்ய வேண்டும். ஏற்கனவே நாம் கண்டறிந்த உண்மைகள் நமக்கும், நமது சந்ததியாருக்கும் புத்துயிர் அளிக்கும்.

"சென்ற மூன்று வருஷங்களாக நாம் மிகவும் அடக்கமாக இருப்பதைக் கற்றுக் கொண்டிருக்கிறோம். அது நமக்கு அத்தியாவசியம். இந்தப் போராட்டத்தில் நாம் அடைந்துள்ள மகத்தான விஷயங்களை எப்பொழுதும் தவிர விடுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறோம். எச்செலவிலும் அவைகளை நிலைநிறுத்தப் பிரயத்தனப்படுவோம். வருங்காலத்தை அமைப்பதில் அவ்விஷயங்களுக்குப் பிரதான்யம் கொடுப்போம்".

---

# யுத்தத்தின் புதிய கட்டத்தை அடைய இன்னும் 20 நாட்களே இருக்கின்றன.

---

## நாஸிகள் நேசதேசப் படைகளால் சூழப்படுவார்கள்.

உற்பத்தி இலாகா மந்திரி காப்டன் ஆலிவர் லிட்டில்டன் ஜூலை மாதத்தில் "சரித்திரத்தில் அதிக நெருக்கடியான நிலைமையை இன்னும் 80 நாட்களில் அடைவோமென்றார்." சமீபத்தில் ஸெப்டம்பர் 16-ம்உ ஒருபேச்சில்:—

"அந்த 80 நாட்களில் இன்னும் 19, 20 நாட்களே பாக்கி இருக்கின்றன. அந்த சமயத்தில் நாம் ஒரு புதிய கட்டத்தை அடைவோம்.

"ருஷ்யா இன்னும் சில வாரங்கள் வரையில் இதே மாதிரி சண்டை செய்தால் நமக்கு சாதகமாகவே யுத்தம் திரும்பும்.

"அதற்கு லாயக்காக எல்லாப் பிரயத்தனங்களையும் எடுத்துக்கொண்டிருக்கிறோமென்றும், முழுவெற்றியையும் அடைவோமென்றும் தெரிந்து கொள்ளலாம்.

"ருஷ்யர்களின் எதிர்ப்போடு, நமது படைகளும் பலம் பெறுவதால், ஜெர்மனி மாரி காலத்திற்குப் பின்பும் மிஞ்சியிருந்தால் நமது படைகளால் நிச்சயம் சூழப்படும். அதற்கு லாயக்கான சாமான்கள் பிரிடனிலேயே தயாராகின்றன" என்றார்.



# பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியை தாக்குவது.

---

## ஜெர்மன் டார்பிடோ உண்டாக்கும் சேதத்தை பிரிடிஷ் குண்டுகள் விளைவிக்கின்றன.

நமது விமானப்படை தாக்கும் லக்ஷியங்களைப்பற்றி ஜெர்மன் தலைவர்களுக்குக் கவலை ஏற்படலாம் என்று மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை அபிப்பிராயப்படுகிறது. தற்காலத்தில் எதிரியின் நீர்மூழ்கி தளங்களைத் தாக்குவது கொஞ்சம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக ஜெர்மனியின் ரயில்வே பிரதானமுள்ள நகரங்களையும், முக்கிய இருப்புப் பாதைகளையும் தாக்கி வருகிறோம். பிரிடனுக்குக் கப்பல் கட்டுமிடங்களும். கப்பல் மார்க்கங்களும் இருப்பதுபோல ஜெர்மனிக்கு ரயில்வே போக்குவரத்து முக்கியமானது. ருஷ்ய யுத்தத்திற்கு இம்மார்க்கங்கள்தான் முக்கிய உதவியாக இருப்பதாயும், அவைகள் சென்ற பனி காலத்தில் கெடுதலடைந்ததாயும் ஹிட்லர் சொன்னான். ஐரோப்பாவின் மேற்கே யுத்தம் ஏற்பட்டால் ரயில்வே உதவியிருந்தால்தான் ஜெர்மனி துருப்புகளை மாற்றிக்கொள்ள முடியும். ஜெர்மனி தனது ராணுவங்களை ரயில் வண்டிகளில் ஏற்றியனுப்புவதோடு ஜெர்மனியின் உள்நாட்டிற்குத் தேவையானவைகளும் ரயில், கால்வாய் மார்க்கங்கள் வழியாகத்தான் செல்லுகின்றன.

### ரயில் போக்குவரவு முக்கிய லக்ஷியம்.

ஏராள ராணுவ சாமான்களை ஏற்றிச் செல்லும் ரயில் வண்டிகளை நேசநாடுகள் குண்டுகளாலேயே தகர்த்துவிடுகின்றன. வடக்கு பிரான்ஸிலுள்ள இஞ்ஜின் பாய்லர்க (boilers)ளையெல்லாம் குண்டுகளைக் கொண்டு தாக்கும்படி பைடர் விமானங்களுக்கு உத்தரவிடப்பட்டது. அதுமுதல் ஜெர்மனியில் முக்கிய ரயில்வே ஜங்ஷன்களும், ரயில்வே தொழிற்சாலைகளும் தாக்கப்படுகின்றன. வடக்கு ஜெர்மனியில் காஸல் (Kassel) என்ற நகரத்தில், ரயில்வே இஞ்ஜின்கள் கட்டப்படுகின்றன. அது ஒரு ரயில்வே ஜங்ஷன் கூட. ஆஸ்னப்ரக் என்ற இடத்தில் பெர்லினிலிருந்து ராட்டர்டாமிக்குச் செல்லும் குறுக்குப் பாதை, ப்ரெமன்—ரூர் ரயில்வே லயனைச் சந்திக்கிறது. ஜெர்மனியிலிருந்து பிரான்ஸுக்குச் செல்லும் பல ரயில் மார்க்கங்கள் ஸார்ப்ருகன் என்ற இடத்தில் சந்திக்கின்றன. பிராங்க்பூர்டிலிருந்து ஸ்விட்ஸர்லாந்துக்கும், இதாலிக்கும் செல்லும் ரயில் மார்க்கம் கார்ல்ஸ் ரூஹி (Karls Ruhe) என்ற இடத்தில் ஒன்று சேருகின்றன. இங்கே ஸார்ப்ருகனிலிருந்தும் ஸ்டட் கார்ட்டிலிருந்தும் வரும் மார்க்கங்களும் சந்திக்கின்றன. காஸல் என்ற இடத்தைப்போல் இந்த இடங்களில் எல்லாம் ரயில்வே தொழிற்சாலைகளும் வியாபாரக் கிட்டங்கிகளும் இருக்கின்றன. ஆதலால்தான் இவைகள் தாக்கப்பட்டன.

### நீண்டகால திட்டம்.

ஜெர்மனியின் ரயில்வே போக்குவரத்தைத் தாக்குவது உசிதமான ஏற்பாடாகும். நாம் அவைகளைத் தாக்க விருக்கிறோம் என்பதைப்பற்றி ஜெர்மன் தலைவர்கள் கவலை கொள்ளவேண்டியதுதான். இவ்வித நேசதேசத் தாக்குதல்களையும் பிரான்ஸைத் தாக்கும்போது மால்ட்கி (Moltke) தனது படைகளை மெயின்ஸ் (Mains) என்ற இடத்தில் வைத்துக்கொண்டு துருப்புகளை ரைனில் மேலும் கீழும் அனுப்பிக்கொண்டிருந்ததையும் சேர்த்து ஜெர்மானியர் கவனித்திருக்கமாட்டார்கள். பிரான்ஸ் பக்கமாகத் துருப்புகளை அனுப்புவதற்கு மேற்சொல்லிய நகரங்களே மிக உதவியாக இருக்கின்றன.

இரண்டாம் போர்முனை ஏற்படுமென்று ஜெர்மன் தலைவர்கள் சிந்தித்துக் கொண்டுதானிருக்கின்றனர். டியப் தாக்குதலைப்பற்றி இன்னும் பிரஸ்தாபித்துக் கொண்டே இருக்கின்றனர். அலட்ஸவ் என்ற கப்பல் தளகர்த்தர் ஆகஸ்டு 26உ ஒலிபரப்பும் போது டியப் என்பது ஒரு படையெடுப்பு முயற்சியாகாது என்றான். ஆனால் அதற்கு 5 நாள் கிரமித்து ஒருவன் டியப் தாக்குதல் ஒரு இரண்டாம் போர்முனைத் தாக்குதல் என்பதற்கு அத்தாக்ஷியாக பிரிடிஷ் உத்தரவு ஒன்றைக் காண்பித்தான். இந்த ஒரு தாக்குதலே ஜெர்மானியரின்

மனதைக் கலக்கியிருந்தால் ஜெர்மன் ரயில்வேக்களை நாம் தாக்குவதைப்பற்றி அவர்கள் அதிகம் குழம்பியிருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இந்த மாரி காலத்தில் ருஷ்யப் போர்முனைக்கு உதவியனுப்பமுடியாமல் பிரிடிஷார் செய்ய நினைத்திருக்கிறார்களா என்று ஜெர்மானியர் கேட்கிறார்கள். நாம் அவ்விதம் செய்வோமென்பதை அவர்களாகவே தெரிந்து கொள்ளலாம். அடுத்து வரும் வசந்த காலத்தில் ஐரோப்பாவில் நமது படைகள் இறங்குவதாக இருந்தால் இப்போது தாக்கி வருவதைப்போல் மாரி காலத்திலும் ஜெர்மன் போக்குவரத்துகளையும் நாம் தாக்குவோம். அப்போது "ஏது பிரிடிஷ் குண்டுகள் நெருங்கி வந்துவிட்டனவே" என்று கேட்பார்கள்.

---

# முக்டன் தினம்.

(செப்டம்பர் 18உ).

## சீனர்களைப் பற்றி மிஸ்டர் ஹல்லின் பிரசம்ஸை.

முக்டன் சம்பவத்திலிருந்து சீன யுத்தம் ஆரம்பமாயிற்று. அந்த தினத்தைப் பற்றி மிஸ்டர் கார்டல் ஹல், அமெரிக்க உள்நாட்டு மந்திரி, பத்திரிகைக்காரர்கள் கூட்டத்தில் சொன்னதாவது:—

"ஸெப்டம்பர் 18-ம் தேதியோடு மஞ்சூரியாவை ஜப்பானியர் ஆக்கிரமித்து 11 வருஷங்கள் முடிகின்றன. இதை உலகம் பூரா அறியும். அப்போது ஆரம்பிக்கப்பட்ட ஆக்கிரமணம் கிரமமாக ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா முதலிய இடங்களுக்குப் பரவி பெரிய உலக யுத்தத்தில் வந்து முடிந்திருக்கிறது.

"அட்டூழியம், அநியாயம் இவைகளைக் கொண்ட ஜப்பானியரை எதிர்த்துச் செய்யப்படும் சீனர்களின் சண்டையையும், வீரத்தையும் அமெரிக்கர்கள் புகழுகிறார்கள்.

"காட்டுமிராண்டிகளை எதிர்த்து ஸ்வதந்திர மக்கள் செய்யும் சண்டை எப்போதும் வெற்றி பெறும் ஆகையால் ஜப்பானியரின் தாக்குதல்கள் பயனடையா. யுத்தவெறி கொண்ட ஜப்பானியரும் அழிவார்கள்."

### பரிசுத்தமில்லாத பரிசு.

மகின் தீவை அமெரிக்கக் கப்பல்கள் தாக்கி அங்கிருந்த ஜப்பனியர்களை அழித்து ஜப்பானியக் கொடி ஒன்றை எடுத்துவந்து ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டிடம் கொடுத்தனர். அதைப்பார்த்து ஜனாதிபதி "நான் அதைத் வாங்கிக் கொள்ளப் போவதில்லை. அதைக் கண்ணால் பார்ப்பதே போதும். கப்பற் படைகள் கிடக்கும் குழிகளில் போடுங்கள் "என்றார். இதிலிருந்து அதைத் தொட்டால் தோஷம் தீண்டுமென்று அவர் நினைக்கிற விஷயம் தெரிகிறது. "நான் அதை ஸ்பர்சிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக நினைக்கவில்லை" என்றும் சொன்னார்.

---

# நீங்கள் அறியவேண்டியவை.

---

## (1) பாலைவனத்திற்கு உபயோகமான ஈ படகுகள்.

(*Illustrated Weekly of India*விலிருந்து எடுக்கப்பட்டது.)

"நமது படைகள் எதிரியின் பக்கபலத்தைத் தாக்கி, போக்குவரத்துகளைக் கெடுத்து, எதிரியின் கவசம்தரித்த மோட்டார்களையும் சேதப்படுத்தின."

இவ்விதமாக வெளிவரும் அறிக்கைகளிலிருந்து சில அம்சங்கள் வெளிப்படுகின்றன. பாலைவன ஈ படகுகள் சாமர்த்தியமாயும், தைரியமாயும் எதிரிமேல் பாய்ந்து அவனது டாங்கிகளை அழித்து, போக்குவரத்துகளைக் கெடுத்து, அதே விதமாக மற்றொரு முனைக்குப் பாய்ந்து செய்துவரும் அரிய செயல்களும் வெளியாகின்றன. ஈ படகுகள் வேகமாகச்செல்லும் கவசம்தரித்த மோட்டார்களே.



இப்படைகளைத் தைரியமாக நடத்திச்செல்லுவதில் இந்தியர்கள் பிரிடிஷ் துருப்புகளுடன் ஒன்றுபட்டு நிற்கின்றனர். இவ்வித சண்டைகளுக்கென்று நேசதேசத் துருப்புகள் பிரத்யேகமான பயிற்சிபெற்றிருப்பதால் ஜெர்மானியருக்கு அதிகச் சிரமம் ஏற்படுகிறது. எப்பொழுது இந்தத் தாக்குதல் நேரிடுமென்று அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை.

இந்தப் படையினர் எதிரி இருக்குமிடத்தைத் தேடிப்பிடித்து சண்டைக்கு இழுத்து அழிப்பதே முக்கியவேலை. இதற்கு லாயக்கான முஸ்தீப்புடன் இப்படைகள் எதிரியை நோக்கிச் செல்லுகின்றன. இவ்விதம் பகல் காலத்தில் செய்யப்படுகிறது.

மேலும் இவர்கள் எதிரியின் நடமாட்டங்களையும் அறிந்து தலைவர்களுக்கு அறிவிக்கவேண்டும். எதிரி முன்னேறி வருவதை இவர்கள் முன்னாடியே அறிவித்து அதைத் தடுப்பதற்கு லாயக்கான ஏற்பாடுகளைச் செய்யவும் உதவுவார்கள்.

முன்னேற்றப் போருக்காகவே இப்படைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குறைந்த ஆட்களும், அதிகமான ஆயுதங்களும் கொண்டவை. டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள், பிரன் பீரங்கிகள் முதலியவைகள் இருக்கின்றன. பலவிதமான அமைப்புள்ளவை. சிலசமயம் 100-க்கணக்கிலும், மற்றும் சிலசமயங்களில் மிகக்குறைவாயும் செல்லும். எப்போதும் வேகமாகச்சென்று எதிரியைத்தாக்கி திடீரென்று மறையும். எதிரி சண்டைக்கு ஏற்பாடு செய்யுமுன்னரே மறைந்துவிடும்.

### டாடா எஃகு.

இவ்வண்டிகள் புதுவிதமாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இதில் இருக்கும் எஃகுத் தகடுகளில் குண்டுகள் பாயாது. அவைகள் இந்தியக் கம்பெனியான டாடாவிலிருந்து தயாரிக்கப்பட்டவை. இவ்விஷயம் இந்தியத் துருப்புகளுக்கு கௌரவத்தை அளிக்கிறது.

## (2) கப்பல்களில் செல்லும் பைடர் விமானங்கள்.

வியாபாரக் கப்பல்களின் உதவிக்காக பைடர் விமானங்களைத் தயாரித்து அனுப்பியது முதல் கப்பற்படையில் செல்லும் பைடர் விமானங்களுடன் செல்லும் நேசதேச துணைக்கப்பல் கூட்டத்தில் ஒரு கப்பலுக்காவது எதிரியினால் சேதம் ஏற்படவில்லை.

இவ்வித விமானங்களைக் கட்டுவதென்ற யோசனையை முதல் முதலில் மிஸ்டர் சர்ச்சில் தான் கொடுத்ததென்று டைம்ஸ் பத்திரிகையின் விமான நிருபர் கூறுகிறார். எதிரி தனது கான்டார், கூரியர், பாம்பர் விமானங்களைக் கொண்டு பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களை அதிகம் தாக்கிவந்தான். அதுமுதல் பைடர் விமானங்களையும் கப்பல்களுக்கு துணையாக அழைத்துச்செல்ல வேண்டுமென்று பிரதம மந்திரி கூறினார்.

ஹரிகேன் விமானங்கள் அதிகம் உபயோகப்படுத்தப்படுகின்றன. காம் (Cam) என்ற கப்பல்களில் இவ்விமானங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. பிரிடன்மேல் நடந்த விமானப்போரில் ஈடுபட்ட விமானிகளே முதல்முதலில் இதில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஒரு எதிரி விமானம் காணப்பட்டதும், ஹரிகேன் விமானம் கப்பலிலிருந்து அனுப்பப்படும். அப்போது நடக்கும் சண்டையில் மாலுமி தாக்கப்பட்டாலும், அறுத்தப்பட்டாலும், பெட்ரோல் தட்டு ஏற்பட்டாலும் தனக்கு அருகில் வரும் கப்பலுக்கு ஒரு சமிக்ஞை காட்டுவான். அக்கப்பலுக்கு ½ மைல் தூரத்தில் தள்ளி [illegible]

M. S. F. V. என்ற ஏற்பாடு விமானப்படைக்கும், கப்பற்படைக்கும் உள்ள ஒத்துழைப்பை அறிவிக்கிறது. பிரிடிஷ் கப்பற்படை, பைடர் குறி பார்போன், கவாங்கல் கருவி உபயோகிக்கிறவன் இப்பேற்பட்டவர்களைத் தயார்செய்கிறது. விமானப்படை மாலுமிகளையும், விமானங்களையும், தரைப்படை ஆட்களையும் தயார்செய்கிறது. வியாபாரக் கப்பற்படை கப்பல்களுக்கு உதவுகிறது. இவ்வித ஒத்துழைப்பால் பல ஜெர்மன் விமானங்கள் வீழ்த்தப்பட்டிருக்கின்றன.

## (3) சாமான்களை ஏற்றிச்செல்லும் விமானங்கள்.

அமெரிக்காவில் கப்பல் கட்டுபவர், மிஸ்ட்டர் ஹென்றி கெய்ஸர் அதிக சாமான்களை ஏற்றிச்செல்ல லாயக்காக பிரம்மாண்டமான 3 மாதிரி விமானங்களை 45,00,000 பவுன் செலவில் கட்டுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இவ் விவரத்தை ரிபப்ளிக் கட்சித் தலைவர் மாக்நாரி என்பவர் வெளியிட்டார். மேலும், யுத்தப்பொருள் தயாரிக்கும் இலாகா பொருளுதவி செய்ய ஒப்புக் கொண்டதாக தன்னிடம் அறிவித்ததாகவும் சொன்னார்.

"ஏராளமான அளவில் அம்மாதிரி விமானங்களைத் தயாரிக்க முடியுமா என்பது இனிமேல்தான் தீர்மானிக்க முடியும். மிஸ்ட்டர் கெய்ஸர் மேற் சொல்லிய விமானங்களைத் தனக்கு லாபத்தைக் கருதாமல் கட்டிமுடிப்பார்."

## (4) யாக் (Yak) பைடர் விமானம்.

யாக் என்ற பைடர் விமானம் சமீபத்தில் ருஷ்யாவில் தயாரிக்கப்பட்டது. இது வெகு வேகமாகச் செல்லக்கூடியது. ருஷ்யாவில் விமான உற்பத்தியில் ஈடுபட்டவரும், விமான உற்பத்தியின் உதவி கமிஷனருமான அலெக்ஸாண்டர் யாகோவ்லீவ் என்பவரின் ஞாபகார்த்தமாக அனுப்பப்பட்டது. ஜெர்மன் மெஸ்ஸர்ஷிமிட் விமானங்களுடன் ஒப்பிட்டால் இவைகள் அதிகவேகமும், தாக்கும் சக்தியும் பொருந்தியிருக்கின்றன. யாக்கை எதிர்த்து நிற்க மெஸ்ஸர் ஷிமிட்டால் முடியவில்லை. அப்படிச் சண்டை ஏற்பட்டால் அதிகமான மெஸ்ஸர் ஷிமிட் விமானங்களே சேதமாகின்றன.

## (5) அமெரிக்க பாம்பர் விமானங்கள் திருத்தியமைக்கப் பட்டன.

"நாலு எஞ்ஜின்கள் கொண்ட அமெரிக்கப் பாம்பர் விமானங்கள் 'பறக்கும் கோட்டை' (Flying Fortress), லிபரேட்டர் (Liberator) B-24 என்று பல வகைப்படும். அவைகளைக்கொண்டு முக்கியமாக ஜெர்மனியை வெடிகுண்டுகள் போட்டுத் தகர்ப்பதற்கு லாயக்காகத்திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன" என்று யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆகாய விமான வியாபாரச்சங்கம் (Aeronautical Chamber of Commerce) பிரஸிடெண்ட், கர்னல் ஜான் ஜௌவெட் சமீபத்தில் பேசியிருக்கிறார்.

"இவ்விமானங்கள் ஏற்கனவே சுமந்துசெல்லும் வெடிகுண்டுகளின் எடையை விட இரண்டு பங்குக்கு அதிகமாகவே எடுத்துச் செல்லும். இப்பொழுது அனுப்பப்படும் வெடிகுண்டுகளின் எடை 3½ டன்கள். இப்படி தூக்கிச் செல்லும் சக்தியை அதிகப்படுத்தியதினால் விமானங்களின் வேகமோ, வெகு உயரத்தில் பறக்கும் சக்தியோ குறையவில்லை.

"முதலில் 'பறக்கும் கோட்டை' விமானங்கள் பஸிபிக் மஹா சமுத்திரத்தில் 4,800 முதல் 6,400 கிலோமீடர் தூரம்வரை பறந்துசெல்லக் கூடியவைகளாகக் கட்டப்பட்டன. இப்பொழுது தூக்கிச்செல்லும் சுமையை அதிகப்படுத்தியதி லிருந்து, அவை செல்லும் தூரம் சற்று குறைந்துவிடலாம். ஏனென்றால் வெடிகுண்டு களை அதிகம் எடுத்துக்கொண்டு செல்வதற்கு அதிகமான எண்ணெய் தேவையாக இருக்கும். அப்படி இருந்தாலும் அவைகள் பிரிடிஷ் விமான தளங்களிலிருந்து ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா வரையில் பறந்து சென்று குண்டுகளைப் போட்டு திரும்பி வருவதற்குள்ள சக்தி வாய்ந்தவை".



# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சிமுறை.

1942— பிரஸங்கம் 114—(1-வது பிரிவு). மணி.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸெப்டம்பர் ... | 26, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை | 7.45 |
| | 27, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி ... | ,, | 7.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 7.30 |
| | 28, திங்கட்கிழமை ... | திருமயம் .... | ,, | 7.00 |
| | | மேலூர் ... | ,, | 7.30 |
| | 29, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பெருங்களூர் ... | மாலை | 7.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 7.30 |
| | 30, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | அரிமளம் ... | மாலை | 7.00 |
| | | கீழாநிலைக்கோட்டை. ... | ,, | 7.30 |
| அக்டோபர் | 1, வியாழக்கிழமை ... | மலம்பட்டி ... | ,, | 7.00 |
| | | பேராம்பூர் ... | ,, | 7.30 |
| | 2, வெள்ளிக்கிழமை... | பொ. புதுப்பட்டி ... | ,, | 7.00 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 7.30 |

## பிரஸங்கம் 115—(2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 3, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை | 7.45 |
| 4, ஞாயிற்றுக்கிழமை | குடுமியாமலை ... | ,, | 7.00 |
| | பரம்பூர் ... | ,, | 7.30 |
| 5, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 7.00 |
| | விராச்சிலை ... | ,, | 7.30 |
| 6, செவ்வாய்க்கிழமை | வெங்களூர் ... | ,, | 7.00 |
| | கோனாபட்டு ... | ,, | 7.30 |
| 7, புதன்கிழமை ... | கல்லூர் ... | ,, | 7.00 |
| | மண்டையூர் ... | ,, | 7.30 |
| 8, வியாழக்கிழமை ... | பனையப்பட்டி ... | ,, | 7.00 |
| | ராங்கியம் ... | ,, | 7.30 |

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 26— 9—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 27— 9—42 | ... | தீத்தான்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 28— 9—42 | ... | முள்ளங்குரிச்சி. |
| செவ்வாய்க்கிழமை | ... | 29— 9—42 | ... | பேராம்பூர். |
| புதன்கிழமை | ... | 30— 9—42 | ... | கீழாநிலை புதுப்பட்டி. |
| வியாழக்கிழமை | ... | 1—10—42 | ... | குழிபிரை. |
| வெள்ளிக்கிழமை | ... | 2—10—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 3—10—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 4—10—42 | ... | விராச்சிலை. |
| திங்கட்கிழமை | ... | 5—10—42 | ... | விராலிமலை. |
| செவ்வாய்க்கிழமை | ... | 6—10—42 | ... | கோனாபட்டு. |
| புதன்கிழமை | ... | 7—10—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 8—10—42 | ... | ஆலங்குடி. |
| வெள்ளிக்கிழமை | ... | 9—10—42 | ... | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—30-9-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலையம்.

பிரசுரம்] 1942-ம்௵ அக்டோபர்மீ 3உ [ந. 115

பிரலங்கம் CXV.

## பிரிட்டனும், ஜெர்மனியும்.

(மிஸ்டர் J. B. பிரீஸ்ட்லி எழுதியது.)

ஜெர்மனியில் தயாரிக்கப்படும் யுத்தப் பொருள்களுக்குச் சமமாகவே இப்பொழுது பிரிட்டனில் யுத்தப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. முக்கியமாக அவையாவும் பிரிடிஷ் தீவுகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஜெர்மனியில் ஒரு மாதத்தில் தயாராகும் ஆகாய விமானங்களின் எண்ணிக்கைக்குச் சமமாகவே இங்கே தயாரிக்கப்படுகின்றன. ஆனால் ஜெர்மன் விமானங்களை விட பிரிடிஷ் விமானங்கள் மிகவும் மேன்மையானவை.

இவ்விதம் ஜெர்மனியில் தயாரிக்கப்படும் யுத்தப் பொருள்களைப் போல் நாமும் தயாரித்து வருவது குறிப்பிடத்தக்க முக்கிய விஷயம். இம்மாதிரி உற்பத்தியில் நாம் முன்னேற்றமடைந்திருப்பதில் நம் தேசத்திற்கும், நமது மக்களுக்கும் பெரிய கௌரவமென்றே நான் கருதுகிறேன். நாம் அடைந்திருப்பது எவ்வளவு என்பதையும், அதன் தன்மை எத்தகையது என்பதையும் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை. நாமே அவற்றைப் பெரியதாகக் கருதவில்லை. ஏனென்றால் இன்னும் உற்பத்தி செய்வதிலேயே பரபரப்பாக இருப்பதினால் நாம் என்ன செய்திருக்கிறோம் என்பதை நாம் உணரவில்லை.

நாஸிகளுக்கு ஆரம்பத்தில் அநேக கஷ்டங்கள் இருந்தன. நாஸிகள் ஜெர்மனியில் ஆதிக்கம் பெற்றும், பலகோடிக்கணக்கான மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து வந்தது.

மிகவும் முக்கியமான பெரிய தொழிற்சாலைத் தலைவர்களில் சிலர் ஏற்கனவேயே ஹிட்லருக்கு லஞ்சம் கொடுத்து அவன் ஆதரவைப் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் தங்கள் பூரா சக்தியையும் உபயோகிக்காமல் ஒரு பகுதியை மட்டில் தான் பிரயோஜனப்படுத்தினார்கள். அதனால் ஹிட்லரும் அவனுடைய சிநேகிதர்களும் ஒரே முயற்சியில் அநேக காரியங்களைச் சாதித்துவிட தீர்மானித்தார்கள்.

### ஆக்கிரமிப்பே நாஸிகளின் முக்கிய நோக்கம்.

நாட்டிலிருந்த வேலையில்லாக் கொடுமையைத் தீர்ப்பதற்கு அவர்கள் அதிசீக்கிரத்தில் வழிதேடவேண்டியிருந்தது. மிகவும் பெரிய தொழிற்சாலைகளைப் பூராவாக வேலையில் ஈடுபடுத்தி, ஜெர்மனியை ராணுவ பலத்தில் உலகத்திற்கே முதல்தர நாடாகச் செய்யவேண்டுமென்று, நாஸிகள் தீர்மானித்தார்கள். ஜெர்மனியின் பலம் அதிகரித்ததினால் ஸர்வதேசச் சட்டங்கள், பழக்க வழக்கங்கள், தரும சாஸ்திரம் முதலியவைகளை நிராகரித்து யுத்த வெறிகொண்டு பல நாடுகளை ஆக்கிரமிப்பதே ஜெர்மனிக்கு முக்கிய நோக்கமாக இருந்தது.

ஆகையால் நாஸிகள் உடனே பிரம்மாண்டமான யுத்த யந்திரத்தைத் தயாரிக்க ஆரம்பித்தனர். அவர்கள் அதிகாரத்தின் கீழ் வந்தார்கள். அநேகமாக இயற்கையாகவே கீழ்படியும் குணமும், சாந்தமான குணமும் வாய்ந்தவர்கள், கட்டளைப்படி நடக்க ஆவலாக இருப்பவர்கள். மேலும் மிகவும் சுறுசுறுப்பாகவும், பொருமையுடனும் வேலை செய்யக்கூடிய தன்மை வாய்ந்தவர்கள்.

மேலும் அவர்களின் தேசப்பழக்கங்களோ ராணுவத் தன்மை வாய்ந்திருந்தன. ஆகையினால் மனிதர்களை அழிப்பதற்குக் கருவிகள் தயாரிப்பதில் காலமும், பிரயாசையும் செலவாகிறதென்று அவர்கள் பொருட்படுத்தவில்லை. இவைகளைச் செய்வதில் அவர்களுக்கு கௌரவமும், ராஜபக்தியும் உடனே ஏற்பட்டுவிட்டது.

ஜெர்மனி நாஸிகள் வசம் வந்து ஒன்று இரண்டு வருஷங்கள் ஆவதற்குள் தேசத்திலுள்ள ஜனங்கள் யுத்த காலவாழ்க்கைக்குத் தகுந்தவாறு நடந்துகொண்டார்கள். அப்பொழுதிலிருந்தே உணவுத்திட்டம் ஏற்பட்டுவிட்டது. யுத்தப் பயிற்சியும் கொடுக்கப்பட்டது. எங்கு கண்டாலும் பூரா உடைதரித்து, துருப்புகள் யுத்தப் பயிற்சி பெறச் செல்வதைப் பார்க்கலாம். அவர்களுக்கு தேசத்தின் கௌரவத்தைப் பற்றி அதிக உயர்வாகவும், பெருமைப்படுத்தியும் அடிக்கடி போதிக்கப்பட்டது.

### ஜெர்மனியின் தயாரிப்பு.

அந்நிய நாடுகளை ஆக்கிரமிக்கும் கொள்கையைக் கொஞ்சம் கொஞ்சமாக ஜெர்மன் மக்களுக்கு ஊட்டப்பட்டது. கபடமும், ஒழுங்குத் தவறுதலுமுள்ள கோயபெல்ஸின் தலைமையின் கீழ் ஒரு பெரிய பிரசார இலாகா வேலை செய்துவருகிறது. அது பிர்சுரம், ரேடியோ, ஸினிமாப் படங்கள், நாடகசாலை, கல்வி, கலை முதலியவைகளுக்குத் தலைமைவகித்து வருகிறது. அதனால் யுத்தயந்திரத்தின் சார்பிலும், அதில் ஈடுபட்டிருக்கும் மக்களின் சார்பிலும், மேற்சொல்லியவைகள் ஒவ்வொன்றும் வேலை செய்யவேண்டும்.

இதற்குத் தகுந்தார் போல் பூரா அதிகாரமும் வாய்ந்த போலீஸ் இலாகாவிற்கு ஹிம்லர் தலைமை வகித்தான். நாஸிகளைப் பற்றியும், அவர்கள் கொள்கையைப்பற்றியும் விரோதமாகப் பேசுவதைத் தடுப்பதற்கும், பிடிவாதமாக அவ்விதம் எதிராகப் பேசுவோர்களை ஒழிப்பதற்கும், அவ்விலாகா வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தது.

இம்மாதிரி பெருத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டு வெகு துரிதமாக முன்னேற்றம் அடைந்துவரும் ஜெர்மன் மக்களைப் பார்த்து உலகத்தார் பிரமித்தார்கள். ஈர் நாய், எரும்பு முதலிய இனங்களைப்போல், ஜெர்மானியரும் சமாதான காலம் என்று சொல்லிக்கொண்டு யுத்தப் பொருள்கள்யாவும் தயாரித்து வந்தார்கள். அந்த சமயத்தில் அவர்களின் யுத்தப் பிரயத்தனம் எவ்வளவு இருக்குமென்று நம்மளில் அநேகருக்குத் தெரியாது. ஆனால் பிரமாண்டமான அளவில் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனவென்று சில சமயங்களில் நமக்கு எச்சரிக்கை செய்யப்பட்டன.

அந்த சந்தர்ப்பங்களில் வின்ஸ்டன் சர்ச்சில் காமன்ஸ் சபையிலும், பொதுமக்கள் முன்பாகவும் ஜெர்மனியில் நாஸிகள் மிக்க பலமாக யுத்த தளவாடங்களைத் தயார் செய்து வருகிறார்கள் என்றும், சர்வதேச சட்டத்திற்கு விரோதமாக கிளம்பியிருக்கிறார்கள் என்றும், இதற்குமுன் எவரும் இவ்விதம் நடந்ததில்லையென்று பலதடவைகளில் பிரசங்கம் செய்திருக்கிறார். அப்பொழுது அவரை "சண்டையை விரும்புகிறவர்" என்று யாவரும் நிந்தித்தார்கள்.

ஏதாவது ஒரு அல்ப விஷயத்தை மிகவும் நாஸூக்காகவும், பகிரங்கமாகவும் வெளிப்படுத்தும்பொழுது ஹிட்லர், கோயரிங் இன்னும் அவர்களுடைய தோழர்கள் புன்சிரிப்புடன் பிறரை ஏமாற்றிவிட்டதாகச் சந்தோஷப்படுவார்கள். வெடி விமானங்கள் போடும் பகுதிகளை அதிகரித்தும், டாங்கிகள், பீரங்கிகள் முதலிய யுத்த தளவாடங்களைப் பன்மடங்கு உற்பத்தி செய்தும் வந்ததால் வெளியில் உள்ள ஜனங்களுக்கு தங்கள் நாகரீகத்தையே நாஸிகள் சிதைத்துவிடுவார்களோ என்ற பயமிருந்துவந்தது.



### காலப்பிற்பாடாகி விட்டதா?

ஜனநாயக அரசாங்கங்களில் ஒரு பிரயத்தனமும் செய்யாமல் நாம் வெகுதூரம் பின்வாங்கி விட்டோமா? நாஸிகள் அப்படித்தான் நம்பியிருந்தார்கள். ஜெர்மனிக்கு வெளியேயுள்ள அநேக ஜனங்கள்கூட அதாவது நாஸிகளை விரும்பாதவர்கள்கூட, அம்மாதிரி நாம் ஒன்றும் பிரயத்தனம் செய்யவில்லை என்று நம்பி, உலகத்தைக் கலக்க வல்லமையுள்ள இவர்களுடன் சிநேகிதம் செய்துகொள்ளத் துடித்தார்கள்.

நாஸிகளும், பாஸிஸ்டு கட்சியில் சேர்ந்தவர்களும், இவர்களால் தூண்டப்பட்ட திடச்சித்தமில்லாதவர்களும், ஜனநாயகக்கொள்கையுள்ள ஜனங்களின் பேரில் தங்களுக்குள்ள அருவெறுப்பை வெளிக்காட்டினார்கள்.

நம்மைப் பார்த்தால் பழமையாகவும், வாலிபம் போய் கிழண்டு போனதாகவும், இளமையுடனும், அதிகத் துணிகரம் கொண்டிருக்கும் இந்த ஜனங்களை வெற்றிகரமாக எதிர்க்கக்கூடிய பெரிய பிரயத்தனத்தை ஒருக்காலும் செய்ய முடியாதவர்கள்போல் நாஸிகளுக்குத் தோன்றிற்று. அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு மேன்மையாக வந்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு நாம் கீழே போய்க்கொண்டிருந்தோம். வருங்காலம், அதாவது வெகுநாள் கிரமித்து அல்ல—சமீபத்திலுள்ள வருங்காலம் அவர்களுக்கு நல்லதாகத் தோன்றிற்று.

அவர்களுடன் சமாதானம் செய்துகொள்ள எடுத்துக்கொண்ட கடைசிப் பிரயத்தனம் தவறிப்போனவுடனும், உலகம் பூராவும் யுத்தத்தில் ஈடுபடவேண்டியதுதான் என்று தோன்றியவுடனும், அபாயகரமான அந்தக்கடைசி சந்தர்ப்பத்தில் பிரிடனிலுள்ள நாம் போர் செய்வதாக ஏற்றுக்கொண்டோம். ஒரு சாதகத்தைத் தவிர வேறு எவ்வளவு பிரதிகூலங்கள் சாத்தியமானதோ அவ்வளவு பிரதிகூலங்களும் அப்பொழுது நமக்கிருந்தன.

### ஏழு வருஷத்திற்குமுன் முதல் தயாரிப்பு.

இந்தத் தீவில் நம்மளில் 4,50,00,000 பேர்களும் அவர்களில் 7,00,00,000 பேர்களுடன் சேர்ந்து இருந்தோம். அவர்கள் நம்மைவிட ஏழு வருஷங்களுக்கு முன்பே யுத்தப் பயிற்சியில் தயாராகி வந்திருக்கிறார்கள். அவர்கள் அநேக வருஷங்களாக யுத்த நிலைமைக்குத் தகுந்தவாறு உணவுப் பொருள்களை உபயோகப்படுத்திக் கொண்டும், பிரயத்தனங்கள் செய்துகொண்டும் வந்திருக்கிறார்கள். அந்த சமயங்களில் நாம் தமாஷாக பொழுது போக்கிவிட்டோம்.

ஜனநாயகத்தில் நாம் மிகவும் சுகவாசியாக இருந்து வந்திருக்கிறோம். இவ்வளவு வருஷத்திலும் ஜெர்மானியர் ராணுவ ஆக்ஷிக்கு உட்பட்டு எந்த நிமிஷத்திலும் ஆண், பெண், குழந்தை ஒவ்வொருவரும் ராணுவப் பயிற்சியிலிறங்கவோ, அல்லது தொழிற்சாலையில் வேலை செய்யவோ தயாராகி வந்திருக்கிறார்கள்.

அவர்கள் இவ்வித வாழ்க்கையை விரும்பினார்கள். ஆனால் அவ்வித இழிவான வாழ்க்கையை நாம் நிராகரித்தோம். அவர்களில் இதற்கு முன்னோர்கள் இம்மாதிரியாக யுத்தகால வாழ்க்கையே நடத்தி வந்தார்கள். இதற்கு விரோதமாகத்தான் நமது முன்னோர்களிருந்தார்கள்.

பண்டை காலத்தில் டேவிட்டுக்கும், கோலியாத்துக்கும் ஏற்பட்ட சண்டையில் டேவிட்டுக்குப் பாதகமாக எவ்வளவு பலம் இருந்ததோ அதற்கு அதிகமாகவே இப்பொழுதும் நமக்கு எதிராக எண்ணிக்கையற்ற பாதகங்கள் இருந்தன. நாம் போருக்கு ஒப்புக்கொண்டது நம்பிக்கையற்றதாகவே தோன்றிற்று. மேலும் இதைக் காட்டிலும் கேவலம் என்னவென்றால் நாம் செய்யவேண்டிய பெரிய பிரயத்தனத்தை யுத்தம் நடக்கும்பொழுது மாத்திரமல்ல, நமது நிலைமை மோசமாகப் போய்க்கொண்டிருக்கும் பொழுதே நாம் செய்யவேண்டியதாய் இருந்தது. நமக்கு எதிர் பக்கம் ஐரோப்பாவின் சமுத்திரக்கரை பூராவும் நாஸிகளின் வசமிருந்தது. நமது நாட்டைச் சுற்றியிருக்கும் கடல்களில் எல்லாம் 'யூ' படகுகள் மொய்த்துக்கொண்டிருந்தன. அல்லும் பகலும் லுப்ட்வாபி விமானப்

படை கூட்டம் கூட்டமாக வந்து வெடிகுண்டுகளைப்போட்டு நம்மை பயமுறுத்தி வந்தன. இங்கிலாந்தின் மீது படையெடுப்பும் அப்பொழுதே சாத்தியமாகக் காணப்பட்டது.

நாம் சமாதானமாயிருந்த காலத்தில் அவர்கள் தயாரித்த யுத்தக் கைத்தொழிலை பிரம்மாண்டமாகச் செய்வதற்கு பெரிய ஏற்பாட்டுடன் மாதமாதமும் அபிவிருத்தி செய்து வந்திருக்கையில் நாம் யுத்த பீதியிலும், யுத்தம் நடந்து கொண்டிருக்கும்பொழுதும், நமது நகரங்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டு எரிந்து கொண்டிருக்கும்பொழுதும், அபாயச் சங்குகள் தொழிற்சாலைகளின் வாசற்படிக்கு வெளியே ஒலித்துக்கொண்டிருக்கும்பொழுதும் நமது யுத்தப் பிரயத்தனத்தை அபிவிருத்தி செய்யவேண்டியதாயிருந்தது.

இதுமாத்திரமல்ல. மேற்கு ஐரோப்பாவைத் திடீரென்று ஆக்கிரமித்தவுடன் அங்கிருந்த பல பேர்கள் ஏற்கனவேயிருந்த 7 கோடி நாஸிகளுடன் சேர்க்கப்பட்டார்கள். மேலும் நாஸிகள் ஆக்கிரமித்த நாடுகளைக் கொள்ளையடித்தும், உணவு ஸப்ளைகளைத் திட்டப்படுத்தியும், இந்நாடுகளில் பசிப்பிணியால் வருந்தும் மக்களை அடிமை வேலை செய்யும்படி விட்டுவிட்டார்கள். அதனால் அவர்களுக்கு மனிதபலம் அதிகமாக அபிவிருத்தியடைந்தது.

அதன் பயனாக ஜெர்மனிக்கு வெளியே எல்லைப் புறங்களிலுள்ள தொழிற்சாலைகளெல்லாம் நாஸி யுத்த யந்திரத்திற்கு வேண்டிய பொருள்களைத் தயாரித்தன. இவ்விதமான நிலைமையைத்தான் நாம் எதிர்க்கவேண்டும். கஷ்டப்படும் ஜனங்களின் நலத்திற்காக அதை அடியோடு அழித்துவிடவேண்டும்.

அவ்விதமே நாமும் நாஸிகளின் கொடுமையை எதிர்த்து அதை ஒழிக்க ஆரம்பித்திருக்கிறோம். இதை நாஸிகள் நன்குணர்ந்திருக்கின்றனர். இதற்கு முன் ஜெர்மானியர் செய்துவரும் இகழ்ச்சியும், வீண்ஜம்பமும் இப்பொழுது அடியோடு மறைந்துவிட்டது.

## இனிமேல் நாஸிகளின் நிந்தனை இருக்காது.

சிதைவுற்று வரும் ஜனநாயகங்களைப்பற்றி இனிமேல் நாஸிகள் நிந்திக்க மாட்டார்கள். அதைப்போலவே பிரிடன் அழிந்துவிடுமென்று ஒரு வார்த்தையும் சொல்லமாட்டார்கள். ரூர் பிரதேசத்திலும், கொலோன், லூபெக், ராஸ்டாக், ப்ரெமன், ஹாம்பர்க் என்ற ஊர்களின் மக்களிடம் பிரிடன் இதோடு அழிந்து விட்டது என்று கோயபெல்ஸ் கூடச் சொல்லத்துணியவில்லை.

லுப்ட்வாபி படைப்பகுதிகள் அடிவாங்கி சிதறுண்ட பிறகும், வட ஆபிரிக்கப் படைப்பகுதிகள் கடுமையாக உதைபட்டபொழுதும், இம்மாதிரி பெரிய யுத்தத்தைச் செய்வதற்கு இனிமேல் பிரிடிஷாரால் முடியாதென்று அவன் சொல்லத் துணியமாட்டான்.

அவனும், அவனுடைய தோழர்களும் 'மீன் காம்ப்' புஸ்தகத்தை நன்றாக கவனித்துப் படித்திருக்கவேண்டும். அவ்விசித்திரமான புஸ்தகத்தை எழுதியவர், பிரிடிஷ் மக்கள் ரொம்ப ஊக்கமும், பிடிவாதமும் உள்ளவர்களென்றும், அவர்கள் யுத்தத்தில் இறங்கிவிட்டால் கடைசி வரையில் விடாமல் நிற்பார்கள் என்றும் அதில் எழுதியிருக்கிறார். ஒருக்கால் அதை எழுதிய ஆசிரியரான ஹிட்லருக்கு அந்தச் சமயம் அதிகாரம் கொடுக்கப்படவில்லைபோலும்.

இவர்கள் பேசும் தொனியையே மாற்றிக்கொள்ளும்படி செய்து விட்டோம். அவர்கள் இதுவரை மூடத்தனமாகச் செய்துவந்த ஏளனங்கள் எல்லாம் அடியோடு இல்லாமல் செய்து விட்டோம். அசாத்தியம் என்று எண்ணப்பட்டதை நாம் செய்து முடித்திருக்கிறோம். வெகு வருஷங்களாக அவர்களை முன்னே போகச்செய்து விட்டு மிகவும் குறைவான பலத்துடன் இப்போரில் இறங்கினோம். இன்னும் ஜனநாயகம் அழியாமல் நிலைத்திருக்கச் செய்திருக்கிறோம். ஆனால் கொடுமை, துன்புறுத்தல், அடிமை இவை நிறைந்த இந்த கோரமான அரசாங்கத்துடன் போரில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம்



## இப்பொழுது பிரிடன் எவ்வளவோ மேல்.

ஆதியில் நமக்கு எல்லாவித பாதகங்களும் இருந்து வந்தன. ஒரே ஒரு சாதகம்தான் இருந்தது. அந்த ஒரு சாதகம் எல்லாவித பாதகங்களையும் அடித்து விட்டது. அவ்வித சாதகம் நிஷ்களங்கமான மனதும், கவலையின்மையும்தான்.

சென்ற 10 வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட இப்பொழுது பிரிடன் எவ்வளவோ மேலாகயிருக்கிறது. ரகசியப் போலீஸார் கைக்கு அகப்படாத ஜெர்மானியர் இருந்தால் அவர்கள் 10 வருஷத்திற்கு முன் ஜெர்மனி இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது ஜெர்மனி மேலாக இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளுவார்களா?

ஜெர்மனியிலிருந்த அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள் அநேகர் நமக்குச் சொல்லியிருக்கிறபடி பெரிய சிறைச்சாலையில் அவர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களைச் சுற்றியுள்ள சந்தர்ப்பங்கள் அவர்களை வேறு விதமாக நடந்துகொள்ள விடமாட்டாது. அவர்கள் அடையும் புகழ்களெல்லாம் அங்கு மறைந்து விடுகின்றன. வெற்றிகளும் மறைந்து விடுகின்றன. அவர்கள் மனம் நிம்மதியில்லாமல் அவர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலையில் வரவர அதிகப்பேர்கள் அங்குமிங்கும் போய்க்கொண்டிருக்கிறார்கள். குற்றம் செய்துவிட்டதாக அவர்களுக்குத்தோன்றும் உணர்ச்சியினால் அவர்களுக்குச் சங்கடமும், வருத்தமும் ஏற்பட்டிருக்கிறது. உலகத்தார் பேரில் அவர்கள் கொண்டிருக்கும் வெறுப்பும், அருவெறுப்பும் அவர்களின் ஏமாற்றத்தை அதிகரிக்கச் செய்கின்றன.

அவர்கள் ஒருவிதமான நிம்மதியில்லாத வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களின் தலைவர்கள் திடீரென்று பைத்தியம் பிடித்தவர்களாய் மாறி மறைந்து விடுகிறார்கள். அவர்களுக்குப் புதுமாதிரியான வியாதி பிடித்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது. ஜெர்மன் ரகசியப் போலீஸார் (Gestapo) இல்லாத இடங்கள் இல்லை. எங்கும் பிறர்மேல் குற்றம் கூறியும், கண்டனம் செய்தும், தகுந்தபடி தண்டனை விதித்தும் வருகிறார்கள். ஒருவனாவது அவனுடைய அயலானை நம்புவது கிடையாது.

ஆக்கிரமித்த நாடுகளில் தொழிற்சாலைகள் தகர்க்கப்படுகின்றன. ரயில் வண்டிகள் இருப்புப்பாதையைவிட்டு மாறி விடுகின்றன. தெருக்களில் துப்பாக்கி வெடிகள் பிரயோகிக்கப்படுகின்றன.

இம்மாதிரியாக எங்கும் வெற்றியடைந்து வந்த ஜெர்மனி இப்பொழுது எந்த நிலைமையில் இருக்கிறது? இவ்வுலகத்திற்கே தலைமை வகிக்க எண்ணியிருந்ததல்லவா?

பிரிடனிலிருக்கும் நாமும் இப்பொழுது, நாஸிகளை எதிர்த்துப் போராடுவதற்குத் தீர்மானிக்கிறோம். அதுவும் மிகவும் பயங்கரமான வேலைதான். இருந்தாலும் நமக்கிருந்த நிஷ்களங்கமான மனதையும், கவலையின்மையையும் கொண்டு, நாஸி யுத்த யந்திரத்தைக் குலைப்பதற்கு முற்பட்டிருக்கிறோம்.

அரும்பாடுபட்டு வேலை செய்வதில் ஈடுபட்டிருக்கிறோம். ஜனங்களெல்லாம் போர்படையில் சேருவதற்கும் தொழில் செய்வதற்கும் முன்வந்திருக்கிறார்கள். விமானத் தாக்குதல் நடக்கும் பொழுதுகூட அவரவர்கள் வேலையைச் செய்ய அனுமதிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்.

அவர்கள் எங்களுடைய யுத்த முயற்சியைக் குறைகூறுவது என்னவென்றால் தங்களால் அதிக வேலை செய்யக்கூடிய திறமையிருந்தும், அம்மாதிரி செய்யத் தங்களைத் தூண்டவில்லையே என்று சொல்லுகிறார்கள். தங்களை அதிகவேலை செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டதாகக் குறைகூறவில்லை. மொத்த ஜனத்தொகையில் சிறுவர்களும், கிழவர்களும் நீங்கலாக 3 கோடியே 30 லக்ஷம் ஜனங்களில் தேசிய சேவையில் ஏதாவது ஒரு பகுதியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 20 லக்ஷம். அவர்கள் அடிமைகளைப் போலவாவது மனம் சோர்ந்திருக்கிறவர்களைப் போலவாவது இல்லை. ஆனால் அவர்கள் அனைவரும் சேவைசெய்ய [illegible]

கள் ஸ்வதந்திரத்துடன் வாழவேண்டியதற்காக அவர்கள் வேலை செய்தும், போர் நடத்தியும் வருவதால் அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் உலகத்தார்களுக்கே அவர்கள் பேரில் பிரீதி உண்டாகியிருக்கிறது.

நாம் காலதாமதத்தின் பேரில் வேலை செய்ய ஆரம்பித்திருப்பதால் அபிவிருத்தி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. நீண்டகால திட்டம் போட்டு விஸ்தாரமான முஸ்தீப்பு செய்ய நமது தேசத்தார்களுக்கே ஒரு அருவெறுப்பு உண்டு. ஆனால் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு நமது தேசத்தார்களுக்கு ஒரு அபூர்வ சக்தியுண்டு.

டங்கர்க் சம்பவத்தினால் வந்த முக்கியத்துவம் அது தான். சோதனைகாலம் நேர்ந்தவுடன் நமது திறமை நம்மைவிட்டு அகலவில்லையென்று காட்டப்பட்டது. ஜெர்மானியர் இம்மாதிரி அகப்பட்டுக்கொண்டால் அவர்கள் ஒரு பொழுதும் தப்பிப்போகமாட்டார்கள்.

### தாராளமான கண்டனம்.

நம்மைத் தானே நாம் கண்டனம் செய்து கொள்வதில் நாம் ஏமாந்து விடக்கூடாது. நானும் இம்மாதிரி கண்டனத்தில் அடிக்கடி சேர்ந்துகொண்டும், சப்தம் போட்டும் தூஷித்திருக்கிறேன். நமது பிரயத்தனங்கள் பூரணமாக இல்லையென்று நமக்குத் தெரிவதால் நாம் அவற்றைத் தூஷிக்கிறோம். நமது பிரயத்தனங்கள் இன்னும் அதிகப் பெரியதாகவும், அதிக மேன்மையுள்ளதாகவும் இருக்கவேண்டுமென்று நாம் விரும்புவதால், அவற்றைக் கண்டனம் செய்கிறோம். நாம் ஸ்வதந்திரம் உள்ளவர்களாகவும், நமக்குத் தோன்றுவதைச் சொல்லுவதற்கு நாம் தீர்மானித்திருப்பதாலும் நாம் கண்டனம் செய்து பேசுகிறோம்.

அதைப்போல் ஹிம்லரும், கோயபெல்ஸும் பொதுமக்களின் உரிமைகளை அடக்கிவரும் பிரயத்னத்தனங்களைக் குறித்து ஜெர்மானியரைக் கண்டனம் செய்யும்படி கேட்டுக் கொண்டால் எவ்வளவு அசிங்கமாக அவ்வதிகாரிகளின் நடவடிக்கைகள் கண்டனம் செய்யப்படும்!

1940-ம் வருஷம் கோடையில் பிரிடன் பேரில் ஏன் படையெடுக்கப்படவில்லை? பிரிடன் பைடர் விமானங்களால் லுப்ட்வாபி ஏன் முறியடிக்கப்பட்டது? மாரிக்கால படையெடுப்புக்குத் தகுந்த முஸ்தீப்பு இல்லாமல் ஏன் ஜெர்மன் சைனியம் ருஷ்யாவிற்குள் போகும்படி செய்யப்பட்டது? ஜெர்மன் நகரங்களின் பேரில் பிரிடிஷ் விமானப்படை பெரிய பெரிய தாக்குதல்களைச் செய்யவொட்டாமல் ஏன் தடுக்கக்கூடாது?

ஜெர்மன் மக்கள் தூஷணையாக வெளியிடுவதினால் நாம் செவிடாகி விடுவோம் என்று சொல்லுகிறேன்.

ஆனால் அவர்கள் அம்மாதிரி சொல்லவிடாமல் ஏற்பட்டிருக்கும் தடைகள் ஒரு நாளும் நிவர்த்திக்கப்படமாட்டாது. ஆனால் இப்பொழுது கூட அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தடையும், நிர்ப்பந்தமும் பலப்படுத்தப்பட்டுவருகின்றன. போலீஸ் அதிகாரத்திற்குள்ளிருக்கும் உலகத்திலுள்ள பெரிய ஸமஸ்தானம் உண்மையில் நாஸி ஆதிக்கத்திலிருக்கும் ஜெர்மனி தான்.

நமக்கு இது விநோதமாகத் தோன்றும். ஆனால் முற்றிலும் அதில் ஆச்சரியமில்லை. நமக்கு எவ்வளவோ பிரதிகூலங்கள் இருந்த போதிலும் நாம் வெற்றிகரமாக அவர்களைப் போருக்கு இழுத்து முறியடித்துவிடுவோம்,

நமது இறப்பில் உள்ளவர்களுக்கு ஸ்வதந்திர மனப்போக்குண்டு; மனதில் களங்கமேயில்லை. ஆனால் எதிரிகளுக்கோ எப்பொழுதும் கவலை, குற்றம், துக்கம் நிறைந்த மனதுள்ளவர்களாக இருக்கிறார்கள். கோபமுண்டு, மனஉறுதிகொண்ட நகரவாசிகள் கொள்ளைக் கூட்டத்தார்களையும், கைதிகளையும் எதிர்த்துப் போராடுகிறார்கள்.

ஜனநாயக நோக்கமுள்ளவர்கள் உதயகால சூரியன் கேவலமான சந்திரிகையைப் போக்குவதுபோல நாஸிகளை ஜயித்துவிடுவார்கள்.



## வார யுத்தச் செய்திகள்.

### 26—9—42-லிருந்து 2—10—42-வரை.

**ருஷ்யா.**—ஸ்டாலின்கிராட் சண்டை ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு வீட்டிலும் நடைபெறுகிறது. வாரனேஷிலிருந்து காகஸஸ் வரையிலும் வால்காவிற்கும் டானுக்கும், இடையிலுள்ள இடத்தில் நகருக்கு வெளிப்புறங்களிலும் நடைபெறுகிறது. ஜெர்மானியர் வால்காவிற்குக் குறுக்கே கடந்து செல்ல முயற்சிக்கின்றனர். ஆகவே இரு கட்சிக்கும் எதிரியின் ஸப்ளைகளைத் தடுப்பதுதான் நோக்கம். இது யாருக்கு சாத்தியமென்பது பிரச்னையாக இருக்கிறது. ஸ்டாலின்கிராட்டின் வடமேற்கில் ஜெர்மானியர் உட்புகுந்ததாகச் சொல்லப்படுகிறது. ருஷ்யக் குறுக்கு எதிரிப்புகள் நகருக்குத் தெற்கிலும் பரவியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஜெர்மன் தலைவனான மார்ஷல் வான் பாக்கிற்குப் பதிலாக மார்ஷல் வான் லிஸ்டு நியமிக்கப்பட்டிருக்கிறானாம்.

வாரனேஷ் பிரதேசத்தில் ருஷ்யர்கள் பல முக்கிய இடங்களைப் பிடித்திருக்கின்றனர். ரிஷெவ்வில் ருஷ்யர்கள் புகுந்து வால்கா கரையிலிருந்து எதிரியைத் துரத்தினர். ஸின்யாவினோ பிரதேசத்தில் லெனின்கிராட்டை விடுவிப்பிற்காகச் சண்டை நடைபெறுகிறது.

**ஆர்க்டிக்கிற்குச் சென்ற துணைக்கப்பல் கூட்டம்.**—ருஷ்ய-ஆங்கிலேய-அமெரிக்கக் கப்பல் கூட்டம் ஒன்று மர்மான்ஸ்கை அடைந்தது. நடுவழியில் எட்டு நாட்களுக்கு லுப்ட்வாபி, யூ படகு முதலியவைகளுடன் கடும் சண்டை நடந்தது. எட்யே கிங்டன் பாடம்—வாதம் என்பவர் அப்போது நடந்த பாம்பர் விமானத் தாக்குதல், பாய்ந்து தாக்குதல், யந்திர பீரங்கித் தாக்குதல் முதலியவைகளைப் பற்றிச் சொன்னார். அப்போது 40 எதிரி விமானங்களும், 2 யூ படகுகளும் தாக்கப்பட்டது. மற்றும் நான்கு யூ படகுகள் சேதமாயின.

1,30,000 பேர் கொண்ட படைக்கு முஸ்தீப்பு கொடுக்கக்கூடிய சாமான்கள் போய்ச் சேர்ந்தன. பீரங்கிகளும், டாங்கிகளும், மற்ற சாமான்களும், சென்றன. டாங்கிப் படை மாத்திரம் 200 டாங்கிகளும், 2,000 வண்டிகளும் சென்றன. யுத்த சாமான் போக்குவரத்து இலாகா உதவி மந்திரி ஸாம்வேல் நோயில் பேகர் இந்த சாமான்கள் சென்றதிலிருந்து ஹிட்லரின் முடிவைத் தீர்மானித்துவிடலாம் என்றார். 'சாமான் கப்பல்கள் சென்று கொண்டிருக்கின்றன. இன்னும் அதிகமாகவே செல்லும்'.

**மடகாஸ்கர்.**—ஸெப்டம்பர் 23உ அன்டானனரிவோ வசமாயிற்று. அங்கே ராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. டேலீர் என்ற துறைமுகமும் வசமாயிற்று. அங்கே கவர்னர் ஜெனரலாயிருக்கும் அன்னட், டாபின் துறைமுகத்திற்கு ஓடிவிட்டார். இது 400 மைல் தூரத்திலிருக்கிறது.

**தூரக்கிழக்கு.**—சைனாவில் ஷான்டங் மாகாணத்தில் ஷாஹஸீனுக்கு அருகில் சண்டை கடுமையாகி வருகிறது. கின்ஹவா—லாஞ்சி பிரதேசத்திலும் சண்டை கடுமையாகி இருக்கிறது. ஹாங்லிங்கை அமெரிக்க விமானங்கள் தாக்கின. தென்மேற்கு யூனானில் சீன விமானங்கள் மெக்ஷின், டெங்சாங், பர்மா ரஸ்தா முதலியவைகளைத் தாக்கின.

**தென்மேற்கு பஸிபிக்-நியூ கினி.**—ஜப்பானியர் ஆயியைப் பிடித்தனர். மயோலா, நயோரோவை நோக்கிச் செய்யப்பட்ட ஜப்பானியத் தாக்குதல் தடையுற்றது. அயோரா பய்வாவிலிருந்து எதிரி கலைக்கப்பட்டான். நயோரோ வரையிலும் துரத்தப்பட்டான். குமுஸி நதியில் வாய்ரோபி பிரதேசம் வழியாக வந்து கொண்டிருந்த ஜப்பானிய ஸப்ளை மார்க்கம் துண்டிக்கப்பட்டது.

**ஸாலமன்.**—அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்கள் ஷார்டுலாண்டு தீவைத் தாக்கின. இங்கேதான் ஜப்பானியர் ஆதிக்கம் பெற்றிருந்தனர்.

**வட பஸிபிக்.**—அமெரிக்க தரை விமானப்படை அலூஷியனில் கிஸ்காவைத் தாக்கின.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| 17—9—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பர்மாவும், சைனவும்—(Burma & China).** | | | |
| | நகரம்.—பாமோ (Bhamo). | | | |
| | எண்ணெய் ஏற்றிச்செல்லும் படகு.—காட்ஹா (Katha)வுக்கு வடக்கே. | | | |
| | ரயில்வே ஜங்க்ஷன்.—காட்ஹா (Katha) வுக்கு மேற்கே. | | | |
| 18—9—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பர்மாவும், சைனவும்—(Burma & China).** | | | |
| | விமானப் போர்.—டின்கா (Tinka). | | | |
| | தொழிற்சாலைக் கட்டடங்கள்.–லோய்விங் (Loiwing). | | | |
| | விரோதி சைனியம் இருப்பிடங்கள்.—நாம்கான் (Namkhan). | | | |
| | இரண்டு படகுகள், ஒரு நீராவிக்கப்பல்.–காட்ஹா (Katha). | | | |
| 21—9—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விமான மிறங்குமிடங்கள்.—எல்டாபா (El Daba)வுக்குக்கருகாமையில். | பெருந்தீ கிளம்பியது. | | |
| | விமானச்சண்டைகள்.–யுத்தப்பிரதேசம். | | | |
| | அச்சு நாடுகளின் டாங்கிகள், ஸப்ளை போக்குவரத்து வண்டிகள்.–விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)—ஸாலமன் (Solomons) தீவுகள்** | | | |
| | கிஸோ (Giso) தீவு. | | | |
| | விமான நிலயம்.—பூகா (Buka). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—கொக்கோடா (Kokoda). | | | |
| 22—9—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—தொழிற்சாலைகள் லில்-லெனஸ் (Lille-Lense) பிரதேசத்தில். | | | |
| | மின்சார உற்பத்தி சாலைகள்.—மாஸின் கார்ப் (Mazine-Garbe), போன்டா வீடின் (Ponta-Veudin). | | 2 விமானங்கள். | |
| | இரும்பு, எஃகுத் தொழிற்சாலை.–இஜ்முடீன் (Ijmuiden). | | | |
| | இரவில்.–தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 22—9—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi) துறைமுகம். | 2 கப்பல்கள் தாக்குண்டன. | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | பெட்ரோல், வெடிமருந்து கிடங்குகள், பண்டகசாலைகள், அநேக குடிசைகள்.—பூனு (Buna). | | | |
| | ஜப்பானிய ஸ்தானங்கள்.–கொக்கோடா (Kokoda). | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதிக் கப்பல்கள்.–ராபல் (Rabaul) துறைமுகம். | | | |
| | விமானக்கூடம்.—ராபல் (Rabaul). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமானக்கூடம்.—பூகா (Buka). | | | |
| 23—9—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.–நீர்மூழ்கிக் கப்பல்கள் நிற்குமிடங்கள்–பிளென்ஸ்பர்க் (Flensburg). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான துணையுடன் கூடிய சாமான் கப்பல்.—டச்சுக் கடற்கரைக்கருகாமையில். | | 10 விமானங்கள். | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விமான மிறங்குமிடங்கள்.—எல்டாபா (El Daba)விலிருந்து மெர்ஸா மாட்ரு (Mersa Matruh) வரை. | | | |
| | போக்குவரத்து.—விபி ஏனீஷ் (Vibi Aneish)லிருந்து பூகா (Fuka)வரை. | தீக்கள் கிளம்பின. | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள வசதிகள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | வண்டிகள்.—பூயாமட் (Buamud)டுக்கும், பார்டியா (Bardia)விற்கும் இடையே. | | | |
| | டொப்ருக் (Tobruk)குக்கும் டெர்னு (Derna)வுக்கும் இடையேயுள்ள ரஸ்தா. | | | |
| | விமான மிறங்குமிடங்கள்.–பூகா (Fuka), ஸிடி ஹெனிஷ் (Sidi Haneish) பிரதேசங்களில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.–கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—9—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.- ராபால் (Rabaul) துறைமுகத்தில். | சாமான் ஏற்றிய கப்பல் தாக்குண்டது. | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | மலைப்பாதை, விமானக்கூடம் —கொக்கோடா (Kokoda). | | | |
| | பாலம்.—வெய்ரோபி (Wairopi). | | | |
| | விரோதியின் முகாம்கள்.-மூபோ(Mubo). | | | |
| | **டிமோர் (Timor).** | | | |
| | டில்லி (Dilli). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமானக்கூடம்.—பூகா (Buka). | | | |
| | கப்பல் துறைகள், கட்டடங்கள்.—ரெகாடா (Rekata) விரிகுடாவில். | | | |
| **24—9—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்க வில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | டொப்ருக் (Tobruk). | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.— ஸிடிஹெனிஷ் (Sidi Haneish) பிரதேசத்தில். | | | |
| | அச்சு நாடுகளின் டாங்கிகள், ஸப்ளைகள் கொண்டுவரும் வண்டிகள்.—விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).—ஷார்ட்லாண்டு (Shortland) தீவுகள்.** | | | |
| | விமானப் போக்குவரத்துகள்.— தீவுகளுக்கருகாமையில். | போக்குவரத்து சாதனங்கள் தாக்குண்டன. | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விமானக்கூடமும், அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசமும்.—கொக்கோடா (Kokoda). | | | |
| | சேதப்பட்டுப்போன பாலம்.— வெய்ரோபி (Wairopi). | | | |
| | விரோதியின் சைனியக் கூட்டங்கள்.— மூபோ (Mubo), ஸலாமுவாவுக்குத் தெற்கே 12-மைல்கள் தூரத்தில். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதியின் கப்பல்கள்.—ராபால் (Rabaul) துறைமுகத்தில். | | | |
| | **டிமோர் (Timor).** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான சாமான் கப்பல்கள்.—டில்லி (Dilli). | | | |
| | **தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific).** | | | |
| | வேவு பார்த்தல்.—வடமேற்குப் பிரதேசத்தில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| **25—9—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ஜெர்மன் ரகசியப் போலீஸாரின் தலைமை ஸ்தானம்.—நார்வேயிலுள்ள ஆஸ்லோ (Oslo). | | 1 விமானம். | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரக்கரையோரங்களில். | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | கப்பல்துறைப் பிரதேசங்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | லக்ஷியங்கள்.—காலாலு (Galal)க்கருகாமையிலுள்ள ரஸ்தாவில். | | | |
| | போக்குவரத்து.— ஸோலூமிலிருந்து ஸிடிபராணிவரை (Sollum—Siddi-Barrani)யுள்ள ரஸ்தா. | | | |
| | லக்ஷியங்கள்.—மாடானு பாகுஷ் (Maatana Bagush). | | | |
| | விரோதி விமானங்கள் இறங்குமிடங்கள்.— ஸிடிஹெனிஷ் (Sidi Haneish) பிரதேசம், மெர்ஸாமாட்ரூ (Mersa Matruh), பூகா (Fuka). | | | |
| | போக்குவரத்து.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | | | |
| | **இந்தோ-சைனு (Indo-China).** | | | |
| | கெய்லாம் (Gailam) விமான நிலயம்.-ஹானோ (Hanoi)யில். | | | |
| | **டிமோர் (Timor).** | | | |
| | டில்லி (Dilli) | ... தீயினால் சேதமாக்கப்பட்டது. | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விரோதியின் கப்பல்கள்.— ராபால் (Rabaul) துறைமுகத்தில். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விமானங்கள் பிரிந்துள்ள பிரதேசங்கள்.—பூனு (Buna). | | | |
| | வெய்ரோபி (Wairopi) பாலம்.— கொக்கோடா (Kokoda). | | | |
| **26—9—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—சுரங்க வெடிகள் போடுவது.—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரக்கரையோரங்களில். | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | பார்டியா (Bardia)விலிருந்து டொப்ருக் (Tobruk) வரையுள்ள ரஸ்தாவில் செல்லும் போக்குவரத்து ஸாதனங்கள். | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிர | | | 2 விமா |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 26—9—42. (சனிக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | எதிரி விமான எதிர்ப்புகள்.—ஸிஸிலி (Sicily)யில். | | | 1 விமானம். |
| | **எகிப்து (Egypt).** | | | |
| | விமானச் சண்டைகள்.-ஸூயஸ் (Suez) பிரதேசத்தில். | | | 1 விமானம். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **டோபிரியாண்ட் (Tobriand) தீவு.** | | | |
| | விரோதியின் போக்குவரத்து.-கிட்டாவா (Kitava) தீவிற்கருகாமையில். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | கப்பல்கள்.—ராபால் (Rabaul) துறைமுகத்தில். | அநேக கப்பல்கள் தாக்குண்டன. | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விமானங்கள் பிரிந்துள்ள இடங்கள்.—பூனு (Buna). | | | |
| | விரோதிக்கு ஸப்ளைவரும் மார்க்கங்கள்.—இபோஜி (Efog)யில். | | | |
| 27—9—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi), டொப்ருக் (Tobruk). | | | |
| | தளகர்த்தர் ரோமலுக்குச் செல்லும் ஸப்ளை மார்க்கங்கள்—விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | விரோதிக்குச் சொந்தமான டாங்கிகள், மற்ற வண்டிகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள, விமானங்கள்—ருஷ்ய யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | கப்பல்கள்—ராபால் (Rabaul) துறைமுகத்தில். | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விமான தளம்—பூனு(Buna). | | | |
| | ஸப்ளைகள் அனுப்புவதற்கு வசதியான கட்டடங்கள், படகுகள், விமானக் கூடங்கள், பாதுகாப்பு ஸ்தலங்கள்—பூனு-கோனு (Buna-Gona) பிரதேசத்தில். | | | |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 22—9—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையிலுள்ள ஒரு இடம். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | ஒரு இடம்—மோர்ஸ்பி துறைமுகத்திற்கு 32 மைல்களுக்கப்பால். | | | |
| 23—9—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—ரோந்து—இங்கிலீஷ் கால்வாயில். | | 1 விமானம். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 24—9—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—விமானச் சண்டைகள்—பிஸ்கே விரிகுடாவில் (Biscay). | | 1 விமானம். | |
| | இரவில்.—இங்கிலாந்தின் (England) தென்மேற்குக் கடற்கரை. | சேதமில்லை. | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ருஷ்யர்களின் போக்குவரத்து—ஸ்டாலின்கிராடு (Stalingrad)க்குக் கிழக்கேயுள்ள வால்கா நதியில். | | | |
| 25—9—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ருஷ்யர்களுக்குச் செல்லும் போக்குவரத்துகள்—ஸ்டாலின்கிராட் (Stalingrad)க்குக் கிழக்கே. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | 2 விமானங்கள். | |
| 26—9—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **எகிப்து (Egypt)** | | | |
| | கெய்ரோ (Cairo). | | | |
| | **ஆஸ்திரேலியா (Australia).** | | | |
| | டார்வின் துறைமுகம் (Port Darwin). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 27—9—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் தென்கிழக்குக் கடற்கரை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ருஷ்யர்களுக்குச் செல்லும் ஸப்ளைகள்—ஸ்டாலின்கிராடு (Stalingrad)க்குக் கிழக்கே. | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 28—9—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—கடற்கரை யோரத்திலுள்ள ஜில்லாக்கள்—இங்கிலாந்தின் (England)ன் கிழக்கேயும், தென்கிழக்கேயும். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **ஆஸ்திரேலியா (Australia).** | | | |
| | டார்வின் துறைமுகம் (Port Darwin). | | 1 விமானம். | |

# யுத்தக் குறிப்புகள்.

**உத்சாக பங்கம்: வியக்தமான மொழிகளும் எச்சரிக்கையும்.** (ஸெப்டம்பர் 27ௗ) ஞாயிற்றுக்கிழமையன்று கல்கத்தாவிலிருந்து ஒலிபரப்பப்பட்ட (Lt. Gen.) இர்வின் என்பவரின் மொழிகளைக் கேட்போருக்குக் கடந்த சில வாரங்களாக நடந்துவரும் கலவரங்களால் இந்தியாவின் பெயர் கெட்டுப்போனதைப்பற்றி கொஞ்சம் லஜ்ஜை ஏற்படலாம். இந்தியாவில் தற்போது உள்ள சிரமநிலைமைகளில் இவ்வித கலவரங்களும் நேருவதைப்பற்றி இர்வின் தனது வருத்தத்தைத்தான் தெரிவித்தார். பிறரிடமிருந்து இந்தியர்களைக் காக்கவந்திருக்கும் இத்தருணத்தில் இந்தியர்கள் செய்நன்றி இல்லாமலிருப்பதைப் பற்றியும், கலகத்தொழிலில் ஈடுபட்டோரைச் சுடும்படியான துர்பாக்கியம் சிப்பாய்களுக்கு நேரிட்டிருப்பதைப் பற்றியும் தனது கவலையைத் தெரிவித்தார். அதாவது இந்தியாவை இந்தியர்களே அழித்துவிடாமல் பாதுகாக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக அவர் சொன்னது கடும் மொழிகளானாலும் அவ்வித நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்பது உண்மைதான். மொத்தத்தில் இந்த கலவர நிலைமை இந்தியப் பொது வாழ்க்கையைக் கெடுத்துவிட்டது. இருந்தாலும், இர்வின் மீண்டும் சொல்லுவதைக் கேட்போம்.

"இவ்வளவு வருஷகாலமாக பிரிடிஷ்காரர்களுக்கும் இந்தியர்களுக்கும் இருந்த ஒரு நெருங்கிய சம்பந்தம் காரணமாக பரஸ்பரம் நம்பிக்கையும் சிநேகமும் இருந்துவந்தது. ஆனால் தற்சமயத்தில் சிலர் மாத்திரம் யுத்த முயற்சியைத் தடுப்பதற்கான கலகங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். இவ்வித கலகங்களால் இந்தியாவிற்கு எவ்விததீங்கு ஏற்படுமென்று இவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. இந்தக் கலகங்களை அடக்க நாம் ஜெர்மானியரைப்போல் ஈவிரக்கமில்லாத கடும் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது நம்முடைய அபிப்பிராயமுமில்லை. ஆனால்நிதானமான வழியையே பின்பற்றி வருகிறோம்.



"நிதானமென்றால் பலக்குறைவைக் காண்பிப்பதாக எண்ணிவிடக்கூடாது. ஆனால் சொத்து, உயிர் போக்குவரவு முதலியவைகளைப் பாதுகாப்பதற்கு எப்படி நடந்து கொள்ளலாமென்று நீங்கள் நினைக்கிறீர்களே. அப்படி சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பலமான நடவடிக்கையையே எடுத்துக்கொள்ளலாம்".

இந்த மொழிகள் ஒரு சிப்பாய் கூறும் விதமாக நேரானதாக இருந்தாலும் வியக்தமாக இருக்கின்றன. இவைகளைக் கொண்டு நாம் எச்சரிக்கைகொள்ள வேண்டும். ஆனால் இதிலிருந்து சிப்பாய்களுக்கு ஈவிரக்கமில்லை என்று நினைத்துவிடக்கூடாது. இர்வின் மீண்டும் சொல்லுவதாவது :—

'நாங்கள் செய்யும் கடமைகளுக்கு எங்களுக்கு வந்தனம் தேவையில்லை. ஆனால் நாங்கள் செய்யும் தியாகங்களுக்கு இந்தியர்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பதாகத் தெரிந்துகொள்வது எங்களுக்கு உத்ஸாகத்தையும், திருப்தியையும் உண்டாக்கும். இவ்வித வேலைகளில் இந்தியர்களும், பிரிடிஷாரும் ஒன்றுபட்டு உழைக்கிறோம். வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம் முதலிய மாகாண வாசிகள் கிருஸ்துமஸ் முதலிய பண்டிகை காலங்களில் எங்களுக்கு அனுப்பிவரும் சாமான்களிலிருந்தும், துருப்புகளின் நன்மைக்காகச் செய்துவரும் நடவடிக்கைகளிலிருந்தும் எங்கள் விஷயமான நன்றியும், தயவும் இந்தியர்களுக்கு இருக்கிறதென்று தெரியவருகிறது.'

வீ வீ வீ வீ வீ வீ வீ

**இந்தியாவின் யுத்தச் செலவு.** சமீபத்தில் ஸர் ஜெர்மி ரேஸ்மான் லண்டனுக்கு விஜயம் செய்ததைப்பற்றி வரவு செலவு நிபுணர்கள் பலவிதமான யோசனைகளைச் செய்துவருகிறார்கள். ஆனால் இந்திய ஸர்க்காரும் இந்தியாவின் அக்கரைகளைக் கவனித்துவருகிறார்கள் என்றும், பிரிடிஷ் அரசாங்கம் இந்தியாவைக் குறித்து மிகவும் தாராளமானதும் ஒழுங்கானதுமான யோசனைகளைச் செய்துவருகிறார்களென்றும் நாம் சொல்லலாம். இந்தியாவின் சட்டசபையில் 1942—1943-ம் வருஷத்திற்குப் போடப்பட்டிருந்த வரவு செலவு திட்டத்தில் 387 கோடி ரூபாய் பிரிடிஷ் அரசாங்கத்தார் கொடுக்கவேண்டும் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பிரிடன் இந்தியாவிற்கு விமானங்கள், வண்டிகள், பீரங்கிகள் முதலிய சாமான்களை 60 கோடி ரூபாய்க்கு இனாமாகத் தருகிறது.

வீ வீ வீ வீ வீ வீ வீ

**மலைப்பாம்பு.** தற்போதிருக்கும் ஜப்பானுடைய நிலைமையை வேவல் ஒரு மலைப்பாம்புக்குச் சமமானதாக இருக்கிறதாகச் சொன்னார். ஜப்பான் இந்தியாவின் எல்லையில் ஒருவித நடமாட்டமுமின்றி இருக்கிறது. தென்கிழக்குச் சைனாவிலிருந்து தனது படைகளையும் வாபஸ் வாங்குகிறது. பர்மா ரஸ்தாவை மூடியதும் ஜப்பானியர் தங்களது படைகளை ஒன்றுசேர்த்து ஏராள பிரதேசங்களையும், ரயில்வேக்களையும், விமானத் தளங்களையும் வசப்படுத்தினர். சைனாவில் இப்போது ஒவ்வொரு இடத்திலிருந்தும் வாபஸ் பெறுகின்றனர். 200 மைல் நீளமுள்ள இருப்புப்பாதையை விட்டனர். வென்சவ், ஹூஷிஸின், லிஹூயி, வுயி, இங்கிருந்த விமானத்தளங்களையும் விட்டுவிட்டது. கின்ஹ்வா முற்றுகைக்குள்ளாகியது. இதெல்லாம் எதைத் தெரிவிக்கிறது? திடீரென்று சீனர்களின் எதிர்ப்பு பலப்பட்டிருக்க முடியாது. அல்லது ஜப்பானியரும் பலத்தை இழந்திருக்க முடியாது. ஆனால் எல்லாச் சண்டையும் முடிந்துவிட்டதாயும், கின்ஹ்வா முற்றுகையே கட்டுக் கதையென்றும் ஜப்பானியர் சொல்லுவதைக் கண்டும் ஒருவரும் ஏமாறமாட்டார்கள். பர்மா ரஸ்தா மூடப்பட்டிருக்கும்வரை அமெரிக்க விமானங்களுக்கு சைனாவிலுள்ள விமானத் தளங்கள் வரைச் செல்லுவது சிரமமான காரியமாக இருக்கலாம். ஆனால் இந்த விமானத் தளங்களை ஜப்பானியர் பிடிப்பானேன்? பிறகு விட்டு விடுவானேன்? மேலும் ஜப்பானியப் படைகள் ஸைபீரியாவிற்குச் செல்லுவதற்காகச் சைனாவிலிருந்து வாபஸ் பெறுவதாகச் சொல்லப்படும் சமாதானமும் திருப்திகரமாக இல்லை. ஏனென்றால் சைனாவை விட்டுவிட்டு ஸைபீரியாவைப் பிடித்துக்கொள்ள ஜப்பான் அவ்வளவு முட்டாள்தனமாக இருக்காது. ஆகவே, வேவல் ஜப்பானை மலைப்

பாம்புக்கு ஒப்பிட்டது சரிதான். ஆனால் மலைப்பாம்பு அளவுக்கு மிஞ்சிய ஆகாரத்தை உட்கொண்டால் ஜீரணம் செய்யமுடியாமல் உணவை வெளியே தள்ளுவதைப்போல் ஜப்பான் கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்த இடங்களை வசப்படுத்த முடியாமல் விட்டுவருகிறது.

இப்போதுதான் ஜப்பான் தனது அசக்தியை உணருகிறது. அதாவது போதுமான ஆள்பலமோ, மூலப்பொருள்களோ இல்லை. ஜப்பானில் மனித சக்தியை அதிகப்படுத்த பள்ளிக்கூட படிப்புகாலம் குறைக்கப்பட்டு ராணுவ சேவைக்கு அழைக்கப்படுகின்றனர். அலுமினியம் போதுமான அளவுக்கு கிடைக்காததால் அலுமினியச் சாமான்கள் குறைவாகச் செய்யப்படுகின்றன. ரப்பர் குறைவை ஈடுபடுத்த கலப்பு ரப்பர் தயார் செய்யப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**மஸாயுகி டானி.** மஸாயுகி டானி அயல் நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பதில் பலவித பிரச்னைகள் எழுகின்றன. சீன விஷயங்களில் டானி மிகவும் கெட்டிக்காரனும். ஆகவே ஜப்பானிய நடமாட்டம் கிழக்குச் சைனாவிலிருந்து மேற்கு யூனானுக்கு மாற்றப்பட்டிருப்பதால் இவனை வைத்துக்கொண்டு மார்ஷல் சயாங் கை ஷேக்கைத் தோற்கடிக்க உத்தேசம். ஆனால் எல்லா நாடுகளையும் அடிமைப்படுத்தும் சிந்தனைகொண்ட டோஜோவின் ராணுவ மந்திரி சபை இப்போது தான் பூர்த்தியாயிற்று என்று சொல்லலாம். ஜப்பானிய மந்திரி சபையில் அயல்நாட்டு மந்திரிக்கும், யுத்த மந்திரிக்கும் சதா மனஸ்தாபம் இருந்து கொண்டேயிருக்கும். அதனால் தான் ஜெனரல் உசாகி ராஜினாமா செய்தார். அதிலிருந்து குடியேற்ற நாட்டுமந்திரி ஸ்தானம் ஏற்படுத்தப்பட்டு அயல்நாட்டு மந்திரி யுத்த மந்திரிக்கு உட்பட்டவனாகச் செய்யப்பட்டான். டானு டோஜோவின் நண்பன்.

வி வி வி வி வி வி வி

**வீரத்தனம்.** ஸ்டாலின்கிராட்டை தற்போது பாதுகாத்து வருவோருக்கு எல்லாவித கௌரவமும் புகழும் உண்டு. வீரம் வாய்ந்த ருஷ்ய தேசத்தினர் முன்பு போல்டோவா, பொரோடினோ முதலிய சண்டைகளில் வெற்றிபெற்றதற்குத் தகுந்த விதமாகவே இப்பொழுது ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராட்டை காத்துவருகின்றனர். ஒரு மாதமாகவே ஸ்டாலின்கிராட்டின் தெருக்களில் ஓய்வு ஒழிச்சலில்லாமல் இரவும் பகலும் மூலை முடுக்குகள் எல்லாம், விமானங்களிலிருந்து பாய்ந்து தாக்குவது, டாங்கிகளின் தாக்குதலும், பீரங்கிகளின் தாக்குதலுமாகச் சண்டை நடந்துவருகிறது. ஸ்டாலின்கிராட் பாழாகிவிட்டது. இருந்தாலும் தீரம் படைத்த ருஷ்யர்கள் அதைக் காத்து, சண்டைசெய்து மடிவதே நலமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இவ்வித வீரத்திற்குக் காரணமாக நாஸிக் கொடுங்கோலையோ, நாஸிகளின் மேலுள்ள வெறுப்போ, தேசாபிமானமோ, ஸ்டாலினின் மேலுள்ள பிரியமோ, காரணமாகமாட்டாது. மனிதர்களின் வாழ்க்கையிலும் தேசங்களின் சரித்திரத்திலும் உயர்ந்த லக்ஷியங்களைக் கைப்பற்றுவதற்காக தெய்வ சக்தி பெற்று தன்னையும் மனித வர்க்கத்திற்குள்ள கட்டுப்பாட்டையும் மீறி நடக்கும் சந்தர்ப்பங்களில் இவ்விதமான உணர்ச்சி யாவருக்கும் உண்டாகும். இந்த உணர்ச்சி உண்டாகிதான் கொலம்பஸ் புது உலகத்தைக் கண்டுபிடித்தார். டிரேக், ஸ்பானிஷ் ஆர்மடாவைத் தோற்கடித்தார். அதே உணர்ச்சியினால்தான் ருஷ்யர்களும் சண்டை செய்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**வெற்றி கடற்படை** திட்டத்திற்கு முன்னதாகவே அமெரிக்கா கடற்படையைக் கட்டிமுடிக்கிறது. லெக்ஸிங்டன் என்ற விமானமேற்றும் கப்பல் திட்டத்திற்கு ஒரு வருஷம் முன்னதாகவே கட்டி முடிக்கப்பட்டது. கடந்த 12 மாதங்களில் 54,50,000 டன் நிறையில் 488 சாமான் கப்பல்கள் கட்டி முடிக்கப்பட்டன. H. J. கெய்ஸரின் கப்பல் கட்டும் தளங்களில் 10,500 டன்னுள்ள கப்பலொன்று 13 நாட்கள் 3½ மணி சாவகாசத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டது. ஸெப்டம்பர் 28உ பிரிடிஷ்



வியாபாரக் கப்பல்களின் தலைவர் 'இவ்வருஷம் மூழ்கடிக்கப்படும் கப்பல்களைக் காட்டிலும் அதிகமான கப்பல்களை நேசநாடுகள் கட்டிமுடித்தன' என்றார். அடுத்த வருஷம் தினம் 4 கப்பல்கள் வீதம், கட்டி முடிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கர், ருஷ்யர், நார்வேக்காரர்கள், பெல்ஜியர், பிரஸீலியர், டச்சு, கிரேக்கர், சீனர், போலந்துக்காரர், யூகோஸ்லாவியர், இந்தியர் யாவரும் இவ்விஷயத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றனர். J. V. பாரஸ்டால் ஸெப்டம்பர் 28உ சொன்னவிதமாக, 'உற்பத்தி முன்னிருந்ததைவிட அதிகமாக்கப்பட்டிருக்கிறது. இவவிஷயம் ஜப்பான், ஜெர்மனி, இதாலி முதலிய நாடுகளுக்குத்தெரியும்'. அமெரிக்க வெற்றி கடற்படை தினத்தன்று மிஸ்ட்டர் சர்ச்சில் அனுப்பிய செய்தி பின்வருமாறு :—'அச்சு நாட்டு ஆக்கிரமணத்தை அடக்கும் முயற்சியில் நேசநாடுகள் தைரியம், சாமர்த்தியம் முயற்சி முதலியவைகளைக் காண்பித்திருக்கின்றன'.

'இதில் அமெரிக்கக் கப்பற் திட்டம் என்பது ஒன்று. "பாட்ரிக் ஹென்றி' என்ற கப்பலை மிதக்க விட்டதிலிருந்து கடந்த 12 மாதங்களில் 500 கப்பல்களைக் கட்டின விஷயம் வியப்பைத் தரும். எதிர்பார்த்ததிற்கெல்லாம் அதிகமாகவே இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'இவ்வருஷத்தில் கடற் சண்டைகளுக்கு 53,00,000 டன் கப்பல்களை நீங்கள் ஈடுபடுத்திருக்கிறீர்கள்.

'இவ்விதம் கப்பல்களை அதிகம் ஈடுபடுத்தியதால் விளையக்கூடியவைகளை அச்சு நாடுகள் தெரிந்துகொண்டிருக்கின்றன. நாஸிகளின் கொடுங்கோலிலிருந்து விடுவிப்பை எதிர்பார்க்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்படக்கூடிய சாதகம் என்னவென்பதும் நன்றாகத் தெரிந்ததுதான்.

'வெற்றி கடற்படையைத் தயாரிக்கும் நேசநாடுகளோடும், அதில் ஈடுபட்ட புருஷர்களோடும் சேர்ந்துகொள்ள நான் சந்தோஷம்கொள்ளுகிறேன்.

'இவ்வித முயற்சியில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் சரித்திரத்தில் கௌரவ நிலையை அடைவார்கள். ஸ்வதந்திரத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நல்ல முயற்சியென்றும் சொல்லப்படும்'.

வி வி வி வி வி வி வி

**பாலைவனப் படையெடுப்புகள்.** தனது பான்ஸர் படைகளை ரோமல் புதுப்பித்துக்கொள்ள ஏற்பாடு செய்யும்போது நேசநாடுகள் அவனது ஸப்ளை மார்க்கங்களைக் கெடுப்பதற்காக கடல், தரை, விமானங்களிலிருந்து தாக்கி வருகின்றனர். இதனால்தான் ட்ரிபோலி, மெர்ஸாமெட்ரு, பூகா, எல்டாபா, பெங்காஸி முதலியவைகள் தாக்கப்பட்டன. ஜாலோவும் தாக்கப்பட்டது. இதை ஆபிரிக்க டியப் தாக்குதல் என்றும் சொல்லப்படுகிறது. இவ்வித தாக்குதல்களால் அச்சு நாடுகளுக்கு பலவித சேதம் ஏற்பட்டது.

வெண்டல் வில்கி மத்தியக் கிழக்கிற்கும் ருஷ்யாவிற்கும் விஜயம் செய்தது ஒரு விதத்தில் பிரயோஜனமடைந்தது என்றே சொல்லலாம். மத்தியக் கிழக்கிலிருந்து அச்சு நாட்டினரைத் துரத்துவது அமெரிக்கரின் தீர்மானம் என்று வெண்டல் வெல்கி அறிவித்தார். எகிப்து, துருக்கி, ஸிரியா, பாலஸ்தீனம், இரான், இராக் முதலிய இடங்களில் இவருக்கு சரியான வரவேற்பு கிடைத்தது. நேசநாடுகளுக்கு தன்னுடைய சேவைகளைப் புரியத் தயாராய் இருப்பதாக இராக்கில் நூரி ஸயத் உறுதி கொடுத்தார். இரானில் ஷா அமெரிக்காவுடன் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகச் சொன்னார். பாக்தாத்தில் வில்கிக்குச் செய்த வரவேற்பில் ஸயத் ஸால்மன் ஷேபிக் டேவிட் ஷோகன் பத்திரிகை நிருபர்களின் முன்பாக மத்தியதரைக் கடலிலிருந்து இந்துமகா சமுத்திரம் வரையுள்ள அராபியர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா பேரில் பூர்ண நம்பிக்கை கொண்டிருக்கின்றனர் என்று அறிவித்தான்.

வி வி வி வி வி வி வி

**மெடகாஸ்கர் சண்டை** முற்றுகையில்லாமலேயே கடைசியாக இருந்த டூலீர் என்ற துறைமுகம் எச்சரிக்கை கொடுக்கப்பட்டதும் பிரிடன் வசமாகிவிட்டதாயும் செய்தி கிடைத்திருக்கிறது.

வெகுதுரிதமாக சண்டைகளைச் செய்வதற்கு லாயக்காக பிரிடிஷ் கப்பற்படை துருப்புகளை இறக்கியது. ஸெப்டம்பர் 29உ மிஸ்ட்டர் சர்ச்சில் 24 மணி நேரத்தில் பெடிஸி நதி மேலுள்ள மஜுங்கா பாலத்தைத் தாண்டிய விதத்தைச் சொன்னார். ஸெப்டம்பர் 17உ டமடாவாவை வியாபித்துக்கொண்டு ஸெப்டம்பர் 19உ போகா தலைநகரும் வசப்படுத்தப்பட்டது. டிகோஸுரஸுக்கும் மஜுங்காவிற்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் சண்டை நின்றுவிட்டது.

இதற்கிடையில் பிரிடனும், அமெரிக்காவும் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தைச் சுவாதீனப்படுத்திவிடுமென்று லவால் தன்னுடைய மக்களுக்கு எடுத்துரைக்கிறான். இதற்காக ஜெர்மனியுடன் ஒத்துழைப்பு அவசியமென்றும் எடுத்துரைத்தான். பிரெஸீல் பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்காவைத் தாக்கவே யுத்தத்தில் ஈடுபட்டதாகச் சொன்னான். மடகாஸ்கரைத் தாக்கியதும் பிரிடனின் திருட்டுத்தனம் என்று சொன்னான்.

பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்காவைப் பாதுகாக்க ஜெர்மன் உதவி அவசியம் என்றான். இதற்காக ஜெர்மன் துருப்புகள் டாகருக்கு வந்திருக்கின்றன. மொராகோவில் ஜெர்மன் ரகஸியப் போலீஸ் இனி பலம் பெறும். விஷிக்குச் சொந்தமான இடங்களைப் பிடிப்பதானாலும் லவால் ஜெர்மனியின் உதவியை நாடுவான்.

வி வி வி வி . வி வி வி

**இரண்டு வாரங்களில் பத்து படையெடுப்புகள்.** ஸெப்டம்பர் மாதத்தில் முதல் 14 தினங்களில் பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியிலுள்ள லக்ஷியங்களை மிகவும் கடுமையாகவே தாக்கிவந்தது. முக்கியமாக ஸார்புருக்கன், காரல்ஸ் ரூஹி, ப்ரெமன் (இரண்டு தடவை) டேயிஸ்பர்க், பிராங்க்பர்ட், ஆன்மெயின், டஸ்ஸல்டார்ப், வில்ஹெல்ம்ஸ்ஹேவன் முதலியவை லக்ஷியமாக இருந்தன. இவைகளில் டஸ்ஸல்டார்ப் யுத்த சாமான்களை உற்பத்திசெய்கிறது. ப்ரெமன், வில்ஹெல்ம்ஸ்ஹேவனில் 'யூ' படகுகள், நாசகாரிகள், விமானங்கள் முதலியவைகளும், பிராங்க்பர்ட்டில் எண்ணெய் சுத்தி செய்யும் யந்திரங்கள், கலப்பை சாமான்கள் தயாரிக்கும் யந்திரங்கள், விமானம் கட்டுமிடங்கள் முதலியவை இருக்கின்றன. கார்ல்ஸ் ரூஹி டேயிஸ்பர்க்கும் போக்குவரத்துப் பிரதான்யம் வாய்ந்தது.

வி வி வி வி வி வி வி

**லவாலின் துரோகம்.** ஜுன் 22உ பிரெஞ்சு யுத்தக் கைதிகளை விடுவிப்பதாக தயவாக ஹிட்லர் அறிவித்தாலும் ஆனால் இந்த கபட யோசனையைச் செய்து பிரெஞ்சுக்காரர்களை ஜெர்மனியின் தொழிற்சாலைக்கு பெறுவதே நோக்கம். ஹிட்லருக்கு 5,00,000 பேர் தேவையென்றான். லவால் 3,00,000 பேரைக் கொடுப்பதாகச் சொன்னான்.

ஆகவே ஹிட்லர் யோசனை மிகக் கபடமானது. இவ்விதமாக பிரான்ஸ் பேரில் தனது பலாத்காரத்தை அதிகப்படுத்துவதுதான் யோசனை. ஒரு பிரெஞ்சு விவசாயியை ஜெர்மனியிலிருந்து விடுவித்து அதற்குப் பதிலாக மூன்று தொழிலாளிகளைப் பெற நினைத்திருக்கிறான். இவ்விதமாகப் பிரெஞ்சுக்காரர்கள் பூரா ஜெர்மனியின் அடிமைகளாக வேண்டியதுதான். மேலும் பிரெஞ்சுக்காரர்களைத் தொழிற்சாலைகளில் அமர்த்தி அதற்குப் பதிலாக அங்குள்ள ஜெர்மானியரைச் சண்டைக்கு ஈடுபடுத்திக்கொள்வதும் ஒரு யோசனை. பிரான்ஸில் அதிகமான விவசாயிகள் இருந்தால் உணவுதான் அங்கே அதிகமாக உற்பத்தி செய்யப்படும். அதுவும் ஜெர்மனிக்குச் சாதகம் தான். ஆகவே ஒரே யோசனையில் சைனியத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் ஆட்களைச் சேகரித்து நாட்டிற்கு உணவையும் பெற்றான்.

இதற்காக லவால் விசேஷ ஏற்பாடுகளைச் செய்துவருகிறான். என்ன இருந்தாலும் 5,000 பேருக்கு மேல் சேகரிக்கமுடியவில்லை. யூதர்களையும் அனுப்பி பிரெஞ்சு ஆபிரிக்காவிலிருந்தும் ஆட்களைச் சேகரிக்கிறான். இவர்கள் யாவரும் ஜெர்மனியில் ஆபத்தான வேலைகளில் அதாவது விஷ உற்பத்தியில் நியமிக்கப்படுகின்றனர். இதே வேலையில் பல போலந்துக்காரர்களை ஈடுபடுத்தி ஆபத்து அடைந்தனர்.



இவ்விதம் ஜெர்மனிக்குச் செல்லும் வேலைக்காரர்களின் மனப்பான்மை பின் வருமாறு தான் இருக்கும். 'நம் நாடு இன்னும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. நாம் துரோகிகளுடன் சேரமாட்டோம். ஜெர்மனி நம்மையெல்லாம் கட்டாய வேலை செய்யச்சொல்லுகிறது. ஜெர்மனியின் உற்பத்தியைக் கெடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வோம். ஆகவே ஜெர்மன் தொழிற்சாலைகளை பிரிடிஷார் தாக்குவது சரிதான்.'

ஆகவே ஸ்வதந்திர ஆசையும் சுய புத்தியும் உள்ள பிரெஞ்சுக்காரர்கள் டிகால் கட்சியில் ஏராளமாகச் சேருகின்றனர். ஆகஸ்டு 18உ பிரெஞ்சு ராஜாங்க சபையில் லிஸ்டு கட்சியின் உதவித் தலைவனான பெலிக்ஸ் கோவின் பிரிடனுக்கு வந்து அங்கிருக்கும் பிரெஞ்சு தேசியக் கமிட்டியில் சேர்ந்துகொண்டான். இதற்கு முன்பே லியான்ஸில் உள்ள ஸோஷியலிஸ்டுத் தலைவனான ஆன்டிரி பிலிப்ஸ் வந்துவிட்டான். இப்போது ஸோபியாவில் முன்பு பிரெஞ்சு மந்திரியாயிருந்த ஜுலஸ் பிளான்டல் டிகாலுடன் சேரப் புறப்பட்டுவிட்டான். மற்றும் பாரிஸ்ஸின் டிபுடியான சார்லஸ் வால்லினும், லா பாபுலேர் பத்திரிகையின் முந்திய பத்திராதிபரான பியர பிராஸ்லடாவும் வந்து சேர்ந்திருக்கின்றனர். பிரெஞ்சு பார்லிமெண்டு சபை கலைக்கப்பட்டதால்தான் தேசாபிமானமுள்ள பல பிரெஞ்சு மக்களுக்கு வெறுப்பு உண்டாகிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**பிறர் செய்வதைச் செய்யும் அடிமை.** ருமேனியாவின் சர்வாதிகாரியான அன்டோனேஸ்கு ஹிட்லரைப் பார்த்து எல்லாவற்றையும் பின்பற்றி வருகிறான். ருமேனியாவில் உண்டாகும் கலகங்களை அடக்க தானே சட்ட திட்டங்களை அமுல்படுத்திவருகிறான். அன்டோனேஸ்கு இருகஷ்டங்களுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். ருமேனியர்களுக்குத் திருப்திகரமாக நடந்து கொண்டால் ஹிட்லரின் துவேஷம் உண்டாகும். ஹிட்லரைத் துவேஷித்துக் கொண்டால் சர்வாதிகாரம் போய்விடும். அல்லது அயலானைத் திருப்திசெய்ய ஹிட்லரின் தூண்டுதலின்பேரில் டிரான் ஸல்வேனியாவை ஹங்கேரிக்குக் கொடுத்தால் பகாசுரனைப் போல் இன்னும் வேண்டுமென்றும் ஹங்கேரி கேட்கிறது. ஹங்கேரியைத் தடுக்க ருமேனியாவின் எல்லைப் புறங்களில் சைனியங்களை வைத்துக்கொள்ள வேண்டியுமிருக்கிறது. மேலும் ருஷ்யச் சண்டைக்காக இன்னும் ருமேனியர்கள் தேவையாக இருப்பதாக ஹிட்லர் சொல்லிவருகிறான். ருசி கண்ட பூனை உரியைதாவும் அல்லவா. ஏதாவது முணுமுணுத்தால் ஹிட்லர் கலகக்காரர்களைத் தூண்டிவிட்டு இவனுக்குப் பதிலாக ஸிமாவை நியமித்துவிடுவான். ஆனால் ருமேனியர்கள் தாங்கள் மிக அதிகமாக ஒடெஸ்ஸா யுத்தத்தில் ஹிட்லரைத் திருப்திசெய்ய 2½ லக்ஷம் பேரை இழந்ததாயும் இனி அப்படிச் செய்யமுடியாதென்றும் முணுமுணுப்பது நியாயமாகத் தோன்றுகிறது. மேலும் ப்ளுயிஸ்டியிலுள்ள எண்ணெய்த் தளங்களை ருஷ்யர்கள் தாக்கியதிலிருந்து ருமேனியர்கள் பயமடைந்திருக்கிறார்கள். ஆகவே அன்டோனேஸ்கு உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு அதனால் தனது பதவியை இழப்பதைக் காட்டிலும் ஹிட்லர் சொல்படி நடந்து கொடுங்கோலை நடத்துவதெனத் தீர்மானித்தான். ருமேனியா பூராவும் இவன் தான் சட்டங்களை விதிப்பவன். இவ்விஷயத்தை ஜெர்மனி முதலில் அறிவித்தது. அதுவே அன்டோனேகுஸ் கீழ்பட்ட நிலைமையைத் தெரிவிக்கிறது.

வி வி வி வி வி வி வி

**டாக்டர் டீஸோ.** நாஸிகளுக்குட்பட்ட ஸ்லோவாகியாவின் துரோகத் தலைவனான டாக்டர் டீஸோவின், உயிருக்கு யாரோ குறி வைத்திருக்கிறார்கள். ஆனால் அது பலிக்கவில்லை. தங்கள் நாட்டைப் படையெடுத்து கொள்ளையடித்த நாஸிகளுக்கு ஸ்லாக் ஜாதியினர் உட்படவே மாட்டார்கள். அதிகமான சுயமரியாதை படைத்தவர்கள். துரோக அரசாங்கத்தினர் செய்யும் சட்ட திட்டங்களுக்கு உட்படிய மாட்டேனென்கிறார்கள். மேலும் அங்குள்ள கார்பேதிய ஜெர்மானியரோடும் ஸ்லோவாகியச் [illegible]

ருஷ்யப் போர்முனைக்கு மீண்டும் ஸ்லோவாக் துருப்புகள் தேவையாக இருப்பதாக ஹிட்லர் சமீபத்தில் அறிவித்தது துவேஷத்தை அதிகம் இன்னும் மூட்டி விட்டது. டாக்டர் டிஸோவின் தலைமையை நிராகரிக்கமுடியாமல் போய்விட்டது.

வி வி வி வி வி வி வி

**அர்ஜண்டைனு.** நேசதேசக் கட்சியில் அதிக நம்பிக்கையும், பலமும் இருக்கிற விஷயம் சமீபத்தில் அர்ஜண்டைனுவில் அயல்நாட்டு விவகாரக் கமிட்டியில் அச்சுநாட்டு சம்பந்தங்களை நிராகரித்து பாஸ் செய்த தீர்மானத்திலிருந்து தெரியவருகிறது. நேராடி அச்சுநாடுகளின் பேரில் சண்டை தொடுக்கப்படாமல் இருந்தபோதிலும், இவ்விதத் தீர்மானத்தை அமுல்படுத்தியதால் நேச தேசங்களுக்கு ஒரு சாதகமான விஷயம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலில் சண்டையில் ஈடுபட்டதும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவி தனக்குக் கிடைக்குமென்று அர்ஜண்டைனு நினைக்கவில்லை. ஏனென்றால் போனஸ்ஐயர்ஸ் என்பது நியூ யார்க்கிலிருந்து வெகுதூரத்தில் இருக்கிறது. அதாவது ஸான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து சைனு எவ்வளவு தூரம் இருக்கிறதோ அவ்வளவு தூரம் இருக்கிறது. முதலில் நடுநிலைமையிலிருப்பதாகத் தெரிவித்தது. இப்பொழுது பிரெஸீலும் நேசநாடுகளுடன் சேர்ந்துகொண்டதால் அங்கிருந்துகொண்டு அர்ஜண்டைனுவுக்கு உதவி கொடுக்கமுடியும். இதனாலேயே அர்ஜண்டைனு நேசநாடுகளுடன் சேர்ந்துகொண்டது.

வி வி வி வி வி வி வி

**சாமான் ஏற்றிச்செல்லும் நீர்மூழ்கிகள்.** சிலநாட்களாக தகரத்தையும் ரப்பரையும் ஏற்றிக்கொண்டு ஜப்பானிய நீர்மூழ்கிகள் ஜெர்மனியை அடைவதாகத் தகவல் கிடைத்தது. ஆகவே ஜப்பான், ஜெர்மன் கடற்படைகளுக்குத் தொடர்பு ஏற்பட்டதாகக் கிடைத்த செய்தி ஆச்சரியமில்லை. நீர்மூழ்கிகள் பலமடைந்த இந்த நாளில் சிங்கப்பூர் முதலிய இடங்களிலிருந்து ஜெர்மன் வசமுள்ள அட்லாண்டிக் கடற்கரை வரையுள்ள 10,000 மைல் தூரத்தையடையலாம். நடுவில் அச்சுநாட்டு ஸப்ளைகளிலிருந்து எண்ணெய் போட்டுக்கொள்ளலாம். இதே மார்க்கத்தில் கடற்கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் ஜப்பானிய நீர்முழ்கிகளும் சஞ்சரிக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**அலாஸ்கா மார்க்கம்.** ஸெப்டம்பர் 24-ம் தேதி அமெரிக்க யுத்த மந்திரியான ஸ்டிம்ஸன் விவரித்தபோது அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா முதலிய இடங்களிலிருந்து அலாஸ்காவிற்கு சுமார் 1,600 மைல் நீளத்திற்கு மார்க்கம் ஏற்படுத்தப்படுமென்று சொன்னார். அந்த மார்க்கம் 66,00,000 பவுன் செலவில் தயாரிக்கப்படுகிறது. இந்த வருஷம் டிஸம்பர் மாதத்திற்குள்ளாகவே முடிவடைந்துவிடும். முதலில் கரடுமுரடாகப் போடுவதென்று நினைக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது மிகவும் ஒழுங்காகவும், மேடு பள்ளங்கள் இல்லாமலும், உறைபனி காலங்களைத் தவிர மற்ற காலங்களில் யுத்த சாமான்களை எடுத்துச் செல்வதற்கு லாயக்காகவும் தயாரிக்கப்படுகிறது. இம்மார்க்கம் முடிவடைந்ததும், அலூஷியனிலுள்ள அமெரிக்கப் படைகள் தரை மார்க்கமாகவே ஸப்ளைகளைப் பெறும். நடுவில் 60 மைல் நீளமுள்ள பேரிங் ஜல சந்தி மாத்திரம்தான் இருக்கிறது. ஒரு சமயம் ஸைபீரியாவை ஜப்பானியர் படையெடுப்பதாக வைத்துக்கொண்டாலும் இதன் மூலமாகவே ருஷ்யாவுக்கு ஸப்ளைகளை அனுப்பமுடியும்.

## அச்சுநாட்டுக் குற்றங்கள்.

(அயல்நாட்டு மந்திரி மிஸ்டர் ஈடன், லீமிங்டன், ஸெப்டம்பர் 23ல் பேசியது).

அச்சுநாட்டினர் செய்யும் குற்றங்களுக்குத் தகுந்தபடி தண்டனை விதிப்பதென்று நாம் நிச்சயத்திருக்கிறோம். ஆனால் பழிக்குப்பழி வாங்கும் சிந்தனையுடன் நாம் இல்லாதபோனாலும் ஐரோப்பாவில் இருக்கும் பலநாடுகளுக்கு அச்சு நாடுகளின்பேரில் பழிவாங்கும் உணர்ச்சி இருக்கிறது.



இதுவிஷயமாக எனது நம்பிக்கை யாதெனில் தங்களுடைய அக்கிரமச் செய்கைகளால் நாகரீக ஜனங்களின் நீதிமுறைகளை அழிக்கும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால் மறுபடி தர்மம் மனிதர்களின் வாழ்க்கையில் நிலைத்திருக்கும் என்பதுதான். ஆனால் சீக்கிரமாயும் கடுமையாகவும் தண்டனை விதிக்கப்படவேண்டும்.

ஐரோப்பாவில் அடிமையாகிக் கிடக்கும் நாடுகளில் நேசநாடுகளின் படைகள் பலம்பெற்று ஆதிக்கமடைந்தால் அந்நாடுகளுக்கு எவ்வித உதவியை நாம் செய்ய முடியுமென்பதை யோசிப்போம்?

முதலாவதாக வேரோடு எதிரி அந்த நாடுகளிலிருந்து துரத்தப்படவேண்டும். நீதியும் அமைதியும் மறுபடி ஸ்தாபிக்கப்படவேண்டும். ஸிவில் அரசாக்ஷி ஏற்படவேண்டும். போக்குவரத்து பழுதுபார்க்கப்பட்டு நாகரீக வாழ்க்கைக்குத் தேவையான அவசிய முறைகள் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

இவ்வித முறைகள் ஆரம்ப காலங்களில் ராணுவத்தினரின் மேற்பார்வையில்தான் செய்யப்படவேண்டும். மக்களுக்குத் தேவையான அம்சங்கள் கொடுக்கப்பட்டால்தான் நேசநாட்டுச் சைனியங்கள் திருப்திகரமாக ஈடுபட முடியும். ஆனால் இந்த ஏற்பாடுகள் நடந்துவரும்போது விடுவிக்கப்பட்ட நாடுகளில் நிலைமை அமைதியானதும் வர வர ஸிவில் அரசாக்ஷியின் பொறுப்புக்கு, முக்கியமாக நாட்டுப்பாதுகாப்பு, உணவுப் பிரச்னை இவைகளில் நிச்சயமாக மாற்றப்படவேண்டும்.

### அவஸ்தையடைந்த மக்களுக்கு உதவி.

ஆகவே இரண்டாவது கட்டத்தில் ராணுவ ஏற்பாடுகள் மாறி அமைதியான வாழ்க்கை ஏற்பட்டுவரும். இந்த இரண்டாவது கட்டம் சில நாடுகளில் காணப்படும், மற்றவைகளில் முதல் கட்டம்தான் இருக்கும்.

இரண்டாவது கட்டமான அமைதி நிலைமையின் கருத்து என்னவென்றால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலிருந்து எதிரி துரத்தப்பட்டதும் அங்கிருக்கும் மக்களுக்கு அவமானகரமான சந்தர்ப்பமே ஏற்படாது. அதற்காக இப்போது யுத்தத்தில் ஈடுபட்டிருப்போரைக்கொண்டு சாமான் ஸப்ளை பிரச்னையில் ஈடுபடுத்தப்படும்.

இந்த யுத்தத்தில் அமெரிக்கா ஈடுபட்டதிலிருந்து இப்பிரச்னை பரிசீலனைக்குள்ளாயிற்று. அதிலிருந்து பலவித சர்ச்சைகளும் உண்டாயின.

நானே இதுவிஷயமாக ருஷ்ய ஸ்தானிகருடனும், சீன அரசாங்கத்துடனும் பேச்சு வார்த்தை நடத்தி துரக்கிழக்கிந்திய நாடுகளுக்கு உதவியனுப்பும் பிரச்னையைத் தீர்மானித்தேன். எல்லா நேசநாடுகளும் இதில் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் திடீரென்று ஒன்றையும் சாதித்துவிட முடியாது.

இப்போதே தயாராகி வருவதுதான் சரியானது. இதற்கான தயாரிப்பு நடைபெறுவதால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலிருந்து அச்சுநாட்டு பலாத்காரம் நீங்கி கவலை ஒழிவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நேசநாடுகள் தகுந்த மன உறுதியையும் சாதனங்களையும் கொள்ளவேண்டும்.

பிரிடன் சம்பந்தப்பட்ட வரையில் ஐரோப்பாவில் உள்ள நாடுகளின் கஷ்ட நிவாரணத்திற்காகப் பெரும் தியாகத்தை அங்கீகரிக்க பிரிடிஷ் மக்கள் தயாராக இருக்கின்றனர்.

### பிரிடிஷ் விமானப்படையின் முன்னேற்ற யுத்தம்.

இந்த யுத்தத்தில் ஜெர்மனி பேரில் செய்யப்படும் விமானத் தாக்குதலால் ஏற்படக்கூடிய முடிவைப்பற்றி குறைவாகச் சொல்லுவது ஒரு பெரிய தவறாகும். அதாவது யுத்தப் போக்கே பாதிக்கப்படலாம். இந்தப் போர் வரவரக் கடுமையாகவும் நீடித்தும் நடைபெற்றது. தங்களுடைய சைனியத்தில் நம்பிக்கை இல்லாததால்தான் 1941-ல் ஜெர்மன் மின்னல் படையெடுப்பு பலிக்கவில்லை. ஆரம்பத்தில் போதுமான பெரிய பலத்தைப் பெற்றிருக்கவில்லை, பிரிடன்பேரில்

நடந்த விமானப்போரில் ஏதோ பகல்காலத்தில் தூக்குத்தூக்கான தாக்குதல் செய்யப்பட்டதே தவிர வெற்றிபெறுவதற்கான முறையில் எதிரித் தாக்குதல் நடைபெறவும் இல்லை. அதை நீடித்தும் செய்யவில்லை.

அந்த சந்தர்ப்பத்தில் மிஸ்ட்டர் சர்ச்சில் "ஜெர்மன் படைகளுக்கு வேண்டிய சாமான்கள் தயாரிக்கப்படும் தொழிற்சாலைகள் அமைந்த முக்கிய ஜெர்மன் நகரங்களைத் தாக்குவது நமது கடமையென்று" கூறிய உறுதிமொழி நிறைவேற்றப்பட்டதைப் பற்றி யாவரும் சந்தோஷமடைந்தனர். இந்த முன்னேற்றப் போர்களால் ஜெர்மனி அதிகம் பாதிக்கப்பட்டது. அவைகளால் ஏற்படும் சேதத்தை ஜெர்மனி பிரசார மந்திரி கோயபெல்ஸாலும் மறைக்க முடியவில்லை.

இந்த முன்னேற்றப் போர் கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியடைந்தது. ஜூன், ஜூலை மாதங்களில் 1940-ல் ஜெர்மனிபேரில் பிரிடிஷ் விமானப்படையால் 3,500 டன் குண்டுகளையும், 1941-ல் 8,500 டன்னும், 1942-ல் 13,000 டன்னும் போடப்பட்டன. பிரகிருத மாதம் முதல் 14 தினங்களில் 9 படையெடுப்புகளில் 5,000 டன் குண்டுகள் போடப்பட்டன. நாஸிகள் பிரிடன்பேரில் இதுவரை இரண்டு தடவைதான் படையெடுத்தனர். ஒவ்வொரு தடவையிலும் 400 டன் குண்டுகள் விழுந்தன. அதுவும் லண்டன்பேரில்தான். ஆனால் கோலோனில் மாத்திரம் நாம் 90 நிமிஷங்களில், 1,000 டன் குண்டுகளைப் போட்டிருக்கிறோம்.

### தாக்கப்பட்ட லக்ஷியங்கள்.

ப்ரெமன், வில்ஹெல்ம்ஸ்ஹேவன், டஸ்ஸல்டார்ப் முதலியவை பிரிடிஷ் விமானப்படையால் அதிகம் தாக்கப்பட்டது.

அதே இடங்களில் முன்பைவிட அதிகமான தாக்குதல்கள் செய்யப்பட வேண்டும். ஆகவே விமானத் தாக்குதலை அதிகமாயும், நீடித்தும் நடத்துவதே இதன் மர்மமாகும்.

ஆனால் இவ்வித தாக்குதல்களால் ஜெர்மானியரை பயமுறுத்தும் நோக்கமில்லை. ஆனால் எதிரியின் யுத்த முயற்சியைத் தடுத்து மீண்டும் சண்டைசெய்ய முடியாமல் செய்வதுதான் நோக்கம்.

தவறுமல் லக்ஷியங்கள் நேராடித் தாக்கப்படுகின்றன. அதிக முடுக்குகளுள்ள ஜெர்மன் போக்குவரத்து மார்க்கங்கள் பழுதடைகின்றன. இந்த சாதனங்கள் கெட்டுவிட்டதால் ஜெர்மன் தொழிற்சாலைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட யுத்த சாமான்களை ருஷ்யப் போர்முனைக்கு எடுத்துப்போக முடியவில்லை.

ஆகவே இந்த விமானத் தாக்குதல் முக்கியமானதென்று ஆகிறது. அதன் அவசியத்தை நாம் உணர்ந்தும் இருக்கிறோம். மீண்டும் ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு மாதமும், இது துரிதமாக்கப்படும்.

### பிரிடனின் அயல்நாட்டு முறை.

இனிமேல் அயல்நாடுகள் வெகுதூரத்தில் இருக்கிறதென்றும் அவைகளுடைய அக்கரைகளுக்கும் நம்முடைய அக்கரைகளுக்கும் வித்யாசமிருப்பதாயும் நினைப்பது தவறான காரியமாகும். இந்த நாட்டிலுள்ள நம் ஒவ்வொருவருடைய க்ஷேமமும் மற்ற நாடுகளில் நடக்கும் சம்பவங்களோடும், அந்த நாடுகளில் உள்ள நிபுணர்களோடும் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு ஏகோபித்த மனதும், நம்பிக்கையும் நிலவவேண்டும். நமது காரியங்களிலும் சொற்களிலும், நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டும். அவைகளில் முதலாவதாக நமக்கே ஒரு நம்பிக்கை வேண்டும்.

முதலாவது, உலக யுத்தத்திற்கும், தற்போது நடக்கும் யுத்தத்திற்கும் இடையில் நடந்த சம்பவங்களைப் பார்த்தால் நாம்தான் சிறிது வருத்தத்திற்கு காரணமாக இருக்கிறோம். ஏனென்றால் அப்போது நமக்கே நமது காரியங்களில் நம்பிக்கை ஏற்படவில்லை. இதுவும் முக்கியமாக அயல்நாட்டு வியவகாரங்களில்தான் காணப்பட்டது.



நாம் சுகம், சமாதான வாழ்க்கை, பழையகாலப் புகழ், விசால மனப்பான்மை ...ன்மை, நமது பாதுகாப்பு முதலியவைகளிலேயே நாம் அதிகம் அக்கரை ...டுத்துக்கொண்டதால் மும்மரமான அயல்நாட்டுத் திட்டத்தை கையாள முடிய ...ில்லை.

### பழைய நிலைமை.

நமது அனுபவத்திலிருந்து நாம் பாடத்தைக் கற்றிருக்கிறோம். அதை ...னைத்துக்கொள்ளுவது நலம். இந்த யுத்தம் முடிந்ததும் நமக்கு ஒரு வெறுப்பும், ...யநலமும் உண்டாகலாம். ஆகவே நாம் முன்பு செய்து வந்தமாதிரி நமக்கு ...ற்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தள்ளி, முந்திய பொருளாதார நெருக்கடியைப் ...பற்று சாதாரணமான ஏற்பாடுகளால் சமாதானத்தை விரும்பினால், நமக்கு ...வமானமும், விபத்தும்தான் விளையும்.

### யுத்தத்திற்குப் பிற்பட்டு உலக அமைப்பு.

யுத்தத்திற்குப்பின் உலகை எவ்வாறு நாம் அமைக்கப்போகிறோம். ஜெர்மானியர் கொடுமை முறைகளாலும் ஜீவனற்ற ஏற்பாடுகளாலும் ஸ்தாபிக்கும் ...மாதானத்தைக் காட்டிலும் அதிக நன்மையளிக்கக் கூடியதும் வெகுகாலம் ...டித்திருக்கக்கூடியதும் நமது நாகரீகத்திற்கு உகந்ததுமான சமாதானத்தை ...ாம் எவ்வாறு வழங்கப்போகிறோம். இவைகளுக்கு விடைகளைப் பார்க்கும்போது ...நேசநாடுகளுக்கு ஒன்றுக்கொன்று பரஸ்பரம் காணப்படும் ஒத்துழைப்பில்தான் ...ருக்கின்றன. இதற்காக நாம் அமெரிக்காவுடன் ஒத்துழைத்து, ஆங்கிலேய—ருஷ்ய ஒப்பந்தத்தின்படி ருஷ்யாவுடன் சேர்ந்துகொண்டு வருங்கால உலகை ...ாம் அமைக்க சம்மதித்திருக்கிறோம். இதில் சைனாவும் நான்காவது நேச ...ாடாகச் சேர்த்துக்கொள்ளப்படும்.

சிறிய நாடுகளை ஒன்று சேர்ப்பதற்கு பிரிடன் முயற்சி எடுத்துக்கொள்ளும். ஆகவே அவைகள் பெரிய நாடுகளுடன் சேர்ந்துகொண்டு சமாதானத்தை வழங்க முயற்சி எடுத்துக்கொள்ளும்.

### பழைய திட்டம் போய்விட்டது.

பரஸ்பரம் நம்பிக்கையும், ஒத்துழைப்பும் இல்லாவிடில் நீடித்திருக்கக்கூடிய ஏற்பாடுகளை நாம் ஏற்படுத்தமுடியாது. ஏற்படும் சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு ஒவ்வொரு நாடும் நடந்துகொள்ள வேண்டும். பழைய கதை போய்விட்டது. பெரும் மாறுதல்கள் உண்டாகும் இவ்வுலகில் நாம் கெடுதியடையாமல் தப்புவது சிரம சாத்தியமாக இருக்கும். அவ்வித சிரமம் ஏற்படாமல் இருக்க நாம் பிற்பட்டு ஏற்படும் சிருங்கலைகளிலிருந்து ஜாக்கிரதையாக நீங்கி வரவேண்டும்.

இது விஷயமாகத்தான் நமக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். நமது பொறுப்புகளிலும் அக்கரைகளிலும் ஒரு நம்பிக்கை இருக்கவேண்டும். நமது காரியத்தில் ஒரு அக்கரை ஏற்பட்டால் இதர நாடுகளுடைய ஒத்துழைப்பு தானே கிடைக்கும்.

மிஸ்ட்டர் சர்ச்சில் ஒரு பெரிய தலைவர். சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் இப்பேற்பட்ட தலைவர்கள்தான் தேவை. வோட்டுப்பெற அவர் உறுதிமொழிகளைக் கூறவில்லை. உண்மையையே எடுத்துரைக்கிறார். சமாதான காலத்தில் நமக்கு ஏற்படும் ஆபத்துகளும், பிரச்னைகளும் வேறுவிதமானவை. இருந்தாலும் எல்லாவித பிரச்னைகளையும் சமாளிக்க ஒரு தைரியம் வேண்டும். நமக்கு ஏற்படும் தலைவர்கள் தேசத்தை அதற்கு விருப்பமானதும், ஒப்புக்கொள்ளக்கூடியதுமான லக்ஷியம்வரை நடத்திச் செல்லுகிறவர்களாக இருக்கவேண்டும்.

---

## எல்லா போர்முனைகளும் ஓர் அரங்கம்தான்.

(உதவி பிரதம மந்திரி மிஸ்ட்டர் C. R. அட்லி ஒடொவாவிலிருந்து செப்டம்பர் மாதம் 28-ம் தேதி ஒலிபரப்பியது).

பொறுப்பில்லாத ஜனங்கள் கேட்பதற்குத் தக்கவாறு நேசதேசத்தார்களின் யுத்த திட்டங்களை மாற்றியனுசரிக்க முடியாது.

"பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறவர்களெல்லாம் எல்லாப் போர்முனைகளையும் ஒரே அரங்கமாகவே கருதுகின்றனர்.

"நேசநாடுகளில் சிலவை மற்றவைகளைப் போல் அதிகமாகப் பங்கெடுத்துக்கொள்ளவில்லையென எதிரிகள் செய்யும் பிரசாரத்தை யாரும் நம்பக்கூடாது.

"ருஷ்யாவை அடியோடு அழிக்க ஹிட்லர் எடுத்துக்கொண்ட இரண்டாவது பிரயத்தனமும் போட்ட திட்டப்படி நடக்கவில்லை.

"ஸ்டாலின்கிராட் கோட்டைகள் தகர்க்கப்பட்ட போதிலும், வெர்டூனைப்போல் கோடிக்கணக்கான ஜெர்மானியருக்குப் புதை குழியாக இருக்கிறது.

"தூரக்கிழக்கில் அபாயம் நீங்கி விடவில்லை. ஆனால் கூடிய சீக்கிரத்தில் நேசதேசப் படைகளால் ஆக்கிரமிப்பு எடுத்துக்கொள்ளப்படும். சீனர்களும், நீண்ட காலமாக வீரத்தன்மையுடன் போர் புரிந்து வந்ததின் பயனை அடையப் போகிறார்கள்.

"நாம் இது வரையில், இருட்டடைந்த, கரடு முரடான வழியில் சென்று கொண்டிருக்கிறோம். வழியும் எத்தமாகவே இருக்கிறது. இம்மாதிரிப் பிரயாணம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறதென்று சொல்ல முடியாது. ஆனால் கொஞ்ச தூரத்திற்கப்பால் நாம் விரும்பத்தக்க வழியும் இருக்கிறது.

"யுத்தத்தில் வெற்றி அடைந்த பிறகும் நேசதேசத்தார்கள் தளர்ச்சி அடைந்து விடக்கூடாது. ஒற்றுமையாக இருந்து உழைக்க வேண்டும். அட்லாண்டிக் சாஸனத்தின் கோட்பாடுகள்படி சமாதானமான உலகத்தை ஏற்படுத்துவதற்கு நாம் பிரயத்தனப்பட வேண்டும், அதற்காகத்தான் இப்பொழுது நாம் தயாரித்துக்கொண்டு வருகிறோம்."

---

## பிரிடன் 13 போர் முனைகளில் சண்டை செய்திருக்கிறது.

**(உதவி யுத்த மந்திரி லார்டு கிராப்ட்).**

"பிரிடன் 13 போர்முனைகளில் எண்ணிக்கை அதிகமுள்ள எதிரிகளை எதிர்த்துச் சண்டைசெய்திருக்கிறது. நாஸிகளில் சைனியத்தில் 6,00,000 பேருக்கு சேதம் விளைந்திருக்கிறது. தற்சமயத்தில் மத்தியக்கிழக்கில் நாம் இன்னும் கடுமையான யுத்தத்தில் ஈடுபடவேண்டியிருக்கிறது. முடிந்தவரை மற்ற இடங்களிலும் எதிரி தாக்கப்படுவான். மால்டாவும் வெற்றிகரமாக எதிர்த்து நிற்கிறது".

---

## நேசநாடுகள் சைனாவைக் கைவிடாது.

**(மிஸ்டர் ஹெர்பர்டு மாரிஸன் உள்நாட்டு மந்திரி பேசியது.)**

**(மான்செஸ்டர், ஸெப்டம்பர் 27).**

பத்து லக்ஷம் ஜப்பானியத் துருப்புகளை சைனா சண்டையில் எதிர்த்து வருகிறது. அப்படி இல்லாமலிருந்தால் இத்துருப்புகள் மற்ற அரங்கங்களில் நேசநாடுகளுக்கு இடைஞ்சலாக வந்திருக்கும். ஆக்கிரமணத்தைத் தடுத்து சைனா தான் முதலில் எதிர்த்து நின்றது. பாஸிஸ்டு கொள்கையை எந்த இடத்திலும் எதிர்த்து நிற்கவேண்டுமென்று அதன் தலைவர்கள் உணர்ந்திருக்கின்றனர்.

ஐந்து வருஷ காலத்தினுள் ஒரு ஏற்பாடுமில்லாமல் சைனா சரியான முஸ்தீப்புபெற்ற அயலானை வெற்றிகரமாகத் தாக்கிவருகிறது. யுத்தம் ஆரம்பித்த போது சைனா ஒரு நவீன தேசமாக அமைந்து வந்துகொண்டிருந்தது. ஜனநாயக ஸ்தாபனங்களை அமைத்துக்கொண்டு ஏராளமான பிரதேசம் எதிரிவசமானபோதே முன்னேற்றமும் அடைந்து வந்திருக்கிறது. ஐரோப்பிய நாடுகள் சைனாவிற்கு ஸப்ளை செய்யக்கூடியது எத்தனையோ சாமான்களிருக்கின்றன. போக்குவரத்து பிரச்னை சிரமமாகி வந்தாலும் இவ்விஷயம் சாதிக்கக்கூடாதது அல்ல.



## மதராஸ் படைப்பகுதி.

## மேன்மை தங்கிய கவர்னரின் பாராட்டு.

### பயிற்சிசாலையைத் திறந்துவைத்தல்.

"மூன்றாவது மதராஸ் பட்டாளத்தை புனருத்தாரணம் செய்ததைக் கொண்டாடுவதற்காக மதராஸ் கவர்னர் என்ற ஹோதாவில் நான் இன்று இங்கு விஜயம் செய்திருப்பதில் எனக்கு அதிகப் பெருமை உண்டாகிறது. இதற்கு முன் தென்னாட்டிலிருந்து பட்டாளத்திற்கு ஆட்கள் சேர்ப்பதை நிறுத்தி வந்தது அரசாங்கத்தார் கொள்கையென்று உங்களுக்குத் தெரியும். யுத்தம் ஏற்பட்டதினால்தான் இவ்வளவு வருஷங்களாகப் பட்டாளத்தில் ஆட்கள் சேகரிக்காததினால் குறைந்தது எவ்வளவு என்று தெரியவரும்.

"தென் இந்தியன் அநேகமாக நல்ல சிப்பாயாக இருக்கமாட்டான் என்று சில ஜனங்கள் சொல்லுவதுண்டு. அது உண்மையல்ல. தென் இந்தியன், அதாவது ஒரு மதராஸி உலகத்தில் வேறு எந்த ஊரிலிருந்து வரும் சிப்பாயைப் போலவே போர் திறமையுள்ளவனாக இருக்கிறான் என்று இந்த யுத்தத்திலும், இதற்குமுன் நடந்த பல யுத்தங்களிலும் அடிக்கடி ரூபிக்கப்பட்டிருக்கிறது.

"நான் இங்கு கவர்னராக வந்தது முதல், ராணுவ அதிகாரிகளைக் கொண்டு ஒரு பட்டாளம் மாத்திரமல்ல, பழைய மதராஸ் சைனியத்தில் பல பகுதிகளையும் புனருத்தாரணம் செய்ய என்னால் முடிந்தவரை உதவிசெய்து வந்திருக்கிறேன். புனருத்தாரணம் செய்ததைக் கொண்டாடவும், பரிசுகள் அளிக்கவும், பழைய மதராஸ் உத்தியோகஸ்தர்களையும், கீழ்தர ராணுவ உத்தியோகஸ்தர்களையும் இப்பொழுது மதராஸ் சைனியத்திலுள்ளவர்களுடன் ஒற்றுமைப்படுத்த இங்கு கூடியிருக்கிறோம்.

"இப்பொழுது இந்தப் பட்டாளத்தில், அதாவது 10-வது பட்டாளத்திலுள்ள உத்தியோகஸ்தர்களே! கீழ்தர உத்தியோகஸ்தர்களே! போர்வீரர்களே! இச்சமயத்தில் மற்ற பட்டாளங்களுக்கு தலைமை அதிகாரிகளாகவும் கீழ்தர உத்தியோகஸ்தர்களாகவும் நியமிக்க பயிற்சி அளிப்பதை எதிர்பார்க்கிறோம். மற்ற மதராஸ் பகுதிகளுக்கும் இன்னும் மதராஸ் பட்டாளத்திற்கும் இந்தப் பகுதியிலிருந்து அநேகம் பேர்களைத் தேர்ந்தெடுக்கும்படி செய்யவேண்டும்.

"இதற்கு முன்னிருந்த வழக்கத்தினால் இப்பொழுது தென் இந்தியாவிலிருந்து மேல்தர அதிகாரிகள், கீழ்தர ராணுவ அனுபவ உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முடியாமலிருக்கிறது. இருந்தபோதிலும் மிகவும் கஷ்டப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகஸ்தர்களை மதராஸிலுள்ள பல் வேறு பகுதிகளுக்குத் தலைமைவகிக்க உயர்தர உத்தியோகஸ்தர்களாக அனுப்பப் படுகிறார்கள்.

**சைனியத்திற்கு ஆட்கள் சேகரித்தல்.**

"தற்போது இந்தியாவிலிருந்து சைனியத்திற்கு ஆட்கள் திரட்டுவது மிகவும் கஷ்டமென்று சிலர் சொல்லுகிறார்கள். அவ்விதம் சொல்லுவது முற்றிலும் சரியல்ல. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து மிகவும் கம்பீரமாக மனிதர்கள் தாய்நாட்டைப் பாதுகாக்கவும், பொதுமக்களின் உரிமையைப் பெறுவதற்காகவும் படையில் வந்து சேருகின்றனர். ஆனால் படைப் பகுதிகளுக்குத் தலைமை வகிக்க சரியான தலைவர்களும் கீழ்தர ராணுவ உத்தியோகஸ்தர்களும் கிடைப்பது கஷ்டம். தற்போது இந்தப் பட்டாளத்தின் முக்கியமான அலுவல் என்னவென்றால் நன்றாய் பயிற்சிபெற்ற உத்தியோகஸ்தர்களை மற்ற மதராஸ் படைப் பகுதிகளுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

"சைனியத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பயிற்சிப்பெற நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது. நீங்கள் யாராயிருந்தாலும் சரி, எந்த ஊரிலிருந்து வந்திருந்தாலும் சரி, உங்களுடைய ஜாதி, மதம் எதுவாயிருந்தாலும் சரி, நீங்கள் உயர்ந்த பதவிகளை அடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இன்று காலை நான் பேசும்பொழுது என் முன்னிலையிலிருந்த அநேக வாலிபர்கள் கூடிய

சீக்கிரத்தில் புகழ்பெற்று ராணுவத்தில் உயர்ந்த பதவிகளை அடைவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. நீண்டகாலம் நீங்கள் சைனியத்திலேயே சேவை செய்யும்படியாக நான் விரும்புகிறேன்.

"வருங்காலத்தில் என்ன சம்பவிக்குமென்று முன்கூட்டியே சொல்லுவது மிகவும் கடினம். இப்பொழுது புதிதாய் தயாரிக்கப்பட்டிருக்கும் மதராஸ் பட்டாளம் எப்பொழுதும் நிலைத்திருக்கும் என்று எனக்கு பூரா நம்பிக்கையுண்டு. ஏற்கனவேயே நீங்கள் பிரபல யுத்த வீரர்களாகவேயிருந்திருக்கிறீர்கள். அந்த கௌரவத்திற்குப் பங்கம் வராதபடி இப்பொழுதும் நடந்துவருவீர்கள்.

### சரித்திரம் பிரசித்தியடையும்.

"அடுத்துவரும் நாட்கள் மாதங்கள், வருஷங்களில் நீங்கள் எந்தெந்த இடங்களுக்குச் செல்ல நேர்ந்தபோதிலும், என்னென்ன ஸ்தானத்தை வகிக்கவும், அலுவல்களைச் செய்யவும் நேரிட்டபோதிலும், அப்பொழுது உங்களுக்கு என்ன கஷ்டங்கள், அபாயங்கள் தோன்றினாலும், அதைப் பொருட்படுத்தாமல் நீங்கள் உங்கள் கடமைகளைச் செய்வீர்கள் என்று எனக்கு நன்றாய்த் தெரியும். உங்கள் நன்மைக்காகவும், உங்கள் குடும்பங்கள் நன்மைக்காகவும், உங்கள் தேசத்திற்காகவும், இன்னும் உங்கள் பட்டாளத்தின் கௌரவத்திற்காகவும் உங்கள் வேலையைச் சந்தோஷமாகச் செய்யுங்கள். இதற்குமுன் அது மிகவும் கியாதி பெற்றிருந்திருக்கிறது. இனி வரப்போகும் காலத்திலும் அதற்கு நல்ல புகழ் ஏற்படுமென்று எனக்குத் தெரியும்.

"மதராஸ் படை பகுதிகளின் நடவடிக்கைகளைப் பற்றி நான் இதுவரை அதிக உத்சாகத்துடன் கவனித்து வந்திருக்கிறேன். இந்தப் பட்டாளத்திற்கு வேண்டிய உதவிகளை என்னால் முடிந்த அளவு செய்யத் தயாராகயிருக்கிறேன். உங்களுக்கு என்னால் ஆகக்கூடிய உதவி ஏதேனுமிருந்தால் உங்களின் தலைமை அதிகாரி எனக்கு அறிவிக்கலாம்.

"இன்று நான் உங்கள் கூட்டத்தில் கலந்துகொண்டது எனக்குப் பெரிய கௌரவத்தை கொடுக்கிறது என்று மீண்டும் வற்புறுத்திச் சொல்லுகிறேன். இன்று அஸேயில் நடந்த சண்டையின் வருஷாந்திரமும் ஆகிறது. மகத்தான அந்தச் சண்டையில் இந்தியத் துருப்புகளில் மதராஸ் பட்டாளங்கள் மட்டில்தான் கலந்துகொண்டிருந்தது. நீங்கள் ஏற்கனவேயடைந்துவரும் முன்னேற்றத்தைப் பற்றி நான் பெருமை பாராட்டுகிறேன். உங்களை மீண்டும் பார்ப்பதற்கு ஆவலுள்ளவனாகயிருக்கிறேன். உங்களில் தலைமை உத்தியோகஸ்தர் முதல் கடைசி 'ரிக்ரூட்' சிப்பாய் வரை யாவரும் யுத்தத்தில் வெற்றியடைந்து சந்தோஷமாகத் திரும்புவீர்கள் என்று நான் பிரார்த்திக்கிறேன்."

---

## ஊக்கமும், விடாமுயற்சியும் தான் வெற்றிபெறுவதற்கான முக்கிய அம்சங்கள்.

**(ஸர். ஆர்ச்சிபால்டு வேவல், இந்திய சேனாதிபதி).**

"பர்மாவை நாம் இழந்தது முதல் மீண்டும் அதை வசப்படுத்திக்கொள்வதைப் பற்றி நான் திட்டம் போட்டு வந்திருக்கிறேன். ஏனென்றால் ஜப்பான் பேரில் போர் நடத்துவதற்கு முக்கிய கேந்திர ஸ்தானங்களில் பர்மா ஒன்றாகும். மேலும் சீனர்களுடன் மறுபடியும் சம்பந்தம் வைத்துக்கொள்வதற்கும், ஜப்பானைத் தாக்குவதற்கும் பர்மாவைத் தளமாக வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

"ஆகவே பர்மாவை மீண்டும் கைப்பற்றுவதைப் பற்றி நான் அதிகமாக யோசித்து வருகிறேன். ஆனால் என்னுடைய திட்டம் என்னவென்பதை நான் இப்பொழுது வெளியிடமுடியாது. அது ஒரு கடினமான பிரச்னைதான்.

"போதுமான அளவுக்கு ஸப்ளைகள் கிடைக்காமலிருப்பதுதான் எனக்கு எப்பொழுதுமுள்ள கஷ்டம். எகிப்தை நோக்கி தளகர்த்தர் ரோமல் முன்



னேறிச் சென்றிருப்பதிலும், காகஸஸைக் கைப்பற்ற எதிரி முயற்சிப்பதிலும் ருஷ்யர்களுக்கு உதவியாக ஸப்ளைசுகளும், துருப்புகளும் அனுப்பவேண்டியிருந்தது. அதனால் எனக்கு வரும் ஸப்ளைகள் குறைந்து போயிற்று. ஆனால் இப்பொழுது நிலைமை அபிவிருத்தியடைந்திருக்கிறது. அதனால் நமக்குத் தேவையான யுத்த தளவாடங்கள் இப்பொழுது நமக்குக் கிடைத்துவருகின்றன. கடல் ஆதிக்கம் பெறுவதுதான் இந்த யுத்தத்தின் முக்கிய அம்சம்.

### ஜப்பானியர்களின் திடீர் தாக்குதல்.

"ஜப்பான் நம்மீது திடீரெனப் பாய்ந்தது. அவர்கள் பழைய யுத்த முறையிலேயே இன்னும் இருந்துவருவதாக நாம் எண்ணினோம். அவர்கள் இவ்வளவு சீக்கிரத்தில் வெகு தூலைவரை சென்று தாக்குவார்கள் என்று நாம் கருதவில்லை.

"ஆனால் இனி அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதுதான் கேள்வி. உட்கொண்டதை ஜீரணிக்கவே அவர்கள் எண்ணுகின்றனர் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆஸ்திரேலியா, அல்லது இந்தியா மீது படையெடுப்பது போலுள்ள பெரிய காரியத்தில் இறங்க விரும்பமாட்டார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது.

"ஜப்பானிய விமானப்படையின் பலம் வரவர மிகவும் க்ஷீணித்துவிடுமென்றே நான் எண்ணுகிறேன். தங்கள் நாட்டின் பாதுகாப்பிற்காக அங்கு ஏராளமான விமானங்களை வைத்திருக்கவேண்டியிருக்கிறது. ருஷ்யாவைக் கவனித்து வருவதற்காக மஞ்சூரியாவிலும், தென்மேற்குப் பஸிபிக்கிலும்கூட ஏராளமான விமானங்களை அவர்கள் நிறுத்திவைக்க வேண்டியிருக்கிறது. ஆசியாவில் பெருத்ததொரு வல்லரசாக இருக்கவேண்டுமென்பதே ஜப்பானியரின் ஆவல். ஆகவே ஜப்பான் ருஷ்யத் தொல்லையை முதலில் சமாளிக்கவேண்டும். அடுத்தபடியாக முடிந்தவரையில் சீன விவகாரத்தை முடித்தாகவேண்டும்.

### ருஷ்யா—முக்கியமான பிரச்னை.

"முக்கியமான பிரச்னை ருஷ்யாதான். ஏனென்றால் அதிலிருந்து இந்தியாவும் பாதிக்கப்படும். இந்த கோடைகாலத்திற்குள், 1917-ம் வருஷத்தில் ஜெர்மனி நடத்தியது போல், ருஷ்யச் சைனியங்களை அடியோடு முறியடித்துவிடவேண்டுமென்று நம்பப்படுகிறது. அப்பொழுது மாரிகாலம் முடிவதற்குள் சைனியங்களைச் சரியானபடி ஒழுங்குபடுத்திக்கொண்டு மேற்கு பாகத்தில் ஏற்பட்ட எதிர்ப்பைத் தடுக்கவும், அல்லது முன்னேறித் தாக்கவும் அவர்கள் எண்ணினார்கள். மேலும் அடுத்த வருஷத்தில் மத்தியக் கிழக்குப் பக்கத்தில் இடுக்கித் தாக்குதல் செய்யக் கடுமையாகப் பிரயத்தனப்படலாம். இப்பொழுது யுத்தத்தை நிறுத்துவதற்கான கடுமையான மாரி காலம் வந்துவிட்டது. மாரி காலக் குளிரைப்பற்றி யோசிக்கவேண்டியது முக்கியமான விஷயம். கோடை காலத்தில் மேற்குப் பாலைவனத்தில் நம்மால் யுத்தம் செய்வது சாத்தியமல்ல என்று சொல்லப்பட்டது. ஆனால் நாம் அப்பொழுதும் யுத்தம் செய்ய முடிந்தது. மேலும் அபிஸீனியாவில் மழை காலம் வந்ததினால், யுத்தம் தடைபட்டுப் போய்விடவில்லை. எனவே ருஷ்யாவில் வடக்கே ருஷ்யச் சைனியம் சிதறிப் போகாமல் ஒரே நிலையிலிருந்தும், தெற்கே காகஸஸும் பிடிவாதமாக எதிரி வசமாகமலும் இருந்தால் ஜெர்மானியரின் நோக்கம் பூர்த்தியடைய முடியாது. ஒருக்கால் ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராடை இழந்துவிடலாம். ஆனால் அந்த நஷ்டத்தால் மட்டும் நிலைமை மிகவும் மோசமாகப்போய்விடாது. வால்கா நதியின் அடிவாரங்களில் இந்த வருஷக்கடைசியில் பூராவாகப் பனியால் உறைந்துவிடும். காகஸஸில் தெற்கேயிருக்கும் கணவாய்களில் இப்பொழுது பனி விழ ஆரம்பித்திருக்கிறது.

### இந்திய பார்ஸ்வத்துக்கு அபாயமில்லை.

"இப்பொழுதாவது, அல்லது அடுத்த வசந்த காலத்திலாவது ஜெர்மானியர் வெகு சுலபத்தில் காகஸஸையடைந்து, பர்ஸியாவிலுள்ள எண்ணெய்த் தளங்களைக் கைப்பற்ற முடியுமென்று நான் நினைக்கவில்லை. அது இந்தியாவின் மேற்குப் பார்ஸ்வமாக இருப்பதால் அதில் எனக்கு அதிக அக்கறை உண்டு.

“இங்குள்ள நிலைமையைப்பற்றி எனக்குத் திருப்திகரமாக இருக்கிறது. இங்கு சில குழப்பங்கள் ஏற்பட்டு அதனால் யுத்த முயற்சிக்குக் கொஞ்சம் தடை இருந்தபோதிலும், ஒவ்வொரு மாதத்திலும் சைனியத்தில் புதிதாகச் சேர்க்கப்படுவதற்காக 70,000 பேர்கள் முன் வருகிறார்கள். இப்பால் சைனியத்திலும் யாதொருவிதமான குழப்பமும் இருப்பதாகத் தெரியவில்லை.

“ஜெர்மனிபேரில் நேசதேச விமானப்படைகள் நடத்திய தாக்குதல்களாலும், ருஷ்யப் போரில் ஜெர்மானியருக்கு ஏற்பட்ட ஏராளமான நஷ்டத்தினாலும், ஜெர்மனி இந்த மாரிகாலத்தில் உள்நாட்டு நிலையைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டிவரும். நெபோலியனின் திட்டம்போல்தான் ஐரோப்பாவில் ஹிட்லர் ஏற்படுத்திய ‘புதிய திட்டமும்’ நடைபெறும். ஜெர்மனி ஐரோப்பா பூராவையும் கொள்ளையடித்துதான் சொந்த உபயோகத்திற்குச் செலவிட்டுக் கொள்ளுகிறது. ஆனால் ஐரோப்பாவை நாம் மீண்டும் அடைவதற்குமுன் ஒரு கடுமையான போரை நடத்தியாகவேண்டும். சென்ற யுத்தத்தில் ஸோம் (Somme) என்ற இடத்தில் நடந்த சண்டையில் முதல்தரமான பிரிடிஷ் துருப்புகளில் 60,000 பேர்கள் முதல் நாளிலேயே இறந்தனர். ஆனால் இறுதியில் ஜெர்மன் சைனியம் அடியோடு முறியடிக்கப்பட்டுவிட்டது. எனவே இந்த யுத்தத்தின் முடிவைப்பற்றி எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை. ஊக்கமும், விடாமுயற்சியும்தான் வெற்றிபெறுவதற்கான முக்கிய அம்சங்கள். அமெரிக்கா, பிரிடன், ருஷ்யா, சைனா ஆகிய நான்கு நாடுகளும் கடைசிவரையில் எதிரியுடன் போர் புரியத் தீர்மானித்திருக்கின்றன.

---

## நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள்.

### அமெரிக்காவிலுள்ள ‘மூன்லைட் காவல்ரிப் பகுதி.’

அமெரிக்காவில் பெரிய விளக்குகளைக் கொண்டு எதிரி வருகையைப் பார்ப்பவர்களுக்கு ‘மூன்லைட் காவல்ரிப்’ பகுதி என்று சொல்லுவார்கள். அவர்கள் இப்பொழுது அமெரிக்காவில் கீழ் பக்கம் கடற்கரையோரமாக 80,00,00,000, காண்டில் பவர் பிரகாசமுள்ள விளக்குகளைக் கொண்டு ஆகாயம் பூராவும் பிரகாசிக்கச்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. போக்குவரத்து விமானங்களிலுள்ள பிரயாணிகள் இந்த விளக்கு வெளிச்சத்தைக் கொண்டு தினசரி பத்திரிகையைப் படிக்கலாம்.

70,00,000 பிரிடிஷ் ஸ்திரீகள் ஏற்கனவே வேலைக்கமர்த்தப்பட்டு யுத்த வேலை செய்யும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். 20 முதல் 30 வயதுக்குட்பட்ட விவாகமாகாத ஸ்திரீகள் போர் படையில் சேர்ந்துகொள்ளக் கூடும்.

கிரேட் பிரிடனில் இப்பொழுது உழவுக்காகப் போடப்பட்டிருக்கும் திட்டம் பூர்த்தியாகும்பொழுது, யுத்த ஆரம்ப காலத்தில் விவசாயத்திற்கு லாயக்காக இருந்த நிலங்களுடன் இன்னும் அதிகமாக 60,00,000 ஏக்கர் நிலங்கள் சேர்க்கப்படும்.

கைத்தொழில் இலாகா நிபுணர்களுக்குப் பயிர்ச்சியளிக்கப்படும் ஏற்பாட்டின்படி இதுவரையில் 39,000 பேர்கள் பயிற்சி பெறுவதற்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 10,700 பேர்களுக்குப் பயிற்சியளிப்பது பூர்த்தி ஆகிவிட்டது. 28,300 பேர்கள் இன்னும் பயிற்சிபெற்று வருகிறார்கள். இன்னும் 11,000 பேர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு இடம் காலியாக இருக்கிறது. மெட்ரிகுலேஷன் பரிக்ஷை தேறாதவர்களுக்கு பயிற்சிபெறும் காலத்தில் 22 ரூபாய் வீதம் மாத சம்பளமும், மெட்ரிகுலேஷன் பரிக்ஷை தேரியவர்களுக்கு 27 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. பயிற்சி முடிவடைந்தவுடன ஸர்க்கார் சம்பந்தமான கைத்தொழிலிலோ, சொந்தமாக வைத்து நடத்தும் கைத்தொழிலிலோ 6 முதல் 12 வரை மாதங்களுக்கு வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்படுவார்கள்.



1942-ம் வருஷம் ஜுலை மீ 15உயோடு முடிவடைந்த ஒரு பக்ஷத்தில் ரூ 9,05,000 மேன்மை தங்கிய வைஸிராயின் யுத்த நிதிக்கு வசூலாயிருக்கிறது. மேற்சொன்ன தேதி வரை அந்நிதிக்கு மொத்த வசூல் ரூ 7,13,00,000. அந்தத் தொகையில் ரொக்க பணத்தை வட்டி விருத்தியாம்சித்திற்காகப்போட்டு வைத்திருந்ததில் அதில் வசூலான வட்டியும் சேர்ந்திருக்கிறது.

அந்தக் காலத்தில் இந்தியாவிலும் அந்நிய நாடுகளிலும் செலவான தொகை ரூ 6,77,560. அந்தக் காலமுடிய மொத்தம் கொடுக்கப்பட்டது ரூ 6,15,04,160.

**பாதுகாப்புக்கடன் பத்திரங்களின் விற்பனை.**—மூன்றாவது பாதுகாப்புக்கடன் பத்திரங்களின் விற்பனையில் 1942-ம் வருஷம் ஆகஸ்டு 1-ம் தேதியோடு முடிவடைந்த வாரத்தில் வசூலான தொகை ரூ 44,14,700.

1942-ம் வருஷம் ஆகஸ்டு 1 வரை வட்டியில்லாத பாதுகாப்புக் கடன் பத்திரங்கள் விற்பனையில் மொத்த வருமானம் ரூ 2,97,99,000. ஏற்கனவே உள்ள பத்திரங்களுடன் 3 சதவிகிதம் வட்டியுள்பட சேர்த்து ரூ 10,62,36,000. போஸ்டாபீஸ்களில் 10 வருஷத்திய டிபன்ஸ் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள் ரூ 5,72,00,000 பொருமதியாகும்.

எல்லா இந்தியப் பாதுகாப்புக் கடன் பத்திரங்கள் விற்பனையின் மொத்தத் தொகை 1940 வருஷம் ஜுன் மீ த்தில் ஆரம்பமாகி 1942-ம் வருஷம் ஆகஸ்டு 1உ முடிவு அடையும் வாரத்தில் மொத்த வருமானம் ரூ 1,14,93,68,000.

1940—41 வருஷத்திற்கு இந்தியாவின் பாதுகாப்பு சேவைகளுக்காக மொத்தச் செலவு 127 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது. இதில் இந்தியா கொடுத்த பாகம் 73½ கோடி ரூபாய்கள்தான். பாக்கி பிரிடிஷ் அரசாங்கம் கொடுத்திருக்கிறது.

1941 முதல் 1942 வரையுள்ள வருஷத்திற்கு திரும்ப வசூலிக்கக்கூடிய யுத்த செலவுக்கும், இந்தியாவில் வாங்கிய சாமான்களுக்கும் பிரிடிஷ் அரசாங்கம் ரொக்கமாக 258 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது.

---

## கிரீஸில் விலைவாசிகள்.

ஐரோப்பாவில் ஹிட்லர் ஏற்படுத்திய ‘புதிய திட்டத்தின்’ கீழ் வந்த கிரீஸ் தேசமானது 12 மாதங்களாகவே சமாதானமில்லாமல் இருந்துவருகிறது. சென்ற வசந்த காலத்தில் ஜெர்மனி படையெடுத்தது முதற்கொண்டு சாமான்களின் விலை அதிகமாக ஏறிவிட்டது. இவ்வித விலையேற்றம் யாவும் ஜெர்மனியின் ‘பொது க்ஷேமத்தினால்’ ஏற்பட்ட விபரீதம் தான். ஜெர்மனியின் ‘பொது க்ஷேமம்’, என்றாலும் ஜப்பானின் ‘பொது க்ஷேமம்’ என்றாலும், எல்லாம் ஒரே மாதிரிதான்.

| நாஸிப் படையெடுப்புக்கு முன். | | | | இப்பொழுது. | | |
|---|---|---|---|---|---|---|
| ரூ. | அ. | பை. | | ரூ. | அ. | பை. |
| 0 | 2 | 0 | முட்டை | 4 | 0 | 0 |
| 0 | 14 | 0 | சிற்றுண்டி சாலை உணவு | 13 | 0 | 0 |
| 0 | 14 | 0 | ஒரு சேர் சீமை அவரைக்காய். | 72 | 0 | 0 |
| 21 | 0 | 0 | ஒரு ஜோடி பூட்ஸ் | 290 | 0 | 0 |
| 105 | 0 | 0 | உடுப்பு | 900 | 0 | 0 |

**புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரசங்க நிகழ்ச்சிமுறை.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1942—** | | பிரஸங்கம் **115**—(2-வது பிரிவு). | | | மணி. |
| அக்டோபர் | 3, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | ... | மாலை | 7 45 |
| | 4, ஞாயிற்றுக்கிழமை | குடுமியாமலை | ... | ,, | 7.00 |
| | | பரம்பூர் | ... | ,, | 7.30 |
| | 5, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி | ... | ,, | 7.00 |
| | | விராச்சிலை | ... | ,, | 7.30 |
| | 6, செவ்வாய்க்கிழமை | வெங்களூர் | ... | ,, | 7.00 |
| | | கோனாபட்டு | ... | ,, | 7.30 |
| | 7, புதன்கிழமை ... | நல்லூர் | ... | ,, | 7.00 |
| | | மண்டையூர் | ... | ,, | 7.30 |
| | 8, வியாழக்கிழமை ... | பனையப்பட்டி | ... | ,, | 7.00 |
| | | ராங்கியம் | .. | ,, | 7.30 |

பிரஸங்கம் **116**

| | | | |
|---|---|---|---|
| 10, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் சதுக்கம். | மாலை | 6.00 |

---

**புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 26— 9—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 27— 9—42 | ... | தீத்தான்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 28— 9—42 | ... | முள்ளங்குரிச்சி. |
| செவ்வாய்க்கிழமை | ... | 29— 9—42 | ... | பேராம்பூர். |
| புதன்கிழமை | ... | 30— 9—42 | ... | கீழாநிலை புதுப்பட்டி. |
| வியாழக்கிழமை | ... | 1—10—42 | ... | குழிபிரை. |
| வெள்ளிக்கிழமை | ... | 2—10—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 3—10—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 4—10—42 | ... | விராச்சிலை. |
| திங்கட்கிழமை | ... | 5—10—42 | ... | விராலிமலை. |
| செவ்வாய்க்கிழமை | ... | 6—10—42 | ... | கோனாபட்டு. |
| புதன்கிழமை | ... | 7—10—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 8—10—42 | ... | ஆலங்குடி. |
| வெள்ளிக்கிழமை | ... | 9—10—42 | ... | புதுக்கோட்டை. |

**விளம்பரம்.**

**இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்த**

**நம்முடைய வீரம்பொருந்திய அயலான்**

என்னும் யுத்தப் படம்

பொன்னமராவதி வலம்புரி டாக்கீஸில்

*10—10—42 முதல் 13—10—42 வரை காண்பிக்கப்படும்.*

**தேசீய யுத்த முன்னணி நிலயம்**

**இதை ஜனங்களுக்குச் சிபார்சு செய்கிறது.**

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—7-10-42.

**புதுக்கோட்டை ஸமஸ்தான**

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ அக்டோபர் ௴ 10௳ [ந. 116

**பிரஸங்கம் CXVI.**

## இந்தியாவும், யுத்தமும்.

*லண்டனில் காக்ஸ்டன் ஹாலில் மிஸ்ட்டர் அமெரி செய்த பிரசங்கம்.*

*"இங்கிலீஷ்காரர்கள் சமீப காலத்தில் இந்தியாவைச் சண்டையில் ஜயித்து, அதன்மூலமாக இந்தியாவில் பிரிடிஷ் ஆட்சி ஏற்படவில்லை. இதற்கு மாறாக இந்தியாவில் சில பாகங்களில் 200 வருஷங்களுக்கு முன் முதலாகவே இந்த அரசாட்சி இருந்துவருகிறது. மற்ற இடங்களிலும் ஒரு நூற்றாண்டுக்குக் குறையாமல் இத்தகைய அரசாட்சி இந்தியா பூராவிலும் பரவியிருக்கிறது.*

*"இந்தியாவின் எதிர்காலம் என்பதைப்பற்றி நான் பேச விரும்புகிறேன், ஆகையினால் இந்தியாவின் முன்னிருந்த நிலைமையைக் குறித்தும், தற்போதைய நிலைமையைக் குறித்தும் பொதுவாக ஒன்றும் சொல்லப்போவதில்லை. இந்தியாவில் 18-ம் நூற்றாண்டில் அராஜகம் ஏற்பட்டு, பிரெஞ்சுக்காரர்களின் ஆக்கிரமிப்பினால் பயம் உண்டாகியிருந்த காலத்தில், பிரிடிஷ் வியாபார ஸ்தாபனம் வரவர அதிகாரத்தைக் கையாளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முடிவில் அத்தகைய அதிகாரம் இந்தியா தேசம் பூராவிலும் பரவி, பெரிய சாம்ராஜ்யமும் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தியாவின் தற்காப்பு, நல்ல அரசாட்சி, ஒழுங்குப்பாடு இவைகளை ஏற்படுத்துவதற்காக இங்குள்ள பார்லிமெண்டு பொறுப்பு எடுத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. அது அனுவசியமாக எல்லாக் காரியங்களிலும் தலையிடாமல் மேல்பார்வை பார்த்துவந்தது.*

**"இருந்தபோதிலும் இந்தியாவில் பிரிடிஷ் அரசாட்சி முக்கியமாக இந்தியாது உணர்ச்சிக்கு இயற்கையாகவே ஏற்றதாகயிருக்கிறது.**

*"நமது ஸ்வதந்திரத்திற்கு அடிப்படையான சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு, பிரிடிஷ் தலைவர்கள் இந்தியாவில் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த மகத்தான திட்டத்தை ஏற்படுத்துவதில் ஒவ்வொரு சமயத்திலும் இந்தியர்களும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சென்ற தலைமுறையில் அரசாங்கத்திலும், ராணுவத்திலும் இந்தியர்கள், அதிகமாகப் பங்கெடுத்துக்கொண்டிருந்தார்கள்.*

*"இந்த நிமிஷத்தில் வைஸிராயின் மந்திரி சபையில் 15 மெம்பர்களில் 11 பேர் இந்தியர்கள். 11,00,00,000 ஜனத்தொகை அடங்கிய ஐந்து பெரிய மாகாணங்களில் நிர்வாகத்தை நடத்தும் மந்திரிகள், முக்கியமாக பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்கள் இந்திய சட்ட சபைகளுக்குப்*

பொறுப்பாளிகள். இதர 6 மாகாணங்களிலும் இதற்குமுன் இதேமாதிரிதான் இருந்தது. மத்திய ஸர்க்காரைச் சங்கடத்துக்குள்ளாக்குவதற்கு மகாத்மா காந்தியும், காங்கிரஸ் காரியக்கமிட்டியும், காங்கிரஸ் மந்திரி சபைகளை ராஜீனாமாச் செய்து, வேலை நிறுத்தம் செய்யும்படி நிர்ப்பந்திக்காமலிருந்திருந்தால், அதே நிலைமை இப்பொழுதும் அந்த மாகாணங்களிலும் இருந்துகொண்டிருக்கும்.

## உத்தியோகங்களில் பெரும்பான்மையோர் இந்தியர்கள்தான்.

"ஸீனியர் நிர்வாக ஸர்வீஸ்களில் சரிபாதியும், கீழ்தர ஸர்வீஸ்களில் பெரும்பான்மையினரும் இந்தியர்களே. இந்தியர்கள் ராணுவத்திலும் பெரும்பாலாக இந்தியர்கள் பெரிய உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்களின் திறமை இப்பொழுது நடக்கும் போரில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் சுமார் பாதிபாகம் இதுவரை இந்திய சுதேச மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள பூரா ஜனத்தொகையில் கால்வாசிப்பேர் அவர்களின் ஆட்சியின் கீழிருக்கிறார்கள். அச்சுதேச மன்னர்கள் பிரிடிஷ் அரசாங்கத்தாருடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளின்படி பாதுகாக்கப்படுகிறார்கள். இருதிறப்பார்களும் ராஜவிசுவாசத்துடன் உடன்படிக்கைப்படி நடந்துகொள்ளுகிறார்கள். தற்போதைய இந்திய சாம்ராஜ்யத்தில் சுதேச மன்னர்களின் ஆளுகையும் ஒரு முக்கியமான விஷயம். ஏனென்றால் வருங்காலத்தில் வெளிநாட்டு ஆதிக்கமில்லாமல் தன்னைத்தானே ஆண்டுகொள்ளவேண்டுமென்று விருப்பமுடைய இந்தியாவில் இது ஒரு முக்கியமான அம்சமாக இருக்கும்.

"தற்போதைய இந்தியா பண்டைகால நிலைமையிலிருந்து பல அம்சங்களில் அபிவிருத்தி பெற்றிருக்கிறது. அவைகளில் இரண்டு அம்சங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாகத் தற்போதைய யுத்தத்தில் மகத்தான சேவைபுரியும் இந்தியா, போரில் வெகு காலமாக பிரக்யாதிபெற்று விளங்கும் இந்தியாவாகும். இச்சமயத்திலும் 10 லக்ஷம் வீரர்கள் பட்டாளத்தில் சேருவதற்கு முன்வந்திருக்கின்றனர். அப்படையில் பிரிடிஷாரும், இந்தியர்களும் ஒன்று சேர்ந்து பரஸ்பர ராஜ விசுவாஸத்துடனும், பக்ஷத்துடனும் வேலைசெய்து வருகிறார்கள். அநேக பெரிய சண்டைகளில் கடுமையாக யுத்தம் செய்து புகழ் பெற்றிருக்கிறார்கள்.

"இந்தியாவில் முக்கியமான பல கைத்தொழில்கள் வரவர அபிவிருத்தியடைந்து, இந்தியப்படைகளுக்கும், சாம்ராஜ்யப்படைகளுக்கும் வேண்டிய யுத்த தளவாடங்களை ஸப்ளை செய்வது மற்றொரு முக்கியமான விஷயம். இந்தியாவில் ஏராளமான விவசாயப் பொருள்களும், பலவிதமான உலோகங்களும் இருக்கின்றன. அபிவிருத்தியடையப்பட்ட போக்குவரத்து சாதனங்களையும், நீர்ப்பாசன சாதனங்களையும் கொண்டு பொதுவான விரோதியை அழிப்பதற்கு இந்தியா முன் வந்திருக்கிறது. இந்தியாதான் இந்த யுத்தத்தில் பெரிய பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. போரில் நேராக ஈடுபடவும் போருக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்துக்கொடுக்கவும், விரோதி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளைத் தாக்குவதற்கு ஏற்ற தளமாக இருக்கவும் இந்தியா தீர்மானித்திருக்கிறது.

"இம்மாதிரி போர் செய்யும் இந்த இந்தியா அரசியல் பிரச்னை, இந்தியாவில் வருங்காலத்தில் ஏற்படப்போகும் அரசாங்கம், முதலியவற்றைப் பற்றியும் அதிக கவனம் எடுத்துக்கொண்டு வருகிறது. மேலும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்கும், இந்தியாவுக்கும் வருங்காலத்தில் எவ்வித பாந்தவ்யமிருக்கவேண்டுமென்பதைக் குறித்து இந்தியர்களுக்குள் அபிப்பிராயப்பேதமில்லை. இந்தியா தனது விஷயங்களை நிர்வகிப்பதில் அதிக ஸ்வதந்திரம் இருக்கவேண்டுமென்பதுதான் இங்கிலாந்திலுள்ளவர்களின் விருப்பம். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா தானாகவே இஷ்டப்பட்டு ஒரு பங்காளியாக இருக்கவேண்டு மென்பதே நமது நோக்கம். இம்மாதிரி முடிவு ஏற்படுவதை நாம் காணவேண்டுமென்பதே இவ்வளவு காலம் நாம் இந்தியாவின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டதின் நோக்கம்.

பிரிடிஷ் இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியினரும், வகுப்பினரும், ஸமஸ்தான மன்னர்களும், கட்சித் தலைவர்களும் ஆகிய எல்லோரும் அயல் நாட்டு ஆதிக்க



மின்றியில் இந்தியா தன்னைத்தானே ஆண்டு கொள்ளவேண்டுமென்று ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள்.

"ஆனால் இந்திய தேசிய வாழ்க்கையிலுள்ள பல்வேறு வகுப்பினர்களையும், மதத்தினர்களையும், கட்சிகளையும் ஒன்று சேர்த்து ஒரு அரசாங்கத்தை அமைப்பது வெகுகடினம். அந்த அரசாங்கத்தில் ஒரு கட்சி மற்றொரு கட்சியினரை ஹிம்சை செய்யாமலிருக்கவேண்டும். ஆனால் தற்போது இந்தியாவின் சட்டதிட்டங்களிலும், நிர்வாகத்திலும் உள்ள கட்டுப்பாடு குலையாமலிருக்கவேண்டும்.

"அம்மாதிரி இல்லாமல் போனால் இந்தியா சுபீக்ஷமாக தனது எல்லைக்குள்ளேயே சமாதானத்துடன் இருக்க முடியாது. வெளிநாட்டுப் படையெடுப்பையும் சமாளிக்க முடியாது. இப்பிரச்னை மிகவும் கஷ்டமான பிரச்னை. ஆனால் இது தீர்க்கப்பட்டு விடுமென்றே நான் நம்புகிறேன். இந்தப் பிரச்னையும் முக்கியமாக இந்தியர்களாலேயே தீர்க்கப்படவேண்டும். அவர்களுக்குள் ஒத்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய அரசாங்கத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்றால் அவர்களுக்குள் தக்கவாறு உரிமைகளையும் விட்டுக்கொடுக்கவேண்டும். இது காரணத்தினால்தான் அமெரிக்க அரசியல் திட்டம் என்ன, பிரிடிஷ் அரசாங்கம் என்ன இவைகள் நன்றாக நடைபெறுகிறது. குடியேற்ற நாட்டு அரசாங்கங்களும் நன்றாக நடைபெறுகின்றன. வெளியிலிருந்து சுமத்தப்படும் எந்த அரசியலும், முக்கியமாக ஒரு வகுப்பினர் அல்லது ஒரு கட்சியோ இதர பாகங்கள் மீது சுமத்தும் அரசியல் நிலைத்து நிற்காது.

## காந்தியின் நோக்கம்.

"இருந்தாலும், காந்தி, காங்கிரஸ் கட்சி மீது ஆதிக்கமுள்ள அவரது நண்பர்கள் ஆகியோரின் நோக்கம் இதுதான். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு நாசவேலை இயக்கத்தை ஆரம்பிக்க அவர்கள் தீர்மானித்தார்கள். மேலும் ஜனங்களுக்கு ராஜத்துவேஷத்தை உண்டாக்கி, உள்நாட்டுக் குழப்பத்தை அதிகரிக்கச் செய்து, இந்தியாவின் தற்காப்புக்குக் கெடுதல் ஏற்படும் விதமாய், இந்திய கவர்ன்மெண்டாரைத் தங்களிஷ்டப்படி நடக்கும்படியாக நிர்ப்பந்திக்க ஏற்பாடு செய்தார்கள். இக்கோரிக்கைக் கிணங்குவதினால் இந்தியாவின் யுத்தப் பிரயத்தனத்துக்கு மட்டுமல்லாமல், வருங்காலத்தில் இந்தியாவின் ஸ்வதந்திரம், ஒற்றுமை ஆகியவற்றின் அஸ்திவாரத்திற்குமே விபரீதம் விளையும்.

"மற்ற கட்சிகளை எல்லாம் அடக்கியாளும் ஒரு கட்சி இந்திய ஆதிக்கத்தைப் பெற நடத்தி வரும் தற்போதைய முயற்சியைக் குலைத்துவிடவேண்டும். இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்தைப்பற்றி கவனிப்பதற்குமுன் அராஜகத்தை ஒழிக்கவேண்டும். ஆனால் இந்தியா முன்னேற்றமடையும் என்பதில் எனக்கு சந்தேகமேயில்லை. அந்த எண்ணத்தின் பேரிலேயே இனிவரப்போகும் ஸ்வதந்திர இந்தியா மற்ற நாடுகளுடன் வைத்துக்கொள்ளவேண்டிய தொடர்பைப் பற்றி கவனிப்போம்.

## இந்தியாவின் பாதுகாப்பு, வருங்காலத்திற்கு வேண்டிய தயாரிப்புகள்.

"முக்கியமாக வரப்போகும் பிரச்னை இந்தியாவின் பாதுகாப்பு பிரச்னைதான். தோற்றுப்போன எதிரிகள் யுத்தத்திற்குப் பிறகு மறுபடியும் ஆக்கிரமிப்பு ஆரம்பிப்பதைத் தடுப்பதற்கு நேசதேசங்கள் என்ன விதமான ஏற்பாடுகள் செய்தபோதிலும், தேசிய பரஸ்பர திட்டத்தைக்கொண்டு உலகத்தில் அமைதி ஏற்படுமென்ற ஏமாற்றம் இனி நமக்கு ஏற்படமாட்டாது. ஆக்கிரமிப்பு உணர்ச்சியும், அதற்கு அனுகூலமாகத் தயாரிக்கப்பட்ட ஆயுத பலமும், பல விதங்களில் மறுபடியும் ஆக்கிரமிப்பு ஆரம்பிக்கும்படி தூண்டும். அந்த சமயத்தில் சமாதானத்தை விரும்பும் தேசத்தார்கள் உலகத்தில் சமாதானம் இருக்கவேண்டுமென்று விரும்பினால் மட்டில் போதாது. ஆக்கிரமிப்புக்கு வேண்டிய ஆயுத பலத்தையும் தயாரித்துக்கொள்ளவேண்டும். மேலும், அந்தத் தயாரிப்பும் எதிர்கால யுத்த முறைக்குத் தக்கவாறு இருக்கவேண்டும். ஆகாயச் சண்டை, தரைச் சண்டை, கடற்சண்டை எதுவானாலும் சரி, முக்கியமாக யந்திர சாதனங்கள்

அபரிமிதமாக இருக்கவேண்டும். ஆகையினல் தொழிற்சாலைகளை அதிகம் அபிவிருத்தி செய்துகொண்டே இருக்கவேண்டும். அதற்கு ஏராளமான செலவு நேரிடும். ஏனென்ருல் அதற்கு அஸ்திவாரம் அதிக மூலப்பொருள்கள் உற்பத்தியும், ஏராளமான நிதியும்தான். இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பெரிய வல்லரசுகள் கொண்டுவந்து குவிக்கும் ஏராளமான பாம்பர் விமானங்கள், டாங்கிகள், கப்பல்கள் இவைகளுக்கு முன்னல் சிறிய எளிய தேசங்கள் சமாளிக்க முடியவில்லை. நடுநிலைமை வகிக்கவும் முடியவில்லை. ஆகையால், வருங் காலத்தில் பெரிய வல்லரசு நாடுகளுடன் சேர்ந்தால்தான் அவைகள் சமாதானத்துடனும், பத்திரமாகவும் இருக்கமுடியும்.

“இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் இந்தியா எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்? இப்பொழுது இந்தியாவில் ஏராளமான பொருளாதாரங்கள், விளை, பொருள்கள், மனிதபலம் இருக்கின்றன. உள்நாட்டுச் சமாதானமும், நல்ல பகுத்தறிவுள்ள தலைவர்களும் இருப்பார்களானல் இந்தியா தனது சாதனங்களைக் கொண்டு ஒரு பெரிய வல்லரசுக்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளையும், ஆயுத சாதனங்களையும் செய்து கொள்ளமுடியும். இன்று இந்தியா அத்தகைய நிலைமையிலில்லை. தனிமையாக நின்று தனது தேசத்தைப் பாதுகாக்க யுத்தக் கப்பல்கள், விமானங்கள், டாங்கிகள் முதலியவற்றை உற்பத்தி செய்ய இன்னும் வெகுகாலத்திற்கு அதனல் முடியாது. இவ்விதம் இந்தியாவில் பாதுகாப்பு சாதனங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமானல் அங்கு சமாதானம் நிலவ வேண்டும். அதற்குள் பிறர் நாடுகளை ஆக்கிரமிக்காமல் பாதுகார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதற்கு இந்தியாவின் நலன்களுக்கு ஒத்தாற்போல் நலனுடைய மற்ற தேசங்களுடன் அது நிரந்தரமான உறவையோ, நட்பையோ வைத்துக்கொள்ளவேண்டும்.

“இதற்கிடையில் அது தன்னுடைய கைத்தொழில்களைப் பெருக்கவேண்டும். அதிக தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அவைகளைச் சரியானபடி நடத்துவதற்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளிகளையும், ஒரு சைனியத்தையும் சேகரிக்கவேண்டும். ஒரு தேசம் பல முடையதாக இருக்கவேண்டுமானல், தேசத்தின் அடிப்படையாகவுள்ள விவசாயிகளுக்குக் கல்வி போதிக்கவேண்டும். மேலும் அவர்களுக்கு எல்லாவித சௌகரியங்களையும் தரவேண்டும். இது மிகவும் சிரமமான காரியம். இந்தியாவின் எல்லைப்புறங்களுக்குள்ளேயே அநேகமாக எல்லா மூலப்பொருள்களும் கிடைக்கின்றன. அவைகளைக்கொண்டு இந்தியா நாளடைவில் தனிமையில் நின்று பொருளாதார பலத்தை அபிவிருத்தி செய்யக்கூடும்.

## வருங்காலத்தில் இந்தியாவின் வியாபார நிலைமை.

“தன் வெளிநாட்டு வியாபாரத்தை சாமர்த்தியமாக அபிவிருத்தி செய்வதாலும், அயல் நாட்டு முதலை விநியோகிப்பதாலும், வியாபாரம் அதிகமாக அபிவிருத்தி யடையும். அப்படியில்லாதபோனல் வியாபார அபிவிருத்தி மிகவும் குறைவாக இருக்கும். ஆனல் இத்துறையில் வெளிஉலகத்தில் பொருளாதாரத்தின் கொள்கை எப்படியிருக்கிறதோ அதைப் பொருத்திருக்கிறது இந்தியாவின் வியாபாரக் கொள்கையும். சென்ற நூற்ருண்டில் பல தேசங்கள் தங்கள் தங்கள் வர்த்தகங்களை மட்டில் கவனித்து வந்தன. ஆனல் அவ்வியாபாரம் உள்நாட்டு மக்களின் பொதுநன்மைக்காகவாவது அல்லது தேசத்தின் பாதுகாப்புக்காகவாவது கருதப்படவில்லை. ஆனல் யுத்தத்திற்குப் பிறகு அம்மாதிரியான எண்ணம் திரும்ப ஏற்படக்கூடாது. இப்பொழுதுள்ள உலகப்போக்கு முழுவதையும் பார்த்தால் தற்காப்பு முறையில் மட்டுமல்ல, பொதுமக்கள் நன்மையை முன்னிட்டும், ஒவ்வொரு காரியத்திலும் ஒழுங்கும், திட்டமும் ஏற்படுத்த வேண்டுமென்பது தெளிவாகும். அம்மாதிரி செய்வதால் வரவர ஒவ்வொரு தேசமும் மற்ருெரு தேசத்தின் வியாபாரத்தில் பங்கெடுத்துக்கொள்ள முற்படும். ஆனல் இனிமேல் தனிப்பட்ட நபர்கள் தங்கள் சுயநலத்தைக் கருதியோ, அல்லது அரசாங்கத்தார்களால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்கள் மூல்யமாக வர்த்தகம் நடந்தாலும், பொதுவாக தேசத்தின் நன்மையைக் கருதியே வர்த்தகம் நடைபெறும்.



## பல தேசங்களின் கூட்டுறவு.

“பல நாடுகளின் பொருளாதார ஒற்றுமை பல தேசத்தினரின் பரஸ்பர நலத்திற்காகத்தான் ஏற்பட்டிருக்கிறது. அது சுயநலம் பாராட்டி, தனிப்பட்ட நபர்களில் சிலர் ஒன்றுகூடி நடத்தும் நடவடிக்கையல்ல. பல தேசத்தினர் ஒன்று சேர்ந்து பொதுவாகயுள்ள பாதுகாப்புப் பிரச்னைக்கு வேண்டிய அவசியமானவைகளைச் செய்து முடிப்பார்கள். வருங்காலத்தில் அரசாங்கங்கள் அவைகளிலுள்ள பிரஜைகளின் நன்மையைப்பற்றி கவனியாமல் எதிரிகள் தங்களுடன் யுத்தத்திற்கு இறங்கும் வரையில் அவர்களுக்கு யுத்தப் பொருள்களை ஸப்ளை செய்யப்பட மாட்டா. நாம் இதற்குமுன் ஜெர்மனிக்கு வேண்டிய பொருள்களை ஸப்ளை செய்தோம். அதேபோல் அமெரிக்கர்களும் ஜப்பானுக்கு உதவி செய்து வந்தது.

“ஆகையால் இனிமேல் தற்காப்புக்காக பல அரசாங்கங்கள் ஒன்று சேருவதற்கு அவசியம் ஏற்படும். அதிலிருந்து சமாதான காலத்திலும் சரி, யுத்த காலத்திலும் சரி, தங்களின் பொது நன்மைக்காக பொருளாதார ஒற்றுமையும் ஏற்பட்டு விடும். ஒன்று சேருவது என்ற மனேபாவம் அதிகரிக்கும். ஆனல் தனிப்பட்டும், நடுநிலைமையாகவும் இருக்கும் தேசங்களுக்கு சமாதான காலத்திலும் சரி, யுத்த காலத்திலும் சரி, பிரதிகூலம்தான் ஏற்படும். இந்திய அரசியல் நிபுணர்கள் இந்தியாவின் அக்கரையைக் கவனித்தால் தற்காப்புக்காகவும், பொருள் நிர்வாக சாதகங்களையடையவும் வெளிநாடுகளுடன் நட்பு வைத்திருப்பதை நீடித்திருக்கச்செய்ய இயற்கையாகவே விரும்புவார்கள். ஆகையால் இந்தியா எந்த வல்லரசு கூட்டத்துடன் உறவு வைத்துக்கொள்ளவேண்டும்?

## இந்தியாவின் இயற்கை நிலை, அதன் தற்காப்பு.

“இந்தியாவின் இயற்கை நிலைமை எவ்வாறு அதன் தற்காப்பையும், வர்த்தகத்தையும் பாதிக்குமென்பதைப்பற்றி கவனிப்பதோடு, இந்தியாவின் ஜாதி வித்தியாசங்களையும், சரித்திர பூர்வமாய் இந்தியா பிறநாடுகளுடன் ஏற்பட்ட உறவுகளையும்பற்றி கவனிக்கவேண்டும். பூகோளப்படத்தைப் பார்த்தால் இந்தியா ஒரு சிறு கண்டம்போல் தோன்றும். அது ஆசியா கண்டத்தில் தென் பாகத்தில் இருக்கிறது. ஐரோப்பா மேற்கு பாகத்திலிருக்கிறது. இந்துமகா சமுத்திரத்தைச் சுற்றிலுமுள்ள நாடுகளுக்கு இந்தியா நடுநாயகமாக விளங்குகிறது. அதற்கு வடக்குப் பாகத்தில் ஆசியா இருக்கிறது. தெற்குப் பக்கத்தில் தெற்கு சமுத்திரம் இருக்கிறது.

“கடல் மார்க்கமாக போக்குவரத்து ஏற்பட்ட காலமுதல் வியாபார சம்பந்தமாகவாவது, தற்காப்பு விஷயத்திலாகவாவது இந்தியா ஆசியாவைவிட மற்ற நாடுகளுடன் அதிகமாக சம்பந்தம் வைத்திருக்கிறது. இந்தியாவிற்கு வடக்கே ஹிமாலயத்தொடர் இருப்பதால் ஆசியாவிலுள்ள மற்ற நாடுகளுடன் வியாபாரத்திற்கும், மற்ற நாடுகள் இந்தியாவைப் படையெடுப்பதற்கும் முடியாமலிருந்தது. இந்தியாவின் சமுத்திரக்கரை வெகுதூரம் நீண்டிருப்பதால் வர்த்தகத்திற்கும், படையெடுப்புக்கும் எளிதாகவும், ஆவல் உண்டாக்கக் கூடியதாகவும் இருக்கிறது. ஆகையினல் இந்தியாவுக்குச் சொந்தமான பிரதேசங்களையும், வர்த்தகத்தையும் பாதுகார்க்கவேண்டு மென்ருல் இந்து மகா சமுத்திரத்திலும், அதற்கு வாசற்படிகளாகயிருக்கும் கேப்டவுன், ஸூயஸ், சிங்கப்பூர், டார்வின் இந்த இடங்களிலும் எந்த தேசம் ஆதிக்கம் பெற்றிருக்கிறதோ, அந்த தேசத்துடன் இந்தியா சிநேகம் வைத்துக்கொள்ளவேண்டும்.

## இந்தியா மகத்தான ஸ்தானத்தை வகிக்கும்.

“வியாபாரத்திற்கும், பாதுகாப்புக்கும், பண்டைக்காலத்தில் உலகத்திற்கு மத்தியதரைக்கடல் எப்படியோ அப்படி இந்து மகா சமுத்திரம் இப்பொழுது ஆகலாம். அதைச் சுற்றியுள்ள எல்லா தேசங்களிடையேயும் இயற்கையான ஒரு தொடர்பு ஏற்படும். இந்த அபிவிருத்தியில் இந்தியா ஒரு மகத்தான ஸ்தானத்தை வகிக்கும். இந்த யுத்தத்தின் நடுவில் டெல்ஹியின் கிழக்குப் பகுதியிலுள்ள

நாடுகள் சேர்ந்து மகாநாடு கூடி, யுத்தப் பொருள்கள் தயாரிப்பதில் கூட்டுறவு செய்து கொள்வதைப்பற்றி யோசிக்கப்படும். இது வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பெரிய விஷயங்களுக்கு அறிகுறியாக இருக்கிறது.

“ஆனால், ஐரோப்பா, தென் ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து இந்த தேசங்களுடன் சிநேகமாயிருப்பதால் இந்தியாவுக்கு என்ன பயனிருக்கிறதென்று கேட்கலாம். இந்தியா ஆசியாவின் ஒரு பாகம். வருங்காலத்தில் “ஆசியா ஆசியர்களுக்கே” என்று சொல்வது சகஜமாக இருக்கலாம். ஆகையினால் சீனாவுடனாவது, ஜப்பானுடனாவது இந்தியா, சிநேகம் வைத்துக்கொள்வதுதான் நல்லது என்று கேட்கலாம். ஆனால் அம்மாதிரி செய்வது பெரிய பிசகென்று நான் நம்புகிறேன். ஏனென்றால் இந்தியரின் கலைகள், பழக்க வழக்கங்கள் வேறு. ஆசியா கண்டத்தினரின் பழக்க வழக்கங்களும் வேறு. அதனால் இந்தியா ஆசியா நாடுகளின் தன்மையை ஒத்திருக்கிறது என்பதற்கில்லை. பண்டைகாலத்தில் இந்தியா எந்த நாடுகளுடன் நட்புக்கொண்டிருந்தது என்பதை சரித்திரப் பூர்வமாகப் பார்த்தால் அரசியல் சம்பந்தங்களிலும், வர்த்தகத்திலும், அலெக்ஸாண்டர் காலத்திலிருந்தும், முகலாயர்கள் இந்தியாவிற்குள் படையெடுத்தது முதல் அநேக நூற்றாண்டுகளிலும், பிற்பட்டு பிரிடிஷ் ஆட்சிக்குட்பட்ட சென்ற இரண்டு நூற்றாண்டுகளிலும், ஐரோப்பாவுடனும், மத்தியக்கிழக்குப் பிரதேசங்களுடனும் தான் இந்தியா நட்பு வைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் தூரக்கிழக்கிலுள்ள மங்கோலியர்களின் தோற்றம் வேறு. அவர்களின் தேச சரித்திரமும் அடிப்படையான மாறுபாடு உள்ளது. அப்பேற்பட்ட பிரதேசங்களுடன் இந்தியாவுக்கு நெருக்கம் இல்லை.

## இந்தியாவும், பிரிடனும் நெருங்கின பழக்கம்.

இந்தியாவில் சட்ட சம்பந்தமாகவும், அரசியல் நோக்கங்களிலும் பிரிடிஷாரின் கொள்கைகள்தான் பிரதி பலிக்கின்றன. இந்தியாவில் பல பாஷைகள் வழங்கி வருவதல் இந்தியர்கள் ஒருவருக்கொருவர் பேச்சுப் பழக்கம் வைத்துக் கொள்வதற்கு இங்கிலீஷைப் பொது பாஷையாக உபயோகிக்கிறார்கள். இவை எல்லாம் பிரிடிஷ் நாடுகளுடன் இந்தியாவும் சேர்ந்து கொள்வதற்கு சுலபமாக இருக்கிறது. இந்தியர்களுக்கும் இத்தகைய சேர்மானம் இயற்கையாகவும் இருக்கிறது. இத்துடன் தற்காப்பிலும், அரசியல் நடத்துவதிலும் பிரிடிஷ் அரசாங்கத்தாருக்கும் இந்தியாவுக்குமுள்ள சம்பந்தத்தை விலக்கி விடுவதினால் அநேக கஷ்டங்கள் நேரிடலாம். அதற்காக சாவதானத்தையும், சாதகத்தையும், கவனித்தால் இந்தியா தனித்து நிற்கக்கூடிய நிலைமையை அடையக்கூடிய காலத்திற்கு முன்னதாக பிரிடிஷ் சாம்ராஜ்யத்துடன் ஸ்வதந்திரமுள்ள கூட்டாளியாக பாந்தவ்யம் வைத்துக்கொள்வதே மேலாகயிருக்கும்.

உலகத்தில் இத்தகைய கூட்டுறவைப்போல் அக்கூட்டில் சேர்ந்த தேசங்களுக்கு அதிகப் பொறுப்பு இல்லாமலும், ஆனால் நாளடைவில் அந்த தேசங்களுக்கு அதிக பயன்தரக்கூடிய விதமாகவும் நடந்துவரும் வேறு எந்தக் கூட்டுறவும் இல்லை.

இவ்வளவு சொன்னதும், இந்தியாவின் நன்மைகளுக்காகவே, வருங்காலத்தில் என்ன நேரிடுமென்று உலக இயல்பை ஒத்துப் பேசியிருக்கிறேன். இக்கூட்டுறவினால் பிரிடனுக்கு என்ன சாதகங்களிருக்குமென்று நீங்கள் கேட்கலாம். பிரிடிஷ் தீவுகளை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு பார்ப்போமானால் அதற்கு பதில் சொல்லுவது கடினமாகயிருக்கும். இந்த அபாய வேளையில் இந்தியாவிற்கு நாம் உதவிசெய்யவேண்டியது நமது கடமை. நமது அயல்நாட்டுக் கொள்கையிலும் அதிக மாறுதல்கள் ஏற்படும். நமக்குக் கிடைக்கும் இந்திய ராணுவ உதவியானது நாம் செய்வதற்குமேல் அதிகப் பிரயோஜனத்தைக் கொடுக்காது. இந்தியா நமக்கு வர்த்தகத்தில் அதிக சௌகரியங்களைச் செய்வதினால், நாம் இந்தியாவைப் பாதுகாப்பதில் ஏற்படும் நஷ்டங்களுக்கு அவை அதிக பிரதிப் பிரயோஜனம்ாகமாட்டாது.



குறுகிய நோக்கத்துடன் பார்த்தால் இந்தியாவுடன் நாம் சேர்ந்திருப்பது நமக்கு அதிக பலக்குறைவுதான் ஏற்படும். அதனால் இந்தியாவை விட்டுவிடுவதற்கு நாம் எண்ணினால் அது ஒரு தப்பிதமாகமாட்டாது.

“ஆனால் இந்த விஷயத்தைத் தீர்க்கதிருஷ்டியுடன் பார்ப்போமானால் பிரிடிஷாருக்குச் சொந்தமான மத்தியக் கிழக்குப் பிரதேசங்களுக்கும், தெற்கு அண்டகோளத்திலுள்ள நாடுகளுக்கும் இந்தியாவின் ஒத்தாசை அவசியமாக இருக்கும். ஆகையினால் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் நான் சொல்லும் பிரிடிஷ் இந்தியக் கூட்டுறவில் பிரிடனால் இந்தியாவுக்கு எவ்வளவு சாதகமிருக்கிறதோ அவ்வளவு சாதகம் பிரிடனுக்கும் இந்தியாவினால் ஏற்படக்கூடும்.

## இந்தியாவும், பிரிடிஷ் சாம்ராஜ்யமும்; பாந்தவ்யத்தை வைத்துக் கொள்வதற்கான காரணம்.

ஆகையினால் இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால் பிரிடிஷ் சாம்ராஜ்யமெல்லாம் ஒன்று சேர்ந்திருப்பது அவசியம் தான். இந்தியாவும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்துடன் சேர்ந்திருந்தால் அதற்கு எவ்வளவு சாதகம் உண்டோ அவ்வளவு சாதகம் பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்கும் உண்டு.

இது சமயம் மிகவும் முக்கியமான பிரச்னையைப்பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யம் நீடித்திருப்பதிலும், அபிவிருத்தியடைவதிலும், உண்மையில் இங்கிலாந்திற்காகவாவது அல்லது உலகத்திற்காகவாவது ஏதாவது, பயனிருக்கிறதா? அந்த சாம்ராஜ்யத்திலுள்ள தேசங்களுக்கு சுயநலத்தைக் கருதி அதில் சேர்ந்தவர்களுக்கு பரஸ்பர ஐக்கிய பத்தியமும், சகாயமும் ஏற்பட இந்த சாம்ராஜ்யம் ஏற்பட்டிருக்கிறதா? அல்லது மனித வர்க்கத்திற்கே அதிக பிரயோஜனமளிக்கக்கூடியதா ?. தேசீய வாழ்க்கையில் ஒவ்வொரு வகையில் தங்கள் தங்கள் ஆதிக்கத்தையும், தங்கள் தங்கள் தேசீய பழக்க வழக்கங்களையும் பரித்தியாகம் செய்யாமல் ஸ்வதந்திர தேசத்தார்கள் முக்கியமான அரசியல் விஷயங்களில் ஒற்றுமையடைய இது பரீக்ஷார்த்தமாக ஏற்பட்டிருக்கிறது.

இத்தகைய ஒற்றுமை பெரிய அரசாங்கங்களை அடிமைப்படுத்தி ஏற்படவில்லை. இந்தக் கூட்டுறவில் சேர்ந்த தனிப்பட்ட தேசத்தார்கள் தங்கள் ஸ்வதந்திரத்தைப் பரித்தியாகம் செய்யவேண்டிய கட்டுப்பாடுமில்லை. ஆனால் இது பொதுவான நோக்கங்களைக்கொண்டு பரஸ்பர நம்பிக்கையின் பேரில் ஏற்பட்டிருக்கிறது. அதை நாம் முன்னுக்குக் கொண்டுவரப் பாடுபடவேண்டும். பிரதேசங்கள் நம்மைப் பார்த்து கற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும். மேலும் இப்பொழுது உலகத்தில் அரசியல் விஷயத்திலும், பொருளாதாரத்திலும் அராஜகம் வரவர அதிகரித்து வருவதினால் தேசங்கள் ஒன்று சேருவது அவசியமாக இருக்கிறது.

உலகத்தில் அடுத்துவரும் எதிர்காலத்தில் இம்மாதிரி ஒரு மனப்பான்மையோடு பல ஸ்வதந்திர தேசத்தார்கள் ஒன்று சேர்வது என்பது உலகத்திலேயே ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பிக்கிற மாதிரி இருக்கிறது. இத்தகைய கூட்டுறவில் ஸ்வதந்திரமும், பொறுப்பும் சமமாகக்கொண்டிருக்கும் தேசத்தார்களும், வெகு தூரத்திற்கப்பாலுள்ள இந்திய மக்களும், பிரிடிஷாரும், பிரிடிஷ் குடியேற்ற நாடுகளிலுள்ள ஐரோப்பியர்களும், ஜாதி, மதம், நிறம், வித்தியாசம் பாராட்டாமல் ஒன்று சேர்ந்து கொள்வார்களானால் மனிதவர்க்கமே ஒன்று சேர்ந்து உலக சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு இது அடிப்படையல்லவா? இதுதான் உலகத்தார்களின் கடைசி விருப்பம். ஆனால் வேறு எந்தக் கட்டாய திட்டத்தினாலும் இம்மாதிரி உலக ஐக்கியம் ஏற்பட முடியாது.

---

# வார யுத்தச் செய்திகள்.

## 3—10—42-லிருந்து 9—10—42-வரை.

**ருஷ்யா.**—ஸ்டாலின்கிராட்டிலும் அதன் சுற்றுப்புறத்திலும் ஒரு முடிவும் ஏற்படாமல் சரித்திரத்திலேயே பெரிய யுத்தம் என்று சொல்லக்கூடிய கடும் போர் நடைபெற்று வருகிறது. ஸ்டாலின்கிராட் பட்டணத்திற்குள் போவதென்றால் எதிரிகளுக்கு யமலோகத்திற்குப் போவதைப் போல் இருக்கிறது. இரண்டு வட்டமாகச் சண்டை நடைபெறுகிறது. ஓரிடத்தில் வடமேற்குப் பக்கத்தில் ஜெர்மானியர் ஒரு வாயிலை அடைக்க வீணாக முற்படுகின்றனர். மற்றொரு பக்கத்தில் ருஷ்யர்கள் நகருக்கு வடக்கிலும், தெற்கிலும் இருந்துகொண்டு பின்ஸர் தாக்குதலைச் செய்து வருகின்றனர். கிராஸ் னோராமெயிஸ்கிலிருந்து செய்யப்படும் ருஷ்ய முன்னேற்றம் வெற்றிகரமாக இருக்கிறது. வடக்கே ருஷ்யரது முன்னேற்றம் பெரும் தடைக்குள்ளாயிருக்கிறது. சில சமயங்களில் 10 கெஜங்களுக்குமேல் முன்னேற்றம் செய்யப்படவில்லை. சமவெளிகளில் ஜெர்மானியர் சற்று முன்னேறுவதும் உடனே விரட்டப்படுவதாயும் இருக்கிறது. அங்கிருக்கும் பயிர் பச்சைகளுக்கு எண்ணெய் ஊற்றி நெருப்புவைக்கின்றனர். இரவு காலங்களில் பாரசூட்டுகளிலிருந்து வெளிச்சத்தை உண்டாக்கிப் பிறகு தாக்குகின்றனர். இவைகளுக்கு இடையில் ருஷ்யர்கள் மோட்டார் படைகளை உபயோகித்துக்கொண்டு வெகு வேகமாக முன்னேறுகின்றனர்.

வடமேற்குப் புறங்களில்தான் கடுமையான சண்டை நடைபெறுகிறது. ஜெர்ஜுயிஸ்கி தொழிற்சாலைப் பிரதேசங்களிலும், ரைகாவ், ஸ்டாட்டகஸ் தொழிற்சாலைப் பிரதேசங்களிலும் தங்களுடைய முன்னேற்றம் பலிக்காததால் அமைதியான ஜனங்களையும், ஆஸ்பத்திரிகளையும் தாக்குகின்றனர். நூற்றுக்கணக்கான ஸ்திரீகளும் குழந்தைகளும் இறந்திருக்கின்றனர். இதற்குப் பிரதியாக தொழிலாளிகள் வீடுகளின் கூரைகளிலிருந்து ஆயுதங்களைத் தூக்கி எதிரி பேரில் எறிகின்றனர்.

மாஸ்டக் பிரதேசத்தில் ஜெர்மானியர் சங்கிலித் தாக்குதலைச் செய்கின்றனர். கிராஸ்னி எண்ணெய் பிரதேசத்தில் சண்டை முத்தி தெருக்களில் நடைபெறுகிறது. ஒரு குறுகிய பிரதேசத்தின் வழியாக ஜெர்மானியர் முன்னேறுவதை ருஷ்யர்கள் தடுத்து வருகின்றனர்.

நோவோரோஸிஸ்கிற்குத் தென்கிழக்கில் ருஷ்யத் துருப்புகள் நாஸிகளை முன்னேற முடியாமல் செய்கின்றனர்.

மத்திய முனையில் ருஷ்யர்கள் வாரனேஷில் வெற்றி அடைந்திருக்கின்றனர்

லெனின்கிராட் முனையில் சண்டை வலுத்து வருகிறது.

**நியூ கினி.**—ஜப்பானியர் பின்வாங்கிக்கொண்டேதான் போகின்றனர். ஆஸ்திரேலிய தரைப்படை அயோரிபய்வாவை பிடித்துக்கொண்டு நால்ரோ, மினூரி, காகி, 'மியோலா முதலியவைகளையும் பிடித்து கொக்கோடா இடைவெளியை நோக்கி முன்னேறுகின்றனர். இதில் ஒரு இடத்தையாவது பிடிக்கவேண்டுமென்று ஜப்பானியர் முயற்சிக்கவில்லை. வெய்ரோபி பாலத்தில் பல சண்டைகள் நிகழ்ந்தன. அதை உடைக்க சிறு டாங்கிகளையும், லேசான குண்டுகளையும் போடுகின்றனர்.

**ஸாலமன்.**—தரை, கடல், விமானம் மூலமாக ஜப்பானியர் அமெரிக்க நிலயங்களைத்தாக்கி வருகின்றனர். இராக்காலங்களிலும் இறங்கி வருகின்றனர். டெனரு நதி முகத்வாரத்தில் ஜப்பானியர் அழிக்கப்பட்டனர். அக்டோபர் 3, 4 தேதிகளில் ஜப்பானிய க்ரூயிஸரும், பல நாசகாரிகளும் அழிக்கப்பட்டன.

**அலூஷியன்.**—ஸெப்டம்பர் 27 அமெரிக்க லிபரேடர் விமானங்கள் கிஸ்காவிலுள்ள எதிரிக் கப்பல்களும், கடற்கரையிலுள்ள யந்திரங்களும் தாக்கப்பட்டன.



அதே தினத்தில் அட்டு (Attu)விற்கு அருகில் எதிரிப் போக்குவரத்துகள் தாக்கப்பட்டன. அண்டிரினோ தீவுக்கூட்டத்தில் சில இடங்களை அமெரிக்கத் துருப்புகள் வியாபித்துக்கொண்டன.

**சைனா.**—லுங்லிங், டெங்சுங், ஹுவானியங் முதலிய இடங்களின் மேற்கு எல்லைப்புறத்தில் ஜப்பானியப் படைகள் நிறுத்தப்பட்டிருந்தாலும், யூனானைத் தாக்குவதாகத் தெரியவில்லை. கிழக்கில் கின்ஹுவா, லான்சி, டெங்யாங் முதலியவைகள் சீனர்களால் தாக்கப்பட்டன.

**பர்மா.**—ஸெப்டம்பர் 27உ இந்திய தளங்களில் வைக்கப்பட்டிருக்கும் விமானங்கள் (யூனான்) டிங்கியா, லாய்விங் விமான தளங்களையும் கதா (Katha) ரயில் ரோடு பாதைகளையும் தாக்கின. மற்றொன்று மியிட்கியினாவையும் தாக்கின. ஸெப்டம்பர் 28 மியிட்கினா பிரதேசத்தில் வாஷவ்ங்கும் அதற்கு அடுத்த இரண்டு கிராமங்களும் தாக்கப்பட்டன.

**மெடகாஸ்கர்.**—மஜுங்காவிலிருந்து முன்னேறிய பிரிடிஷ் துருப்புகள் பெஹங்கி, அன்ட்ஸிராபி முதலியவைகளைப் பிடித்து 23 நாட்களில் 460 மைல் தூரத்தைக் கடந்திருக்கின்றன. டமடாவிலிருந்து முன்னேறிய மற்றொரு படையும் இத்துடன் சேர்ந்து கொண்டது.

பிரிடிஷ் கப்பற்படை தென் ஆபிரிக்கக்கப்பல், விமானப்படையுடன் ஒத்துழைத்து இரண்டு விஷிக் கப்பல்களை தாக்கின. மார்ஷல் கலியண்டு, அட்மிரல் பியரி என்ற இந்த இரண்டு கப்பல்களில் அட்மிரல் பியரி தானாகவே மூழ்கியது.

**எகிப்து.**—எல் அலமீன் போர்முனையில் எட்டாவது படை அச்சு நாட்டு நிலயங்களைத் தாக்கி, ஆக்கிரமித்துக்கொண்டது. ருவேயிஸட் பிரதேசத்திற்கு தென்மேற்கில் அச்சு நாட்டு நிலயம் தாக்கப்பட்டது. ஜெனரல் அலெக்ஸாண்டர் படைத்தலைவரான பிறகு இதுவே முதல் சண்டையாகும்.

**பலவகைப்பட்டவை.**—ஸெப்டம்பர் 30உ டெர்ஷிலிங் தீவிற்கு அருகில் ஆறு லைனர்க் கப்பல் கொண்ட எதிரியின் துணைக்கப்பல் கூட்டம் ஒன்று பிரிடிஷ் கடற்கரைப் படையால் தாக்கப்பட்டது.

2. ஐந்து வாரங்களில் 15,000 செட்னிக் என்ற யுகோஸ்லாவிய கலகக்காரப் படைகள், 60,000 அச்சு நாட்டுப் படைகளுடன் ஈடுபட்டன. 6,000 இதாலிய கவசமணிந்த படைகள் கொல்லப்பட்டன. 9,000 பேர் காய மடைந்தனர்.

3. 1,00,000 ஜெர்மானியரை யூகோஸ்லாவியாவிலுள்ள ஸ்லாவனியாவில் உட்புகுத்த ஜெர்மனி ஆரம்பித்திருக்கிறது. மெயின், கார்ல்ஸ் ரூஹி, இரண்டையும் பிரிடிஷ் விமானப்படை தாக்கியது.

4. பிரான்ஸில் உள்ள தேசாபிமான இயக்கத்தை அடக்க லவால் நாஸிகளைப்போல் தனிப்படையைத் தயாரித்து வருகிறான்.

5. ஜனாதிபதியின் தனது பிரதிநிதியான மிஸ்டர் வெண்டல் வில்கி சுங்கிங்கிற்கு வந்து சேர்ந்தார். வரும் வழியில் ஜப்பானியப் பைடர் விமானங்கள் தடுக்க வந்ததையும் தாக்காட்டிவிட்டு வந்து சேர்ந்தார்.

அவரை வரவேற்கும்போது சயாங் கை-ஷேக் பின்வருமாறு சொன்னார். 'சைனாவில் ஜப்பானியர் வேணுமென்று செய்துவரும் அட்டூழியத்தை இவர் நேரில் காண்பார். நாம் தைரியம் பெற்றிருப்பதையும், நமது தீர்மானத்தையும் வெற்றிபெறவேண்டுமென்று நினைத்திருப்பதையும் அறிந்து கொள்ளுவார். இருக்கும் சிரமங்களுக்கு இடையில் நாம் பாடுபட்டு வருவதையும், சீர்திருத்தங்கள் செய்து வருவதையும், சீன சைனியத்தினரின் சண்டை திறமையும் கண்டு கொள்ளுவார்.'

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**28—9—42.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**எகிப்து (Egypt), லிபியா (Libya).**

| | | |
|---|---|---|
| கப்பல்கள், துறைமுகங்கள்.— டொப்ருக் (Tobruk). | பெருந்தீக்கள் கிளம்பின. | |
| விரோதியின் முன்னணிப் பிரதேசங்கள்.— எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில். | | |
| விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | |

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

| | |
|---|---|
| இதாலிக்குச் சொந்தமான வியாபாரக் கப்பல்கள்.—ஐயோனியன் (Ionian) கடல். | கரையோரம் சேர்க்கப் பட்டது. |
| விரோதியின் நாசகாரிக் கப்பல்.— ஸ்பார்டிவின்டோ (Spartivento) முனைக்கருகாமையில். | |

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும்.

**சைனு (China).**

ஜப்பானியக் கட்டடங்கள்.—வாண்டிங் (Wanting), டெங்சுங் (Tengchung).

**நியூ கினி (New Guinea).**

விரோதி ஸ்தானங்கள்.—ஓவன் ஸ்டான்லி (Owen Stanley) பிரதேசத்தில்.

வெய்ரோபி (Wairopi) பாலம்.— கொக்கோடா (Kokoda).

சைனியங்களை அணிவகுக்குமிடம்.—லே (Lae).

விரோதியின் போக்குவரத்து மார்க்கங்கள், ஸப்ளைக் கிடங்குகள், குடிசைகள்.—பூனு (Buna).

**தூரக்கிழக்கு (Far East)—ஸாலமன் (Solomons) தீவுகள்.**

விமான நிலயம்.—பூயின் (Buin).

**29—9—42.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.**

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**29—9—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

**எகிப்து (Egypt), லிபியா (Libya).**

மோட்டார் போக்குவரத்து.— ஸிடிபராணி (Sidi Barani)யிலிருந்து மெர்ஸாமாட்ரு (Mersa Matruh) வரை.

**ஸிஸிலி (Sicily).**

எம்ப்படோல் (Embedocle) துறைமுகம்.

**கிரீட் (Crete).**

கேனியா (Canea), ஸ்டொவிரிகுடா.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள்.—கிழக்குப் போர்முனை எங்கும்.

ஜெர்மன் புதிய துருப்புகள்.—டான் (Don) நதியில்.

**நியூ கினி (New Guinea).**

விமான உதவி.—ஓவன் ஸ்டான்லி (Owen Stanley) பிரதேசத்தில் முன்னேறிச் செல்லும் ஆஸ்திரேலியத் துருப்புகளுக்கு.

விரோதிக்குச் சொந்தமான பின்புறத்திலுள்ள ஸ்தானங்கள்.— மினாரி (Menari)க் கருகாமையில்.

விரோதி சமுத்திரக்கரையிலுள்ள கட்டடங்கள், படகுகள், விமான நிலயம்.— பூனு (Buna).

ஒரு விமான நிலயம்.—ஸலாமுவா (Salamaua).

**30—9—42.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.**

இரவில்.—கண்ணிவெடிகள் போடுவது.— விரோதி சமுத்திரக்கரையோரங்களில்.

**எகிப்து (Egypt), லிபியா (Libya).**

விமான மிறங்குமிடங்கள்.— ஸிடிஹேனிஷ் (Sidi Haneish), எல்டாபா (El Daba) பிரதேசங்கள்.

கப்பல்கள், துறைமுகம்.— டொப்ருக் (Tobruk).

லக்ஷியங்கள்.— ஸொலும் (Sollum) பிரதேசத்தில்.

பூகா (Fuka).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை நெடுகிலும்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 30—9—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு-பர்மா (Burma).** | | | |
| | விரோதி விமான நிலயத்திலுள்ள கட்டடங்கள், துறைமுகத்திலுள்ள கப்பல்கள்.—ஆக்கியாப் (Akyab). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸப்ளை மார்க்கங்கள்.—மினேரி (Menari) பிரதேசத்தில். | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| | பாம்பர் விமான நிலயங்கள்.—பூனு (Buna). | | | |
| | வெய்ரோபி (Wairopi) பாலம்.—கொக்கோடா (Kokoda). | | | |
| | ஸப்ளை கிடங்குகள்.—கொக்கோடா (Kokoda) பிரதேசத்தில். | | | |
| | **தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமான நிலயம்.—பூயின் (Buin). | பலத்த சேதம். | | |
| | விமான நிலயங்கள், கிட்டங்கிகள்.—பூகா (Buka). | | | |
| 1—10—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ரசாயனசாலை—ஸ்லூயிஸ் (Sluis), ஹாலந்தில் (Holland). | | | |
| | எண்ணெய் சுத்தம் செய்யுமிடம்.—கென்ட் (Ghent)க்கருகாமையில். | | நஷ்டமில்லை. | |
| | சாயந்திரம்.—விமான எதிர்ப்புகள்—லெஹாவரிலிருந்து, நியூபோர்ட்வரை (Lehavre to Nieuport). | | | |
| | விமான பாகங்களைத் தயாரிக்கும் போடஸ் (Potez) தொழிற்சாலை.—ஹீலட் (Heaulte). | | 6 விமானங்கள். | 18 விமானங்கள். |
| | **எகிப்து (Egypt), லிபியா (Libya).** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | நஷ்டமில்லை. | 6 விமானங்கள். |
| | ஸப்ளைக் கிடங்குகள், போக்குவரத்துகள்.—புக்புக் (Buq Buq) லிருந்து ஸிடி பரானி (SidiBarani). | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—ஸிடிஹேனிஷ் (Sidihaneish) பிரதேசம். | ஒரு எண்ணெய்க் கப்பல் தீப் பற்றியது. | | |
| | விரோதிக் கப்பல்கள்.—டெர்னு (Derna). | | | 4 விமானங்கள். |
| | துணைக்கப்பல்களுடன் கூடிய சாமான் கப்பல்.—டொப்ருச் (Tobruk) குக்கு வடக்கே. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—10—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **கிரீஸ் (Greece).** | | | |
| | விமானதளம்.—கிரீஸி (Greece)ல். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை எங்கும். | | | |
| | ஜெர்மானியர் ஸ்தானங்கள்.—ஸ்டாலின் கிராட் (Stalingrad) பிரதேசத்தில். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | வெய்ரோபி (Wairopi) பாலம்.—கொக்கோடா (Kokoda) பிரதேசத்தில். | | | |
| | படகுகள், ஸப்ளைக் கிடங்குகள்.—பூனு (Buna) பிரதேசத்தில். | | | |
| | ஸப்ளைக்குச் சாதகமான கட்டடங்கள், போக்குவரத்துகள்.—ஸலாமுவா (Salamaua). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | நாசகாரிகள்.—நியூ ஜார்ஜியா (New Georgia) கூட்டத்திற்குத் தெற்கே. | | | |
| | ஒரு சிறு படகு.—கிரீன்விச் (Greenwich) தீவுகளில். | | | |
| 2—10—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—இரும்பு, எஃகு தொழிற்சாலைகள்—லீஜ் (Liege) ஜாக்கருகாமையில். | | நஷ்டமில்லை. | |
| | இரவில்.—ராணுவக் கட்டடங்கள், தொழிற்சாலைகள் ரைன்லாந்து, (Rhineland). | | | |
| | **எகிப்து (Egypt)— லிபியா (Liby ).** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 5 விமானங்கள். |
| | விரோதி ஸப்ளைப் போக்குவரத்து லாரிகள்—யுத்தப் பிரதேசத்திற்குப் பின்புறம். | | | |
| | விமான நிலயங்கள்.—எல்டாபா (El Daba) பிரதேசம். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசம் பூராவிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|

**2—10—42.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

**பர்மா (Burma).**

சைனிய வாஸஸ்தலங்கள்.—மீக்டிலா (Meiktila) மாண்டலேக்குத் தெற்கே.

ஷீயோ (Shebo) வில் பட்டாளமிருக்குமிடம்.—மாண்டலேக்கு வடமேற்கே.

**நியூ கினி (New Guinea).**

விரோதி ஸப்ளை மார்க்கங்கள்.—ஒவன் ஸ்டான்லி (Owen Stanley) பிரதேசத்தில்.

வெய்ரோபி (Wairopi) பாலம்.—கொக்கோடா (Kokoda) பிரதேசம்.

**நியூ பிரிடன் (New Britain).**

கப்பல்கள்.—ராபால் (Rabaul) துறைமுகம்.

ஒரு ஜப்பானிய க்ரூயிஸர்.—ராபால் (Rabaul).

**ஸாலமன் (Solomons) தீவுகள்.**

ஒரு ஜப்பானிய க்ரூயிஸர்.—பூயின் (Buin).

**3—10—42.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.**

பகலில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

இரவில்.—சுரங்கவேடிகள் போடுவது.—விரோதி சமுத்திரக்கரைகளில்.

**லிபியா (Libya).**

விமான எதிர்ப்புகள்.—யுத்தப் பிரதேசத்தில்.

ஸப்ளைக் கிடங்குகள்.—விரோதி சைனியங்களுக்குப் பின்னால்.

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

தெற்கு நோக்கிச்செல்லும் துணையுடன் கூடிய சாமான் கப்பல்.—ஐயோனியன் (Ionian) கடல்.

**கிரீஸ் (Greece).**

நவாரினோ (Navarino) விரிகுடா.



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—10—42.** (சனிக்கிழமை),—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும். | செப்டம்பர் 27 முதல் அக்டோபர் முடிய உள்ள வாரத்தில். | 137 விமானங்கள். | 257 விமானங்கள். |

**தூரக்கிழக்கு (Far East).**

விமான தளங்கள்.—பூயின் (Buin).

விமான நிலயம், வெடிமருந்து கிடங்கு.—பூகா (Buka).

**நியூ கினி (New Guinea).**

வெய்ரோபி (Wairopi) பாலம்.—கொக்கோடா (Kokoda) பிரதேசத்தில்.

ஜப்பானிய ஸப்ளை மார்க்கங்கள்.—மினாரி (Menari).

**4—10—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.**

பகலில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

இரவில்.—வேவு பார்த்தல்—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel).

சுரங்க வேடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில்.

**லிபியா (Libya).**

விமான எதிர்ப்புகள்.—யுத்தப் பிரதேசத்தில்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானம்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும்.

**நியூ கினி (New Guinea)**

ஜப்பானிய ஸ்தலங்கள்.—கொக்கோடா (Kokoda) பிரதேசம்.

விமான நிலயம்.—லே (Lae).

**ஸாலமன் (Solomons) தீவுகள்.**

விமான தளம்—பூகா (Buka).

**அலூஷியன் தீவுகள் (Aleutians).**

கடல் விமான தளம்—கிஸ்கா (Kiska).

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 29—9—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—ஒரு பள்ளிக்கூடம்—தெற்கு இங்கிலாந்து (England). | அநேக குழந்தைகள் கொல்லப் பட்டனர். | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ருஷ்ய ஸ்தானங்கள்.—மோஸ்டாக் (Mozdok) பிரதேசம். | | | |
| 30—9—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குப் பாகங்களில் அங்கு மிங்கும் சில இடங்கள். | சொற்பச் சேதம், சிலர் கொல்லப் பட்டனர். | 3 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | இரவில்.—ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ருஷ்யப் போக்குவரத்து, ஸப்ளை மார்க்கங்கள்—ஸ்டாலின்கிராட் (Stalingrad)க்குக் கிழக்கே. | | | |
| 1—10—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்க வில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்—லெனின்கிராட் (Leningrad). | செப்டம்பர் 30 முதல் அக்டோபர் 1 வரை. | 17 விமானங்கள். | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | அமெரிக்க ஸ்தானங்கள்—கடற்கரையிலுள்ள கட்டடங்கள் (கூடல்கனர்). | | | |
| 2—10—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ருஷ்ய ஸப்ளை மார்க்கங்கள்—மோஸ்டாக் (Mozdok) பிரதேசம். | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | கூடல் கனர் (Gudal Canar) | | 4 விமானங்கள். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 3—10—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **எகிப்து (Egypt)** | | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria) பிரதேசம். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | கூடல்கனர் (Gudal Canar). | | | |
| 4—10—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **எகிப்து (Egypt).** | | | |
| | பிரிடிஷ் ஸப்ளை மார்க்கங்கள்—எல் அலமீன் போர்முனைக்குப் பின்னால். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| 5—10—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—விமான நடமாட்டம் எங்குமில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | கூடல் கனர் (Gudal Canar). | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ஸ்போர்ட்ஸ் பலாஸடு. (Sports Palast)** மாரிகாலத்தில் உதவியைக்கோரும் சந்தர்ப்பத்தில் ஹிட்லர் ஜெர்மன் மக்களுக்குமுன் பேசிய பேச்சு ரசமில்லாததாயும் படிமானமாக இருப்பதாயும் காணப்பட்டது. இதற்குமுன் அவன் பேச்சுகளிலிருந்த ஆடம்பரம் தற்சமயத்தில் காணப்படவில்லை. அமெரிக்க அயல்நாட்டு சம்பந்த கமிட்டியின் தலைவரான டாம் கானலி சொல்லும் விதமாக ருஷ்யப் பனியால் விளையும் ஆபத்தை ஒட்டியேதான் இவன் சொற்பொழிவு இருந்தது.

வழக்கம் போல் தற்போதும் அதிக வேஷத்தைப் போட்டிருக்கிறான். ஹிட்லர் வந்திறங்கியதும் பிரமாத வரவேற்பு செய்யப்பட்டது. முதலில் ரோமலுடன் கைகுலுக்கினான். ரோமல் இதற்காகவேதான் ஜெர்மனிக்குச் சென்றான். முதலில் கோயபெல்ஸ் ஸ்தோத்திரம் செய்தான்.

ஹிட்லர் முதலில் யூதர்களையும் ருஷ்யர்களையும் வழக்கம் போல் நிந்தித்துப் பேசினான். தன்னைப் பற்றி பெருமையாகப் பேசிக்கொண்டான். இவ்வருஷத்தில் டான் நதியைக்கடந்து வால்காவரையில் தான் ஜெர்மன் படைகள் சென்றிருக்கின்றன. இதுவே ஜெர்மானியர் செய்தது.

ஆனால் அவன் பேச்சைப் பூராவாகக் கவனிக்கும்போது கொஞ்சம் பின்போக்கும் அலுப்பும் ஏற்பட்டிருப்பதைத் தெரிவித்தது. ஒருக்கால் இனி ஏற்படப் போகும் சிரம நிலைமையைக் குறித்திருக்கிறதோ என்னமோ. ஹிட்லரின் ஆசைகளில் மண் விழுந்து வருகிறது.

யுத்தரங்கத்தைத் தான் அதிகம் கவனிக்கவேண்டியிருப்பதால் அடிக்கடி மூயூனிச்சிக்கு வுரமுடியவில்லை என்று தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டான்.

"மின்னல் படையெடுப்பு" பலிக்கவில்லை என்றும், எதிரிகள் தனது நிலயங்களைத் தாக்கிவர ஆரம்பித்திருக்கிறார்களென்றும், யார் முதலில்களைப்பு பெறுவார்களென்பதை கொஞ்சநாள் கிரமித்தே சொல்லலாமென்றும்," சொன்னான். ஒருவித பாதுகாப்பும் செய்து கொள்ளாத சிறு நாடுகளைத் தாக்கிய இவன் ஏனோ தற்சமயத்தில் இப்படி கூறவேண்டும்.

குற்றமுள்ள நெஞ்சத்தைப்போல் திரும்பிய இடங்களிலெல்லாம் அவன் கண்ணுக்கு இரண்டாம் போர்முனை கண்முன் காணப்படுகிறது. அதற்காக அவன் தயாராகவேண்டியிருக்கிறது.

இதுவரை மூன்று வருஷ காலம் யுத்தம் செய்து அவன் ஒரு பயனையும் அடைந்த பாடில்லை. மற்றொரு மாரி காலமும் இனி தடையாக வந்து கொண்டிருக்கிறது. "1941—42 மாரிகாலத்தின் போது கடவுள் ஜெர்மன் சைனியத்தையும் மக்களையும் காப்பாற்றினார். இந்த மாரிகாலத்தில் அவ்வளவு கெடுதி ஏற்படாது," என்று எதிர்பார்க்கிறான். ருஷ்யர்களின் பூதகன முறை ருஷ்ய மாரி காலத்தைக் காட்டிலும் அதிக சேதத்தை எதிரிக்கு விளைவிக்கிறது. போக்குவரத்து மார்க்கங்கள் துண்டிக்கப்பட்டன. விவசாயம், சுரங்க வேலை, தொழிற்சாலைகள்யாவும் அழிக்கப்பட்டன.

ஆனால் ஜெர்மனியின் உள்நாட்டு நிலையே அவனை அதிகம் பயமுறுத்துகிறது. அதற்காக 'ஒவ்வொரு கலகக்காரனும் தாக்ஷிண்யமில்லாமல் கொல்லப்படுவானும். தேசத்தைக் கெடுக்கும் குற்றவாளிகளுக்கும், ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவர்களுக்கும் ஜெர்மனியில் இடமில்லையாம். போர்முனையில் யோக்கியமானவர்கள் இறப்பதுபோல் உள்நாட்டில் குற்றவாளிகளும் இறக்கும்படி செய்வோம்' என்றான்.

ஐரோப்பாவை ராணுவ முகாமாகவும், உலகை ஏழைகள் நிறைந்ததாயும் பெர்லின், டோகியோ, ரோம் இவைகளை காவாலிகள் நிறைந்தவைகளாயும் செய்ய ஹிட்லர் பயித்தியக்கார எண்ணம் கொண்டிருக்கிறான்.

இவ்வளவு விஷயங்களைப் பற்றிப்பேசியும் சில விஷயங்களை விட்டுவிட்டான். அமெரிக்காவைப்பற்றி நேராடியான பிரஸ்தாபமில்லை. ருஷ்யச் சைனியத்தை அழிப்பதைப்பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மன் வெட்டுக் கிளி.** ஹிட்லர் பிரசங்கத்திற்கு முன் கோயபெல்ஸும், பிற்பட்டு கோயரிங் சிறிதளவு பேசினார்கள். இவ்விருவர்களும் ஜெர்மனியில் தலைதூக்கும் பசிப்பிணியைப்பற்றிப் பிரஸ்தாபித்தார்கள். ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள படைகள் தற்போது அந்தந்த நாடுகளால் தான் போஷிக்கப்படுவதாயும், 'மற்றவர்களைக் காட்டிலும் முதலில் ஜெர்மானியருக்கே உணவு கொடுக்கப்படுமென்றும் கோயரிங் சொன்னான். அதாவது ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டிலுள்ளோர் பட்டினி கிடந்தாலும் ஜெர்மானியருக்கு உணவு கொடுக்கப்படும் என்றுதான் அர்த்தமாகிறது. மிஸ்டர்



ஸம்னர்வெல்ஸ் கூறியபடி 'கோயரிங்கின் மொழிகள் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் நாஸிகள் பின்பற்றும் திட்டத்தைத் தெரிவிக்கின்றன. துப்பாக்கியை நீட்டி உணவைப்பறிக்கும் கோயரிங் பின்கண்டவாறு சொன்னான். 'ஆக்கிரமித்த நாட்டிலுள்ளோர் பசி, வறுமை முதலியவைகளை அனுபவிக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லையானாலும் அவர்களின் வறுமை ஜெர்மனியை ஒருக்காலும் பாதிக்காது என்றான்."

வி வி வி வி வி வி வி

**ஜனங்களின் யுத்தப் புதை குழிச் சங்கம்.** ஐரோப்பியப் போர் அரங்கங்களில் ஜெர்மன் வாலிபர்கள் ஏராளமாக இறந்து வருகின்றனர். இதற்காக ஹிட்லர் ஜனங்களின் யுத்தப் புதை குழிச் சங்கத்தைத் துவக்கியிருக்கிறான். சைனியத்திலுள்ளோரின் சொந்தக்காரர்களே 21,300 சவப்பெட்டிகளைக் கொடுத்துதவியிருக்கின்றனர். இதற்குப் பிரதியாக ஹிட்லர் தாராளமாக 'மாலைகளும், போட்டோப் படங்களும்' குறைவான விலைக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறான். ஆனால் சிப்பாய்கள் ஏராளமாக இறந்து வருவதாலும், மாரி காலமும் நெருங்கிவிட்டதாலும், இந்த விற்பனை சாத்தியப்படாதென்றும் சொல்லிவிட்டான்.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யா சென்ற துணைக்கப்பல் கூட்டம்.** நேசதேசங்கள் ஆர்க்டிக் வழியாக அனுப்பும் நேசதேச ஸப்ளைக் கப்பல்களைப்பற்றி ஜெர்மானியரின் பிரசாரம் பொய்யானதாகவே இருந்து வருகிறது. ஆகஸ்டு மாதத்தில் ஆங்கிலேய-அமெரிக்கத் துணைக்கப்பல் கூட்டத்தில் 35-கப்பல்களை மூழ்கடித்துவிட்டதாக பெர்லின் ரேடியோவில் சொல்லப்பட்டது. ஸெப்டம்பர் 30வ அதேவிதமான அறிக்கையை மறுபடியும் வெளிப்படுத்தியது. ஆனால், இந்தத்தடவையில் சில கப்பல்கள் தப்பி ஆர்க்கேஞ்சல் சென்றுவிட்டதாக ஒப்புக்கொண்டது. தற்சமயத்தில் மற்றொரு துணைக்கப்பல் கூட்டம் மூழ்கடிக்கப்பட்டதாகச் சொல்லிக்கொண்டது. ஆனால், ஸெப்டம்பர் 28வ சில கப்பல்கள் ஆர்க்கேஞ்சலுக்கு சென்றதாகச் சொல்லப்பட்டது. இவ்விதம் கப்பல்கள் தப்பிச்சென்றதற்கு ருஷ்யப் பைடர் விமானங்களின் எதிர்ப்பும், சீதோஷ்ண நிலையும் காரணமாகச் சொல்லப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**ஸெப்டம்பர் தாக்குதல்.** ஸெப்டம்பர் மாதத்தில் செய்யப்பட்ட பிரிடிஷ் விமானப்படைத் தாக்குதல் மிக திருப்திகரமானவை. ஐரோப்பா பேரில் 16 இரவுகளிலும் 11 பகல்களிலும் தாக்கின. 10 படையெடுப்புகளில் 5,000 டன் குண்டுகளைப்போட்டன. எல்லாப்போர் அரங்கங்களையும் சேர்த்து 40 அச்சுநாட்டுக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இதில் யூ படகுகளும், ஈ படகுகளும் சிறு பீரங்கிக் கப்பல்களும் சேர்ந்திருக்கின்றன. முன்னேற்றப் படையெடுப்புகளில் வடக்கு ஐரோப்பாவில் 20 எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன. பிரிடனில் 25 எதிரி விமானங்களும், மத்தியக் கிழக்கில் (மால்டா உள்பட) 113 எதிரி விமானங்களும் அழிக்கப்பட்டன.

வி வி வி வி வி வி வி

**பிரிடனின் யுத்த சாமான் உற்பத்தி.** அக்டோபர் 3-வ லார்டு ஹாலிபாக்ஸ் பிரிடிஷ் பொதுமக்களின் ஜனத்தொகையின் எண்ணிக்கைக்கு பிரிடிஷ் யுத்த சாமான்களின் உற்பத்தி மிக அதிகம் என்றார். 8-கோடிபேருள்ள ஜெர்மனியில் செய்யப்படும் விமான எண்ணிக்கைக்குச் சமமாகவே நாலுகோடி 70-லக்ஷம்பேருள்ள பிரிடனில் செய்யப்படுகின்றன. ஜூலை மாதத்தோடு முடிவாகும் 18-மாதங்களில் டாங்கிகளின் உற்பத்தி மூன்றுமடங்கு அதிகரித்திருக்கிறது. 30 சத விகிதம் அதிகமாகவே கப்பல்கள் பழுதுபார்க்கப்பட்டிருக்கின்றன.

ருஷ்ய யுத்த காரணமாக ஜெர்மானியர் தொழிற்சாலைகளுக்கும், தோட்டங்களுக்கும் ஆட்களை அதிகம் சேகரிக்கவேண்டியிருக்கிறது. பிரகிருத நிலையில் ராணுவத்தேவையையும், தொழிற்சாலைத் தேவையையும் சமாளிக்க முடியவில்லை என்று தெரிகிறது. முடிவாக ஹாலிபாக்ஸ் "இதேமாதிரி நாம் இன்னும் சாமான்களைச் செய்துகொண்டே போகவேண்டியதுதான். முடிவு வெகுதூரம் தள்ளித்தான் இருக்கிறது. இருந்தாலும் ஜெர்மனி தனக்கிருந்த சௌகரிய நிலையை இழந்துவிட்டது" என்று சொன்னான். வெற்றிக்கு சாமான்களின் உற்பத்திதான் காரணமாக இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்க உற்பத்தி.** ஜனாதிபதி ரூஸ்வெல்டு ஸெப்டம்பர் 17-முதல் இரண்டு வாரகாலமாக அமெரிக்காவின் யுத்த முயற்சியை நேரில் பார்வையிட்டார். மிகவும் ரகசியமாகச் செய்யப்பட்ட இந்தச் சுற்றுப்பிரயாணம் அக்டோபர் 1உ முடிந்தது. 8,754-மைல்கள் சுற்றுப்பிரயாணம்செய்து 24-ஸமஸ்தானங்களில் சைனியம், கப்பற்படை இவைகளின் தளங்களையும், கப்பல்கட்டும் இடங்களையும், டாங்கி, விமானங்கள், குண்டுகள், இவைகள் கட்டப்படும் யந்திரசாலைகளையும், கப்பற்படைப் பயிற்சி முகாம்களையும் ஸப்ளை டெப்போக்களையும், துறைமுகங்களையும் பார்வையிட்டார். இதிலிருந்து நேச நாடுகளின் நிலைமை அதிக திருப்திகரமாக இருப்பதாகவும் அபிப்பிராயம் கொண்டார். போட்ட திட்டத்திற்குக் கொஞ்சம் குறைவாக இருந்தாலும் யுத்த சாமான்களின் உற்பத்தி சரிவர நடந்துவருகிறது என்றும், தேச மக்களுக்கு யுத்த உணர்ச்சி அதிகம் இருக்கிறதென்றும், அரசாங்கத்தார் விதிக்கும் நிபந்தனைகளுக்கு அதிகமாகவே ஜனங்கள் தேவைகளைக் குறைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களென்றும், விலைவாசிகள் உயருவதைத் தடுக்கவேண்டுமென்று பொது ஜனங்கள் விரும்புகிறார்களென்றும், சிறு கஷ்டங்களை மிகைப்படுத்திக் கூறுவதால் தான் யுத்த முயற்சிக்கு தடை ஏற்படுமென்றும், இவ்விதமாக ஐந்து விஷயங்களைக் கண்டுகொண்டார். மற்ற விஷயங்களில் தேசத்தில் ஒற்றுமையும் தைரியமும் எதிர்பார்த்தபடியே காணப்படுகின்றன. ஒரிடத்திலேயாவது வேலை நிறுத்தப் பேச்சேகிடையாது. தொழிலாளிகளும் முதலாளிகளும் ஒத்துழைக்கின்றனர். பிரகிருதமிருக்கும் உற்பத்தி திட்டத்தின்படி 94, 95-சத விகிதம் பூர்த்தியாகிவிடும். ஸ்திரீகளும் யந்திரங்களை உபயோகிக்கும் வேலையில் ஏராளமாக ஈடுபட்டிருப்பதைக்காண மகிழ்ச்சி கொண்டார். ஹென்ரி J. கெய்ஸரின் கப்பல் கட்டுமிடத்தையும் பார்வையிட்டார். அங்கே 10-நாட்களில் 10,600 டன் நிறையுள்ள கப்பல்கட்டி மிதக்கவிடப்பட்டது. சண்டைப்படகுகள் கட்டுமிடமாகிய ஹிக்கின் தொழிற்சாலையையும் பார்த்தார். அங்கே நீர்மூழ்கிகளை எதிர்க்கும் படகு 3-தினங்களில் கட்டிமுடிக்கப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**காடுகளில் மறைந்து செய்யும் யுத்தம்.** பார்லிமெண்டில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் மிஸ்டர் அமெரி இந்தியர்களுக்கு இவ்வித சண்டையில் கொடுக்கப்படும் பயிற்சியைப் பற்றிச்சொன்னார். மலேயா, பர்மா முதலிய இடங்களின் அனுபவங்களுக்குப் பிற்பட்டே இவ்வித புதுப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த திட்டத்தின்படி ஜப்பானியரைக் காட்டிலும் அதிக சரீர பலமும் மனோவலிவும் பெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு, பயிற்சி கொடுக்கவேண்டியதென்பது மெத்த அவசியம். ஐரோப்பியப் போர் அரங்கங்களில் யந்திர சாதனத்திற்குத் தேவை ஏற்பட்டிருப்பதுபோல பாலைவனச் சண்டைகளுக்கு துருப்புகளுக்கு முரட்டு சுபாவமும் தைரியமும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளும் தன்மையும் தேவை. ஆகவே இந்திய ராணுவக் கல்லூரிகளிலும், காடுகளில் மறைந்து தாக்கப் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்களிலும் இப் புதிய முறை கற்றுக்கொடுக்கப்படுகிறது. பொறுத்துக் கொள்ளும் தன்மையும் கஷ்ட நிலைகளில் உத்ஸாகம் பெறவும், தன் நம்பிக்கையை உண்டாக்கிக் கொள்ளவும்



சொல்லிக்கொடுக்கப்படுகிறது. ஜப்பானியரைக் காட்டிலும் தாங்கள் மேற்பட்டவர்களென்ற எண்ணமும் ஆரம்பத் தாக்குதலைச் செய்யும் நோக்கமும் உண்டாக்கப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**சுகமும் குதூஹலமும்.** தற்சமயத்தில் பிரிடனில் இருக்கும் நவநகர் ஜாம் ஸாஹேப் மூலமாக நமது இந்தியத் துருப்புகளின் சந்தோஷ நிலையை அறிய நாம் சந்தோஷப்படுகிறோம். இவரது சுற்றுப்பிரயாணத்தில் தரைப்படை, கப்பற்படை விமானம் முதலியவைகளில் இருக்கும் இந்தியர்களையும், பயிற்சிபெறும் இந்தியக் கப்பல் மாலுமிகளையும் பார்வையிட்டார். இந்தியர்கள் அங்குள்ளவர்களுடன் அதிக நெருங்கிய சிநேகத்துடன் இருக்கிறார்கள். ஸ்காத்லாந்தில் இவர்களுக்குப் பிரத்யேகமான வீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதால் இவர்கள் ஹோட்டல்களில் உணவு சாப்பிடவேண்டிய அவசியமில்லை. இவர்களுக்கு எல்லாவித ஆதித்யமும் செய்யப்படுகிறது. உள்நாட்டில் இருக்கும்போது கப்பல் கட்டும் தொழிற்சாலைகளை கவனிக்கின்றனர். கப்பலில் சென்று கடல் பிரயாணத்தில் ஊக்கத்தைத் தெரிவிக்கின்றனர். சண்டையில் ஈடுபட்ட பல இந்திய மாலுமிகளையும் நவநகர் மஹாராஜா கண்டு பேசியிருக்கிறார். அந்தச் சண்டைகளில் திருப்திகரமாக ஈடுபட்டதாகவும் அவர்களுக்குப் புகழ் ஏற்பட்டிருக்கிறது. சுற்றுப்பிரயாணத்தின் முடிவில் நவநகர் மகாராஜா பின்வருமாறு கூறினார். "நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த யுத்தத்தில் கூடிய சீக்கிரத்தில் வெற்றிபெற பூர்ணமாக ஈடுபட்டிருக்கும் பிரிடனில் இந்தியர்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்னும் விஷயத்தை இந்தியாவிலுள்ளோர் அறியவேண்டும். நான் சொல்லுவது பிரிடிஷ், நேசதேசத் துருப்புகளைப்பற்றி மாத்திரம் சொல்லவில்லை. இதர தொழிலாளிகளைப் பற்றியும் சொல்லுகிறேன்.

"என்னுடைய படகு ஸ்காத்லாந்தில் கிளைட் நதி வழியாக வந்துகொண்டிருக்கும்போது ஆணிகளைச் சடையும் சப்தமும், எஃகுத் தகடுகளை அடிக்கும் சப்தமும் காதில் விழுந்தன. தினம் ஒரு பெரிய யுத்தக் கப்பல் புதிதாக மிதக்கவிடப்படுவதாகவே காணப்பட்டது. இதுவே பிரிடிஷ் யுத்த தொழிற்சாலைகளின் பிரமாத முயற்சியைத் தெரிவிக்கிறது. இதிலிருந்து ஒரு விஷயம் நிச்சயம். ஜெர்மனியால் இந்த யுத்தத்தை ஜயிக்க முடியாது".

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியரின் கீழ் பர்மா.** பர்மாவிலிருந்து கிடைக்கும் செய்தி அங்கிருக்கும் கஷ்டத்தையும் ஓயாத துக்கத்தையும் தெரிவிக்கிறது. 'பர்மாவில் மோட்டார்களே கிடையாது. அப்படி ஏதாவது சிலவற்றில் பிரயாணம் செய்ய நேர்ந்தால் வாடகை மிக ஜாஸ்தி. டிரயின் போக்குவரத்தை நம்ப முடியாது. மணிப்படி வருவதில்லை. சில இடங்களில் நதிப் போக்குவரத்து இருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் அந்த மோட்டார் படகுகளை வெளியே காண்பித்தால் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் பிடுங்கிக் கொள்ளுவார்களோ என்று படகுகாரர்கள் பயப்படுகின்றனர்.

பர்மிய நாணயச்செலாவணி ஜப்பானிய செலாவணியோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. அரிசி, மண் எண்ணெய் இவைகளின் விலை அதிகம் உயர்ந்துவிட்டது. சர்க்கரை, சிகரெட், காப்பிக்கொட்டை விலைக்குக் கிடைப்பதே இல்லை. உப்பும், நெருப்புக்குச்சியும் அப்படித்தான். உலோகங்களெல்லாம் ஜப்பானியருக்குச் சொந்தமாம். ஜனங்கள் பட்டணங்களிலிருந்து கிராமங்களுக்கு ஓட்டம் பிடிக்கிறார்கள்.

மழையும் அதிகமில்லை. விளைந்த இடங்களிலுள்ள பயிர்களை ஜப்பானியர் அபகரிக்கின்றனர். நில ஸ்வான்தார்களான செட்டி மார்கள் அதிகம் அவஸ்தைக்குள்ளாயினர். மாடுகள் அபகரிக்கப்பட்டன. அதிகமான வரி விகிதங்களைக் கொடுக்கும்படி நிர்பந்திக்கப்படுகின்றனர். பல பர்மியர்கள் சாகுபடி செய்ய மறுக்கின்றனர். ஏனென்றால் சாகுபடியானால்தான் ஜப்பானியர் அதை பிடுங்கிச் கொள்ளுகிறார்களே என்று பதிலுரைக்கிறார்கள்.

பர்மிய தொழிற்சாலைகள் ஏற்படப் போவதாயும் தெரியவில்லை. டவாயிலி ருந்த உலோகங்களை உருக்கும் யந்திரசாலை பாழாய்க் கிடக்கிறது. நெல்லு மெஷின்கள் வேலை செய்யவில்லை. யேனுஸ்யாங்கிலிருந்த எண்ணெயை எடுக்கும் கருவிகளும் வேலை செய்யவில்லை.

பர்மிய மதாசாரியர்களை அதிகம் கவனித்து வருவதாக ஜப்பானியர் சொல்லுகிறார்களே தவிர ஜப்பானின் சைனியத்தினருக்கு அவர்கள் விஷயத்தில் மரியாதை கிடையாது. சாவடிகளிலிருந்து பர்மிய சந்யாசிகள் துரத்தப்பட்டு அந்த இடங்களில் ஜப்பானியச் சைனியம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

பர்மிய ஸ்வதந்திரச் சைனியம் கலைந்து போய்விட்டது. ஜப்பானியர் உட்புகுந்து கொள்ளையடிக்கும் போதுதான் இது இவர்களைத் தடுத்து வந்தது. இச்சைனியத்தில் முக்கியமாக தாகின் ஜாதியினர் தான் இருந்து வந்தனர். தற்சமயத்தில் ஜப்பானியப் படை எங்கு பார்த்தாலும் இருந்து வருகிறது.

ஜப்பானியச் சிப்பாய் பொதுவாக முரடன் ஆனதால் பர்மிய ஸ்திரீகள் வெளியே வரத் துணிவதில்லை.

பக்ஷபாதமில்லாத பிரிடிஷ் நியாய அரசாக்ஷியை தற்போது அங்கே பெற முடியவில்லை. புதிய ஜப்பானிய எஜமானர்களுக்கு அருகில் சிப்பந்திகள் பழகுவதில்லை. ஸ்வதந்திரம் அளிப்பதாக வாக்குக் கொடுத்த ஜப்பானியரின் சிநேகம் எப்பேற்பட்டதென்று தற்போதுதான் உணரப்படுகிறது. தாகின் ஜாதியாருக்கும், ஜப்பானியருக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு செட்டிமார்கள் தான் சிரமப்படுகிறார்கள். அவ்விருவர்களும் அவர்களைக் கொள்ளையடிக்கப் பார்க்கின்றனர்.

ஆனால் ஜப்பானியர் கரீன் ஜாதியாரையும் பர்மியரையும் பிரித்து மித்ர பேதத்தால் அரசாட்சி புரிய ஜப்பானியர் நினைத்து வருகின்றனர். கரீன் பிரதேசத்தில் வரி வசூல் செய்ய பர்மா ஸ்வதந்திரச் சைனியம் அனுப்பப்பட்டபோது இச்சைனியம் அவமரியாதையாக நடத்து கொண்டார்கள். கரீன் ஜாதியினர் கலகம் செய்தனர். உடனே ஸ்வதந்திரச் சைனியத்திற்குத் திறமை இல்லை யென்று காட்டப்பட்டது.

ஜப்பானிய ஆட்சியை ருசி பார்த்த ஷான் ஸமஸ்தானங்களும் ஸயாமுடன் சேர்ந்துகொள்ள விரும்புகிறது. மோல்மீன் தங்களுக்கு வேண்டுமென்று ஸயாமியர்கள் விரும்புகின்றனர். இதற்கு பதிலாக விக்டோரியா முனையை ஸயாமிடமிருந்து பிடுங்கி மலேயாவுடன் ஜப்பான் சேர்த்துவிட்டது.

இதுதான் பர்மாவிலிருக்கும் காட்சி. அமைதியும் வளமும் நிலவிய தேசத்தை பெரும் கஷ்டங்களும் உள்நாட்டுக் கலகங்களும் நிரம்பியதாகச் செய்துவிட்டனர். ஆகவே பிரிடிஷ் ஆட்சி வேண்டுமென்று பர்மியர் கோருவதில் ஆச்சரியமில்லை.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானிய தந்திரம்.** ஜப்பானிய தந்திரத்தை விவரிப்பது மிகவும் சிரமம். மேலும் ஆக்கிரமணம் ஒன்றும் செய்யாமல் தற்சமயத்தில் தற்காப்புப் போருக்கும் மாற்றிக்கொண்டது. தற்போது அவனது நடமாட்டங்களைப் பற்றிச் சொல்லுவது மிகவும் சிரமமான காரியமாக இருக்கிறது.

இதுவரை அவனுடைய சுவாதீனத்தில் இருக்கும் நாடுகள் விளாடிவாஸ்டாக், இந்தியா, சைனா, ஆஸ்திரேலியா முதலிய இடங்களிலிருந்து தாக்கப்படுகின்றன. விளாடிவாஸ்டாக் தாக்குதலைப் தவிர்த்துக்கொள்ள அலுஷியனில் சில தீவுகளைப் பிடித்து ஸைபீரியாவில் சைனியத்தைச் சேர்த்திருக்கிறான். ஆனால் ருஷ்யா மேற்கே விடிவிக்கப்பட்டாலோ, அல்லது ஜப்பானுக முதலில் ருஷ்யாவைத் தாக்கினாலோ தான் விளாடிவாஸ்டாக்கிலிருந்து ஜப்பானுக்கு பயம் நேரும். ருஷ்யாவோடு சிநேக முறையிலிருப்பதாக ஜப்பானிய மந்திரிகள் கூறியதை நாம் நம்பமுடியாது. ஜப்பானியரின் வாக்குறுதிகள் எல்லாம் பொய்யானவையே. பேர்ல் ஹார்



முகத்தைத் தாக்கியதுபோல் ஒரு நாள் விளாடிவாஸ்டாக்கையும் தாக்கலாம். ஸைபீரியாவிலுள்ள ருஷ்ய செஞ்சேனையும் பலமுள்ளதுதான். ஸ்டாலின் கிராட் போரின் முடிவை ஒருக்கால் ஜப்பானியர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதோ என்னமோ.

மத்திய பஸிபிக்கில் நடமாட்டம் லெகுவானால்தான், சைனாவிலிருந்தும் தாக்குதல் செய்யமுடியும்.

மழைகாலம் முடிந்துவிட்டது. இனி இந்தியாவிலிருந்துகொண்டு எதிரி நாட்டில் நேச நாட்டுத் தாக்குதல் நேரலாம். கிழக்கு சைனாவிலிருந்த சைனியங்கள் எதிரி யூனானில் சேகரித்துவருகிறார்.

தென்மேற்கு பஸிபிக்கில் எதிரி படைகளை சேகரித்து வருவது தெரிய வருகிறது. ஸாலமனில் இழந்த இடங்களைப் பிடிக்க பிரயத்தனப்பட்டுவருகிறான், ஓவன் ஸ்டான்லி பிரதேசத்திலிருந்தும் படைகளை வாபஸ் பெறுகிறான்.

ஜப்பானியரின் யோசனைகள் மிகத்தந்திரமாகக் காணப்படுகின்றன. அடுத்த தாக்குதலுக்குத் தயார் செய்வதும், சண்டை செய்ய முடியாமல் பின்வாங்குவதும் தெரியவில்லை. உலகத்தில் எக்கண்டத்திலும் சண்டை நடைபெறுகிறது! ஜெனரல் வேவல் ரெங்கூனை நோக்கி படையெடுத்து, பர்மா ரஸ்தாவைத் திறந்தாலும் அல்லது எதிரிகளை ஸாலமனிலிருந்து அமெரிக்கர்கள் விரட்டினாலும், நியூகினியிலிருந்து எதிரிகளை ஆஸ்திரேலியர் விரட்டினாலும் ஜப்பானியரின் தோல்வியை நிச்சயித்துவிடலாம்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியரின் பொது க்ஷேமம்.** யுத்தக் கைதி பரிவர்த்தனை முறைப்படி ஜப்பானிலிருந்து வந்த நேசதேசத்தினரின் மூலமாக ஜப்பானின் உள்நாட்டு நிலைமையைப்பற்றி சில தகவல்கள் கிடைக்கின்றன. அங்கே யுத்தநிலையால் வாழ்க்கை கடுமையாக இருக்கிறது. ராணுவ மேற்பார்வை கடுமையாக்கப்பட்டிருக்கிறது. யுத்தத்தைப்பற்றிய உத்ஸாகம் ஜனங்களுக்கு இல்லை. தேசியமக்களின் தைரியம் குறையவில்லை. முன்பு டோகியோவைத் தாக்கியதால் மட்டில் ஜனங்களுக்குக் கொஞ்சக் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளின் துன்பங்கள்.** பொது க்ஷேமம் என்ற பெயர் வைத்து செய்யப்படும் அட்டூழியங்களைப்பற்றி H. J. வான்மூக் சில விபரங்களைக் கொடுத்திருக்கிறார். அக்டோபர் 4ட அவர் கூறியதாவது: 'கூலி குறைக்கப்பட்டது. அரிசி விலையும் குறைக்கப்பட்டிருக்கிறது. வேலை நேரம் அதிகமாகப்பட்டிருக்கிறது. கல்வி முறை சரியாக ஆரம்பிக்கப்படவில்லை, சாமான் உற்பத்தி, வியாபாரம், போக்குவரத்து, முதலியவைகள் தடைப்பட்டுள்ளன.

எண்ணெய்க் கிணறுகளை மறுபடி தோண்டச்செய்த ஜப்பானிய முயற்சி பலிக்கவில்லை.

யுத்தக் கைதிகளை, ஒரே இடத்தில் கூட்டமாக அடைத்து, உணவு சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. சுகாதார விதிகளும் கவனிக்கப்படுவதில்லை.

உள்நாட்டு ஜனங்கள் தான் அதிகம் அவஸ்தைப்படுவது. அப்படியிருந்தும் டச்சுக்காரர்களின் அவஸ்தையைக்கண்டு மனம் கலங்குகின்றனர்.

இவ்வளவும் ஜப்பானியரால் விளைந்த துன்பங்களே. ஜனங்களை எதிரி அடக்க முயற்சித்தால் கலகம் ஏற்படுகிறது. அதற்காக அடக்குமுறையைக் கையாள வேண்டியிருக்கிறது.

இவர்கள் யாவரும் எதிரிகளிடமிருந்து விடிவிப்புநாளை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே அவர்களின் விடிவிப்புக்குப் போவோருக்கு எங்கும் வரவேற்பு கிடைக்கும்.

## வியக்கத்தக்க ஸ்டாலின்கிராட் போராட்டம்.

ஸ்டாலின்கிராட்டின் தற்காப்பின் மகிமையைப்பற்றி வெகு தெளிவாக இது வரை எழுதப்பட்ட விருத்தாந்தங்களில் கோன்ஸ்டான்டின் ஸைமோனோவ் என்னும் ருஷ்ய கவி எழுதியது ஒன்றாகும். அவர் நடந்தவைகளை நேரில் பார்த்து பிறகு எழுதியிருக்கிறார். அக்கோட்டைக்குள் வியக்கத்தக்க ருஷ்ய வீரர்களின் ஒழுங்குப்பாடுதான் அதன் தற்காப்பின் மகிமைக்குக் காரணம். எரிந்து போன பெரிய கட்டடத்தின் கீழிருந்த ஒரு கிடங்கில்தான் அப்பிரதேச தளகர்த்தரின் தலைமை காரியாலயம் இருந்துவருகிறது. தற்சமயம் அத்தலைவர் யார் என்று நமக்குத் தெரியவில்லை. அவருடைய பெயர்தான் ருஷ்ய சரித்திரத்திலேயே மிகவும் கியாதி அடையப்போகிறது. அந்த கிடங்குக்குள்ளிருந்து ஒருமாத காலமாக ராணுவ அதிகாரிகள் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஓய்வு ஒழிவு இல்லை. வேலைத் தொந்தரவால் அவர்களுக்கு க்ஷவரங்கூட செய்துகொள்ள அவகாசமில்லை. வெறும் ரொட்டியும், மீன் இறைச்சியும்தான் அவர்களுக்கு உணவு, அவ்வுணவும் அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கும்பொழுதே அந்த மேஜைகளில் கொண்டு வந்து வைக்கப்படுகிறது. அவ்வறையிலுள்ள காற்று மிகவும் கெட்டுப்போய், நெருப்புக்குச்சிகளை உரைத்துப் பற்றவைக்கவும் முடியவில்லை என்று அக்கவி எழுதியிருக்கிறார். ஒரு உயரமான கட்டடத்தில் யுத்தம் ஆரம்பித்திருக்கிறது என்று தகவல் கிடைக்கிறது. ஜெர்மானியர் ஒவ்வொரு மாடியாகக் கைப்பற்றியிருக்கிறார்கள். அக்கட்டடத்தைச் சுற்றி நாலாதிக்குகளிலும் ருஷ்யர்கள் அணுகாதபடி எதிரிகள் பீரங்கிகளால் சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் செஞ்சேனை பாய்ந்து உள்ளேபோய், மாடிக்கு மாடி நின்று சண்டை செய்து, மூலைக்கு மூலை எதிரிகளுடன் போர் நடத்தியும் வருகிறது. சில அறைகளை எதிரிகள் பிடிப்பதும், அவைகளை ருஷ்யர்கள் மீண்டும் பிடிப்பதுமாகவே அநேக தடவைகள் இருந்திருக்கின்றன. ஆனாலும் ஜெர்மானியரை அடியோடு அப்புறப்படுத்த முடியவில்லை. ஒரு சமயம் அந்த தளகர்த்தர் உடனே ஒருவித முடிவுக்கு வந்து அந்தக் கட்டடத்தை தகர்க்கவேண்டும் என்று உத்தரவிடுகிறார். அவர் உத்தரவின் கீழ் 5 பாதுகாப்பு வீரர்கள் 25 பவுண்டு நிறையுள்ள தகர்க்கும் வெடியுடன் ஒவ்வொருவரும் தைரியமாக விரோதிக்கும் அஞ்சாமல் முன் செல்லுகிறார்கள். அதன் விளைவாக கட்டடம் இடிந்து ஜெர்மானியரும் மண்ணோடு மண்ணாகப் போய்விடுகிறார்கள். அந்த வீராகளும் அந்தக் காரியத்தில் தங்கள் உயிரையும் இழக்கிறார்கள். இம்மாதிரியான சம்பவங்கள் தினசரி சர்வ சாதாரணமாக நடக்கும் நடவடிக்கைகள் தான்.

ஸைமோனோவ் அடுத்தபடியாக ஸ்டாலின்கிராட்டிலுள்ள ஒரு பெரிய தொழிற்சாலையில் நடக்கும் சண்டையைப்பற்றிச் சொல்லுகிறார். தெருக்களில் சண்டை போடாத சமயங்களில் தொழிலாளிகள் தொழிற்சாலையில் வேலை செய்வார்கள். ஒரு நாள் ஜெர்மானியர் அந்தத் தொழிற்சாலைக்குள் புகுந்துவிட்டனர். அங்கு டாங்கிகளைப் பழுதுபார்க்கும் தொழிலாளிகள் உடனே அந்த டாங்கிகளில் ஏறிக்கொண்டு, தொழிற்சாலைக்கு வெளியேயுள்ள யுத்தரங்கத்திற்கே அவைகளைச் செலுத்திக்கொண்டு வந்துவிட்டார்கள். அவர்களுக்குப் பின்னால் உள்நாட்டுப் பாதுகாப்புப் பட்டாளம் ஒன்று பின் தொடர்ந்தது. அதில் பூராவும் தொழிலாளிகள்தான். ருஷ்யப் புரட்சியில் அவர்களின் முன்னோர்கள் சண்டை செய்தமாதிரி நீண்ட அங்கிகளுடன் சண்டை செய்தனர். அச்சண்டையில் அவர்களின் மனைவிகளும், மகள்களும் அவர்களுடன் கலந்து கொண்டனர். மனைவிமார்கள் வெடிமருந்து, உணவுப் பொருள்கள் முதலியவைகளை வீரர்களுக்கு உதவியாக எடுத்துவந்தார்கள். சண்டையில் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்வதும், முடியுமானால் அவர்களைத் தொழிற்சாலைக்குள் கொண்டு சேர்ப்பதுமான அலுவல்களை அச்சிறு பெண்கள் செய்தனர். ஒரு கற்பாலத்திற்கருகாமையில் நடந்த சண்டையில் அத்தொழிலாளிகளே நின்று துருப்புகள் உதவிக்கு வரும் வரையில், சண்டை செய்தனர். உதவிப் படைகள் வந்ததும் தொழிலாளிகள் தங்கள் தொழிற்சாலைக்குப் போய்விட்டார்கள். அங்கிருந்து கெட்டுப்போன டாங்கிகளைப் பழுதுபார்க்க ஆரம்பித்தார்கள்.



"அங்கு பரிதாபகரமான சம்பவங்களும், வீரத்தன்மையும் பொருந்திய சம்பவங்களும் நிகழ்கின்றன. அங்கே இறங்குமிடத்தில் எரிந்துபோன கப்பலுக் கருகாமையில் கரையோரமாகக் கருமையான கட்டைகள் கிடக்கின்றன. தோற்றத்திற்குக் கட்டைகளாக இருந்தாலும் உண்மையில் இவைகள் கட்டைகள் அல்ல. அவைகள் சண்டை மும்மரமில்லாத அதிக இடத்திற்குக்கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக ஸ்திரீகளையும் குழந்தைகளையும் ஒரு கப்பலில் ஏற்றிக் கொண்டு புறப்படும்பொழுது வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டதால் அதில் இறந்துபோன ஸ்திரீ புருஷர்களின் சவங்கள்." 35 மைல் நீளமுள்ளதும், வால்கா நதிக்கு சமீபத்திலும் உள்ள ஸ்டாலின்கிராட் நகரத்தில் தற்போதைய வாழ்க்கை இம்மாதிரிதான். அங்குள்ள மனிதர்கள் தங்கள் தீரத்தைக் காட்டி எதிரிகளுடன் போர்செய்து வருகிறதினால் அவர்களுக்கு அழியாப் புகழ் ஏற்படப் போகிறது.

---

## நேசநாட்டு வீரனை தன்நாட்டு மக்களைப்போல் வரவேற்கவும்.

(இந்தியர்களுக்கு ஜெனரல் ஸர். A. வேவலின் வேண்டுகோள்).

தற்போதுள்ள இந்தியச் சிப்பாய் இந்திய மக்கள் முழுமைக்கும் பிரதிநிதியாகிறான். இதற்கு முன்பு, இவ்விதமாக இந்திய மக்களின் எல்லாவித சார்பிலிருந்தும் இந்தியச் சைனியம் தயாரிக்கப்பட்டதில்லை. சைனியத்தில் ராணுவ ஜாதியினர் என்றவர்கள் மாத்திரம் இல்லாமல் பொதுஜனங்களும் அதில் சேர்ந்திருக்கின்றனர்.

அதிக நெருக்கடியான இந்நாட்களில் நமது படைகளுக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பைப்பற்றி நான் அதிகம் கூற வேண்டியதில்லை, நாம் யாவரும் அவர்களுக்கு அதிகம் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களும் தகுந்தவிதமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்.

பிரிடிஷ் துருப்புகளானாலும் இந்தியத் துருப்புகளானாலும் ராணுவ உடையில் காணப்படும் சாதாரண ஜனங்கள் தானென்று இந்தியாவிலுள்ள நாம் அவர்களை உணரவில்லை. சிப்பாய் என்பவன் தானாக ராணுவ சேவையை முன்னிட்டு முன் வந்தவன். இந்தியச் சைனியத்தில் இந்திய மக்களின் எல்லாவித வகுப்பினரும் காணப்படுகின்றனர். ஆகவே இதைப் பொதுமக்களின் சைனியம் என்று சொல்லுவதே பொருத்தமானதாகும்.

இதேவிதமாக இந்தியாவிலுள்ள பிரிடிஷ் சைனியத்தினரும் ராணுவ ஜாதி என்ற ஓர் இனத்தைச் சேர்ந்தவர்களல்ல. ஆனால் தங்களுடைய தொழிலையும்; வீடுவாசல்களையும், பெண்டாட்டி பிள்ளைகளையும், விட்டு யுத்த சேவை புரிய வந்த பொதுமக்களே. விவரம் தெரியாத தேசத்திற்கு பழக்கப்படாத சீதோஷ்ண நிலையுள்ள இடங்களுக்கு வந்திருக்கும் அவர்களுக்கு நாம் தயவான வரவேற்பைக்காண்பிக்கவேண்டும்.

இதுவே நமக்குள்ள பொறுப்பு. நமக்குள்ள இன்னும் சில சிரமங்களைச் சொல்லுகிறேன். ஏனென்றால் சிலர் இந்தியச் சிப்பாய்களுக்குப் போதுமான வசதிகளைச் செய்யவில்லை என்று குறை கூறுகிறார்கள். இந்த யுத்தத்தின் முதல் $2\frac{1}{2}$ வருஷங்களில் நாம் அயல்நாட்டு யுத்தரங்கங்களை கவனிக்கவேண்டி வந்தது. இந்தியாவில் துருப்புகளைச் சேகரித்து, பயிற்சி கொடுத்து, இந்தியாவின் பாதுகாப்பிற்குத் தேவையான முக்கிய யுத்தரங்கங்களுக்கு அனுப்பினோம். அரசியல் முறையிலும், இதர விதமாகவும் அயல் நாட்டுக்குச் சென்றிருக்கும் துருப்புகளுக்கு வேண்டிய வசதிகளை அனுப்பிவந்தோம்.

### மனமார்ந்த உதவி.

இந்தியப் பொதுமக்களால் முக்கியமாக ஸ்திரீகளால், உதவி கொடுக்கப்பட்டது. ஆனால் ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்டதும் இந்தியாவிற்கு ஏற்பட்ட

பயத்தைத் தடுப்பதற்காக நேசதேசத் துருப்புகளும், விமானப் படையும் இந்தியாவிற்கு வந்ததிலிருந்து பலவித புதிய பிரச்னைகள் திடீரெனத் தோன்றியதால் இவ்வித ராணுவத்தினரை எப்படி நடத்துவதென்பது உடனே தீர்மானிக்கப்படவில்லை. கப்பல் வசதி குறைவானதால் வெளிநாட்டிலிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டுவர முடியவில்லை. துருப்புகளுக்கு வேண்டிய சந்தோஷ சந்தர்ப்பங்களையும் இந்தியாவில் அமைக்க முடியவில்லை.

இந்தப் பிரச்னைகளைச் சமாளிக்க ஏற்பாடு செய்வதாக நமது துருப்புகளுக்கு எடுத்துரைக்கிறேன். அதற்காகவே இன்று நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

### தேவையென்ன.

இந்தப் பிரச்னைகளை அரசியல் துறையிலும் இதர விதமாயும் நம்மால் முடிந்தவரை சமாளித்து வருகிறோம்.

நான் எல்லா இந்தியர்களுக்கும் எடுத்துரைப்பது என்னவென்றால் துருப்புகளுக்கு இதரவிதமான சௌகரியங்களை நாம் செய்வதைக் காட்டிலும், அவர்களை நாம் வரவேற்பதாயும், கௌரவிப்பதாயும் காண்பித்து நமது தேச மக்களைப்போல் பாவிப்பதே போதுமானது. நம்முடைய பாதுகாப்பிற்காக அவர்கள் தியாகம் செய்யத் தயாராக இருக்கிற விஷயத்தை நாம் அறிய வேண்டும்.

துருப்புகள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களானாலும், எந்த தேசத்தினரானாலும் அவர்கள் நல்ல வரவேற்பு பெறும்படிக்கும், இந்தியாவிலுள்ள சைனியத்தின் தைரியமும், ஒற்றுமையும், கலையாமல் இருக்கும்படிக்கும் செய்யவேண்டும். இவ்வித இந்தியச் சைனியத்தின் தலைமை வகிக்கும் கௌரவம் எனக்குக் கிடைத்திருக்கிறது.

---

## பூர்ணவெற்றி கிட்டும்வரை நாம் ஓய்வடையோம்.

(அமெரிக்க அயல்நாட்டு திட்டச் சங்கத்திற்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் நியூ யார்க் அக்டோபர் 3உ அனுப்பிய செய்தி).

"நம்தேசம், எடுத்துக்கொண்டுள்ள பொறுப்பிலிருந்து பின்வாங்காதென்றும், அப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு எவ்வித தியாகம் செய்யவேண்டுமானாலும் தயாராக இருக்கிறதென்றும் நான் எனது நம்பிக்கையை முன்பு தெரிவித்துக்கொண்டேன்.

"ஜப்பான் யுத்தத்தைத் துவக்கி இந்நாட்டை ஈடுபடுத்திய பிறகே நான் சொன்னதற்கு அறிய சந்தர்ப்பம் கிடைத்தது.

"கடந்த சில மாதங்களில் தேசமக்களிடம் எனக்கு ஒரு நம்பிக்கையும், மக்களுக்கு தங்களிடம் ஒரு நம்பிக்கையும் இருக்கிற விஷயம் வெளிப்படுத்தப்பட்டது.

"அச்சுநாட்டினர் கபடமாக நம்மைத் தாக்குவதற்குமுன் அவர்கள் செய்வதாக இருந்த தாக்குதலின்போது நம் நாட்டை நாம் பாதுகாத்துக்கொள்ளாமலிருக்கவேண்டிய பிரயத்தனங்களையும் அவர்கள் செய்து பார்த்தார்கள்.

"அதற்கு நமது தேசம் இணங்காமல் ஒற்றுமைபெற்று, தியாக சிந்தனையுடன் ஈடுபட்டு பூர்ண வெற்றி கிட்டும்வரை கொஞ்சமும் பின்வாங்காத வண்ணம் உணர்ச்சி பெற்றிருக்கிறது.

### ஸ்வதந்திர மக்களாக வாழ.

"சமாதான காலத்தைப்போல் யுத்த காலத்திலும் அயல் நாடுகளுடன் நமது திட்டம் இருந்துவருகிறது.



"நாம் ஸ்வதந்திர மக்களாக என்நாளும் வாழ்ந்து, நமக்கு பயம் ஏற்படாதிருப்பதற்காக நமது சத்துருக்களைச் சீக்கிரமாகவே அழிக்க நமது அயல்நாட்டு திட்டம் போடப்பட்டிருக்கிறது.

"வெற்றி கிட்டியதும், நமது ஸ்வதந்திர வாழ்க்கையின் ஆத்மீக சக்தியும் பொருள் நிலையும் மீண்டும் பலம் பெறுவதற்கானபடி அமைக்கப்படும். இதற்காக சர்வ தேச சம்பந்தம் பலவழிகளில் பலப்படுத்தப்படும்.

"சமாதான காலத்தைப் போல் யுத்த காலத்திலும் ஜனங்களின் விருப்பப்படிதான் அயல் நாட்டு திட்டம் போடப்படும். நாம் ஸ்வதந்திர மக்களாக வாழவேண்டுமானால் சமரஸமான முறையில் உண்டாகக்கூடிய பயன்களைப்பற்றி பொதுவான சர்ச்சைகள் நடத்தி ஒவ்வொருவருக்கும், தேசத்திற்கும் ஏற்பட்டுள்ள பொறுப்பு முதலில் அங்கீகரிக்கப்படவேண்டும்."

---

## அயல் நாட்டில் நடக்கும் யுத்தத்திற்கு யுனைடெட் ஸ்டேட்ஸின் பொருளுதவி.

### ரூஸ்வெல்டின் வேண்டுகோள்.

"இன்று முதல் எல்லோரும் பொருளைத் திரட்டவேண்டும். மனிதர் பேரில் ஒருவருக்கொருவருள்ள பக்ஷத்திற்காகவும், நாகரீகத்திற்காகவும் தன்னிச்சையாக அமெரிக்காவில் 600 நகரங்களுக்கு மேலாக அயல் பொருள் திரட்டவேண்டும். பொது சேவைக் நாட்டு யுத்தப்பொருளுதவிக்கு நன்கொடை வாங்கவேண்டும். காட்டு யுத்தப்பொருளுதவிக்கு நன்கொடை வாங்கவேண்டும். பொது சேவைக் காகவும், நன்கொடை வாங்கும் பழக்கமுள்ளவர்கள் இந்நிதிக்கு வசூலிப்பார்கள்.

"இரண்டு பெரிய தொழில் கட்சி ஸ்தாபனங்கள் இந்த வேலைக்கு ஒத்துழைக்க முன் வந்திருக்கின்றன. லக்ஷக்கணக்கான ஜனங்கள் அவகாச மேற்படும் சமயத்தில் தங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டி வெற்றிகரமாக வசூல் செய்வார்கள்.

"பொது நிதிக்குச் சந்தா செலுத்துவதின் மூலம் உங்கள் அண்டை வீட்டுக்காரர்களின் க்ஷேமத்தைக் கருதி நடந்து வரும் பழக்கம் உங்களுக்கு இருக்கிறது. அதுபோல் இத்தகைய உதவியை அயல் நாட்டார்களுக்கு நாம் செய்ய வேண்டியது அவசியம்.

"இதுவரையில் நாம் வாங்குவதற்குச் சேகரித்த பலத்தைப்போல இப்பொழுது கொடுப்பதற்கும் பொருள் சேகரிக்கவேண்டும். ஏனென்றால் நான்கு மடங்கு தேவை ஏற்பட்டிருக்கிறது. உள்நாட்டிலும், அயல் நாட்டிலும் நாம் தேவைக்குத் தகுந்தபடி ஈடுபடவேண்டியிருக்கிறது. இனிமேல் வரப்போகும் சண்டைக்குத் தயார் செய்வதற்காக நாம் அதிக சிக்கன முறையைக் கையாள வேண்டும்.

### நன்கொடை கொடுப்பது சுலபமான காரியமில்லை.

"நம்மனில் அநேகருக்கு இந்த வருஷத்தில் பொருள்கொடுப்பது மிகவும் கஷ்டமாயிருக்கும். யுத்தத் தேவைகள் இப்பொழுது அதிகரித்திருக்கிறது. போர்முனை செலவும் அதிகமாயிருக்கிறது. ஒவ்வொருவர் குடும்பச் செலவும் அதிகமாகயிருக்கிறது. அதனால் நமது வருவாயில் பெரும்பாகம் இவைகளில் ஈடாகின்றது. ஆனால் உங்களுடைய நன்கொடை சண்டையில் ஈடுபட்டிருக்கும் நமது தேசத்தாரின் பலத்தை அதிகரிக்கச் செய்வதோடு பேராசையும், பலாத்காரமும் நிறைந்திருக்கும் இந்த உலகத்தில் ஜனநாயகத்தில் அமெரிக்கர்கள் நம்

பிக்கை வைத்திருப்பதையும் மனிதர்கள் ஒவ்வொருவரும் ஸ்வதந்திரமாக இருக்க வேண்டுமென்பதை அமெரிக்கர்கள் பெரும்பான்மையாகப் பாராட்டுவதையும் ரூபிக்கும்.

"அநேக இடங்களில் வெடிகுண்டு வீழ்ச்சியினால் வெளியே துரத்தப்பட்டு தைரியத்துடன் இருந்து வரும் குடும்பத்தார்களுக்கு உங்களுடைய நன்கொடை புத்துணர்ச்சியளிக்கும். வெகு தூரத்திலிருக்கும் ஆஸ்பத்திரிகளில் விலையுயர்ந்த மருந்துகள் சேகரிக்க உதவியாக இருக்கும். எளிய தேசத்தார்கள் பட்டினியால் தெருக்களில் விழுந்து சாவதைத் தடுப்பதற்கு கப்பல் நிறைய உணவுப் பொருள்கள் அனுப்புவதை நன்கொடையினால் துரிதப்படுத்தலாம்.

"நமது பொது விரோதியைச் சண்டை செய்யும் நேசதேசத்தாரின் பலத்தை அதிகரிக்கச் செய்யலாம். உங்கள் யுத்தக் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தாய்மாருக்கு உதவியாக அவள் குடும்பத்தைச் சரிவர பாதுகாப்பதற்காக இதை உபயோகப்படுத்தலாம்.

"இப்பொழுது அநேக நர்ஸுகள் ஆயுதப்படைகளில் அமர்ந்திருப்பதால், பாக்கியுள்ள நர்ஸுகளுக்கு இரண்டு மடங்கு அதிகமானவேலை செய்யும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவர்களுக்கு அதிகப்பொருள்கள் கொடுத்து பன் மடங்கு உதவியளிக்கச் செய்யலாம். போர் வீரர்கள், மாலுமிகள், கப்பற்படைத் துருப்புகள் சிலகாலம் ரஜாவில் வந்திருக்கும் பொழுதும், வெகு தூரத்திலிருக்கும் போர்முனைக்குப் போகும் மார்க்கத்தில் நடுவில் தங்கியிருக்கும் பொழுது நீங்கள் அவர்களுக்கு விருந்தளிப்பதற்கும் இந்த நிதி உதவியாக இருக்கும்.

"மேலும் இந்த நிதியைக்கொண்டு குடும்பத்தார்களினால் சவரக்ஷணை செய்ய முடியாமலிருக்கும் சீக்காளிகள், கைகால் முடமான குழந்தைகள், பையன்கள், பெண்கள் இவர்களுக்கு போதிய உதவி அளிக்கமுடியும். மேலும் யுத்தத்தினால் புதிய கவலைகளும், தேவைகளும், கஷ்டங்களும் அடைந்திருக்கும் உங்களது பக்கத்துத் தேசத்தினர்களுக்கும் இதைக்கொண்டு உதவிசெய்யலாம்.

"இந்தப் படையெடுப்புகளின் வெற்றியும், தோல்வியும், நகரங்கள், பட்டணங்கள் இவைகளில் வசிப்பவர்களும், இந்த ஒலிபரப்பைக் கேட்பவர்களுமான உங்களில் ஒவ்வொருவரின் உதவியில்தான் இருக்கிறது.

"உதாரணமாக நன்கொடையால் ஒவ்வொருவரும் ஸ்வதந்திரத்துடனும், நீதியுடனும், பந்தோபஸ்துடனும் உயிர் வாழ்வதற்கு இயற்கையான உரிமை இருப்பதில் நமது தேசத்தார்களுக்குள்ள நம்பிக்கையை உலகத்தார் முன் காட்டக்கூடும்.

"இந்தப் பொது நிதியும், யுத்த நிதியும் வெற்றிகரமானால் முடிவில் நாகரீகமும், மனுஷத் தன்மையும் வெற்றியடைவதற்கு இது சாதகமாக இருக்கும்".

---

## அமெரிக்க உணவு ஸப்ளை.

(அமெரிக்க விவசாய மந்திரி, மிஸ்ட்டர் கிளாட் விகார்டு அறிவித்தது).

"குத்தகைக் கடன் மசோதாப்படிக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட உணவுக் கப்பல்கள் சமீபத்தில் அதிகமாக்கப்பட்டன. இவை மீண்டும் அதிகரிக்கும்.

"இவ்வருஷத்தில் உணவுப் பண்டங்களும், பருத்தியும், மற்றும் குடியானவர்கள் பயிர்செய்யக்கூடிய ஒவ்வொன்றும் மிக அதிகமாகவே உற்பத்தி செய்யப்பட்டன.



"இவைகளைக்கொண்டு தரை, கடல், ஆகாயம் முதலியவைகளில் சண்டையிடும் நேசநாட்டுத் துருப்புகளுக்கும் உள்நாட்டிலுள்ள ஸ்திரீ புருஷர்களுக்குப் போதுமான உணவு அளிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி நாம் நன்றி செலுத்துகிறோம்.

"பட்டாணி, பீன்ஸ் முதலியவைகளில் சென்ற வருஷத்தைக் காட்டிலும் இரண்டு பங்கு; முட்டையில் 7,00,00,000 டஜன் அதிகமாயும், 4,00,00,00,000 பவுண்டு பால் அதிகமாயும் கிடைத்திருக்கின்றன. முன்பைவிட 10,50,00,000 ஆடுகள் தோட்டங்களில் விடப்பட்டு 3,50,00,00,000 கலம் (Bushel) அதிகமாகக் கிடைத்திருக்கிறது. 1941 ஏப்ரல் முதல் ஆகஸ்டு 1௳ வரை 60,00,00,000 பவுண்டு புஞ்சை தானியங்களும், பன்றி மாமிசம், கொழுப்பு, பாலடை, கட்டிப்பால், முட்டை முதலிய உணவுப்பண்டங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

"சமீபத்தில் இது இன்னும் அதிகமாக அனுப்பப்படும். இவ்வித உற்பத்தியில் ஈடுபடுவது விவசாயிகளுக்கு அதிக சிரமமானாலும், இந்த மாதிரி நடந்துகொண்டால்தான் வெற்றி சீக்கிரம் கிட்டும்."

---

## புதிய சைனா.

(பொக்கிஷ மந்திரி, ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்).

சீனர்கள் தங்களுடைய தேசம் முன்னேற்றமடையவேண்டுமென்று ஆழ்ந்த தீர்மானம் கொண்டிருக்கின்றனர். தூரக்கிழக்கில் அமைதி பொருந்திய நாகரீகத்தைப் பரவச்செய்ய புதிய சைனா தலைமை வகிக்குமென்றும் நினைத்திருக்கின்றனர். 2½-வருஷங்களுக்குமுன் நான் சைனாவிற்குச் சென்றபோது அதிக பலமும், உணர்ச்சியும் சீனர்களிடையே இருக்கக் கண்டேன். இவ்விரண்டையும் ருஷ்யர்களிடமும் இருக்கக் கண்டேன்.

ஜப்பானியப் படையெடுப்பு சைனாவில் புரட்சி ஆட்சி இருக்கும்போது ஏற்பட்டிருந்தால் சைனா ஜப்பானியர் வசமாகி கலைந்துபோயிருக்கும். ஆனால் தற்போதுள்ள சைனாவில் ஜப்பானிய முறைகள் பயன்படவில்லை.

"நாம் சர்வ தேச சம்பந்தங்களில் ஒத்துழைப்பையும், ஜனநாயக ஆட்சி கட்டுப்பாட்டையும் பரவச்செய்து சைனாவிற்கு உதவி ஏற்படும் வண்ணம் நடந்துகொள்ளவேண்டும். இங்கிலாந்து, ருஷ்யா, அமெரிக்கா, எதிரி வசமான நாடுகள் முதலியவைகளைப்போல் சைனாவும் வருங்காலத்தை அமைத்துக்கொள்ள நாம் உதவுவோம்."

**டாக்டர் வெல்லிங்டன் கூ சீன ஸ்தானீகர்.**

"கடந்த ஐந்து வருஷ காலமாக ஆசியாவில் மிக பலம்பெற்ற சைனா ஜப்பானோடு சண்டைசெய்து வருகிறது. இந்த இரண்டு நாடுகளுக்குள்ள பலம் சமமானதாக இல்லை. இந்த மாதிரி சமபலமில்லாத வேறே எந்த நாடுகளுக்கும் சண்டைகள் ஏற்பட்டதில்லை. தனக்கு ஏற்பட்ட சிரம நிலைகளுக்கிடையில் சரியான காரணத்திற்காகவும் ஸ்வதந்திரத்தை விரும்பும் எல்லா நாடுகளுக்காகவும் தான் சண்டை போடுவதாக சைனா நினைத்துவருகிறது. அதாவது ஸ்வதந்திரத்தைக் காக்க ஆக்கிரமணத்தை எதிர்த்துவருகிறது. மேலும் தற்சமயத்தில் ஜனநாயக நாடுகள் பூராவும் சைனாவுடன் ஒன்றுசேர்ந்திருக்கின்றன. இதனால் அதிக ஊக்கம்பெற்று கொடுமை, கொடுங்கோல் பெற்ற நாட்டை எதிர்த்துவருகிறது."

**கான்டர்பரி மத குரு (The Archbishop of Canterbury).**

"சைனாவின் ஸ்வதந்திரம் நிலைநாட்டப்பட்டு பத்திரமாக இருக்கும் சமயத்தை ஆவலாக நாம் எதிர்பார்க்கிறோம்."

## ஹாலந்து மறுபடி தலைதூக்கும்.

(பீல்டு மார்ஷல் ஸ்மட்ஸ் ப்ளோயம் போன்டீன், அக்டோபர் 1-தேதி எழுதியது).

"முன்பு மிக நெருக்கடியாக இருந்த 80-வருஷத்தின் முடிவில் ஹாலந்து தலைதூக்கிய மாதிரி தற்போதும் கிளம்பும்.

"தென் ஆபிரிக்காவில் இருக்கும் நமக்கு தற்போதுதான் தாய்நாடான ஹாலந்து மிக நெருக்கமுள்ள நாடாக இருக்கிறது.

"நாஸிக் கொடுமையை நிராகரிக்க தென் ஆபிரிக்கா செய்யும் உதவி யெல்லாம் ஹாலந்தின் நன்மைக்கே முடியும்.

"அதன் விடுதலைக்குப் பாடுபடும்போது தென் ஆபிரிக்கா சரியான கௌரவ நிலையை அடையும். ஆபிரிக்க மக்களுக்கும் அவ்வித கௌரவம் ஏற்படும்."

---

## 11-வது சீக்கியர்களின் பட்டாளம்.

(ஸர் பாட்ரிக் கேடெல் என்பவர் எழுதியது).

ஸூடானிலிருந்து அபிஸீனியாவுக்கு இதாலியர்கள் தோற்று ஓடும்பொழுது கேரு என்ற இடத்தில் முகாம் செய்திருந்த 11-வது சீக்கியர்கள் பட்டாளம் பக்கத்திலிருந்து வெற்றிகரமாகத் தாக்கிற்று. அதனால் எதிரிகள் சைனியம் மிகவும் அலங்கோலமாகப்போய், அகோர்டாட் என்னுமிடத்திற்குள் தப்பி ஓட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கேரன் என்ற இடத்தில் எதிரிகளுடன் ஏழு வாரங்கள் வரை மிகவும் கடுமையாக நடந்தபோரில் அந்தப் பட்டாளமும் கலந்துகொண்டது. முதல் யுத்தத்தில் அப்பகுதி இதாலியச் சைனியத்தின் இடது பக்கத்திலுள்ள படைப் பகுதியை வெற்றிகரமாகத் தாக்கிற்று. இரண்டாவது சண்டை வெற்றிகரமாக முடிவடையும்வரை அப்பகுதி முன்னணியிலேயே இருந்துகொண்டு சண்டை செய்துவந்தது. அங்குதான் அந்தப்பகுதியின் வாலிப முஸ்லீம் அதிகாரி, லெப்டினன்ட் முகமத் ஸித்தீக் என்பவர் தான் காயமடைந்தபோதிலும், தன் வீரர்களை சாமன்னு ரிட்ஜ் என்ற இடத்தைத் தாக்குவதற்கு நடத்திச் சென்றார். அதற்காக ராணுவ கௌரவச் சிலுவை ஒன்று அவருக்குக் கொடுக்கப்பட்டது.

அப்பட்டாளம் இராக்கிலும், ஈரானிலும் ஏற்பட்ட மிகவும் கஷ்டமான நிலையை மிகவும் தைரியமாகவும், வீரத்துடனும் சமாளித்து நின்றது.

ஸிரெனேகாவில் நடந்த கடுமையான போரில் இப்பட்டாளம் ஜெர்மானியரை யும், இதாலியர்களையும் தாக்கித் தோற்கடித்துவிட்டது. அதன் பயனாக அவர்கள் டெர்னாவைப் பிடித்ததில் அப்பகுதிக்கு பெரிய கீர்த்தி ஏற்பட்டுவிட்டது. பட்டாளத்தில் ஒரு பகுதி வெகுதைரியத்துடன் துப்பாக்கி முனைகளினால் அங் குள்ள விமானக் கூட்டத்தைத் தாக்கிற்று. அதில் ஏராளமாக எதிரி விமானங்கள் பழுதுபட்டுப்போய் யுத்தத்தில் ஈடுபடமுடியாமல் போய்விட்டன. இம்மாதிரி அதிக தீரத்துடன் முன்னேறித் தாக்கியதில் அப்பட்டாளம் அதிக சிரமமில்லாமல் அப்பட்டணத்தையே பிடித்துக்கொண்டது.

### ஒழுங்குடனும் உறுதியுடனும் நிற்பது.

இந்தியாவிலுள்ள போர்செய்யும் ஜாதியர்களில் மிகவும் பிரபலமானவர்கள் சீக்கியர்கள்தான் என்று உலகம் பூராவும் தெரிந்துகொண்டிருக்கிறது.

ஸ்காத்லாந்திலுள்ள கமிரோனியன்களைப்போல மற்ற நாடுகளில் மதப்பற் றுள்ள ஜாதியார்களிலும் நல்ல வீரர்கள் உண்டு. அவர்கள் தங்கள் மதக்கோட்பாடு களை அழிய விடுவதைக்காட்டிலும் சண்டையில் உயிர் துறக்கத் தயாராக இருக்கி றார்கள். சீக்கியர்கள்போல மதப்பற்றுதலை விடாமல் மிகவும் உறுதியுடன் ராணு



வத்தில் இருப்பவர்கள் வேறு எந்த ஜாதியாரும் இல்லை. இந்த மதத்தில் சேர்ந்தா லொழிய அவனைச் சீக்கியர் என்று சொல்லமுடியாது. அவர்களின் நேர்த்தியான தோற்றத்தைப் பார்த்து அவ்வீரர்களின் பேரில் நமக்கு அபிலாஷை உண்டாகலாம். பஞ்சாப் சண்டைகளில் பிரிடிஷ் படைகளுக்கு எதிராக சுத்த வீரர்களடங்கிய படையான கால்ஸாப்படை செய்த மகா யுத்தத்தினால் இன்னும் அதிக அபிலாஷை நமக்கு ஏற்படும்.

இந்திய ராணுவத்தில் சீக்கிய வீரர்கள் சேர்ந்துகொண்டபிறகு அவர்களின் செயல்கள் அவர்களுக்குக் கியாதியைக் கொடுத்திருக்கிறது. ஆப்கானிஸ்தானத்தி லும், ஸூடானிலும், மாக்நீல்ஸரபா என்ற இடத்தில் இரண்டாவது படைப்பகுதி ஒழுங்குபட்டு, நிலைத்து நின்றபொழுது, அந்தப் பகுதிகளின் வீரியம் எப்படி யென்று காட்டப்பட்டிருக்கிறது. எல்லைப்புறத்தில் கொள்ளைக் கூட்டத்தார் களுக்கு எதிராக நடத்திய அநேக நடவடிக்கைகளில் அவர்களுக்கேற்பட்டிருந்த போர் உத்ஸாகத்துடன், மதஉணர்ச்சியும் சேர்ந்தபொழுது அவர்களின் வீரியம் அதிகமாகக் காணப்பட்டது.

சீக்கியர் படைப்பகுதியில் அரைவாசி சீக்கியர்கள். மற்ற பாதி மூந்திய கால்ஸா படையில் சீக்கியர்களுடன் தோழர்களாக இருந்த பஞ்சாபி முகம்மதியர் கள். இன்னும் அநேக காலாட்படைகளில் சீக்கியர்கள் கூட்டம் இருந்திருக் கிறது. குதிரைப்படைகளிலும், சீக்கியர்கள் பகுதி இருந்திருக்கிறது.

சிறு கோட்டைகளையும், ஸ்தானங்களையும் தற்காப்புச் செய்வதில் சீக்கியர்கள் விசேஷ பிரக்யாதி பெற்றிருக்கிறார்கள். வெற்றிகிடைக்குமிடங்களில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இல்லாவிடில் கடைசி மனிதன் உயிருடன் இருக்கும் வரையில் சண்டை செய்திருக்கிறார்கள். அம்மாதிரி சம்பவங்கள் பின்வருமாறு :—

'கைட்ஸ்' படையைச் சேர்ந்த சீக்கியத் துருப்புகள் காபூலிலுள்ள ரெஸி டென்ஸியைப் பாதுகாத்தது. முதல் படைப்பகுதியைச் சேர்ந்த ஒரு கூட்டத் தார் சிட்ராலிலுள்ள கோட்டையைப் பாதுகாத்தது. நாலாவது படைப் பகுதியைச் சேர்ந்த ஒரு வகுப்பு ஸாராகார்கி என்ற இடத்திலுள்ள ஒரு ஸ்தானத்தைப் பாதுகாத்தது.

1914 முதல் 1918 வரை நடந்த யுத்தத்தில் இந்தப் பட்டாளத்தின் சேவை பிரான்ஸ் முதல் சைனா வரை வெகுதூரம் வியாபித்திருந்தது. சைனாவில் ஸிங்டா வோ என்ற இடம் ஜெர்மானியர் பலமாகக் கைப்பற்றிக் கொண்டிருந்ததில், அதை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்ட பட்டாளத்துடன், நாலாவது பட்டாளம் சேர்ந்துகொண்டது. பிரான்ஸில் நடந்த சண்டைகளில் சிலவற்றில் இந்தப் பட்டாளங்களுக்கும் பெருத்தசேதம் ஏற்பட்டது. நோவா சேப்பல்லி என்ற இடத்திலும், ஒய்பிரஸ் என்ற இடத்திலும், இரண்டாவது முறையே, ஐந்தா வது பட்டாளமும், காலிபோலியில் முதலாவது பட்டாளமும், குத்அல் அமாரா வுக்கருகில் மூன்றாவது, நான்காவதுபட்டாளமும் சேதமடைந்தது. சீக் (Sikh) ஜாதியாரின் பிடிவாதமாகச் சண்டைசெய்யும் ஆண்மைக்காக யுத்த ஆரம்ப காலங் களில் போருக்கு ஆட்கள் சேகரிப்பது மிகவும் குறைவாக இருந்தபோதிலும், யுத்தத்தில் அநேகம் சேதமடைந்தனர் என்ற செய்தி இந்தியாவுக்கு எட்டிய வுடன் ஏராளமான பேர்கள் படையில் சேர்ந்துகொண்டார்கள். இந்த யுத்தத்தில் இரண்டாவது பட்டாளம் செய்த சேவைக்காக அதற்கு 'ராயல்' என்ற பட்டமும் கிடைத்திருக்கிறது.

இத்தகைய கியாதியினாலும் இந்த யுத்தத்தில் இன்னும் அதிக கியாதி பெறுவதற்கும் சீக்கியர் பட்டாளத்துக்கு அதிக சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்களும்அதன் பயனை அடைவார்கள்.

---

## டாங்கியின் அபிவிருத்தி.

டாங்கிகள் முதல் முதலில் 1917-ல் நடந்த காம்பிராய் சண்டையில் உபயோகப் படுத்தப்பட்டன. இவைகளைக்கொண்டு எதிரி வரிசைகளைப் பிளந்துகொண்டு காலாட்படைகள் சுலபமாக முன்னேறுவதற்கு வசதி தேடுவதுதான் நோக்கமாக இருந்தது. மேலும் அந்தக் காலத்தில் பள்ளங்களிலிருந்துகொண்டு மறைந்து சண்டைகள் நடந்துவந்ததால் அப்போது உபயோகிக்கப்பட்ட டாங்கிகள் நீளமாயும், பளுவாயும், மெதுவாகச் செல்லக்கூடியவைகளாவும் இருந்தன. ஒரு மணிக்கு 2, 3 மைல் தூரம்தான் செல்லமுடியும்.

ஆனால் 1918-க்குப் பிற்பட்டு அதிகமான அபிவிருத்தி செய்யப்பட்டது. நடுத்தரமான விக்கார் (Vicker) டாங்கிகள் மணிக்கு 20 மைல் வீதம் செல்லக் கூடியவைகளாகக் கட்டப்பட்டன. ஆனால் அவைகள் பளுவாயும் அதிகச் செலவு பிடித்ததாயும் இருந்தன. இவைகளை அதிக எண்ணிக்கையில் தயார் செய்ய முடியவில்லை. அதற்காக சிறிய டாங்கிகளின் உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டது. இதோடு டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களும் தயாரிக்கப்பட்டு வந்தன. மிகவும் வேகமாகச் செல்லக்கூடியவைகளும் லேசாயும் இருக்கக்கூடியவைகளான க்ரூயிஸர் டாங்கி என்ற இனம் தயாரிக்கப்பட்டு கவசமணிந்த படைகளுக்கு உதவிபுரிந்து வேவு பார்ப்பதற்கும் பக்கவெட்டுத் தாக்குதலும் உபயோகிக்கப்பட்டன. இவைகளுக்கு பளுவான டாங்கிகள் நடுவிலிருந்து கொண்டு உதவிபுரிந்து வந்தன.

கூட்டமாகச் சென்று தாக்குவதை ஜெர்மானியர் கையாண்டு வருவதால் அவர்கள் லேசான டாங்கிகளை உபயோகிக்கிறார்கள். சமீபத்தில் தான் பளுவான டாங்கிகளும் உபயோகிக்கப்படுகின்றன. அவைகளில் 4½ பவுண்டு குண்டுகள் போடக்கூடிய பீரங்கிகளை டாங்கிகளில் வைத்தனர். ஆனால் பிரிடன் அதற்குப் பிரதியாக 6 பவுண்டு குண்டு சுடக்கூடிய பீரங்கியை டாங்கிகளில் வைத்தது. லேசான டாங்கிகளில் பெரிய பீரங்கிகளை வைப்பதால் நன்றாகப் பாதுகாக்கப் பட்ட படையை எதிர்க்க முடியாது என்று தெரியவருகிறது.

---

## நீங்கள் அறியவேண்டியது.

### ஸ்விம்மன்டோஸ் (*Swimmandos*) தேற்சி பெற்ற புதிய படை.

நதிப்பிரதேசங்களில் தாக்குதலை நடத்த ஒரு படையைத் தயாரித்து வருவதாக அமெரிக்க யுத்த இலாகா அறிவித்திருக்கிறது. இப்படைக்கு ஸ்விம்மன் டோஸ்படை என்று பெயர். இதில் இஞ்ஜினியர்கள் அதிக அக்கரையைக் காண்பித்திருக்கின்றனர்.

அமெரிக்கக் கடற்கரைப் பிரதேசங்களில் பயிற்சிபெற்ற படைகள் குறுகிய நதிகளின் வழியாக துருப்புகளை நடத்திச் செல்ல பழக்கம் பெறுகின்றன. முஸ்தீப்புடன் நதிகளைக் கடந்து எதிர் கரையில் போய் தாக்கவும் பழக்கப் படுகின்றன.

ஐரோப்பாவின் மேற்குப் பக்கத்திற்குச் சமமான பிரதேசத்திலும், நதிப் பாங்கான இடங்களிலும் பயிற்சியளிக்கப்படுகிறது. நதியைத் தாண்டி இறங்கும் படைகளுக்கு கொடை விமானப் படையும், சண்டைப் படகுகளும் உதவியளிக்கும்.



## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சிமுறை.

**1942—** **பிரஸங்கம் 116** மணி.

| | | | | |
|---|---|---|---|---|
| அக்டோபர் | 10, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் சதுக்கம். | மாலை | 6.00 |

**பிரஸங்கம் 117—(3-வது பிரிவு).**

| | | | | |
|---|---|---|---|---|
| 17, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் சதுக்கம். | | மாலை | 7.45 |
| 20, செவ்வாய்க்கிழமை | ஆலங்குடி | ... | ,, | 7.00 |
| | வடகாடு | ... | ,, | 7.30 |
| 21, புதன்கிழமை ... | மழையூர் | ... | ,, | 7.00 |
| | கரம்பக்குடி | ... | ,, | 7.30 |
| 22, வியாழக்கிழமை ... | பூங்குடி | ... | ,, | 7.00 |
| | சத்தியமங்கலம் | ... | ,, | 7.30 |
| 23, வெள்ளிக்கிழமை... | குழிபிறை | ... | ,, | 7.00 |
| | செவலூர் | ... | ,, | 7.30 |

---

**புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் மேற்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| செவ்வாய்க்கிழமை | ... | 20—10—42 | ... | ராமச்சந்திரபுரம். |
| புதன்கிழமை | ... | 21—10—42 | ... | கரம்பக்குடி. |
| வியாழக்கிழமை | ... | 22—10—42 | ... | கீழாநிலை. |
| வெள்ளிக்கிழமை | ... | 23—10—42 | ... | புதுக்கோட்டை. |

விளம்பரம்.

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்த

## நம்முடைய வீரம்பொருந்திய அயலான்

என்னும் யுத்தப் படம்

பொன்னமராவதி வலம்புரி டாக்கீஸில்

10—10—42 முதல் 13—10—42 வரை காண்பிக்கப்படும்.

தேசிய யுத்த முன்னணி நிலயம்

இதை ஜனங்களுக்குச் சிபார்சு செய்கிறது.

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—13-10-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ அக்டோபர் ௴ 17௳ [ந. 117

பிரஸங்கம் CXVII.

## தற்கால நிலை.

I

மிஸ்டர் சர்ச்சில்

## வெற்றியில் முன்பைவிட தற்சமயத்தில் அதிக நிச்சயம்.

### வெற்றி மார்க்கத்தின் முடிவுவரை செல்லவேண்டும்.

#### எதிரிக்கு பயமேற்பட்டிருக்கிறது.

நமது சத்ருக்கள் சமீப காலத்தில் அதிகப் பேச்சுப்பிடித்தவர்களாக இருந்துவருகிறார்கள். ரிப்பன்டிராப், கோயரிங், ஹிட்லர் யாவரும் கவனம் செலுத்தத்தக்க விதமாக அதிகமாகப் பேசிவருகிறார்கள். அவர்களின் மனோ நிலையை பகிரங்கப்படுத்திவருவதாலேயே அவர்களின் வார்த்தைகளில் கவனம் செலுத்தப்படுகிறது.

அவர்களுடைய வார்த்தைகளில் ஒரு விஷயம் தெளிவாகக் காணப்படுகின்றன. அவர்களுக்கு ஒரு விதமான பயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த பயம் அவர்களுடைய டம்ப வார்த்தைகளையும் மீறி வெளியேவருகின்றது.

தாங்கள் செய்துவரும் குற்றங்களையும், சட்டத்தினால் ஏற்படக்கூடிய தண்டனையையும் உணர்ந்திருப்பதாயும் காணப்பட்டனர். இந்த நிலைமைக்கும் 1940-ல் இருந்த நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்ப்போம். அப்போது பிரான்ஸ் விழுந்து, கிழக்கு ஐரோப்பா பூராவும் எதிரி வசமடைந்தது. முஸோலினியின் கீழ் இதாலி நமக்கு விரோதமாகக் கிளம்பியது. அந்த சமயத்தில் பிரிடன் ஸ்வதந்திரத்தையும், மனிதவர்க்கத்திற்குள்ள உரிமைகளையும் காக்க தனியே நின்று சண்டை செய்தது.

அந்த சமயத்தில் நமது எதிரிகள் செய்த சொற்பொழிவுகளையும் கேட்டிருக்கிறோம். இப்போதும்தான் கேட்கிறோம். இந்த இரண்டு வருஷ காலம் சண்டை செய்ததில் ஆக்கிரமணம், யுத்தம், ரத்தம் சிந்துவது, எளியாரை அடக்குவது முதலிய கொடிய முறைகளைக் கையாண்ட நமது சத்ருக்கள் தான் செய்த குற்றங்களை உணரும்படியாக ஏதோ சில மாறுதல்கள் விளைந்திருக்கின்றன என்று மாத்திரம் தெரியவருகிறது. மற்றொரு விஷயம் கவனிக்கப்படவேண்டும்.

அது வெகு நீண்ட கதையானாலும் அதைத் தீர்மானிக்கவேண்டிய நாள் கிட்டிவருகிறது.

ஹிட்லரின் பேச்சில் அவனது வெற்றிகளுக்குத் தகுந்த கவனம் செலுத்தப் படவில்லையென்ற குறை காணப்படுகிறது.

"நான் அடைந்த வெற்றிகளைப் பாருங்கள். படையெடுத்து அடக்கிய நாடுகளை கவனியுங்கள். மற்றவர்களின் நாடுகளில் நான் உட்புகுந்திருக்கும் தேச விஸ்தாரத்தைப் பாருங்கள். நான் அடைந்த லாபங்களையும், கொன்ற மனிதர்களையும், கைதி செய்தவர்களையும் பாருங்கள். இவைகளோடு நேசநாடுகள் அடைந்து உள்ள லாபங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். என் அவர்கள் அதைரியப்படவில்லை. என்னுடைய வெற்றிகளுக்கும் அவர்களுடைய தோல்விகளுக்கும் முன்பாக எவ்வாறு அவர்களால் தைரியமாக இருக்கமுடிகிறது?" என்று கூறுகிறான்.

## ஹிட்லரின் குறை.

இவ்வார்த்தைகள் அப்படியே அவனால் கூறப்பட்டவைகளில்லையானாலும், இதுதான் அவனுடைய குறை.

இப்பிரச்னை அவனைக் கலங்கச்செய்து கோபப்படுத்துகிறது.

இப்பிரச்னையை நினைக்கும்போது அவன் திடுக்கிட்டுப்போகிறான். ஏனென்றால் பிரமாத வெற்றிகளும், ஏராள ஜயங்களும் குறைந்துவிட்டன. கடந்த இரண்டு வருஷங்களாக அவனது ஆசைகள் மங்கிப்போயின. அதோடு பிரிடன், அமெரிக்கா, சைனா முதலியவை எவ்வளவோ சிரமங்களுக்கிடையில் மீண்டும் மீண்டும் பலமடைந்துவிட்டன.

நாம் அடைந்த தோல்விகளை நாம் வெற்றியடைவதற்குக் காரணமான படிக்கட்டுகளாக அமைத்துவருகிறோமென்பதை அவன் ஆச்சரியத்துடன் கவனிக்கிறான். அதேவிதமாக அவனுடைய வெற்றிகள் அவனை அதோகதிக்குக் கொண்டுவருகின்றன.

மெதுவாகவும் எதிர்பாராதவிதமாயும் நாசகாலம் தன்னை அணுகிவருவதைப் பார்த்தும், வெற்றி எட்டிப்போவதைப் பார்த்தும் தெய்வத்தை நிந்திக்கிறான்.

ஆனால் இவ்வளவுக்கும் ஒரு சமாதானம் இருக்கிறது. பிரிடிஷார், அமெரிக்கர் போன்ற ஜனங்கள் சமாதான காலத்தில் தங்கள் பாதுகாப்பைப்பற்றி சிந்திக்காதவர்கள். தோல்வியே கண்டறியாதவர்களாதலால் ஜாக்கிரதை உணர்ச்சியோ, எத்தகைய கவலையோ இல்லாமல் வாழ்ந்தவர்கள். யுத்தம் மிகவும் கேடானது, எனவே, இனி அது ஒருபோதும் தலைதூக்காது என்று நம்பியிருந்தவர்கள். எதிரிகளோ நெடுநாளாக ரகசியமாக யுத்தத்திற்குத் தயார்செய்து வந்தவர்களாதலால் முதலடியில் ஓரளவு வெற்றிபெற்று, காட்டுமிராண்டித்தனமாக ஈடுபட்டனர். ரஸாயன சாஸ்திரமும், பயிற்சியும் எவ்வளவு தூரம் கொடிய முறைகளைக் கற்றுக் கொடுக்குமோ, அவ்வளவு தூரம் கற்றுக்கொண்டு ஆக்கிரமணம், அழிவு முதலியவைகளைச் செய்தனர். யுத்தத்திற்குத் தயாரில்லாத நாடுகளும், சமாதான வாழ்க்கையிலிருந்தவர்களும் மடிந்தனர். இவைகளைக்கொண்டு கெட்ட ஸ்வபாவமுள்ள எதிரிகள் குதூகலித்தனர்.

## அடுத்த பகுதி.

ஆனால் முன் சொன்னவைகள் யுத்தத்தின் முடிவு பகுதியல்ல. [illegible] பகுதியேயாகும். பெரிய ஜனநாயகங்கள் இந்த யுத்தத்தில் எஞ்சியிரு[illegible] யானால் அடுத்தபடியான ஒரு கட்டம் அவசியம் குறிக்கப்படவேண்டும். [illegible] பற்றித்தான் நான் பிரஸ்தாபிக்க விரும்புகிறேன்.

நமது சாம்ராஜ்யத்திற்கும், பிரிடிஷ் தீவுகளுக்கும் ஒரு புகழ் ஏ[illegible] காகவே நாம் இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் தனியே நின்று சண்டை[illegible] அப்போது கிடைத்த அவகாசத்தில் நாகரீகம் படைத்த நாடுகளின் ஒன்று சேர்த்து குற்றவாளிகளைத் தண்டிக்கக்கூடிய முஸ்தீப்பு பெற்[illegible]



நார்வேயிலுள்ள வடமுனையிலிருந்து பயோனியிலுள்ள ஸ்பெயின் எல்லை வரை 2,000 மைல் தூரம் ஜெர்மன் படைகள் மேற்கு ஐரோப்பிய தேசங்களின் ஜனங்களைப் பலாத்கார கொடுமைகளால் அடக்கிவைத்திருக்கின்றனர்.

## நாஸிகளின் பலாத்காரம்.

ஹிட்லரின் வசத்திலுள்ள நார்வே, டென்மார்க், பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய இடங்களில் கலகப் புரட்சி அபரிமிதமாயிருந்துவருகிறது. டென்மார்க்கைத் தவிர மற்ற இடங்களில் நாஸிப் படைகள் சித்தமாக இருந்துவருகின்றன. ஒவ்வொரு நாளும் அந்த நாடுகளில் பிரதானமானவர்கள் கைதி செய்யப்படுகின்றனர். தூக்குத் தூக்காக சிலர் சுடப்படுகின்றனர். ஆகவே ஜெர்மன் ஜாதியினர் மீது வெறுப்பு நாளுக்கு நாள் வளர்ந்துவருகிறது.

பிரிடிஷ் கமாண்டோ படையெடுப்புகளால் அங்குள்ளவர்களுக்கு உணர்ச்சியும் அதிகரிக்கிறது. ஜெர்மன் சைனியங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் இடங்களிலுள்ளோர் சமயம் வாய்த்தால் ஜெர்மானியரை ஒரு கைபார்த்துக் கொன்றுவிடுவார்கள்.

மேலும் காவலுக்காக வைக்கப்பட்டிருக்கும் ஜெர்மன் துருப்புகளின் ஆயுதங்கள் பறிக்கப்படுகின்றன. அச்சமும், துவேஷமும் கொண்ட ஹிட்லர் தனது வசமுள்ள யுத்தக் கைதிகள்மீது தனது ஆத்திரத்தைக் காட்டி விலங்கிட்டு வருகிறான். நார்வே, பெல்ஜியம், ஹாலந்து, பிரான்ஸ் முதலிய இடங்களில் பிடித்த கைதிகளைக் கொன்று, அந்தந்த தேசத்தினருக்கு பயத்தை விளைவித்து ஸ்வாதீனப்படுத்த நினைத்தான்.

ஆகவே தங்களுக்கு இறுதியான அழிவு ஏற்படுமென்பதை நாஸிகள் உணர, உணர இக்கொடுமைகள் இன்னும் அதிகமாகுமென்பதை நான் எதிர்பார்த்திருக்கிறேன்.

நாஸிகள் மேற்கே இழைத்துள்ள அட்டூழியங்களைவிட கிழக்கே செய்திருக்கும் கொடுமைகள் இன்னும் அதிகம். ருஷ்யாவில் துருப்புகளை மட்டுமின்றி ஸ்திரீகள், குழந்தைகளையும் கூட்டம் கூட்டமாகக் கொன்று தள்ளியிருக்கிறார்கள்.

## பயங்கரக் கொலைகள்.

ருஷ்யா, போலந்து, யூகோஸ்லாவியா முதலிய இடங்களில் லக்ஷக்கணக்கான பேர்கள் நாஸிப் படைகளாலும், போலீஸ் படைகளாலும் கொல்லப்பட்டனர்.

ஐரோப்பாவின் மேற்கே ஒருவனைக் கொன்றிருந்தால் ருஷ்யாவில் கொல்லப்பட்டது 200 பேருக்குக் குறையாது. மத்திய ஐரோப்பாவில் இன்னும் அதிகம் இருக்கும்.

கீவ் நகரிலுள் ஹிட்லர் நுழைந்ததும் 54,000 பேரைச் சுட்டுக் கொன்றான்.

இத்தகைய ஒரு மனிதனுக்கு எந்த விதமாகவாவது விட்டுக்கொடுப்பது, இந்த அட்டூழியங்களுக்கு ஆதரவளிப்பதாகும். சிறிதும் நாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லை.

பிரிடிஷ் யுத்தக் கைதிகளை ஹிட்லர் துன்புறுத்துவதற்கு இன்னொரு காரணமுண்டு. ருஷ்யாவில் தான் தொடுத்த இரண்டாவது யுத்தத்தில் அவனுக்கு தோல்வி ஏற்பட்டுவருகிறது. இதிலிருந்து உலகத்தாரின் கவனத்தை அப்புறப்படுத்தவே விரும்புகிறான். ஸ்டாலின்கிராட்டை ருஷ்யர் மிக உறுதியுடன் பாதுகாத்து வருகின்றனர். எங்கும் ருஷ்ய ராணுவம் சிதறவில்லை. பல இடங்களில் லெனின்கிராட் முதல் காகஸஸ் வரைத் திருப்பித் தாக்கியும் வருகிறது. ஜெர்மன் துருப்புகளுக்கும் ஏராள நஷ்டம். குளிர்காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. பிரிடிஷ் விமானப்படையெடுப்புகளும் நேர்ந்திருக்கின்றன.

## ஜெர்மனியில் அதிருப்தி.

இவ்வளவையும் கண்டு ஜெர்மன் மக்கள் திக்பிரமையடைந்து ஹிட்லரை நோக்கி ‘ஏன் ருஷ்யா மீது படையெடுத்தாய்’ என்று மௌனமாகக் கேட்கிறார்கள். உரக்கப் பேச அவர்களுக்குத் தைரியம் வரவில்லை.

ருஷ்யப் படையெடுப்புக்கு ஹிட்லரே பொறுப்பாளி என்று பீல்டு மார்ஷல் கோயரிங் அவசரமாக முன்வந்து கூறுகிறான். தற்சமயத்தில் ஹிட்லர்தான் முன்னிருந்து யுத்தத்தை நடத்துகிறான். சைனியங்கள் அவனுடைய கட்டளைகளையே நிறைவேற்றுகின்றன.

ருஷ்ய யுத்தக் கைதிகளையும், போலந்து, ஸெக்கோஸ்லாவாகியா, யூகோஸ்லாவியா, கிரீஸ் முதலிய நாட்டு வாசிகளையும் ஏராளமாகத் தூக்கிட்டு கொன்றதற்காக ஜெர்மன் போலீஸ் படைத் தலைவனான ஹிம்லருக்கு கௌரவம் பாராட்டப்பட்டிருக்கிறது. ஜெர்மனியிலும் இம்முறைகள் கையாளப்படும். ஆகவேதான் ஹிட்லர் பிரிடிஷ் யுத்தக் கைதிகளையும் கொல்லுவதாகச் சொல்லி உலகத்தாரின் கவனத்தைத் திருப்பப் பார்க்கிறான்.

## யூ படகு யுத்தம்.

ஜெர்மன் யூ படகு தாக்குதலைப்பற்றிய பிரச்னை நேசக் கட்சிக்கு இன்னும் மிகக் கவலையை அளித்துவருகிறது. ஆனால் அந்தப் படகுகளை தீவிரமாகத் தாக்குவதன் மூலமும், இன்னும் வேகமாகப் புதிய கப்பல்களைக் கட்டுவதன் மூலமும் அப்பிரச்னையைச் சமாளித்துவிடலாம். இதில் கனடா, பிரிடன், அமெரிக்க முதலியவைகள் ஈடுபட்டிருக்கின்றன. ஜனவரி முதல் இருந்துவந்த நிலைமையில் ஆகஸ்டு, ஸெப்டம்பர் மாதங்களில் நமது நிலைமை அபிவிருத்தியடைந்திருக்கிறது. நமது நஷ்டங்களை ஈடுசெய்வதற்கான பெருவாரியான கப்பல்கள் அம்மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டன. ஜெர்மனிமீதும் ஏராளமான குண்டுகளை வீசியிருக்கிறோம். பிரிடிஷ் தீவுகளுக்கு ஏராளமான அமெரிக்கத் துருப்புகள் பத்திரமாக வந்து சேர்ந்திருக்கின்றன.

ஜெர்மனி, இதாலி, ஜப்பான் முதலியவைகளைக் காட்டிலும் நமது விமான பலமும் அதிகரித்திருக்கிறது.

இம்மாதங்களில், முக்கியமாக ஸெப்டம்பர் மாதத்தில் பஸிபிக்கில் ஆஸ்திரேலியர்கள், அமெரிக்கர்களின் உதவியால் நியூ கினியில் வெகுதூரம் முன்னேறியிருக்கின்றனர்.

வீண் ஆசைகளைக் காட்டுவது எனது வழக்கமில்லை. இவை யாவும் உண்மை நடப்புகளே. லாப நஷ்டங்கள் இரண்டையும் பக்ஷபாதமில்லாமல் நிதானமாக கவனிக்கும்போது நாம் இந்த யுத்தத்தில் ஒரு தைரிய நிலையை அடைந்திருக்கிறோம். ஆகவே இச்சமயத்தில் நாம் ஊக்கத்தையும், தைரியத்தையும் கொள்ளவேண்டும்.

## நாம் முன்பைவிட பலம் அடைந்திருக்கிறோம்.

முன்பு நாம் தனியே நின்று எண்ணிக்கை அதிகமுள்ள எதிரிகளை எதிர்த்து நின்றபோதிருந்த பரபரப்பு தற்சமயத்தில் இல்லை. நம்முடன் பெரிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கின்றன. இந்நாடுகள் யாவும் தங்களையும், தங்களுடைய கௌரவங்களையும் காப்பாற்றிக்கொள்ள நினைத்திருக்கின்றன.

பயங்கரமான ஆபத்துக்கள் இன்னும் இருந்துவருகின்றன. களைப்புக் காட்டுவதோ சில்லரை விஷயங்களைப்பற்றி தகராறு செய்துகொள்ளுவதோ கூடாது.



நமது முழு பலங்களையும் ஈடுபடுத்தவேண்டும். பகுத்தறிவை உபயோகிக்கவேண்டும். விவேகம், தைரியம் முதலியவைகளைப் பயன்படுத்தவேண்டும்.

நாம் யாவரும் ஒன்றுபட்டு முன்னேறவேண்டும். கடவுளின் கிருபையால் நாம் தோல்வியடையமாட்டோம். வெற்றி சின்னங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன.

II

# ஜனாதிபதி ரூஸ்வெல்டு.

நாம் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்த முடியாதென்று நாஸிகள் பிரகடனம் செய்து வருகின்றனர். ஆனால் எல்லாப் பக்கங்களிலும் துருப்புகளை அனுப்பி வருகின்றனர். யுத்த தந்திரத்தைப்பற்றி பலவித யோசனைகளையும் செய்துவருகின்றனர்.

ஒரு விஷயத்தைப்பற்றி நாம் யாவரும் ஏகோபித்த தீர்மானம் கொண்டிருக்கிறோம். அதாவது ருஷ்யாவிலிருந்தும், சைனாவிலிருந்தும், எதிரித்துருப்புகளை அப்புறப்படுத்தவேண்டுமென்பது. இதற்காக ஜெர்மனி பேரிலும், ஜப்பான் பேரிலும் நாம் தாக்குதலைச் செய்யவேண்டும். இதற்குள்ள சமயத்தையும் இடத்தையும் இப்போது நம்மால் சொல்ல முடியாது.

தங்களுடைய யுத்த முயற்சியைச் சரியாகச் செய்யவேண்டுமென்பதில் அமெரிக்கர்கள் முன்னைக்காட்டிலும் தற்போது ஒற்றுமைப்பட்டிருக்கிறார்கள். நாமும், நமது நேசநாடுகளும்தான் வெற்றி பெறப்போகிறோம். நேசநாடுகளின் உத்ஸாகம் விருத்தியடைந்திருக்கிறது. தங்களுடைய பலம் குறைந்து வருகிறதென்று அச்சு நாடுகள் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

நேசநாடுகளுக்கு எதிராகச் செய்யப்பட்ட பிரசாரமெல்லாம் அச்சு நாடுகளுக்கு பாதகமாகவே முடிகிறது. நாஸிப் பிரசாரமும் அவர்களின் செயல்களுக்குச் சமாதானம் காட்டும் முறையை தெரிவிக்கின்றன. இதோடு ஆக்கிரமாகவே அட்டூழியங்களைச் செய்துவருகின்றனர்.

இவ்வித அட்டூழியங்களுக்குக் காரணமாக இருக்கும் நாஸித் தலைவர்களை தண்டிக்க நேசநாடுகள் தீர்மானித்திருக்கின்றன.

லக்ஷக்கணக்கான அமெரிக்கர்கள் ராணுவ முகாம்களிலும், கப்பல் தளங்களிலும், தொழிற்சாலைகளிலும் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கா, கனடா, பிரிடன் இந்த இடங்களிலிருந்து ஏராளமான கப்பல்கள் கட்டப்பட்டிருப்பதால் போக்குவரத்து பிரச்னை சமாளிக்கப்பட்டு வருகிறது.

## சாமான் உற்பத்தி அதிகரித்துவிட்டது.

தொழிலாளிகள் தாங்களாக முன்வந்திருந்தாலும் இதைத் தீர்மானிக்கப் புதிய சட்டம் ஒன்று பாஸ் செய்யப்படவேண்டும். தற்போதுள்ள 20 வயது நிபந்தனையை 18-க்குக் குறைக்கவேண்டும். இன்னும் ஒரு வருஷம் கிரமித்துப் பார்த்தால் புருஷர்களின் எண்ணிக்கைக்குச் சமமான ஸ்திரீகள் நமது யுத்த சாமான்களின் உற்பத்தியில் ஈடுபடுவார்கள். நமது சத்துருக்களைக் காட்டிலும் இவ்விஷயத்தில் நாம் மீறிவிட்டோம். இன்னும் தொழிலாளிகளைச் சேகரிக்கவேண்டும். இவ்விஷயங்களை நமது தலைவர்களே நிர்தாரணம் செய்யட்டும்.

இதைக்கொண்டுதான் நேசநாடுகளின் ஸ்வதந்திரத்தை தீர்மானிக்க முடியும். தற்போது நமக்குள்ள திட்டத்தின்படி ஜெர்மனி, இதாலி, ஜப்பான் இவைகளுடைய ராணுவ பலத்தை முறியடித்து நேசநாடுகளுக்கு பயமேற்படாமல் செய்யப்படவேண்டும்.

# வார யுத்தச் செய்திகள்.

---

## 10—10—42-லிருந்து 16—10—42-வரை.

**ருஷ்யா.**—புதிய உதவி மேலும் வராத காரணத்தினால் நாஸிகள் கொஞ் நாள் சண்டை செய்யாமலிருந்துவிட்டு, தற்சயத்தில் ஸ்டாலின்கிராட்டிற் வடமேற்கில் இருந்த தொழிற்சாலை லக்ஷியங்களைத் தாக்கிவருகின்றனர். விம னங்களிலிருந்து இரும்புத் துண்டுகளை விசியெறிந்து பயத்தை விளைவிக்கின்றன இருந்தாலும், நகரம் எதிர்த்துவருகிறது. பெரிய தொழிற்சாலைகள் வேலை செ கின்றன. இதற்குக் காரணம் யாதெனில், அங்குள்ள ருஷ்யர்கள் வீரத்தன படைத்து தைரியமாகச் சண்டையிடுகின்றன. 40 மைல் நீளத்தில் ஒவ்வொ வீடும் ஒரு கோட்டையாகயிருக்கிறது. நகரின் வெளியில் டிமோஷென்கோவி படைகள் தீவிர சண்டைசெய்கின்றனர். சிறு படகுகளில் வால்கா வழியா ருஷ்யர்களுக்கு ஸப்ளைகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் நாஸ கள் நகரைப் பல இடங்களில் துண்டிக்கப் பிரயத்தனப்படுகின்றனர். வால்க வைக் கடந்து, ருஷ்யர்களுக்கு வரும் ஸப்ளைகளையும் துண்டிக்கப் பார்க்கின்றன

நகருக்கு வடமேற்கிலும், தென்மேற்கிலும் டிமோஷென்கோ கடுமையாக தாக்கிவருகிறார். வடமேற்கில் சிறிதளவு வெற்றியும் கிடைத்திருக்கிறது. 1 நாட்கள் போர்புரிந்து ருஷ்யர்கள் டான் நதியையும் அடைந்திருக்கின்றன கஸாலின்ஸ்கயாவிற்கு அருகில் நதியைப் பல இடங்களில் கடந்தும் இருக்கி றனர். டான் நதியின் வலதுபுறத்தில் ஜெர்மானியர் பலம் பெற்றிருந்தாலும் ருஷ்யர்கள் முன்னேறி நகருக்கு உதவிகொடுத்து, முற்றுகை நிலைமை அகற்றமுடிகிறது.

காகஸஸில் க்ராஸ்னி எண்ணெய் தளங்களை நோக்கி நாஸிகள் முன்னேறி கொண்டுதானிருக்கின்றனர். டெராக் நதியை ஜெனரல் வான் கிரீஸ்டு படைக கடந்து ஆறு வாரங்களாகியும், வேறு விதமான மாறுதல் ஒன்றும் இல்லை.

கருங்கடல் முனையில் டுவாப்ஸியை நோக்கி நாஸிகள் மெதுவாகச் சிறி முன்னேற்றம் செய்திருக்கின்றனர். ஜெர்மன் அறிக்கையின்படி பனி அதிகமா காகஸில் ஏற்பட்டிருப்பதால் ராணுவ ஏற்பாடுகள் தடைபடுகின்றனவாம். ஆன டிமோஷென்கோ, ஸ்டாலின்கிராட்டில் தைரியமாகச் சண்டை செய்வதால்தான் காகஸஸை நோக்கி, ஜெர்மானியர் பெரும்வகைத் தாக்குதலைச் செய்யமுடிய வில்லை.

லெனின்கிராட்டிற்குத் தென் கிழக்கில் ஸின்யாவினோ பிரதேசத்தில் கடுமை யான சண்டை நடைபெறுகிறது. ஸ்மொலென்ஸ்க்கிலும், ரிஷெவ்விலும் புதிய சண்டை ஏற்பட்டிருக்கிறது.

**ஸாலமன்.**—ஸாலமன் தீவுக்கூட்டத்தில் ஜப்பானியர் வசத்திலிருக்கும் தீவு களில் கடல் விமானம் வழியாக நேசதேசத் தாக்குதல் செய்யப்பட்டது கப்பல்களில் இருந்த விமானங்கள் 5 எதிரிக் கப்பல்களைத் தாக்கின. கியடா போகன்வில்லி இரண்டும் தாக்கப்பட்டன. ஆறு எதிரி நாசகாரிகளில் அக்டோ பர் 5உ ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. ஒன்று சேதமாயிற்று. எதிரி கப்பல் கள் பஸிபிக் விமானப்படையால் தாக்கப்பட்டன. ஒரு எதிரி க்ரூயிஸரும், நான்கு நாசகாரிகளும், ஒரு போக்குவரத்துக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

கூடல்கனலில் எதிரி புதிய படைகளை இறக்க முயற்சிக்கிறான்.

**நியூ கினி.**—சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி ஓவன் ஸ்டான்லி தொட ரிலிருந்து ஜப்பானியர் பின்வாங்கி ஓடுகின்றனர்.

வெய்ரோபி பாலம் உடைக்கப்பட்டது. கொகோடா கணவாயில் நேச ாடுகள் புகுந்திருக்கின்றனர். டெயிலி டெலிகிராப் பத்திரிகை கூறும்விதமாக



நேசநாடுகளின் விமான ஆதிக்கத்தினால் பஸிபிக்கில் நிலைமை சாதகமாகிவரு கிறது. இந்த இரண்டுமாத காலத்தில் தெற்கு பஸிபிக்கில் ஜப்பானியருக்கு 200 விமானங்கள் நஷ்டம்.

**அலூஷியன்.**—இங்கே அமெரிக்கா முன்னேறி வருகின்றனர். கிஸ்கா பாகத்தை வசப்படுத்துவதற்கு முன்பிரயத்தனமாக அன்டிரினாப் தீவை அமெரிக்கா வசப்படுத்தியிருக்கின்றனர். ஜப்பானியர் வசத்தில் பாக்கியாயிருந்த அட்டுவும், அகட்டுவும் எதிரிகளால் காலி செய்யப்பட்டது. கிஸ்காவும் படையெடுப்புக்கு உள்ளாகியிருக்கிறது. 8, 9, 10 தேதிகளில் பைடர் விமானங்களின் உதவியால் பெரிய போர் விமானங்கள் கிஸ்கா துறைமுகத்தைத் தாக்கின.

**சைனா.**—டுங்கான்சி, ஸிஸான்சி, ஷான்ஸி முதலியவைகளை ஜப்பானியர் தாக்கினர்.

**பர்மா.**—பகோகு விமானத் தளத்தையும், யுவாடங் ரயில்வேயையும் பிரிடிஷ் விமானப்படை தாக்கியது.

**மெடகாஸ்கர்.**—ஸகராஹா, டாங்கோபரி இரண்டையும் பிரிடிஷ் படைகள் வியாபித்துக்கொண்டன. இவைகள் அத்தீவின் தென் மேற்கில் இருக்கின்றன.

**பலவகைப்பட்டவை.**—1. நான்கிங் அரசாங்கம் ஜப்பானுடன் ஒரு ரகசிய உடன்படிக்கையை ஸெப்டம்பர் 22உ செய்துகொண்டிருக்கிறது. இதன்படி ஜப்பானியரிடமிருந்து ராணுவ சாமான்களைப் பெறவும், அதற்குப் பிரதியாக ஹைனான் தீவை ஜப்பானுக்குக் கொடுக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஹைனான் என்பது ஒரு கப்பல் விமான தளமாகும்.

2. நேசநாடுகளுடன் எதியோபியா சேர்ந்திருக்கிறது. அந்த மன்னர் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு அனுப்பிய செய்தியில் பின்வருமாறு கண்டிருந்தார். நேசநாடுகளின் கடமைகளை நிறைவேற்ற எனது அரசாங்கமும், மக்களும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். ஸ்வதந்திரம், நியாயம் முதலியவைகளை நிலைநாட்டுவ தற்காகச் சந்தோஷமாகத் தியாகம் செய்யும் நேசநாடுகளின் வசத்தில் எனது நாட்டின் விளைவுபொருள்களையும், ராணுவத்தையும் கொடுக்க சம்மதித்திருக் கிறேன்' என்றார். இதை ஜனாதிபதி 'அச்சுநாட்டு ஆக்கிரமணத்திலிருந்து முதல் முதலில் விடுவிக்கப்பட்ட நாடான எதியோபியாவின் வருகையை' அங்கீ கரித்திருக்கிறார்.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட் டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **2—10—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ரயில்வே பாலம்.—மோகாங்கு (Mogaung)க்குத் தெற்கே. | | | |
| **3—10—42.** (சனிக்கிழமை). | | | | |
| | ஜப்பானியர் வாஸஸ்தலம்.—லோய் விங்கு (Loiwing)க்கு தென்கிழக்கே. | | | |
| | யூனான் (Yunnan). | | | |
| | தோங்த பாலம்.—டிங்கா (Tinga)வுக்குத் தெற்கே. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| **4—10—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | விமானமிறங்கும் தளம்.—லோய்விங் (Loiwing). | | | |
| | தொங்கு பாலம்—லோய்விங்கு (Loiwing)க்குத் தெற்கே. | | | |
| **5—10—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள் மேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | **எகிப்து (Egypt), லிபியா (Libya).** | | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—விரோதி ஸ்தானங்களில் எல் அலமீன் (El Alamein) பகுதி. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | துணையுடன் கூடிய சிறுகப்பல்.—பூனு (Buna). | | | |
| | ஜப்பானியர்களுக்கு ஸப்ளைகள் வரும் தளம்.—கொக்டோ (Kokoda)வுக் கருகாமையில். | | | 3 விமானங்கள். |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விமானக்கூடம்.—ராபால் (Rabaul), | | | |
| | **அலூஷியன் தீவுகள் (Aleutians).** | | | |
| | கிஸ்கா (Kiska). | | | |
| | யேனங்யாங் (Yenang Yaung), காங்கா (Gangaw), கான் (Kan), ஸிகாங்மியாக் (Sihaung Myauk). | | | |
| **6—10—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.-லக்ஷியங்கள்-மேற்கு ஜெர்மனி (Germang) ஹாலந்து (Holland). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—பிரெஞ்சுக் கடற்கரைக்கருகாமையில். | | | |
| | சுரங்க வெடிகளை அறிப்பது.—பிரெஞ்சுக்கடற்கரைக்கருகாமையில். | தீப்பற்றியது. | நஷ்டமில்லை. | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| **6—10—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **எகிப்து (Egypt), லிபியா (Libya).** | | | |
| | விரோதி போக்குவரத்து வண்டிகள், முகாம்கள்.—யுத்தப் பிரதேசத்திலுள்ள எல்லாப் பகுதிகளும். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான பெட்ரோல் கிடங்கு.—எல்டாபா (El Daba). | தீக்கள் கிளம்பின. | | |
| | **கிரீட் (Crete).** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான துணைக் காவல் கப்பல்.—கிரீட்டுக்குத் (Crete) தென்மேற்கு. | | 4 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதிக்குச் சொந்தமான துணையுடன் கூடிய கப்பல்.— | | 1 விமானம். | 3 விமானங்கள். |
| | படகுகள்.—பூனு (Buna) கடற்கரையில். | அநேக படகுகள் மூழ்கின. | | |
| | விரோதிக்குச் சொந்தமான விமானக் கூடங்கள்.—ராபால் (Rabaul). | | 1 விமானம். | 4 விமானங்கள். |
| | **அலூஷியன் தீவுகள் (Aleutians).** | | | |
| | கிஸ்கா (Kiska). | | | |
| **—10—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—விரோதி சமுத்திரக்கரையில் சுரங்க வெடிகள் போடுவது. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | வேவு பார்த்தல்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 2 விமானங்கள். |
| | லக்ஷியங்கள்.—டெர்னு (Derna)க்கும் ஸிடிபாராணிக்கும் (Sidi Barani) இடையே. | | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில், | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—கொக்டோ (Kokoda) பிரதேசத்தில். | | | |
| | **பஸிபிக் (Pacific).** | | | |
| | வேவு பார்த்தல்.—வடமேற்கு பஸிபிக் பிராந்தியத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| 8—10—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலிலும், இரவிலும் விமான நடமாட்டத்தைப்பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | டோப்ருக் (Tobruk). | | | |
| | விரோதிக்கு ஸப்ளை வண்டிகள், மற்ற லக்ஷியங்கள்.—ஸோலூம், எல் டாபா (Sollum & El Daba) பிரதேசம். | | | |
| | **கிரீட் (Crete).** | | | |
| | சிறு யுத்தக்கப்பல்.—ஸூடா விரிகுடாவில் (Suda Bay). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான கூடங்களிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | பூனா (Buna). | | | |
| 9—10—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—வடபிரான்ஸி (France)ல் விமான எதிர்ப்புகள். | 38 விமானங்கள் சேதமாயிருக்கும். | | 48 விமானங்கள். |
| | பைவ்—லிலி (Fives Lille) எஃகு, வண்டிகள், தொழிற்சாலைகள்.—லிலி (Lille). | 11 விமானங்கள் சேதமாயின. | | |
| | லக்ஷியங்கள்.—ரைன்லாந்து (Rhineland)க்கு மேல் பாகம். | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **எகிப்து (Egypt), லிபியா (Libya).** | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—விரோதி சைனியங்களுக்குப் பின்னால். | அநேக விமானங்கள் சேதமாயின. | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 10 விமானங்கள் |
| | விரோதி ரயில்வண்டி.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள, விமானம்.—கிழக்குப் போர்முனை எங்கும். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—10—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விமான நிலயம், துறைமுகம்.—ராபால் (Rabaul). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விமான கூடம்.—லே (Lae). | | | |
| | **டானிம்பார் (Tanimbar) தீவுகள்.** | | | |
| | ஜப்பானிய வியாபாரக் கப்பல்.—ஸாமில்க்கி (Saumlaki). | | | |
| | **பர்மா (Burma).** | | | |
| | விமான நிலயம்.—பகோகு (Pakokku). | | | |
| | இருப்புப்பாதை.—யாடாங் (Ywataung) | | | |
| 10—10—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | இரவில்.—சுரங்கவெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **எகிப்து (Egypt), லிபியா (Libya).** | | | |
| | கப்பல்கள், கப்பல் துறையிலுள்ள கட்டடங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விரோதி விமான இடங்கள்.—பூகா (Fuka), டொப்ருக் (Tobruk). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான கூடத்திலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை முழுவதிலும். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | துறைமுகம் கப்பல்கள்.—ராபால் (Rabaul). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | ஜப்பானிய லக்ஷியங்கள்.—கொக்கோடா பூனா (Kokoda-Buna) பாதையில். | | | |
| | படகுகள்.—பூனா (Buna). | | | |
| | **அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| | கிஸ்கா (Kiska). | | | |
| 11—10—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | டாங்கிகள், ரயில்வண்டிகள், தயாரிக்கும் முக்கிய பிரதேசம்.—ஹனோவர் (Hanover). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 11—10—42. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | விமானக்கூடங்கள்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசம். | | 5 விமானங்கள். | 15 விமானங்கள். பல விமானங்கள் சேதமாயின. |
| | விமான எதிர்ப்புகள்.—அபிவில்லி (Abbeville), ஸெயின்ட் ஓமர் (St. Omer) பிரதேசங்களில். | | | |
| | **எகிப்து (Egypt), லிபியா (Libya).** | | | |
| | பெட்ரோல் கிடங்கு, துறைமுகம்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | ஒரு நாசகாரி.—டெர்ணு (Derna)வுக்கு நேராகத்தாக் வடக்கே 50 மைல் தூரத்தில். | குண்டது. | | |
| | விரோதிக் கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | காவலுலவு.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | ஸப்ளைகள், விரோதியின் கட்டடங்கள்.-கொக்கோடா (Kokoda)விலிருந்து கரை நெடுகிலும். | | | |
| | படகுகள்.-பூனு (Buna)க் கடற்கரையில். | | | |
| | **அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| | கிஸ்கா (Kiska). | | | |
| | **ஸாலமன் (Solomons) கடல்.** | | | |
| | ஒரு நாசகாரியால் உதவி புரியப்பட்ட விரோதிக்குச் சொந்தமான 10,000 டன் எடையுள்ள கடல் விமானம்.—நியூ ஐயர்லாந்து (New Ireland) தீவுக்குத் தெற்கே. | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 6—10—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **எகிப்து (Egypt).** | | | |
| | பிரிடிஷ் ஸ்தாபனங்கள்.—எல் அலமீன் (El Alamein). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ருஷ்ய ஸ்தானங்கள்.—வோல்கா (Volga)க்குக் கிழக்கே. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 7—10—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | விமான நடமாட்டமேயில்லை. | | | |
| 8—10—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—இங்கிலாந்தின் (England) தென் கிழக்குக் கடற்கரையில் ஒரு இடம். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| 9—10—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—கடற்கரையோரத்திலுள்ள ஒரு ஜில்லா.—இங்கிலாந்தின் தென் மேற்கே. | ஒருவனுக்குக் காயம். | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | வேவு பார்த்தல்.-மால்டா (Malta)வில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | கிராமங்கள்.-வோல்கா (Volga)வுக்குக் கிழக்கே. | | | |
| | ருஷ்யர்களின் ஸ்தானங்கள்.—மோஸ்டாக் (Mozdok) பிரதேசம். | | | |
| 10—10—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—இங்கிலாந்தின் (England) தென் கிழக்குக் கடற்கரை. | | | |
| | இரவில்.—விமான நடமாட்டமேயில்லை. | | | 1 விமானம். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | தற்காப்புகள்.—ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | ருஷ்யர்களின் ஸ்தானங்கள்.—மோஸ்டாக் (Mozdok) பிரதேசத்தில். | | | |
| 11—10—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—இங்கிலாந்தின் (England) வடகிழக்கிலுள்ள ஒரு பட்டணம். | சொற்பச் சேதம். | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் (England) வடமேற்குக் கடற்கரையிலுள்ள ஒரு பட்டணம். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 11—10—42. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | 15 விமானங்கள். |
| | ருஷ்யர்களின் போக்குவரத்து மார்க்கங்கள்.—ஸ்டாலின்கிராட் (Stalingrad)க்கு கிழக்கேயுள்ள வால்கா நதியில். | | | |
| 12—10—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—இங்கிலாந்தின் (England) தெற்குக்கரை. | | | |
| | இரவில்.—விமான நடமாட்டம் இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | தற்காப்புகள்.—ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | 22 விமானங்கள். |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**எண்பது நாட்கள்.** ஆலிவர் லிட்டில்டன் குறிப்பிட்ட எண்பது நாட்களின் காலவரை நல்ல வேளையாக முடிந்துவிட்டது. அந்தக் காலத்தில் ஒருவித கெடுதியும் நேரவில்லை. அவர் சொன்னபோது முக்கியமாக ருஷ்ய யுத்தத்தையே மனதில் வைத்துக்கொண்டிருந்தார். நெருக்கடியான சமயம் அநேகமாக முடிந்துவிட்டது. மாரிகாலம் தலை காட்டி வருகிறது. ஆனால் ருஷ்யா கலைபடாமல் இருக்கிறது. ஸ்டாலின்கிராட், காகஸஸ், மாஸ்கோ, லெனின்கிராட், இவைகளில் ஒன்றுகூட எதிரி வசமாகவில்லை. பிரத்யக்ஷமாகக் கண்டுவந்த வெண்டல் வில்கியும் ருஷ்யா தோற்றுவிடாது என்றும் சொல்லியிருக்கிறார். நீர்மூழ்கித் தொந்தரவு சமாளிக்கப்பட்டு ருஷ்யாவிற்கு ஸப்ளைகள் சென்றுகொண்டிருக்கின்றன. அலெக்ஸாண்டிரியாவை லக்ஷியமாகக் கொண்டிருந்த ரோமல் தடையுற்றான். தூரக்கிழக்கில் ஜப்பான் தாக்கப்பட்டுவருகிறது. ஆகவே அச்சுநாடுகள் தியானித்திருந்த ஏற்பாடுகள் பயனடையவில்லை. அதற்குப் பிரதியாக ஜெர்மனியின் தொழிற்சாலை பிரதேசங்கள் தாக்கப்பட்டுவருகின்றன. ஜப்பானியர் நியூ கினி, ஸாலமன், அலூஷியன் முதலிய இடங்களில் பின்வாங்கிவருகின்றனர். இவைகளைக்கண்டு கோயரிங், ரிப்பன்டிராப், ஹிட்லர், கோயபெல்ஸ் முதலியோர் மனம் தளர்ந்துவருகின்றனர். எடின்பரோ நகரில் 12௳ மிஸ்டர் சர்ச்சில் பேசும்போது 'இந்த இரண்டு வருஷகாலமாக ஹிட்லரின் அதிர்ஷ்டம் மங்கிவருகிறது. கஷ்டம், கவலை முதலியவைகளுக்கிடையில், பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா, சைனா முதலியவை முன்னேறிவருகின்றன' என்றார்.



'கடவுள் கிருபையால் நாம் தற்சமயம் கொண்டிருக்கும் நோக்கங்கள் பயனடையும். அதற்கான அறிகுறி பிரகாசமாகத் தோன்றிவருகிறது'.

அக்டோபர் 13௳ ஜனாதிபதி ரூஸ்வெல்டு அமெரிக்கர்களுக்குச் செய்த ஒலிபரப்பும் இதே தைரியத்தை உண்டாக்கியது.

'ஒவ்வொரு பாரமும் இந்த யுத்தத்தின் வேகமும், விருவிருப்பும் அதிகரித்துவருகிறது. நேசநாடுகளின் பலம் அதிகமாக இருக்கிறது. தங்களுக்கு ஏராளமான பொருள், மனிதர்கள் நஷ்டமேற்பட்டுவருகிறதென்றும் அதை ஈடுசெய்ய முடியாதென்றும் அச்சுநாட்டுத் தலைவர்கள் உணர்ந்துவருகின்றனர். நேசநாடுகளுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட பிரசாரமெல்லாம் அச்சுநாட்டுக்குத்தான் விரோதமாகிவிட்டது. ஸ்டாலின்கிராட் விழாததைப்பற்றி ஜனங்களுக்கு முன் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகின்றனர். இரண்டாம் போர்முனையை நேசநாடுகள் ஏற்படுத்தமுடியாதென்றும் சொல்லிக்கொண்டே அச்சுநாடுகள் துருப்புகளை நாலாபக்கங்களிலும் அனுப்புகின்றனர். பின்லாந்து, நார்வே முதல் கிழக்கு மத்தியதரைக்கடல் வரை பந்தோபஸ்துசெய்துவருகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**ஒரு கௌரவமான ஒற்றுமை.** அக்டோபர் மாதம் 10௳ யன்று சீன ஜனநாயகத்தின் 31-வது ஆண்டுவிழா நடைபெற்றது. அந்த சமயத்தில் பிரிடனிலும், அமெரிக்காவிலும், சைனாவோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளைப் புதிப்பித்துக்கொள்ளப்பட்டது. சைனாவில் இந்த இரு நாடுகளும் தொன்று தொட்டு இருந்துவரும் சம்பந்தங்களும், பாத்யதைகளும் புதுப்பித்துக்கொள்ளப்பட்டன. இவ்வித பாத்யதை 1842-க்கும் 1844-க்கும் இடையில் அடையப்பட்டது. அதன்படி இந்த நாட்டு வாஸிகளைப் பிரத்யேகமான நியாய ஸ்தலங்களில்தான் விசாரணை கூறப்படும். இந்த முறையால் சீனாவிற்கும் எல்லா நாடுகளுக்கும் தீங்குவிளையும் என்று பிறகு அறிந்துகொள்ளப்பட்டது. ஏனென்றால் சீன அரசாங்கத்தை ஏதோ அவமதிப்பதுபோல் இருந்தது. மேலும் இதைக் காரணமாகக் கொண்டு பலவித தவறுதல்களும், மனஸ்தாபங்களும் நேர்ந்தன. இப்போது ஏற்பட்ட ஒப்பந்தங்களின் பயனாக நேசநாட்டுப் பொதுகாரணங்களுக்காக சைனா ஈடுபட்டிருப்பது அங்கீகாரம் அடைந்தது. இவ்வித ஏற்பாடுகள் ஏற்பட்டும் சைனாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் சமதை இருக்காது என்று ஜப்பான் விஷமப் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறது. ஆனால் நேசநாடுகள் இவ்விதம் முன்வந்து ஏற்பாடு செய்துகொண்டது ஜப்பானின் பொது க்ஷேமதிட்டத்திற்குச் செய்த சவாலேயாகும். அமெரிக்காவில் சீனப் பிரதிநிதியாக இருக்கும் டாக்டர் வெய்டேமியூங் சொல்லும் விதமாக நேசநாடுகளின் ஏற்பாட்டினால் ஸ்வதந்திரத்திற்காகப் போராடும் சீனமக்களுக்கு மட்டுமின்றி மற்ற நாடுகளுக்கும் ஒரு உறுதி கூறுவதாகும். இதன் பயனாக அரசியல் ஸ்வதந்திரமும் ஒரு சமதையும் பெற ஹேதுவாகும்.

வி வி வி வி வி வி

**ஸார்க்.** ஜெர்மன் ஆக்கிரமணத்திற்குள்ளிருக்கும் பெரிய ஸார்க், சிறிய ஸார்க் என்ற இரண்டு தீவுகளும் அமைப்பில் மிகவும் சிறியவை. டங்கர்க் சம்பவத்திற்குப் பிறகு தற்போது தான் அவைகளைப் பற்றிய தகவல் கிடைத்திருக்கிறது. அங்கிருக்கும் வாஸிகளை ஏதோ கடுமையாக நடத்திவருவதான தகவல் கிடைத்ததின்பேரில் அத்தீவை பிரிடிஷ் விமானப்படை படையெடுத்தது. படையெடுத்தபோது அங்குள்ளவர்கள் ஜெர்மனியில் பலாத்கார சேவைபுரிவதற்காக ஜெர்மானியர் விடுவித்திருந்த உத்தரவு கைப்பற்றப்பட்டது. இங்கிருக்கும் ஜீரின்ஸி என்ற தீவிலிருந்து 900 பேர்கள் ஏற்கனவேயே அழைத்துச் செல்லப்பட்டனர். இன்னும் 400 பேர்களை இதேவிதமாக அழைத்துச் செல்லப்படப் போகிறார்கள். ஸார்க்தீவிலும் 11 பேர்களை அழைத்துச் செல்லப்படவேண்டிய தருணத்தில் இவர்கள் தற்கொலை புரிந்துகொண்டார்களாம்.

பிரிடிஷ் படையெடுப்பு ஒரு சிறிய ஏற்பாடானபோதிலும், ஜெர்மானியர் இதைப்பற்றி பிரமாதப்படுத்துகின்றனர். உண்மையில் படையெடுத்தது ஆபீஸர்கள் உள்பட 10 பேர்தான். இதை ஒரு வேவு பார்த்தல் என்றே சொல்லலாம்.

மேலும், படையெடுத்துத் திரும்பியபோது ஐந்து ஜெர்மானியர் தப்பி ஓட முயற்சித்த சமயத்தில் அவர்கள் கையைக் கட்டியது ஜெனிவா ஒப்பந்தத்தின் 2-வது நிபந்தனையை பிரிடிஷார் மீறிவிட்டதாக ஜெர்மானியர் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

இதே விதமாக டியப் தாக்குதலின்போது அங்கிருந்த ஜெர்மானியர், சில தஸ்தாவேஜுகளைக் கொளுத்த முயற்சித்ததைத் தடுக்க அவர்கள் விலங்கிடப்பட்டதையும் மிகைப்படுத்திக் கூறப்படுகிறது. ஆனால் ஜெர்மானியரிடமிருந்து இவ்வித குறையைக் கேட்டதும் போட்ட உத்தரவை பிரிடிஷார் ரத்துசெய்தனர்.

ஜெனீவா ஒப்பந்தம் கைதிகளை விலங்கிடுவதைப்பற்றி ஒன்றும் கூறாத போதிலும் கைதிகளை கொடுமையாக நடத்தக்கூடாதென்று கூறுகிறது. போர் அரங்கத்திலிருந்து கைதிகள் தப்பிச் செல்லாமலிருப்பதற்காக விலங்கிடுவது ஒரு அவசியமாகும். ஆனால் ஜெயில்களில் விலங்கிடுவது ஒரு கொடுமையாகும். ஜெர்மானியர் கைதி செய்யப்பட்ட 2,500 பிரிடிஷ்காரர்களை விலங்கிட்டிருக்கின்றனர். பிரிடிஷாரும் தங்கள் வசமுள்ள எதிரிக் கைதிகளை அவ்விதம் நடத்துவதெனத் தீர்மானித்திருக்கின்றனர். தற்சமயத்தில் ஜெர்மானியர் வசம் இருக்கும் பிரிடிஷாரைவிட 1,70,000 ஜெர்மன், இதாலியக் கைதிகள் பிரிடிஷார் வசத்தில் அதிகம் இருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**யுத்தக் குற்றங்களுக்கு அபராதம்.** அக்டோபர் 7உ பிரபுக்கள் சபையில் ஸைமன் என்பவர் யுத்தத்தில் செய்யப்படும் குற்றங்களைப் பரிசிலனம் செய்வதற்காக ஒரு கமிஷனை ஏற்படுத்தப்போவதாக அறிவித்தார். ஆரம்பத்தில் சாக்ஷிகள் விசாரிக்கப்படும். பிற்பட்டு குற்றவாளிகளும் கைப்படுத்தப்படுவார்கள். ஆனால் எல்லா எதிரிகளையும் வசப்படுத்துவது நோக்கமில்லை. மனித வர்க்கத்தின் கொள்கைகளைக் கெடுக்கும் தலைவர்களே முதலில் பிடிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள். இவ்வித ஏற்பாட்டை ஜனாதிபதி ரூஸ்வெல்டு அங்கீகரித்துப் பின்வருமாறு சொன்னார்:— ‘ஐரோப்பாவில் ஆக்கிரமித்த நாடுகளில் ஜெர்மனி செய்துவரும் கொடுமைகளைப் பற்றிய தகவல்கள் அமெரிக்க அரசாங்கத்திற்குக் கிடைத்துவருகின்றன. வெற்றி கிடைத்ததும் இதற்குத் தகுந்தவிதமாக சிக்ஷை செய்யப்படும். யுத்தத்தின் முடிவில் யுத்தக் கைதிகளை மீட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்படும்.

வி வி வி வி வி வி வி

**கூட்டமாகக் கொலை.** பிரிடிஷ், அமெரிக்க அரசாங்கங்கள் அச்சு நாட்டுக் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான ஏற்பாடு செய்திருக்கின்றன. கோதென்பர்க்த், ஹான்டிலோடிட்னீஜன் என்ற ஸ்வீடன் பத்திரிகை இந்தத் தகவல்களைப்பற்றி பிரசுரித்திருக்கிறது. ஜெர்மானியரின் அரசியல் கணக்குப்படி கடந்த 12 மாதங்களாக யூகோஸ்லாவியாவில் 2,897, ஹாலந்து 172, ஸெக்கோஸ்லாவாகியா 1,391, பெல்ஜியம் 122, போலந்து 1,091, நார்வே 92, பிரான்ஸ் 977, ருமேனியா 81, கிரீஸ் 405, ஹங்கேரி 29, பல்கேரியா 199 ஸ்பெயின், இதாலி 619 பேர்கள் கொலை செய்யப்பட்டனர். இந்தக் கணக்கில் ஜெர்மனியில் கொலை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பேர்களின் கணக்கு இதில் சேர்க்கப்படவில்லை. போலந்து, ஸெக்கோஸ்லாவியா இவைகளில் கொலை செய்யப்பட்டோரின் எண்ணிக்கை குறைத்துக் கூறப்பட்டிருக்கிறது. போலந்து சம்பந்தப்பட்டவரையில் 1941 ஜூலை முதல் 1942உக்குள் கொலை செய்யப்பட்டவர்கள் 3,20,000. இந்தக் கணக்கு லண்டனிலுள்ள போலிஷ் கவர்ன்மெண்டால் சேகரிக்கப்பட்டது. ருஷியாவில் கொலை செய்யப்பட்டோரின் கணக்கை ஜெர்மானியர் கொடுக்கவில்லை. அது



க்கணக்காக இருக்குமென்று மாலடோவ் கூறுகிறார். இதோடு கிரீஸை ர்மானியர் வியாபித்துக்கொண்ட பிறகு பசிப்பிணியால் இறந்த 3,00,000 ர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் கொலை செய்யப்பட்டவர் ன்பேரில் ராஜத்துரோகம், ரகசிய சூழ்ச்சி முதலிய குற்றங்கள் சாற்றப்பட்டன. லும் பிரிடிஷ் ரேடியோ கேட்பது, இங்கிலாந்துக்குத் தப்பிப்போக முயலு , பொதுவுடமை கக்ஷியில் சேருவது, ஆயுதங்களைத் தரிப்பது முதலியவைகளும் றமாம். கொடுமை முறைகளை ஜெர்மானியர் கையாண்டபோதிலும் ஐரோப்பா ன்னோர்களின் உணர்ச்சியைக் குறைக்கமுடியவில்லை. தாங்கள் விடுபட்டு வாங்கும் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி

**ன்மார்க்.** டென்மார்க்கில் நிலைமை மோசமாகி வருகிறது. நியூ யார்க் ரேடியோவின்படி ஜெர்மனி, ன்மார்க்கிற்கு 10 நிபந்தனைகளுள்ள உத்தரவு ஒன்றை விடுவித்திருக்கிறது. காவது டென்மார்க் வியாபாரக் கப்பல்களுக்கு ஆயுதம் வைப்பது, ஜெர்மனி ன் ஒத்துழைப்பது, ஜெர்மனிக்கு உணவுப் பொருள்களையனுப்புவது, தொழிளிகளை ஏற்றியனுப்புவது, கலகக்காரர்களைக் காண்பிப்பது, ருஷ்யா பேரில் ண்டை தொடுப்பது முதலியவை முக்கியமானவை. டென்மார்க் ஜெர்மனி ன் நேசநாடென்பது பிரசித்தம். டென்மார்க்கை 1940 ஏப்ரல் 9உ ஜெர்மனி டையெடுத்தபோது டென்மார்க் ஜெர்மனியை எதிர்க்கவில்லை. அதற்காக ன்மார்க் ராஜா பதவியேற்றார். முன்பு அங்கே வியாபார மந்திரியாயிருந்த நஸ் துமஸ் முல்லர் என்பவர் இங்கிலாந்துக்குத் தப்பி வந்து, டென்மார்க்கில் லைமை மோசமாக இருப்பதாக அறிவித்தார். டென்மார்க்கின் சொந்தச் செல ல் விமான தளங்கள் அதிகமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. நார்வேக்குச் சல்லும் நாஸித் துருப்புகள் டென்மார்க்கு வழியாக ஸர்வ சாதாரணமாகச் சல்லுகின்றன. நாஸிகளின் விருப்பப்படிதான் டென்மார்க்கில் உத்தியோகஸ் ர்கள் பதவிபெற முடியும். ரேடியோவும், பத்திரிகைகளும் ஜெர்மானியரால் டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. டென்மார்க் சாமான்களை, விலை கொடுக்காமல் ர்மனி வாங்கிக்கொள்ளுகிறது. பலாத்காரத்தின் பயனாக அச்சுநாட்டு ப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டிருந்தும் ருஷ்யாபேரில் சண்டை தொடுக்க ரும்பவில்லை. அமிம்ஸா முறையில் நாஸிகளை டென்மார்க் வாஸிகள் எதிர்த்து ருகின்றனர். தனது 72-வது பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது டென்மார்க் எப்போதும் இருக்கும்’ என்ற செய்தியை அரசர் விடுவித்தான்.

வி வி வி வி வி வி வி

**ற்றுமைப்பட்ட தலைமை.** வடக்கு, மத்தியம், தெற்கு என்ற பிரிவினைத் தலைமையைப் போக்கடித்து ஸ்டாலின் ல்லாவற்றையும் ஒரே தலைமையில் ஸ்தாபித்தார். அமெரிக்கச் சைனியத்திற் ம் ஜனாதிபதிக்கும் உள்ள சம்பந்தம் ஸ்டாலினுக்கும் ருஷ்ய சைனியத்திற்கும் ற்பட்டிருக்கிறது. ராணுவம், கப்பற்படைத் தலைவர்களின் ஒற்றுமை பிரிடிஷ் ாதுகாப்பு மந்திரி சபைக்கு சமமாக அமைக்கப்படும். எல்லாவற்றிற்கும் ஸ்டா ன் தலைமை வகிப்பார்.

வி வி வி வி வி வி வி

**ண்டிரூப்.** அலூஷியன் தீவுக்கூட்டத்தில் அன்டிரூப் தீவை அமெரிக்கர் தாக்கியது பஸிபிக் ன்னேற்ற யுத்தத்தில் ஒரு அபிவிருத்தியைத் தெரிவிக்கிறது. டோகியோ ன்பு தாக்கப்பட்ட பிறகு ஜப்பானியர் இந்த இடத்தை நோக்கி முன்னேறினார் டச்சுத் துறைமுகத்தைப் பிடித்துக்கொண்டு கிஸ்கா, அட்டு, அகட்டு தீவுகளை வியாபித்துக்கொண்டனர். ஆகஸ்டு மாதத்தோடு 10,000 ஜப் னியர் இந்தத் தீவுகளில் குடியேறினர். அதிலிருந்து ருஷ்யாவிற்குச் செல் ம் அமெரிக்கப் போக்குவரத்து தடைபட்டது. இதற்காக அமெரிக்கர் இங்கே ண்டை தொடுக்க வேண்டிவந்தது. ஆறு வார காலத்தில் 18 ஜப்பானியக்

கப்பல்கள் தாக்கப்பட்டன. கடைசியாக அன்டிரீனேவையும் நோக்கிச் செய்யப்பட்ட ஜப்பானிய முயற்சியும் தற்சமயம் தடைபட்டது. அட்டு, அகட்டுவில் எதிரிகளின் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

வி வி வி வி வி வி வி

**பெயரில் என்ன இருக்கிறது ?** மஞ்சூரியாவிற்கு ஜப்பானியர் மஞ்சுகுவோ என்று புதுப்பெயர் வைத்திருக்கின்றனர். ஆனால் அந்தப் புதுப்பெயரை நாம் வைத்துக்கொள்ளமாட்டோமென்று அந்தோனி ஈடன் அறிவித்தார். இவ்விதமாகப் பெயர்களை மாற்றி வைத்துக்கொள்வதால் ஜனங்களின் நிலைமை மாறிவிடுமென்று ஜப்பானியர் நினைப்பது சுத்தத் தவறு. மஞ்சுகுவோ என்றால் மஞ்சு ஜாதியாரின் வாசஸ்தலமென்று பொருள்படும். உண்மையில் அது ஜப்பானிய மாகாணமாக இருந்து வருகிறது. இதேவிதமாக ஸயாமை தாய்லாந்து என்று மாற்றியதால் ஒரு சாதகம் ஏற்படவில்லை. ஜப்பானுக்குட்பட்ட நாடாகவே இருந்து வருகிறது.

வி வி வி வி வி வி வி

**ஒரு பாடம்.** தனது உணவு நிலைமையை அபிவிருத்தி செய்ய சைனு செய்துவந்திருக்கும் ஏற்பாட்டை இந்தியா தெரிந்துகொள்வது நலம். யுத்தத்திற்குமுன்பு சைனுவின் 4,240 லக்ஷம் மக்களுக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லை. 10-ல் 9 பங்குதான் அங்கே உற்பத்தி செய்யப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ததைக் கொண்டு 4-ல் ஒரு பங்குகூட ஈடு செய்யப்படவில்லை. யுத்தம் வந்த பிறகு எதிரிகளின் தொந்தரவுகளுக்கிடையிலும், வியாபார சௌகரியங்கள் நிறைந்த மாகாணங்கள் எதிரிவசமான பிறகும், தீவ்ர முயற்சியினாலும், சாமர்த்தியமான ஏற்பாடுகளாலும் உணவுப்பண்டங்களின் உற்பத்தியை அதிகப்படுத்திக் கொண்டது. இதன் பயனாக தற்சமயத்தில் போதுமான அளவு அதன் வசத்தில் இருக்கிறது. இருபோகம் சாகுபடி செய்வது, புதுவிதமான தான்யங்களைப் பயிரிடுவது முதலியவைகளில் ஈடுபட்டிருக்கிறது. பயிர்களுக்குப் பூச்சிகள், நோய் முதலியவை பரவாமல் செய்யப்படுகின்றன. நீர்பாசன வசதி உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதன் சாமான்களைச் சரியானபடி விற்பதற்குத் தேவையான ஒத்துழைப்பும் ஏற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஒரு வேற்றுமை.** ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பா ஜெர்மனியின் நன்மைக்காகத்தான் இருக்கிறதாகக் கோயரிங் பகிரங்கமாக அறிவித்தான். கிரீஸில் செய்யப்பட்ட தான்ய அறுவடையை நாஸிகள் மெச்சிப்பேசியதை எதிர்த்து ஏதன்ஸ் நகரில் ஆறு நாட்கள் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. பொஹீமியா, மொரேவியா இந்த இரண்டு இடங்களிலும் ஜெர்மானியர் செய்த அட்டூழியங்களைப் பற்றி ஸெக்கோஸ்லாவியாவிலிருந்து செய்திகிடைக்கிறது.

'உணவுப்பண்டங்களின் உற்பத்தி சம்பந்தமாக நூற்றுக்கணக்கான உத்தரவுகள் பிறக்கின்றன. குடியானவனுக்கு தொழில் கிடைப்பதில்லை. உரம் கிடைக்கவில்லை. ஆயுதங்கள் பெருவதில்லை. பயிரிடுவதற்கான இடமும், பயிரும் ஜெர்மானியரால் குறிப்பிடப்படுகின்றன. விளைச்சலும் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆடுமாடுகளும், பால், முட்டை முதலியவைகளும் பறிக்கப்படுகின்றன. உணவு சம்பந்தமான சட்டதிட்டங்களை மீறினால் கடுமையான சிட்சை விதிக்கப்படும். ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு நாஸி ரகசிய சேவகன் இருந்துவருகிறான். வெட்டுக்கிளிகளைப் போல் நாஸிகள் எல்லாவற்றையும் அழித்துவருகிறார்கள். குடியானவன் தன்னுடைய நிலத்தில் உழுது பயிரிடுவதற்கு ஒரு மாட்டைப்போல் செய்யப்பட்டான்.



**பிரெஸீலியன் யுத்த தயாரிப்புகள்.** பிரெஸீலின் பொருளாதாரம், தொழிற்சாலை முதலியவைகளை யுத்தத்திற்காகச் சேகரிக்க ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மார்ச்சு மாதத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் பிரெஸீல் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி அமெஸான் தள முன்னேற்றக் கம்பெனி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. மலேயா வீழ்ச்சிக்குப் பிறகு இக்கம்பெனிக்கு சில ஸ்வதந்திரங்கள் கிடைத்தன. ரப்பர் விளைச்சலுக்கு லாயக்காக பிரெஸீல் 14,00,000 சதுரமைல்கள் இருக்கின்றன. மினியஸ் ஐரீஸ் ஸ்மஸ்தானத்தில் 1,50,000 லக்ஷம் டன் கிடைக்கக்கூடிய இரும்புச் சுரங்கங்களும் இருக்கின்றன. நிலக்கரிச் சுரங்கங்களும் இருக்கின்றன. இதற்குப் போதுமான முதல் இல்லாதது தான் ஒருகுறை. இவ்விஷயத்தைத் தீர்மானிக்க மிஸ்ட்டர் மாரிஸ் கூக் என்பவரின்கீழ் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து ஒரு கோஷ்டி பிரெஸீலுக்குச் சென்றிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**கோயபல்ஸின் ஜாலம்.** செய்திகள் ஏமாற்றத்தைத் தருவதாக கோயபல்ஸ் சொல்லி வருகிறான். அதற்காக நேசநாட்டுக் கப்பல் நஷ்டத்தை மிகைப்படுத்தி கூறுகிறான் .சமயத்திற்கு ஏற்ற கணக்கு விபரத்தைத் தருகிறானே தவிர உண்மையைக் கூறவில்லை. ஜெர்மனிக்குச் சாதகமான நிலையிருக்கும்போது நேசநாட்டு நஷ்ட விவரங்களைக் குறைவாயும் தனக்கு பாதகமாயிருந்தால் நேசநாட்டு நஷ்டத்தை மிகைப்படுத்தியும் கூறுகிறான். உதாரணமாக இவ்வருஷம் முதல் 4 மாதங்களில் ஜப்பானியரின் வெற்றிகளையும் காரணமாகக் கொண்டு நேசநாடுகளுக்கு 5,54,325 டன் கப்பல் நஷ்டம் என்று கூறப்பட்டது. இக்கணக்கு மிகைப்பட்ட விவரமாயினும் கோயபல்ஸின் படி இது குறைவானதாகும். மே மாதத்தில் பவளக்கடல் முதலிய சண்டைகளில் நேசநாடுகள் வெற்றியடைந்ததும் நேசநாட்டு நஷ்டம் 9,24,000 டன் என்று சொல்லிற்று. ஜூனில் ரோமல் முன்னேற்றமடைந்தபோது நேசநாட்டு நஷ்டம் 8,86,000 டன்னாக குறைந்துவிட்டது. ஜூலையில் ருஷ்யாவில் ஜெர்மனி முன்னேறிக் கொண்டே போனபோது 8,08,000 டன்னுக்குக் குறைத்துக்கொண்டனர். ஸெப்டம்பரில் ரோமல் எல் அலமீனிலும், பாக் ஸ்டாலின்கிராட்டிலும் தடைபட்டபோது ஜெர்மன் மக்களுக்கு தைரியத்தை மூட்ட நேச நாட்டு நஷ்டம் 10,11,700 டன் என்று கூறப்பட்டது.

இதுமாதிரிதான் மாதவாரிக் கணக்குகளை ஜெர்மானியர் கொடுப்பது. தினசரி கணக்கைக் கூட்டினால் மாதக்கணக்கோடு சேராது. உதாரணமாக ஆகஸ்டு மாதத்தில் தினசரிக் கணக்கின்படி 339 கப்பல்களாகிறது. மொத்தக் கணக்கின்படி 125 கப்பல்களைத் தான் கொடுக்கின்றனர். இதுதான் அவர்களின் தந்திரம்.

---

# தொழிலாளர்கள் முன்வந்திருக்கின்றனர்.

---

## செங்கல்பட்டு தொழிலாள சங்கத்தின் முன்பு மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர் செய்த பிரசங்கம்.

குரோம்பெட், அக்டோபர் 8உ.

இரண்டு மாதகாலமாக தொழில்ளாளர்கள் நடந்துகொண்ட விதத்திற்கு நான் எனது நன்றியைச் செலுத்துகிறேன். ஏனென்றால் இந்த இரண்டுமாத காலமாக இந்தியாவில் இருந்துவரும் கொடுமை, கலவரம், கொலை, ரகசிய சூழ்ச்சி, முதலியவைகளை நன்றாகத் தெரிந்துகொண்டு அரசாங்கத்தார் எதிர்பார்ப்பதற்குத் தகுந்த விதமாக நீங்கள் நடந்துகொண்டீர்கள். படித்தவர்களுக்கும் திருஷ்டாந்தமாக நீங்கள் இருந்திருக்கிறீர்கள்.

### கலவரம் நிந்திக்கப்பட்டது.

இந்நாட்டில் தற்சமயத்தில் நிலவிவரும் கலவர நிலைமையை ஏற்பாடு செய்தவர்களை நான் பூர்ணமாகக் கண்டிக்கிறேன்.

நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதாக வாயால் மட்டில் சொல்லி மறைமுகமான சொற்பொழிவுகளாலும், பத்திரிகை வியாஸங்களாலும், கவர்ன்மெண்டாருக்கும், துருப்புகளுக்கும் விரோதமான பிரசாரம் நடத்துவோரையும் நான் கண்டிக்கிறேன். அவர்கள் நடத்தும் கபடமொழிகள் என்னைத் துன்புறுத்துகின்றன.

இந்நாட்டில் அரசியல் மனப்பான்மையில் ஒரு மாறுதல் ஏற்படுமென்றும் நம்புகிறேன். சமாதான அபிப்பிராயமும், ஒத்துழைப்பு சிந்தனையும், ஏற்படுமென்றும் நினைக்கிறேன், ஏனென்றால் இவ்விரண்டுமில்லாவிடில் இந்தியாவில் அமைதிநிலை ஏற்படுவதற்கு வெகுநாள் பிடிக்கும். மேலும் நாம் நமக்குள் ஒரு ஒத்துழைப்பைக் காண்பிக்காவிடில் ஆபத்தும் சீக்கிரமாக வந்துவிடும்,

ஜப்பான் ஜயம்பெற வேண்டுமென்று எவ்வளவு பேர்கள் விரும்புகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. வெகு சிலரே இருக்கலாம். பர்மாவிலும் மலேயாவிலும் ஜப்பானியர் செய்துவருவதை வெகுபேர்கள் பார்த்திருக்கிறார்கள். எதிரிக்கப்பல்கள் வங்காளக்குடாக்கடலிலும், இந்து மகா சமுத்திரத்திலும் நடமாடுகின்றன. இதுவரை ஒரு கெடுதியும் நேரவில்லையாதலால் பயமே போய்விட்டதென்று சில ஜனங்கள் எண்ணுகிறார்கள். பயம் நீங்கவேண்டுமென்றுதான் நானும் விரும்புகிறேன். குண்டுகள் விழவேண்டாமென்றும், நமது கப்பல்கள் சேதமாகாமல் இருக்கவேண்டுமென்றும் மாலுமிகளை மீட்டும் நிலைமை ஏற்படவேண்டாமென்றும்தான் நானும் நினைக்கிறேன். இந்த யுத்தம் முழுயுத்தம் ஆகும். 'அதாவது யுத்தரங்கத்திலும், உள்நாட்டிலும் நடைபெறுகிறது. மூன்று வருஷ காலமாக இந்த யுத்தம் நடந்துவருவதில் இன்னும் நடைபெறலாம். ஆகவே இந்த நாட்டில் யுத்தம் வந்தால் அதற்காக நாம் முன்னாடியே ஒற்றுமை பெறவேண்டும்.'

நாம் இதுவரை பல விஷயங்களைச் சாதித்திருக்கிறோம். இன்னும் எவ்வளவோ போதிக்கப்போகிறோம். நாம் செய்துவரும் ஏற்பாடுகளால் நமக்கு தீங்கு ஒருநாளும் விளையாது. கிரேட் பிரிடனில் இருப்பதுபோல் இந்தியாவில் உணவுப் பிரச்னை அவ்வளவு கடுமையல்ல. இந்தியப் போக்குவரத்துப் பிரச்னை ஏற்கனவேயே கடுமையானது. அதோடு தற்சமயத்தில் ஏற்பட்ட கலவர நிலைமையால் அப்பிரச்னை இன்னும் கடுமையாகிவிட்டது.

சர்க்கரை வடக்கிலிருந்தும், அரிசி மற்றோரிடத்திலிருந்தும் கொண்டுவரவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் ரயில்பாதைகள் பழுதுபட்டால் போக்குவரத்து துண்டிக்கப்படுகிறது. அதனால் தேவையான பண்டங்களுக்குத் தட்டு ஏற்படுகிறது. விலைவாசிகள் உயருகிறது. இவ்வளவுக்கும் காரணம் வேறுமென்று கலகத்தில் ஈடுபட்டவர்கள்தான்.

ஏற்பட்டுள்ள சிரமங்களைத் தணிப்பதற்காக அரசாங்கத்தார் போதுமான முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயத்தை நான் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக நீங்கள் கொடுக்கும் யோசனைகளும் கவனிக்கப்படும்.

### உணவுப்பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்யவும்.

எல்லா நிலங்களும் பூர்ணமாக உழுது பயிர் செய்யப்படவேண்டுமென்று நீங்கள் சொல்லுவதை நான் பூர்ணமாக ஆதரிக்கிறேன். நில ஸ்வான்தார்கள் யாவரும் இதில் ஈடுபடுவது நலம். அரசாங்கத்தாரும் இவ்விஷயத்தை அதிகம் விருத்தி செய்கிறார்கள்.



சென்ற யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட சில பிரச்னைகளால் பிரகிருத யுத்தம் ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லலாம். இந்த யுத்தத்திற்குப் பிறகு அவ்வித சிரமம் ஏற்படாமலிருப்பதற்காக நேசநாடுகள் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்; அப்போது இந்தியாவிற்கு எவ்வித அரசாங்கம் ஏற்பட்டாலும் பொதுஜன வாழ்க்கையில் மாறுதல் ஏற்படுமென்பது மாத்திரம் நிச்சயம். இந்தியா வரவர தொழிற்சாலை நிரம்பிய நாடாக இருந்துவருகிறது. ஆகவே இந்த யுத்தத்திற்குப் பிறகு பண்டங்களை விற்பதற்குப் போதுமான வசதி ஏற்படும். இயற்கை வசதிகள் இங்கே அதிக மிருக்கின்றன. ஆகவே யுத்தத்திற்குப் பிறகு ஏற்படும் அரசாங்கம் இந்தியாவில் தொழிற்சாலைகளை விருத்தி செய்யுமென்று நம்புகிறேன்.

இந்த இரண்டுவருஷ காலமாக நீங்கள் நடந்துகொண்டதற்கு மறுபடியும் நான் வந்தனம் செலுத்துகிறேன். இவ்விதமாக யாவரும் நடந்துகொள்ள வேண்டும். நீங்கள் ஜனங்களை அவரவர்கள் வேலைகளில் ஈடுபடும்படி செய்ய வேண்டும். நீங்கள் ஒற்றுமையுடன் இருக்கிறீர்களென்று எனக்கு நன்றாகத் தெரியும். கிரேட் பிரிடன், இந்தியா, நேசநாடுகள்தான் இந்த யுத்தத்தில் ஜயம்பெறப்போகின்றன.

---

# சென்னையைப்பற்றிய பாதுகாப்பு ஏற்பாடுகள்.

## I

## சென்னை நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

## காலிசெய்யவேண்டிய தேவையில்லை.

### முக்கியமான தேவைகளுக்கு டிப்போக்கள் கொடுக்கப்படும்.

சென்னை கலெக்டரும் ஸிவில் பாதுகாப்பு கமிஷனருமான மிஸ்டர் W. A. மாரிஸ் ஸிவில் பாதுகாப்பைப்பற்றி விவரிக்கிறார்.

சென்னை நன்றாகப் பாதுகாக்கப்பட்டது. ஆகவே நகரைக் காலி செய்யும் பிரச்னை இல்லை.

பொதுஜனங்களுக்குத் தேவையானவைகளை ஸப்ளை செய்வதற்கு கவர்ன்மெண்டார் எல்லாவித ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள். இதற்காகப் போக்குவரத்து சம்பந்தமாக போர்டு ஒன்றை நியமித்திருக்கிறார்கள்.

பொதுஜன பாதுகாப்புத் திட்டங்களில் ஏ. ஆர். பி. முதலாவது. இதைத் தவிர அயல்நாட்டை விட்டுவந்தோர்க்கு வசதி அளிக்க ஆறு முகாம்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் 30,000 முதல் 50,000 பேர் 10 நாட்களுக்குத் தங்க வசதியிருக்கிறது. முக்கிய சேவைபுரியும் வேலைக்காரர்களுக்காக ஆறு முகாம்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதோடு நகரின் பல இடங்களில் தாத்காலிகமாக தங்க இடங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு வசதிகள் இருந்தும் சில பயங்கொள்ளிகள் தாங்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும் வெளியேற விரும்பினால் அவர்களுக்காகவும் நகரத்தின் முக்கிய ஸ்தலங்களில் முகாம்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இம்முகாம்களை உபயோகப்படுத்தும் அவசியம் ஏற்படாதென்று கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள்.

தியாகராய நகர், ஹாரிங்டன் ரோடு, கில்பாக் இந்த மூன்று இடங்களிலும் மூன்று தாத்காலிக முகாம்களை ஏற்படுத்தி, ஜனங்கள் மரங்கள் அடியில் தங்க வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

T. U. C. S. கோஷ்டியினர் ஜனங்களுக்கு வேண்டிய சாமான்களை ஸப்ளை செய்ய தாங்களாக முன்வந்திருக்கிறார்கள். இவ்விஷயத்தை ஜனங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

II

# நகரின் தேர்ச்சிபெற்ற ஏ. ஆர். பி. ஸேவைகள்.

## எல்லா வகுப்பினரும் தைரியம் பெற்றிருக்கிறார்கள்.

'ஸிவில் பாதுகாப்பு டைரக்டர் ஜெனரலான மிஸ்டர் A. W. இபாட்ஸின் விவரிக்கிறார்.'

A. R. P. சங்கத்தின் எல்லாப் பிரதிநிதிகளையும் நேரில் கண்டு அவர்கள் அடைந்துள்ள பயிற்சி முதலியவற்றைப்பற்றி நாங்கள் திருப்திகொண்டோம்.

இதிலுள்ள எல்லா அதிகாரிகளும் உற்சாகம், தீர்மானம் முதலியவைகளைப் பெற்று தைரியமாக இருக்கிறார்கள்.

இதில் சம்பளம்பெற்ற உத்தியோகஸ்தர்கள் திட்டமான உணவுபெறுகிறார்கள். டெப்போக்களை ஒழுங்காக வைத்துக்கொள்ளுவதில் போட்டியைக் காண்பித்து இவர்கள் இருந்துவரும் நிலைமை மிகத் திருப்திகரமாக இருக்கிறது. இவ்விதம் ஒரு வருஷத்திற்கு முன் எதிர்பார்க்கமுடியாது.

நெருப்பணைக்கும் கோஷ்டிகளுக்கு வாலண்டியர்கள் ஏராளமாக முன்வந்திருக்கின்றனர். இவர்களுக்கு இங்கிலாந்திலிருந்து வந்த சில நிபுணர்கள் பயிற்சி அளிக்கிறார்கள். இதோடு பிரதம சிகித்சை கோஷ்டிகளும், உணவு ஸப்ளை கோஷ்டிகளும் சித்தமாக இருந்துவருகின்றன.

### தகுதியுள்ள வார்டன்கள்.

வார்டன்களும், அவர்களுடைய உத்தியோகஸ்தர்களும் சிநேக ஒற்றுமை பெற்று பரஸ்பரம் ஒத்துழைத்துவருகின்றனர்.

இது சம்பந்தமாக இரண்டு விஷயங்களைச் சிபார்சு செய்வதாக இருந்தால் பொது ஜனங்களுக்கும், இவர்களுக்கும் இன்னும் அதிகம் நெருங்கிய சம்பந்தம் வேண்டும். நெருப்பணைக்கும் கோஷ்டியை இன்னும் அதிகப்படுத்தவேண்டும்.

நாங்கள் இங்குவந்து தங்கியகாலத்தில் யாவரும் ஒன்று சேர்ந்து ஒரு ஒத்திகை நடத்திக் காண்பித்தார்கள். அப்போது ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு நெருப்பணைக்கும் கோஷ்டி, மீட்கும் கோஷ்டி, காயமடைந்தவர்களை சேகரிக்கும் கோஷ்டி முதலியவைகள் நன்றாக ஒத்துழைத்தன.

மதராஸ் ஏ. ஆர். பி. கோஷ்டியினர் தங்களைப் பெருமைப்படுத்திக்கொள்ள வேண்டிய காரணங்கள் இருக்கின்றன. இதற்குக் காரணமாக இந்த ஏற்பாடு பூராவும் தாராளமான ஒத்துழைப்புடன் கூடியிருக்கின்றனர்.



# வெற்றியில் நம்பிக்கை.

## (அமெரிக்க உதவிமந்திரி மிஸ்டர் ஸம்னர் வேல்ஸ்).

போஸ்டன் அக்டோபர் 9.

நாம் நடத்திவரும் இந்தக் கடும் யுத்தத்தில் நேசநாடுகளுடன் ஒன்றுபட்டு நிற்கிறோம்.

யுத்த சரித்திரத்தைப் பார்த்தால் ருஷ்யாவில் தற்போது ருஷ்யர்கள் ஈடுபட்டிருக்கும் விதமாக ஒரு தேசத்தினரும் ஈடுபடவில்லை.

ருஷ்யர்களின் முயற்சியால் ஒருவருஷ காலமாக ஹிட்லரின் தற்புகழ்ச்சிகள் வீணானதோடு நேசதேசங்களுக்கும் ஒரு பெரிய வெற்றி கிடைத்ததென்றே சொல்லலாம். அதற்குப் பிற்பட்டும் ருஷ்ய வீரர்கள் நீடித்து தைரியமாகச் சண்டைசெய்து வருகிறார்கள்.

### ருஷ்யாவிற்கு உதவி.

அமெரிக்காவும், மற்ற நேசநாடுகளும், ருஷ்யாவுக்கு, பூர்ணமான உதவியை செய்யவேண்டும். ஆயுதங்களை அனுப்பியோ, உணவுப்பொருள்களை ஸப்ளை செய்தோ ஜெர்மன் சைனியங்களை மற்ற போர்முனைகளுக்குத் திருப்பியோ உதவலாம். ஹிட்லரை பூரணமாகத் தோற்கடிக்கவேண்டுமென்றால் முன்சொன்ன உதவி சீக்கிரத்திலேயே செய்யப்படவேண்டும்.

ஜெர்மனி குண்டுகளால் தாக்கப்படமாட்டாது என்று ஜெர்மன் தலைவர்கள் கூறியதைப் பொய்யாக்கி பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியைத் தாக்குவதில் ஈடுபட்டு இருக்கிறது. இவ்வித முயற்சியில் அமெரிக்க விமானங்களும், பிரிடிஷ் விமானங்களும் ஜெர்மனியிலுள்ள யுத்தத்தொழிற்சாலைகள், கப்பல் தளங்கள், இருப்புப் பாதைகள், இவைகளை தாக்கி ஜெர்மனியின் யுத்த சாதனங்களின் உற்பத்தி திட்டத்தைப் பழுதாக்கிவருகின்றன.

---

# கொலம்பஸ் தினம்.

## ஜனாதிபதி ரூஸ்வெல்டின் செய்தி.

கிருஸ்தவர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். ஏராளமான பிரதேச விஸ்தாரம் பொருந்தி கொடுங்கோல் முதலியவைகளை விடுவிப்பதற்கான தைரியம் ஏற்படக்கூடிய இடத்தைக் கண்டுபிடித்தார்.

அவ்விதம் தைரியமாகப் பிரயாணம் செய்து கண்டுபிடித்த அமெரிக்காவில் வசித்துவரும் மக்களுக்கு பல வருஷங்களாக ஏற்பட்ட ஸ்வதந்திர நிலையால் ஜனநாயகம், மத ஸ்வதந்திரம் முதலியவைகளுடன் பூர்ணவாழ்க்கை ஏற்பட்டது. இத்துறையில் அமெரிக்கர்கள் செய்த பிரயத்னங்கள் யாவும் பலிதமடைந்தன. அதற்கு நமது முன்னோர்கள்தான் காரணமாக இருந்தனர்.

இப்படி ஸ்தாபிக்கப்பட்ட ஸ்வதந்திரத்திற்கு தற்சமயத்தில் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. மனித வர்க்கத்திலேயே பெரிய யுத்தம் என்று சொல்லக்கூடிய உலக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த யுத்தத்தில் நாம் ஸ்வதந்திரத்தை ஸ்தாபிப்பதோடு பிறரையும் விடுவிக்க நினைத்திருக்கிறோம்.

அடிமைகளாக இருக்கும் யாவருடைய விடுவிப்பிற்காகவும் நாம் வெற்றி பெறுவோம். அதுவே நேசதேசங்களின் வெற்றியாகும். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கவி கூறிய மொழிகள் ஞாபகம் வருகிறது. 'கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டுபிடித்தார். அதிலிருந்து நம்பிக்கையே தலைதூக்கி வருகிறது'.

நாம் நம்பிக்கையுடன் இருக்கிறோம். நமது செய்கைகள் நமது நம்பிக்கையை விருத்திசெய்யும்.

# கப்பல்கள்—இன்னும் அதிகக் கப்பல்கள்!

1939-ம் வருஷம் செப்டம்பர் மாதத்திற்குப்பிறகு கிரேட் பிரிடனிலுள்ள கப்பல் கட்டுகிறவர்களும், இஞ்ஜினியர்களும் உலகத்தில் இதுவரையுள்ள கப்பல் கட்டும் திட்டத்திற்கு மேலாகவே கப்பல்கள் கட்டியிருக்கிறார்கள். அமெரிக்கர்கள் தங்கள் முழுத்திறமையையும் காட்டியபோதிலும் கூட இந்த திட்டத்திற்கு மீறிப்போய்விட முடியாது.

1918-ம் வருஷத்திலிருந்த கப்பல் கட்டும் திறமையில் மூன்றில் ஒரு பங்கு திறமை இருந்த பொழுது இந்த தேசம் யுத்தத்தில் இறங்கியது என்று பிரிடன் கப்பற்படை இலாகா பிரதம அதிகாரி சொல்லுயிருக்கிறார். சென்ற யுத்தத்தில் முதல் மூன்று வருஷத்தில் கட்டியதைக் காட்டிலும் இப்பொழுது வியாபாரக் கப்பல்களும் ஏராளமான கனமுள்ள யுத்தக் கப்பல்களும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. 1914—1918 வரை பிரிடிஷ் கப்பல் கட்டும் இடங்களில் பழுதுபார்க்கப்பட்ட வேலையைக் காட்டிலும் இப்பொழுது பழுது பார்த்தவேலை மிகவும் அதிமானது.

### அநேக தேசத்தார்களின் கப்பல்கள்.

பழுது பார்க்கும் வேலையைக் கவனிக்கும் பொழுது சுமார் 25 வருஷத்திற்கு முன் இருந்ததைக் காட்டிலும், இப்பொழுது மிகவும் அதிகமான வியாபாரக் கப்பல்கள் பிரிடிஷ் துறைமுகங்களைத் தங்கள் சொந்தத் துறைமுகங்கள்போல பாவிக்கின்றன. இப்பொழுது பிரிடிஷ், அமெரிக்கா, ஸ்வதந்திர பிரெஞ்சு, டச்சு, பெல்ஜியம், நார்வே, கிரீஸ், யூகோஸ்லாவியா, முதலிய தேசங்களின் கப்பல்கள் ஓயாமல் பிரிடிஷ் துறைமுகங்களுக்கு வந்தும் போய்க்கொண்டுமிருக்கின்றன. வழக்கமாக அவைகளுக்கு ஏற்படும் சேதத்தையும், சீர்கேட்டையும் கிரேட் பிரிடனிலாவது யுனைடெட் ஸ்டேட்ஸிலாவது பழுதுபார்த்துக்கொள்ளவேண்டும்.

இதுவரையில் இந்தப் பழுதுபார்க்கும் வேலை பிரிடிஷ் கப்பற்கட்டுமிடங்களிலேயே பெரும்பாலும் செய்யப்பட்டது. அது காரணத்தினால் அங்கு தாங்க முடியாதபடி வேலை அதிகரித்து மேலும் ஒரு வருஷத்திற்கு முன்னதா ஜெர்மன் நீர்மூழ்கி கப்பல்களில் தாக்குதல்கள் வட அட்லாண்டிக்கில் அதி மும்மரமாக இருந்தபொழுது, பழுதுபார்க்கும் வேலை இங்கு தாங்கமுடியாத அளவுக்கு வந்துவிட்டது. இப்பொழுது கடைசியாக, பழுதுபார்க்கும் இலாகா பிரிடிஷ் துறைமுகத்தில் பழுது பார்க்கவேண்டிய கப்பல்கள் ஒன்று கிடையாது யென்று வெளியிட்டிருக்கிறது.

இந்தக் கைத்தொழிலில் நாள் பூராவும் கப்பலைப் பழுதுபார்த்து பிரயாணத்திற்கு அனுப்புவதில் வேலையாட்கள் பூராவையும் ஈடுபடுத்த வேண்டிய தாயிற்று. அதனால்தான் சென்ற யுத்தத்தில் கப்பல் கட்டும் திறமையில் 3-ல் 1 பாகம்தான் இப்பொழுது பிரிடன் உடைத்தாயிருக்கிறது. இது ஒரு காரணம் பயிற்சி பெற்றிருக்கும் தொழிலாளிகளை தேவைக்குத் தகுந்தவாறு இந்தக் கைத் தொழிலில் வெவ்வேறு பகுதிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டியதா இருக்கிறது. தொழிலாளிகள் கைவசமிருப்பதும் ஏராளமாகயில்லை.

மேலும் இத்தேசம் பூராவும் இருந்த கப்பல் கட்டுமிடங்களில் போதுமான வேலை இல்லாத சமயத்தில் அதாவது சுமார் 10 வருஷத்துக்குமுன் கிரேட் பிரிடனிலுள்ள கப்பல் கட்டுகிறவர்கள் வேலையைத் தாங்களாகவே குறைத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. அந்நாட்களில் உலகத்தில் சமாதானம் இருந்த படியால், காலியாகக் கிடந்த அநேக கப்பல் கட்டுமிடங்களில் கப்பல் கட்டு படியான தேவை ஏற்படவில்லை. ஆதலால் மற்ற கப்பல் கட்டுமிடங்களையாவது வேலைபார்க்கச் செய்யவும், தொழிலையும் லாபகரமாக இருக்கச்செய்யவும் இவைக காலியாக விடப்பட்டிருந்தன. ஆனால் இப்பொழுது வேலையில்லாமலிருந்த இடங்களில் உற்பத்திசெய்ய ஆரம்பமாகியிருக்கிறது. திறமையுள்ள வேலை க்காரர்கள் கிடைப்பதால் பாக்கி காலியாக இருக்கும் கப்பல் கட்டுமிடங்களும் இ வேலையைத் துவக்கும்.



இத்தகைய நிலைமையிலிருந்து மிகவும் சுருங்கியிருந்த இந்தக் கைதொழில் இப்பொழுது ஏராளமாகக் கப்பல் கட்டுவதிலிருந்து வியக்கத்தக்க விதமாக அபிவிருத்தியடைந்திருக்கிறது. ஒரேவிதமான கப்பல்களைக் தயாரிப்பதிலும், சமாதான காலத்தில் மும்மரமாகப் போட்டி போட்டுக்கொண்டிருந்த கப்பல் கட்டுமிடங்களை ஒற்றுமைப்படுத்தி திட்டங்களை ஒன்றுக்கொன்று பார்த்து நடத்தும்படி செய்ததிலும், தகடு வெட்டிச்சேர்ப்பதற்குப் பதிலாக பொடிவைத்து ஊதியதிலும், என்ஜின் முதலிய மற்ற வேலைகளைத் துரிதப்படுத்தியதிலும் இத்தகைய முன்னேற்றமடைந்திருக்கிறது.

### துரிதப்படுத்தும் முறைகள்.

சாத்தியப்படக்கூடிய இடத்தில் தகடு வெட்டிச் சேர்த்து ஆணிவைத்து சடைவதைக்காட்டிலும், பொடிவைத்து ஊதும் முறையை அனுஷ்டித்ததினால் தொழிலாளிகள் ஏராளமாக அதிகரித்திருக்கிறார்கள். முற்றிலும் பழக்கமில்லாத ஒரு மனிதன் சில வாரங்களுக்கு பொடிவைத்துச் சேர்ப்பதில் திறமையுள்ளவனாகப்பயிற்சி பெறக்கூடும். ஆனால் தகடு வெட்டிச்சேர்த்து ஆணிவைத்து சடையக்கூடிய வேலையை நன்றாகத் தெரிந்து கொள்வதற்கு மாதங்களும் ஆகும், வருஷங்களும் கூட ஆகலாம்.

கப்பல்களின் பாகங்கள் செய்வதும்கூட இப்பொழுது அதிகமாக அபிவிருத்தியடைந்திருக்கிறது. உள்நாட்டுத் தொழிற்சாலைகளில் கப்பலின் அநேக பாகங்கள் செய்யப்படுகின்றன. பின்பு அவைகளைக் கப்பல் கட்டும் இடத்துக்குக்கொண்டு போய் அங்கு கப்பல்களாகச் சேர்க்கப்படுகின்றன. கப்பலின் அடித்தகடு போடுவதற்கு முன்னதாகவே இவற்றையெல்லாம் தயாரித்துக் கொண்டு சென்று விடலாம். ஆனால் கப்பல் கட்டுமிடத்தில் கப்பல் கட்டுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்குமோ அதற்குப் பாதிக்கும் குறைவான நேரம்தான் இப்பொழுது பிடிக்கும். 10,000 டன் நிறையுள்ள சாமான் ஏற்றும் கப்பல்களைக்கட்டுவதற்கு யுத்தத்திற்குமுன் 10 முதல் 12 மாதங்கள் வரை பிடித்தது. இப்பொழுது சுமாராக ஐந்து மாதங்களில் பூர்த்தியாகிறது.

யுத்த ஆரம்பத்தில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கப்பற்படைக்கும், வியாபாரத்திற்கும் தேவையான கப்பல்கள் அதிகமாகவே கட்டப்பட்டிருப்பதாக கப்பல்கட்டும், பழுதுபார்க்கும் தொழிலை மேன்பார்த்துவருகிற தலைமை அதிகாரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். யுத்தகாலத்தில் துருக்கியில் பிரிடிஷ் கப்பல் கட்டுமிடங்களில் தயாரிக்கப்பட்ட 4 நாசகாரிகளும், 4 நீர்மூழ்கிக் கப்பல்களும் கொண்டுபோய்ச் சேர்த்ததே நிலைமை திருப்திகரமாக இருப்பதைக் காட்டுகிறது.

பிரிடன் தனக்கு வேண்டிய கப்பல்கள் மட்டுமல்ல தன் நேசதேசத்தார்களுக்கும், நடுநிலைமையிலிருக்கும், நேசதேசங்களுக்கும் தேவையான கப்பல்களைக் கட்டிக்கொடுப்பதற்கு இடம், காலம், பொருள்கள், தொழிலாளிகள் இவர்களை உடையதாக இருக்கிறது.

## புதுவாழ்க்கை இயக்கம்.

1934-ம் வருஷத்தில் நான்சங்கில் புதுவாழ்க்கை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. யுத்தத்திற்குத் தயாரில்லாத சீனாவின் பேரில் ஜப்பான் மின்னல் போர் ஆரம்பித்தபொழுது இந்த இயக்கம் ஆரம்ப திசையிலேயே இருந்தது. அந்த நிலைமையில் இந்த மின்னல் போரானது சீனர்களில் அநேக உயிருக்கும், பொருளுக்கும் கேடு விளைவித்தது. திடீரென்று சீனர்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டார்கள். பொருள்களையெல்லாம் பறிகொடுத்து ஏழ்மையை அடைந்தார்கள். பிச்சையெடுக்கும் நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டார்கள். இவர்களுக்கு வழிகாட்டுவதற்காக ஆத்மீகமாகவும், திருஷ்டாந்தமாகவும் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்ய அரசாங்கத்தாருக்கு ஒரு அவசியம் ஏற்பட்டது. சொல்லவொண்ணாத கொடுமைகளைக்கண்ட ஜனங்கள் மனோதைரியமும், திடசரீரமும் அடைவு

தற்கு ராணுவப் பாதுகாப்பைத் தவிர மேலும் ஏதாவது வேண்டுமென்று எண்ணினார்கள். புதுவாழ்க்கை இயக்கத்திற்கு இதனால் ஒரு முக்கியத்வமும் ஏற்பட்டது. பழைய சீனாவிலிருந்த நாலு முக்கிய நீதிநெறிகளே இந்த இயக்கத்துக்கு அடிப்படையாகவுள்ளன. அவையாவன :—ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளும் விதத்தில் ஒழுங்காக இருத்தல் ; எல்லா வகுப்பினர்களிடத்திலும் நீதியுடன் நடந்துகொள்ளுதல் ; அதிகார முறையிலும், வர்த்தக முறையிலும் நாணயமாகவும், கௌரவமாகவும் நடந்துகொள்ளுதல் ; மற்றவர்களின் உரிமைகளைப் பொருட்படுத்துதல் ; இந்தத் தத்துவங்களைக்கொண்டு சுகாதாரத்தைப் போதித்து தன் வீட்டையும் குழந்தைகளையும் கவனிக்கக் கற்றுக்கொள்வது ; தான் வசிக்கிற இடத்திற்குச் சுற்றுப்புறமுள்ள இடங்களைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்வது ; சௌக்கியமாக இருப்பதற்கு வேண்டிய வழிகளை அபிவிருத்தி செய்தல் ; பொதுஜன முன்னேற்றத்திற்கு வேண்டியவைதைச் செய்தல் ; முதலியவைகளை நடைமுறையில் கொண்டுவரலாம். பல நூற்றாண்டுகளாகத் தனிப்பட்டு வாழ்ந்து வந்ததினால், அதனால் ஏற்படும் தீமைகளையும் போக்கி பொதுஜனங்களுக்கு தங்களுடைய உரிமைகளைத் தெரிந்துகொள்ளவும், பொதுஜனங்களுக்குள்ள உரிமைகளை அவர்களுக்குத் தெரியப்படுத்தவும், அவர்களுடைய பொறுப்புகள் என்னவென்று அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதும் ஆகிய இவைகளே இந்த இயக்கத்தின் முக்கியமான நோக்கம்.

இந்த இயக்கம் முதன்முதலில் கியாங்ஸி மாகாணத்தில் ஆரம்பித்தது. அங்கிருந்து அது சீனா பூராவும் வியாபித்தது. ஜனங்கள் கூடுமிடங்கள், வாசகசாலைகள், ஐக்கிய நாணய சங்கங்கள், கிராமப் புனருத்தாரண சங்கங்கள், இவைபோல புதிய ஸ்தாபனங்கள் பாழாக்கப்பட்ட பிராந்தங்களில், ஆத்மீக உணர்ச்சி ஏற்பட்டு அபிவிருத்தி அடைவதற்கும், கோடிக்கணக்கான ஜனங்கள் தங்கள் தங்கள் வீடுகளைத் திரும்பக் கட்டிக்கொள்ளவும், ஆகாரம் தேடிக்கொள்ளவும், உதவி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் ஆரம்ப சங்கமாகவே முதலில் ஏற்பட்டது. ஒரு வருஷம் பழக்கமடைந்ததும், முற்றிலும் கூட்டுறவு சங்கமாகவும், நாளடைவில் ஐக்கிய நாணய சங்கங்களாகவும், பொருள்களை வாங்கிக்கொள்ளும் கூட்டுறவு சங்கங்களாகவும், ஸப்ளைக் கூட்டுறவு சங்கங்களாகவும், வியாபாரக் கூட்டங்களாகவும் இன்னும் எல்லா வேலைகளும் செய்யும் சங்கங்களாகவும் ஆகிவிட்டன. எல்லோருடைய நன்மையைக் கருதி இந்த ஏற்பாடு அபிவிருத்தியடைவதற்காக அவைகள் எல்லாம் ஐக்கியப்பட்டு ஒன்றுசேர ஆரம்பித்தன.

விவசாயத்தை விஞ்ஞான முறையில் அபிவிருத்தி செய்வதற்காக கிராமங்களில் வாசகசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. பயிர்களை அழிக்கும் பூச்சி புழுக்களைக்கொல்லவும், விதைகளைத் தேர்ந்தெடுக்கவும், புதிய நெல் பயிர்களை வளர்க்கவும், அரசாங்கத்தார் நியமித்திருக்கும் ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்கவும், தெரிந்துகொள்வதற்காக விவசாயத்தில் விசேஷப் பயிற்சி பெற்றவர்களின் கோஷ்டியால் போதிக்கப்பட்டு வந்தது.

கல்வி ஸ்தாபனங்களும், ஆரோக்கிய இலாகாக்களும் ஏற்படுத்தப்பட்டன. நகரபரிபாலனத்தில் பொறுப்பு எடுத்துக்கொள்ளும்படி ஜனங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. சுகாதார ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி ஜனங்களும் அதில் கலந்துகொள்ளும்படி செய்யப்படுகிறது. நாட்டாண்மைக்காரர்களும், புராதன வழக்கப்படி உள்நாட்டுத் தகராறுகளைப் பஞ்சாயத்து மூலம் தீர்த்துக்கொள்ளும்படி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மேதாவியான திறமைவாய்ந்த வாலிபர்கள் வெளியூர்களில் வேலைக்குப் போனால் அதிக சம்பளம் பெறக்கூடியதாக இருந்தபோதிலும் அங்குபோகாமல் மாதத்திற்கு சுமாராக ரூபாய் அறுபது பெற்றுக்கொண்டு, இந்த ஸ்தாபனங்களை நடத்துகிறார்கள். நாடு பூராவும் பிரயாணம் செய்து ஜனங்களுக்குக் கல்வி



போதித்தும், அவர்கள் நன்மையைப் பாராட்டியும், தேசத்தார்கள் என்ன மகத்தான வேலையைச் செய்யவேண்டியிருக்கிறதென்பதையும் அவர்கள் அறிந்துகொள்ளும்படி செய்கிறார்கள். இந்த இயக்கத்தின் நோக்கங்களைப் போதிப்பதற்காக இப்பொழுது 4,00,000 பேர்கள் தன்னிச்சையாக வேலை செய்கிறார்கள். காயமடைந்தவர்களையும், வீடுகளை இழந்தவர்களையும், கஷ்டப்படுகிறவர்களையும் அவர்கள் கவனித்து வருகிறார்கள்.

2,000 சொச்சம் ஜில்லாக்கள் அடங்கிய சீனாவில் 1,400 ஜில்லாக்களில் இப்பொழுது ஆங்காங்கு புதுவாழ்க்கை இயக்கத்தின் ஸ்தாபனங்களிருக்கின்றன. அங்கு தன்னிச்சையாக வேலை பார்ப்பவர்களின் எண்ணிக்கை அநேக லக்ஷங்களுக்கு மேலாகி விட்டது.

யுத்தப் பிராந்த உதவிப்படை (War area Service Corps) செய்து வரும் வேலையானது, புதுவாழ்க்கை இயக்கத்தின் வேலைத்திறமையில் மிகப் பிரசித்தி பெற்றது. 1939-ம் வருஷத்தில் 168 வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு ராணுவ முக்கியத்வம் பெற்ற 31 இடங்களில் சாதகப் படைகளை ஏற்படுத்தினார்கள். 14,45,450 போர் வீரர்கள் சேவை செய்திருக்கிறார்கள்.

காயமடைந்த வீரர்களுக்கு சிகிச்சை செய்யும் ஸ்தாபனம் (Wounded Soldiers League) என்பது, இந்த இயக்கத்தின் மற்றொரு சேவை. காயமடைந்தவர்களுக்கு தளகர்த்தர் சியாங் கை ஷேக் கொடுக்கும் பணத்தைப் பகிர்ந்து கொடுப்பதே அதன் முக்கியமான வேலை. ஆரம்பத்தில் இந்த வேலை கடினமாயிருந்தது. யந்திர சாதனமுள்ள யுத்த நடவடிக்கையில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களையெல்லாம் இந்த இயக்கத்தில் சேவை செய்கிறவர்கள் சீக்கிரத்தில் வென்று விட்டார்கள். இதன் பயனாக கடந்த 3 வருஷங்களுக்கும் 61,80,173 டாலர்கள் அநேக ஆயிரக்கணக்கான பேர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. எதிரியின் போரணிக்குப் பின்புறமிருக்கும் அநேக வைத்தியசாலைகளுக்கு மொத்தத்தில் 3,875 பங்குகளாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

காயமடைந்தவர்களின் தோழர்கள் என்பது இந்த இயக்கத்தின் ஆதரவிலுள்ள மூன்றாவது சேவை. காயமடைந்த ஒவ்வொரு வீரனுக்கும் ஒரு சிநேகிதனை ஏற்படுத்துவதற்காக இந்த சேவை கருதப்பட்டிருக்கிறது.

### யுத்தரங்கத்தில் சேவைகள்.

பர்மாவிலிருந்து யூனானுக்குத் தரை மார்க்கமாகப் பிரயாணம் செய்துவந்த 14,600 சீனர்களுக்கு இந்த இயக்கத்தின் ஆதரவிலுள்ள சீன போசன சாலைகளில் உணவு, படுக்கை முதலிய வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. போகும் வழியிலுள்ள பொதுமக்கள் இவர்களுக்கு உதவி செய்வதற்காக 8,065 வேண்டுகோள் சீட்டுகளை இந்த ஸ்தாபனம் கொடுத்தனுப்பியது. மே மாதம் ஆரம்பத்தில் பெயோஷானில் வெடிகுண்டுகள் விழுந்தபொழுது அங்கு இந்த இயக்கத்தின் போசனசாலை ஒன்று 2,000-க்கு மேல் உள்ள அயல் நாட்டுச் சீனர்களுக்கு உணவும், இடவசதியும் கொடுத்தது. மேலும் கிழக்கு நோக்கி சாமான்கள், ராணுவ வீரர்கள், பொதுஜனங்கள் இவர்களை ஏற்றிச்செல்லும் ஒவ்வொரு வண்டியிலும் 3 அல்லது 4 அயல்நாட்டிலிருந்து வந்த சீனப் பிரயாணிகள் இலவசமாக ஏற்றியனுப்பப்பட்டார்கள். இவ்விதமாக எவ்வளவோ ஆயிரக்கணக்கான ஆண், பெண், குழந்தைகளுக்கு இந்த இயக்கம் உதவி செய்தது.

விமான சிப்பந்திகளுக்கென்று போசன சாலைகள் ஏற்படுத்தியிருப்பது நான்காவது சேவை. விமானதளங்கள் மிகவும் குறைவு. அதிக வசதிக்குறைவினால் ஆரம்பத்தில் விமானிகளுக்கு அதிக களைப்பினால் கஷ்டப்படவேண்டியிருந்தது. இப்பொழுது அவர்கள் மேற்சொல்லிய போசனசாலைக்கும் போகக்கூடும். அங்கு நல்ல உணவை அருந்தலாம். நன்றாகக்குளிக்கலாம். களைப்புத் தீரவிளையாடலாம். இதனால் விமானப்படை வீரர்களுக்கு தேக ஆரோக்கியமும், உற்சாகமும் ஏற்பட்டிருக்கிறது.

இவற்றை விட அவசரத் தேவைக்காக வைத்திய ஸ்தாபனம் ஒன்று இந்த இயக்கத்தில் ஏற்பாடாகியிருக்கிறது. இந்த இயக்கம் உணவு திட்டப்படுத்துவதை ஆதரிக்கிறது. எல்லோருக்கும் மலிவான ஆகாரம் கிடைக்கும்படி செய்கிறது. கோஷ்டி சங்கீதங்களினால் தேசீய உணர்ச்சியை வளர்ச்சியடையச் செய்கிறது. செலவைக் குறைக்க ஒரு நாளில் பல கல்யாணங்களை நடத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்படுகிறது. ஒவ்வொரு புருஷன் பெண்சாதியும் 20 டாலர்கள்தான் கொடுக்க வேண்டும். நல்ல ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்யவும், தேகப்பயிற்சி செய்யவும், எல்லாவித பந்தயங்களும் வைக்கப்படுகின்றன.

இந்த இயக்கத்தின் பயன் மிகப் பெரிதாக இருக்கிறது. ஜப்பானியர்கள் அதை முற்றிலும் அழித்துவிட முயன்றாலும் அவர்களால் போக்கடிக்க முடியாத படி அவ்வளவு பெரியதாக இருக்கிறது. சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து சீனாவுக்குச் சொந்தமான கப்பலில் பிரயாணம்செய்துகொண்டிருந்த அமெரிக்கப் பாதிரி ஒருவர் வாஷிங்டனிலிருந்து திரும்பி அதே கப்பலில் வந்துகொண்டிருக்கும் ஜப்பானியப் பிரயாணி ஒருவரைப் பார்த்து சீனாவின்பேரில் படையெடுக்க ஜப்பான் இந்த சமயத்தை ஏன் தேர்ந்தெடுத்தது என்று கேட்டார். அதற்கு "சியாங் கை ஷேக் ஏற்படுத்திய இயக்கம் வெற்றியடைந்தால் சீனாவில் ஜப்பான் தலைகாட்ட முடியுமென்று நீர் நினைக்கிறீரா?" என்று பதிலளித்தார்.

---

## விக்ஞான நிபுணர்களும், மூலப்பொருள்களும்.

### யுத்தத்தில் அவைகளின் உபயோகம்.

### அமெரிக்காவில் பிரிடிஷ் ஸ்தானீகராயிருக்கும் ஹாலிபாக்ஸ் பிரபு பேசியது.

"மனிதர்களுக்குள் விக்ஞான நிபுணர்களை அதிக புத்தி மகிமை படைத்தவர்களென்றும் முன்னணித் துருப்புகளென்றும் சொல்லலாம். பிரகிருதமிருக்கும் யுத்த நிலைமையில் இவர்களின் தேவை அத்யாவசியமானது.

### விமான ஆதிக்கம்.

"பிரிடிஷ் விமானிகளின் சாமர்த்தியத்தினாலும், பிரிடனில் சமமான எண்ணிக்கை உண்டாக்கப்பட்டிருப்பதாலும் பலவருஷங்களாகத் தயாரிக்கப்பட்டுவந்த ஜெர்மன் விமானப்படை முறிக்கப்பட்டது.

### மூலப் பொருள்களில் உதவி.

"முதலில் மூலப்பொருள் பாதகமாக இருந்ததால் அவைகளைத் தயாரித்துக் கொள்ள நேசதேசங்களுக்குப் போதுமான அவகாசம் தேவையாக இருந்தது.

"அதைத் தயாரித்ததும் நமக்குப் புதிய உணர்ச்சி ஏற்படும். இருந்தாலும், நமது வசத்தில் மூலப்பொருள்கள் அதிகமாக இருப்பதுபற்றி ஒரு அதிகமான நம்பிக்கையும் ஏற்பட்டது. இவ்வித அபிப்பிராயம் நேசதேசங்கள் யாவுக்கும் ஏற்பட்டது. ஆனால் ஜப்பான் இந்த யுத்தத்தில் ஈடுபட்ட பிறகு யுத்தப் போக்கில் நமக்கு ஏற்பட்ட பாதகத்தை உணரவேண்டும்.

"கிழக்கிந்தியத் தீவுகள், பர்மா முதலிய இடங்களிலுள்ள எண்ணெய் தளங்களை ஜப்பானியர் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டனர். அதேவிதமாக ஐரோப்பாவில் ருமேனியா, கலீஷியா, ருஷ்யாவில் சில பாகம் இவ்விடங்களிலிருக்கும் எண்ணெய் தளங்களை ஜெர்மானியர் பிடித்துக்கொண்டனர். இவ்விதமாக நமக்கு சாதகமான அம்சங்களிருக்கும்போது பாதகமான அம்சமும் இருக்கிறதை உணர வேண்டும்."



## மஸ்கிடோ விமானங்கள்.

பகல்காலத்தில் எதிரிநாட்டில் தாக்குதலைச் செய்வதற்கு லாயக்காக மஸ்கிடோ பாம்பர்கள் பிரிடனில் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகள் வெகு தூரம் செல்லும். இவைகளுக்குமுன் பைடர் விமானங்கள் உதவிக்குச் செல்ல வேண்டிய தேவையில்லை. எதிரி நாட்டிலுள்ள முக்கிய லக்ஷியங்களைத் குறி தவறாமல் தாக்கக்கூடியவை. அவ்வளவு பெரிய விமானங்களை எதிரி உபயோகித்ததில்லை என்று டெயிலி ஹெரால்டு பத்திரிகையின் விமான நிருபர் சொல்லுகிறார்.

ஜெர்மன் ரகசியப்போலீஸ் தலைமை காரியாலயமான ஆஸ்லோ நகரத்தில் பகல்காலத்தில் தாக்குதல்செய்யும் சந்தர்ப்பத்தில் இந்த மஸ்கிடோ விமானங்கள் உபயோகிக்கப்பட்டன. ஸெப்டம்பர் மாதம் 8உ ஜெர்மன் தலைமை அறிக்கை கூறுவதாவது "இரண்டு எதிரி விமானங்கள் பகலில் ஜெர்மனியைத்தாக்கின. ஒரு மஸ்கிடோ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது." அதற்கு ஒரு வாரம் கிரமித்து நமது விமான இலாகா கூறியதாவது. 'வீஸ்பேடனுக்கு அருகிலுள்ள எதிரி லக்ஷியங்களை நமது லேசான பாம்பர்கள் தாக்கின. வீஸ்பேடனென்பது லண்டனிலிருந்து 400 மைல் தூரத்தில் இருக்கின்றன. ஆனால், ஒரு விமானமாவது திரும்பாமல் இல்லை. எதிரியின் பாக்வுல்ப் விமானங்களைத் தாற்காட்டக்கூடிய மஸ்கிடோபோன்ற விமானங்கள் ஆஸ்லோமீது பறந்து ஜெர்மனியில் படையெடுத்திருக்க முடியும்.

ஆஸ்லோவிற்குப் போய்வருவதானாலும் 1,000 மைல் தூரமாகும். ஆகவே லங்காஸ்டர் என்ற பெரிய விமானங்கள் செய்யும் வேலையை இந்த மஸ்கிடோ விமானங்கள் செய்கின்றன. பெரிய விமானங்களில் எடுத்துச்செல்லக்கூடிய குண்டுகளை இவைகளில் எடுத்துச்செல்ல முடியாதபோயினும், மிகவேகமாகச் செல்லக்கூடியவை. இவைகளைத் தயாரிக்க, குறைந்த செலவுதான் பிடிக்கும். குறைச்சலாண் பேர்களே இதில் பிரயாணம் செய்யமுடியும்.

ஆகவே இந்த மஸ்கிடோ விமானங்கள் உபயோகிக்கப்பட்டுவருவது முதல் இவ்விஷயங்களை நாம் பரீக்ஷை செய்து பார்த்துக்கொள்ளலாம். இதுபோல் பறக்கும் கோட்டை விமானங்களும் ஜெர்மனியின்மேல் ஈடுபடும். இந்த இரண்டு இனங்களும் ஜெர்மனியில் பகல் காலத்தில் ஈடுபடும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான

## தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சிமுறை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1942— | | பிரஸங்கம் 117—(3-வது பிரிவு). | | | மணி. |
| அக்டோபர் | 17, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் சதுக்கம். | | மாலை | 7.45 |
| | 20, செவ்வாய்க்கிழமை | ஆலங்குடி | ... | ,, | 7.00 |
| | | வடகாடு | ... | ,, | 7.30 |
| | 21, புதன்கிழமை ... | மழையூர் | ... | ,, | 7.00 |
| | | கரம்பக்குடி | ... | ,, | 7.3 |
| | 22, வியாழக்கிழமை ... | பூங்குடி | ... | ,, | 7.0 |
| | | சத்தியமங்கலம் | ... | ,, | 7.3 |
| | 23, வெள்ளிக்கிழமை... | குழிபிரை | ... | ,, | 7.0 |
| | | செவலூர் | ... | ,, | 7.3 |

1942— பிரஸங்கம் 118—(4-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| அக்டோபர் | 24, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் சதுக்கம். | மாலை | 7.45 |
| | 25, ஞாயிற்றுக்கிழமை | நீர்ப்பழனி ... | ,, | 7.00 |
| | | ஆதூர் ... | ,, | 7.30 |
| | 26, திங்கட்கிழமை ... | பொ. புதுப்பட்டி ... | ,, | 7.00 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 7.30 |
| | 27, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | காரையூர் ... | மாலை | 7.00 |
| | | இடையாத்தூர் ... | ,, | 7.30 |
| | 28, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | வடவாளம் ... | மாலை | 7.00 |
| | | செம்மட்டிவிடுதி ... | ,, | 7.30 |
| | 29, வியாழக்கிழமை ... | கார்த்தாமலை ... | ,, | 7.00 |
| | | உப்பிலியக்குடி ... | ,, | 7.30 |
| | 30, வெள்ளிக்கிழமை... | அண்டக்குளம் ... | ,, | 7.00 |
| | | கிள்ளனூர் ... | ,, | 7.30 |

---

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுபத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | |
|---|---|---|
| செவ்வாய்க்கிழமை ... | 20—10—42 ... | ராமச்சந்திரபுரம். |
| புதன்கிழமை ... | 21—10—42 ... | கரம்பக்குடி. |
| வியாழக்கிழமை ... | 22—10—42 ... | கீழாநிலை. |
| வெள்ளிக்கிழமை ... | 23—10—42 ... | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—22-10-42.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் அக்டோபர் மீ 24வ. [ந. 118

பிரஸங்கம் CXVIII.

## ஜப்பானியர்களைப்பற்றி என் அபிப்பிராயம்.

1935-ம் வருஷத்தில் நானும், என்னுடைய மனைவியும் ஜப்பானில் 6 வாரங்கள் இருக்கநேர்ந்தது. நாங்கள் கொழும்புவிலிருந்து கோபே (Kobe)-க்கு ஒரு ஜப்பானியக் கப்பலில் ஏறிச் சென்றோம். ஜப்பானியக் கப்பலில்தான் திரும்பி வந்தோம், புறப்பட்டது முதல், திரும்பி வரும்வரையில் 2, 3 மாதகாலம் பூராவும் ஜப்பானியர்கள் நடுவிலேயே இருக்க நேர்ந்தது. நாங்கள் அங்கு தங்கியிருந்த காலத்திற்குள் ஜப்பான் தேசத்தைப்பற்றியும், ஜப்பானியரின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் முழு விவரமும் தெரிந்துகொள்வதற்கு முடியாது. ஆனால் அநேக முக்கிய விஷயங்களைப்பற்றித் தெரிந்துகொள்வதற்குப் போதுமான அவகாசமிருந்தது.

ஜப்பானியர்கள் தங்களை மிகவும் திறமையுள்ளவர்களாகச் செய்துகொள்ளுவதற்கு அதிக ஊக்கமாக இருந்தார்கள். இவ்விஷயம் எல்லாவற்றைக்காட்டிலும் அதிகமாக எங்களுக்குத் தெரியவந்தது. இத்தகைய ஆவல் மேலுக்கு மாத்திரமல்ல. சென்ற 80, 90 வருஷங்களாக ஜப்பான் அடைந்திருக்கும் முன்னேற்றத்திலிருந்து நடைமுறையில் அவர்கள் கொண்டிருந்த உணர்ச்சி அவ் ஆவலைத் தெளிவுப்படுத்துகிறது. இதுவரையில் அடைந்திருக்கும் அபிவிருத்தியில் அது திருப்தியடையவில்லை. முன்னேற்றமடைவதற்கு அவர்களுக்கு அதிக ஆவலிருக்கிறது. இன்னும் அது உச்ச நிலையை அடைய விரும்புகிறது. அம்மாதிரியடைவதற்குத் தகுதியாக என்னவென்ன வேண்டுமென்று தோன்றுகிறதோ அந்தப் பிரயத்தனங்களையெல்லாம் எடுத்துக்கொள்ளுகிறது. ஜப்பானியன் தான் மிகவும் குள்ளனாக இருப்பதற்கு வருத்தப்படுகிறான். பருமனாகவும், உயரமுள்ளனாகவும், ஆவதற்காக தீர்மானத்துடன் முயற்சிக்கிறான். இதன் பொருட்டே முந்தியைக் காட்டிலும் அதிக மாமிசம் சாப்பிட ஆரம்பித்துவிட்டான். ஏனென்றால் மாமிசம் புசிப்பதனால் தேகவளர்ச்சியாகுமென்று நினைக்கிறான். இதே காரணத்திற்காக அநேக ஜப்பானிய வாலிபர்கள் கடுமையான தேகப்பயிற்சிகள் செய்துவருவதைப் பார்க்கலாம். ஜப்பானியர்கள் இராக்காலங்களில் அதிக நேரம் விழித்துக்கொண்டிராமலிருப்பதற்கு இதுதான் காரணம். ஜப்பானின் பெரிய நகரங்களில் இராக்காலங்களில் தமாஷாக அதிக நேரம்வரையில் விளையாட்டுகள் நடந்துகொண்டிருந்தால் அதை விளம்பரப்படுத்துவதில்லை. தேச சஞ்சாரிகளுக்கும் இவ்விஷயம் தெரிந்திருக்காது. நாடக கொட்டகைகளில் பிற்பகல் 5 அல்லது 6 மணிக்கு ஆரம்பித்து இரவு 9 மணிக்கு முடிந்துவிடும். நடனசாலையில் சாதாரணமாக முடிவு

காலம் இரவு 11 மணி. ஒஸாகாவில் ஒரு நடனசாலையில் நடுநிசி வரையில் நடனம் நடந்தது. ஆனால் இம்மாதிரி சம்பவங்கள் மிகவும் அரிது. திறமைக்கு அடுத்தபடியாக குறிப்பிட்ட நேரத்தில் சரியாகச் செய்யும் பழக்கம் முக்கியமாகக்கருதப்படுகிறது. ஆகையால் எல்லாவற்றையும் மணிப்படி செய்வதை மிகவும் கடுமையான அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. நாங்கள் பிரயாணம் செய்த கப்பல்கள் விளம்பரத்தில் கண்ட மணிப்படி துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தும், அதைவிட்டுப் புறப்பட்டும் சென்றுகொண்டிருந்தன. ரயில் வண்டிகளும் இதுபோலவேதான். ஒரு விநாடி கூட குறையாமல் சரியான மணிக்கு ரயில் வண்டிகள் ஸ்டேஷனுக்கு வந்தும், ஸ்டேஷனை விட்டு புறப்பட்டும் போய்க்கொண்டிருந்தன. புகைவண்டிகள் தலை தெரிக்கும் வேகத்துடன் செல்லமாட்டா. ஆனால் அவற்றில் பிரயாணம் மிகவும் சௌகரியமாக இருக்கும். கப்பல்களில் சாப்பாட்டுக்குப் பிரயாணிகள் வருவதற்கு நேரமானால் பரிமாறுகிறவர்கள் மிகவும் கவலைப்படுவார்கள். பிரயாணிகளைக் கூப்பிட்டனுப்பி போசன சாலைக்குத் துரிதமாக வரும்படி கேட்டுக்கொள்ளுவார்கள்.

வெளித்தோற்றத்தில் மரியாதையாக நடந்து கொள்ளுவதில் ஒருவராலும் ஜப்பானியரை மிஞ்ச முடியாது. மரியாதை காண்பிப்பதும், நன்னடக்கையும் அவர்களுக்கு மிகவும் பொருத்தமானதுதான். ஆனால் சில இடங்களில் அதிக மரியாதையாக நடந்து கொள்ளுகிறார்கள். அந்நிய தேசத்தார்களைப் பொருத்தமட்டில் உண்மையில் அவர்கள் அசட்டையாக இருக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அவ்விதம் அவர்களை கவனிக்காமலிருப்பதை அவர்கள் வெளிக்காட்டிக் கொள்ளுகிறதில்லை. தேச சஞ்சாரிகளாக தங்கள் ஊருக்கு வந்து பணத்தைச் செலவு செய்வதில் அவர்களிடம் விருப்பம் வைக்கலாம். ஆனால் தங்களூரில் தாங்களே எஜமானர்கள் என்பதை பிறர் அறிந்து கொள்ளும்படி செய்கிறார்கள். அந்நிய நாட்டினரிடமிருந்து அவர்கள் அநேக விஷயங்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். என்னென்ன உபயோகமானதோ அவைகளெல்லாவற்றையும் இன்னும் கற்றுக் கொள்ளத்தயாராக இருக்கிறார்கள். ஆனால் அயல் நாட்டான் மட்டும் தங்களுக்கு எஜமானனாக ஆக விடமாட்டார்கள். உலகத்தில் அநேக இடத்தில் ஆங்கில பாஷை மிகவும் உபயோகமாக இருக்கிறது. ஜப்பானிலும் ஆங்கில பாஷை உபயோகமுள்ளதாக இருந்தபோதிலும், மற்ற இடங்களைப் போலல்லாமல் இங்கு பெரும்பாலாக ஆங்கில பாஷையை உபயோகப்படுத்துவது கிடையாது. பிரதானமாகக் காணப்படும் ஒரு பண்டகசாலைக்குள் நாம் ஏதாவது வாங்கலாமென்று எண்ணிச் செல்லலாம். ஆனால் நமக்குத் தேவையென்ன வென்பதைத் தெரியப்படுத்துவதற்கு அங்கு ஒரு துபாஷும் இருக்கமாட்டான். கடைக்குள் நுழைந்துவிட்டு ஒன்றும் வாங்காமல் வெளியே போவோமானால் கடைக்காரர்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை. பொதுவாக வியாபாரமுறையில் தூரக்கிழக்கில் நீண்ட காலம் வர்த்தகத்தில் அனுபவம் வாய்ந்தவர்கள் சொல்வதைப் பார்த்தால் சீனர்களைப் போல ஜப்பானியர்கள் வெகு நன்றாக வியாபாரம் செய்யமாட்டார்கள், என்று தோன்றுகிறது. முதலில் பார்க்கும் பொழுது வெகு அழகாகத் தோன்றி நம்மைப் பரவசப்படுத்துகிறார்கள். இணங்கி வருவதுபோல் காட்டிக் கொள்ளுகிறார்கள். ஆனால் நாழி ஆக ஆக அவர்கள் ஒழுங்கு முறையாக நடந்து கொள்வது போல் காட்டியதெல்லாம் தந்திரத்தையும், மாராட்டத்தையும் மறைப்பதற்காக அம்மாதிரி நடந்து கொண்டதாகத் தெரியவரும். என் சொந்த அனுபவத்தில் அவர்கள் சில்லரை விஷயங்களில் அயோக்கியத்தனமாக நடந்து கொண்டதாக நான் பார்க்கவில்லை. பல்வேறு போஜன சாலைகளில் நாங்கள் தங்கியிருந்தோம். அங்கெல்லாம் சில்லரைத் திருட்டுகள் நடக்கவும் இல்லை, நடந்தாக நான் கேட்கவுமில்லை. ஆனால் ஒரு சமயம் சந்தர்ப்பத்திற்கு அதிகப் புடையான நாணயத்துடன் அவர்கள் நடந்து கொண்டார்கள். கியோடோ (KyoTo) என்னுமிடத்தில் ஒரு மோட்டார் காரை நான் வாடகைக்குப் பிடித்தேன். நான் பிரயாணம் செய்து முடித்ததும், மோட்டார் ஓட்டிக்குச் சேரவேண்டிய வாடகைப் பணத்தைக் கொடுப்பதற்கு என்னிடம் சில்லரையில்லை. மோட்டார் ஓட்டி வசமும் சில்லரையில்லை. வாடகைத் தொகையைக் காட்டிலும் சற்று உயர்வான நாணயத்தை அவனிடம் கொடுத்து, மீதிச் சில்லரையை எனக்குத் திரும்பித் தரவேண்டாமென்று சமிக்ஞை செய்தேன். ஏனென்றால் அவன் பாஷை எனக்குத் தெரியாது. என்



பாஷையும் அவனுக்குப் புரியாது. என்னுடைய எண்ணத்தை அவனுக்கு நன்றாகத் தெரியப்படுத்த அவனிடம் பாக்கி சில்லரையைக் கேட்காமல் நான் நடந்து சென்றேன். நூறு கெஜதூரம் போவதற்குள் அவன் சில்லரையை எங்கேயோ வாங்கிக்கொண்டு, என்னைப் பின்தொடர்ந்து ஓடிவந்தான். எனக்கு அனுபவமுள்ள வேறு எந்த தேசத்திலும் இம்மாதிரி நடந்ததாகத் தெரியவில்லை.

ஜப்பானில் நேர்த்தியான அநேக கோவில்கள் இருக்கின்றன. அவைகள் ரொம்ப பெரியவைகளல்ல. ஆனால் பார்ப்பதற்கு நேர்த்தியாக இருக்கும். ஆனால் ஜனங்கள் மிகவும் தெய்வபக்தியுள்ளவர்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. அந்த தேசத்தில் பிரதானமாக இரண்டு மதங்களிருக்கின்றன, புத்த மதம், ஷிண்டோ மதம். சாதாரணமாக மிகவும் மதப்பற்றுள்ளவர்கள் மற்ற மதத்தினர்களுடன் சமரசமாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் அங்கிருந்த இரண்டு மதத்தினரும் ஒருவருக்கொருவர் போட்டியில்லாமல், ஒற்றுமையாக நடந்து வருகிறார்கள். ஜப்பானியர்கள் அவர்கள் சக்ரவர்த்தியிடம் மரியாதை காட்டுகிறார்கள். அது மத உணர்ச்சினால் தான். சக்ரவர்த்தி வெளியே வருவது மிகவும் அரிது. அதனால் ஜனங்களுக்கு அவர் பேரில் ஏற்பட்டிருக்கும் பக்தி அதிகரித்திருக்கிறது. தெருக்கள் வழியாக அவர் செல்லவேண்டியிருந்தால் அவர் செல்லும் பாதைகளில் மேன்மாடியிலிருக்கும் ஜனங்களெல்லாம் கீழே வந்து விடவேண்டும். ஏனென்றால் மேலிருந்து அவரை ஒருவரும் பார்க்கக்கூடாது.

ஜப்பானில் பியூஜியாமா என்ற ஒரே ஒரு மலையிருக்கிறது. அது தனித்து இருப்பது விசித்திரமாகயிருக்கிறது. அது ஒரு தொடருடனும் சம்பந்தப்படவில்லை. ஆனால் அந்த தேசம் மலைப்பாங்கானது. அவைகளின் அடிவாரங்களில் அநேக நீரோடைகள் செல்லுகின்றன. அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு ஏராளமாக மின்சாரசக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. ஜப்பானில் மழை ஏராளம். ஆகையால் இந்த நீர் ஓடைகள் எப்பொழுதாவது வறண்டு போகுமோயென்ற பயமே இல்லை. ஆகையால் தான் சிறுகுக்கிராமங்களில் கூட மின்சார விளக்குகள் எரிவதைக் காணலாம். தேசமெங்கும் டெலிபோன் கருவிகள் மூலம் பேசுவதற்கு அதிக வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கூலி மிகவும் குறைவானபோதிலும், ஜனங்களைப் பார்ப்பதற்குப் பெரும்பாலும் சந்தோஷமாகவும், திருப்தியடைந்தவர்களாகவும் காணப்படுகிறார்கள். கூலி மிகவும் குறைவாக இருப்பதினால் தான் ஜப்பானில் சாமான்கள் வாங்குவதற்கு மலிவாக இருக்கிறது. சில சமயம் கூலியே கிடையாது. போஜன சாலைகளில் ஐந்து வருஷகாலத்துக்குப் பணிப்பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். அந்தக் காலம் பூராவும் அவர்கள் வேலை கற்றுக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இந்தக்காலம் பூராவும் அவர்களுக்கு உணவும், உடையும் தவிர வேறொன்றும் கொடுப்பதில்லை. இந்தக் காலம் முடிந்தவுடன் அவர்களுக்குக் கூலி கிடைக்கவேண்டுமென்று கேட்கும் பொழுது அவர்களை வெளிக்கடத்திவிட்டு புதிய பணிப்பெண்கள் சேர்க்கப்படுவார்கள்.

ரொம்ப காலமாக ஜப்பானியர்கள் சுருசுருப்புள்ள குள்ள ஜனங்களாகவும், விநோதமாகவும் உபயோகமற்றதும், திறப்பதற்குத் தெரியாமல் திண்டாட்டம் உண்டாக்கக்கூடிய வேடிக்கையான சிறு பெட்டிகள் போல் விளையாட்டுச் சாமான்கள் செய்யக்கூடிய ஜாதியினர் என்றும் கருதப்பட்டு வந்தார்கள். ஜப்பானிய ஸ்திரீகள் தங்கள் தலைமயிரைப் பின்னிக்கொள்ளும் மாதிரி அவர்களுக்கே அசௌகரியமாக இருக்கும். அவர்களுடைய பின்னல்களைப் பார்ப்பதற்கு வெகு விநோதமாக இருக்கும். அவர்கள் தான் இச்சிறு சாமான்களை விற்று வந்தார்கள். 1935-ம் வருஷத்தில் அங்கு ஏராளமாக நேர்த்தியான சிறு சாமான்கள் வியாபாரத்திற்கு இருந்தன. அவற்றை விற்பதில் லாபமுண்டு. அந்த சமயத்தில் முன்சொல்லிய மாதிரி தங்கள் தலைமயிரைப் பின்னிக்கொண்டு கொஞ்ச ஸ்திரீகள் தான் வியாபாரம் செய்தார்கள். ஏனென்றால் அது வியாபாரம் செய்வதற்கு அதிக சிரமமாக இருக்கும். அதனால்தான் இப்பொழுது பெரிய நகரங்களில் அநேக ஸ்திரீகள் ஐரோப்பிய உடை தரித்துவருவதைப் பார்க்கலாம். ஜப்பானியர்கள் கடுதாச அட்டை வீடுகளில் வசிக்கிறார்கள். அத்தகைய வீடுகளில் சில கடுதாச அட்டைகளைச் சேர்த்து வெகு எளிதில் புதிய அறைகளைத்

தயாரித்துவிடுவார்கள். அறைகள் தேவையில்லாத போது அவ்வட்டைகளை எடுத்து விடுவதும் உண்டு. இம்மாதிரியான பண்டை காலத்து வீடுகள் இன்னும் காணப்படுகின்றன. அங்கு பெரிய வீடுகளும் சேர்ந்தாற்போலுள்ள பல கட்டடங்களும் இருக்கின்றன. இம்மாதிரியாக ஜப்பான் வரவர முன்னேற்ற மடைந்து வருகிறது. அமெரிக்கா யுத்தத்தில் இறங்குவதற்கு முன் அமெரிக்க மாதப் பத்திரிகைகளில் ஜப்பானைப்பற்றி சற்று இழிவாக எழுதப்பட்டன. பிற்பட்டு சில மாதங்களில் நடந்த சம்பவங்களிலிருந்து ஜப்பானைப்பற்றி அவ்வளவு இழிவாகச் சொல்லுவது தவறுயென்று புலப்படுகிறது. ஒருவிதத்திலும் ஜப்பானியரைப் பழிப்பதற்கு முடியாது. அவர்கள் புத்திசாலிகள், மனவுறுதி கொண்டவர்கள். ஒழுங்குபடுத்துவதில் அதிகத் திறமை வாய்ந்தவர்கள். சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளக்கூடியவர்கள். இவர்கள் யுத்தத்திற்காக பிரமாதமாக தயாரிப்பு செய்திருக்கிறார்கள். தங்களிடத்தில் அதிகத் திறமை இருக்கிறதென்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. சாவைக்கூட அவர்கள் லக்ஷியம் செய்யாதவர்கள். அத்துடன் அவர்களுக்கேற்பட்டிருக்கிற கௌரவம் குறையாமலிருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால் அவர்களுக்குப் பெருந் தோல்விகளை விளைவித்தாலொழிய அவர்கள் தோற்று விட்டோமென்பதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

## வார யுத்தச் செய்திகள்.

### 17—10—42-லிருந்து 23—10—42-வரை.

**ருஷ்யா.**—கடுமையாக ஸ்டாலின்கிராட்டைத் தாக்குவதாக ஹிட்லர் சொன்னபடி அந்நகரம் தாக்கப்பட்டு வருகிறது. தினம் 1,500 விமானங்கள் வீதம் உபயோகித்து குறுகிய தொழிற்சாலை பிரதேசமாகிய ட்ஜெர்ஜின்ஸ்க் (Dzer Jinskv)வைப் பிடித்திருக்கிறான். வால்காவிற்கு அருகில் யுத்தம் பரவுவதால் அதன் வழியாக ருஷ்யர்கள் ஸப்ளைகளைப்பெறுவது சிரமமாயிருக்கிறது.

மாஸ்டாக் முனையிலும் அதேவிதமாகக் கடுமையான யுத்தம் நடைபெறுகிறது. ஆனால் ஒரு முடிவும் பெறவில்லை.

நோவோரோஸிஸ்கிற்குத் தென் கிழக்கில் கடும் சண்டைக்குப் பிறகு இரண்டு இடங்களை ருஷ்யர்கள் காலி செய்யவேண்டியதாயிற்று.

ஜெர்மன் தாக்குதல்கள் கடுமையாகி வருவதால் ஸ்டாலின்கிராட்டில் தான் சண்டை வலுத்திருக்கிறது. டைம்ஸ் பத்திரிகை கூறும் விதமாக முடிவான சண்டை இன்னும் சீக்கிரத்திலேயே நிகழும். மாரிகாலத்தில் நிலைத்திருப்பதற்காக இடங்களை நாஸிகள் அவசர அவசரமாக ஏற்படுத்தப்பார்க்கின்றனர். இதற்காக ஸ்டாலின்கிராட்டையும் அதற்குத் தெற்கிலுள்ள பாகங்களையும் பிடிக்கப்பார்க்கின்றனர்.

**ஸாலமன்ஸ்.**—அக்டோபர் 12உ அமெரிக்க பாம்பர் விமானங்கள் பூகாவைத் தாக்கி பூயினில் (Buin) ஒரு சாமான் கப்பலைத் தீ மூட்டின.

அக்டோபர் 13உ கூடல்கனார் விமான தளங்களை எதிரி விமானங்கள் தாக்கின.

அக்டோபர் 14, 15உ நியூ ஹிப்ரிடிஸ் கூட்டத்தில் எஸ்பிரிடு ஸான்டோ தீவிலுள்ள நேசதேச நிலயங்களை எதிரிக் கப்பல்கள் தாக்கின.

அக்டோபர் 15உ கூடல்கனாரில் உள்ள எதிரி போக்குவரத்துக் கப்பல்கள் தாக்கப்பட்டன. ஸால்வோ தீவிலிருந்து துருப்புகளைக்கொண்டு வந்து கூடல்கனாரில் எதிரி இறக்கினான்.

அக்டோபர் 15, 16உ கூடல்கனாரில் எதிரிக் கப்பல்கள் [illegible]. நேசதேச விமானங்கள் ஸாலமனுக்குக் கிழக்கில் எதிரிக் கப்பல்களைத் தாக்கின.

அக்டோபர் 16உ கூடல்கனாரின் வடகிழக்கு முனையில் இருந்த எதிரிக் கப்பல்களை அமெரிக்கப் போர் விமானங்களும் [illegible] தாக்கின.



அக்டோபர் 17உ கூடல்கனாரில் நேசதேச விமான தளங்களை எதிரி பாம்பர்களும் பைடர்களும், தாக்கின.

அக்டோபர் 18, 19உ ஸாலமன்ஸ் பிரதேசத்தில் எதிரியின் துருப்புகளை நேசதேச விமானங்கள் தாக்கின. தற்சமயத்தில் ஜப்பானியர் துருப்புகளை இறக்கவில்லை.

**நியூ கினி.**—டெம்பிள்டனுக்கு அருகில் நேசதேசத் தரைப்படைகள் எதிரிகளைத் தாக்கின. ஓவன் ஸ்டான்லி மலைத்தொடரில் ரஸோபிரக் (Razobrack) பிளவிலிருந்து ஜப்பானியர் துரத்தப்பட்டனர்.

**அலூஷியன்.**—கிஸ்காவில் தாக்குதல் நீடிக்கிறது.

**சைனு.**—அக்டோபர் 6உ சீனத் துருப்புகள் கான்டனுக்குக் கிழக்கிலுள்ள ஜப்பானிய நிலைகளைத் தாக்கி அதிக சேதத்தை விளைவித்தன. கின்வா, லாஞ்சி, [illegible]யாங் பிரதேசங்களிலும் பல சண்டைகள் நிகழ்ந்தன.

**பர்மா.**—அமெரிக்கப் போர் விமானங்கள் சென்ற வியாழக்கிழமை லாஷியோவைத் தாக்கின. ஒரு வியாபார ஸ்தலம் கடுமையாகச் சேதப்பட்டது.

**மடகாஸ்கர்.**—அன்டனனரிவோவிலிருந்து முன்னேறிய பிரிடிஷ் துருப்புகள் அம்போஸிட்ராவை ஆக்கிரமித்துக்கொண்டன.

**விமானப்படையெடுப்புகள்.**—ஜெர்மனியின் பெரிய துறைமுகமான கீல் நகரை பிரிடிஷ் விமானப்படை தாக்கிற்று. பிஸ்கே குடாவில் இரண்டு யூங்கர் விமானங்கள் நாசமாயின. பாரிஸுக்கு 170 மைல் தென்கிழக்கிலுள்ள லே க்ருஸோட் (Le Creusot) தாக்கப்பட்டது. இது ஒரு பெரிய தொழிற்சாலைப் பிரதேசம். மற்றும் டொப்ருக், பூகா, லொல்லூம், டாபா முதலியவைகளும் தாக்கப்பட்டன.

**மால்டா.**—அக்டோபர் 10-லிருந்து 15 வரை அச்சுநாட்டுத் தாக்குதல் நடந்தது. எதிரிக்கு 98 விமானங்களும் 220 விமானிகளும், நஷ்டம்.

**லிபரியா.**—மேற்கு ஆபிரிக்காவில் லிபரியாவில் அமெரிக்கத் துருப்புகள் இறங்கியிருக்கின்றன. பூபடகு தொந்தரவைத் தடுக்க பிரிடிஷ் விமானப்படை காவல்புரிந்து வருகிறது.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை பெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—10—42. ([illegible]) | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும். | | | |
| | பகலில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | [illegible]ரவில்.—[illegible] வேட்டைகள் போனது விரோதி சமுத்திரக்கரையோரங்களில். | | | |
| | எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya). | | | |
| | [illegible] செல்லும் லாரிகள், ரஸ்தாவில் [illegible]வாகனங்கள், சிறு கப்பல்.—[illegible] பிரதேசத்தில். | | | |
| | [illegible]படைகள்.—யுத்தப் பிர[illegible] [illegible] | | | 2 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—10—42. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | லக்ஷியங்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—எல்டாபா (El-Daba) பிரதேசத்தில். | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | எதிரிகள் வேவுபார்த்தல்.—ஸி ஸி லி (Sicily) பேரில். | | | 1 விமானம். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—ருஷ்யப் போர்முனை எங்கும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விமான எதிர்ப்புகள்.—பூனு (Buna) பிரதேசத்தில். | | | |
| | ஜப்பானியர்களுக்குச் சொந்தமான பாலம்.—வெய்ரோபி (Wairopi). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமான தளம்.—பூகா (Buka). | ஒரு க்ருயிஸர் மூழ்கடிக்கப்பட்டது; மற்றொரு க்ருயிஸர் சேதமாக்கப் பட்டது. | | |
| | கரையோரம் வரும் ஜப்பானியப் படகுகள், யுத்தக் கப்பல்களால் துணைபுரியப் பட்ட கப்பல்கள்.—கூடல் கனர் (Gudal Canar) வடகரைக்கருகாமையில். | 5 நாசகாரிகள் மூழ்கடிக்கப் பட்டன. துருப் பேற்றிய கப்பல் மூழ்கிற்று. | | |
| | ஒரு சாமான் கப்பல்.—பூயின் (Buin). | | | |
| | **அலூஷியன் தீவுகள் (Aleutians).** | | | |
| | கப்பல்கள்.—கிஸ்கா (Kiska) துறைமுகத்தில். | | | |
| 13—10—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—துறைமுகம், கீல் (Kiel) என்னுமிடத்திலுள்ள கப்பற்படை தளம். | | 9 பாம்பர் விமானங்கள். | |
| | ரோந்து.—பிஸ்கே (Biscay) விரிகுடாவில். | | | 3 விமானங்கள். |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | ரோந்து.—யுத்தப் பிரதேசத்தில். | | | 4 விமானங்கள். |
| | விமான எதிர்ப்புகள்.—எல் அலமீன் (El Alamein), டாபா (Daba)வின் தெற்குப் பகுதிகளில். | | | 2 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| 13—10—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk) துறைமுகத்தில். | ஒரு பெரிய கப்பல் இருமுறை தாக்குண்டது. | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப்போர்முனை எங்கும். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | விமானம் பறக்குமிடங்கள், விமானங்களை அணிவகுப்பதற்குச் சாதகமாயுள்ள விமானக் கூடங்கள்.—ராபால் (Rabaul). | | | |
| | கட்டடங்கள்.—ராபால் (Rabaul). | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | வெய்ரோபி (Wairopi) பாலம்.—கொக்கோடா (Kokoda)வுக்கருகாமையில். | | | |
| | விமான தளம்.—பூனு (Buna). | | | |
| | **டிமோர் (Timor).** | | | |
| | டில்லி (Dilli). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமானக்கூடம்.—பூகா (Buka). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—நியூஜார்ஜியா (New Georgia) தீவிற்குத் தெற்கே. | | | |
| | **பர்மா (Burma).** | | | |
| | லக்ஷியங்கள்.—கங்கா (Gangaw) பிரதேசத்தில், | | | |
| —10—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—படகுகள், சாமான் ரயில் வண்டி, ரயில்வே என்ஜின்கள்.—ஹாலந்து (Holland). | | | |
| | இரவில்.—கண்ணிவெடிகள் போடுவது விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில். | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | கப்பல் துறைகள், முக்கிய சிறு துறைமுகங்கள், பெட்ரோல் வைக்கப்படும் கட்டடங்கள்—டொப்ருக் (Tobruk). | பெருந்தீ கிளம்பிற்று. | | |
| | லக்ஷியங்கள்.—ஸொலும் (Sollum). | | | |
| | [illegible] வண்டிகள்.—ஸிடி [illegible] (Sid Haneish) அருகாமையில். | | | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **14—10—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| விமானமிறங்குமிடங்கள்.—எல் டாபா (El Daba). | | | |
| **ருஷ்யா (Russia)** | | | |
| விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | | | |
| **நியூ கினி (New Guinea).** | | | |
| விமான நிலயம்.—பூனு (Buna). | | | |
| **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| ஜப்பானியக் கப்பல்கள்.—பூகா (Buka)வுக் கருகாமையில். | | | |
| விரோதி விமானங்கள்.—ரெகடா விரிகுடா (Rekata bay)வின் கரையோரத்தில். | | | |
| **அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| முகாம் செய்யும் பிரதேசம்.—கிஸ்கா (Kiska). | | | |
| விரோதியின் கடல் விமானங்கள்.—கிஸ்கா (Kiska)வுக்கு கருகாமையிலுள்ள சமுத்திரத்தில். | | | |
| **15—10—42.** (வியாழக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| பகலில்.—கப்பல்துறைகள், லெஹாவர் (Lehavre). | | 1 விமானம். | |
| இரவில்.—தொழிற்சாலைகள்—ரைன்லாந்து (Rhineland), கோலோன் (Cologne). | | | |
| விமான எதிர்ப்புகள்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| விரோதி போக்குவரத்து, கவசம் பூண்ட வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—டொப்ருக் (Tobruk). | | 6 விமானங்கள். | |
| **கிரீட் (Crete).** | | | |
| விமானச் சண்டை—கிரீட் (Crete)டில். | | 1 விமானம். | |
| **ருஷ்யா (Russia).** | | | |
| விமானப் போர்கள்—கிழக்குப் போர் முனையில். | | | |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|
| **—10—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **நியூ கினி (New Guinea).** | | | |
| விரோதி ஸ்தானங்கள்—டெம்பிள்டன் (Templeton) மார்க்கத்திற்கருகில். | | | |
| விரோதியின் கட்டடங்கள்—ஸலாமூவா (Salamaua). | | | |
| விரோதி ஸ்தானங்கள்—வெய்ரோபி (Wairopi). | | | |
| **டிமோர் (Timor).** | | | |
| விரோதி ஆக்கிரமித்த கிராமம்—அலீயூ (Alieu). | | | |
| **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| விரோதிக்குச் சொந்தமான சிறு கிருயிஸர்—பெய்ஸி (Faisi)க்கருகாமையில். | | | |
| விரோதி போக்குவரத்துகள்—விமானமிறங்குமிடங்களுக்கருகாமையில். | | | |
| **அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| விரோதியின் சாமான் கப்பல்—கிஸ்கா (Kiska)வுக் கருகாமையில். | மூழ்கடிக்கப் பட்டது. | 1 விமானம். | |
| இரண்டு ஜப்பானிய நாசகாரிகள்—கிஸ்கா (Kiska)வுக்கு வடகிழக்கே. | | | |
| **பர்மா (Burma).** | | | |
| விமான நிலயம்—லாஷியோ (Lashio). | | | |
| **—10—42.** (வெள்ளிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| பகலில்.—தொழிற்சாலை—ஹெங்கெலோ (Hengelo). | | நஷ்டமில்லை. | |
| ரயில்வே எஞ்ஜின்கள்—ஹாலந்து (Holland). | | | |
| கப்பல்கள்—பிரெஞ்சுக் கடற்கரைக் கருகாமையில். | ஒரு கப்பல் தாக்குண்டது. | | |
| **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| துறைமுகம், கப்பல்கள்—பெங்காஸி (Benghazi). | | | |
| விமான மிறங்குமிடங்கள்—எல்டாபா (El Daba). | | | |
| ரோந்து—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| **நியூ கினி (New Guinea).** | | | |
| விமான நிலயம்—பூனு (Buna). | | | |
| விரோதி ஸ்தானங்கள்—ஸலாமூவா (Salamaua). | | | |
| **அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| கிஸ்கா (Kiska). | | | |
| **ஸாலமன் (Solomons) தீவுக[illegible]** | | | |
| விரோதியின் [illegible], [illegible]—[illegible] (Gudal canar)க்கு [illegible] [illegible]. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 17—10—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ரயில்வே தொழிற்சாலை, இன்னும் மற்ற தொழிற்சாலைகள்—ஹாலந்து (Holland). | | | |
| | ஷினீடரீ—(Schenider)உள்ள யுத்த தளவாட தொழிற்சாலைகள்—லிகிருஸாட் (Lecresot) (பாரிஸுக்கு 170-மைல்கள் தென்கிழக்கே). | தொழிற்சாலைப் பிரதேசம் பூராவும் கொள்ளையிடப் பட்டது. | 1 விமானம். | |
| | இரவில்.—விரோதி சமுத்திரங்களில் சுரங்க வெடிகள் போடுவது. | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | கிழக்கு நோக்கிச் செல்லும் விரோதியின் போக்குவரத்து வண்டிகள்—ஸிடி பாராணிக்கும் ஸொலூமுக் (Sidi Barrani & Sollum)கும் இடையே செல்லும் ரஸ்தாவில். | | | |
| | விரோதியின் சாமன் கப்பல்—டிரிபோலிடேனியா (Tripolitania)கடற்கரைக் கருகாமையில். | | | |
| | விமான மிறங்கு மிடம்—எல்டாபா (El Daba)வுக் கருகாமையில். | | | |
| | விமான மூலம் வேவுபார்த்தல்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—ருஷ்யப் போர்முனை எங்கும். | அக்டோபர் 10 முதல் 17 வரையுள்ள வாரத்தில். | 49 விமானங்கள். | 130 விமானங்கள். |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்—டெம்பிள்டனுக் (Templeton)குச் செல்லும் மார்க்கத்திற் கருகாமையில். | | | |
| | விரோதி ஆக்கிரமித்த பிரதேசங்கள், கிராமங்கள்—மூபோ (Mubo)வுக் கருகாமையில். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain).** | | | |
| | துறைமுகம்—ராபால் (Rabaul). | | | |
| | **ஷார்ட்லாண்டு (Shortland) தீவுகள்.** | | | |
| | எதிரியின் பெரிய போக்குவரத்துக் கப்பல்—தீவுகளுக்கருகாமையில். | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | விமான நிலயம், எண்ணெய்க்கிடங்குகள்—பூகா (Buka). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 17—10—42. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **அலூஷியன் (Aleutians)தீவுகள்.** | | | |
| | துறைமுகத்தில் வந்திறங்கிய கப்பல்கள்—கிஸ்கா (Kiska). | | | |
| 18—10—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | நஷ்டமில்லை. | 1 விமானம். |
| | ரயில்வே முன்ஜின்கள், விமானந் தகர்க்கும் பீரங்கிகள், பீரங்கிகள் வைக்கும் ஸ்தானங்கள்—வட பிரான்ஸ்(France). | | | |
| | இரவில்.—விரோதி சமுத்திரங்களில் சுரங்க வெடிகள் போடுவது. | | | |
| | **எகிப்தும், லிபியாவும் (Egypt & Libya).** | | | |
| | விரோதியின் ரயில்வண்டி—எல் அலமீனுக்கும் (El Alamein), மாடின் பாகுஷ் (Matin Bagush) என்னுமிடத்திற்கும் இடையே. | பிரமாதமான வெடி கிளம்பியது. | | |
| | விமான மிறங்குமிடங்கள்—பூகா (Fuka). | | | |
| | விமான மிறங்குமிடங்கள், கட்டடங்கள்—ஸொலூம் (Sollum). | | | |
| | துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்—டொப்ருக் (Tobruk) கடற்கரை ரஸ்தாவில். | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—எல்டாபா (El Daba). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | விமானச் சண்டைகள்.—கிழக்குப்போர் முனை எங்கும். | | | |
| | **நியூ கினி (New Guinea).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—டெம்பிள்டனுக்கு (Templeton)செல்லும் மார்க்கத்தில். | | | |
| | விரோதி ஆக்கிரமித்த கிராமம்.—மூபோ (Mubo). | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—வெய்ரோபி (Wairopi) பிரதேசம். | | | |
| | **நியூ பிரிடன் (New Britain)** | | | |
| | விரோதியின் கடல் விமானம்.—தெற்குக் கடற்கரைக்கருகாமையில். | சேதமாக்கப் பட்டது. | | |
| | **மேனஸ் (Manus) தீவு.** | | | |
| | சேதங்களை நிலையைப்பற்றி அறிவிக்கும் விரோதியின் கப்பல்.—லோரின்கா (Lorengau) துறைமுகத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 18—10—42. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **அலூஷியன் (Aleutians) தீவுகள்.** | | | |
| | கிஸ்கா (Kiska). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | கப்பற்படை, விமானப்படை தளங்கள்.—பூயின் (Buin). | | | |
| | கடல் விமானங்களும், சாமான் கப்பல்களும்.—பூயினுக் (Buin)கருகாமையில். | | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 13—10—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | 50 விமானங்களுக்குமேல் சேதமாயின. | 25 விமானங்கள். | 5 விமானங்கள்; 3 விமானிகள் தப்பினர். |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | படகுப் பாலம்.— ஸ்டாலின்கிராட்டுக் (Stalingrad)குக் கிழக்கே வால்கா நதியில். | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | அமெரிக்காவுக்குச் சொந்தமான விமான தளம்.—கூடல்கனர் (Gudal canar). | | | |
| 14—10—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | 23 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | நஷ்டிய ஸ்தானங்கள்.—மோஸ்டாக் (Mozdok) பிரதேசத்தில். | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமானத் தளம்.—கூடல்கனர் (Gudal-canar). | | 19 விமானங்கள். | 1 விமானம். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 15—10—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமானதளம்.—கூடல்கனர் (Gudal-canar). | | 4 விமானங்கள். | |
| 16—10—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் (England)ன் தென்கிழக்குக் கடற்கரை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | 6 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமான நிலையம்.—கூடல்கனர் (Gudal-canar). | | | |
| | அமெரிக்கத் துருப்பேற்றிய கப்பல்கள்.—கூடல்கனர் (Gudalcanar) பிரதேசத்திற்குவரும் மார்க்கத்தில். | | | |
| 17—10—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | 8 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராட் (Stalingrad). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமானதளம்.—கூடல்கனர் (Gudal-canar). | | | |
| 18—10—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranea** | | | |
| | மால்டா (Malta) | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 18—10—42. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | அமெரிக்க ஸ்தானங்கள்.—கூடல்கனூர் (Gudal canar) பிரதேசத்தில். | | | |
| 19—10—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (E. A. S. T. Anglia)—தேம்ஸ் (Thames) நதி கழிமுகம். | | 2 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | இரவில்.—விமான நடமாட்டம் இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | ஸ்டாலின்கிராடு (Stalingrad). | | | |
| | **ஸாலமன் (Solomons) தீவுகள்.** | | | |
| | விமான நிலயம்.—கூடல்கனூர் (Gudal-canar). | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**டிரபால்கர் தினம்.** அக்டோபர் 21ௐ டிரபால்கர் தினம் கொண்டாடப்படுகிறது. முன்பு நடந்த சண்டையின் பயனாகத்தான் ஏழுகடலிலும் பிரிடனுக்கு ஆதிக்கம் ஏற்பட்டது. அந்தச் சண்டையில் நெல்ஸன் பிரெஞ்சுக் கடலாதிக்கத்தை முறித்தார். தற்போது ஹிட்லர் தோன்றியிருப்பதுபோலவே 137 வருஷங்களுக்குமுன் ஐரோப்பாவில் பிரெஞ்சு வீரன் தோன்றி யாவரையும் மடியச்செய்து வெற்றிமேல் வெற்றியும் அடைந்தான். எல்லா ஐரோப்பாவும் பிரெஞ்சுக்காரர் வசமாகும் போலவும் காணப்பட்டது. ஆனால் இங்கிலீஷ் கால்வாய் குறுக்கே நின்றது. கடல் ஆதிக்கம் பிரிடன் வசத்திலிருந்தது. பிரிடனின் கடலாதிக்கம் டிரபால்கர் உருவத்திடனே காணப்பட்டது. அப்போது பிரிடிஷ் தளகர்த்தர் நெல்ஸன் ஒவ்வொருவரும் தனது வேலையைச் சரிவரச் செய்யவேண்டுமென்றார். அப்படி அவரது வார்த்தைக்கு யாவரும் இணங்கியதாலேயே பிரிடன் வெற்றிபெற்றது. அதைத்தான் தற்போதும் கைக்கொள்ளவேண்டும்.

அதோடுமட்டுமில்லாமல் கடலில் வெற்றிபெற்றால் தரையிலும் வெற்றி பெறுவதற்குச் சமானம். ஹிட்லர் நிலத்தில் பெருவாரியான வெற்றிகளையடைந்தும் பயன்படவில்லை. நெபோலியனும் இப்படித்தான் ஆரம்பத்தில் வெற்றி பெற்றான். பிரிடனைப் பிடிக்கமுடியாது தோற்றான். ஐரோப்பா பூரா அவனது வசத்தில் இருந்தும் பிரிடனின் படை அவனது வெற்றிகளை வாடல்லூ என்ற இடத்தில் நிறுத்தியது. தற்போது ஹிட்லரையும் மறியலுக்கப்போகிறது.



ஆனால் டிரபால்கருக்குப் பிறகு கடல் யுத்தத்தில் பலவித மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நீர்மூழ்கி, விமான பலம், சுரங்க வெடி முதலியவை.

புதிய ஆபத்தென்றால் அதைத் தடுக்க புதிய ஏற்பாடுகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன. சுரங்க வெடிவாரி, நாசகாரி, விமான எதிர்ப்பு பீரங்கி, புதிய கப்பல்கள் முதலியவைகளைக்கொண்டு பிரதி செய்யப்படுகிறது. ஆகவே கடலாதிக்கம்தான் இந்த யுத்தத்தையும் தீர்மானிக்கப்போகிறது.

இன்னும் டிரபால்கரைப் போன்ற சண்டை இன்னும் இந்த யுத்தத்தில் நடைபெறவில்லை. எதிரியின் கப்பற்படை தென்படவேயில்லை. மூன்று வருஷ காலமாக கடலில் காவல்புரிந்து துணைக்கப்பல்களுக்கு உதவி புரிந்து, கிராப்ஸ்பி, பிஸ்மார்க், டங்கர்க், டாரன்டோ, மடபன் போன்ற வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. டிரபால்கரின் உணர்ச்சி குறையாததால் அவ்வித சண்டை எப்போது நேர்ந்தாலும் வெற்றி பெறுவோம்.

டிரபால்கர் தினத்தில் சற்று சரித்திரத்தை ஆராய்வோம். உலகைக் காத்தவரென்று பிட் என்பவரை போற்றியபோது அவர் சொன்னதாவது "நீங்கள் எனக்குச் செய்த வந்தனங்களுக்கு பிரதி வந்தனங்கள் அளிக்கிறேன். ஒருவனால் ஐரோப்பாவைக் காக்க முடியாது. இங்கிலாந்து தனது முயற்சிகளால் காக்கப்பட்டதால் ஐரோப்பாவும் காக்கப்பட்டதாகும்! இவ்விதம் பிரிடன் பேரில் நடந்த விமானப்போருக்குப் பிறகு சர்ச்சில் ஒருவரே சொல்ல முடியும்".

இதிலிருந்து ஹிட்லரையும், நெபோலியனையும் ஒப்பிடத் தோன்றுகிறது. நெபோலியனைப்போல் ஏராள பிரதேசங்களை ஜயித்து புதுதிட்டத்திற்கு உட்படுத்தப் பார்க்கிறான். நெபோலியனுக்கு ஏற்பட்டவிதமாக பிரிடனும், பிரதம மந்திரியுமே ஹிட்லரின் வெற்றிகளுக்குத் தடையாக இருக்கின்றன. ராணுவ சக்தியில் அலெக்ஸாண்டர், ஸீஸர் முதலியோரைப்போல் நெபோலியன் உயர்ந்தவன். ஹிட்லரின் ஏற்பாடுகள் அப்படிக் காணப்படவில்லை. நெபோலியன் சில கொடிய செய்கைகளைச் செய்திருந்தாலும் ஹிட்லரைப்போல் காட்டுமிராண்டியல்ல. சமதை, ஸ்வதந்திரம், முதலியவைகளுக்காக நெபோலியன் ஈடுபட்டான். பைத்தியம் பிடித்த சிலரே ஹிட்லரைப் புகழ முடியும். நெபோலியனுக்கு ஐரோப்பாவில் மதியாதையும் இருந்தது. ஹிட்லருக்கு அவ்வித கௌரவம் கிடைக்காததால் போலீஸ் முதலிய படைகளைக்கொண்டு அடக்கப்பார்க்கிறான்.

வி வி வி வி வி வி வி

**[illegible]ளும் நாஜித் தந்திரம்.** சமீபத்தில் ஹிட்லர், கோயரிங், கோயபெல்ஸ் பேசிய பேச்சுகளால் ஜெர்மன் திட்டங்களில் சில மாறுதல்கள் தெரிகின்றன. ருஷ்யாவைத் தவிர இதர முனைகளில் வேறு சத்துருக்கள் இல்லாததாலேயே எதிரிக்கு ஆரம்பத்தில் வெற்றி கிடைத்தது. ஆகவே ஓரிடத்திலேயே கவனத்தைச் செலுத்தமுடிந்தது. இதுவும் லெபாஸ்டபூல், [illegible]ஸ்டவ், ஸ்டாலின்கிராட் முதலிய இடங்களில் பலிக்கவில்லை. அமெரிக்காவும், பிரிட்டிஷாரும் ஒன்று சேர்ந்து புதிய சைனியங்களைத் தயாரித்ததிலிருந்து இனி சிரமமேற்படுமென்று ஜெர்மனிக்கும் தெரியும். ஓரிடத்தில் மாத்திரம் கவனம் செலுத்துவதும் முடியாது. தற்காப்புத் தந்திரம்தான் பாக்கியிருக்கிறது.

ஸ்டாலின்கிராட் வீழ்ச்சிக்குப் பிறகு ருஷ்யா கொள்ளையிடப்படுமென்று ஹிட்லர் சொன்னான். ஆனால் எப்படியாவது ருஷ்யாபேரில் தாக்குதலைச்செய்து ஆங்கிலேய-அமெரிக்க முற்றுகையிலிருந்து ஐரோப்பாவைக் காப்பதுதான் நோக்கம். கடந்த மாரி காலத்திலும் இந்தக் கோடைகாலத்திலும் அடைந்த அனுபவத்தைப் பார்த்தால் ரிஷெவ், பிரயான்ஸ்க், வியாஸ்மா, ஓரெல், கார்கவ் போன்ற தனிக் கோட்டைகளால் ருஷ்யர்களைத் தடுக்கமுடியுமென்று நினைத்திருக்கிறான். வரும் காலத்தில் இந்த அரண்கள் வால்கா கரையிலும் அல்லது காஸ்பியன் கருங்கடல் வரையிலும் வைத்துக்கொள்ளலாம். ஆனால் இந்தப் புதிய தந்திரத்தின்படி தற்காப்பு அரண்களுக்குப் பின்னால் ருஷ்யர்கள் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருப்பார்கள். இரும்பு, நிலக்கரி, எண்ணெய்முதலியவை [illegible]த்ததால் ருஷ்ய எதிர்ப்பும் வரவரக் குறையுமென்றும் ஹிட்லர் நினைத்து வருகிறான்.

இதுமாதிரிதான் ஐரோப்பாவின் மேற்கிலும் தந்திரம்போட்டு வருகிறான். ஆர்க்டிக், அட்லாண்டிக், மத்தியதரைக்கடல் முழுதும் தற்காப்பு செய்திருக்கிறான். யூ படகுகளை உபயோகித்து ஆங்கிலேய—அமெரிக்க பலத்தைக் குறைக்க நினைக்கிறான்.

ஐரோப்பாவை நாலா பக்கங்களிலும அடைத்து ருஷ்யாவையும் கொள்ளையிடப்பார்க்கிறான். கோதுமை, இரும்பு, எண்ணெய் முதலியவைதான் அவனுக்கு அவசியம். உள்நாட்டு எதிர்ப்பையெல்லாம் கூட்டமாகக் கொலை, வெளியேற்றம் செய்வது முதலிய கொடிய முறைகளால் அடக்கவும் நினைக்கிறான்.

அவன் திட்டம் பார்வைக்குச் சரியதாக இருந்தாலும் சரிவர நடைபெறாது. முதலாவதாக ருஷ்யச் சைனியம் கலைபடாமல் இருக்கிறது. புதிய படைகளும் கிடைக்கின்றன, நாஸிப் பாதுகாப்பு அரண்களும் வெகு ஈனமாக இருக்கின்றன. ருஷ்ய எதிர்ப்புகளும் பலமாக இருக்கின்றன. ஆங்கிலேய—அமெரிக்க முன்னேற்றம் பலமாகச் செய்யப்படும். நேச தேசங்களால் யூ படகுத் தொந்தரவு சமாளிக்கப்பட்டும் வருகிறது.

வி வி வி வி வி வி வி

**காட்டுமிராண்டிகளின் கூட்டம்.** பிரிடிஷ் கைதிகளைத் தாங்கள் தன்புறத்துவதோடு திருப்தி கொள்ளாமல் இதர சகாக்களையும் அவ்விதம் செய்யும்படி ஜெர்மானியர் தூண்டியிருக்கின்றனர். ஜெர்மனியின் ஆக்ஞைக்கு உட்பட்டு இதாலியப் பத்திரிகைகள் பிரிடன் பேரில் சில குற்றங்களைச் சாட்டிவருகின்றன. அதாவது செஞ்சிலுவைக் கோஷ்டி, தாக்கப்பட்ட கப்பல்களிலிருந்து தப்பி ஓடுகிறவர்கள், கைதி செய்யப்பட்டவர்கள் முதலியவர்களை பிரிடிஷார் கொல்லுவதாகச் சொல்லப்படுகிறது. மூன்று வருஷகாலம் யுத்தம் செய்த பிறகு ஏனோ தற்சமயத்தில் இதுவரையில் இல்லாத இந்தக் கற்பனையை உண்டுபண்ணுகிறார்கள். இந்த அபவாதம்கூட பாதகமில்லை. ஜப்பான் சமீபத்தில் சொன்னதைப் பார்த்தால மிகக் கொரேமாக இருக்கிறது. ஜப்பானின் சேனைத் தலைவன் பின்கண்ட விதமாகச் சொன்னான். 'கைதி செய்யப்பட்ட எதிரி விமானிகள் ராணுவக் கோர்ட்டு முன்பு விசாரிக்கப்பட்டு குற்றவாளிகளாகத் தண்டிக்கப்படுவார்கள். இவர்கள் ஜப்பானிய சாம்ராஜ்யத்தில் விமானமூலம் தாக்கியது குற்றமாம்' வெளி வேஷத்திற்கு விசாரணை என்று சொல்லி அவர்களைக் கொல்லவே நினைத்திருக்கிறது. ஏப்ரல் 18உ டோகியோ மீது குண்டு வீசியபோது பிடிபட்ட விமானிகளை இவ்வாறுதான் நடத்தியதாம். ஆனால் இது விஷயத்தில் வியப்பு ஒன்றுமில்லை. மனிலா போன்ற பாதுகாப்பில்லாத நகரங்களை ஜப்பான் தாக்கிய மாதிரிதான் இவ்விஷயத்திலும் நடந்துகொள்ளுகிறது. கடல்களுரில் காயமடைந்திருக்கும் ஜப்பானியனை ஒரு அமெரிக்கர் மீட்டியதும் அவனை ஜப்பானியன் கபடமாகக் கொன்றான்.

இவ்விதக் கொடுஞ் செய்கைகள் நாகரீக உலகத்தை திடுக்கிடச் செய்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆகவே இக்கூட்டத்தாரை அடியோடு அழிக்க வேண்டுமென்று ஸ்டாலின் சொன்னது பொருத்தமானதே. கர்னல் நாக்ஸின் மொழிகளில் 'எதிரிகள் காட்டுமிராண்டிகளின் படிக்கு இறங்கிவிட்டனர்'

வி வி வி வி வி வி வி

**அடிமைத்தொழில்.** ஜெர்மன் தொழிற்சாலைகளில் உழைக்க 1,50,000 பிரெஞ்சுக்காரர்களை சப்ளை செய்வதாக லவால் கொடுத்திருக்கும் உறுதிமொழி நிறைவேறாது. சென்றும் இதற்குக் குறிப்பிடப்பட்ட காலவரை அக்டோபர் 15உ யோடு முடிந்துவிட்டது. இன்னும் 1,83,000 பேர் பாக்கியிருக்கிறது. இதற்காக காலவரை அக்டோபர் முடிவு வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. 18 வயது முதல் 50 வயது வரையுள்ளவர்களைச் சேகரிக்க அக்டோபர் 19உ ஆரம்பமாயிற்று. அதோடு தானாக வேலைக்காரன் முன்வராவிட்டால் கட்டாயப்படுத்தப்படுவான் என்று லவால் ரேடியோ கூறிற்று. என்ன ஏற்பாடு செய்தாலும் லவால் முயற்சி பலிக்காது. இதை எதிர்த்து லியான்ஸில் முதலில் தொழில் நிறுத்தம் செய்யப்பட்டது. விஷிக்கு விரோதமான ஏற்பாடுகள் எங்கெங்கும் நடைபெறுகின்றன. [illegible] களையும் லவால் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. 'இனி அதிக சிரமமான [illegible]



ஏற்படலாம். அதிக கஷ்டங்களை அனுபவிக்க நேரும்' என்று பிடேனும், பிரசார மந்திரி சாஸிக்னட் என்பவனும் சொல்லிவருகிறார்கள்.

அக்டோபர் மீ 20உ லவால் 20 நிமிஷம் ரேடியோவில் பேசியபோது ஜெர்மனிக்கு பிரெஞ்சுக்காரர்கள் செல்லவேண்டுமென்று எடுத்துக்கூறினார். ரெக்ருட்மெண்டு சட்டம் ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸுக்கு அன்வயிக்காது. ஜெர்மனிக்குச் செல்ல விரும்பும் தொழிலாளிகளின் மனைவிமார்களும் விடுவிக்கப்பட்டு தங்கள் கணவர்களுடன் வசிக்க ஜெர்மனி அனுமதிக்கும் என்று லவால் சொன்னான்.

இதற்குப் பதில் கூறும்போது அதே தினத்தில் டிகால் ஆக்ஸ் ஆம்ஸ் (Aux Ames) என்ற ராணுவக் குறியைச் சப்தித்து பின்கண்ட மொழிகளைக் கூறினார்.

"கிழக்கிலும், ஆபிரிக்காவிலும், பஸிபிக்கிலும் எங்கும் இருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும், மாலுமிகளுக்கும், விமானிகளுக்கும் எடுத்துச்சொல்லுவதாவது :

"யாவரும் முன் வாருங்கள்.

"[illegible] நாட்டிற்காக யுத்தம் புரியும் தொழிலாளி, குடியானவன் முதலிய [illegible]ஒருவரும் தைரியம் கொள்ளவேண்டும்.

"பிரெஞ்சு மக்களை இவ்வித காரியத்தில் முன் நடத்தி எதிரியை எதிர்க்க ஏற்பாடு செய்யவேண்டும். நாம் யாவரும் ஒன்று சேர்ந்து இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம். வெற்றி கிடைக்கும்போது நம் யாவருக்கும் பங்கு உண்டு!

"விஷி அரசாங்கம் பிரான்ஸைக் குலைக்கப்பார்க்கிறது. அதற்குத் தோல்விதான். நாம் பிரான்ஸைக் காக்கவேண்டும்.

"துரோகிகளின் செய்கைகளை பிரான்ஸ் உணர்ந்துவருகிறது. தன் நலம் பாராட்டியே துரோகிகள் நடந்துகொள்ளுகிறார்கள். தங்கள் குற்றங்களுக்குத் தகுந்த பயனை அவர்கள் அனுபவிப்பார்கள். பிரான்ஸைக் குலைக்க அவர்களால் முடியாது."

வி வி வி வி வி வி வி

**[illegible]ப்பிரயாணம்.** இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்புறத்தை ஜெனரல் வேவல் சுற்றிப்பார்த்தார். அங்கிருக்கும் பிரிடிஷ், இந்தியத் துருப்புகளையும் பார்வையிட்டார். பர்மா எல்லைக்குள்ளும் சிறிது தூரம் சென்றார். ஜெனரல் அலெக்ஸாண்டர் சிந்துவின் நதியைக் கடந்தது முதல் ஐந்தாவது தடவையாக வேவல் இந்தப் பிரதேசத்தைச் சுற்றிப்பார்த்தார். மோட்டார், ரயில், விமான மூலம் பிரயாணம் செய்தார். ஜப்பானியர் எந்த இடத்திற்கு ஒருவரும் தைரியமாக வரமுடியாதென்றாரோ அதே இடத்திற்குத்தான் இவர் சென்றது. பர்மா எல்லைக்குச் சென்றதும் அங்கிருந்த பர்மியத் தலைவர் யானைப்படை முதலிய பூர்ண மரியாதையுடன் பேட்டி கொடுத்தார். தங்க உரைபோட்டு ஒரு கத்தியை வெகுமானமாகக் கொடுத்து பர்மாவை எதிரி நாட்டிலிருந்து விடுவிக்கவேண்டுமென்று வேண்டினார். முக்கியமாக தற்போது ஏற்பட்டுள்ள பசிப்பிணியைத் தீர்க்கவேண்டுமென்றே அவர் கேட்டுக்கொண்டார்.

எல்லைப்புறத்திலிருந்த சாம்ராஜ்யப் படைகள் இவரைக்கண்டு அதிக உணர்ச்சி கொண்டன.

அங்கிருக்கும் தலைவர்களிடமிருந்து விசேஷ விஷயங்களை அறிந்துகொண்டார். பர்மாவிற்குச் செல்ல ரகசிய பாதைகளைப் பார்வையிட்டார். காட்டுச் சண்டையில் பயிற்சி பெறுகிறவர்களையும் பார்த்தார். பிரதேசத்திற்கு லாயக்கான வாழ்க்கையை அவர்கள் அமைத்துக்கொள்ளுவதையும் பார்த்தார். கயிறு [illegible]பது, பாலம் கட்டுவது, படகு கட்டுவது முதலியவைகளில் அவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

**ஒரு முக்கிய விஜயம்.** தென் ஆபிரிக்காவின் பிரதம மந்திரியா ஸ்மட்ஸ் இங்கிலாந்திற்குச்சென்றிருக்கிறா சர்ச்சிலைப்போல் இவரும் முதிர்ந்த அரசியல் நைபுண்யம் வாய்ந்தவர். போ திறமையும், படிப்புத்திறமையும் படைத்த இவர் தென் ஆபிரிக்கா அரசா கத்தை ஒழுங்கே நடத்தி வந்திருக்கிறார். இந்த யுத்தத்தில் லிபியா போரி தென் ஆபிரிக்கா இவருடைய தலைமையில் விசேஷமாக ஈடுபட்டிருக்கிறது மத்தியதரைக்கடல்மூலம் போக்குவரவு அடைபட்ட பிறகு நன்னம்பிக்கை முனை மார்க்கம் அதிகமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஜப்பான் இந்து மாஹ சமுத்திரத்தில் நடமாட்டத்தை ஆரம்பித்த பிறகு தென் ஆபிரிக்கா யுத்த பிரதேசமாகியது. ஆகவேதான் நேசதேசங்களால் மடகாஸ்கர் வியாபித்து கொள்ளப்பட்டிருக்கிறது. நமக்கு ஏற்பட்டிருக்கும் தலைவர்களுக்குள் ஸ்மட்ஸ் மிக கெட்டிக்காரர்.

அதனால்தான் அவருடைய யோசனைகளும் நாடப்படுகின்றன. கெய்ரோ விற்கு அடிக்கடி சென்று கலந்து பேசியிருக்கிறார். தற்போது இங்கிலாந்துக்கு சென்றிருப்பதிலிருந்து ஏதாவது விசேஷ முடிவுகள் நேரலாம்.

வி வி வி வி வி வி வி

**விமானச் சுற்றுப் பிரயாணம்.** வெண்டல் வில்கியின் உலக சுற்றுப்பிரயாண முடிந்துவிட்டது. ஜனாதிபதி ரூ வெல்ட்டிடம் ரிபோர்டு செய்ய வாஷிங்டன் திரும்பிவிட்டார். உலகத்தை விமான மூலம் பூரா சுற்றிவந்ததில் இவரே முதலாவதானவர். அலாஸ்கா வழியாக சைனா விலிருந்து அமெரிக்கா சென்றார். இவரது சுற்றுப் பிரயாணத்திலிருந்து எப்பே பட்ட விஷயங்கள் ஏற்பட்டிருந்தாலும் உலக சுற்றுப் பிரயாணத்தில் சில அம் களைச் சாதித்திருக்கிறார். வேறுபட்ட நாகரீகமுள்ள பல அயல்நாடுகளை சுற்றிப்பார்த்தார். அதிகப் பொறுப்பில்லாதபோயினும் பல விஷயங்களை பற்றிப் பேசியிருக்கிறார். ருஷ்யாவிலிருக்கும்போது இரண்டாம் போர் முனையைப் பற்றியும், துருக்கியிலிருக்கும்போது நடுநிலைமையைப் பற்றியும், சைனாவில் சர்வதேச சமதையைப் பற்றியும் சொன்னார். உண்மையில் அமெரிக்கா வில் அரசாங்கமும் அதன் எதிர் கட்சியும் யுத்தத்தை சரிவர நடத்த ஒன்ற சேர்ந்துவிட்டதை உலகத்தாருக்குத் தெரிவிக்கவே இவ்வாறு செய்தார். அமெரிக்காவில் அரசாங்க எதிர் கட்சித் தலைவர்தான் வெண்டல் வில்கி.

வி வி வி வி வி வி வி

**சாமான்களின் உற்பத்தி.** மாதம் சராசரி 10 லக்ஷம் டன் [illegible] அமெரிக்கக் கப்பல்கள் [illegible]ப்படும் என்று முன்பு அறிவிக்கப்பட்டது. அது நிறைவேற்றப்பட்டும் வருகிறது ஸெப்டம்பரில் 10,09,800 டன் இடையுள்ள 93 சாமான் கப்பல்கள் கட்டிமுடிக் கப்பட்டன. ஸெப்டம்பர் முடிவோடு மொத்தம் கட்டப்பட்டது 5,45,000 டன்கள். அடுத்த மூன்று மாதங்களுக்குச் சராசரி 8,50,000 டன் வீதம் திட்டம் போடப்பட்டிருக்கிறது. 1942-ல் 80 லக்ஷம் டன் இடைக்குக் கட்டப்படவேண்டு மென்று ஜனாதிபதியின் லக்ஷியம் பூர்த்தியாகிவிடும். ஜனவரி முதல் தினம் 4 கப்பல்கள் கட்டிமுடிப்பதாக கப்பல் இலாகா உபதலைவர் கூறியுள்ளார்.

அமெரிக்க விமானத்தொழில் சங்கம் அறிவிக்கிறதாவது:—மாதம் 4,000 விமானங்களுக்கு அதிகமாகவே உற்பத்தி செய்யப்படுகிறது. [illegible] ஒரு ஆயிரம் அதிகமாகும். ஆகவே மாதம் 5,000 என்ற ரூஸ்வெல்டின் விருப்பம் பூர்த்தியாகிவிடும்.

வி வி வி வி வி வி வி

**மால்டா.** மால்டா மீது மறுபடியும் எதிரி விமானங்கள் தாக்குதல் செய்திருக்கின்றன. (அக்டோ பர் 10—15) இந்த 5 நாட்களில் ஜெர்மனிக்கு 98 விமானங்களும், 220 மாலுமி களும் நஷ்டம். எதிரி பாம்பர்களுக்கு உதவியாக பைடர்களும் வந்தன மால்டாவில் சேதம் ஒன்றும் ஏற்படவில்லை.



மால்டா மீது எதிரி தாக்குதல் ஏற்பட்டால் ரோமலுக்கு ஸப்ளை குறைந்து வருவதாயும், அதை ஈடுசெய்ய எதிரி முயலுகிறான் என்றும் வைத்துக் கொள்ளலாம். அவ்வித ஸப்ளைகளை எடுத்துச்செல்லும்போதுதான் மால்டா மீது தாக்குதல் செய்யப்படும். இவ்வாரத்தில் மால்டாவிற்குத் தெற்கில் எதிரி ஸப்ளைக் கப்பல்களை அமெரிக்க விமானப்படை தாக்கியது.

வி வி வி வி வி வி வி

**பால்மாஸ் முனை (Palmas).** இங்கேதான் அச்சு நாட்டு யூ படகுகள் வைக் கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது விஷி வசத்தில் இருக்கிறது. லிபரியாவிற்கும் ஐவரி கடற்கரைக்கும் இடையில் இருக்கிறது. இங்கிருக்கும் யூ படகுகள் டாகரிலிருந்து ஸப்ளைகளைப் பெற்று தென் ஆபிரிக்கா, இந்தியா, தென் அமெரிக்கா, மத்தியக்கிழக்கு முதலிய இடங்களுக்கு வரும் கப்பல்களைத் தாக்குகின்றன. இதற்காகத்தான் லிபரியாவில் அமெரிக்கத் துருப்புகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**நன்னம்பிக்கைக்கு ஆபத்து.** இம் முனைக்கு அருகில் எதிரி யூ படகுகள் தோன்றியதிலிருந்து யுத்தம் ஒரு புதிய கட்டத்தையடைந்திருக்கிறது. அமெரிக்காவிற்கு அருகிலிருந்த எதிரி நீர்மூழ்கி களுக்குச் சிரமம் ஏற்பட்டதால்தான் ஆபிரிக்காவிற்கு அருகில் வந்துவிட்டன. இந்த இடங்களில் அவைகளுக்கு எண்ணெய் உதவி கிடைப்பது சிரமம். ஏதாவது ரகசிய ஸப்ளைகளைக் கொண்டும் இருக்கலாம். இவைகளைத் தடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

---

# நாஜிக் குற்றவாளிகளைத் தற்போதே தண்டிக்கவேண்டும்.

---

## ஒரு ருஷ்ய வேண்டுகோள்.

[illegible] ருஷ்யாவின் துருப்புகள், கைதிகள், பொதுமக்கள் [illegible] பேரில் கொடுமையான அட்டூழிய நடவடிக்கைகள் எதிரிகளால் எடுத்துக் [illegible]ப்பட்டன. இவ்வித கோர சம்பவங்கள் நடந்திருக்குமா என்று [illegible] மேற்கிலுள்ளோரும், அமெரிக்க வாசிகளும் நினைக்கலாம். ஆயிரக் கணக்கான கிராமங்கள் அடியோடு கொளுத்தி எரிக்கப்பட்டன. மாஸ்கோவி லிருந்து 80 மைல் தூரம் மேற்கே சென்றபோது சுமார் 50 கிராமங்கள் எரிந்து கிடந்ததைக்கண்டேன். சில மாதங்களாக ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் மீதமுள்ள ஜனங்களை அப்படியே வெளியேற்றினர்.

### பயங்கர ஆட்சி.

கிரிமியா பூராவும் ஜெர்மானியர் பயங்கர ஆட்சியை ஏற்படுத்தியிருக்கின்ற னர். கெர்ச்சில் 13 வயதுள்ள பையன்களுள்பட எல்லாப் புருஷர்களையும் ஜெர்ம னிக்கு தொழில்புரிய அழைத்துச்சென்றனர். நடுவழியில் கிடந்தவர்கள் சுடப் பட்டனர். கெர்ச்சிலுள்ளோர் புல்லிலிருந்து தயாரிக்கப்பட்ட ரொட்டிகளைத் தின்று ஜீவிக்கின்றனர். இறப்பவர்களின் சங்கியை மிக அதிகமாக இருக்கிறது.

ஸெபாஸ்டோபூலில் ஒவ்வொரு தந்திக் கம்பமும் ஒரு தூக்கு மரமாக இருக்கிறது. போதுமான அளவு ஜெர்மானியருக்கு ஆதித்தியம் செய்யவில்லை என்ற குற்றத்திற்காக கிரிமியா பூராவும் பல்லாயிரம் பேர்கள் கொல்லப்பட்டனர். படையெடுப்போர் அங்கிருக்கும் துணி, படுக்கை, ஆடுமாடு, உணவுப்பொருள் யாவற்றையும் பிடுங்கிச் செல்லுகின்றனர்.

ருஷ்யத் துருப்புகளை நடத்தும் விதமும் மிகக் கொடுமையானது. சில நாட்களுக்கு முன் ஸ்டாலின்கிராட்டிற்குத் தெற்கில் ஒரு காயமடைந்த ருஷ்யக் [illegible] நூற்றுக்கணக்கான ருஷ்யச் சிப்பாய்களின் கண் முன்பாக கொளுத்தப் பட்டான். அவனது துணியில் பெட்ரோலை ஊற்றி தீ வைக்கப்பட்டது.

இதுபோன்ற பல கொடுமைகளை ருஷ்ய சாரணர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். அவ்வளவுக்கும் சாக்ஷியங்கள் இருக்கின்றன.

ருஷ்யாவில் அதிகமான அட்டூழியங்களை விளைத்த குற்றவாளிகளைத் தண்டிப்பதால்தான் யுத்தத்திற்குப் பின்னர் அமைக்கப்படும் நிலையை ருஷ்யர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள்.

வெறும் பேச்சில் இல்லாமல் காரியாம்சையிலேயே நாஸிக் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்று ருஷ்ய ஸர்க்காரின் குறிப்பு இருக்கிறது.

---

# நமது கடல் பாதுகாப்பு.

---

## ஸர் ஹெர்பர்டு பிட்ஜ்ஹெர்பர்டின் அபிப்பிராயம்.

## தினம் பலம் பெறுகிறது.

மதராஸ் அக்டோபர், 17

கடல் பாதுகாப்பு தினம் அபிவிருத்தியடைந்து வருவதால் மதராஸ் சரியாக பாதுகாப்பு பெறுமோ, பெருதோ என்ற சந்தேகத்திற்கே இடமில்லை தற்போதுள்ள நிலையில் இங்கிருக்கும் ஏற்பாடுகள்தான் முதல்தரமானவை.

இது சம்பந்தமாகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளைக் கண்டு நான் பூர்ண திருப்திகொண்டேன். பொது ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் நன்ருக கவனித்தே புதிய கப்பல் தளம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

மற்ற பாகங்களைவிட சென்னையின் பாதுகாப்பு முறைகளே மேலானவை. இவ்விஷயத்தை மதராஸில் உள்ள மூன்றுவித படைகளையும் நான் நேரில்கண்டு இம்முடிவுக்கு வந்தேன்.

### எதிரியின் செய்கை. நாம் பாதுகாப்புடன் இருக்கிறோம்.

இந்து மகா சமுத்திரத்தில் கப்பல் மூழ்கடிக்கப்படுவதென்பது உண்மைதான். இதைத் தவிர்ப்பதற்கில்லை. எதிரியின் செய்கையால் அட்லாண்டிக்கில் கூடத்தான் கப்பல்கள் நஷ்டமாகின்றன. ஆனல், கப்பல்களின் நஷ்டத்தை ஈடுசெய்வதற்கானவிதமாக அமெரிக்காவிலும், பிரிடனிலும் புதிய கப்பல்கள் கட்டப்படுகின்றன. ஆகவே நாம் பலத்துடன்தானிருக்கிறோம். முடிந்தவரை நமது கப்பல்களை மூழ்கடிப்பதென்ற நோக்கத்துடன் எதிரி இருக்கிறன் ஆகையால் கப்பல் நஷ்டத்தை உடனே நிறுத்துவது முடியாது. நமது பாதுகாப்பு ஏற்பாடு விருத்தியானதும் நஷ்டத்தைக் குறைக்கலாம்.

எதிரியின் நீர்மூழ்கிகளால் அராபிக்கடலிலும் சில கப்பல்கள் நஷ்டமாயின. இந்த யுத்தம் முடியுமுன் இன்னும் நஷ்டம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். இக்கடல்களிலிருந்து எதிரி நீர்மூழ்கிகளைப் பூரா விரட்டுவதும் சாத்தியமில்லை. நம்மால் இனி சமாளிக்க முடியாது என்று எதிரிகள் நினைக்கும்வரை நாம் முடிந்தவரை பலமாக எதிர்த்து நிற்கவேண்டும்.

### துணைக் கப்பல் கூட்டம்.

போதுமான கப்பல்கள் நமது வசத்தில் இல்லாததால் சாமான் கப்பல்களுக்குத் துணைக்கப்பல்கள் அனுப்பமுடியவில்லை. இருந்தாலும், சாத்தியமான பொழுது பந்தோபஸ்து கொடுக்கப்படுகிறது.

### சுரங்க வாரி.

எதிரி பாவிய சுரங்க வெடிகளை அகற்றுவது ஒரு அபாயமான வேலையாயினும், நமது உத்தியோகஸ்தர்கள் கொஞ்சமும் பின்வாங்கவில்லை. இது சம்பந்தமாக தங்களது அலுவல்களைச் சந்தோஷமாகவே செய்து முடிக்கின்றனர்.

பலவித படையினரும் பூர்ணமான சாமர்த்தியத்துடனேயே இருக்கிறார்கள்.



### ரெக்ரூட்மெண்டு.

பையன்களும், புருஷர்களும் ஏராளமாக ரெக்ரூட் செய்யப்பட்டுள்ளனர். ரெக்ரூட் செய்வதற்கு தென் இந்தியா போதுமான வசதியை அளிக்கிறது. கப்பற்படையின் அவசியத்தைப்பற்றி இந்தியர்கள் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தியக் கடற்படையைப்பற்றி இந்தியர்களில் வெகு சிலரே அறிந்து கொண்டிருக்கின்றனர். இதை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று பத்திரிகைகள் ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும்.

வேலை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் வேறு ஒருவித வித்யாசமுமின்றியில் இந்தியக் கப்பற்படைக்கு ஆட்கள் சேர்க்கப்படுகின்றனர். ஸ்திரீகளும் சேர்க்கப்பட்டு திருப்திகரமாக சேவைபுரிந்து வருகின்றனர்.

கப்பற்படை சம்பந்தப்பட்ட வரையில் பூர்ணமான சாமர்த்தியம்தான் தேவை. ஆகவே இந்தியக் கப்பற்படையில் சேர்ந்து தேசசேவை புரிய இந்திய வாலிபர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் வந்திருக்கிறது. வரும்காலத்தில் இந்தியக் கப்பற்படை எவ்வாறு இருக்குமென்று சொல்லமுடியாதாயினும் அபிவிருத்தியடைந்திருக்குமென்று நிச்சயம் சொல்லலாம்.

### கப்பற்படை.

இந்தியாவின் கடற்படை வியாபாரத்தை கடற்படை ரக்ஷிக்கிறது. பல துறைமுகங்களைக் காக்கிறது. கடல்மூலமாக நடைபெறும் 600 கோடி ரூபாய் பொருமானமுள்ள வியாபாரத்திற்கு கடற்படை போதுமான பந்தோபஸ்து அளிக்கிறது. வியாபாரம் சம்பந்தப்பட்ட வரையில் இந்தியா ஒரு தீவுதான். வடக்கே ஹிமாலயமலை இருந்தாலும் அதன்மூலம் வியாபாரம் நடக்காது. முன்பு இவ்வியாபாரத்தை நடத்த பிரிடிஷ் கப்பற்படையின் உதவியை நாட வேண்டியிருந்தது. தற்சமயத்தில் இந்தியக் கப்பற்படையே அவ்வேலையை நடத்திவருகிறது. தானகவே இவ்வுதவியைத் தர இந்தியக் கப்பற்படைக்கு சக்தி வந்துவிட்டது, தினமும் இது பலம்பெற்று வருவதால் போதுமான கப்பல்கள் இதன் வசத்தில் இருக்கும்.

### டார்பிடோ பள்ளிக்கூடம்.

சத்தியவாரில் புதிதாக டார்பிடோ பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படும். இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் இதர கப்பற்படையினரோடு சமமான அந்தஸ்து பெறுவார்கள். இந்தியாவில் பல இடங்களில் கடற்படைப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதில் எங்கும் உயர்ந்த பயிற்சியளிக்கப்படுகிறது.

### கம்பியில்லாந் தந்தி நிலயங்கள்.

இந்தியக் கப்பற்படை வசத்திலேயே கம்பியில்லாத்தந்தி நிலயங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் இதுவரையில் பிரிடிஷ் கப்பற்படை வசமிருந்தன.

இது இந்தியக் கப்பற்படைக்கு ஒரு கௌரவமாகும். இப்படையின் சக்தி அதிகரித்திருப்பதாலேயே கப்பல் இலாகாக்காரர்கள் இவ்வித கௌரவத்தை அளித்திருக்கின்றன.

### கப்பல் கட்டுவது.

கப்பல் கட்டும் தொழில் வெகு மும்மரமாக நடைபெறுகிறது. ஒரு கப்பல் கட்டி முடிந்ததும் மறு கப்பல் துவக்கப்படுகிறது. இந்தியாவிலேயே கப்பல்களில் வைக்கப்படும் யந்திரங்களும் தயாரிக்கப்படுகின்றன.

### விசாகப்பட்டணம்.

விசாகப்பட்டணத்தின் பாதுகாப்பிற்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் எனக்கு மிகுந்த திருப்தியை அளித்தன. சமீபகாலத்தில் எங்கும் நிச்சயமான அபிவிருத்தி காணப்படுகிறது. உணர்ச்சியும் இருக்கிறது.

## வீர பஞ்சாப்.

### மேன்மை தங்கிய வைஸிராயின் பாராட்டு.

வீரர்களின் தைரியம், வீரத்தனம் முதலியவைகளைப்பற்றிப் பேசும் போதெல்லாம் இந்தப் பிரதேச மக்களின் குணங்களான தைரியம், பொறுமை முதலியவைகளும் சொல்லப்படுகின்றன. சரித்திரத்தின் ஆதி முதல் இந்தியாவில் பல வீரர்கள் தோன்றியிருக்கின்றனர். இந்தப் பிரதேசம் வீரர்களுக்கு உத்ஸாகத்தை உண்டாக்கவல்லதாகவேயிருக்கிறது. அப்பேற்பட்ட வீரர்கள் சென்ற யுத்தத்தில் நாகரீகம், ஸ்வதந்திரம் முதலியவைகளைக் காக்க ஈடுபட்டனர். அவர்களின் குணம் பொருந்திய சந்ததியைச் சார்ந்தவர்களே தற்போதும் ஈடுபட்டிருக்கின்றன. அதேவிதமான தைரியத்துடனும் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்த யுத்தத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு சண்டையிலும் பஞ்சாப் வாஸிகள் மிக பிரக்யாதி பெறக் கூடிய விதமாக ஈடுபட்டிருக்கின்றனர். காவலுக்காக நிறுத்தப்பட்டாலும், தாக்குதலுக்காக அனுப்பப்பட்டாலும் பஞ்சாபியர் தயாராக இருக்கின்றனர். இவர்களே நேசதேசங்களின் புனித காரணங்களைக் காக்கின்றனர்.

### இனி செய்யவேண்டியது.

வெற்றி கிடைத்ததும், நமது சிப்பாய்கள் செய்யவேண்டிய வேலை ஒன்று இருக்கிறது. அதாவது உலகத்தைச் சீர்படுத்துவது. ஒற்றுமைப்பட்ட முயற்சிகளில் அவர்களுக்குப் போதுமான பயிற்சி ஏற்பட்டிருக்கும். அவ்வித ஒற்றுமைக்கு அப்போது தான் சந்தர்ப்பம் ஏற்படும். வரவர யுத்தம் ஒவ்வொருவரின் மனதிலும் அவ்வித ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்துகிறது. இந்தியச் சிப்பாய்கள் சம்பந்தப்பட்ட வரையில் யுத்த அரங்கத்தில் ஒற்றுமைக்குக் காரணமாக பல தேசத்தினருடன் சேர்ந்து நிற்பதால் யுத்தம் நின்றாலும் அவ்வித ஒற்றுமை குறையாது.

பிறகும் இந்த ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் நிற்கும்.

### தேசீய யுத்த முன்னணி.

இந்த யுத்தம் கேவலம் யுத்தரங்கத்தில் மாத்திரம் நடக்காமல் ஒவ்வொருவரின் குடும்பத்தையும் வீடு வாசலையும் பாதிக்கிறது. ஆகவே ஒவ்வொரு ஸ்திரீ புருஷனுக்கும், குழந்தைக்கும் தக்கவிதமாக நடந்துகொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இவ்விதமாக உள்நாட்டில் ஆயிரம் வழிகளில் ஒற்றுமைக்கு வேண்டிய சந்தர்ப்பம்கிடைத்துமிருக்கிறது. நவீன யுத்தத்தில் முக்கியமாக ஜனங்களின் மனப்பான்மையும் வீரர்களின் மனப்பான்மை ஒருவகைப்பட்டதாக இருக்கவேண்டும். பயத்திற்கு உள்ளாகாமலும் பொறுமையை இழக்காமலும் இருந்து வரவேண்டும். இந்தியாவில் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் தேசீய யுத்த முன்னணி அந்த நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும் உண்டாக்குகிறது. இதனால் போர்முனையிலிருக்கும் வீரர்களுக்கு ஒரு உதவியும் ஏற்படுகிறது.

ஆகவே போர்முனையில் ஈடுபட்டிருப்போரின் அலுவல்களை வீட்டிலுள்ளோர் கவனித்தும், வெளி தேசங்களுக்குச் சென்றிருப்போரின் குடும்பங்களை ரக்ஷித்தும், காயமடைந்தோரை சிகித்சை செய்தும், துக்கமடைந்தோருக்குத் தேறுதல் கூறியும் உதவலாம்.

---

## ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளிலிருக்கும் இந்தியர்களுக்கு நவராத்திரி செய்தி.

---

### மிஸ்ட்டர் M. S. ஆனே.

யுத்தம் ஆரம்பித்தபிறகு உங்களை நாங்கள் மறந்து வேறு காரியங்களில் ஈடுபட்டிருப்பதாக நீங்கள் நினைக்கவேண்டாம். உங்களைப்பற்றிய தகவல்கள்



அதிகம் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. உங்களுக்கு விரோதமாகச் செய்யப்படும் குற்றங்கள்யாவற்றையும் நாங்கள் விசாரித்துவருகிறோம். மலேயாவிலிருக்கும் உங்களுக்கு வேலையும் கிடைக்கவில்லை, சம்பளமும் கிடைக்கவில்லை. உங்களுக்குக் கிடைக்கும் உணவு போதுமானதாக இல்லை. உங்கள் கடைகளைக் கொள்ளையடித்து சொத்துக்களை எதிரிகள் பறிமுதல் செய்திருக்கின்றனர். வியாபாரம் குன்றிவிட்டது. ஒரு மூட்டை அரிசி வாங்கக்கூட உங்களால் முடியவில்லை.

இவ்விதமாக தங்களுக்குத் தேவையானவைகளையெல்லாம் ஜப்பானியர் கொண்டுபோய் விட்டார்கள். அரிசி மூட்டை 40, 50 டாலரானால் அவர்களுக்கு என்ன. முதலில் ஜப்பானியர் ஸ்வதந்திரம் கொடுப்பதாகச் சொன்னதை உங்களில் சிலர் நம்பியிருந்தார்கள். ஆனால் அவர்கள் கொடுத்திருக்கும் காகித செலாவணி எவ்வளவு ஏமாற்றமோ அது மாதிரிதான் அவர்களுடைய சொற்களும் என்று இப்போதுதான் அறியப்படுகிறது.

### பர்மாவில்.

பர்மாவிலும் இதே மாதிரிதான் கொள்ளையிட்டு, ஜனங்களை ஏமாற்றி வருகிறார்கள். தங்களுக்குத் தேவையானவைகள் உங்கள் வசமிருந்தால் அதை பிடுங்கிவிடுவார்கள்.

ஜப்பானியரின் திட்டமென்னவென்று இப்போதுதான் யாவருக்கும் தெரியும். பயமுறுத்தியேதான் உங்களை வசப்படுத்தப்பார்க்கின்றனர். உங்கள் பொருள்களைத் திருடி, உங்களைக் கொல்லுகின்றனர். இவைகளை நீங்கள் மறக்க முடியாது. அந்த நிலைமையை நாங்களும் மறந்துவிடவில்லை.

ருஷ்யா, சைனா, போலந்து, நார்வே முதலிய நாட்டிலுள்ளோருடன் நீங்களும் சமமாக இருந்து ஆக்கிரமணம் செய்வோரை எதிர்த்து வருகிறீர்கள். நாங்களும் உங்களுடன் சேர்ந்துகொண்டிருக்கிறோம்.' உங்களுடைய விடுவிப்பை ஏற்படுத்தும் காலம் நெருங்கிவிட்டது. அதுவரை எதிரிக்கு இணங்காதீர்கள். அவனது பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தடுங்கள். போக்குவரத்துகளை அழியுங்கள். நாம் யாவரும் ஒன்று சேர்ந்தால் அவனது தாத்காலிகமான லாபங்களை அழிக்கலாம்.

### ஸ்வதந்திர மக்கள்.

ஸிலோன், பிஜி, மரிஷியஸ், ஆபிரிக்கா இங்கிருக்கும் யாவரும் இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம். இந்தியாவும் ஸ்வதந்திரமக்களுடன் சேர்ந்திருக்கிறது. ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதில் வேறு ஒருவருக்கும் இசையாது.

மற்ற நாடுகளுக்கு இருப்பதுபோல் நமக்கும் சில குறைவுகள் இருக்கின்றன. இருந்தாலும் வெற்றி ஏற்படும்நாளில் நாம் யாவரும் ஒன்றுசேர்ந்து ஸ்வதந்திரத்தை ஸ்தாபிக்க ஏற்பாடுசெய்வோம். அந்த சமயத்தில் எல்லாப் பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். குறுகிய மனப்பான்மையை விட்டுவிடவேண்டும். அந்தரங்கமான வித்யாசங்களை விட்டுவிடவேண்டும். ஜனநாயகங்கள் ஸ்வதந்திரம் பெற்றால் இந்தியாவிற்கு ஒரு உயர்ந்த நிலை ஏற்படும் என்பதைநம்பி நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முன்வரவேண்டும்.

இதுவே நான் உங்களுக்கு அனுப்பும் வெற்றிச் செய்தியாகும். இது கேவலம் சைனியங்களின் வெற்றிமாத்திரம் ஆகாது. நல்லெண்ணம், சமாதானம் நிலவும் உலகிலுள்ள ஸ்வதந்திர மக்களின் வெற்றியேயாகும்.

---

## இந்தியத் துருப்புகள் சந்தோஷமாக இருக்கின்றன.

---

(ஸர். அலிஸால் ஷேக் பி. பி. ஸியில், ஒலிபரப்பியது).

லண்டன், அக்டோபர் 13.

இந்தியத் துருப்புகளை நான் கண்டு பேசியபோது அவர்களைச் சற்று குறிப்பாகப் பார்த்தேன். அவர்களும் என்னைக் குறிப்பாகப் பார்த்தார்கள். அவர்களுடைய முகத்தில் தைரியம் இருந்தது. பய சின்னங்களே காணப்படவில்லை.

சுறுபபுடனகூடிய அவர்களுடைய பார்வையைப் பார்க்கும்போது 'என்ன, இந்தியாவிலிருந்து ஏதாவது செய்தி கொண்டுவந்திருக்கிறா' என்று கேட்பது போல இருந்தது. சரீர திடம் பொருந்தி தைரியமாகவே காணப்பட்டனர். சௌக்கியமாகவே இருந்தார்கள்.

படுக்கப் படுக்கையும், தின்க உணவும், வசிக்கக் கூடாரங்களும் இருக்கின்றன. பல கூடாரங்களுக்கு இடையில், ஒரு பெரிய கூடாரம் இருந்தது. அதில் தொழு வதற்குள்ள வசதியிருக்கிறது. இவர்களுக்கு மத உபதேசகர்களும் இருக் கிறார்கள்.

அவர்களைப் பற்றி புகழ்ச்சியாகவே அவர்களுடைய தலைவன் கூறினார். அவனும் ஒரு தகப்பனைப்போல் அவர்களைப்பற்றிய விவரங்களை எனக்கு எடுத் துரைத்தான்.

அவர்களின் உத்ஸாகமே என்னைத் திருப்திப்படுத்தியது. ரம்ஸான் மாதம் பூரா பட்டினியிருந்தும், தினசரி வேலைகளை கவனித்தும் வந்தார்கள். பயிற்சி, காலை 6-மணி முதல், பிற்பகல் வரை கொடுக்கப்படுகிறது. பிறகுதான் இவர் களுக்கு ஓய்வு நேரம்.

### செல்வாக்கு உண்டு.

இவர்களுக்கு இங்கிலீஷ் அதிகம் பேசத் தெரியாதபோயினும், அங்கே அவர்களுக்குக் கௌரவம் அதிகம். அங்கே பழக்கமடைந்த சிநேகிதர்களின் வீடு களில் வார ரஜா நாட்களைக் கழிப்பார்கள். மூன்று மாதத்திற்கு ஒரு முறை 7 நாட்கள் ரஜா.

லண்டனுக்கும் 30 பேர்களாகச் சேர்ந்து அடிக்கடி வருவதும் உண்டு. ஷாஜஹான் கோரியில் தங்குவார்கள். இவர்களைப் பார்வையிட்டு நான் திரும்பி வரும்போது ஒருவர் இவர்களைப்பற்றி வெகு திருப்திகரமாகப் பேசினார்.

"இவர்கள் நேர்த்தியானவர்கள். இவர்களை எங்களுக்குகிடையில் வைத்துக் கொள்ள சந்தோஷமடைகிறோம்."

---

## இங்கிலாந்து ஒரு வருஷத்திற்கு முன்னிருந்ததும் தற்போது இருப்பதும்.

---

(கொலம்பியா யூனிவர்ஸிடியில் அமெரிக்க சரித்திரப் போதகராக இருக்கும் அல்லன் நெவின்ஸ் எழுதியது).

ஒரு வருஷ காலம் வெளிநாட்டிற்குச் சென்று மறுபடி இங்கிலாந்துக்குத் திரும்பி வருவானேயாகில் உணவு, துணிமணி குறைந்து, போக்குவரத்து, விளக்கு வசதி முதலிய பொதுஜன சௌகரியங்களுக்குத் தட்டு ஏற்பட்டிருக் கிறதா என்றும், அதே விதமாக ஏராளமான பேர் இறந்ததாலும் இதர வித கஷ்டங்களாலும் பொதுஜனங்கள் மனத்தளர்ச்சியடைந்திருக்கின்றனரா என்றும் அறிய விரும்பலாம். ஏனென்றால் 1941-ல் பிரிடனில் வாழ்க்கை மிக சிரமமாகவே தானிருந்தது.

ஆனால், இதற்குத் தகுந்த பதிலையும் நாம் கொடுக்கலாம். உள்நாட்டுப் பொருளாதார நிலை திருப்திகரமாகவே இருந்திருக்கிறது. யுத்த சாமான்களின் உற் பத்தியை அதிகமாக்கி, அவசியமான தேவைகளையும் ஈடுசெய்ய முடிந்தது. இவ்வாறு அமெரிக்கா தான் நடந்துகொண்டது. இவ்வித ஏற்பாடுகளால் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சிரமங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்க்கப் பட்டன. இதே விதமாக சமாளித்து வந்துவிட்டால் யுத்தத்தில் நிச்சயம் வெற்றி பெறலாமென்ற நம்பிக்கை பிரிடனுக்கு இருந்துவருகிறது.



### சுத்தமும் ஒழுங்கும்.

நான் சென்ற வருஷத்தில் கோடை காலமத்தியில் இங்கிலாந்தை விட்டுச் சென்றபோது, அப்போது ஏற்பட்ட எதிரி விமானப் படையெடுப்புகளால் சின்னாபின்னமான கட்டடங்களும், எரிந்து கொண்டிருக்கும் வீடுகளுமாகக் காணப் பட்டது. தற்சமயத்தில் இடிந்த கட்டடங்கள் பரிசுத்தப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த இடங்கள் மிக சுத்தமாக வைக்கப்பட்டிருப்பதால் முன்பு இந்த இடங்களில் குண்டுகள் விழுந்த அடையாளமே காணப்படவில்லை. ஒரு வருஷத்திற்குமுன் ரயில் வண்டிகள் மணிப்படி செல்லுவதில்லை. லண்டன் நகரில் பாதி இடம் காலி யாக இருந்தது. உணவு கிடைப்பதில்லை. தற்சமயத்திலே ரயில் வண்டிகள் சரியாகச் செல்லுகின்றன. லண்டன் நகரில் அதிக ஜன நடமாட்டம் இருக்கிறது. தேசத்திற்கு வேண்டிய உணவு அதிகம் சேமிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிய கவலையே தேவையில்லை.

இருந்தாலும், எதிரிகளின் தொந்தரவு சிற்சில சமயங்களில் ஏற்படுவதால் சில தாத்காலிகமான சிரமங்கள் இருக்கின்றன. ஆனால், அமெரிக்கர்கள் எதிர்பார்க் கும் விதமாக அவ்வளவு சிரமங்கள் இல்லை. ஸோப்பு கிடைக்கவில்லை, என்று பத்திரிகைகளில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இங்கிலாந்தில் கடை களைப் பார்த்தால், ஸோப்புக்குக் குறைவு இருக்கிறதே தெரியாது.

1941-ல் ஆடைகளில் குறைவு இருந்ததாகக் காணப்பட்டது. ஆனால் தற் சமயத்தில் அக்குறைவு அவ்வளவு வியக்தமாகக் காணப்படவில்லை. துணிகளுக்கு சீட்டுக் கொடுக்கும் முறை முடிந்துவிட்டது. அந்த சமயத்தில்தான் விற்பனையில் 10 சதவிகிதமும், உற்பத்தி 20 சதவிகிதமும் குறைவாக இருந்தது. தற்சமயத்தில் கட்டுப்பாட்டுக்கு முன்னிருந்த மாதிரியே ஜனங்கள் வாங்கிக் கொள்ளுகிறார்கள். ஸ்திரீ புருஷர்கள் யாவருக்கும் நேர்த்தியான ஆடை கிடைக்கிறது. சரீரத்தை அலங்காரப்படுத்திக் கொள்ளுவதற்கான அவகாசமும் ஏற்பட்டிருக்கிறது.

### இரண்டு சிரமங்கள்.

சமான்களுக்கும், மனித சக்திக்கும் சில சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிக்கனப்படுத்தவேண்டுமென்று எச்சரிக்கை கிடைக்கிறது. "பழைய துண்டுக் கடிதாசிகளை எறியாதே, இதர குப்பைகளுடனும் சேர்க்காதே" என்றெல்லாம் நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. ரயில்வே ஸ்டேஷன்களில் "உனது பிரயாணம் அவசியமானதா?" என்றும் நோட்டீஸ் ஒட்டப்பட்டிருக்கிறது. பத் திரிகை விளம்பரங்களில் ஒரு தம்பதி பெரும் மழைக்கு நடுவில் கடைகளைப் பார்த்துக்கொண்டிருப்பது போலவும், கடையில் ஸ்வஸ்திகா அடையாளமுள்ள [illegible]கிலத்தின் வாயில் க்ஷவரக்கத்தி இருப்பது போலவும், படம் வரையப் பட்[illegible]ந்திச்சென்று அதைப்பெற விரும்புவாயா?" என்ற எழுத்துக்களும் போடப்பட்டிருக்கின்றன. பிரிடனில் ஒருவர் $\frac{1}{2}$ பவுண்டு ரொட்டியை தினம் வீணாக்கினால் அதற்காக உபரியாக கோதுமையைப்பெற அட்லாண்டிக்கில் 30 கப்பல்கள் அதிகம் சென்று வரவேண்டியிருப்பதால் உணவுகளை ஒருவரும் வீணாக்கு வதில்லை.

யுத்தத் தொழிற்சாலைகளுக்குத்தான் உலோகங்கள் அதிகம் தேவையாக இருக்கிறது. உல்வூர்த் என்ற இடத்தில் தேவையானவைகள்எல்லாமிருந்தாலும் உலோகசாமான்கள் கிடைக்காது. பல் தேய்க்க உதவும் ப்ரஷ் ஏராளமாகக் கிடைக்கும். ஆனால் சட்டைகளுக்கு காலர் பொத்தான் கிடைக்காது. க்ஷவரத் திற்கு உதவும் ப்ரஷ் கிடைக்கும். கத்தி கிடைக்காது. குழந்தைகளை ஏற்றிச் செல்லும் வண்டி, ஸைக்கிள் முதலியவைகிடைக்கவில்லை. இவ்வளவு சிரமங் களிருந்தும் யாவரும் க்ஷவரம் செய்துகொள்ளுகிறார்கள். பாதரக்ஷைகளைச் சுத்தமாக வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

### தொழில் நிலைமை.

தொழிலாளிகள் கிடைப்பது மிக துர்லபமாக இருக்கிறது. 80,00,000 ஸ்திரீகள் பதிவுசெய்துகொண்டதில் 50,000 பேர்கள் இருப்புப்பாதைகளில்

வேலைபார்க்கின்றனர். இருந்தாலும், ரயில்வே ஸ்டேஷன்களில் கூட்டம் அதிகமாக இருப்பதால் வண்டிகள் மாத்தவேண்டிய விவரங்களைத் தெரிவிக்க ஆட்கள் இல்லை. ஒருபக்கமாகப் போகவேண்டிய ஜனங்களை 6, 8 பேர்களாகவும் ஏற்றிக்கொண்டு வாடகை மோட்டார்கள் செல்லுகின்றனர்.

பள்ளிக்கூடங்களுக்குப் பையன்கள் வருவதில்லையென்று கிராம உபாத்தியார்கள் குறை கூறுகின்றனர். ஏனென்றால் குடியானவர்கள் சிறுவர்களைத் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லுகின்றனர். தபால் வருமானம் மட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு கப்பல் கட்டுமிடத்திற்கு நான் வந்தபோது அதன் நகரசபைத்தலைவர் வருவதற்கு சற்று தாமதமாகுமென்றார்கள். ஏனென்றால் அவன் காலை 6 மணி முதல் மாலை 2 மணிவரை இஞ்ஜின் டிரைவராக வேலைபார்த்தாலும். லண்டனிலுள்ள சங்கங்களில் அங்கத்தினர்களே உணவுகளைப் பரிமாறிக்கொள்ளுகின்றனர். ஏற்பட்டிருக்கும் தேவைகளால் ஒரு வருஷத்திற்குமுன் இருந்ததைவிட தற்சமயத்தில் பலர் சிரமமடைந்திருக்கின்றனர். பகலில் ஆபீஸ்வேலை, அல்லது தொழிற்சாலை வேலையிலும், இரவில் நெருப்பணைக்கும்வேலை முதலியவைகளாலும் பலர் சிரமமடைந்திருக்கின்றனர். இருந்தாலும் தொழிலாளிகள் தேசத்தின் தேவைக்குத் தக்கவாறு நடந்துகொள்ளுகின்றனர்.

---

## யுத்தத்தின் அதிர்ஷ்டங்கள்.

(ஜெனரல் வில்ஸன்)

ஜெனரல் வேவலின் அபிப்பிராயப்படி ஒரு நல்ல தலைவனுக்கு அடையாளமாக நல்ல அதிர்ஷ்டமும் இருக்க வேண்டும். யுத்தத்தில் ஈடுபட்ட ஒரு தேசத்திற்கு வெற்றி கிடைக்க வேண்டுமானால் சாதாரணமாகக் காணப்படும் அம்சங்களாலும் சிலநன்மைகள் ஏற்படலாம். அவைகளாவன:—தனிப்பட்ட மனிதனின் செய்கை, எதிரியின் இயற்கை, குணம், ஏதோ ஒரு தஸ்தாவேஜியைக் கண்டுபிடிப்பது, சீதோஷ்ணநிலை முதலியன. உதாரணமாக ஜோன் ஆப் ஆர்க் என்பவளின் சாமர்த்தியத்தில் முன்பு ஆர்லீன்ஸ் என்ற இடத்தில் பிரெஞ்சுக்காரர்கள் வெற்றிபெற்றனர். மால்ட்கி நோவுற்றதால் சென்ற யுத்தத்தில் ஜெர்மானியர் பாரிஸ் நகரத்தின் முன் தடைபட்டனர். 1940-ம் வருஷ மே மாதத்தில் சீதோஷ்ணம் சாதகமாக இருந்ததால் டன்கர்க்கிலிருந்து பிரிடிஷ் படைகள் வாபஸ் பெற முடிந்தது.

தேசங்களின் நிலைமையும், ஜனங்களின் உயிரும் அதிக மோசமாகி விட்ட சந்தர்ப்பத்தில் யுத்தத்தில் கடைசியில் வெற்றி பெறுவதை மாத்திரம் ஒருவன் கவனிக்கக்கூடாது. ஆனால் யுத்தத்தின் போக்கை மாற்றக்கூடிய வண்ணம் திட்டங்களை மாற்றிக்கொள்ளவேண்டும். ஆகவே கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன் படுத்திக்கொள்ள சித்தமாக போர் தலைவர்கள் இருக்க வேண்டும். நிலைமை மோசமாகும்படி விடவும்கூடாது.

---

## காடுகளில் புரியப்படும் யுத்தம்.

---

நியூ கினியிலிருக்கும் ஆஸ்திரேலியத் துருப்புகள் காட்டுச்சண்டையில் ஜப்பானியரைக் காட்டிலும் அதிக சாமர்த்தியம் வாய்ந்திருக்கின்றன, என்று டெயிலி மெயில் பத்திரிகையின் மெல்போர்ன் நிருபர் எழுதுகிறார். மலேயாவில் பலித்து வந்த தந்திரங்களை ஜப்பானியருக்கு விரோதமாக ஆஸ்திரேலியர் உபயோகிக்கின்றனர். இவர்களுக்கு சாதகமாக ஓவன் ஸ்டான்லி மலைச்சாரலில் அடர்ந்த காடுகளும், ஈரமான பிரதேசமும் இருக்கின்றன.

அடர்ந்த காடுகளில் யுத்தம் புரிவதற்கு லாயக்காக ஆஸ்திரேலியர் பயிற்சி பெற்றிருப்பதால் எளிதில் ஜப்பானியரை தாக்க முடிகிறது; ஜப்பானியர் இதுவரை உபயோகித்து வந்த தந்திரங்களைவிட அதிகமாகவே ஆஸ்திரேலியர் உபயோகிக்கின்றனர். ஆகவே ஜப்பானியரின் மறைந்து தாக்குதல், துருப்புகளை உட்புகுத்தல், சூழ்ந்துகொள்வது முதலிய தந்திரங்கள் பலிக்கவில்லை.



# இவ்வாரத்தில் வெளிவந்த சில அபிப்பிராயங்கள்.

---

## முக்கிய நோக்கம்.

(நியூஸிலாந்து மந்திரி மிஸ்டர் W. நாஷ்).

போஸ்டன் அக்டோபர், 17.

பஸிபிக் யுத்தம் எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், அச்சுநாட்டு உயிர் நிலையைத் தாக்குவதே நமது நோக்கமாக இருக்கவேண்டும். அந்த உயிர்நிலை ஜெர்மனிதான். ஏனென்றால் ஜெர்மனியின் சகாயமின்றி ஜப்பான் நிரந்தரமான வெற்றிபெற முடியுமாவென்பது சந்தேகமான விஷயம்.

## தேசத்தின் கடமை.

(சயாங் கை ஷேக்).

சுங்கிங் அக்டோபர், 18.

ஒரு தேசம் யுத்தத்தில் ஈடுபட்டால் யுத்த நிதிக்கு உதவுவது அந்த நாட்டு மக்களுக்கு ஒரு கடமையாகும். அதேவிதமாக போர்முனையில் தைரியமாக எதிரியை எதிர்த்துச் சண்டைசெய்வது துருப்புகளின் கடமையாகும்.

## "பிரஷ்ய வழக்கத்தை" ஒழிக்கவும்.

(காண்டர்பரி மதகுரு டாக்டர் வில்லியம் டெம்பிள்.)

லண்டன் அக்டோபர், 18.

சமீபத்தில் இருந்துவரும் ஜெர்மன் திட்டத்தை அடியோடு ஒழிக்கும் விதமாக நாம் நடந்துகொள்ளவேண்டும். இதிலிருந்து ஜெர்மானியரைப்பற்றி உலகத்தார் என்ன நினைத்துவருகிறார்களென்றும் ஜெர்மன் மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான
## தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சிமுறை.

---

1942— பிரஸங்கம் 118—(4-வது பிரிவு). மணி.

| | | | | |
|---|---|---|---|---|
| அக்டோபர் 24, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் சதுக்கம். | | மாலை | 7.45 |
| 25, ஞாயிற்றுக்கிழமை | நீர்ப்பழனி | ... | ,, | 7.00 |
| | ஆலூர் | ... | ,, | 7.30 |
| 26, திங்கட்கிழமை ... | பொ. புதுப்பட்டி | ... | ,, | 7.00 |
| | வேந்தம்பட்டி | ... | ,, | 7.30 |
| 27, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | காரையூர் | ... | மாலை | 7.00 |
| | இடையாத்தூர் | ... | ,, | 7.30 |
| 28, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | | ,, | 10.15 |
| | வடவாளம் | ... | மாலை | 7.00 |
| | செம்மட்டிவிடுதி | ... | ,, | 7.30 |
| 29, வியாழக்கிழமை ... | கார்த்தாமலை | ... | ,, | 7.00 |
| | உப்பிலியக்குடி | ... | ,, | 7.30 |
| 30, வெள்ளிக்கிழமை... | அண்டக்குளம் | ... | ,, | 7.00 |
| | கிள்ளனூர் | ... | ,, | 7.30 |

## பிரஸங்கம் 119—(5-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 31, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | | மாலை | 7.4 |
| | சதுக்கம். | | | |
| 1, ஞாயிற்றுக்கிழமை. | குளவாய்ப்பட்டி | ... | ,, | 7.0 |
| | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 7.30 |
| 2, திங்கட்கிழமை ... | திருமயம் | ... | ,, | 7.00 |
| | மேலூர் | ... | ,, | 7.30 |
| 3, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | பள்ளிவாசல் | ... | மாலை | 7.00 |
| | பில்லமங்கலம் | ... | ,, | 7.30 |
| 4, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | | ,, | 10.15 |
| | திருவரங்குளம் | ... | மாலை | 7.00 |
| | வம்பன் | ... | ,, | 7.30 |
| 5, வியாழக்கிழமை ... | புலியூர் | ... | ,, | 7.00 |
| | கண்ணங்குடி | ... | ,, | 7.30 |

---

**புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்க்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டுப்பத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 24—10—42 | ... | வெட்டன்விடுதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 25—10—42 | ... | ஏம்பல். |
| திங்கட்கிழமை | ... | 26—10—42 | ... | கொன்னையூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 27—10—42 | ... | குடுமியாமலை. |
| புதன்கிழமை | ... | 28—10—42 | ... | கீழாநிலை புதுப்பட்டி. |
| வியாழக்கிழமை | ... | 29—10—42 | ... | ஆலங்குடி. |
| வெள்ளிக்கிழமை | ... | 30—10—42 | ... | பாப்பாபட்டி. |
| சனிக்கிழமை | ... | 31—10—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 1—11—42 | ... | கொடும்பாளூர். |
| திங்கட்கிழமை | ... | 2—11—42 | ... | கீரனூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 3—11—42 | ... | வடகாடு. |
| புதன்கிழமை | ... | 4—11—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 5—11—42 | ... | குழிபிறை. |
| வெள்ளிக்கிழமை | ... | 6—11—42 | .. | புதுக்கோட்டை. |

69408
JL
V21194:19(8m)m,N37
N42

---

Sri Brihadamba State Press, Pudukkottai 2,000—28-10-42.